# ATHARVA-VEDA-SAMHITA

TRANSLATED INTO TAMIL

BY

M. R. JAMBUNATHAN,

*Editor, 'Tamil Yajurvedam,' 'Tamil Samavedam' and Author of 'Vedachandrika,' 'Yajurveda Stories,' 'Upanishad Stories,' 'Yoga Asanas,' 'Cheenavedam,' 'Tamil Satyartha Prakash,' 'Life and Teachings of Mazzini,' 'Life and Teachings of Shraddhanand,' etc., etc.*

---

# அதர்வ-வேதம்

அதர்வவேத சம்ஹிதையின்

தமிழ்மொழி பெயர்ப்பு

ஆசிரியர் :

எம். ஆர். ஜம்புநாதர்

# யஜுர்வேதம்

தமிழ் யஜுர் வேதத்தைக் குறித்து சென்னை ஹிந்துஸ் தான் எழுதுவதாவது—

ஹிந்து நூல்களில் வேதங்கள் மிகப் பிரதான மான அவை இவ்வளவு காலம் வடமொழியில் அபாரஞான வேதாந்த விசாரத்தில் பாண்டித்தியமும் பெற்ற ஒரு சி... உரித்தானதாயிருந்தது. ஒரு தனிக்கூட்டத்தார் தனி... உரிமை பாராட்டி வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்னும் வியாதியும் ஏற்பட்டிருந்தது. ஸ்ரீ. எம். ஆர். ஜம்புநாதனது மொ... பெயர்ப்பினால் தமிழ் மக்கள் பலனடைவதுடன் தனிக் கூட்டத்... வேத சாஸ்திரங்களை தங்களுடைய பிரத்தியேக பொக்கிஷ... வைத்திருக்கின்றார் என்கிற அபக்கியாதியும் நீங்கும்.

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள இந்த யஜுர் வேதத்... ஒரு விசேஷ மென்னவெனில் வடமொழியில் இரகசியார்த்தங்... ததும்ப அமைந்துள்ள சூத்திரங்களை அப்படியே கட்டுக், கோட... கலையாமல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் அதிசயந்த...

இரங்கோன் தனவணிகன் எழுதுவதாவது—வேதம் ... காறும் செவ்விய முறையில் எழுதப்படவில்லை. இக்குறை... தீர்க்க வேதத்தை எளியநடையில் பொருள் சிதைவில்லா... மொழி பெயர்த்திருத்தல் போற்றத்தக்கது.

The Director of Public Instruction Madras by his circulars R.O.C No. 160 G. 36 of 17-4-38 and R. C. No. 3811 G. of 38 of 10-2-39 has recommended the Author's Sama Veda and Yajurveda to all th... Educational Institutions.

The Madras *Hindu* writes on 'Vedachandrika':—The writer ... so far one knows the first to come forward to meet a long felt wa... The scriptures in their original along with the growing body of liter... ture about them by the Orientalists are now made accessible i... small and compact form to our people who do not know Sanskri... ...glish. It is divided into 19 sections and deals clearly and b... ... almost every point worth knowing about the Veda. The read... ...so furnished with valuable information about the latter wor... Vedic Literature in the shape of Vedangas, Upangas, Prati... yas, Kosas, Vedic rituals and the list. It is a valuable hand boo...

41137

# அதர்வ-வேதம்

அதர்வவேத சம்ஹிதையின் பரிபூரணத்
தமிழ் மொழிபெயர்ப்பு

கிருஷ்ண சுக்கில யஜுர்வேதம், சாமவேதம், வேத சந்திரிகை,
உபநிஷதக் கதைகள், யோகாசனம், தமிழ் சத்தியார்த்தப்
பிரகாசம், மாஜினியும் மனிதர் கடமைகளும்
முதலிய நூல்களை இயற்றிய
வேதோபநிஷத ஆசிரியர்
எம். ஆர். ஜம்புநாதன்
எழுதியது

ஜம்புநாதன் புஸ்தகசாலை
சென்னை,
பிரமாதி௵ தைமீ

[காபிரைட் ரிஜிஸ்டர்டு] [விலை ரூ. 5

**'ATHARVAVEDAM'**

COPYRIGHT RESERVED BY

SRI M. R. JAMBUNATHAN,
*Editor of Vedas & Upanishads in Tamil*
*Khar, Bombay, 21. INDIA, 1940.*

M. I. P. PROJECT
Microfilmed.
73180a

வேதோபநிஷத ஆசிரியரான ஸ்ரீ. எம். ஆர். ஜம்புநாத
வேத நூல்களாவன. கிருஷ்ண சுக்கில யஜுர்வேத சம்ஹிதை
மந்திரங்களின் தமிழ் மொழி பெயர்ப்பான யஜுர் வேதம்,
வேத சம்ஹிதையின் மொழிபெயர்ப்பான சாமவேதம்,
சந்திரிகை, யஜுர்வேதக் கதைகள், உபநிஷதக் கதைகள்.

ஜம்புநாதரின் வேத நூல்கள் :—சென்னை சுதேசமித்தி
புஸ்தகசாலையிலும், சென்னை பவழக்காரத் தெருவிலுள்ள
சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திலும், மதுரை ஸ்ரீ. கோ
கிருஷ்ண கோனிடமுங் கிடைக்கும்.

The Liberty Press, G.T., Madras.

# முகவுரை

ருக், யஜுர், சாமன், அதர்வம் என்னும் நான்கு பிரிவுகளாக வேதத்தை வியாசர் ஆதியில் வகுத்தார். இந்நூல் அதர்வத்தின் பரிபூரணத் தமிழ்மொழிபெயர்ப்பு. இதனை அதர்வவேதம் அதர்வ வேத சம்ஹிதை, அதர்வாங்கிரஸம், பிரம்மவேதம், க்ஷத்திரவேதம் அதர்வணம்,பைஷஜ்யவேதம் எனவும் அறிஞர்கள் அழைப்பார்கள்.

அறியாமை என்னும் அந்தகாரத்தை அதர் என்னும் அனல் எரிப்பதால் இதற்கு அதர்வவேதம் என்னும் பெயராயிற்று. ஆதியிலே அதர்வன் என்னும் ஒரு அறிஞர் இருந்தார். அவர் இம்மறையிலுள்ள மந்திரங்களை அதிகமாய்ப் பிரசாரஞ் செய்ததால் அவரது பெயரால் இது அழைக்கப்படும். மந்திரச் சேர்க்கைகளுக்கு சம்ஹிதை எனப் பெயர். அதர்வவம்சத்திலுதித்த அங்கிரஸன் என்னும் அறிஞன் இவ்வேதாமுதத்தை அனைவருக்குமளித்ததால் அவரது நாமத்தாலும் இம்மறை அழைக்கப்படும். பிரம்மவித்தையைப் பிரகாசஞ் செய்வதால் இதற்குப் பிரம்ம வேதமெனவும், க்ஷத்திரம் என்னும் துட்ட சம்ஹாரத்தைத் தூண்டுவதால் க்ஷத்திர வேதமெனவும், ருத்திரனது மஹிமையான கோபாவேசத்தின் சிறப்பைச் செம்மையாக்குவதால் அதர்வணமெனவும், நோயின் சிகிச்சையை யறிவிப்பதால் பைஷஜ்ய வேதமெனவும் இந்நூலுக்குப் பல நாமங்கள் வழங்கலாயிற்று.

## உபவேதங்கள்

அதர்வத்துக்குப் பல உபவேதங்கள் உண்டு என பல பெரியார்கள் சொல்வார்கள், அவை—சருப்பவேதம், பிசாசவேதம், அசுர வேதம், இதிஹாசவேதம், புராணவேதம், ஆயுர்வேதம், யந்திர தந்திர வேதங்கள். இவற்றைக் குறித்து சதபதஞ் சொல்லும் அடியிற் கண்டமொழிகள் கவனிக்கத்தக்கது.

வருண—ஆதித்திய இராஜர்களுடையப் பிரஜைகள், கந்தர்வர்கள். அவர்களுக்கு அதர்வன் வேதஞானன்; வைஷ்ணவ—

சோம—இராஜர்களுடைய பிரஜைகள், அப்சரசுக்கள். அவர்களுக்கு ஆங்கிரஸன் வேதன். அர்புத—காத்வரேய—இராஜர்களுடைய பிரசைகள், சருப்பங்கள். அவர்களுக்குச் சருப்ப வித்தை வேதம்: குபேரவைசிரவண இராஜாவின் பிரசைகள் இரட்சர்கள். அவர்களுக்கு தேவசன வித்தை வேதம்: அஸிததான்வ இராஜாவின் பிரசைகள் அசுரர்கள்: அவர்களுடைய வேதம் மாயாவேதம், மத்ஸ்யசாம்மத இராஜாவின் பிரசைள், உதக சரங்கள்; அவர்களுக்கு இதிஹாசமே வேதம்; வைசிய இராஜாவின் பிரசை வயஸர். அவர்களுக்குப் புராணமே வேதம். [ச. க ரு—ச]

## சாகைகள்

அதர்வவேத சாகைகளாவன—பைப்பலாதம். ஸ்தௌதம், மௌதம், சௌனகீயம். ஜாஜலம். ஜலதம். பிரம்மவதம். தேவதாசம். சாரண வைத்தியம்.

அதர்வ சாகைகளை அத்தியயனஞ் செய்பவர்கள் தென்னாட்டில் இல்லை என அறிகிறோம். காச்மீரத்தில் சிலரும் காசியில் இங்கும் அங்கும் அதர்வத்தை அறிபவர்களுண்டு.

## உபநிஷதங்கள்

அதர்வவேதத்துக்கு சுமார் ருக உபநிடஷதங்கள் இருப்பதாக அறிகிறோம். அவை—க பிரசினம். உ முண்டகம். ரு மாண்டுக்கியம். ச அதர்வசிரம். ரு அதர்வசிகம், சூ பிருஹத் சாபாலம். எ நிருசிம்ஹத்தாபனீ. அ நாரத பரிவிராஜ்கம். கூ சீதா. க0 சரமம். கக மகா நாராயணம். கஉ இராம இரஹஸியம். கரு இராமதாபனீ. கச சாண்டில்யம். கரு பிரம்ம ஹம்ஸ பரிவிராஜகம். கசூ அன்னபூரணம். கஎ சூரியன். கஅ ஆத்மா. ககூ பாசுபதம். உ0 பரப்பிரம்மம். உக திரிபுரதாபனீ. உஉ தேவி. உரு பாவனம். உச பஸ்மசாபாலம். உரு கணபதி. உசூ மஹாவாக்கியம். உஎ கோபாலதாபனீ. உஅ கிருஷ்ணம். உகூ ஹயக்கிரீவம். ரு0 தத்தாத்ரேயம். ருக காருடம்.

## அதர்வ நூல்கள்

இதுவரை அதர்வவேதம் அதைப் பற்றிப் பிரசுரமான நூல்களாவான. க ஜர்மனியில் ராத் விட்னியால் பிரசுரமான அதர்வ

சம்ஹிதை. உ அஜ்மீர் அதர்வ சம்ஹிதை. ங நிர்ணயசாகர பதிப்பான சாயன பாஷ்யத்தோடு சேர்ந்த அதர்வம். ச பங்காளி மொழி பெயர்ப் போடான அதர்வம். ரு அதர்வ சம்ஹிதை அமெரிக்கன் பதிப்பு. சு L. C. பாரட் எழுதிய அபூரண காஷ்மீர் அதர்வவேதம், எ Prof. W. D. விட்னீயின் அபூர்ண மொழி பெயர்ப்பு. அ M. ப்ளூம் பீல்டின் சில அதர்வசூக்தங்களின் இங்கிலீஷ் மொழி பெயர்ப்பு. கூ கிரிப்பத்தின் மொழி பெயர்ப்பு. கo ப்ளூம்பீல்டு எழுதிய அதர்வவேதமும் கோபத பிராமணமும். கக வெப்பரின் ஜர்மன் அதர்வம். கஉ ஜர்மன் பாஷையில் அதர்வத்தைப்பற்றிய நூறு உபன்னியாசங்கள். கங ருக்காட்டின் ஜர்மன் அதர்வம். கச போலிங்கும் நெக்லினும் ஜர்மனி பாஷையில் எழுதிய அதர்வ பரிசிஷ்டங்கள். கரு விட்னியின் அதர்வ தாதுக்கள். கசு சௌத்திரியின் அதர்வத்தின் கடினமொழிகள். கஎ லெலேயால் எழுதப்பட்ட சில அதர்வ கிருஹ்ய சூத்திரங்கள். கஅ லின்டே நௌவால் ஜர்மன் பாஷையில் எழுதப்பட்ட அதர்வஸ்கம்பன். ககூ விசுவ பந்துவால் எழுதப்பட்ட அதர்வப் பிராதிசாக்கியம். உo அமேரிக்காவில் பிரசுரமான கௌசிக சூத்திரம். உக. கல்கத்தாவில் பிரசுரமான கணபத்ய அதர்வ சிர்ஷம், உஉ கோபதப் பிராமணம், உங பஞ்சபடலிகை. உச பிருஹத் சர்வானுக்கிரமணி, உரு மாண்டுகி சிட்சை உசு வைதான சூத்திரம். உஎ சடாராவில் பிரசுரமான சாத்வளேகரின் அதர்வ சம்ஹிதையும் அபூரண ஹிந்தி மொழி பெயர்ப்பும்.

அதர்வ சிரௌத் சூத்திரங்களாவன. வைதான சூத்திரம், கௌசிக சூத்திரம். இவற்றிற்கு அடியிற்கண்டவாறு ஐந்து கல்ப சூத்திரங்கள்—நட்சத்திர கற்பம், சாந்தி கற்பம், விதான கற்பம், ஸம்ஹிதாகற்பம். அங்கிரஸ கற்பம். இதைத் தவிர சுமார் எரு சிரௌதநூல்கள் இருந்ததாக அறிகிறோம்.

## மந்திரங்கள்

அதர்வவேத மூல சம்ஹிதையை இருபது காண்டங்களாகப் பிரித்து அவற்றைப் பிர பாடங்களாக வகுத்துள்ளார்கள். அவை மறுபடியும் அநுவாகங்களாகவும், சூக்தங்களாகவும், மந்திரங்களாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. இந்த தமிழ் வேதம் சூக்தங்க

ளாகவும் மந்திரங்களாகவும் பாகஞ் செய்யப்பட்டுள்ளன. இந் நூலின் ஒவ்வொரு சூக்தத்தின் முடிவிலே மூன்று எண்கள் உண்டு. அவை மூலசம்ஹிதையின் காண்டம் சூக்தம் மந்திரத்தை யறிவிக்கும். மந்திரங்களின் எண்ணிக்கை அடியிற் கண்டவாறு.

| சூக்தம் | காண்டம் | மந்திரம் | சூக்தம் | காண்டம் | மந்திரம் |
|---|---|---|---|---|---|
| ௧-௩௫ | ௧ | ௧௫௩ | ௪௬௪-௪௭௩ | ௧௧ | ௩௧௩ |
| ௩௬-௭௧ | ௨ | ௨௦௭ | ௪௭௪-௪௭௮ | ௧௨ | ௩௦௪ |
| ௭௨-௧௦௨ | ௩ | ௨௩௦ | ௪௭௯-௪௮௨ | ௧௩ | ௧௮௮ |
| ௧௦௩-௧௪௨ | ௪ | ௩௨௪ | ௪௮௩-௪௮௪ | ௧௪ | ௧௩௯ |
| ௧௪௩-௧௭௩ | ௫ | ௩௭௬ | ௪௮௫-௫௦௨ | ௧௫ | ௨௨௦ |
| ௧௭௪-௩௧௫ | ௬ | ௪௫௪ | ௫௦௩-௫௧௧ | ௧௬ | ௧௦௩ |
| ௩௧௬-௪௩௩ | ௭ | ௨௮௬ | ௫௧௨ | ௧௭ | ௩௦ |
| ௪௩௪-௪௪௩ | ௮ | ௨௯௩ | ௫௧௩-௫௧௬ | ௧௮ | ௨௮௩ |
| ௪௪௪-௪௫௩ | ௯ | ௩௧௩ | ௫௧௭-௫௮௮ | ௧௯ | ௪௫௩ |
| ௪௫௪-௪௬௩ | ௧௦ | ௩௫௦ | ௫௮௯-௭௩௧ | ௨௦ | ௯௫௮ |

அதர்வவேதத்திலுள்ள மொத்த மந்திரங்கள் ... ௫௯௭௭

ஒவ்வொரு சூக்தத்தின் தலையங்கம் அதன் பொருளை அறிவிக்கும். அப்பால் தனிமையாய் எழுதியுள்ள நாமங்கள் அச் சூக்தத்தின் தேவர்களையும் ரிஷிகளையும் புலனாக்கும்.

## நோயும் சிகிச்சையும்

இவ்வேதத்தில் அடியிற்கண்ட நோய்களையும் சிகிச்சைகளையுங் காணலாம். சலத்திலே அமிருதமுண்டு. ௪-௪ சூரியனால் கண்டமாலையை சிகிச்சை செய்யலாம். ௨௫௬ பிப்பலி வெட்டுப் புண்ணுக்கு மருந்து. ௨௮௨. காமாலை கதிரவனால் நீங்கும். ௨௨. இரஜனியால் குஷ்டத்தை நீக்கு. ௨௩. ஆசுரி வெண் குட்டத்துக்கு சிகிச்சை. ௨௪. சலம் புண்ணை ஆற்றும். ௩௮. ஜங்கிடத்தால் நோவு வேதனைவாத மெல்லா மொழியும். ௩௯. ஔஷதத்தால் பகைவர்களை ஜயிக்கலாம். ௬௨. கிருமிகளைக் கொல்லுங்கள். ௬௭. ரோஹிணீ என்னும் வனஸ்பதியும் அருந்ததியும் வெட்டுக்காயத்துக்கு சிகிச்சை. ௧௧௪. அபாமார்க்கத்தால் க்ஷேத்திரிய மென்னும் நோயழியும். ௧௨௦. வரணாவதி என்னும் ஔஷதம் விஷத்தை விலக்கும். ௧௦௯. மருத்துவப் பயிற்சி வேண்டும். ௧௧. நாடிகளை அறிந்து கொள்ளுங்கள். ௧௭

## வேத மணி

வனஸ்பதிகளின் சூட்சமங்களை அறிவித்து மணி எனப்படும் வாழ்க்கைக் கவசியமான சில சாதனங்களை இவ்வேதம் வற்புறுத்தும். மணி என்றால் பொருள், பலம், சூரன், தீரன், வீரம், மருந்து ஆயுதம் இன்னும் பல மேலான பொருள்களையும் புருஷர்களையும் புலனுக்கும். இங்கு மொழியப்படும் மணிகளாவன. வியாபகமணி. சூக்தம். ௫௬௬. ஐங்கிடமணி. ௩௬-௫௫0. ஔதும் பரமணி. ௫௪௭. பிரதி சரமணி. ௪௩அ. தருப்பைமணி. ௫௪௪ சதவார மணி. ௫௫௨. சங்கு மணி. ௧௧௨ வரண மணி. ௪௫௬ பர்ணமணி. எ௬. சில பாமரர்கள் இவற்றைத் தாயித்து எனவும் இரட்சை எனவும் சொல்லுகிறார்கள். இவர்களை அநுசரித்து சில ஐரோப்பியர்களும் கூறுகிறார்கள். வேத வாழ்க்கைகள் இல்லாத இவர்களிடம் விபரீதங்கள் தோன்றுவது சகஜம். வேதத்தில் வரும் மொழிகள் எல்லாம் சின்னம், அறிகுறி, சங்கேதச் சொற்கள்.

## வேத பசு

உதாரணமாக பசு என்றால் பால் கறக்கும் பசு வொன்றையே மனத்தில் நினைக்கிறோம். ஆனால் பசு வென்னும் மொழியைக் குறித்து இவ் வேதஞ் சொல்வதாவது. பசுக்கள் ஐசுவரியங்களாகும். சூ. ௪௨௩—௫. புவி—பசு, வானம்—பசு, சோதி பசு. திசை பசு. சூ. ௧௪௧. ௨—அ. பசு என்றால் சூரியனுக்குப் பெயர். ௨0௪. பசு என்றால் உஷையைக் குறிக்கும். ௪எ௯—௧0. பிருசினிக்குப் பெயர். ௫௨எ—௪. பசு என்றால் மேகம். ௪௬௩—அ. பசு பிரபஞ்சத்தைக் குறிக்கும், பசு, விஷ்ணு: பசு, பிரஜாபதி: பசு, தேவர்: பசு, மானிடன்; ௪௬௩. பசு என்றால், மொழி, துதி, மேகம், புவி என யாஸ்கர் கூறுகிறார். பசு என்றால், வச்சிராயுதம், சரஸ்வதி, சலம் கண் விருஷபம், புலன், சந்திரன், மனை, காயகன் முதலான பொருள்களைப் புலனுக்கும் மொழி என வடமொழி நிகண்டுகள் கூறும்.

## வேத விஷயம்

பசுப் போலுள்ள இன்னும் இத்தகைய பல மர்மமான மொழிகளால் அடியிற் கண்டவிஷயங்களை வேதம் அறிவிக்கும்.

பிரம்மசாரியின் பெருமையையும், [சகூஅ] காமனது குணத்தை யும் [சசரு] ஆதர்சமணத்தை அறிவிக்கும், சூரியையின் விவா ஹத்தையும் [உருரு] இவ்வேதங் கோஷிக்கும். பின் வாழ்க்கையின் மருமத்தையும் [ருகரு] மூலாதாரனை ஸ்கம்பனையும் [கூகூ0] காலனையும் [ருகூக] விராத்தியனது மேன்மைகளையும் [சஅரு] சூரியனுடையச் சிறப்பையும் [சளக] பிராணனின் புகழையும் [சகூள] புவியின் இன்பத்தையும் [சளச] உயரிய உச்சிஷ்டனை யும் [சள0] இவ்வேதம் விளக்கும்.

இவ்வேதத்தை ஆதியில் ஹிந்துக்கள் அநுசரித்து பூவுலகத்தை அரசுபுரிந்தார்கள். இதனை நன்ருய் அறிந்த வசிஷ்டரிடம் இரகுபதி அரசர்கள் உண்மைகளை அறிந்து எங்கும் ஜயக்கொடி ஏற்றினுர் கள். பூர்வ காலத்தில் வேதமறிந்த ஹிந்துக்களின் தர்மம் ஐரோப் பாவிலும் அமெரிக்காவிலும் பெருவிலும் காம்போடியாவிலும் ஜாவாவிலும் சுமட்ராவிலும் போர்னீயோவிலும் சீனுவிலும் பார சிகத்திலும் அரேபியாவிலும் ஈஜிப்டிலும் ஓங்கிற்று. ஆனல் பிற் காலத்தில் சிலர் தங்களுக்கே வேதம் உரிமை என எண்ணி இத னைத்தாய் பாஷையில் செய்யாமல் மகாசனங்களிடமிருந்து வேத அறிவை அபகரித்தார்கள். தாங்களும் சுய நூலர்களாகி வேத இரகசியங்களை மறந்து ஒலி முழக்கத்தில் மூழ்கினுர்கள். அப் பால் வேதத்தின் பெயரால் பல நூற்றுக்கணக்கான நூல்கள் தோன்றி மறைவாழ்க்கை யொழிந்தது. ஹிந்துக்களின் சாம் ராஜ்யமழிந்தது. அவர்களும் அழியலானுர்கள். பூமண்டல மெங் கும் அசுவமேதயாகஞ் செய்தவர்கள் பாரதபூமியிலேயே வருடந் தோறும் தோல்வியாகி குறைந்து வருகிருர்கள். தரும சாலைகளில் போல் தங்கள் நாடுகளில் அனைவருக்கும் அடைக்கலமளித்த ஹிந்துக்கள், வந்த விருந்தினர்களால் வீழ்த்தப்பட்டு இனி எங்கு சென்று வசிப்போம் என பன்னுவிலும் சக்கூரிலும் கட்டக்கிலும் காச்மீரத்திலும் தவிக்கிருர்கள். தமிழ் ஹிந்துக் களே! உங்களுக்கும் இக்கதிவரலாம், ஏனெனில் நீங்களும் வருஷந்தோறும் அழிந்து வருகிறீர்கள். இனி நீங்கள் வளர்ந்து வையத்தை மறுபடியும் உங்கள் ஆதீனம் செய்ய விரும்பினுல் பழைய வேத வாழ்க்கையை யநுசரியுங்கள். இனி வடமொழி அறி யும் பிரபுக்களின் உதவி உங்களுக் கவசியமில்லை. நீங்களே இத்

தமிழ் வேதாமுதத்தைப் பருகலாம். வேதத்தை தவிர வேறு நூல்களை யெல்லாம் விலக்கி மறுபடியும் வேத வாழ்க்கை நடத்தி தேவர்களாகி தானவர்களை அழிக்க நீங்கள் கோபமுடன் எழுந்திருங்கள். கஙங. நாங்கள் எல்லாத் துன்பஞ் செய்பவர்களையும் அழிப்போம் என்னும் சங்கற்ப மடைந்து ஜயமாகுங்கள். கஙஅ. நான்கு திசைகளும் எங்களுக்கு வணங்கட்டும் விசாலவானம் எங்களுக்காகுக என்னும் பிரார்த்தனைகளை [கசரு] செய்து அச்சமின்மையை அடைந்து [உகங] நீங்களேதலைவராகுங்கள் [உசூO] உங்களை அடிமை செய்ய விரும்புபவனை இருளிலே செலுத்துங்கள். [உக] வெல்லப்படாதவன் என்னும் நாமத்தை அடையுங்கள். [கருக] நீங்கள் புகழுடனோங்கி [உஙக] எங்கும் வியாபகமாகுங்கள் [உஙச] ஐக்கியமாகி [உஙஎ] எதிரியின் ஆயுதத்தைக் கீழ் செய்து [உஙஅ] துன்பஞ் செய்பவனைத் தேடி அவனைத் துடையுங்கள் [ஙOஎ] நீங்கள் ஐயமடைந்து உத்தமர்களாகுங்கள் [கஅஅ]

இவ்வேதாக்ஞைகள் நிறைந்த இந்நூலைத்தினந்தோறும் படித்து மனைவி பெண் பிள்ளைகளோடு சேர்ந்து மனனஞ் செய்யுங்கள். புவியிலுள்ள ஒவ்வொருவனுக்கும் வேத இரகசியத்தைப் பிரகாசஞ் செய்யுங்கள், இக்கடமையை உணர்ந்து இதுவரை தமிழில் வராத இந்நூலைத் தென் மொழியில் பிரசுரஞ் செய்ய உதவி அளித்த திருப்பனந்தாள், காசி வாசி ஸ்ரீலஸ்ரீ. சுவாமிநாத சுவாமிகளுக்கு நான் என்றும் நன்றியுள்ளவனுயிருப்பேன். தமிழர்களும் அவர்களுக்கு நன்றியைச் செலுத்த வேண்டுமென விரும்பி இவ்வேதத்தை தமிழர்களது கைகளில் அளிக்கிறேன். குற்றங் கழித்து குணங்கிரகிப்பது கற்ருேர்க்கழகு.

கலியுகம் ருOசக-வது வருஷத்துக்குச் சரியான விக்கிரமாதித்தியனின் ககூகூஎ-வது சம்வத்சரம், பிரமாதி வருஷம் தைமாதம் முதல் தேதியான 1940-ம் வருஷம், ஜனவரி மாதம் 14-ந் தேதி பஞ்சமிதிதி பூரட்டாதி நட்சத்திரம் உத்தராயண சங்கிராந்தி தினமான ஞாயிற்றுக்கிழமை, பம்பாய் அரபிக் கடற்கரையோரமுள்ள கார் என்னும் கிராமம்.

எம். ஆர். ஜம்புநாதன்.

# பொருளடக்கம்


| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை | 6 |
| க | சுருதிசேர் | க |
| உ | வில் | உ |
| ௩ | சரம் | உ |
| ச | சலம் | ௩ |
| ரு | நீர் சிகிச்சை | ச |
| சா | சலங்கள் | ரு |
| எ | ஸம்ஹாரம் | ரு |
| அ | யக்ஞும் | எ |
| கூ | பிரார்த்தனை | எ |
| க0 | வருணன் | அ |
| கக | பிரசவம் | கூ |
| கஉ | சந்ததி | க0 |
| க௩ | மின்னல் | கக |
| கச | பெண் | கஉ |
| கரு | செல்வம் | க௩ |
| கசா | ஈயம் | க௩ |
| கஎ | நாடிகள் | கச |
| கஅ | ஆதர்சன் | கரு |
| ககூ | சம்ஹாரம் | கசா |
| உ0 | அரசர் கடமை | கசா |
| உக | சத்துருக்கள் | கஎ |
| உஉ | காமாலை | கஅ |
| உ௩ | இரஜனி | கஅ |
| உச | குட்டம் | ககூ |
| உரு | ஜ்வரம் | உ0 |
| உசா | காப்பு | உக |
| உஎ | அரிகள் | உக |
| உஅ | எதிரி நஷ்டம் | உஉ |
| உகூ | ஜய மணி | உ௩ |
| ௩0 | காப்பு | உச |
| ௩க | திசைகள் | உரு |

| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| ௩உ | பிரமம் | உரு |
| ௩௩ | சலங்கள் | உசா |
| ௩ச | தேன் மயம் | உஎ |
| ௩ரு | தீர்க்காயுசு | உஅ |
| | **காண்டம் — உ** | |
| ௩சா | மர்ம தரிசனம் | உகூ |
| ௩எ | கந்தருவன் | ௩0 |
| ௩அ | நீர் சிகிச்சை | ௩க |
| ௩கூ | ஜங்கிடம் | ௩உ |
| ச0 | இந்திரன் | ௩௩ |
| சக | தலைவர் கடமை | ௩ச |
| சஉ | சாபங்கள் | ௩ரு |
| ச௩ | பிறவி நோய் | ௩சா |
| சச | வைத்தியன் | ௩எ |
| சரு | நோய் நீங்கு | ௩அ |
| சசா | அறிஞர் கடமை | ௩கூ |
| சஎ | தவம் | ச0 |
| சஅ | பிரமசரிய பிரவேசம் | சக |
| சகூ | எனக்கு ஜயம் | சக |
| ரு0 | பயமில்லை | சஉ |
| ருக | காப்பு | சச |
| ருஉ | துதி | சரு |
| ரு௩ | பகை நீங்கு | சரு |
| ருச | அனல் | சசா |
| ருரு | வாயு | சஎ |
| ருசா | சூரியன் | சஎ |
| ருஎ | சந்திரன் | சஎ |
| ருஅ | தண்ணீர் | சஎ |
| ருகூ | கிமீதினர்கள் | சஅ |
| சா0 | கண்வ சத்துரு | சகூ |
| சாக | பசுச் செழுமை | சகூ |
| சாஉ | ஓஷதி மகிமை | ரு0 |

| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| சாங | தீர்க்காயுசு | ருக |
| சாச | பிரமசரியம் | ருஉ |
| சாரு | காதல் வழி | ருச |
| சாசா | கிருமி நாசம் | ருரு |
| சாஎ | கிருமி நாசம் | ருசா |
| சாஅ | யக்ஷ்ம நாசம் | ருஎ |
| சாகூ | யக்ஞப் பசு | ருஅ |
| எO | யக்ஞ தோஷம் | ருகூ |
| எக | புருஷன் | சாO |

## காண்டம்—ங

| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| எஉ | சம்ஹாரம் | சாO |
| எங | பகை யழி | சாO |
| எச | அரசனை ஸ்தாபி | சாச |
| எரு | இராஜ்யாபிஷேகம் | சாரு |
| எசா | பர்ண மணி | சாசா |
| எஎ | அசுவத்தம் | சாஎ |
| எஅ | க்ஷேத்திரியம் | சாஅ |
| எகூ | வீரனது நோக்கம் | சாகூ |
| அO | வசிய வழி | எக |
| அக | இரவு | எங |
| அஉ | ஆரோக்கியம் | எச |
| அங | வீடு | எரு |
| அச | சலம் | எஎ |
| அரு | கோ சாலை | எஅ |
| அசா | வணிகம் | எகூ |
| அஎ | பகன் | அO |
| அஅ | உழவு | அஉ |
| அகூ | பிரம வித்தை | அங |
| கூO | பற்றார் ஒழி | அச |
| கூக | தோத்திரம் | அரு |
| கூஉ | அனல் வடிவங்கள் | அஎ |
| கூங | யானை | அஅ |
| கூச | ஸந்தானம் | அகூ |
| கூரு | தானியம் | கூO |
| கூசா | காமம் | கூக |
| கூஎ | சரங்கள் | கூஉ |
| கூஅ | சரங்கள் | கூஉ |
| கூகூ | யமினி | கூச |
| கOO | இராஜன் | கூரு |
| கOக | ஒற்றுமை | கூஎ |
| கOஉ | குற்றம் நீங்கு | கூஅ |

## காண்டம்—ச

| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| கOங | மர்மன் | சாகூ |
| கOச | தேவன் | கOO |
| கOரு | வன மிருகம் | கOக |
| கOசா | வீரியம் | கOஉ |
| கOஎ | தூக்கம் | கOங |
| கOஅ | விஷம் நீக்கு | கOச |
| கOகூ | விஷசிகிச்சை | கOசா |
| ககO | புலிபுருஷன் | கOஎ |
| ககக | காப்பு | கOஅ |
| ககஉ | சங்கு | கOகூ |
| ககங | காளை | ககO |
| ககச | சிகிச்சை | ககங |
| ககரு | சிகிச்சை | ககஉ |
| ககசா | அஜம் | ககச |
| ககஎ | மழை | ககரு |
| ககஅ | வருணன் | ககஎ |
| கககூ | கேடுங்குறையும் | கககூ |
| கஉO | புன்செயல் | கஉO |
| கஉக | எதிரிபங்கம் | கஉக |
| கஉஉ | ஓஷதி | கஉஉ |
| கஉங | பசு | கஉங |
| கஉச | அரசன் | கஉரு |
| கஉரு | அக்கினி | கஉசா |
| கஉசா | இந்திரன் | கஉஎ |
| கஉஎ | வாயுவும்சவிதாவும் | கஉஅ |
| கஉஅ | சோதியும் புவியும் | கஙO |
| கஉகூ | மருத்துக்கள் | கஙக |
| கஙO | பவனும் சர்வனும் | கஙஉ |
| கஙக | மித்திரன் | கஙங |
| கஙஉ | ருத்திரர்கள் | கஙரு |
| கஙங | மன்யு | கஙசா |
| கஙச | மன்யு | கஙஎ |

| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| ௧௩௫ | அக்கினி | ௧௩௯ |
| ௧௩௬ | ஓதனம் | ௧௩௯ |
| ௧௩௭ | ஓங்கும் ஓதனம் | ௧௪௧ |
| ௧௩௮ | துட்ட சம்ஹாரம் | ௧௪௨ |
| ௧௩௯ | சேரார்நாசம் | ௧௪௩ |
| ௧௪௦ | அப்சரசர் | ௧௪௫ |
| ௧௪௧ | துதி | ௧௪௭ |
| ௧௪௨ | பகையழி | ௧௪௮ |

## காண்டம்—௫

| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| ௧௪௩ | திரிதன் | ௧௫௦ |
| ௧௪௪ | பழையமர்மன் | ௧௫௧ |
| ௧௪௫ | பிரார்த்தனை | ௧௫௩ |
| ௧௪௬ | குஷ்டன் | ௧௫௫ |
| ௧௪௭ | ஸிலாசி | ௧௫௬ |
| ௧௪௮ | இந்திரனை நாடு | ௧௫௭ |
| ௧௪௯ | உலோபி | ௧௫௯ |
| ௧௫௦ | பற்றுரைஅழி | ௧௬௧ |
| ௧௫௧ | நோக்கம் | ௧௬௨ |
| ௧௫௨ | காப்பு | ௧௬௩ |
| ௧௫௩ | விளைவிடை | ௧௬௪ |
| ௧௫௪ | துதிகள் | ௧௬௬ |
| ௧௫௫ | விஷசிகிச்சை | ௧௬௮ |
| ௧௫௬ | அரிஅழி | ௧௬௯ |
| ௧௫௭ | சாதனம் | ௧௭௧ |
| ௧௫௮ | காளை | ௧௭௧ |
| ௧௫௯ | பிராமணமனைவி | ௧௭௨ |
| ௧௬௦ | பசு | ௧௭௫ |
| ௧௬௧ | பசு | ௧௭௭ |
| ௧௬௨ | துந்துபி | ௧௭௯ |
| ௧௬௩ | துந்துபி | ௧௮௦ |
| ௧௬௪ | ஜ்வரம் | ௧௮௨ |
| ௧௬௫ | புழுநாசம் | ௧௮௩ |
| ௧௬௬ | பிரார்த்தனை | ௧௮௫ |
| ௧௬௭ | மக்கட்பேறு | ௧௮௬ |
| ௧௬௮ | யக்ஞம் | ௧௮௭ |
| ௧௬௯ | பிரார்த்தனை | ௧௮௮ |
| ௧௭௦ | யக்ஞோபவீதம் | ௧௯௦ |
| ௧௭௧ | ஜாதவேதசன் | ௧௬௨ |
| ௧௭௨ | தீர்க்காயுசு | ௧௬௩ |
| ௧௭௩ | தண்டனை | ௧௬௫ |

## காண்டம்—௬

| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| ௧௭௪ | துதி | ௧௬௭ |
| ௧௭௫ | இந்திரன் | ௧௯௭ |
| ௧௭௬ | காப்பு | ௧௯௮ |
| ௧௭௭ | துதி | ௧௯௮ |
| ௧௭௮ | வலிமை | ௧௯௯ |
| ௧௭௯ | கிழாக்கு | ௧௯௯ |
| ௧௮௦ | நீ வா | ௨௦௦ |
| ௧௮௧ | என்னை விரும்பு | ௨௦௦ |
| ௧௮௨ | என்னை நாடு | ௨௦௦ |
| ௧௮௩ | சுவாஹா | ௨௦௧ |
| ௧௮௪ | ஆண்மகன் | ௨௦௧ |
| ௧௮௫ | நஞ்சு | ௨௦௨ |
| ௧௮௬ | நமஸ்காரம். | ௨௦௨ |
| ௧௮௭ | பலாஸம் | ௨௦௨ |
| ௧௮௮ | உத்தமன் | ௨௦௩ |
| ௧௮௯ | புரியாத மூலிகை | ௨௦௩ |
| ௧௯௦ | ஸதிரியே | ௨௦௪ |
| ௧௯௧ | பொறுமை | ௨௦௪ |
| ௧௯௨ | தூய்மை | ௨௦௫ |
| ௧௯௩ | ஜ்வரம் | ௨௦௫ |
| ௧௯௪ | புவி | ௨௦௬ |
| ௧௯௫ | மருத்துக்கள் | ௨௦௬ |
| ௧௯௬ | சலதாரைகள் | ௨௦௭ |
| ௧௯௭ | சலங்கள் | ௨௦௭ |
| ௧௯௮ | கண்டமாலை | ௨௦௭ |
| ௧௯௯ | துன்பம் | ௨௦௮ |
| ௨௦௦ | புரு | ௨௦௮ |
| ௨௦௧ | துன்பமழி | ௨௦௯ |
| ௨௦௨ | புருவும் ஆந்தையும் | ௨௦௯ |
| ௨௦௨ | சமி | ௨௧௦ |
| ௨௦௪ | சூரியன் | ௨௧௦ |
| ௨௦௫ | துட்டரைத்தண்டி | ௨௧௧ |
| ௨௦௬ | இந்திரன் | ௨௧௧ |

| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| ௨௦௭ | அக்கினி | ௨௧௨ |
| ௨௦௮ | வைசுவாநரன் | ௨௧௨ |
| ௨௦௯ | அக்கினி | ௨௧௩ |
| ௨௧௦ | சாபம் | ௨௧௩ |
| ௨௧௧ | பலம் | ௨௧௩ |
| ௨௧௨ | பிரார்த்தனை | ௨௧௪ |
| ௨௧௩ | பயமின்மை | ௨௧௪ |
| ௨௧௪ | ஆத்மசக்தி | ௨௧௫ |
| ௨௧௫ | என் விருப்பம் | ௨௧௫ |
| ௨௧௬ | தருப்பை | ௨௧௬ |
| ௨௧௭ | விஷாணகன் | ௨௧௬ |
| ௨௧௮ | என்மனம் | ௨௧௭ |
| ௨௧௯ | தூக்கமே | ௨௧௭ |
| ௨௨௦ | பிரார்த்தனை | ௨௧௮ |
| ௨௨௧ | முப்பிரிவு | ௨௧௮ |
| ௨௨௨ | அக்கினி | ௨௧௯ |
| ௨௨௩ | தானியம் | ௨௧௯ |
| ௨௨௪ | வாயு | ௨௨௦ |
| ௨௨௫ | சூரியன் | ௨௨௦ |
| ௨௨௬ | வேண்டுகோள் | ௨௨௧ |
| ௨௨௭ | இந்திரன் | ௨௨௧ |
| ௨௨௮ | ஆக்ஞை | ௨௨௨ |
| ௨௨௯ | சர்ப்பங்கள் | ௨௨௨ |
| ௨௩௦ | மருந்து | ௨௨௩ |
| ௨௩௧ | புகழ் | ௨௨௩ |
| ௨௩௨ | பசுச்செல்வம் | ௨௨௪ |
| ௨௩௩ | விவாஹம் | ௨௨௪ |
| ௨௩௪ | நான் | ௨௨௫ |
| ௨௩௫ | வைஸ்வாநரன் | ௨௨௫ |
| ௨௩௬ | நிர்ருதியே | ௨௨௬ |
| ௨௩௭ | ஐக்கியம் | ௨௨௭ |
| ௨௩௮ | துண்டமாக்கு | ௨௨௭ |
| ௨௩௯ | எதிரிகள் | ௨௨௮ |
| ௨௪௦ | அச்சமுண்டாக்கு | ௨௨௮ |
| ௨௪௧ | கேசம் | ௨௨௯ |
| ௨௪௨ | புகழ் | ௨௨௯ |
| ௨௪௩ | தாய்மார்களே | ௨௩௦ |
| ௨௪௪ | உணவு | ௨௩௦ |
| ௨௪௫ | வீரியம் | ௨௩௧ |
| ௨௪௬ | தேவர்களே | ௨௩௧ |
| ௨௪௭ | ஒருமை | ௨௩௨ |
| ௨௪௮ | துரத்து | ௨௩௨ |
| ௨௪௯ | அக்கினி | ௨௩௩ |
| ௨௫௦ | நிலை | ௨௩௩ |
| ௨௫௧ | பெருகு பெருக்கு | ௨௩௪ |
| ௨௫௨ | புஷ்டி | ௨௩௨ |
| ௨௫௩ | காலசஞ்சர்கள் | ௨௩௫ |
| ௨௫௪ | மகன் | ௨௩௫ |
| ௨௫௫ | மனைவி | ௨௩௫ |
| ௨௫௬ | மனத்தால் | ௨௩௬ |
| ௨௫௭ | நிர்ருதி | ௨௩௬ |
| ௨௫௮ | யக்ஷ்மம் | ௨௩௭ |
| ௨௫௯ | தலைவன் | ௨௩௭ |
| ௨௬௦ | திரம் நில் | ௨௩௮ |
| ௨௬௧ | ஒருமனம் | ௨௩௮ |
| ௨௬௨ | மனம் என்னை | ௨௩௯ |
| ௨௬௩ | அம்பு | ௨௩௯ |
| ௨௬௪ | சிகிச்சை | ௨௩௯ |
| ௨௬௫ | குதிரை | ௨௪௦ |
| ௨௬௬ | வந்தனி | ௨௪௦ |
| ௨௬௭ | விளைக்கிறேம் | ௨௪௧ |
| ௨௬௮ | குஷ்டம் | ௨௪௨ |
| ௨௬௯ | துன்பம் நீக்கு | ௨௪௨ |
| ௨௭௦ | ஜயிப்பவன் | ௨௪௨ |
| ௨௭௧ | இந்திரன் | ௨௪௩ |
| ௨௭௨ | காப்பு | ௨௪௪ |
| ௨௭௩ | தந்துள்ளான் | ௨௪௪ |
| ௨௭௪ | வீரியம் | ௨௪௫ |
| ௨௭௫ | உன்மனம் | ௨௪௫ |
| ௨௭௬ | பந்தம் | ௨௪௬ |
| ௨௭௭ | எதிரிபந்தம் | ௨௪௬ |
| ௨௭௮ | இருமல் | ௨௪௭ |
| ௨௭௯ | வீடு | ௨௪௭ |
| ௨௮௦ | ஜிதவிசுவன் | ௨௪௭ |
| ௨௮௧ | மேதை | ௨௪௭ |
| ௨௮௨ | பிப்பலீ | ௨௪௮ |
| ௨௮௩ | மகன் | ௨௪௯ |
| ௨௮௪ | உன்மத்தன் | ௨௪௯ |

| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| ௨௮௫ | விடுதலையாக்கு | ௨௫௦ |
| ௨௮௬ | பறிப்பு | ௨௫௦ |
| ௨௮௭ | ஆதித்தியர்களே | ௨௫௧ |
| ௨௮௮ | பாவம் | ௨௫௧ |
| ௨௮௯ | வைவஸ்வதம் | ௨௫௨ |
| ௨௯௦ | கடன் | ௨௫௨ |
| ௨௯௧ | அப்சரசர்கள் | ௨௫௩ |
| ௨௯௨ | வைசுவாநரன் | ௨௫௩ |
| ௨௯௩ | நற்செயலுலகம் | ௨௫௪ |
| ௨௯௪ | சுகிருதம் | ௨௫௪ |
| ௨௯௫ | விசுவகருமன் | ௨௫௫ |
| ௨௯௬ | பிதுருக்களே | ௨௫௬ |
| ௨௯௭ | நிர்ருதி | ௨௫௭ |
| ௨௯௮ | போர் இரதம் | ௨௫௭ |
| ௨௯௯ | துந்துபி | ௨௫௮ |
| ௩௦௦ | யக்ஷ்மம் | ௨௫௮ |
| ௩௦௧ | மங்களம் | ௨௫௯ |
| ௩௦௨ | சம்சயன் | ௨௫௯ |
| ௩௦௩ | எனக்கு | ௨௬௦ |
| ௩௦௪ | ஸ்மரணை | ௨௬௦ |
| ௩௦௫ | எரிபுருஷன் | ௨௬௧ |
| ௩௦௬ | கச்சை | ௨௬௧ |
| ௩௦௭ | வச்சிராயுதம் | ௨௬௨ |
| ௩௦௮ | விழுங்குகிறேம் | ௨௬௩ |
| ௩௦௯ | கேசம் | ௨௬௩ |
| ௩௧௦ | ரோமம்வளர | ௨௬௩ |
| ௩௧௧ | ஆண்மையகற்று | ௨௬௪ |
| ௩௧௨ | காதல் | ௨௬௫ |
| ௩௧௩ | பாலர்களே | ௨௬௫ |
| ௩௧௪ | கர்ணவேதம் | ௨௬௬ |
| ௩௧௫ | அக்ஷயம் | ௨௬௬ |
| | **காண்டம்—௭** | |
| ௩௧௬ | ஆத்மா | ௨௬௭ |
| ௩௧௭ | அதர்வணன் | ௨௬௭ |
| ௩௧௮ | அதர்வணன் | ௨௬௭ |
| ௩௧௯ | வாயு | ௨௬௮ |
| ௩௨௦ | யக்ஞம் | ௨௬௮ |
| ௩௨௧ | அதிதி | ௨௬௯ |
| ௩௨௨ | ஆதித்தியர்கள் | ௨௬௯ |
| ௩௨௩ | பிருஹஸ்பதி | ௨௭௦ |
| ௩௨௪ | துதி | ௨௭௦ |
| ௩௨௫ | சரஸ்வதி | ௨௭௦ |
| ௩௨௬ | தேவியே | ௨௭௧ |
| ௩௨௭ | சபை சமிதை | ௨௭௧ |
| ௩௨௮ | பகைநாசம் | ௨௭௨ |
| ௩௨௯ | சவிதா | ௨௭௨ |
| ௩௩௦ | கணவன் | ௨௭௩ |
| ௩௩௧ | பிருகஸ்பதியே | ௨௭௩ |
| ௩௩௨ | பிரார்த்தனை | ௨௭௩ |
| ௩௩௩ | மழை | ௨௭௪ |
| ௩௩௪ | பிரஜை | ௨௭௪ |
| ௩௩௫ | அநுமதி | ௨௭௫ |
| ௩௩௬ | ஒரே அதிதி | ௨௭௫ |
| ௩௩௭ | ஜோதி | ௨௭௬ |
| ௩௩௮ | துச்சுவப்னம் | ௨௭௬ |
| ௩௩௯ | சவிதா | ௨௭௬ |
| ௩௪௦ | விஷ்ணு | ௨௭௬ |
| ௩௪௧ | விஷ்ணு | ௨௭௭ |
| ௩௪௨ | இடை | ௨௭௮ |
| ௩௪௩ | சுவஸ்தி | ௨௭௮ |
| ௩௪௪ | அக்கினி விஷ்ணு | ௨௭௮ |
| ௩௪௫ | அஞ்சனம் | ௨௭௯ |
| ௩௪௬ | இந்திரனே | ௨௭௯ |
| ௩௪௭ | சோமனே | ௨௭௯ |
| ௩௪௮ | தேவர்கள் | ௨௮௦ |
| ௩௪௯ | அரியழி | ௨௮௦ |
| ௩௫௦ | அதர்வன் | ௨௮௦ |
| ௩௫௧ | தம்பதிகள் | ௨௮௧ |
| ௩௫௨ | மனைவி | ௨௮௧ |
| ௩௫௩ | அதர்வணன் | ௨௮௧ |
| ௩௫௪ | சரஸ்வந்தம் | ௨௮௨ |
| ௩௫௫ | பிரார்த்தனை | ௨௮௨ |
| ௩௫௬ | சுபர்ணன் | ௨௮௨ |
| ௩௫௭ | சோமன்-ருத்திரன் | ௨௮௩ |
| ௩௫௮ | வாக்கு | ௨௮௩ |
| ௩௫௯ | இந்திரன்-விஷ்ணு | ௨௮௩ |
| ௩௬௦ | அவகுணம் | ௨௮௪ |

| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| ௩௬௧ | ஸினிவாலி | ௨௮௪ |
| ௩௬௨ | குஹூ | ௨௮௫ |
| ௩௬௩ | இராகை | ௨௮௫ |
| ௩௬௪ | தேவ மனைவிகள் | ௨௮௫ |
| ௩௬௫ | விஜயம் | ௨௮௬ |
| ௩௬௬ | பெரிய வெளி | ௨௮௭ |
| ௩௬௭ | ஒருமனம் | ௨௮௭ |
| ௩௬௮ | தீர்க்காயுசு | ௨௮௮ |
| ௩௬௯ | ரிக்கும் சாமனும் | ௨௮௯ |
| ௩௭௦ | வசுவே | ௨௮௯ |
| ௩௭௧ | விஷம் விலக்கு | ௨௮௯ |
| ௩௭௨ | சரஸ்வதி | ௨௯௦ |
| ௩௭௩ | போகத்துக்கு | ௨௯௧ |
| ௩௭௪ | சாபம் நீங்கு | ௨௯௧ |
| ௩௭௫ | மனை | ௨௯௨ |
| ௩௭௬ | தவம் | ௨௯௨ |
| ௩௭௭ | அக்கினி | ௨௯௩ |
| ௩௭௮ | ஜாத வேதசன் | ௨௯௩ |
| ௩௭௯ | சலமும் அனலும் | ௨௯௩ |
| ௩௮௦ | அபாமார்க்கன் | ௨௯௪ |
| ௩௮௧ | பிராமணன் | ௨௯௪ |
| ௩௮௨ | ஆத்மா | ௨௯௪ |
| ௩௮௩ | சரஸ்வதி | ௨௯௫ |
| ௩௮௪ | பிரார்த்தனை | ௨௯௫ |
| ௩௮௫ | பகை யழி | ௨௯௫ |
| ௩௮௬ | அக்கினி | ௨௯௬ |
| ௩௮௭ | இந்திரன் | ௨௯௬ |
| ௩௮௮ | அசுவினிகளே | ௨௯௭ |
| ௩௮௯ | கண்டமாலை | ௨௯௯ |
| ௩௯௦ | பசுக்கள் | ௨௯௯ |
| ௩௯௧ | நோய்கள் | ௩௦௦ |
| ௩௯௨ | மருத்துக்களே | ௩௦௧ |
| ௩௯௩ | அக்கினி | ௩௦௧ |
| ௩௯௪ | அமாவாசியை | ௩௦௧ |
| ௩௯௫ | பூர்ணிமை | ௩௦௨ |
| ௯௬ | சூரியனும் சந்திர | ௩௦௩ |
| ௯௭ | அக்கினி | ௩௦௪ |
| ௯௮ | வருணன் | ௩௦௫ |
| ௯௯ | அக்கினி | ௩௦௫ |

| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| ௪௦௦ | தார்க்ஷியன் | ௩௦௬ |
| ௪௦௧ | இந்திரன் | ௩௦௬ |
| ௪௦௨ | ருத்திரன் | ௩௦௭ |
| ௪௦௩ | விஷம் நீக்கு | ௩௦௭ |
| ௪௦௪ | அக்கினி | ௩௦௭ |
| ௪௦௫ | பகை நீக்கு | ௩௦௮ |
| ௪௦௬ | இந்திரன் | ௩௦௮ |
| ௪௦௭ | இந்திரன் | ௩௦௮ |
| ௪௦௮ | இந்திரன் | ௩௦௮ |
| ௪௦௯ | ஸோமன் | ௩௦௯ |
| ௪௧௦ | உச்சம் செல்லு | ௩௦௯ |
| ௪௧௧ | நீராசயம் | ௩௦௯ |
| ௪௧௨ | அக்கினி | ௩௦௯ |
| ௪௧௩ | தருப்பை | ௩௧௦ |
| ௪௧௪ | வேதி | ௩௧௧ |
| ௪௧௫ | துச்சுவப்னம் | ௩௧௧ |
| ௪௧௬ | யமன் | ௩௧௧ |
| ௪௧௭ | சமனம் | ௩௧௧ |
| ௪௧௮ | நிந்தை நீங்கு | ௩௧௧ |
| ௪௧௯ | எவன் | ௩௧௨ |
| ௪௨௦ | ஆத்மா | ௩௧௨ |
| ௪௨௧ | அக்கினி | ௩௧௨ |
| ௪௨௨ | சூரியன் | ௩௧௨ |
| ௪௨௩ | அக்கினி | ௩௧௩ |
| ௪௨௪ | விஜயம் | ௩௧௩ |
| ௪௨௫ | இந்திரன் அக்கினி | ௩௧௪ |
| ௪௨௬ | சோமகாண்டம் | ௩௧௫ |
| ௪௨௭ | குற்றம் | ௩௧௫ |
| ௪௨௮ | சத்துரு நாசம் | ௩௧௫ |
| ௪௨௯ | துன்பம் நீக்கு | ௩௧௫ |
| ௪௩௦ | பாவமழி | ௩௧௬ |
| ௪௩௧ | ஜுரம் | ௩௧௬ |
| ௪௩௨ | இந்திரன் | ௩௧௭ |
| ௪௩௩ | தேவர்கள் | ௩௧௭ |


## காண்டம்—௮


| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| ௪௩௪ | தீர்க்காயுசு | ௩௧௭ |
| ௪௩௫ | ஆயுசு | ௩௨௦ |
| ௪௩௬ | பகைவர் நாசம் | ௩௨௩ |

| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| சஙஎ | சத்துரு சம்ஹாரம் | ஙஉஎ |
| சஙஅ | மணிபூஷணம் | ஙஙக |
| சஙகூ | கருப்ப தோஷம் | ஙஙங |
| சச௦ | ஔஷதங்கள் | ஙஙஎ |
| சசக | எதிரி ஜயிக்க | ஙச௦ |
| சசஉ | விராஜன் | ஙசங |
| சசங | விராஜை | ஙசஎ |
| | காண்டம்—கூ | |
| சசச | மதுகசை | ஙருக |
| சசரு | காமன் | ஙருச |
| சசசு | மணி | ஙருஎ |
| சசஎ | விருப்பம் | ஙசு௦ |
| சசஅ | அஜன் | ஙசுங |
| சசகூ | அதிதி | ஙசுகூ |
| சரு௦ | பசு | ஙஎச |
| சருக | நோய் சிகிச்சை | ஙஎரு |
| சருஉ | சூரியன் | ஙஎஅ |
| சருங | ஆத்மஞானம் | ஙஅக |
| | காண்டம்—க௦ | |
| சருச | புன் செயல் | ஙஅரு |
| சருரு | தேக அமைப்பு | ஙஅகூ |
| சருசு | வரண மணி | ஙகூச |
| சருஎ | பாம்பு | ஙகூசு |
| சருஅ | விஜயம் | ஙகூகூ |
| சருகூ | மணிபந்தனம் | ச௦ச |
| சசு௦ | ஸ்கம்பன் | ச௦கூ |
| சசுக | பிரம்மம் | சகச |
| சசுஉ | சதௌதனம் | சஉ௦ |
| சசுங | வசை | சஉங |
| | காண்டம்—கக | |
| சசுச | பிரம்மௌதனம் | சஉசு |
| சசுரு | ருத்திரன் | சஙஉ |
| சசுசு | ஓதனம் | சஙசு |
| சசுஎ | பிராணன் | சச௦ |
| சசுஅ | பிரம்மச்சாரி | சசங |
| சசுகூ | துன்பம் நீங்கு | சசஎ |
| சஎ௦ | உச்சிட்டம் | சரு௦ |
| சஎக | அத்யாத்மம் | சருங |
| சஎஉ | சத்துருசம்ஹாரம் | சருசு |
| சஎங | இரணகளம் | சசு௦ |
| | காண்டம்—கஉ | |
| சஎச | பூமி | சசுங |
| சஎரு | அக்கினி | சஎஉ |
| சஎசு | தகனக்கினி | சஎகூ |
| சஎஎ | பசு | சஅஅ |
| சஎஅ | பிராம்மணப்பசு | சகூச |
| | காண்டம்—கங | |
| சஎகூ | உரோஹிதன் | சஎகூ |
| சஅ௦ | சூரியன் | ருச௦ |
| சஅக | உரோஹிதன் ஆத்மா | ருஉக |
| சஅஉ | உரோஹிதன் | ருககூ |
| | காண்டம்—கச | |
| சஅங | மணக்கோலம் | ருககூ |
| சஅச | புருஷன்-மனைவி | ருஉஅ |
| | காண்டம்—கரு | |
| சஅரு- ரு௦உ | விராத்தியன் | ருஙசு |
| | காண்டம்—கசு | |
| ரு௦ங | சலம் | ருருக |
| ரு௦ச | துதி | ருருஉ |
| ரு௦ரு | நான் | ருருங |
| ரு௦சு | பிரார்த்தனை | ருருச |
| ரு௦எ | கனவு | ருருங |
| ரு௦அ | விஜயம் | ருருச |
| ரு௦கூ | சம்ஹாரம் | ருருச |
| ருக௦ | ஜயகோஷம் | ருருரு |
| ருகக | செல்வம் | ருருஎ |
| | காண்டம்—கஎ | |
| ருகஉ | பிரார்த்தனை | ருருஎ |
| | காண்டம்—கஅ | |
| ருகங | எமனும் எமியும் | ருசு௦ |
| ருகச | எமன் | ருஎக |

| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| ௫௧௫ | புது வாழ்க்கை | ௫௭௭ |
| ௫௧௬ | தேவயானமும் பிதுருயானமும் | ௫௮௬ |

## ௧௯-வது காண்டம்

| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| ௫௧௭ | யக்ஞம் | ௫௬௯ |
| ௫௧௮ | சலம் | ௫௯௬ |
| ௫௧௯ | அக்கினி | ௫௯௭ |
| ௫௨0 | விருப்பம் | ௫௯௭ |
| ௫௨௧ | இந்திரன் | ௫௯௮ |
| ௫௨௨ | புருஷன் | ௫௯௮ |
| ௫௨௩ | நட்சத்திரங்கள் | ௬00 |
| ௫௨௪ | விண்மீன் பற்று | ௬0௧ |
| ௫௨௫ | சாந்தம் | ௬0௨ |
| ௫௨௬ | நன்று | ௬0௩ |
| ௫௨௭ | இனிது | ௬0௫ |
| ௫௨௮ | உஷை | ௬0௬ |
| ௫௨௯ | ஒரே வீரன் | ௬0௬ |
| ௫௩0 | சோதியும் புவியும் | ௬0௮ |
| ௫௩௧ | அபயம் | ௬0௯ |
| ௫௩௨ | பயமின்மை | ௬0௯ |
| ௫௩௩ | துணை | ௬0௯ |
| ௫௩௪ | வீழ்க | ௬௧0 |
| ௫௩௫ | பிரவேசம் | ௬௧௧ |
| ௫௩௬ | காப்பு | ௬௧௧ |
| ௫௩௭ | சந்தங்கள் | ௬௧௨ |
| ௫௩௮ | அதர்வவேதம் | ௬௧௨ |
| ௫௩௯ | அதர்வப்பிரிவுகள் | ௬௧௨ |
| ௫௪0 | போர்த்து | ௬௧௩ |
| ௫௪௧ | குதிரை | ௬௧௪ |
| ௫௪௨ | தங்கம் | ௬௧௪ |
| ௫௪௩ | காப்பு | ௬௧௫ |
| ௫௪௪ | தருப்பை மணி | ௬௧௭ |
| ௫௪௫ | தருப்பை | ௬௧௭ |
| ௫௪௬ | தருப்பை | ௬௧௮ |
| ௫௪௭ | ஔதும்பரமணி | ௬௧௮ |
| ௫௪௮ | தருப்பை | ௬௨0 |
| ௫௪௯ | தருப்பை | ௬௨௧ |
| ௫௫0 | ஜங்கிடம் | ௬௨௨ |
| ௫௫௧ | ஜங்கிடம் | ௬௨௩ |
| ௫௫௨ | சசுவாரம் | ௬௨௩ |
| ௫௫௩ | அக்கினி | ௬௨௪ |
| ௫௫௪ | யக்ஷ்மம் | ௬௨௫ |
| ௫௫௫ | குஷ்டம் | ௬௨௫ |
| ௫௫௬ | மேதை | ௬௨௬ |
| ௫௫௭ | தவம் | ௬௨௭ |
| ௫௫௮ | பிரம்மம் | ௬௨௭ |
| ௫௫௯ | அங்கு | ௬௨௭ |
| ௫௬0 | ஆஞ்சனமே | ௬௨௮ |
| ௫௬௧ | ஆஞ்சனம் | ௬௨௯ |
| ௫௬௨ | அசாத்தியன் | ௬௩0 |
| ௫௬௩ | இரவு | ௬௩௧ |
| ௫௯௪ | இரவு | ௬௩௨ |
| ௫௬௫ | இரவு | ௬௩௩ |
| ௫௬௬ | இரவு | ௬௩௪ |
| ௫௬௭ | ஆன்மா | ௬௩௫ |
| ௫௯௮ | காமன் | ௬௩௫ |
| ௫௬௯ | காலன் | ௬௩௪ |
| ௫௭0 | காலன் | ௬௩௭ |
| ௫௭௧ | அக்கினி | ௬௩௭ |
| ௫௭௨ | தூக்கம் | ௬௩௮ |
| ௫௭௩ | தீக்கனவு | ௬௩௯ |
| ௫௭௪ | பிரார்த்தனை | ௬௪0 |
| ௫௭௫ | அக்கினி | ௬௪௧ |
| ௫௭௬-௫௮௮ | பிரமன் | ௬௪௧ |

## காண்டம்—௨0

| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| ௫௮௯-௭௧௪ | இந்திரன். | ௬௪௪ |
| ௭௧௫-௭௨௪ | குந்தாப சூக்தங்கள் | ௭௨௭ |
| ௭௨௫-௭௨௬ | இந்திரன் | ௭௩௭ |
| ௭௨௭ | அசுவினிகள் | ௭௩௮ |
| ௭௨௮ | அசுவினிகள் | ௭௩௯ |
| ௭௨௯ | அசுவினிகள் | ௭௩௯ |
| ௭௩0 | உஷை அசுவினி | ௭௪௧ |
| ௭௩௧ | அசுவினிகள் | ௭௪0 |

# அதர்வ - வேதம்

## க. சுருதி சேர்

[அதர்வன்[1] —வாசஸ்பதி[2] ]

க. விசுவ ரூபங்களை[3] தரித்து எங்கும் சுற்றி, மூவேழு யாகுபவையின்[4] வலிமையை, வாசஸ்பதி என்னுடைய அங்கத்திலே இன்று, ஸ்தாபிப்பானாக.

உ. வாசஸ்பதியே! நீ மறுபடியும் வா: தேவ மனத்துடன் வா: வஸோஷ்பதியே[5]! என்னிலே மொழியை நிலையாக்கு: என்னில் எனக்கு வேதமாருக.

ங. நீ இங்கு வில் நாணின், இரு முனைகளைப் போலே என்னை விசாலமாக்கு: வாசஸ்பதி என்னை நிலை செய்வானாக.

ச. வாசஸ்பதி அழைக்கப்பட்டுள்ளான்: வாசஸ்பதி எங்களை பதிலுக் கழைப்பானாக: நாங்கள் சுருதியுடன் சேர்ந்து செல்வோமாக: நாங்கள் சுருதியுடன் நீங்காம லாவோமாக!

[க. க. க—ச.]

---

1 அதர்வரிஷி அறிந்த ஞானம். 2 தேவரின் பெயர். 3 எல்லா வடிவங்களை. 4 12 மாதங்கள் 5 ருதுக்கள் 3 உலகங்கள் 1 ஆதித்தியன், ஆக இருபத்தொன்றை குறிக்கும். 5 செல்வபதியே

க. கருத்து—ஞானம் நிலைக்கத் துதி.

## உ. வில்

[அதர்வன்—அமிருத மய பர்ஜன்ய சந்திரமன்]

க. சரத்தின் பிதாவாகி அதி செழிப்பளிக்கும் பர்ஜன்யனை[1] நாங்களறிவோம்; பல ரூபங்களுடனுகும் அவனுடைய அன்னையாம் புவியையுமறிவோம்.

உ. வில் நாணே! எங்களைச் சூழ்ந்து வணங்கு: எனது காயத்தைக் கற் போலாக்கு. திடத்துடன் திரமாகும் நீ, தூஷணை துவேஷங்களைத் தூரந் துரத்து.

ந. இந்திரனே! வில் நாண், மரத்தைக் கலந்து திறமுடன் திரிதமாகும் சரத்தை விசைக்குங்கால், பாயும் அம்பத் தண்டை, எங்களிடமிருந்து நீக்கு.

ச. இம்முஞ்சம்[2] நோய் நீர் ரோகத்தின் நடுவே புவி சோதி நடுவே, சூரியனைப் போலே திர மாகுக.

[க. உ. க—ச]

---

## ந. சரம்

[அதர்வன்—வெகு பல தேவர்கள்]

க. நாங்கள் சத வீரியமுள்ள சரத்தின் பிதாவான பர்ஜன்யனை யறிவோம்; நான் உன் காயத்துக்கு இதனுல் சுகம் கொண்டு வருவேன்; உனது பொழிவு புறமாகிப் புவியில் முழங்கிச் செல்க.

உ. நாங்கள் சரத்தின் பிதாவான சத வீரியமுள்ள மித்திரனை யறிவோம்; நான்........செல்க.

---

1 மேகம் போலுள்ளவனை. 2 புல், ஒரு ஔஷதத்தின் பெயர்.

உ. கருத்து—வயிற்றுப்போக்கு, அதிசாரத்துக்கு முஞ்சம் என்னும் ஔஷதம் நாடு.

௩. நாங்கள் சரத்தின் பிதாவான சத வீரியமுள்ள வருணனை யறிவோம்; நான்........செல்க.

௪. நாங்கள் சரத்தின் பிதாவான சத வீரியமுள்ள சந்திரனை அறிவோம்? நான்........செல்க.

௫. நாங்கள் சரத்தின் பிதாவான சத வீரியமுள்ள சூரியனை யறிவோம்; நான்........செல்க.

௬. உதரம், கீழ்நாடி, நீராசயத்தில், பாயும் உனது நீர்களெல்லாம் முழக்கமுடன் இப்படி புறத்தில் வருக.

௭. நான் ஏரி சலத்தைத் தடுக்குந் தடையை நீக்குவது போல் நீர் வழியைத் திறக்கிறேன்; உனது நீர் அனைத்தும் முழக்கமுடன் இங்ஙனம் புறத்தில் வெளி வருக.

௮. சலந் தரிக்குங் கடல்—பொங்குவதுபோல்—உனது சலாசயம் திறக்கப்படுக. உனது நீர் அனைத்தும் முழக்கமுடன் இங்ஙனம் புறத்தில் பாய்க.

௯. வில்லினின்றும் நீங்கி சரம் பறந்து பாய்வதுபோல் உனது மூத்திரம் அனைத்தும், முழக்கஞ் செய்துகொண்டு புறத்தில் பாய்க.

[க. ௩. க—௯]

---

## ௪. சலம்

[ஸிந்துத் தீவீபன்—சோமன்]

க. யக்ஞஞ் செய்பவர்களின் சகோதரிகளான தாய்மார்கள் தேனால் பாலைக் கலந்து தங்கள் வழிகளில் செல்லுகிறார்கள்.

---

௩. கருத்து—தடை நீர், மல பந்தம் நீங்க ஆதியில் மர்மமாய் சொல்லிய மொழிகள்.

உ. சூரியனிலுள்ள அவை, சூரியனோடாகும் அவை, எங்களுக்கு யக்ஞத்தைத் தூண்டுக.

ந. நான் பசுக்கள் பருகும் ஸ்தானத்தில், தேவிகளான சலங்களை யழைக்கிறேன்; அவி நதிகளால் அளிக்கப்பட வேண்டும்.

ச. சலங்களின் நடுவே அமிருதமுண்டு; சலங்களில் சிகிச்சையுண்டு; சலங்களின் துதிகளால் நீங்கள் திட குதிரைகளாவீர்கள், திட பசுக்களாவீர்கள்.

[க. ச. க—ச]

## ரு. நீர் சிகிச்சை

[ஸிந்துத் தீவீபன்—சலம்]

க. நீங்கள் சுகமளிக்கும் சலங்களாதலால் எங்களைச் சக்தி உச்ச சந்தோஷங் காண ஸ்தாபியுங்கள்.

உ. ஆவலுள்ள அன்னைமார்களைப் போலே அதிமங்களமான உங்களுடைய இரஸத்தை எங்களில் பாகமாக்குங்கள்.

ந. சலங்களே! நீங்கள் எங்களை எங்கு தரிதஞ் செய்கிறீர்களோ, அங்கு நாங்கள் உடனே செல்லுகிறோம். எங்களை சனன மாக்குங்கள்.

ச. நலங்களின் தலைவர்களாயும், நரர் நோய் நாசஞ் செய்பவர்களுமான சலங்களுடைய சிகிச்சையை நான் நாடுகிறேன்.

[க. ரு க—ச]

---

ச. கருத்து—சலங்களிலே சிகிச்சைகளுக்காகும் எல்லா அமிருதங்களு முண்டு.

ரு. கருத்து—சனனஞ் செய்யுஞ் சக்தியும் சலங்களுக் குண்டு.

## ௬. சலங்கள்

[ஸிந்துத் திவீபன்—பல தேவர்கள்]

௧. தேவிகளான சலங்கள் எங்கள் பிரியத்துக்கு, பானத்துக்கு, சுகமளிப்பார்களாக: அவர்கள் எங்களுக்கு சுபம் செழுமை சிகிச்சை செய்வார்களாக.

௨. சலங்களின் நடுவே சகல சிகிச்சைகளுண்டு, என எனக்குச் சோமன் சொல்லியுள்ளான். அவர்கள் விசுவ சம்புவான அக்கினியையும் அடைந்துள்ளார்கள்.

௩. சலங்களே! நான் வெகுகாலம் சூரியனைக் காண்பதற்கும், என் காயம் துணையடைவதற்கும், மருந்தை யளியுங்கள்.

௪. பாலைவனங்களி லுண்டாகுஞ் சலங்களும், சதுப்பு நிலங்களில் தோன்றும் நீர்களும், எங்களுக்குச் சுகமளிப்பவர்களாக வேண்டும். கிணறு அகழ் நீர்களும், குடங்களில் கொண்டுவரும் சலங்களும், எங்களுக்குச் சுகமளிப்பார்களாக.

[௧. ௬. ௧—௪]

---

## ௭. ஸம்ஹாரம்

[சாதனன்—அக்கினி]

௧. தேவரே! அக்கினியே! இங்கு கிமீதினனைக்[1] கொண்டுவா; தற்புகழ்ச்சி யாதுதானனை[2] இங்கு

---

1 இதென்ன, இப்போது ஏன், எனப் பறக்கும் பகுத்தறிவற்ற பேதையை, 2 இம்சை செய்பவனை.

௬. கருத்து—எல்லா சுகங்களும் சலத்திலே உண்டு.

கொண்டுவா; ஏனெனில் போற்றப்படும் நீயே தஸ்யுக்களின்[1] ஸம்ஹாரான்.

௨. ஜாதவேதஸனே,[2] பரமேஷ்டியே[3] தேகங்களின்—தலைவனே! அக்கினியே! நெய் நல்லெண்ணெய்ப்பொருள்களை—ருசிபார். நீ யாதுதானர்களை யழச்செய்.

௩. யாதுதானர்கள் துக்கமுடனுருக. பேராசையுடனை கிமீதினர்களும்—துன்பமுடனுருக. அக்கினியே! இந்திரனுடன் நீங்கள் எங்களுடைய இந்த அவியை அங்கிகரியுங்கள்.

௪. அக்கினி—அவர்களை—முதன்மையாய் பிடிக்கும் பாஹுபலமுள்ள—இந்திரன் அவர்களைத் துரத்துக: துன்பம் பற்றியுள்ள ஒவ்வொருவனும், இதோ நான் என இங்கு வந்து சொல்க.

௫. ஜாதவேதஸனே! உனது வீரியத்தை நாங்கள் பார்க்கலாமோ! நரர்களை நன்கு காண்பவனே! எங்களுக்கு யாதுதானர்களைப் பிரகடனஞ்செய்: உன்னால் எரிக்கப்பட்ட அவர்கள் எல்லோரும் தங்களை யறிவிப்பவர்களாய் இங்கு எங்கள் முன்னர் வருக.

௬. ஜாதவேதஸனே! அவர்களைப் பிடி: எங்கள் இதத்துக்காக நீ தோன்றியுள்ளாய்! அக்கினியே! நீ எங்கள் தூதனாகி யாதுதானர்களைக் கதறச் செய்.

௭. அக்கினியே! நீ யாதுதானர்களை பந்தஞ் செய்து இங்கு கொண்டு வா: பிறகு இந்திரன் தனது வச்சிராயுதத்தால் அவர்களது சிரங்களைத் துண்டித்திடுக.

[க. எ. க—எ]

1 அடிமை விரும்புவர்களின் 2 அறிஞனே 3 பெரிய யக்ஞனே

எ. கருத்து—அக்கினி பலத்தால் அரக்கரழி.

## அ. யக்ஞம்

[சாதன்—பிரகஸ்பதி, அக்கினிஷோமன்]

க. நதி நுரையைக் கொண்டு வருவதுபோல், இந்த யக்ஞம் யாது தானர்களைக் கொண்டு வருக: இங்கு இச் செயலைச் செய்யும் ஆண் பெண்ணுன எவராளுலுஞ் சரி அவர் பேசுக.

உ. இவன் பேசிக்கொண்டு இங்கு வந்துள்ளான்: நீங்கள் அவனைப் பிரேமையுடன்—ஏற்றுங்கள்; பிருகஸ்பதியே[1]! அவனை உன் வசத்திலாக்கு: அக்கினியே! சோமனே! அவனைக் கொல்லுங்கள்.

ந. சோமபானஞ் செய்பவனே! யாதுதான பிரசையை ஜயித்துக் அவனைக் கொண்டு வா: தற்புகழ்ச்சி செய்பவனது வலது இடது கண்களை சிரத்தினின்றும் விழச்செய்.

ச. அக்கினியே! ஜாதவேதஸனே! நாசஞ்செய்ய இரகசியத்திலிருக்கும், சனனங்களை, எங்கு அறிந்த போதிலும் அவர்களை, பிரமத்தால் பெருகும் நீ, நூறுவகை துவம்ஸங்களால் ஸம்ஹாரஞ்செய்.

[க. அ. க—ச]

---

## கூ. பிரார்த்தனை

[அதர்வன்—வெகு பல தேவர்கள்]

க. இந்திரன், பூஷணன், வருணன், மித்திரன், அக்கினி, வசுக்கள், இவனில் செல்வத்தைத் தரித்திடுக: ஆதித்

---

1 பெரிய பதியே.

அ. கருத்து—அனலாலும் அறிவாலும் அரக்கர்களை அழி

தியர்களும் விசுவேதேவர்களும், இவனை அதிமேன்மையான ஜோதியில் நாட்டுக.

உ. தேவர்களே! இவனது ஆக்ஞையிலே அக்கினியும் ஆதித்தியனும் சோதியும் சொர்ணமுமாகுக. இவனது எதிரிகள் இவனுக்குக் கீழாகுக: அதியுத்தமமான சுவர்க்கத்துக்கு இவனை எழுச்சியாக்கு.

ந. ஜாதவேதஸனே! எந்த உயரிய பிரமத்தால் இந்திரனுக்குப் பால்களை தரிக்கிறாயோ, அதனால் நீ இவனை மேன்மை செய்: அக்கினியே! சஜாதர்களில் இவனை சிறந்த ஸ்திதியில் நிலைசெய்.

ச. அக்கினியே! நான் அவர்களது யக்ஞம் வர்சசு செல்வம் செழிப்பு சித்தங்களை சுவீகரிக்கிறேன்: அவனுடைய எதிரிகள் அவனுக்குக் கீழாகுக: உத்தமமான உயரிய சுவர்க்கத்துக்கு அவனை எழுச்சி செய்.

[க. கூ. க—ச]

## கo. வருணன்

[அதர்வன்—அசுரன்—வருணன்]

க. இவன் தேவர்களின் அசுரனாய்[1] அரசுபுரிகிறான்; ஏனெனில் வருண அரசனது விருப்பங்கள் சத்தியமாகும். நான் பிரமத்தோடு ஓங்கி இவனை உக்கிர புருஷனுடைய கோபத்தினின்றும் நீக்குகிறேன்.

உ. வருணனே! இராஜனே! உனது கோபத்துக்கு வணக்கம்: ஏனெனில் உக்கிரனான நீ, சகலமான துரோ

---

1 அதி பலமுள்ளவனாய்

கூ. கருத்து—தேவதுணையால் திவ்யஞ் செல்.

கங்களையும் தெளிவாய்க் காண்கிறாய்! நான் அந்நியர்களான ஆயிரம் புருஷர்களை—ஒருமையுடன் நன்கு செலுத்துகிறேன்[1] இந்த உனது இப்—புருஷன்—நூறு சரத் காலங்கள் வாழ்க.

௩. நீ நாவினால் எந்த அசத்தியம் அதி சிறுமையை உரைத்திருந்தபோதிலும் நான் உன்னை சத்திய தர்மங்களின் இராஜாவான வருண பாசத்தினின்றும் விடுதலை செய்கிறேன்.

௪. நான் மிக மகத்தான வைசுவாநர யலையினின்றும்[2] உன்னை விடுதலை செய்கிறேன்: உக்கிரனே! இங்கு சஜாதர்களை[3] யநுசரித்து சொல். எங்கள் பிரமத்தை போற்று.

[௲. ௧௦. ௧—௪]

---

## ௧௧. பிரஸவம்

[அதர்வன்—பூஷணன்]

௧. பூஷணனே! அரியமான் இந்த பிரஸவத்தில் ஆற்றலுள்ள ஹோதாவாய் உனக்கு வஷட்டை[4] கூறுக. கால கருப்பமுடையை ஸ்திரீ சற்று இளக்கமாகுக; அவளது அங்கங்கள் பிரஸவத்துக்குப் பக்குவமாகுக.

௨. சோதியின் திசைகள் நான்கு; புவியின் திசைகள் நான்கு—அத் திசைகளின்—கருப்பாசயத்தால் சூழ்ந்

1 எனக்கு விருப்பமில்லாத புருஷர்களை உன்னிடம் யனுப்புகிறேன். 2 எல்லா மனிதர்களையும் அரசுபுரியும் வருணனுடைய கோபத்தினின்றும், சோபையினின்றும். 3 சகோதரர்களை. 4 யக்ஞ முழக்கத்தை.

௧௦. கருத்து—வருணனை யமனுடைய கோபத்தினின்று நீங்குங்கள்.

துள்ள சிசுவை—தேவர்கள் சலனமளிப்பார்கள். அவர்கள் ஸ்திரீயைப் பிரசவத்துக்குப் பொருத்தம் செய்க.

ங. பூஷணன் புறஞ்செய்க. சனனாங்கத்தை நாங்கள் விசால மாக்குவோம்: அன்னையே! உனது அங்கத்தைத் தளர்த்திக்கொள்: பிஷ்கலையே! நீ பாலனை கீழே பிரேரணை செய்.

ச. மாசுமிகும் பசையுள்ள நஞ்சுக்கொடி, மாமிஸத்தில் கொழுப்பில் பற்றாததுபோல், மச்சைகளிலும்—ஸ்தாபிதமாகாமல், நாய் புசிக்க கீழே வருக. நஞ்சுக் கொடி கீழே வருக

ரு. நான் உன் மர்ம அங்கத்தை விசாலமாக்குகிறேன். நான் மூல ஸ்தானத்தை யகல மாக்குகிறேன்; இருபக்கங்களின் நாடிகளை விசாலமாக்குகிறேன்; தாயையும் பாலனையும் பிரித்துத் தனிமையாக்குகிறேன். குமாரனை நஞ்சுக்கொடியினின்றும் நீக்குகிறேன். நஞ்சுக்கொடி இறங்குக.

சா. எப்படி வாயு, எப்படி மனம், எப்படி பறவை, பறக்கின்றனவோ, அப்படி பத்துமாத பாலனுன நீயும், ஜராயுவோடு ஓடி வா. ஜராயு இறங்குக.

[க. கக. க—சா]

---

## கஉ. சந்ததி

[பிருகுவங்கிரஸன்—யக்ஷ்ம நாசனன்]

க. ஜராயுவின் முதற் தோற்றமாகி, காற்று முகிலினின்றும் குணமாகும் சிகப்புக் காளை, மழையுடன் முழங்கிக்கொண்டு முன் செல்லுகிறான்: அவன் பிளந்து நேராகச்

---

கக. கருத்து—மருத்துவப் பயிற்சியும் வேண்டும்.

செல்லுங்கால் எங்கள் காயத்துக்கு இன்பமளிப்பவனாக வேண்டும் : அவன் ஒரே ஒஜோ வடிவமாகி மும்மடியாய் ஆக்கிரமித்துள்ளான்.

உ. ஒளியுடன் ஒவ்வொரு அங்கத்திலும் ஆசிரயமாகும் உன்னை நாங்கள் போற்றி அவியால் மரியாதை செய்கிறோம் ; நாங்கள் அவியுடன் ; இவனது சந்திகளைச்சேரும் சேர்பவனது, சின்னம் அதிசின்னங்களை, நாசஞ் செய்கிறோம்.

ங. அவனைத் தலைவலி காசத்தினின்றும் நீக்கு. எல்லா அங்கங்களிலும் நுழையும் எந் நோயினின்றும்—அவனை விடுதலையாக்கு. முகில் மகனும் வாத புத்திரனும் சோதி மயமுமான அவன், மரங்களையும் மலைகளையு மணுகி—ஆசிரயமாகுக.

ச. என் மேலங்கத்துக்குச் சுகமாகுக : என் கீழ் உறுப்புக்கு இன்பமாகுக : என் நாலு கரணங்களுக்கும் இனிமையாகுக. என் காயத்துக்கு நயமாகுக.

[க. கஉ. க—ச.]

---

## கந. மின்னல்

[பிருக்வங்கிரன்—வித்யுத் தேவதை]

க. உனது மின்னலுக்கு வணக்கமாகுக. உனது இடிமுழக்கத்துக்கு வணக்கம். துன்பத்தை எதிர்க்கும் உனது வச்சிராயுதத்துக்கு இணக்கமாகுக.

உ. ஒளியை ஒன்றுசேர்க்கும், உச்சிமகனை, உனக்கு நமஸ்காரம். எங்கள் காயங்களுக்கு சுகமளி : எங்களது பாலர்களுக்கு மங்களஞ் செய்.

---

கஉ. கருத்து—மின்னலால் தோன்றும் நோய் நீங்கி வாழ்.

ங. உச்சியின் மகனே உனக்கு வணக்கமாகுக. எரிக்கும் உனது ஆயுதத்துக்கு இணக்கமாகுக: மர்மத்திலேயுள்ள உனது பரம நிலபத்தை நாங்கள் அறிகிறோம்: கடலின் உள்ளே, நீ நாபிபோல வைக்கப்பட்டுள்ளாய்.

ச தேவியே! தேவர்கள் எய்வதற்குச் செய்துள்ள தீரனும் சரனுமான நீ, சபையில் புகழப்படும் நீ, எங்களுக்குப் பிரியமுள்ளவனுகுக. அத்தகைய உனக்கு இன்பமாகுக.

[க. கங. க—ச.]

---

## கச. பெண்

[பிருகுவங்கிரன்—வித்யுந் வருணன் யமன்]

க. மரத்தினின்றும் மலர் மாலையைப்போல், அவளது செல்வம் வர்சசை நான் கிரகித்துள்ளேன். விசால மூலமுள்ள மலையைப்போல் அவள் பிதுருக்களில் திரமாகுக.

உ. இராஜனுன இயமனே! இப்பெண்ணை உனக்கு மனைவியாக இணக்குவிப்பாய்: அதுவரை—அவள் தனது தாய், சகோதரன் தந்தையின் மனையிலே பந்தனமாகுக.

ங. அரசனே! இவள் உனது குலக் காப்பு. நாங்கள் இவளை உனக்குப் பூரணமா யளிக்கிறோம்; இவள் வெகுகாலம் பிதுருக்களுடன் உட்காருவாள்: இவள் மங்களா—பீஜங்களை—சிரத்தினின்றும், தெளிப்பாளாக.

ச. பந்தனமற்ற கயன் கசியபனது பிரமத்தால் உனது பாக்கியத்தை உன்னில், சகோதரிகள் கோசத்திலுள்ள செல்வத்தை செய்வதுபோல், திரஞ் செய்கிறேன்.

[க. கச. க—ச.]

---

கங. கருத்து—மின்னலான ஒளியின் சக்தி.

கச. கருத்து—மணமில்லா வாழ்க்கை வேண்டாம்.

## கரு. செல்வம்

[அதர்வன்—ஸிந்து தேவதை]

க. நதிகள் ஒருமையுடன் ஒன்று பாய்க: வாயுக்களும் பறவைகளும் ஒன்று வீசுக: புராதனர்களான அவர்கள் இந்த யக்ஞத்தை யனுபவிப்பார்களாக: நான் நற் பொழிவால் ஆஹுதி செய்கிறேன்.

உ. இங்கு இதோ என் அழைப்புக்கு வாருங்கள். ஒன்று சேர்பவர்களே! இங்கு அருகில் வாருங்கள்: அறிஞர்களே! இவனை அபிவிருத்தி யாக்குங்கள். அங்குள்ள ஒவ்வொரு பசுவும் இங்கு வருக; இவனில் எல்லாச் செல்வமும் திரமாகுக.

ங. சதா அழியாமல் ஒன்று சேர்ந்து எத்தாரைகளுடைய ஊற்றுக்கள் பாய்கின்றனவோ அந்த எல்லாப் பொழிவுகளுடன், நாங்கள், எனக்கு செல்வங்களை ஒன்று பெருகச் செய்கிறோம்.

ச. நெய் பால் சலத்தினது எந்த ஊற்றுக்கள் பாய்கின்றனவோ, அந்த எல்லாப் பொழிவுகளுடன் நாங்கள் எனக்குச் செல்வங்களை ஒன்று பெருகச் செய்கிறோம்.

[க. கரு. க—ச]

---

## கசு. ஜயம்

[சாதனன். அக்கினி இந்திரன்]

க. துரித அக்கினி அமாவாஸையில் அணிவகுத்து உயரமாகி, எங்களைத் தின்பவர்களினின்றும், காத்து—யாதுதானனை யழிக்கிறான். அவன் எங்களை ஆதரிப்பான்.

---

கரு. கருத்து—செல்வ யக்ஞம்.

உ. வருணன் ஜயத்தைப் புகழ்கிருன்: அக்கினி ஜயத்தை யநுகூலஞ் செய்கிருன். இந்திரன் எனக்கு ஜயத்தை யளித்தான். அதுவே சகஜ சத்துரு யழிப்ப தாகும்.

ங. இது விஷ்கந்தத்தை[1] ஜயிக்கும்: இது பகைவர்களைப் பாழாக்கும். இதனால் நான் பிசாசங்களை அவற்றின் சாதிகளை யெல்லாம் நாசமாக்குவேன்.

ச. எங்கள் பசுவையோ குதிரையையோ புருஷனையோ நீ இம்சித்தால், நாங்கள் உன்னை இந்த ஜயத்தால் நீ எங்கள் வீரபுருஷர்களை யழிக்காமலிருக்க, குத்திக்—கொல்லுவோம்.

[க, கசு. க—ச]

## கஎ. நாடிகள்

[பிரமன்—பல தேவர்கள்]

க. சிகப்பு உடைகளுடன் சலனமாகும் ஸ்திரீகளாம் நாடிகளான நீங்கள் சகோதரனில்லாத சகோதரிகள் போல் சக்தி யொழிந்து சாந்தமாகுங்கள்.

உ. மேலுள்ள நாடியே! நீ திரமாயிரு. கீழுள்ள நாடியே நீ திரமாயிரு: நடுவிலுள்ள நாடியே நீ திரமாயிரு. சின்னச் சிறுங் நாடியும் திரமானல் அது பெரிய நாடியையுந் திரமாக்கும்.

ங. நூறு நாடிகளின் ஆயிரம் நாடிகளின்—சக்திகள்—இந் நடு நாடிகளை—திரஞ் செய்துள்ளன; கடை நாடிகள் ஒன்று ஆகிரியத்துள்ளன.

---

1 வாதநோயை.

கசு. கருத்து—ஜயம் என்னும் உலோகத்தி னுதவியால் உள்ளார்களை ஒழித்து விடு.

ச. வில்லாகாரமான பெரிய மணல் நிறையும் நாடி உங்களைச் சூழ்ந்துள்ளது. திரமாயிரு. அமைதியாகு. நான் துதிக்கிறேன்.

[க. கஎ. க—ச]

---

## கஅ. ஆதர்சன்

[திரவிணோதன்—விநாயகன்]

க. இலட்சுமி நீங்கி சுந்தரஞ் சிதைந்து தான சூனியமானவளை நாங்கள் துரத்துகிறோம்: எங்கள் பிரசைக்காக மேலானவையை ஒன்று வகிக்கிறோம்.

உ. ஸவிதா அவளது கால்களினின்றும் கஷ்டத்தைத் துரத்தியுள்ளாள். வருணன், மித்திரன், அரியமான் அவளது கைகளினின்றும் நீக்கியுள்ளார்கள். அநுமதியும் அகற்றி எங்களுக்கு நன்மை யளித்துள்ளாள். தேவர்கள் சௌபாக்கியத்துக்கு இப் பெண்ணைச் செலுத்தியுள்ளார்கள்.

ங. உன் காயத்திலுள்ள எக்குரூரத்தையும் கண் கேசங்களிலுள்ள எல்லாப் புன்மையையும், எங்கள் மொழியால் நாசமாக்குகிறோம். தேவஸவிதா உன்னை விருத்தியாக்குக.

ச. கோ எதிர்ப்பு, மான் கால், காளைப் பல், கோபரூபம், தொற்று நோய், துட்ட சின்னம் உள்ள, இவர்களை எங்களிடமிருந்து நாங்கள் நீக்குகிறோம்.

[க. கஅ. க—ச]

---

கஎ. கருத்து—நாரிகளையும் நாடிகளையும் அறிந்து கொள்ளுங்கள்.

கஅ. கருத்து—சின்னங்கள் குணங்களை யறிவிக்கும்.

## ௧௯. சம்ஹாரம்

[பிரமன்—சகல தேவர்கள்]

௧. வில்லாளிகள்—எங்களைக் காணமலாகுக அதி வில்லாளிகளும் எங்களைக் காணமலாகுக. இந்திரனே! எங்களிடமிருந்து தூரமாய் கூரிய அம்புகளை நீக்கி விழச்செய்.

௨. எறிந்து எறியப்போகும் சரங்கள் எங்களை நீங்கி பறந்து செல்க. மானிடர்களின் திவ்ய சரங்களே! எனது சத்துருக்களை யழியுங்கள்.

௩. எதிர்ப்பவர், உற்றார், உறவினர் அல்லது வேறு எவராணுலுஞ்சரி அந்த எதிரிகளை ருத்திரன் சரங்களால் நாசஞ்செய்க.

௪. எங்களை துவேஷித்துத் தீமைபுரியும், சத்துருவை சத்துரு யில்லாதவனை எல்லா தேவர்களும் தண்டித்திடுக. பிரமம் எனது அகக் காப்பாகும்.

[௧. ௧௯. ௧—௪.]

---

## ௨௦. அரசர் கடமை

[அதர்வன்—வெகுபல தேவர்கள்.]

௧. தேவனுன ஸோமனே அவன் துன்பமற்றுகுக; இந்த யக்ஞத்தில் மருத்துக்களே! எங்களுக்கு சுகமளிப்பவர்களாகுங்கள்; கொடுமையும் கஷ்டமும் எங்களைக் காணமலாகுக; துவேஷிக்கும் துன்பமும் எங்களைக் காணமலாகுக.

---

௧௯—கருத்து. ருத்திரன் என்னும் கோபத்தினுதவியால் நீங்கள் காப்படையுங்கள்.

உ. மித்திர வருணனே! இன்று துஷ்டர்களது ஆயுதத்தையும், பாயும் சஸ்திரத்தையும் எங்களிடமிருந்து தூரமாக்குங்கள்.

ங. வருணனே! இம்சிக்கும் ஆயுதத்தை இங்கிருந்தும் அங்கிருந்தும் நீக்கு: மகத்தான சுகத்தை யளி: கோரமான ஆயுதத்தை விலக்கு.

ச. நீயே மேன்மையாய் அரசுபுரிபவனுகும். எதிர்ப்பற்றவன் பகையழிப்பவன்: எவனது நண்பன் எப்பொழுதும் கொல்லப்படாதவனுய் எவனது மித்திரன் சத்துருவால் ஜயிக்கப்படாதவனு யுள்ளானே அவனே நீ.

[க. உ0. க—ச]

---

## உக. சத்துருக்கள்

[அதர்வன்—இந்திரன்]

க. சனங்களின் தலைவன், சுவஸ்தி யளிப்பவன், எதிரீ கொல்லுபவன், அரி அழித்து, எல்லாம் கைவசஞ் செய்பவன், வர்ஷிக்கும் இந்திரன், சோமபானஞ்செய்து, அபயமளிக்கு மவன், எங்கள் முன் வருக.

உ. இந்திரா! எங்கள் எதிரிகளை ஜயஞ் செய். எங்களுடன் சமர் செய்பவனை கீழே சாய்த்துவிடு. எவன் எங்களை யடிமை யாக்க விரும்புகிறனே அந்த நீசனை இருளில் செலுத்து.

ங. அரக்கனை யழி, சத்துருக்களை யொழி, விருத்திரனின் தாடைகளை படேரென உடை. இந்திரா! அடிமையாக்க விரும்பும் சத்துருவின் கோபத்தைத் தணி.

ச. துவேஷியின் மனத்தையும் எங்களை யழிக்க நாடும் எதிரியின் பயங்கராயுதத்தையும் நீக்கு: மேலான காப்பை

---

உ0. கருத்து—தேவ உதவியால் தெவ்வர்களைத் தொலை.

எமக்கு அளி: அவனது கோரமான ஆயுதத்தை தூரத்திலாக்கு. [௧. ௨௧. ௧—௪]

## ௨௨. காமாலே

[பிரமன்—சூரியன்]

௧. சூரியனை யநுசரித்து உனது இருதய நோயும் காமாலையும்—நீங்குக. நாங்கள் சிகப்பு காளையின் நிறத்தால் உன்னைச் சூழ்கிறோம்.

௨. இவன் நோய் நீங்கி மஞ்சளாகாமலிருக்க; நீண்ட காலம் வாழ, உன்னை சிகப்புக் கதிர்களால் நாங்கள் சூழ்கிறோம்.

௩. நாங்கள் உன்னை, சிகப்பே தேவதை என நாடுபவையையும், செந்நிற பசுக்களையும், இவற்றின் ஒவ்வொரு வடிவத்தால் வன்மையால், சூழ்கிறோம்.

௪. நாங்கள் கிளிகளிலும் ரோபநாகங்களிலும் உனது பாண்டு ரோகத்தை செலுத்துகிறோம். அப்படியே ஹாரித்திரவங்களில் உனது பாண்டு நோயைச் சாய்க்கிறோம்.

[௧. ௨௨. ௧—௪]

## ௨௩. இரஜனி

[அதர்வன்—வனஸ்பதி]

௧. ஓஷதியே! கருமையே! இருளான மங்கலாகும் நீ இரவுபிறந்தவள்: இரஜனியே[1]! இந்த வெண் துளியையும் மாசையும் நிறமாக்கு.

---

1 குஷ்டத்தை நீக்கும் ஔஷதமே.

௨௧. கருத்து—இந்திரனல் சார்பிலார்களை யகற்றுங்கள்.

௨௨. கருத்து—காமாலையை கதிரோனது கதிர்கள் கொல்லும்.

௨. குஷ்டத்தை நீக்கு. இவனிடமிருந்து பலிதம் பளிங்கு மாசையும் ஒழி: உனது நிறம் உனக்கு வருக. வெண்—புள்ளிகளை—தூரமாக்கு.

௩. நீ மறையும் நிலபம் மங்கலாகும்: உனது ஸ்தானம் மங்கலாகும்; ஔஷதியே நீ மங்கல—நிறமுள்ளவள்; இங்கிருந்து குஷ்டத்தை நீக்கு.

௪. என்பினின்றும், தேகத்தின் — அகத்தினின்று — தோன்றும்—கிலாஸ குட்டத்தையும், சருமத்தில் விஷநீரால் தோன்றும் வெண்சின்னத்தையும், பிரமத்தால் நான் தூரஞ் செய்துள்ளேன்.

[க. ௨௩. க—௪]

---

## ௨௪. குட்டம்.

[பிரமன்—ஆசுரி வனஸ்பதி]

க. முதன்மையாய் சுபர்ணன் தோன்றினன்: நீ அதன் பித்தமாகும். ஆசுரி, அமரால் ஜயிக்கப்பட்டு வனஸ்பதிகளின் வடிவத்தை தரித்தாள்.

௨. முதன்மையான ஆசுரி[1] வெண் குட்டத்துக்கு இந்த சிகிச்சையைச் செய்தாள். இது வெண் மாசு விலக்கும். இது, வெண் குட்டத்தை மறையச் செய்துள்ளது. இது சரூபத்தைச் சரூபமாய் செய்துள்ளது.

௩. உனது தாயின் பெயர் ஸரூபமாகும், உனது பிதாவின் பெயரும் ஸரூபமாகும். நீ ஸரூபஞ் செய்பவள் ஔஷதியே! இதைச் சரூபமாக்கு.

---

[1] அதி சக்தி வாய்ந்தவள்.

௨௩. கருத்து—இரஜனி என்னும் ஔஷதத்தால் குட்டத்தை நீக்கு.

ச. சரூபஞ் செய்யும்[1] சியாமை[2] புவியினின்றும், புலனுக் கப்பட்டுள்ளாள்; நீ இந்நோய்—சிகிச்சையை - பூரண மாக்கு. நாங்கள் உன்னை நாடுகிறோம். இதனைச் சரூபஞ் செய்.

[க. உச. க—ச.]

---

## உரு. ஜ்வரம்

[யக்ஷ்ம நாசனம்—பலதேவர்கள்]

க. தருமம் பற்றுபவர்கள் வணக்கங்களை—சிகிச்சை களை—யளிக்கும் ஸ்தானத்தில், சலங்களை, அக்கினி நுழைந்து எரிக்கின்றான். ஜ்வரமே! அந்த ஸ்தானத்தை உனது பரம மூல நிலயமென—பெரியார்—சொல்லுகிறார் கள். அன்புடனுள்ள நீ எங்களை விலகு.

உ. ஜ்வரமே! நீ எரிந்தாலும் சரி, எரித்தாலுஞ் சரி, உன் மூலஸ்தானம், காய மங்கங்களை வியாபகமான போதி லும் சரி, வேதனை என்பது உன் நாமமாகும். ஹரிதத் தின்—காமாலையின் தேவனே! இணங்கும் நீ இனி எங்களை நீங்கு.

ங. நீ துக்கமானாலுஞ் சரி, துன்பமளிப்பவனானாலுஞ் சரி, நீ அரசனான வருணனது பிள்ளை ஆனாலுஞ் சரி, நீ வேதனை என்னும் பெயருள்ளவனாகும். நீ, ஹரிததேவ னாகும். இணங்கி நீ எங்களை நீங்கு.

ச. சீதச் சுரத்துக்கு நமஸ்காரம். உக்கிர தாபத்துக்கு நான் வணக்கமளிக்கிறேன்: ஒருநாள்விட்டு இருநாள்

---

1 பழைய வடிவம்போல் செய்யும், ஒரே நிறஞ்செய்யும். 2 ஒரு ஔஷதத்தின் பெயர்.

உச—கருத்து. சியாமை என்னும் ஔஷதத்தால் தொழு நோய் நீங்கும்.

பின்னர், மூன்று தினத்துக்கு அப்பால், வரும், சுரத்துக்கு நமஸ்காரமாகுக.

[க. உரு. க—ச.]

## உசு. காப்பு

[பிரமன்—வெகு பல தேவர்கள்.]

க. ஆயுதம் எங்களிடமிருந்து தூரமாகுக: தேவர்களே! நீங்கள் எறியும் சரமும் நீங்குக.

உ. செல்வ மளிப்பவன் எங்களுக்கு நண்பனாகுக: பகன் இந்திரன் அதிசயப் பொருளுடனாகும் சவிதா எங்களுக்கு சிநேகிதராகுக.

ந. மருத்துக்களே! பிரவாஹத்தினின்றும் தோன்றும் நீங்கள், சூரிய சர்மமுடன் எங்களில் அதி விசால சுகத்தை யளியுங்கள்.

ச. எங்களை நின்கு பிரேரியுங்கள். சுக மளியுங்கள். எங்கள் காயங்களைச் சுகஞ் செய். எங்கள் சந்தானங்களுக்கும் சுகத்தைப் புலனாக்கு.

[க. உசு. க—ச]

## உஎ. அரிகள்

[அதர்வன்—சந்திரன்—இந்திராக்கினி]

க. அங்கு கரையினோரத்தில் மூவேழு கவசங்களை நீக்கிய அரிகள் யுள்ளார்கள். அவர்களது கவசங்களால் துன்பமளிக்கும் சத்துருவின் கண்களை மூடுகிறோம்.

---

உரு. கருத்து—சுரத்துடன் இணைந்து அதைத் தணி.

உசு. கருத்து—தேவ உதவி நாடு.

உ. பிராகம் என தரிக்கும் அவள், பிளக்குமவள், பிரித்துச் செல்க: மறுபடியும் உயிர் தோன்றும் அவளது மனங் கலக்க. சேஷ்டை புரிபவர்கள் ஐயசூனிய மாயுள்ளார்கள்.

ந. துஷ்டர் பலர் தோய்ந்தும் திடமற்றுள்ளார்கள்: திறனற்ற சிலர் அதை முயற்சிக்கவில்லை: சுற்றியுள்ள நாணலின் சிறிய துண்டுகளைப் போல், அவர்கள் சிதறியுள்ளார்கள்.

ச. பாதங்களே! முன் செல்லுங்கள். அதி துரிதமாகுங்கள். அளிப்பவனது நிலயங்களுக்கு யழைத்துச் செல்லுங்கள். இந்திராணி, ஜயிக்கப்படாமலும் சோரஞ் செய்யப்படாமலும் முதன்மையாய் முன் செல்க.

[க. உஎ. க—ச]

## உஅ. எதிரி நஷ்டம்

[சாதனன்—பலதேவர்கள்]

க. அரக்கரழித்து நோய் நீக்கும் தேவனான அக்கினி, கிமீதினிகளையும் யாதுதானர்களையும் வஞ்சக முள்ளவர்களையும் எரித்து எங்களுக்கு வந்துள்ளான்.

உ. தேவனே! யாதுதானர்களை எரி; கிமீதினர்களை யொழி. கிருஷ்ணவர்தனே! எதிர்க்கும் யாதுதானிகளை தகி.

ந. சாபத்தால் சபிப்பவள், புன்மையை தனது பேராதரவாகப் பற்றியுள்ளவள், இரஸம் பற்ற நமது பாலனை பிடிப்பவள், தன் மக்களையே புசிப்பாளாக:

ச. யாது தானியை தனது மகனையும், சகோதரியையும், பெண்ணையுமே புசித்திடுக: கோர கேசங்களுடனுகும்

உஎ. கருத்து—பாம்புகளான புன்மைகள் பாழாகுக.

யாது தானியைகள் பரஸ்பர மழிக: அராயிகள் அடியோடு யழிக்கப்படுக.

[க. அ. உ—ச]

## உகூ. ஜயமணி

[வசிஷ்டன்—பிரமணஸ்பதி]

க. எந்த வியாபக மணியால்[1] இந்திரன் அபிவிருத்தியடைகிறானோ, பிரமணஸ்பதியே! அதனால் எங்களை இராஷ்டிரத்துக்கு அபிவிருத்தி செய்.

உ. பகைவர்களைப் பணியச்செய்து பிசுனர்களைப் பாழாக்கி நமக்குத் துன்பம் நாடும் தீமை புரிபவனை எதிர்த்து நில்.

ந. சோமனும் தேவ ஸவிதாவும், உன்னை அபிவிருத்தி செய்துள்ளார்கள்; நீ ஜயசாலியாவதற்கு எல்லாப் பொருள்களும் உனக்கு உதவிபுரிந்துள்ளன.

ச. எதிரி யழித்து பகையழிக்கும் வியாபக மணி இராஷ்டிரத்துக்கு என் பகைவர்களை யொழிக்க என்னில் உறுதியாகுக.

ரு. நான் எதிரி யற்றாகி, எதிரி யொழித்து எதிரி நீக்குபவனாக அச்சூரியன் உதயமாயுள்ளான். இந்த எனது மொழியும் உச்சமாயுள்ளது.

சு. எதிரி யழிக்கும் காளையாயும் இராஷ்டிரஞ் ஜயித்து ஜயம் பெறுபவனுமான நான், இந்த வீர சனத்தின் அதிகாரியாகவேண்டும்.

[க. உகூ. க—சு]

1 வன்மையால்.

உஅ. கருத்து—அரக்கரழி.

உகூ. கருத்து—வன்மையால் வெல்லுங்கள்.

## ௩௦. காப்பு

[ஆயுஷ்காமோதர்வன்—விசுவே தேவர்கள்]

௧. வசுக்களே! விசுவேதேவர்களே! இவனை இரட்சியுங்கள்: ஆதித்தியர்களே இவனில் அப்படியே விழிப்புடனிருங்கள்: சிநேகிதர்களால் சத்துருக்களால் இவன் அணுகாமலாகுக. புருஷர்களின் ஆயுதமும் இவனைச் சேராமலாகுக.

௨. தேவர்களே! ஒரு சித்தமுடனாகி எனது இச்சொல்லைக் கேளுங்கள். உங்களில் பிதாவாயிருப்பவர்களும் உங்களில் புத்திரர்களாயிருப்பவர்களும், எனது இச் சொல்லைச் செவிகொடுங்கள்: நான் இவனை எல்லீருமான உங்களது சுவஸ்திக்குச் சமர்ப்பிக்கிறேன். இவனைத் தீர்க்காயுசு வரை வகியுங்கள்.

௩. புவியிலிருக்கும் தேவர்கள் சோதியிலிருக்குந் தேவர்கள், வானம் பசுக்கள் சலங்களிலுள்ள தேவர்கள், இவனுக்கு மூப்புவரை ஆயுசைச் செய்க; அவன் அந்நியமான நூறு மிருத்யுக்களைத் தூரமாக்குக.

௪. நான் பிரயாஜர்களும்[1] அநுயாஜர்களும்[2] ஹுதபாகர்களும் அஹுதாதர்களும் தேவர்களுமான உங்களை, பஞ்சப் பிரதிசைகளை பகிர்ந்துள்ள உங்களை, இவனது சபையிலே அங்கத்தினர்களாகச் செய்கிறேன்.

[௧. ௩௦. ௧—௪]

---

1 முன் அளிப்புக்கள். 2 பின் அளிப்புக்கள்.

௩௦. கருத்து—தேவ துணையுடன் மூப்பு வரை வாழ்.

## ௩௧. திசைகள்

[பிரமன்—பலதேவர்கள்]

௧. நாங்கள் திசைகளின் திசைக் காப்பர்களான நான்கு அமுதர்களான—இரட்சகர்களுக்கும்—பொருளின் அத்தியட்சர்களுக்கும், இங்கு அவியால் வணக்கமளிக்கிறோம்.

௨. திசைகளின் திசை இரட்சகர்களே! நான்கு திசைகளை நிலையாக்குந் தேவர்களே! நிர்ருதியின்[1] பாசங்களினின்றும்; ஒவ்வொரு துன்பத்தினின்றும், எங்களை விடுதலை யாக்குங்கள்.

௩. நான் அவமற்று, அவியால் உன்னை யஜிக்கிறேன்: குறை நீங்கும் நான், நெய்யால் யாகுதி செய்கிறேன். திசைகளின் திசை பதியான துரித தேவன், எங்களுக்கு உயரிய செலவத்தைச் சுமந்து வருவான்.

௪. எங்கள் மாதா பிதாவுக்குச் சுவஸ்தியாகுக. புவி பசு புருஷர்களுக்கும் சுவஸ்தியாகுக; சகல செல்வமும் சிறந்த அறிவும் எங்களுக்காகுக. நாங்கள் அதி வெகு காலம் சூரியனைப் பார்க்கவேண்டும்.

[க. ௩௧. க—௪]

---

## ௩௨. பிரமம்

[பிரமன்—தியாவாப் பிருதிவீ]

க. சனங்களே! இந்த மகத்தான பிரமத்தையறியுங்கள்: பெரியார்—சொல்வதாவது—எவனால் வனஸ்பதிகள்

---

1 அழிவின்.

௩௧. கருத்து—எங்களுக்கு சுவஸ்தி வேண்டும்.

சுவாசிக்கின்றனவோ, அவன் புவியிலுமில்லை சோதியிலு மில்லை.

உ. சிரமமாகி சாந்தமடையவர்களைப் போல் அவர்களது வாசம் வானத்திலாகும். பொருளின் மூல ஸ்தானமான அவனை அறிஞர்கள் அறிகிறார்கள், அல்லது அறிய வில்லை.

ந. கமன சீலர்களான சோதி—புவி, பூமி, எவனால் செய்யப் பட்டனவோ, அவன், இன்று சதாகாலம் சமுத்திரத் தின் தாரைகளைப் போல ஈரமுள்ளவனா யிருக்கிறான்.

ச. ஒன்று விசுவத்தை கவர்ந்துள்ளது: இது அந்நியத் திலே ஆசிரதமாகும்: அனைத்தும் அடைந்துள்ள புவிக்கு நான் வணக்க மளித்துள்ளேன்.

[க. நஉ. க—ச]

## நந. சலங்கள்

[சந்திரன்—ஆபன்]

க. ஸவிதாவும் அக்கினியும் தோன்றும்—நிலயர்களாயும்—பீதம் பொன் நிறம் பிரகாசம் புனிதஞ் செய்பவர்களுமான சலங்கள், அனலைக் கருப்பமாய்த் தரிக்கும் அவர்கள் சுகம் செழிப்பு எங்களுக்கு செய்பவர்களாகுக.

உ. இராஜனான வருணன் சனங்களின் சத்தியா சத்தியத்தைக் கண்டு எவற்றின் நடுவே செல்லுகிறானோ அந்த சலங்கள் அனலைக் கருப்பமாய்த் தரிக்கும் கனகமயமான அவர்கள் எங்களுக்குச் சுகம் செழிப்புச் செய்பவர்களாகுக.

ந. தேவர்கள் சோதியில் எச்சலங்களில் தங்கள் பானத்தைச் செய்கிறார்களோ, எவர்கள் வானத்தில் பலவிதங்க

நஉ. கருத்து—புவிசோதி மகிமை.

ளாய்த் தோன்றுகிறார்களோ, அப் பொன் நிறமான அவர்கள் எங்களுக்குச் சுகம் செழிப்புச் செய்பவர்களாகுக.

௪. சலங்களே! சிவமான கண்ணால் எங்களைப் பாருங்கள். உங்கள் மங்களமான காயத்தால் என் சருமத்தைப் பரிசியுங்கள். சோதியாய் சுத்தஞ் செய்பவர்களாய் நெய் பொழியும் அவர்கள் எங்களுக்குச் சுகம் செழிப்புச் செய்பவர்களாகுக.

[க. ௩௩. க—௪]

---

## ௩௪ தேன்மயம்

[அதர்வன்—மது வனஸ்பதி]

க. இந்த வனஸ்பதி தேனினின்றும் தோன்றும். நாங்கள் உன்னைத் தேனால் கெல்லுகிறோம். மதுவினின்று தோன்றப்படும் நீ[1] தேனைப்போல் எங்களை இனிமை செய்.

உ. என் நாக்கின் நுனியில் தேன்; நாக்கின் மூலத்தில், அதி இனிய தேனாகும் நீ, எனது சங்கற்பத்திலே ஆக வேண்டும்: நீ எனது சித்தத்திலே வருவாயோ?

௩. எனது சலனம் தேன் மயம்; என் கமனம் தேன் மயம். நான் மொழியால் தேன் மயமாய் மொழிகிறேன், நான் தேன் தோற்ற மாக வேண்டும்.

௪. நான் தேனைவிட தேனுயுள்ளேன், மதுகத்தை விட மதுவா யுள்ளேன்: நீ என்னை என்னையே தேன் மிகும் சாகையாக விரும்பு.

ரு. நான் வெறுப்பை நீக்க, கரும்பின் அதி தந்துக்களால், நீ, என்னுடன் இன்பமுள்ளவளாவதற்கும்,

---

1 தேன் கொடி என்னும் ஒரு ஔஷதம்.

௩௩. கருத்து—சுகத்துக்கு சலம் நாடு.

என்னிலிருந்து தூரமாகாம லிருப்பதற்கும், உன்னைச் சுற்றிக் கட்டியுள்ளேன்.

[க. நச. க—ரு]

---

## நரு. தீர்க்காயுசு

[ஆயுஷ்காம அதர்வன்—ஹிரண்யன்]

க. தட்சமக்கட்கள் சதானீகனுக்கு நல்ல மனங்களுடன் பந்தஞ் செய்யும் இப்பொன்னை [1], ஆயுசு வர்சசு பலம் நூறு சரத்துக்களுடனுகும் தீர்க்காயுசுக்கு நான் உன்னில் கட்டுகிறேன்.

உ. தேவர்களில் முதன்மையாய்த் தோன்றும் ஓஜஸான இதை—தரிப்பவனை—பிசாசர்களும் அரக்கர்களும் ஜயிப்பதில்லை. சீவர்களில் தட்சமக்களது தங்கந் தரிப்பவன் ஆயுசை தீர்க்காலஞ் செய்துகொள்ளுகிருன்.

ந. நாங்கள் சலங்களின் தேஜசு, சோதி, ஓஜசு பலத்தை வனஸ்பதிகளின் வீரியங்களை, இந்திரன் இந்திரியங்களைப் போல் இவனில் தாரணஞ் செய்கிறோம். இவன் பலமுள்ளவனுகையால், இப்பொன்னை தரிப்பான்.

ச. நாங்கள் மாஸம் அயனம் ருதுக்கள் வருஷப் பாலால் உன்னை பூரண மாக்குகிறோம்; இந்திராக்கினியும் விசுவே தேவர்களும் எதிர்ப்பாகாமல் உன்னை அங்கீகரிப்பார்களாக.

[க. நரு. க—ச]

**காண்டம் ஒன்று**

முற்றிற்று.

---

1 பொன்போலாகும ஒரு வனஸ்பதி அல்லது செல்வ சின்னம்.

நச. கருத்து—தேன் லதையால் வசியந் தோன்றும்.

நரு. கருத்து—சக்தி பெருகி நாம் செல்வப் பிரபுக்களாக வேண்டும்.

## ௩௬. மர்ம தரிசனம்

[வேன ரிஷி—பிரமாத்மா]

௧. விசுவம் எவனில் ஏக ரூபமாகி, எவன் இரகசியத்திலே பெரியவனு யுள்ளானோ, அவனை வேனன்[1] கண்டான். சனனமானவுடன் சுந்தரன் இதைக் கறந்தான். கணங்கள், சுந்தரங் காணும் அவனைப் போற்றியுள்ளார்கள்.

௨. அமுதத்தின் நிலையை யறியுங் கந்தருவன் அப் பரம இரகசியத்தை எங்களுக் கறிவிக்கட்டும். எவன் மர்மத்தில் வைக்கப்பட்டுள்ள அதன் மூன்று பாதங்களை அறிகிறானோ, அவன் பிதாவின் பிதா ஆவான்.

௩. அவன் நமது பிதா, பந்து, நம்மை பிறப்பிப்பவனாகும். அவன் எல்லா நிலை நிலங்களை யறிவான். அவனே தேவர்களுக்கு நாமங்களை யளிப்பான், அவனிடமே எல்லாப் பொருள்களும் அறிந்துகொள்ளச் செல்லும்.

௪. நான் சகம் சோதி யெல்லாம் துரிதம் சென்றேன். ருதத்தின் முதல் தோன்றுபவனை யணுகினேன்; அவன் பேசுபவனில் பேச்சைப்போல், புவனங்களிலே புலனாகிறான். அக்கினியாகும்—அவன், ஊக்கமுடன் உள்ளான். அவன் அனல் இல்லையோ?

௫. நான் விசுவ புவனங்களைச் சூழ்ந்து சுற்றி விரியும் ருதத்தின் இழையைக் காண, தேவர்கள் அமுதமடையும், சமான மூலஸ்தானத்தில் சலனமாகும் நிலயத்திலே யணுகினேன்.

[௨. ௧. ௧—௫]

---

1 அறிஞன்.

௩௬. கருத்து—அறிஞனே அறியாததை யறிவான்.

# ௧௭. கந்தருவன்

[மாதுரு நாமன்—கந்தர்வர்களும்—அப்சரசர்களும்]

௧. புவனத்தின் ஏகபதியான திவ்ய கந்தருவனே[1] சனங்களில் துதி தோத்திரத்துக் கருகன். திவ்ய தேவனான உன்னையே நான் பிரமத்தால் பற்றுகிறேன். உனக்கு நமஸ்காரம். உன் நிலயம் சோதியிலாகும்.

௨. அவன் சோதி பற்றுபவன். சூரியனைப்போல் சோதியுள்ளவன். யஜிப்பதற் கருகன். தேவர்களது அப்சரிப்பை மறுப்பவன்; உயரிய மேன்மையுள்ள அவன் புவனத்தின் ஏகபதியாகும். வணக்கத்துக்கு அருகனான கந்தர்வனும் அதிமங்களஞ் செய்யும் அவன், சுகமளிப்பவனாவான்.

௩. அவன் அந்த குற்றமற்றவர்களோடு சேர்ந்துள்ளான்; அப்ஸரஸர்களின் நடுவே கந்தருவன் இருந்தான். அவர்களது துரிதமாய்த் தோன்றி மறையும் ஸமுத்திரமே, அவர்களது நிலயம் என பெரியார்கள் எனக்குச் சொல்லுகிறார்கள்.

௪. மேகமயமே! ஒளிக் குவியலே! நட்சத்திரியமே! விசுவாவசுவான கந்தருவனை நாடும் தேவிகளே! உங்களை நான் போற்றுகிறேன்.

௫. இருள் சுற்றி கதறுபவர்களாய் நிலைவிரும்பி மனம் மோகிக்கச் செய்யும் கந்தருவ மனைவிகளான அப்சரசர்களுக்கு[2] நான் வணக்க மளித்துள்ளேன்.

[௨. ௨. ௧—௫.]

---

1 ஆண்வலிமையின் ஆரோபம். 2 ஸ்திரீ யாரோபமாகும் அழகுக்கு.

௧௭. கருத்து—கந்தருவர்களையும் அப்சரஸர்களையும் நாடுங்கள்.

## ௩அ. நீர் சிகிச்சை

[அங்கிரஸன்—ஆயுர் தன்வந்தரி]

௧. மலையினின்றும் கீழாகப் பாயும், ஊற்றின் நீர்த்துளி சேரும் ஔஷதத்தை, நல்ல சிகிச்சையாகும் இதை, நான் உனக்குச் செய்கிறேன்.

௨. சலமே! இங்கு வா. ஓடு இங்கே. நூறு சிகிச்சைகளிலே நீ சிறந்தவன். சிராவம் நீக்கி, நோய் அகற்றுபவன் நீ.

௩. அசுரர்கள் புண் ஆற்றும் இப்பெரியதைக் கெல்லுகிறார்கள். இது சிராவத்தின் சிகிச்சையாகும். இது நோயை நீக்கியுள்ளது.

௪. [1]உபஜீகர்கள் சமுத்திரத்தினின்றும் ஓஷதியை உற்பத்தி செய்யும் இது, சிராவத்துக்கு சிகிச்சையாகும். இது, ரோகத்தைச் சாந்தஞ் செய்துள்ளது.

௫. இது பெரும் புண்ணை சிகிச்சை செய்யும். இது புவியினின்றும் எடுக்கப்பட்டது. இது பெருக்குக்கு சிகிச்சையாகும். இது நோயை யழித்துள்ளது.

௬. சலம் எங்களுக்கு சுகமளிப்பவையாகுக: ஓஷதிகள் மங்களஞ் செய்பவையாகுக. இந்திரனின் வச்சிராயுதம் அரக்கர்களைத் துரத்துவதாகுக: அரக்கர்களால் விடப்பட்ட அம்பு தூரத்தில் வீழ்வதாகுக.

[௨. ௩. ௧—௬]

---

1 எறும்புகள்.

௩அ. கருத்து—நீரால் பெருக்கு நோய் நீங்கும்.

## ௩௧. ஜங்கிடம்

[அதர்வன்—சந்திரன், சங்கிடவன்]

௧. நாங்கள் தீர்க்காயுசுக்கும் மகத்தான இன்பத்துக்கும் துன்பமாகாமல், சதா திடம் நாடி, விஷ்கந்த மழிக்கும் மணியான ஜங்கிடத்தை[1] தரிக்கிறோம்.

௨. ஆயிரம் வீரியமுள்ள ஜங்கிட மணியானது எங்களை, ஜம்பம்[2] விசரம்[3] விஷ்கந்தம்[4] அதி எரிச்சலினின்றும்[5] எங்கும் காப்பதாகுக.

௩. இது விஷ்கந்தத்தை[6] யழிக்கும், பகைவர்களை நாசஞ் செய்யும். சர்வ சிகிச்சையான ஜங்கிடம் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவதாகுக.

௪. நாங்கள் தேவர்களால் அளிக்கப்படும் மணியால், இன்பமளிக்கும் ஜங்கிடத்தால் விஷ்கந்தத்தையும் எல்லா வெறியர்களையும் களத்திலே வீழ்த்துகிறோம்.

௫. சணலும்[7] ஜங்கிடமும் என்னை விஷ்கந்தத்தினின்றும் காத்திடுக; ஒன்று வனத்தினின்றும் வருவதாகும். வேறு கிருஷி இரசங்களினின்றும் வருவதாகும்.

௬. இந்த மணியானது துவேஷ மொழிப்பதும் தானசூனிய மழிப்பதுமாகும். இனி ஜயசீலமான ஜங்கிடம் எங்களாயுசை ஓங்கச் செய்க.

[௨. ௪. ௧—௬]

---

1 வீரியமளிக்கும் ஒரு ஔஷதம். துணையளிக்கும் சாதன சின்னம். 2 வாயிலாகும் நோய். 3 வேதனை. 4 வாதம். 5 ஊசிபோல் குத்தும் வலி. 6 வாதத்தை. 7 சணல் என்னும் வனஸ்பதி.

௩௧. கருத்து—வீரியமளிக்கும் சாதனங்களைப் பற்றுங்கள்.

## ௪௰. இந்திரன்

[பிருகு ஆதர்வாணன்—இந்திரன்]

௧. இந்திரனே! அநுபவி: நடத்திச் செல். சூரனே! இரு குதிரைகளுடன் வா: சோமனைப் பருகு! இன்பமாகி இனிமை விரும்பி இனிய மதத்துக்கு வா!

௨. இந்திரனே! துதிக்கப்படுபவனைப் போலே சோதிகளைப்போலே, சுவர்க்கத்தைப்போலே, இனிய சோமனால் உனது கோசத்தை நிரப்பு. அதி முழக்கமுள்ள இன்பங்கள் உனக்கு வந்துள்ளன.

௩. நதிகளைப்போல் துரிதமாய் ஜயிக்கும் இந்திரன், மித்திரனைப்போல் [1]விருத்திரனைக் கொன்றான். அவன் [2]பிருகுவைப்போல் [3]பலனைப் பிளந்தான்: அவன் சோமனது இன்பத்தில் சத்துருக்களை ஜயித்தான்.

௪. இந்திரனே! இரசங்கள் உன்னை நுழைக, உனது குக்ஷிகளைப் பூரணமாக்கு. அதி பலமுள்ளவனே! எங்கள் நினைவுக்கு வா! உதவி யளி: என் அழைப்பைச் செவிகொடு. என் மொழிகளை அங்கீகரி: இந்திரனே! உனது உபகரணங்களுடன் வா: பெரிய போருக்கு இங்கு பிரசன்னமாயிரு.

௫. வச்சிராயுதந் தரிக்கும் இந்திரனுடைய முதன்மையான வீரச்செயல்களை நான் இனிச் சொல்வேன்: அவன் மேகத்தைக் கொன்றான்: சலத்தைப் பிளந்தான்: மலையின் உதரங்களைப் பிரித்தான்.

௬. அவன் மலையில் சாயும் மேகத்தை யழித்தான்: துவஷ்டா[4] சோதியான ஆயுதத்தை அவனுக்குச் செய்தான்; உடனே கோஷிக்கும் கோக்களைப்போல் சலங்கள்

1 மேகத்தை. 2 சூரியனை. 3 இருளை. 4 சிற்பி.

பாய்ந்துகொண்டு துரிதமாய் சலநிதியிலே சென்றன.

எ. அவன் காளையைப்போல் துரிதமாகி சோமனைப் பற்றினன்: அவன் திரிக துர்க்கங்களில் இரசத்தைப் பருகினன். மகவான் தனது ஆயுதமான வச்சிராயுதத்தைப் பற்றினன்: அவன் மேகங்களது அம் முதற் தோற்றத்தை யொழித்தான்.

[உ. ரு. க—எ]

## சக. தலைவர் கடமை

[சம்பந் கர்ம சௌனகன்—அக்கினி]

க. அக்கினியே![1] வர்ஷங்களும் சகல வன்மைகளும் ரிஷிகளும் ருதுக்களும் அயனங்களும் உன்னை அபிவிருத்தி செய்க. திவ்ய சோதியுடன் நீ ஒளி வீசு: சோதியின் நான்கு திசைகளையும் நீ பிரகாசஞ் செய்.

உ. அக்கினியே! நீ சோதியாகி, இவனை, ஓங்கச்செய். மேலான சௌபாக்கியத்துக்கு எழுந்திரு. அக்கினியே! உன்னை அணுகுபவர் துன்பமற்றவராகுக; உனது பிராமணர் புகழுடனுகுக: மற்றவர் புகழற்றுருகுக.

ந. அக்கினியே! உன்னை இப் பிராமணர்கள் பற்றுகிறார்கள்: எங்கள் காப்பில் நீ மங்கள மனப்பாயாக. அக்கினியே பகையொழிப்பவனே! எங்கள் எதிரிகளை யழி; சதாகாலம் உனது மனையிலேயே விழிப்புடனிரு.

ச. அக்கினியே! பலத்தால் நன்கு பற்று. மித்திரனோடு நட்புத் தரித்து நீ முயலுக. அக்கினியே! நீ நடுவே

---

1 அனல்போல் அரிகளை அரித்துவிடும் தலைவனே!—

சO. கருத்து—வீரனது வீரச்செயல்கள்.

நிலையாகி அரசர்களது பற்பல அழைப்புக்காகும் நீ, இங்கு ஒளி வீசு.

௫. அழிப்பவர்களைக் கடந்து எதிரிகளை நீக்கி, சித்த சூனியர்களைத் தாண்டி, துவேஷிப்பவர்களை நீங்கி அக்கினியே, எல்லாத் தீமைகளையுங் கடந்து செல்: பிறகு, எங்களில் வீர மக்கட்களுடன் செல்வத்தை யளி.

[உ. சு. க—௫]

## ௪உ. சாபங்கள்

[அதர்வன்—வனஸ்பதி, தூர்வா ஸ்துதி]

க. பாபிகளால் துவேஷிக்கப்பட்டு நீசமொழியை யொழிக்கும் தேவஜாதமான இந்த வனஸ்பதி[1], மாசை சலம்போல எல்லா சாபங்களையும்[2] என்னிடமிருந்து நீக்கியுள்ளது.

உ. துவேஷிகளுடைய எல்லா சாபங்கள் சகோதரிகளின் சாபம், கோப பிரமாவினுலாகும் சாபம்—இந்த அனைத்தையும் எங்கள் கால்களின் கீழே தள்ளுகிறோம்.

௩. சோதியினின்றும்—உன்—மூலம் கீழிறங்கி புவியின் மேல் விரிந்துள்ளது. இந்த ஆயிரங் கிளையுள்ள சக்தியால் எங்களை எங்கும் பரிபாலனஞ் செய்.

௪. என்னை எங்கும் பரிபாலனஞ்செய், என் பிரசையை எங்கள் பொருளைப் பரிபாலனஞ்செய்: கருமிகள் எங்களைச் சுவாதீனஞ் செய்யாமலாகுக. கேடு விளைவிப்பவர்கள் எங்களை ஜயிக்காமலாகுக.

1 தருப்பை. 2 தீச்சொற்களையும்.

௫. சாபம் சபிப்பவனையே சேர்க: நாங்கள் நல்ல இருதயமுள்ளவனோடு, இணைகிறோம்: நாங்கள் கண் தூசனையுள்ள கொடிய இருதயனின் எலும்புகளைத் துண்டம் துண்டமாக்குகிறோம்.

[உ. எ. க—௫]

## ௪௩. பிறவி நோய்

[பிருகுவங்கிரன்—யக்ஷ்ம நாசனன்]

க. பகவதிகளான[1] விடுதலை செய்பவை என்னும் இரு தாரகங்கள் உயரமாய்க் கிளம்பி யுள்ளன: அவை உத்தம, அதம பாசத்தை நீக்குக.

உ. இந்த இரவு நீங்குக: இன்னல் செய்பவர்களு மொழிக: க்ஷேத்திரிய மழிக்கும் வனஸ்பதி க்ஷேத்திரியத்தை[2] நாசஞ்செய்க.

௩. மா நிறமாய் வெண் கண்ட முடனுகும் யவத்தின் புல்லாலும் திலம் திலத்தின் தண்டாலும் க்ஷேத்திரிய மழிக்கும் வனஸ்பதி, க்ஷேத்திரியத்தை நாசம் செய்க.

௪. உனது கலப்பைகளுக்கு வணக்கம். நுகத்தடிகளுக்கு நமஸ்காரம். க்ஷேத்திரய மழிக்கும் வனஸ்பதி க்ஷேத்திரியத்தை நாசஞ் செய்க.

௫. தியானக் கண் உள்ளவர்களுக்கு நமஸ்காரம், ஒரே தேசங்களி லுள்ளவர்களுக்கு நமஸ்காரம்; க்ஷேத்திர

---

1 சௌபாக்கிய மளிப்பவை. 2 பிறக்குங்கால் தேகத்துடன் தோன்றும் நோயை.

௪உ. கருத்து—பழிச்சொல் நீங்குங்கள்.

பதிக்கு நமஸ்காரம். க்ஷேத்திரிய மழிக்கும் வனஸ்பதி க்ஷேத்திரியத்தை நாசஞ் செய்க.

[உ. அ. க—ரு.]

## ௪௪. வைத்தியன்

[பிருகுவங்கிரன்—வனஸ்பதி யட்சமநாசனன்]

க. தசவிருட்சமே ![1] அரக்கனிடமிருந்தும் அவனது கண்டங்களைப் பற்றியுள்ள கட்டினின்றும் இவனை[2] நீக்க வனஸ்பதியே ! இனி சீவ சகத்துக்கு இவனை எழுச்சியாக்கு.

உ. இவன்[3] எழுச்சியாகியுள்ளான்; இவன் வந்துள்ளான். இவன் சீவர்களின் சமூகத்தைச் சேர்ந்துள்ளான்: இவன் [4] மக்களின் பிதாவாகவும் மனிதர்களின் மேன்மை வாய்ந்தவனுயு முள்ளான்.

ந. அவன் சிகிச்சைகளை அடைந்துள்ளான். அவன் சீவ புரங்களை சேர்ந்துள்ளான். ஏனெனில் அவனது சிகிச்சைகள் நூறாகும், அவன் ஆயிரம் வனஸ்பதிகளையு—மறிவான்.

௪. தேவர்கள் பிராமணர்கள் வனஸ்பதிகள் உனது சங்கமத்தை யறிந்துள்ளார்கள்: விசுவே தேவர்கள் உனது[5] சங்கமத்தை[6] புவியின்மேல் யறிந்துள்ளார்கள்.

1 ஈசனே, பத்து மரங்களை யறியும் வைத்தியனே. 2 நோயுள்ளவனை. 3 நோயாளி சிகிச்சை பெற்றுவிட்டான். 4 நோயை நீக்குபவன். 5 மானிடனது. 6 சேர்க்கையை.

௪௪. கருத்து—பிறவி நோயையும் ஔஷதத்தால் நீக்கலாம்.

௫. இதைச் செய்தவன் விபரீதமும் செய்வான்: சிகிச்சைகளிலே அவனே தலைவன். சுத்தனுகும் அவன் சிகிச்சையுடன் உனக்கு மருந்தைச் செய்வான்.

[உ, கூ, க—௫]

## ௬௫. நோய் நீங்கு

[பிருகுவங்கிரன்—பலதேவர்கள்]

க. நான் உன்னை தேய்வு, துன்பம் க்ஷேத்திரியம், சகோதரத் துரோகம் வருண பாசத்தினின்றும் விடுதலை செய்கிறேன்: நான் உன்னை பிரமத்தினால் புன்மை பிரிபவனாய்ச் செய்கிறேன். உனக்கு புவியும் சோதியுமான இரண்டும் மங்களமுடனுகுக.

உ. அக்கினி சலங்களுடன் உனக்கு மங்களமாக, சோமன் ஓஷதிகளுடன் உனக்கு மங்களமாக, நான் உன்னை தேய்வு துன்பம் க்ஷேத்திரியம், சகோதர துரோகம் வருணபாசத்தினின்றும் விடுதலை செய்கிறேன்.

ங. உனக்கு வாயு வானத்தில் மங்கள மளிப்பவனுகுக. உனது ஆயுளைப் புஷ்டியாக்குக. உனக்கு நான்கு திசைகளும் மங்கள மளிப்பவை யாகுக. நான் உன்னை....விடுதலை செய்கிறேன்.

ச. இத்தேவிகள், பிரதிசையின் நான்கு திசைகளும், வாத பத்தினிகளும் சூரியன் அதி பிரகாசமாகும் நிலையனும் உனக்கு மங்கள மளிப்பவர்களாக, நான் உன்னை....விடுதலை செய்கிறேன்.

---

சச. கருத்து—உன் தேகத்தை நீ யறி. வைத்தியனையும் நாடு.

ரு. நான் உன்னைத் தீர்க்காயுசுக்காக அவற்றின் நடுவே வைக்கிறேன். யக்ஷ்மம்[1] தூரமாகுக. நிர்ருதியும்[2] தூரஞ் சென்று விடுக. நான் விடுதலை....செய்கிறேன்.

௬. நீ யக்ஷ்மம் தீமை நிந்தை துன்பம் கிராஹியின்[3] பாசத்தினின்றும் விடுதலையாக்கப்பட்டுள்ளாய். நான் உன்னை....விடுதலை செய்கிறேன்.

எ. நீ சுகத்தைக் கண்டுள்ளாய், பகைமையை நீக்கியுள்ளாய். நீ சுகிருதத்தின் மங்களமான சகத்தை யடைந்துள்ளாய். நான் உன்னை....விடுதலை செய்கிறேன்.

அ. தேவர்கள் கிராஹியினின்றும், இருளினின்றும் ருதத்தையும் சூரியனையும் நீக்கி புன்மையினின்றும் விடுதலை செய்துள்ளார்கள். நான் உன்னை....விடுதலை செய்கிறேன்.

---

## ௬௬. அறிஞர் கடமை

[சுக்கிரன்—கிருதய தூஷணம்]

க. நீ[4] நாசத்தின் நாசகாரன், ஆயுதத்தின் ஆயுதனாகும்; எதிர்ப்பு சரத்தின் சரமாகும்; நீ சிறந்த பொருளைச் சேர். நீ சமானனை ஆக்கிரமி.

உ. நீ சிரக்தியன்[5] நீ பிரதி சரம்: நீ இரட்சை: நீ சிறந்த பொருளைச் சேர்: நீ சமானனை ஆக்கிரமி.

ந. எங்களை துவேஷிப்பவனை நாங்கள் துவேஷிப்பவனை நீ தடை செய்: நீ சிறந்த பொருளை நாடு: நீ சமானனை ஆக்கிரமி.

---

1 க்ஷயம். 2 அழிவும். 3 பீடையின். 4 அறிஞனே! ஔஷதமே. 5 ஒரு ஔஷதத்தின் பெயர்.

௬ரு. கருத்து—நோயற்ற வாழ்க்கையே வாழ்க்கை.

73180

ச. நீ அறிஞனாகும்: வர்சஸளிப்பவன். நீ காயங் காப்பவன்; நீ சிரேய சானப் பொருளைச் சேர். நீ சமானனை ஆக்கிரமி.

ரு. நீ சுக்கரன்: நீ ஒளி வீசுபவன்; நீ சுவர்க்கமாகும்; நீ சோதியாகும்; நீ சிரேயஸான பொருளைச் சேர். நீ உனது சமானனை ஆக்கிரமி.

[உ. கக, க—ரு]

---

## சஎ. தவம்

[பரத்வாஜன்—பல தேவர்கள்]

க. புவி, சோதி விசால வானம் நிலபத்தினி அற்புதமான விசால வியாபகன், வாயு காக்கும் விரிந்த வானம்—இவை இங்கு என்னில் நான் தவமாகுங்கால் தவமுடனாகுக.

உ. யக்ஞர்களான நீங்கள் இதைக் கேளுங்கள்: எனக்கு பரத்வாஜர்[1] இங்கு மந்திரங்களை மொழிகிறார். இந்த எங்கள் மனத்தை இம்சிப்பவன் பாசத்தால் கட்டப்பட்டு துன்பத்தில் பிணைக்கப்படவேண்டும்.

ங. இந்திரனே! சோமபானஞ் செய்பவனே! சுத்தமுடனாகும் இருதயத்தால் நான் உன்னை அடிக்கடி அழைக்கிறேன்; எனது இந்த மொழியைச் செவி கொடு; எனது இந்த மனம் இம்சிப்பவனை கோடாரியால் மரத்தைப்போல் வெட்டுகிறேன்;

---

1 அறிஞர்.

சசு. கருத்து—அறிவினுதவியால் அனைத்தையும் அணுகு.

ச. மூன்று எண்பது ஸாம கானர்களுடன்[1], வசு ஆதித்தியர் அங்கிரஸர்களோடு, பிதுருக்களின் யக்ஞ தானச் செயல்கள் எங்களை இரட்சித்திடுக. நான் திவ்ய தேஜசுடன் பற்றுகிறேன்.

ரு. புவியே, சோதியே! எனக்கு அநுகூலமாய்—பிரகாசியுங்கள்; விசுவே தேவர்களே! எனக்கு அநுகூலமாய்த் துணை புரியுங்கள்: அங்கிரசர்களே! சோமனுக்கருகதையான பிதுருக்களே! புன்மை விரும்புங் கருத்தாபாயத்தை அடைக.

சு. மருத்துக்களே! தன்னை யதிகமாக மதித்துக்கொள்பவனும், எங்களால் செய்யப்படும் பிரமத்தை நிந்திப்பவனும் அவன் எரிந்துபோக அவனது கொடுஞ்செயல்களே கனல்களாகுக. சோதியானது பிரமத்துவேஷியை தகித்திடுக.

எ. நான் உனது ஏழு பிராணங்களை[2] எட்டு அம்சங்களை[3] பிரமத்தால் துண்டம் துண்ட மாக்குகிறேன்: அக்கினி என்னும் தூதனோடு நீ பக்குவமாய யமனது நிலயத்துக்குச் செல்.

அ. நான் உனது பதத்தை தேஜோ மயமான ஜாதவேதசனில் ஸ்தாபிக்கிறேன்: அக்கினி உன் காயத்தை வியாபகமாகுக: வாக்கு பிராணனை யணுகுக.

[உ. கஉ, க—அ]

---

1 சாமகோஷஞ் செய்யும் பலர். 2 புலன்களை. 3 நிலைகளை, சக்கரங்களை.

சஎ. கருத்து—மனத்தை உங்கள் கைவசஞ் செய்யுங்கள்.

## ௪ அ. பிரமசரியப் பிரேவசம்

[அதர்வன்—அக்கினி]

க. அக்கினியே! ஆயுசளிப்பவனே! மூப்பை தூரமாக்கும் கிருத சமானனாயும் கிருதச் செழிப்புமுள்ள நீ, மதுவாயும் மனோகரமாயும் கோச் சேர்க்கையுமான நெய் பருகி, மக்கட்களைப் பிதாபோல் இவனுக்கு[1] நன்கு துணை புரி.

உ. எங்களுக்காக இவனைச் சூழுங்கள்: வர்சஸால் இவனைப் புஷ்டியுடனாக்குங்கள்; மூப்பிலேயே மரிக்கும் தீர்க்காயுளைச் செய்யுங்கள். பிருகஸ்பதியானவன் சோமனான இராஜனுக்கு இந்த உடையை தரித்துக்கொள்ள அளித்தான்.

ங. இந்த உடையை க்ஷேமத்துக்காக உன்—காய-மெல்லாம் தரித்துள்ளாய். நீ புன்மை நீக்கி பிரசைகள் காப்பவனாயுள்ளாய்: நீ நூறு சரத்துக்கள் வாழ். பலவருடங்கள் சீவி: செல்வம் செழிப்பை குவித்துச்—சேர்.

ச. இங்கு வா: கல்லின்[2] மேல் நில்: உனது காயம் கல்லைப்[3] போலாகுக. விசுவே தேவர்கள் உனது ஆயுளை நூறு சரத்காலங்கள்—வரை செய்க.

ரு. எங்களால் முதல் உடை நீக்கப்படும் உன்னை விசுவேதேவர்கள் இரட்சித்திடுக: நன்கு ஓங்கி வளர்ந்து பெருகி நன்கு புலனாகும் உன்னை யநுசரித்து வெகு பல சகோதரர்கள் எங்களுக்குத் தோன்றவேண்டும்.

[உ. கங. க—ரு]

---

1 பிரமசரிய மநுசரிக்கும் எவனுக்கும். 2 திரத்தின் நிலையான நிலையிலே. 3 கல்லைப்போல் கடினமாக.

௪ அ. கருத்து—கல்லைப்போல் உன் காயமாகுக.

## சக. எனக்கு ஐயம்

[சாதனன்—பலதேவர்கள்]

க. திடமாயும் தீரமாயும் கூர்மையாயும் ஒரே வாக்குடனுகி பேராரவலுடனுகும் சண்டனது[1] சர்வ சந்தானங்களான சதான்வனர்களை[2] நாங்கள் நாசம் செய்கிறோம்.

உ. முகுந்தியின்[3] பெண்களே ![4] நாங்கள் உங்களை கோசாலை, மூல நிலயம் சகட ஸ்தானத்தினின்றும் துரத்துகிறோம். எங்கள் வீடுகளினின்றும் உங்களை நீக்குகிறோம்.

ந. அங்கு நீசமாயுள்ள வீட்டில் அராயிகள்[5] வசித்திடுக: அங்கு துக்கமும் எல்லா யாதுதானிகளும்[6] வாழ்க.

ச. இந்திரன் பூத பதி[7]. இனி ஸதான்வர்களைத் துரத்துக: இந்திரன் எங்கள் கிருகத்தின் உச்சியில் உட்காருபவர்களை வச்சிராயுதத்தால் வீழ்த்துக.

ரு. நீங்கள் நிலத்தினின்று தோன்றினுலுஞ்சரி—புருஷர்களால் பிரேரணையானுலுஞ்சரி, தஸ்யுக்களினின்று தோன்றினுலுஞ் சரி, ஸதான்வர்களே! இங்கு நாசமாகுங்கள்.

சு. ஸதான்வர்களே! நான் துரித—குதிரை—பந்தய நிலயத்தைப்போல் அவர்களது நிலயங்களையெல்லாம் சுற்றியுள்ளேன்; நான் உங்கள் ஓட்டங்களையெல்லாம் ஜயித்துள்ளேன்: இங்கிருந்து மறைந்து விடுங்கள்.

[உ. கச. க—சு]

---

1 கோபமுள்ளவனது. 2 குரோத குணங்களை. 3 இன்பமழிப்பவளது. 4 பயன்களே. 5 அதம குணங்கள். 6 புன்மைகளும். 7 பொருள்களின் தலைவன்.

சக. கருத்து—அநீதியழிப்பது உங்கள் கடமை.

## ௫௦. பயமில்லை

[பிரமன்—பிராமணன்]

௧. சோதி பயப்படுவதில்லை, புவியும் பயப்படுவதில்லை, அதனால் துன்பமாவதில்லை: பிராணனே! நீயும் அங்ஙனம் பயமாகாதே.

௨. இரவு பயப்படுவதில்லை, பகல் பயப்படுவதில்லை. அதனால்....பயமாகாதே.

௩. சூரியன் பயப்படுவதில்லை: சந்திரன் பயப்படுவதில்லை: அதனால்....பயமாகாதே.

௪. பிரமன் பயப்படுவதில்லை: க்ஷத்திரம் பயப்படுவதில்லை: அதனால்....பயப்படாதே.

௫. சத்தியம் பயப்படுவதில்லை: அசத்தியம் பயப்படுவதில்லை. அதனால்....பயமாகாதே.

௬. பூதம் பயப்படுவதில்லை பவிஷ்யம் பயப்படுவதில்லை: அதனால்....பயமாகாதே.

[௨. ௧௫. ௧—௬.]

---

## ௫௧. காப்பு

[பிரமன்—பிராணாபானர்கள்]

௧. பிராணனே! அபானனே! என்னை மிருத்யுவினின்று காப்பாற்றுங்கள், சுவாஹா!

௨. சோதி சகமே! செவி சக்தியால் என்னைக் காவல் செய்யுங்கள்; சுவாஹா!

---

௫௦. கருத்து—அச்சமில்லை அச்சமில்லை என வாழ்.

௩. சூரியனே! கண்ணால் என்னைப் பாலனஞ் செய். சுவாஹா!

௪. அக்கினி வைசுவா நரனே! விசுவே தேவர்களால் எனக்குத் துணைபுரி. சுவாஹா!

௫. விசுவம் போஷிப்பவனே! விசுவ் போஷிப்பால் எனக்கு உதவி செய். சுவாஹா!

[உ. கசு. க—௫]

## ௫உ. துதி

[பிரமன்—பிராணபான தேவர்கள்]

க. நீ ஓஜஸ்: எனக்கு ஓஜஸை யளி: சுவாஹா!

உ. நீ சக்தி: எனக்குச் சக்தியை யளி: சுவாஹா!

௩. நீ பலம், எனக்குப் பலத்தை யளி: சுவாஹா!

௪. நீ ஆயுஸ்: எனக்கு ஆயுசை யளி: சுவாஹா!

௫. நீ செவி: எனக்குச் செவியை யளி: சுவாஹா!

சு. நீ கண்: எனக்குக் கண்ணை யளி; சுவாஹா!

எ. நீ பெருந்துணை: எனக்குப் பெருந்துணையை யளி: சுவாஹா!

[உ. கஎ. க—எ]

## ௫௩. பகை நீங்கு

[ஸம்பத் காமஸ்சாதனன்—அக்கினி]

க. நீ சத்துரு சம்ஹாரன்: எனக்குச் சத்துரு சம்ஹார சக்தியை அளி. சுவாஹா!

---

௫க. கருத்து—தேவ துணை பற்று.

௫உ. கருத்து—பிராணயாமத்தால் புலன்களுக்கு பலத்தை யளி

உ. நீ எதிரி யழிப்பவன் : எதிரி யழிக்கும் வன்மையை எனக்கு அளி. சுவாஹா !

௩. அராயி யழிப்பவன் நீ, எனக்கு அராயி யழிக்கும் வன்மையை யளி : சுவாஹா !

௪. நீ பிசாச மழிப்பவனுகும், எனக்கு பிசாசமழிக்கும் வன்மையை யளி. சுவாஹா !

௫. நீ ஸதான்வர்களை நாசம் செய் : நீ எனக்கு ஸதான்வர்களை யழிக்கும் சக்தியை யளி, சுவாஹா !

[உ. கஅ. க—௫]

## ௫௪. அனல்

[அதர்வன்—அக்கினி]

க. அக்கினியே ! எங்களைத் துவேஷிப்பவனை நாங்கள் துவேஷிப்பவனை உனது சுடரால் எரித்து விடு,

உ. அக்கினியே : எங்களைத் துவேஷிப்பவனை நாங்கள் துவேஷிப்பவனை உனது சுவாலையால் நோக்கிச் சுட்டு விடு.

௩. அக்கினியே ! எங்களைத் துவேஷிப்பவனை நாங்கள் துவேஷிப்பவனை உனது ஒளியால் நோக்கி ஒளி வீசு.

௪. அக்கினியே ! எங்களைத் துவேஷிப்பவனை, நாங்கள் துவேஷிப்பவனை சோதியால் நோக்கிச் சோதி வீசு.

௫. அக்கினியே ! எங்களைத் துவேஷிப்பவனை நாங்கள் துவேஷிப்பவனை உனது தேஜஸால் நோக்கி தமசுடனுக்கு.

[உ, கக, க—௫]

---

௫௩. கருத்து—பகை யழிக்கும் பலம் நாடு.

௫௪. கருத்து—அனல்களால் அரிகளை யழி.

## ருரு. வாயு

[அதர்வன்—காற்று]

க. வாயுவே ! எங்களை துவேஷிப்பவனை நாங்கள் துவேஷிப்பவனை நோக்கி உனது....எரித்துவிடு.

உ—ரு. வாயுவே !....தமசுடனுக்கு.

[சு. உ0. சா—ரு.]

## ருசா. சூரியன்

[அதர்வன்—சூரியன்]

க-ரு. சூரியனே !....தமசுடனுக்கு.

[உ. உக. க—ரு.]

## ருஎ. சந்திரன்

[அதர்வன்—சந்திரன்]

க-ரு. சந்திரனே !....தமசுடனுக்கு.

[உ. உஉ—க. ரு.]

## ருஅ. தண்ணீர்

[அதர்வன்—சலம்.]

க-ரு. சலங்களே !....தமசுடனுக்கு.

[உ. உங. க—ரு.]

---

ருரு. கருத்து. வாயு பலத்தால் வட்கார்களை வீழ்த்து.

ருசா—ருஅ. கருத்து—சூரியன், சந்திரன் சலத்தின் சாதனங்களால் சத்துரு சம்ஹாரஞ்செய்.

## ௫௧. கிமீதினர்கள்

[பிரமன்—சோபகாதயர்கள்]

௧. சோபகனே[1]! சோபனே[2]! உங்களது புன்மைகள் மறுபடியும் பின்புறமே வீழ்க. கிமீதினர்களே! உங்களது ஆயுதம் மறுபடியும் பின்புறமாகுக: உங்கள் தோழனைப் புசியுங்கள். உங்களைப் பிரேரிப்பவனைப் புசியுங்கள்: உங்களது மாமிசத்தையே புசியுங்கள்.

௨. சேவிருதகனே[3]! சேவிருதனே[4]! உங்களது............ புசியுங்கள்.

௩. பிரேரகனே[5]! அபிப்ரேரகனே[6]! உங்களது............ புசியுங்கள்.

௪. சர்ப்பனே[7]! அநுசர்ப்பனே[8]! உங்களது............ புசியுங்கள்.

௫. ஜூர்ணியே[9]! உங்களது............புசியுங்கள்.

௬. உபப்தியே[10]! உங்களது............புசியுங்கள்.

௭. அர்ஜுனியே[11]! உங்களது............புசியுங்கள்.

௮. பருஜியே[12]! உங்களது............புசியுங்கள்.

[௨. ௨௪. ௧—௮.]

---

1 அந்நியனை யழிப்பவனே. 2 இம்சைசெய்பவனே. 3 அக்நியில் துரிதமாகுபவனே. 4 சார்பில்லாதவனே. 5 திருட்டு சுபாவமுள்ளவனே. 6 திருடர் நாடுபவனே. 7 பதுங்கிச் செல்லும் விஷனே. 8 விஷமனு சரிப்பவனே 9 ஆயுசு ஹரிப்பவனே, சர்மம் பிரிப்பவனே. 10 மர்மமாகுபவனே விழுங்குபவனே. 11 வெண்மையானநிறமுள்ளவனே. 12 கோர மிருகனே.

௫௧. கருத்து—தன் வினை தன்னையே சுடும்

## ௬௦. கண்வ சத்துரு

௬௦. [சாதனன்—வனஸ்பதிகள்]

௧. தேவியான பிருசினிபர்ணீ[1] எங்களை மங்களஞ்—செய்துள்ளாள். நிர்ருதிக்குத் துன்பம் செய்துள்ளாள். அவள் உக்கிரமாய் கண்வ மழிப்பவளாகும்.[2] சக்திமிகும் அவளைப் பிரயோகஞ் செய்துள்ளேன்.

௨. முதன்மையாயும் ஜயசீலமாயுமுள்ள இந்தப் பிருசினிபர்ணி புலனாகியுள்ளாள். நான் பறவையினது போல் அவளால் துர்நாமங்களின் சிரத்தை வெட்டுகிறேன்.

௩. பிருசினிபர்ணியே! இரத்தபானஞ் செய்யும் பகைமையையும், வளர்ப்பு வீழ்த்துவதையும், கருவழிக்கும் கண்வனையும் நீ நாசஞ்செய், நீர் மூலஞ்செய்.

௪. சீவன் துன்பஞ்செய்யும் இந்தக் கண்வங்களை மலையில் துரத்து. தேவியான பிருசினிபர்ணியே! நீ அனலைப் போல் தொடர்ந்து—தீமையைத்—தகனஞ் செய்.

௫. இந்தக் கண்வங்களைத் தூரஞ் செய்: இந்த சீவ துன்பர்களைத் துரத்து. நான் பச்சை மாமிசம் புசிப்பவர்களை இருள் செல்லும் நிலயத்துக்குச் செலுத்தியுள்ளேன்.

[௨. ௨௫. ௧—௫]

---

## ௬௧. பசுச் செழுமை

[ஸவிதா—பசுக்கள்]

௧. எப்பசுக்களின் நட்பை வாயு யநுபவிக்கிறானோ, எந்த பசுக்களின்—ரூப தரிப்புகளை துவஷ்டா அறிகிறானோ,

---

1 ஒரு மூலிகையின் பெயர். 2 கேடு கழிப்பவளாகும்.

௬௦. கருத்து—பிரசினிபர்ணி என்னும் மூலிகையால் கிருமி ரோகம் இரத்த சோகையை நீக்கு.

அந்த சலனமான பசுக்கள் இங்கு வருக. ஸவிதா இந்த கோசாலையில் இப்பசுக்களைச் செலுத்துக.

உ. பசுக்கள் இக்கோசாலையில் நன்கு பொழிந்திடுக: அறியும் பிருகஸ்பதி இங்கு அவற்றைச் செலுத்துக: ஸினீவாலி[1] அவர்களது உச்சத்தை இங்கு செலுத்துக: அநுமதியே![2] அவை வந்தவுடன் அவற்றைத் துரிதமாக்கும்.

ந. பசுக்கள் ஒருமையாய் பொழிந்திடுக. புருஷர்கள் வருக: குதிரைகள் சேர்க. தானியக் குவியலும் குவிந்திடுக. நான் நன்கு மிசிரமாகும் அவியால் யஜிக்கிறேன்.

ச. நான் நெய்யுடன் உரம் இரசமுமான பசுவின் பாலை ஒன்று பொழிகிறேன்; என்னிலே வீரர்கள் பொழியப்படட்டும். கோபதியில் பசுக்களைப்போல் என்னில் நிலையாய் கோக்கள் நிகழும்.

ரு. நான் பசுக்களின் பாலை இங்கு கொண்டு வருகிறேன், நான் தானிய இரசத்தைக் கொண்டு வந்துள்ளேன்: எங்கள் வீரர்கள் இங்கு கொண்டுவரப் பட்டுள்ளார்கள். இங்கு கிரகத்தில் பத்தினிகள் வரவேற்கப் பட்டுள்ளார்கள்.

[உ. உசு. க—ரு.]

---

## சுஉ. ஓஷதி மகிமை

[கபிஞ்சலம்—வனஸ்பதி]

க. சத்துரு, உணவை சமரை ஜயிக்காமலாவார்களாக. நீ பலிஷ்டன். நீ பெரியவன். எதிர்ப் பகைவனது பாசத்தை எரி, ஓஷதியே! அவர்களை நிசாரஞ்செய்.

---

1 எவற்றையும் தன் வசமாக்குபவள். 2 அறிவளிப்பவள்.

சுக. கருத்து—பசுக்களையும் உங்கள் இந்திரியங்களையும் பாலனஞ் செய்யுங்கள்.

உ. சுபர்ணன்[1] உன்னைக் கண்டுள்ளான். ஸூகரன்[2] நாசியினால் உன்னைக் கெல்லியுள்ளான். எதிர்ப் பகைவனது பாசத்தை எரி, ஓஷதியே! அவற்றை நிசாரஞ்செய்.

ங. இந்திரன் அசுரர்களை அழிக்க உன்னைக்[3] கைகளில் தரிக்கிறான். எதிர்ப் பகைவனது.......நிசாரஞ்செய்[4].

ச. இந்திரன் அசுரர்களை அழிப்பதற்க்காக படா என்னும் ஓஷதியைப்—புசிக்கிறான்: எதிர்ப் பகைவனது.... நிசாரஞ்செய்.

ரு. இந்திரன் ஓநாய்களை ஜயிப்பதுபோல் நான் எனது பகைவர்களை இதனால் ஜயிக்கிறேன். எதிர்ப்பகைவனது.... ...........நிசாரஞ்செய்.

சு. ருத்திரனே! சிகிச்சையின் தலைவனே! நீலகண்டனே! செயல் செய்பவனே! எதிர்ப் பகைவனது........ நிசாரஞ்செய்.

எ. எங்களை வேதனை செய்பவனது வாதத்தை இந்திரா! நீ வீழ்த்து. உனது சக்திகளுடன் எங்களுக்கு ஆசிகூறு: சமரில் என்னைச் சிறந்தவனாகச்செய்.

[உ. உஎ. க—எ]

---

## சுங. தீர்க்காயுசு

[சம்பு—ஜரிமாயு]

க. மூப்பே! இவன் உனக்காகவே வளர்க. அந்நியமான மிருத்யுக்கள் நூறு வருஷம் வரை—இவனை இம்

---

1 அறிஞன். 2 சுவாசப் போக்கு அறிபவன். 3 பாடா என்னும் மூலிகையை. 4 இரஸமற்றுக்கு.

சுஉ. கருத்து—மூலிகையறிவு மேன்மை சேர்க்கும்.

ஷிக்காமலாகுக. நல்ல மனமுள்ள தாயானவள் தன் னங்கத்தில் மகனைக் காப்பதுபோல், நண்பர்களால் உண் டாக்கப்படும் துன்பத்தினின்றும் மித்திரன் இவனைக் காத்திடுக.

௨. பகையழிக்கும் மித்திரனே வருணனே நன்கு இணைந்து இவனுக்கு மூப்பான மரணத்தைச் செய்க. இங் ஙனம் ஹோதாவான அக்கினி, நீதிகளை அறியு—மவன்— எல்லா தேவர்களின் சன்மங்களை[1] அறிவிக்கிறான்.

௩. நீ பிறந்தும் பிறக்கப்போவதுமான—புவி பசுக் களின்—தலைவனுகும் இவனது பிராணனை அபானனை நீக்காதே. சத்துருக்களும் சிநேகிதர்களும் இவனை அழிக் காமலாவார்களாக.

௪. அதிதியினங்கத்தில் பிராணுபனங்களில் பாதுகாப் பாகி நூறு ஏமந்தங்கள் நீ வசிக்க, சோதியான பிதாவும் தாயான தரணியும் இணைந்து உனக்கு மூப்பின் மரணத் தைச் செய்வார்களாக.

௫. அக்கினியே! இந்தப் பிரியமான இரேதஸை ஆயுசுக் கும் வர்சஸுக்கும் அழைத்துச் செல். வருணனே! மித்திர இராஜனே! அதிதியே! விசுவே தேவர்களே! நாயைப்போல் இவனுக்கு இரட்சிப்பை இவன் மூப்புக் காலம் வரை வாழ, யளியுங்கள்.

[௨. ௨௮. க—ரு.]

---

1 இரகசியங்களை.

சுரு. கருத்து—தீர்க்காயுசுடன் வாழுங்கள்.

## ௬௪. பிரமசரியம்

[அதர்வன்—வெகு பல தேவர்கள்]

௧. தேவர்களே! புவி இரஸத்திலே பகனது காயத்தினுடைய பலத்திலே சூரியனும் அக்கினியும் இவனுக்குப் பூரணாயுசை யளிப்பார்களாக: பிருஹஸ்பதி இவனுக்கு ஒளியைத் தருவானாக.

௨. ஜாதவேதஸனே! இவனுக்கு ஆயுளை யளி: துவஷ்டாவே! இவனுக்குப் பிரஜையை ஸ்தாபி. ஸவிதாவே! செல்வப் புஷ்டியை இவனுக் களி: இவன் நூறு சரத் காலங்கள் வாழ்வானாக.

௩. எமது இந்த ஆசி, பலத்தையும் நற் பிரசையையுங் கொண்டு வருக. நீங்கள் ஒரு மனமுடனாகி திடத்தையும் திரவியத்தையு மளியுங்கள்: இந்திரனே! இவன் பகைவர்களான அந்நியர்களை அதமஞ்செய்து, நிலங்களை பலத்தால் ஜயிப்பவனாக வேண்டும்.

௪. இந்திரனால் அளிக்கப்பட்டு வருணனால் சிட்சிதமாகி மருத்துக்களால் பிரேரிதமாகும் உக்கிரன் எங்களுக்கு வந்துள்ளான்: புவியே! சோதியே! இவன் உங்கள் அங்கத்திலாகி பசி சூனியமாவானாக, இவன் தாகமற்றுவானாக.

௫. பலம் நிறையும் நீங்கள் இவனுக்கு பலத்தை யளியுங்கள். பால் நிறையும் நீங்கள் இவனுக்குப் பாலை யளியுங்கள். சோதியும் சகமும் இவனுக்குச் சக்தியை யளித்துள்ளார்கள். சலம், மருத்துக்கள் விசுவேதேவர்கள், இவனுக்கு பலத்தை—யளித்துள்ளார்கள்.

௬. நான் உனது இருதயத்தை சிவங்களால் திருப்தி செய்கிறேன். நீ நோய் நீங்கி நல்ல வர்சஸனாகி அதி

இன்பமுடனுகவேண்டும் : ஒருமையுடன் வசிக்குமவர்கள் அசுவினிகளது மாயாரூபத்தைத் தரித்து இந்த அமுதத்தைப் பானஞ் செய்வார்களாக.

எ. ஆதியில் இந்திரன் அவஸ்தையிலாகி, அழிவற்று அழுத்த மளிப்பதான அமுதமான இதை உண்டுபண்ணினன். இதோ அது உனதாகும். இதனுல் நீ நல்ல வர்சஸுடனுகி நூறு சரத்காலங்கள் வாழ் : உனது பலம் ஒழுகாமலாகுக : வைத்தியர்கள் உனக்காக இதைச் செய்துள்ளார்கள்.

[உ. உக. க—எ.]

## சுரு. காதல்—வழி

[பிரஜாபதி—அசுவினிகள்]

க. எப்படி காற்று புவியின்மேல் இப் புல்லை இங்குமங்கும் அசைக்கின்றதோ, அப்படியே உன் மனத்தை, உன்னிடமிருந்து நீங்காமலிருப்பதர்க்கும் என்னுடன் நீ விருப்ப முள்ளவளாவதற்கும், அசைத்துக் கடைகிறேன்.

உ. அசுவினிகளே! அவளை, விரும்புபவனேடு நீங்கள் அழைத்து வாருங்கள் : உங்களது செல்வங்கள் ஒன்று சேர்ந்துள்ளன : உங்களது விரதங்களும் நினைவுகளும் ஒன்று குவிந்துள்ளன.

ந. ஸுபர்ணன் சொல்வதுபோல் சுகசீவன் முழங்குவதுபோல் அம்புக்கு அம்புத் தண்டைப்போல், இனி எனது அழைப்புக்கு அவள் வருக.

---

சுச. கருத்து—பலம் போகாமல் பூரண ஆயுசுடன் சீவி.

ச. அகத்திலுள்ளது புறத்திலாகும், புறத்திலுள்ளது அகத்திலாகும். ஓஷதியே! விசுவ ரூபங்களான கன்னிகைகளின் மனத்தை கிரகி.

ரு. அவள் பதி விரும்பி வந்துள்ளாள், நான் மக்கட் பேறு விரும்புபவனாய் வந்துள்ளேன். முழங்கும் குதிரையைப்போல் நான் செல்வம் சேர்ந்து வந்துள்ளேன்.

[உ. ௩௦. க—ரு]

---

## சுசு. கிருமி நாசம்

[கண்வன்—மகீசந்திரன்]

க. விசுவமான புழுக்களை விநாசமாக்கும் இந்திரனது பெரிய அரைக் கல்லினால், சில வட்டத்தால் கல்வ தானியங்களைப்போல், நான் கிருமிகளைக் கொல்லுகிறேன்.

உ. காண்பது காணாததையும், குரூருத்தையும் நான் நாசஞ் செய்கிறேன். நாங்கள் அல்கண்டுக்கள்[1] சலுனங்களான கிருமிகளை வாக்கால் வீழ்த்துகிறோம்.

௩. நான் பெரிய ஆயுதத்தால் அல்கண்டுக்களை அழிக்கிறேன்; எரிந்தும் எரியாமலுள்ள அவை இரஸமற்றாய் விட்டன. விட்டன விடாதனவான அவற்றை நான் வாக்கினால் புழுக்களில் ஒன்றும் பிழைக்காமலாக ஒழிக்கிறேன்.

ச. குடற்புழு சிரக்கிருமி நரம்புக் கிருமிகளை, அவஸ்கவங்களை, துளைக்கும் புழுக்களை, வாக்கால் வீழ்த்துகிறேன்.

---

1 பல நாமங்களுள்ள புழுக்கள்

சுரு. கருத்து—மனம்போல் மணம்.

ரு. மலைகளில் வனங்களில் ஓஷதிகளில் பசுக்களில் சலங்களி னகங்களில் எங்கள் தேகங்களில், பிரவேசித்துள்ள கிருமிகளையும், எல்லா இக்கிருமி மூலங்களையும் நான் நாசஞ் செய்கிறேன்.

[உ. ருக. க—ரு]

---

## சுஎ. கிருமி நாசம்

[கணவன்—ஆதித்தியன்]

க. பசுவின கத்திலுள்ள கிருமிகளை உதயசூரியன் ஒழிப்பானாக; அஸ்தமாகும் சூரியன் தனது இரசிமிகளால்—அவற்றை—யழிப்பானாக.

உ. விசுவ ரூபமாயும் நான்கு கண்களுள்ளதாயும் பல நிறம் வெண்மையாயுமுள்ள—கிருமியின்—விலா நரம்புகளை—நான் நாசஞ் செய்கிறேன். அதன் சிரத்தையும் துண்டமாக்குகிறேன்.

ரு. புழுக்களே! அத்திரியைப் போலும் கண்வனைப் போலும், ஜமதக்கினியைப்போலும் நான் உங்களை அழிக்கிறேன். நான் அகஸ்தியனது பிரமத்தினால் கிருமிகளையடியோ டழிக்கிறேன்.

ச. கிருமிகளின் இராஜா கொல்லப்பட்டுள்ளான், அவர்களின் நிவாசத் தலைவன் கொல்லப்பட்டுள்ளான். கிருமி கொல்லப்பட்டுள்ளான். கிருமியின் தாய் கொல்லப்பட்டுள்ளாள். கிருமியின் சகோதரர் சகோதரியும் கொல்லப்பட்டுள்ளார்கள்.

ரு. அவனது ஆட்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். அவனது சுற்றுட்களும் கொல்லப்பட்டுள்ளார்கள். அதி

---

சுசு. கருத்து—கிருமி கொல், இல்லையேல் உலகமழியும்.

நுட்பமாய் தோன்றும் எல்லா இப்புழுக்களும் கொல்லப் பட்டுள்ளார்கள்.

ரு. நீ எவற்றால் முட்டுகிறாயோ, அக் கொம்புகளை நான் துண்டம் துண்டமாக்குகிறேன். விஷந் தரித்துள்ள உனது பையை கிழிக்கிறேன்.

[உ. ௩உ. க. ரு.]

## ரு அ. யக்ஷ்ம நாசம்

[பிரமன்—யட்சம விவர்ஹணம் சந்திரமன்]

க. உனது இரு நாசிகள், இரு செவிகள் மோவாயி னின்றும் உனது மூளை நாவினின்றும், சிரத்தில் சாய்ந் துள்ள யக்ஷ்மத்தை நான் நீக்குகிறேன்.

உ. உனது கழுத்து பிடரிகளினின்றும், மார்பெலும்பு முதுகெலும்பினின்றும், கைகள் தோட்பட்டைகளினின் றும், உனது கரங்களினின்றும் யக்ஷ்மத்தை[1], நான் நீக்குகிறேன்.

௩. உனது இருதயம் ஈரலினின்றும், பித்தாசயம் பக்கங் களினின்றும் ஈருள் கலேயம் பிராசயத்தினின்றும் யக்ஷ் மத்தை, நான் நீக்குகிறேன்.

ச. குடல் குதங்களினின்றும் அந்தரம் உதரத்தினின் றும் பக்கம் நாபி மலாசயத்தினின்றும் நான் உனது யக்ஷ்மத்தை நீக்குகிறேன்.

ரு. உன் தொடை முழங் கால்களினின்றும் குதிகால் முன் பாதங்களினின்றும் இடுப்பு இடைகளினின்றும் உன் மருங்கில் சாய்வதுமான யக்ஷ்மத்தை நான் நீக்குகிறேன்.

---

1 க்ஷயம், சுவாசகோச நோய்.

ருஎ. கருத்து—கதிரோனால் கிருமி அழியும்

சு. உனது என்பு மஜ்ஜைகளினின்றும் நரம்பு நாடிகளி னின்றும் உன் கைகள் விரல்கள் உன் நகங்களினின்று— தோன்றும் யக்ஷ்மத்தை நீக்குகிறேன்.

எ. ஒவ்வொரு அங்கத்திலும் ஒவ்வொரு ரோமத்திலும் ஒவ்வொரு சந்தியிலும் சாய்வதாயும் எங்கும் சருமத்தில் சார்புமான உன் யக்ஷ்மத்தை நாங்கள் கசியபனது[1] தந் திர மொழியால் நீக்குகிறோம.

[உ. நந. க—எ]

---

## சுக. யக்ஞப் பசு

[அதர்வன்—பசுபதி தேவதை]

க. இரு கால் நான்கு கால் பசுக்களின் பதியாகி தலைமை வகிக்கும் பசுபதி, சுதந்திரமாயுள்ள அவன், யக்ஞாருக மான பாகத்தை அடைவானாக. செல்வம் புஷ்டிகள் யஜ மானனைச் சேர்க.

உ. தேவர்களே! புவன ரேதஸை முக்தமாக்கி யஜமான னுக்கு வழியை யளியுங்கள்: அவாவுடனாகி அருகிலாக்கப் பட்டுள்ளது எதுவோ, அது தேவ பிரிய நிலயஞ் செல்க.

ந. எவர்கள் மனத்தாலும் கண்ணாலும் பந்தமானதை தியானந் தோய்ந்து பார்க்கிறார்களோ, அவர்களை முதன் மையாய் தேவ அக்கினியான விசுவகருமன் பிரஜையுடன் பொருந்தி முக்தஞ் செய்வானாக.

ச. பிரஜாபதியான வாயுதேவன், பிரஜையால் பொருந்தி முதன்மையாய், விசுவ ரூபங்களாயும் விரூபங்களாயும்

---

1 அறிஞனது.

சுஅ. கருத்து—க்ஷய மழி.

அநேகங்களாயும் ஏகங்களாயுமான கிராமப் பசுக்களை விடுதலை செய்வானாக.

ரு. முன் அறியும் அறிஞர்கள் அங்கங்களினின்றும் வரும் பிராணனை முதன்மையாய் கிரகிப்பார்களாக. சோதி செல்: உன் சரீரங்களுடன் அங்கு நில்: தேவர் செல்லும் வழிகளால் சுவர்க்கஞ் செல்.

[உ. ௩௪. க—ச]

## எ௦. யக்ஞ தோஷம்

[அங்கிரஸன்—விசுவகருமன்]

க. நாங்கள் தோஷமுடனாகும் யக்ஞத்தோடு சேர்ந்த தால், திவ்யமான அனல்கள் வீணாயின. அதனால் நாங் கள் புசித்தும் பெருகி ஓங்குவதில்லை. விசுவகருமன் எங்க ளது யக்ஞ குற்றத்தை நீக்கி அதனை நல்ல யக்ஞமாகச் செய்வானாக.

உ. பிரஜை செய்யும் குற்றத்தால் துன்பமாகி பாபம் பிரிந்துள்ள, யக்ஞபதியை ரிஷிகள் அறிவிக்கிறார்கள்: எந்த இனிய துளிகளால் அவன் குற்றம் நீங்கினானோ அவற்றிலே, விசுவகர்மன் எங்களைச் சேர்ப்பானாக.

௩. தீரனைப்போலுள்ள அறிஞன், யக்ஞ சமயத்திலே சோமபானர்களுக்கு தட்சிணை யளிப்பது தகாதது என எண்ணும் கட்டுப்பட்டுள்ள யஜமானன், எந்த குற்றத் தைச் செய்திருந்தாலும் விசுவகருமனே! நீ அவனைச் சுவஸ்திக்கு விடுதலை செய்.

ச. ரிஷிகள் உக்கிரமுள்ளவர்கள். அவர்களுக்கு வணக் கம். அவர்களது கண்ணுக்கும், கருத்தினுண்மைக்கும்

---

நமஸ்காரம். மகிஷனே! பிருஹஸ்பதிக்கு மேலான நமஸ்காரம்: விசுவகருமனே! உனக்கு வணக்கம். நீ எங்களைப் பாலனஞ்செய்.

ரு. யக்ஞக்கண்ணுடைய முதல்வனுக்கு முதன்மையானவனுக்கு, நான் செவி சொல் மனத்தால் ஆஹுதி செய்கிறேன்: தேவர்கள் நல்ல மனமுள்ளவர்களாய் விசுவகருமனால் விரிக்கப்பட்டுள்ள, இந்த யக்ஞத்தைச் சேர்வார்களாக.

[உ. ௩ரு. க—ரு]

## எக. புருஷன்

[பதிவேதனன்—வெகு பல தேவர்கள்]

க. அக்கினியே! மணங் கேட்பவன் எங்கள் செல்வத்துடன் இந்தப் பெண்ணுக்கு, எங்கள் மனத்துக்கு வருவானாக. அவள் வரிக்கப்படுபவர்க்கு இன்பமாகுபவள், குதூகலங்களுக்கு இசைந்தவள்: நற்புருஷனுடன் அவளுக்கு நற்பொருள் துரிதமாகுக.

உ. சோமனால் இசைந்த பிரமத்தால் பொருந்தி, அரியமானால் பக்குவமாகும் பெண்மணியை, திவ்ய தாத்ருவின் சத்தியத்தால் பதி காண்பவளாய் நான் செய்கிறேன்.

௩. அக்கினியே! இந்த ஸ்திரீயானவள் பதியை யடைவாளாக. இவளை இனி சோமனை அரசன் சௌபாக்கியமுள்ளவளாய்ச் செய்கிறான். அவள் மக்கட்களைத் தோற்றுவிக்கும் மகிஷியாவாள். அவள் பதியை அணுகி சௌபாக்கியமுள்ளவளாய் யரசுபுரிவாளாக.

ச. மகவானே! இந்த இரம்மியமான கொட்டில் நன்கு வசிப்பதற்க்காகி மிருகங்களுக்குப் பிரியமாவதுபோல்

---

எ௦. கருத்து—செயல்களிலே குறைகளை நீக்கு

அப்படியே இந்த ஸ்திரீ, புருஷனுடன் இணைபிரியாமல் பரஸ்பரம் பிரியமாவார்களாக.

ரு நிறைந்தும் நாசமற்றுமுள்ள பகனின் கப்பலில் ஏறு. அதனால் நீ விரும்பும் வரனை இங்கு கொண்டுவா.

சூ. தனபதியே! அந்த வரனை அழை: அவனை அநுகூல சித்தனாய் செய். நீ விரும்பும் வரனை பூர்ணமாய் பிரதட்சிணஞ்செய்.

எ. இங்கு கனகம்: குங்கிலியம்: இதோ ஔக்ஷம்! இங்கு பாக்கியமுமாகும். புருஷர்களில் நீ விரும்புபவனைக் காண இவை உன்னை வரங்களுக்கு அளித்துள்ளன.

அ. நீ விரும்புபவனை ஸவிதா யழைத்து வருக: வனஸ்பதியே! நீ அவளுக்கு அவனை யளி.

[உ. ௩௬. க—அ.]

இரண்டாவது காண்டம்

முற்றிற்று.

---

## எஉ. சம்ஹாரம்

[அதர்வன்—பலதேவர்கள்]

க. அறியும் அக்கினி எங்கள் பகைவர்களில் பாய்க; தானஞ் செய்யாதவனையும் துன்பஞ் செய்பவனையும், தகனஞ் செய்து, அவன் எதிர் சேனையை மயக்கஞ் செய்வானாக; ஜாதவேதஸன் — சத்துருக்களின் — கைகளை அன்னியம் செய்வானாக.

உ. மருத்துக்களே! இப்படிப்பட்ட செயலுக்கு, நீங்கள் உக்கிரர்களாகும்; நீங்கள் முன் செல்லுங்கள். அவர்களை

---

எக. கருத்து—பெண்ணுக்குப் பொருத்தமான புருஷன்வேண்டும்.

ஒழியுங்கள். வெல்லுங்கள். வசுக்கள் அவர்களை நாசஞ் செய்துள்ளார்கள்; இவர்கள் இரந்து கேட்கிறார்கள். அக்கினியான அறிஞன், தூதன், இவர்களை—எதிர்த்துச் செல்வானாக.

௩. மகவானே! அக்கினியே! விருத்திரனை கொல்லும் இந்திரனே! எதிர் விவகாரஞ்செய்யும் அமித்திர சேனையை ஆக்கிரமியுங்கள்: நீங்கள் அவர்களை எதிர்த்து பஸ்மமாக்குங்கள்.

௪. இந்திரனே! உனது புரவிகளால் முன் பிரேரிதமாகி, உனது வச்சிராயுதம் எதிரிகளை வீழ்த்திச் செல்க: வருபவனையும், அநுஸரிப்பவனையும் ஓடுபவனையு மொழி: அவர்களது நிச சங்கற்பத்தையும் சிதறடி.

௫. இந்திரனே! நீ சத்துரு சேனையை மயக்கஞ் செய்: அக்கினி வாதத்தின் அதி கோபத்தால் அவர்களை சின்ன பின்னமாக்கிச் சிதறடி.

௬. இந்திரன சேனையை மயக்கஞ் செய்க: மருத்துக்கள் ஓஜஸால் கொல்க. அக்கினி அதன் கண்களைப் பிடுங்குக: தோற்ற சேனை திரும்பிச் செல்க.

[௩. க. க—௬]

## எ௩. பகை யழி

[அதர்வன்—வெகுபல தேவர்]

க. அறிஞனை அக்கினி, எமது தூதன், தானமளிக்காதவனையும், துன்பஞ் செய்பவனையும், எரித்துக்கொண்டு அவர்களில் பாய்க: அவன் சத்துருக்களின் சித்தங்களை

எ௨. கருத்து—சத்துரு சம்ஹாரஞ் செய், அவர்களை மோகனாஸ்திரத்தாலழி.

மோஹிக்கச் செய்க: ஜாதவேதஸன் அவர்களின் கைகளை அன்னியஞ் செய்க.

௨. உங்கள் இருதயத்தில் உள்ள, எல்லா சித்தங்களையும் இந்த அக்கினி கலக்கஞ் செய்துள்ளான்: இனி அவன் உங்களை, எங்கள் ஸ்தானத்தினின்றும் துரத்துவானாக: உங்களை அவன் எங்கும் நீக்குவானாக.

௩. இந்திரா! அவர்களது மனங்களை மயங்கச்செய்து விருப்பமுடன் இங்கு வா: அனல் காற்றின் அதி கோபத்தால் அவர்களை சின்னாபின்னஞ் செய்து, சிதறடி.

௪. அவர்களின் சங்கற்பங்களே! நீங்கள் சென்று விடுங்கள்: சங்கற்பங்களான நீங்கள் கலக்கமுடனாகுங்கள்: இவர்களது இருதயத்திலே எது உண்டோ அதனைப் பூரணமாய் புறத்திலாக்கு.

௫. இவர்களது சித்தங்களை கலக்கஞ்செய்து, இவர்களது அங்கங்களைப்பற்றிச் சென்று விடு. நட்பற்றவர்களை எதிர்த்து, துக்கங்களால் அவர்களது இருதயங்களிலேயே அவர்களை தகித்துவிடு: எதிரிகளைப் பிடித்துக் கொல். தமஸால் அரிகளை யொழி.

௬. மருத்துக்களே! சத்துருக்களின் எச்சேனை, ஓஜசால் சமர்செய்து எங்களை எதிர்க்கச் சாய்கின்றதோ, அச்சேனையை, அவர்கள் பரஸ்பரம் அறியாமலாகும், தடுக்கும் தமஸால் யழித்து விடு.

[௩. ௨. ௧—௬]

---

௭௩. கருத்து—பற்றார்களை பஸ்மமாக்கு.

# எச. அரசனை ஸ்தாபி

[அதர்வன்—வெகுபல தேவர்கள்]

க. அவன் முழக்கஞ் செய்துள்ளான்: அவனே அவனது துணைவனாவானாக: நீ விரிந்த வானம் வையத்தை விரி, அக்கினியே! விசுவ மறியும் மருத்துக்கள் உன்னை யுக்தமாக்குவார்களாக: அதி அவி அளிக்கும் அவனை, வணக்கத்துடன் இங்கு அழைத்து வா.

உ. தேவர்கள் அவனுக்குத் திதியையும், காயத்திரீயையும், பிருஹதீயையுஞ், சௌத்திர மணியால் செய்யத் துணியுங்கால், சிகப்புக் குதிரைகள், இந்திரன் தூரத்திலிருந்தபோதிலும், அறிஞனாகு மவனை, நட்புக்கு எங்களிடங் கொண்டு வருவார்களாக.

ந. வருண இராஜன், உன்னை சலங்களுக்கு அழைப்பானாக. சோமன் மலைகளுக்கு உன்னை அழைப்பானாக. இந்திரன் உன்னை இந்த சனங்களுக்கு அழைப்பானாக. நீ கருடனைப்போல் இந்த சனங்களுக்குப் பற.

ச. பிரதேச வாசியாயும் அழைப்பதர்க்கு அருகனுமான உன்னை வெகுதூரத்தினின்று கருடன் அழைத்து வருவானாக. இரு அசுவினிகள் உனது வழியை செல்வதற்குச் சுலபமாகச் செய்வார்களாக. உடன் பிறந்தவர்களே! இவனில் பிரவேசித்து ஒன்று சேருங்கள்.

ரு. உனது விரோதிகள் உன்னை யழைப்பார்களாக. உனது நண்பர்கள், உன்னை, எதிரி எதிர்க்க வரித்துள்ளார்கள். இந்திரன் அக்கினி விசுவே தேவர்கள், பிரசையில் உனக்கு க்ஷேமத்தைத் தரித்துள்ளார்கள்.

சா. இந்திரனே! நாங்கள் உன்னை அழைப்பதற்கு, எதிர்த்து மறுப்பவன் சகோதரனையும் அந்நியனையும்,

அவனை தூரத்தில் தூரத்தி, இவனை இங்கு மறுபடியும் ஸ்தாபனஞ் செய்.

[௩. ௩. ௧—௬.]

## ௭௫ இராஜ்யாபிஷேகம்

[அதர்வன்—இந்திரன்]

௧ உனக்கு இராஷ்டிரம் வர்சஸுடன் வந்துள்ளது: சனத் தலைவனாய் முன்சென்று சனங்களின் ஒரே தலைவனாக அரசு புரி. இராஜாவே! எல்லாப் புர திசைகளும் உன்னை யழைத்திடுக. இங்கு அணுகுவதற்க் கருகனாய் வணக்கத்துக் குரியவனாவாயாக.

௨ உன்னை சனங்கள் இராஜ்யத்துக்கு வரிப்பார்களாக. இந்த பஞ்ச தேவிகளான திசைகள் உன்னை வரிப்பவையாகுக. இராட்டிரத்தின் உச்சியில் உயரத்தில் ஓங்கு. அங்கிருந்து உக்கிரனாகி எங்களுக்குச் செல்வங்களைப் பங்கிடு.

௩ ஸஜாதர்கள் உன்னை நாடி சேர்வார்களாக: தூரிதமான அக்கினி தூதனாக உன்னுடன் தோய்வானாக. ஸ்திரீகளும் மக்கட்களும் நல்ல மனமுள்ளவர்களாவார்களாக. உக்கிரனான நீ, வெகு பல பலியின் வரவை பார்ப்பாய்.

௪ உன்னை முதன்மையாய் அசுவினிகள், மித்திர வருணன் இருவர்கள், விசுவேதேவர்கள், மருத்துக்கள் அழைப்பார்களாக: இனிச் செல்வமளிக்க, உன் மனத்தைச் செய்ய, அங்கிருந்து உக்கிரனான நீ, எங்களில் செல்வங்களைப் பகிர்ந்து கொடு.

௫ வெகு தூரத்தினின்று இங்கு எங்களுக்குத் தூரிதமாய் வா. சோதியும் புவியுமான இரண்டும் உங்களுக்குச் சிவமுடனாகுக: இராஜாவான வருணன் இதை இப்ப

---

௭௪ கருத்து—அரசனை மறுபடியும் தலைவனாக்குதல்.

டிச் சொல்லுகிறான். அவன் உன்னை இங்கு அழைத்துள்ளான். நீ இங்கு வா.
௬ மானிட இந்திரனைப்போல் நீ கடந்து செல். நீ வருணர்களுடன் இசைந்து இணங்கியுள்ளாய்; அவன் இங்கு உன்னை அவனது சபையில் அழைத்துள்ளான்; அவன் தேவர்களை யஜித்து சனங்களைச் சமர்த்தமாக்குவான்.
௭ செல்வமான வழிகள், விரூபமான அவை, சர்வமிணைந்து உனக்கு விசால நிலயத்தைச் செய்துள்ளன: அவை எல்லாமிணைந்து உன்னை இங்கு அழைக்கட்டும்: உக்கிரனான நீ, உயரிய மனமுள்ளவனாகி இங்கு தசகந்தாக்கு[1] உறுதியாகு.

[௩. ௪. ௧—௭.]

---

## ௭௬ பர்ணமணி

[அதர்வன்—சோமன்]

௧ இந்த பலமுள்ள பர்ணமணி[2] பலத்தால் எங்களது பகைவர்களைப் பாழ்செய்து வந்துள்ளான். தேவர்களின் ஓஜஸாயும் ஓஷதிகளின் இரஸனாயுமுள்ள அவன் வர்சஸால் என்னைத் தடையன்னியில் தூண்டுவானாக.
௨ பர்ணமணியே! என்னில் க்ஷத்திரத்தையும் செல்வத்தையும் தாரணஞ் செய்: நான், இராஷ்டிர மண்டலத்தில் உயர்ந்தும் உண்மையு மாவேனாக.
௩ வனஸ்பதியில் தேவர்கள் வைத்துள்ள, பிரியமாயும் மர்மமாயுமுள்ள அந்த பர்ணமணியை, தேவர்கள், நாங்கள் தீர்க்காயுசுடன் அணிய அளிப்பார்களாக.

---

1 நூறுண்டு வரை  2 அறிஞன்.

௭௫ கருத்து—தலைவனுக்கு அரச பட்டம் சூட்டுங்கள்.

ச இந்திரனால் அளிக்கப்பட்டு வருணனால் சிட்சிதமாகி ஸோமனின் உக்கிர சக்தி மிகும் பர்ணன் வந்துள்ளான். நான் அதி ஒளியுடனாகி நூறு சரத்துக்களுக்கு நிர்க்காயுளை யடைய அந்த மணியை யணிகிறேன்.

ரு சத்துருக்களில் சமானர்களில், நான் சிறந்தவனாகவும் நோயினின்று காப்பை யடையவும், பர்ணமணி என்னில் ஏறியுள்ளான்.

சு பர்ணமே! நீ எங்குமுள்ள எல்லா சனங்களான சிற்பற்களை, அறிஞர்களான இரதஞ் செய்பவர்களை, என்னில் அநுசரிப்பவர்களாகச் செய்.

எ பர்ணமே! அரசர்களையும் அரசர் செய்பவர்களையும் சூதர்களையும் கிராமாதிபதிகளையும் எல்லா சனங்களையும் எங்கும் என்னில் யநுஸரிப்பவர்களாய்ச் செய்.

அ பர்ணமே! என் காயகாப்பன் நீ. ஒரே மூலத்தின் வீரன் நீ. என்னுடன் தீரன்: மணியே நான் உன்னை வருஷ தேஜசால் தரிக்கிறேன்.

[ந. ரு. க—அ.]

---

## எஎ அசுவத்தம்

[ஜகத் பீஜ புருஷன்—வனஸ்பதி அசுவத்தம்]

க புருஷன் புருஷனிடமிருந்து தோன்றுகிறான்: கதிரத்தினின்று அசுவத்தம் தோன்றும். என்னை வெறுத்து நான் வெறுக்கும் எனது பகைவர்களை, அவன் அழிப்பானாக.

உ அசுவத்தமே! எங்களது கொடிய எதிரிகளை நிர்மூலமாக்கு. சேதிப்பவனே பகை யழிக்கும் இந்திரனுடன் இணைந்து மித்திரன் வருணனோடு சேர்ந்து, எதிரிகளை யழி.

---

எசு கருத்து—பர்ணமணி என்னும் ஆதர்ச புருஷனை நாடுங்கள்.

௩ அசுவத்தமே! பெரிய கடல் நடுவே நீ—பகைவர்களை—மர்த்தனஞ் செய்வதுபோல், என்னை வெறுத்து நான் வெறுக்கும் எல்லா அம் மனிதர்களையும், நீ மாய்த்து விடு.

௪ ஜயமடைந்துள்ள விருஷபத்தைப்போல் நீ எங்கும் ஜயித்துச் செல்லுகிறாய் : உன்னால் அசுவத்தமே! நாங்கள் எங்கள் சத்துருக்களை ஜயிப்போமாக.

௫ அசுவத்தமே! என்னை வெறுத்து நான் வெறுக்கும் எனது சத்துருக்களை, எப்பொழுதும் நழுவாமலாகும் மிருத்யுவின் பாசங்களால், நிர்ருதி அவர்களைக் கட்டுவாளாக.

௬ அசுவத்தமே! நீ எப்படி வனஸ்பதிகளை ஏறி அவற்றைக் கீழ் செய்கிறாயோ, அப்படியே நீ எனது சத்துருவின் தலையைப் பிளந்துத் துண்டமாக்கி, அவனை ஜயித்து விடு.

௭ பந்தத்தினின்று பிரிந்துள்ள படகைப்போல் அவர்கள் அடியோடு மூழ்குவார்களாக. சேதிக்கும் அவனால் நாசமாகும் அவர்களுக்கு, மறுபடியும் தோற்றமில்லை.

௮ நான் மனத்தால் அவர்களைத் துரத்துகிறேன். நான் பிரமத்தாலும் சித்தத்தாலும் அவர்களைத் துரத்துகிறேன்! நாங்கள் அசுவத்த மரத்தின் கிளையால் அவர்களை யழிக்கிறோம்.

[௩. ௬. ௧—௭.]

---

## ௭அ க்ஷேத்திரியம்

[பிருகு வங்கிரஸன்—யக்ஷ்மநாசனன்]

௧ துரிதமாய் செல்லும் மானின் சிரத்தின்மேலுள்ள—கொம்பு — சிகிச்சையாகும். அவன் க்ஷேத்திரி

---

௭௭ கருத்து—வீரசேனைகள் செய்யுஞ் செயற்கள்.

யத்தை[1] கொம்பினுல் எங்கும் சிதறடித்து நாசஞ் செய்கிருன்.

௨ காளைக் கவுரிமான், நான்கு காற்களுடன் உன்னை யநுசரித்துள்ளது: கொம்பே! அவனது இருதயத்திலே அழுந்தியுள்ள க்ஷேத்திரியத்தை நீக்கு.

௩ நாலு கம்பங்களுள்ள கூரை போலாகி அங்கு கதிர் வீசும்—கொம்பால், உனது அங்கங்களினின்றும் க்ஷேத்திரியத்தை நாங்கள் மறையச் செய்துள்ளோம்.

௪ அங்கு சோதியிலுள்ள விடுதலை எனப்படும் சுபகங்களான இரு நட்சத்திரங்கள் க்ஷேத்திரியத்தின் உத்தம அதம பாசத்தை முக்தம் செய்திடுக.

௫ சலம் சிகிச்சை செய்வதாகும். சலமே நோய் நீக்குவதாகும். விசுவ சிகிச்சை செய்யும் சலம், உன்னை க்ஷேத்திரியத்தினின்றும் நீக்குக.

௬ பக்குவமாக்கப்பட்ட இரசத்தினின்றும் உன்னில் க்ஷேத்திரியம் வந்திருந்தால், அதன் சிகிச்சையை நான் அறிவேன்: நான் உன்னிடமிருந்து க்ஷேத்திரியத்தை நாசஞ் செய்கிறேன்.

௭ நட்சத்திரங்கள் மறையுஞ் சமயத்திலும், உஷாகாலம் மறையுங்காலும் கொடுமை யெல்லாம் எங்களிடமிருந்து நீங்குக. ஸர்வமான க்ஷேத்திரியமும் தூரமாகுக.

[௩. ௭. ௧—௭.]

---

## ௭௯ வீரனது நோக்கம்

[அதர்வன்—மித்திராதி தேவர்கள்]

௧ மித்திரன் ருதுக்களுடன் சித்தஞ்செய்து, கிரணங்களால் புவியை கலப்பவனுகி வருவானுக: பிறகு அக்கினி

1 பெரும் நோயை.

௭௮ கருத்து—நோய் நீங்குங்கள்.

வருணன் வாயு, எங்களது இராஜ்யத்தை வசிப்பதற் கருகதையாய் நியமனஞ் செய்வார்களாக.
௨ இந்திரன் துவஷ்டா எனது சொற்களைச் செவிகொடுப்பார்களாக; தாத்ரு, இராதி ஸவிதா இதை அநுபவிப்பார்களாக: சஜாதர்களின் நடுவே நிலைக்க நான் வீரர்களின் தாயான தேவி அதிதியை யழைக்கிறேன்.
௩ நான் ஸோமனை அழைக்கிறேன். வணக்கங்களுடன் ஸவிதாவை, சமரிலே மேன்மைக்கு எல்லா ஆதித்தியர்களையும் அழைக்கிறேன்: எனக்கு மாறுமொழி கூறுமமுள்ள ஸஜாதர்களால் மூட்டப்பட்டு இந்த அக்கினி தீர்க்க காலம் சோதியுடனுவானுக.
௪ நீங்கள் இதோ இங்கே வசியுங்கள்: இனி தூரம் போகவேண்டாம்: புஷ்டிபதி கோபன் உங்களை இங்கு செலுத்துவானுக. அவனது காமத்துக்கு உங்கள் காமங்களோடு அனுசரியுங்கள். எல்லா தேவர்களும் உங்களை ஒருமையுடன் இங்கு செலுத்துவார்களாக.
௫ நாங்கள் உங்கள் மனங்களை ஒற்றுமையுடன் வளைக்கிறோம்: நாங்கள் உங்கள் விரதங்களையும், ஸங்கற்பங்களையும் ஒருமையுடன் வளைக்கிறோம். நாங்கள் விபரீத விரதமுள்ள உங்களை ஒன்று வளைக்கிறோம்.
௬ நான் மனத்தால் உங்கள் மனங்களை வளைக்கிறேன். சித்தங்களால் எனது சித்தத்தை யநுசரி: உங்கள் இருதயங்களை என் வசங்களில் செய்கிறேன். என் சலனமநுசரித்து உங்கள் வழிகளுடன் வாருங்கள்.

[௩. அ. க—௬.]

---

எகூ கருத்து—நான் தலைவனுகவேண்டும்.

## அ௦ வசிய வழி

[வாமதேவன்—தியாவா பிருதிவீ]

க கர்சபன்[1] விசபனது[2] தாய், தரணியாகும். தந்தை சோதியாகும். தேவர்களே! அவற்றை இங்கு நாட்டியது போல், நீங்கள் மறுபடியும் நீக்கிவிடுங்கள்.

உ பந்தமன்னியமாய் அவர்கள் தரித்துள்ளார்கள்: மநுவினால் அது அங்ஙனம் செய்யப்பட்டது. விருஷபங்களை நலந் தட்டுபவன்போல் நான் விஷகர்த்தனை[3] வன்மையறச் செய்கிறேன்.

௩ பொன் நிற இழையில் அறிஞர்கள் கிருகலத்தை[4] கட்டுகிறார்கள்; பந்தர்கள், பாய்வனவாயும் பொங்குவனவாயுமான காபவத்தை பல மழிப்பார்களாக.

௪ அசுர மாயையுடைகும் தேவர்களைப்போல் தரிதமாகும் நீங்கள், நாய்களை நிந்திக்கும் குரங்குகளைப்போல் பந்தத்துடன் எதனால் சலனமாகிறீர்களோ, அதனால் காபவத்தின்[5] கஷ்டத்தை நீக்குங்கள்.

௫ உன் தீமைக்கு நான் பந்தஞ் செய்வேன். காபவத்தை நிந்தனை செய்வேன்: தரிதமான இரதங்களைப் போல் சபதங்களால்[6] நீங்கள் சென்று விடுவீர்கள்.

௬ புவியின்மேல் கoக[7] விஷகர்த்தங்கள் வியாபகமாய் விரிந்துள: அவற்றில் விஷகந்த தூஷணமாகும் மணியான[8] உன்னை அவர்கள்[9] முதன்மையாகப் பற்றியுள்ளார்கள்.

[ந. க. க—சா.]

---

1 குளம்புள்ள பிராணி. 2 குளம்பில்லாத ஜந்து. 3 வாதனை 4 மிருகத்தை. 5 இம்சை செய்யும் ஜந்துவின், வேதனையை 6 கடுஞ்சொற்களால். 7 எண்ணூறுவதர்க்காக. 8 ஔஷதம் சிகிச்சையறியும் மாவிடத்தை. 9 மகாசனங்கள்.

அ௦ கருத்து—விஷநீக்கவழி.

# அக இரவு

[அதர்வன்—அஷ்டகன்]

க அவள் முதன்மையாய், உதயமாயுள்ளாள்: அவள் யமனில் பசுவாகியுள்ளாள்: வரப்போகும் வருஷத்துக்கு பால்மிகும் அவள் எங்களுக்குக் கறப்பாளாக.

உ தேவர்கள் இன்பமாய் வரவேற்கப்படு மவள், பசுவைப்போல் பொலியும் இரவான அவள், வருஷ மனைவியாகு மவள், எங்களுக்கு நல்ல மங்கள மளிப்பாளாக.

ந இராத்திரியே! நாங்கள் வருஷ பிரதிமையான உன்னை உபாஸிப்போம். தீர்க்காயுஸான பிரஜையை எங்களுக்கு அளி. செல்வச் செழுமையுடன் எங்களைச் சேர்.

ச எங்களில் முதன்மையாய் ஒளி வீசுபவள் இவளே: இவள் அந்நியர்களில் ஸ்தாபிதமாகி சலனமாகுபவள்; இவளகத்தில் அதி மேன்மையான மகிமைகளுண்டு: நவமாய் தோன்றும் மணப் பெண்ணை இவள் ஜனனஞ் செய்பவள். இவள் ஜயித்துள்ளாள்.

ரு வனஸ்பதியின் சேர்க்கையான ஸாதனங்கள், பூரணை வருஷத்தின் அவியைச் செய்து முழக்கஞ் செய்துள்ளன. ஏகாஷ்டகளே![1] நாங்கள் செல்வங்களின் பதிகளாகி நல்ல பிரஜை நல்ல வீரர்களுடனுக வேண்டும்.

சு இடையின்[2] வழி அதிகமாய் பொசிந்து நெய் மிகுந்துள்ளது: ஜாதவேதஸனே! எங்கள் அவிகளை கிரகி: விசுவரூபமான கிராமப் பசுக்களிலுள்ள ஏழு பிராணிகள் என்னிலே விருப்பமுடனுகுக.

---

1 எட்டாவது தினமே, எண் சுகங்களிப்பவளே மனைவியே.

2 பசுவின்.

எ நீ புஷ்டி போஷணையில் என்னை ஸ்தாபி: இராத்திரியே! நான் தேவர்களின் நல் நினைவிலாவேனாக. ஸாதகமே! பூரணமாகி நீ சென்று விடு. நீ பரிபூரணமாகி திரும்பி வா. எல்லா யக்ஞங்களையும் ஒருமையுடன் யநுபவித்து எங்களுக்கு உணவு உறுதியையுங் கொண்டு வா.

அ ஏகாஷ்டகையே! உனது பதியான வருஷனை இவன் வந்துள்ளான். நீ எங்களுக்கு தீர்க்காயுஸான பிரஜையை யளி: செல்வப் புஷ்டியுடன் எங்களைச் சேர்:

கூ நான் ருது ருதுபதி ருதுசேர் வருஷங்களை யஜிக்கிறேன். அயநங்களை ஆண்டுகளை மாஸங்களை யஜிக்கிறேன். நிகழும் எல்லாப் பொருள்களின் பதியையும் யஜிக்கிறேன்.

க0 நான் ருதுக்களுக்கும் அவற்றின் ஸம்பந்தங்களுக்கும், வருஷங்களுக்கும் மாஸங்களுக்கும், தாத்ரு விதாத்ருக்கும், எல்லாப் பொருள்களின் பதிக்கும், யஜனஞ் செய்கிறேன்.

கக நாங்கள் இடையுடன் போற்றி, நெய்யுடன் நான் தேவர்களை யஜிக்கிறேன்: உலோப மன்னியிலுள்ள எங்கள் வீடுகளில் பசுச் செல்வங்களுடன் நாங்கள் ஒன்று சேரவேண்டும்.

கஉ ஏகாஷ்டகை தவத்தால் தாபமுடனாகி மேன்மை மிகும் இந்திரனை கருப்பத்தில் உற்பத்தி செய்தாள்: தேவர்கள் அவனுடன் பகைவர்களை யழித்தார்கள். தஸ்யுக்களை கொல்பவன்—திடபதியாகிறான்.

கங இந்திரனின் தாயே! ஸோமனின் தாயே! நீ பிரஜாபதியின் மகள். எங்கள் விருப்பங்களை பூரணமாக்கு. எங்கள் யக்ஞத்தைக் கிரகி.

[ங. க0. க—கங.]

---

அக கருந்து—புது வருஷ மந்திரங்கள்.

# ௮௨ ஆரோக்கியம்

பிரம்ம பிருகு வங்கிரன்—பல தேவர்கள்]

க நான் உன்னை இந்த அவியால், அறியாத யக்ஷ்மத்தினின்றும் இராஜ யக்ஷ்மத்தினின்றும் வாழ்க்கைக்கு விடுதலையாக்குகிறேன். இப்போது பறிப்பு அவனை பிடித்திருந்தால் அவனை இந்திரனே! அக்கினியே! அந்நோயினின்றும் நீக்குங்கள்.

உ அவன் ஆயுசு முடிவடைவதானாலும், அவன் போகுஞ் சமயமானாலும், அவன் மரண சமீப மணுகிவிட்டாலுஞ் சரி, நான் அவனை நிர்ருதியின் அங்கத்தினின்று, கொண்டு வருகிறேன். நூறு வருஷங்கள் வாழ நான் அவனைக் காக்கிறேன்.

ங இந்திரன் அவனை நூறு சரத்துக்கள் வரை[1] விசுவமான தீமையினின்று தளர்த்த, ஆயிரங் கண்கள் நூறு வீரியங்களுடன் நூறு ஆயுஸான அவியுடன், நான் அவனை—மிருத்யுவினின்றும் நீக்கியுள்ளேன்.

ச நீ நூறு சரத்துக்கள் ஓங்கி சீவி; நூறு ஏமந்தங்கள் நூறு வஸந்தங்கள் வரை வாழ். இந்திரன் அக்கினி ஸவிதா பிருகஸ்பதி உனக்கு சதத்தை யளிப்பார்களாக. நான் சதாயுஷான அவியால் அவனைக் காத்துள்ளேன்.

ரு கோசாலைக்கு[2] இரதத்தின் இருகாளைகளைப்போல் பிராணனே அபானனே! அவனைப் பிரவேசியுங்கள்: மானிடர்கள்—நூறு எனச் சொல்லும் அந்நியமான வேறு மிருத்யுக்கள் தூரமாகுக.

சு பிராணனே! அபானனே! நீங்கள் இங்கு தங்குங்கள். நீங்கள் இவனிடமிருந்து போகவேண்டாம். இவ

---

1 வருஷங்கள்வரை 2 பசுக் கொட்டத்துக்கு

னது காயம் அங்கங்களை மறுபடியும் மூப்பணுகும் வரை வகியுங்கள்.

எ நான் உன்னை மூப்புக் களிக்கிறேன். நான் உன்னை மூப்பி னுதீனத்திலாக்குகிறேன். மங்களமான மூப்பு உன்னை அழைத்துச் செல்க. மானிடர்கள் நூறு எனச் சொல்லும் அந்நியமான வேறு மிருத்யுக்கள் தூரமாகுக.

அ கயிற்றினுல் காளையை பசுவைக் கட்டுவதுபோல் தன் பாசங்களால் மூப்பு உன்னைக் கட்டியுள்ளது. எந்த மிருத்யுவானவன் சனனத்திலேயே உன்னைக் கொடிய பாசத்தால் பந்தஞ்செய்துள்ளானே உனது அதை, பிரகஸ்பதி சத்தியத்தின் இரு கைகளால் நீக்குவாளுக.

[ந. கக. க—அ.]

## அந. வீடு

[பிரமன்—வாஸ்தோஷ்பதி]

க இங்கே இங்குதான் நான் நிலையான ஸ்தானத்தைச் செய்கிறேன்: நெய்யைப் பொழிந்துகொண்டு அது க்ஷேமத்தில் நின்றிடுக. சாலையே—வீடே—நாங்கள் எல்லா சூரர்களோடும் நல்ல தீரர்களுடன், இம்சையாகாத வீரர்களுடன் உன்னை யணுகி—உன்னில்—வசிப்போமாக.

உ மனையே! இந்த இடத்திலே பரி மிகுந்து பசுக்களிலே இனிமைகளிலே, உணவிலே, நெய்யிலே, நீ திறமாய் நில்: மேலான ஸெளபாக்கியத்துக்கு நீ உச்சமாகவும்.

ந கிருகமே! நீ களஞ்சியம் பெரிய கூரையும் புனித தானியமு முள்ளவள். உனக்குக் கன்றுகள் வருக: மாலை

அஉ கருத்து—தீர்க்காயுசுடனேய்கு.

யிலே பாலனும் பசுக்களும் உனக்குப் பொழிவார்களாக.

ச ஸவிதாவும் வாயுவும் இந்திரனும் அறியும் பிரகஸ்பதியும் இந்த மனையை திரஞ் செய்வார்களாக. மருத்துக்கள் நெய்யாலும் நீராலும் இதை நனைப்பார்களாக; இராஜனான பகன் எங்கள் கிருஷியைச் செழுமை செய்வானாக.

ரு மனையின் மனைவியே! சுகம் சரணமளிக்கும் தேவியே! நீ தேவர்களால்—முதன் முதல்—இனிமையாய் ஸ்தாபிக்கப்பட்டுள்ளாய். புல் உடையுள்ள நீ, புனித மனமுடனாகு; நல்ல வீரத்துடன் எங்களுக்குச் செல்வத்தை யளிப்பாயாக.

சு உத்திரமே! நீ ருதத்துடன் ஸ்தம்பத்தை ஏறு: பலமுள்ள நீ, பிரகாசமாகி எங்கள் சத்துருக்களை தூரமாக்கு. மனையே! வீட்டில் வசிப்பவர்கள் துன்பத்துக்குள்ளாக வேண்டாம். நாங்கள் எல்லா வீரர்களுடன் நூறு சரத்காலங்கள் வாழ வேண்டும்.

எ இதற்குப் பாலனான குமாரன் வந்துள்ளான். இதற்கு கன்று—வேறு—சீவர்களுடன் வந்துள்ளது. பொங்கி வழியும் பாண்டம் தயிர் கலசங்கள் இதற்கு இங்குவந்துள்ளன.

அ ஸ்திரீயே! பூரணமான இக்கும்பத்தை நெய் தாரையின் அமுதத்தோடாகும்—இதை—இங்கு கொண்டு வா: இப்பானஞ் செய்பவர்களை அமுதத்தால் நனை. எமது இஷ்டப் பூர்த்திகள் இச்சாலையை பாலனஞ் செய்க.

கூ நான் யக்ஷ்ம மற்று யக்ஷ்மத்தை நாசமாக்கும் சலத்தை இங்கு கொண்டு வருகிறேன். நான் அமுதம் அனலோடு கூட வீடுகளை யணுகிப் பற்றுகிறேன்.

[௩. கஉ, க—கூ.]

---

அ௩ கருத்து.—வீடு வாசல் வாழ்க்கை அவசியம்.

# அசு சலம்

[பிருகு—ரிஷி—வருணசிந்து]

க மேகம்—அழிந்ததும் நீங்கள் நாதமுடன் ஒன்று பாய்ந்தீர்கள். அதனால் நதி என்னும் நாமமுள்ளவர்களானீர்கள் : சிந்துக்களே ! இவை உங்கள் பெயர்களாகும்.

உ நீங்கள் வருணனால் பிரேரிக்கப்பட்டு துரிதமாய் பாய்ந்தீர்கள் : நீங்கள் அப்படி ஓடுங்கால் இந்திரன் உங்களை அடைந்தான்—ஆப்நோத்—அதனால் 'ஆபன்' என அழைக்கப்படுகிறீர்கள்.

ந 'தேவிகளே ! நீங்கள் அவனது விருப்பத்துக்கு மாறாய் செல்லுங்கால் இந்திரன் தன் சக்திகளால் உங்களை வசியஞ் செய்தான் : இதனால் வார் என்னும் நாமம் உங்களுக் களிக்கப்படுகிறது.

ச ஒரே ஒரு தேவன், நீங்கள் உங்களிஷ்டம் போல் பாயுங்கால் உங்களில் உதைத்து நின்றான் 'உயர்ந்தோர் உச்ச சுவாசஞ் செய்துள்ளார்கள்' என அவன் உரைத்தான். அதனால் உதகம் சலம் என அழைக்கப்படுகிறான்.

ரு சலம் மங்களமளிப்பவை, சலமே நெய்யாகும். அவை அக்கினியையும் சோமனையும் தரிக்கும். தேன் தெளிக்கும் துரித இரசம் என் துணைக்கு, சுவாசம் வர்சஸோடு வருக.

சா நான் — அவற்றைக் — காண்கிறேன்—அவற்றைக்— கேட்கிறேன் : அவற்றின் கோஷம் என்னை அணுகுகின்றது, அவற்றின் கூச்சல் வருகின்றது. பொன் நிறர்களே ! நான் உங்களை யநுபவிக்குங்கால் அமுதத்தை அநுபவிப்பதாக எண்ணுகிறேன்.

எ சலங்களே ! இது உங்களது இருதயம். ருதம் நிறைபவர்களே ! இங்கு உங்களது கன்று. சக்தி மிகும்

சலங்களே! நான் உங்களை அழைத்துச் செல்லும் இங்கே இப்படிப் பாயுங்கள்.

[ந. கந. க—எ.]

---

## அரு கோசாலை

[பிரமன்—பசுக்களும் பசுச் சாலைகளும்]

க சுகமாய் வாழ்வதற்கான கோசாலையினாலும், நற் செல்வம் நற்சுகத்தாலும் திரேதயத்தின் எந்த நாமமுண்டோ அதனால் உங்களை நாங்கள் ஒருமையுடனாக்குகிறோம்.

உ அரியமான் பூஷணன் பிருகஸ்பதி தனஞ் ஜயிக்கும் இந்திரன் உங்களை ஒன்று சேர்ப்பார்களாக. என்னில் செல்வத்தை ஓங்கச் செய்யுங்கள்.

ந இந்த கோசாலையில் அச்சமன்னியில் ஒருமையுடன் சலனமாகி செல்வஞ் செய்துகொண்டு மதுரமான ஸோம இரசத்தை தரித்து நோயன்னியில் இங்கு வாருங்கள்.

ச பசுக்களே! இங்கு இந்த இடத்திற்கு—வாருங்கள். எருப்போல் புஷ்டியாகுங்கள். இங்கே இதோ பெருகுங்கள்: உங்கள் இணக்கம் என் பக்கமாகட்டும்.

ரு உங்களது கோசாலை சிவமாகுக. சாரிசாகையைப் போல் செழுமையாகுங்கள். இந்த நிலயத்திலேயே ஓங்கிப் பெருகுங்கள். நாங்கள் உங்களை என்னுடன் சேர்க்கிறோம்.

சா பசுக்களே! கோபதிபோல் என்னுடன் ஒருமையுடனிருங்கள். இங்கு உங்கள் கோசாலை ஓங்குக. நாங்கள் சீவ

---

அச கருத்து—சலங்களின் பல நாமங்கள்.

னுடனிருக்குங்கால் செல்வச் செழிப்புடன் சதாபெருகி சீவிக்கும் உங்களருகில்—சீவனுடனிருக்கலாமோ!

[௩. கச, க—கூ.]

## அகூ வணிகம்

[பண்யகாம அதர்வன்—விசுவே தேவர்கள்]

க நான் வியாபாரியான இந்திரனைத் தூண்டுகிறேன். அவன் எங்களிடம் வருவானாக. அவன் எங்களை முன் அழைத்துச் செல்வானாக. அளிக்காதவனைத் துரத்தி, காட்டு மிருகத்தை வழியில் கொல்லும் ஈசனுயுள்ள அவன், என்னில் தனமளிப்பானாக.

உ வானம் சோதியின் நடுவில் செல்லும், தேவர்களால் சலனமாகும்—பல வழிகள் உண்டு: அவை வர்த்தகத்தால் நான் செல்வங்களை யடைய பால் நெய்யுடன் என்னைச் சேர்க.

௩ நான் விரும்பி நெய்யினுல் திடத்துக்கு ஆஹுதி செய்கிறேன். என்னுல் இயன்ற வண்ணம் பிரமத்தால் நமஸ்கரித்து இந்த திவ்யமான அறிவை, நூறு செல்வங்களைப்—பற்ற, நான் ஆஹுதி செய்கிறேன்.

ச அக்கினியே! நாங்கள் சென்றுள்ள தூர வழியான இந்த எங்களது பிடிவாதத்தை, பொறுத்துக்கொள்: வாங்குவதும் விற்பதும் எங்களுக்குச் சுபகரமாகுக. எதிர் வர்த்தகம் என்னை பயனுடனுக்குக. நீங்கள் இருவர்களும் இணைந்து, இந்த அவியை யநுபவியுங்கள். எங்கள் சலனமும் எழுச்சியும், எங்களில் சுகமளிப்பவையாகுக.

---

அரு கருத்து—பசுச் செல்வம் பெருகு.

ரு தனத்தால் தனத்தை விரும்பி, எந்த தனத்தால் நான் வியாபாரத்தைச் செய்கிறேனோ, தேவர்களே! அந்த தனம், எனக்கு விருத்தியாகுக. அது குறையாமலாக வேண்டும். அக்கினியே! இலாபத்தைத் தடுக்கும் தேவர்களை அவியினால் தடை செய்யுங்கள்.

சு தேவர்களே! தனத்தால் தனத்தை விரும்பி, எத்தனத்தால் நான் வியாபாரத்தை செய்கிறேனோ, அதில் எனக்கு இந்திரன் பிரஜாபதி ஸவிதா ஸோமன் அக்கினி இன்பத்தை யளிப்பார்களாக.

எ ஹோதாவே! வைசுவா நரனே! நாங்கள் வணக்கத்துடன் உன்னைத் துதிக்கிறோம். நீ எங்கள் பிரஜைகளில் ஆத்மாக்களில் கோக்களில் பிராணங்களில் நீ விழித்திரு.

அ ஜாதவேதஸனே! நிற்கும் குதிரைக்குப் போல, எப்பொழுதும் எல்லா தினங்களிலும் உனக்குச் சுமப்போம். அக்கினியே! உணவால் உற்சாகமாகி செல்வப் புஷ்டியுடன் உனது அருகிலாகி நாங்கள் துன்ப மன்னியிலாக வேண்டும்.

[ங. கரு. க—அ]

## அஎ பகன்

[அதர்வன்—பலதேவர்கள்]

க நாங்கள் காலையில் அக்கினியை காலையில், இந்திரனை காலையில் மித்திர வருணனை, காலையில் அசுவினிகளை காலையில் பகனை [1] பூஷணனை பிரமணஸ்பதியை காலையில் சோமனை ருத்திரனை யழைக்கிறோம்.

உ நாங்கள் காலையில் ஜயனையும் அதிதியின் மகனையும் அதி தரிப்பவனையுமுள்ள உக்கிர பகனை, சக்தன் அசக்தன்

---

1 சோதி மிகுபவனை, செல்வத்திறைரோபனை.

அசு கருத்து—வணிகஞ் செய்வதும் வேத ஆக்ஞையே.

என எண்ணும் ஒவ்வொருவனும், அரசனும் கூட எவ னுக்குப் பாகத்தை யளியுங்கள் எனச் சொல்கிருர்களோ அவனை யழைக்கிறோம்.

ங பகனே! எங்கள் வழிகாட்டியே! சத்தியச் செல்வ மளிக்கும் பகனே! எங்களில் இவ்வறிவை யளித்து—எங் களை உன்னதமாக்கு: பகனே! எங்களுக்குக் கோக்களை யும் குதிரைகளையும் விருத்தியாக்கு: பகனே! நாங்கள் வீரதீரர் நிறைந்தவர்களாக வேண்டும்.

ச மகவானே! இப்பொழுது மாலையிலும் நடுப்பகலி லும் நாங்கள் ஐசுவரியமுள்ளவர்களாகவேண்டும். இன் னம் சூரிய உதயத்திலும் தேவர்களின் சுமதியிலுமாக வேண்டும்.

ரு பகனே பகவானுருக. தேவர்களே! அவனுல் நாங் கள் பகவந்தர்களாக வேண்டும். உன்னை எல்லா வன்மை யுடன் இங்கு அழைக்கிறேன். பகனே! நீ இங்கு எங்கள் தலைவனு யிரு.

சு உஷைகள் யக்ஞத்தை, ததிக்கிராவணன் திவ்ய நில யத்தைப்போல் வணங்குவார்கள். வலிய குதிரைகள் இரதத்தைப்போலே நற் பொருள்களைப் பற்றுமவர்கள் பகனை என்னிடம் யழைத்து வருவார்களாக.

எ மங்களமான உஷைகள், எப்பொழுதும் குதிரை மிகுந்து கோ சிறந்து வீரர் பெருகி, எங்களுக்குப் பிரகாச மாவார்களாக. எல்லாப் புஷ்டிகளையும் பெருக்கி நெய் பொழிந்து நீங்கள் சதாகாலம் சுவஸ்திகளுடன் எங்களை இரட்சியுங்கள்.

[ரு. கசு. க—எ]

---

அஎ கருத்து. பகன் என்னும் செல்வனை நாடு.

அஅ உழவு

க தேவர்களில் நல் நினைவு நாடும் தீரர்களான கவிகள், கலப்பைகளை இணைக்கிறார்கள். நுகத்தடிகளை தனித்தனியாய்ப் பரப்புகிறார்கள்.

உ கலப்பைகளை இணையுங்கள், நுகத்தடிகளை விசாலமாக்குங்கள். செய்யப்பட்டுள்ள—கருப் பையிலே, பீஜத்தைத் தெளியுங்கள்: எங்களுக்கு விராஜனது கொத்தும் குலையுங் குவிக: அரிவாள் இன்னும் நெருங்கி பக்குவ தானியத்தைப் பற்றுக.

ங மங்களங் கொண்டுவரும் கூறியத்தாளுடனான நன்கு சாயும் கலப்பை—எனக்குப் பசுவை, ஆட்டை, தூரம் எடுத்துச் செல்லும் இரத வாகனத்தை புஷ்டியும் பலமுமுடைய ஸ்திரீயை, உச்சமாய் விளைவித்திடுக.

ச இந்திரன் நுகத்தடியைக் கீழே யழுத்துவானாக பூஷணன் அதனைப் பாலனஞ் செய்வானாக. பால் நிறைந்த அது ஒவ்வொரு வருஷமும் எங்களுக்குப்—பாலைத்—தருக.

ரு கலப்பையினது கொழுக்கள் நிலத்தைத் தனித்தனி தள்ளுக. குடியானவர்கள் எருதுக்களைச் சுகமாய் யநுசரிப்பார்களாக. சுனனே ![1] சிரனே ![2] நீங்கள் அவியால் இன்பமாகி நல்ல பயனுள்ளவையால் ஓஷதிகளை இவனுக்குச் செய்யுங்கள்.

சா உ காளைகள் ஜயமுடன் செல்க: ஜயமுடன் மனிதர்கள் ஜயமுடன் கலப்பை உழுக: கயிறுகள் ஜயமுடன் கட்டப்படுக. ஜயமுடன் சாட்டையையும் உயர்த்து.

எ சுனனே சிரனே! நீங்கள் என்னை இங்கு அநுபவியுங்கள்: சுவர்க்கத்திலே நீங்கள் செய்த பாலை இவர்களிலே பொழியுங்கள்.

---

1 நலம் பற்றுபவனே! 2 வலம் பிரிப்பவனே.

அ சிதையே! நாங்கள் உன்னைப் போற்றுகிறோம்: நீ எங்களுக்கு நல்மனஞ் செய்ய, நீ எங்களுக்கு நற்பய னளிக்க, சௌபாக்கிய முள்ளவளே! இங்கு நோக்கு.

கூ மருத்துக்களாலும் விசுவே தேவர்களாலும் அங்கி காரமாகி, தேனாலும் நெய்யாலும் உழவுச் சால் நனைக்கப் பட்டுள்ளது: உழவுச் சாலே பாலோடு, புஷ்டி மிகுந்து நெய் வழிந்து பொங்கி எங்களை இங்கு நோக்கு.

[௩. ௧எ. ௧—௯]

---

## அ௧ பிரம வித்தை

[அதர்வன்—வனஸ்பதி]

௧ எதனால் எதிரியை நாசஞ் செய்து, பதியை ஒருத்தி பூரணமாய் யடைவோளோ அந்த சக்தி யளிக்கும் செடி யான இந்த ஔஷதியை, நான் கெல்லுகிறேன்.

௨ உத்தான் பர்ணேயே![1] சௌபாக்கியவதியே! தேவர்களால் அனுப்பப்படும் வலிமையுள்ள என் எதிரியை நீ தூரமாக்கு: என் பதியை எனக்கே செய்.

௩ அவன் உன் நாமத்தைக் கிரகிக்கவில்லை. ஆதலால் நீயும் இப்பதியுடன் இருப்பதில்லை. நாங்கள் ஸபத்தி னியை[2] வெகு தூரமான இடத்துக்குச் செலுத்துகிறோம்.

௪ மேலோனே! நான் மேலானவன். மேலுக்கு மேலா னவன். எனது எதிரி கீழேயுள்ளான்: நீசங்களிலும் நீசு மாய் என் ஸபத்தினி யுள்ளாள்.

௫ நான் ஜயசாலி. நீயும் ஜயசாலி: நாம் இருவர்களும் ஜயசீலர்களாகி எனது சபத்தினியை ஜயிப்போம்.

---

1 ஒரு மூலிகையின் பெயர். 2 எதிர்க்கும் அறியாமையை.

அஅ கருத்து—உழவு முயற்சி உயர்ந்த செயலாகும்.

சு நான் உனக்காக ஜயிக்கும் சாதனத்தைத் தரித்துள்ளேன். நான் அதி சக்தியுள்ளதை உனக்காக அணிந்துள்ளேன் : வழியிலே சலத்தைப்போல கன்றை அநுசரிக்கும் பசுப் போலே, என்னை யனுசரித்து உன் மனம் துரிதமாகுக.

[ரு. கஅ. க—சு]

## கூ0 பற்றார் ஒழி

[வசிஷ்டன்—வெகு பல தேவர்]

க எனது இந்த பிரமமானது கூர்மையாகுக. எனது வீரமான பலமும் கூர்மையாகுக. பலம் கூர்மையாயும் அழிவற்றது மாகுக. ஜயிக்கும் புரோகிதராயுள்ள இவர்களது க்ஷத்திரம் கூர்மையாகி அழியாமலாகுக.

உ நான் இவர்களது இராஷ்டிரத்தை, ஓஜஸை, வீரியத்தை, பலத்தை, நன்கு கூர்மையாக்குகிறேன். நான் இந்த அவியால் சத்துருக்களின் கைகளைத் துண்டிக்கிறேன்.

ந பகைவர்கள் கீழே வீழ்க. எங்களது உதார வீரனை எதிர்க்கும் அவர்கள் கீழாகுக. நான் பிரமத்தால் அமித்திரர்களை அழிக்கிறேன். எங்களது சனங்களை நான் உச்சமாக்குகிறேன்.

ச எவர்களது புரோகிதனும், நான் உளேனோ அவர்கள் கோடரிகளைவிட கூர்மையானவர்கள், அக்கினியைவிட அதி கூர்மையானவர்கள், இந்திரனது வச்சிராயுதத்தை விட கூரானவர்கள்.

ரு நான் இவர்களது ஆயுதங்களை அதி நுண்மையாக்குகிறேன். இவர்களது நல்ல வீரமுள்ள இராஷ்டிரத்தை, அபிவிருத்தி செய்கிறேன். இவர்களது க்ஷத்திரம் ஜய

அகூ கருத்து—அறியாமை யொழி.

முடனுருக. அழியாமலாருக. எல்லா தேவர்களும் இவர்களது சித்தத்தை இரட்சிப்பார்களாக.
௬ மகவானே! இவர்களது வலிமைகளை உச்சமாக்கு: ஜயிக்கும் வீரர்களின் கோஷமானது உச்சமாருக: தனித்தனியாய்க் கோஷங்களும் கூப்பாடுகளும் கொடிகளுடன் உயரமாருக. இந்திரனைத் தலைவனு யடைந்துள்ள திவ்ய மருத்துக்கள் சேனையுடன் செல்க.
௭ நரர்களே! முன் செல்லுங்கள். ஜயஞ் செய்யுங்கள். உங்கள் கைகள் உக்கிரமாருக. கூறிய அம்புகளுடன் உக்கிராயுதங்களோடு, உக்கிரமான கைகளால் பலமற்ற வில்லுள்ள நிர்பல சத்துருக்களைக் கொல்லுங்கள்.
௮ பிரமத்தால் கூர்மையாகும் சரமே!—வின்னுணினின்று—விலகும் நீ, வெகுதூரம் பற. அமித்திரர்களை வெல், வெருட்டு: அவர்களில் ஒவ்வொரு வீரனையும் வெட்டு. அவர்களில் எவனையும் விட்டு விடாதே.

[௩. ௧௯. ௧—௮]

## ௯௧ தோத்திரம்

[வசிஷ்டன்—வெகு பல தேவன்]

௧ இதுவே உனது ருது ஸம்பந்த ஜனன ஸ்தானம். நீ இங்கு தோன்றி நீ பிரகாசஞ் செய்தாய்! அக்கினியே! நீ அதை அறிந்து ஏறு. அப்பால் எங்களுக்குச்செல்வத்தைச் செழுமையாக்கு:
௨ அக்கினியே! இங்கு எங்களிடம் பேசு: நல்ல மனத்துடன் எங்களிடம் திரும்பு: சனங்களின் பதியே! எங்களில் அளி: நீ எங்களுக்குச் செல்வ மளி.
௩ அரியமான் பகன் பிருகஸ்பதி எங்களுக்குச் செல்வத்தை—யளிப்பார்களாக. தேவிகள் — தனத்தை—

௯0. கருத்து. கூரிய ஆயுதத்தால் கையர்களைக் கிழித்து விடு.

யளிப்பார்களாக. ஸூநிருதையான தேவி எனக்குச் செல்வத்தை யளிப்பாளாக.
ச நாங்கள் இராஜாவான ஸோமனையும் அக்கினியையும், ஆதித்தியன், விஷ்ணு சூரியன் தலைவனான பிரஹஸ்பதியையும் மொழிகளால் இரட்சிப்புக்கு அழைக்கிறோம்.
ரு அக்கினியே! அனல்களால் எங்களது பிரமத்தையும் யக்ஞத்தையும் அபிவிருத்தியாக்கு: தேவனே! எங்களை அளிப்பதற்குத் தூண்டி தானத்துக்குத் தனத்தைப் பிரேரி.
சூ இந்திர வாயுவே! சங்கத்தில் ஸர்வ சனமும் எங்களில் நல்ல மனமுள்ளவர்களாகவும் தானமுள்ளவர்களாகவுமாக,—உங்களை—இங்கு நல்ல அழைப்புடன் அழைக்கிறோம்.
எ அரியமனை, பிருகஸ்பதியை, இந்திரனை, வாதனை, விஷ்ணுவை, ஸரஸ்வதீயை, சக்தியுடனாகும் ஸவிதாவைத் தானத்துக்குத் தூண்டு.
அ நாங்கள் பலத்தின் உற்பத்தியில் சேர்ந்துள்ளோம். இந்த எல்லா உலகங்களும்—அதனகத்தில்—உண்டு. அறிபவன் கருமியையும் தானமளிக்கச் செய்வானாக. எங்களில் ஸகல வீரர் மிகும் செல்வத்தை அளி.
கூ பஞ்சப் பிரதிசைகள் — பலத்தை — கறப்பவையாகுக. விசாலங்கள் எல்லா சக்திகளுடன் சேர்ந்து கறப்பவையாகுக. நான் மனத்துடன் இருதயமுடன் சகலமான விருப்பத்தையு மடையவேண்டும்.
க0 கோக்களை ஜயிக்கும் வாணியை நான் விளக்கவேண்டும், வர்சஸினால் என்னில் நீ ஏறு. வாயு என்னை எங்கும்—சூழ்க. துவஷ்டா எனக்குப் புஷ்டியை யளிப்பானாக.
[ரு. உ0. க—க0]

கூக கருத்து—தேவதுதி என்னும் தேவசெயலை நாடுங்கள்.

## கூஉ அனல் வடிவங்கள்

[வசிஷ்டன்—அக்கினி தேவதை]

க சலங்களிலும் விருத்திரனிலும் எவ்வனல்க ளுண்டோ, புருஷனிலும் கற்களிலும் எவ்வனல்க ளுண்டோ, ஒஷதிகளையும் வனஸ்பதிகளையும் நுழைந் துள்ள எவ்வனலுண்டோ, அந்த அனல்களுக்கெல்லாம் இந்த அவியாகுக.

உ ஸோமனகத்தில் எந்த—அக்கினியுண்டோ—பசுக் களில்—எது உண்டோ—பட்சிகளிலும் மிருகங்களிலும் எது பிரவேசித்துள்ளதோ, இருபாத நான்குபாத பிராணி களில் எது நுழைந்துள்ளதோ அந்த எல்லா அக்கினி களுக்கும் இந்த ஹுதமாகுக.

ந வீசும் வீழ்த்தும் வைசுவா நரனை எந்த தேவன் இந்திரனுடன் ஒரு இரதத்தில் செல்லுகிறனோ, எவனை ஜயசாலியாகச் சண்டைகளில் நானழைக்கிறேனோ, அந்த அக்கினிகளுக்கெல்லாம் இந்த ஹுதமாகுக.

ச விசுவமழிக்கும் தேவனை எவனை காமன் எனக் கூறு கிறார்களோ, எவனை அளிப்பவன் சுவீகரிப்பவன் எனச் சொல்லுகிறார்களோ, எவன் தீரனோ திடனோ, இம்ஸிக் கப்படாதவனாய் எவன் எங்கும் நிறைந்துள்ளானோ அந்த அக்கினிகளுக் கெல்லாம், இந்த ஹுதமாகுக.

ரு வர்சஸளிப்பவனையும், புகழுள்ளவனையும் இனிமை மிகுபவனையு முள்ளவனுக்கு, கந பௌவனங்கள், ரு மான வர்கள் எவனை ஹோதாவாக மனத்தால் கருதுகிறார் களோ—அந்த அனல்களுக் கெல்லாம் இந்த ஹுத மாகுக.

சு பசுக்கள் உணவா யுள்ளவனுக்கு, காளைகள் உணவா யுள்ளவனுக்கு, சோமபுரமுள்ள புனிதனுக்கு, வைசு

வார்நரப் பெரியார்களுக்கு—அந்த அனல்களுக் கெல்லாம் இந்த ஹூதஞ் செய்யப்பட்டுள்ளது.

எ எவை, சோதி பகம் வானம் மின்னலை அநுசரிக்கின்றனவோ, எவை, திசையினுள்ளே காற்றினுள்ளே செல்லுகின்றனவோ, அந்த அக்கினிகளுக்கெல்லாம் இந்த ஹூதமாகுக.

அ பொன் கை ஸவிதாவையும், இந்திரனையும் பிருகஸ்பதியையும், வருணனையும், மித்திரனையும், அக்கினியையும், விசுவே தேவர்களையும், அங்கிரஸர்களையும், நாங்கள் அழைக்கிறோம். அவர்கள் மாமிசம் புசிக்கும் இவ்வக்கினியை சாந்தஞ் செய்வார்களாக.

கூ மாமிசம் புசிக்கும் அக்கினி சாந்தமாக்கப்பட்டுள்ளான். புருஷனை இம்சிப்பவனும் சாந்தமாக்கப்பட்டுள்ளான். இனி விசுவத்தை எரிக்கும் மாமிசம் புசிக்கு மக்கினியை, நான் சாந்த மாக்கியுள்ளேன்.

க௦ ஸோமனைச் சுமக்கும் மலைகள், சாந்தமாய்ச் சாய்ந்துள்ள சலங்கள், வாதன், பர்ஜனியன், அக்கினி, மாமிசம் புசிப்பவனைச் சாந்தமாக்கியுள்ளார்கள்.

[௩. உக. க—க௦]

---

## கூ௩. யானை

[வசிஷ்டன்—வர்சஸன்]

க பெரிய புகழுள்ளதாயும் அதிதியின் காயத்தினின்று தோன்றுவதுமான யானையின்[1] பலம் ஓங்குக. நான்

---

1 சக்தியினுரோபம்.

கூஉ கருத்து—அனல்களின் பல ரூபங்களை யெல்லாம் நீங்கள் அறிவதவசியம்.

பற்றுவதற்கு, விசுவே தேவர்களும் அதிதியும் இணைந்து—அனைவரும் அதைத் எனக்குத் தந்துள்ளார்கள்.

உ மித்திரன், வருணன், இந்திரன், ருத்திரன், கவனமாவார்களாக. விசுவம் போஷிக்கும் தேவர்கள், வர்சஸால் என்னை நனைப்பார்களாக.

ங எந்த வர்சஸால் யானை தோன்றுமோ, மனிதர்களில் சலங்களின் நடுவே எதனால் இராஜா—தோன்றுவாரோ—சலங்களில் தேவர்கள் முதன்மையாய், எதனால் தேவத்வத்தை அடைகிறார்களோ, அக்கினியே! அந்த பலத்தால் இப்போது என்னைப் பலமுடனாக்கு.

ச ஜாதவேதஸனே! உனக்கு ஆஹுதியிலாகும் எந்த வர்சஸுண்டோ, சூரியனடையும் எந்த அதி வர்சஸுண்டோ, ஆசுரமான யானையின்—எப்பலமுண்டோ—அந்த வர்சஸை, கமலம் தரிக்கும் இரு அசுவினிகள் எனக்கு அளிப்பார்களாக.

ரு எத்தனை—தூரம்-நான்கு பிரதிசைகள் விரிந்துள்ளனவோ—கண் எத்தனை தூரஞ் செல்லுகின்றதோ, அத்தனை தூரம், அந்த யானையின் உரம் இந்திரியம் என்னில் சேர்க.

சு யானை ஸுந்தரமான வனப் பிராணிகளில் தலைமையாய் இங்கு வந்துள்ளதால் அதன் பாக்கியம், பலத்தால் நான் என்னை அபிஷேகஞ் செய்துகொள்கிறேன்.

[ங. உஉ. க—சு.]

---

## கூச ஸந்தானம்

[பிரமன்—சந்திரன் யோனி தேவதை]

க நாங்கள், எதனால் நீ மலடாயிருக்கின்றாயோ, அதனை உன்னிடமிருந்து நாங்கள் நாசஞ் செய்கிறோம். அதனை

---

கூங கருத்து—தேகபலம் வேண்டும்.

உன்னிடமிருந்து வேறு தூரமான—இடத்தில்—நாங்கள் வைக்கிறோம்.

௨ சரக்கூட்டை சரம்போல், உன் மூல ஸ்தானத்தில் புருஷனது ஆண் வீரியம் செல்க. இங்கு உனது வீர புத்திரன் பத்து மாதம்—பூரணமாகி—பிறப்பானாக.

௩ புமானான புத்திரனை ஜனனஞ் செய், அவனை அநுசரித்து—ஆண் சனனமாகுக. நீ, பிறந்தும் பிறக்கப் போவதுமான மக்கட் தாயாவாய்.

௪ எந்த மங்களமான பீஜங்களை விருஷபங்கள் சனனஞ் செய்கின்றனவோ, நீ அவற்றால் மகனைப் பெற்றுக் கொள். நீ பயனுள்ள பசுவாகு.

௫ நான் உனக்கு பிரஜாபதியின்—பலத்தை—யளிக்கிறேன். உன் மூல நிலயத்தில் சிசு செல்க. ஸ்திரீயே! உனக்குச் சுகமளிக்கும் மகளைப் பெற்றுக்கொள். நீ அவனுக்குச் சுகமளிப்பவளாகவும்.

௬ எந்த ஒஷதிகளின் பிதா ஜோதியாயும், தாய் புவியாயும், கடல் மூலமாயுமுள்ளதோ, அத்தேவிகளான ஒஷதிகள், நீ மகனை அடைய, உன்னை இரட்சிப்பார்களாக.

[௩. ௨௩. ௧—௬.]

---

## ௯௫ தானியம்

[பிருகு—வனஸ்பதி ருத பிரஜாபதி ருத தேவர்கள்]

௧ ஒஷதிகள் பால் நிறைந்தவை: என் மொழி பால் மிகுந்தது. இனி பால் மிகுபவையினின்று, நான் ஆயிரங்களைக் கொண்டு வருகின்றேன்.

௨ நான் பால் நிறைந்தவனை அறிவேன்: அவன் தானியத்தை அதிகமாய்ச் செய்துள்ளான். நன்கு கிரகிப்பவன்

---

௯௪ கருத்து—ஸ்திரீகள் செழுமையாகி ஓங்கவேண்டும்.

என்னும் நாமமுள்ள தேவனை, யக்ஞஞ் செய்யாதவனது வீட்டிலும், பொழியும் அவனை, நாங்கள் அழைக்கிறோம்.

ங பஞ்சப் பிரதிசைகள் பஞ்சமானவர்களான கிருஷிகர்கள், இங்கு மழைக்குப் பின் நதிகள் பிரவாகத்தைப் போல், புஷ்டியை நன்கு கொண்டு வருவார்களாகுக.

ச நூறு தாரைகளுடைய ஆயிரந் தாரைகளுடைய அழியாத ஊற்றுப்போல், இந்த எங்களது தானியம் அழியாத ஆயிரம் தாரைகளுடனாகுக.

ரு நூறு கைகளுள்ளவனே! ஒன்று கொண்டு வா. ஆயிரங் கைகளுள்ளவனே! ஒன்று சேர்: செய்தது செய்யப்போவதுமான செழிப்பை இங்கு கொண்டு வா.

சு கந்தருவர்களுடைய மூன்று அளவுகளிலே மனை மனைவியினுடைய நான்குகளிலே எது செழுமையாயுண்டோ, அதனால் நாங்கள் உன்னைப் பற்றுகிறோம்.

எ பிரஜாபதியே! சேர்ப்பவனும் கொண்டு வருபவனும் உனது மந்திரிகளாகும்: அழியாதவளத்துடன் அவர்கள் இங்கு செழுமையைக் கொண்டு வருக.

[ங. உச. க—எ]

---

## கூரு காமம்

[ஜயகாமன் பிருகு ரிஷி—மைத்திராவருண காமன்]

க உன்னை உயரமாய்க் கலக்குபவன் உன்னை உச்சமாய் கலப்பானாக. உனது சயனத்தில் நீ சாந்தமாய் சயனிக்காதே! காமனது பயங்கர சரத்தால் உன் இருதயத்தில் நான், வேதனை செய்கிறேன்.

உ கவலையென்னுஞ் சிறகுடன் காமகூரோடு, சங்கற்ப முனையுடன் சரத்தை நேர்மை செய்து காமன் உனது இருதயத்திலே குத்துக.

---

கூரு கருத்து—தானியோற்சவம்.

௩ ஈரலை உலர்த்துவதாயும் தூரிதச் சிறகுகளுடன் தகனஞ் செய்வதுமான, அதிகக் கூர்மையுள்ள காமனது சரத்தாலே, நான் உனது இருதயத்திலே வேதனை செய்கிறேன்.
௪ தகிக்கும் துன்பத்தால் வேதனையாகி, காயும் வாயோடாகும் நீ, பிரியமுடன் கோபம் நீங்கி அமைதியாயும் தாழ்மையாயும் இனிய மொழி கூறுபவளாயும் எனக்குப் பூரணமாகவும் விளங்கு.
௫ நீ எனது சங்கற்பத்திலாக, எனது சித்தத்திலாக, உனது தாயினிடமிருந்தும் தந்தையினிடமிருந்தும், பிரேரணையால் இங்கு உன்னைப் பிரேரணை செய்கிறேன்.
௬ மித்திர வருணர்களே! அவளது இருதயத்தினின்றும்—அந்நிய—சங்கற்பங்களை நீக்குங்கள்: அவளை—வேறு — நினைவுகளிலே — வன்மை சூனியஞ் செய்து எனது வசத்திலாக்குங்கள்.

[௩. ௨௫. ௧—௬]

---

## கூ௭ சரங்கள்

[அதர்வன்—ருத்திரன் அக்கினி]

௧ ஆயுதங்கள் எனப்படும் இக்கீழ்த் திசையில் அமரும் தேவர்களே! அங்குள்ள உங்களது சரங்கள் சுடர்: நீங்கள் எங்களுக்குச் சுகமளியுங்கள்: எங்களுக்குக் கருணை கூறுங்கள்: அங்குள்ள உங்களுக்கு வணக்கமாகுக: அங்குள்ள உங்களுக்கு சுவாஹா!
௨ ஆர்வம் எனப்படும் இத்தென்திசையி லமரும் தேவர்களே! அங்குள்ள உங்களது அம்புகள் காமன்................
........................சுவாஹா!

---

கூ௬ கருத்து. காதல் மணம்.

௩ சோதியுள்ளவன் எனப்படும் இம் மேற்றிசையி லமரும் தேவர்களே! அங்குள்ள உங்களது சரங்கள் சலம்...............................சுவாஹா!
௪ வேதனை செய்பவர்கள், எனப்படும் இந்த வடதிசையில் அமரும் தேவர்களே! அங்குள்ள உங்களது சரங்கள் வாதன்..............................................சுவாஹா!
௫ நிலிம்பம் என்னும் நாமமுடன் இந்நிலையான திசையி லமரும் தேவர்களே! அங்கு உங்கள் சரங்கள் ஔஷதங்கள்........சுவாஹா!
௬ துணைபுரிபவர் எனப்படும் இந்த உச்சி திசையி லமரும் தேவர்களான உங்களது சரங்கள் பிருகஸ்பதி........சுவாஹா!

[௩. ௨௬. ௧--௬]

## ௬. அ சரங்கள்

[அதர்வன்—வெகு பல தேவர்கள்]

௧ கீழ்த் திசையி னதிபதி அக்கினி. அதன் இரட்சகன் அஸிதன்.[1] ஆதித்தியர்கள் சரங்கள். அந்த அதிபதிகளுக்கு நமஸ்காரம்? துணைபுரிபவர்களுக்கு நமஸ்காரம். சரங்களுக்கு நமஸ்காரம். அவர்களுக்கு வணக்க மாகுக. எங்களை வெறுப்பவனையும் நாங்கள் வெறுப்பவனையும் நாங்கள் உங்கள் வாய்களில் வைக்கிறோம்.
௨ இந்திரன் தென் திசையின் அதிபதி. திரஸ்சிராஜி[2] இரட்சிப்பவன். பிதுருக்கள் சரங்கள்................வைக்கிறோம்.

---

1 கரும்பாம்பு, கருஞ்சரிவு. 2 குறுக்கு வரிப்பாம்பு, துரிதஞ் செல்வது.
கருத்து—சூட்சம அம்புகள்.

ங மேற்றிசையின் அதிபதி வருணன். பிருதாகு[1] இரட்சிப்பவன். உணவு சரங்கள்...... வைக்கிறோம்.
ச வடதிசையின் அதிபதி சோமன். [2]சுவஜன் இரட்சிதன், அசனன்—வச்சிராயுதம்—சரங்கள்..................... வைக்கிறோம்.
ரு துருவமான திசையின் அதிபதி விஷ்ணு. கல்மாஷக்கிரீவன்[3] இரட்சகன். செடி—கொடிகள் சரங்கள்..........வைக்கிறோம்.
சு. உச்சி திசையின் அதிபதி பிருஹஸ்பதி. சுவித்திரன்[4] இரட்சகன் மழை சரங்ள்........வைக்கிறோம்.

[ங. உஎ. க—சு]

## கூக யமினி

[பசுபோஷண காம பிரமன்—யமினி]

க பொருள் செய்பவர்கள் விசுவரூபங்களான பசுக்களை எங்கு செய்கிறார்களோ-அங்கு அவளே ஒவ்வொரு தனித்தனி சிருட்டியால் தோன்றுவாள்; எங்கு யமினி[5] அகாலத்தில் புலனுக்குகிறாளோ, அங்கு அவள் கோபம் குழப்பமாகி பசுக்களை நாசமாக்குகிறாள்.
உ அவள் பட்சிப்பவளும் மாமிஸம் புசிப்பவளுமாகி பசுக்களை யடியோடழிக்கிறாள்; அவளை ஒருவன் அறிஞனுக்கு அளிக்கவேண்டும். அப்போது அவள் சுகம் மாங்களை மளிப்பவளாவாள்

---

1 வீரியன்—வியாபகஞ் செய்பவன். 2 மலைவீரியன்—சுவயம்பூ. 3 கருங்கண்டன், புவி என்னும் சின்னமுள்ள பிரபஞ்சம். 4 வெண் பாம்பு, சோதி புருஷன். 5 இரு கன்று பிரசவிக்கும் பசு. இரு வேலைகளை ஒரே காலத்தில் செய்பவன், பிரகிருதி.
கூஅ கருத்து—ஆறு திசைகளின் தேவர்கள் ஆறு சர்ப்பங்களாகும், ஏனெனில் அவர்கள் பாம்புபால பாதங்கள் நிறுள்ளார்கள்.

௩ நீ புருஷர்களுக்குச் சிவ மளிப்பாயாக. பசுக்களுக்கும் குதிரைகளுக்கும் மங்கள மளிப்பாயாக. எனக்கும் இந்த எல்லா நிலத்துக்கும் மங்கள மளிப்பாயாக. எங்களுக்கு இங்கு மங்களத்தை அளி.

௪ இங்கு புஷ்டியாகுக: இரஸமாகுக. இங்கு நீ ஆயிர மளிப்பவளாகி யமினியே! பசுக்களைப் பெருகச் செய்.

௫ எங்கு நல்ல இருதயமுடன் நற்செயலுட னுள்ள—வர்கள்—தங்கள் காய ரோகத்தை நீக்கி இன்பமாகிறார்களோ, அந்த உலகத்திலே யமினி தோன்றியுள்ளாள்; அவள் எங்கள் பசு புருஷர்களை இம்சிக்காம லாவாளாக.

௬ எங்கு நல் இருதயம், நற்செயல், அக்கினி ஹோத்திர அவியளிப்பவரது உலகமுண்டோ, அந்த உலகத்திலே யமினி தோன்றியுள்ளாள். அவள் எங்களது பசு புருஷர்களை இம்சிக்காமலாவாளாக.

[௩. ௨அ. ௧—௬]

## ௬00 இராஜன்

[உத்தாலகன்—சிதிபாத அவி தேவர்கள்]

௧ யமனது சபா சதர்களான இராஜர்கள் இஷ்டப்பூர்த்தியின் பதினாறுவதை தங்களுக்குள்ளே பங்கு செய்து கொள்கிறார்கள்: அறிஞன் அதனால் வெண் கிரணத்தினின்று தானாகவே—திடம்—தரிப்பவனாகி—தீமைகளை—நீக்குகிறான்.

௨ அவன் நிலவி நிகழ்ந்து எல்லா விருப்பங்களையும் பூரணமாக்குகிறான். வெண் கிரணமுள்ள சூரியனை—செல்வனாகும் அவனது—சங்கற்பங்களை பூர்ணமாக்குமவன் பாழாகுவதில்லை.

௯௯ கருத்து—யமினி.

ந. வெண் பாதமுள்ள யக்ஞத்தை இகத்துடன் இணைந்து எவன் அளிக்கிறானோ அவன், பல ஹீனனால், பலமுள்ளவனுக்குக் காணிக்கை யளிக்கப்படாயதுள்ள உயரிய உலகத்தில் ஏறுகிறான்.

ச இகத்துடன் இணைந்து ஐந்து போகங்களுடன் வெண்காலுள்ள யக்ஞத்தை, எவன் அளிக்கிறானோ, அவன் பிதுருக்களின் உலகத்தில் அட்சயமாய்[1] வசிக்கிறான்.

ரு பஞ்ச மது வெண் பாத புவிக்குச் சமானமான யக்ஞத்தை, அவியை, எவன் அளிக்கிறானோ அவன் சூரியர் சந்திரர்களுக்கு நிகராய் அட்சயமாய் வாழ்கிறான்.

சா புவியைப்போலே கடலைப் போலே பெரும் அமுதத்தைப் போலே, அவன் நஷ்டமாவதில்லை. ஒன்று வசிக்கும் இரு தேவர்களைப்போலே வெண்பாதனும் நஷ்டமாவதில்லை.

எ எவன் எவனுக்கு இதனை அளித்துள்ளான்? காமன், காமனுக்கு அளித்துள்ளான். காமன் அளிப்பவன். காமன் கிரகிப்பவன். காமன் கடலில் நுழைந்துள்ளான். காமனால் நான் உன்னை என்னில் கிரகிக்கிறேன். காமனே! இது உனதாகும்.

அ உன்னைப் புவி கிரகித்திடுக. இந்தப் பெரிய வானமும் உன்னை கிரகித்திடுக. அங்கீகாரமான—இது பிராணனால், ஆத்மாவால், பிரஜையால், எனக்கு இன்னல் செய்யற்க.

[ங. உக. க—அ]

---

1 அழியாமல்

௬௦௦ கருத்து—காமன் அளிப்பவன், காமன் கிரகிப்பவன்.

௯௦௧ ஒற்றுமை [அதர்வன்—சாம்மானஸ்யஞ்ச தேவதை]

௧ நான் உங்களுக்கு ஒரு இருதயத்தை, ஒரு மனத்தை —பகையின்மையை, செய்கிறேன். பிறந்த கன்றைப் பசுப்போல், பரஸ்பரம் பிரேமையுட னிருங்கள்.

௨ மகன் தந்தையினுக்ஞையை யநுஸரித்து தாயோடு ஒருமன முட னாவானுக. மனைவி புருஷனிடம் தேன் நிறையும் அமைதி மிகும் சொற்களை சொல்வாளாக.

௩ சகோதரன் சகோதரனைத் துவேஷிக்க வேண்டாம். சகோதரி சகோதரியைத் துவேஷிக்க வேண்டாம். ஒருமையுடன் ஒரு நோக்கமாகி மங்களமுடன் மொழியை நீங்கள் மொழியுங்கள்.

௪ எந்த பிரமத்தால் தேவர்கள் தனித்தனி யாவதில்லையோ, பரஸ்பரம் வெறுப்பது மில்லையோ அந்த பிரமத்தை ஒரு மனத்தை, உங்களது மனையிலே புருஷர்களுக்கு நாங்கள், செய்கிறோம்.

௫ சிறந்து ஒரு சித்தமுடன், ஒருமையான முயற்சியுடன், இணையும் உழைப்போடு, சலனமாகி நீங்கள் பரஸ்பரம் பிரியாமலாகுங்கள்; பரஸ்பரம் பிரியம் மொழிபவர்களாய் இங்கு வாருங்கள். நான் உங்களை ஒன்று இணைத்து ஒரு மனமுள்ள வர்களாகச் செய்கிறேன்.

௬ நீங்கள் பருகுவது ஸமானமாகுக. உங்கள் உணவின் பாகம் ஒருமையுடனாகுக. நான் உங்களை ஸமான சேர்ப்பிலே ஒன்று சேர்க்கிறேன். சக்கர—நாபியை சுற்றியுள்ள பற்களைப்போல் ஒருமையுடன் அக்கினியை உபாசியுங்கள்.

௭ நான் உங்களை எல்லாம் ஒரே கொத்தின் ஸமான சித்த முள்ளவர்களாய் சமரஸத்தால் செய்கிறேன். தேவர்களைப்போல் அமுதத்தைப் பாலனஞ் செய்யுங்கள். காலையிலும் மாலையிலும் நற்சித்தம் உங்களுக்காகுக.

[௩. ௩௦. ௧—௭.]

---

௧௦௧ கருத்து—உயரிய பொருள் ஒற்றுமையே.

௧0௨ குற்றம் நீங்கு [பிரமன்—பாப்மஹம்]

௧ தேவர்கள் மூப்பினின்று விலகியுள்ளார்கள். அக்கினியே என்னைக் கருமியினின்று தூரமாக்கு. நான் எல்லாத் தீமையினின்று தளர்ந்துள்ளேன்: யக்ஷ்மத்தினின்று நீங்கியுள்ளேன். நான் ஆயுசுடன் சேர்ந்துள்ளேன்.

௨ பவமானன் துன்பத்தினின்று நீங்கியுள்ளான். சக்கரன் பாபச் செயலினின்று நீங்கியுள்ளான். நான்...........
.......சேர்ந்துள்ளேன்.

௩ கிராமப் பசுக்கள் வனமிருகங்களினின்று பயமாகித் தனிமையாயுள்ளன. தண்ணீர் தாகந் தளர்ந்துள்ளன: நான்...............சேர்ந்துள்ளேன்.

௪ சோதியும் வானமும் இங்கு பிரிந்துள்ளன. திசை திசை செல்லும் இவ்வழிகள்—பிரிந்துள்ளன. நான்....
.......சேர்ந்துள்ளேன்.

௫ துவஷ்டா தன் மகளுக்கு மண இரதத்தை யுக்தமாக்குகிறான்: இதனைச் செவியுற்றதும் இந்த விசுவமான புவனம் தனிமையாகின்றது. நான்..........சேர்ந்துள்ளேன்.

௬ அக்கினி பிராணன்களை நன்கு சேர்க்கிறான். சந்திரன் பிராணனுடன் சேர்க்கப்பட்டுள்ளான். நான்...........
சேர்ந்துள்ளேன்.

௭ விசுவ வீரியனான சூரியனை பிராணனால் தேவர்கள் சலனஞ்செய்துள்ளார்கள்: நான்...........சேர்ந்துள்ளேன்.

௮ தீர்க்காயுசு உள்ளவர்களது சுவாசத்துடன் ஆயுசு செய்பவர்களது பிராணனோடு நீ வசி: நீ மரிக்காதே: நான்...........சேர்ந்துள்ளேன்.

௯ சுவாசிக்கும் சுவாசத்துடன் நீ சுவாசி. நீ இங்கு இரு: நீ சாகாதே: நான்...........சேர்ந்துள்ளேன்.

௧0 நாங்கள் ஆயுசுடன் எழுச்சியாவோம். ஆயுசுடன் நன்கு சேர்வோம். ஓஷதிகளின் இரஸமுடன், உச்ச

மாவோம். நான்..........சேர்ந்துள்ளேன். ௧௧. நாங்கள் பர்ஜனியனுடைய மழையுடன் எழுந்து அமுதர்களாயுள்ளோம்: நான்..........சேர்ந்துள்ளேன்.

[௩. ௩௧. ௧-௧௧]

௩—வது காண்டம் முற்றிற்று

## ௧0௩ - ௧௬௨

௧0௩. மர்மன் [வெனன்—பிருஹஸ்பதி—ஆதித்யன்]

௧ முதன்மையாய் பிரமன் பூர்வத்தில் புலனாகியுள்ளான்: வேனனாகுமவன் அதி ஒளி எல்லையினின்று—அனைத்தையும்—விளக்கியுள்ளான்; அவன் அருகிலுள்ள ஆதாரரூபங்களான ஸத்தின் அஸத்தின் மூல நிலயத்தைத் திறந்துள்ளான். ௨ பிதாவின் இராணியான புவனங்களில் நிகழும் இவன் முதல் ஜனனோற்பத்திக்கு செல்வானாக; நான் அவனுக்கு இந்த நற் சோதி வீசும் சுற்றைச் சலனஞ் செய்துள்ளேன்; அவர்கள் தாகமுள்ளவனுக்கு சூடான பானத்தைச் சேர்ப்பார்களாக.

௩ அறியும் அவனது பந்துவான புலனாகியுள்ள அவன் தேவர்களது உற்பத்திகளை யறிகிறான். பிரமனின் நடுவினின்று அவன் பிரமனைத் தரித்துள்ளான். மேலுங் கீழும் சுவதாவுக்கு அவன் ஸ்தாபனஞ் செய்துள்ளான்.

௪ புவியின் சோதியிலே ருதத்திலே நிகழுமவன் மேலான இரு உலகங்களை தனது உலகமாக ஸ்தாபித்துள்ளான்: பெரியவன் தோன்றுங்கால், புவியான வெளி சோதியான நிலயத்தை—இந்தப் பெரிய விரிவுகளைத் தனித்தனியே நிலைக்கச் செய்துள்ளான்.

௫ அவன் ஆகாசத்தினின்று — அதி முதன்மையாய்

௧0௨ கருத்து—நீங்கள் அமுதர்களாகுங்கள்.

தோன்றி அதியுச்சியை அடைந்துள்ளான். பிரஹஸ்பதி அவனது ஒரே தேவதையான சம்ராட்டன். ஒளி வீசும் பகல் சோதியினின்று தோன்றிற்று. இதனால் சோதிமிகும் அறிஞர்கள் உறுதியுடன் வாழ்வார்களாக.

௬ அறிஞர்கள் இந்தப் பூர்வ தேவனது மகத்தான நிலயத்தைப்—போற்றுகிறார்கள். அவன் இங்கு பிறந்துள்ளான். அவனுடன் இன்னும் வெகு பலர் உண்டு. முதன்மையான பாகம் திறக்கப்படுங்கால் அவர்கள் தூக்கத்திலிருந்தார்கள்.

௭ "நீ சகலத்தையுஞ் சனனஞ் செய்பவன், கல்விமான், தேவன் சுதந்திரன்" எனப்படுபவனும், அதர்வண பிதா, தேவபந்து—எனப் புகலப்ப—டுபவனுமான பிரகஸ்பதியை வணக்கத்துடன் எவன் நாடுகிறானோ அவன் துன்பமாவதில்லை.

[௪. ௧. ௧—௭]

௧0௪ தேவன் [வேனன்—ஆத்மா]

௧ எவன் ஆத்மாவை அளிக்கிறானோ, பலமளிக்கிறானோ, எவனது ஆக்ஞையை விசுவமான தேவர்கள் உபாசிக்கிறார்களோ, எவன் இந்தத் துவிபதம் இந்தச் சதுஷ்பதத்தின் ஈசனோ, அந்த எத்தேவனுக்கு, நாங்கள் அவியால் வணக்கமளிப்போம்?

௨ எவன் தன் மகிமையினால் சுவாசித்து இமை கொட்டும் சகத்தின் இராஜாவாயுள்ளானோ எவனது சாயை அமிருதமோ எவனது நிழல் மிருத்யுவோ அந்த எத்தேவனுக்கு அவியால் வணக்கமளிப்போம்?

௩ சமரிலே எவனை இரு சேனைகள் விருப்பமுடன் நோக்குகின்றனவோ அச்சத்தால், எவனை சோதியும் புவி

௧0௩. கருத்து—பரமம் ஒரு மர்மப் பொருள்.

யும் அழைக்கின்றனவோ, எவனது இந்தவழி வானத்தை யளிக்கின்றதோ, அந்த எத்தேவனுக்கு அவியால் நாங்கள் வணக்கமளிப்போம்?

ச விசால சோதியும் மகத்தான புவியும் எவனதோ அந்த விரியும் நடுப்பாகம் எவனதோ எவனது மகிமையினால் அச்சூரியன் அகலமாயுள்ளானோ அந்த எத்தேவனுக்கு நாங்கள் அவியால் வணக்கமளிப்போம்?

ரு எவனது மகிமையினால் விசுவமான எல்லா இமய—மலைகளுண்டோ—கடலில் எவனது இரஸம் என—அவர்கள்—சொல்லுகிறார்களோ இந்தப் பிரதிசைகள் எவனது கைகளோ அந்த எத்தேவனுக்கு நாங்கள் அவியால் வணக்கமளிப்போம்?

சூ ருதத்தில் சனிக்கும் அமுதமான சலங்கள் கருப்பத்தைத் தரித்து ஆதியில் விசுவத்தைக் காக்கும். அந்த எத்தேவிகளில் எத்தேவன் தலைவனாயுள்ளானோ அந்த எத்தேவனுக்கு நாங்கள் அவியால் வணக்கமளிப்போம்?

எ இரணிய கருப்பன் பொருளின் ஆதியில் தோன்றியுள்ளான். தோன்றிய அவன் ஏகபதியாகியுள்ளான். அவன் புவியையும் சோதியையுந் தரித்துள்ளான். அந்த எத்தேவனுக்கு நாங்கள் அவியால் வணக்கமளிப்போம்?

அ சலங்கள் வத்ஸனைச் சனனஞ்செய்து ஆதியில் கருப்பத்தை யடைந்துள்ளன. அதன் உற்பத்தியின் மேல் உறை பொன்மயமாயுள்ளது. அந்த எத்தேவனுக்கு நாங்கள் அவியால் வணக்கமளிப்போம்?

[ச. உ. க—அ]

கOரு வனமிருகம் [அதர்வன்—ருத்திர வியாக்ரோ தேவதை]

க இங்கிருந்து—புலி, புருஷன் ஓநாய்—சென்று விட்

கOச கருத்து—கடவுளை ஒருவன் அறிய இயலாது.

டார்கள். நதிகள் பாய்கின்றன, கீழே பாய்கின்றன: வனஸ்பதிகள் கீழே விழுகின்றன. எதிரிகள் வணங்குவார்களாக.

உ ஓநாய் தூரமான வழியில் செல்க. தூரமான வழியிலே திருடன் செல்க. பற்களுடனான பாசம், தூரஞ் செல்க. துட்டனும் தூரஞ் செல்க.

ங புலியே! உனது இரு கண்களையும் உன் வாயையும் நாங்கள் நாசமாக்குகிறோம். அப்பால் எல்லா இருபது நகங்களையும்—நாசஞ் செய்கிறோம்.

ச நாங்கள் முதன்மையாய் தந்தாயுதமுள்ள புலியை ஒழிக்கிறோம். யாதுதானனை சர்ப்பனை பிறகு ஓநாயை ஒழிக்கிறோம்.

ரு இன்று எந்தத் திருடன் வருகிறானோ அவன் தண்டனையாகி தூரமாகிறான். அவன் சிறுமையால் சென்று விடுவானாக. இந்திரன் வச்சிராயுதத்தால் அவனைக் கொல்வானாக.

சு மிருகத்தின் பற்கள் உடைக்கப்படட்டும். அதன் முதுகெலும்புகள் தூள் தூளாகட்டும். உனது வில் நாண் தளர்க. மறையும் மிருகமும் கீழே செல்க.

எ நீ நெருக்கியதை நீட்டாதே. நீட்டியதை நெருக்காதே. நீ இந்திரனுக்குப் பிறந்தவன். ஸோமனது மகன். நீ புலி கொல்லும் ஆதர்வணன்.

[ச. ங. க—எ]

க0சு வீரியம் [அதர்வன்—வனஸ்பதி]

க நஷ்ட வீரியமுள்ள வருணனுக்கு கந்தருவன் கெல்லும் இந்திரிய புஷ்டியளிக்கும் ஔஷதனான உன்னை நாங்கள் கெல்லுகிறோம்.

உ உஷை உதயமாகுக. சூரியனும் உதயமாகுக. இந்த

---

க0ரு கருத்து—வன மிருக மழித்து விபத்து நீங்குங்கள்.

எனது மொழிகள் உதயமாகுக. வீரியப் பிரஜாபதி வலிமையுடன் ஓங்குவானாக.

௩ வளரும் உனது தேகத்திலே அது தாபமானது போல் சுவாசிக்கும்: இந்த ஔஷதம் அதைவிட அதிதிடத்தை உனக்குச் செய்க.

௪ ஓஷதி சக்திகள் ரிஷப இரஸங்கள் மனிதர் வீரியங்கள் ஓங்குக. இந்திரனே! தன்னடக்க முள்ளவனே! நீ அவனில்—இதனையெல்லாம்—ஒன்று குவி.

௫ நீ[1] சலங்களின் முதல் தோன்றும் இரஸம்; அப்படியே — நீ — வனஸ்பதிகளின் இரஸம்: மேலும் நீ ஸோமனுடைய சகோதரன். நீ வலிமையின் வீரியன்.

௬ அக்கினியே! தேவி ஸரஸ்வதியே! பிரமணஸ்பதியே! இவனது அங்கத்தை வில்லைப்போல் திடமுடனாக்குங்கள்.

௭ நான் உனதங்கத்தை வில்லின் நாணைப்போல் கடினமாக்குகிறேன். எப்பொழுதும் தணியாமல், கலை, பெண்மானைப்போல் ஆக்கிரமி.

௮ சுவாதீனனே! குதிரையின் கோவேறு கழுதையின் கடாவின் ஆட்டின் இன்னும் விருஷபத்தின் எந்த வலிமைகளுண்டோ அவற்றை அவனில் அளி.

[௪. ௪. க—௮]

கOஎ தூக்கம் [பிரமன்—சுவபனன், ரிஷபன்]

க கடலினின்று தோன்றும் ஆயிரங் கொம்புகளுள்ள திறமான காளையால் நாங்கள் சனங்களை உறங்கச் செய்கிறோம்.

௨ புவியின்மேல் காற்று வீசுவதில்லை. ஒருவனும் காண்பதில்லை. நீ இந்திரன் என்னும் நண்பனோடு சலன

---

[1] விருஷ்யம் அல்லது வீரியன் என சொல்லப்படும் ஒரு மூலிகை.

கO௬ கருத்து—வீரிய மோங்கவேண்டும்.

மாகி எல்லா நாரிகளையும், நாய்களையும் உறங்கச்செய்.

௩ நாங்கள் கட்டிலில் சயனித்துள்ளவர்களையும் சயனத்தில் சாய்ந்துள்ளவர்களையும் ஊசலில் சேரும் நாரிகளையும் புனித கந்தங்களோடாகும் ஸ்திரீகளை எல்லாம் தூங்கச் செய்கிறோம்.

௪ நான் அசையும் ஒவ்வொன்றையும் பற்றியுள்ளேன். கண்ணையும் பிராணனையும் பற்றியுள்ளேன். இரவின் அதி இருளில் நான் எல்லா அங்கங்களைக் கிரகித்துள்ளேன்.

௫. எவன் இருக்கிறானோ எவன் செல்லுகிறானோ எவன் நிற்கிறானோ எவன் எங்கும் பார்க்கிறானோ அவர்களது கண்களை இவ்வீட்டின் கதவை நன்றாய் அடைப்பதுபோல் நாங்கள் நன்கு மூடச் செய்கிறோம்.

௬ தாய் தூங்குவாளாக, தந்தை தூங்குவாளாக, நாய் தூங்குக, வீட்டுப்பதி தூங்குவானாக. அவளது ஞாதிகள் தூங்குவார்களாக. சுற்றியுள்ள சிசு சனம் தூங்குக.

௭ தூக்கமே! தூக்க ஸாதனத்தால் நீ எல்லா சனத்தையும் உறங்கச்செய்: சூரியோதயம் வரை அந்நியர்களைத் தூங்கச்செய்: துன்பம் தளர்ச்சியாகாமலுள்ள இந்திரனைப்போல் நான் காலைவரை விழித்திருப்பேனாக.

[௪. ௫. ௧—௭]

௧0௮ விஷம் நீக்கு [கருத்மான்—தட்சகன்]

௧ முதலில், பிராமணன்[1] தோன்றினான்: அவனுக்கு பத்து முகங்கள் பத்து வாய்களாகும். அவன் ஸோமனை முதல் பருகினான், அவன் விஷத்தை இரஸமன்னியில் செய்தான்.

---

1 சிருஷ்டி என்னும் விஷம் விலக்கும் ஒரு மூலிகைக்குப் பெயர்.

௧0௭ கருத்து—உறக்கம் அவசியம். அதன் இரகசிய மறி.

உ சோதியும் புவியும் விசாலத்தால் எத்தனை தூரமோ அத்தனை விரிவு ஏழு சிந்துக்களாகும். அவ்விரிவு வரை—விஷத்தை தூஷிக்கும் இவ்வசனத்தை இங்கிருந்து நான் மொழிந்துள்ளேன்.

ந விஷமே! கருடனான ஸுபர்ணன் உன்னை முதன்மையாய் புசித்தான்: நீ அவனை மயக்கஞ் செய்யவில்லை: நீ அவனை ருபமழிக்கவில்லை. இதனால் நீ அவனுக்குப் பானமானாய்.

ச வக்கிரமான வில்லினின்று ஐந்து விரல்களால் எவன் உன்னை எறிந்துள்ளானோ நான் அச்சர[1] முனையினின்று[2] விஷத்தை நீக்கியுள்ளேன்.

ரு நான் அம்பின் முனையினின்று—விஷத்தை நீக்கியுள்ளேன். பர்ணம் பிரலேபத்தினின்று—விஷத்தை நீக்கியுள்ளேன். சுனை, கண்டம் கொம்புனின்று விஷத்தை நீக்கியுள்ளேன்.

சா சரமே! உன்முனை இரசமன்னியிலுள்ளது. உன் விஷமும் இரஸமன்னியிலுள்ளது. இரஸமற்றவனே இன்னும் உன் இரஸமற்ற மரத்தின் வில்லும் இரஸ சூனியமாகும்.

எ அதனை அரைப்பவர்களும், அதனைப் பிரலேபஞ்செய்பவர்களும் அதனை எறிபவர்களும் அதனை உற்பத்திசெய்பவர்களும்—பலமன்னியில் செய்யப்பட்டுள்ளார்கள். விஷ மலையும்—வன்மையற்றுப் விட்டது.

அ உன்னை வெட்டுபவர்கள் ஆண்மையற்றவர்கள்: ஓஷதியே! நீ உறுதியற்றவள்: இநஞ்சு பிறந்த கடும் மலையும் ஆண்மையற்றது.

[அ. சா. க—அ]

---

1 அபஸ்கம்பம் என்றும் ஒருநஞ்சு கொல்லும் மூலிகைக்குப்பெயர்.

2 இலையிலிருந்து இறங்கும் இரசத்தால்

கOக விஷ சிகிச்சை [கருத்மான்—வனஸ்பதி]

க இந்த சலம் வரணாவதியில்[1] விஷத்தை நீக்குக. அங்கு பொழியும் அமிருதமுள்ளது. அதனால் உனது விஷத்தை நான் தூரஞ் செய்கிறேன்.

உ கிழ்த்—திசையின்—விஷம் இரஸமற்றது. வட—திசையின்—விஷம் இரஸமற்றது. இத் தென்—திசை விஷமும்—கரம்பத்தினால்[2] பயன் மாறுவதாகும்.

ந நோயுள்ள காயனே! புஷ்டிமிகும் எள்ளின் கரம்பத்தை ஒருவன் சேர்த்து[3] அருந்தினால், அவன் பசியால் நஞ்சைப் புசித்தாலும் துன்பமாவதில்லை:

ச மதமளிப்பவனே! உனது மதத்தை சரம்போல் நாங்கள் பறக்கச் செய்கிறோம். கொதி பாண்டத்தைப்போல் உன்னை எங்கள் வாக்கினால் நிற்கச் செய்கிறோம்.

ரு நாங்கள், ஒன்று சேரும் படையைப் போல் உன்னை மொழியால் சூழச் செய்கிறோம். கோடரியால் வெட்டப் பட்ட மரம்போல் உன், நிலயத்தில் நீ துன்பமாவதில்லை.

சு ஆடைகளாலும், உடைகளாலும், ஆட்டுச் சர்மங்களாலும் உன்னை அவர்கள் வாங்கினார்கள். ஓஷதியே! நீ வாங்கப்படுபவன்: கோடரியால் நறுக்கப்படும் நீ, கஷ்டஞ் செய்வதில்லை.

எ அஸாத்தியச் செயல்களை உங்களில் முதன்மையாய் செய்பவர்கள் எங்களது வீரர்களை துன்பஞ் செய்யாமலாவார்களாக. நான் உங்களை அதற்காக பூர்வத்தில் வைக்கிறேன்.

[ச. எ. க—எ]

---

1 விஷம் விலக்கும் மூலிகை யொன்று. 2 சேர்ப்பினாலே.

3 வரணாவதி மூலிகை கலந்து.

கOக கருத்து—மருந்தால் விஷம் விலக்கு.

கக0 புலி புருஷன் [அதர்வாங்கிரஸன் — இராஜ்யாபிஷேகம், சந்திரன், ஆமன்]

க பொருள் பொருள்களில் இரஸத்தை ஸ்தாபனஞ் செய்யும். அவன் பொருள்களின் அதிபதியாகியுள்ளான். அவனது இராஜஸூயத்தில் மிருத்தியு சலனமாகிறான். அவன் இராஜாவாய் இந்த இராஜ்யத்தை சுவீகரிப்பானாக.

உ நீ முன் வா! தயங்காதே! திருத்துங் கோரனான நீ எதிரியழிப்பவன்: நண்பர் பெருக்குபவனே! நீ அணுகு. தேவர்கள் உனக்கு ஆசி கூறுக.

ந பிரஸன்னமாயுள்ள—அவனை—அனைவரும் அணுகியுள்ளார்கள். சுவப் பிரகாசனாய் ஸ்ரீ சாயும் அவன் சலனமாகிறான். வர்ஷிக்கும் அசுரனது நாமம் புகழுள்ளது. விசுவ ரூபமான அவன் அமிருதங்களை யடைந்துள்ளான்.

ச புலி போலுள்ளவர்களில் புலியான நீ ஆக்கிரமி. மேலான திசைகளில் ஆக்கிரமிக்க உன்னை எல்லா சனங்களும் விரும்புவார்களாக. திவ்ய சலங்கள் பால் மிகுபவையாகுக.

ரு எந்த திவ்ய சலங்கள் பாலினால் வானத்திலோ வையத்திலோ சந்தோஷ மளிக்கின்றனவோ அந்த எல்லா நீர்களின் வர்சஸினால் உன்னை நான் அபிஷேகஞ் செய்கிறேன்.

சா பால்மிகும் திவ்யமான சலங்கள் உன்னை வர்சஸினால் அபிஷேகஞ் செய்துள்ளன. நீ நண்பர்களின் நலங்களை பெருகச் செய்ய ஸவிதா உன்னைச் செய்திடுவாள்.

எ இங்ஙனம் புலியை ஆசிரயித்து அவர்கள் மேலான செல்வத்துக்குச் சிங்கத்தைத் தூண்டுகிறார்கள். திரமான கடலை திவ்யப் பொருள்கள் தூய்மை செய்வனபோல்

சலங்களின் அகத்திலுள்ள புலியை—அறிஞர்கள்—அலங்கரிக்கின்ருர்கள்.

[ச. அ. க—எ]

ககக காப்பு [பிருகு—திரைக்காக்குதாஞ்சன தேவதை]

க சீவனுள்ளவனை நீ[1] துணை புரிந்துவா! நீ தேவர்களால் அளிக்கப்பட்டு சீவனுக்கு அரண்போலுள்ள நீ கண்ணுக்கு மலையின் ஔஷதமாவாய்.

உ நீ புருஷர் காப்பு, பசுக் காப்பு: நீ துரிதமாய் புரவிக் காப்புக்குத் திரமாயுள்ளாய்.

ங அஞ்சனமே! நீ யாதுக்களை யழிக்கும் இரட்சகன். நீ அமுதத்தின்—பானத்தை—அறிபவன். நீ ஜீவ போஜனம். நீ மஞ்சக் காமாலையின் சிகிச்சை.

ச நீ எவனது அங்கம் அங்கத்தில் கணுக்கணுவில் வியாபகமாகிருயோ அஞ்சனமே—உக்கிரமான நடு நிகழும்நீதிபதியைப்போல் அவனிடமிருந்து யக்ஷ்மத்தை நீக்குகிருய்.

ரு அஞ்சனமே! உன்னைச் சுமந்துசெல்பவனை எந்தச் சபதமும் அணுகுவதில்லை, தீமை தோயாது; தாபமும் சேர்வதில்லை. விஷ்கம்பமும் அவனைப் பற்றுவதில்லை.

சு அஸத்தான மந்திரம், துட்டச் சுவப்னம், தீச்செயல் பாப கர்மத்திளின்றும் எதிரியின் கோரக் கண்ணினின்றும், எங்களைப் பாலனஞ் செய்.

எ அஞ்சனமே! நான் இதை அறிந்து சத்தியத்தையே பேசுவேன். அசத்தியத்தை—பேசப் போவ—தில்லை. நான் பசுவை குதிரையை யடையவேண்டும். புருஷனே! உனது ஆத்மாவை யடைய—வேண்டும்.

அ அஞ்சனத்தின் தாஸர்கள் மூவர்கள். சுரம், க்ஷயம்,

---

1 கண்களில் தேய்த்துக்கொள்வதர்க்காகும் ஒரு அஞ்சனம்.

ககo கருத்து—தலைவருக் கபிஷேகஞ் செய்தல்.

பாம்பு : மூச்சிகரம் எனப்பெயருள்ள உயரிய மலை உனது பிதா.

௯ மூவ்வுச்சியின் பனியப—மலையி—னின்று தோன்றும் அஞ்சனமான இது சகல யாதுக்களையும் சகல யாதுதானியர்களையும் நாசஞ் செய்க.

கဝ நீ மூவ்வுச்சி மலையினின்றுறைலும்—சரி, யமுனையினின்று வந்துள்ளவன் என சொல்லப்பட்டபோதிலும்—சரி—இவ்விரண்டும் மங்கள நாமங்களாகும். அஞ்சனமே! இந்த இரண்டால் எங்களை நீ பாலனஞ் செய்.

[௪. ௯. க—கဝ]

ககஉ சங்கு [அதர்வணன்—சங்கமணி சூக்தங்கள்]

க வாதத்தினின்றும் வானத்தினின்றும் மின்னல் சோதியினின்றும் தோன்றுவதான இந்த பொன் சனன முத்தின்—சங்கு எங்களைத் துன்பத்தினின்று—காக்கட்டும்.

உ ஒளிவீசும் வெளிகளில் முதன்மையாயும் சமுத்திரத்தினின்று தோன்றுவதாயுமுள்ள சங்கினால் அரிகளையழித்து அரக்கர்களை ஜயிக்கிறோம்.

ந நாங்கள் சங்கினால் நோயையும் அறிவின்மையையும் சங்கினால் ஸதான்வர்களையு—மொழிப்போம். முத்தின் சங்கு எங்களுக்கு விசுவ சிகிச்சையாகும்; முத்து துன்பத்தினின்று எங்களை காக்கட்டும்.

ச சோதி சனனமாகி சமுத்திரத்தில் தோன்றி, நதிகளால் நன்கு போஷிக்கப்படும் இந்தப் பொன் சனனமான சங்கு எங்களுக்கு ஆயுசு பெருக்கும் மணியாகும்.

ரு மணி, கடலினின்று மலரும்; திவாகரன் விருத்திர

---

ககக கருத்து—காப்புச் செயல் சாய்ந்து காய கஷ்டங்களை கழியுங்கள்.

னின்று தோன்றுவான். இந்த—மணி—தேவாசுரர்களின் ஆயுதத்தினின்று எங்களை எங்குங் காக்கட்டும்.

சு நீ பொன்களின்—நடுவே—ஏகன். நீ ஸோமனிடமிருந்து தோன்றினாய். நீ இரத்தத்தில் சுந்தரமாயுள்ளவன். நீ சரக்கூட்டில் சோதி வீசுகிறாய். அது எங்கள் ஆயுசுகளை பூரணமாக்கட்டும்.

எ தேவர்களின் எலும்பு முத்து ஆகும். அதற்கு ஆத்மா உண்டு: அது சலங்களில் செல்லும். நான் இதனை உன்னில் ஆயுசுக்கு வர்சஸுக்கு பலத்துக்கு க௦௦ சரத்துக்களின் பூரண வாழ்க்கைக்குக் கட்டுகிறேன். முத்தின் மணி—உன்னை நன்கு காக்கட்டும்.

[சு. க௦. க—எ]

ககரு காலன் [பிருகுவங்கிரன்—அனட்வான்]

க காலை புவியையும் சோதியையும் தரிக்கிறான். காலை விசால வானத்தையும் தரிக்கிறான். காலை ஆறு விரிந்த பிரதிசைகளை தரிக்கிறான். காலை விசுவமான சகத்திலே நுழைந்துள்ளான்.

உ காலை இந்திரனாகும், அவன் பசுக்களுக்குக் காவலாகிறான். சக்தியர்கு மவன் மூன்று வழிகளை யளக்கிறான். அவன் சென்றது செல்வது செல்லப்போவதான சகங்களைக் கறப்பவனாய் தேவர்களின் எல்லா விரதங்களில் சலனமாகின்றான்?

ந இந்திரனாய் மனிதர்களின் அகத்தில் தோன்றி தவமடையும் திவ்யன் நற்சோதியுடனாகி நற்பிரஜையில் ஒன்றாகும் அறிஞனை அவன் காளையின் சக்தியை புசிக்காத அவன் நீராவியாகமாட்டான்.

ச காளை ஸுகிருத உலகத்தில் கறக்கின்றான். பவமா

---

ககரு கருத்து—சங்கினால் உச்சமாகுங்கள்.

னன் முதன்மையாய் இவனை பூரணமாக்குகிறுன். பர் ஜனியன் இவனது தாரையாகும். மருத்துக்கள் ஸ்தனமாகும்· யக்ஞம் பாலாகும். இவனது தட்சிணை கறப்பாகும்.

ரு யக்ஞபதி, யக்ஞம்—எவனை—அரசுபுரிகிறுர்கள் இல்லையோ அளிப்பவனும் கிரகிப்பவனும் எவனை ஆட்சி புரிகிறுர்களில்லையோ, விசுவஞ் ஜயிப்பவன் விசுவந் தரிப்பவன் விசுவகர்மா எவனே நான்கு பாதங்களுள்ள ஒளிச் சுடர் எவனே—அவனைப்பற்றி—எங்களுக்கு உரை.

சு எச் சுடரின் விரதத்தால் தவத்தால் தேவர்கள் தேகம் அழிந்ததும் அமுத நாபியான சோதி—சுவர்க்கத்தை—சேர்கிறுர்களோ அவனுல் புகழை நாடும் நாங்கள், தவத்தால் அத் தீச்சுடரின் விரதத்தால், சுகிருத உலகத்தை யடைவோம்.

எ ரூபத்திஞல் இந்திரன், சுமப்பதில் அக்கினி, பிரஜாபதி பரமேஷ்டியும் விராடனு மாகுமவன் விசுவாநரத்தில் ஆக்கிரமித்தான்: வைசுவாநரத்தின் காலையில் வியாபகமயுள்ளான்: அவன்—இவ்வனைத்தையும்—திடம் செய்தான்: அவன் தரித்தான்.

அ எங்கு இச்சுமை வைக்கப்பட்டுள்ளதோ அது காலையின் நடுப் பாகமாகும். அவனது முன் பாகம் எத்தனையுண்டோ அத்தனையே எதிர்ப்பாகமும் பரவும்.

கூ எவன் காலையின் அழியாமலாகும் ஏழு கறப்புக்களை அறிகிறுனே அவன் புவியையும் பிரஜையையு மடைகிறுன்: அங்ஙனமே ஏழு ரிஷிகள் அறிகிறுர்கள்.

க0 கால்களால் மெலிவைக் கீழ் யழுத்தித், துடைகளால் அமுத இரஸத்தை இறக்கி காலையும் குடியானவனும் முயற்சியால் அமுதஞ் செல்லுகிறுர்கள்.

கக பிரஜாபதியினுடைய விரத இரவுகளை அவர்கள் பன்னிரண்டு எனச் சொல்கிறுர்கள்: அவற்றிலுள்ள பிர

மத்தை எவன் அறிகிறானோ அவனே காளையின் விரதன்.

க௨ அவன் மாலையில் கறக்கிறான். காலையில் கறக்கிறான். நடுப் பகலிலும் கறக்கிறான். அவனிடமிருந்து பொழியும் பால்களை அழியாதவை என நாங்கள் அறிவோம்.

[ச. கக. க—க௨]

கக௪ சிகிச்சை [ரிபு—வனஸ்பதி]

க ரோஹணீயே![1] நீ வளர்ப்பவள்: உடைந்த எலும்பை வளர்ப்பவள்: அருந்ததியே![1] இதை வளரச்செய்.

௨ உனது எலும்பு காயமடைந்தாலும் புண்ணானாலும் உனது அங்கம் அறைபட்டிருந்தாலும் தாத்ரு வானவன் அதை மங்களத்துடன் அங்கம் அங்கத்தை மறுபடியும் இணைத்து ஒன்று சேர்ப்பானாக.

௩ உனது மஜ்ஜை மஜ்ஜையுடன் சேர்க. அங்கம் அங்கமுடனாகுக. நாசமான உனது மாமிசமும், எலும்பும் நன்கு வளர்க

௪ மஜ்ஜையுடன் மஜ்ஜை ஒன்று சேர்க்கப்படட்டும். சர்மம் சர்மத்துடன் வளர்க. உனது எலும்பும் இரத்தமும் ஓங்குக. மாமிசம் மாமிசத்துடன் வளர்க.

௫ ரோமத்தை ரோமமுடன் சேர்: சர்மத்தை சர்மமுடன் ஒன்று சேர்: உன்னில் எலும்பும் இரத்தமும் ஓங்குக: ஓஷதியே! ஒடிந்ததை ஒன்று சேர்.

௬ நீ இங்கு எழுந்திரு: துரிதமாக முன் செல். நீ நல்ல சக்கரம், நல்ல நாபி, நல்தண்டமுள்ள இரதம்போலாக, நிமிர்ந்து நேராய் நில்,

௭ அவன் பள்ளத்தில் விழுந்து காயமானாலும் சரி எறியு

---

1 ஒரு மூலிகையின் பெயர்.

கக௩ கருத்து—இக்காளைக் கடவுளையே குறிக்கும்.

மாயுதத்தால் புண்ணடைந்தாலுஞ் சரி இரதத்தின் உறுப்புகளைப்போல் அங்கமங்கத்தைச் சேர்க.

[சு. கஉ. க—எ.]

௧௧௫ சிகிச்சை [சந்திரன், விசுவே தேவர்கள்]

௧ தேவர்களே! தாழ்த்தப்பட்டவனை தேவர்களே! மறுபடியும் உயர்த்துங்கள்: தேவர்களே! வன்மியை தேவர்களே! மறுபடியும் வாழச் செய்யுங்கள்.

உ இங்கு இரண்டு வாயுக்கள் சிந்துவைப்போல் வெகு தூரம் வரை வீசுகிறார்கள்: ஒன்று உனக்குத் திடத்தை வீசுக. மற்றொன்று தோஷத்தைத் துரத்துக.

௩ காற்றே! இங்கு சிகிச்சையை வீசு: காற்றே! ஒவ்வொரு மலினத்தையும் வீசித் துரத்து. விசுவ சிகிச்சையான நீயே தேவர்களின் தூதனாய் சலன மாகிறாய்.

௪ தேவர்கள் இவனைக் காப்பார்களாக. மருத்துகணங்கள் இவனைக் காப்பார்களாக. விசுவப் பிராணிகள் இவன் துன்பங்களினின்று நீங்க இவனைப் பாலனஞ் செய்வார்களாக.

௫ நான் நோய் நீக்கும் சாந்தமளிக்குஞ் — சாதனங்களுடன் — உன்னை அணுகியுள்ளேன். நான் உனக்கு உக்கிர உறுதியைக் கொண்டு வந்துள்ளேன். நான் உனது யக்ஷ்மத்தைத் தூரஞ் செய்கிறேன்.

௬ எனது இந்தக் கை பகவான். எனது வேறு—இக்—கையும் ஐசுவரிய யுக்தன். எனது இது விசுவ சிகிச்சை, இக் கையின்—பரிசமும் சிவமளிப்பது.

எ வாணியை முன் செலுத்தும் நா இரு கைகள், பத்து

௧௧௫ கருத்து—மூலிகைகளால் காய சிகிச்சை.

கிளைகளுடன்—நோய் நீக்கும் இரு கைகளுடன்,—நாங்கள் உன்னைப் பரிசஞ் செய்கிறோம்.

[௬. கஉ. க—௭]

ககரு அஜம்[1] [பிருகு—ஆஜ்யமக்கினி]

க அக்கினி அஜத்தின் சோகத்தினின்று தோன்றுவதால், முதன் முதல் அவனே சனனஞ் செய்பவனைக் கண்டான். தேவர்கள் அவனால் தேவத்வத்தை அடைந்தார்கள். அவனால் அறிஞர்களாகி உச்ச—நிலைகளுக்கு—ஏறினார்கள்.

உ அக்கினியுடன், உக்கியங்களை கைகளில் தரித்து உச்சிக்குச் செல்லுங்கள்: உயரிய எல்லையான சோதியை யணுகி சுவர்க்கஞ் சென்று தேவர்களுடன் கலந்து திகழுங்கள்.

ங நான் புவியின் எல்லையினின்று வானத்தில் ஏறியுள்ளேன். நான் வானத்தினின்று சோதியில் ஏறியுள்ளேன். திவ்ய தூரியத்தின் உச்சியினின்று நான் சுவர்க்கச் சோதியில் யடைந்துள்ளேன்.

௪ சுவர்க்கஞ் செல்பவர்கள் — எதையும் அபேட்சிப்பதில்லை; நன்கறிந்து எங்கும் பொழியும் யக்ஞத்தை விசாலஞ் செய்துள்ளவர்கள் இரு வெளி ஒளியில் ஏறுகிறார்கள்.

ரு அக்கினியே! தேவர்களின் மனிதர்களின் கண்ணுன நீ தேவதைகளின் முதல்வன்: நீ முன் செல்: யஜமானர்கள், விருப்பஞ் சாய்ந்து பிருகுக்களோடு பொருந்தி சுவஸ்தியுடன் சுவர்க்கத்தை யடைவார்களாக.

௬ நான் பாலாலும் நெய்யாலும் திவ்யமாயும் ஸுபர்

---

1 அஜம் என்றால் ஆடு. பரமனுக்கும் பெயர்.

ககரு கருத்து—தாழ்ந்தோர்களை உயர்த்துங்கள், தீர்க்காயுசுடனுங்கள்.

ணமாயும் இரஸமாயும் பெரிதாயுமுள்ள அஜனை நினைக்கிறேன். அவனால் உயரிய—உலகமான—சுவர்க்கத்தை ஏறி சுகிருத உலகத்தை நாங்கள் யடையவேண்டும்.
எ ஐந்து விரல்களால் பஞ்சோதனமாய் பஞ்ச பிரிவான இந்த ஓதனத்தை சாதனத்தினால் பற்று; அஜனுடைய தலையை கிழக்குத் திசையில் வை: தென் பாகத்தைத் தென் திசையில் வை.
அ மேற்றிசையில் அவனது பின் பாகத்தை—வை. வடதிசையில் அவனது வட பாகத்தை வை: அஜனது முதுகெலும்பை உச்சியிலே வை: முன் பாகத்தைப் புவியில் வை. நடுப்பாகத்தை நடுவின் ' வானத்தில் வை.
கூ எல்லா அங்கங்களுடன் ஒருமையாகி விசுவ ரூபமாய் வளமுமான அஜனை பக்குவமான சர்மத்தால் மூடு: உயரிய உலகத்துக்கு எழுந்திரு: திசைகளில் நான்கு பாதங்களால் பலத்தோடு நில்.

[௪. கச. க—கூ]

கள மழை [அதர்வன்—மருத்து, பர்ஜன்யன்]
க மேகமயப் பிரதிசைகள் ஒன்று கிளம்பட்டும். காற்றினால் துரிதமாகி மழை மேகங்கள் ஒன்று குவிக. கர்ச்சிக்கும் மேகப் பெருங்காளையின் விருஷப முழக்க நாதஞ் செய்யும்—சலங்கள் புவியைத் திருப்தி செய்க.
உ திடமானவர்களாயும் ஸுதானர்களாயுமுள்ள அவர்கள் ஒன்று பார்க்கச் செய்வார்களாக. சலங்களின் இரஸங்கள் ஒஷதிகளோடு சேர்க. மழைத் தாரைகள் புவியை இன்பமாக்குக. விசுவ ரூபமான ஒஷதிகள் இங்கும் அங்கும் தோன்றுக.
௩ கானஞ் செய்பவர்களை மேகங் காணச் செய்: சலங்

கககூ கருத்து—அஜன் என்னும் ஆண்டவனது சாரூபம்

களின் பிரவாகங்கள் இங்கும் எங்கும் மோதுக. மழை யின் தாரைகள் புவியை இன்பமுடனுக்குக. விசுவரூப மான செடி கொடிகள் இங்கும் எங்கும் தோன்றுக.

௪ பர்ஜனியனே! கோஷிக்கும் மருத்து கணங்கள் உன்னை எங்கும் கானஞ் செய்க. வர்ஷிக்கும் வர்ஷ தாரை கள் புவியனுசரித்துப் பொழிக.

௫ மருத்துக்களே! சமுத்திரத்தினின்று சோதியை உயரமாக்குங்கள். மேகத்தை உயரமாக்குங்கள்: கர்ச் சிக்கும் மேகமயமான மகா ரிஷபத்தினுடைய சத்திக்கும் சலங்கள் புவியைத் திருப்தி செய்க.

௬ கர்ச்சி: முழங்கு: கடலைக் கலக்கு: பர்ஜனியனே! பாலால் புவியை நனை: உன்னால் பொழியப்பட்டு பெரும் மழை வருக: தஞ்சம் நாடும் கிருசப் பசு—தலைவனது—வீடு செல்க.

௭ ஸுதானர்களது சல ஊற்றுக்களும் பெருஞ் சர்ப் பங்களும் உங்களை நன்கு இரட்சிக்கட்டும். மருத்துக்களால் பிரேரிதமாகும் மேகங்கள் புவியின்மேல் பொழிந் திடுக.

௮ ஒவ்வொரு திசையிலும் அது மின்னுக. எல்லா திசை களினின்று காற்றுக்கள் வீசுக. மருத்துக்களால் பிரே ரிதமாகும் மேகங்கள் புவியின் மேல் நன்கு பொழிந்திடுக.

௯ சலங்கள் மின்னல் மேகம் மழை நல்ல தானர்களான சலதாரைகள் பெருஞ் சர்ப்பங்கள் உங்களை நன்கு காத்திடுக. மருத்துக்களால் பிரேரிதமாகி மேகங்கள் புவியின்மேல் பொழிந்திடுக.

௧௦ அக்கினி சலங்களின் தேகங்களால் சேர்ந்து ஓஷதி களின் அதிபதியாகி யுள்ளான். ஜாத வேதஸன் சோதியினின்று மழையை அளிப்பானாக. பிரஜைகளுக்குப் பிராணனையும் அமுதத்தையும் யளிப்பானாக.

கக பிரஜாபதி சலநிதி சமுத்திரத்தினின்று சலங்களைத் துரிதஞ்செய்து சாகரத்தைத் தூண்டுவானாக. வர்ஷிக்கும் அசுவ இரேதசு பொங்கி பூரணமாகட்டும். இந்த இடியின் கோஷத்துடன் இங்கு வா.

கஉ அசுரனான எங்கள் பிதா சலங்களைப் பொழிந்து கொண்டு வருவானாக; வருணனே! சலங்களின் நீர்ச்சுழல்கள் பொங்குக. சலங்களைக் கீழே பொழி. சுந்தரக் கைகளுள்ள தவளைகள் நீர்க்கால்களை யநுசரித்து கோஷித்திடுக.

கங விரதமநுசரிக்கும் பிராமணர்களை—ப்போல்—ஒரு வருஷம் சாய்ந்துள்ள தவளைகள்[1] பர்ஜனியனால் துரிதமாகும் வாக்கை கோஷஞ் செய்துள்ளன.

கச பெண் தவளையே அதனுடன்—பேசு: தாதுரியே! மழையுடன் மொழி: உனது நான்கு கால்களை விரித்து—நீராசயத்தின் நடுவே நீந்து.

கரு கண்வகையே! க்கைமகையே! ததுரியே! நீ நடுவிலுள்ளாய். பிதுருக்களே! நீங்கள் மழையை நாடுங்கள். மருத்துக்களின் மனத்தை விரும்புங்கள்.

கசு பெரிய கோசத்தை நீ உயர்ந்து பொழி: மின்னலாகுக. காற்று வீசுக. அவர்கள் நானாவிதமாய் பொழியும் யக்ஞத்தை விசாலமாக்குவார்களாக. ஔஷதிகள் இன்பம் மிகுந்தாகுக.

[௮. கரு. க—கசு]

ககஅ வருணன் [பிரமன்—வருணன். சத்தியா நிருதான வீட்சண சூக்தம்]

க பெரிய அதிகாரி அருகிலிருப்பதுபோல் அவன்

---

1 பிரம்மசாரிகள், மழை வருவதை தவளைகள் முன்னதாகவே அறிக்கதுவிடும். பிரம்மசாரிகளும் வரும் நன்மையைச் சொல்வார்கள்,

ககள கருத்து—மழை தோத்திரம்,

பார்க்கிறான். எவன் இரகஸியத்தில் செல்வதாக நினைத்தாலும், தேவர்கள் அதனை அறிகிறார்கள்.

உ ஒருவன் நிற்பது செல்வது கோணலாய்ப் போவது மறைந்து நிகழ்வது எதிர்ப்பது இருவர் உட்கார்ந்து இரகசியம் மொழிவது—இவை போன்ற ஏனையவைவையும் மூன்றாவனாக வருண மன்னன் அறிகிறான்.

ரு இந்த பூமியும், பெரிய தூரமான வரம்புகளுள்ள அச் சோதியும் அரசனான வருணன-தா-கும். இரண்டு கடல்களும் வருணனது; உதரங்களான இந்த அற்பமான சலங்களிலும் அவன் மறைந்துள்ளான்.

ச ஒருவன் சோதிக்கப்பால் தூரமாய் நகர்ந்து சென்றாலும், அவன் இராஜாவான வருணனது—ஆக்ஞையினின்று விடுதலையாவதில்லை. அவனது ஒற்றர்கள் சோதியினின்று இங்கு சலனமாகிறார்கள். ஆயிரங் கண்களுள்ளவர்களாய் அவர்கள் புவியை நன்கு காண்கிறார்கள்.

ரு இராஜாவான வருணன் வானஞ் சோதிக்கு நடுவே எது—உண்டோ—அவற்றிற்கு அப்பாலும் எது—உண்டோ—அந்த சர்வங்களை யெல்லாம் நோக்குகிறான். இந்த சனங்களது இமைச் சிமிட்டுக்களையும் அவன் எண்ணியுள்ளான். சூதாடுபவன் காய்களைப்போல்—அவன் இவற்றை அளந்து வைக்கிறான்.

சா வருணனே! ஏழு ஏழாய் முப்பிரிவாய் எந்த உனது பாசங்கள் வியாபகமாகி நிலைத்துள்ளனவோ அவை அனைத்தும் பொய் கூறுபவர்களைப் பற்றட்டும். சத்தியம் பேசுபவர்களை அவன் விடுவானாக.

எ வருணனே! நூறு பாசகங்களால் நீ அவனைக் கட்டு: மனிதர்களை கவனிப்பவனே—அசத்தியஞ் சொல்பவன் உன்னிடமிருந்து நீங்காமலாவானாக. சுற்றுக் கட்டுகள் உடைந்துள்ள பந்தமற்ற கோசம்போல் பாதகன் தொங்

கும் உதரத்துடன் உட்காருவானாக.

அ வருணன் நீளமாயும் குறுக்காயுமுள்ளவன். சுதேசி விதேசியாயுமுள்ளவன் வருணன். வருணன் தெய்வமாயுமுள்ளவன்.

௯ இன்னாரே! நான் அந்த எல்லாப் பாசங்களுடன் உன்னைக் கட்டுகிறேன். இந்த இந்த குடும்பத்தைச் சேர்ந்தவனே! இந்த இந்த இந்தத் தாயின் மகனே! அவர்களின் அனைவரையும் உனக்கு நான் அநுகூலமாய் ஆக்ஞாபிக்கிறேன்.

[௪. ௧௬. ௧—௯]

௧௧௯ கேடுங் குறையும் [சுக்கிரன்—அபமார்க்கன் வனஸ்பதி]

௧ ஜயிப்பவளே! ஒஷதிகளின் அதிகாரிணியே! நாங்கள் உன்னைப்பற்றுகிறோம். ஒஷதியே! நான் உன்னை ஒவ்வொருவனுக்கும் ஆயிரம் வீரியமுள்ளவனாகச் செய்துள்ளேன்.

௨ சத்தியமாய் ஜயிப்பதாயும் சபத மழிப்பதாயும், வெல்லுவதாயும் அடிக்கடி திரும்புவதுமான—எல்லா ஒளஷதங்களை—அவை—இக்கேட்டினின்று எங்களைக் காக்கவேண்டுமென, நான் ஒன்று குவித்துள்ளேன்.

௩ சாபத்தால் சபிக்கும் அவள் தீமையை முதன்மையாய் தரிக்குமவள், நமது, சனனத்தை இரஸம் பருக பற்றுமவள் தனது பாலனையே புசிப்பாளாக.

௪ உனக்கு அபக்குவப் பாண்டத்தில் எதனைச் செய்திருந்தாலும், சிகப்பு நீலத்திலே அவர்கள் எதனைச் செய்திருந்தாலும், அபக்குவ மாமிஸத்தில் அவர்கள் என்ன செய்திருந்தாலும், அச்செயலாலேயே அச்சீச் செய்பவர்களை வெல்.

௫ தூர்ஸ்வப்பனம் துன்மார்க்க சீவனம் அரக்கர்,

---

௧௧அ கருத்து—வருணனது மகிமை.

இராக்கதர் பிசினுறி துற்பெயர்களுள்ள வர்கள் துர்வசனமுள்ளவர்களான அனைவரையும் நாங்கள் எங்களிடமிருந்து நீக்குகிறோம்.

௬ பசியினுல் சாவு தாகமரணம் பசுவின்மை பாலரின்மை—இந்த அனைத்தையும் நாங்கள், அபாமார்க்கனே[1] ! உன்னுல் நீக்குகிறோம்.

எ தாக மரணம், பசி மரணம் அப்படியே இந்திரிய தோல்வியான அனைத்தையும் நாங்கள், அபாமார்க்கனே ! உன்னுல் நீக்குகிறோம்.

அ அபாமார்க்கன் எல்லா ஓஷதிகளின் ஒரே அதிகாரி. அவனுல் உன்னிலானதை நாங்கள் நீக்குகிறோம். அப்பால் நீ நோயன்னியில் சலனமாகவும்.

[சு. கஎ. க—அ]

கஉ0 புன்செயல் [சுக்கிரன்—அபமார்க்கன்—வனஸ்பதி]

க சூரியனேடு ஸமமாகும் சோதியை, இரவு பகலுடன் பொருத்தஞ் செய்துள்ளது. நான் சத்தியத்தை சார்புக்குச் செய்கிறேன்—புன்மை—புரிபவர்கள் இரஸமன்னியிலாவார்களாக.

உ தேவர்களே ! எவன்—புன்மைச்—செயலைச் செய்து அறியாதவனது வீட்டில் நாசமாக்குகிருனே, அது தாயை ஊட்டவரும் கன்றைபோல் திரும்பி அவனையே பற்றட்டும்.

ந எவன் அப்க்குவ பாண்டத்தில் புன்மை செய்து அதனுல் அந்நியனைக் கொல்ல விரும்புகிருனே அது எரிக்கப்படுங்கால் வெகுபல கற்களாக படேரென்று வெடிக்கும்.

ச நூறு நிலயங்களுள்ளவனே ! நீ அவர்களை கண்டங்க

1 ஒரு மூலிகையின் பெயர்.

 கருத்து—அபாமார்க்கனை அறி.

ளற்றும் சிசை சூனியர்களாகவும்—கீழே—சாய். பிரியைப் பிரியனுக்குப்போல்—புன்—செயலைச் செய்பவனுக்கு திரும்பச் செய்.
ரு நான் இந்த ஓஷதியால் அவர்களது நிலத்தில் கோக்களில் அல்லது உனது புருஷர்களில் செய்துள்ள எல்லாத் துற்செயல்களையுந் நாசஞ்செய்துள்ளேன்.
சா புன்மை—செய்தவன் செய்ய முடியவில்லை. அவன்—தன்—காலையும் விரலையும் நொருக்கியுள்ளான். அவன் எங்களுக்கு மங்களமானதைச் செய்துள்ளான். ஆனால் அவனுக்கு தகனத்தைச் செய்துள்ளான்.
எ அபாமார்க்கன் க்ஷேத்திரியத்தையும் எச்சபதத்தையும் நீக்குவானாக. அபாமார்க்கன் எல்லா யாதுதானிகளையும் தீமைகளையும் தூரமாக்குவானாக.
அ அபாமார்க்கனே! உன்னால் நாங்கள் எல்லா யாதுதானிகளையும் தூரஞ்செய்து கொடுமைகளையும் நீக்கி நாங்கள் அந்த அனைத்தையும் நாசஞ் செய்கிறோம்.

[ச. கஅ. க—அ]

கஉக எதிரி பங்கம் [சுக்கிரன்—அபாமார்க்கன் வனஸ்பதி]
க நீ சிலருடன் பந்துத்வஞ் செய்கிறாய், மற்றவர்களுடன் செய்வதில்லை. வர்ஷாகாலத்தின் நாணலைப் போல்—புன்மை—செய்பவனது பிரசையைப் பிரித்துவிடு.
உ நீ பிராமணனாலும் கண்வ நார்ஷதனாலும் நன்கு அமர்த்தப்பட்டுள்ளாய். நீ திவ்யமான சேனை போல் செல்லுகிறாய். ஓஷதியே நீ செல்லுமிடத்தில் அச்சமில்லை.
ந சோதியுடன் போல் ஒளிவீசி நீ ஓஷதிகளின் தலைமைக்குச் செல்லுகிறாய். பக்குவமாகாத—மனிதரது—இரட்சகன் நீ. நீயே சத்ரு—ஸம்ஹாரான்.

---

கஉ0 கருத்து—ஓஷதியால் நோய் நீங்கும்.

ச தேவர்கள் முதன்மையாய் உன்னால் அசுரர்களை நீங்குஞ் சமயத்தினின்று ஓஷதியே! நீ அபாமார்க்கனாய்த் தோன்றியுள்ளாய்.
ரு நீ நூறு சாகைகளுடன் பிளப்பவன். பிளப்பவன் என்பது உன் பிதாவின் நாமமாகும். எங்களை அடிமையாக்க விரும்புபவனை எதிர்த்துப் பிள.
சு அஸத்து புவியினின்றே தோன்றும். அது விரிந்து விசாலமான சோதி செல்லும். அது அதிதாபஞ்செய்து அங்கிருந்து—அவனிடமே—திரும்புக.
எ நீ திரும்புபவதர்க்கே வந்துள்ளாய். நீ எதிர்ப்பயன். நீ என்னிடமிருந்து எல்லா சபதங்களையு மழி: பயங்கரமான ஆயுதத்தைத் தூரமாக்கு.
அ நூறுகளுடன் என்னை எங்கும் பாலனஞ்செய்: ஆயிரங்களுடன் என்னை இரட்சி. ஓஷதிகளின் பதியே: உக்கிரனை இந்திரன் ஒஜஸின் குவியலை—யளிப்பானாக.

[சு. கக. க—அ.]

கஉஉ ஓஷதி [மாத்துரு நாமன்—மாத்துரு நாமன்]
க அவன்[1] இங்கு பார்க்கிறான்: அவன் பின் பார்க்கிறான்: அவன் தூரம் பார்க்கிறான்: அவன் பார்க்கிறான். சோதியை வானத்தை அப்பால் புவியை எல்லாவற்றையும் தேவியே அவன் பார்க்கிறான்.
உ திவ்யமான ஓஷதியே! உன்னால் எல்லாப் பொருள்களையும் முச்சோதிகள் முப்புவிகள் இந்த எல்லா ஆறு பிரதிசைகளையும் நான் பார்ப்பேனாக.
ந அத் திவ்ய சுபர்ணனது கண்மணியான நீ, களைப்

---

1 சதாமலர் என்னும் மூலிகை, எப்போதும் விழிப்புள்ள அறிஞனையுங் குறிக்கும்.

கஉக கருத்து—அபாமார்க்கத்தால் நோய்களை யகற்று.

படையும் மணப்பெண் சயனத்தைப் போல், இங்கு புவியில் ஏறியுள்ளாய்.

ச ஆயிரங் கண்களுள்ள தேவன் எனது வலது கையில் அதை வைப்பானாக: நான் அதனால் நான் சூத்திரனையும் ஆரியனையும் அனைவரையுங் காண்கிறேன்.

ரு உன்—ரூபங்களை பிரகாசமாக்கு: உனது ஆத்மாவை மறைத்துக் கொள்ளாதே; அப்பால் ஆயிரங் கண்ணுள்ளவனே! கிமீதினிகளை எதிர் நோக்கு.

சு யாது தானர்களை நான் பார்க்கும்படி செய்: யாது தானிகளை தரிசனமாக்கு: எல்லாப் பிசாசர்களையும் புலனாக்கு; ஓஷதியே! இந்த—நினைவுடன்—நான் உன்னைப் பற்றுகிறேன்.

எ நீ கசியபனது கண். நான்கு கண்களுள்ள நாயின்—கண். நிர்மலாகாசத்தில் சரியும் சூரியனைப்போல் நீ பிசாசனை பிரகாசமாக்கு.

அ நான் அவனது நிலயத்தினின்று யாதுதானனை கிமீதினனை—புறத்தில்—இழுத்துள்ளேன். நான் அதனால் சூத்திரனையும் ஆரியனையும் ஒவ்வொருவனையும் பார்க்கிறேன்.

கூ வானத்தில் பறந்து சோதியின் குறுக்கே சரிபவனாகி புவியை நாதனாய் எண்ணும் பிசாசத்தை நீ புலனாக்கு

[ச. உ0. க—கூ.]

கஉசு பசு [பிரமன்—கோ தேவதைகள்]

க பசுக்கள் வந்துள்ளன. அவை மங்களத்தைச் செய்துள்ளன: அவை கோசாலையில் தங்கட்டும். அவை நம்மில் இன்பமாகட்டும்: அவை இங்கு பல ரூபங்களுடன் இந்திரனுக்குப் பல உஷைகளைக் கறந்துகொண்டு பிரஜை மிகுபவையா யிருக்கட்டும்.

உ இந்திரன், யஜிப்பவனுக்கு தானஞ் செய்பவனுக்கு

---

கஉரு கருத்து—எங்கும் கண்டு சதாகாலம் கவனமுடனிரு.

உபதேச மளிக்கின்றான்: இந்திரன் இன்னும் அதிகமாக வே யளிக்கின்றான்; அவனதை அபகரிப்பதில்லை: அவன் செல்வத்தை மேன்மேலும் செழுமையாக்கி, அவன் பின்ன மாகாத நிலயத்தில் நிவ்யர்களை ஸ்தாபனஞ் செய்கிறான்.

ங அவர்கள் நாசமாவதில்லை; எத்திருடனும் அவர் களை—இம்ஸிப்பதில்லை: அவர்களது வழியை எந்த எதி ரியும் எதிர்க்கத் துணிவதில்லை; எவன் இத்தேவர்களை யஜித்து அளிக்கிறானோ—அந்த—கோபதி அவர்களுடன் கூட இணைந்து வெகுகாலம் வசிக்கிறான்.

ச புழுதி எழுப்பும் குதிரைக்காரன் அவர்களை அணு குவதில்லை; அவர்கள் கசாப்புக் களத்துக்கும் செல்வ தில்லை. யக்ஞசீலமான மனிதனது அப்பசுக்கள் விசால மான அபயத்தில் சஞ்சரிக்கும்.

ரு பசுக்கள் ஐசுவரியமாகும், இந்திரன் எனக்குப் பசுக்களை விரும்பியுள்ளான்: பசுக்கள் முதல் ஸோம னது புசிப்பாகும்: சனங்களே! இந்தப் பசுக்களே இந் திரன்; நான் மனம் இருதயத்துடன் இந்திர—னினைவை —விரும்புகிறேன்.

சு பசுக்களே! மெலிந்தவனை புஷ்டியுடனாக்குங்கள், குரூபனை காட்சிக்குச் சுந்தரமா க்குங்கள். வீட்டை மங்களமுடனாக்குங்கள்! மங்கள மொழியுள்ள வர்களே! சபைகளில் உங்கள் வீரம் பெரியதென சொல்லப்படும்.

எ பிரஜை மிகுந்து நற்புற்றரையில் பிரகாசமாகி நற் பானஞ் செய்யுமிடத்தில் சுத்த சலங்களைப் பருகிக் கொண்டு வரும்—உங்களை எத்திருடனும் தீமை புரிபவ னும் ஆதிக்கஞ் செய்யாமலாவார்களாக. ருத்திரனது ஆயுதம் உங்களை நீங்குக.

[ச. உக. க—எ.]

---

கஉக. கருத்து—பசு மஹிமை.

கஉ௪ அரசன் [வசிட்டன் அதர்வன்—இந்திரன்]

க இந்திரனே! எனக்கு இந்த க்ஷத்திரியனை விருத்தியாக்கு: இவனை சனங்களின் ஒரே தலைவனாய் செய்: அவனது எதிரிகளை யெல்லாம் ஒழி; சமர்களில் சிறப்புக்கு அவர்களை அவனுக்குத் தாழ்மை யாக்கு:

உ இவனுக்கு கிராமம் குதிரை பசுக்களில் பாகத்தை யளி: இவனது எதிரியை பாகமற்றாக்கு: இவ்வரசன் க்ஷத்திரர்களின் உச்சியி லாவானாக: இந்திரனே! ஒவ்வொரு எதிரியையும் அவனுக்குக் கீழ் செய்.

ந. இவன் செல்வங்களின் செல்வபதியாவானாக; இந்த அரசன் ஜனத்தின் ஜனபதியாவானாக; இந்திரனே! மேலான வன்மைகளை இவனில் ஸ்தாபி. இவனது எதிரிகளை வன்மை சூனியமாக்கு:

௪ சோதியே புவியே! தகிக்கும் பாலை இரு பசுக்கள் கறப்பனபோல், இனியதை அதிகமாய் இவனுக்குக் அளியுங்கள். இந்த இராஜன் இந்திரனுக்குப் பிரியமாயும் பசு, ஔஷதி பிராணிகளுக்கும் பிரியனாவானாக.

௫ எவனால் மனிதர்கள் ஜயித்து ஜயிக்கப்படாம லாகிறார்களோ, அந்த உயர்வை யளிக்கும் இந்திரனை உனக்கு இணைக்கிறேன். அவன் உங்களை சனத்தின் ஒரே தலைவனாயும் மானிட அரசர்களில் மேன்மையாகவும் செய்வான்.

௬ இராஜாவே நீ உயர்ந்தவன்: உன்னை எதிர்க்கும் பகைவர்களெல்லாம் தாழ்ந்தவர்களே; ஒரே தலைவனாகி இந்திரன் என்னும் நண்பனோடு ஜயித்து எதிர்ப்பவனது போஜனங்களை இங்கு கொண்டு வா.

எ சிங்க தரிசமுடன் நீ—சத்துரு சனங்களைப் புசி: புலிக் காட்சியின் நீ பகைவர்களைக் கொல்லு; ஒரே தலை

வனுகி இந்திரன் என்னும் நண்பனேடு ஜயித்து எதிர்ப்பவனது போஜனங்களை இங்கு கொண்டு வா.

[சு. உஉ. க—எ.]

கஉரு அக்கினி [மிருகரான—வெகு பல தேவர்கள்]

க எவனை மனிதர்கள் பல இடங்களில் எழுச்சியாக்குகிறார்களோ, அந்த முதன்மையான் அதி அறிஞனுமான பஞ்ச சனங்களின் தலைவனான அக்கினியை, நான் மனனஞ் செய்கிறேன்; நாங்கள் எல்லா சனங்களிலும் நுழைந்துள்ள அவனை நாடுகிறோம்; அவன் துன்பத்தினின்றும் எங்களை நீக்குவானாக.

உ ஜாதவேதஸனே! நீ அவியைச் சுமப்பதுபோல், முன் அறிவுடன் யக்ஞத்தை யனுகூலமாக்குவதுபோல்—அப்படியே தேவர்களிடமிருந்து எங்களுக்கு நல்ல மதியைச் சுமந்து வா; அவன் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவானாக.

ந ஒவ்வொரு செயலிலும் ஒவ்வொரு ஜயத்திலும் யுக்தமாக்கப்பட்டு, பங்காளியாயும் நன்கு சுமப்பவனுமான அக்கினியை, அரக்கனழிக்கும் யக்ஞம் பெருக்கும் நெய்யாகுதமாகும் அவனைத், துதிக்கிறேன். அவன் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவானாக.

ச நல்ல சனனமாயும் அதி சிறப்பாயும் அவி சுமப்பவனுயும் ஜாதவேதஸனுயும் வைசுவா நரனுமான அக்கினியை நாங்கள் அழைக்கிறோம். அவன் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவானாக.

ரு எவனது துணையுடன் ரிஷிகள் தங்களது பலத்தை பிரகாசஞ் செய்கிறார்களோ; எவனல் அவர்கள் அசுர மாயைகளினின்று தனிமை யாகிறார்களோ; எவனது

கஉச கருத்து—நீயே அரசனை ஸ்தாபனஞ் செய்.

துணையுடன் இந்திரன் பணிகளை ஜயிக்கிறானோ; அந்த அக்கினி எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவானாக.

சு எவனால் தேவர்கள் அமுதத்தைக் காண்பார்களோ; எவனால் ஓஷதிகளை தேன் நிறைந்தவையாய் செய்கிறார்களோ; எவனால் சுவர்க்கத்தைக் கொண்டு வருகிறார்களோ அவன் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவானாக.

எ எவனது ஆக்ஞையில் இங்கு பிரகாசமாவதெல்லாமுளதோ பிறந்ததும் பிறக்கப்போவதுமுள்ளனவோ அந்த ஒரே அக்கினியைத் துதிக்கிறேன்: நான் மன்றாடி அவனை யழைக்கிறேன். அவன் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவானாக.

[சு உ௯. க—எ]

கஉசு இந்திரன்—[மிருகாரசூக்தம்]

க நாங்கள் இந்திரனைப் போற்றுகிறோம், நாங்கள் எப்பொழுதும் அவனை நினைக்கிறோம். இந்த விருத்திர ஸம்ஹாரனது ஸ்தோமங்கள் என்னை யணுகியுள்ளன; எவன் சுகிருதனாய் யக்ஞசெய்பவனது அழைப்புக்குச் செல்லுகிறானோ அவன் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவானாக.

உ உக்கிரக் கைகளுள்ள எவன் உக்கிர—சத்திருகளை—ஜயிக்கிறானோ—எவன் தானவர்களது பலத்தை உடைக்கிறானோ; எவனால் நதிகளும் பசுக்களும் ஜயிக்கப்படுகின்றனவோ—அவன் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவானாக.

ந எவன் மனிதர்களைப் பூரணமாக்குகிறானோ, விருஷபனோ, சுவர்க்கங் காண்பவனோ; எவனுக்கு யக்ஞ ஸாதனங்கள் எவனது—ஆண்மையைப் பகிரங்கமாக்குகின்றனவோ; ஏழு ஹோத்துருக்களுடனுகும் மதமளிக்கும்

கஉரு கருத்து—அனல் போற்றுதல்.

யக்ஞம் எவனதோ—அவன் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவானாக.

ச பசுக்கள் எருதுகள் விருஷபங்கள் எவனதோ; எவனுக்கு சுவர்க்கங்காணும் சோதிகள் நிலையா-யுள்ளனவோ; எவனுக்குச் சுக்கிரஸோமன்—சுத்தமாகின்றானோ, அவன் பிரமத்தால் அலங்காரமாகி எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவானாக.

ரு ஸோமனை இரஸிப்பவர்கள் எவனது இன்பத்தை நாடுகின்றார்களோ; போரில் அம்புகள் நிறையும் எவனை-மானிடர்கள்—அழைக்கின்றார்களோ, எவனில் கானமும் கடினமும் சாய்கின்றனவோ—அவன் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவானாக.

சு செயலைச் செய்ய எவன் முதல் தோன்றுகிறானோ; எவனது வீரம் முதலில் பிரகாசமாயிற்றோ; எவனால் எறியப்பட்டு, வச்சிராயுதம் அஹியை அடைந்ததோ—அவன் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவானாக.

எ எவன் அடக்கி சமர்களுக்கு சேனைகளை ஒன்றுசேர்த்துச் செல்கிறானோ; எவன் இருவர்களின் புஷ்டிகளை ஒன்று சேர்க்கிறானோ—அந்த—இந்திரனை நான் துதிக்கிறேன், மன்றாடி நான் அவனை அழைக்கிறேன்; அவன் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவானாக.

[ச. உச. க—எ.]

கஉஎ வாயுவும் ஸவிதாவும் [மிருகாரசூக்தம்—ஸவிதா வாயு]

க நாங்கள் வாயு ஸவிதாவின் வலிமைகளை நினைக்கிறோம்: ஆத்மா இணைந்துள்ளதை துணைபுரியும் நீங்கள், விசுவத்தின் அதிவியாபகர்களாகும் நீங்கள், நுழைந்து எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குங்கள்.

---

கஉ-சு கருத்து—துன்ப நீக்கம்.

உ புவியின் விரிவுகளை எண்ணியுள்ள நீங்கள்; எவர்களால் வானத்தில் சோதிமண்டலம் செம்மையாய் வியாபகமாயுள்ளதோ; எவர்களது வளர்ச்சியை வேறு எவனும் அணுகுவதில்லையோ—அத்தகைய—நீங்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குங்கள்.

ந சனங்கள் எவனது விரதத்தில் சாய்கிறார்களோ, அதிசய ஒளியுள்ளவனே! எவனது உதயத்தில்—அவர்கள்—பிரேரிதமாகிறார்களோ, வாயு ஸவிதாக்களான அத்தகைய நீங்கள் புவிகளைப் பாலனஞ் செய்யும் நீங்கள், எங்களைத் துன்பத்தினின்றும் தளர்த்துங்கள்.

ச வாயுவே! ஸவிதாவே! இங்கிருந்து துர்ச்செயலை நீக்குமின், அரக்கர்களையும் சிமிதார்களையும்[1] நீக்குமின்; உறுதியினாலும் உணவினாலும் சனங்களை ஒருமையுடனாக்கும் நீங்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குங்கள்.

ரு ஸவிதாவும் வாயுவும் செல்வத்தை செழுமையை சக்தியை சீலமான சிறப்பை என் சரீரத்தில் ஜனனமாக்குவார்களாக. நீங்கள் க்ஷயம் நீக்கி இங்கு மேன்மையையளியுங்கள்—நீங்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குமின்.

சா ஸவிதாவே! வாயுவே! எங்கள் துணைக்கு நற்புத்தியை—யளியுங்கள்: இன்பம் இனிமையில் சுக மிணங்கச் செய்யும் நீங்கள்; சுந்தரமானதை யளித்து உச்சியினின்றும் இங்கு வாருங்கள்.

எ இருதேவர்களின் நிலயத்தில் உயரிய ஆசிகள் எங்களுக்கு வந்துள்ளன; நான் வாயுதேவ ஸவிதாவை துதிக்கிறேன்; நீங்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குமின்.

[ச. உரு. க—எ.]

---

1 சீறற்றவர்களையும்,

கஉஎ கருத்து—பிரார்த்தனை.

௧௨அ சோதியும் புவியும் [மிருகாரன்—சோதிபுவி]

௧ வானமே ஜோதியே! நான் உங்களை நினைக்கிறேன். நல்ல புஷ்டி யளிப்பவர்களான நீங்கள் ஒரே மனமுள்ளவர்களாகி அபரிமிதமான விரிவுகளை விசாலஞ் செய்துள்ளீர்கள்; நீங்கள் செல்வங்களின் அடியாதாரங்கள். எங்களை நீங்கள் துன்பத்தினின்று நீக்குங்கள்,

௨ நீங்கள் செல்வங்களின் அடியாதாரங்கள். அவற்றால் அதிவிருத்தியாகி திவ்யமாகி அதிசுந்தரமாகி அதி விசாலமாயுள்ள புவியே ஜோதியே எனக்குச் சுகமளிப்பவர்களாகுங்கள்; எங்களைத் துன்பத்தினின்றுநீக்குங்கள்.

௩ நான், தாபமளிக்காதவர்களும் நல்ல தபசுடனுள்ளவர்களும் விரிந்தும் கம்பீரமாயுள்ளவர்களும் கவிகளால் போற்றப்படுவர்களுமான—சோதிப் புவிகளை யழைக்கிறேன். புவியே சோதியே!....நீக்குங்கள்.

௪ அமுதத்தை தரிக்கும் நீங்கள், அவிகளை தாரைகளை மனிதர்களை தரிக்கும் நீங்கள், புவியே ஜோதியே! எங்களுக்குச் சுகமளிப்பவர்களாகுங்கள்: எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குங்கள்.

௫ சிகப்புக்களை தரிக்கும் நீங்கள் வனஸ்பதிகளை தரிக்கும் நீங்கள்; எல்லாப் புவனங்களையும் உங்கள் அகத்தில் யடைந்துள்ள நீங்கள்; புவியே ஜோதியே! எனக்குச் சுகமளிப்பவர்கள்; எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குங்கள்.

௬ இரஸத்தால், நெய்யால் திருப்தி யளிக்கும் நீங்கள், எவர்களன்னியில் எவர்களும் எதையுஞ் செய்யமுடியாதோ—அத்தகைய புவியே ஜோதியே! எனக்குச் சுகமளியுங்கள். எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குங்கள்.

௭ என்னைத் தவிக்கச்செய்யும்—இது—தீமை—யாலானபோதிலும் இது மானிடனால்—செய்யப்பட்டதாகும், தெய்வத்தாலில்லை. நான் புவி சோதியைத் துதிக்கிறேன்;

மன்றும் நான் அவர்களை அழைக்கிறேன்: நீங்கள் எங்களைத் அத் துன்பத்தினின்றும் நீக்குங்கள்.

[ச. உகூ. க—எ.]

கஉக மருத்துக்கள் [மிருகாரன்—நானுதேவர்கள்]

க நான் மருத்துக்களை நினைக்கிறேன்; அவர்கள் என்னில் முழங்குவார்களாக; போரில் இந்தப் பரியை அவர்கள் இரட்சிப்பார்களாக; சுலபமாய்ச் சுவாதீனமாகும் குதிரைகளைப்போல் நான் அவர்களைத் துணைக்கு யழைத்துள்ளேன்; அவர்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவார்களாக.

உ அழியாத சல ஊற்றைத் திறப்பவர்களாயும், ஒஷதிகளில் இரஸத்தைப் பொழியும் பிருசினி மக்கட்களுமான மருத்துக்களை நான் முதன்மையாய் தரிக்கிறேன்; அவர்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவார்களாக.

ந கவிகளே! பசுக்களின் பாலையும் ஒஷதிகளின் இரஸத்தையும் குதிரைகளின் துரிதத்தையும் துரிதஞ் செய்து துணைபுரியும் மருத்துக்களான நீங்கள் எங்களுக்குச் சுகமளிப்பீர்களாக: அவர்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவார்களாக.

ச அவர்கள் சமுத்திரத்தினின்றும் சலங்களை சோதிக்குச் சுமந்து செல்லுகிறார்கள்; சோதியினின்று புவியில் அவர்கள் அவற்றைப் பொழிகிறார்கள். சலங்களுடன் அதிகாரிகளாய் செல்லும் அம்மருத்துக்கள்; எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவார்களாக.

ரு உணவு இரஸத்தாலும் நெய்யாலும் திருப்தியளிக்கும் மருத்துக்கள்; புஷ்டியுடன் வயசைச் சேர்க்கும் அவர்கள்; சலங்களால் அதிகாரிகளாகும் அவர்கள் வர்ஷிக்கச்

---

கஉஅ கருத்து—சோதி புவிப் பிரார்த்தனை.

செய்யும் அவர்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்கு வார்களாக.

௬ மருத்துக்களே! மருத்துக்களால் தேவர்களே! தேவர்களால் இப்பொழுது நான் இத்தன்மையான கஷ்டத்தில் விழுந்திருந்தால் வசுக்களே! அதையழிக்கும் அதிகாரிகள் நீங்கள்: அவர்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவார்களாக.

௭ மருத்துக்களின் சேனை உக்கிரத்தோற்றமுள்ளது. ஜயசீலமென யாரும் அறிந்தது, போர்களில் பயங்கரமானது. நான் மருத்துக்களைத் துதிக்கிறேன். மன்றுடும் நான் அவர்களை யழைக்கிறேன்; அவர்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவார்களாக.

[சு. உ௭. க—௭]

௧௯௦ பவனும் சர்வனும் [மிருகாரன்—பலதேவர்கள்]

௧ பவனே சர்வனே நான் உங்களை நினைக்கிறேன். நீங்கள் அதனை அறியுங்கள்; இங்கு பிரகாசமாவதெல்லாம் உங்கள் ஆக்ஞையிலாகும், நீங்கள் இந்த இரு, நான்கு கால் பிராணிகளை யதிகாரஞ் செய்பவர்கள்; நீங்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குங்கள்.

௨ அருகிலும் தூரத்திலும் உள்ளன பவன் சர்வனவதாகும்; நீங்கள் சரம் சுமப்பவர்களில் சிறந்து எய்பவர்கள்; இந்த இரு கால் நான்குகால் பிராணிகளை யதிகாரஞ் செய்பவர்களுமாவீர்கள்; நீங்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குங்கள்.

௩ நான் ஆயிரங் கண்களுள்ள விருத்திரனழிப்பவர்களை யழைக்கிறேன்; தூரமான புற்றரையுடனுள்ள உக்கிரமானவர்களை நான் துதித்துச்செல்லுகிறேன்; இந்த இரு

௧௨௯ கருத்து—மருத்துக்களுக்குப் பிரார்த்தனை.

கால் நான்குகால் பிராணிகளை யதிகாரஞ் செய்யும் நீங்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குங்கள்.

ச முதன்மையாய் அதிக ஒருமையுடன் நீங்கள் செயலைப் பற்றியுள்ளீர்கள். நீங்கள் சனங்களில் முதற் சின்னங்களை யும் புலனாக்கியுள்ளீர்கள். இந்த இருகால் நான்குகால் பிராணிகளை யதிகாரஞ் செய்யும் நீங்கள் எங்களைத் துன் பத்தினின்றும் நீக்குங்கள்.

ரு எவர்களது வேதனை செய்யும் ஆயுதத்தினின்று தேவர்களும் மனிதர்களும் தப்புவதில்லையோ; எவர்கள் இந்த இருகால் நான்குகால்-பிராணிகளை யதிகாரஞ் செய் கிறார்களோ அத்தகைய நீங்கள் எங்களைத் துன்பத்தினின் றும் நீக்குங்கள்.

சு எவன் தூர்ச்செயல் செய்கிறானோ, மூலத்தை நீக்கு கிறானோ யாதுதானனான அவனில் நீங்கள் வச்கிராயுதத் தை வீசுங்கள். உக்கிரர்களே! இந்த இரு, நான்குகால்— பிராணிகளை—யதிகாரஞ் செய்யும் நீங்கள் எங்களைத் துன் பத்தினின்று நீக்குங்கள்.

எ உக்கிரர்களே: எங்களை அமர்களில் ஆசீர்வதியுங் கள்; கிமீதினனை வச்சிராயுதத்தால் வீசுங்கள்; நான் பவ னையும் சர்வனையும் துதிக்கிறேன்; நான் மன்றாடி—அவர் களை—யழைக்கிறேன்; நீங்கள் எங்களைத் துன்பத்தி னின்று நீக்குங்கள்.

[ச. உஅ. க—எ.]

ககக மித்திரனும் வருணனும் [மிருகாரன்—வெகு பல தேவர்கள்]

க மித்திர வருணனே! சத்தியத்தை விருத்தி செய்ப வர்களான உங்களை நான் மனனஞ் செய்கிறேன்; நீங்கள் —ஒரு சித்தமுள்ளவர்கள், துரோஹஞ் செய்பவர்களைத்

---

கக௦ கருத்து—பவனுக்கும் சர்வனுக்கும் பிரார்த்தனை.

துரத்துபவர்கள்; சமர்களில் சத்தியவானை இரட்சிக்கும் நீங்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குங்கள்.
௨ மித்திர வருணனே—நீங்கள் ஒருமையுடன் துரோகஞ் செய்பவர்களைத் துரத்துங்கள்; சமர்களில் சத்தியவானை இரட்சிக்கும் நீங்கள்; மனிதர் நோக்கி பப்ருவினை-லாகும்—இரஸத்தை யணுகும் நீங்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குங்கள்.
௩ அங்கிரஸன், அகஸ்தியன், ஜமதக்கினியை அத்திரியை இரட்சிக்கும் நீங்கள், கசியபன் வசிஷ்டனை இரட்சிக்கும் நீங்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குங்கள்.
௪ சியாவாசுவனை, வத்தியசிரவனை, புருமீடனை அத்திரியை இரட்சிக்கும், விமதனை ஸப்தவத்திரியைத் துணைபுரியும் மித்திர வருணனே—எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குங்கள்.
௫ பரத்வாஜனை கவிஷ்டிரனை விசுவாமித்திரனை குத்ஸனை இரட்சிக்கும் நீங்கள், மித்திர வருணனே! கட்சிவந்தனை கண்வனை இரட்சிக்கும் நீங்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குங்கள்.
௬ மேதாதிதியை திரிசோகனை உசனகாவ்யனை இரட்சிக்கும் நீங்கள், மித்திர வருணனே! கோதமனை முத்கலனை இரட்சிக்கும் நீங்கள், எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குங்கள்.
௭ நேர்மையற்றுச் செல்பவனை எந்த மித்திர வருணன் நிசவழியாலும் நேர் விடைகளாலும் ஆக்கிரமிக்கிறனோ அத்தகைய-மித்திர வருணனை நான் துதிக்கிறேன்; மன்றுடி நான் அவர்களை யழைக்கிறேன்; நீங்கள் எங்களைத் துன்பத்தினின்று நீக்குங்கள்.

[௪. உக. க—௭.]

---

கஙக கருத்து—மித்திர வருணப் பிரார்த்தனை.

கரு-உ ருத்திரர்களும் வசுக்களும் [அதர்வன்—வாக்தேவத்யம்]

க நான்[1] ருத்திரர் வசுக்களுடன் செல்லுகிறேன். நான் ஆதித்தியர் விசுவே தேவர்களுடன் செல்லுகிறேன்; நான் மித்திர வருணனைத் தரிக்கிறேன். நான் இந்திரனை யும் அக்கினியையும் இரு அசுவினிகளையும் தரிக்கின்றேன்.

உ நான் இராஷ்டிரியை, செல்வங்களின்—செழிப்பைச்—சேர்ப்பவள், யக்ஞர்களில் முதன்மையாய் யறிபவள்; தேவர்கள் என்னைப் பலவகையாய் பகிர்ந்து பல நிலயங்களின் என்னை பற்பலவற்றில் பிரவேசிக்கச் செய்துள்ளார்கள்.

ங தேவர்களுக்கு மனிதர்களுக்கு இன்பமளிப்பதை நான் சொல்லுகிறேன்; எவனை நான் விரும்புகிறேனோ அவனையே நான் உக்கிரமாகச் செய்கிறேன், அவனை பிராமணனாகவும் அவனை ரிஷியாகவும் அவனை அறிஞனையுஞ் செய்கிறேன்.

ச அதிகமாய்க் காண்பவன் ஒவ்வொருவனும், சுவாசிப்பவனும், சொல்வதைச் செவியுறுபவனும், என்னால் உணவைப் புசிக்கிறான்; என்னை அறியாமலுள்ள அவர்கள் என்னில் வசிக்கிறார்கள்; செவி சாய்ப்பவனே செவி கொடு; நான் சிரத்தைக் குரியதை உனக்குச் சொல்லுகிறேன்.

ரு பிரமத் துவேஷி யழிய நான் சரத்துக்கு ருத்திரனுடைய வில்லை வளைக்கிறேன்; நான் சனத்துக்குச் சமரைச் செய்கிறேன்; நான் புவியிலே சோதியிலே நுழைந்துள்ளேன்.

சு நான்—சதிரி—யழிக்கும் ஸோமனைத் தரிக்கிறேன், நான் துவஷ்டாவையும் பூஷணனையும் பகனையும்—தரிக்கிறேன்; நான் அவியளிப்பவனுக்கும் அதி ஆவலுள்ளவ

1 நமது மொழி சொல்லின் ஆரோபம்.

னுக்கும் யஜமானனுக்கும் ஸோமனுக்கும் ஸோமன் பொழிபவனுக்கும் திரவியத்தை அளிக்கிறேன்.

எ நான் இதன் சிரத்தில் பிதாவைப் புலனாக்குகிறேன்; கடல்களில், சலங்களின் அகத்தில், எனது மூலஸ்தானம்; நான் அங்கிருந்து எல்லா புவனங்களுக்கும் விசாலமாகிறேன்; நான் என் சிறப்பால் தூரமாயுள்ள சோதியின் உச்சியையும் பரிசிக்கிறேன்.

அ நானே எல்லா உலகங்களையும் பற்றிக் காற்றைப் போல் வீசுகிறேன்; சோதிக்கப்பால் இப்புவிக்கப்பால்—என் மகிமையால்—இப்படி—வீசுஞ் சத்தியுள்ளவனாயுள்ளேன்.

[ச. ௩௦. க—அ.]

கக௩ மன்யு [பிரமாஸ்கந்தன்—மன்யு]

க மன்யுவே[1]! மருத்துக்களால் சூழ்பவனே! உன்னுடன், மானிடர்கள் ஒன்று சேர்ந்து, துண்டம் துண்டம் செய்து குரோதமாகி ஆத்திரமடைந்து, ஆயுதங்களைக் கூர்மை செய்பவர்களாய் கூரிய சரங்களுள்ள சுடர் ரூபங்களாகி எங்களுடைய புருஷர்கள் முன் செல்வார்களாக.

உ மன்யுவே! சுடரைப்போல் சோதியுடனாகி எதிரிகளை வெல்: சக்திமானே! அழைக்கப்படும் நீ எங்கள் சேனைத் தலைவன்; எதிரிகளை யழித்து அவர்களது பொருளைப் பங்கிடு: பலத்தைப் புலனாக்கித் துவேஷிகளைத் துரத்து.

௩ மன்யுவே! எதிர்ப்பவனை ஜயித்து விடு: துண்டம் துண்டமாக்கி துவம்ஸஞ் செய்து எதிரிகளை யழித்து

---

1 கோபாரோபம்.

கக௨ கருத்து—சோதியைப் பற்று.

முன் செல்: அவர்கள் உனது உக்கிரமான எதிர்ப்பை தடுக்கவில்லை; ஒருவனுய்த் தோன்றுபவனே; நீ அடக்கி அவர்களை உன் வசத்திலாக்கு.

ச பலர்களின் நடுவே நீ ஒருவனே போற்றப்படுபவன். மன்யுவே; நீ ஒவ்வொரு சனத்தையும் சமருக்கும் பக்குவமாக்கு: பிரிவுபடாத பிரகாசனே! நாங்கள் உன்னைத் துணையாக அடைந்து ஜயத்துக்காக கீர்த்தி கோஷத்தைச் செய்கிறோம்.

ரு ஜயஞ்செய்யும் இந்திரனைப்போல் பழைய ஜயவழிகளை முழங்கும் மன்யு இங்கு எங்கள் தலைவன்: சக்திமானே நாங்கள் உங்கள் பிரிய நாமத்தைப் போற்றுகிறோம்; நாங்கள் நீ தோன்றும் ஊற்றை யறிகிறோம்.

சா சரமே! நீ சக்தியுடன் பிறந்து வச்சிராயுதமான நீ அதிபலத்தை வகிக்கிறாய், சிநேகிதனே! மன்யுவே அதிகமா யழைக்கப்படும் நீ பெருஞ் செல்வத்தின் சேர்க்கையில் எங்கள் சங்கற்பமுடன் நீ சேர்.

எ ஒன்று சேரும் இரு கட்சிகளின் செல்வங்களை ஒருமை செய்து வருணனும் மன்யுவும் எங்களுக்கு அளிப்பார்களாக. எதிரிகள் ஜயிக்கப்பட்டு இருதயங்களில் பயம் தரிப்பவர்களாகி மறைந்து விடுவார்களாக.

[அ. ஙக. க—எ.]

கஙச மன்யு [பிரமாஸ்கந்தன்—மன்யு தேவதை]

க மன்யுவே! சரமான வச்சிராயுதமே! உன்னைப் போற்றுபவன் விசுவத்தையும் ஓஜஸையும் தொடர்ச்சியாய் புஷ்டியாக்குகிறன். ஜயிப்பவனுன உனது உதவியுடன் ஜயமளிக்கும் ஜயத்தால் நாங்கள் ஆரியனையும் தாஸனையும் ஜயிப்போம்.

உ மன்யு இந்திரன் மன்யுவே தேவன்; மன்யு ஹோதா,

வருணன், ஜாதவேதஸனுவான்; மானிடர்களது சந்ததிகளான சனங்கள் மன்யுவைத் துதிக்கிறார்கள்; மன்யுவே! தவமுடன் இணைந்து எங்களைப் பாலனஞ்செய்.
ங மன்யுவே நீ பலத்தைவிட பலவானுகையால் நீ எதிர்த்துப் போராடு. தவத்தை நண்பனுயடையும் நீ எதிரிகளை விலக்கித் துவம்ஸஞ்செய்; நீ எதிரிகளை யழிப்பவன், விருத்திரனை நாசஞ்செய்பவன். தாஸர்களைத் தொலைப்பவன், நீ விசுவமான வசுக்களை எங்களுக்குக் கொண்டு வா.
ச மன்யுவே! நீ ஓஜஸை ஜயிப்பவனுயும் சுவயம் பூவாயும் பயங்கரனுயும் எதிரி ஜயிப்பவனுயும் சகலருக்கும் உரியவனுயும் சிதறடிப்பவனுயும் ஜயசீலனுமாயு மிருப்பதால் சமர்களில் எங்களுக்கு ஓஜஸை யளி.
ரு அதி அறிஞனே! பலத்தினுடனான உனது ஸங்கற்பத்தால் நான் சூனியனுகி வெகுதூரஞ் சென்றுள்ளேன்; ஆதலால் மன்யுவே! உன்னில் சேறுகிறேன்; எங்களுக்கு உனது சுவய காயத்துடன் திடமளிப்பவனுய் வா.
சு இங்கு நான் உனக்கு! நீ எங்களை நோக்கி இங்கு வா! ஸஹரியே, எல்லாமளிப்பவன் நீ: வச்சிராயுதந் தரிக்கும் கோபமே, எங்கள் பக்கம் நோக்கு: நாம் தஸ்யுக்களை அழிப்போம்; நீ உனது நண்பனை யறிவாயோ!
எ அவர்களை எதிர்த்துச் செல், எங்கள் வலது பக்கம் வா: அப்பால் நாம் துவம்சஞ்செய்து பல விருத்திரர்களை மாய்ப்போம்; நான் ஆதரவான முதன்மையான இனிய—பொருளை—உனக்களிக்கிறேன். நாம் இருவரும் தனிமையாய் முதற்பானத்தைப் பருகுவோம்.

[ச. ந௨. க—எ.]

---

கஙந—கஙச கருத்து—கோபமில்லையேல் பெருஞ் செயல்கள் செய்ய இயலாது.

கருரு அக்கினி [பிரமன்—பாபநாசனே அக்கினி]

க அக்கினியே! எங்களது இழிவை எரித்து எங்களுக்குச் செல்வத்தைப் பிரகாசமாக்கு: எங்களது கயத்தை எரித்துவிடு.

உ நல்ல நிலங்களுக்கும் நல்ல கிரகங்களுக்கும் செல்வங்களுக்கும் நாங்கள் யஜிக்கிறோம்; எங்களது கயத்தைக் கரித்து விடு.

ந எங்களது அறிஞர்கள் ஓங்கவும், அவன் உச்சனுவுமாவதற்கு எங்கள் கயத்தைக் கரித்துவிடு.

ச அக்கினியே! உனது அறிஞர்கள்; தோன்றுவதர்க்கும்—நாங்கள் உனக்காக சந்ததியுடன் பெருகுவதர்க்கும் எங்களது கயத்தைக் கரித்துவிடு.

ரு ஜயசீலமான உனது சோதிகள் எங்கும் செல்லுங்கால் எங்களது கயத்தை நீ கரித்துவிடு.

சு ஏனெனில் நீயே எங்குங் காண்பவன்; நீயே எங்கும் சூழ்பவன். எங்களது கயத்தைக் கரித்து விடு.

எ எங்கும் காண்பவனே! எங்கள் துவேஷிகளை—படகில்போல் நாங்கள் கடந்து செல்ல எங்களது கயத்தை கரித்து விடு.

அ க்ஷேமத்துக்கு எங்களைப் படகினுல் நதியைப்போல் கடத்து, எங்களது கயத்தைக் கரித்துவிடு.

[அ. நந. க—அ.]

கருசு ஓதனம் [அதர்வன்—பிரமாஸ்யௌதனம்]

க இதன் தலை பிரமம், இதன் முதுகு பிருஹத்து[1]. ஓதனத்தின்[2] உதரம் வாமதேவ்யம். இதன் முகம் சத்தியம், தவத்தினின்று தோன்றுவது விஷ்டாரி[3] யக்ஞம்.[4]

1 பெரியதாகும். 2 உணவு. உணவுபோலாகும் உலக நாயகனேயுங் குறிக்கும் ஒரு மறை மொழி. 3 விரிந்த 4 செயல்.

கருரு கருத்து—அனலால் அல்லலை அழித்து விடு.

உ எலும்பற்று புனிதமாகி பவித்திரத்தால் சுத்தமாகி சோதியாயுள்ள அவர்கள் சோதி யுலகத்தை அடைகிறார்கள்; ஜாதவேதஸன் அவர்களது மூலாங்கத்தை எரிப்பதில்லை; சுவர்க்க உலகத்தில் அவர்களுக்கு அநேக ஸ்திரீகளுண்டு.

ங விஷ்டாரி ஓதனத்தை பக்குவஞ் செய்பவர்களிலே எப்பொழுதும் பாழ் பற்றுவதில்லை; அவன் இயமனுடன் வசித்து தேவர்களுக்குச் செல்லுகிறான், அவன் ஸோமபானஞ்செய்யும் கந்தர்வர்களுடன் இன்பமாகிறான்.

ச எவர்கள் விஷ்டாரியமான ஓதனத்தைப் பக்குவஞ் செய்கின்றார்களோ இயமன் அவர்களது இரேதஸை பறிப்பதில்லை; அவன் இரதமுள்ளவனாகி இரத வழியில் செல்லுகிறான்; சிறகுள்ளவனாகி சோதிக்கப்பாலும் நன்கு செல்லுகிறான்.

ரு இது விசாலமானது. யக்ஞங்களில் அதியுத்தமபயன் விஷ்டாரியை பக்குவஞ் செய்பவன் ஜோதியைப் பிரவேசிப்பான், குமிழுவுள்ள கமலம்[1] விசத்தை[1] சாலுகத்தை[1] சபகத்தை[1] முலாலியை[1] விசாலமாக்கும். இந்த தாரைகளெல்லாம் சுவர்க்கலோகத்தில் இனிமையாய் பொழிந்து கொண்டு உனக்குப் பாய்க: பூரணமான புஷ்கரிணிகள் உன்னை யணுகுக.

சா நெய் உதரங்களுடன் தேன்கரை யுள்ளவர்களாய் ஸ்ரோதகங்களை[2] யுடையவர்களாய், பால் சலம் தயிரால் பூரணமாகி இந்த தாரைகள் எல்லாம் சுவர்க்கலோகத்தில் இனிமையாய்ப் பொழிந்து உனக்குப் பாய்க. பூரணமான புஷ்கரிணிகள் உன்னை அணுகுக.

எ நான் நான்கு நான்கான நான்கு கும்பங்களை பால்

1 நீர்மலர்களை 2 சுத்த சலங்களை.

சலம் நுயிர்களால் பூரணசெய்து அளிக்கிறேன்; இந்த தாரைகளெல்லாம் ப ணுகுக.

அ நான் விஷ்டாரியமாயும் உலகஞ் ஜயிப்பதாயும் சுவர்க்கமாயுமுள்ள இந்த ஓதனத்தை பிராமணர்களில் வைக்கிறேன்; சுவதாவுடன் பெருகி இது நஷ்டமாக வேண்டாம்; அது என் விருப்பத்தைக் கறக்கும் விசுவரூப மான பசுவாகுக.

[சு. ந.சு. க—அ.]

கநஎ ஓங்கும் ஓதனம் [பிரஜாபதி—மிருத்யோதிக் கிரமணன்]

க பிரஜாபதி பிரமத்துக்கு தவத்தால் ருதத்தின் முதல் தோன்றும் எந்த ஓதனத்தைப் பக்குவஞ்செய் தானே எது உலகங்களின் அதி தாரகாமா யுள்ளதோ எது தீமை புரிவதில்லையோ அந்த ஓதனத்தால் நான் மிருத்யுவைக் கடப்பேனுக.

உ புவனஞ் செய்பவர்கள் எதனுல் மரணத்தைக்கடக் கிறார்களோ; எதனை தவத்தாலும் உழைப்பாலும் காண் கிறார்களோ எதனைப் பூர்வ பிரமன் பிரமத்துக்குப் பக்கு வஞ் செய்துள்ளானே அந்த ஓதனத்தால் நான் மிருத்யு வைக் கடப்பேனுக.

ந விசுவ புஷ்டியளிக்கும் புவியை எது தாங்குகின் றதோ; எது வானத்தை இரஸத்தால் நிறைக்கின்றதோ; எது உயரமாகி மகிமையினுல் ஜோதியை ஸ்தாபிக்கின்ற தோ, அந்த ஓதனத்தால் நான் மிருத்யுவைக் கடப்பேனுக.

சு எதனிடமிருந்து ந௦, பற்களுள்ள மாதங்கள் செய் யப்பட்டுள்ளனவோ; கஉ, பற்களுள்ள வருடம் செய்யப் பட்டுள்ளனவோ; சுற்றும் நாட்களும் இரவுகளும் எதனை பற்றுவன இல்லையோ அந்த ஓதனத்தால் நான் மிருத்யு வைக் கடப்பேனுக.

---

கநசு கருத்து—ஓதன மகிமை.

ரு எது பிராமண மளிப்பதாகி பிராமண மளிப்பவற்றைத் தரித்துள்ளதோ, எதற்கு நெய்மிகும் உலகங்கள் பாய்கின்றனவோ; சோதி மிகும் திசைகள் எல்லாம் எதனதோ அந்த ஓதனத்தால் மிருத்யுவை நான் கடப்பேனாக.

சு எதன் பக்குவத்தினின்று அமுதம் புலனாகின்றதோ: எது காயத்திரியின் அதிபதியாகுமோ; விசுவரூபங்கள் எதில் வைக்கப்பட்டுள்ளனவோ—அந்த ஓதனத்தால் நான் மிருத்யுவைக் கடப்பேனாக.

எ நான் துவேஷியையும் தேவ தூஷணனையும் அழிக்கிறேன். எனது சத்துருக்கள் தூரத்தப்படட்டும்; நான் விசுவஞ் ஜயிக்கும் பிரம ஓதனத்தை பக்குவமாக்குகிறேன். தேவர்கள் சிரத்தைமிகும் என்னைச் செவியுறுவார்கள்.

[சு. கரு. க—எ]

கஙஅ துட்ட சம்ஹாரம் [சாதனன்—சத்தி யௌஜா அக்கினி]

க. சத்திய ஓஜஸுள்ள அக்கினியான விருஷப வைசுவானரன் அவர்களை அடியோடெரிப்பானாக; எங்களை நிந்தித்து எங்களுக்கு இம்சை செய்ய நாடும் எவனையும் எங்களுக்கு விரோதமாயுள்ள எவனையும் எரிப்பானாக.

உ. இம்சை யாகாமல் எங்களுக்கு இம்ஸிக்க விரும்பும் எவனையும்; இம்சையிலாகி, எங்களுக்கு இம்சை செய்ய விரும்புபவனையும் நான் வைசவாநரனின் இரு தந்தங்களின் நடுவே வைக்கிறேன்.

ங. சமரில் வேட்டையாடுபவர்களையும் பிரதி கோஷத்திலும் அமாவாஸையிலும்—கலகஞ் செய்பவர்களையும் மாமிஸம் புசித்து இதரர்களை இம்ஸிக்க விரும்புபவர்களையெல்லாம் நான் பலத்தால் ஜயிக்கிறேன்.

---

கஙஎ. கருத்து—மரணந் தாண்டு.

ச. நான் பலத்தால் பிசாசர்களை ஜயிக்கிறேன்; நான் அவர்கள் திரவியத்தைப் பற்றுகிறேன்; நான் எல்லாத் துன்பஞ் செய்பவர்களையும் அழிக்கிறேன்; என் ஸங்கற்பம் ஜயமுடனாகட்டும்.

ரு. அவனோடு துரிதமாகுந் தேவர்கள் சூரியனது சடிதையையும் அளக்கிறார்கள். நதிகளிலும் மலைகளிலுமுள்ள பசுக்களுடன்—அவனது சக்தியால் துட்டர்களைக் கண்டுள்ளேன்.

சு. இடையர்களைப் புலிபோல நான் பிசாசங்களை தவிக்கச் செய்கிறேன்; அவர்கள் சிங்கத்தைக் காணும் நாய்களைப்போல் ஒளியுமிடத்தைக் காண்பதில்லை.

எ. எனது இந்த உக்கிரமான வன்மை எக்கிராமத்தில் நுழைந்தாலுஞ் சரி அங்கு பிசாசங்கள் நாசமாகும்; அங்கு—அவர்கள் தீமை செய்ய இயலுவதில்லை.

அ. நான் பிசாசங்களுடன் இருக்க இயலாது; திருடர்களுடனும் வனஞ் சுற்றுபவர்களோடும் இருக்க இயலாது; நான்நுழையும் கிராமத்தினின்றும் பிசாசங்கள் மறைந்துவிடும்.

கூ. கோஷித்து என்னிடம் கோபஞ் செய்பவர்களை ஈக்கள் யானையைப்போல் மானிடனில் சிறிய பூச்சியைப் போல, இடையூறு செய்பவர்களாய் எண்ணுகிறேன்.

க0. தடை வாரால் துரகத்தைப்போல், நிர்ருதி அவனைத் தடுப்பாளாக; என்னில் கோபமாகும் அறிவிலி பாசத்தினின்று விடுதலை யாவதில்லை.

[அ. ருசு. க—க0.]

ககஅ. சோரார் நாசம்—[பாதராயணீ - அஜசிருங்கி அப்சரஸன்]

க. ஓஷதியே! பூர்வத்தில் உன்னால் அதர்வர்கள் அரக்

ககஅ கருத்து—அதமனழி.

கர்களை அழித்தார்கள், உன்னால் கசியபன் அழித்தான்; உன்னால் கண்வனும் அகஸ்தியர்களும்—அழித்தார்கள்.

உ. நாங்கள் உன்னால் அப்ஸரஸர்களையும் கந்தர்வர்களையும் நீக்குகிறோம்; அஜசிருங்கனே! அரக்கனைத் துரத்து; உன் கந்தத்தால் எல்லோரையும் நாசமாக்கு.

ஙா. அப்ஸரஸர்கள் முழக்கஞ் செய்து, சலங்களின் அதர வீச்சுத் தாரைக்கு செல்வார்களாக. குக்குலூ, பீலே, நலதீ, ஔக்ஷ கந்தி, பிரமந்திரை உங்களை கண்டுபிடித்து விட்டார்கள்—இனி—அப்ஸரஸக்களே! நீங்கள் சென்று விடுங்கள்.

ச. எங்கு சிகரங்களுடன் அசுவத்தங்களும் நியக்ரோதங்களும் பெரிய மரங்களுமுண்டோ அங்கு அப்ஸரஸர்களே! நீங்கள் சென்றுவிடுங்கள்; உங்களைக் கண்டுபிடித்து விட்டார்கள்.

ரு. வெண்மையும் பசுமையுமான உங்கள் வீச்சுகள் எங்கு—உண்டோ—எங்கு தாளங்களும் கர்கயங்களும்—வீணைகளும்—இசைந்து முழங்குகின்றனவோ அங்கு அப்ஸரஸர்களே! நீங்கள் சென்று விடுங்கள். உங்களைக் கண்டு பிடித்து விட்டார்கள்.

சா. ஓஷதிகளின் செடிகொடிகளின் வீரியம் மிகும் இவன் இங்கு வந்துள்ளான்; அஜக்கொம்பனும் கூறிய கொம்புடனுகும் அராடகியும் வெளியில்[1] தள்ளுவார்களாக.

எ. இங்கு நடனஞ் செய்யும் சிகரமுள்ள அப்ஸரஸதலைவனது விருஷணத்தை நான் பிளக்கிறேன், நான்—அவனது—மூலாங்கத்தை நாசஞ் செய்கிறேன்.

அ. இந்திரனது ஆயுதங்கள் அயக் கருவிகளான நூறு உண்டு. அச் சமளிப்பவை அவை; அவற்றால் அவன்

---

1 ரோகத்தை புறத்தில் ஔஷகத்தின் பெயர்.

அவி புசிக்கும் அவகந் [1]தின்னும் கந்தர்வர்களைக் கொல்லு வாளுக.

கூ இந்திரனது ஆயுதங்கள் நூறு. அவை அச்சமானவை; அவன் அவற்றால் அவி புசித்து அவகந் தின்னும் கந்தர் வர்களைக் கொல்லுவானுக.

க0 ஒஷதியே! அவகம் தின்று சுட்டு சலங்களில் சோதி செய்யும் எல்லாப்பிசாசங்களை நீ வென்று கொன்று விடு.

கக நாயைப்போலும் குரங்கைப்போலும் பார்ப்ப தர்க்குப் பிரியமுள்ள ஒரு குமாரனைப் போலாகி கந்தருவன் ஸ்திரீகளைப் பற்றுகிறுன்; நாங்கள் அவனை எங்களது வீரியமிகும் பிரமத்தால் இங்கிருந்து நாசஞ் செய்கிறோம்.

கஉ அப்ஸரஸர்கள் உங்கள் மனைவிகளாவார்கள். கந் தர்வர்களே! நீங்கள் அவர்களது புருஷர்கள்; அமுதர் களே! நீங்கள் ஓடிவிடுங்கள்; மனிதர்களைப் பற்றவேண் டாம்.

[சு. கூ௦. க—கஉ]

கசுO அப்ஸரஸர் [பார்தராயணி அப்ஸர கிலாஹர்கள்]

க மலர்பவளாயும் எல்லாம் ஜயிப்பவளாயும் சிறந்து விளையாடுபவளாய் கிருகிப்பதில்[2] செயல்களை செய்பவளு மான அப்ஸரஸை நான் இங்கு அழைக்கிறேன்.

உ. விவாகஞ் செய்பவளும் ஒன்று குவிப்பவளும் சிறப் பாய் விளையாடுபவளுமான அப்ஸரஸை கிரகிப்பதில் செயல்களைப் பற்றுபவளுமான அப்ஸரஸை நான் இங்கு அழைக்கிறேன்.

ங நற்செயல்களுடன் நடனஞ் செய்பவளாயும் கிரு

---

1 அசுசி 2 சூதாட்டத்திலே.

கஙக கருத்து—கனிட்டர்களான கந்தர்வர்களை நீக்குங்கள்.

ஹிப்பதில் நலச் செயலை தனக்கு சேர்த்துக் கொள்பவளு மான அவள், செயல்களை நமக்கு கிரகிப்பவளாய் இலா பத்தை மாயையால் யடைவாளாக. அவள்பால் மிருபவ ளாய் எங்களிடம் வருவாளாக; அவள் இச் செல்வங் களை எங்களிடமிருந்து ஜயிக்காம லாவாளாக.

ச இந்திரியங்களில் இன்ப மடைபவளாயும், சோகம் கோபத்தைத் தரிப்பவளாயும் இன்பமாகி இன்ப மளிப் பவளுமான அப்ஸரஸை நான் இங்கு அழைக்கிறேன்.

ரு எவர்கள் சூரிய இரசிமிகளை அநுசரித்துச் சென் றுள்ளார்களோ அல்லது அதன் சோதியால் தொடர்ந் துள்ளார்களோ எவர்களது சக்தியுள்ள விருஷபம் வெகு தூரத்தினின்று இரட்சித்து துரிதமாய் எல்லா உலகங் களையும் சுற்றிச் செல்லுகின்றதோ அவர்கள் குவியும் அவன் இந்த ஓமத்தை சுவீகரித்து வானத்துடன் இணைந்து எங்களிடம் வருவானாக.

சு வலிமை யுள்ளவனே! வானத்தோடு இணைந்து இங்கு கர்க்கியமான பசுவைத் துணை செய்: வன்மையுள்ள வனே! இங்கு உனக்கு வெகு பல துளிகளுண்டு; இங்கு வா! இது உனது கர்க்கியாகும்; இங்கு உன் மனமாகட் டும்.

எ வலிமை யுள்ளவனே: வானத்துடன் சேர்ந்து கர்கிக்[1] கன்றை இங்கு நீ காக்கவும், வன்மை யுள்ளவனே இது உனது புல்லாகும், இது உனது கோசாலையாகும்; இங்கு நாங்கள் கன்றைக் கட்டுகிறோம்; எப்படி நாம முண்டோ அப்படி உங்களை சுவாதீனஞ் செய்கிறோம்; சுவாஹா!

[ச. கஅ. க—எ]

---

[1] சோதிமயமான.

கச0 கருத்து—அப்சரஸின் பல உண்மைகள்.

கசுக துதி [அங்கிரஸன்—ஸம்நதி தேவதை]

க அவர்கள் அக்கினிக்கு புவியில் வணக்கமளித்தார்கள், அவன் வளர்ந்தான்; அவர்கள் புவியில் அக்கினிக்கு வணக்கமளித்ததுபோல் அபிவந்தனங்கள் எனக்கு வணக்கமளிக்கட்டும்.

உ புவி பசு; அவளது கன்று அக்கினி; அவள் அக்கினி என்னும் கன்றுடன் எனக்கு உணவை உறுதியை, விருப்பத்தை முதன்மையாய் ஆயுளை பிரஜையை, பொருளை கறப்பாளாக. சுவாஹா!

ங அவர்கள் வானத்தில் வாயுவுக்கு வணக்கமளித்தார்கள்; அவன் வளர்ந்தான்; அவர்கள் வானத்தில் வாயுவுக்கு வணக்கமளிப்பதுபோல அபிவந்தனங்கள் எனக்கு வணக்கமளிக்கட்டும்.

ச வானம் பசு; கன்று வாயு; அவள் வாயுவென்னும் கன்றுடன் எனக்கு உணவை உறுதியைகாமத்தை முதல் ஆயுளை பிரஜையை பொருளைக் கறப்பாளாக; சுவாஹா!

ரு அவர்கள் வணக்கத்தை சோதியில் ஆதித்தியனுக்கு அளித்தார்கள்; அவன் விருத்தியானான். அவர்கள் ஜோதியில் ஆதித்தியனுக்கு வணக்கமளிப்பதுபோல் அபிவந்தனங்கள் எனக்கு வந்தனத்தை யளிக்கட்டும்.

சு ஜோதி பசு; அவளது கன்று ஆதித்தியன், ஆதித்தியன் என்னும் கன்றுடன் அவள் எனக்கு உணவை உறுதியை காமத்தை முதல் ஆயுளை பிரஜையை பொருளைக் கறப்பாளாக; சுவாஹா!

எ அவர்கள் திசைகளில் சந்திரனுக்கு வணக்கத்தை யளித்தார்கள், அவன் வளர்ந்தான்; அவர்கள் திசைகளில் சந்திரனுக்கு வணக்கமளிப்பதுபோல் அபிவந்தனங்கள் எனக்கு வணக்கமளிக்கட்டும்.

அ திசைகள் பசுக்கள்; அவர்களது கன்று சந்திரன்; அவர்கள் சந்திரர் என்னும் கன்றுடன் எனக்கு உணவை உறுதியை காமத்தை முதல் ஆயுசை பிரஜையை பொருளைக் கறப்பாளாக; சுவாஹா!

கூ அக்கினி அனலில் நுழைந்து அசைகிறான்; ரிஷிகளின் மகனான அவன் புன்மொழியினின்று காப்பவன்; நான் வணக்கத்தை வணக்கச் செயலுடன் உனக் களிக்கிறேன்; நாம் தேவ பாகத்தை பொய் செய்யாம லிருப்போமாக.

க0 தேவனே! ஜாத வேதஸனே! எல்லா வழிகளையு மறிபவனே! உனக்கு ஏழு வாய்களாகும்; நான் இருதயத்தால் புனிதமாகி மனத்துடன் அவற்றிற்கு யளிக்கிறேன்; நீ அவியை யனுபவி.

[சு. கூ. க—க0]

கசஉ பகை யழி [சுக்கிரன்—வெகு பல தேவர்]

க ஜாதவேதஸனே! பூர்வத்தில் ஆஹுதி செய்பவர்களும் கீழ்த்திசையினின்று எங்களை எதிர்ப்பவர்களும் அக்கினியை ஆக்கிரமிப்பதால் அவர்கள் தீமையோடாவர்களாக. நான் எதிர்ப்புடன் அவர்களைத் திரும்பச் செய்து அழிக்கிறேன்.

உ ஜாதவேதஸனே! வலது பக்கம் ஆஹுதி செய்பவர்களும் தென் திசையினின்று எங்களைத் துன்பஞ் செய்பவர்களும் யமனை ஆக்கிரமிப்பதால் அவர்கள் கஷ்டமுடைவார்களாக. நான் எதிர்ப்பால் அவர்களைத் திரும்பச் செய்து யழிக்கிறேன்.

ங ஜாத வேதஸனே! பின்புறத்தினின்று ஆஹுதி செய்பவர்களும் மேற்குத்திசையினின்று எங்களுக்குக் கஷ்டமளிப்பவர்களும் வருணனை ஆக்கிரமிப்பதால் அவர்

---

கசக. கருத்து—பிரபஞ்ச இரக்சியம்.

கள் துன்பமுடனுவார்களாக. நான் எதிர்ப்பால் அவர்களைத் திரும்பச்செய்து அழிக்கிறேன்.

ச ஜாத வேதஸனே! வடதிசையினின்று ஆஹுதி யளிப்பவர்களும் வடதிசையினின்று எங்களைத் துன்பஞ் செய்பவர்களும் ஸோமனை ஆக்கிரமிப்பதால் அவர்கள் துன்பமுடனுவார்களாக. நான் எதிர்ப்பால் அவர்களைத் திரும்பச்செய்து அழிக்கிறேன்.

ரு ஜாத வேதஸனே! கீழ் இருந்து ஆஹுதி யளிப்பவர்களும் நிலையான திசையினின்று எங்களைத் துன்பஞ் செய்பவர்களும் புவியை ஆக்கிரமிப்பதால் அவர்கள் துன்பமுடனுவார்களாக; நான் எதிர்ப்பால் அவர்களைத் திரும்பச் செய்து அழிக்கிறேன்

சு ஜாத வேதஸனே! வானத்தினின்று ஆஹுதி செய்பவர்களும் நடுத்திசையினின்று எங்களைத் துன்பஞ் செய்பவர்களும் வாயுவை ஆக்கிரமிப்பதால் அவர்கள் துன்பமுடனுவார்களாக; நான் எதிர்ப்பால் அவர்களைத் திரும்பச் செய்து அழிக்கிறேன். எ ஜாத வேதஸனே! உச்சி திசையினின்று ஆஹுதி செய்பவர்களும், உச்சி திசையினின்று எங்களைத் துன்பஞ் செய்பவர்களும் சூரியனை ஆக்கிரமிப்பதால் அவர்கள் துன்பமுடனுவார்களாக; நான் எதிர்ப்பால் அவர்களைத் திரும்பச் செய்து அழிக்கிறேன். அ ஜாத வேதஸனே! திசைகளின் நடுத் திசையினின்று ஆஹுதி செய்பவர்களும், எல்லாத் திசைகளின்று எங்களைத் துன்பஞ் செய்பவர்களும், பிரமத்தை ஆக்கிரமிப்பதால் அவர்கள் துன்பமுடனுவார்களாக; நான் எதிர்ப்பால் அவர்களைத் திரும்பச் செய்து அழிக்கிறேன்.

[ச. சO. க—அ]

ச-வது காண்டம் முற்றிற்று.

---

கசஉ கருத்து—சத்துரு சம்ஹாரஞ் செய்புங்கள்.

கசங திரிதன் [பிருஹத்திவா அதர்வன்—வருணன்]

க எவன் தன்னந்தனி மந்திரத்துடன் அமுதப் பிராணனோடு பெருகி ஸுஜன்மனுய் இம்ஸை யாகாத சுவாசமுடன் தினங்களைப்போல் ஒளி வீசி மூல நிலயத்துக்கு வந்தானே அத்தாரகனுன திரிதன்மூன்றைத்[1] தரித்தான். உ எவன் முதல் தர்மங்களை அடைந்தானே, எவன் பல தேகங்களைச் செய்கின்றனே அந்த அவாவுள்ளவன் முதன்மையாய் மூலஸ்தானத்தில் நுழைந்தவன். அவன் பேசாத மொழியை அறிந்தவன். ங எவன்.[2] உனது சோதிக்கு தன் தேகத்தை தளர்ந்தானே எவனுக்கு பொன் பாய்கின்றதோ, எவனுடைய புருஷர்கள் ஒளி வீசுகின்றார்களோ அங்கு அவனில் இருவர்கள்[3] அமுத நாமங்களைப் பற்றுகின்றார்கள். சீவர்கள் அவனுக்கு வஸ்திரங்களை யளித்தார்கள்.

ச புவியும் சோதியுமான நீங்கள் முதன்மையாய் பழைய அமுதஸ்தானத்தைப் பற்றிய நீங்கள், நா உலறும் வரையால் துதிக்கப்படும் நீங்கள் அன்புமிகும் தாய்மார்களான நீங்கள் சகோதரிக்குச் சக்தி மிகும் புருஷனைக் கொண்டு வாருங்கள்.

ரு விசாலஞ் செல்பவனே! கவியான நான் காவியத்துடன் உனக்கு இப்பெரிய வணக்கத்தைச் செய்கிறேன்: இருவர்களும் இணங்குங்கால் பெரிய இரு இரதசக்கரங்களைப்போல் புவியின்மேல் பெருகுகிறார்கள்.

சு கவிகள் ஏழு எல்லைகளைச் செய்தார்கள்: துன்பமடைந்தவன் இவற்றின் ஒன்றில் சென்றன். ஆயுவின் ஸ்கம்பன் அருகிலுள்ள வாஸத்தில் வழிகளின் பிரிவில் நிலைகளில் நின்றான்.

---

1 மூன்று உலகங்களை. 2 திருதானல். 3 புவியும் சோதியும்.

எ நான் அமுதனாய், ஸ்வீரதனாய், செயல் செய்பவனாய் நிகழ்கிறேன்; காயமும் பிராணனும் ஆத்மாவும் நலமான பசுக்களுடன் அவனை யடைந்துள்ளன. அவி யளிப்பவன் உறுதியுடன் செல்லுங்கால் அங்கு சக்கரன்[1] செல்வத்தை அவனுக்கு அளிக்கிறான்.

அ மகனும் திடனான தந்தையை துதிக்கிறான்; அவர்கள் க்ஷேமத்துக்கு ஜேஷ்டனான சிறப்புடனாகுமவனை யழைக்கிறார்கள்; வருணனே! அவர்கள் இப்பொழுது உன் நிலைகளையெல்லா மறிவார்களாக; அநித்தியமாய் சுற்றுபவனது அதிசய வடிவங்களை நீ செய்.

கூ பாதி பாலினால் நீ பாதி பாலை பூரணமாக்குகிறாய்; அஸுரனே! பாதியால் பலத்தைப் பெருக்குகிறாய்; நாங்கள், அதிதியின் மகனாயும் தரிதனாயும் திட நண்பனுமான வருணனை விருத்திசெய்துள்ளோம்; நாங்கள் அவனுக்கு, கவியால் போற்றப்படும் அதிசய காயங்களை சத்திய மொழியின் சோதியாலே புவியாலே இசைத்துள்ளோம்.

[ரு. க. க—கூ.]

கசச பழைய மர்மன் [அதர்வன்—வருணன்]

க அவனே[2] புவனங்களில் முதன்மையானவன்: அவனிடமிருந்து ஒளிவீசும் ஆண்மையுள்ள உக்கிரன் தோன்றுகிறான்; அவன் சனனமானதும் சத்துருக்களை நாசஞ் செய்கிறான். அப்போது எல்லா நண்பர்களும் அவனை யநுசரித்து இன்பமடைகிறார்கள்.

உ வன்மை மிகும் அவன் வலிமையால் பெருகி எதிரி தாஸனுக்கு திகிலை யளிக்கிறான்; அவன் பிராணன் பிராணனல்லாதவற்றைப் பற்றி—யுள்ளான். போஷிக்கப்

1 இந்திரன். 2 பிரமன். பரமன்.

கசரு கருத்து—மர்மனான வருணன்.

படுமவர்கள் பேரானந்தங்களில் உனது—புகழையே போற்றுகிறார்கள்.

௩ அவர்கள் இருமுறை மும்முறை—உனது—துணைவர்களாகுங்கால் உன்னில் அவர்களுடைய மனோசக்தியை பெருமிதமாய்ச் சேர்க்கிறார்கள். நீ இனிமையால், இனிமையிலும் இனிமையானதைச் சேர்; நீ தேனால் அங்கு உள்ள தேனோடு யுத்தஞ்செய்.

௪ பலம் ஓங்கி பலம் பெருகுபவனே ஒவ்வொரு யுத்தத்திலும் பண்டிதர்கள் பொருள்களை ஜயிக்கும் உன்னையநுசரித்து இன்பமானால் உனது ரதத்தைப் ஸ்தாபனஞ்செய். புன்கதியுள்ள கசோகர்கள் உனக்குத் துன்பஞ்செய்யாமலாவார்களாக.

௫ நாங்கள் சமர்செய்வதர்க்காகும் வெகுபல பொருள்களுக்கு ஆவலாகி உன்னால் சமர்களில் ஜயிக்கவேண்டும்; நான் மொழிகளால் உனது ஆயுதங்களைத் தூண்டுகிறேன்; நான் பிரமத்தால் உனது வலிமைகளைக் கூர்மையாக்குகிறேன்.

௬ நீ துணையுடன் துணையளித்து நீ உயர்ந்த ஸ்தானத்தில் சமான நிலயத்தில் நீ அதை ஸ்தாபனஞ் செய்தாய். அங்கு அசையும் அன்னையை ஸ்தாபனஞ் செய்யுங்கள்; அங்கிருந்து பலவீரச்செயல்களைத் துரிதமாக்குங்கள்.

௭ உச்சனே! வீரனையும் வலியனையும் ஆப்தியர்களின் ஆப்தியனையும்[1] பல வழிகளுமுள்ளவனை நீ பூரணமாய் போற்று; அதிபலமுள்ள அவன் பலமுடன் பார்ப்பானாக; அவன் புவியின் பிரதி பகுதியை ஜயிப்பானாக.

௮ பெருஞ்ஜோதி ஜயிக்கும் பிருஹஸ்பதிவன், இந்த பிரமங்களை, பலத்தை, இந்திரனுக்குச் செய்கிறான்; அவன் சுவராஜனாய் மகத்தான கோசாலையை யரசுபுரிகிறான்;

1 அறிஞர்களிலே அறிஞன்.

துரிதனுன அவன் தவமுள்ளவனுகி விசுவமான அலை களையும்—சுவாதீனஞ் செய்கிருன்.
கூ இப்படி பெரிய பிருஹத்திவனுன அதர்வன்[1] தன் ஆத்மாவை இந்திரனுகவே[2] சொல்லியுள்ளான்; தாய் வளர்க்கும் சகோதரிகளான இரு குற்றமற்றவர்களை[3], மானிடர்கள், துரிதமாக்கி விருத்தி செய்கிருர்கள்.

[ரு. உ. க—கூ]

கசரு பிரார்த்தனை [பிருஹத்திவ அதர்வன்—அக்கினி]
க அக்கினியே! போர்களில் பலம் எனதாகட்டும், நாங் கள் உன்னை எழுப்புவித்து எங்களைப் புஷ்டி செய்துகொள் வோம்; நான்கு திசைகளும் எனக்கு வணங்கட்டும்; நாங்கள் உனது தலைமையிலே எதிரிகளை ஜயிக்கவேண்டும்.
உ அக்கினியே! எங்களது எதிரி கோபத்தைத் திருப் பித் தள்ளி எங்கள் இரட்சகனுன நீ, எங்களை எல்லாப் பக்கங்களிலும் பாலனஞ் செய். எங்களைத் துவேஷிப் பவர்கள் கீழே செல்வார்களாக. அங்கு அவர்களுடைய அறிஞர்களது சித்தம் அதோகதியாகட்டும்.
ந எல்லா தேவர்களும், மருத்துக்கள் இந்திரனுடன் விஷ்ணுவும் அக்கினியும் எனது சமரிலாவார்களாக; விசாலவெளியான வானம் எனதாகட்டும்; காற்று எனது இக்காமத்துக்கு வீசுக.
ச நான் செய்யும் யக்ஞங்கள் எனக்கு யக்ஞத்தைச் செய்க; எனது மனத்தின் சங்கற்பம் சத்தியமா குக; நான் எந்தப் பாபத்திலும் விழாமலாவேனுக; எல்லா தேவர்களும் என்னை இங்கு காப்பார்களாக.

1 பெருஞ் சோதியான கனல். 2 பலம் சக்தியாகவே. 3 சோதி யையும் சகத்தையும்.

கசச கருத்து—சோதி யறிவும் புவியறிவும் வேண்டும்.

ரு தேவர்கள் என்னில் திரவியத்தை யளிப்பார்களாக. என்னில் ஆசிகளா—குக; என்னுடன் தேவ அழைப்—பாகுக; தேவ ஹோதாக்கள் அதை எங்களுக்கு அளிக்கச் செய்வார்களாக; நாங்கள் வீரர் மிகுந்து எங்கள் காயத்தில் துன்பமற்றுகவேண்டும்.

சு ஏழு விசால திவ்யர்களே. நீங்கள் எங்களுக்கு விசாலத்தைச் செய்யுங்கள்; தேவர்களான நீங்கள் எல்லீர்களும் இங்கு இன்பமாகுங்கள்; தீமொழியும் துன்பமும் எங்களைக் காணுமலாகுக; துவேஷமான தீங்கும் எங்களைக் காணுமலாகுக.

எ மூன்று தேவிகளான நீங்கள்[1] எங்களுக்கும் எங்களது பிரஜைக்கும் புஷ்டியையும் பெரும் பாதுகாப்பையுமளியுங்கள்; எங்களாலும் பிரஜையாலும் நாங்கள் நீங்காம லாகவேண்டும்; ஸோம இராஜனே! நாங்கள துவேஷியால் துன்பமற்றுவோமாக.

அ பெரும் உணவுடனுகி, இந்த அழைப்பில் அதிகயழைக்கப்படும் விசால வெளி மஹிஷன்[2] எங்களுக்கு பாதுகாப்பை யளிப்பானுக; துரித குதிரைகளுடனுன நீ எங்கள் பிரஜைக்குச் சுகமளிப்பவனுய் வா; இந்திரனே! எங்களைத் துன்பஞ் செய்யாதே, எங்களை விட்டுவிடாதே.

கூ தாதாவும், விதாதாவும் புவனபதியும் எதிரிகளைக் கொல்லும் தேவ ஸவிதாவும் ஆதித்தியர்களும் ருத்திரர்களும் இரு அசுவினிகளும், தேவர்களும், யஜமானனை நாசத்தினின்றும் காப்பார்களாக.

க0 எங்கள் எதிரிகள் தூரமாவார்களாக; நாங்கள் இந்திரன் அக்கினியுடன் அவர்களை யழிக்கிறோம்; ஜோதி சேரும் ஆதித்தியர்கள், ருத்திரர்கள் எங்களது அதி இராஜனை உக்கிரனுயும் உணர்வுள்ளவனுயுஞ் செய்துள்ளார்கள்.

---

1 இடை, சரஸ்வதி, பாரதி. 2 பெரியவன்.

கக நாங்கள் இங்கு பசு ஜயிப்பவனையும் பொருள் பற்று பவனையும் பரி வெல்லுபவனுமான இந்திரனை வெகு தூரத் தினின்று அழைக்கிறோம்; எங்களது அதி அழைப்பில் அவன் எங்களது இந்த யக்ஞத்தைச் செவியுறுவானாக. துரிதமானக் குதிரைகளுள்ள நீ எங்களது நண்பனல்லவா!

[ரு. ந. க—கச.]

கசசு குஷ்டன் [பிருக் வங்கிரஸன்—யக்ஷ்ம நாசன குஷ்டன்]

க குஷ்டனே![1] சுரமழிக்கும் நீ சுரத்தை நீக்கி ஔஷதிகளில் அதிபலனும் மலைகளில் தோன்றுபவனு மான நீ இங்குவா.

உ ஸுபர்ணம் சுமக்கும் மலையில் தோன்றுபவனை யும், பனிமலையில் பிறப்பவனையுமுள்ள சுரமழிக்கும் குஷ்டத்தை அவர்கள் அறிவதால், அதைப்பற்றிச் செவியுற்றவுடன் செல்வங்களுடன் அதற்குச் சலனமாகி றார்கள்.

ந தேவஸ்தானமான அசுவத்தம் இங்கிருந்து மூன்று வது ஜோதியிலுண்டு: அங்கு தேவர்கள் அமுதக்கண் ணை குஷ்டத்தை அடைந்தார்கள்.

ச சோதியில் பொன் பந்தமுள்ள பொன் கப்பல் சலனமாகும்; அங்கு தேவர்கள் அமுதமலரான குஷ்டத் தை அடைந்தார்கள்.

ரு வழிகள் பொன் மயங்களாகும். துருப்புக்களும் தங் கங்களாகும். பொன் கப்பல்களால் அவர்கள் குஷ்டத் தைக் கொண்டு வந்தார்கள்.

சு குஷ்டமே! இந்த எனது புருஷனை இங்கு கொண்டு

---

1 ஒரு மூலிகையின் பெயர். கடவுளுக்கும் பெயர்.

கசரு கருத்து—எல்லா தேவர்களையும் போற்றி உன் செயலைச் செய்.

வா ! இவனைக் குறையினின்று கழி: இவனை எனக்காக நோயினின்று நீக்கு.

எ நீ தேவர்களினின்று தோன்றுகிறாய் ; நீ ஸோமனின் ஹிதனான நண்பனாவாய் ! எனது பிராணன் அபானன், கண்ணுக்குச் சுக மளி.

அ பனிமலையில் வடதிசையில் தோன்றும் நீ, கீழ்த திசையில் சனத்துக்கு அழைத்துச் செல்லப்படுகிறாய் ; அங்கு அவர்கள் குஷ்டத்தின் உயரிய நாமங்களைப் பகிர்ந்து கொள்ளுகிறார்கள்.

கூ குஷ்டமே நீ உத்தம நாமமுள்ளவன் ; உனது தந்தையும் உத்தம நாமமுள்ளவன் ; நீ எல்லா யக்ஷ்மத்தையும் நீக்கு. நீ சுரத்தை நீக்கு.

க0 தலைநோயின் எதிர்ப்பையும், கண்களின் குறையையும் காய கஷ்டமான அனைத்தையும், திவ்யமாயும் திடமாயுமுள்ள குஷ்டம் நீக்கட்டும்.

[ரு. ச. க.—க0.]

கசஎ ஸிலாசீ [அதர்வன்—இலட்சுமி]

க இரவு உனது தாய், மேகம் உனது பிதா, அரியமான் உனது பிதாமஹன் ; நீ ஸிலாசீ[1] என்னும் நாமமுள்ளவள் ; நீ தேவ சகோதரி.

உ உன்னைப் பருகுபவன் சீவிக்கிறான் ; நீ புருஷனைப் பாலனஞ் செய்கிறாய் ; நீ அனைத்தையும் தாங்குபவள், சனங்களின் மறையும் நிலயமாவாய்.

ந காமமுள்ள கன்னிகையைப்போல் நீ ஒவ்வொரு மரத்திலும் ஏறுகின்றாய் ; நீ ஜயிப்பவள் ; நீ திடமாய் நிலைப்பவள், நீ ஸ்பரணீ[1] என்னும் நாமமுள்ளவள்.

---

1 ஒரு வனஸ்பதி.

கசசு கருத்து—குஷ்டத்தால் நோய் கழியும்.

ச தண்டத்தாலோ, அம்பினாலோ அல்லது சுவாலையாலோ ஏதேனும் புண்ணானால் அதன் பரிஹாரி[1] நீ; இந்தப் புருஷனை நோயினின்றும் நீக்கு.

ரு நீ மங்களமான பிலக்ஷத்தினின்று[2] தோன்றியுள்ளாய், அசுவத்தினின்றும் கதிரத்தினின்றும் தவத்தினின்றும், மங்களமான ஆலமரத்தினின்றும் பர்ணத்தினின்றும் தோன்றுகிறாய்; அருந்ததியே! நீ எங்களிடம் வா.

சு பொன்நிற சௌபாக்கியவதியே! சூரிய நிறமுடன் அதிசய சக்தியுள்ளவளே! நீ இரணத்தைச் சேர். பரிஹாரியே! பரிஹாரம் என்பது உன் பெயர்.

எ நீ பொன்—நிறள், சுபகை, சக்தி மிகுந்தவள், ரோமாங்கமுள்ளவளே; நீ சலங்களின் சகோதரியாவாய். இலாட்சையே! நீ சலங்களின் சகோதரி; காற்று உனது ஆத்மா.

அ உனது பெயர் ஸிலாசீ, அஜப்பழுப்பனே! உனது பிதா கன்னியின் மகன்; யமனது கரு நிறக் குதிரையின் வாயினால் நீ நனைக்கப்பட்டுள்ளாய்.

கூ குதிரை வாயினின்று விழ்ந்து அவள் மரங்களைப் பற்றினாள்; அருந்ததியே! நீ சிறகுள்ள நதியாகி எங்களிடம் வா.

[ரு. ரு. க—கூ]

கசஅ இந்திரனை நாடு [அதர்வன்—வெருபல தேவர்கள்]

க முதன்மையாய் பிரம்மன் பூர்வத்தில் புலனாகியுள்ளான்; வேனன் அதி ஒளி மிக்க எல்லையினின்று—அனைத்தையும்—விளக்கியுள்ளான்; அவன் அடிப்படையான

1 சிகிச்சை செய்பவள். 2 ஒரு செடியினின்று.

கசஎ கருத்து—சிலாசீ, அருந்ததி இலாட்சை என்னும் ஔஷதங்களை நாடுங்கள்.

அருகிலுள்ள ரூபங்களான ஸத்து அஸத்தின் மூல நில யத்தைத் திறந்துள்ளான்.

உ அலோத்தியச் செயல்களை உங்களில் முதன்மையாய்ச் செய்பவர்கள் எங்களது வீரர்களைத் துன்பஞ் செய்யாம லாவார்களாக. நான் உங்களை அதற்காகப் பூர்வத்தில் வைத்துள்ளேன்.

௩ தேன் நாவுள்ளவர்கள் திரமாய் ஜோதியின் உய ரிய நிலயத்தில் ஆயிரந் தாரைகள் பொழியும்—நிலையில் —ஒருமையுடன் சுவர—கானம் முழங்குகிறார்கள்; அவ னது ஒற்றர்கள் கண் கொட்டுவதில்லை; அவர்கள் கூட்டு வதற்குப் பாசங்களுடன் நிலயத்திலுள்ளார்கள்.

௪ விருத்திரர்களை எங்கும் ஜயித்துக்கொண்டு வன் மையை ஜயிக்க நீ துரிதமாகவும். நீ அலையால் அரிகளில் செல்லுகிறாய்: நீ மெலிவு என்னும் நாமமுள்ளவன்; கந-வது மாஸம் இந்திரனுடைய வீடாகும்.

ரு தூரத்திலுள்ளவனே! நீ இதனால் ஜயித்துள்ளாய்: சுவாஹா! ஸோமனே, ருத்திரனே! மங்கள மளிப்பவர் களால், கூரிய ஆயுதமும் அம்புகளும் தாங்கிய நீங்கள் இங்கு எங்களுக்குச் சுகமளிப்பீர்களாக.

சா தூரத்திலுள்ளவனே! நீ இதனால் ஜயமாகவில்லை, ஸ்வாஹா! ஸோமனே! ருத்திரனே! மங்கள மளிப்ப வர்களாய் கூரிய ஆயுதம் கூரிய அம்புகளுள்ள நீங்கள் இங்கு எங்களுக்குச் சுகமளிப்பீர்களாக.

எ நீ இதனால் குற்றஞ் செய்பவனாய்; ஸ்வாஹா! ஸோமனே, ருத்திரனே! மங்கள மளிப்பவர்களாய் கூரிய ஆயுதம் கூரிய அம்புகளுள்ள நீங்கள் இங்கு எங்களுக்குச் சுகமளிப்பீர்களாக,

அ இருவர்களான நீங்கள் எங்களைத் துன்பத்தினின்றும்

நிந்தனையினின்றும் நீக்குங்கள்; யக்ஞத்தை யநுபவியுங்கள். எங்களில் அமுதத்தை ஸ்தாபியுங்கள்.

கூ கண்ணினுயுதமே, மனத்தினுயுதமே, பிரம்மத்தினுயுதமே தபத்தினுயுதமே! நீ ஆயுதத்தின் ஆயுதமாகும்; எங்களுக்குத் துன்பஞ் செய்பவர்கள் ஆயுதமன்னியிலாவார்களாக.

க0 கண்ணாலும் கருத்தாலும் சித்தத்தாலும் சங்கற்பத்தாலும் எங்களை எதிர்க்கும் எதிரிகளை, அக்கினியே! நீ ஆயுதங்களில்லாமலாக்கவும்: ஸ்வாஹா!

கக நீ இந்திரனின் வீடு; அங்கு நான் உன்னை அணுகுகிறேன், அங்கே நான் உன்னை எனது சகல புருஷர்களோடு, சர்வாத்மாவுடன் சர்வ தேகங்களோடு பிரவேசிக்கிறேன்.

கஉ நீ இந்திரனின் ஆசிரயம். அங்கு.......பிரவேசிக்கிறேன் கஉ. நீ இந்திரனின் காப்பு, அங்கு.......பிரவேசிக்கிறேன். கச. நீ இந்திரனின் இரட்சகன்; அங்கு........பிரவேசிக்கிறேன்.

[ரு. கூ. க—கச]

கசக உலோபி [அதர்வன்—வெகு பல தேவர்கள்]

க உலோபியே! எங்களுக்குக் கொண்டுவா, வழி-நிற்காதே; எங்களுக்கான தட்சிணையைத் தடுக்காதே; விலக்குக்கு நமஸ்காரம்: வெற்றி சூனியத்துக்கு—நமஸ்காரம், உலோபிக்கு நமஸ்காரம்.

உ நீ விரும்பும் வெறும்பேச்சுப் புருஷனுக்கு நமஸ்காரம்; நீ நான் விரும்புவதைத் தடுக்காதே!

ந எங்கள் தேவகிருதமான விருப்பம் இரவு பகலால்

---

கசஅ கருத்து—இந்திரன் என்னும் வலிமைக்கு நீங்கள் முயற்சி செய்யுங்கள்.

விருத்தியாகுக; நாங்கள் உலோபியை யநுசரித்துச் செல்லுகிறோம்; உலோபிக்கு நமஸ்காரம்.

ச பொருளை அநுசரிக்கும் நாங்கள் ஸரஸ்வதியாலும் அநுமதியாலும் யாசிக்கிறோம். நான் தேவர்களின் தேவ அழைப்புக்களில், இனிய தேன் மொழியை மொழிந்துள்ளேன்.

ரு மனத்தினால் இணைந்து, மொழியாலும் சரஸ்வதியாலும் பழுப்புச் ஸோமனால் யளிக்கப்படும் சிரத்தையாலும் இன்று நான் நாடுபவனை, காண்பேனாக.

சு நீ எங்களுடைய விருப்பத்தையும் வாக்கையும் வீணாக்காதே. இந்திரனும் அக்கினியும் எங்களுக்குச் செல்வங்களைக் கொண்டு வருவார்களாக. எங்களுக்கு அளிக்க விரும்பும் நீங்கள் எல்லீரும் உலோபிக்கு நல்வரவு கூறுங்கள்.

எ அபஜயமே! நீ வெகு தூரஞ் சென்று விடு: நாங்கள் உனது ஆயுதத்தை தூரமாக்குகிறோம். உலோபியே நீ அமிழ்த்துபவன் அதோகதி செய்பவன் என நான் உன்னை அறிவேன்.

அ உலோபிணியே, புருஷனின் சித்தம் சங்கற்பத்தைச் சிதறடித்து நீ நிர்வாணமாகிக் கனவிலே சனத்தைக் கட்டுகிறாய்.

கூ மஹத்தாயும் அதி மேன்மையாயும் எல்லாத் திசைகளையும் வியாபகஞ் செய்பவளுமான பொன்கேசமுள்ள நிர்ருதிக்கு நான் வணக்கமளித்துள்ளேன்,

க௦ பொன் நிறமுடன் ஸுரூபகையாயும் பொன் திண்டுடனாகி பொன் உடையுடனுள்ள பெரியவளான உலோபிப்—பிரியைக்கு—நான் வணக்கமளித்துள்ளேன்.

[ரு. எ. க—க௦]

---

கசக கருத்து—கருமித்வம் வேண்டாம்.

கருO பற்றுரை அழித்துவிடு [அதர்வன்—அக்கினி விசுவேதவன் இந்திரன்]

க வைகண்டன சமித்துடன் நீ தேவர்களுக்கு நெய்யைச் சுமந்து செல். அக்கினியே, நீ இங்கு அவர்களை இன்ப முடனுக்கவும்; என் அழைப்புக்கு அனைவரும் வருக.

உ இந்திரா என்னுடைய அழைப்புக்கு வா; நான் இதனைச் செய்வேன்; நீ அதனைச் செவியுறவும். இந்திரனின் இந்தத் துரித வியாபகர்கள் எனது சங்கற்பத்தைப் பூரணமாக்குவார்களாக; ஜாதவேதஸனே! காயவசிய முள்ளவனே, அவர்களால் வீரியத்தை நாங்கள் பற்று பவர்களாகவேண்டும்.

ங தேவர்களே! திவ்ய சூனியன் எதனைச் செய்ய விரும் பினாலும் அக்கினி அவர்களது அவியைச் சுமக்காமலா வானுக; தேவர்களும் அவனது அழைப்புக்குச் செல்ல வேண்டாம். எனது அழைப்புக்கு நீங்கள் வரவேண்டும்.

ச துரித வியாபகர்களே! நீங்கள் முன் பாயுங்கள்; இந்திரனுடைய மொழியால் கொல்லுங்கள்; ஓநாய் ஆட் டைப்போல நீங்கள் எதிரியைக் குலுக்குங்கள்: உங்களிட மிருந்து அவன் தப்பிப் பிழைக்கவேண்டாம்; நீ அவ னுடைய பிராணனை நிறுத்து.

ரு எங்கள் அபஜயத்துக்கு முயற்சி செய்யும் பிரா மணனை உன் கால்களால் மிதித்து விடு. இந்திரனே; நான் அவனை மிருத்யுவில் தள்ளுகிறேன்.

சு எதிரிகள் தேவர்களின் புரங்களுக்குச் சென்றாலும் பிரம்மத்தைத் தங்கள் காப்புக்களாகச் செய்துகொண்டா லும் பூரண காப்பாய் காய காப்புச் செய்துகொண்டு தங் களைத்திடஞ் செய்து கொண்டாலும் அவர்களுடைய சக் திகளை யெல்லாம் இரஸமன்னியி லாக்கவும்.

எ இந்திரா எதிரி அங்கு செய்யும் தீவிர முயற்சிகளையும்,

விருத்திரனைக் கொல்லும் அங்குள்ள எதிரிசனத்தையும் ஒழிக்க அவற்றை[1] மறுபடியும் திருப்பி விடு.

அ இந்திரன் உத்வாசனனைப்[2] பிடித்து அவனைத் தன் பாதங்களில் அழுத்துவதுபோல் நானு மப்படியே அழி யாத பல வருடங்கள் வரை அம் மனிதர்களை அதோகதி யாக்குகிறேன்.

கூ விருத்திரனை யழிக்கும் இந்திரா! அவர்களின் மர்ம ஸ்தானங்களை மாய்த்து விடு: இங்கு அவர்களை மிதித்துத் தள்ளு; இந்திரா! நான் உனது நண்பன்; நாங்கள் உன் னைப் பற்றுகிறோம்; இந்திரா! நாங்கள் உன் நல்மனத்தி லாகவேண்டும்.

[ரு. அ. க—கூ]

கருக நோக்கம் [பிரமன்—வாஸ்தோஷ்பதி]

க—சு ஜோதிக்கு ஸ்வாஹா! சகத்துக்கு ஸ்வாஹா! வானத்துக்கு ஸ்வாஹா! வானத்துக்கு சுவாஹா! ஜோதிக்கு ஸ்வாஹா! சகத்துக்கு ஸ்வாஹா!

எ சூரியன் என் கண், காற்று என் பிராணன், வானம் என் ஆத்மா, புவி என் தேகம். நான் இங்கு வெல்லப் படாதவன் என்னும் நாமமுள்ளவன்; இப்படிப்பட்ட நான் காப்புக்கு என் ஆத்மாவை புவிக்கும் ஜோதிக்கும் அளிக்கிறேன்.

அ ஆயுளை உச்சமாக்கவும், பலத்தை உச்சமாக்கவும், செயலை உச்சமாக்கவும், செய்கையை உச்சமாக்கவும், அறிவை உச்சமாக்கவும், இந்திரியத்தை உச்சமாக்கவும்; ஆயுட் செய்பவனே, ஆயுட் பத்தினிகளே, ஸ்வதா மிகும்

---

1 அவர்களுடைய முயற்சியினுலாகும் பயன்களை. 2 கத்திக் கூச்ச லிடும் அரக்கனை.

கருO கருத்து—வலிமையால் வட்கார்களை வீழ்த்து.

நீங்கள் எனது இரட்சகர்க ளாகுங்கள், எனக்குத் துணை செய்யுங்கள், எனது ஆத்மாவில் அமர்பவர்களாகுங்கள்; என்னை இம்ஸியாதேயுங்கள்.

[ரு. கூ. க—அ]

கருஉ காப்பு [பிரமன்—வாஸ்தோஷ்பதி]

க நீ எனது கற்காப்பு; கிழக்குத்திசையினின்று என்னைத் தாக்கும் துன்பஞ் செய்பவனை அவன் எதிர்க்கவேண்டும்.

உ நீ எனது கற்காப்பு; தென் திசையினின்று என்னைத் தாக்கும் துன்பஞ் செய்பவனை அவன் எதிர்க்கவேண்டும்.

ந. நீ எனது கற்காப்பு; மேற்குத் திசையினின்று என்னைத் தாக்கும் துன்பஞ் செய்பவனை அவன் எதிர்க்க வேண்டும்.

ச நீ எனது கற்காப்பு; வடதிசையினின்று என்னைத் தாக்கித் துன்பஞ் செய்பவனை அவன் எதிர்க்கவேண்டும்.

ரு நீஎனது கற்காப்பு, நிலையான திசையினின்று என்னைத் தாக்கித் துன்பஞ் செய்பவனை அவன் எதிர்க்கவேண்டும்.

சு நீ கற்காப்பு; உச்சி திசையினின்று என்னைத் தாக்கும் துன்பஞ் செய்பவனை அவன் எதிர்க்கவேண்டும்.

எ நீ எனது கற்காப்பு; நடுத்திசையினின்று என்னைத் தாக்கும் துன்பஞ் செய்பவனை நீ எதிர்க்க வேண்டும்.

அ நான் பிருஹத்தால் மனத்தை அழைக்கிறேன்; மாதரிசுவனல்களால் பிராணனையும் அபானனையும்,—அழைக்கிறேன்; நான் சூரியனிடமிருந்து கண்ணையும் வானத்தினின்று செவியையும், புவியினின்று தேகத்தையும்—அழைக்கிறேன்; நாங்கள் மனமிசையும் ஸரஸ்வதியால் சொல்லை யழைக்கிறோம்.

[ரு. கO. க—அ]

---

கருக கருத்து—உச்சமோங்குங்கள்.

கருஉ கருத்து—எதிர்த்து நில்.

௧௫௩. வினா விடை [அதர்வன்—வருணன்]

௧ அதர்வன்[1] பேசுகிறான். மகத்தான அசுரனுடன்[2] இங்கு நீ எப்படிப் பேசினாய்? நீ திவ்ய திடத்துடன் பொன்னிறப் பிதாவுடன்—எப்படிப் புகன்றாய்? வருணனே! தட்சிணையாக யளிக்கப்பட்ட பிருசினியை[3] நீ மனத்தினால்—ஏன்?—மறுபடியும் பெற விரும்பினாய்.

௨ வருணனது பதில்[4]. அதர்வனே! நான் மறுபடியும் பெற விரும்பியது விருப்பத்தினாலில்லை; நான் இந்தப் பிருசினியை வீட்டுக் கழைத்தது அதை நன்றாய் பாலனஞ் செய்வதற்க்காகும்: நீ எந்தக் காவியத்தால் நீ—கவி—யாயுள்ளாய்; நீ இப்போது எந்த ஜாதத்தால்—புலனாகும் எப்பொருளால்— ஜாதவேதஸனாயுள்ளாய்?

௩ அதர்வன் பேசுகிறான்—நான் காவ்யத்தில் அதி கம்பீரனாயுள்ளது உண்மையே; நான் ஜாதத்தினால் உண்மையாகவே ஜாதவேதஸனாயுள்ளேன். ஆரியன் தனது மகிமையினால் தாஸன்-தன்திடத்தால்-நான் ஏற்கும் விரதத்தை பங்கஞ்செய்ய முடியாமலாகிறார்கள். ௪ வருணனே,[1] உன்னைவிட மேன்மையான கவி வேறு எவனுமில்லை; அறிவினால் உன்னைவிட திட தீரன்—வேறு எவனுமில்லை. நீயே[1] உன்னை அரசுபுரிந்து கொள்கிறாய். நீ இந்த எல்லா புவனங்களையு மறிகிறாய்; கபட புருஷனும் உன்னைக் கண்டு கலங்கினான். ௫ தன்னரசு வருணனே, நன்கு செலுத்துபவனே! நீ எல்லா சனனங்களையு மறிகிறாய்; இந்த இரஜஸுக்கு—வானத்துக்கு—அப்பால் வேறு ஏதேனு முண்டோ? பிழையற்றவனே! இந்த பரத்துக்குக் கீழாக ஏதேனுமுண்டோ?

௬ வருணன் பதில் கூறுகிறான் —இரஜஸுக்கு அப்பால்

---

1 ஆரோபமான ஆத்மா. 2 பலமுள்ளவனிடம். 3 பசுவை புலனை. 4 ஆரோபமான பரமன்.

வேறொரு-பொருளுண்டு; இப்பொருளுக்கப்பால் அங்கு அடைவதற்கரிதான ஒன்று உண்டு; வருணன நான் இதை அறிந்து உனக்கறிவிக்கிறேன்; பணிகள் கீழே செல்க; தாஸர்கள் நீசமாய்ப் புவிக்கு நகருகிறார்கள்.

எ அதர்வன் பேசுகிறன். வருணனே, அளித்ததை—திரும்பப்பெற முயல்பவர்களை-ப்பற்றி நீ வெகு பல நிந்தை மொழிகளைக் கூறுகின்றாய்; அந்தப் பணிகளை நீ அனுகாமலாகவும்; சனங்கள் உன்னை கொடுக்காதவன் என அழைக்க வேண்டாம்.

அ. வருணன் பேசுகிறன். ஜனங்கள் என்னை கொடுக்காதவன் எனக் கூறாமலிருப்பார்களாக; துதி செய்பவனே! நான் பிருசினியைத் திருப்பி யளிக்கிறேன்; நீ சக்திகளுள்ள எல்லா மானிடர், நடுவில் திசைகளின் நடுவே எனது எல்லா தோத்திரத்துக்கும் வா.

கூ அதர்வன் பேசுகிறன்—எல்லா மானிடர் இடையே திசைகளின் நடுவே உனது உயரிய தோத்திரங்கள் வருக: நீ எனக்கு அளித்துள்ளாததை இப்பொழுது எனக்களி; நீ எனக்கு இசையும் ஏழு அடி நண்பனுகும். வருணனே! நம்மை ஒரே பந்துத்வம் ஒரே பிறப்பு—ஒன்று சேர்க்கும்.

கo வருணன் பேச்சு. நமது இருவர் களில் ஒரே பிறப்பான உனக்கு அளித்துள்ளாததை நான் அறிவேன்; அதை நான் உனக்கு அளிக்கிறேன்: நான் உனக்கிசையும் ஏழு அடி நண்பனுயுள்ளேன். கக தேவன், துதிக்கும் தேவனுக்கு திடமளிப்பான். அறிஞன் துதிக்கும் அறிஞனுக்கு அதி மேதையை யளிப்பான், தன்னதிகார வருணனே தேவபந்துவான அதர்வாணத் தோற்றுவிப்பதால், அவனுக்கு நன்கு போற்றப்படும் பொருளைச்

செய்ய நீ எங்கள் நண்பனுகவும், உயரிய பந்துவாக வும்.

[ரு. கக. க—கக]

கருச துதிகள் [ஆப்பிரி சூக்தம் அங்கிரஸன்—ஜாதவேதசன்]

க தேவனுன ஜாதவேதஸனே, மனிதரின் நிலயத்தில் நீ இன்று எழுப்பப்பட்டு, நீ தேவர்களை யஜிக்கிருய்: மித்திரனுக்குச் சமான ஒளியுள்ளவனே! அறியும் நீ அவர்களைக் கொண்டு வா: நீ முன் அறியும் தூதன், நீ கவி.

உ இனிய நாவுள்ளவனே! தநூநப்தனே, ருதஞ் செல் லும் வழிகளைத் தேனல் நனைத்து அவற்றை இனிமை யாக்க, யக்ஞத்தையும் உபாஸனைகளையும் அறிவுகளால் விருத்தியாக்கி எங்கள் அத்வரத்தைத் தேவர்களில் ஸ்தா பனஞ் செய்.

ந அக்கினியே, துதிக்கும் வணக்கத்துக்கான நீ அவி செய்து வசுக்களுடன் இணைந்து வா: இளைஞனே! நீ தேவ ஹோதா; யக்ஞஞ் செய்பவர்களில் சிறந்தவனுன நீ, பிரேரிதமாகி யக்ஞங்களைச் செய்.

ச புவியின் முன் திசையில், கீழ்த்திசை-என்னும் தருப்பை தினங்களின் உதயமான இந்த உஷையில் தோய்ந்து அதிதிக்கும் தேவர்களுக்கும் இனிமையாகி அதி விசாலமாய்ப் பெருகி விரிகின்றது.

ரு. புருஷர்களுக்கு தங்களை யலங்காரஞ் செய்துகொள் ளும் மனைவிகளைப்போல், அவர்கள் விரியும் கதவுகளை விசாலமாய்த் திறப்பார்களாக; பெரியனவாயும் திவ்யங்க ளாயும் விசுவ விருத்தியாக்கும் கவாடங்களான நீங்கள் தேவர்களின் நற் பிரயாணத்துக்கு அநுகூலமாகுங்கள்.

---

கருந கருத்து—முப்பொருளுண்மையறி.

சு பூஜ்யர்களும் பொழிபவர்களுமான உஷையும் இரவும், பிரகாசமாயும் பெரியவர்களாயும் அதி ஒளிகளுமுள்ள அந்த இரண்டு ஸ்திரீகள் சுந்தராலங்காரங்களோடு ஸ்ரீயை தரிப்பவர்களாய் இங்கு சயனத்தில் ஒன்று சேர்ந்து சாய்வார்களாக.

எ தங்கள் திசையால் பிராசீன[1] ஒளியைப் புலனாக்கி, சபைகளில் எங்களைத் தூண்டுபவர்களுமான கானஞ் செய்யும் இருவர்கள், முதன்மையாயும் நல்ல மொழிகளுள்ள தேவ ஹோதாக்களுமான இவர்கள், மனிதர் யக்ஞஞ் செய்ய யக்ஞத்தை உருவமாக்குகிறார்கள்.

அ பாரதி எங்கள் யக்ஞத்துக்குத் துரிதமாய் வருக. இங்கு இடை மனிதனைப்போல் தூண்டுகிறாள்; ஸரஸ்வதியும் நன்கு செய்யும் மூன்று தேவிகளும் இந்த இனிய தருப்பையி லுட்காருவார்களாக.

கூ ஹோதாவே! சனகர்களான இச் ஜோதியையும் புவியையும், எல்லா புவனங்களையும் ரூபங்களால் அலங்கரிக்கும் தேவனான துவஷ்டாவையும், நீ பிரேரிதமாகி, அறியும் யக்ஞ சீலனாகி, யஜி.

க0 பருவகாலத்தில் அவிகளை தானாகவே நனைத்து நீ தேவ பாதைகளில் பொழி: சாந்தஞ் செய்யும் வனஸ்பதியின் தேவனான அக்கினி நெய் தேனுடன் அவியை நனைப்பானாக.

கக அக்கினி தான் தோன்றுஞ் சமயத்திலேயே யக்ஞத்தை திடஞ் செய்கிறான்; அவனே தேவ முதல்வனாவான்; இந்த ஹோதாவின் ஆக்ஞையில் ருதத்தின் மொழியில், சுவாஹா செயலுடனாகும் அவியை தேவர்கள் புசிப்பார்களாக.

[ரு., கஉ. க—கக]

---

1 பழைய.

கருச கருத்து—உஷாகால வர்ணனையும் உயரிய அனலும்.

கடுரு விஷ சிகிச்சை [கருத்மான்—தட்சகன்]

க ஜோதியின் கவியான வருணன் எனக்குச் சிகிச்சையை யளித்துள்ளான், நான் உக்கிரமொழிகளால் உன்[1] விஷத்தை நீக்குகிறேன்; பல் அழுந்தியது, அழுந்தாதது, பற்றியதுமான நஞ்சை நான் பறித்துள்ளேன்: பாழில் பானத்தைப்போல் உன் விஷம் வீணாகிவிட்டது.

உ நான் இவற்றில் உனது நீரில்லா நஞ்சைப் பற்றியுள்ளேன்; நான் உனது உச்சத்திலும் நடுவிலுமுள்ள இரஸத்தைப் பற்றுகிறேன்; அச்சத்தால் உனது அடிப்பாகத்திலுள்ள நஞ்சு நீங்குக.

ந எனது மொழி மேகத்தில் முழக்கஞ் செய்யும் மாடு-போலாகும்; நான் உனது உக்கிரமான மொழியால் விஷத்தை விலக்குகிறேன்; நான் மனிதர்களின் உதவியால் — அந்த இரஸத்தைப் பறித்துள்ளேன்; இருளினின்று ஜோதியைப்போல் சூரியன் உதயமாவானாக.

ச என் கண்ணால் உன் கண்ணை நான் கொல்லுகிறேன்; விஷத்தால் நான் உன் விஷத்தை விலக்குகிறேன்; ஸர்ப்பமே! நீ சா, உன்னிடமே உன் விஷம் திரும்புக.

ரு கைராதனே! புள்ளிப்பாம்பே! புல் நாடுபவனே! பழுப்பனே! நீங்கள் எனக்குச் செவிகொடுங்கள்: கரும்பாம்புகளே! அலீகங்களே![2] எனது நண்பனின் வழியில் நீங்கள் நிற்கவேண்டாம்; நீங்கள் எங்களுக்கு எச்சரிக்கை செய்து விஷத்திலே[3] இன்பமாகுங்கள்.

சா வில்லின் வில்நாணைப்போல் தைமாதன் கரும்பாம்பு பழுப்பன் அப்போதகன் சதாஜெயமுள்ளவனது கோபத்தை-விஷத்தை—நீக்குகிறேன்; நான் இரதங்களைப்போல் விலக்குகிறேன்.

---

1 பாம்பின். 2 எல்லாம் பாம்புங்களின் பெயர்கள். 3 விஷம் மிகும் உங்களகத்தில்.

எ ஆரிகையே விலிகையே அவர்களுடைய தாயே தந்தையே—உங்கள் பந்து-க்களை பூரணமாய் நாங்கள் அறிவோம்; இரஸமற்றவர்களே! நீங்கள் என்ன செய்வீர்கள்.
அ உருகுலையின் பெண், கரும்பாம்பினின்று தோன்றும் தாவிப்பாம்பு எதிர்த்துத் தீண்டும் பாம்பு—இவற்றின் விஷம் இரஸமன்னியிலுள்ளது.
கூ மலைச்சார்பினின்று வரும் தூரித-செவிமுட்பன்றி இதைச் சொல்லிற்று:- புவியை-கெல்லுவதால் புலனான பாம்புகளின் விஷம் இரஸமற்றது.
கo தாபுவம்[2] தாபுவம் போலாகும்; நீ தாபுவமில்லை; தாபுவத்தால் இரஸம் விஷமற்றது.
கக தஸ்துவம்[2] தஸ்துவம் போலாகும்; நீ தஸ்துவமில்லை, தஸ்துவத்தால் விஷம் இரஸமற்றது.

[ரு. கக. க—கo]

கருகூ அரி அழி [சுக்கிரன்—வனஸ்பதி]
க கருடன் உன்னைக் கண்டான். காட்டுப்பன்றி தனது மூக்கால் உன்னைக் கெல்லிற்று; துன்பஞ்செய்ய விரும்புபவனை நீ துன்பஞ்செய்; துன்பஞ்செய்ய விரும்பவனை நீ தொலை.
உ யாது தானர்களை அடியோடழி: துன்பஞ் செய்பவனை தகி; ஒஷதியே; எங்களை யழிக்க விரும்புபவனை நீ யொழித்து விடு.
ந மானுடைய சர்மத்தின் துண்டை-வேறு மிருகத்தைப்பற்ற பயன் செய்வதுபோல்-தேவர்களே! மாலையைப்போல்-துன்பஞ் செய்பவனில் துன்பத்தை நாட்டு.
ச துன்பஞ் செய்பவனுக்கு துன்பத்தைக் கையினால்

1 பாம்பின் பெயர். 2 விஷம் நீக்கும் ஔஷதம்.
கருரு கருத்து—தஸ்துவத்தால் விஷந்தொலை.

பற்றிச் செல்: அது அவனை அழிக்க அவன் முன் அதை நன்கு சாய்த்து விடு.

ரு துன்பங்கள் துன்பஞ் செய்பவனுக்காகட்டும்; சபிப்பவனுக்குச் சாபங்களாகட்டும்: சுகமான இரதத்தைப் போல் துன்பம் துன்பஞ் செய்பவனிடம் மறுபடியுஞ் செல்க.

சு குதிரையைத் தடைவாரால் அடக்குவதுபோல் தீமை புரியத் துன்பஞ் செய்ய விரும்பும் ஆணையும் பெண்ணையும் வசியஞ்செய்ய அதை எடுத்துச் செல்லுகிறோம்.

எ நீ தேவனால் செய்யப்பட்டாலும் சரி, புருஷனால் செய்யப்பட்டாலும் சரி,—உன்னை நாங்கள் இந்திரனது நட்போடு பின்செலுத்துகிறோம்.

அ அக்கினியே, நீ எதிரி ஜயிப்பவன், நீ எதிரிகளை ஜயிக்கவும்; நாங்கள் துன்பஞ் செய்பவனுக்கு துன்பத்தைப் பரிவிருத்தியால் திருப்புகிறோம்.

கூ வேல் பழக்க முள்ளவனே! அவனைவீழ்த்து: துன்பஞ் செய்பவனைத் தொலை: நாங்கள் துன்பஞ்செய்யாதவனுக்காக உன்னை கூறு செய்யவில்லை.

க0 தந்தைக்கு மகனைப்போல் நீ செல், மிதிபட்ட பாம்பைப்போல் நீ கடி; துன்பமே! நீ துன்பஞ் செய்பவனுக்குப் பந்தத்தினின்று தளர்பவன்போல் திரும்பிச் செல்.

கக பெண் மானைப்போல், பெண் யானையைப்போல் வேடனால் பின் பாயும் ஹரிணத்தைப்போல் துன்பம் அதன் கர்த்தாவினிடஞ் செல்க.

க உ புவியே! ஜோதியே! துன்பஞ் செய்பவனை எதிர்க்க சரத்தைவிட சடிதியாய் அது பறக்கட்டும்; மானை வேடன்போல், துன்பஞ் செய்பவனைத் துன்பம் மறுபடியும் பற்றட்டும்.

கரு அது[1] அக்கினியைப்போல் எதிர்த்துச்செல்க. நீரைப்போல் கீழ் பாய்க; சுகமான இரதத்தைப்போல் துன்பஞ் செய்பவனிடம் துன்பம் செல்க.

[ரு. கச. க—கந]

கருஎ சாதனம் [விசுவாமித்திரன்—வனஸ்பதி]

க—கக எனக்கு ஒன்று எனக்கு பத்து கஷ்டம் தடுப்பவள்[2]; ஓஷதியே; நீ ருதத்தில் பிறப்பவள், நீ ருதம் மிருந்தவள்: இனி நீ எனக்கு இனிமை செய். ஓஷதியே! எனக்கு இரண்டு எனக்கு இருபது..................இனிமை செய். எனக்கு மூன்று எனக்கு முப்பது............செய். எனக்கு நான்கு, எனக்கு நாற்பது...........செய். எனக்கு ஐந்து எனக்கு ஐம்பது........செய். எனக்கு ஆறு எனக்கு அறுபது........செய், எனக்கு ஏழு எனக்கு எழுபது........ செய். எனக்கு எட்டு எனக்கு எண்பது.......செய். எனக்கு ஒன்பது. எனக்குத் தொண்ணூறு........செய். எனக்கு பத்து எனக்கு நூறு........செய். எனக்கு நூறு எனக்கு ஆயிரம்........செய்.

[ரு. கரு. க—கக]

கருஅ காவள [விசுவாமித்திரன்—ஏகவிருஷன் உற்பத்திசெய்]

க நீ ஒரே காளை[3] யானால் உற்பத்திசெய்: செய்யவில்லையேல் நீ இரஸமன்னியிலுள்ளவன். உ நீ இரு காளைகளானால்[4] ............ ங நீ மூக்காளைகளானால்.......... ச நீ நான்கு காளைகளானால்............ ரு நீ ஐந்து காளைகளா

---

1 துன்பஞ் செய்பவனது தூற்செயல், 2 நீ பல கஷ்டங்களைத் தவிர்ப்பவள். 3 ஆத்மா விருஷன், வலிமையுள்ளவனானால் 4 இரு வன்மைகளைச் சேர்ப்பவனானால், இரு பிராணன்களைச் சேர்ப்பவனானால்.

கருகூ கருத்து—வேப்பு நாடுபவன் வேப்பலை பறிப்பான்.

கருஎ கருத்து—ஔஷதங்களால் நோய் நீங்குங்கள்.

னால்........... சு நீ ஆறு காலைகளானால்............ எ நீ ஏழு காலைகளானால்............ அ நீ எட்டு காலைகளானால்.... கூ நீ ஒன்பது காலைகளானால்........ க0 நீ பத்து காலை களானால்............ கக நீ பதினொன்று காலைகளானால்.... நீ இரஸமற்றவன்.

[டு. கசு. க—கக]

கடுகூ பிராம்மண மனைவி [மயோபூ—பிரம்ம ஜாயை]

க பிரம்ம[1] குற்றமானால முதன்மையாய் சூரியனும் சமுத்திரனும் வாயுவும்—எதிர்—முழக்கஞ் செய்கிறார் கள்; அதி கோபனும் உக்கிரதபனும் சுகமளிக்கும் திவ்ய சலனும் ருதமுதல்வனும்-எதிர் முழக்கஞ் செய்கிறார்கள்.

உ. இராஜாவான ஸோமன் பிராமணனது மனைவியை[2] எதிர்ப்பன்னியில் திருப்பி யளிப்பான்; அவளை யநு ஸரித்தவர்கள் மித்திரனும் வருணனுமானார்கள்; அக்கினி ஹோதாவாகி அவளது கையைப்பற்றி அவளை இங்கு கொண்டுவருவான்.

ங அவள் பிராம்மணனது மனைவி என ஒருவன் சொன் னால் அவளது—அறச்—சிந்தனையின் கையால் [3] பற்றப் படவேண்டும். அவளை—அழைத்துச் செல்ல—தூதனுக் அவள் நிற்கவில்லை. [4] இப்படி [5] க்ஷத்திரியனுடைய [6] இராஷ்டிரம் [7] இரட்சணையாகும்.

ச "தலைமயிர் குலையும் தாரகம் இவள்தான்" என கிராமத்தில் விபத்து வருங்கால் விளம்பப்படும், பிராமண

---

1 ஞானத்தைத் தடுக்குஞ் செயல், சக்தி, ஞானம். 2 அறிவின் ஆத ரவை, அழகை. 3 உன் மனத்தால். 4 தாமதிப்பதில்லை. 5 அறி வை பங்கஞ் செய்யாதவனது. 6 சக்தி மிகுபவனது. 7 தேகம்.

கடுஅ கருத்து—பலமுள்ளவர்களானால் பலத்திற்கேற்ற பய னுள்ள செயல்களைச் செய்யுங்கள்.

னது மனைவி, விழும் ஒளிகளுடன் சேரும் முயல்போ லுள்ள மனமுளோர்கள்—மலரும் இராஷ்டிரத்தை துக்க முடனாக்குவாள்.

ரு பிரம்மசாரி அதிதொண்டு செய்பவனாய் சலனமாகி ருன்; அவன் தேவர்களின் ஒரு அங்கமாகிருன்; தேவர் கள் ஸோமனால் கொண்டுவரப்பட்ட யக்ஞ ஸாதனத்தைப் போல் பிரம்மசாரியால்—பிரஹஸ்பதி, மனைவியைக் கண் டான்.

கூ பூர்வ தேவர்கள் அவர்களைப்பற்றிச் சொல்லியுள் ளார்கள்; தவத்துடன் உட்காரும் ஏழு ரிஷிகளும்—அப் படிச்—சொல்லியுள்ளார்கள்: அன்னியர்களால் அழைத் துச்செல்லப்படும் பிராமணனது மனைவி அஞ்சியுள்ளாள்; அவள் உயரிய ஸ்தானத்திலும் துக்கத்தை யளிப்பாள்.

எ பிராமணனது மனைவி, விழும் இளங் கருக்களையும், நஷ்டமடையும் பிராணிகளையும் பரஸ்பர மழியும் வீரர் களையும் செய்கிருள்.

அ ஒரு ஸ்திரீக்கு [1] பூர்வத்தில் பத்து [2] அபிராமணபதி களிருந்தபோதிலும் அவள் கையை [3] பிராமணன் பற்றி ஞல் அவனே அவளது புருஷனாவான்.

கூ பிராம்மணனே அவளது புருஷனாவான்; இராஜன்ய னும் வைசியனுமாக மாட்டான்; சூரியன் இதனை ஐந்து வித மானிடர்களுக்கு அறிவித்துச் செல்லுகிருன்.

க0 தேவர்கள் திருப்பியளிப்பார்கள்; மனிதர்களும் திருப்பியளிப்பார்கள்; அரசர்களும் சத்தியத்தை கிர ஹித்து பிராமணனின் மனைவியைத் திருப்பி யளிப்பார் கள்.

கக அவர்கள் பிராமணர்களது மனைவியைத் திருப்பி யளித்து, தேவர்களால் குற்றத்தினின்று நீங்கி, புவியின்

---

1 இராஷ்டிரத்துக்கு. 2 அறிவிலி. 3 அறிஞன்.

உறுதியைப் பகிர்ந்து விசாலவெளியைக் கவர்கிறார்கள்.

கஉ அறிவின்மையால் தடுக்கப்படும் பிராம்மண மனைவியின் இராஷ்டிரத்தில்,—அந்த தேசத்தலைவனது—சயனத்தில், நூறு கொண்டுவரும் காந்தை—சுந்தரியுஞ் சயனஞ் செய்வதில்லை.

கங அறிவின்மையால் தடுக்கப்படும் பிராம்மண மனைவியுள்ள இராஷ்டிரத் தலைவனின் வீட்டில் விசால செவி விசால சிரமுள்ள—மாடு சனிப்பதில்லை

கச அறிவின்மையால் தடுக்கப்படும் பிராம்மண மனைவியுள்ள இராஷ்டிரத் தலைவனது உணவுத் தட்டுக்களின் முன் பொன்மாலை யணியும் விபாகஸ்தன் ஒருவனும் செல்வதில்லை.

கரு அறிவின்மையால் தடுக்கப்படும் பிராம்மண மனைவியுள்ள இராஷ்டிரத் தலைவனது இரதத்துக்கு இணைக்கப்பட வெண்மையான கருஞ் செவியுள்ள குதிரை குணமாவதில்லை.

கசு அறிவின்மையால் தடுக்கப்படும் பிராம்மண மனைவியுள்ள இராஷ்டிரத் தலைவனது நிலத்தில் தாமரைத் தடாகமில்லை, அண்டக்குமிழி—கமலமும்—தோன்றுவதில்லை.

கஎ அறிவின்மையால் தடுக்கப்படும் பிராம்மண மனைவியுள்ள இராஷ்டிரத் தலைவனது சுந்தரமான பசுவைக் கறப்பவர்களு மில்லை.

கஅ பிராமணன் மனைவியில்லாமல் துக்கமுடன் இரவைக் கழிக்கும்— வீட்டில் கிருகஸ்தனது—பசு மங்களமாவதில்லை; அவன் காளையும் நுகத்தடி தாங்குவதில்லை.

[ரு. கஎ. க—கஅ]

---

கருக கருத்து—ஞானத்தின் மனைவியான அறிவை பலத்தால் தடுக்காதே;

கசுO பசு. [மயோபு—பிரம்ம கவி]

க மனிதர் பதியே! தேவர்கள் அவளைப்[1] புசிப்பதர்க்காக உனக்களிக்கவில்லை. இராஜன்யனே! புசிக்கப்படாத பிராமணனுடையப் பசுவை நீ புசிக்க விரும்பாதே.

உ சூதால் சீரழியும் இராஜன்யனும் நீசனும், ஆத்மா யழிபவனும் நான் இன்று வாழட்டும், நாளை—கவலை—இல்லை எனச்சொல்பவனும் பிராமணனுடையப் பசுவைப் புசிப்பானாக.

ங இராஜன்யனே சர்மத்தால் கொடிய நஞ்சு மறைந்த ஸர்ப்பம்போல் இந்த பிராமணனுடைய பசு துன்ப மளிப்பதாகும்; தின்பதர்க்காகாது.

ச அது அவனுடைய க்ஷத்திரத்தை எடுத்துச்செல்லும்; அது அவனது வன்மையை யழிக்கும்; அது பற்றிய அனலைப் போல அனைத்தையும் எரிக்கும்: பிராமணனை உணவு என எண்ணுபவன் தை மாதப்—பாம்பின்—விஷத்தை அருந்துபவனாவான்.

ரு பிராமணனை ஸாது என அறிவின்மையால் நினைத்து அவனை அழித்து, தேவ நிந்தனை செய்து செல்வம் விரும்புபவனது இருதயத்தில் இந்திரன் சுடரை எழுச்சியாக்குகிறான். அவன் செல்லுங்கால் புவியும் சோதியும் அவனை வெறுக்கும்.

சு தன் பிரியமான காயத்தின் அனலைப்போல் பிராமணன் இம்ஸிக்கத் தகாதவன்; ஏனெனில் ஸோமன் அவனுக்கு வார்ஸாவான்: இந்திரன் அவனைத் தீச் சொல்லினின்று காப்பான்.

எ நான் இனிமையாயுள்ளதைப் புசிக்கிறேன் என பிராமணனின் உணவை மனம் வைக்கும் மதியற்றவன் நூறு

---

1 பசுவை

முட்களுள்ளதை விழுங்குபவனுவான்; அவன் அதை சீரணிக்க இயலாது.

அ அவனது[1] நாக்கு வில் நாணுகும், அவனது சொல்—சரத்தின் கழுத்தாகும், அவனது பற்கள் தவங்களால் நனையும் சரங்களாகும்; பிராமணன் இவற்ருல், தேவர்களால் தூரிதமாகும் இருதயத்தோடு பல விற்களுடன் தேவ தூஷணஞ் செய்பவர்களை துவம்ஸஞ் செய்கிருன்.

கூ பிராம்மணர்கள் கூறிய அம்புகளுள்ளவர்கள், ஆயுதங்களுள்ளவர்கள், அவர்கள் எரியும் கணைகள் வீணுவதில்லை; அவர்கள் தவத்துடன் கோபத்தால் தொடர்ந்து தூரத்தினின்றே எதிரியைச் சேதனஞ் செய்கிருர்கள்.

கO பத்து நூருயிருந்து ஆயிரத்தை அரசுபுரிந்த வைதஹவ்யர்கள்[2] பிராமணனது பசுவைப் புசித்து பாழானுர்கள்.

கக கேசரபந்த மந்தையின் அஜத்தைப்[3] பக்குவமாக்கும் வைதஹவ்யர்களை, இம்ஸையாகும் பசு கொன்று விடும்.

கஉ பிராமணப் பிரஜையை இம்ஸிக்கும், புவியால் பிரிக்கப்படும் நூறும் ஒன்றுமான ஜனங்கள் நிர்மூலமாயழிகிருர்கள்.

கங தேவ நிந்தை செய்பவன் மானிடர்களில் திரிகிருன். அவன் நஞ்சைப் பருகுபவனுவான். அவன் வெறும் அஸ்திமயமாவான்; தேவ பந்துவான பிராமணனை இம்ஸிப்பவன் பிதுருக்கள் போகும் உலகத்துக்குச் செல்வதில்லை.

கச அக்கினி எங்கள் வழிகாட்டி யாவான்; ஸோமன் எங்கள் பந்துவான், சபிப்பவனை யழிப்பவன் இந்திரனு

---

1 பிராமணனது 2 தமது அவியை தாமே புசிப்பவர்கள். 3 மோட்ச சாதனத்துக்காகும் சக்தியை.

ருவான்; அறிஞர்கள் இது இப்படித்தான் என இதை அறிகிறார்கள். கடு கோபதியே மானிடர்பதியே, பிராமணனது சரம், நாகத்தைப்போலும்—நஞ்சுதோயும்—அம்பைப்போலும் அதிபயங்கரமானது; அவன் அதனால் தேவதூஷணை செய்பவனை துவம்ஸஞ் செய்கிறான். [ரு. கஅ. க—கரு.]

ககூக பசு [மயோபூ—பிரம்ம கவி]

க சிருஞ்ஜயர்கள், வைதஹவ்யர்கள் அதிகம் வளர்ந்தார்கள். ஆனால் அவர்கள் சோதியைப் பரிசிக்கவில்லை. பிருகுவை இம்ஸித்ததால் அவர்கள் பாழானார்கள். உ அவி—என்னும் சூரியன்—தன் இருவரிசைப் பற்களினிடையில் அங்கிரஸனது மகனான பிரஹத்ஸாம பிராமணனை நாசமாக்கும் சனங்களை, அரைத்துவிடுவான். ந பிராமணனைத் துப்பி அவனில் கோழை உமிழும்—சனங்கள்—ரோமம் புசித்து உதிர நதி நடுவே உட்காருபவர்களாவார்கள். ச பக்குவமாக்கப்படும் பிராமணனது பசு பரிதவிக்குங் காலத்திலேயே தேசத்தின் தேஜஸை அவள் ஒழிக்கிறாள்; அங்கு சூரனான வீரனும் தோன்றுவதில்லை. ரு அவளை வெட்டுவது குரூரமாகும்; அவளின் பக்குவ மாமிசத்தைப் புசிப்பது கொடுமையாகும்; அவளின் பாலைப் பருகுவதும் புன்மை என பிதுருக்களில் கருதப்படும். சு நான் உக்கிரன் என எண்ணும் இராஜனுடைய, பிராமணனை புசிக்க விரும்புபவனது தேசமும், பிராமணனை இம்சிக்கும் இராஷ்டிரமும் பாழாகும். எ அவள், பிராமணனை யழிக்கும் இராஷ்டிரத்தை, எண் பாதங்கள் நான்கு கண்கள் நான்கு வாய்கள் நான்கு மோவாய்கள், நான்கு காதுகள், இரு நாவுள்ளவளாகி,

ககூO கருத்து—பொல்லாத பிராமணப் பசு.

அலறச் செய்வாள். அ பிராமணனை எந்த இராஷ்டிரத்தில் இம்சை செய்கிறார்களோ, துவாரமுள்ள படகை சலம்—பாய்ந்து மூழ்கச் செய்வதுபோல் அந்த இராஷ்டிரத்தில் துன்பம் பாய்ந்து அதனை ஒழித்துவிடும். கூ நாரதனே பிராமணனது பொருளைப் பற்ற விரும்புபவனை 'எங்கள் நிழலை நீ அணுகாதே' என மரங்கள் மொழிந்து, அவனைத் துரத்துகின்றன. க0 பிராமணனது செல்வத்தை தேவர் செய்த விஷமென இராஜாவான வருணன் சொன்னான்: பிராமணனது பசுவை புசிப்பவனது இராஷ்டிரத்தை எவனும் காப்புச் செய்வதில்லை. கக பிராமணப் பிரஜையை இம்ஸித்த ஒன்பதும் தொண்ணூறுமானவர்களை புவியலறச் செய்வாள், அவர்கள் நீர் மூலமாய் யழிகிறார்கள். கஉ பிராமணனைத் துன்பஞ் செய்பவனே! வழியைத் தேய்க்க மிருதத்துக்கு[1] ப் பந்தஞ் செய்யும் தடையை தேவர்கள் உனது சயனம் எனச் சொல்லுகிறார்கள்.

கங பிராமணனை இம்ஸிப்பவனே! இம்ஸிக்கப் படுங்கால், பொழியும் ஒருவனது துக்க தாரைகள் உனது சலபாகம் என தேவர்கள் ஆதரிக்கிறார்கள். கச பிராமணனை இம்ஸிப்பவனே மிருத்யுவை ஸ்னானஞ் செய்த ஜலங்களை தாடிகளை தண்மை செய்த ஜலங்களை தேவர்கள் உனது சலபாகமாக செய்துள்ளார்கள். கரு பிராமணனை இம்ஸிப்பவனில் மித்திரவருணனது மழை பொழிவதில்லை, சபையும் அவனுக்கு சமர்த்தமாவதில்லை; அவன் தனது விருப்பம் போலான நண்பனையுமடைவதில்லை. [ரு. கக. க—கரு].

1 மரித்தவனுக்கு.

ககூக கருத்து ஞானத்தோடாகும் — பசுவை—அறிவையே—அபகரிப்பது ஆபத்திலே அமர்வதாகும்.

கசுஉ துந்துபி. [பிரமன்—வானஸ்பதியன்]

க வனஸ்பதியாலாகி சருமங்களால் சேரும் நீரன்போல் துந்துபி உச்சகோஷமுடனுகும். நீ சொல்லை சாணை பிடித்து சத்துருக்களை ஜயிப்பவனுய் வெல்ல விரும்பும் சிங்கத்தைப்போல இடி முழக்கஞ் செய். உ மரத்தினு லானவன் சிங்கத்தைப் போல் கர்ச்சித்துள்ளான். விரும் பும் பசுவில் பந்தமான காளைபோல் அவன் முழங்கு கிறுன், நீ விருஷபன், உனது எதிரிகள் வலிமையற்றவர் கள், பகை வெல்லும் உனது பலம் இந்திரனது போலா கும். ந பசுக்கூட்டத்தில் பலத்தினுல் புலனுகும் விருஷ பத்தைப் போல் பசு நாடி பொருள் ஜயித்து நீ முழக் கஞ்செய். எங்கள் எதிரிகளின் இருதயத்தை துன்பத் தால் துளை; எங்கள் எதிரிகள் துரத்தப்படட்டும். அவர் கள் கிராமங்களை நீங்கட்டும். ச எதிரிகளைப் பூரணமாய் ஜயித்து ஒங்கும் நாதம் செய்பவனுய் பற்றவேண்டுபவர் களைப் பற்றி நீ எங்கும் விசாலமாய் நோக்கவும், துந்து பியே! உனது திவ்யமான வாக்கை முழக்கஞ் செய். அறிஞுனை நீ எதிரிகளின் செல்வத்தைக் கொண்டு வா. ரு துந்துபியின் தூரஞ்செல்லும் ஓசையின் முழக்கத் தைச் செவியுற்று, எதிரியின் ஸ்திரீ அலறி, கோஷத்தால் பதறி, பயங்கர ஆயுதங்களின் போரில் பயமுடனுகி, அவளது மகன் கையைப் பற்றி அவனிடம் ஓடட்டும். சு துந்துபியே! நீ முதன்மையாய் உனது சுருதியைச் சொல்லு; சோதி வீசும் நீ புவியின் எல்லையில் பேசு, நீ எதிரிகளின் சேனையில் விரிவுடன் உனது வாய்களைத் திறந்து சுந்தரமாயும் சுத்தமாயும் துந்துபியே! நீ தொனி. எ இந்த புவி சோதிக்கு நடுவே உனது கோஷமாகுக; துரிதமாய் உனது ஓசைகள் தனித்தனி யாய் செல்க. கர்ச்சி இடி. உனக்கு நண்பர்கள் ஜயிக்க

நல்ல பந்துவாகி நீ உயரிய மொழியை முழங்கு.
அ அறிவுகளால் அமைக்கப்படும் அவன் தனது மொழி
யைச் சொல்லட்டும்; நீ வீரர்களின் ஆயுதங்களைத்தூண்டு.
நீ இந்திரர்களுடன் இணைந்து வீரர்களையழை; நண்பர்க
ளால் எதிரிகளை யடியோடழி. கூ கர்ச்சித்து நன்கு
கூறுபவனுகி வீர சேனையுடன் எங்கும் பகிரங்கஞ் செய்து,
கிராமங்களில் கோஷஞ் செய்பவனும் சிறப்பு ஜயிப்பவ
னும் வழிகளையறிபவனுமான நீ இருஇராஜர்களின்—சம
ரில் வெகு பலர்களுக்கு நீ புகழை விபாகஞ் செய்கிறுய்.
க0 சிரேயசு நாடி செல்வஞ் ஜயித்து அதிசக்தியுடனை
நீ சமர் ஜயித்து நீ பிராமணனுல் கூர்மையாகிறுய், ஸாத
னத்திலுள்ள ஸோமத் தண்டுகளில் பொழியச் செய்யும்
சிலைபோல், துந்துபியே, எதிரி செல்வம் தேடி அவர்க
ளது பொருளில் நடனஞ் செய். கக எதிரிகளை
ஜயித்து, சிதைத்து, அழித்து, பகைசனங்களைக் கொன்று
பசுக்களை நாடி ஜயிப்பவனும் ஒங்குபவனும் மந்திரத்தை
மொழிபவன்போல் உனது மொழியை முழங்கு. எதி
ரியை ஜயிப்பதர்க்கு நீ இங்கு பலத்தைப் பாடு.
க௨ அசையாப் பொருள்களை—அலறச் செய்து, அமர்க்
களங்களில் அடிக்கடி பாய்ந்து நிந்திப்பவர்களை ஜயித்து
எதிர்ப்பற்று இந்திரனுல் காப்பாகும் நீ எங்களது சபை
களை கவனித்து எதிரிகளின் இருதயங்களை எதிர்க்க நீ
துரிதஞ் செல். [ரு. ௨0. க—க௨]

கசுஉ துந்துபி [பிரமன்—வானஸ்பத்யன்]

க துந்துபியே எதிரிகளில் வேற்று மனம் வேற்று
இருதயத்தை முழங்கு. நாங்கள் எதிரிகளில் பரஸ்பரம்
வெறுப்பை திகைப்பை பயத்தை வைக்கிறோம்; துந்

கசுஉ. கருத்து. துந்துபி முழக்கம் ஜய சின்னமாகும்.

துபியே! அவர்களைத் தொலை. உ நெய் யளிக்கப்படுங் கால், எதிரிகள் கண்ணிலே கருத்திலே இருதயத்தில் நடு நடுங்கி கலங்கிக் கதறி ஓடுவார்களாக. ந வனஸ்பதி யால் செய்யப்பட்டு சருமங்களால் சேர்ந்து விசுவகோத் திரமாகி நெய்யினால் நனையும் நீ எதிரிகளுக்கு பயத்தை இயங்கு. ச புருஷனால் வன மிருகங்கள் பயமாவது போல் துந்துபியே! நீயுமப்படி பயஞ் செய்து கர்ச்சித்து எங்கள் எதிரிகளை கலக்கமுடனாக்கவும், அப்பால் அவர் களது கருத்துக்களை குழப்பம் செய். ரு ஆடுகளும் அஜங்களும் ஓநாயினால் அதி அச்சமாகி ஓடுவனபோல் துந்துபியே! நீயுமப்படி கர்ச்சித்து எங்கள் எதிரிகளை கலக்கமுடனாக்கு, அப்பால் அவர்களது கருத்துக்களைக் குழப்பஞ் செய். சா கருடனில் பறவைகள் எல்லாம் தினந்தோறும் பயமுடனாவனபோல் சிங்கத்தின் கர்ச் சனைபோல் நீயுமப்படி கர்ச்சித்து எதிரிகளை கலக்கமுட னாக்கவும், அப்பால் அவர்களது கருத்துக்களைக் குழப் பஞ் செய். எ சங்கிராமத்தின் தலைவர்களான எல்லா தேவர்களும் துந்துபியாலும் மான் சருமத்தாலும் எங்க ளது எதிரிகளையெல்லாம் அச்சமுடனாக்கியுள்ளார்கள். அ இந்திரன் விளையாடும் பாதகோஷத்தின் சாயையால் தூரத்தில் அணிவகுத்துச் செல்லும் எங்கள் எதிரிகள் சித்தங் கலங்குவார்களாக. கூ துந்துபி வில் நாண் விசைகளுடன் எல்லாத் திசைகளிலும், அபஜயமுடன் செல்லும் எங்கள் பகைப் படை கும்பல்களிலும் தொனிக் கட்டும். க0 ஆதித்தியனே! அவர்களின் கண்ணைப் பிடுங்கு; கதிர்களே அவர்களை அநுசரியுங்கள்; அவர் களுக்குக் கைவீரியம் சென்றுவிட்டதால் அவர்கள் தங் கள் பாதபந்தங்களை பிணைக்கட்டும். கக மருத்துக் களான நீங்கள் உக்கிரர்களான பிருசினி மக்கட்களான

நீங்கள் நண்பனான இந்திரனுடன் எங்கள் எதிரிகளைக் கொல்லுங்கள். இராஜனான ஸோமன், இராஜனான வருணன் மகாதேவர், மிருத்யு இந்திரன்—இப்பெரியார்களின் சேனைகள். கஉ சூரிய கொடியுடன் ஒரே சித்தமுள்ள தேவர்களின் இச்சேனைகள், எங்கள் எதிரிகளை ஜயிப்பார்களாக. ஸ்வாஹா. [ரு. உக. க—கஉ]

கசுச ஜ்வரம் [பிருகவங்கிரன்—தகம் நாசனன்]

க அக்கினி ஜ்வரத்தை நீக்கட்டும், ஸோமன், ஸோமஸாதனம், புனித பலமுள்ள வருணன், வேதி, தருப்பை, சோதியுடனாகும் ஸமித்து—ஜ்வரத்தை நீக்கட்டும் : துவேஷங்கள் வெகு தூரமாகுக. உ எல்லா மனிதர்களையும் மஞ்சளாக்கும் நீ, அனல்போல் எரித்து அழிக்கும் நீ, ஜ்வரமே, நீ இரஸமற்றாகவும் ; நீ அகத்திலோ ஆழத்திலோ சென்று விடு. ௩ கடுமையாயும் கொடுமையாயும் அருணனைப்போல் அழிப்பதாயுமான ஜ்வரத்தை விசுவ வீரியந் தரிக்கும் 1 நீ கீழே வெகுதூரந் துரத்து. ச நான் ஜ்வரத்துக்கு வணக்கமளித்து அதைக் கீழே வீழ்த்துகிறேன் ; சகம்பரத்தின் முஷ்டியாலடிக்கும்—ஜ்வரம்—மஹா விருஷனுக்கு மறுபடியுஞ் சென்றுவிடட்டும். ரு ஆனைதவீடு முஜவந்தமாகும் 2, அவளது நிலயம் மஹா விருஷமாகும் 3, ஜ்வரமே நீ—பிறக்கும் உன்னைப் போலுள்ள அனைத்துமான—நீ பல்ஹிகங்களில் 4 நிலயமாக வசிக்கிறாய். சு ஜ்வரமே, ஸர்ப்பமே விஷஜ்ஜவரமே அங்கமற்றவனே நீ வெகு தூரமாகவும், இசையும் தாசியைப் பற்று. உனது வச்சிராயுதத்தால் அவனை

1 ஒரு மூலிகையின் பெயர். குஷ்டம். விசுவதா வீரியன். 2 ஒரு மலை. 3 பலமுள்ள நிலயம். 4 சில வன சனங்களிலே.

கசுரு. கருத்து· துந்துபி மனத்தைக் கலக்கும்.

யதி. எ ஜ்வரமே! முஜவந்தம் பல்ஹிகங்களுக்குச் செல்லு: சரஸமான சூத்திர ஸ்திரீயை நாடும் ஜ்வரமே, நீ அவளைக் குலுக்கு. அ தூரஞ்சென்றுவிடு, உனது பந்துவைப் புசி: மஹாவிருஷர்களை முஜவந்துக்களைப் புசி: நான் அந்த நிலங்களை ஜ்வரத்துக்கு—அவளது நிலயங்கள் என அறிவிக்கிறேன்; இந்த நிலங்களை மற்றவர்களது என ஜ்வரத்துக்கு அறிவிக்கிறேன். கூ நீ அந்நிய நிலத்தில் இன்பமாவதில்லை; வசியமான நீ எங்களுக்கு மங்கள மளிப்பவளாகவும்; ஜ்வரம் செல்வதர்க்குத் தயாராளுள், அவள் பல்ஹிகர்களினிடம் சென்றுவிடுவாள். க0 நீ சீதமானால் பிறகு சூடு செய்பவளாகி, இருமலுடன் நடுக்கத்தையுஞ்செய்கின்றாய்; ஜ்வரமே உனதாயுதங்கள் அச்சமளிப்பவையாகும்; அவற்றுடன் நீ எங்களை நீங்கு. கக கபம் க்ஷயம் இருமல்—இவர்களை நீ உனது நண்பர்களாக செய்து கொள்ளாதே; அங்கிருந்து மறுபடியும் இங்கு வராதே, ஜ்வரமே! இப்படி நான் உன்னைக் கேட்டுக் கொள்கிறேன். கஉ ஜ்வரமே! உனது சகோதரனை கபத்துடன் சகோதரியான இருமலோடு உறவான சரும நோயுடன் நீ வேறு ஜனத்தைச் சேர். கங நீ மூன்றாவது நாள் ஜ்வரத்தையும் மாறிமாறி வருவதையும், சதா ஜரத்தையும் சரத்கால ஜ்வரத்தையும், சீதத்தையும் சூட்டையும் மழை கிரீஷ்ம ஜ்வரத்தையும் துரத்து. கச நாங்கள், சனத்தையும் செல்வத்தையும் செலுத்துவதுபோல் ஜ்வரத்தை காந்தாரி முஜவந்தி அங்க மகதங்களுக்கு போகச்செய்கிறோம். [ரு. உஉ. க—கச.]

[கசுரு. புழு நாசம் [கண்வரிஷி—கிருமி ஜம்பனுய பிரார்த்தனை]

க எனக்கு ஜோதியும் புவியும் இழைக்கப்பட்டுள்ளன;

---

கசுச கருத்து—மருந்தினால் சுரம் நீக்கு.

ஸரஸ்வதியும் எனக்கு இழைக்கப்பட்டுள்ளாள் : இந்திரனும் அக்கினியும் எனக்கு இழைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் கிருமியை யழிக்கவேண்டும், என நான் விரும்புகிறேன். உ இந்திரனே தனபதியே, இக்குமாரனின் கிருமிகளைக் கொல்லு, எனது உக்கிரமான வாக்கால் எல்லாக் கிருமிகளும் அழிந்துளார்கள். ங நாங்கள் கண்களைச் சுற்றிச் செல்லும் கிருமியையும் மூக்கைச் சுற்றிச் செல்லும் கிருமியையும் பற்களின் நடுவிற் செல்லும் கிருமியையும், நிர்மூலஞ் செய்கிறோம். ச இரு ஒரே ரூபமுள்ளவை, இரு விரூபமுள்ளவை, இரு கருப்பு இரு சிகப்பு பழுப்பு பழுப்புச்செவியுள்ளது ஓநாய் கழுகு— இவை அனைத்துங் கொல்லப்பட்டுள்ளன. ரு நாங்கள் வெண்பக்கமுள்ள கிருமிகளை, வெண்மைகளுடன் கருமையானவற்றை, விசுவரூபங்களுள்ளவைகளை நாசமாக்குகிறோம். சு விசுவத்தால் காண்பவனும் கண்டுங் காணாதனவற்றை யழிப்பவனும் எல்லாக் கிருமிகளையுங் கொல்பவனுமான கதிரவன் கிழக்கில் உச்சமாகின்றான். எ யேவாஷங்கள் கஷ்கஷங்கள் ஏஜத்கங்கள்[1] சிபிவித்தனுகள்,[1] காணும் காணாத கருமி—இவையனைத்தும் கொல்லப்படட்டும். அ கிருமிகளின் ஏவஷன், கொல்லப்பட்டுள்ளான். கிருமி நதனிமனும்[1] கொல்லப்பட்டுள்ளான்; நான் கல்வ தானியங்களை திரிகையினால் போல் கிருமிகளைப் பொடிப்பொடியாக்கியுள்ளேன். கூ நான், மூத்தலை முத்திமிலை பலநிறம் வெண்மையான, கிருமியின் நரம்புகளைக் கிழிக்கிறேன், அதன் தலையையுந் துண்டமாக்குகிறேன். க௦ கிருமிகளே, நான் உங்களை அத்திரி கண்வன் ஜமதக்கினியைப்போல் கொல்லட்டும். நான் அகஸ்தியனது பிரம்மத்தால் கிருமிகளை அடியோடொழிக்

1. கிருமி

கிறேன். கக கிருமி இராஜா கொல்லப்பட்டுள்ளான். இவர்களது தலைவனும் அழிக்கப்பட்டுள்ளான்; தாய் சகோதரன் சகோதரி இறந்த கிருமி யழிக்கப்பட்டுள்ளான். கஉ கிருமி அருகிலுள்ளவையும் அதன் அதி அருகிலுள்ளவையும், வெகு சிறியனவாயுமுள்ள அக்கிருமிகள் எல்லாம் கொல்லப்பட்டுள்ளார்கள். கங நான் ஒவ்வொரு ஆண்பெண் கிருமியினுடைய சிரத்தை சிலையால் சிதறடிக்கிறேன். நான் அக்கினியால்—அதன் முகத்தை எரிக்கிறேன். [௫. உங. க—கங]

ககசு பிரார்த்தனை [அதர்வன்—பிரம்ம காமாத்மா]

க ஸவிதா தூண்டுபவையின் அதிபதியாவாள்; அவள் இந்த பிரம்மத்திலே இந்தக் கர்மத்திலே இந்தப் புரோஹிதத்திலே இந்நிலையான செயல் இந்தச் சித்தத்திலே இந்த சங்கற்பத்திலே இந்த ஆசிகளிலே, இந்த தேவர்களின் அழைப்பில் எங்களை இரட்சிப்பாளாக; ஸ்வாஹா! உ அக்கினி வனஸ்பதிகளின் அதிபதியாவான்; அவன் இந்தப் பிரம்மத்திலே..........................இரட்சிப்பானாக; ஸ்வாஹா! ந ஜோதியும் வானமும் அளிப்பவர்களது அதிபதியாவார்கள்; அவர்கள் இந்தப் பிரம்மத்திலே........ இரட்சிக்கப்பார்களாக; ஸ்வாஹா! ச வருணன் சலங்களின் அதிபதியாவான்; அவன்...................... ஸ்வாஹா! ௫ மித்திரன்-வருணன் மழைகளின் அதிபதியாவார்கள்; அவர்கள் இந்தப் பிரம்மத்திலே.......... ........ஸ்வாஹா! சு மருத்துக்கள் மலைகளினதிபதியாவார்கள்; அவர்கள்.........................ஸ்வாஹா! எ ஸோமன் செடி கொடிகளின் அதிபதியாவார்கள்; அவர்கள்....................ஸ்வாஹா! அ வாயு வானத்தி

ககரு. கருத்து. கிருமியால் உலகம் மழியும்.

னதிபதியாவான்; அவன்..........................ஸ்வாஹா! கூ சூரியன் கண்களினதிபதியாவான்; அவன்................ ஸ்வாஹா! ௧௦ சந்திரன் நட்சத்திரங்களின் அதிபதியாவான்; அவன்...............ஸ்வாஹா! கக இந்திரன் ஜோதியின் அதிபதியாவான்; அவன்...........ஸ்வாஹா! கஉ மருத்துப்பிதா பசுக்களின் அதிபதியாவான்; அவன் ................ஸ்வாஹா! கங மிருத்யு பிரஜைகளின் அதிபதியாவான்; அவன்..........................ஸ்வாஹா! கச யமன் பிருதுக்களின் அதிபதியாவான்; அவன்........ ........ஸ்வாஹா! கரு உயரியப் பிதுருக்கள்............ ...........ஸ்வாஹா; கசு தாழ்மையான பிதுருக்கள் ................ஸ்வாஹா! கஎ பிதுருக்கள், பிதாமஹர்கள்....... ....எங்களை இரட்சிப்பார்களாக; ஸ்வாஹா! [ரு. உச. க—கஎ]

கசுஎ மக்கட்பேறு [பிரமன்—யோனி கருப்பன்]

க புருஷனை நான், பர்வதத்தினின்று ஜோதியின் மூலத்தினின்று அங்கம் அங்கத்தினின்று ஒன்று சேர்ந்து கருப்பத்தில் இரேதசை சரத்தில் சிறகுபோல் ஸ்தாபிப்பேனாக. உ இப்பெரிய புவியானது பொருள்களின் கருவை தரிப்பதுபோல் நான் உனது சிசுவை உன்னில் ஸ்தாபனஞ் செய்கிறேன்; நான் அதன் துணைக்கு உன்னை அழைக்கிறேன். ௩ ஸினீவாலியே, கருவை ஸ்தாபி. ஸரஸ்வதியே சிசுவைச் ஸ்தாபனஞ் செய்; கமல மாலைகளுள்ள இரு அசுவினிகள் உனது கருவை ஸ்தாபிப்பார்களாக. ச மித்திரனும் வருணனும் உனது கருவை ஸ்தாபிப்பார்களாக; பிருஹஸ்பதி தேவன் உனது கருவை ஸ்தாபிப்பார்களாக; இந்திரனும் அக்கினியும்

---

கசுசு. கருத்து. தேவர்கள் அரசு புரியும் தேசங்கள் எவை?

உனது கருவை, தாத்ரு உனது கருவை ஸ்தாபிப்பார்களாக. ரு. விஷ்ணு யோனியை பக்குவமாக்கட்டும், துவஷ்டா ரூபங்களை யலங்கரிக்கட்டும்; பிரஜாபதி பொழியட்டும்; தாத்ரு உனது கருவை ஸ்தாபிக்கட்டும். சு வருணனுன இராஜனறிவதும் தேவி ஸரஸ்வதி யறிவதும் விருத்திரனழிக்கும் இந்திரனறிவதுமான, கருக்கரணத்தை நீ பருகுவாயாக. எ நீ ஒஷதிகளின் கருப்பம், வனஸ்பதிகளின் கருப்பம், விசுவப்பொருளின் கருப்பம். அக்கினியே! நீ இங்கு கருவை ஸ்தாபனஞ் செய். அ நீ எழுந்திரு. வீரனுகவும். கருப்பாயசத்தில் கருவை ஸதாபி. நீ வீரியன், நீ வீரியமுள்ளவன்; நாங்கள் உன்னை இங்கு பிரஜைக்காக அழைக்கிறோம். கூ பார் ஹத்ஸாமே நீ பக்குவமாகவும்; உன் மூலஸ்தானத்தில் கருச்சாயட்டும்; தேவர்கள் சோமபானர்கள் உனக்கு உனதும் எனதுமான ஒரு மகனை யளித்துள்ளார்கள். ய தாத்ருவே இந்த ஸ்திரீயினங்கத்தில் உயரிய ரூபத்தால் பத்தாவது மாதத்தில் பிறக்க புருஷப் பிரஜையை ஸ்தாபனஞ்செய். கக துவஷ்டாவே................ஸ்தாபனஞ்செய். கஉ ஸவிதாவே...............ஸ்தாபனஞ்செய். கங பிரஜாபதியே!............................ஸ்தாபனஞ்செய். [ரு. உரு. க—கங]

கசுஅ யக்ஞம். [பிரமன்—வாஸ்தோஷ்பத்யாதர்கள்.]

க யக்ஞத்தில் யஜுக்கள், ஸமிதை சுவாஹா! அறிவுள்ள அக்கினி இங்கு உங்களை இணைப்பானுக. உ முன் அறியும் மஹிஷியான தேவஸவிதா இந்த யக்ஞத்தில் சேர்ப்பானுக. சுவாஹா! ங முன் அறியும் இந்திரன் இந்த யக்ஞத்தில் உக்தம் உற்சாகங்களை உயரிய சேர்ப்புக்களை

கசுஎ. கருத்து. விவாக சாந்தி கால மந்திரங்கள்.

சேர்ப்பானாக. சுவாஹா! ச யக்ஞத்தில் ஆக்ஞைகளை நிவிதிகளை சுவாஹா! சிஷ்டர் களாகி ஒன்று சேர்ந்து மனைவிகளுடன் இங்கு வாருங்கள். ரு மருத்துக்களே! யக்ஞத்தில் சந்தங்களை சுவாஹா! மகனைத் தாய்போல் சேர்ந்து இங்கு பூரணமாக்குங்கள். சு இங்கு அதிதி தருப்பையுடன்—கலத்—திவலைகளோடு யக்ஞத்தை விசாலஞ்செய்து வந்துள்ளான்; சுவாஹா. எ விஷ்ணு வெகு விதமாய் இந்த யக்ஞத்தில் தவங்களை நன்கு சேர்ப்பவர்களை சேர்ப்பானாக; சுவாஹா. அ துவஷ்டா இப்பொழுது வெகு விதமாய் ரூபங்களை நன்கு சேர்பவர்களை இந்த யக்ஞத்தில் சேர்ப்பானாக; சுவாஹா! கூ பகன் அவனுக்கு இப்பொழுது ஆசிகளை—ஒன்று—சேர்ப்பானாக; முன் அறியும் அவன் நன்கு சேர்பவர்களைச் சேர்ப்பானாக; சுவாஹா! கo ஸோமன் இந்த யக்ஞத்தில் பால்களை, நன்கு சேர்பவர்களைச் சேர்ப்பானாக; சுவாஹா! கக இந்திரன் இந்த யக்ஞத்தில் நன்கு சேர்பவர்களை வெகு விதமாய் வீரியங்களை ஒன்று—சேர்ப்பானாக; சுவாஹா! கஉ அசுவினிகளே! யக்ஞத்தை விருத்தி செய்பவர்களாய் வஷட் அழைப்பு பிரம்மத்துடன் இங்கு வாருங்கள்; பிருஹஸ்பதியே! பிரம்மத்தோடு இங்கு வா; யஜமானனுக்கு இந்த யக்ஞம். இங்கு சுவர்க்கமாகும்: சுவாஹா! [ரு. உசு. க—கஉ.]

கசுக பிரார்த்தனை [பிரம்மா—அக்கினி]

க இவனது சமித்து உயரமாயுள்ளது; அக்கினியின் அதி ஒளியுடனான ஜோதியான சுவாலைகள் உச்சமாயுள; அவன் நற்தோற்றமுள்ளவன், தனமகனுடனாகுமவன் தநூநபன், அவன் பலகையுள்ள அசுரனாவான்.

கசுஅ. கருத்து. உங்கள் செயலே உங்களுக்கு சுவர்க்கம்,

உ அவன் தேவர்களில் தேவனுவான்; தேவன் வழிகளை தேனாலும் நெய்யாலும் நனைக்கிறான். ங அவன் தேனால் யக்ஞத்தை யடைகிறான்; நராசம்ஸன் இனிமை யளிப் பவனுவான்; நலஞ்செய்யும் அக்கினி யாவான்; விசுவ நன்மைகளுள்ள தேவஸவிதாவாவான். ச இங்கு அவன் எல்லா நெய்களுக்கும் துதியால் வணங்கப்படுபவனாய் திடத்துடன் இங்கு வருகிறான். ரு அக்கினி யக்ஞங் களில் அதியுத்தமச் செயல்களில் ஸாதனங்களுக்கு வரு கிறான். அவன் அக்கினியின் மகிமையை யக்ஞஞ் செய் வானாக. சு. அவன் இனிமையான யக்ஞங்களில் கடந்து செல்லுகின்றான்; அங்கு வசுக்களும் செல்வமளிப்பவர் களும் விளங்குகிறார்கள். எ எப்போதும் தேவிகளான கதவுகள் அவனது விரதத்தை வெகுவிதமாகக் காக்கின் றன. அ உஷையும் தினமும், விசால விரிவுடனான அக் கினியின் நிலயத்துடன் அதனைத் தலைமை வகித்து பூஜ்யர்க ளாயும் பொழிபவர்களாயும் அருகில் வருவார்களாக. இந்த நாசமாகாத எங்களின் யக்ஞத்தை இரட்சிப்பார்க ளாக. கூ தேவ ஹோதாக்களே அக்கினி நாவுடன் உயரமான இந்த யக்ஞத்தைப் போற்றுங்கள்; நாங்கள் வெற்றியுடன் யஜிக்க நீங்கள் போற்றுங்கள்; மூன்று தேவிகளான போற்றப்படும் இடை, ஸரஸ்வதீ, பெரிய பாரதீ இந்தத் தருப்பையிலுட்கார்வார்களாக. க0 தேவதுவஷ்டாவே, அற்புதமாயும் செல்வதுமிகுந்து உணவு நிறைவதுமான துரிதமாய் பாயும்—இரேத ஸின்—நடுவை நீ திறந்துவிடு. கக வனஸ்பதியே நீ தானகவே இன்பமாகி செல்: அமைதியாக்கும் அக்கினி அவியை அமரர்களுக்கு இனிமை செய்வானாக. கஉ அக்கினியே! சுவாஹா! ஜாதவேதஸனே! நீ இங்

திரனுக்கு யக்ஞத்தைச் செய்; எல்லா தேவர்களும் இந்த அவியை யநுபவிப்பார்களாக. [ரு. உஎ. க—கஉ]

களo யக்ஞோபவீதம் [அதர்வன்—திருவிருத் தேவதை]

க நூறு சரத்கால தீர்க்காயுசுக்கு அவன் ஒன்பது பிராணன்களை ஒன்பதுடன் ஒன்று சேர்க்கிறான்; பொன்னில் மூன்று; வெள்ளியில் மூன்று; இரும்பில் மூன்று தவத்தால் சூழ்ந்துள்ளன. உ அக்கினி, சூரியன், சந்திரன், புவி, சலம், ஜோதி, வானம் பிரதிசைகள், திசைகள், ருதுக்களுடன் சேரும் வருஷ பாகங்கள் இந்த மும்மடியால், மூன்றால், எங்களை விடுவிப்பார்களாக. ந மும்மடியில் மூன்று போஷங்கள் ஆசிரமாயுள; பூஷணன், அதை தேன் பாலால் நனைப்பானாக; உணவு மிகுதி புருஷ மிகுதி பசு மிகுதி—இவை இங்கு ஆசிரிதமாகட்டும். ச ஆதித்தியர்களே! இவனை பொருள்களோடு நன்கு பொழியுங்கள்; அக்கினியே! ஓங்கும் நீ இவனை ஓங்கச் செய். இந்திரனே! இவனை வீரத்துடன் சேர்; புஷ்டி செய்யும் மும்மடி இவனுக்கு ஆசிரிதமாகட்டும். ரு விசுவந்தாங்கும் புவி பொன்னால்—மஞ்சளால்—உன்னை காக்கட்டும். அக்கினி அயத்துடன் இணைந்து உன்னைக் காப்பானாக; வெள்ளியான—வெண்மை—செடி கொடிகளுடன் சேர்ந்து நல்மன முண்டாக்கும் பலத்தை உனக்களிக்கட்டும். சு இந்தப் பொன் பிறப்பில் மும்மடியாய்த் தோன்றும்; ஒன்று அக்கினிக்குப் பிரியமாகும்;—மற்றொன்று இம்சையான சோமனின்—அங்கத்தினின்று—வீழும்; மூன்றாவது அறிவு மிகும் சலங்களின் இரேதஸாகுமெனச் சொல்லுகிறார்கள்; இந்த மும்மடித் தங்கம் தீர்க்காயுசுக்கு உனக்காகட்டும். எ ஜமதக்கினியின் மும்மடி

கசுக. கருத்து—தேவயக்ஞம் தூய்மையான வழி.

ஆயுசு, கசியபனின் மும்மடி ஆயுசு, அமுதத்தின் மும்மடி காட்சி, மும்மடி ஆயுசை நான் உனக்குச் செய்துள்ளேன்.
அ மூன்று கருடர்கள் மும்மடியுடன் செல்லுங்கால் அதி பலமுள்ளவர்களா-வார்கள். அதனால் அவர்கள்—ஏகாட்சரத்தை அடைந்து அமுதத்தால் இணைந்து எல்லாத் துன்பங்களையும் நீக்கி மிருத்யுவைத் தூரத்துவார்கள்.
கூ ஜோதியினின்று சொர்ணம்—மஞ்சள்—உன்னைக் காத்திடுக; வெள்ளி உன்னை நடுவினின்று காத்திடுக; அயமயம் உன்னைப் புவியினின்று காத்திடுக; இப்-புருஷன்—தேவபுரங்களுக்கு முன் சென்றுள்ளான்.
க0 இவை தேவர்களின் முப்புரங்களாகும்; இவை உன்னை எங்கும் காக்கட்டும்; நீ இவற்றைப் பற்றுபவனாகி வன்மை தரித்து உன்னை துவேஷிப்பவனுக்கு உத்தமனுயாகவும்.
கக முதன்மையாய் தேவபுரமான அமுதமான பொன்னை பூர்வமாய் தரிக்கும் தேவனுக்கு பத்து விரிவுகளுடன் நான் வணக்கமளிக்கிறேன்.
கஉ அரியமான் உன்னைக் கட்டுவானாக; பூஷணன் பிருஹஸ்பதி உன்னைக் கட்டுவானாக; தினப்பிறந்தவனின் எந்நாமமுண்டோ அந்த நாமத்தால் நாங்கள் உன்னை எப்போதும் கட்டுகிறோம். கங ருதுக்களுடன் ருது காலங்களுடன், வருஷத்தின் எல்லா தேஜஸோடும், ஆயுசுக்கு வன்மைக்கு உன்னை நாங்கள் இறுகக் கட்டுகிறோம்.
கச நெய்யினின்று எடுக்கப்பட்டு தேனால் தோய்ந்து புவியைப்போல் திடமாகி, உறுதியுடன் ஆதரவாகி எதிரிகளைப் பிளந்து அவர்களைப் பாழாக்கும் நீ மகத்தான ஸௌபாக்கியத்துக்கு என்னில் ஏறு. [ரு. உஅ. க—கச]

---

கஎ0 கருத்து. பொன் வெள்ளி அயமென்னும் முக்குணங்களோடு பொருந்தி வாழு.

கஎக ஜாதவேதஸன். [சாதனன்—ஜாதவேதஸன்]

க ஜாதவேதஸனே முன்புறம் பக்குவமாகி நீ வசி; அக்கினியே நிகழும் இதை நீ யறி; நீ வைத்தியன்; சிகிச்சை செய்பவன்; நாங்கள் உன்னால் பசு குதிரை புருஷனை யடையவேண்டும். உ எல்லா தேவர்களுடனிணைந்து அக்கினியே! ஜாத வேதஸனே நீ இதைச் செய்; எங்களுக்குத் துன்பஞ் செய்பவனது எங்களைத் தின்பவனது இந்த அரண் விழவேண்டும். ௩ அக்கினி ஜாதவேதஸனே! அவனுடைய இந்த அரண் விழுவதற்காக நீ அமரர் அனைவர்களுடன் சேர்ந்து நீ அதைச்செய். ௪ அவனது கண்களைக் குத்து; அவனது இருதயத்தைப் பிள. அவனது நாவைப் பிடுங்கு: அவனது பற்களைப் பொடியாக்கு: அக்கினியே! காளையே அவனைத் தின்னும் பிசாசத்தை நீ பாழாக்கு. ௫ அக்கினியே! அவனது தேகத்தின் துண்டை எதிரிகள் பற்றி யிருந்தாலும் எடுத்துச் சென்றிருந்தாலும், தின்றிருந்தாலும் அதை—யெல்லாம்—நீ அறிந்து மறுபடியும் இங்கு கொண்டு வா. நாங்கள் அவனது தேகத்துக்கு மாமிசத்தையும் பிராணனையும் அளிக்கிறோம். ௬ பக்குவம் பாதி பக்குவம் அதிபக்குவமான எனது புசிப்பில் துன்பஞ் செய்பவனுக்கு பிசாசங்கள் தங்களது தேகம் சந்ததியால் பச்சாதாபமாகட்டும்; இவன் நோயினின்று நீங்குவானாக. எ பாலில் மந்தனத்தில் பயிரிடா தானியத்தில் புசிப்பில் துன்பஞ் செய்திருந்தால் அதற்கு பிசாசங்கள்................நீங்குவானாக. அ யாதுக்களின் சயனத்தில் சயனமாகும் எந்த மாமிசம் புசிப்பவன் சலம் பருகுங்கால் துன்பஞ் செய்தால் அவனுக்கு பிசாசங்கள் ................நீங்குவானாக. ௯ யாதுக்களின் சயனத்தில் சயனமாகும் எந்த மாமிசம் புசிப்பவன் என்னை

இரவும் பகலும் துன்பஞ் செய்கிறுனே அவனுக்கு பிசாசங்கள்...............நீங்குவானுக. ௧௦ அக்கினியே! ஜாதவேதஸனே! மாமிசம் புசித்து உதிரமயமாய் மன மழிக்கும் பிசாசத்தை நீ கொல்லு; வீரியனுன இந்திரன் அவனை வச்சிராயுதத்தால் வீழ்த்தட்டும்; தீரனுன ஸோமன் அவனது சிரத்தைத் துண்டிக்கட்டும். ௧௧ அக்கினியே நீ யாது தானர்களை சதாகாலம் கொல்லுகிறுய்; அரக்கர்கள் அமர்களில் உன்னை அழிக்க முடியவில்லை; மாமிசம் புசிப்பவர்களை நீ நிர்மூலமாக்கு; உனது திவ்ய மான ஆயுதத்தினின்று அவர்கள் தப்பாமலாவார்களாக. ௧௨ ஜாதவேதஸனே எடுத்து வகித்துச் சென்றதை நீ ஒன்று கொண்டு வா; அவனது அங்கங்கள் ஓங்கட்டும், இந்த புருஷன்—ஸோமத் தண்டுபோல் பூரணமாவானுக. ௧௩ ஜாதவேதஸனே ஸோமக் கொடிபோல் இவன் பூரணமாவானுக, அக்கினியே அவனைச் செழுமை செய்து யக்ஷ்மத்தினின்று நீக்கவும்: அவன் வாழ்வா னுக. ௧௪ அக்கினியே இவை பிசாச மழிக்கும் ஸமித்துத் துண்டங்களாகும்; ஜாதவேதஸனே அவற்றை நீ அனு பவி, அங்கீகரி. ௧௫ அக்கினியே நீ சுவாலையுடன் தார்ஷ்டாக ஸ்மித்துத் துண்டுகளை யங்கீகரி; இந்த மனி தனது மாமிசத்தைப் புசிக்க விரும்பும் மாமிசபட்சகன் தனது ரூபத்தை விட்டு விடுவானுக. [௫. ௨௯. ௧—௧௫]

௧௭௨. தீர்க்காயுசு. [ஆயுஷ்காம உன்மோசனன்—ஆயுர்தேவதை.]

௧ உனது சமீபங்கள் சாமிப்யங்களே; உனது தூரங்க ளும் சாமிப்யங்களே; இங்கு சமீபத்திலிரு இங்கு தங்கு. நீங்காதே; பூர்வ பிதுருக்களை யநுசரிக்காதே. நான் உனது பிராணனை இறுகக் கட்டுகிறேன். ௨ உற்றுனே மற்றுனே உன்னை எந்த சனம் ஆக்கிர மித்திருந்தாலும்

நான் உனக்கு எனது மொழியால் பிரமோசனம் விமோசனத்தைக் கூறுகிறேன். ௩ உனது அசிந்தனையில் எந்தப் புருஷனுக்கும் ஸ்திரீக்கும் நீ தீமொழி சொல்லி துரோகஞ் செய்திருந்தாலும் நான் உனக்கு எனது சொல்லால் பிரமோசனம் விமோசனத்தைக் கூறுகிறேன். ௪ நீ, தாய் தந்தை செய்த குற்றத்தினால் சாய்ந்திருந்தாலும் நான் உனக்கு எனது சொல்லால் பிரமோசனம் விமோசனத்தைக் கூறுகிறேன். ௫ தாய் தந்தை சகோதரன் சகோதரி பக்குவமாக்கும் நோய்ப்பகையான ஔஷதத்தைப் பற்று; நான் உன்னை மூப்புவரை வசிக்கச் செய்கிறேன். ௬ புருஷனே! நீ எல்லா மனத்துடன் இங்கு தங்கு; இயமன் தூ இருதூதர்களை யநுசரிக்காதே: நீ ஜீவபுரங்களை யணுகு. ௭ ஒவ்வொரு சீவனின் அயனத்தையும் ஆரோஹணத்தையும் ஆக்கிரமிப்பையும் வழியின் உயரிய வகையையு மறிந்து, நீ அழைக்கப் படுவதால் மறுபடியும் வா. ௮ நீ பயப்படாதே; நீ மரிக்க மாட்டாய்; நான் உன்னை மூப்பு மரிப்பவனாய் செய்கிறேன்; உனது அங்கங்களினின்று யக்ஷ்மமான அங்கச் சுவரத்தை நீக்குகிறேன். ௯ அங்கஞ் சேதிப்பதாயும், அங்கச் சுவரமாயும் உனது இருதய நோயாயுமுள்ள யக்ஷ்மம் எனது மொழியால் ஜயிக்கப்பட்டு கருடனைப்போல் வெகுதூரம் பறந்து விட்டது. ௧0 உறக்கமற்ற விழிப்பு—போதம்—என்னும் ரிஷியும், சாக்கிரதையாயுள்ள எச்சரிக்கை—பிரதிபோதம்— எனப்படும் ரிஷியும், உனது பிராணனைக் காக்கும் இந்த இருவர்கள் இரவும் பகலும் உன்னைக் காப்பார்களாக. ௧௧ இந்த அக்கினி அருகுவதற்கு அருகன்; இங்கு உனக்கு சூரியன் உதயமாகட்டும்; நீ மிருத்யுவின் அதி ஆழமான கருங்கருமையினின்று உயரமாகி புறமாகவும். ௧௨ யமனுக்கு நமஸ்காரம்; மிருத்யுவுக்கு

நமஸ்காரமாகட்டும்; எங்களுக்குவழி காட்டுபவர்களுக்கும் பிதுருக்களுக்கும் நமஸ்காரம்; துன்பவிடுதலை யறியுமக்கினியை, இவன் துன்பமாகாமாலிருக்க நான் முன்னிலையில் வைக்கிறேன். க௩ பிராணன் வருக மனம் வருக; கண் வருக; பிறகு பலமும்—வருக; அவனது சரீரம் நன்குசேர்க. அவன்—தனது இருபாதங்காளால் திடமாய் நிற்பானாக. க௪ அக்கினியே, பிராணனும் கண்ணும் அவனைச் சேர்: திடத்தாலும் தேகத்தாலும் அவனை இணை; நீ அமுதத்தை அறிகிறாய்; அவன் இனிப் போகவேண்டாம்; அவன் இனி புவியின் கிருகத்திலிருப்பவனாக வேண்டாம். க௫ உனது பிராணன் தவற வேண்டாம், உனது அபானன் மறைய வேண்டாம்; தனது அதிபதியான சூரியன் இரசிமிகளால் மிருத்யுவினின்று உன்னை உச்சமாக்கட்டும். க௬ கட்டப்பட்டு அதிக மலறும் இந்த நாக்கு அகத்தில் பேசும். நான் அதனால் சுரத்தின் நூறு துன்பங்களையும் யக்ஷ்மத்தையும் நீக்கியுள்ளேன். க௭ இந்தப் புவி பிரியமிகுந்தது; தேவர்களின் உலகமாகும்; எவர்களாலும், ஜயிக்கப்படாதது. புருஷனே! இங்கு பிறக்குங்கால் எந்த மிருத்யுவுக்கு நிர்ணய மானாயோ அவனும் நாங்களும் உன்னை யநுசரித்தழைக்கிறோம்; நீ மூப்பின் முன் மரிக்காதே. [ரு. ௩௦. க—க௭]

௧௭௩ தண்டனை [ சுக்கிரன் கிருத்யாதூஷணன் ]

க உனக்கு பச்சைப் பாண்டத்தில் செய்யும் புன்மையையும் சேரும் தானியத்தில் பச்சை மாமிசத்தில் அவர்கள்

---

௧௭க-௧௭௨ கருத்து—அழிப்பேன் என்னும் சங்கற்பத்தை யடைந்து, மூப்புவரை வாழ்வேன் என்னும், திடசித்தமானால் நீங்கள் பூர்ணயுசு வாழ்வீர்கள்.

செய்யும்—புன்மையையும் நான் மறுபடியும் திருப்பி நீக்கு கிறேன். உ அவர்கள் உனக்கு சேவலில் அஜத்தில் கொம்புப் பசுவில் செய்யும்—புன்மையையும், அவர்கள் பெண் ஆட்டில் செய்யும் புன்மையையும் நான் மறுபடியும் திருப்பி நீக்குகிறேன். ௩ அவர்கள் பசுக்களின் ஒரு குளம் புள்ளவற்றில் இருவரிசையுள்ள—பசுக்களில்—கழுதையில் செய்யும்—புன்மையை நான் மறுபடியும் திரும்பச் செய் கிறேன். ச அவர்கள் அமூலம் நாசியில் செய்யும் இரகசிய—புன்மையை—உனது நிலத்தில் செய்யும்—புன்மையை நான் மறுபடியும் திரும்பச் செய்கிறேன். ரு துட்ட சித்தமுள்ளவர்கள் காருஹபத்தியம் பூர்வாக் கினியில் செய்யும் புன்மையை நான் மறுபடியும்—அங்கு திரும்பச்செய்கிறேன். சு அவர்கள் சபை சூதுபலகையில் சூதுகாயில் உனக்குச் செய்யும் புன்மையை நான் மறுபடி யும்—அங்கு—திரும்ப நீக்குகிறேன். எ அவர்கள் சேனை சரம் ஆயுதத்தில் உனக்குச் செய்யும்—புன்மையை நான் மறுபடியும்—அங்கு—திரும்ப நீக்குகிறேன். அ அவர் கள் உனக்கு சலத்தேக்கம், சுடலை, உனது ஸ்தானத்தில் செய்யும் புன்மையை நான் மறுபடியும் அங்கு—திரும்ப நீக்குகிறேன். கூ மனிதர் அஸ்தியில் அழிக்கும் அனலில் செய்யும்—புன்மையையும் கோரமாயும் எரிப்பதாயும் மாமிசம்புசிப்பதுமான—சுடரில்—செய்யும் புன்மையை யும் அவர்களில், மறுபடியும் திரும்ப நான் அதை நீக்கு கிறேன். க0 அவன் அதைச் சரியான வழியால் கொண்டு வரவில்லை. நாங்கள் அதைச் சரியான வழியால் செலுத்து கிறோம்; மானிடர்களே! அதீரனை அவன் அறிவின்மை யால் தீரர்களுக்கு இதைக் ஒன்று கொண்டு வந்துள்ளான். கக இதை—புன்மையைச்—செய்பவன் செய்ய முடிய வில்லை, அவன் தனது பாதம் அங்குலியைத் துன்பஞ்

செய்து கொண்டான் ; அபாக்கியமுள்ள அவன் பாக்கியமுள்ள எங்களுக்கு மங்களத்தைச் செய்துள்ளான். கஉ இந்திரன் தனது பெரிய பயங்கராயுதத்தால், புன்மை செய்பவனை, துக்கம் மறைத்து அளிப்பவனை, செடி கொடி மூலமுள்ளவனை தீச்சொல்லுக்கருகனை அழிப்பானாக. [ரு. ௩க. க—கஉ.]

ரு-வது காண்டம் முற்றிற்று

## களச—௩கரு.

களச துதி [அதர்வன்—ஸவிதா]

க ஆதர்வனு! மாலையில் கானஞ்செய் ; முழக்கமுடன் கானஞ்செய் ; பிரகாசமாய்—புலனுக்கு ; தேவ சவிதாவைப் போற்று. உ நதி நடுவே இருப்பவனையும் சத்தியமகனையும் இளைஞனையும், குற்றமற்ற மொழியுடன் நலனாகி நண்பனையு முள்ளவனைத் துதி. ௩ தேவ சவிதா அதி அநேகாமிருதங்களை எங்களுக்குத் தூண்டுக : இரு உயரிய கானங்கள் நன்றாய் கானஞ்செய்வதற்காகும். [கூ.க.க-௩.]

களரு இந்திரன் [அதர்வன்—ஸோமன் வனஸ்பதி]

க ரித்விக்குக்களே ! இந்திரனுக்காக சோமனைப் பொழியுங்கள் : சலத்தைச் சேருங்கள் ! இந்திரன் எனது அழைப்பையும் துதி செய்பவர்களது மொழிகளையும் செவிகொடுப்பான். உ மரத்தில் பறவை—சாய்வது—போல் சோம இரசம் சேரும் அதி உறுதியுள்ள நீ அரக்

---

கள௩ கருத்து—சேரார்களை சிதைத்துவிடு.

களச கருத்து—அதர்வ மகன் கனல் என்னும் அறிவின் ஆரோபமான அவன் சவிதா என்னும் சோதியை சேர்கிறான்.

கரான அரிகளை அகற்று. ௩ சோமனைப் பருகுபவனுக்கும் வச்சிராயுதந் தரிக்கும் இந்திரனுக்கும் சோமனைப் பொழியுங்கள்; அவன், சிறுவன், ஜயிப்பவன் அவன் அதிகந் துதிக்கப்படுந் தலைவனுவான். [சு. உ. க—௩.]

களசு காப்பு [ஸ்வஸ்த்யயன காமோ அதர்வன்—பலதேவர்கள்]

க இந்திரா பூஷணு! எங்களைப் பாலனஞ் செய்யுங்கள். அதிதியும் மருத்துக்களும் எங்களைக் காத்திடுக; ஏழு நதிகளே! சலங்களின் மகனே! எங்களைக்காருங்கள்; ஜோதியும்விஷ்ணுவும் எங்களைக் காத்திடுக. உ ஜோதியும் புவியும் எங்கள் விருப்பம்—பூர்த்தியாக—எங்களை பாலனஞ் செய்க: சோமஸாதனம் எங்களுக்குத் துணை புரிந்திடுக, சோமன் எங்களை துன்பத்தினின்று தளர்த்திடுக: சுபகையான தேவி சரஸ்வதி எங்களைக் காத்திடுக; அக்கினி தனது சிவகரமான துணைகளுடன் எங்களைக் காத்திடுக. ௩ சுபபதிகளான அசுவினிகள் எங்களை ஆதரித்திடுக: உஷையும் இரவும் எங்களுக்கு விசாலஞ் செய்க: சலங்களின் மகனே! எங்களது குடும்பத்துக்காகும் கஷ்டத்தினின்று—எங்களைக் காருங்கள்: தேவ துவஷ்டாவே நாங்கள் பூரணமாக எங்களுக்குத் துணை செய். [சு. ௩. க—௩.]

களஎ. துதி [அதர்வன்—பல தேவர்கள்]

க துவஷ்டா தேவர்களுக்கு என் மொழியைக் காப்புச் செய்க: பர்ஜனியனும் பிரமணஸ்பதியும் காத்திடுக; சுதர்கள் சகோதரர்களோடு அதிதி துர்லபமாயும் துணை புரிபவளாயும் திடமுமான அவள்—என் மொழியை—

---

களரு க்ருத்து—சோமனை அனைவரும் விரும்புகிருர்கள்.

களசு கருத்து—எல்லா தேவர்களையும் உனக்குச் சாதனஞ் செய்துகொள்.

பாலனஞ்செய்க. உ அம்சனும் வருணனும், மித்திரனும் அரியமானும் அதிதியும் மருத்துக்களும் எங்களைக் காப்பார்களாக: துன்பஞ் செய்பவனது துவேஷம் சென்றுவிடுக: அருகி லுள்ள அரிகளை அகற்றுங்கள். ந அசுவினிகளே! அறிவுக்கு எங்களை ஆதரியுங்கள்: எங்களுக்கு விசாலமாக்குங்கள்; ஓயாமல் விசாலஞ் செல்பவனே ஜோதியே ஜனகனே எல்லாத் துன்பத்தையும் நீக்குங்கள். [சா. ச. க—ந.]

களஅ வலிமை [அதர்வன்—இந்திராக்கினி]

க அக்கினியே! நெய்யாலாஹூதமான நீ இவனைத் தலைமை வகித்து—உயரச் செலுத்து; அவனை வன்மையுடன் சேர். அவனைப் பிரஜை மிகுதியுடனுக்கு. உ இந்திரனே இவனை முன்னேற்று; அவன் தனது சனங்களை அடக்குபவனாகட்டும்; அவனைச் செல்வச் செழுமையுடன் சேர். தீர்க்க சீவனுக்கு மூப்பு—வரை வாழ அவனுக்கு வழி காட்டு. ந நான் எவனது வீட்டில் யக்ஞஞ் செய்கிறேனோ அவனை நீ விருத்தியாக்கு; அவனை இந்த ஸோமனும் பிருகஸ்பதியும் ஆசிர்வதிப்பார்களாக. [சா. ரு. க—ந.]

களகூ கீழாக்கு [அதர்வன்—பிரமணஸ்பதி சோமன்]

க பிரமணஸ்பதியே! எங்களுக்குத் துன்பஞ் செய்யும் அதேவனை ஒவ்வொருவனையும் சோமன் பொழியும் யஜமானனை எனக்குக் கீழாக்கு. உ சோமனே! நற்புகழுள்ள எங்களை எதிர்க்கும் எந்த நற்புகழுள்ளவனையும் உனது வச்சிராயுதத்தால் அவனது முகத்திலடி;

களள கருத்து—துதி என்னும் செயலால் தேவர் என்னும் சாதனத்துடன் சத்துரு சிதை.

களஅ. கருத்து—துதி அனைவர்க்குஞ் செய்க.

அவன் அழிந்து ஒழிக. ௩ சோமனே; எங்களை எதிர்க்கும் உற்றான் மற்றானது பலத்தை இப்போதே பெரிய ஜோதியைப் போல பற்றிவிடு. [சு. சு. க—௩.]

கஅ௦ நீ, வா. [அதர்வன்—சோமன், விசுவேதேவர்கள்.]

க சோமனே! எந்த வழியில் எதிர்ப்பற்று அதிதியும், நண்பர்களும் வருகிறார்களோ துணையுடன் அவ்வழியால் நீ வா. உ ஜயிக்கும் சோமனே! எதனால் நீ அசுரர்களை எங்களுக்கடிமையாக்குவாயோ அதனால் எங்களுக்கு ஆசி கூறு. ௩ தேவர்களே அசுரர்களின் வலிமைகளை எதனால் நீங்கள் எதிர்க்கிறீர்களோ, அதனால் எங்களுக்குச் சுகத்தை யளியுங்கள். [சு. எ. க—௩.]

கஅக என்வன விரும்பு. [ஜமதக்கினி—காமாத்மன்]

க கொடி மரத்தை முற்றும் தழுவுவது போல், என்னை நீங்காதவளாயும் என்னை விரும்புபவளாயும் நீ1 என்னை ஏற்பாயாக. உ பறக்குங்கருடன் தனது பக்கங்களை புவியில் யடிப்பதுபோல் நீ என்னை நீங்காமல், என்னை விரும்புபவளாக உன் மனத்தை நான் அடிக்கிறேன். ௩ சூரியன் இங்கு ஜோதி புவியை துரிதஞ் சூழ்வது போல, நீ என்னை நீங்காமல் என்னை விரும்புபவளாக உன் மனத்தை நான் சூழ்கிறேன். [சு. அ. க—௩.]

கஅஉ என்வன நாடு [ஜமதக்கினி—காமாத்மன்]

க எனது தேகத்தை விரும்பு—பாதங்களை—விரும்பு; கண்களை விரும்பு, எனது ஊருக்களை விரும்பு; உனது

1. மணப்பெண்ணே.

களக௬ கருத்து—துன்பஞ்செய்பவனை காலால் மிதி.

கஅ௦ கருத்து—அசுரர்களை உனக்கு அடிமைகளாக்கு.

கஅக கருத்து—நான் உன் மனத்தைச் சூழ்கிறேன்.

கேசமும் கண்களும் என்னை நாடி காமத்தால் காய்க. உ எனது சங்கற்பத்துக்குச் சாய எனது விருப்பம் போலாக எனது புஜத்தில் உன்னை சாயச் செய்கிறேன், எனது இருதயத்தில் சாயச் செய்கிறேன். ௩ நெய்யின் தாய்மார்களான பசுக்கள், நாபி என்னும் லாலனையுடன் இணங்கும் இருதயமுள்ளவளை எனக்கு இணக்கமுள்ளவளாகச் செய்க. [௬. ௯. க—௩.]

கஅ௩ சுவாஹா! [சந்ததி—பல தேவர்கள்]

க புவிக்கு செவிக்கு வனஸ்பதிகளுக்கு அவற்றின் அதிபதியான அக்கினிக்கு சுவாஹா! உ பிராணனுக்கு வானத்துக்கு பறவைகளுக்கு—அவற்றின் அதிபதியான வாயுவுக்கு சுவாஹா! ௩ ஜோதிக்கு, கண்ணுக்கு, நட்சத்திரங்களுக்கு — அவற்றின் — அதிபதியான சூரியனுக்கு சுவாஹா! [௬. க0. க—௩.]

கஅ௪ ஆண் மகன் [சந்ததி—பல தேவர்கள்]

க அசுவத்தம் சாமி-மரத்தில்—ஏறியுள்ளான்; அங்கு ஆண் மகன் தோன்றுவான்; அங்கு மகனது—தோற்றம்—காணும்; அதை ஸ்திரீகளுக்கு எடுத்துச் செல்லுவோம். உ புருஷனிலேயே இரேதசு தோன்றும்; அது ஸ்திரீகளில் பொழியப்படும்; இதுதான் மகனைக் காண்பதாகும்; இப்படி பிரஜாபதி சொல்லியுள்ளான். ௩ பிரஜாபதி அநுமதி ஸினீவாலி—அதை—உருவமாக்குவார்கள்; அவன் வேறு எங்கேயாவது பெண் சனனத்தை செய்வானாக; ஆனால் இங்கு அவன் ஆணைப்புலனுக்கு வானாக. [௬. கக. க—௩.]

---

கஅஉ கருத்து—ஒத்தால் வாழலாம்.
கஅ௩ கருத்து—அதிபதிக்கு அநுகூலமாகுங்கள்.
கஅ௪ கருத்து—மக்களுக்கு வடிவமளிப்பது ஸ்திரீகளே.

கஅரு. நஞ்சு [கருத்மான் – தட்சகன்
க சூரியன் ஜோதியைப்போல, அம்சத்தைத் தவிர அந்நிய ஜந்துக்களை இரவுபோல, நான் ஸர்ப்ப சந்ததியை சூழ்ந்துள்ளேன், நான் அதனால் உனது நஞ்சை நீக்குகிறேன். உ தேவர்களால், ரிஷிகளால், பூர்வ பிராமணர்களால்—புலனாகும் அறிவால்—வாயுள்ள — உன்னில்—நிகழும் இனி நிகழப்போகும் உனது நஞ்சை நான் நீக்குகிறேன். ந நான் நதிகளைத் தேனுடன் சேர்க்கிறேன்; மலைகளும் குன்றுகளும் தேன்களாகும்; பிருஷ்ணீயும் சிபாலும் தேன்களாகும்; உனது வாய்க்கு அமைதியாக உனது இருதயத்துக்கும் அமைதியாகுக. [சு. கஉ. க-ந.]

கஅசு நமஸ்காரம் [ஸ்வஸ்தியயனகாமோ அதர்வன்—மிருத்யு]
க தேவர்களது ஆயுதங்களுக்கு நமஸ்காரம்; இராஜர்களது ஆயுதங்களுக்கு நமஸ்காரம்; வைசியர்களது ஆயுதங்களுக்கும் நமஸ்காரம்; மிருத்யுவே! உனது—ஆயுதங்களுக்கும் நமஸ்காரமாகுக. உ உனது அநுகூல வாக்கியத்துக்கு நமஸ்காரம்; உனது பிரதிகூல வாக்கியத்துக்கு நமஸ்காரம்; மிருத்தியுவே! உன் நல் மனத்துக்கு நமஸ்காரம்; உன் அல் மனத்துக்கும் நமஸ்காரம். ந உனது யாது தானர்களுக்கு நமஸ்காரம்; உனது சிகிச்சைகளுக்கு நமஸ்காரம்; மிருத்யுவே, உனது மூலங்களுக்கு நமஸ்காரம்; இந்த வந்தனை பிராமணர்களுக்காகும். [சு. கந. க—ந.]

கஅஎ. பலாஸம் [பப்பருபிங்களன் – பலாஸன்]
க அஸ்தி பிளப்பதாயும் சந்திபிரிப்பதாயும், நிலைநிற்கும்

கஅரு. கருத்து—நான் அறிவால் நஞ்சை நீக்குகிறேன்.
கஅசு. கருத்து—நமஸ்காரம் எனப்படும் இயல்போடு இசையும் செயலால் இகத்தைப் பற்றுங்கள்.

இருதய நோய் எல்லா அங்கங்களிலும் சந்திகளில் சாய்வதுமான பலாசத்தை நீ[1] நாசம் செய். ௨ முஷ்கரம் போல்[2] பலாசமுள்ளவனது பலாசத்தை நான் நீக்குகிறேன்; வெள்ளரியின் வேர் போல் அதன் பந்தத்தை நான் வெட்டுகிறேன். ௩ பலாசமே[3] இங்கிருந்து சிறிய குதிரை போல் சென்று விடு; பிறகு வருஷப்புல்லைபோல வீரர்களுக்கு இம்சையாகாமல் சென்றுவிடு. [சூ. கச. க-௩]

கஅஅ உத்தமன் [உத்தாலகன்—வனஸ்பதி]

க நீ ஓஷதிகளில் உத்தமன்; மரங்கள் உன் குடிகளாகும்: எங்களை எதிர்ப்பவன் எங்கள் குடிகளாகுக. ௨ இது மரங்களில் மேன்மையாவதுபோல் என்னை எதிர்க்கும் உற்றான் மற்றானில் நான் உத்தமனாகவேண்டும். ௩ சோமன், ஓஷதிகளில் உத்தமனாவதுபோல், மரங்களின்—நடுவே—தலாசம்[4] போல நான் உத்தமனாக வேண்டும். [சூ. கரு. க—௩.]

கஅகூ புரியாத மூலிகை [சௌனகன் -மந்திரோகத்த உத சந்திரன்]

க ஆபயுவே! அனபயுவே![5] உனது இரஸம் உக்கிரம் அபாயுவே! நாங்கள் உனது கரம்பத்தைப் புசிக்கிறோம். ௨ விஹல்ஹம் என்பது உங்கள் தந்தையின் நாமம்; மாதவன்தீ என்பது உங்கள் அன்னையின் நாமம்; உன்[6]

---

1 இந்த ஔஷதம் இதில் சொல்லப்படவில்லை. 2 துண்டமான பொருள்போல். 3 ஒருவித குன்ம நோய் காயமரிக்கும் நோய். 4 ஒரு ஔஷதியின் பெயர். 5 இங்கு வரும் ஆரோப மொழிகளெல்லாம் ஔஷதங்களின் பெயர். 6 உனது சுபாவ குணத்தை நான் காண்பதில்லையாதலால் வேறு ஔஷதம்போல் தோன்றுகிறாய்.

கஅஎ கருத்து—நோய் அகற்று

கஅஅ கருத்து—நான் உத்தமனாகவேண்டும்.

ணையே நீ அழித்துக்கொள்பவனுயில்லை, நீ இனி—வேறு ஒருவன். ௩ தௌவிலிகமே! நீ அமைதியாகவும், இந்த அமனி அமைதியாகி விட்டது; பழுப்பு பழுப்புச் செவியுள்ளதே நிராலமே—நீங்கள் சென்று விடுங்கள். ௪ நீ முதல் அலாஸாலை; பிறகு நீ ஸிலாஞ்சாலை; அப்பால், நீ நீலாகலஸாலை. [௬ க௬ க—௪.]

கக௦ ஸ்திரீயே [அதர்வன்—கர்ப்பதிருஹணம்]

க இப்பெரும் புவியானது பொருள்களின் கருப்பத்தை தரிப்பதுபோல் சந்தானத்தை சனனஞ் செய்ய உனது கருதரிக்கப்படுக. உ இப்பெரும் புவியானது இந்த வனஸ்பதிகளை தரிப்பதுபோல் சந்தானத்தைச் சனனஞ் செய்ய உனது கரு தரிக்கப்படுக. ௩ இப்பெரும் புவியானது மலைகளை தரிப்பதுபோல் சந்தானத்தைச் சனனஞ் செய்ய உனது கருதரிக்கப்படுக. ௪ இப்பெரும் புவி பற்பல சீவப் பொருள்களைத் தரிப்பதுபோல சந்தானத்தை சனனஞ் செய்ய உனது கரு தரிக்கப்படுக. [௬. க௭. க—௪]

ககக பொருமை [அதர்வன்—ஈர்ஷ்யா விநாசனம்]

க பொருமையின் முதற்ப் புயலை—அப்பால் அநுசரிப்பதை, அனலை இருதய கனலை நாங்கள் உனக்கு அணைக்கிறோம். உ மரித்தவனைவிட அதிமிருத மனமுள்ளதாய், மேதினி மிருத மனமுடனிருப்பதுபோல் கரித்தவனது மனம்போல், பொருமை யுள்ளவனது மனம் மிருதமாகுக. ௩ உனது இருதயத்தில் காணும் துடி

க௮க கருத்து—மூலிகை சாஸ்திரத்தின் மூலாதாரம்.
கக௦ கருத்து—பெண்களுக்குத் தாரண சக்தி வேண்டுப.

மனத்தினின்று, சருமதரிப்புனின்று சூட்டாவியைப் போல் நான் உனது பொருமையை பிரிக்கிறேன். [சூ. க௮. க—ந]

ககஉ தூய்மை [சந்ததி—பலதேவர்கள்.]

க தேவசனங்கள் என்னைத் தூய்மை செய்க. மானிடர்கள் அறிவால் என்னைத் தூய்மை செய்க, விசுவப்பொருள்கள் என்னைத் தூய்மை செய்க; தூய்மை செய்பவன் என்னைத் தூய்மை செய்க. உ தூய்மை செய்பவன் துரிதம் திடத்துக்கு சீவனுக்கு அப்பால் இம்சையாகாமலிருக்க என்னைத் தூய்மை செய்க. ந தேவசவிதாவே தூண்டுதலாலும் தூய்மை செய்வதாலும் நாங்கள் காண்பதற்கு எங்களை நீ தூய்மை செய். [சூ. கக. க—ந]

ககந ஜ்வரம் [பிருகுவங்கிரஸன்—யக்ஷ்மநாசன்]

க அவனது ஆத்திரம் எரியும் அனலினின்று போல் செல்லும், அவன் அலறுவதுபோல் என்னிடமிருந்து சென்றுவிடுவான்; அவிரதன் என்னைவிட வேறு அந்நியனைத் தேடட்டும்; சூடு என்னும் ஆயுதமுள்ள சுரத்துக்கு நமஸ்காரம். உ ருத்திரனுக்கு நமஸ்காரம். ஜ்வரத்துக்கு நமஸ்காரமாகட்டும். பிரகாசமாயுள்ள வருண இராஜனுக்கு நமஸ்காரம்: ஜோதிக்கு நமஸ்காரம், புவிக்கு நமஸ்காரம்; ஒஷதிகளுக்கு நமஸ்காரம். ந நீ இங்கு அதிகமா யெரித்து எல்லா ரூபங்களையும் மஞ்சளாக்குகின்றாய்; நான் பழுப்பு சிகப்பு-சுரத்துக்கு, வனசுரத்துக்கு நமஸ்காரமளிக்கிறேன். [சூ உ0. க—ந]

---

ககக கருத்து—பொருமை மிருத சுபாவம்

ககஉ கருத்து—தேவர்களால் நீ தூய வாழ்க்கை நடத்து.

ககந கருத்து—அவிரதனுயுள்ளவனுக்கு சுரம் வரும்.

கக௪ புவி [சந்தாதி—சந்திரிமன்]

க இங்குள்ள மூன்று புவிகளில், பூமியே பெரியவன் நான் இவற்றின் சருமத்தினின்று சிகிச்சையைப் பற்றியுள்ளேன். உ நீ சிகிச்சைகளில் சிரேஷ்டன்; செடிகொடிகளில் சிறந்தவன்; இரவுக்காப்புக்களில் சோமன் பகனைப்போல தேவர்களில் வருணனைப்போலுள்ளவன். ௩ செல்வர்களே, இம்சை செய்யாமல் அளிக்க விரும்புபவர்களாகி நீங்கள் அளிக்க விரும்புங்கள்; நீங்கள் ரோமங்களைத் தரிக்கச்செய்து ரோமங்களை விருத்திசெய்பவர்கள். [௬. உக. க—௩]

ககரு மருத்துக்கள் [சந்தாதி—ஆதித்ய இரசமய மருத்துக்கள்.

க கீழ்வழி கிருஷ்ணமாகும், மஞ்ச சுபர்ணங்கள் சல உடையணிந்து ஜோதிக்குப் பறக்கும்; அவை ருதத்தின் ஸ்தானத்தினின்று இங்கு வந்துள்ளன; அவை நெய்யினால் நிலத்தைப் பிரளயம் செய்துள்ளன. உ நீங்கள் சலனமாகுங்கால் ஔஷதிகளை மங்கள மளிப்பவையாயும் சலங்களை பால் மிகுபவையாயுஞ் செய்கிறீர்கள், பொன்வர்சஸுள்ள மருத்துக்களே, வீரமுள்ள மருத்துக்களே நீங்கள் தேன்பொழியும்-நிலயத்தில்-உறுதியையும் சுமனத்தையும் பொழியுங்கள். ௩ மருத்துக்கள் சலஞ் செல்லுபவர்கள், எல்லாப் பள்ளங்களையும் நிரப்பும் மழையை நீங்கள் பொழியுங்கள்: ஏரை-மேகத்தை - மனைவியைப் புருஷன்போல், தாக்கும் மாதைப்போல் தாக்கி கிலஹம் - மின்னல் தானே ஊக்கமாகிறுள். [௬. உஉ. க—௩]

---

கக௪ கருத்து—புவியிலே சிகிச்சைக்காகும் எல்லா ஔஷதங்களுமுண்டு.

ககரு கருத்து—மருத்துக்களின் மகிமையினுல் சலங்களில் பால் பொங்கும்.

கககூ சலதாரைகள் [சந்ததி—ஆபோதேவர்கள்.]

க நித்தியம் பாய்பவை சலதாரைகளாகும்; அவை இரவும் பகலும் ஓயாமல் பாயும்; சிறந்த சங்கற்பமுடனே நான் தேவியான சலங்களை யழைக்கிறேன். உ முன் செலுத்துவதர்க்காக இழைக்கப்பட்டுள்ள சலங்கள்—இங்கு தாரைகளை—விடுக: அவர்கள் அவற்றை துரிதமாய்ச் செல்லச் செய்க. ௩ தேவசவிதாவின் தூண்டுதலில் மானிடர்கள் செயலைச் செய்க; சலங்கள் எங்களுக்கு சாந்தியளிப்பவையாகுக: ஓஷதிகள் மங்களமளித்திடுக. [சு. உ௩. க—௩]

ககஎ சலங்கள் [சந்ததி—ஆபோதேவர்.]

க அவை பனி—மலையினின்று—பாயும்; விந்துவில் எங்கோ அவை ஒன்றுசேரும்; திவ்யமான சலங்கள் இருதய நோய் சிகிச்சையை எனக்களித்திடுக. உ என் கண் குதி முற்கால்களால் எரிச்சலை யுண்டுபண்ணும் எந் நோயையும், அதி யுத்தம சிகிச்சைகளின் சிகிச்சைகளான சலங்கள் நீக்குக. ௩ சிந்துவை மனைவியாயுள்ளவர்களும், சிந்துவை அரசனுயுள்ள நதிகளான நீங்கள் எல்லீரும் இதற்கு சிகிச்சையை எங்களுக் களியுங்கள்; நாங்கள் உங்களிடமிருந்து இதனை யனுபவிப்போமாக. [சு. உச. க—௩]

ககஅ கண்டமாலை [சுனச்சேபன்—மன்யாவிநாசனன்,]

க பிடரி நரம்புகளைச் சுற்றிவரும் ஐந்து ஐம்பதுகள் அபசிதினி[1] ஒலிகள் போல் இங்கிருந்து ஒழிந்திடுக.

---

1 கொப்புளங்கள்,

கககூ கருத்து—சலம் சாந்தஞ் செய்யும்.

ககஎ கருத்து—சலங்களிலே எல்லா சிகிச்சைகளுமுண்டு.

உ கண்ட நரம்புகளைச் சுற்றிவரும் ஏழும் ஏழுபதுகளான அனைத்தும் அபிசிதின் ஒலிகள்போல் இங்கிருந்து ஒழிந்திடுக. ௩ தோள்களைச்சுற்றி சூழும் என்பது தொண்ணூறுகள் எல்லாம் அபிசிதின் ஒலிகள்போல் இங்கிருந்து ஒழிந்திடுக. [கூ. உரு. க—௩]

கக௯ துன்பம் [பிரமன்—பாப்மாதேவர்.]

க துன்பமே நான் சென்றுவிடட்டும்; நீ எங்களது அதீனமாகையால் நீ எங்களுக்குச் சுகமளிப்பவனாகவும்; துன்பமே; மேன்மையான உலகத்தில் என்னை மாசற்று ஸ்தாபனஞ் செய். உ துன்பமே, நீ எங்களை நீங்கவில்லையேல் நாங்கள் உன்னை இங்கு நீங்குவோம்; வழிகளின் பிரிவு ஸ்தானத்தில் துன்பம் அந்நியனைச் சேர்க. ௩ அமுதனாய் ஆயிரங் கண்ணுள்ளவன் எங்களை நீங்கி அந்நியனில் ஸ்தாபிதமாவானாக: அது, நாங்கள் வெறுப்பவனில் செல்க, நீ எங்களால் வெறுக்கப்படுபவனை வீழ்த்து. [கூ. உகூ. க—௩]

உ00 புரு [பிருகு—எமன் நிர்ருதி,]

க தேவர்களே! நிர்ருதியின் தூதனாய் எங்களுக்கு யனுப்பப்பட்டு இங்கு எதையோ தேடிவரும் புருவுக்கு நாங்கள் பாக்களைப் போற்றுவோம். பரிகாரஞ் செய்வோம்: எங்களது இருநான்குகால் பிராணிகளுக்கு அவை நன்மையளிக்குக. உ தேவர்களே பிரேரிதமான புரு இனிமை யளிப்பதாகுக: இம்சையற்றுருகுக: எங்களது வீட்டுக்குப் பிரேரிதமாகும் |கருடனும்—இனி

---

கக௮ கருத்து—நோயற்ற வாழ்வு வேண்டும்,
கக௯ கருத்து—துன்பம் உன்னை விடவில்லையேல் நீ துன்பத்தை விட்டுவிடு.

மையளிப்பதாகுக: விப்பிரனை அக்கினி எங்களது அவி யை அனுபவிப்பானுக: சிறகுள்ள அம்பு எங்களை நீங்குக. ங சிறகுச் சிலை எங்களை இன்னல் செய்யற்க; அது தனது வழியை அடுப்பிலும் அனல் சாலையிலுஞ் செய் யும், எங்களது பசுக்களுக்கும் புருஷர்களுக்கும் அது மங்களமளிப்பதாகுக; தேவர்களே! புறு எங்களைத் துன் பஞ் செய்யாமலாகுக. [சு. உஎ. க—ங]

உ0க துன்பமழி [பிருகு யமன்—நிர்ருதி]

க புறுவை ரிக்கினல் துரத்துங்கள், புறமாக்குங்கள்; நாங்கள் உணவில் இன்பமாகி பசுக்களை எங்குஞ்செலுத்து கிறோம், நாங்கள் துன்பமளி வழிகளை—யழிக்கிறோம்; துரிதம் பறக்கும் அது எங்களுக்கு பலத்தை விட்டுவிட் டுப் பறந்து செல்க. உ இவர்கள்[1] அனலைப் பூரணமாய் பற்றியுள்ளார்கள்; இவர்கள் பூரணமாய் பசுவைப் பற்றி யுள்ளார்கள். இவர்கள் தேவர்களில் புகழைப் பற்றி யுள்ளார்கள். இவர்களை எவன் எதிர்ப்பான்? ங பலர் களுக்கு வழியைப் புலனுக்குபவனைப் பெரும் பதவியை முதல் பற்றிய இரு நான்கு கால்களின் தலைவனை மிருத் யுவான யமனுக்கு வணக்கமாகுக. [சு. உஅ. க—ங]

உ0உ புருவும், ஆந்தையும் [பிருகு—யமநிர்ருதிகள்]

க சிறகாயுதம் அங்குள்ளவர்களில் செல்க, ஆந்தையின் புலம்பல் பயனற்றுகுக. புறு அனலில் தனது வழியைச் செய்கின்றது. உ நிர்ருதியே! பிரேரிதம், பிரேரிதமாகா

1 அறிஞர்கள்.

உ00 கருத்து—அழிவின் அறிகுறியை அறிந்து நாசம் நீங்கு.

க0க கருத்து—யமதூதனை புறு எனப்படும் கடும் நோயை ஜயிப் பவன், அதிக சக்தியுள்ளவனுகிறன்.

மல் இங்கு புரு[1] ஆந்தையான[2] இரு தூதர்கள் வந்தால் அவர்களுக்கு எங்கள் நிலயம் ஆதரவற்றதாகுக. ௩ வீரர்கள் நாசமாகாமலிருக்க அது இங்கே பறக்கட்டும், வீரர்கள் ஓங்கி வளர அது இங்கே நிலைத்திடுக. யமனது வீட்டில் உன்னை இரஸமற்றுக் காண உரமற்றவன் என அறிய நீ தூரத்திலேயே தூரம் நின்று தூரமாகவே பேசு. [சூ. உ௯. க—௩]

உ௦௩ சமீ [உபரிபிப்ரவன்—சமீ]

க தேவர்கள் தேனுல் சேரும் இந்த யவதானியத்தை—சரஸ்வதியின் உத்தம நிலயத்தில் உழுகிறார்கள்; நூறு உரங்களுள்ள இந்திரன் உழுப்படைத் தலைவன் ஸுதானுக்களான மருத்துக்கள் உழுபவர்கள். உ உனது ஓங்கும் உதிரும் கேசங்களுடன் உனது களிப்பால்—பகைப்—புருஷனை பரிகாசத்துக்குள்ளாக்குகிறாய். சமீயே உன்னிடமிருந்து வேறு மரங்களை நான் வெட்டித் தூரமாக்குகிறேன். நீ நூறு கிளைகளுடன் ஓங்கு. ௩ அதி செல்வமாயும் பெரிய இலைகளுடனுன நீ, ருதங்காக்கும் நீ மழையால் ஓங்கும் நீ மக்கட்களுக்குத் தாயைப்போல் சமீயே எங்களது கேசங்களுக்கு சுகமளிப்பவளாகவும். [சூ. ௩௦. க—௩]

உ௦௪ சூரியன் [உபரிப்ரவன் – பசு]

க இந்த சுந்தரமான பசு[3] சுவர்க்கமான தனது தந்தைக்குச் செல்பவளாய் தனது தாயின் பூர்வத்தில் உட்கார்ந்

1 நமது நிலையை யறிய வந்துள்ள பகைவரின் தூதன் 2 நாம் உறங்குங்கால் நம்மை அறியவரும் ஒற்றன். 3 சூரியன்

உ௦உ கருத்து. எதிர்க்கட்சித் தூதர்களுக்கு ஆதரவளிக்காதே.

உ௦௩ கருத்து—சமீ என்னும் வனஸ்பதி கேசங்களை வளர்க்கும்.

துள்ளான். உ இந்தப் பிரகாசன் பிராணபானத்தின் நடுவே சலனமாகின்றான், மஹிஷன் சுவர்க்கத்தைப் பார்த்துள்ளான். ங அவன் முப்பது நிலைகளை[1] அரசுபுரி கிறான். பிரதிதினமும் காலை ஒளிகளால் வயம் வாக்கை ஏறச் செய்கிறான். [சூ. ௩க. க—௩]

௨0௫. துட்டரைத் தண்டி [க. உ. சாதனன்; ௩. அதர்வன்—அக்கினி.]

க நீங்கள் இந்த யாதுதானரழிக்கும் யக்ஞத்தை நெய்யால் இந்த சுவாலையின் நடுவே செய்யுங்கள்: அக்கினியே நீ தூரத்தினின்றே அரக்கர்களை எரித்து விடு; எங்களது கிருகஸ்தர்க்கு நீ கனலுடனாகாதே. உ பிசாசங்களே! உங்களது கண்டங்களை ருத்திரன் துண்டித்துள்ளான்; யாது தானர்களே உங்கள் எலும்புகளை அவன் முறித்திடுக; விசுவவீரியமுள்ள ஓஷதி உங்களை யமனில் சேரச் செய்துள்ளது. ங மித்திரவருணனே! எங்களுக்கு இங்கு பயமின்மையாகுக; உங்களது ஒளியால் எதிரிகளைத் திருப்பித் துரத்துங்கள்; அடிப்படையையும் அறிவிப்பவனையும் அவர்கள் காணவேண்டாம்; பரஸ்பரமடித்துக் கொண்டு அவர்கள் மிருத்யுவுக்குச் செல்க. [சூ. ௩உ. க—௩.]

௨0௬ இந்திரன் [ஜாதிகாயனம்—இந்திரன்]

க இங்கு இந்திரனது வானமண்டலம்—நமக்கு—இணைந்துள்ளது, அவன்—எதிரிகளைத்—தாக்கி வனம் சுவர்க்கத்தைத்—தாங்குவான்; இந்திரனது இன்பம் பெரியது.

---

1 தினங்களை

௨0௪ கருத்து—சூரியன் எழுந்தால் சீவர்கள் ஒங்குவார்கள்,

௨0௫ கருத்து—ருத்திரன் என்னும் கோபத்தால் கீழோர்களைக் கண்டியுங்கள்

உ அதிவீரனுய், வலிமை வீழ்த்தும் அவ்வீரனை எவனும் வீழ்த்தான். பூர்வம் போல் அவனது புகழ் பதருமனுள் ளது: அவனது பலம் எதிர்ப்பதர்க்காகாதது. ௩ அவன் சிகப்புத் தோற்றமுளள் விசாலமான செல்வத்தை எங்க ளுக்களிப்பானுக; இந்திரன் சனங்களில் அதிசக்தியுள்ள தலைவன். [சு. ௩௩ க—௩]

உ0எ அக்கினி [சாதனன்—அக்கினி]

க சனங்களின் விருஷபனுன அக்கினிக்கு உனது சொல் லைச் செலுத்து; அவன் எங்களை எதிரி கடத்தி நீக்குவா னுக. உ அதிசுடரால் அரக்கர்களை எரிக்கும் அக்கினி எங் களை எதிரிகடத்தி நீக்குவானுக. ௩ வெகு தூரத்தினின்றே நிலங்களெங்கும் ஒளிவீசும் அவன் எங்களை எதிரிகடத்தி நீக்குவானுக. ச எல்லா சீவர்களையும் ஒருமையாய் கண்டு கவனிப்பவன் எங்களை எதிரி கடத்தி நீக்குவானுக. ரு இந்த இரஜசுகப்பால் தோன்றும் அக்கினி எங்களை எதிரிகடத்தி நீக்குவானுக. [சு. ௩ச. க—ரு.]

உ0அ வைசுவாநரன் [கௌசிகன்—வைசுவாநரன்]

க வைசுவாநரன் தூரத்தினின்று இங்கு எங்கள் துணைக்கு வருக—அக்கினி எங்கள் துதிகளுக்கு—வருக. உ எங் கள் நண்பனுன வைசுவாநரன் இந்த யக்ஞத்தில் வந்துள் ளான்—அக்கினி எங்கள் துதி துன்பங்களில் வந்துள் ளான். ௩ வைசுவாநரன் அங்கிரசர்களது துதி உக்தத்தை உருவமாக்கியுள்ளான்; அவன் அவர்களுக்கு சோதியையும் சுவர்க்கத்தையும் அளிக்கிறுன். [சு. ௩ரு. க—௩.]

---

உ0சு கருத்து—வலிமையே வையத்தின் நாயகன்

உ0எ கருத்து—அக்கினியால் எதிரி நீங்கு.

உ0அ கருத்து—வைசுவாநரன் நமது நண்பன்.

உ0க அக்கினி [ஸ்வத்யயகாம அதர்வன்—அக்கினி]

க நாங்கள் ருதம்மிருந்தும் ருததலைவனையும் ஜோதி பதியுமான வைசுவாநரனை அழியாத அனலுக்குத் துதிக்கிறோம். உ அவன் எல்லாப் பொருள்களையும் சமர்த்தஞ் செய்துள்ளான்; அதனைஞ்செய்யுமவன் யக்ஞபலத்தை பெருகச்செய்து ருதங்களை புலனுக்குகிறன். ங அக்கினி அந்நிய நிலயங்களில் நிகழ் எதிர்கால விருப்பமாகி ஒரு ஸம்ராடனாய் விளங்குகிறன். [சு. ஙசு. க—ங.]

உக0 சாபம் [ஸ்வத்யயனகாம அதர்வன்—சந்திரமன்.]

க அஜமுள்ளவனது வீட்டை ஓநாய்ப்போல, என்னை சபதஞ் செய்பவனை தேடி ஆயிரங்கண்ணுள்ள சபதன் இரதத்தை இணைத்து இங்கு வந்துள்ளான். உ சாபமே எரியும் அனல் குளத்தைப் போல எங்களை நீ நீங்கு; சோதியினின்று மரத்தை இடி போல எங்களைச் சபிப்பவனை நீ நாசமாக்கு. ங சபிக்காமல் எங்களைச் சபிப்பவனையும், சபித்து எங்களை சபிப்பவனையும், நாய்க்கு எலும்பு—த் துண்டைப் போல, மிருத்யுவுக்கு உணவு போலளிக்கிறேன். [சு. ஙஎ. க—ங.]

உகக பலம் [வர்சஸ்காம அதர்வன்—பிருஹஸ்பதி ருதஸ்விஷி]

க சிங்கம் புலி பாம்பு நெருப்பு பிராமணன் சூரியனில் எந்த பலமுண்டோ அந்த பலத்தோடு இந்திரனைப் பிறப்பித்த சுபகையான தேவி எங்களுக்கு வருக. உ யானை சிறுத்தை பொன் புனல் பசு புருஷர்களில் எந்த பலமுண்டோ—அந்த பலத்தோடு எங்களுக்கு அவள் வருக. ங இரதம் அச்சு எருதின் பலம் வாயு மழை வருணனது

---

உ0க கருத்து—ருதமும் சோதியும் நிறைபவன் அக்கினி.

உக0 கருத்து. பழிச் சொல் சகியாதே.

உக்கிரத்தில் எந்த பலமுண்டோ—அந்த பலத்தோடு அவள் எங்களுக்கு வருக. ச இராஜன்யன் துந்துபி சரம் அசுவ பலம் புருஷ கர்ச்சனையில் எந்த பலமுண்டோ—அந்த பலத்தோடு அவள் எங்களுக்கு வருக. [சு. ௩அ. க—ச.]

உகஉ பிரார்த்தனை [வர்சஸ்காம அதர்வன்—பிருகஸ்பதி]

க பண்புடனாகி, பலத்தால் செய்யப்பட்டு ஆயிரம் பலங்களுள்ள இந்திரனால் தூரிதமாகி, எனது, அவி புகழாயோங்கட்டும்; அவி கொண்டு வருபவனாகியும் பலத்துடன் தீர்க்கப் பார்வைக்குச் செல்பவனு மான என்னைத் தலைவனாக்க நீ வளர்த்திடுக. உ புகழ் மிகும் புகழுள்ள இந்திரனை நாங்கள் வணக்கமளித்து புகழ்களால் போற்றுகிறோம்; இந்திரனால் தூரிதமாக்கப் பட்டு எங்களில் இராஷ்டிரத்தை யளி: உனது அளிப்பில் நாங்கள் புகழுள்ளவர்களாக வேண்டும். ௩ புகழுள்ளவன் இந்திரன், புகழுள்ளவன் அக்கினி; புகழுடன் ஸோமன் புலனவான்; புகழுள்ள எல்லாப் பொருள்களிலும் நான் அதி புகழுள்ளவன். [சு. ௩க. க—௩.]

உகக பயமின்மை [க—உ அபயகாமன் ௩ ஸ்வஸ்த்யயனகாம அதர்வன்—மந்திரோக்தம்]

க ஜோதியே புவியே! எங்களுக்கு இங்கு பயமின்மை யாகுக; சோமனும் சவிதாவும் எங்களுக்கு பயமின்மையைச் செய்க, விசாலவானமும் எங்களுக்கு பயமின்மை யாகுக; ஏழுரிஷிகளின் அவியால் எங்களுக்கு பயமின்மை யாகுக. உ நான்கு திசைகளும் இந்த கிராமத்

---

உகக கருத்து—புலி, பாம்பு, சிங்கத்தின் பலத்தை யடையுங்கள்.
உகஉ கருத்து—இந்திரனால் ராஷ்டிரத்தைப் பற்றுங்கள்.

துக்கு—நன்மையைச் செய்க; சவிதா எங்களுக்கு உறுதியையும் உயரிய செழிப்பையும் சுவஸ்தியையும் செய்க; இந்திரன் பயமின்மை பகையின்மையைச் செய்க; அரசர்களின் கோபம் வேறு அந்நிய நிலயத்தில் வீழ்க. ௩ இந்திரனே! எங்களுக்கு எதிரி சூனியத்தை கீழே சாய்; மேலே எதிரிசூயத்தை சாய். எதிரி சூனியத்தை பின்—புறஞ்—சாய்; எதிரி சூனியத்தை முன்—புறஞ் சாய். [சு. ௪0. க—௩.]

உகச ஆத்மசக்தி [பிரம்மா—வெகுபல உதசந்திரமன்]

க நாங்கள் மனத்துக்கு நினைவுக்கு அறிவுக்கு நோக்கத்துக்கு விருப்பத்துக்கு புலனுக்கு செவிக்கு கண்ணுக்கு கர்க அவியால் போற்றுவோம். உ அபானனுக்கு, வியானனுக்கு, பிராணனுக்கு, புஷ்டிப் பிராணனுக்காக விசாலவிரிவுடனை சரஸ்வதியை நாங்கள் அவியால் போற்றுவோம். ௩ திவ்யரிஷிகள், எங்களை எங்களது காயகாப்பை, எங்கள் காயப்புலன்களை பிரியாமலாவார்களாக; மரிப்பில்லாதவர்களே! மரிக்கும் எங்களை நீங்கள் அணுகுங்கள்; நாங்கள் நீண்டுவாழ—தீர்க்கா—யுசை யளியுங்கள். [சு. ௪க. க—௩.]

உகரு என் விருப்பம் [பரஸ்பர சிக்தைக் கரணே பிருகுவங்கிரஸன்—க மன்யு]

க நாம் ஒருமனமுடன் ஒருமையாகி நண்பர்கள் போலிருக்க உன் கோபத்தை வில்லினின்று நாண்போல் உன் இருதயத்தினின்று நீக்குகிறேன். உ நாம் இருவர்

---

உகங கருத்து—பகை யொழிய பயமின்மை பற்று.

உகச அவி என்னும் நீங்கள் செய்வதற்காகும் கடமைச் செயலால், ஆத்மசக்தி யுடனுவதற்கு முயலுங்கள்.

களும் நண்பர்கள்போல் ஒன்று சேர்ந்திருப்போம்; நான் உனது கோபத்தை நீக்குகின்றேன்; நாங்கள் உனது கோபத்தை கனத்த கல்லின் கீழே தள்ளுகிறோம். ௩ நீ அடங்கிப்பேசு என் விருப்பத்துக்கமை, குதிகாலாலும் முன் காலாலும் நான் உனது கோபத்தை மிதித்துத் தள்ளுகிறேன். [சு. சஉ. க—௩.]

உகசு தருப்பை[1] [பரஸ்பரைகசிக்த கரணே பிருகுவங்கிரன்—மன்யு சமனம்]

க உற்றானுக்கும் மற்றானுக்கும் கோபம் நீக்குவது இத் தருப்பை: இது கோபத்தின் கோபமழிக்கும் கழிகோபம் எனப்படும். உ இதற்கு பல மூலங்களுண்டு, இது கடலடிசெல்லும்; புவியினின்று தோன்றும் தருப்பை தளர் கோபன் எனச் சொல்லப் படும். ௩ நீ அடங்கிப் பேசு என்விருப்பத்துக்கு அடங்கு. உன் மெய்வாய்களின் குற்றத்தை நாங்கள் நீக்குகிறோம். [சு. ச௩. க—௩.]

உகஎ விஷாணகன் [விசுவாமித்திரன்—மந்திரோக்த உத வனஸ்பதி]

க ஜோதி நின்றுள்ளது. புவி நின்றுள்ளது. இந்த விசுவமும் நின்றுள்ளது. உச்சமயரும் மரங்களும் நின்றுள்ளன. இந்த உனது நோயும் நிற்கட்டும். உ உனது நூறு, ஒன்று சேரும் ஆயிரம் சிகிச்சைகளுடன் நீ ஒழுக்குக்கு—ஆஸ்ரவம்—உயரிய ஔஷதம், ரோகம் நீக்குவதில் சிறந்தவன். ௩ நீ ருத்திரனின் மூத்திரம்,

---

1 இருதயம் மனம்.

உகரு கருத்து—உனது விருப்பம்போல் எதிரி கோபத்தை மிதித்து விடு.

உகசு கருத்து—தருப்பை என்னும் சக்தியால் சத்துரு கோபம் நீக்கு.

அமிருத நாபி; விஷாணகை[1] என்பது—உனது பெயர்; பிதுருக்களின் மூலத்தினின்று தோன்றி; நீ வாதநோயை யழிப்பவன். [௬. ௪௪. ௧—௩.]

உ௩அ என் மனம் [பிரசேத அங்கிரசன், யமன்—துச்சுவப்ன நாசன தேவதை]

௧ மனத்தின் மாசே! நீ தூரஞ்செல்லு. சொல்லத் தகாதவைகளை ஏன் சொல்லுகிறாய்? நீ சென்றுவிடு; நான் உன்னை விரும்பவில்லை: மரங்களில் வனங்களில் நீ சஞ்சரி; வீடுகளிலும் பசுக்களிலும் என்—மாசற்ற—மனமுண்டு. ௨ விழிப்பிலோ தூக்கத்திலோ கீழ்ச் சொல் வெளிச் சொல் புறச் சொல்லால் நாங்கள் குற்றஞ் செய்திருந்தால், அக்கினி, பொருந்தாத எல்லாப் புன் செயல்களையும் எங்களிடமிருந்து நீக்குவானாக. ௩ நாங்கள் பொய் யனுசரித்தால், இந்திரனே! பிரமணஸ்பதியே முன்னறியும் அங்கிரஸன் துன்பம் துக்கத்தினின்று எங்களைக் காத்திடுக. [௬. ௪௫. ௧—௩.]

உ௩௯ தூக்கமே! [அங்கிரஸன்—துச்சுவப்ன நாசன தேவதை.]

௧ நீ சாவதில்லை, நீ ஜீவிப்பதில்லை; தூக்கமே நீ தேவர்களின் அமிருத கருப்பம்; வருணானி உனது தாயாவாள்; யமன் உன தந்தை; உனது பெயர் அரரு. ௨ தூக்கமே! உனது சனனஸ்தானத்தை நாங்கள் அறிவோம்; நீ தேவ சகோதரிகளின் மகன்; நீ யமனின் காரியம்; நீ அந்தஞ் செய்பவன், நீ மிருத்யு தூக்கமே! நாங்கள் உன்னை நன்கறிவோம்;

---

1 ஒரு மூலிகை பெயர்.

உ௩எ கருத்து—விஷாணகையால் வியாதி விலக்கு.

உ௩அ கருத்து—மாசற்ற மனமுடன் மேலான நிலைசெல்லு.

தூக்கமே! எங்களைக் கெட்ட கனவினின்று கா. ந கடனை வீசம் அரைக்கால் பூரணமாய் திருப்பிச் செலுத்துவது போல் எங்களை வெறுப்பவனுக்கு அப் படித் தீக்கனவுகளையெல்லாம் ஒன்று செலுத்துகிறோம். [சு. சசு. க—ந.]

உஉ0 பிரார்த்தனை [அங்கிரஸன்—க அக்கினி. உ விசுவே தேவன். ந ஸௌதன்வர்கள்.]

க அக்கினி காலை யக்ஞத்தில் எங்களைக் காக்கட்டும்; அவன் வைசுவா நரன், எல்லாஞ் செய்பவன், எல்லாச் சுகமளிப்பவன், சுத்தஞ் செய்பவன், எங்களைச் செல்வத் தில் ஸ்தாபிப்பானாக; நாங்கள் ஒருமையுடன் புசித்து ஓங்குமாயுசுடன்—வாழவேண்டும். உ இந்திரன் மருத் துக்கள் விசுவே தேவர்கள் எங்களை இந்த இரண்டாவது யக்ஞத்தில் விடாமலாகட்டும். நாங்கள் நீண்ட ஆயுளோ டாகி தேவர்களுக்குப் பிரியமாய் மொழிந்து கொண்டு அவர்களின் நல் மனத்திலாகவேண்டும். ந ருதத் தால்—யக்ஞ—பாண்டத்தை பொருந்தச் செய்யும் ரிஷி களின் மூன்றாவது யக்ஞமே இது; சுவர்க்கத்தை யடைந் துள்ள ஸௌதன்வர்கள் எங்களது சீரிய செயலை சீலத் துக்குச் செலுத்துக. [சு. சஎ. க—ந]

உஉக முப்பிரிவு [?—மந்திரோக்த ரிஷி]

க நீ காயத்திரீ சந்த கருடனாவாய், நான் உன்னைப் பற்று கிறேன்; யக்ஞ முடிவில் என்னை மேன்மைக்குச் செலு த்து: சுவாஹா! உ நீ ஜகதீ சந்த ரிபு; நான் உன்னைப்

---

உகக கருத்து—தூக்கமே மரணமாகும்.

உஉ0 கருத்து—நாங்கள் ஒருமையுடன் புசித்து ஓங்குமாயுசுடன் வாழ வேண்டும்.

பற்றுகிறேன்..................................................சுவாஹா !
ங நீ திருஷ்டுபுச் சந்த விருஷபன் ; நான் உன்னை..........
.......................................................... சுவாஹா ! [சூ. சஅ.
க—ங]

உஉஉ அக்கினி [அப்பகாம அதர்வன் – அசுவினி]

க அக்கினியே ! மானிடன் உனது காய குரூரத்தைக் கண்டதே யில்லை ; பசு ஜராயுவைப்போல குரங்கு கனலைப் புசிக்கும். உ கீழ்[1] மேற்கல்லைப்[2] புசிக்குங்கால் நீ ஆட்டைப்போல் அணுகி அகலுகிறாய்; சிரத்தைச் சிரத்துடன் மார்பை மார்புடன் தேய்த்து அவன், தனது பசுமையான வாய்களால் ஸோம தாள்களை தின்கிறான். ங கருடர்கள் தங்கள் கானத்தை சோதியில் முழக்கஞ் செய்துள்ளார்கள் ;—சோதி—சயனத்தில்—சூரியனில்—கருஞ் சீவர்கள் நடனஞ் செய்துள்ளார்கள். சூரியாசிரிதமானவர்கள் அடிக்கல்லைப் பரிகாரஞ் செய்ய கீழே வருங்கால் அதி இரேதஸை தரித்துள்ளார்கள். [சூ. சக.
க—ங.]

உஉங தானியம் [அபயகாம அதர்வன்—அசுவினிகள்]

க அசுவினிகளே ! எலியை ஸமங்கத்தை துளைப்பானை யழி : அவற்றின் சிரத்தைச் சேதி : தசைகளை தேய்த்துவிடு ; அவை யவத்தைப் புசிக்கலாம் ; அவற்றின் வாயை யடை ; தானியத்துக்கு பயமின்மையைச் செய். உ

---

1 கீழ்வாயை 2 மேற்வாயை.

உஉக கருத்து—மானிடரின் முதல் உச வருடங்கள் காயத்திரிச் சந்தம். அடுத்த சஅ வருஷங்கள் ஜகதீச் சந்தம், பிறகு சச வருஷங்கள் திருஷ்டுபுச் சந்தமெனப்படும்.

உஉஉ கருத்து—அழிக்கு மனல்.

துளைப்பே! வெட்டுக்கிளியே! அழைப்பவனே! உபக்வசமே பூர்த்தியாகாத அவியை பிராமணன்போல், இந்த யவ—த்தினையை—தின்னமல் துன்பஞ் செய்யாமல் சென்றுவிடு. ௩ துளைபதியே, வசுபதியே, கூறிய வாய்களுடன் எனக்குச் செவிகொடு; நாங்கள் விழுங்குபவையான உங்களை வனச் சேர்க்கையான விழுங்குபவற்றையெல்லாம் அரைத்து விடுகிறோம். [சூ. ரு௦. க—௩]

௨௨௪ வாயு [சந்ததி—ஆபன் ௩ வருணன்]

க வாயுவின் பவித்திரத்தால் புனிதமாகி ஸோமன் எதிர்த்துப் பாய்ந்தோடியுள்ளான்; அவன் இந்திரனுடைய இணங்கிய நண்பனுவான். ௨ தாய்மார்களான சலங்கள் எங்களை விருத்தியாக்கட்டும்; நெய்யால் சுத்தஞ் செய்பவர்கள் எங்களை நெய்யால் சுத்தஞ் செய்க: தேவிகள் எல்லாத் தீமைகளைச் சுமந்து செல்வதால், நான் சலங்களினின்று சுசியாயும் சுத்தமாயும் வருகிறேன். ௩ வருணனே! தேவ சனங்களுக்கு விரோதமாய் மனிதர்கள் இங்கு செய்வதை யெல்லாம்—நாங்கள் செய்து சிந்தனையன்னியில் உனது தர்மங்களை பங்கஞ் செய்தால், தேவனே! அத்தீமைக்காக எங்களைத் துன்பஞ் செய்ய வேண்டாம். [சூ. ருக. க—௩]

௨௨௫ சூரியன் [பாகலி—வெகுதேவர்கள்]

க இராட்சதர்களை எதிரில் அழிப்பவனும் சூரியன் சோதியினின்று உச்சி செல்லுகிறான்; ஆதித்தியனை அவன் அனைவராலுங் காணப்படுபவன், மலைகளினின்று காணுததை யெல்லாம் மாய்ப்பவன். ௨ பசுக்கள் கோ

௨௨௩ கருத்து—தானியத்தைப் பாலனஞ் செய்.

௨௨௪ கருத்து—வருணனை மன்னிப்புக் கேளுங்கள்.

சாலைகளில் சாய்ந்துள்ளன. அடவி மிருகங்கள் அமைதியை யடைந்துள்ளன; நதிகளின் அலைகள் மறைந்து, காணமலாகியுள்ளன. ௩ ஆயுஸைப் பதாயும் அறிவுமயமுமாய் விசுவ சிகிச்சையுமான கண்வனது கீர்த்தி வாய்ந்த செடியை நான் கொண்டுவந்துள்ளேன்: அது இவனுடைய காணத—கெடுதல்களை—கழித்திடுக. [௬. ௫௨. க—௩]

உஉ௬ வேண்டுகோள் [பிருஹத் சுக்கிரம்—நானாதைவதம்]

க அறிஞர்களான சோதியும் புவியும், சுக்கிரனை பெரியவனும் தட்சிணையால் இதை இரட்சிப்பார்களாக; சுவதாவும் அக்கினியும் ஸோமனும்—எனக்கு—அநுகூலஞ்செய்வார்களாக; வாயுவும் ஸவிதாவும் பகனும் எங்களை இரட்சிப்பார்களாக. உ மறுபடியும் பிராணன், மறுபடியும் ஆத்மா எங்களுக்கு வருக: மறுபடியும் கண் மறுபடியும் பிராணன் எங்களுக்கு வருக: இம்ஸையற்றன வைசுவாநரன் எல்லாக் கஷ்டங்களின் நடுவே நிற்பானாக. ௩ நாங்கள் வர்சஸோடும் பாலோடும் சேர்ந்துள்ளோம்; தேகங்களோடும் மங்களமான மனத்துடனும் சேர்ந்துள்ளோம்; துவஷ்டா இங்கு விரியும் நிலயத்தைச் செய்க: அவன் தேகத்தில் துன்பமாவதைத் தண்மை செய்க. [௬. ௫௩. க—௩.]

உஉ௭ இந்திரன் [பிரம்மா—அக்கினி ஷோம்யம்]

க நான் இங்கு அந்த உத்தம இந்திரனை இணைக்கிறேன், விருத்திக்காக அவனை யலங்காரஞ்செய்கிறேன்! மழைப் புல்லைப் போல அவனுடைய க்ஷத்திரம் மேன்மையான

---

உஉ௫ கருத்து—காணத கெடுதல்களையும் நீக்கு.

உஉ௬ கருத்து—நாங்கள் மங்களமான மனத்துடன் சேர்ந்துள்ளோம்

ஸ்ரீயை விருத்தியாக்கு. உ. அக்கினியே! ஸோமனே! அவனுக்கு க்ஷத்திரத்தை அவனுக்கு செல்வத்தை தரியுங்கள், இராஷ்டிர மண்டலத்தில் அவனது கூட்டத்துக்கதிகமாய் அவனை உயரமாக்குங்கள்: ந பந்துவானுலும் அபந்துவானுலும் சரி எங்களை எதிர்க்கும் ஒவ்வொருவனையும் ஸோமனைப் பொழிபவனுய் யஜமானனுயுள்ள எனக்குக் கீழாக்கு. [சூ. ருச. க—ந.]

உஉஅ ஆக்ஞை [பிரும்மா—க, விசுவே தேவர்கள் உ—ந ருத்திரன்]

க சோதி புவி நடுவே நிகழும், தேவர்களால் செல்லப்படும் வழிகளில் எது அழியாமைக்கு எடுத்துச் செல்லுமோ அதற்கு, தேவர்களே நீங்கள் எல்லீரும் இங்கு என்னை யளித்து விடுங்கள். உ கிரீஷ்மம் ஏமந்தம் சிசிரம் வஸந்தம், சரத்து, மழைகளே! நீங்கள் எங்களை சுகத்திலாக்குங்கள், பசுக்களில் பிரஜைகளில் எங்களுக்குப் பாகமளியுங்கள்; நாங்கள் உங்களுடைய காற்று சூனிய காப்பிலாக வேண்டும். ந இதாவத்ஸரத்துக்கு, பரிவத்ஸரத்துக்கு, ஸம்வத்சரத்துக்கு பெரிய நமஸ்காரத்தைச் செய்யுங்கள்; இந்த யக்ஞார்கர்களுடைய நல்நினைவில் நாங்களாகவேண்டும்; அப்படியே அவர்களுடைய மங்களமான நல்மனத்தில்—நாங்களாகவேண்டும். [சூ. ருரு. க—ந.]

உஉகூ சர்ப்பங்கள் [சந்தாதி—விசுவேதேவர்கள் உ—ந. ருத்திரன்]

க தேவர்களே பாம்பு எங்களை எங்களது பிரஜைகளுடன், எங்களது புருஷர்களுடன் கொல்லாமலாகுக:

---

உஉள கருத்து—அனைவரும் என் கீழாகுக.

உஉஅ கருத்து — ருதுக்களுடனும் வருஷங்களுடனும் ஒன்று சேர்ந்து வாழுங்கள்.

ஒன்று மூடியுள்ளதை அது திறக்காம லாகுக: திறந்துள்ளதை அது ஒன்று மூடாமலிருக்குக; தேவசனங்களுக்கு நமஸ்காரம். உ கருமைக்கு வணக்கமாகுக, குறுக்கு வீரியனுக்கு வணக்கம், பழுப்புப் பாம்புக்கு வணக்கம்; தேவசனங்களுக்கு வணக்கம். ௩ பாம்பே பல்லினால் உனது பற்களை ஒன்றழிக்கிறேன்; தாடையினால் உனது தாடையை ஒன்றழிக்கிறேன் நாக்கினால் உன் நாக்கை ஒன்றழிக்கிறேன்; வாயினால் உனது வாயை ஒன்றழிக்கிறேன். [சு. ருசு க—௩.]

உ௩0 மருந்து [சந்தாதி—க—உ ருத்திரன் ௩—?]

க இதுதான் மருந்தாகும்; இது ருத்திரனுடைய மருந்தாகும்; இதனால் ஒருவன், நூறு கூறுகளுள்ள கணையை தூரமாக்கலாம். உ ஜாலாஷத்தால்—அதைச்—நனையுங்கள். ஜாலாஷத்தால்—அதில்—பொழியுங்கள்; ஜாலாஷம் உக்கிரமான மருந்தாகும்; அதனால் எங்கள் சீவனுக்குச் சுகமளியுங்கள். ௩ எங்களுக்குச் சுகமும் இன்பமாகுக: எங்களை எந்—நோயும்—வேதனை செய்யாமலாகுக; எங்கள்நோய் வசமாகுக; எல்லாம் எங்களுக்கு மருந்தாகுக: சர்வமும் எங்களுக்கு மருந்தாகுக. [சு. ருஎ. க—௩.]

உ௩க புகழ் [யசஸ்காம அதர்வன்—மந்திரோகத தேவதையும் பிருகஸ்பதியும்]

க மகவானுன இந்திரன் என்னைப் புகழுள்ளவனுய் செய்க: இங்கு புவியும் ஜோதியுமான இரண்டும் என்னைப் புகழுள்ளவனுய் செய்வார்களாக. என்னைத் தேவ ஸவிதா புகழுள்ளவனுய் செய்க: நான் தட்சிணை யளிப்பவனுக்கு

---

உஉக கருத்து—பாம்புக்கு வணக்கமென்பது அதை யழிப்பதாகும்.
உ௩0 கருத்து—எல்லாம் எங்களுக்கு மருந்தாகட்டும்.

இங்கு பிரியமாவேனாக. உ சோதியில் புவியில் இந்திரன் புகழுடனிருப்பதுபோல், ஔஷதிகளில் சலங்கள் புகழுடனிருப்பனபோல், அப்படியே எல்லா தேவர்களில் ஸர்வங்களில் நாங்கள் புகழுள்ளவர்களாக வேண்டும். ௩ புகழுள்ளவன் இந்திரன் புகழுள்ளவன் அக்கினி, புகழுள்ளவனாய் ஸோமன் புலனாகிறான்; நான் எல்லாப் பொருள்களிலும் புகழுள்ளவனாய் அதிப் புகழுள்ளவனாயுள்ளேன். [சூ. ௫அ. க—௩]

உ௩உ பசுச் செல்வம் [அதர்வன்—ருத்திரம் உத மந்திரோக்த தேவதை]

க அருந்ததியே[1]! நீ முதன்மையாய் சுமைக் காளைகளுக்கு நீ பால்சுரனிய பசுவுக்கு நாற்கால் பிராணிகளுக்கு சிறு பசுவுக்குக் காப்பை யளி. உ ஔஷதி அருந்ததி தேவிகளுடன் சேர்ந்து காப்பை யளிக்கட்டும்; அது கோசாலையைப் பால் மிகச்செய்து புருஷர்களை யக்ஷ்மத்தினின்று நீக்குக. ௩ நான் விசுவரூபமாய் ஸுபகையாய் சீவனளிப்பவையை போற்றுகிறேன்; அவள் ருத்திரனுடைய ஆயுதத்தை எங்கள் பசுக்களினின்று தூரமாக்குவாளாக. [சூ. ௫௯. க—௩.]

உ௩௩ விவாஹம் [அதர்வன்—அர்யமான்]

க இங்கு அரியமான் முன்பக்கம் நழுவிய—கேசக்கதிர்களுடன் இந்தக் கன்னிகைக்குப் பதியைத் தேடி தாரமிழந்தவனுக்கு மனைவியை, நாடி, வருகிறான். உ அரிய

---

1 ஒரு மூலிகை பெயர்.

உ௩௧ கருத்து—நான் எல்லாப் பொருள்களிலும் புகழுள்ளவனாக வேண்டும்.

உ௩உ கருத்து—மிருக வைத்தியமும் அவசியமானது.

மானே ! வேறு பெண்கள், சபைக்குச் செல்லும் இந்தப் பெண்மணி சிரமப்பட்டுள்ளாள்; அரியமானே இனி அந்நிய ஸ்திரீ அவளது சபைக்கு வருவாள். ௩ தாத்ரு தரணியைத் தாங்குகிறான். தாத்ரு சோதியையும் சூரியனையுந் தாங்குகிறான்; இக்கன்னிகைக்கு அவள் இஷ்டம்போல் பதியைத் தருக. [சு. சுo க—௩]

உ௩௪ நான் [அதர்வன்—ருத்திரன்]

க சலங்கள் எனக்கு இனிமையாயுள்ளதை இசைத்திடுக: சூரன் ஜோதிக்காக எனக்குச் சுமந்துள்ளான். எனக்கு தேவர்களும் தபத்தில் தோன்றுபவர்களும், தேவஸவிதாவும் வியாபகத்தை யளித்திடுக. உ நான் ஜோதியையும் புவியையும் விரித்தேன்: நான் ஏழு ருதுக்களை ஒருமையுடன் சனனஞ் செய்தேன்; நான் சத்தியம் அசத்தியம் எது என்பதைச் சொல்லுகிறேன்; நான் ஜனங்களையும் திவ்யமான சொல்லையுஞ் சூழ்கிறேன். ௩ நான் ஜோதியையும் புவியையுஞ் ஜனனஞ் செய்தேன்: நான் ருதுக்களையும் ஜனனஞ் செய்தேன்; அக்கினி ஸோமர்களை நண்பர்களாக யநுபவிக்கும் நான் சத்தியம் அசத்தியம எது என்பதைச் சொல்லுகிறேன். [சு. சுக. க—௩]

உ௩௫ வைசுவாநரன் [அதர்வான் – ருத்திர உதமந்திரோகத் தேவதை.

க வைசுவாநரன் தனது இரசிமிகளால் எங்களைச் சுத்தஞ் செய்க: பிரேரிதஞ் செய்யும் வாயு பிராணனாலும் மேகங்களாலும் எங்களைச் சுத்தஞ் செய்க: பால்மிகுந்து

---

உ௩௩ கருத்து—கன்னிகைக்குக் கருத்துக்கிசைந்த கணவன் வேண்டும்.

உ௩௪ கருத்து—நான் சத்தியம் அசத்தியம் எது என்பதைச் சொல்லுகிறேன்.

உகஎ ஐக்கியம் [அதர்வான்—ஸாம்மனஸ்யம்]

க இசைந்து இணக்கமாகுங்கள். எப்படி பழைய தேவர்கள் இசைந்து தங்கள் பாகத்தை பற்றினார்களோ, அப்படியே உங்கள் மனம் ஒருமையுடனாகட்டும். உ அவர்களது மந்திரம் சமானமாகும், சபை சமானமாகும், விரதம் சமானமாகும், சித்தம் ஒன்று—சேரும்; நான் உங்களுக்கு சமான அவியால் யஜிக்கிறேன்; நீங்கள் சமான சித்தத்தில் ஒன்று நுழையுங்கள். ந உங்கள் சங்கற்பம் சமானமாகட்டும், உங்கள் இருதயங்கள் சமானமாகட்டும்: நீங்கள் ஒன்றுசேர்ந்து உத்தமமாக உங்கள் மனம் சமானமாகுக. [சு. சுச. க—ந]

உகஅ துண்டமாக்கு [அதர்வன்—சந்திர உத இந்திரன் பராசரன்]

க கோபங் கீழாகட்டும், எழும்—ஆயுதம்—கீழாகட்டும், மன மிணையும் கைகள் இரண்டுங் கீழாகட்டும்: பராசரனே[1]! அவர்களின் பலத்தை யொழித்துவிடு; அப்பால் எங்களுக்குச் செல்வத்தைச் செய். உ தேவர்களே! கைகளற்றவர்களில் நீங்கள் எறியும் கைகளற்றதனை—யான—இந்த அவியால் நான் எதிரிகளின் கைகளை நான் துண்டம் துண்டமாக்குகிறேன். ந இந்திரன் அசுரர்களுக்கு கைகளற்றதைச் செய்தான்; எனது வீரர்கள் நிலையான நண்பனை இந்திரனால் ஜயிப்பார்களாக. [சு. சுரு. க—ந]

---

1 அழிப்பவனே;

உகஎ கருத்து—ஒரு எண்ணம் ஒரு கருத்து ஒரு நோக்கமுடனாகுங்கள்.

உகஅ கருத்து—மாற்றார்களை மிதித்து விடு.

உ௧௯ எதிரிகள் [அதர்வன்—சந்திர உத இந்திர தேவதை]

௧ எதிர்க்கும் எதிரி கைகளற்ருகுக: எங்களைப் போர் புரிய படைகளுடன் வரும்—பகைவர்கள் கைகளற்ருவார்களாக: இந்திரனே! மேலான ஆயுதத்தோடு அவர்களை மோதச்செய்; அவர்களுடைய அகாத புருடன் துன்பமாகி ஓடுவானுக. ௨ எதிரிகளே நாண் ஏற்றி, அம்பு—இழுத்து எய்பவர்களான நீங்கள் கைகளற்றவர்கள்; இந்திரன் இப்பொழுது உங்களைக் கொன்றுள்ளான். ௩ எதிரிகள் கைகளன்னியி லாகட்டும். நாங்கள் அவர்களுடைய அங்கங்களை ஆயாச மாக்குகிறோம்; இந்திரனே இனி அவர்களுடைய ஐசுவரியங்களை நமக்குள் நூறு வகையாய் பிரித்துக் கொள்வோம். [௬. ௬௬. ௧—௩]

உ௨௦ அச்சமுண்டாக்கு [அதர்வான்—சந்திர உத இந்திரன்]

௧ எங்கும் வழிகளில் இந்திரனும் பூஷணனும் சென்றுள்ளான்; இன்று அங்குள்ள சேரார் சேனைகள் வெகு தூரத்திலேயே கலங்கிடுக. ௨ எதிரிகளே! தலைகளில்லாப் பாம்புகள் போல் மதிமயங்கிச் செல்லுங்கள்; அக்கினியால் அறிவீனமான அங்குள்ள உங்களுடைய உயரிய ஒவ்வொருவனையும் இந்திரன் ஒழிப்பானுக. ௩ அவர்களில் சர்மத்தை விருஷபம் போல சுற்றிக் கட்டு; அரிணத்தின் அச்சத்தை யுண்டாக்கு; எதிரிகள் தூரமோடுக; பசு எங்களுக்கு இங்கு துரிதமாகுக. [௬. ௬எ. ௧—௩]

---

உ௧௯ கருத்து—ஐசுவரியங்களை நமக்குள் நூறு வகையாய் பிரித்துக் கொள்வோம்.

உ௨௦ கருத்து—அரியை அனலால் அறிவீனமாக்கு.

உசக கேசம் [அதர்வான்—மந்திரோக்த தேவதை]

க இங்கு ஸவிதா க்ஷுரத்தோடு வந்துள்ளாள்; வாயுவே!
நீ உஷ்ணோதகத்துடன்[1] வா; வசுக்கள் ருத்திரர்கள்
ஆதித்தியர்கள் ஒருமையுடன் ஈரமாக்கட்டும்; அறிவுட
னுள்ள நீங்கள் ஸோம இராஜனுடைய—சிரகேசத்தை—
நீக்குங்கள். உ அதிதி தாடியை நீங்கச் செய்க: சலங்
கள் சக்தியால் அதை—நனைத்திடுக: பிரஜாபதி கண்
ணுக்கு தீர்க்காயுசுக்கு அதைச் சிகிச்சை செய்திடுக.
ங அறியும் ஸவிதா எந்த க்ஷுரக் கத்தியால் சோமன்
வருணனுடைய—சிர ரோமத்ஸதை—நீக்குவாளோ, பிரா
மணர்களே அதனால்—இவனுடைய—சிரகேசத்தை—நீக்
குங்கள். அவன் பசு பரி பிரஜை மிகுபவனாகுக. [சா.
சஅ. க—ங]

உசஉ புகழ் [வர்சஸ்காம யசஸ்காம அதர்வான்—பிருஹஸ்பதி
உத அசுவினிகள்]

க மலைகளில், இரதங்களில்—அரகராடங்களில்—பொன்
னில் பசுக்களில் எந்தப் புகழுண்டோ அமிருதத்தில்,
பொழியும் சுரத்தில் எந்தத் தேனுண்டோ அது எனக்
காகுக. உ அசுவினிகளே! சுபபதிகளே! சனங்களில்
நான் சீரிய சொற்களைச் சொல்ல உங்களுடைய இனிய
தேனால் என்னை நனையுங்கள். ங பிரஜாபதி, சோதியில்
ஒளியைப்போல் நிலையாய் என்னில் பலத்தை இன்னும்
புகழை, அப்பால் யக்ஞத்தின் சக்தியை ஸ்தாபிப்பானாக.
[சா. சாக. க—ங]

---

1 சூடான சலத்துடன்

உசக கருத்து—கேசம், ரோமம் என்பன மாசு அல்லது மரண சின்னங்களைக் குறிக்கும்.

உசஉ கருத்து—எனக்குத் தேனும் புகழும் வேண்டும்

உசக. தாய்மார்களே! [காங்காயனன்—அகஸ்யன்]

க மாமிசம்போல், சுரைபோல் ஆட்டப் பலகையில் காய் போல பலமுள்ள புருஷனுடைய மனம் ஸ்திரீயில் ஸ்தா பனமாவதுபோல்—உனது கருத்து இம்சையாகாத வளே! உனது கன்றில்[1] பந்தமாகுக. உ யானை பெண் யானையின் பாதத்தை பாதத்தாலநுசரிப்பதுபோல் பல முள்ள புருஷனுடைய மனம் ஸ்திரீயில் ஸ்தாபன மாவதுபோல்—பந்தமாகுக. ந பரிதிபோல் உபாதி போல் பரிதியின் நடுப்பாகம்போல் பலமுள்ள புருஷ னுடைய மனம் ஸ்திரீயில் ஸ்தாபனமாவதுபோல பந்த மாகுக. [சு. எ௦. க—ந.]

உசச உணவு [பிரம்மா—க—உ. அக்கினி. ந. விசுவே தேவர்கள்]

க. நான் வெகுமுறை உண்ணும் வெகு பல உணவையும் நான் பிரதி கிரஹித்துள்ள[2] பொன்னையும் புரவியையும் பசுவையும் அஜத்தையும் ஆட்டையும் எதனையும் ஹோதா வான அக்கினி நல்ல அவியாகச் செய்க. உ பிதுருக்க ளால் அளிக்கப்பட்டு மானிடர்களால் அநுமதியாகி, என்னை அடையும் அடையாததுமான, உணவை, எதனால் எனது மனம் மகிழ்வுடனுகின்றதோ அந்த உணவை ஹோதாவான அக்கினி நல்ல அவியாகச் செய்க. ந, தேவர்களே! எந்த உணவை அளிக்கவோ அளிக் காமலிருக்கவோ நான் வாக்களித்து அநீதியாய் உண்கி றேனே, அந்த உணவை மகத்தான வைசுவாநரன் இனி மையாயும் மங்களமாயுஞ் செய்க. [சு. எக. க—ந.]

---

1 குழந்தையிலே. 2 பெற்றுள்ள.

உசக. கருத்து—பாலர்களைப் போற்றுங்கள்.

உசச கருத்து—உயரிய உணவைப் புசியுங்கள்.

உசரு வீரியம் [அதர்வாங்கிரஸன்—சேபோ அர்க்கன்]

க. எப்படிக் கரும்பாம்பு—அடக்கமநுசரித்து, அசுரனுடைய மாயையால், அதிசய காயங்களைச் செய்து விசாலமாகின்றதோ அப்படியே இந்த அர்க்கம் உனது ஜனனாங்கத்தை அங்கத்தோடங்கமாய் சடிதியாய் நன்கு பொருந்தச் செய்க. உ எப்படி சனனாங்கம் வாதத்தினால் ஸ்தூலமாகி உற்பத்திமூலத்தை — யநுசரிக்குங்கால் — பரஸ்வன்தினுடைய அங்கம் எத்தனை பெரியதாகுமோ அத்தனை பெரியதாய் உனது அங்கம் ஓங்குக. ந பாரஸ்வந்தினுடைய அங்கம் எத்தனையாகுமோ, யானை, கழுதையினுடைய—அங்கங்கள் எத்தனையாகுமோ தூரித குதிரையினுடைய அங்கம்போல் அத்தனை பெரியதாய்—உனது அங்கம் வளர்க: [சா. எஉ. க—ந]

உசசா தேவர்களே! [அதர்வான்—ஸாம் மனஸ்யமுத—மந்திரோக்த நான தேவர்கள்]

க. இங்கு வருணன் வருக: ஸோமனும் அக்கினியும்—வருக. வசுக்களோடு பிருஹஸ்பதி இங்கு வருக, சகோதரர்களே! நீங்கள் எல்லீரும் ஒரே மனமுடன் உக்கிர ஒழுக்கஞ்செய்பவனுடைய செல்வத்துக்கு ஒருமையுடன் வாருங்கள். உ உங்கள் இருதயங்களிலுள்ள வலிமையை உங்கள் மனத்தில் நுழையும் சங்கற்பத்தை நெய்யினாலும் அவியாலும் நான் விலக்குகிறேன்; சகோதரர்களே! உங்கள் இன்பம் என்னிலாகுக: ந நீங்கள் இங்கு தானுகுங்கள். எங்களிடமிருந்து தூரஞ்செல்ல வேண்டாம்; பூஷணன் தூரத்தில் உங்களுக்கு வழி சூனியஞ்செய்க: வாஸ்தோஷ்பதி உங்களை யநுசரித்து முழக்கமுடனழைத்

---

உசரு கருத்து—நீ வளர்ந்தோங்கு.

திடுக: சகோதரர்களே! என்னில் உங்கள் இன்பமாகுக. [சூ. எ௩. க—௩.]

உ௪எ ஒருமை [அதர்வான்—ஸாம்மனஸ்யம்]

க. உங்களது காயங்கள் ஒன்றுகுவிக; உங்கள் மனங்கள் ஒன்றாகி உங்களுடைய விரதங்கள் ஒருமையுடனாகுக; இந்த பிரமணஸ்பதி ஒருமையுடன் உங்களை, பகன் ஒருமையுடன் உங்களை வரச் செய்துள்ளான். உ உங்கள் மன இணக்கத்தையும், உங்கள் இருதய இணக்கத்தையும் பகனுடைய பரிசிரமத்தையும்—நான் செய்துள்ளேன்; அதனால் உங்களை நான் இணக்கமாக்குகிறேன். ௩. உக்கிரமாய் பகைமை வகிக்காமல் எப்படி ஆதித்தியர்கள் வசுக்கள் மருத்துக்களுடன் சேர்ந்துள்ளார்களோ அப்படியே, மூந்நாமமுள்ளவனே![1] பகைமை வகிக்காமல் இந்த சனங்களை நீ இங்கு ஒருமையுடனாக்கு. [சூ. எ௪. க—௩.]

உ௪அ துரத்து [ஸபத்ன க்ஷய காம கபந்தன்—மந்திரோக்த இந்திரன்]

க. எங்களை எதிர்த்து எதிரியாயுள்ள அம்—மனிதனை, மனையினின்றும் நான் துரத்துகிறேன்; இந்திரன் வேதனை சூனிய வெளிதூரத்தும் அவியால் அவனை அழித்துள்ளான். உ அவன் இடையறா வருடங்கள் மறுபடியும் வராமலிருக்க, விருத்திர னழிக்கும் இந்திரன் அவனை அதி வெகு தூரந்துரத்துவானாக. ௩ அவன் மூன்று தூரங்களுக் கப்பால் செல்க; அவன் ஐந்து சனங்களுக்

1 முக்குணமுள்ளவனே!

உ௪௬ கருத்து—சகல சனங்களும் என்னில் இன்பத்தைக் காண வேண்டும்.

உ௪எ கருத்து—எல்லா சனங்களும் ஏக சித்தர்களாகவேண்டும்.

கப்பால் செல்க; சூரியன் சோதியிலிருக்கும் வரை அநந்த வருஷங்கள் அவன் அங்கிருந்து திரும்பி வராமலிருக்க மூன்று சோதிகளுக் கப்பால் செல்க. [சா. எடு. க—ரு.]

உசகூ அக்கினி [கபந்தன்—ஸாந்தபன் அக்கினி]

க சுடரைக் காண சமித்தைச்—சேர்த்து அவனைச் சுற்றி அமர்ந்துள்ளவர்களுக்கு அவர்களது இருதயத்தினின்றே, எழுச்சியாக்கப்படும் அக்கினி தன் நாக்களோடு உச்சமாவாகுக. உ எரிக்கும்—அக்கினியின் பதத்தை நான் ஆயுசுக்காகப் பற்றுகிறேன்; அறிஞன்—வாயினின்றும் தோன்றும் அவனுடைய புகையைப் பார்க்கிறான், ௩ எவன் க்ஷத்திரியனால் சேர்க்கப்படும் அக்கினியின் ஸமித்தை யறிகிறானோ, அதன் மிருத்யுவின் இறக்கத்தில் பாதத்தை வைப்பதில்லை. ச அவனைச் சூழ்பவர்கள் அவனை அழிப்பதில்லை; அவன் அழிவுக்குச் செல்வதில்லை; அறியும், க்ஷத்திரியன் ஆயுசுக்காக அக்கினியின் நாமத்தை கிரகிக்கிறான். [சா. எசா. க—ரு]

உருO நிலை [கபந்தன்—ஜாதவேதன்]

க சோதி நிலையாயுள்ளது; புவி நிலையாயுள்ளது; இந்த விசுவமான ஜகம் நிலையாயுள்ளது; மலைகள் மூலத்தில் நிலையாயுள்ளன; நான் குதிரைகளை கொட்டத்தில் நிலைக்கச் செய்துள்ளேன். உ போகும் நிலயத்தைப் பற்றியவனும், வரும் நிலயத்தைப் பற்றுபவனுமான கோபனை நான் அழைக்கிறேன். ௩ ஜாதவேதசனே! உனது சத வழிகளை இங்குதிருப்பு. உனக்கு ஆயிரம் வழிகளுண்டு,

---

உசஅ கருத்து—தெவ்வர்களைத் துரத்து.

உசகூ கருத்து—சக்தி புருஷன் ஆயுசுக்குச் சுடரைப் பற்றுகிறான்.

அவற்ருல் எங்களை மறுபடியும் அடையச் செய் [௬. ௭௭. ௧—௪]

உ௫0 கருத்து—திரநிலை என்பது தேவ நிலை.

உ௫௧ பெருகு, பெருக்கு. [அதர்வான்—சந்திரமாஸ் துவஷ்டா]
௧ இந்நிகழும் அவியிஞல் இவன் மறுபடியும் பூரணமாக்கப் படட்டும்; அவனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள மனைவியை அவன் இரசத்தால் பெருகச் செய்க. உ அவளைப் பாலினல் அபிவிருத்தி செய்க; இராஷ்டிரத்தால் அபிவிருத்தி செய்க. ஆயிரஞ் சக்திகளுடனுகுஞ் செல்வத்தில் இவர்கள் சாசுவதமாவார்களாக. ௩ துவஷ்டா மனைவியை சனனஞ் செய்தான்; துவஷ்டா இவளுக்கு பதியானஉன்னைச் சனனஞ் செய்தான்; துவஷ்டா உங்களுக்கு தீர்க்காயுளையும் ஆயிரமாயுசையும் மக்கட்களையுஞ் செய்க. [௬. ௭௮. ௧—௩]

உ௫உ புஷ்டி [அதர்வான்—ஸம்ஸ்பானம்]

௧ இங்கு புஷ்டி யளிக்கும் மேகபதி எங்களைப் பாது காப்பாஞக. எங்கள் வீடுகளில் ஒப்பற்றவைகளை—உதவி செய்க. உ மேகபதியே! நீ எங்கள் வீடுகளில் பலத்தை ஸ்தாபி, புஷ்டி வருக. பொருள் வருக. ௩ தேவனே! புஷ்டி யளிப்பவனே! நீ ஆயிரம் போஷணைகளின் அதிபதி, அதை எங்களுக்கு அளி, அதை எங்களுக்குக் கொடு; உன்னிடமிருந்து அவற்றிற்கு நாங்கள் பாகஸ்தர்களாவோமாக. [௬. ௭௯. ௧—௩]

---

உ௫0-உ௫௧ கருத்து—நீயும் உன் மனைவியும் ஓங்குங்கள்.

உ௫உ கருத்து—மனையிலே எல்லா இன்பங்களும் வேண்டும்.

உருக காலசஞ்சர்கள் [அதர்வான்—சந்திரபான்]

க விசுவமான பொருள்களை யெல்லாம் கீழ்பார்த்து அவன் வானத்தில் பறக்கிறான்; திவ்யமான நாயின்[1] மேன்மை எது உண்டோ அதனால் நாங்கள் உன்னை உபாசிக்கிறோம். உ தேவர்களைப்போல் சோதியில் ஸ்தாபனஞ் செய்யப்பட்டுள்ள மூன்று காலகாஞ்சைகளை[2] இம் மனிதனது இன்னல் இன்மைக்காக உதவிக் கழைக்கிறேன். ந சலங்களில் உனது சனனம். சோதி உனது ஸ்தானம். புவியிலும் கடலிலும் உனது மகிமை. திவ்ய நாயின் மகிமையான அவியினால் நாங்கள் உன்னை உபாசிக்கிறோம். [சா. அ0. க—ந]

உருச மான் [துவஷ்டா—மந்திரோக்த உத ஆதித்தியன்]

க நீ சுவாதீனன். இரு கைகளைப் பற்றியுள்ளவன்; நீ அரக்கர்களை அகற்றுகிறாய்; பிரஜையையும் பொருளையும் பற்றி இது கைப்பிடிப் பாயிற்று. உ கைப்பிடிப்பே! கருவின் ஸ்தாபனத்துக்காக மூலஸ்தாபனத்தை நலமாய் தரி. எல்லையி லிருப்பவளே! மகனை யளி. வருபவளே! நீ அவனை வரச்செய். ந மகனை விரும்பி அதிதி எந்தக் கைப்பிடிப்பைப் பற்றினளோ! அதைத் துவஷ்டாவானவன் அவள் மகனை ஜனனஞ் செய்க, எனச் சொல்லி அவளுக்கு அதை பந்தஞ் செய்க. [சா. அக. க—ந]

உருரு மனைவி [ஜாயாகாமோ பகன்—இந்திரன்]

க வந்தவள் வருபவள் வருகின்றவளது நாமத்தை நான் கிரகிக்கிறேன்; விருத்திரனழிக்கும் நூறு வய வசுக்களது

---

1 ஆத்மாவின துருவ நட்சத்திரத்தின் 2 மிருகசீர்ஷதாரகங்களை

உருக கருத்து—வானசாஸ்திர மறியுங்கள்.

உருச கருத்து—சுகப் பிரசவமளி.

இந்திரனை நான் விரும்புகிறேன். உ ஸவிதாவின் பெண்ணை சூரியையை அசுவினிகள் எந்த வழியால் வகித்துச் சென்றார்களோ அந்த வழியால் நீ மனைவியைக் கொண்டுவா என எனக்கு பகன் சொன்னான். ௩ இந்திரனே! உனது அங்குசம் கொக்கி பெரியது, பொன் மயம், பொருள் அளிப்பதாகும்: அதனால் சக்திபதியே! மனைவியை நாடும் எனக்கு மனைவியை யளி. [௬. அ௨. க—௩]

உ௫௬ மனத்தால் [அங்கிரசன்—மந்திரோக்த தேவதை]

க அபசிதமே![1] கூட்டினின்று பறவையைப்போல் பறந்து விடு; சூரியன் சிகிச்சையைச் செய்க: சந்திரன் உங்களைத் தூரமாக்குக. உ ஒன்று புள்ளி யுள்ளது, ஒன்று வெண்மையாகும், ஒன்று கருமை இரண்டு சிகப்புக்களாகும்; நான் அனைத்தின் நாமத்தையும் கிரகித்துள்ளேன். எங்கள் மனிதர்களைக் கொல்லாமல் நீங்கள் சென்று விடுங்கள். ௩ அபசிதமான இராமாயணீ[2] மலடாவாள். அவள் பறந்து விடுவாள்; சிரங்கு—இங்கிருந்து பறந்துவிடும்; அது கண்டத்தினின்று மறையும். ச உன்னுடைய ஆஹுதியை மனத்தால் அநுபவித்துப் புசி சுவாஹா! ஏனெனில் நான் மனத்தால் இதை யளிக்கிறேன். [௬. அ௩. க—ச] .

உ௫எ நிர்ருதி [அங்கிரஸன்—நிர்ருதி]

க. கட்டப்பட்ட இவர்கள் விடுதலை யடைவதற்காக நான் ஆஹுதி செய்யும் பயங்கர வாயுள்ள உன்னை,

---

1 கண்டமாலையே! 2 மறைந்துள்ளவள்.

உ௫௫ கருத்து—பெரியார்களது உதவியால் மனைவியை யடையுங்கள்.

உ௫௬ கருத்து—அபசிதம் நீக்கு.

சனங்கள் புவி என எண்ணுகிறார்கள்; நான் உன்னை முற்றும் நிர்ருதி என அறிகிறேன். ௨ புவியே! நீ அவிகள் நிறைபவள்; ஏங்களிலுள்ள இது உனது பாகமாகும். இவற்றையும் அவற்றையும் பாவத்தினின்று நீக்கு; சுவாஹா! ௩ நிர்ருதியே! எதிர்ப்பற்ற நீ பந்தமாக்கும் இரும்புக் கட்டுக்களினின்று எங்களை விடுதலையாக்கு. எமன் மறுபடியும் எனக்கு உன்னை யளிக்கிறான்; அந்த யமன் மிருத்யுவுக்கு வணக்கமாகுக. ௪ ஆயிரம் மரணங்களுடன் இணைப்பாகி இரும்புக் கம்பத்திலே நீ கட்டப்பட்டுள்ளாய்; நீ யமன் பிதுருக்களுடன் ஒன்று சேர்ந்து இவனை உயரிய உலகத்துக்கு எழுச்சியாக்கு. [சா. அச. க—ச.]

உ௫அ யக்ஷ்மம் [யக்ஷ்ம நாசனகாம அதர்வன்—வனஸ்பதி]

க. இந்த திவ்ய வனஸ்பதியான வாரணன்—நோய்களை—விலக்குவான்; இம்மனிதனில் நுழைந்துள்ள யக்ஷ்மத்தை தேவர்கள் நீக்கியுள்ளார்கள். ௨ நாங்கள் மித்திரன் வருணன் இந்திரனது மொழியால், எல்லா தேவர்களது மொழியால் நாங்கள் உன்னுடைய யக்ஷ்மத்தை நீக்குகிறோம். ௩ எங்குஞ் செல்லும் இந்த சலங்களை, விருத்திரன் தடுப்பதுபோல், வைசுவாநர அக்கினியால், நான் உனது யக்ஷ்மத்தை நீக்குகிறேன். [சா.அ௫.க—௩.]

உ௫௯ தலைவன் [விருஷகாம அதர்வன்—ஏகவிருஷன்]

க. இவன் இந்திரனுக்குத் தலைவன். சோதி புவிக்குத் தலைவன், எல்லாப் பொருள்களுக்குந் தலைவன், நீயே ஒரு தலைவனாவாயாக. ௨ கடல் நதிகளின் தலைமை, கனல்

---

உ௫எ கருத்து—இரும்புக் கட்டுக்களினின்று எங்களை விடுதலையாக்கு.

உ௫அ கருத்து—அனைவரின் நோயை நீக்குவது உங்கள் கடமை

புவியின் தலைமை, ஜனங்கள் விண்மீன்களின் தலைமை. ஏக தலைவனாய் நீயாவாயாக. ௩ நீ அசுரர்களின் சம்ராட்டன்: மனிதர்களின் உச்சி, நீ தேவர்களின் அரையாகம். நீயே ஏக தலைவனாவாயாக. [சூ. அசு. க—௩.]

உகூ0 திரம் நில் [அதர்வன்—துருவன்]

க. நான் உன்னைப் பற்றியுள்ளேன்; நீ அகத்திலுள்ளாய்; திரமாய் நில், திரகுனியமாகாதே. எல்லா ஜனங்களும் உன்னை விரும்புக: இராஷ்டிரம் உன்னிடமிருந்து தளர வேண்டாம். உ. நீ இங்கு இரு, நீ இங்குமங்கும் அசையாதே: தளராமல் பர்வதம் போலிருக்கவும். இந்திரனே! நீ இங்கு திரமாய் நில்; நீ இங்கு இராஷ்டிரத்தைத் தரி. ௩. திரமான அவியால், திரமான இவனை, இந்திரன் தரித்துள்ளான்; சோமனும் பிரமணஸ்பதியும் இவனுக்கு ஆசிகூறுக. [சூ. அஎ. க—௩.]

உகூக ஒரு மனம் [அதர்வன் துருவன்]

க. ஜோதி திரமாகும், புவி திரமாகும். இந்த விசுவமான ஜகம் திரமாகும். இம்மலைகள் திரங்களாகும்; இந்த ஜனங்களின் இராஜா திரனாவான். உ உனக்கு இராஜாவான வருணன் திரமாவானாக. திவ்யமான பிருஹஸ்பதி திரனாவானாக: இந்திரனும் அக்கினியும் உனக்குத் திரமாவானாக. அவர்கள் திரமாய் உனக்கு இராஷ்டிரத்தைத் தரித்திடுக. ௩. நீ திரமாய், சிதறாமல் சத்துருக்களை நாசமாக்கு: உனக்கு எதிரியாய்த் தோன்றுபவர்களை கீழே விழச்செய்: எல்லா திசைகளும் ஒன்று சேர்ந்து, உனக்கு, ஒரு மனமுடனா

---

1 பலமுள்ளவன்.

உ௲௯ கருத்து—நீ ஒரே தலைவனாவாயாக.

உகூ0 கருத்து—தளராமல் மலைபோலிரு.

௩. இந்த சபையானது இங்கு உனது நிரந்தரக்காக பொருந்துக. [௬. ௮௮. ௧—௩.]

௨௬௨ மனம் என்னை [அதர்வன்—மந்திரோக்த தேவதை]

௧ சோமனால் பரிக்கப்படும் வீரியமாகி, அன்பு தூண்டுபவளது கிரத்தாலுண்டாகும்—பயனால்—உனது இருதயத்தை நாங்கள் தூக்கமுடனாக்குகிறோம். ௨ நாங்கள் உனது இருதயத்தைத் துன்பமாக்குகிறோம்; நாங்கள் உனது மனத்தைத் துன்பமாக்குகிறோம்; புகை, காற்றை யநுசரிப்பது போல் உனது மனம் என்னை யநுசரித்திடுக. ௩ எனக்கு மித்திரனும் வருணனும், எனக்கு தேவியான சரஸ்வதியுமாவாளாக; புவியின் நடுவும், அதன் இரண்டு முனைகளும், உன்னை என்னுடன் சேர்த்திடுக. [௬. ௮௯. ௧—௩]

௨௬௩ அம்பு [அதர்வன்—உருத்திரன்]

௧ உனது அங்கங்களில், இருதயத்தில், ருத்திரன் எய்த அம்பை, இங்கு நாங்கள் உன்னிடமிருந்து தூரமாய் நீக்குகிறோம். ௨ உனது அங்கங்களில், நூறு நாடிகள் வியாபகங்களாகும்; நாங்கள் உனது இந்த சர்வத்தின் விஷங்களை விலக்குகிறோம். ௩ ருத்திரனே சரம்—எறியும் உனக்கு நமஸ்காரம், குறியான உனது—சரத்துக்கு—நமஸ்காரம்; பறக்கும் பகழிக்கு நமஸ்காரம்: தாக்கிய சரத்துக்கு நமஸ்காரம். [௬. ௯௦. ௧—௩]

௨௬௪ சிகிச்சை [பிருக்வங்கிரஸன்—தேவர்கள்]

௧ இந்த யவத்தை எட்டு யோகங்களாலும், ஆறு யோகங்களாலும் அவர்கள் உறுதியாய் உழுதார்கள். நான்

---

௨௬௧ கருத்து—தீவிரமாய் சிதறுமல் சத்துருக்களை நாசமாக்கு.
௨௬௨ கருத்து—மனைவியின் மனம் உன்னை யநுசரிக்கட்டும்.
௨௬௩ கருத்து—ருத்திரனது அம்புடன் இணங்கு.

அதனால் உன்னுடைய காய நோயை நீக்குகிறேன். உ காற்றுக் கீழ்பக்கம் வீசுகின்றது; கதிரவன் கீழ்பக்கம் ஒளி வீசுகிறான்; இம்மையாகாத—பசு—கீழ்பக்கம் கறக்கிறாள்; உனது நோயும் கீழ்பக்கமாகுக. ௩ சலங்கள் சிகிச்சை யளிப்பவை யாகும்; சலங்கள் நோய் நீக்குபவை யாகும்; சலங்கள் எல்லா நோய்களையும் நீக்கும்; அவை உனக்கு சிகிச்சையை யளித்திடுக. [சு. சுக. க—௩]

உசுரு குதிரை [அதர்வன்—வாஜீ]

க குதிரையே[1]! நீ இணைக்கப்படுங்கால் காற்றைப்போல் துரிதமாகவும்; மனோ துரிதமுடன் நீ இந்திரனுடைய தூண்டுதலில் செல். சர்வம் பற்றும் மருத்துக்கள் உன்னை இணைக்கட்டும்; துவஷ்டா உனது பாதங்களில் துரிதத்தை வைத்திடுக. உ குதிரையே! உன்னில் மர்மமாய் வைக்கப்பட்டுள்ள துரிதத்தால் காற்றிலே கருடனில் வியாபகமாகிச் செல்லும் சக்தியால் அசுவமே, பலமுடனாகி சமரில் விடுவித்து போரிலே வெல். ௩ பரியே, உனது காயத்தை வகிர்து, உனது காயம் உனக்கு சுகமும்—எங்களுக்கு—இன்பமும்—அளித்து—ஓடுக. மகத்தாய், துன்பமாகாமல் தரிப்புத் தலைவனை அவன் தன் ஒளியை ஜோதியில் தேவனைப்போல் ஸ்தாபித்திடுக. [சு. சுஉ. க—௩]

உசுசு வந்தனை [சந்தாதி—ருத்திரன்]

க யமனும், மிருத்யுவும், மாசழிப்போனும், நிர்ருதனும், பழுப்பு சர்வனும், வில்லாளனும், சேனைகளுடன் எழும்

1 பிராணனே.

உசுச கருத்து—சலமே சர்வ சிகிச்சை.

உசுரு கருத்து—எங்களுக்கு குதிரையால் இன்பமாகவேண்டும்.

எல்லா தேவர்களும், எங்களுடைய வீரர்களை விலக்குவார்களாக. ௨ மனத்தால் ஹோமங்களால் சுடரா செய்யால், வந்தனைக் குரியவர்களான வில்லாளர்களான சர்வனுக்கும், இராஜாவான பவனுக்கும், நான் வந்தனை யளிக்கிறேன். அவர்கள் விஷமிருபவற்றை எங்களிடமிருந்து தூரம் எடுத்துச் செல்க. ௩ விசுவே தேவர்களே எல்லாம் பற்றும் மருத்துக்களே! அக்கினி சோமனே விஷமிருபவர்களினின்று எங்களைப் பாலனஞ் செய்யுங்கள்; அக்கினி சோமனே புனித பலமுள்ள வருணனே: நாங்கள் வாதன் பர்ஜனியனுடைய நல் நினைவிலாவோமா. [சா ௩௩. ௧—௩]

உகூஎ வளைக்கிறோம் [அதர்வாங்கிரஸன்—ஸரஸ்வதி]

௧ நாங்கள் உங்களது மனங்களை ஒன்று வளைக்கிறோம்; நாங்கள் உங்களது விரதங்களை சங்கற்பங்களை, ஒன்று வளைக்கிறோம் நாங்கள் விபரீத விரதமுள்ள உங்களை, ஒன்று வளைக்கிறோம். ௨ நான்—என்—மனத்தால் உங்கள் மனங்களைப் பற்றுகிறேன்; உங்கள் சித்தங்களுடன் எனது சித்தத்தை யநுசரியுங்கள், நான் உங்களது இருதயங்களை என் வசத்தி லாக்குகிறேன்; என் போக்குப்பற்றி உங்கள் வழிகளுடன் வாருங்கள். ௩ எனக்கு ஜோதியும் புவியும் இழைந்துள்ளன; சரஸ்வதி இழைந்துள்ளாள்; இந்திரனும் அக்கினியும் எனக்கு இழைந்துள்ளார்கள்: சரஸ்வதியே! இங்கு நாங்கள் வித்தியாகவேண்டும். [சா. ௩௪. ௧—௩]

---

உகூசு கருத்து—நான் எல்லா தேவர்களுடைய நல் நினைவிலாகட்டும்.

உகூஎ கருத்து—விபரீத விரத முள்ளவர்களை வளைத்து விடுங்கள்.

உசஅ குஷ்டம் [பிருக்வாங்கிரஸன்—வனஸ்பதி. மந்திரோக்த தேவதை]

க. தேவஸ்தானமான அசுவத்தம் இங்கிருந்து மூன்றுவது ஜோதியிலேயுண்டு ; அங்கு தேவர்கள் அமுதக் கண்ணுன குஷ்டத்தை கிரகித்தார்கள். உ ஜோதியின் சொர்ண பந்தமுள்ள சொர்ணக் கப்பல் சலனமாயிற்று. அங்கு தேவர்கள் அமுதமலரான குட்டத்தை கிரகித்தார்கள். ந நீ ஓஷதிகளின் கருப்பமாகும். பனிமய—மலைகளின் கருப்பமாகும் ; விசுவமான பொருளின் கருப்பமாகும். இவனை எனக்காக நோயினின்று நீக்கு. [சூ. கூடு. க—ந]

உசுக துன்பம் நீக்கு [பிருகுதாங்கிரஸன்—க—ந. வானஸ்பத்தியம் ந, ஸொம்யம்]

க. பிருகஸ்பதியால் தூண்டப்பட்டு ஸோமனை அரசனுக உள்ள வெகு பல நூறு தோற்றங்களுடனுகும் ஓஷதிகள் எங்களைத் துன்பத்தினின்று நீக்குக. உ அவை என்னைச் சாபத் தீமையினின்றும் வருண—பயத்தினின்றும்—யமனின் பாசத்தி னின்றும் தேவர்களுக்கு மாறுன எல்லாக் குறையினின்றும் நீக்குக. ந கண்ணினுல் கருத்தால் வாக்கால் நாங்கள் உறக்கத்தில் விழிப்பில் ஏதேனும் குற்றம் நாங்கள் செய்திருந்தால் ஸோமனுடன் எங்களுக்கு சுவதாவால் அவற்றைச் சுத்தஞ் செய்க. [சூ. கூசா. க—ந.]

உஎO ஜயிப்பவன் [அதர்வன்—மித்திர வருணன்]

க. ஜயிப்பவன் யக்ஞமாவான் ; ஜயிப்பவன் அக்கினி ; ஜயிப்பவன் ஸோமன் ஜயிப்பவன் இந்திரன், நான்

---

உசுஅ கருத்து—குஷ்டத்தால் நோய் கழி.

உசுக கருத்து—புலன் குற்றம் பிரி.

விசுவமான சேனைகளை ஜயிப்பதற்காக அக்கினி ஹோத்திரிகளான நாங்கள் இந்த அவியால் உபாசனை செய்வோம். உ மித்திரனே! வருணனே! அறிஞர்களே! உங்களுக்குச் சுவதாவாகுக. எங்கள் க்ஷத்திரத்தை இங்கு தேனால் செழுமையாக்குங்கள், பிரஜையை மிகச் செய்யுங்கள்; நிர்ருதியை வெகுதூரந் துரத்துங்கள்; நாங்கள் செய்த எக்குற்றத்தையும், எங்களிடமிருந்து நீக்குங்கள். ங நீங்கள் உக்கிரமான இந்த வீரனை யநுசரித்து இன்பமாகுங்கள்; நண்பர்களே! இந்திரனைத் தொடர்ந்து தரியுங்கள்; அவன் கிராமஞ் ஜயிப்பவன். கோஜயிப்பவன், வச்சிரக்கையுள்ளவன்; சத்துரு பலம் ஜயிப்பவன்; சக்தியாலழிப்பவன். [கூ. கூள. க—ங.]

உளக இந்திரன் [அதர்வன்—இந்திரன்]

க இந்திரன் ஜயிக்கட்டும்; அவன் ஜயிக்கப்படாமலாகட்டும்; அரசர்களில் அதி இராஜனாய் அரசுபுரியட்டும்; நீ இங்கு புகழப்படுபவன், போற்றப்படுபவன், பேணப்படுபவன், வணங்கப்படுபவன், அருகப்படுபவனாக திகழவும். உ இந்திரனே! நீ அதி இராஜன், கீர்த்திவாய்பவன் நீ; மீசனங்களின் அரசன், நீ இந்த தேவ சனங்களின் இராஜனாகவும்: தேய்வன்னியில் தீர்க்காயுசுடனான க்ஷத்திரம் உனதாகுக. ங இந்திரனே! நீ கீழ்த்திசையின் இராஜா. எதிரியழிக்கும் விருத்திர சம்ஹாரனே! நீ வடதிசையின் இராஜன், எங்கு நதிகள் பாய்கின்றனவோ, அது—வரை—உனது ஜயமாகும்: தெற்கில் விருஷபனான நீ, அவிக்கருகனைகச் செல்கிறாய். [கூ. கூஅ. க—ங]

உளO கருத்து—இந்திரனைத் தொடர்ந்து எதையும் பற்றுங்கள்.
உளக கருத்து—இந்திரனால் ஜயமடையுங்கள்.

உஎஉ காப்பு [பிருக்வங்கிரசன்வனஸ்பதி ஸோமன், ஸவிதா]

க இந்திரனே! நீ விரிவாயிருப்பதால் நான் உன்னை—யணுகி—துன்பத்தின் முன், உன்னை யழைக்கிறேன்; நான் ஒறேதோற்றனும் பல நாமங்களுள்ளவனும் உக்கிரமாய், திருத்துபவனுயுமுள்ளவனை யழைக்கிறேன். உ எங்களைக் கொல்ல விரும்பி, இன்று எதிரி சேனையிறுபுகம், சலனமாவதால் நாங்கள் எங்களைச்சுற்றி முற்றும் இந்திரனின் இருகைகளைச் சாய்க்கிறோம். ௩ நாங்கள் காப்பவனான இந்திரனின் இருகைகளை, எங்களைச் சுற்றி முற்றும் சாய்க்கிறோம்; தேவஸவிதாவே! இராஜனான ஸோமனே; சுவஸ்திக்காக நீ என்னை நல்ல மனத்துடனுக்கு. [சு. கசக. க—௩]

உஎ௩ தந்துள்ளான் [கருத்மான்—வனஸ்பதி]

க. தேவர்கள் தந்துள்ளார்கள், சூரியன் தந்துள்ளான்[1] ஜோதி தந்துள்ளான்; புவி தந்துள்ளாள்; மூன்று ஸரஸ்வதிகள் ஒரே சித்தமுடன் விஷத்தூற்றைத் தந்துள்ளார்கள். உ உபஜீகர்களே: பாலைவனத்தில் தேவர்களால் பொழியப்பட்டு தேவர்களால் தூண்டப்படும் உலகத்தால், நீங்கள் இந்த விஷத்தைத் தூற்றுங்கள். ௩. நீ அசுரர்களின் பெண் நீயே தேவர்களின் சகோதரி நீ சோதியினின்று தோன்றி புவியினின்று தோன்றி நீ விஷத்தை இரஸமற்று செய்துள்ளாய். [சு. க00. க—௩]

உஎச வீரியம் [சேபப் பிரதத்ன காமோதர்வாங்கிரசன் பிரமணஸ்பதி]

க. நீவர்ஷிக்கவும். விம்மவும். விரியவும், விருத்தியாகவும்,

---

1 விஷ சிகிச்சையை.

உஎஉ கருத்து—தூய மனம் வேண்டும்.

உஎ௩ கருத்து—விஷம் விலக்கு

உனது அங்கம், அங்கமங்கமாய் ஓங்குக; அதனால் ஸ்திரீயை ஜயஞ்செய். ௨. எதனால் பலமற்றவனை பலமுள்ளவர்களாய் அவர்கள் செய்கிறார்களோ, எதனால் நோயுள்ளவனைத் தூண்டுகிறார்களோ; அதனால் பிரமணஸ்பதியே! அவன் அங்கத்தை வில்லைப்போல், வலிமையுடனாக்கு. ௩. நான் உனது அங்கத்தை வில்லில் நாணைப்போல், வலிமை யாக்குகிறேன்; அரிணம் பெண் மானைப்போல் நீ சதா தளர்ச்சி யன்னியில் ஏறு. [ஸூ. ௧௦௧. ௧—௩]

௨௱௯ உன் மனம் [அபிஸம்மனஸ்காமோ ஜமதக்கினி—அசுவினிகள்.]

௧. அசுவினிகளே இக்குதிரை ஒன்று வந்து ஒன்று விசைவதுபோல உனது மனம் எனக்கு ஒன்று இசைந்து வருக. ௨ நான் உனது மனத்தை பரிமன்னன் புரவியைப் போல இழுக்கிறேன். பெருங் காற்றால் பதறும் புல்லைப்போல் என்னில் உனது மனம் இணங்குக. ௩. நான் பகனுடைய கைகளால் துரிதமாயும் அஞ்சனமாயும் இனிமையாயும் இலாமிச்சையாயும் இணக்கமுமாக சாதனத்தை வகிக்கிறேன். [ஸூ. ௧௦௨. ௧—௩]

௨௱௰ பந்தம் [உச்சோனன்—இந்திராக்கினி உத வெகு பல தேவர்கள்]

௧. பிருஹஸ்பதி கயிற்றைச் செய்க; ஸவிதா உங்களுக்கு கயிற்றைச் செய்க; மித்திரன் அரியமான் கயிற்றை, பகனும் அசுவினிகளும் கயிற்றைச் செய்க. ௨ நான் முதல் பந்தனஞ் செய்கிறேன், நான் முடிவை நான் நடுக்கனை பந்தனஞ் செய்கிறேன். இந்திரன் அவர்களைப் பாசத்

௨௱௮ கருத்து—நீ ஆண்மையுடனாக வேண்டும்.
௨௱௯ கருத்து—என்னில் உன் மனம் இணங்கட்டும்.

தால் சூழ்ந்துள்ளான் அக்கினியே! நீ அவர்களை பாசத்தால் பந்தனஞ் செய். சேனைகளில் தங்கள் கொடிகளை உயர்த்தி சமருக்குச் சேரும் அங்குள்ளவர்களை, இந்திரன் பாசத்தால் சூழ்ந்துள்ளான்; அக்கினியே நீ அவர்களை ஒன்று கட்டு. [கூ. கOக. க—ங]

உஎஎ எதிரி பந்தம் [பிரசோனன்—இந்திராக்கினி உத வெகு பல தேவதைகள்]

க. பாசத்தால் பொருந்தும் பாசத்தால் பிணைத்து நாங்கள் பகைவர்களைப் பந்தஞ் செய்கிறோம்; அவர்களின் பிராணன் அபானங்களை, சீவனால் சீவர்களை நான் சேதித்துள்ளேன். உ இந்திரனால் தவமுடன் திட்சணமாகும் இந்த பாசத்தை நான் செய்துள்ளேன்; அக்கினியே இங்குள்ள எமது எதிரிகளை நீ பந்தஞ் செய். ங இந்திரனும் அக்கினியும் இராஜா சோமன் என்னும் நண்பனோடு அவர்களை கட்டுக; இந்திரன் மருத்துக்களுடன் எங்களது எதிரிகளுக்கு பந்தத்தைச் செய்க. [கூ. கOச. க—ங]

உஎஅ இருமல் [உன்மோசனன்—காசம்]

க. மனம் மனச் சின்னங்களுடன் துரிதமாய் பறப்பது போல, இருமலே மனத்தின் துரிதவேக மநுசரித்து நீ பறந்து விடு உ. அதி கூரிய அம்பு வேகமாய் பறப்பது போல, இருமலே! நீ புவியின் எல்லை யநுசரித்து பறந்து விடு. ங. சூரியனுடைய இரசிமி துரிதமாய் பறப்பதுபோல, இருமலே நீ கடலின் பிரவாஹ மநுசரித்துப் பறந்துவிடு. [கூ. கOரு. க—ங]

---

உஎகூ கருத்து—நீ சத்துருக்களைச் சூழ்ந்து கொல்லு.
உஎஎ கருத்து—நான் சத்துரு சீவன்களை சேதித்து விடுவேன்.
உஎஅ கருத்து—இருமல் என்னும் மனோ அலையை நீக்கு:

உஎகூ வீடு [பிரமோசனன்—துர்வாசாலே]

க. உனது வரும் வழியில், போகும் வழியில், மலரான துருவம் ஏறுக; அங்கு சல ஊற்றுக் கிளம்புக. கமலம் மிகுந்த குளம் கிளம்புக. உ இது கீழே பாயும் சலத்தின் வழி; சமுத்திர ஸ்தானம், குளத்தின் நடுவே நம்முடைய வீடுகளுண்டு. உனது முகங்களை திருப்பிக் கொள். ந வீடே; உன்னை பனிப் போர்வையால் நாங்கள் சூழ்கிறோம்; எங்களுக்குக் குளம்போல் நீ குளிர்ச்சி செய். அக்கினி சிகிச்சையைச் செய்க. [சு. கoசு. க—ந]

உஅo ஜித விசுவன் [சந்நாதி—விசுவஜித்தன்]

க. விசுவஞ்ஜயிப்பவனே; விடுவிப்பவனுக்கு என்னைச் சேர்ப்பி: விடுவிப்பவனே! எங்களது சர்வமான இருகால்களையும் எங்கள் நாற்கால்களையும் எங்களது செல்வத்தையும் இரட்சி. உ விடுவிப்பவனே; விசுவஞ் ஜயிப்பவனுக்கு என்னைச் சேர்ப்பி; விசுவஞ் ஜயிப்பனே! எங்களது சர்வமான இருகால்களையும் எங்கள் நாற்கால்களையும் எங்கள் செல்வத்தையும் இரட்சி. ந விசுவஞ் ஜயிப்பவனே என்னை மங்களத்துக்குச் சேர்ப்பி. மங்களமே எங்களது சர்வமான இருகால்களை எங்கள் நாற்கால்களையும் எங்கள் செல்வத்தையும் இரட்சி. ச மங்களமே! என்னை விசுவம் பற்றுபவனில் சேர்ப்பி; விசுவம் பற்றுபவனே! எங்களது சர்வமான இருகால்களையும், எங்கள் நாற்கால்களையும் எங்கள் செல்வத்தையும் இரட்சி [சு கoஎ க—ச]

உஅக மேதை [சௌனகன்—கந மேதை ச அக்கினி]

க. மேதையே![1] நீ எங்களுக்கு முதன்மையாய், பசுக்க

1 ஞானம்.

உஎகூ. கருத்து—அனலபாயமுண்டு. புனல் சாதகம் பற்று.

ளுடன், குதிரைகளோடு சூரியனின் கதிர்களுடன் வா. நீ எங்களுக்கு யக்ஞாருகன். உ பிரம பூரணமாகி, பிராமணனால் துரிதமாகி, ரிஷிகளால் துதிக்கப்பட்டு, பிரமசாரிகளால் பாலனமான, மேதையை நான் தேவரட்சணைக்கு முதன்மையா யமைக்கிறேன். ங ரிபுக்கள் அறியும் மேதையை, அசுரர்கள் அறியும் மேதையை, ரிஷிகள் அறியும் மேலான மேதையை, நாங்கள் என்னில் நுழையச் செய்கிறோம். ச மேதை மிகுந்து பொருள் செய்யும் ரிஷிகள் அறியும் மேதையால், அக்கினியே! மேதை மிகுபவனாக என்னை இன்று செய். ரு மேதையை மாலையில், மேதையை காலையில், மேதையைப் பகலில், மேதையை சூரிய இரசிமிகளில், சொல்லால், நாங்கள் எங்களில் நுழையச் செய்கிறோம். [சு கoஅ. க—ரு]

உஅஉ பிப்பலீ [அதர்வன்—மந்திரோக்த பிப்பலீ பேஷஜம்]

க. பிப்பலீ![1] வெட்டுப்—புண்ணுக்கு மருந்தாகும்; அதி ஆழப்புண்ணுக்கும் சிகிச்சையாகும். தேவர்கள் அதைப் பக்குவஞ் செய்துள்ளார்கள்; அது சீவனுக்குப் போதுமானது. உ பிறப்பினின்று புலனுகுங்கால் பிப்பலீ பரஸ்பரம் சொல்லிக் கொள்வதாவது நாம் எவனை சீவனுடன் சேர்கிறோமோ அப்புருடன் துன்பமாவதில்லை. ங அசுரர்கள் உன்னைக் கென்றார்கள். தேவர்கள் உன்னை மறுபடியும் உயரத் தூக்குகிறார்கள்; நீ வாத கிருதத்துக்கு[2] மருந்தாகும்; அப்படியே நீ புண்ணுக்கும் மருந்தாகும் [சு கoக க—ங]

---

1 ஒரு ஔஷதத்தின் பெயர் 2 ஒரு நோவுக்கு

உஅக கருத்து. மேதையைப் பற்று.

உஅஉ கருத்து. ஔஷத்தால் நோய் நீங்கு

உ௮௩ மகன் [அதர்வன்—அக்கினி]

௧. பழையவனே! நீ யக்ஞங்களில் போற்றுவதற்கு உருகன். பழைய புதிய ஹோதாவாய் நீ உட்காருகிறாய்; அக்கினியே, நீ உனது தேகத்தைப் பூரணஞ் செய்து எங்களில் சௌபாக்கியத்தை யளி. ௨ ஜ்யேஷ்டாக்கினியில், யமனுடைய இரு விடுவிப்பவர்களில் சனனமாகு பவனை மூலபர்ஹணத்தினின்று[1] காக்கவும்: நூறு சரத்துக்களான தீர்க்காயுசுக்கு, அவனை எல்லாக் கஷ்டங்களினின்று அவன் நீக்கட்டும். ௩ புலியின் தினத்தில்[2] வீரன் பிறந்துள்ளான்; நட்சத்திரனது மகன் நல் சூரனாய் சனனமாயுள்ளான். அவன் ஓங்கி தந்தையைக் கொல்லற்க. தன்னைத்தோற்றுவித்த தாயையுஞ் துன்பஞ்செய்யற்க. [௬ ௧௧௦. ௧—௩]

உ௮௪ உன்மத்தன் [அதர்வன்—அக்கினி]

௧. அக்கினியே! நீ எனக்கு, இங்கு பந்தமாகி அடக்கப்பட்டு புலம்பும் இப்புருஷனை விடுவி; பிறகு அவன் வெறியினின்று விலகுங்கால் உனக்கு பாகத்தைச் செய்வான். ௨ உன்மனம் ஆத்திரமுடனுனால் உனக்கு, அதை அக்கினி அமைதி செய்க; அறியும் நான் நீ உன்மத்தம் ஆகாமலிருக்க மருந்தைச் செய்கிறேன். ௩ தேவ பாவத்தினின்றாகும் உன்மத்தத்தினின்றும், இராட்சதர்களின் உன்மத்தத்தினின்றும், அறியும் நான் அவன் உன்மத்தம் நீங்க மருந்தைச் செய்கிறேன். ௪ அப்ஸரஸர்கள் மறுபடியும் உனக்களித்திடுக; இந்திரன் மறுபடியும் பகன் மறுபடியும் அளித்திடுக; நீ உன்மத்த மாகாமலிருக்க விசுவேதேவர்கள் உனக்களித்திடுக. [௬. ௧௧௧ ௧—௩]

---

1 ஒரு நக்ஷத்ரக்கொடியினின்று 2 வீரர் வீரம் புலனுக்குந் தினத்திலே

உ௮௩. கருத்து. உங்கள் மக்கள் வீரர்களாவார்களாக.

உ௮௪ கருத்து. உன்மத்த மொழி.

உ௮௫ விடுதலையாக்கு [அதர்வன்—அக்கினி]

க அக்கினியே! இவன் அவர்களின் பெரியவனைக் கொல்லற்க. நிர்மூலத்தினின்று அவனைப் பாலனஞ் செய். நீ அறிந்து, பற்றுபவரது பாசங்களை பிரித்து விடு. விசுவே தேவர்கள் உங்களுக்கு அநுமதித்திடுக. உ அக்கினியே! மூவர்களை, கட்டப்பட்டுள்ள மூன்று பாசங்களை தகர்த்தெறியும் அறியும் நீ, பற்றுபவர்களது பாசங்களை பிரித்துவிடு. தந்தை தாய் மகன் அனைவரையும் விடுதலையாக்கு. ௩ ஒவ்வொரு அங்கத்திலும், பந்தமாகி பந்தஞ் செய்யப்பட்ட பரிவிருக்தனுடைய[1] பாசங்களை பிரித்துவிடு. அவை பிரிப்பதர்க்கானவை, பூஷணனே! கருச் சிதைப்பவனில் கஷ்டங்களை கழித்து விடு. [சூ. ககஉ. க—௩]

உ௮௬ பறிப்பு [அதர்வன்—பூஷணன்]

க தேவர்கள் அந்தத் தீமையை திருதனில் துடைத்தார்கள்; திருதன்[2] அதை மானிடர்களில் துடைத்தான்; அதனால் பற்று—பறிப்பு உன்னைப் பற்றினால் பிரமத்தால் தேவர்கள் அதனை உன்னிடமிருந்து நீக்கட்டும். உ புன்மையே! புகைகளையும் பிரகாசங்களையும் பிரவேசி. மப்புக்களில் மூடுபனிகளில் சென்று விடு. நதிகளின் நுரைகள் வழியாய் மறைந்துவிடு. பூஷணனே! கருச் சிதைப்பவனில் கயத்தை கஷ்டத்தைத் துடைத்து விடு. ௩ திருதனால் துடைக்கப்பட்டுள்ள மானிடர்களின் புன்மைகள் கஉ வகையாய் வைக்கப்பட்டுள்ளன; அதனால்

---

1 இளையவன் விவாஹமாகி மணமாகாத மூத்த சகோதரனது.

2 தாய், தந்தை, மகன்,

பறிப்பு உன்னை யணுகினால், பிரமத்தால் தேவர்கள் உனக்கு அதை யழித்திடுக. [சு. ககரு. க—ரு]

உஅஎ ஆதித்தியர்களே [பிரமன்—விசுவேதேவர்கள்]

க தேவர்களே! திவ்யர்களே நாங்கள் தேவகோபஞ் செய்யும் எதைச் செய்திருந்தாலும் அதனாலாகும் துன்பத்தினின்றும், ஆதித்தியர்களே! ருதத்தின் ருதத்தால் எங்களை விடுதலை செய்யுங்கள். உ ஆதித்தியர்களே! யக்ஞார்கர்களே யக்ஞஞ் சுமக்கும் நீங்கள் யக்ஞ பூரணமாக்க விரும்பி பூர்த்தியாகாமலுள்ள எங்களை ருதத்தின் ருதத்தால் இங்கு விடுதலை செய்யுங்கள். ௩ தேவர்களே! யஜமானர்களான நாங்கள் விருப்பன்னியில் புஷ்டி மிகும் சாதனத்துடன் நெய்களைப் பொழிந்து யக்ஞத்தை உங்களுக்குப் பூர்த்தியாக்க விரும்பி பூர்த்திசெய்ய முடியாமலுள்ளோம். [சு. ககச. க—௩]

உஅஅ பாவம் [பிரமன்—விசுவேதேவர்கள்]

க தெரிந்தோ தெரியாமலோ நாங்கள் பாபஞ் செய்திருந்தால் விசுவேதேவர்களே! நீங்கள் இணைந்து அப்பாபத்தினின்றும் எங்களை விடுதலையாக்குங்கள். உ தூக்கத்திலோ விழிப்பிலோ, நான் பாபஞ் செய்திருந்தால், இருப்பதும் இருக்கப்போவதும் அப் பாபத்தினின்றும் என்னை கட்டுக் கம்பத்தினின்று போல் விடுதலை செய்க. ௩ கம்பத்தினின்று விடுதலையானவன்போல், வியர்வையுள்ளவன் ஸ்னானஞ் செய்து மலத்தினின்று நீங்குவது போல், பவித்திரத்தால் புனிதமாகும் நெய்போல் எல்

உஅசு கருத்து—பறிப்புப் பிரி.

உஅஎ கருத்து. குற்றத்தினின்று நீங்குங்கள்.

லாம் என்னைப் பாவத்தினின்றும் பிரித்திடுக. [௬. ௧௧௫. ௧—௩]

உ௮௯ வைவஸ்வதன் [ஜாதிகாயனம் – விவஸ்வான்]

௧ உழுபவர்கள், அறிவால் பூர்வத்தில் கெல்லி அன்னத்தைக்கண்டு யமச் சேர்க்கையை செய்வதுபோல் வைவஸ்வத இராஜனுக்கு நானும் அதனையே செய்தளிக்கிறேன்! எங்களுக்கு உணவு யக்ஞாருகமாயும் இனிமையாயுமாகுக. உ வைவஸ்வதன் எங்களுக்கு விவாகத்தைச் செய்க, தாயினிடமிருந்து தோன்றிய எங்களுக்கு வந்த பாவத்தையும் கோபத்தில் எங்கள் தந்தை செய்த பாவத்தையும் நீக்கி தேன் பாகமுள்ள அவன் எங்களைத் தேனுடன் சேர்ப்பான். ௩ எங்கள் தாயினிடமிருந்தோ, எங்கள் தந்தையினிடமிருந்தோ, சகோதரனிடமிருந்தோ, மகனிடமிருந்தோ, சித்தத்திலிருந்தோ, இந்தப் பாவம் எங்களுக்கு வந்திருந்தால், அவை அனைத்தும், எங்களில் குவியும் பிதுருக்களின் கோபமும் மங்களங்களாகுக. [௬. ௧௧௬. ௧—௩]

உ௯0 கடன் [அநிருணகாம கௌசிகன்—அக்கினி]

௧. கடன் வாங்கும் எதை நான் திருப்பி யளிக்காமல், புசிக்கிறேனோ, எமனுடைய எந்த பலியினால் நான் சலனமாகிறேனோ, அக்கினியே! அதனால் நான் கடனன்னியிலாகுக. நீ எல்லாப் பாசங்களைத் தகர்ப்பதர்க்கு யறிவாய். உ இங்கு இருப்பதனால் நாங்கள் திருப்பி யளிக்கிறோம்: சீவிக்கும் நாங்கள் சீவர்களுக்கு இந்தக் கடனை யளிக்கிறோம். அக்கினியே! நான் கடன் வாங்கி எத் தானியத்தைத் தின்னேனோ அதனால் நான் கடனன்னியி

---

உ௮௮ கருத்து—விடுதலை செய்யுங்கள்.

லாகட்டும். ௩ இங்கு கடனன்னியில், அங்கு கடனின்னியில் மூன்றாவதுலகத்தில் நாங்கள் கடனன்னியிலாக வேண்டும்; நாங்கள் கடனன்னியில் தேவர்கள் பிதுருக்கள் செல்லும் உலகங்களில் வழிகளில் வசிக்கட்டும். [௩. ௧௧௭. ௧—௩.]

உ௧௧ அப்சரசர்கள் [அமிருணகாம கௌசிகன்—அக்கினி]

௧. காயங்களின் வழியைப் பற்ற விரும்பி குற்றங்களை எங்கள் கைகளால் செய்திருந்தாலும், உக்கிரஞ் ஜயித்து உக்கிரங் காண்பவர்களான இரு அப்சரஸர்கள் எங்களுடைய அக்கடனை இன்று தீர்ப்பார்களாக. ௨ உக்கிரமாய் பார்ப்பவனே! இராஷ்டிரந் தரிப்பவனே! நீங்கள், காய்களில் நிகழ்ந்த குற்றங்களை மன்னியுங்கள்; கடனின்று கடனை எங்களிடமிருந்து பெற விரும்பும் எவரும் கயிற்றுடன் யமனுலகத்தில் எங்களிடம் வராமலிருப்பாராக ௩ நான் எவனுக்குக் கடன்பட்டுள்ளேனோ எவனது மனைவியை அணுகுகிறேனோ எவனிடம் யாசகத்துக்குச் செல்லுகிறேனோ—அவர்கள் என்னிடம் அதிகமாய் பேசாமலிருக்கட்டும்; தேவபத்தினி அப்ஸரஸர்களான நீங்கள் கவனியுங்கள். [௬. ௧௧௮. ௧—௩.]

உ௧௨ வைசுவாநரன் [அமிருணகாம கௌசிகன்—அக்கினி]

௧. காய் ஆடாமல் நான் கடன் பட்டாலும், திருப்பித் தர எண்ணாமல் வாக்குறுதி செய்தாலும், எங்களுடைய உயரிய அதிபலனான வைசுவாநரன் நற்செய லுலகத்துக்கு எங்களை அழைத்துச் செல்க. ௨ தேவதைகளுக்கு கடனிருந்தால் நான் அதை வைசுவாநரனுக்குத் தெரியச்

---

உ௧௦ கருத்து—கடன் கழிந்த வாழ்வே வாழ்வு.

உ௧௧ கருத்து—கடன் பட்டால் கொடுத்துத்தானகவேண்டும்.

செய்கிறேன்; இந்தப் பாசங்களை யெல்லாம் தகர்த்தெறிய அவன் அறிவான்; இனி நாங்கள் பக்குவத்துடன் சேர்ந்து ஒன்று பொருந்துவோமாக. ௩. நான் வாக்குறுதிக்கு, ஆசைக்கு, மாறாய் விரைந்து, அறியாமல் மனத்தால் யாசித்து எக்குற்றஞ் செய்தாலும், நான் அவற்றை நீக்குகிறேன்; புனிதஞ் செய்யும் வைசுவாநரன் என்னைப் புனிதம் செய்க. [சு. ௧௧௯. ௧—௩]

உ௧௩ நற்செயலுலகம் [கௌசிகன்—மந்திரோக்த தேவதை]

௧. நாங்கள் வானத்தையும் புவியையும் ஜோதியையும் தாயையும் தந்தையையும் இம்சை செய்திருந்தால், இந்த காருஹபத்யாக்கினி அக்குற்றத்தினின்று—நற்செயலுலகத்துக்கு எங்களை அழைத்துச் செல்க. ௨. தாயான தரணியும், நாங்கள் தோன்றும் அதிதியும், சகோதரனான வானமும், எங்களை அபவாதத்தினின்று—நீக்குவார்களாக. எங்களுடைய பிதாவான ஜோதி, பிதாவுக்குரிய குற்றத்தினின்று நீக்கி—எங்களுக்கு மங்களமாவானாக; நான் எனது பந்துக்களிடஞ் சென்றுள்ளதால்—அவர்களுடைய—உலகத்தினின்று விழாமலாவேனாக. ௩. எங்கு நல்ல இருதயமுள்ளவர்கள், நற்செயல் செய்பவர்கள், தங்களது காய நோய்களை நீக்கி, இன்பமாயுள்ளார்களோ—எச்—சுவர்க்கத்தில் அங்க ஈனமற்று கேடன்னியிலுள்ளார்களோ, அங்கு நாங்கள் பிதாக்களையும் புத்திரர்களையும் பார்க்கவேண்டும். [சு. ௧௨0. ௧—௩.]

உ௧௪ சுகிருதம்—உலகம் [கௌசிகன்—மந்திரோக்தன்]

௧. உயர்வாயும் தாழ்வாயுமுள்ள வருணனுடைய பாசங்களை அவிழ்ப்பவனான நீ எங்களிடமிருந்து, அவற்றை

---

உ௧௨ கருத்து—உன் குற்றத்தை நீயே நீக்கு.

உ௧௩ கருத்து—அபவாதம் நீக்குங்கள்.

நீக்கு: தீமையையும் துட்டக் கனவையும் எங்களிட மிருந்து நீக்கு; அப்பால் நாங்கள் நற்செயலுலகத்துக் குச் செல்வோமாக. ௨ நீ கட்டையிலோ கயிற்றிலோ கட்டப்பட்டிருந்தாலும்; புவியிலோ மொழியிலோ கட் டப்பட்டிருந்தாலும் இந்த காருகபத்திய அக்கினி அக் கஷ்டத்தினின்று — நற்செய லுலகத்துக்கு உன்னை அழைத்துச் செல்லும். ௩ விடுவிப்பவர்கள் என்னும் பெயர்களுள்ள இரு மங்களங்களான நட்சத்திரங்கள் உதயமாயுள்ளன; இங்கு அவர்கள் அமுதப் பொருளை யளித்திடுக; கட்டவிழ்ப்பவன் முன் செல்க. ௪ நீ எங் குஞ்செல்லு; உலகத்தைச் செய்; கட்டுக்களினின்று கட் டப்பட்டுள்ளவனை நீ விடுதலை செய்க; மூலஸ்தானத்தி னின்று விழுந்து இளஞ் சிசுவைப்போல எல்லா வழிகளி லும் நீ வசி. அனலே! [அ. ௯௨௧. ௧—௪]

௨௬௫ விசுவகர்மன் [பிருகு—விசுவ காமன்]

௧ நான் அறிந்து இந்த பாகத்தை உனக்களிக்கிறேன்; விசுவகர்மனே! ருதத்தின் முதல் ஜனனே; அது எங்க ளால் மூப்புக்கப்பால ளிக்கப்பட்டுள்ளது: நாங்கள் ஒருமையுடன் அறுகாத இழை யநுசரித்துக் கடப்போம். ௨ எவர்கள் வழியினால் பித்ரு சேர்க்கையை யளித் துள்ளார்களோ அந்தச் சிலர்கள் இந்த விசாலமான இழையைக் கடந்து செல்லுகிறார்கள்; உறவினர்களற்றும் இவர்களில் சிலர் அளிக்கச் சக்தியுள்ளவர்களாகி இங்கு அளித்தாலும் கொடுத்தாலும் இதுவே சுவர்க்கமாகும். ௩ நீங்கள் இருவர்களும் இதை யநுசரித்துப் பற்றுங் கள்; நீங்கள் ஒன்று சேர்ந்து ஒருமையுடன் பற்றுங்கள்; சிரத்தையுள்ளவர்கள் இந்த உலகத்தை யநுசரிக்கிறார்கள்.

---

௨௬௪ கருத்து—அடிமையை நீ விடுதலை யாக்கு.

உங்களுடைய பக்குவம் அக்கினியில் யனுகூலமாகும்; தம்பதியே அதைக் காக்க நீங்கள் ஒன்று குவியுங்கள்.
ச தவத்தால் மனத்தால் மலரும் பெரிய யக்ஞத்தில்—அதன்—ஒரே மூலமான—நான் ஏறுகிறேன்; அக்கினியே! அழைக்கப்படும் நாங்கள், மூப்புக்கப்பால் மூன்றுவது நிலயத்தில் இணைந்த இன்பத்தில், இன்பமாக வேண்டும்.
ரு நான் இந்த ருசியாயும் சுத்தமாயும் யக்ஞாருகர்களான பெண்களை, தனித் தனியாய் பிராமணர்களின் கைகளில், அமரச் செய்கிறேன்; மருத்துக்களுடனுன இந்திரன், நான் எந்த விருப்பத்துடன் இதை உங்களுக்கு அபிஷேகஞ் செய்கிறேனே, இங்கு அதை அவன் அளிப்பானாக. [சூ. கஉஉ. க—ரு]

உகூசு பிதுருக்களே! [பிருகு—விசுவேதேவர்கள்]

க சகவாசிகளே ஜாதவேதஸன் எங்களுக்குச் சுமக்கும் இச் செல்வத்தை, உங்களுக்கு, நான் அளிக்கிறேன்; யஜமானன் சுவஸ்தியை யநுசரிக்கிறுன்; நீங்கள் அவனைப் பெரிய பரத்தில் அறிந்து கொள்ளுங்கள். உ பரம நிலயத்தில் நீங்கள் அவனை அறிந்து கொள்ளுங்கள்; திவ்ய சகவாசிகளே! அங்கு அவனது உலகத்தையறியுங்கள்; யஜமானன் சுவஸ்தியை யநுசரிக்கிறுன், யக்ஞபூரணத்தாலான இன்பத்தை அவனுக்கு நீங்கள் செய்யுங்கள்.
௩ தேவர்களே! பிதுருக்களே! பிதுருக்களே! தேவர்களே! நான் யார்? அவன் நான் தான். ச அவனுன நான்—பக்குவமாக்குகிறேன். அவனுன—நான்—அளிக்கிறேன். அவனுன—நான்—யஜிக்கிறேன் அவனுன—நான்—அளித்ததினின்றும் பிரியாமலாகட்டும். ரு இராஜாவே! பெரிய நிலயத்தில் திடமாய் நில்; இது அங்கே

உகூரு கருத்து—மூப்புக் கப்பாலும் இன்பம் வேண்டும்.

திடமாய் நின்றிடுக ; இராஜனே ! நாங்கள் அளித்ததை அறிந்து கொள் ; தேவனே ! நீ நல்ல மனத்துடனாகவும். [சு. கஉரு. க—ரு.]

உகூஎ நிர்ருதி [நிர்ருத்யபஸரண காமோதர்வன்—மந்திரோக்த உததிவ்யாபோ தேவதைகள்]

க ஜோதியினின்று இப்போது பெரிய வானத்தினின்று, சலதுளி இரஸத்துடன் என்னில் விழுந்துள்ளது ; இந்திரனின் பலத்துடன் பாலோடு, அக்கினியே ! நான் சந்தங்களுடன் யக்ஞங்களோடு நற்செயலின் செயலோடு சேர்க. உ மரத்தினின்று விழுந்தால் அது பழமாகும்; வானத்தினின்று விழுந்தால் அது வாயுவாகும்: எனது காயத்தின் எந்த பாகத்தில் என் உடையின் எப்பாகத்தில் அது பரிசமாகுமோ அந்த—அசுசியான—நிர்ருதியை சலங்கள் அப்பாற் படுத்துக. ௩ அது சுகந்தமான அஞ்சனம். அது ஐசுவரியம்; பொன், பலம் புனிதஞ் செய்வதாகும், எங்களைச் சுற்றி புனிதங்கள் எங்கும் பரவியுள்ளன ; நிர்ருதியும் அராதியும் எங்களை அணுகாமலாகுக. [சு. கஉசு. க—௩.]

உகூஅ போர் இரதம் [அதர்வன்—வனஸ்பதி]

க வனஸ்பதியே ! நீ திடகாயத்துடனாகவும் ; நல்ல வீரனாகவும் : விருத்தி செய்பவனாய் எங்கள் நண்பனாகவும் ; நீ பசுக்களுடன் பந்தஞ் செய்யப்பட்டுள்ளாய் : நீ பருமனாகவும் : உன்னை ஏறுபவன் ஜயிப்பவையைச் செய்வானாக. உ ஜோதியினின்று புவியினின்று அதன் சக்தி குவிக்கப்பட்டுள்ளது: வனஸ்பதிகளினின்று அதன் வலிமை இங்கு கொண்டுவரப்பட்டுள்ளது ; சலங்களின்

உகூசு கருத்து—அவனே நான்.

உகூஎ கருத்து—அசுசி நீங்குங்கள்.

17

சக்திக்கு பசுக்களால் அது கொண்டுவரப்பட்டுள்ளது, இந்திரனின் வச்சிராயுதமான இரதத்தை நீ அவியால் யஜி. ௩ நீ இந்திர சக்தி, மருத்துமுகம் மித்திர கருப்பம், வருண நாதம்: தேவ இரதமே! இந்த எங்களுடைய அவியளிப்பை யநுபவித்து அவிகளைக் கிரகி. [சூ. கஉ௫ க—௩]

உகக துந்துபி [அதர்வன்—வனஸ்பதி துந்துபி]

க ஜோதிக்கும் புவிக்கும் நீ முழங்கு: அவர்கள் உனக்கு வியாபகமான சீவர்களை ஜயித்திடுக: துந்துபியே! நீ இந்திரனுடன் தேவர்களோடு இணைந்து, வெகு தூரத் திர்க்கப்பால் எங்கள் எதிரிகளைத் துரத்து. உ நீ முழங்கு; நீ எங்களுக்கு வலிமை வன்மையை யளி: கஷ்டங்களைக் கழித்து நீ எங்கும் கர்ச்சி. துந்துபியே! நீ துன்பத்தை இங்கிருந்து துரத்து: நீ இந்திரனுடைய முட்டி: நீ திடமாகவும். ௩ அங்குள்ள அவர்களை வெல்க, இவர்கள் இங்கு ஜயித்திடுக: துந்துபி தெளிவாயும் தீர்க்கமாயும் முழங்குக: குதிரைச் சிறகுகளுள்ள எங்களது வீரர்கள் ஒன்று பறப்பார்களாக: இந்திரனே! எங்களுடைய இரத புருடர்கள் ஜயிப்பார்களாக. [சூ. கஉசு. க—௩]

௩OO யக்ஷ்மம் [பிருக்வங்கிரஸன்—வனஸ்பதி உதயட்சம நாசன தேவதை]

க. வனஸ்பதியே! வித்ரதத்தின்[1] சிகப்பு பலாசத்தின்[2] விசல்பகத்தின்[3] எத் துண்டையும், ஒஷதியே! நீ விட்டு விடாதே. உ பலாசமே! இரு முஷ்கங்களில் இரு கட்

1 பிளவை- 2 சிதைவு. 3 குஷ்டம்.

உகஅ கருத்து—இரதத்தால் நீங்கள் ஜயத்தைப் பற்றுங்கள்.

உகக கருத்து. துந்துபியை முழக்கஞ் செய்.

சங்களில் 1 மறைந்துள்ள பரிகாரத்தை நான் அறிவேன்; அதன் பெயர் சீபுத்துரு 2 வாகும். ந அங்கங்களின் விசல்பகத்தை செவிகளின், கண்களின்—விசல்பகத்தை, வித்ரதத்தை, இருதயரோயை நான் வெளியிலாக்குகிறேன்; நாங்கள் அறியாமலுள்ள அந்த யக்ஷ்மத்தை நீசமாக்கி நீக்குகிறோம். [சு. கஉஎ. க—ந.]

ரு.0க மங்களம் [அதர்வாங்கன்—நட்சத்திரங்களின் இராஜா சந்திரன் ஸோமன் சகதூமன்]

க. நட்சத்திரங்கள் சகதூமனை3 தங்கள் இராஜாவாகச் செய்து, அவனில் மங்களமான தினத்தை யளித்து இது அவனது இராஷ்டிரமாகுக! என மொழிந்தன. உ. நடுப் பகலில் எங்களுக்கு மங்கள தினமாகுக, மாலையில் எங்களுக்கு மங்கள தினமாகுக; தினங்களின் காலையில் எங்களுக்கு மங்கள தினமாகுக; எங்களுக்கு இரவு மங்கள தினமாகுக. ந இராஜாவான சகதூமனே! இரவு பகல்களுக்கு நட்சத்திரங்களுக்கு சூரிய சந்திரன்களினின்று, எங்களுக்கு மங்கள தினத்தைச் செய். ச சகதூமனே! நட்சத்திர இராஜாவே! எங்களுக்கு மாலையிலும் இரவிலும் பகலிலும், மங்களமான தினத்தைச் செய்துள்ள உனக்கு சதா வணக்கமாகுக. [சு. கஉஅ. ச—ச.]

ரு.0உ சம்சயன் [அதர்வாங்கிரஸபகன்]

க. சம்சபத்தின் 4பகத்துடன், நண்பனுன இந்திரனோடு, இணைந்து நான் செல்வஞ் செய்து கொள்கிறேன்; அராதி

---

1 கக்கங்கள். 2 ஒரு வனஸ்பதியின் பெயராயிருக்கலாம், 3 தனது சக்தியால் அந்நியர்களை அலறச் செய்பவனை. 4 செல்வத்தின் சின்னப் பெயர்

ரு.00 கருத்து—நோய் நீங்கு.

ரு.0க கருத்து—சக்தியுள்ளவனே அரசனுவான்.

கள் தூரம் ஓடுக. உ பலத்துடன் எந்த பகத்தால் மரங்களை ஜயித்தாயோ, அதனால் என்னைச் செல்வனாய்ச் செய். அராதிகள் தூரமோடுக. ந எந்தப் பார்வை யில்லாத பொருள் தலைகீழாகி மரங்களில் ஸ்தாபிதமாயுள்ளதோ, அதனால் என்னைச் செல்வனாகச் செய்; அராதிகள் தூரமோடுக. [கூ. கஉக. க—ந]

ந0ந எனக்கு [அதர்வாங்கிரசன்—ஸ்மரன்]

க. இரதஞ் ஜயிப்பவர்களும் இரதஞ் ஜயிப்புச் சேர்பவர்களுமான அப்ஸரஸர்களுடைய ஞாபகமே[1] இது வாகும்: தேவர்களே நினைவைத் தூண்டுங்கள்; அங்குள்ள மனிதன்—எனக்குத் தாபமுடனுவானாக. உ அங்குள்ள—மனிதன்—என்னை ஸ்மரிப்பானாக; பிரியமுள்ளவனாகையால் அவன் என்னை ஸ்மரிப்பானாக; தேவர்களே! ஸ்மரணையைத் தூண்டுங்கள். அங்குள்ள மனிதன் எனக்குத் தாபமுடனுவானாக. ந அங்குள்ளவன் என்னை ஸ்மரிக்கவும்; நான் சதா அவனை ஸ்மரிக்காமலாகவும், தேவர்களே! அவனுக்கு ஸ்மரணையைத் தூண்டுங்கள்: அங்குள்ள மனிதன் எனக்குத் தாபமுடனுவானாக. ச மருத்துக்களே! அவனை உன் மத்தனுக்குங்கள்; வானமே! அவனை உன் மத்தனுக்கு; அக்கினியே! அவனை உன் மத்தனுக்கு; அங்குள்ளவன் எனக்குத் தாபமுடனுகுக. [கூ. கந0. க—ச]

ந0ச ஸ்மரவண [அதர் வாங்கிரசஸன்—ஸ்மரன்]

க. சிரத்தினின்று கீழே கால்களினின்று கீழே உனது ஆசைகளை கீழே நான் இழுக்கிறேன்; தேவர்களே!

---

1 காமமே

ந0உ கருத்து—என்னைச் செல்வனாய் செய்.

ந0ந கருத்து—வசியம் விரும்பல்.

ஸ்மரணையைத் தூண்டுங்கள்; அங்குள்ளவன் எனக்குத் தாபமுடனுவானாக. உ அநுமதியே! இதற்கு அநுமதி; சங்கற்பமே! இதை இணக்கமாக்கு! தேவர்களே! ஸ்மரணையைத் தூண்டுங்கள். அங்குள்ளவன்[1] எனக்குத் தாபமுடனுவானாக. ௩ நீ மூன்று யோஜனைகள் ஐந்து யோஜனைகள், குதிரையின் ஒருதி-னோட்டம் நீ யோடினாலும் அப்பால் திரும்பி வந்து விடுவாய் நீ எங்களுடைய மக்கட்களின் தந்தையாவாய். [சு. கஙக. க—௩]

கoரு எரி புருஷன் [அதர்வாங்கிரஸன்—ஸ்மரன்]

க ஆசையுடன் அணைந்து அதிகமாய் எரியும் எந்த ஸ்மரணையை சலங்களினகத்தில் தேவர்கள் பொழிந்தார்களோ அதை நான் வருணனுடைய தருமத்தால் உனக்குத் தாபமுடனுக்குகிறேன். உ ஆசையுடன்........... சலங்களினகத்தில் விசுவேதேவர்கள் பொழிந்தார்களோ ........தாபமுடனுக்குகிறேன். ௩ ஆசையுடன்........... சலங்களினகத்தில் இந்திராணி...............தாபமுடனுக்குகிறேன். ச ஆசையுடன்........சலங்களினகத்தில் இந்திரனும் அக்கினியும்........தாபமுடனுக்குகிறேன். ரு ஆசையுடன்........சலங்களினகத்தில் மித்திரனும் வருணனும்.... ........தாபமுடனுக்குகிறேன். [சு. கஙஉ. க—௩]

கoசு கச்சை [அகஸ்தியன்—மேகலை]

க இந்தக் கச்சையை கட்டுந் தேவனால் அதை ஒன்று கட்டுபவனால், எங்களுக்கு அதைச் சேர்ப்பவனால் எந்த தேவனுடைய ஆக்ஞையால் நாங்கள் சலனமாகிறோமோ அவன் அக்கரையைத் தேடுக. அவன் எங்களை விடுதலை

---

1 என்னை விரும்பி வெகு தூரத்திலுள்ளவன்.

கoச கருத்து—புருஷனின் ஞாபகம்.

கoரு கருத்து—மனைவி துக்கம்.

செய்க. உ கச்சையே[1] நீ பற்றப்படுகிறாய்! போற்றப் படுகிறாய்: நீ ரிஷிகளினாயுதமாகும். விரதத்தின் பூர்வத் தைப் புசித்து—வீரப்—பகைவனை—யழிப்பவனாகவும். ௩ நான் மிருத்யுவின் பிரம்மசாரி யாகையால், நான் யமனுக்கு வாழ்க்கையினின்று ஒரு புருஷனை நாடி நான் அவனை பிரமத்தால் தவத்தால் உழைப்பால் இக் கச்சை யுடன் கட்டுகிறேன். ௪ கச்சையே! நீ சிரத்தையின் பெண், தவத்தால் தோன்று பவள். பொருள்களைச் செய்யும் ரிஷிகளின் சகோதரி; நீ எனக்கு அறிவை யும் ஞானத்தையு மளி; இன்னும் தவத்தையும் இந்திர திடத்தையுமளி. ரு கச்சையே! பொருள்கள் செய்யும் பழைய ரிஷிகள் கட்டிய நீ தீர்க்காயுசுக்காக என்னைச் சூழ்க, [கூ. ககூகூ. க—ரு]

௩0எ வச்சிராயுதம் [சுக்கிரன்—மந்திரோக்தம்—வச்சிரம்]

க இந்த வச்சிராயுதம் ருதத்தை திருப்தி செய்க; அவ னது இராஷ்டிரத்தை அது அழித்திடுக; அவனது சிவனை சிதைத்திடுக; சக்திபதி விருத்திரனைப் போல அது அவ னது கண்டங்களை யறுத்து பிடரிகளைப் பிளந்திடுக. உ உத்தமர்களினின்றும் அவற்றைக் கீழேயாக்கு; மறைந் துள்ள அவன் புவிக்குப் புறத்தில் நகராமலாவானாக. வச்சி ராயுதத்தால் வீழ்த்தப்பட்டு அவன் கீழே சாய்க. ௩ நீ துன்பஞ் செய்பவனைத் தேடு: துன்பஞ் செய்பவனைத் துடை; வச்சிராயுதமே! துன்பஞ் செய்பவனது சிரத் தைக் சாய்த்து விழச்செய். [கூ. க௩௪. க—௩.]

---

1 கச்சை அரைஞாண்.

௩0கூ கருத்து—ஒரு காரியத்தில் ஜயமாக நீங்கள் அதற்குக் கச்சை கட்டிக்கொள்ளவேண்டும். எனக்கு அறிவும் ஞானமும்வேண்டும்.

௩0எ கருத்து—வச்சிராயுதத்தால் துன்பஞ்செய்பவனது தலையை வீழ்த்து.

௩.௦அ விழுங்குகிறோம் [சுக்கிரன்—மந்திரோக்த வச்சிரன்]

௧ நான் எதைப் புசிக்கிறேனோ அதனால் பலத்தைச் சம்பாதிக்கிறேன். சசீபதி விருத்திரனைப்போல அங்குள்ளவனது தோள்களை துண்டம் துண்டம் செய்து நான் இப்படி வச்சிராயுதத்தைப் பற்றுகிறேன். ௨ நான் பருகுவதை நான் பருகுகிறேன்; அனைத்தையும் பருகும் கடல்போல்; அங்குள்ளவனுடைப் பிராணத்தைப் பருகி அவனை நாங்கள் நன்கு பருகுகிறோம். ௩ அனைத்தையும் கடல்போல நான் விழுங்குவதை நன்கு விழுங்குகிறேன்; அந்த மனிதனின் பிராணனை விழுங்கி நாங்கள் அவனைப் பூரணமாய் விழுங்குகிறோம். [௬. ௧௩௫. ௧—௩.]

௩.௦௧ கேசம் [கேசவர்த்தன காம வீத ஹவ்ய அதர்வன்—வனஸ்பதி]

௧ ஓஷதியே! தேவியான நீ திவ்யமான தரணியில் தோன்றியுள்ளாய்; நிதத்னியே![1] உன்னைக் கேசங்களின் திடத்துக்காகக் கெல்லுகிறேன். ௨ பழையவற்றை பல முடனாக்கு; புலனாகாதவற்றைப் புலனாக்கு; புலனானவற்றை நீளமாக்கு. ௩ உனது கேசம் உதிரும்—டத்திலும்—மூலத்துடன் நீங்கும்—டத்திலும்—நான் விசுவ சிகிச்சையான செடியுடன் நனைக்கிறேன். [௬. ௧௩௬. ௧—௩.]

௩.௧௦ ரோமம் வளர [கேசவர்த்தன காம வீதஹவ்ய அதர்வன்—வனஸ்பதி]

௧ கேசம் ஓங்க தனது குமாரிக்கு ஜமதக்கினி கெல்லிய ஓஷதியை அசிதனின் வீடுகளினின்று வீத ஹவ்யன்

---

1 கீழே படருபவளே.

௩.௦அ கருத்து—நான் அனைத்தையும் விழுங்குகிறேன்.

௩.௦௧ கருத்து—கேசம் ஓங்குக.

கொண்டுவந்துள்ளான். உ அவை கையால் அளக்கப் படும்—நீளமுள்ளவை; அவை நீண்ட கையால் அளக் கப்படும்—நெடுமையுள்ளவை; நாணல்களைப்போல உனது சிரத்தினின்று கருங்கேசங்கள் வளர்க. ௩ மூலங்களை திடமாக்கு; முனைகளை நீட்டு; நடுவை நெடுமையாக்கு. நாணல்களைப்போல கருங்கேசங்கள் உனது சிரத்தி னின்று வளர்க. [௬. ௧௩௭. ௧௩—.]

௩௧௧ ஆண்மையகற்று [கலீபகர்து காம அதர்வன்—வனஸ்பதி]

௧ ஔஷதியே! நீசெடி கொடிகளில் அதி உத்தமன் என்பது பிரசித்தம்; நீ எனக்குச் சிரோ பூஷணந் தரிக்கும் இப்புருஷனை[1] ஆண்மையற்றுச் செய். உ சிரோபூஷணந் தரிக்கும் அவனை ஆண்மையற்றுச் செய்; அப்படியே குரீ ரந் தரிப்பவனாய்ச்செய்; அப்பால் இந்திரன் அவனுடைய இரண்டு அண்டங்களையும் கற்களால் உடைத்திடுக. ௩ பேடனே! நான் உன்னை பேடனாக்கியுள்ளேன்; அண்ணகனே! நான் உன்னை அண்ணமாக்கியுளேன். இரஸ மற்றவனே! நான் உன்னை இரஸ சூனியமாக்கியுள்ளேன்: நாங்கள் அவனுடைய சிரத்தில் குரீரத்தையும் வைத்துள் ளோம். ௪ உனது வீரியம் நிற்கும் தேவச் செயலான உனது இரு நாடிகளை அங்குள்ள அண்ட கோசங்களின் மேல் நான் கட்டையால் உடைத்தெறிகிறேன். ௫ அங் குள்ள அண்டகோசங்களின் மேல் உனது மர்மாங்கத்தை ஸ்திரீகள் பாய்பின்ன சிலையால் புற்களைப் பிளப்பதுபோல துண்டமாக்குகிறேன். [௬. ௧௩௮. ௧—௫]

---

1 விபசாரனை.

௩௧௦ கருத்து—உனது கேசங்கள் வளர்க.

௩௧௧ கருத்து—விபசாரனுக்குத் தண்டனை.

ககஉ. காதல் [அதர்வன்—வனஸ்பதி]

க வியஸ்திகையான நீ வளர்ந்துள்ளாய்: நீ எனது
சௌபாக்கியஞ் செய்பவள்; உனது மேற்கிளைகள்
நூறும்; மூன்று முப்பது உனது கீழ் கிளைகள்; இந்த
ஆயிரம் இலையுள்ள—ஔஷதியால்—உனது இருதயத்தை
உலரச் செய்கிறேன். உ என்னில் உனது இருதயம்
காய்க; அப்பால் உனது வாய் வாடுக நீ என்னை விரும்பி
உலர்ந்துவிடு; நீ வறண்ட வாயுடன் சலனமாகவும்.
ங இணைப்பவள் இன்பம் எழுப்புபவள் நீ. பழுப்புள்ள
லதை; கல்யாணியே நீ எங்களைப் பிரேரிதஞ் செய்; அங்
குள்ள பெண்ணையும் என்னையும் நீ ஒன்றுசேர்: எங்களைச்
சமான இருதயமாக்கு. ச சலம் பருகாதவனது வாய்
காய்ந்துவிடுவதுபோல் என்னை நீ காதலித்துக் காய்ந்து
விடு. அப்பால் உலரும் வாயுடன் நீ சலனமாகவும்.
ரு கீரி பாம்பைத் துண்டமாக்கி மறுபடியும் ஒன்று
சேர்ப்பதுபோல் அப்படி வீரியம் மிகும்—ஔஷதியே காமத்
துக்குப் பிரிந்தவளை நீ ஒன்று கூட்டு. [அ. கங. கூ. க—ரு]

கக௩. பாலர்களே! [அதர்வன்—பிரம்மணஸ்பதி மந்திரோக்த
தேவதை]

க கீழ் வளர்ந்த இரு புலிகள்[1] தாயையும் தந்தையை
யும் புசிக்க விரும்புகின்றன; பிரமணஸ்பதியே! ஜாத
வேதஸனே! அந்த இரு பற்களை மங்களமாக்குங்கள்.
உ நீங்கள் அரிசியைப் புசியுங்கள்; நீங்கள் யவத்தைப்
புசியுங்கள்: அப்பால் உளுந்து பிறகு எள்ளைப் புசியுங்கள்.
இரத்தினச் சேமிப்புக்கு இதுவே உங்களுக்கு வைக்கப்
பட்டுள்ள பாகமாகும்: இரு பற்களே! தாயையும் தந்தை

1 இரு பற்களுள்ள பாலன்.

ககஉ. கருத்து—என்னில் உனது இருதயங் காய்க.

யையுந் துன்பஞ் செய்யாதேயுங்கள். ௩ இனிமையாய் இணைந்துள்ள இரு பற்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை சுமங்களமான பற்களாகும்; பற்களே உங்கள் காயத்தின் உக்கிரபாகம்—எது உண்டோ அது வேறு எங்கோ சென்றுவிடுக. தாயையும் தந்தையையும் துன்பஞ்செய்யாதேயுங்கள். [சூ. கசய. க—௩]

௩கச கர்ணவேதம் [விசுவாமித்திரன்—அசுவினிகள்]

க வாயு அவர்களை ஒன்று சேர்க்கட்டும்: துவஷ்டா புஷ்டிக்காகத் துணை புரியட்டும்; இந்திரன் அவர்களை ஆசிர்வதிக்கட்டும்: ருத்திரன் அவர்களது விருத்தியைக் கவனிக்கட்டும். உ சிகப்புக் கத்தியினால் அவர்களுடைய —இரு செவிகளில் நீ ஜோடியைச் செய்யவும்; அசுவினிகள் சின்னத்தைச் செய்துள்ளார்கள்; பிரஜையால் அது பெருகட்டும். ௩ தேவர்களும் மனிதர்களும் செய்வது போல அசுவினிகளே ஆயிரம் வகையான செழுமைக்கு நீங்கள் சின்னத்தைச் செய்யுங்கள். [சூ. கசக. க—௩]

௩கரு அக்ஷயம் [விசுவாமித்திரன்—வாயு]

க யவமே! நீ உயரமெழு: உனது சொந்த மஹிமையினால் நீ வெகு பலவாகவும், நீ எல்லாப் பாண்டங்களையும் பாழாக்கவும். ஜோதியினுயுதம் உன்னை யழிக்காமலாகுக. உ செவியுறும் திவ்ய யவமான உன்னை நாங்கள் அழைக்குங்கால் நீ அங்கே ஜோதியைப்போல் உச்சமாய் எழுந்திரு. நீ கடலைப்போல அக்ஷயமாயிரு. ௩ உன்னருகிலுள்ளவர்கள் அக்ஷயமாயிருக்கட்டும்; உன் கூட்டங்களும் அக்ஷயமாயிருக்கட்டும்: உன்னை யளிப்பவர்களும் அக்ஷயமாயிருக்கட்டும்: உன்னைப் புசிப்பவர்களும் அக்ஷயமாயிருக்கட்டும். [சூ. கசஉ. க—௩]

சு-வது காண்டம் முற்றிற்று.

௫. ௧௬ — ௪௫. ௫

௫. ௧௬ ஆத்மா [பிரம்ம வர்சஸ் காம அதர்வணன்—ஆத்மா]

௧ தியானத்தால் மொழியின் துதியை செலுத்துபவர்கள் அல்லது மனத்தால் ருக்குகளைச் மொழிபவர்கள் மூன்றாவதான பிரமத்தால் பெருகி அரீயத்தால் பசுவின் பெயரை யறிகிறார்கள். ௨ மகனாய் அவன் தந்தையை யறிகிறான்; அவன் தனது தாயை—யறிகிறான்; அவன் மகனாகிறான்; அவன் மறுபடியும் செல்வனாகிறான்; அவன் ஜோதியை வானத்தை அவன் சுவர்க்கத்தைச் சூழ்கிறான்; அவன் இந்த சர்வமுமாகிறான்; அவன் இங்கு இருக்க வந்தான். [௭. ௧. ௪—௨]

௫. ௧௭ அதர்வணன் [பிரம்ம வர்சஸ் காம அதர்வணன்—ஆத்மா]

௧ தேவபந்துவாயும், தாயின் கருப்பமாயும், பிதாவின் பிராணனாயும் இளைஞனாயும், மனத்தால் இந்த யக்ஞத்தை யறிபவனுமான தந்தை அதர்வாணனை[1] நீ எங்களுக்கு இங்கு அறிவி, நீ இங்கு—அவனை விளக்கிக் கூறு. [௮. ௨. ௧.]

௫. ௧௮ [அதர்வணன்—ஆத்மா]

௧ ஒளிமயமான அவன் இந்த விசேஷ உருவத்தால் வீரச்செயல்களை சனனமாக்கி விரிவுக்கு விரியும் வழியாயுள்ளான்; அவன் ஆதரிக்கும் இனிய உச்சியைப் பற்றச்

---

1 அனல் மிகும் ஆத்மாவை.

௫. ௧௫ - ௫. ௧௬ கருத்து—யவதானியம் புசிப்பது நித்திய ஆரோக்கியத்துக்கு வழி.

௫. ௧௬ கருத்து—ஆத்மா தந்தை ஆத்மா தாய் ஆத்மா மகன்.

௫. ௧௭ கருத்து—ஆத்மாவை அறி.

சென்றான்: அவன் தன் தேகத்தால் தன் தேகத்தைச் செலுத்தினான். [எ. க. க.]

ககக வாயு [அதர்வணன்—வாயு]

க வாயுவே! ஸ்வாஹாதனே! உனது ஒன்று பத்துக்களுடன், இரண்டு இருபதுகளால், எங்கள் விருப்பத்துக்கு நன்கு சேரும்—சக்திகளுடனான மூன்று முப்பதுகளோடு நீ[1] சுமந்து செலுத்துகிறாய் நீ இங்கு அவற்றை விடுதலையாக்கு. [எ. ச. க]

கஉ0 யக்ஞம் அதர்வணன்—ஆத்மா]

க தேவர்கள் யக்ஞத்தால் யக்ஞத்தை யஜித்தார்கள்; அவை முதல் தர்மங்களாகும்; அந்த மஹிமைகள், பூர்வமான சாத்தியர்களான தேவர்களுள்ள உயரிய உலகத்தை யணுகிற்று. உ யக்ஞம் தோன்றிற்று; அது தோற்றுவிக்கப்பட்டது; அது மறுபடியும் வளர்ந்தது; அது தேவர்களின் அதிபதியாயிற்று. அது எங்களுக்கு திரவியத்தை யளித்திடுக. ந எங்கு தேவர்கள் அவியால் தேவர்களை, அமுதமனத்தால் அமுதர்களை யஜித்தார்களோ அந்த பரம நிலயத்தில் நாங்கள் இன்பமுடனாகவேண்டும். நாங்கள் அதை சூரியனது உதயத்தில் பார்க்கவேண்டும். ச தேவர்கள் யக்ஞத்தைபுருஷனை அவியால் விசால—ஞ்செய்தது ஒரு செயல். விஹவ்ய—மனத்தால்—அவர்கள் செய்த—வேறு யக்ஞ—மொன்றுண்டு. முன் சொன்னதைவிட அதிசத்தி சேர்வது பின் கூறிய யக்ஞம். ரு மயங்குந்தேவர்கள் நாயாலும் பற்

---

1 பிராணனே!

ககஅ - ககக கருத்து—ஆத்மா சக்தியால் எதையுஞ் செய்யலாம்

பல வகையாய் கோக்களின் அங்கங்களாலும் யஜித்தார்கள்: இந்த யக்ஞத்தை மனத்தா லறிபவனை நீ இங்கு எங்களுக்கு அறிவி: நீ இங்கு பேசுவாயோ. [௭. ௫. ௧—௫]

௧௨௧ அதிதி [அதர்வணன்—அதிதி]

௧ அதிதி ஜோதி: அதிதி வானம்; அதிதி அன்னை: அதிதி அச்சன்: அதிதி மகன்: விசுவேதேவர்கள் அதிதி; பஞ்சசனங்கள் அதிதி: சனனமாயுள்ளது அதிதி: சனனமாகப்போவதும் அதிதி: ௨ சுவிரதங்களின் சிறந்த தாயுமாயும், ருதத்தின் பத்தினியாயும், தரித திடமுள்ளவளாயும், தேய்வில்லாதவளாயும், விசால விரிவுள்ளவளாயும், நல் நெறி செலுத்தி நற்சுக மளிப்பவளுமான, அதிதியை, நாங்கள் துணைக்கழைக்கிறோம். ௩ நன்கு காக்கும் புவியாயும், நிகரில்லாத ஜோதியாயும், நற்சுகமளிப்பவளாயும், தேவர்களின் நல்ல துடுப்புடனுகும் பொசியாத கப்பலாயும், புன்மையற்று, நற்பாதை காட்டும் அதிதியில சுவஸ்திக்காக நாங்கள் ஏறுவோம். ௪ வலிமையின் உதயத்தில் மேன்மையான அதிதி நாமமுள்ள அன்னையை மொழியால் நாங்கள் போற்றுகிறோம்: விரிவான வானம் அவளது அங்கம்; அவள் எங்களுக்கு முக்காப்பு இரட்சையை யளிப்பாளாக. [௭. ௬. ௧—௪]

௧௨௨ ஆதித்தியர்கள் [அதர்வணன்—அதிதி]

௧ நான் திதி மக்களுடைய, அதிதியினுடைய இம்சையாகாத பெரிய தேவர்களுடைய துணையை போற்றுகிறேன். ஏனெனில் அவர்களது ஆட்சி ஆழத்திலே அகாத

---

௧௨௦ கருத்து—மனே யக்ஞமே மேலான யக்ஞமாகும்.

௧௨௧ கருத்து—கடல் கடந்து காப்புடனுகுங்கள்.

மாகும்; வணக்கத்தில்[1] அவர்களுக்கு—நிகராய்—வேறு எவர்களுமில்லை. [எ. எ. க.]

கஉக பிருஹஸ்பதி [உபரிப்பிரவன்—பிருஹஸ்பதி]

க நீ மேன்மையினின்று அதி மேன்மைக்குச் செல்லு: பிருஹஸ்பதி உன் முன் செல்பவனுகுக: பிறகு இவனை எல்லா வீரர்களுடன் எதிரிகளினின்று தூரமாய் புவியின் பரந்த—ஸ்தானத்தில்—ஸ்தாபனஞ் செய். [எ. அ. க.]

கஉச துதி [உபரிபப்பிரவன்—பூஷணன்]

க பூஷணன் பாதைகளின் பெரிய பாதையில், சோதியின் பெரிய பாதையில், புவியின் பெரிய பாதையில் பிறந்துள்ளான்; அவன் அறிபவனுய் இங்கு மங்கும், பிரியமான இரு சபைகளுக்குஞ் செல்லுகிறுன். உ பூஷணன் இவ்வெல்லா ஸ்தானங்களையும் நன்கு அறிகிறுன்; அச்சம் அதிகம் நீங்கும்—வழியால்—அவன் எங்களை அழைத்துச் செல்வான்: அவன் ஜோதி வீசுபவன்; சுவஸ்தியளிப்பவன்; சர்வ வீரனுன அவன் சகலமறிந்து சாயாமல் முன் செல்க. ந பூஷணனே! நாங்கள் உன் விரதத்தில் சதா வெதனையற்றுக வேண்டும்: நாங்கள் இங்கு உன்னைத் துதிப்பவர்களா யிருக்கிறேம். ச பூஷணன் தூரத்தினின்று தனது வலது கையை ஸ்தாபிப்பானுக: அவன் எங்களுக்கு இழந்ததை மறுபடியும் இசைத்திடுக. இழந்ததோடு நாங்கள் இணைந்திடுக. [எ. கூ. க—ச.]

கஉரு சர்ஸ்வதி [சௌனகன்—ஸரஸ்வதி]

க ஸரஸ்வதியே! எந்த உனது சாசுவதமாயும், சுக

---

1 வணக்கமடைபவர்களே.

கஉஉ கருத்து—ஆதித்தியர்கள் பெரியவர்கள்.

கஉக கருத்து—குருவின் உதவியால் பரந்த ஸ்தானத்தைப் பற்று.

கஉச கருத்து—பூஷணனுன புஷ்டியுடன் கலந்து பெருகுங்கள்.

மளிப்பதாயும் சுகிர்தனையாயும் சுஅழைப்பாயும், சுதான மாயுமுள்ள ஸ்தனத்தால் சகல சிறந்த—பொருள்களைச் —செழுமை செய்கிறாயோ, அதை நாங்கள் பருகும் வண் ணஞ் செய். [எ. ௧௦. ௧.]

௧௨௬ தேவியே [சௌனகன்—ஸரஸ்வதி]

௧ தேவர்களின் திவ்யமான இந்த விசுவமலங்கரிக்கும் உனது விரிந்த—ஸ்தனம் அசனி[1] துஜம்—போலாகும்; தேவனே! மின்னலால் எங்களது தானியத்தை மாய்க் காதே; சூரியனுடைய இரசிமிகளாலும் அதைச் சாய்க் காதே. [எ, ௧௧. ௧.]

௧௨௭ சபையும் சமிதையும் [சௌனகன்—௧ : சபை. ௨—௩. ஸரஸ்வதி]

௧ பிரஜாபதியின் இரு பெண்களான சபையும் சமிதை யும் பரஸ்பரஞ் சேர்ந்து என்னைப் பாலனஞ் செய்வார்க ளாக. என்னோடு ஒன்று சேர்பவன் எனக்கு உதவிபுரிக: பிதுருக்களே! நான் ஒன்று சேர்பவர்களில் சுவையுள் ளதைச் சொல்க. ௨ சபையே! நாங்கள் உன் பெயரை யறிவோம்; உன் நாமம் ஞனியசேதமாகும்[2] : உனது சபாசதர்கள் எவர்களானாலும் அவர்கள் என்னுடன் ஒன்று சேர்ந்து செல்க. ௩ இங்கு, சேர்ந்து உட்காரு பவர்களின் விக்ஞானத்தை வலிமையை நான் கிரகிக்கி றேன்; இந்திரனே! இந்த ஸர்வமான சபையின் செல்வந் தரிப்பவனாக என்னைச் செய். ௪ சென்றுள்ள உங்க ளது மனத்தை, இங்கோ, எங்கோ பந்தமான உங்கள்

---

1 இடி முழக்கம், 2அழிவில்லாதவன்.

௧௨௫ கருத்து—சரஸ்வதியால் துணையுள்ளவனாகவும்.

௧௨௬ கருத்து—தானியம் ருவி.

—மனத்தை—நாங்கள் இங்கு வரச் செய்கிறோம்; என்னில் உங்களது மனம் மகிழ்ந்திடுக. [எ. கஉக]

கஉஅ பகை நாசம் [த்விஷோ வர்சோ ஹார்க்து காம அதர்வன் ஸோமன்]

க உதயசூரியன் நட்சத்திரங்களின் தேஜஸுகளை தனக்கே சேர்த்துக்கொள்வதுபோல், என்னை வெறுக்கும் ஸ்திரீ புருஷர்களின் சக்தியை நானே சேர்த்துக்கொள்ளுகிறேன். உ நான் வருவதைப் பார்க்கும் எல்லாப் பகைவர்களின் பலத்தை, உறங்குபவர்களின்—உறுதியை—உதய சூரியன்போல் எங்களை வெறுப்பவனின்—வன்மையை நான் பற்றுகிறேன். [எ. கந]

கஉகூ சவிதா [அதர்வணன்—சவிதா]

க கவியின் கல்வியாயும், உள்ளது உதயஞ் செய்பவனையும், இரத்தினம் அளிப்பவனையும், பிரிய நினைப்பாயும் வானம் ஜோதியின் ஜனகனையுமுள்ள, இத்தேவனை நான் துதிக்கிறேன். உ அவனது ஒளி உயர்ந்ததாகும்; அவனுடைய பிரபை பிரசவத்தில் பிரகாசமுடனோங்கும். பொன் கையுள்ள அவன் கிருபையால் ஜோதியை செய்துள்ளான். ந தேவனே! நீ முதல் பிதாவுக்கு உச்சியையும் விசாலத்தையும் உதயஞ் செய்ததால், எங்களுக்கும் அப்படியே ஸவிதாவே! தினந்தோறும் வெகுபல பசுக்களையும், பெரும் பொருள்களையும் புலனுக்கு. ச இல்லற தேவன்இதமான ஸவிதா, பிதுருக்களுக்கு ஆயுட்களை ஆற்றலை ஐசுவரியத்தை யளித்திடுக: அவன் ஸோமனைப் பருகுவானாக; அது அவனை யக்ஞத்தில் இன்பமாக்குக: அவன்

கஉஎ கருத்து—சபையோடு சேர்ந்து வாழ்க்கை நடத்து.
கஉஅ கருத்து—நான் எங்களை வெறுப்பவனது வன்மையை பற்றுகிறேன்.

தர்மத்தில், திரியும் எவனுஞ் செல்லுகிறுன். [எ. கச ௪—எ]

௧௧0 கண்வன் [பிருகு—ஸவிதா]

௧ ஸவிதாவே! ஸத்திய மெழுப்புவளாயும் அதி அதிசய முள்ளவளாயும் எல்லாச் சிறந்த—பொருள்களையுமுள்ள இந்த—உனது—ஸுமதியை நான் பற்றுகிறேன், கண்வனுன காளே, ஆயிரந் தாரைகளோடு செழிப்புடனுள்ள அவனது இப்பசுவை பகனுக்காக கறந்துள்ளான். [எ. கடு.]

௧௧௧ பிரஹஸ்பதியே! [பிருகு—ஸவிதா]

௧ பிரஹஸ்பதியே! இவனேப் பெருகச் செய்; ஸவிதாவே! இவனேப் பெரிய ஸௌபாக்கியத்துக்கு பிரகாசமுடனுக்கு; இவன் கூர்மையா யிருந்தாலும் இன்னும் இவனேக் கூர்மையாக்கு; எல்லா தேவர்களும் இவனே அநுசரித்து இன்பமாகட்டும். [எ. கரு. க.]

௧௧௨ பிரார்த்தனை [பிருகு—தாதா ஸவிதா]

௧ தாத்ரு எங்களுக்குத் திரவியத்தை யளித்திடுக. சகத்தின் தலைவனுன அவன் ஈசனுயிருப்பதால் பூரணத்துடன் எங்களுக் களிப்பானுக. ௨ தாத்ருவானவன் தன்னே நாடுபவனுக்கு அழியாத அதிக வயதை யளிப்பானுக; நாங்கள் விசுவ செல்வமளிக்கும் தேவனின் சுமதியை

௧௦௯ கருத்து—ஸவிதாவிலே எல்லா சனங்களும் சாய்ந்துள்ளார்கள்.

௧௧0 கருத்து—அறிஞன் செல்வத்துக்காகச் சவிதாவைக் கறப்பான்.

௧௧௧ கருத்து—சவிதா என்னும் சோதியான அறிவால் எச்செயலிலும் செழிப்புடனுருங்கள்.

யடையவேண்டும் ௩ பிரஜை விரும்பும் கிரஹஸ்தனுக்கு அவனது வீட்டில் விரும்பும் எல்லாப் பொருள்களையும் தாத்ரு அளிப்பானாக. அவனுக்கு தேவர்கள், எல்லா தேவர்களும் அதிதியுடன் சேர்ந்து அமுதத்தைச் சுற்றி லுஞ் செய்க. ௪ தாத்ரு இராதி ஸவிதா இதை இனிமையுடன் அனுபவிப்பார்களாக: பிரஜாபதி நிதிபதியான அக்கினி—இதை யளிப்பார்களாக; துவஷ்டா, விஷ்ணு, பிரஜையுடன் இன்பமான யஜமானனுக்கு செல்வத்தை யளிப்பார்களாக. [எ. கஎ.]

௩௩௩ மழை [அதர்வணன்—பிருதிவி பர்ஜன்யன்]

க புவியே! நீ வெடி; ஜோதியின் இம் மேகத்தை பிள; தாத்ருவே! ஈசனை நீ எங்களுக்காக ஜோதி சலத்தின் சருமத் தரிப்பை, அவிழ்த்து விடு. உ சூடு சூடாக்குவதில்லை, சீதம் சேதிப்பதில்லை, தாரிதத் திவலைகளுள்ள புவி பிளக்கட்டும்; சலங்கள் நெய்யாகப் பாயும். எங்கு ஸோமனுண்டோ அங்கு சதா மங்களமுண்டு. [எ. கஅ. க—உ]

௩௩௪ பிரஜை [பிரம்மன்—பிரஜாபதி]

க பிரஜாபதி இந்தப் பிரஜைகளை சனனஞ் செய்கிறான்; தாத்ரு சுமனமுடனாகி—அவர்களுக்கு—அளித்திடுக— ஏனெனில் அவர்கள்—ஒரே மூலமுள்ளவர்கள், ஒரே மனமுள்ளவர்கள், ஒரே யறிவுள்ளவர்கள், புஷ்டிபதி என்னில் புஷ்டியை யளிப்பானாக. [எ. ககூ. க]

---

௩௩௨ கருத்து—மூலகாரணம் பற்றி மேலுக்குச்செல்லு.

௩௩௩ கருத்து—சலங்கள் நெய்யாகப் பாயும்.

௩௩௪ கருத்து—ஒரே மனமுள்ளவர்களானால் தாத்ரு உங்களுக்களிப்பான்.

௧௩௫ அநுமதி [அதர்வணன்—அநுமதி தேவதை]

௧ அநுமதி தேவர்களில் இன்று எங்கள் யக்ஞத்தை
யனுமதித்திடுக· அக்கினி போற்றும் எனக்கு அவி
சுமப்பவனுவானுக. ௨ அநுமதியே! நீ இதை யனுமதி:
எங்களுக்கு மங்களத்தைச் செய்; அளிக்கும் அவியை
கிரகி. தேவியே! பிரஜையை யளி. ௩ அவன் செல்வச்
செழிப்பையும் அழியாப் பிரஜையையும், அனுமதிக்கு
அனுமதித்திடுக: நாங்கள் அவனுடைய கோபத்திலாக
வேண்டாம்; நாங்கள் அவனுடைய சுகமளிக்கும் சுமதியி
லாக வேண்டும். ௪ நன்கு செலுத்தும் அநுமதியே!
உனது பெயர் சுலபமா யழைப்பதற்காகும், அநுமத
மாகும். நீ நல்ல தலைவி, நல்ல தானி: அதனுல் எங்கள்
யக்ஞத்தைப் பூரணமாக்கு: எல்லாச் சிறப்பின் ஸம்பன்
னியே! சுபகையே, சுவீரர்களுடன் செல்வத்தை எங்க
ளுக்கு அளி. ௫ நாங்கள் நல்ல நிலமுடனுவதர்க்கு,
நல்ல வீரமுடனுவதர்க்கு, நலமுடன் தோன்றும் இந்த
யக்ஞத்தை அனுமதி யனுகியுள்ளாள்; ஏனெனில் அவ
ளது நல்லறிவு மங்களமாகும்; தேவ கோபியான அவள்
இந்த அவியைக் காத்திடுக. ௬ எது நிற்பதோ, எது
அசைவதோ, சேதனமாகும் இந்த அனைத்தும் அநுமதி
யாயுள்ளாள்; தேவியே அப்படிப்பட்ட உனது சுமதியில்
நாங்களாசகவேண்டும்: அநுமதியே எங்களை யநுமதி.
[௭. ௨௦. ௧—௬]

௧௩௬ ஒரே அதிதி [பிரமன்—ஆத்மா]

௧ நீங்கள் எல்லீரும் சொல்லால் ஒருங்கு சேர்ந்து
ஜோதியின் தலைவனைச் சேருங்கள்; அவன் சனங்களின்

---

௧௩௫ கருத்து—அநுமதி அவனும் அவளுமாவாள்.

அதி பெரிய ஒரே அதிதியாவான். பழையவன் புதியதை வியாபகஞ் செய்துள்ளான்; அந்த ஒருவனையே வெகு பல வழிகள்[1] சேர்க்கும். [எ. உக—க.]

கூகூஎ ஜோதி [பிரம்மன்—மந்திரோக்த விரத்னம்]

க விசால தர்மத்தில் ஜோதியாகி கவிகளின் அறிவான இந்த ஒருவன், எங்கள் காட்சிக்கு ஆயிரமாவான்

உ செங்கதிரன் குற்றமற்றும் ஒரே கருத்துடன் அதி கோபமுடனுன கூட்டமாவான். கோசாலையில் சேரும் உழைகளை ஒன்று செலுத்தியுள்ளான். [எ.உஉ.க—உ]

கூகூஅ துச்சுவப்னம் [எமன்—துச்சுவப்ன நாசனன்]

க நாங்கள், துச்சுவப்னத்தை, துச்சீவனத்தை தீயனை தீம்பனை தீரமற்றவனை தீநாமனை தீச்சொல்லாளர்களை — எங்களிடமிருந்து தூரமாக்குகிறோம். [எ. உகூ. க.]

கூகூகூ சவிதா [பிரம்மன்—சவிதா]

க அக்கினி, இந்திரன் விசுவேதேவர்கள் நல்ல கானஞ் செய்யும் மருத்துக்கள், எங்களுக்கு எதைக் கெல்லினுர்களோ அதை எங்களுக்கு சத்திய தர்மங்களின் ஸவிதா பிரஜாபதி அநுமதி யளித்திடுக. [எ. உச. க]

கூசO விஷ்ணு [மேதாதி—விஷ்ணு வருணன்]

க வானங்கள் எவர்களது வன்மைகளால் நிலையாகி யுள்ளனவோ, எவர்கள் வீரங்களில் அதி வீரம் மிகுபவர்களோ

1 பொருள்கள், புவிகள்.

கூகூகூ கருத்து—ஈசன் ஒருவனே.

கூகூஎ கருத்து—அவன் ஜோதிமயன்.

கூகூஅ கருத்து—துஷ்டரை நீக்கு.

கூகூகூ கருத்து—சவிதா என்னும் அறிவால் ஆழ்ந்துள்ள உண்மைகளை அறியலாம்.

—எவர்கள்—அதி வலிமையுள்ளவர்களாகி, தங்கள் வன்மைகளால் எதிர்ப்பற்று அரசுபுரிகிறார்களோ அந்த—விஷ்ணுவுக்கு, வருணனுக்கு பூர்வபாக்கள் சென்றுள்ளன. உ எவர்களுடைய ஆக்ஞையில் இங்குள்ள அனைத்தும் பிரகாசமாகின்றதோ, காண்பதற்கும் சுவாசிப்பதற்குமான சக்திகளுள்ள சகலமும், எந்த தேவர்களுடைய ஆக்ஞையில் இங்குள்ளதோ, அந்தப் பழைய விஷ்ணு வருணனுக்கு பூர்வபாக்கள் சென்றுள்ளன. [எ. உ௫. க—உ]

கஅக விஷ்ணு [மேதாதிதி—விஷ்ணு]

க புவிகளின் புறங்களைக் கடந்து, பெரிய நிலயத்தை ஸ்தாபனஞ்செய்து, மும்முறைப் பாதம் வைத்து, விரிந்து செல்லும் விஷ்ணுவின் வீரச்செயல்களை நான் இனிச்சொல்லுவேன், உ சுற்றி மலைநிற்கும் பயங்கர கானக மிருகம் போல், விஷ்ணு தனதுவீரச்—செயல்களைக்—துதிக்கிறான். தூரமான தூரத்தினின்று அவன் இங்கே வருக. ந அவனுடைய விசாலமான மூன்று—பாத சலனங்களில், எல்லாப் பொருள்களும் வசிக்கும். விஷ்ணுவே! நீ விரிந்து தாண்டு; எங்களை விசாலமாய் வசிக்கச் செய்: நெய்யைப் பருகு; நெய் மூலனை யக்ஞபதியை இன்னம் மேலும் வளர்த்திடுக. ச இங்கு விஷ்ணு கடந்தான். அவன் தன் கால்களை மும்முறை வைத்தான்; அது அவனது தூளில் குவிந்துள்ளது. ரு விஷ்ணு மூன்று பாதங்களை வைத்தான்; அவன் அழியாத கோபன்; அவன் இங்கு தர்மங்களை நியமனஞ் செய்தான். சு எங்கிருந்து அவன் உங்களது விரதங்களைக் காண்கிறானோ அங்கு நீங்கள் விஷ்ணுவின் செயலைக் காணுங்கள், அவன் இந்திரனின் இணைந்த நண்பன்.

கசாo கருத்து—விஷ்ணு வருணனை நாடு.

எ சோதியில் விரியும் கண்ணைப்போல வீரர்கள் சதா காலம் விஷ்ணுவின் அந்தப் பரமபதத்தைக் காண்கிறார்கள். அ விஷ்ணுவே! ஜோதியினின்றும் புவியினின்றும், பெரிய பரந்த வானத்தினின்றும் விஷ்ணுவே! வெகு பல பொருள்களால் உனது கைகளை நிரப்பு; வலது—பக்கத்தினின்றும்—இடது பக்கத்தினின்றும் இங்கு அளி. [எ. உசு. க—அ]

கசஉ இடை [மேதாதிதி—இடை]

க இடை தன் விரதத்தால் எங்களை அணிக. புனிதர்கள் அவனது ஸ்தானத்தில் தாங்களே புனிதஞ் செய்து கொள்கிறார்கள்; அவள் நெய் பாதமுள்ளவள்; பலமுள்ளவள், ஸோம முதுகுள்ளவள்; வைசுவதேவியான அவள் யக்ஞத்தை யணுகியுள்ளாள். [எ. உஎ. க]

கசக சுவஸ்தி [மேதாதிதி—வேதாதயர்கள்]

க வேதம் சுவஸ்தியாகும், மரம் வெட்டி சுவஸ்தியாகும். பரசு வேதியாகும். பரசு எங்களுக்குச் சுவஸ்தியைக் —கொண்டுவருக. அவி செய்யும் யக்ஞாருகர்கள் யக்ஞம் விரும்பும் அத் தேவர்கள் இந்த யக்ஞத்தை இனிமையா யங்கீகரித்திடுக. [எ. உஅ. க]

கசச அக்கினி விஷ்ணு [மேதாதிதி—அக்கினி விஷ்ணு]

க அக்கினி விஷ்ணுவே! உங்களது மகிமை மேன்மை வாய்ந்ததாகும்; ஒவ்வொரு வீட்டிலும், ஏழு இரத்தினங்

---

கசக கருத்து—விஷ்ணு அழியாத கோபன்.

கசஉ கருத்து—மொழியின் இராணியான இடையுடன் இணையுங்கள்.

கசக கருத்து—தேவர்கள் யக்ஞத்தைப் பற்றுவார்கள்.

களை யளிப்பவர்களாய் இரகசியம் என்னும் பெயருள்ள நெய்யை நீங்கள் பானஞ் செய்கிறீர்கள்; நெய்யைப்பற்ற உங்கள் நா அணுகுக. ௨ அக்கினியே! விஷ்ணுவே! உங்கள் பிரிய நிலயம் பெரியதாகும்; ஒவ்வொரு வீட்டிலும் நற் பாவால் வளர்ந்து, இரகஸிய—ப்பொருள்களை—யநுபவித்து, நெய்யின்—மர்மங்களை—பற்றுகிறீர்கள். உங்கள் நா நெய்யைப் பற்ற யணுகுக. [௭. ௨௯. ௧—௨]

௯௪௫ அஞ்சனம் [பிருகு வங்கிரஸன்—தியாவாப் பிருதிவீ மித்திரன் பிரம்மணஸ்பதி ஸவிதா]

௧ வானமும் பூமியும் எனக்கு அதி அஞ்சனஞ் செய்பவர்களா யுள்ளார்கள்; இங்கு மித்திரன் அதி அஞ்சனம் செய்துள்ளான்; எனக்கு பிரம்மணஸ்பதி அதி அஞ்சனம் செய்க: அதி அஞ்சனஞ் செய்பவளாய் ஸவிதா செய்க. [௭. ௩௦. ௧]

௯௪௬ இந்திரனே [பிருகு வங்கிரஸன்—ஆயுர் தேவதை]

௧ இந்திரனே! சாத்தியமான சிறந்த வெகுபல இரட்சைகளுடன் மகவானே! வீரனே! எங்களை இன்று துரிதமாக்கு; எங்களை வெறுக்கும் எவனும் கீழ் வீழ்க; நாங்கள் வெறுப்பவனை பிராணன் விலகுக. [௭. ௩௧. ௧]

௯௪௭ சோமனே [பிரம்மன்—ஆயுர் தேவதை]

௧ யௌவனனாய் வணக்கம் வகித்து விசித்திர செயல்

---

௯௪௪ கருத்து—பரமன் விரும்பும் பொருள்கள் இரகசியங்களாகும்.

௯௪௫ கருத்து—தேவ குணங்களால் அஞ்சனத்தைத் தேய்த்துக் கொள்ளுங்கள்.

௯௪௬ கருத்து—எங்களைத் துரிதமாக்கு.

செய்பவனும் யக்ஞம்—வளர்க்கும் விருப்பனை நாங்கள் யணுகியுள்ளோம்; எனக்கு அவன் பூரணாயுசைச் செய்க. [எ. ௩௨. க]

௧௪௮ தேவர்கள் [பிரமன் மருத்து பூஷணன் அக்கினி மந்திரோக்த தேவர்கள்]

க மருத்துக்கள் எனக்கு ஒருமையுடன் பொழிக; ஒருமையுடன் பூஷணன், ஒருமையுடன் பிருஹஸ்பதி, ஒருமையுடன் அக்கினி, பிரஜையுடன் பொருளுடன் எனக்குப் பொழிக; அவன் எனக்கு பூரணாயுசைத் தருக. [எ. ௩௩. க]

௧௪௯ அரியழி [அதர்வ பரமேஷ்டி—ஜாதவேதஸன்]

க அக்கினியே! பிறந்துள்ள எனது பகைவர்களைப் பாழாக்கு: பிறக்காதவர்களையும் பாழாக்கு: ஜாதவேதஸனே! போர் செய்ய விரும்புபவர்களை என் பாதத்தின் கீழாக்கு. நாங்கள் உனது அதிதிக்கு பிழையற்றாக வேண்டும். [எ. ௩௪. க]

௧௫0 [அதர்வன்—ஜாதவேதஸன்]

க ஜாத வேதஸனே! சக்தியால் வேறு செறுநர்களை செறுக்கு: ஜாதவேதஸனே! ஜனன மாகாதவர்களையும் செறித்துவிடு: இந்த இராஷ்டிரத்தை ஸௌபாக்கியத்துக்குப் பூர்ணமாக்கு; அவனை அநுசரித்து எல்லா தேவர்களும் இன்பமாவார்களாக. உ உனது இந்த முந்நூறு நாடிகளை ஆயிரம் தூல நாடிகளை உனது அனைத்தின் வாயையும் கல்லினால் மூடுகிறேன். ௩ உனது மேல் மூலஸ்தா

---

௧௪௭ கருத்து—சோமனால் பூரணாயுசு.

௧௪௮ கருத்து—தேவர்களால் பூரணாயுசைப் பற்று

௧௪௯ கருத்து—பகை கொல்லு.

ளத்தைக் கிழாக்குகிறேன்; உனக்குப் பிரஜையும் பிள்ளையு மில்லாம லாகுக. நான் உன்னை மக்களன்னியிலே மல டாக்குகிறேன்; நான் கல்லை உனது மூடியாகச் செய் கிறேன். [௭. ௩௫. ௧—௩]

௧௫௧ தம்பதிகள் [அதர்வன்—அக்ஷி]

௧ நமது இருவர்கண்களும் தேன் தோற்றமுடைனுகுக. நமது முகம் அஞ்சனமாகுக. உனது இருதயத்தினுள்ளே என்னை வை. நம்முடைய மனம் ஒன்றாகுக. [௭. ௩௬. ௧]

௧௫௨ மனைவி [அதர்வணன்—பதி]

௧ நீ பூரணமாய் எனக்கேயாக, எனது மநு மலர்ந்த ஆடையால் உன்னைக் கட்டுகிறேன்: நீ வேறு பெண்களின் —பேச்சை—ப் பேசாதே. [௭. ௩௭. ௧]

௧௫௩ [அதர்வணன்—வனஸ்பதி]

௧ என்னைக் கருதும் இந்த ஔஷதியைக் கெல்லு கிறேன். அதிகமழுது, சென்றுவிடுபவனைத் திரும்பச் செய்துவிடுபவனுக்கு அது வரவேற்பளிக்கும். ௨ ஆசு ரியானது எதனுல் தேவர்களினின்று இந்திரனை சுவாதீ னஞ் செய்ததோ உனக்கு வெகு பிரியமுடைனுகை, நான் உன்னை அதனுல் சுவாதீனமாக்குகிறேன். ௩ நீ ஸோம னுக் கநுரூபன்;[1] நீ சூரியனுக் கநுரூபன்; நீ விசுவே தேவர்களுக்கும் அநுரூபன்; அப்படிப்பட்ட உன்னை நாங் கள் நன்கு உபசரிக்கிறோம். ௪ நான் பேசுகிறேன். நீ

---

1 பொருத்தமானவன்.

௧௫௦ கருத்து—பெண் பகை பொல்லாப் பகை.

௧௫௧ கருத்து—புருஷனும் மனைவியும் பரஸ்பரம் சொல்லிக் கொள்வது.

௧௫௨ கருத்து—மனைவி புருஷனுக்கு மொழிகிறுள்.

இல்லை; நீ சபையில் பேசு; நீ எனக்கேப் பூரணமாயாக வும்; நீ வேறு பெண்களின்—பேச்சைப்—பேசாமலாக வேண்டும். ரு நீ சனங்களுக்கப்பாலானாலும் நதிகளுக் கப்பாலானாலும் இந்த ஔஷதம் உன்னை பந்தஞ் செய்த வள்போல் இங்கு எனக்குச் செலுத்துக. [எ. ஙஅ. க—ரு]

ஙருஅ சரஸ்வந்தம் [பிரஸ்கண்வன்—மந்திரோக்த சுவர்ண தேவதை]

க திவ்யமான சுபர்ணனை, பாலை பெரிய சலகருப்பத்தை ஓஷதிகளின் விருஷபத்தை, விழும் மழையினால் திருப்தி செய்பவனை எங்கள் கோசாலையில் செல்வத்திலே சாய ஒருவன் ஸ்தாபிப்பானாக. [எ. ஙகூ. க]

ஙருரு பிரார்த்தனை [பிரஸ்கண்வன்—ஸரஸ்வான்]

க எவனது விரதத்தில் பசுக்கள் எல்லாஞ் செல்லுகின் றனவோ, எவனது விரதத்தில் சலங்கள் நிற்கின்றனவோ, எவனது விரதத்தில் புஷ்டிபதி பிரவேசித்துள்ளானோ, அந்த ஸரஸ்வந்தை நாங்கள் துணைக்கு அழைக்கிறோம். உ இங்கு நாங்கள் வசித்து செல்வ ஸ்தானராயும், சிறப்பு வாய்ந்து செல்வஞ் செழிப்பவராய் அளிப்பவ னுக்கு அளிப்பவராய் அனுகூலமாகி புஷ்டிபதியான பொருள் மிகுபவராயுமுள்ள ஸரஸ்வந்தை நாங்கள் அழைப்போம். [எ. சo. க—உ]

ஙருசு சுபர்ணன் [பிரஸ்கண்வன்—சியேனோ தேவதை]

க நரரை நோக்கும் கருடன் சாயும் நிலயத்தைக் கண்டு

---

ஙருங கருத்து—நீ சபையில் பேசு.

ஙருஅ கருத்து—கோசாலை யோங்குக.

ஙருரு. கருத்து—புஷ்டிமிகுந்த சரஸ்வந்தைப் பற்றுங்கள்.

நிலம் சலங்களை யெல்லாம் ஊடுருவிச் சென்றுள்ளான். அவன் எல்லாக் கீழ் உலகங்களையும் கடந்து நண்பனான இந்திரனுடன் மங்கள மளிப்பவனாய் இங்கு வருக. உ நரரை நோக்கும் கருடன் திவ்ய கருடன், ஆயிரம் பாதம் நூறு மூலம் வயதளிக்கும் அவன், எங்களினின்று பற்றப்பட்ட பொருளை எங்களுக்கு நன்கு அளித்திடுக; அவன் எங்களது பிதாருக்களில் சுவதாமிகுபவனாவானாக. [எ. சக. க—உ]

௧௫௭ சோமனும் ருத்திரனும் [பிரஸகண்வன்—ஸோமருத்திரன்].

க ஸோமருத்திரனே! எங்கள் வாஸத்திலே நுழைந்துள்ள வியாதியை விலக்கி நீக்கு. நிர்ருதியை வெகுதூரந் துரத்து; செய்த பாபத்தை எங்களிடமிருந்து நீக்கு. உ ஸோமனே ருத்திரனே! எங்களது தேகங்களில் இச் சிகிச்சைகளை யெல்லாம் ஸ்தாபியுங்கள். எங்கள் காயங்களிலே கட்டுப்பட்டுள்ள, நாங்கள்செய்துள்ள குற்றத்தை எங்களிடமிருந்து விலக்குங்கள். [எ. சஉ. க—உ]

௧௫௮ வாக்கு [பிரஸ்கண்வன்—வாக்கு]

க உனக்கு மங்கள மளிப்பவை சில; மங்கள மளிக்காதவை சில; நல்ல மனம் தரித்து சகலத்தையும் நீ சகிக்கிறாய்: அவனகத்தில் மூன்று வாக்குக்கள் வைக்கப்பட்டுள்ளன; அவற்றில் ஒன்று கோஷ மதுசரித்து பறந்து விட்டது. [எ. சங. க]

௧௫௯ இந்திரனும் விஷ்ணுவும் [பிரஸ்கண்வன்—இந்திரன்விஷ்ணு]

க நீங்கள் இருவர்களும் ஜயித்துள்ளீர்கள்; நீங்கள் ஜயிக்

௧௫௬ கருத்து—சுபர்ணன் சூரியன்.
௧௫௭ கருத்து—சோமன் ருத்திரனால் குற்றம் நீங்கு.
௧௫௮ கருத்து—உன்னிலே மூன்று வாக்குக்கள் உண்டு.

கப்படுவதில்லை: அவர்களில் எவனும் ஜயிக்கப்படவில்லை: இந்திரனே! விஷ்ணுவே! நீங்கள் ஆயிரத்தைச் சமர் செய்யுங்கால் மும்மடியாய்[1] மடக்கினீர்கள். [எ. சச. க]

கசு௦ அவகுணம் [பிரஸ்கண்ணவன்—ஈர்ஷ்யாபநயனம் பேஷஜம்]

க எல்லா சனங்களுக்கும் உரியதான சனத்தினின்று, நதியினின்று, இங்கு கொண்டுவரப்பட்டுள்ள, தூரத்தினின்று வகித்துவந்துள்ள, உன்னை அசூயை என்னும் நாமமுள்ள—அவகுணத்தின்—மருந்தாக நினைக்கிறேன். உ புனலால் ஒருவன் அனலை—அவிப்பதுபோல—அனல் தீ போலும், தனித்தனி எரியும் அடவித் தீ போலுமுள்ள, இவனுடைய அசூயையை அமைதியாக்கு. [எ. சரு. க—உ]

கசுக ஸினீவாலீ [அதர்வணன்—விச்பத்தினி]

க விரிந்த பின்னல்களுள்ள ஸினீவாலியே! தேவர்களின் சகோதரியே! அளித்துள்ள அவியை யங்கீகரி: தேவியே! பிரஜையை எங்களுக்கு அளி. உ நல்ல கைகளுள்ள, நல்ல அங்கமுள்ளவளாய் பல—பிரஜை—பிரஸவிக்கும் சனத்தின் பத்தினியான ஸினீவாலிக்கு அவியை யளியுங்கள். ங சனத்தின் மனைவியான நீ இந்திரனுக்குத் தகுந்தவள்: ஆயிரம் பின்னல்களுடன் வரும் தேவ பத்தினியே நீ: உனக்கு யக்ஞங்கள் செய்யப்பட்டுள்ளன: தேவியே பொருளை யளிக்க உனது பதியைத் தூண்டு. [எ. சசு. க—ங]

---

1 முவ்வகையாய்.

கருகூ கருத்து—இந்திரனை விஷ்ணுவைப் பற்றுங்கள்.

கசு௦ கருத்து—அசூயை அகற்று.

கசுக கருத்து—உங்கள் சபை பலமுடைதாகவேண்டுமானால் சக்தி, என்னும் இந்திரனைப் பற்றவேண்டும்.

௩௪௨ குஹூ[1] [அதர்வன்—குஹூர்தேவதி]

௧ நான் நல்ல அழைப்புடன் இந்த யக்ஞத்தில் சுகிருதமுடன் அறிவோடு செய்யும் தேவியான குஹூவை யழைக்கிறேன், எல்லாச் சிறப்புடன் எங்களுக்கு செல்வத்தை அவள் அளித்திடுக; துதிப்பதற்கு தருகனாய் நூறு—சுக—மளிக்கும் வீரனை அவள் தருக. ௨ அமுதம் அமரர்களின் பத்தினியாயும் அழைப்பதற்காகுமவள் இந்த எங்களது யக்ஞத்தை சுவீகரிக்கட்டும். அவள் இன்று எங்களது யக்ஞத்துக்கு ஆவலுடன் செவி சாய்த்திடுக: அறியும் அவள் செல்வச் செழுமையை யளித்திடுக. [எ. ௪எ. ௧—௨]

௩௪௩ இராகை 2 [அதர்வன்—இராகா]

௧ நல்ல துதியுடன் நல்ல அழைப்போடு, நான் இராகையை யழைக்கிறேன்; ஸுபகை எங்களைச் செவியுறுக; அவளே கவனமாகுக. எப்போதும் ஒடியாத ஊசியோடு அவள் செயலைச் சேர்த்திடுக; துதிப்பதற்கருகனாய் நூறு அளிக்கும் வீரனை அவள் தருக. ௨ இராகையே! உனது பக்தனுக்கு அதி சுந்தரமான சுமதிகளால் எந்தச் செல்வங்களை யளிக்கிறாயோ அவற்றால், ஸுபகையே ஆயிரம் புஷ்டியை யளிப்பவளாய் இன்று எங்களுக்கு அநுகூலமாகி வா. [எ. ௪அ. ௧—௨]

௩௪௪ தேவ மனைவிகள் [அதர்வன்—தேவ பத்தினிகள்]

௧ தேவ பத்தினிகள் ஆவலுடன் எங்களுக்கு உதவி

---

1 அந்தரங்க சபை. அமாவாசை. ஆரோப மனைவி. மறைந்துள்ள மனைவி. 2 பூர்ணிமை ஆரோபமான ஸ்திரீ. அரசாங்கசபை.

௩௪௨ கருத்து—குஹூ என்பவளது உதவியால் திரனை சுனனஞ் செய்யுங்கள்.

புரிக; பிரஜை பற்றவும் பொருள் அணுகவும் அவர்கள் துணைபுரிக; புவிச் சேர்க்கையானவர்களும், சலவிரதத்தி லுள்ள ஸுஹுதமான தேவிகளும் எங்களுக்குச் சுகத்தை யளித்திடுக. உ தேவ பத்தினிகளும் பெண்களும் இந்திராணியும் அக்கினுயி இராணியான அசுவினியும், அநுபவிப்பார்களாக. ரோதஸியும் வருணுனியும் செவியுறுக, பத்தினிகளின் ருதுவில் தேவிகள் பகிர்ந்து கொள்க. [எ. சகூ. க—உ]

கூ௫ விஜயம் [கிதவதன் காமோங்கிரஸன்—இந்திரன்]

க இடியேறு மரத்தை இடையூறற்று சதா தகர்ப்பது போல் காயினுல் சூதாடுபவர்களை எதிர்ப்பில்லாத நான் இறுத்து விடுகிறேன். உ எல்லாத் திசைகளின் துரிதம் துரிதமற்ற தடுக்க இயலாத சனத்தின் செல்வம் ஜயம் என் கைகளிலே ஒன்று சேர்க. ங நற்பொருள்களை பற்றியுள்ள அக்கினியை நான், வணக்கங்களுடன் போற்றுகிறேன்: அவன் இங்கு பொருந்தி எங்கள் செயல்களை பகிர்ந்திடுக. செல்வஞ் ஜயிக்கும் இரதங்களால் போல நான் முன் வகித்துச் செல்லுகிறேன். நான் மருத்துக் களின் ஸ்தோமத்தை பிரதட்சிணமாய் நடத்துவேன். ச உன்னை நண்பனுகக்கொண்டு நாங்கள் சேனையை ஜயிக்கவேண்டும்; ஒவ்வொரு சமரிலும நீ எங்கள் பக்கம் உதவிபுரி: இந்திரா! எங்களுக்கு விரிந்த வெளியையும் சுகவழியையுஞ் செய்: மகவானே! நீ பகைவர்களின் வலிமைகளைப் பிள. ரு நன்கு எழுதப்பட்டுள்ள உன்னை நான் ஜயித்துள்ளேன்; நன்கு தடுக்கப்பட்டுள்ளதையும் நான் ஜயித்துள்ளேன்; ஓநாய் ஆட்டை ஆட்டுவதுபோல் உன் செயல்களை நான் கடைவேன். சூ அவன பேண்மை

---

கூச கருத்து—தேவ பத்தினிகளும் உதவி யளிப்பார்கள்.

யாய் விளையாடுவதால் ஆதாயத்தை ஜயிக்கிறான்; அவன் சூதாடுபவனைப்போல் காலத்தில் ஜயங்களை குவிக்கிறான்; தேவர் விரும்பும் அவன் திரவியத்தைத் தடுப்பதில்லை; அவன் அவனை சுவதாக்களால் செல்வத்துடன் சேர்க்கிறான். எ அதிகம் அழைக்கப்படுபவனே யவத்தால் பசியையும் துன்பம் திகழும் துக்கத்தையும் பசுக்களால் நாங்கள் கடக்கவேண்டும்; இராஜர்களின் நடுவிலே நாங்கள் துன்பமாகாமல் தந்திரங்களால் திரவியங்களை ஜயிக்கவேண்டும். அ எனது வலது கையில் செயல்கள், இடது கையில் ஜயம் ஸ்தாபனமாயுள்ளது; நான் செல்வஞ் ஜயிப்பவன், சொர்ணஞ் ஜயிப்பவன் அசுவஞ் ஜயிப்பவனாகவேண்டும் கூ காய்களே![1] கறக்கும் பசுவைப் போல எனக்கு பயன் மிகும் செயலை விளையாட்டை— செய்யுங்கள்; நாணினால் வில்லைப்போல் செயலின் தாரையோடு என்னைச் சேர்த்துக் கட்டுங்கள். [எ. ருo. க—அ]

௩௬௬ பெரிய வெளி [அங்கிரஸன்—இந்திர பிரஹஸ்பதி]

க பிரகஸ்பதி எங்களை எங்கும், பின்புறம் உயர்புறம் கீழ்புறம் தீமையாளிடமிருந்து, எங்களைக் காப்பாளுகை; இந்திரன் நண்பர்களுக்கு நண்பனைப்போல் முன்புறத்தினின்று நடுவழியினின்று, எங்களுக்கு விரிந்த வெளியைச் செய்க. [எ ருக. க.]

௩௬எ ஒருமனம் [அதர்வன்—ஸாம் மனஸ்ய காரிணு வசுவினிகள்]

க நம்மவர்களுடன் மற்றவர்களுடன் எங்களுக்கு ஒரு

1 சேனைகளே புலன்களே.

௩௬௫ கருத்து—புலன்களை ஜயித்து ஆத்மாவின் உயரிய குணங்களை பற்றுங்கள்.

௩௬௬ கருத்து—அறிவாலும் பலத்தாலும் பரந்த நிலயத்தின் அதிபதியாகுங்கள்.

மனத்தை அசுவினிகளே! இங்கு எங்களுக்கு ஸ்தாபியுங்கள். உ நாங்கள் அறிவுடன் மனத்துடன் ஐக்கியமாக வேண்டும்; நாங்கள் திவ்யமனத்துடன், சமர் செய்யாமலாகவேண்டும், அதியுத்தத்தில் கோஷங்கள் முழங்காமலாகுக: தினம் வந்து விட்டபடியால் இந்திரனுடைய அம்பு விழாமலாகுக. [எ. ருஉ. க—உ.]

௲௬௮ தீர்க்காயுசு [பிரம்மரிஷி—ஆயுஷ்காரிணௌ பிராணஸ் பதிரச்வினௌ யம]

க பிரகஸ்பதியே! யமனுடைய பரலோக வாழ்க்கையினின்று சாபத்தினின்று—எங்களை—நீ விடுதலையாக்குங்கால் அக்கினியே! தேவ வைத்தியர்களான அசுவினிகள் திறனாய் மிருத்யுவை எங்களிடமிருந்து விலக்கிச் சென்றார்கள். உ நீங்கள்[1] இருவர்களும் ஒன்று செல்லுங்கள்; சரீரத்தை நீங்காதேயுங்கள்; உன் பிராணனும் அபானனும் இங்கு நண்பர்களாவார்களாக; நூறு சரத்காலங்கள் ஓங்கி வாழ்; அக்கினி உனது கோபனும் வசிஷ்டனும் அதிபனுமாவானாக. ந வெகு தூரத்தில் ஸ்தாபனமாயுள்ள உனது ஆயுசு, பிராணன் அபானன், மறுபடியும் வருக. அக்கினி அதை மறுபடியும் நிர்ருதியின் மர்மாங்கத்தினின்று பற்றியுள்ளான்; நான் அதை[2] உன் ஆத்மாவில் மறுபடியும் நுழையச் செய்கிறேன். ச பிராணன் இவனை[3] நீங்காமலாகுக: அபானன் இவனைக் கிழே சாய்த்து நீங்காமலாகுக: நான் இவனை ஏழு ரிஷிகளில் ஒப்படைக்கிறேன்; அவை, இவனை சுவஸ்தியாய் மூப்புக்கழைத்துச் செல்க. ரு பிராணனே! அபானனே! கொட்டத்தில் இரு சுமைக் காளைகளைப்போல்—இவனைப்—

1 பிராணனும் அபானனும், 2 பூர்ணாயுசை. 3 பாலனை.
௲௬௭ கருத்து—ஐக்கியமாகுங்கள்.

பிரவேசியுங்கள்; இம்மூப்பின் செல்வம் இங்கு இம்மை யன்னியி லோங்குக. ௬ நாங்கள் உனது பிராணனை இங்கு தூண்டுகிறோம்; உனது யட்சமத்தை நான் தூர மாக்குகிறேன்: வரிக்கத்தகும் அக்கினி எல்லாப் பக்கங் களினின்றும் எங்களுக்கு இங்கு ஆயுளை யளித்திடுக. ௭ நாங்கள் இருளினின்றும், உயரத்திலாகி உயரிய நில யத்திலேறி, உத்தம ஜோதியாகி தேவர்களில் தேவனை சூரியனை அடைந்துள்ளோம். [௭. ருங., ௧—௭]

௧௬௯ ரிக்கும் சாமனும் [பிருகு—இந்திரன்]

௧ எவற்றால் செயல்களைச் செய்கிறார்களோ—அந்த—ரிக்கை ஸாமனை நாங்கள் யஜிக்கிறோம்; ஸதஸில் இவை யரசு புரியும். அவை தேவர்களில் யக்ஞத்தை யளிக்கின் றன. ௨ நான் ரிக்கையும் ஸாமனையும்,—முறையே—அவிக்கும் வலிமைக்கும் யஜ—ஸை பலத்துக்கும் நாடிய தால், நான் நாடிய இந்த வேதம் சசீபதியே! என்னைத் துன்பஞ் செய்யாமலாகுக. [௭. ருச. ௧.]

௧௭௦ வஸுவே [பிருகு—இந்திரன்]

௧ வஸுவே! ஜோதிக்குக் கீழாக உள்ள உனது எவ்வழிகளால் விசுவத்தைப் பிரேரிதஞ் செய்கிறாயோ அவற்றால் இனிமையில் எங்களை ஸ்தாபனஞ் செய். [௭. ருரு. ௧.]

௧௭௧ விஷம் விலக்கு [அதர்வணன்—மந்திரோக்த விருஸ்சிகா தயர்கள்.]

௧ வீரியன் பாம்போ கரும் பாம்போ விஷப் பாம்பி

---

௧௬௮ கருத்து—பிராணுபானத்தால் பலம் பெருகும்.

௧௬௯ கருத்து—வழி தப்பினால் வேதம் துன்பத்தை விளைவிக்கும்.

௧௭௦ கருத்து—இனிமையில் இசை.

ளிடமிருந்தோ, குவியும் கங்கபருவண விஷத்தை இந்த ஔஷதம் நீக்கச் செய்துள்ளது. உ இந்தச் செடி தேன் பிறந்து தேன் சொட்டி தேனைத் திதிப்பாயுள்ளது; துண்டமானதற்கு[1] இது ஔஷதமாகும்; கொட்டுங் கீடங்களை[2] இது கொல்லும். ந கடித்து குடித்த—நஞ்சை—நாங்கள் உனது புறத்திலழைப்போம்; அற்பமாய் அவசரங் கடித்து கொட்டும் ஜந்துவின் விஷம் இரஸமற்றுள்ளது. ச கட்டற்று கோணலாய் அங்கமில்லாமல் குறுக்கி இறுக்கும் உனது[3] அந்த முகங்களை, பிரம்மணஸ்பதியே நீ புல்லைப்போல் ஒன்று வளை. ரு நிலத்தில் நகர்ந்து இரச சூனியமான சர்கோடத்தின் விஷத்தை நான் நீக்கியுள்ளேன்; அப்பால் அதை நான் அரைத்துமுள்ளேன். சூ உனது இரு கைகளிலும் உனது சிரத்திலும் உனது நடுவிலும் வன்மையில்லை; பிறகு நீ உனது வாலில் அவமாய் அற்பப் பொருளாயுள்ள அது எது? எ உன்னை எறும்புகள் புசிக்கின்றன; மயில்கள் உன்னைத் துண்டம் துண்டமாய் பொறுக்கும்; சர்கோடத்தின் விஷம் இரச சூனியமாயுள்ளது என நீங்கள் எல்லீருஞ் சொல்லலாம். அ வாலாலும் வாயாலும் இம்ஸிக்கும்—உனது வாயில் விஷமில்லை; இனி உனது வால் தரிப்பில் அது—எங்ஙனமிருக்கும்? [எ. ருசு. க—அ]

கஎஉ சரஸ்வதீ [வாமதேவன்—ஸரஸ்வதி.

க ஆசையுடன் பேசுவதில் சனமநுசரித்து யாசித்துச் செல்லுவதில், என் சரீரத்தில் சேதனமாவதில் எந்த வேதனையானுலுஞ் சரி—அதை சரஸ்வதீ நெய்யால்நிரப்பு

---

1 முறிந்து காயமானால். 2 புழுக்களை· 1 பாம்பினது. விஷ ஜந்துவினுடைய.

கஎக கருத்து—ஔஷதம் விஷம் விலக்கும்.

வாளாக. உ மருத்துக்களுடனான [1] சிசுவுக்கு [2] ஏழு [3] பாய்கின்றன; பிள்ளைகள்[4] பிதாவுக்கு ருதங்களை அறியச்செய்துள்ளார்கள்: இரண்டும்[5] அவனதாகும்; அவனுக்கு இரண்டும் பிரகாசிக்கின்றன; இரண்டும் முயற்சிக்கின்றன; இரண்டும் அதைப் [6] புஷ்டியாக்கும். [எ. ருள. க—உ]

௩எ௩ போகத்துக்கு [கௌருபதி—மந்திரோக்த இந்திரவருணன்]

க இந்திர வருணனே! நீங்கள் ஸோமனைப் பருகுபவர்கள்; நிலையான விரதமுள்ளவர்களே! இன்பமளிக்கும் இச்சோமனைப் பருகுங்கள்; உங்களது இரதமான யக்ஞம் தேவ போகத்துக்கு பானஞ்செய்வதற்குச் சாயுஞ்ஸ்தானத்தையணுகுக. உ இந்திரனே! வருணனே! அதிமிகுந்த தேனின், விருஷப ஸோமனின்—இரசத்தை—விருஷபங்களே! நீங்கள் பொழியுங்கள்; இந்த இரசம் உங்களுக்கு பொழியப்பட்டுள்ளது. இத்தருப்பையி லுட்கார்ந்து நீங்கள் இன்பமுடனருங்கள். [எ. ருஅ. க. உ]

௩எச சாபம் நீங்கு [பாதராயணீ—மந்திரோக்த அரிநாசன தேவதைகள்]

க எங்களால் சபிக்கப்படாமல் எங்களை சபிப்பவனையும், நாங்கள் சபித்து எங்களைச் சபிப்பவனையும் இடியேறால் அடிக்கப்படும் மரத்தைப்போல அவன் மூலம் வரை உலர்த்தி விடுக. [எ. ருகூ. க]

---

1 பிராணன்களுடனான. 2 ஆத்மாவுக்கு. 3 சுவாசங்கள். 4 ஆத்மாவின் பிள்ளைகள் போலான பிராணங்கள். 5 ஆத்மாவும் பிராணனும். 6 உன்னை.

௩எஉ கருத்து—தகப்பன்சாமி, ஆத்மாவால் பிராணனேங்கும், பிராணனால் ஆத்மா ஓங்கும்.

௩எ௩ கருத்து—இந்திர வருணனைப் போற்றுங்கள்.

௩எச கருத்து—சாப மொழி.

௱௭௫ மனை [பிரம்மன்—இரம்மியாகிருஹா: வாஸ்தோஷ் பதயஸ்சதேவா:]

௧ பலந்தரித்து பொருள் ஜயித்து ஸுமேதையுடன், கோரமில்லாத கண்ணுடன் நல்ல கருத்தோடு வணக்கஞ் செய்பவனாய் நான் வீடுகளுக்கு வந்துள்ளேன்: நீங்கள்[1] இன்பமுடனாகுங்கள்; என்னால் பயமாக வேண்டாம். ௨ இந்த வீடுகள் சுகமளிப்பவை, பால், பலம் மிகுந்தவை, இனிமை நிறைந்து இலங்கும் அவை எங்கள் வரவை யறிக. ௩ வெளியிலிருப்பவன் நினைக்கும் வெகு பல நல் மனங்களுள்ள வீடுகளை நாங்கள் அழைக்கிறோம்: அவை எங்கள் வருகையை யறிக. ௪ வெகு பல பொருள் பொருந்தும், இன்பமனுபவிப்பவர்களுள்ள மனைகள் அழைக்கப்பட்டுள்ளார்கள்; நீங்கள் பசி தாகமன்றியிருங்கள்: வீடுகளே! நீங்கள் எங்களால் பயமாக வேண்டாம். ௫ பசுக்கள் இங்கு அழைக்கப்பட்டுள்ளன; ஆடுகளும் அஜங்களும் அழைக்கப்பட்டுள்ளன; பிறகு எங்கள் வீடுகளில் உணவின் அமிருதமும் அழைக்கப்பட்டுள்ளன. ௬ வீடுகளே! இனிமை மிகுந்து நற்செல்வங்களுடன் நீர் உணவு மிகுந்து, உலராமல் இன்பமாகி நீங்கள் பசியற்றிருங்கள்; எங்களால் நீங்கள் பயமாக வேண்டாம். ௭ நீங்கள் இங்கே இருங்கள்; எங்களை யநுசரிக்காதேயுங்கள்: நீங்கள் விசுவரூபங்களைப் புஷ்டியாக்குங்கள்; நான் மேன்மையானதோடு வருவேன்; என்னால் நீங்கள் அதிசெழிப்புடனாகுங்கள். [௭. ௬௦. ௧—௭]

௱௭௬ தவம் [அதர்வணன்—அக்கினி]

௧ அக்கினியே! எத்தவம் தவத்தால்—வளர்கின்றதோ

---

1 மனையிலிருக்கும் பெண் பிள்ளைகளே!

௱௭௫ கருத்து—இனிய மனை.

நாங்கள்—அத்தவத்தால்—தபத்தைச் செய்கின்றோம்; நாங்கள் சுருதத்துக்குப் பிரியர்களாகி, தீர்க்காயுட்களுடன் அதி அறிவுள்ளவர்களாக வேண்டும். உ அக்கினியே! நாங்கள் தவஞ் செய்கிறோம்; நாங்கள் அதி தவஞ் செய்கிறோம்; நாங்கள் சுருதங்களைச் செவியுற்று தீர்க்காயுட்களும் நல்ல அறிவுள்ளவர்களுமாக வேண்டும், [எ. ௬௧. க—உ]

௩எஎ அக்கினி [கசியப மாரீசன்—அக்கினி]

க இந்த அக்கினி நலபதியாவான். புரோஹிதன், பலந்திலோங்குபவன், சாரதியைப்போல் பதாதிகளை ஜயித்துள்ளான்: புவியின் நடுவில் ஸ்தாபிதமாகி, பிரகாசமாய் ஒளி வீசி போர் செய்ய விரும்புபவனை அவன் பாதத்தின் கீழ் செய்வானாக. [எ. ௬உ. க]

௩எஅ ஜாதவேதசன் [மரீசிகாசியபன்—ஜாதவேதஸன்]

க அமர் ஜயிப்பவனையும் அடக்குபவனையுமுள்ள அக்கினியை பரம நிலயத்தினின்று, நாங்கள் பாக்களால் அழைக்கிறோம்; அவன் எங்களைத் துன்பங்களினின்றும் நீக்குவானாக. தேவனான அக்கினி தீச்செயல்களைத் தூரம் செய்க. [எ. ௬௩. க.]

௩எ௯ சலமும் அனலும் [யமன்—கிருஷ்ண சகுனி நிர்ருதிர்வா மந்திரோக்த தேவதைகள்]

க கருங்கழுகு [1] பறந்து இங்கு விழச் செய்துள்ள எல்லாத் துன்பம் துக்கத்தினின்றும், சலங்கள் என்னைக்

---

1 கரும் மனம்.

௩எ௬ கருத்து—தவத்தால் தீர்க்காயுசு தோன்றும்.

௩எஎ—௩எஅ கருத்து—அக்கினியால் அரியை எரித்து விடு.

காத்திடுக. உ நிர்ருதியே! கரும்பட்சி உனது முகத்தால் இங்கே கீழே விழச் செய்துள்ள எக்-குற்றத்தினின்றும் காருகபத்தியாக்கினி என்னை நீக்குவானாக. [எ. சுச. க—உ]

கூஅ௦ அபாமார்க்கன் [சுக்கிரன்—அபாமார்க விருத்தேவதை]

க அபாமார்க்கனே![1] நீ மாறுபழத்துடன் பெருகியுள்ளதால், இங்கு என்னிடமிருந்து எல்லாப் பழி சொற்களையும் பிரித்துவிடு. உ எங்கும் பார்ப்பவனே! அபாமார்க்கனே! நாங்கள் செய்துள்ள தீச்செயலையும் தீமையையும், தீவினையையும், உன்னால் துடைத்துவிடுகிறோம். ௩. அபாமார்க்கனே! நாங்கள் கரும் பற்களுள்ளவனோடு கரும் நகமுள்ளவனுடன் காய பங்கமுள்ளவனோடு சேர்ந்திருந்தால், அதனாலாகும்—எல்லாத் துன்பத்தையும் உன்னால் துடைத்து விடுகிறோம். [எ. சுரு. க—௩]

கூஅக பிராமணன் [பிரம்மன்—பிராமணம்]

க வானத்தில், வாதத்தில் மரங்களில், புதர்களில்சொல்லும் எதை பசுக்கள் செவியுறுகின்றதோ அந்தப் பிராம்மணம்[2] எங்களை மறுமடியும் அணுகுக. [எ. சுசு. க]

கூஅ௨ ஆத்மா [பிரம்மன்—ஆத்மா.]

க என்னை மறுபடியும் இந்திரியம் அடைக; மறுபடியும் ஆத்மா மறுபடியும் பொருள் மறுபடியும் பிராம்மணம்—

---

1 ஒரு மூலிகையின் பெயர். 2 அறிவு, வேதம்.

கூஎகூ கருத்து—குற்றம் நீங்கு.

கூஅ௦ கருத்து—அபாமார்க்கத்தால் அழிவு நீங்கும்.

கூஅக கருத்து—செவிச் செல்வத்தால் பசுக்களும் ஓங்கும்.

அணுகுக, யக்ஞநிலய அனல்கள் [1] மறுபடியும் தங்களுக்கான ஸ்தானங்களில் [2] இங்கு திடமுடனுகுக. [எ. கூஎ. க]

௧அ௩ சரஸ்வதி [சந்தாதி—சரஸ்வதீ]

௧ சரஸ்வதியே! உனது விரதங்களில், தேவியே! உனது திவ்ய ஸ்தானங்களில் ஆஹுதமான அவியை யங்கீகரி: தேவியே! எங்களுக்குப் பிரஜையை யளி. ௨ ஸரஸ்வதியே! உனது அவி இங்கு நெய் மிகுந்துள்ளது; பித்ருக்களின் இந்த அவியானது புசிப்பதற்காகும் இந்த உன்து முழக்கங்கள் மங்களமுள்ள—வையாகுக: அவற்றால் நாங்கள் இனிமை நிறைபவர்களாகவேண்டும். ௩ நீ மங்கள மளிப்பவளாகவும், நீ எங்களுக்கு சுகம் பிரியமளிப்பவளாகவும்: ஸரஸ்வதியே! உனது நற்பார்வையினின்று நாங்கள் பிரியாமலாவோமாக. எ. கூஅ. க—௩]

௧அ௪ பிரார்த்தனை [சந்தாதி—சுகம்]

௧ எங்களுக்குக் காற்று சுகத்தை வீசுக: சூரியன் எங்களுக்குத் தினங்கள் சுகமுடனுகுக: சுகமாக இரவு சேர்க: எங்களுக்குச் சுகத்தை உஷை வீசுக. [எ. கூகூ. க]

௧அ௫ பகையழி அதர்வணன் [சியேன உதமந்திரோக்த தேவதை]

௧ அங்குள்ளவன் மனத்தால் வாக்கால், யக்ஞங்களால்

1 சூரியாக்கினி, சரீராக்கினி, தர்சனுக்கினி. கோஷ்டாக்கினி முதலியன. 2 என் தேகத்தின் பல நிலயங்களில்.

௧அ௨ கருத்து—அக்கினி பலத்தால் ஆத்மா ஓங்கும்.

௧அ௩ கருத்து—ஒருபோதும் கல்வி நீங்காதே.

௧அ௪ கருத்து. அனைத்தாலும் சுகம் பெருக.

அவியால் யஜுஸால் எந்த ஆஹுதியைச் செய்தாலும் அதை நிர்ருதி மிருத்யுவுடன்சேர்ந்து அவனது ஆஹுதி சத்தியமாவதற்குள் அதை யழித்திடுக. உ யாது தானர்களும், நிர்ருதியும் அரக்கரும், அவனது சத்தியத்தை அசத்தியத்தால் அழித்திடுக: தேவர்கள் இந்திரனால் பிரேரிதமாகி அவனுடைய நெய்யை கலந்திடுக. ௩ இரு துரிதமான அதி இராஜர்கள் சேர்ந்து பறக்கும் இரு கருடன்களைப்போல் எங்களுக்குத் துன்பம் தெளிவாக்கும், சத்துரு நெய்யைச் சிதைப்பார்களாக. ச உனது இரு கைகளைக் கீழே சாய்த்து நான் உனது வாயை மூடுகிறேன்: தேவனுன அக்கினியின் கோபத்தால், நான் உனது அவியை யழித்துள்ளேன். ரு உன் கைகளைக் கட்டுகிறேன்; நான் உனது வாயைக் கட்டுகிறேன்; கோரமான அக்கினியின் கோபத்தால் உனது அவியை அழித்துள்ளேன். [எ. எo. க]

௩அசு அக்கினி [அதர்வணன்—அக்கினி]

க ஜயசாலியான அக்கினியே! அறிஞனை உன்னை எங்களைச் சுற்றிக் கோட்டையைப்போல் ஸ்தாபனஞ் செய்கிறோம். தினந்தோறும் வீரநிறமுள்ள நீ, அழிப்பவனை அழிப்பவனுவாய். [எ. எக. க]

௩அஎ இந்திரன் [அதர்வணன்—இந்திரன்]

க நீங்கள் எழுந்திருங்கள்! இந்திரனுடைய பருவபாகத்தில் கீழ் நோக்குங்கள். பக்குவமானல் நீங்கள் அதனை அளியுங்கள்; பக்குவமாகவில்லையேல் நீங்கள் காத்திருங்கள். உ அவி பக்குவமாகியுள்ளது: இந்திரனே! இங்கு

---

௩அரு கருத்து. பகையழிப்பது பெருமை.

௩அசு கருத்து—அனலால் சூழ்ந்துகொள்.

வா. சூரியன் வழி நடுவில் சென்றுள்ளான்: சலனமாகும் தலைவனில் குலபதிகள்போல் உனது நண்பர்கள் பொருள் களோடு உன்னைப் பற்றியுள்ளார்கள். ௩ நான் அதனை [1]—ஸ்தனத்தில் பக்குவமாயுள்ளது என நினைக்கிறேன்: அக்கினியில் பக்குவமாயுள்ளது—என நினைக்கிறேன். அந்தப் புதிய ருதமான அதனை நன்கு பக்குவமாயுள்ள தென நினைக்கிறேன்: நடுப்பகல் யக்ஞத்தின் தயிர்களை நீ பருகு: வச்சிராயுதந் தரிக்கும் இந்திரனே! அதிகஞ் செய்பவனே! அதனை அங்கீகரி. [எ. எஉ. க—௩]

௧அ அசுவினிகளே [அதர்வணன்—அசுவினிகள்]

க இரு விருஷபர்களே! அக்கினி எழுந்துள்ளான், அவன் ஜோதியின் ஸாரதி: கர்மம் தபமாகியுள்ளது; உங்கள் உணவுக்குத் தேன் கறக்கப்படுகின்றது; அசு வினிகளே! இசையும் இன்பங்களில் வெகு கிருஹங்க ளுள்ள தானஞ்செய்யும் நாங்கள் உங்களை அழைக்கிறோம். உ அசுவினிகளே! அக்கினி எழுந்துள்ளான்: உங்கள் கருமம் தபமாகியுள்ளது; வாருங்கள்: இப்போது இங்கு பசுக்கள் கறக்கப்படுகின்றன; அதிசயர்களே! அறிஞர் கள் இன்பமாகிறார்கள். ௩ சுவாஹா கிருதமுடனான தேவர்களின் சுத்தமான யக்ஞமானது தேவபானத்துக் கான அசுவனிகளின் கலசமாகும்; சர்வமான அமுதர் கள்—இதை யனுபவித்து கந்தர்வனது முகத்தால் ருசிக் கிறார்கள். ச அசுவினிகளே! சிகப்புப்—பசுக்களிலுள்ள பால் ஆஹூதமான நெய், உங்கள் பாகமாகும்: வாருங்கள், இனிமையானவர்களே! சபை தரிப்ப வர்களே! சற்பதிகளே! ஜோதியின் ஜோதியிலே

1 அவியை. அளிப்பை.

௧அஎ கருத்து—அனைவரும் இந்திரனைப் பற்றுவார்கள்.

சூடான கருமத்தைப் பருகுங்கள். ரு தவமுடனான
கர்மமானது அதன்ஹோதாவாக உங்களை அடைக.
உங்கள் அத்வர்யு பால் மிகுந்து நன்கு சலனமாவானாக:
பிரஜையின் அசுவினிகளே! இனிய பாலைப் பருகுங்
கள். சிகப்புப்—பசுவின் பாலைப் பானஞ்செய்யுங்கள்.
௬ பசு கறப்பவனே! துரிதமாய் பாலுடன் வாருங்கள்:
'கர்மத்தில்' சிகப்புப் பசுவின் பாலைப் பொழியுங்கள்.
சிறந்த ஸவிதா உயரிய வானத்தைப் பிரகாசஞ் செய்
துள்ளாள்; உஷோதய மநுசரித்து அவள் பிரகாசிக்
கிறாள். எ நான் சுலபம் கறக்கும் பசுவைக் கறக்கிறேன்;
நற் கையுடன் கறப்பவன் அவளைக் கறப்பான்: ஸவிதா
சிறந்த தூண்டுதலைத் தூண்டுக: சூடான — பானம் — தப
னஞ் செய்யப்பட்டுள்ளது; அவன் அதனை, அறிவித்
திடுக. அ சத்த மிட்டுக்கொண்டு வசு பத்தினி,
தனது மனத்தால் வசுக்களுக்குக் கன்றைத் தேடுபவளாய்
இங்கு வந்துள்ளாள்: இம்சை யாகாத இவள் அசுவினி
களுக்குப் பாலைக் கறந்திடுக; அவள் மேலான சௌபாக்
கியத்துக்கு வளர்க. ௯ எங்கள் வீட்டுக்கு போகத்துக்
காகும் இல்லற அதிதியாக, அறியும் நீ, எங்கள் யக்ஞத்
துக்கும் வா: அக்கினியே! எல்லா எதிர்ப்பவர்களை
யழித்து பகை செய்பவனது போஜனங்களை யெல்லாங்
கொண்டுவா. ௧௦ அக்கினியே! மேலான சௌபாக்கி
யத்துக்கு நீ சக்தியுடனிரு: உனது ஒளிகள் உத்தம
மாகுக. நல்ல வழியுடனாகும் தாம் பத்தியத்தை ஒன்று
சேர்; எதிர்ப்புச் செய்பவனது மேன்மையை மிதித்து
நில். ௧௧ மேலான புற்றரையில் மேய்ந்து நீ நல்ல பங்
குள்ளவன்: நாங்களும் அப்படியே நல்ல பாகங்களுள்ள
வர்களாக வேண்டும்; இம்சை யாகாதவளே! நீ புல்லைப்

புசி: இங்கு வந்து எல்லாக் காலத்திலும் சுத்தச் சலத்தைப் பருகு. [எ. எ௩. க—கக]

௧௮௯ கண்டமாலை [அதர்வணன்—அபசித நாசனன்]

க சிகப்பான அபசிதத்தின் தாயை கருமை என நாங்கள் செவியுற்றுள்ளோம்: நான் தேவ முனியின் மூலத்தால் அவற்றை யெல்லாம் துளைக்கிறேன். உ நான் அவற்றின் முதலாயுள்ளதைத் துளைக்கிறேன், நான் நடுவாயுள்ளதையுங் குத்துகிறேன்; நான் இங்கு அவற்றின் பின்புறமாயுள்ளதையும் குடுமியைப்போல் கொய்துவிடுகிறேன். ௩ நான் துவஷ்டாவின் வாக்கினால் உனது துவேஷத்தைத் தணித்துள்ளேன்: தலைவனே! உனது கோபத்தையும் நாங்கள் உனக்காகத் தணிக்கிறோம். ச விரதங்களின் பதியே! விரதத்தால் அலங்காரமான நீ இங்கு நல்மனமுடன் சதாகாலம் பிரகாசி: ஜாதவேதஸனே! இப்படி எழுச்சியாகு முன்னை பிரஜைமிகுந்த நாங்கள் எல்லாரும் எப்பொழுதும் யனுகி யிருப்போமாக. [எ. எச. க—ச.]

௧௯௦ பசுக்கள் [உபரிபப்பிரவன் - அக்கினியன்]

க நீங்கள் பிரஜை மிகுந்து, நல்ல புற்றரையில் பிரகாசமாகி, நல்ல சல ஸ்தானத்தில் சுத்த சலங்களைப் பருகுவர்களா—யிருங்கள் திருடனும் தீமை புரிபவனும் உங்களைச் சுவாதீனஞ் செய்யாமலாவார்களாக: ருத்திரனின் ஆயுதம் உங்களை நீங்குக. உ கால் சுவடுகளை நீங்கள் அறிபவர்கள்; இரமிக்கும் நீங்கள் ஒன்று சேர்பவர்கள்; விசுவநாம முள்ளவர்கள்: தேவிகளே! தேவர்

---

௧௮௮ கருத்து—அனல் வரவேற்பு அதிசயம் விளைவிக்கும்.
௧௮௯ கருத்து—விரதம் தரித்தால் விண் நோக்கம் வரும்.

களுடன் என்னிடம் வாருங்கள்: இந்தக்கொட்டத்துக்கு இந்த ஸ்தானத்துக்கு—வாருங்கள்; எங்களை நெய்யால் தெளியுங்கள். [எ. எரு. க—உ]

௩௧௧ நோய்கள் [அதர்வணன்—அபசித பிஷக்]

க அநித்தியத்தைவிட அநித்தியமானவை; இன்மையில் இன்மை மிகுபவை: ஸேஹுவைவிட இரசமில்லாதவை உப்பைவிட அதிகம் கரைபவை. உ கண்டத்திலுள்ள அபசிதங்களும் பக்கங்களிலுள்ளவையும் வயிற்றுக் கீழுள்ள அபசிதங்களும் தாமாகவே உதிரும். ௩ மார்பை என்பை யழிப்பதையும் உள்ளங்காலில் இறங்குவதையும் உச்சியிலுள்ள எதையும் ஸர்வமான ஜாயான்யத்தை[1] யும் நான் நீக்கியுள்ளேன். ச சிறகுகளிருப்பதால் ஜாயான்யம் பறக்கின்றது, அது புருஷனைப் பிரவேசிக்கும்; ஸூக்ஷதம்[2] அக்ஷிதமான இரண்டின்[3] ஔஷதம் இதுவே. ரு ஜாயான்யனே! நாங்கள் உனது சனனத்தை யறிவோம்; ஜாயான்யனே! நீ எங்கிருந்து பிறந்தா யென்பதையு மறிவோம்; நாங்கள் எவனது வீட்டில் யக்ஞஞ் செய்கிறோமோ அங்கு நீ எப்படி நாசஞ் செய்வாய்? சு இந்திரனே! நீ விருத்திரனை யழிப்பவனு யிருப்பதால், சூரனே! சமரில் செல்வங்களுக்கு கலசத்தில் ஸோமனை வீரமாய் பருகு, நடுப்பகல் யக்ஞத்தில் அதைக் கீழே பொழி. செல்வக் களஞ்சியமான நீ எங்களில் செல்வத்தை யளி. [எ. எசு. க—சு]

1 கண்டமாலையை 2 நித்தியம் அநித்தியமான. 3 இரண்டு வகை கண்டமாலையின்.

௩௧0 கருத்து—பசு வளர்த்து புஷ்டியாருங்கள்.

௩௧௧ கருத்து. நோய் நீங்கி வலிமையுடனுருங்கள்.

௩௯௨ மருத்துக்களே [அங்கிரஸன்—மருதர் ஸாந்தபநா மந்திரோக்த தேவர்கள்]

௧ அதிதாபஞ் செய்பவர்களே! இதோ அவியாகும்; மருத்துக்களே! இதை சுவீகரியுங்கள்: எதிரியழிப்பவர்களே! எங்களுக்கு இரட்சையுடனாகுங்கள். ௨ மருத்துக்களே! வசுக்களே! பகையான மனிதன் கோணலாய் எங்களது சித்தங்களை நாசஞ்செய்ய விரும்பினால், அவன் துவேஷ பாசங்களைப் பற்றுக: அவனைத் தாபமுடனாகும் தபத்தால் தொலையுங்கள். ௩ வருஷ மருத்துக்களே நவகானஞ் செய்பவர்கள்; விசால நிலயமுள்ளவர்கள்; கணங்களுடன் கூடும் அவர்களே மானிடர்கள்; அதிதவம் தோற்றுவித்து இன்பமாகி இன்பமளிப்பவர்களான அவர்கள் பாப பாசங்களை எங்களினின்றும் பிரிப்பார்களாக. [எ. எஎ. ௧—௩]

௩௯௩ அக்கினி [அதர்வணன்—அக்கினி]

௧ நான் உனது கயிற்றின்—கட்டை—நீக்குகிறேன். உனது கட்டின் உனது கடிவாளத்தின் பாசத்தை நீக்குகிறேன். அக்கினியே! நீ அழியாமல் இங்கேயே இரு. ௨ அக்கினியே: இம்மனிதனுக்கு மேதினிகளைத் தாங்கும் உன்னை தெய்வ பிரமத்தால் நான் இணைக்கிறேன்; எங்களுக்கு மேலான செல்வத்தை இங்கு நீ பிரகாசமாக்கு. தேவர்களில் பிரிய அவியளிப்பவனாக இவனை நீ யறிவித்து விடு. [எ. எஅ. ௧—௨]

௩௯௪ அமாவாசையே [அதர்வன்—மந்திரிரோக்த அமாவாஸ்யை]

௧ அமாவாசையே! மஹிமையுடன் ஒன்று வசிக்கும் நீ தேவர்கள் எந்த பாகத்தை உனக்குச் செய்துள்ளார்

---

௩௯௨ கருத்து—சமூக உதவியால் செம்மையாகலாம்.

௩௯௩ கருத்து—தியாகஞ் செய்பவன் தணல் தோய்ந்தவன்.

களோ அதனல் எங்கள் யக்ஞத்தை நிரப்பு: விசுவ மேன்மைகளை யடைந்தவளே! ஸுபகையே! நல்ல வீரனையும் நல்ல செல்வத்தையும் அளி. ௨ நானே அமாவாஸ்யை. எனக்கு என்னில் இச் சுகிருதர்கள் வசிக்கிறார்கள்: என்னில் தேவர்கள் ஸாத்தியர்களான இருவர்களும் ஸர்வர்களும் இந்திரன் என்னும் தலைவனுடன் ஒன்று சேர்ந்துள்ளார்கள். ௩ வஸு சேகரியாய் பொருள் பலம் புஷ்டியை யளிப்பவளாய் இரவு வந்துள்ளாள்; நாங்கள் அவியால் அமாவாசையை உபாசிப்போம்; அவள் பாலால் பலத்தைக் கறப்பவளாய் எங்களுக்கு வந்துள்ளாள். ௪ அமாவாசையே! உன்னைத் தவிர வேறு எவனும் எங்கும் சூழ்ந்து இந்த விசுவ ரூபங்களை சனனஞ் செய்யவில்லை. நாங்கள் எதை நினைத்து உனக்கு யக்ஞஞ் செய்கிறோமோ அது எங்களுக்காகுக; நாங்கள் செல்வங்களின் பதிகளாகவேண்டும். [எ. எ௯. ௧—௪]

௩௯௫ பூர்ணிமை [அதர்வணன்—பௌர்ணமாஸை பிரஜாபதி]

௧ பூரணம் பின்புறம், முன்புறமும் பூரணமாகும்: நடுவினின்று உதயமாகி பூரண சந்திரனை அவள் ஜயமாகியுள்ளாள்: அவர்களில் மேன்மையுடன் தேவர்களோடு ஒன்று வசித்து உயரிய நிலயத்தின் வரம்பில் நாங்கள் உணவோடியைந்து இன்பமுடனுகவேண்டும், ௨ நாங்கள் வலிய விருஷபமான பௌர்ண மாஸையை யஜிக்கிறோம்: அவள் எங்களுக்கு அழியாமலும் அகலாமலுள்ள செல்வத்தை எங்களுக் களிப்பாளாக. ௩ பிரஜாபதியே உன்னைத் தவிர வேறு எவனும் எங்கும்—சூழ்ந்து இந்த விசுவ வடிவங்களை சனனஞ் செய்யவில்லை: நாங்கள்

---

௩௯௪ கருத்து—அமாவாசை சனனஞ் செய்பவளாவாள்.

எதை விரும்பி உனக்கு யக்ஞஞ் செய்கிறோமோ, அது எங்களுக்காகுக: நாங்கள் செல்வபதிகளாகவேண்டும். ச இரவு பகல்களின் ஆழங்களில் பௌர்ணமியானவள் முதல் யக்ஞாருகமாயுள்ளாள்; யக்ஞாருகமானவளே! யக்ஞங்களால் உனக்கு விருத்தி செய்பவர்கள் உனது உயரியஉலகத்தில் நுழைந்துள்ளார்கள். [எ. அ௦.க—ச]

௩௧௬ சூரியனும் சந்திரனும் [அதர்வன்—ஸாவித்திரி, சூரிய சந்திரர்கள்]

க இவர்கள் இருவர் ஒருவர் பின் ஒருவராய் மாயையால் செல்வார்கள். விளையாடும் இருபாலர்கள் கடல் சுற்றிப் போவார்கள்; ஒருவன் எல்லாப் பொருள்களிலும் விசாலமாய் நோக்குவான். மற்றவனை நீ ருதுக்களை உற்பத்தி செய்து புதியதாய் புலனாகிறாய். உ பிறக்கும் நீ சதா புதியவனாயுள்ளாய்: தினங்களின் கொடியான நீ உஷைகளின் உச்சிக்குச் செல்லுகிறாய்: நீ வருங்கால் தேவர்களுக்கு அவர்களது பாகத்தை யளிக்கிறாய்: சந்திரனே நீ தீர்க்காயுளை நீளச் செய்கிறாய். ௩ நீ ஸோமதண்டு: சேனைகளுக்குப் பதி; அநூனம்[1] என்னும் பெயருள்ளவன்; முதற் காட்சியே குறைவில்லாதவனே! பிரஜையாலும் பொருளாலும் என்னைப் — பூரணஞ் — செய். ச நீ முதற் காட்சி: நீ காண்பதக் கருகன், நீ சர்வத்தின் முதல், நீ ஸர்வத்தின் அந்தன்: கோக்களில் குதிரைகளில் பிரஜையில், பசுக்களில், வீடுகளில், பொருளில் நான் ஸர்வ முதலாகவும், ஸர்வ அந்தனாகவும் ஆகவேண்டும். ரு எங்களை வெறுத்து நாங்கள் வெறுப்பவனது

1 குறைவற்றவன்.

௩௧௫ கருத்து—பூர்ணிமையில் பொருந்துவது பூரண வாழ்க்கை அடைவதாகும்.

பிராணனால் நீ பொங்கு. நாங்கள் கோக்களால், குதிரைகளால், பிரஜையால், பசுக்களால், வீடுகளால், செல்வத்தால் பொங்கவேண்டும். ௩ தேவர்கள் எந்த ஸோம இரஸத்தால்—வளர்கிறார்களோ, அழியாதவர்கள் அழியாத எதை அருந்துகின்றார்களோ, அதனால் இந்திரன், வருணன், பிருஹஸ்பதி, புவன கோபர்கள் எங்களை வளர்ப்பார்களாக. [எ. ௮௧. ௧—௩]

௩௧௭ அக்கினி [ஸம்பத்காம சௌனகன்—அக்கினி]

௧ போரில் பசுக்களுக்கு நற் பாவைப் பாடுங்கள்: எங்களில் பெருமையாகும் பொருள்களை யளியுங்கள்: தேவர்களுக்கு இந்த எங்களது யக்ஞத்தை நடத்திச் செல்லுங்கள்; நெய் தாரைகள் தேன் மிகுந்து பாய்க. ௨ நான் வர்சஸோடும் வலிமையோடும் க்ஷத்திரத்துடன் சேர்ந்து முதன்மையாய் அக்கினியை என்னில் கிரகிக்கிறேன்; என்னில் பிரஜையை என்னில் ஆயுளை தரிக்கிறேன் சுவாஹா! என்னில் அக்கினி! ௩ அக்கினியே! நீ இங்கு செல்வத்தைத் தாங்கு; பூர்வ சித்தங்களுள்ள கீழ் சாய்பவர்கள் உன்னை சாய்க்காமலாவார்களாக. அக்கினியே! உனக்கு க்ஷத்திரத்தில் நல்ல ஆட்சியாகுக: உனது ஆசிரயர் அனுதரவாகாமல் ஓங்குக. ௪ அக்கினி உஷைகளின் உச்சி யநுசரித்து நோக்கியுள்ளான்: ஜாதவேதஸன் முதன்மையானவன், தினங்களையு மநுஸரித்து—பார்த்துள்ளான். அவன் சூரியனை உஷைகளை யநுசரித்து இரசிமிகளைத் தொடர்ந்து சோதி புவியை யநுசரித்து நுழைந்துள்ளான். ௫ அக்கினி உஷைகளின் உச்சியைக் காண நோக்கியுள்ளான். முதன்மையான தினங்களையுங் காண நோக்கியுள்ளான், அவன் பல இடங்

---

௩௧௬ கருத்து—பூரணம் பற்றினல் பூரணமாகலாம்.

களில் சூரியனின் இரசிமிகளைக் காண நோக்கியுள்ளான், அவன் ஜோதி புவியைக் காண விசாலமாகியுள்ளான்.
ரு அக்கினியே! திவ்யமான நிலயத்தில் உனக்கு நெய் உண்டு, மநு இன்று நெய்யால் உன்னை எழுச்சியாக்குகிறான். உனது பந்துவான தேவிகள் உனக்கு நெய்யைக் கொண்டுவருக. அக்கினியே! பசுக்கள் உனக்கு நெய்யைக் கறந்திடுக. [எ. அ௨. க—ரு]

கூகூஅ வருணன் [சுனச்சேபன்—வருணன்]

க இராஜனான வருணனே! உனக்குச் சலங்களில் சொர்ண மயமான வீடு கட்டப்பட்டுள்ளது: நிலைவிரதரான் அங்கிருந்து எல்லா பந்தங்களையும் விடுதலை செய்க. ௨ வருணனே! இராஜனே! இங்கு எங்களை ஒவ்வொரு பந்தத்தினின்றும் விடுதலையாக்கு. வருணனே! என நாங்கள் சொல்லுங்கால் வருணனே! எங்களை விடுதலையாக்குங்கள். ௩ வருணனே! அதி உயரமாயுள்ள பாசத்தை எங்கிளிடமிருந்து நீக்கு: கீழான—பாசத்தையும்—நடு—பந்தத்தையும்—நீக்கு: ஆதித்தியனே! பிறகு உனது விரதத்தினால் அதிதிக்கு நாங்கள் குற்றமற்றவர்களாக வேண்டும். ச வருணனே! மேலும் கீழுமான வருணனுடைய எல்லாப் பாசங்களையும் எங்களிடமிருந்து நீக்கு: தீக்கனவையும் துன்பத்தையும் எங்களிடமிருந்து தூரமாக்கு. அப்பால் நாங்கள் சுகிருத உலகத்துக்குச் செல்லலாமோ? [எ. அ௩. க—ச.]

கூகூகூ அக்கினி [பிருகு—ஜாத வேத அக்கினி]

க அக்கினியே! ஜாதவேதஸனே! அழியாதவனே! விராடனே! க்ஷத்திரந் தாங்கும் நீ இங்கு எதிர்ப் பன்னி

---

கூகூஎ கருத்து—அனல் பற்று.
கூகூஅ கருத்து—வருணன் என்னும் அழிவால் அழிவு நீங்கு.

யில் ஒளி வீசு. மங்களச்—செயல்களால்—மானிட—முயற்சி—களால்—விசுவமான நோய்களை யெல்லாம் நீக்கி இன்று எங்கள் மனையை எங்கும் சுற்றிப் பாலனஞ் செய். உ இந்திரனே! மனிதர்களின் விருஷபனே! இனிய வீரம் வலிமைக்கு நீ விளங்கியுள்ளாய். நீ பகைமையான ஜனத்தைத் தூரமாக்கியுள்ளாய்; நீ தேவர்களுக்கு விரிந்த உலகத்தைச் செய்துள்ளாய். ௩ மலையில் நிலைத்து—எங்கும்—சுற்றும் பயங்கரமான மிருகம்போல் அதிதூரத்தினின்று அவன் இங்கே வருக. இந்திரனே! உனது வாளையும் கத்தியையும் கூர்மையாக்கி, கூரால் கேதங்களைக் கொன்று கயவர்களை ஈனமாக்கு. [எ. அ௪. க—௩]

௪00 தார்க்ஷியன் [ஸ்வஸ்தியயன காம அதர்வன்—தார்க்ஷியன்]

க நாங்கள் எங்கள் சுவஸ்திக்காக இந்த வலிமையாயும் தேவ துரிதமுமாய் திடனாய் இரதங்கள் ஆக்கிரமிப்பவனாயும் சமர் ஜயிப்பவனாய் வேகனாயும் தேயாத பரிதியுள்ளவனுமான தார்க்ஷியனை[1] யழைப்போம். [எ. அ௫. க.]

௪0க இந்திரன் [ஸ்வஸ்தியயன காம அதர்வன்—இந்திரன்]

க காக்கும் இந்திரனை துணைபுரியும் இந்திரனை, சூரனை இந்திரனை, ஒவ்வொரு அழைப்பிலும் சுலப அழைப்புடனாகுபவனை, அடிக்கடி யழைக்கப்படும் அதிபலமுள்ள இந்திரனை நான் இப்போதழைக்கிறேன்: மகவானிந்திரன் எங்களுக்குஞ் சுவஸ்தியைச் செய்வானாகை. [எ. அ௬. க.]

---

1 திடனை தலைவனை.

௩.௯௯ கருத்து—இந்திரன் தேவர்களுக்கு விரியும் உலகத்தைச் செய்துள்ளான்.

௪00 - ௪0க. கருத்து—இந்திரனால் சுவஸ்தியாகும்.

௪௦௨ ருத்திரன் [அதர்வன்—ருத்திரன்]

௧ அக்கினியிலுள்ள ருத்திரனுக்கும் சலங்களின் அகத்திலுள்ள ஔஷதி செடி கொடிகளில் நுழைந்து இவ்வெல்லாப் பொருள்களையும் உருவமாக்கும் ருத்திரனுக்கும் அக்கினிக்கும் வணக்கம். [௭. ௮௭. ௧]

௪௦௩ விஷம் நீக்கு [கருத்மான்—தட்சகன்]

௧ நீ சென்றுவிடு! நீ சத்துரு! நீ சத்துருதான். நீ விஷத்தில் விஷத்தைச் சேர்த்துள்ளாய்; நீ விஷத்தையே கலந்துள்ளாய்: நீ நேராக பாம்புக்குச் சென்றுவிடு. அதை நாசமாக்கு. [௭. ௮௮. ௧]

௪௦௪ அக்கினி [ஸிந்துத்வீபன்—அக்கினி]

௧ நான் திவ்யமான சலங்களை ஒன்று சேர்த்துள்ளேன்; நாங்கள் இரஸத்துடன் சேர்ந்துள்ளோம்; அக்கினியே! நான் பால் மிகுந்து வந்துள்ளேன்: என்னை இங்கு வர்சஸோடு சேர். ௨ அக்கினியே! வர்சஸோடு பிரஜையோடு பூரண ஆயுஸோடு என்னைச் சேர்; தேவர்கள் என்னை இப்படி யறிக, இந்திரன் ரிஷிகளுடன் இணைந்து அறிக. ௩ சலங்களே! இந்த இழுக்கு அழுக்கான இரண்டையும் துவேஷத்தில் நான் சொல்லிய அசத்தியத்தையும் நான் அச்சமற்றுச் செய்த சபதத்தையும் நீங்கள் நீக்கிச் செல்லுங்கள். ௪ நீ சமிதை; நான் செல்வமுடனாகவேண்டும்: நீ சமித்து நான் சர்வம் செழிக்க வேண்டும்; நீ தேஜஸ், என்னில் தேஜஸை யளி. [௭. ௮௯. ௧—௪]

---

௪௦௨. கருத்து—ருத்திரனே அக்கினியாவான்.

௪௦௩. கருத்து—விஷம் நீங்கு,

௪௦௪. கருத்து—என்னில் தேஜஸை அளி.

௪௦௫ பகை நீக்கு [அங்கிரஸன்—மந்திரோக்த தேவர்கள்]

க கொடியின் முடிபோலே பழையதநுசரித்து தாஸனது பலத்தை மடித்துவிடு உ நாங்கள் இந்திரனது உதவியுடன், அவனுடைய குவியும் இச்செல்வத்தை நமக்குள் பங்குசெய்துகொள்வோம்: நான் வருண விரதத்தால் உனது அங்கத்தின் ஆண்மையை அகற்றுகிறேன். ௩ தீம்பர்—திடம் நீங்கி ஸ்திரீகளின் நடுவே சக்திநீங்க நீ திடமாயும் திணிப்பதாயும் தூண்டுவதாயுமுள்ள அவனது மர்மாங்க வேகத்தைத் துணித்துவிடு; திண்ணமாயுள்ளதை நீ தணித்துவிடு [எ. கூ௦. க—௩]

௪௦௬ இந்திரன் [அதர்வன்—சந்திரமஸம்]

க நற்றுணைகளுடன் நற்றுணை புரிந்து நற்பிரியனாய் விசுவந்தரிக்கும் இந்திரன் நல்லுதவி செய்வானாக, அவன் துவேஷிகளைச் சாய்த்திடுக, அவன் எங்களுக்கு அபயத்தைச் செய்க, நாங்கள் சுவீரியத்தின் பதிகளாக வேண்டும். [எ. கூக. க]

௪௦௭ இந்திரன் [அதர்வன்—சந்திரமன்]

க நற்றுணை புரிந்து நல்லுதவி செய்யும் இந்த இந்திரன் துவேஷத்தை எங்களிடமிருந்து தனிமையாய்த் தூரம் செய்வானாக; யக்ஞாருகமான அவனது சுமதியில் மங்களமான சுமனத்தில் நாங்களாக வேண்டும் [எ. கூஉ.]

௪௦௮ இந்திரன் [பிருகுவங்கிரஸன்—இந்திரன்]

க நாங்கள் தடையன்னியில் விருத்திரர்களை துவம்ஸஞ் செய்பவர்களாகி சத்துரு செய்பவர்களை இந்திரனால் தாபத்துடன் ஜயிப்போமாக. [எ. கூ௩. க.]

---

௪௦௫ கருத்து—விபசாரனது வலிமை நீக்கு.

௪௦௬ - ௪௦௭ கருத்து—இந்திரனால் சுவீரியமும் சுமனமும் இலங்கும்.

௪௦௧ ஸோமன் [அதர்வன்—ஸோமன்]

௧ இந்திரன் சனங்களை ஒருமனத்துடன் முற்றும் எங்களுக்கே செய்ய நிலையான அவியால் நிலையான ஸோமனை நாங்கள் கைவசஞ் செய்கிறோம். [எ. ௯௪. ௧.]

௪௧௦ உச்சம்செல்லு [கபிஞ்சலன்—கிருந்திரர்கள்]

௧ அதி அழலாயும் அதி ஆதபமாயும், இருதயாழனலாயும் கரும் பழுப்பு கலக்கல்களுமான இரு கழுகுகள்[1] சோதிக்கு உச்சம் பறந்துள்ளன. ௨ நான் அவற்றை[2] களைப்புச் சாயும் பசுக்களைப்போல, குரைக்கும் நாய்களைப்போல பதுங்கும் ஓநாய்களைப்போல உயரெழச் செய்துள்ளேன். ௩ தாக்கும் இருவர் தள்ளும் இருவர் பரஸ்பர மோதிக்கொள்ளும்—இருவர்களைப்போல, நான் இங்கிருந்து சென்ற ஸ்திரீ—புருஷனது—நீர்—நாடியை நான் தடை[3] செய்கிறேன். [எ. ௯௫. ௧—௩]

௪௧௧ நீராசயம் [கபிஞ்சலன்—வயன்]

௧ பசுக்கள் தங்கள் ஸ்தானத்தில் அமர்ந்துள்ளன, பறவை தனது கூண்டுக்குப் பறந்துள்ளன. மலைகள் தங்கள் ஸ்தானத்தில் நின்றுள்ளன: நான் அவற்றின் நிலையில் இரு நீர் மூலாசயங்களை நிற்கச் செய்துள்ளேன். [எ. ௯௬. ௧]

௪௧௨ அக்கினி [யக்ஞாஸம்பூரண காம அதர்வன்—இந்திராக்கினி]

௧ இந்த யக்ஞம் நிகழுங்கால் இத்தினத்தினின்று, அறிஞனான அக்கினியே! உன்னை இங்கு நாங்கள் வரிக்

1 மனமும் ஆத்மாவும். 2 தேகம் மனத்தின் மாசுகளை. 3 நோய் நீக்கச் செய்யும் ஒரு செயல்.

௪௦௮ - ௪௦௧ கருத்து—இந்திரனுக்குப் பிரியமானது சோமன்.

௪௧௦ கருத்து—உச்சஞ்செல்லு.

௪௧௧ கருத்து—நீராசயம் நிர்மலமாருக.

கிறோம். வன்மையுள்ளவனே! நீ நிலையாய்ச் செல்லவும்; நீ நிலையான ஸோமயக்ஞத்தை யறிந்து யணுகவும். ௨ இந்திரனே! குதிரைகளுள்ளவனே! மனத்தால் பசுக்களால் கல்விமான்களால் சுவஸ்தியால் தேவஹிதமான பிரம்மத்தால் யக்ஞதேவர்களின் சுமதியால் சேர்ந்து எங்களை வகித்துச் செல். ௩ தேவனே! அக்கினியே! நீ அழைத்து வந்த ஆவலுள்ள தேவர்களை உனது நிலயத்திலேயே செலுத்து: வசுக்களே! புசித்து இனிய பானங்களைப் பருகி இம்மனிதனுக்குச் செல்வங்களை யளி. ௪ யக்ஞத்தில் என்னில் இன்பமாகி வந்துள்ள தேவர்களே! உங்களுக்கு சுகவழிகளுள்ள வீடுகளை நாங்கள் செய்துள்ளோம்; உங்களது வசுக்களை வகித்து சுமந்து வசுவான கருமத்தை யநுசரித்து ஜோதிக்கு ஏறுங்கள். ௫ யக்ஞமே! யக்ஞத்தையணுகு; யக்ஞபதியையணுகு; உனது மூலத்துக்கே செல்லு: ஸ்வாஹா! ௬ யக்ஞபதியே! இது உனது யக்ஞமாகும்; ஸூக்த மொழிகளால் தொடர்வதாகும்; ஸுவீரியத்தின் சேர்க்கை யுள்ளது: ஸுவாஹா! ௭ ஹுதங்களுக்கு வஷட்டு. அஹுதங்களுக்கு வஷட்டு. வழிகாணும் தேவர்களே! வழியைக்கண்டு வழியில் செல்லுங்கள். ௮ மனத்தின் பதியே! தேவர்களின் நடுவே ஜோதியில் எங்கள் இந்த யக்ஞத்தை வை: சுவாஹா! ஜோதியில் சுவாஹா! புவியில்—சுவாஹா! வானத்தில் சுவாஹா! வாதத்தில் நான் வைக்கவேண்டும் சுவாஹா! [௭. ௯௭. ௧—௮]

௪௧௩ தருப்பை [அதர்வன்—பாஷி]

௧ தருப்பை, அவியால், நெய்யால் இந்திரனுல் இணைந்து மருத்துக்களால் சேர்ந்து ஸர்வம் நனைந்துள்ளது. அது

---

௪௧௨ கருத்து—யக்ஞம்.

தேவர்கள் விசுவே தேவர்களால் ஸர்வம் நனைந்துள்ளது; அவி இந்திரனுக்குச் செல்க. சுவாஹா! [எ. கூஅ. க]

சுகச வேதி [அதர்வன்—மந்திரோக்த தேவதை]

க நீ எங்கும் விரி: வேதியைச் சுற்றி சூழ்ந்து அங்கு சாய்ந்துள்ள சகோதரியை சூறையாடாதே. ஹோதாவின் ஸ்தானம் மஞ்சளாயும் பொன்னாயுமுள்ளது. யஜமானது உலகத்திலுள்ள அவை ஆபரணங்களாகும். [எ. கூகூ. க]

சுகரு துச்சுவப்னம் [யமன்—துச்சுவப்ன நாசன தேவதை]

க நான் துச்சுவப்னத்தினின்று தீச்சுவப்னத்தினின்று தோல்வியினின்று திரும்புகிறேன். நான் பிரம்மத்தை அகக்—காப்பாய் செய்கிறேன்; சுவப்னத் தோற்றமுள்ள துன்பங்களை நான் தூரமாக்குகிறேன். [எ. கOO. க]

சுகசு யமன் [யமன்—சுவப்ன நாசனன்]

க கனவில் நான் புசிக்கும் உணவு காலையில் காண்ப தில்லை. அந்த சர்வமும் எனக்கு மங்களகரமாகுக; ஏனெனில் அது பகலில் காட்சியாவதில்லை. [எ. கOக. க]

சுகஎ சமனம் [பிரஜாபதி—ஜோதி புவி வானம் மிருத்யு தேவதைகள்]

க நான் ஜோதிக்கு புவிக்கு வானத்துக்கு மிருத்யுவுக்கு நமஸ்கரித்து நின்று நீர் சலனமாக்குவேன்: ஈசர்கள் என்னை இம்சிக்காம லாவார்களாக. [எ. கOஉ. க]

சுகஅ நிந்தை நீங்கு [பிரம்மன்—ஆத்மா]

க யக்ஞத்தை விரும்புபவனும் பூர்த்தி விரும்புபவனும் தேவர்களில் தீர்க்காயுளை யடைந்தும், திவ்யந் தேடும்

---

சுகங. கருத்து—கருப்பையான இருதய ஹிதை.

சுகச கருத்து—யக்ஞ ஸ்தானம்.

சுகரு—சுகசு கருத்து—கெட்ட கனவு நீங்கு.

சுகஎ கருத்து—சமனம்.

சிறப்புவாய்ந்தவனுமுள்ள எந்தக்ஷத்திரியன்இந்த நிந்தையான துரோகத்தினின்று எங்களை புறத்தில் நீக்குவான்? [எ. ௧0௩. ௧]

௪௧௧ எவன்? [பிரம்மன்—ஆத்மா]

௧ எவன் பிரகஸ்பதியோடு சிநேகம் சுவீகரித்து, அதர்வணனுக்கு வருணனால் யளிக்கப்பட்டதாயும், நித்திய கன்றுடன் நற்கறவையாயுள்ள சுந்தரப் பசுவை தன்னிஷ்டம்போல் சித்தி யாக்குவான்? [எ. ௧0௪. ௧]

௪௨0 ஆத்மா [அதர்வணன்—மந்திரோக்த ஆத்மா]

௧ மனித ஸம்பந்தமானத்தினின்று நீங்கி தேவமொழிகளை வரித்து உனது எல்லா நண்பர்களுடனும் நீ வழிகளைப் புலனுக்கவும். [எ. ௧0௫. ௧]

௪௨௧ அக்கினி [அதர்வணன்—அக்கினிவருணன் ஜாதவேதஸன்]

௧ அக்கினியே! நினைவின்மையில் நாங்கள் ஏதாவது செய்திருந்தாலும் எங்கள் நடத்தையில், ஜாதவேதஸனே! நாங்கள் எக்குற்றஞ் செய்திருந்தாலும் அதி அறிஞனே! அக்குற்றத்தினின்று எங்களைக் காப்புச் செய்; உனது நண்பர்களான எங்களுக்கு எங்கள் நன்மைக்கு அமுதமாகுக. [எ. ௧0௬. ௧]

௪௨௨ சூரியன் [பிருகு—சூரியன் ஆபன்]

௧ சூரியனின் ஏழு இரசிமிகள் சமுத்திரத்தின் தாரைகளான சலங்களைக் கொண்டுவரும்! இவை உனது துன்பத்தை விழச் செய்துள்ளது. [எ. ௧0௭. ௧]

---

௪௧அ கருத்து—க்ஷத்திரம் என்னும் சக்தி.

௪௧௧ கருத்து—அதர்வப்பசுவை நீங்களே அறியலாம்.

௪௨0 கருத்து—ஆத்மாவே நமக்குத்துணை.

௪௨௧ கருத்து—அமுதத்தால் நன்மையாகும்,

௪௨௨ கருத்து—சூரிய இரசிமிகள் நோய்களை நீக்கும்.

௪௨௩ அக்கினி [பிருகு—அக்கினி]

௧ அக்கினியே! எங்களை அறியும் நண்பனே அல்லது அறியாதவனே மறைந்தோ திறந்தோ எங்களை துன்பஞ் செய்தால் பல்லுள்ள அரணி அவர்களை எதிர்க்கச் செல்லட்டும், அக்கினியே! அவர்களுக்கு வீடும் பிரஜையுமில்லாமலாகட்டும். ௨ ஜாதவேதஸனே! தூக்கத்திலோ துயிலெழுச்சியிலோ, சலனத்திலோ அசலனத்திலோ எங்களை எதிர்ப்பவனை, வைசுவாநரன் என்னும் நண்பனுடன் சேர்ந்து ஜாதவேதஸனே! அவர்களை எதிர்த்து எரி. [எ. ௧0அ. ௧]

௪௨௪ விஜயம் [பாதராயணி—அக்கினி மந்திரோக்த தேவதைகள்]

௧ காய்களில் காயவசியனை கோர பழுப்புள்ளவனுக்கு நமஸ்காரம். நெய்யினால் கலியை[1] கற்பிக்கிறேன்! அவன் இப்படியுள்ள எங்களில் பிரியனுவானாக. ௨ அக்கினியே! நெய்யை அப்ஸரஸர்களுக்கு அனுவை[2] அட்சங்களுக்கு[3] மணலையும்[4] சலத்தையும் வகித்துச் செல்லு. தங்களுக்கான பாகமான அவியளிப்பை கிரகித்து இரு அவிகளிலும் தேவர்கள் இன்பமாகிறார்கள். ௩ அப்ஸரஸர்கள் கதிரவன் அவிதாரகனின் நடுவே அணையும் இன்பத்தில் ஆனந்தமாகிறார்கள். நெய்யினால் எங்கள் கைகளை அவர்கள் சேர்க அவர்கள், என்னை எதிர்த்து விளையாடுபவனை எனக்குக் கீழாக்குவார்களாக. ௪ எதிர்த்து விளையாடுபவனுக்குத் தீமையாகட்டும்; நெய்யால் எங்களில் நீ பொழி; இடியால் மரத்தைப்போல எங்களுக்கு மாறாய் விளையாடுபவனை நீ வதைபுரி.

---

1 அறிவை. 2 ஸ்நானத்தை. 3 இந்திரியங்களுக்கு.
4 ஆதரவை.
௪௨௩. கருத்து—அரி நீங்கு.

௫ எவன் இந்தச் செல்வத்தை விளையாடச் செய்துள்ளானோ, எவன் காய்களின் பற்றையும் பிரிவையும் செய்துள்ளானோ அந்த தேவன் எங்கள் இந்த யக்ஞத்தை சுவீகரித்திடுக. நாங்கள் அப்ஸரஸர்களுடன் இணையும் இன்பத்தில் இன்பமாகவேண்டும். ௬ சமான வசுக்களைப் பற்றியுள்ளவன்—இது உங்கள் நாமதேயம். ஏனெனில் காய்கள் உக்கிரக்காட்சி யுள்ளவை. இராஷ்டிரந் தாங்குபவை. இந்துக்களே![1] அப்படிப்பட்ட உங்களை நாங்கள் அவியுடன் துதிப்போம். நாங்கள் செல்வங்களின் பதிகளாகவேண்டும். ௭ பிரார்த்தித்து தேவர்களை நான் அழைக்குங்காலும், நாங்கள் பிரம்மசரியத்தில் வசிக்குங்காலும் ஒரு வேளை பழுப்பான காய்களை பற்றினாலும் அச் சந்தர்ப்பங்களிலே அவை எங்களுக்குப் பிரியமுள்ளவை யாகுக. [௭. ௧௦௯. ௧—௭]

௪௨௫ இந்திரன் அக்கினி [பிருகு—ஐந்திராக்னம்]

௧ அக்கினியே! இந்திரனுடன் சேர்ந்து, உங்கள் தாஸனுக்கு, தடையன்னியில் விருத்திரர்களைக் கொல்லுங்கள். ஏனெனில் நீங்கள் இருவர்களும் விருத்திர சம்காரத்தில் சிரேஷ்டர்கள். ௨ ஆதியில் எவர்களால் சுவர்க்கத்தை அவர்கள் பற்றினார்களோ, எவர்கள் எல்லா உலகங்களையுஞ் ஸ்தாபனஞ் செய்துள்ளார்களோ எவர்கள் விருஷபர்களோ வேகம் மிகுந்தவர்களோ வச்சிரக்கையுள்ளவர்களோ அந்த விருத்திர னழிக்கும் அக்கினி இந்திரனை நான் அழைக்கிறேன். ௩ திவ்யமான பிரகஸ்பதி கலசத்தால் உன்னை உபசரித்துள்ளான். இந்திரனே! ஸோமன் பொழியும் யஜமானனுக்கு தானங்களுடன் எங்களில் பிரவேசியுங்கள். [௭. ௧௧௦. ௧—௩]

---

1 திவலைகளே.

௪௨௪ கருத்து—சேனைகளால் ஜயமடையுங்கள்.

௪௨௫ கருத்து—இந்திராக்கினியை அழையுங்கள்.

௬௨௬ சோமகாண்டம் [பிரம்மன்—விருஷபன்]

௧ நீ இந்திரனின் குட்சி: ஸோமதாரி: நீ தேவர் மனிதர்களின் ஆத்மா; இங்குப் பிரஜையை ஜனன மாக்கு: உன்னிலுள்ளவை—பிரஜையும்—அந்நியத்தி லுள்ளவையும் உனக்கு இங்கு இரமித்திடுக. [எ. ௧௧௧. ௧]

௬௨௭ குள்ளம் [பிரம்மன் ஆப வருணன்]

௧ ஜோதியும் புவியும் சுந்தரமாயுள்ளவை: மகா விரதங் களின் அவை அருகில் இனிமை—அளிப்பவையாகும்; தேவிகளான ஏழு சலங்கள் பாய்ந்துள்ளன: அவை எங் களைத் துன்பத்தினின்று நீக்குக. ௨ சபதத்தினின்று வருவதையும், பிறகு வருணச் சேர்க்கையினின்று வருவ தையும் அப்பால் யமபாசத்தினின்று வருவதையும்தேவர் களுக்கு மாறான எல்லாக் குற்றத்தினின்றும் வருவதை யும் அவை எனக்கு விலக்குக. [எ. ௧௧௨. ௧—௨]

௬௨௮ சந்துருநாசம் [பார்கவன் - துஷ்டிகன்]

௧ கடுமையுள்ளவளே! கடுமைக் கொடியுள்ளவளே கடு மையுள்ளவளே வலிவும் வன்மையுமுள்ள அங்குள்ளவ னுக்கு நீ வெறுப்புடனுவாயாக, அவனைக் கண்டம் கண்ட மாக்கு. ௨ நீ கடுமையானவள்: நீ கடுமை: விஷமான நீ நஞ்சுள்ளவள்; விருஷபத்தால் மலட்டுப் பசுவைப்போல நீ—அவனுல்—விட்டுவிடுவதற்காவாய். [எ. ௧௧௩. ௧—௨]

௬௨௯ துன்பம் நீக்கு [பார்க்கவன் - அக்கினி ஷோமயம்]

௧ நான் உனது குடல்களினின்று எடுத்து விடுகிறேன்; நான் உனது இருதயத்தினின்று எடுத்துவிடுகிறேன்;

---

௬௨௬ கருத்து—சோமன் பற்று.

௬௨௭ கருத்து—குற்றம் நீங்கி வாழு.

௬௨௮ கருத்து—விஷம் விலக்கு,

உனது முகத்தின் தோற்றத்தினின்று உனது எல்லா வர்சஸையும் நீக்குகிறேன். ௨ கவலைகள் இங்கிருந்து செல்க; துக்கங்கள் செல்க; தீச்சொற்கள் செல்க; அக்கினி அரக்கிகளை யழித்திடுக: ஸோமன் நிந்திப்பவர்களை யொழித்திடுக. [எ. ௧௧௪. ௧—௨]

௪௩௦ பாவமழி [அதர்வாங்கிரஸன்—ஸாவித்திரம் ஜாதவேதஸம்]

௧ பாபி இலட்சுமியே! நீ இங்கிருந்து பறந்து விடு. நீ இங்கிருந்து நாசமாகவும். அங்கிருந்து பறந்து விடு. நாங்கள் இரும்புக் கொழுவியால் உன்னை எங்களை வெறுப்பவனில் நாட்டுகிறோம். ௨ மரத்தைக் கொடிபோல் என்னில் ஏறியுள்ள மகிழ்வுக்காகாத பறக்குஞ் இலட்சுமியை ஸவிதாவே! நீ பொன்கையுள்ளவ ளாகையால் எங்களுக்குப் பொருளையளித்து எங்களை விட வேறு எங்கோ வைத்துவிடு. ௩ மானிடனுக்கு தனது சனனத்துடன் சனனமாகி தேகத்துடன் சேர்ந்துள்ளவை ௧0௧ இலட்சுமி. இவற்றில் புன்மையாயுள்ளதை இங்கிருந்து நீக்குகிறோம், ஜாதவேதஸனே! எங்களுக்கு மங்கள மளிப்பவற்றைத் தா. ௪ பாழான—நிலத்தில்—இங்கு மங்குமாகும் பசுக்களைப்போல் இவற்றை அவற்றை நான் பிரித்துள்ளேன். புண்ணிய இலட்சுமிகள் இங்கு நின்றிடுக. புன்மையானவற்றை நான் பாழாக்கியுள்ளேன். [எ. ௧௧௫. ௧—௪]

௪௩௧ ஜ்வரம் [அதர்வாங்கிரஸன்—சந்திரன்]

௧ தாபத்துக்கு தூண்டுபவனுக்கு தள்ளுபவனுக்கு தீரனுக்கு நமஸ்காரம், சீதத்துக்கு, பூர்வகாமஞ் செய்பவனுக்கு நமஸ்காரம். ௨ ஒருநாள் விட்டு ஒரு நாள்,

௪௨௯ - ௪௩௦ கருத்து—இலட்சுமிபற்று.

இரண்டு நாள் விட்டு ஒரு முறை எதிர்க்கும் விரதமில்லாதவன் இந்த மண்டுகத்தை[1] எதிர்ப்பானாக. [எ. ௧௧௬. ௧]

௪௩௨ இந்திரன் [அதர்வாங்கிரஸன்—இந்திரன்]

௧ இந்திரனே! இனிய மயில்ரோம குதிரைகளுடன் வா. வேடர்கள் பறவையைப்போல் ஒருவனும் உன்னைத் தடுக்காமலாவானாக: தரிசைப்போல அவர்களைத்தாண்டு. [எ. ௧௧௭. ௧]

௪௩௩ தேவர்கள் [அதர்வாங்கிரஸன்—பஹுவ—உதய சந்திரன்]

௧ நான் கவசத்தால் உனது மர்மங்களை மூடுகிறேன். ஸோமன் அமுதத்தால் உன்னை, உடையணிக: வருணன் விரிவிலும் விரிந்த—விசாலத்தை—உனக்குச் செய்க: தேவர்கள் ஜயிக்கும் உன்னை அநுசரித்து இன்பமாவார்களாக. [எ. ௧௧௮. ௧]

ஏழாவது காண்டம் முற்றிற்று.

## ௪௩௪—௪௪௩

௪௩௪ தீர்க்காயுசு [பிரம்மன்—ஆயுசு]

௧ அந்தகனை மிருத்யுவுக்கு நமஸ்காரம். உங்கள் பிராணன் அபானங்கள் இங்கு இரமித்திடுக; இங்கு இந்த புருஷன் சீவனோடு சூரிய பாகத்தில் அமுத உலகத்தில், பொருந்துக. ௨ பகன் அவனை உயரமாய் கிரகித்துள்ளான்; இரஸம் மிகும் ஸோமன், அவனை உயரமாய்—கிரகித்துள்ளான், தேவ மருத்துக்கள் உயரமாய்—அவனை, இந்திரனும் அக்கினியும் சுவஸ்திக்காக அவனை உயரமாய்

1 அற்பப்பிராணியை.

௪௩௧ கருத்து—ஜுரம் நீங்கு.

௪௩௨ கருத்து—இந்திரனைப் பற்று.

௪௩௩ கருத்து—வீரனுக்குக் கவசம் அவசியம்.

கிரகித்துள்ளார்கள். ௩ இங்கு உனது சீவன், இங்கு பிராணன், இங்கு ஆயுசு, இங்கு உனது மனமாகுக: திவ்யமான வாக்கால் நிர்ருதியின் பாசங்களினின்றும் உன்னை நாங்கள் உயரச் சுமந்து செல்லுகிறோம். ௪ மிருத்யுவின் கட்டை யவிழ்த்துக்கொண்டு இங்கு எழுந்திரு. கீழ் விழாதே! சூரியனுடைய அக்கினியினுடைய நற்பார்வையினின்றும் இப்பாரினின்றும் பிரிந்து விடாதே. ௫ உனக்கு காற்றான மாதரிசுவன் வீசுக: சலங்கள் உனக்கு அமிருதங்களைப் பொழிக: சூரியன் உனது தேகத்துக்கு நன்மையைத் தாபனஞ் செய்க: மிருத்யு உனக்குத் தயை செய்க: நீ மரிக்காதே. ௬ புருஷனே! உயர்ந்து செல்வதே உன் வழி: தாழ்ந்து செல்லாதே: நான் உனக்கு நீண்ட வாழ்க்கையையும் வன்மையையுஞ் செய்கிறேன்: நீ, சுலபமோடும் இந்த அமுதமான இரதத்தில் ஏறு, அப்பால் நீ மூப்பிலும்—சபையிலே பிரசங்கஞ் செய்வாய். ௭ உனது மனம் அங்கு[1] போகற்க: அது பாழிலாகவேண்டாம்: சீவர்களைப் புறக்கணிக்காதே: பிதுருக்களை யநுசரிக்காதே. எல்லாத் தேவர்களும் உன்னை இங்கு காப்பார்களாக. ௮ தூரம் அழைத்துச் செல்லும், சென்றவர்களை மதிக்காதே[2]! இருளினின்றும் புறமேறி, ஜோதிக்கு வா; நாங்கள் உனது இருகைகளைப் பற்றுகிறோம். ௯ பிரேரிதமான வழி காக்கும் கருப்புப் புள்ளியுள்ள யமனது நாய்கள் உன்னைப் பற்றற்க; தயங்காதே: மனம் மாறி அங்கு நிற்காதே. ௧௦ நான் சொல்லும், நீ முன் சென்றிராத பயங்கரமாயுள்ள அந்த வழியை, நீ யநுசரிக்காதே: புருஷனே! நீ அந்த இருளுக்குச் செல்லாதே தூரத்தில் பயமுண்டு; இப்பக்கம் அபயமுண்டு ௧௧. சலங்

1 தீமையிலே. 2 இறந்தவர்களைக் குறித்து துக்கமாகாதே.

களின் நடுவே யுள்ள அக்கினி உன்னைக் காப் பானாக. மனிதர்கள் மூட்டும் அது உன்னைக் காத்திடுக; ஜாதவேதஸை வைசுவாநரர் உன்னைக் காப்பார்களாக. ஜோதியின் அனல்கள் மின்னலோடு உன்னை எரிக்காம லாகுக. ௧௨ மாமிசம் புசிக்கும் அனல் உனக்குச் சதி செய்யற்க; நாசஞ் செய்பவனின்றும் நீ தூரம் செல். ஜோதி உன்னைக்காப்பார்களாக, புவிகாக்க, சூரியனும் சந் திரனும் உன்னைக்காக்க, வானம் தேவாயுதத்தினின்றும் உன்னைக்காப்பானாக. ௧௩ அறிபவனும் அறிவிப்பவனும் உன்னைக் காக்க; உறக்கமில்லாதவனும் உறக்க சூனியனும் உன்னைக் காக்க, காப்பவனும் கண்காணிப்பவனும் உன் னைக்காப்பார்களாக. ௧௪ இவை உன்னைக்காக்கஇவை உன் னைத் தாங்க, இவற்றிற்கு வணக்கம் இவற்றிற்கு சுவாஹா! ௧௫ வாயு, இந்திரன், தாத்ரு, தாங்கும் ஸவிதா, உன்னை சீவர்களோடு வாழச் செய்க: உன்னைப் பலம் பிராணன் விடாமலாகுக. உனது சீவனை நான் அநுசரித்தழைக் கிறேன். ௧௬ தமன் எதிர்த்துத் தகர்ப்பவன் உன்னைத் தரிசிக்காமலாவானாக. நா முறுக்குபவன் உன்னைக் காணா மலாவானாக. அழியும் ஒருவனாக நீ எப்படி யாகலாம்? ஆதித்தியர்கள் உன்னை, உயரமாய் வசுக்கள் இந்திரனும் அக்கினியும் எனது சுவஸ்திக்கு உன்னை உயரமாய் வகித் துச் செல்வார்களாக. ௧௭ ஜோதி உன்னை உயரமாய் புவி உன்னை உயரமாய் பிரஜாபதி உன்னை உயரமாய் கிரகித்துள் ளார்கள். சோமனை இராஜாவாயடையும் ஔஷதங்கள் மிருத்யுவினின்றும் புறமாய் உன்னை உயரக் காத்திடுக. ௧௮ தேவர்களே! இவன்[1] இங்கே நிகழ்க; அவன் இங் கிருந்து தூரஞ் செல்லவேண்டாம். நாங்கள் ஆயிரம் வீரி யத்தால் அவனை மிருத்யுவினின்றும் உயர கடக்கச் செய்

[1] வீரன்

கிறோம். ௧௯ நான் உன்னை[1] மிருத்யுவினின்றும் நீக்கியுள்ளேன்; உறுதியளிப்பவர்கள் உன்னை ஒன்று ஊதுக; குளிந்தகேச நாரிகள், கடும் ஓலமிடுவோர்கள் உனக்குக் கதருமலாவார்களாக. ௨0 நான் கிரகித்துள்ளேன், நான் உன்னைக் கண்டுள்ளேன்; நீ மறுபடியும் புதியவனாய் வந்துள்ளாய், ஸர்வாங்கனே; நான் உனது சர்வமான கண்ணையும் சர்வமான ஆயுசையுங் கண்டுள்ளேன். ௨௧ சோதி உனக்கும் பிரகாசமாகியுள்ளது. அது உனக்கு ஜோதியாகி உள்ளது; உன்னிடமிருந்து இருள் நீங்கியுள்ளது. நாங்கள் உன்னிடமிருந்து மிருத்யுவையும் நிர்ருதியையும் தூரம் செய்துள்ளோம், யக்ஷ்மத்தையும் நீக்கியுள்ளோம் [அ. ௧. ௧—௨௧]

௪௩௫ ஆயுசு [பிரம்மன்—ஆயுர் தேவதை]

௧ நீ இந்த அமுத தாரையைப் பற்று. துண்டமாகத் தள்ளாத வயது உனக்காக நான் உனது சீவனை ஆயுசைத் திருப்பிக்கொண்டு வருகிறேன். இருள் இடத்துக்குச் செல்லாதே. இறக்காதே! ௨ சீவர்களின் ஜோதிக்கு நீ இங்கு வா. நான் உன்னை நூறு சரத்துக்களுக்குக் கிரகிக்கிறேன்: மிருத்யுவின் பாசங்களை, புன் மொழியை அடியோடு பிரித்து, உனக்கு இன்னம் அதி நீண்ட ஆயுசை யளிக்கிறேன். ௩ வாயுவினின்று நான் உன் பிராணனை சூரியனின்று உன் கண்ணைக் கண்டுள்ளேன், உன்னில் உனது மனத்தை தரிக்கிறேன்: உன் அங்கங்களோடு அமைய, நாவால் அசைத்துப் பேசு. ௪ புலனை அனலில் போல் இருகால் நான்கு கால் பிராணிகளின் பிராணத்தால் உன்னில் நான் நன்கு ஊதுகிறேன்; மிருத்

1 ஜீவனை

௪௩௪. கருத்து. மிருத்யு நீங்குங்கள்

யுவே! உனது கண்ணுக்கு நமஸ்காரம்; உனது பிராண னுக்கு நான் வணக்கஞ் செய்துள்ளேன். ௫ இவன் ஜீவிப்பானாக; இவன் சாகவேண்டாம்; நாங்கள் இவனை நன்கு பிரேரிக்கிறோம்; நான் இவனுக்குச் சிகிச்சையைச் செய்கிறேன்; மிருத்யுவே புருஷனை மாய்க்காதே. ௬ நான் இங்கு இன்னமினின்றும் இப்புருஷன் நீங்க சேதன மாயும் சேதஞ் செய்யாததாயும் இரட்சிப்பாயும், சக்தி யாயு முள்ள ஔஷதியான ஜீவந்தியை இங்கு அழைக் கிறேன். ௭ நீ இவனை ஆசிர்வதி, நீ இவனைப்பற்றாதே. இவனைப் புலனுக்கு; இவன் உன்னுடைய வனாகி இங்கு சர்வாயுசுடனுவானாக; பவனே! ஸர்வனே! பிரிய முடனாருங்கள்; சுகமளியுங்கள், துன்பம் தூரத்தி ஆயுசை யளியுங்கள். ௮ மிருத்யுவே! இப்புருஷனை ஆசிர்வதி; இவனுக்கு அனுகூலமாகுக; இவன் இங்கிருந்து மேல் போவானாக. இவன் இம்மையற்று சர்வாங்க மாகி நற்சுருதனாகி சரையில் நூறு சரத்தாகி தானே போகத்தைப் பற்றுவானாக. ௯ தேவர்களின் ஆயுதம் உன்னை நீங்க; நான் உன்னை இமத்தினின்று கடக்கச் செய்கின்றேன்; நான் உன்னை மிருத்யுவுக்குப் புற மாய் உயரக் கடத்தியுள்ளேன்: மாமிசம் புசிக்கும் அக்கி னியை வெகு தூரமாக்கி நீ ஜீவிக்க அரண் செய்துள்ளேன். ௰ மிருத்யுவே! எதிர்க்க முடியாத உனது இமத்தின் கீழ்ப் பாதையினின்று இந்தப் புருஷனைக் காத்து நாங்கள் பிரமத்தைக் கவசமாக செய்துள்ளோம். ௧௧ நான் உனக்கு பிராணனை, அபானனை, மூப்பு, மரிப்பை தீர்க்கா யுசை, ஸ்வஸ்தியைச் செய்கிறேன்: நான் வைவஸ்வத னால் அனுப்பப்பட்டு சலனமாகும் யமனுடைய எல்லா தூதர்களையுந் தூரத்துகிறேன். ௧௨ இருளைப்போல, நிர்ருதியை, அராதியை, கிராஹியை, மாமிசம் புசிக்கும்

பிசாசங்களை, எல்லாத் துர்ப்பூதத் தீம்மை நாங்கள் துலைக்கிறோம். ௧௩ நீ துன்பம் பற்றாமலிருக்க, நீ அமுதமுடன் சேர்ந்து அமுதமாக, அமுத அக்கினியினின்று நீண்ட ஆயுசுடனான ஜாதவேதசனின்று உனது பிராணனைப் பற்றுகிறேன்; உனக்குப் பயமளிக்க நான் உனக்கு 1 அதனைச் செய்கிறேன். ௧௪ செல்வமளித்து சித்தையில்லாமல் சிவமளிப்பவர்களாக ஜோதியும் புவியுமாகுக: சூரியன் உனக்கு சீலத்தைச் சுடுவானாக: வாயு உனது இருதயத்துக்கு வீசுவானாக: பால் மிகும் திவ்யமான சலங்கள் உனக்கு மங்களமாய் பாய்வானாக. ௧௫ எங்களுக்கு ஔஷதங்கள் மங்களகரமாகுக: அடியினின்று உயரமாய் முடிப் புவிக்கு உன்னை உதயமாக்கியுள்ளேன்; அங்கு சூரியனும் சந்திரனும் ஆதித்தியர்களும் உன்னைக் காப்பார்களாக. ௧௬ நீ அடையும் ஆவரண ஆடையையும், உனது உள் உடையையும் மங்களகரமாய் உன் தேகத்துக்கு நாங்கள் செய்கிறோம்: உன் பரிசத்துக்கு அவை மிருதுவாகுக. ௧௭ அதி கூர்மையும் விபத்துமான க்ஷுரத்தால் கேசங்களையும் கேசத்தையும் தாடியையும் நீக்கும் நீ, முகத்தை சுந்தரமாக்குங்கால், எங்கள் ஆயுசைத் திருடாதே. ௧௮ உனக்கு, யவமும் நெல்லும் மங்களகரம் செய்க: பலாசம் நீங்கி மங்களமளிப்பவையாகுக: இவை யக்ஷ்மத்தைத் துரத்தும்: இவை துன்பத்தினின்றும் நீக்கும். ௧௯ பாலே, உழவின் தானியத்தை எதை புசித்தாலும் எதைப் பருகினாலும் புசிப்பதும் புசிப்பதற்காகாத எந்த உணவையும், உனக்கு விஷசூனியமாய் நான் செய்துள்ளேன். ௨௦ நாங்கள் உன்னை இரவு பகலுக்கு ஒப்படைக்கிறோம்: இவனைப் புசிக்கத் தேடும் அராயர்களிடமிருந்து எனக்காக இவனைப் பால

1 பெரிய நிலையை

ஞ் செய். ௨௧ நாங்கள் உனக்கு நூறு ஆண்டுகள் பதி ஞயிர வருடங்கள் இரு யுகங்கள் மூன்று நான்கு—யுகங் கள்—செய்கிறோம், இந்திரனும் அக்கினியும் விசுவேதேவர் களும் உனக்கு வெறுப்பன்னியில் அநுகூலமாவார்க ளாக. ௨௨ சரத்துக்கு ஏமந்தத்துக்கு வசந்தத்துக்கு கிரீஷ்மத்துக்கு நாங்கள் உன்னை ஒப்படைக்கிறோம்; ஓஷதி கள் ஓங்கும் மழைகள் உனக்கு சுகமளிப்பவையாகுக. ௨௩ மிருத்யுவே இருகால் பிராணிகளின் ஈசன்; நான்கு கால் பிராணிகளின் ஈசனும் மிருத்யுவே; கோபதியான அந்த மிருத்யுவினின்றும் நான் உன்னை உயரமாக்குகிறேன். நீ பயப்படாதே. ௨௪ துன்பமாகாதவனே! நீ மரிக்கப்போவ தில்லை; நீ பயப்படாதே; மனிதர்—அங்கு மரிப்பதில்லை; அதோ தமசுக்குஞ் செல்வதில்லை. ௨௫ சீவர்களுக் கரணாய் இந்தப் பிரமம் செய்யப்படுமிடத்தில், பசு, குதிரை புரு ஷன் மிருகமான சர்வமும் வசிக்கின்றன. ௨௬ அது ஸமானர் ஸபந்துக்களிடமிருந்து சிதைச் சொல்லினின்று உன்னைக் காத்திடுக; நீ மரிக்காமல் அமுதனாய் அதி சீவ னுக, உனது பிராணங்கள், உனது காயத்தை பிரியாம லாகுக. ௨௭ தேவர்கள் உன்னை அக்கினி வைசுவாநரத் தினின்று, நூறும் ஒன்றுமான மிருத்யுக்களினின்று தாண்டுவதற்கான கேடுகளினின்று நீக்குவார்களாக. ௨௮ நீ அக்கினியின் காயம், காப்புச்சித்தன், நீ அரக் கனழிப்பவன், அரிமாய்ப்பவன், அப்படியே நோய் நீக்குபவன் சிகிச்சை செய்பவன் என்னும் நாமதாரி. [அ. ௨. ௧—௨அ]

௪௩.௬. பகைவர் நாசம் [சாதனம்—அக்கினி]

௧ நான் அரக்கனழிக்கும் ஆண்மையை அபிடேகம்

---

௪௩.௫. கருத்து. மிருத்யுவே சர்வ தேவனுவான்.

செய்கிறேன். நண்பனிடம் பெரிய சுகத்துக்காகச் செல்லுகிறேன்; அக்கினி கூர்மையாகி சங்கற்பங்களால் எழுந்துள்ளான். அவன் இரவும் பகலும் எங்களை கஷ்டத்தினின்று காப்பானாக. ௨ ஜாதவேதஸனே! இரும்பு தந்தங்களுள்ள நீ, சுடராகி உன் சுவாலையால், யாதுதானர்களைப் பரிசி. உன் நாவால் மதிகெட்ட தேவர்களைப் பற்று. மாமிசம் புசிப்பவர்களைப் பிளந்து உனது வாயில் அவர்களை அடைத்துவிடு. ௩ கூர்மையாயும் கொடுமையாயும் மேலுங்கீழுமான உனது தாடைகளிலுள்ள இரு தந்தங்களை பிரயோகி. அக்கினியே! வானத்திலே திரியும்யாது தானர்களை உன் பற்களால் நொறுக்கு. ௪ அக்கினியே! யாது தானனின் சர்மத்தைக் கீறு. இம்சிக்கும் மின்னல் அவனை சுவாலையால் மாய்த்து விடுக. ஜாதவேதஸனே! அவனது கணுக்களை நொறுக்கு. மாமிசம் விரும்பி மாமிசம் புசிப்பவன் அவனைத் துண்டம் துண்டம் செய்வானாக. ௫ ஜாதவேதஸனே! அக்கினியே! இப்போது யாதுதானன் நிற்பதை, நடப்பதை எங்கு கண்டாலும், அவன் வானத்தில் பறப்பதைப் பார்த்தாலும் கூரிய சரமுள்ள வில்லியாய் அவனை வதை செய். ௬ அக்கினியே! யக்ஞங்களால் உன் சரங்களை நேராக்கி, மொழியாலும் மின்னல்களாலும் அவற்றின் முனைகளை மெழுகி அவற்றால் யாது தானர்களின் இருதயத்தைப் மாய்த்து விடு: எதிர்க்கும் அவர்களின் கைகளைக் கண்டங் கண்டமாக்கு. ௭ ஜாதவேதஸனே! நீ பிடிபட்டவர்களைப் பற்று: வாட்களால் யாது தானர்கள் பற்றியவைகளை மீட்கவும்; அக்கினியே! அதி சுவாலையுடன் பூர்வமான நீ அவனை எரி, மாமிசம் புசிக்கும் பலநிற கழுகுகள் அவனைப் புசித்திடுக. ௮ அக்கினியே! இதைச் செய்யும் யாது தானனையும் தீமை புரியும் அவன்

எவனானாலுஞ் சரி அவனையும் நீ இங்கு அறிவி, இளைஞனே! நீ அவனை ஸமித்தால் பற்று: நரர் காப்பனின் கண்ணுக்கு நீ அவனைக் கீழாக்கு. ௯ அக்கினியே! கூரிய கண்ணால் நீ யக்ஞத்தைக் காவல் செய்: அறிஞனே! அதை வசுக்களுக்கு முன் எடுத்துச் செல். நரர் காப்பவனே! இம்ஸிக்கும் அரக்கர்களை எரிக்கும் உன்னை, யாது தானர்கள் இன்னல் செய்யாமலாவார்களாக. ௧௦ நரர் காப்பான நீ, சனத்தின் நடுவே அரக்கனுக்கு எங்கும் நோக்கு; அவனது மூன்று முனைகளை நீ மாய்த்து விடு; அக்கினியே! சுடரால் அவனது என்புகளை எரி; யாதுதானனின் மும்மூலத்தை துண்டமாக்கு. ௧௧ சருதத்தால் ருதமழிக்கும் யாது தானன் உன் பந்தத்தில் மும்முறை வருக: ஜாதவேதஸனே! உனது சுவாலையால் அவனில் கோஷஞ்செய்து காயகனின் கண்களுக்கு முன் அவனைச் சாய்த்துவிடு. ௧௨ அக்கினியே! எந்தவன் சொற்களை தம்பதிகள் சொல்லுகிறார்களோ, காயகர் கோஷிக்கும் எச்சொற்கொடுமை யுண்டோ, மனக் கோபத்தால் குணமாகும் எக்கணையுண்டோ, இந்த அனைத்தாலும்—யாது தானர்களின் இருதயத்தில் துளைத்துவிடு. ௧௩ யாது தானர்களை சூட்டால் சுட்டுவிடு: அக்கினியே! அவர்களை சுவாலையால் சாம்பலாக்கு: கொழுந்தால் மதிகெட்ட தேவர்களை யொழி: சீவர்களைப் புசிக்கும் பெரிய தகனர்களை எரி. ௧௪ இன்று தேவர்கள் தீயோனைத் துலைப்பார்களாக; அவன் கூரிய சாபங்கள் அவனுக்கேத் திரும்பிச்செல்க: சொல்லால் சோரஞ் செய்பவனை, சரங்கள், மருமங்களில் சேதித்திடுக: யாது தானன் விசுவபந்தத்திலாவானாக. ௧௫ அக்கினியே! மனிதர் மாமிசத்தாலும் குதிரை பசுவின் மாமிசத்தாலும் தன்னை பூசிக்கொள்ளும், இம்சிக்கப்படாத

பசுவின் பாலை வகித்துச் செல்லும் யாது தானர்களின்
சிரங்களைச் சுடரலால் சேதித்துவிடு. ௧௬ யாது தானர்
கள் பசுக்களின் விஷத்தை எடுத்துச் செல்வார்களாக:
அதிதி தீயோர்களைத் தள்ளுவார்களாக: தேவ ஸவிதா
அவர்களைக் கைவிடுவார்களாக: அவர்கள் ஔஷதி
களின் பாகத்தை இழப்பார்களாக. ௧௭ சீசுப்புப் பசு
வின்—பால் வருஷந்தோறுமாகும். நரர் காப்பவனே!
யாது தானன் அதைச் சுவைக்காமலாவானாக: அக்
கினியே! அவர்களில் எவனும் சீம்பாலைப் பருக விரும்பி
னால் நீ உனது சுடரால் அவனது மர்மங்களைச் சேதி.
௧௮ அக்கினியே! நீ புராதனத்தினின்று யாது தானர்
களைக் கொல்லுகிறாய்: அரக்கர்கள் அமர்களில் உன்னை
அடக்க முடியவில்லை; மாமிசம் புசிப்பவர்களை மதி
கெட்டவர்களோடு எரித்துவிடு: அவர்கள் உனது
திவ்ய சரத்தினின்று நீங்கவேண்டாம். ௧௯ அக்
கினியே! கீழ் மேல் பின் முன்—பக்கங்களிலிருந்து
எங்களைக் காப்பாயாக: அஜரமாய் அதிதாபமாய்
அதி துக்கமளிப்பதாயுள்ள உனது சுவாலைகள்
தீயோனை எரித்து விடுக. ௨௦ அக்கினியே! பின் முன்
கீழ் மேல்—பக்கங்களினின்று—காவ்யத்தினால் கவியான
நீ எங்களை எங்குங் காத்திடுக: மூப்புக்கு நண்பனை, அழி
யாத நண்பனைப் பாலனஞ் செய். மரிப்பில்லாத நீ
மானிடர்களான எங்களைப் பாலனஞ் செய். ௨௧ அக்
கினியே! குரம் பிளக்கும் யாது தானர்களைக் காணும்
கண்ணை கானஞ் செய்பவனில் வை, அதர்வனைப்போல
திவ்ய ஜோதியால் சத்தியத்தைச் சேதஞ் செய்யும் சித்த
குனியனைச் சுட்டுவிடு. ௨௨ அக்கினியே! விப்பிரனையும்
வலிமையாயுமுள்ள உன்னை தினந்தோறும் தீரவிரமுடன்
தகர்ப்பவனைத் தாக்கும் உன்னை அரண்போல் எங்களைக்

சுற்றிலுமாக்குகிறோம். ௨௩ அக்கினியே! கூரிய சொலிப்புடன் சுடர்கொழுந்து சுவாலைகளால் நாசஞ் செய்யும் இராட்சதர்களை விஷத்தால் வதை செய். ௨௪ அக்கினி பெருஞ் ஜோதியால் பிரகாசிக்கிறான்; அவன்—தனது—மகிமையால் எல்லாப்—பொருள்களை யும் புலனாக்குகிறான். அவன் தீமை தோயும் அதேவமான மாயைகளை தூரமாக்குகிறான். அவன் அரக்கர்களைக் கொல்ல தனது இரு கொம்புகளைக் கூர்மையாக்குகிறான். ௨௫ ஜாதவேதஸனே! அழியாதனவாயும் கூறிய ஆயுதங்களாயும் பிரமத்தால் நுண்ணியங்களாயும் நீ அடைந்துள்ள இரு கொம்புகளால், உனது—கனல்—கொழுந்தால் முன்னிடும் கிமீதினனை, எதிர்க்கும் பகைவனைக் கொல்லு. ௨௬ நாசமற்றவனாய் ஜோதியாய் சுத்தஞ் செய்பவனாய், துதிக்கருகனாயுள்ள அக்கினி அரக்கர்களை யழிக்கிறான். [அ. ௩. ௧—௨௬]

௪௩௭. சத்துரு சம்ஹாரம் [சாதனன்—இந்திரஸோமன்]

௧ இந்திரஸோமனே! அரக்கனை எரித்து விடுங்கள். அவனை ஒழியுங்கள்: விருஷபர்களே! தமத்தில் வளரும் நீங்கள் அவனைக் கீழாக்குங்கள்: அசித்தர்களைச் சுட்டுச் சிதறடியுங்கள்: தின்பவர்களைத் துலைத்து அழுத்தி அழுத்துங்கள். ௨ இந்திரஸோமனே! கேட்டைக் கேடு செய்பவனைச் சூழுங்கள். கொதிகுடம்போல் அனைவர்களை யும் கனல் கொதிப்பிக்கட்டும்: பிரமத்துவேஷியாய் மாமிசம் புசிப்பவனாய் கோரக் கண்ணுள்ள கிமீதினனில் நித்தியத் துவேஷத்தை யளியுங்கள். ௩ இந்திரஸோமனே! துட்டர்களை அவர்கள் ஒளிந்துள்ள நிலயத்திலேயே வதைபுரியுங்கள். அவர்களில் எவனும் அங்கிருந்து

௪௩௬. கருத்து. அரக்கரழிப்பது அறமாகும்

நீங்காமலிருக்க அவர்களைத் தாங்கமுடியாத தமத்தில் வீழ்த்துங்கள். உங்களுடைய அப்பெருஞ்—சக்தி ஜயிப்ப தர்க்காகச் சிற்றமுடன் நிகழ்க. ௪ இந்திரஸோமனே! ஜோதியினின்று சேதத்தை, புவியினின்று சிதைவை செறுனர்களில் தூண்டுங்கள். ஒங்கும் அரக்கனை எரிக் கும் முழக்கத்தை மலைகளினின்று முழங்குங்கள். ௫ இந் திரஸோமனே! அதை ஜோதியினின்று விழச் செய்யுங் கள். அனல் தாபமாகி அயர்துலைத்து அழியா அழலா யுதங்களால் ஆழத்தில் அரிகளை யழுத்துங்கள். அவர்கள் அமைதியாவார்களாக. ௬ இந்திரஸோமனே! இரு திட குதிரைகளைச் சுற்றுக்—கட்டு—போல இந்த நினைவு உங்களைச் சூழ்க. நான் அறிவால் அசைவித்து பிரேரிக் கும் இந்தப் பிரமங்களை நரர் பதிகள்போலப் பொலிவு செய் யுங்கள். ௭ உங்கள் ஊக்கங்களுடன் ஊன்றுங்கள்; ஒழிக்கும் கசடர்களான கொடும் பாவிகளைக் கொல்லுங் கள்: இந்திரனே ஸோமனே எக்காலத்திலும் என்னைக் கவலை செய்யும் கயவன் சுகசூனியனுவானுக. ௮ இந்தி ரனே! நற்சித்தஞ் செல்லும் என்னை அசத்திய சொற்க ளால் ஏசும் அசத்தியன், கைப்பிடியில் பற்றிய சலங் களைப்போல், அசத்துவமாவானுக. ௯ சீலனை சஞ்சலஞ் செய்பவர்களை, சீருள்ளவனை, சுவதாக்களால் சிறுமை செய்பவர்களை ஸோமன் சருப்பத்துக் களிப்பா னுக: அல்லது நிர்ருதியின் வசத்தில் நாட்டுவானுக. ௧௦ அக்கினியே! எங்கள் பானம், பரி, பசு காயம் குதிரைகளின் இரஸத்தைத் துன்பஞ் செய்ய விரும்பும் அந்தப் பகைவன், திருடன் திருடுபவன், துன்பஞ் செல் வார்களாக: அவன் தன் சந்ததியோடு தாழ்வானுக. ௧௧ அவன் தன் சந்ததியுடன் தூரஞ் செல்வானுக; அவன் எல்லா மூன்று புவிகளின் கீழ்போவானுக; எவன் தினத்தி

னும் இரவிலும் என்னைத் துன்பஞ்செய்ய விரும்புகிருனே; தேவர்களே! அவனது கீர்த்தி காய்க. ௧௨ சத்தியம் அசத்தியங்களை அறிஞன் சுலபமாய்க் காண்கிருன். அவை பரஸ்பரம் மாறுகும். அவற்றில் எது நிசமாயும் அதி ஹிதமாயுமுள்ளதோ அதற்குச் ஸோமன் துணைபுரிகிருன். அவன் அசத்தியத்தை யழிக்கிருன். ௧௩ ஸோமன் அசத்தியந்—தாங்கும் க்ஷத்திரியனையும் சிறுமை செய்பவனையும் விருத்தியாக்குவதில்லை. அவன் அரக்கனை அழிக்கிருன்; அவன் அசத்தியம் மொழிபவனை ஒழிக்கிருன்; இருவர்களும் இந்திரனுடைய பந்தத்தில் சாய்கிருர்கள். ௧௪ அக்கினியே! நான் அசத்திய தேவர்களை நாடினுலும், நான் பயனற்ற தேவர்களை நினைத்தாலும் நீ எங்களுடன் ஏன் கோபமாக வேண்டும். ஜாதவேதஸனே! உன்னைப்பற்றி அவச்சொல் சொல்பவர்கள் அவதியை யடைவார்களாக. ௧௫ நான் மானிடனுடைய ஆயுளை எரித்திருந்தாலும், நான் யாதுதானனுனுலும் நான் இன்று மரிப்பேனுக: 'நீ யாது தானன்' என என்னை அகாரணமாய் சொல்லுபவன் பத்து வீரர்களினின்று நீங்குவானுக. ௧௬ துன்பஞ் செய்யாமலுள்ள என்னை 'நீ யாது தானன்' எனச் சொல்லுபவனை, நான் சுத்தன் எனச் சொல்லும் சிதைவுள்ளவனையும், இந்திரன் அதி கோரமான ஆயுதத்தால் அழிப்பானுக; அவன் ஒவ்வொரு பிராணியின் கீழ்ச் செல்வானுக. ௧௭ பதுங்கும் பகையாளை ஆந்தை போல் இருளில் சுற்றும் அவள் அந்தமில்லாத பள்ளத்தில் வீழ்க: சிலைகள் சத்தங்களால் அரக்கர்களைக் கொல்க. ௧௮ மருத்துக்களே! நீங்கள் சனத்தில் இங்குமங்குமாகுங்கள்: பறவைகளாகி இராக்

காலங்களில் பறந்து தேவயக்ஞத்தில் தூசுகள் வீசியுள்ள இராக்கதர்களைத் தேடுங்கள் பிடியுங்கள்: நொருக்குங்கள். ௧௯ இந்திரா! சோதியினின்றும் சிலையை விழச்செய். மகவா! ஸோமனால் கூர்மையான அதை நீ அதி கூர்மையாக்கு; நீ முன்புறத்தினின்றும் தூரத்தினின்றும் கீழ்ப்புறம் மேற்புறத்தினின்றும் இராக்கதர்களை மலையால் மாய்த்துவிடு. ௨௦ இங்கு நாய்களும் அரக்கர்களும் பறக்கிறார்கள்: துன்பம் நாடும் அவர்கள் துன்பஞ்செய்ய அதிதிடனான இந்திரனைத் தேடுகிறார்கள்; பலமுள்ளவன் தனது பயங்ராயுதத்தை வஞ்சகர்களுக்காகத் தீட்டுகிறான்; அவன் துன்பஞ் செய்பவர்மீது இப்போது வச்சிராயுதத்தை வீசுவானாக. ௨௧ இந்திரன், யக்ஞங்கலைப்பவர்களாயும், எதிர்த்துப் போர்புரிபவர்களாயுமுள்ள யாதுக்களை யழிப்பவனாயுள்ளான்: சக்தி வாய்ந்தவன் கோடாரி மரங்களைப் பிளப்பதுபோல், அரக்கர்களை மண்பாண்டம்போல் சின்னாபின்னஞ் செய்வானாக. ௨௨ இந்திரா! ஆந்தை யரக்கனை, குஞ்சர அரக்கனை நாய் அரக்கனை, குயில் அரக்கனை கருடனரக்கனை கழுகு அரக்கனை கல்லால்—மண்பாண்டம்போல—கொன்றுவிடு. ௨௩ துன்பஞ்செய்யுமரக்கன் எங்களையணுகற்க: கிமீதின தம்பதிகள் தூரமாவார்களாக: புவியின் துன்பத்தினின்று பூமி எங்களைக் காத்திடுக: வானம் சோதியின் — துன்பத்தினின்றும் — எங்களைக் காத்திடுக. ௨௪ இந்திரா! மாயையால் தோன்றும் ஆண் பெண் அரக்கர்களை நீ அழி: கண்டமில்லாத பொய் தேவர்கள் நீங்குவார்களாக: அவர்கள் உச்சமேறும் சூரியனைக் காணமலாவார்களாக. ௨௫ நீ எதிர்ப்புறம் பார்: விரிந்து பார்; ஸோமா! இந்திரா! விழித்திருங்கள்: அரக்கர்மீது ஆயுதத்தை,

இராக்கதர் மேல் வச்சிராயுதத்தை எறியுங்கள். [அ. ௪. ௧—௨௫]

௪௩அ. மணிபூஷணம் [சுக்கிரன்—கிருத்யா தூஷணமுத மந்திரோக்த தேவதைகள்]

௧ இந்த வீரமான மணி பூஷணம் வீரனில் கட்டப்பட்டுள்ளது. இது எதிரியை ஜயிப்பதாயும், வீரமாயும், சூரதீரமாயும் அதிக சுமங்கள இரட்சகமாயுமுள்ளது. ௨ பகைமை ஜயித்து, சுவீரங்களுடன் சக்தி வாய்ந்து பலம் மிகுந்து உக்கிரமாய் ஆக்கிரமிக்கும் வீரமான இந்த மணி, துட்டச் செயல்களை நிந்தித்து—அவற்றை—எதிர்க்கும். ௩ இந்திரன் இந்த மணியால் விருத்திரனைக் கொன்றான்: நிறை நினைவுள்ள அவன் இதனால் அசுரர்களை அழித்தான்: அவன் இதனால் இங்குள்ள ஜோதியையும் புவியையும் ஜயித்தான்: அவன் இதனால் நான்கு திசைகளையும் ஜயித்தான். ௪ பலம் மிகுந்து பகை நீக்கி வசப்படுத்தும் பூஷணமான இந்த ஸ்ராக்தியமணி எங்களை எங்கும் காத்திடுக. ௫ இதை அக்கினி சொல்லுகிறான், இதை ஸோமனும் சொல்லுகிறான், இதை ஸவிதா இந்திரன், பிரகஸ்பதி சொல்லுகிறார்கள்: எனது புரோஹிதர்களான இந்த தேவர்கள் பூஷணங்களால்—புன்—செயல்களை புறமாக்குவார்களாக. ௬ நான் ஜோதி புவியை நடுவில் வைத்துள்ளேன், தினத்தையும் சூரியனையும்—இடையில் வைத்துள்ளேன்: எனது புரோகிதர்களான இந்த தேவர்கள் பூஷணங்களால்—புன்—செயல்களை பின் நீக்குவார்களாக. ௭ காப்புக்களாக ஸ்ராக்திய மணியை செய்துகொள்பவர், ஜோதியில் சூரியனைப்

---

௪௩அ. கருத்து. துன்பஞ் செய்யுமரக்கன் எங்களை யணுகாமலாவாகை.

போல்—துற்—செயல்களை வசியஞ் செய்து தூரத்துகிறார்கள். ௮ நான், நினைவுமிருந்த ரிஷியைப்போல சிராக்திய மணியால் எல்லா சமர் செய்பவர்களையும் ஜயித்துள்ளேன்: நான் அரக்கர்களையும் அவதி செய்பவர்களையும் அழிக்கிறேன். ௯ ஆங்கிரஸர்களின்—அவச்—செயல்கள், அசுரர்களின்—அவச்—செயல்கள், தானாகச்செய்துகொள்ளும்—தீச்—செயல்கள், அந்நியர்கள் கொண்டுவரும்—அவச்—செயல்கள்—தொண்ணூறு நதிகளுக்கப்பால் தூரஞ் சென்று விடுக. ௧0 இம் மனிதனில் தேவர்களான் இந்திரன், விஷ்ணு, ஸவிதா ருத்திரன், அக்கினி, பிரஜாபதி, பரமேஷ்டினன், விராஜன் வைசுவாநரன், சகல ரிஷிகள், காப்பாக மணியைக் கட்டுவார்களாக. ௧௧ சலனச் சந்துக்களில் காளையைப் போல, வனப் பிராணிகளில் புலிபோல, நீ ஒளஷதிகளில் உத்தமன்: அருகில் காத்துள்ள, தேடும் அவனை, நாங்கள் கண்டுள்ளோம். ௧௨ இந்த மணியை தரிப்பவன் புலியாகிறான், சிங்கமாகிறான், விருஷபமாகிறான், பகைமை யழிப்பவனுகிறான். ௧௩ அவனை அப்ஸரசர்கள் அழிப்பதில்லை, கந்தர்வர்களும் மனிதர்களும் அழிப்பதில்லை: இந்த மணியை தரிப்பவன் எல்லாத் திசைகளிலும் தலைமை யரசு புரிகிறான். ௧௪ கசியபன் உன்னை உண்டுபண்ணினுன்; கசியபன் உன்னை ஒன்று சேர்த்தான்; இந்திரன் உன்னை மானிடர்—நடுவே தரித்தான்; உன்னை தரித்து அவன் சமரில் ஜயித்தான். தேவர்கள் தங்கள் துணையாக ஆயிரம் வீரியமுள்ள மணியைச் செய்தார்கள். ௧௫ இந்திரா! நூறு சந்திகளுள்ள வச்சிராயுதத்தால் துற்செயல்களால், தீட்சைகளால் யக்ஞங்களால் உன்னை வதைக்க விரும்புபவனை வீழ்த்து. ௧௬ சூழ்ந்து சக்திவாய்ந்து எல்லாஞ் ஜயிக்கும் சுமங்களக் காப்பான இம்மணி எங்க

ளது பிரஜையையும் பொருளையுங் காத்திடுக. ௧எ இந்திரா! எங்களுக்குக் கீழ்புறம் எதிரி சூனியர்களாக: மேற்புறம் எதிரி சூனியர்களாக: பின்புறம் எதிரி சூனியர்களாக; வீரனே! எங்கள் முன் ஜோதியைச் செய். ௧அ எனக்கு ஜோதியும் புவியும் துணைபுரிக, தினம் துணையைச் சூரியன் துணையை இந்திரனும் அக்கினியும் எனக்குத் துணையைச் செய்க, தாத்ரு எனக்குத் துணையைச் செய்க. ௧௯ பயங்கரமான இந்திராக்கினியின் வெகு பல காப்பை தேவர்கள் எல்லாங் குவிந்தும் தாக்க இயலாது. அது பெரியதாகையால், நான் மூப்பனாகி தீர்க்காயுசுடனாக அது எனது காயத்தை எங்குங் காப்பதாகுக. ௨0 நான் பெருந் துன்பம் நீங்க தேவமணி என்னை ஏறியுள்ளது, திடத்துக்காக காயங்காத்து முத்துணையாகும் இந்த தண்டத்தில் உட்படுங்கள். ௨௧ இந்திரன் இதில் ஆண்மையை நாட்டுவானாக, நூறு சரத்துக்களின் தீர்க்காயுசுக்கு நீங்கள் ஒன்று சேர்ந்து அவன் மூப்பனாகி தீர்க்காயுசுடனாக உட்செல்லுங்கள். ௨௨ சுவஸ்தியளிக்கும் இந்திரன் ஜனபதியாவான் விருத்திர சம்காரன், எதிரி நீக்கும் வசியன். ஜயிக்கும் ஜயிக்கப்படாமலுள்ள அவன் ஸோமபானம் பருகுபவன், அபயம் செய்யும் விருஷபனான அவன் உனக்கு இந்த மணியைக் கட்டுவானாக. இரவும் பகலும் எல்லாப் பக்கங்களிலும் உன்னை அவன் எங்குங் காப்பானாக. [அ. ௫. ௧—௨௨.]

௪௩௯. கருப்பதோஷம் [மாத்ருநாமன்—மாத்ருநாமை—மந்திரோக்த் தேவதைகள்.]

௧ தோன்றுங்கால் உனக்குத் தாயானவள் சுத்தஞ் செய்த புருஷர் நாடுவதான இரு—ஸ்தனங்களை—துர்

---

௪௩அ, கருத்து, வீரசுபாவமே பூஷணமணி

நாமமுள்ள அலிம்சமும் *வத்ஸபமும் விரும்பாமலாவார்களாக. ௨ பலாலம்[1] அனுபலாலம்[2] சர்க்கும்[3] கோகம்[4] மலிம்லுசம்[5] பலீசகம்[6] ஆசிரேஷம்[7] வவிராஸம்[8] ரிக்ஷக்கிரீவம்[9] பிரமீலினம்[10]. ௩ நீ[11] அணுகாதே நீ நகராதே. ஊருக்களின் நடுவே நீ நகராதே. நான் அவளுக்கு துர்நாமமழிக்கும் பஜத்தை ஔஷதமாகச் செய்கிறேன். ௪ துர்நாமமும் சுநாமமுமான இருவர்—அவளை—அணுக நாடுகிறார், நாங்கள் அராய்யானர்களை[12] துரத்துகிறோம்; சுநாம ஸ்திரீ—ஸம்பந்தத்தைத்—தேடுவாளாக. ௫ நாங்கள் அவளது மூலஸ்தானம் நிதம்பத்தினின்று கருமையும் ரோமமுமான அசுரன், ஸ்தம்பஜன், துண்டிகர்களான அராய்யர்களை யழிக்கிறோம். ௬ மஞ்சள் நிற பஜமானது,[13] முகர்ந்து உணர்ந்து அதிசுவைத்து மாமிசம் புசிக்கும் நாய் கிஷ்கிணமான, அராயர்களை மறையச் செய்துள்ளது. ௭ சகோதரனைப் போலும், தந்தையைப்போலுமாகி தூக்கத்தில் உன்னுடன் எவன் சாய்கிறானோ—அந்த—அலிரூபமான பெண் தன்மையுள்ளவர்களை இங்கிருந்து, பஜம், துரத்துக. ௮ நீ தூங்குங்கால் உன்னை நடுங்கச் செய்பவனையும் விழிக்குங்கால் உன்னைத் துன்பஞ்செய்ய நினைப்பவனையும் சூழும் சூரியன் நிழலைப்போல் இவை மறையச் செய்துள்ளன. ௯ பாலனை விழச்செய்து அகாலப் பிரசவம் செய்யக் காரணமாகுபவனை, அவளைநாடி நழுவியோடும் சத்துருவை, ஓஷதியே நீ நீக்கு. ௧௦ ஓஷதியே! மாலையில்

---

* தீங்குகள்.

1 வைக்கோலரக்கன் 2 வைக்கோலரக்கனை யநுசரிப்பவன் 3 இம்சிப்பவன் 4 குயில் 5 கள்வன் 6 பலிதன் 7 உஷ்ணன் 8 ரூபமழிப்பவன் 9 கரடிக்கழுத்தன் 10 இமைப்பவன். 11 தீமையே 12 அழிவு செய்பவர்களை. 13 ஒளி, ஒரு மூலிகையின்பெயர்.

கர்தப நாதஞ்செய்து வசதிகளைச்சுற்றி நடனஞ் செய்பவர்களை குகூலர்களை[1] குட்சீலர்களை[2] ககுபர்களை[3] கருமர்களை[4] ஸ்ரீமங்களை[5] உன் நாற்றத்தால் நீக்கிச் சிதறடி. ௧௧ தோல் சருமங்கள் தரித்து நபும்சகர்கள் போல் நடனஞ்செய்து வனத்தில் ஓசை செய்து கூத்தாடும் குருந்தர்களை குகூரபர்களை இங்கிருந்து நாங்கள் நீக்குகிறோம். ௧௨ ஜோதியினின்று தாபஞ்செய்பவனாயுள்ள அங்குள்ள சூரியனை சகிக்கமுடியாதவர்களை செவ்வாயுடன் சீநாற்றமுமாகி மிருகசருமந்தரிக்கும் மக்கக்கர்களான அராயர்களை நாங்கள் நாசஞ் செய்கிறோம். ௧௩ தங்கள் அதிவடிவமான ஆத்மாவை கந்தத்தில் வகித்து ஸ்திரீசிரோணி தள்ளுபவர்களுமான அரக்கர்களை இந்திரா! நீ தொலை. ௧௪ கையில் கொம்புகளைத் தரித்து காரிகைகள் முன்போகுபவர்களையும் அடுப்பங்கரைத்தங்கி ஆர்ப்புச் செய்பவர்களையும் குடுமியில்காந்தி செய்து கொள்பவர்களையும் நாங்கள் இங்கு கொல்லுகிறோம். ௧௫ எவர்களுக்கு முன்பாதங்கள் பின்புறமுள்ளனவோ, குதிக்கால்கள் முன்புறம்—முகங்கள் முன்பக்கம்—உள்ளனவோ, எவர்கள் கலஜர்களோ,[6] சகதூமஜர்களோ,[7] எவர்கள் உருண்டர்களோ,[8] மட்மமகர்களோ[8] எவர்கள் நபும்சகர்களான கும்பமுஷ்கர்களோ[8]—அவர்களை அவளிடமிருந்து பிரதிபோதத்தால், பிரமணஸ்பதியே! பாழாக்கு. ௧௬ எதிர் நோக்காத விழுந்த கண்களோடு நபும்சகர்கள் ஸ்திரீ சூனியர்களாவார்களாக: சிகிச்சையே! பதியுடனை இந்த

---

1 குதிர்—வயிறுள்ளவர்களை. 2 குண்டு உதரர்களை. 3 கூனமுதுகர்களை. 4 கிக்குரலர்களை. 5 கலக்கர்களை. 6 நெல் குத்தும் ஸ்தானத்தில் தோன்றுபவர்கள். 7 விரட்டிப்புகையில் தோன்றுபவர்கள். 8 விகாராங்கங்களுள்ளவர்களை.

ஸ்திரீயை யணுகும் பதியாகாத இவனை விழச்செய்கள சனை ரோமமுள்ளவனை, சடைகேசனை, அரைப்பவனை, அதிகம் பற்றுபவனை, ஆத்திரனை, அருணை நிறனை, சீமுகத்தனை சாலுடனை, கலசத்தைத் பசுபோல காலால் குதிகாலால் உதைத்துவிடு. ௧௮ உனது கருக் குழந்தையைப் பற்றுபவனையும், மரிக்கும் சிசுவாய் சனனஞ் செய்பவனையும் பிங்கன்[1] உக்கிரவில்லால் அவனை இருதயத்தில் பேதித்துவிடுக. ௧௯ பிரஸவ ஸ்திரீயுடன் சாய்ந்துள்ள, சனனமான—சிசுக்களை—அசப்பில் சாகச் செய்யும், பெண்கள் நாடும் கந்தருவர்களை, காற்று மேகத்தைப்போல பிங்கன் துரத்துக. ௨0 அவள் விடப்பட்டுள்ளதை தரிப்பார்களாக: வைத்துள்ளது விழாமலாக: உள் ஆடையில் தரிப்பதர்க்கான இரு உக்கிரச் சிகிச்சைகள் உனது கருவைக் காத்திடுக. ௨௧ சாய்கன்[2] நகனகன்[3], தங்கல்வன், கீமீதினன் பவீனஸனிடமிருந்து பதிக்கும் பிரஜைக்கும் பிங்கன் உன்னைக் காத்திடுக. ௨௨ இருவாய், நான்கு கண் ஐந்து கால்கள், விரல்களற்றவனிடமிருந்து, மேல் ஏறி முறுக்கும் கொடியினின்று நீ அவளைப் பாலனஞ்செய். ௨௩ பச்சை மாமிசம் புசிப்பவர்களையும், மனிதரது மாமிசம் புசிப்பவர்களையும் கருக்களைத் தின்று அதிகேசமுள்ளவர்களையும் நாங்கள் இங்கு கொல்லுகிறோம். ௨௪ மருமகள் மாமனாரிடமிருந்துபோல் சூரியனிடமிருந்து நகருபவர்களைப்போல் பிங்கமும் பஜமும் அவர்களது இருதயத்தில் பாய்க. ௨௫ சனனமாகுங்கால் பிங்கம் உனக்குத் துணை செய்க; அவர்கள் ஆணைப் பெண்ணைகச் செய்யாமலாவார்களாக: அண்டம் புசிப்பவர், கருக்களை துன்பஞ்செய்

1 ஔஷதம் 2 வாயால் கடிப்பவன். 3 நிர்வாணன்.

யாமலாவார்களாக, இங்கு கிமீதினிர்களைத் துரத்து. ௨௬ பாலரின்மை பாலமரணம் புலம்பல் பிழை—மலடு—இவற்றை—மரத்தினின்று மாலையைப்போல் நீ பிரியமற்றவர்களில் சேர்த்துவிடு. [அ. ௬. ௧—௨௬]

௪௪0 ஔஷதங்கள் [அதர்வன்—மந்திரோக்த ஔஷதயதேவதைகள்.]

௧ பழுப்பு பிரகாசமானவை, சிகப்பு சுந்தரமானவை, பிங்கம் கறுப்பமான ஓஷதிகளை விளம்புகிறோம். ௨ தந்தையை ஜோதியாயும், தாயை தரணியாயும், மூலத்தை சமுத்திரமாயுள்ள ஓஷதிகள் தேவர்களால் தூரிதமான யக்ஷ்மத்தினின்று இந்தப் புருஷனைப் பாதுகாப்புச் செய்க. ௩ சலங்களே திவ்யமான ஆதி ஔஷதங்கள்; உனது பிழையால் உண்டான யக்ஷ்மத்தை, உனது ஒவ்வொரு அங்கத்தினின்றும் நீக்கியுள்ளன. ௪ விரிந்து அடர்ந்து ஒரு அல்லியாய் அகலமான ஔஷதிகளை நான் சொல்லுகிறேன்; குழை மிகுந்து கண்டங்களுடனுகி, விரியும் கிளைகளுள்ள வற்றையும் நான் கூறுகிறேன். உக்கிரமாயும் வைசுவதேவியாயும் புருஷர்களுக்கு சீவனளிப்பவையுமான செடிகளை, நான் உனக்குச் சொல்லுகிறேன். ௫ ஓஷதிகளே! உரமுள்ளவர்களே களே! உங்களது உரம் வீரம் வலிமையால் இந்த புருஷனை யக்ஷ்மத்தினின்று நீக்குங்கள், இனி நான் சிகிச்சையைச் செய்கிறேன். ௬ நான் இங்கு இவன் துன்பம் நீங்க, சீவனும் சிறுமை செய்யாமல் சீவனளிக்கும் அருந்ததியாயும் உயர் செலுத்துவதாயும் தேன் மிகுந்து மலருவதுமான ஔஷதியை யழைக்கிறேன். ௭ நாங்கள் இப்புருஷனைத் துன்பத்தினின்றும் கடத்த எனது மொழியின்

---

௪௩௯. கருத்து. கருப்பகாலக் காப்பு.

நண்பர்களான அறிஞர்கள் இங்கு வருவார்களாக. ௮ அக்கினியின் உணவாயும் சலங்களின் கருப்பமாயும் திரங்களாயும், ஆயிரம் பெயர்களுடனான சிகிச்சை செய்யும் நவநவமான ஔஷதிகள் ஒன்று சேர்க. ௯ அவகாத்தில்[1] சூழ்ந்து, சல ஆன்மாவாகி, கூரிய கொம்புகளுள்ள ஔஷதிகள் கஷ்டத்தைக் கழித்திடுக. ௧௦ அந்த உக்கிரமான நஞ்சழித்து பலாசம் நீக்கி, புன்செயல் மாற்றும், விடுதலை செய்து வருண பிரிவுள்ள ஓஷதிகள் இங்கு வருக. ௧௧ வாங்கப்பட்டு வழங்கப்படும் அதிவலிமையுள்ள ஓஷதிகள் இந்த கிராமத்தில், பசுவை பரியை புருஷனை மிருகத்தைக் காப்புச் செய்க. ௧௨ அந்த ஔஷதிகளின் மூலம் தேன் மயம், அவற்றின் முடி தேன் மயம், அவற்றின் மத்தி தேன் மயம். இலை தேன் மயம், அவற்றின் மலர் தேன் மயம். அவை தேனோடு சேர்ந்தவை. அமிருதபானம். அவை முதன்மையான பாலுடன் உணவையும் நெய்யையுங் கறந்திடுக. ௧௩ புவியில் எத்தனை வெகு பல இந்த ஔஷதிகளிருந்தாலும் ஆயிரம் இலைகளுள்ள அவை என்னைத் துன்பம் மிருத்யுவினின்று தளர்த்திடுக. ௧௪ ஔஷதிகளின் புலிமணியானது[2] காத்து புன்மொழியினின்று துணைபுரிந்து நீசர்களையும் நோய்களையும் வெகு தூரம் துரத்துக. ௧௫ நோய்கள் சிங்கத்தின் கர்ச்சனையால் போல் நடுநடுங்கும்; ஓஷதிகள் வந்தவுடன் அனலின் அழலால்போல அலறும், ஓஷதிகளால் துரத்தப்பட்டு படகு போவதற்காகும் நதிகளுக்கப்பால் பசுக்களின் யக்ஷ்மம், புருஷர்களின் யக்ஷ்மம், பிரிந்து செல்க. ௧௬ அக்கினி வைசுவாநரத்தினின்று ஓஷதிகளே நீங்கள் விடுதலையாகி, வனஸ்பதியை அரசனாகவுள்ள நீங்கள் புவியெல்லாம் வியாபியுங்கள். ௧௭ அங்கிரஸச் சேர்க்கை

1 சலவனஸ்பதியிலே 2 குரூர சிகிச்சையுள்ள செடி

யான செடிகள் மலைகளிலும் மட்டநகளிலும் வளரும். பால் மிகுந்த மங்களகரமான அவை எங்கள் இருதயத்துக்கு இனிமை செய்க. ௧௮—௧௯ நான் அறியும் செடிகள், நான் காணும் வனஸ்பதிகள் சக்தி மிகுந்த நாங்கள் உணர்ந்து உணராமலுள்ள ஒன்று குவியும் எல்லா ஔஷதங்களும் இவனைத் துன்பத்தினின்றும் நீக்க எங்கள் சொல்லைச் செவியுறுக. ௨௦ அசுவத்தம், தருப்பை, செடிகளின் அரசனான செடி கொடி சோமன், அமிருதமான அவி—இவை சிகிச்சை செய்பவை, இவை ஜோதியின் அழியாத மக்கட்கள். ௨௧ அது[1] கர்ச்சிக்கின்றது. அது முழங்குகின்றது; ஓஷதிகளே! பிருசினிமக்கட்களே! பர்ஜனியன், இரேதசால் உங்களைத் துணைபுரியுங்கால் நீங்கள் எழுங்கள். ௨௨ நாங்கள் புருஷனை இந்த அமுதத்தின் பலத்தை பருகச் செய்கிறோம்: அவன் நூறு வருடங்களுடனாக இனி நான் சிகிச்சையைச் செய்கிறேன். ௨௩ வராஹம் செடியை யறியும் கீரி சிகிச்சைச் செடியை யறியும்: கந்தர்வர்களும் சர்ப்பங்களும் யறிபவைகளை நான் இப்--புருஷனின்—துணைக்காக அழைக்கிறேன். ௨௪ கருடர் றியும் ஆங்கிரஸ ஔஷதிகளையும், இரகடன்[2] அறியும் தேவசிகிச்சைகளையம், பறவைகள், ஹம்ஸங்கள் அறிபவை யையும் எல்லா வயங்கள் வனமிருகங்கள் அறிபவையையும் இப்புருஷனுக்கு உதவியாக அழைக்கிறேன். ௨௫ இம்சிப்பதர்க்காகாத பசுக்கள் எத்தனை ஔஷதிகளைப் புசிக்கின்றனவோ, ஆடுகளும் அஜங்களும் எத்தனை—ஔஷதிகளைப்—புசிக்கின்றனவோ—ஒன்று கொண்டு வரப்பட்டுள்ள அத்தனை ஓஷதிகள் உனக்குச் சுகத்தைத் தருக. ௨௬ எத்தனை ஓஷதிகளில் மானிடவைத்தியர்கள் சிகிச்

---

1 வானம் பர்ஜன்யன். 2 சுபர்ணன்.

சையை யறிகிறார்களோ, சர்வ சிகிச்சையான அத்தனை ஓஷதிகளை நான் உனக்குக் கொண்டு வருகிறேன். ௨௭. மலர்மிகுந்து, முகை நிறைந்து பழம், பெருகி, பழமற்றுமுள்ள, ஓஷதிகள் இந்தப் புருஷன் துன்பத்தினின்று நீங்க இணைந்த தாய்மார்களைப்போல் கறவை செய்க. ௨௮ பஞ்சசரத்தினின்றும், பத்து சரத்தினின்றும் நான் உன்னை விடுதலை செய்துள்ளேன் : யமனது பாசத்தினின்றும் தேவர்களின் எல்லாக் குற்றத்தினின்றும் உன்னை நீக்கியுள்ளேன். [அ. ௭. க—௨௮]

௪௪க எதிரி ஜயிக்க [பிருகுவங்கிரன் — இந்திரன் வனஸ்பதி சேனுஹனனஸ்ச தேவர்கள்]

க சத்துருக்களின் சேனைகளை ஆயிரமாயழிக்க, சத்திசூரனை கடுங்கோட்டை தகர்க்கும் கலக்கும் இந்திரன்—அவர்களைக் கலங்கிடச் செய்வானாக. ௨ பழுதான பழுதை, தன் பிராணனால் அங்குள்ள சேனையைப் பழுது செய்க. தூரத்தில் அனலையும் புகையையுங் கண்டு எங்கள் பகைவர்கள் தங்கள் இருதயங்களில் பயத்தைப் பற்றுவார்களாக. ௩ அசுவத்தமே! அங்குள்ள மனிதர்களை யழி; அவர்களைத் துரிதமாய் புசி. கதிரமே! அவை சணலைப்போல் சடுதி உடைந்து விடுக: வதைப்பவன் வாள்களால் அவற்றை வதைப்பானாக. ௪ பருஷாஹவன்[1] அங்குள்ளவர்களைத் துன்பஞ் செய்வானாக. வதைப்பவன் வாள்களால் அவர்களை வீழ்த்துவானாக: பெரிய வலையால் ஒன்று கட்டப்பட்டுள்ள புல்லைப்போல்துரிதமாய் அவர்கள் பிளந்துவிடுக. ரு வானமே வலை, பெருந்திசைகளே வலையின் கம்பங்கள், அவற்

1 ஒருவகைப் புல்

௪௪0 கருத்து—ஓஷதிசிகிச்சை.

ருல் அவர்களைச் சூழ்ந்து அதிசக்தியுள்ளவன் தஸ்யுக்களின் சேனையை சிதறடித்துள்ளான். ௬ வலிமையுள்ள அதிவலியனது வலை மிக்கப் பெரிது. அதனால், எவனும் தப்பாமலாக எல்லாப் பகைவர்களிலும் அவன் அதை அழுத்துவானாகை. ௭ இந்திரனே! வீரனே! ஆயிரத்தை எதிர்த்து சதவீரியத்தின்—வலிமையுள்ள—உனது வலை பெரியதாகும்: அதனால் தன் சேனையுடன் தஸ்யுக்களைச் சூழ்ந்து சக்திவான் நூறு, ஆயிரம், பதினாயிரம் கோடி—எதிரிகளை—அதஞ் செய்வான். ௮ இந்தப் பெரிய உலகம் அதிபெரியவனது வலை, அந்த இந்திரனது வலையால் அங்குள்ள அனைவரையும் இருளால் சூழ்கிறேன். ௯ களைப்பு சோகம் கலக்கம் கடுஞ்சொல் கடுந்தோல்வியால் - அங்குள்ளவர்களை, நான் சூழ்கிறேன். ௧௦ நான் அவர்களை மிருத்யுவுக் களிக்கிறேன்: மிருத்யு பாசங்களால் அவர்கள் கட்டப்பட்டுள்ளார்கள். நான் பகைவர்களைப் பந்தஞ்செய்து, மிருத்யுவின் துன்பமளிக்கும் தூதர்களைக்காண அழைத்துச் செல்லுகிறேன். ௧௧ மரண தூதர்களே! அவர்களை அழைத்துச் செல்லுங்கள்: யம தூதர்களே! அவர்களைக் கட்டுங்கள்: ஆயிரங்களுக்கதிகமாய் அவர்கள் அழிக்கப்படுவாராக; பவனது தண்டம் அவர்களைத் தறித்திடுக. ௧௨ சாத்தியர்கள் ஓஜசால் ஒரு ஜாலதண்டத்தை ருத்திரர்கள் ஒன்றையும் வசுக்கள் ஒன்றையும் ஆதித்தியர்கள்ஒன்றையும் எடுத்துச் செல்லுகிறார்கள். ௧௩ விசுவதேவர்கள் உயரத்தினின்றுஓஜசால் ஒடுக்கிச்செல்வார்களாக; அங்கிரஸர்கள் பெரிய சேனையை நடுவிலழைத்துச்செல்வார்களாக. ௧௪ வனஸ்பதிகளை, வனஸ்பதிகளின்—பொருள்களை—செடிகொடிகளை, இருகால் நாற்கால்களை, சத்துருசேனை அழிய நான் செலுத்துகிறேன். ௧௫ அவர்கள் அச்சேனையை யழிக்க, கந்தர்

வர்களையும் அப்ஸரஸர்களையும், சருப்பங்களையும் தேவர் களையும், புண்ணியர்களையும் பிதுருக்களையும், தரிசிகளை யும் அதரிசிகளையும் நான்செலுத்துகிறேன். கரு இங்கு மிருத்யுவின் வலைகள் விரிக்கப்பட்டுள்ளன. நீ அவற்றில் நடந்தால் நீங்காய். இவ்வஞ்சம் அச்சேனையின் ஆயிரம் ஆயி ரத்தை வீழ்த்துக. கஎ ஆயிரமழிக்கும் இந்த ஹோமம், அனல் பானம் தணலால் எழுப்பப்பட்டுள்ளன. சர் வனே! பவனும் சுந்தரக்கையுள்ளவனும் அச்சேனையை அதஞ்செய்வார்களாக. கஅ அவர்கள் பசி, பயம் பலவீனம் பயங்கராயுதம், மரணச்சுவாலையில் செல்வார் களாக, சர்வனே! நீ இந்திரனுடன் வலையாலும் ஜாலத்தா லும் அச்சேனையை வீழ்த்து. கக பகைவர்களே! நீங்கள் பராஜிதமாகி பறந்து விடுங்கள், பிரமத்தால் ஏவப்பட்டு ஓடுங்கள். பிருகஸ்பதியால் துரத்தப்படுங்கால் அவர்களில் எவனுந் தப்பாமலாவானாக. உ0 அவர்களாயுதங்கள் கீழ் வீழ்க. சரத்தையும் சேர்க்க சக்தியற்றுவார்களாக, அவர்களின் அதிபயத்தில் பகழிகள் மர்மஸ்தானங் களில் பாய்க. உக ஜோதியும் புவியுஞ் சேர்ந்து அவர் களில் முழங்குக, வானமும் ஒன்றுசேர்ந்து தேவதை களுடன்—கோஷஞ் செய்க, அறிஞனையும் ஆதாரத்தை யும் அவர்களறியாமலாவர்களாக: பரஸ்பரம் அழிந்து அவர்கள் மரணஞ் செல்வார்களாக. உஉ நான்கு திசை களே தேவ இரதத்தின் துரித குதிரைகள், புரோடாசங் கள், குளம்புகள், வானம் தேகம், ஜோதியும் புவியும் இருபக்கங்கள். ருதுக்கள் தடைவார்கள், இடைதிசைகள் கிங்கரர்கள், விளித்தலே விளிம்பாகும். உ௩ வருஷமே இரதம் பூரணவருஷம் இரதாங்கம் விராஜன் கம்பம்; அக் கினி இரதம், இந்திரன் இடது பக்கமிருப்பவன், சந்திரன் சாரதி. உச நீ இங்கு வெல். இங்கு வென்று விடு. முற்

றும் வெல், வெல்லு, சுவாஹா! இவர்கள் இங்கு வெல்வார்களாக. அங்குள்ளவர்கள் வெல்லப்படுக. இவர்களுக்கு சுவாஹா! அவர்களுக்கு சுவாஹா! நான் அவர்களை நீலச்சிகப்பால் சூழ்கிறேன். [அ. அ. க—உச]

௪௪உ விராஜன் [அதர்வ காசியபன்—விராடன்.]

க அந்த இருவர்கள்[1] எங்கிருந்து பிறந்தார்கள்? அப்பக்கம் எது? எந்த உலகத்தினின்று எந்தப் புவியினின்று? விராஜனது இரு வத்ஸர்கள் சலத்தினின்றும் தோன்றினார்கள். நான் உன்னை அந்த இருவர்களைப் பற்றிக் கேட்கிறேன். எவனால் அவள் கறக்கப்பட்டாள்? உ தன் மகிமையால் சலத்தை முழங்கச் செய்யுமவன், சயனமாகுங்கால் மூன்று மூல நிலயங்களைச் செய்யுமவன் விராஜனின் விருப்பங்கறக்கும் இளைஞனும்; அவன் தூரத்தில் தன் தேகங்களை இரகசியமாய் செய்தான். ௩ எந்த மூன்று பெரியவையுண்டோ, எவற்றின் நாலாவதால் மொழியை நாம் பிரிக்கிறோமோ, ஒருவன் சேரும் அதனை ஒன்று சேரும் அதனை அதை அறிஞனை பிராமணன், தவத்தால் அறியலாம். ச ஆறாவதான பிருஹத்தினின்றும் பஞ்ச சாமன்கள் செய்யப்பட்டுள்ளன, பிருஹத்து பிருஹத்தினின்றே செய்யப்பட்டுள்ளது. எங்கிருந்து பிருஹத்து செய்யப்பட்டது? ரு மாத்திரையில் பிருஹதீ ஸ்தாபிதமாயிற்று. மாத்திரை மாதாவினின்றும் செய்யப்பட்டது. மாயை மாயையினின்றும் தோன்றிற்று, மாயையினின்றும் மாதலி தோன்றிற்று. சு உச்சியிலுள்ள ஜோதியே வைசுவாநரப் பிரதிமை: அதிவரை அக்கினி இருமண்டலங்களைத் தீரப்பிரித்துள்

1 சூரியனும் மின்னலும்

௪௪க கருத்து—ஜயகோஷம்.

ளான், அங்குள்ள ஆறுவதிலிருந்து ஸ்தோமங்கள் வரும், அவர்கள் இங்கிருந்து உயரமாய் தினத்தின் ஆறுவதுக்குச் செல்லுகிறார்கள். எ ஏழுரிஷிகளான நாங்கள்—கசியபா! உன்னை வினவுகிறோம்—ஏனெனில்—யுக்தத்தையும் யோக்கியத்தையும் இணைப்பவன் நீயே: அவர்கள் விராஜனை பிரமத்தின் பிதாவாக அழைக்கிறார்கள்: உனது நண்பரான எங்கள் அனைவர்க்கும் அதனை அளி — அதன் இரகசியத்தைச் சொல். அ எவள் நீங்கினால் யக்ஞங்கள் நீங்குகின்றனவோ, எவள் நின்றால் அவர்கள் அநுசரிக்கிறார்களோ எவளது விரதத்தில் விசையில் யட்சன் விளங்குகிறானோ அவளோ ரிஷிகளே! பரமநிலயத்திலுள்ள விராஜன். ௯ சுவாசமில்லாத அவள் சுவாசிப்பவையின் சுவாசத்தால் செல்லுகிறாள்: சுவராஜன்[1] முன் செல்லுகிறான், விராஜன் அவனைப்—பின் அநுசரிக்கிறாள். உருவம் பொருந்தும் அவளை, விசுவம் பரிசிக்கும் விராஜனை பார்ப்பவர் சிலர், பார்க்காதவர் சிலர். ௧௦ விராஜனின் சேர்க்கையை யார் அறிவார்? ருதுக்களையும் அவளது ஆற்றலையும் யார் அறிவார்? அவள் கால்களையும் அவள் எத்தனை முறை கறக்கப்பட்டாள் என யார் அறிவார்? அவளுக்கு எத்தனை வசதி விளக்கங்கள் என எவர் அறிவர். ௧௧ முதற் பிரகாசமான அவளே இவள். இந்த வேறு பொருள்களில் அவள் நுழைந்து சலனமாகிறாள். மேலான மகிமைகள் அவளகத்திலுண்டு. சனனஞ்செய்யும் புதிய சலனஞ் செய்பவள் ஜயித்துள்ளாள். ௧௨ சந்த சிறகுகளுள்ள இரு உஷைகள், அதி அழகு செய்து கொண்டு ஒரே மூல நிலயம் நோக்கி ஒருமையாய் செல்லுகிறார்கள். சூரியனுடைய மனைவிகளான இரேதசுமிகும் அறிஞர்களாம்

---

[1] தானே பிரகாசிப்பவன்

அவர்கள், கேடில்லாமல், கொடியுள்ள அவர்கள் ஒரு மிக்கச் செல்லுகிறார்கள். ௧௩ ருதவழியில் மூன்று[1] வந்துள்ளன : இரேதசஹு சரித்து மூன்று தாபங்கள் வந்துள்ளன ; ஒன்று பிரஜையைத் துரிதமாக்கும். ஒன்று வன்மையை வலிமையாக்கும், ஒன்று தேவர் விரும்புவர்களது இராஷ்டிரத்தைக் காக்கும். ௧௪ துரீயமான அவள் அக்கினி ஸோமனை வைத்துள்ளாள். ரிஷிகள் யஜமானனுக்குச் சுவர்க்கத்தைக் கொண்டு வருபவர்களாய் யக்ஞச் சிறகுகளைச் சீலமாக்கிக்கொண்டு காயத்திரியை திரிஷ்டுபுவை ஜகதியை அநுஷ்டுபை, பிருஹத் அர்க்கியைச் செம்மையாக்குகிறார்கள். ௧௫ ஐந்து உஷைகளுக்கப்பால் ஐந்து கறவைகள். பஞ்ச நாமப் பசுவை அநுசரித்து பஞ்ச ருதுக்கள். பதினைந்தால் ஒழுங்காகும் பஞ்ச திசைகள் ; ஒரு தலையுள்ள அவை ஒரே யுலகத்தை யநுசரிக்கும். ௧௬ ருதத்தின் முதற் தோற்றமான பொருள்கள்[2] ஆறு ; ஆறு ஸாமன்கள் ஆறு நாளைச்சுமக்கும். ஆறு உழுபடையை யநுசரித்து ஸாம ஸாமன் செல்லும் ; ஜோதிகளையும் புவிகளையும் அவர்கள் ஆறு எனச் சொல்லுகிறார்கள். விரிவுகள் ஆறாகும். ௧௭ அவர்கள் சீத மாதங்களை ஆறு எனச் சொல்லுகிறார்கள் : சூடு மாதங்களை ஆறு எனக் கூறுகிறார்கள் : மிகுதியான ருதத்தை நீங்கள் எங்களுக்குச் சொல்லுங்கள் : ஏழு கவிகள் கருடர்கள் உட்கார்ந்தார்கள் : ஏழு தீட்சைகளை யநுசரித்து ஏழு சந்தங்களாகும். ௧௮ ஹோமங்கள் ஏழு : ஸமித்துக்கள் ஏழு : இனிமைப் பொருள்கள் ஏழு : ருதுக்கள் ஏழு : ஏழு நெய்கள், நிகழும் பொருள்களை யடைந்துள்ளன : அவை தான் ஏழு கருடர்கள் எனக் கேட்

---

1 உஷை, சூரியனொளி, இரவு 2 புவி, காற்று, அனல் புனல் வானம், சூட்சமப்பொருள்

டுள்ளோம். ௧௬ நான்கால் வளருஞ் சந்தங்கள் ஏழாகும். ஒன்று மற்றொன்றில் ஆதாரமாகும்; ஸ்தோமங்கள் அவற்றில் எப்படி திரமாய் நிற்கும்? அவை ஸ்தோமங் களில் எப்படிச் சாயும்? ௨0 காயத்திரி திருவிருதத்தை எங்ஙனம் வியாபிக்கும்? திருஷ்டுபு பஞ்சதசத்தோடு எங்ஙனம் பாயும்? முப்பத்து மூன்றோடு ஜகதீ எங்ஙனம்? இருபத்து ஒன்றோடு அநுஷ்டுபு எங்ஙனம்? ௨௧ ருதத் தின் முதல் ஜனனமான எண் பொருள்கள்,[1] புலனாகி யுள்ளன. இந்திரனே! தேவ ரித்விக்குக்கள் எண்மர்களா வார்கள்: அதிதி எண் மூல-ஸ்தானங்களையும், எண்மக் கட்களையு மடைந்துள்ளாள். எட்டாவது இரவுக்கு அவி செல்லுகின்றது. ௨௨ இங்ஙனம் நான் மேன்மையை மனனஞ் செய்து இங்கு வந்துள்ளேன்; உங்கள் நட்பில் நான் நலமுடன் உள்ளேன்; சமான ஜன்மமானதால் உங்கள் சங்கற்பம் சுக மளிப்பதாகும்; அது அறிந்து உங்கள் அனைவர்க்கும் செல்லுகின்றது. ௨௩ இந்திரனது எட்டு,[2] யமனது ஆறு,[2] ரிஷிகளது ஏழு[2] கிரமங்கள் ஏழு.[2] சலங்களை மனிதர்களை ஔஷதங்களை ஐந்து[2] அநு சரிக்கும். ௨௪ முதற்பசுவானது இந்திரனுக்காகவே முதற் கறவையில் பாலையும் - புலன் - வசத்தையுங் கறக் கும்; அப்பால் நான்காய் நாலான தேவர்களை, ரிஷிகளை, அசுரர்களை மனிதர்களை அவள் திருப்தி செய்தாள். ௨௫ இப்போது பசு எது? ஏக ரிஷியார்? ஆதாரம் எது? ஆசிகள் எவை? புவியில் ஏகமான ஒரு யட்சன் யார்? ஏக ருது எது? ௨௬ பசு வொன்று, ரிஷி யோன்று; ஆதா ரம் ஒன்று; ஆசிகள் ஒன்று; புவியிலுள்ள யக்ஷன் ஒன்று—ருது ஒன்று; மிகுதியில்லை. [அ. ௯. ௧—௨௬]

---

1 பிரகிருதியின் விகாரங்கள் 2 புலன்கள்

௪௪௨ கருத்து—ஈசன் ஒன்றே.

௪௪௩ விராஜை [அதர்வாச்சாரியன்—விராடன்]

௧ ஆதியில் இவள் விராஜை; அவளது சன்மத்தில் இவளே இது[1] என—நினைத்து—அனைத்தும் பயந்தன. ௨ அவள் ஏறினாள்[2]; அவள் காருஹபத்திய அனலில்—இறங்கினாள். இங்ஙனம்—இவளை—யறிபவன் கிருக யக்ஞஞ் செய்பவனாய் கிருகபதி யாவான். ௩ அவள் ஏறினாள்; அவள் ஆஹவனீயத்தில் இறங்கினாள்: அவனது தேவ அழைப்புக்கு தேவர்கள் செல்வார்கள்; இங்ஙன மறிபவன் தேவர்களுக்குப் பிரியமாவான். ௪ அவள் ஏறினாள்; அவள் தென் அனலில் இறங்கினாள்: இங்ஙனம்—இவளை—யறிபவன் யக்ஞத்தால் அருகனாயும் அளிப்புக்கு உரியவனாயும் வசதிக்குப் பக்குவனுமாவான். ௫ அவள் ஏறினாள்; அவள் சபையில் இறங்கினாள்: அவனது சபைக்கு—மனிதர்கள்—செல்வார்கள். இவளை இங்ஙன மறிபவன் ஸப்யனாவான். ௬ அவள் ஏறினாள்: அவள் சமிதியில் இறங்கினாள்; அவனது சமிதிக்கு—மனிதர்கள்—செல்லுகிறார்கள்: இங்ஙனம்—இவளை—யறிபவன் ஸமிதிகளுக்கருகனாவான். ௭ அவள் ஏறினாள்: அவள் மந்திராலோசனையி லிறங்கினாள்; மனிதர்கள்—அவனது மந்திராலோசனைக்குச் செல்லுகிறார்கள்; இங்ஙனம்—இவளை—யறிபவன் மந்திராலோசனைக்கு அருகனாவான். ௮ அவள் ஏறினாள்; அவள் வானத்தில் நான்காய்ப் பிரிந்து நின்றாள். ௯ தேவர்களும் மனிதர்களும் அவளைப்பற்றி நாம் இருவர்களும் எவளில் ஆதாரமா யுள்ளோமோ அவளே அறிவாள்; நாம் அவளை யழைப்போம் எனச் சொன்னார்கள். ௧௦ அவர்கள் அவளை அழைத்தார்கள். ௧௧ உறுதியே!

---

1 உலகம். 2 எங்கும் வியாபகனுள்.

வா. உணவே! வா! உயரிய மொழியே! வா, உற்சாக
மளிப்பவளே வா. ௧௨ அவளுக்கு இந்திரனே பாலன்,
காயத்திரியே பந்தம், முகிலே ஸ்தனம். ௧௩ பிருஹத்
தும் இரதந்தரமும் அவளது இரண்டு ஸ்தனங்கள்.
யக்ஞா யக்ஞியமும் வாமதேவ்யமும் அவளது இரண்டு
பயோதரங்கள். ௧௪ தேவர்கள்—அவளினின்று—இர
தந்தரத்தால் ஔஷதங்களை, பிருஹத்தால் விசாலத்தைக்
கறந்தார்கள். ௧௫ சலங்களை வாமதேவ்யத்தால், யக்
ஞத்தை யக்ஞா யக்ஞியத்தால், கறந்தார்கள். ௧௬ ஔ
ஷதங்கள் இரதந்தரத்தை பரப்பு பிருஹத்தைக் கறக்கும்.
௧௭ சலங்கள் வாமதேவ்யத்தை, யக்ஞம் யக்ஞா யக்ஞி
யத்தை இங்ஙன மறிபவனுக்குக் கறக்கும். ௧௮ அவள்
ஏறினாள், அவள் வனஸ்பதிகளுக்கு வந்தாள், வனஸ்பதி
கள் அவளைக் கொன்றன: அவள் ஒரு வருஷத்தில்—
மறுபடியும் தோன்றினாள். இதனாலேயே வனஸ்பதி
களின் வெட்டுக்கள் ஒரு வருஷத்தில் வளர்ந்து விடும்.
இங்ஙனம் அறிபவனது பகைவன் பரிதலாகிறான். ௧௯
அவள் ஏறினாள்: அவள் பிதுருக்களுக்குச் சென்றாள்.
பிதுருக்கள் அவளைக் கொன்றார்கள். அவள் ஒரு மாதத்
தில்—மறுபடியும்—தோன்றினாள். ஆகையான் பிதுருக்
களுக்கு மாத—யளிப்பை—யளிக்கிறார்கள். இங்ஙன
மறிபவன் பிதுருக்களின் வழியை யறிவான். ௨௦ அவள்
ஏறினாள், அவள் தேவர்களுக்கு வந்தாள், தேவர்கள்
அவளைக் கொன்றார்கள், அரை மாதத்தில் அவள் மறு
படியுந் தோன்றினாள். ஆகையான் அவர்கள் தேவர்
களுக்கு அரை மாதத்தில் வஷட்டைச் செய்கிறார்கள்.
இங்ஙனம் அறிபவன் தேவர்களுக்குச் செல்லும் வழியை
யறிவான். ௨௧ அவள் ஏறினாள், அவள் மனிதர்களுக்கு
வந்தாள், மனிதர்கள் அவளைக் கொன்றார்கள். அவள்

உடனே மறுபடியு—மானாள், ஆகையால் மனிதர்களுக்கு இரு நாட்களில் அளிக்கிறார்கள். இங்ஙனம் அறிபவனது வீட்டில் அவர்கள் அளிக்கிறார்கள். ௨௨ அவள் ஏறினாள். அவள் அசுரர்களுக்குச் சென்றாள். அவளை அசுரர்கள் அழைத்தார்கள். மாயையே! வா, பிரஹ்ராதியின் மகனான விரோசனன் அவளது மகன்: அயப்பாத்திரம் பாத்திர மாகும்: ருதுவின் மகன் த்விமூர்த்தன் அவளைக் கறந்தான்; அவன் மாயையை அவளிடமிருந்து கறந்தான்; அசுரர்கள் அந்த மாயையை ஆசிரயிக்கிறார்கள். இங்ஙனம் அறிபவன் ஆசிரயத்துக்காவான். ௨௩ அவள் ஏறினாள். அவள் பிதுருக்களுக்கு வந்தாள்; பிதுருக்கள் அவளை அழைத்தார்கள். சுவதாவே! வா, இராஜவான யமன் அவளது வத்ஸனாவான். வெள்ளிப் பாத்திரம் பாத்திரமாகும்; மிருத்யுவின் மகனான அந்தகன் அவளைக் கறந்தான்; அவன் சுவதாவை அவளிடமிருந்து கறந்தான்; பிதுருக்கள் அந்த சுவதாவை ஆசிரயத்துள்ளார்கள்; இங்ஙனம் இவளையறிபவன் ஆசிரயத்துக்காவான். ௨௪ அவள் ஏறினாள்; அவள் மனிதர்களுக்கு வந்தாள்: மனிதர்கள் அவளை அழைத்தார்கள்; இரஸம் மிகுபவளே! வா, விவஸ்வந்தின் மகனான மநு அவளது வத்ஸன், புவி பாண்டமாகும்; வேனனது[1] மகனான பிருதீ அவளைக் கறந்தான்; அவன் அவளிடமிருந்து கிருஷியையும் தானியத்தையுங் கறந்தான்; மனிதர்கள் அந்த கிருஷியிலும் தானியத்திலும் ஆசிரயத்துள்ளார்கள்: இங்ஙனம் இவளை யறிபவன் கிருஷிச் செல்வனாகி ஆசிரயத்துக்காவான். ௨௫ அவள் எழுந்தாள்: அவள் எழு ரிஷிகளுக்கு வந்தாள்: எழு ரிஷிகள் அவளை அழைத்தார்கள்: பிரமத்தில் மிகுபவளே!

---

1 சூரியன்

இங்கு வா! ஸோமராஜன் அவளுடைய வத்ஸன்: சந்தம் பாத்திரமாகும்: அங்கிரஸ மகனான பிருகஸ்பதி அவளைக் கறந்தான்: அவன் பிரமத்தையும் தவத்தையும் அவளிடமிருந்து கறந்தான்: ஏழு ரிஷிகள், அந்த பிரமம் தவத்தில் ஆசிரயமாகிறார்கள்: இங்ஙனம் அறிபவன் பிரமவர்சஸுடனாகி ஆசிரயத்துக்காவான். ௨௬ அவள் ஏறினாள்: அவள் தேவர்களுக்கு வந்தாள்: தேவர்கள் அவளை அழைத்தார்கள்: திடமே! வா! இந்திரன் அவ்ளுடைய வத்ஸன்; கலசம் பாத்திரமாகும்; தேவ ஸவிதா அவளைக் கறந்தான்; அவன் திடத்தை அவளிடமிருந்து கறந்தான்; தேவர்கள் திடத்தில் ஆசிரயமாகிறார்கள்; இங்ஙனம்...........ஆசிரயத்துக்காவான். ௨௭ அவள் ஏறினாள்; அவள் கந்தருவர்களுக்கும் அப்ஸரஸர்களுக்கும் வந்தாள்; கந்தர்வர்களும் அப்ஸரஸர்களும் அவளை அழைத்தார்கள்; புண்ணிய கந்தரே! வா; சூரிய வர்சஸின் மகனான சித்திர இரதன் வத்ஸனாவான் தாமரை இதழ் பாத்திரமாகும்; சூரியவர்சஸின் மகனான வரருசி அவளைக் கறந்தான்; அவன் புண்ணிய கந்தத்தை அவளிடமிருந்து கறந்தான்; கந்தர்வர்களும் அப்ஸரஸர்களும் அந்தப் புண்ணிய கந்தத்தில் ஆசிரயத்துள்ளார்கள்; இங்ஙன மறிபவன் புண்ணிய கந்தமுடனாகி ஆசிரயத்துக்காவான். ௨௮ அவள் ஏறினாள்; அவள் இதர சனங்களுக்குச் சென்றாள். இதர சனங்கள் அவளை அழைத்தார்கள்; மறையே! வரவும்; விசிரவணனுடைய மகன் குபேரன் அவளது வத்ஸனாவான். பச்சை பாத்திரம் பாத்திரமாகும்; குபேரனுடைய மகனான இரஜத நாபி அவளைக் கறந்தான்; அவன் அவளிடமிருந்து மறைவைக் கறந்தான்; அந்த மறையில் இதர சனங்கள் ஆசிரயமாவார்கள்; இங்ஙன மறிபவன் எல்லா மாசை

யும் மறைத்து ஆசிரயத்துக்காவான். ௨௯ அவள் ஏறினாள்: அவள் சருப்பங்களுக்கு வந்தாள்: சர்ப்பங்கள் அவளை அழைத்தன: விஷமுள்ளவளே! வா, விசாலனது சந்ததியான தட்சகன் அவளது வத்ஸனாவான். சுரைப்பாண்டம் பாத்திரமாகும்; இராவந்தின் மகனான திருதாட்டிரன் அவளைக் கறந்தான்; அவன் விஷத்தை அவளிடமிருந்து கறந்தான்; சருப்பங்கள் அந்த விஷத்தில் ஆசிரயத்துள்ளன. இங்ஙனமறிபவன் ஆசிரயத்துக்காவான். ௩௰ இங்ஙனமறிபவனுக்கு சுரைப்பையினின்று கக்கப்பட்டால் அவன் அதை நீக்கிவிடவேண்டும். ௩௧ அவன் அதை நீக்கவேண்டாமா, மனத்தால் அதை நீக்குகிறேன் என—நினைத்து—அவன் அதை மறுக்கவேண்டும், ௩௨ அவன் அதை வெறுக்குங்கால் அவன் விஷத்தை நீக்குபவனாவான். ௩௩ விஷம் இங்ஙனம் அறிபனுடை பிரியமில்லாத பகைவனை யநுசரித்து பாயும் [அ. ௧௦. ௧—௩௩]

எட்டாவது காண்டம் முற்றிற்று.

## ௪௪௪—௪௫௩.

௪௪௪. மதுகசை. [அதர்வணன்—மதுகசை அசுவினிதேவர்கள்.]

௧ ஜோதியினின்றும், புவியினின்றும் வானத்தினின்றும், கடலினின்றும், அக்கினியினின்றும், காற்றினின்றும் மதுகசை மலர்ந்தாள்: அவளை அறிந்து அமுதத்தை யணிந்து எல்லாப் பிரசைகளும் அவளைக்காண ஆனந்தமாகிறார்கள். ௨ அவளது பால் பெரியது, விசுவரூபள்;

௪௪௩. கருத்து. புவியினின்று அமுதங் கறந்தால் அமுதம் வரும், விஷங்கறந்தால் விஷம் வரும்.

அவர்கள் உன்னைக் கடலின் இரேதஸு எனவுஞ் சொல்லுகிறார்கள்; அளிக்குந் தேன்கசை எங்கிருந்து வருகின்றளோ; அங்கு பிராணன்; அங்கு அமிருதம் அமையும். ௩ மனிதர்கள், புவியில் இவளது சரிதையை பலவிதமாய் பார்க்கிறார்கள்; அனலினின்றே அனிலத்தினின்றே, மருத்துக்களின் உக்கிரப் பெண்ணான தேன்கசை தோன்றினாள். ௪ ஆதித்தியர்களின் அன்னையாயும், வசுக்களின் பெண்ணும், பிரஜைகளின் பிராணனும், அமுதத்தின் நடுவாயும், பொன்னிறனுய் நெய் பொழிந்தும் மதுகசை மனிதர்களில் அதி ஒளியுடன் சலனமாகிறாள். ௫ தேவர்கள் தேன்கசையைத் தோற்றுவித்தார்கள்; அவளது கரு விசுவரூபமாயிற்று; அவள் பிறந்து பாலனாயிருக்குங்கால் அவளைத் தாயார் பாலனஞ் செய்கிறாள்; அவள் பிறந்தவுடன் எல்லா புவனங்களையும் பார்க்கின்றாள். ௬ அவளது இருதயத்தின், ஸோமன் தரிக்கும் அக்ஷயமான கலசத்தை அறிபவன் யார்? அறிந்துகொள்பவன் யார்? ஸுமேதஸுடனான பிரமனே அவனில் இன்பமாவான். ௭ அந்த இரண்டையும் அறிகிறான்; அவளது அழியாத ஆயிரம் பெருகும் இரு ஸ்தனங்களை அவன்—அறிகிறான். ௮ அவள் பெரியவளாயும் பலமளிப்பவளாயும் அதிஹிங்காரஞ் செய்து உச்சகோஷஞ் செய்யுமவள் மூன்று யக்ஞங்களில் முழக்கஞ் செய்பவளாய் விரதத்தில் செல்லுகிறாள்; ஒலி ஒலிக்கும் அவள் பாலோடு பெருகுகிறாள். ௯ நன்கு பெருகுங்கால் எவற்றை சலங்கள் நாடுகின்றனவோ அந்த சுவராஜர்களான சக்திமிகுந்த விருஷபங்கள் இவளை யறிபவனுக்கு விருப்பத்தை வலிமையை, சலங்களை, வர்ஷிக்கின்றன; வர்ஷிக்கச் செய்கின்றன. ௧௦ பிரஜாபதியே! உனது வாக்கு இடி முழக்கமாகும்;

விருஷபனான நீ வையத்தில் வலிமையை வீசுகிறாய்: மருத்துக்களின் உக்கிரப்பெண்ணான மதுகசை அனலினின்றும் அனிலத்தினின்றும், தோன்றினாள். ௧௧ காலை யக்ஞத்தில் ஸோமன் அசுவினிகளுக்குப் பிரியமாவது போல்; அசுவினிகளே! எனது ஆன்மாவில் ஆண்மை தரிக்கப் படுக. ௧௨ நடு யக்ஞத்தில் ஸோமன் இந்திராக்கினிக்குப் பிரியமாவது போல் இந்திராக்கினியே! எனது ஆன்மாவில் வலிமை தரிக்கப்படுக. ௧௩ மாலை யக்ஞத்தில் ஸோமன் ரிபுக்களுக்கு பிரியமாவது போல் ரிபுக்களே! எனது ஆன்மாவில் பலம் தரிக்கப்படுக. ௧௪ நான் தேனை தோற்றுவிப்பேன், நான் தேனை ஜயிப்பேன்: அக்கினியே! நான் பால்மிகுந்து வந்துள்ளேன்: என்னை இங்கு வர்சஸுடன் சேர். ௧௫ அக்கினியே! என்னை வர்சஸுடன் பிரஜையுடன், பூரணாயுஸோடு சேர், தேவர்கள் என்னை இப்படியறிவார்களாக. இந்திரன் ரிஷிகளுடன் சேர்ந்து அறிவானாக. ௧௬ தேன் செய்பவர்கள் இங்கு தேனை தேனில் சேர்ப்பதுபோல அசுவினிகளே! எனது ஆன்மாவில் திறம் தரிக்கப்படுக. ௧௭ தேனீக்கள் இங்கு தேனை தேனில் சேர்ப்பதுபோல அசுவினிகளே! எனது ஆன்மாவில் திடம் தேஜசு திண்மை ஆண்மை தரிக்கப்படுக. ௧௮ மலைகளில் பர்வதங்களில் பசுக்களில் புரவிகளில் ஸுராப் பானங்களில் எத்தேன் பாய்ந்து திகழ்கின்றதோ அது என்னிலாகுக. ௧௯ அசுவினிகளே! அழகுபதிகளே! சனத்தின் நடுவே சிறந்த சொற்களைச் சொல்ல தேனீக்களின் தேனால் என்னை நனைமின்; ௨௦ பிரஜாபதியே! உனது வாக்கு இடி முழக்கமாகும்: விருஷபனான நீ வையத்தில் ஜோதியில் வலிமையை வீசுகிறாய்: எல்லாப் பசுக்களும் அதில் வாழும்: அது இதனால் உணவையும்

உறுதியையும் நிரப்பும். ௨௧ புவி, கம்பம். வானம் கருப்பை ஜோதி, கசை; கசையடி, மின்னல்,—கசை—முடி கனக மயம். ௨௨ கசையின் ஏழுதேன்களை யறிபவன் தேனுள்ளவனாவான். முதற்தேன், பிராமணன், அப்பால் இராஜன், பால்பசு, சுமைக்காளை, நெல், யவதானியம்—ஏழாவது — தேனே — தேனாகும். ௨௩ இங்ஙனமறிபவன் தேன்மயமாவான்: அவனது உணவும் தேன் மயமாகும், தேன்மய உலகங்களையுஞ் ஜயிப்பான். ௨௪ அது ஜோதியில் இடிமுழக்கஞ் செய்யுங்கால், அதுவே பிரசைகளுக்கு பிரஸன்னமாகும் பிரஜாபதி: ஆகையான் நான் உபவீதத்தோடு வலது பக்கம் நின்று சொல்வதாவது: பிரஜாபதியே! என்னைக் கவனி இங்ஙனம் அறிபவனை பிரஜாபதியும் பிரஜைகளும் கவனிப்பார்கள். [௯. ௧—௨௪]

௪௪௫ காமன் [அதர்வன்—காமன்]

௧ பகைகொல்லும் காளையான காமனை, நெய்யால், அவியால், கிருதத்தால் நான் வழிபடுகிறேன். அதிதீரத்தால் துதிக்கப்படும், எனது எதிரிகளை நீ கீழே விழச் செய். ௨ எது மனத்துக்கு கண்ணுக்குப் பிரியமாவதில்லையோ, எது பறித்து—என்னில்—இன்பமாவதில்லையோ, அந்தப் புன்கனவை நான் பகைவனில் பந்தஞ் செய்கிறேன்: நான் காமனைத் துதித்து உயர்த்துவேன். ௩ காமனே! துச்சத்தையும் துச்சுவப்னத்தையும், காமனே! அதிகாரனே! அகோரனே! பிரசையின்மையையும் வசதியின்மையையும் எங்களுக்குத் துன்பங்கள் தேடுபவனில் பந்தமாக்கு. ௪ காமனே!

---

௪௪௪. கருத்து—எனது ஆன்மாவிலே தேனை திடம் தேஜசு தரிக்கப்படட்டும்.

தூரத்து! காமனே! தூரத்திவிடு! பகைவர்கள் அதோகதியாகுக: அக்கினியே! தாழ்ந்த தமஸுக்களில் அவர்களைத் தாழ்த்து; அவர்களுடைய வீடுகளையும் எரித்துவிடு. ரு காமனே! உனது பெண் பசுவென அழைக்கப்படும்: மொழியான—அவளை—விராஜன் என கவிகள் கூறுகிறார்கள்: அவளால் எனது அரிக்களை தூரமாக்கு: பிராணனும் பசுக்களும் சீவிப்பும் அவர்களை நீங்கட்டும். சு திரஞன மீகாமன் சலங்களில் படகைச் செலுத்துவதுபோல், நான் எனது எதிரிகளை காமனது, இந்திரனது, வருண இராஜனது, விஷ்ணுவினது வன்மையால், ஸவிதாவின் பிரேரணையால், அக்கினிஹோத்திரத்தால் கடத்துகிறேன். எ ஆண்மையாய் அகோரனுய் அதிகாரியாகும் காமன் எனக்குப்பகைச் சூனியஞ் செய்வானுக: விசுவேதேவர்கள் எனக்குத் தலைவராவாராக. எல்லா தேவர்களும் எனது இந்த அழைப்பில் வருவார்களாக. அ காமனைத் தலைவனுயுள்ள நீங்கள் இந்த யக்ஞ நெய்யை கிரகித்து எனக்குப் பகை நீக்கஞ்செய்து, இங்கு இன்பமாகுங்கள். கூ காமா இந்திரன் அக்கினியுடன் இணைந்து எனது எதிரிகளை வீழ்த்து: அக்கினி அகாத இருட்களில் அவர்கள் வீழ்ந்தவுடன் அவர்கள் வசதிகளை எரித்து விடு. க0 காமா! எனது பகைவர்களைக் கொல். இருண்ட இருட்களில் அவர்களை வீழ்த்து: அவர்கள் இந்திரியம் நீங்கி இரஸ சூனியமாவார்களாக. அவர்கள் ஒரு தினங்கூட வாழாமலாவார்களாக. கக காமன் எனது பாரகளைக் கொன்றுள்ளான். அவன் எனக்குப் பரந்த வெளியையும், பெருக்கத்தையுஞ் செய்துள்ளான். நாலு திசைகளும் எனக்கு வணங்குக. ஆறு விசாலங்கள் எனக்கு நெய்யை வகித்திடுக. கஉ பந்தத்தினின்று பிரிந்த படகைப்போல் அவர்கள் கீழ் மூழ்கி—

நீங்குவார்களாக; சரங்களால் பாய்ந்து அவர்களுக்கு மீட்பில்லை. ௧௩ அக்கினி தடுப்பவன், இந்திரன் தடுப்பவன், ஸோமன் தடுப்பவன். தடுக்குந் தேவர்கள் அவனைத் தாக்குவார்களாக. ௧௪ துணையில்லா தீரர்களோடு சிநேகிதர்களால் துவேஷிக்கப்பட்டு இனத்தால் நீக்குவதர்க்கான அவன் துரத்தப்பட்டு சென்றுவிடுவானாக. இடிமின்னல்கள்—அவனில்—வீழ்க. உக்கிர தேவன் உங்களை எல்லாம் கொலை புரிக. ௧௫ இந்தப் பெரியவன், அசைவதையும் அசையாததையும் மின்னலையும் எல்லா இடி முழக்கங்களையுந் தரித்திடுக; ஆண்மை வாய்ந்த ஆதித்தியன் தேஜஸோடும் திரவியத்தோடு மெழுந்து என் சேரார்களை நீசம் செய்வானாக. ௧௬ காமா! முக்காப்பான உனது திடதுணையால், விரியுங்கவசமான வதையாகாத பிரம்மத்தால், எனது பகைவர்களைப் பாழாக்கு. பிராணனும், பசுக்களும் சீவிப்பும், அவர்களைப் பிரித்திடுக. ௧௭ காமா தேவர்கள் அசுரர்களை எதனுல் துரத்தினுர்களோ, எதனுல் இந்திரன் தஸ்யுக்களை தாழ்ந்த தமசுக்களுக்குச் செலுத்தினுனே, அதனுல் நீ என் சத்துருக்களை இச்சகத்தினின்று வெகு தூரம் விலக்கு. ௧௮ தேவர்கள் அசுரர்களைத் துரத்தியது போல, இந்திரன் தஸ்யுக்களைத் துரத்தியது போல் காமனே! பகைவனை இப்புவியினின்று வெகு தூரமாக்கு. ௧௯ காமன் முதல் தோன்றினுன். தேவர்களும்; பிதுருக்களும், மனிதர்களும் அவனை அடைவதில்லை. நீ அனைவரினும் உயர்ந்தவன். ஸதா உயர்ந்தவன். காமா! அங்ஙனமான உனக்கு நான் வணக்கமளிக்கிறேன். ௨௦ ஜோதியும் புவியும் எத்தனை விசாலமா யுள்ளனவோ, சலனங்கள் எத்தனை தூரம் பாய்கின்றனவோ, எத்தனை தூரம் அக்கினியுண்டோ, நீ

அவற்றிற்கெல்லாம் உயர்ந்தவன். காமா! அத்தகைய உனக்கு நான் வணக்கமளிக்கிறேன். ௨௧ திசைகளும், பிரதிசைகளும் எத்தனைப் பெரியனவோ; வானங்களும் ஜோதிக்காட்சிகளும் எத்தனைப் பெரியனவோ, அவற்றிற்கு அதிகமான நீ சதா பெரியவன். காமா! அத்தகைய னை உனக்கு நான் வணக்கமளிக்கிறேன். ௨௨ தேனிக்களும், வௌவால்களும் குருருக்களும் எத்தனையுண்டோ வகங்களும் மரப்பாம்புகளும் எத்தனை யுண்டோ, அவற்றிற்கெல்லாம் நீ அதிகன்: சதாப் பெரியவன் நீ: காமா அப்படிப்பட்ட உனக்கு நான் வணக்கமளிக்கிறேன். ௨௩. இமைப்பவனுக்கும் நிற்பவனுக்கும் நீ அதிகன். நீ கடலுக்கதிகன்: காமனே! கோபனே! அப்படிப்பட்ட உனக்கு நான் வணக்கமளிக்கிறேன். ௨௪ எந்தக் காற்றும் காமனுக்குச் சமானமாவதில்லை: அனலுமில்லை, சூரியனுமில்லை, சந்திரனும் அவனுக்குச் சமானமாவதில்லை. அவற்றிற்கெல்லாம் அதிகன் நீ: சதா பெரியவன்: காமனே! அப்படிப்பட்ட உனக்கு நான் வணக்கமளிக்கிறேன். ௨௫ காமனே நீ விரும்புவதை உண்மையாக்கும் சிவ மோங்கும் மங்களகரமான தேகங்களால் எங்களில் பூரணமாய், பிரவேசி; பாப புத்திகளை வேறு-எவர்களிலாவது - சேர்த்துவிடு. [௯. ௨. ௧—௨௫]

௪௪௬ மனை [பிருகுவாங்கிரஸன்—சாலை]

௧ எல்லா அருமையான பொருள்களை யடைந்துள்ள வீட்டின் தூண் தம்பம் சந்திப்புக்களின் சேர்க்கையான சீலமற்றவைகளை—நாங்கள் அவிழ்க்கிறோம். ௨ எல்லா உயரிய பொருள்களையும்—யடைந்துள்ள வீடே! உனது கயிறு கிரந்தி கட்டை, பிரகஸ்பதி பலனைச் செய்தது

---

௨௫ கருத்து—காமனே சூரியனும் சந்திரனுமாவான்

போல், வாக்கால் தனித் தனிமையாக்குகிறேன். ௩ அவன் உனது கட்டுக்களை இறுக்கினான், நெருக்கினான். அவன் சந்திகளை நன்கு சேர்த்தான். கைதேர்ந்த சங்காரனைப்போல் கட்டுக்களை இந்திரனோடு நாங்கள் நீக்குகிறோம். ௪ எல்லா உயரிய பொருள்களை அடையும் வீடே! நான் உனது கட்டைகளின் கட்டுக்களின் பக்கங்களின் பந்தமான புல்லின் பந்தங்களை நாங்கள் பிரிக்கிறோம். ௫ பிணைப்புக்களின் பலதங்களின் பரவும் பூஜ்ய பத்தினியின் பந்தங்களை நாங்கள் பிரிக்கிறோம். ௬ நாங்கள் உன்னில் பந்தஞ் செய்துள்ள சார்புகளை உனக்குப் பிரிக்கிறோம்: பூஜ்ய பத்தினியே! நீ உறுதியாகி எங்கள் உடம்புக்கு பிரியாத மங்களகரமாகவும். ௭ தேவியான சாலையே! நீ அவிதரிப்பவள், அக்கினி சாலை, மனைவிநிலயம், தேவஸ்தானம். ௮ நாங்கள் விட்டத்தில் சேர்த்து கட்டப்பட்டு உச்சிபோலாகி வியாபகமாயுள்ள ஆயிரங்கண்களான ஜாலத்தை பிரமத்தால் பிரிக்கிறோம். ௯ சாலையே! உன்னை கிரகிப்பவனும், உன்னைக் கட்டுபவனும், மனையின் மனைவியே! மூப்பு வரை வாழ்க. ௧௦ திடமாய் திட்டஞ் செய்யப்பட்டு சுந்தரமாக்கப்பட்டுள்ள நீ, ஒவ்வொரு அங்கமும் ஒவ்வொரு சந்தியும் எங்களால் பிரிக்கப்படும் நீ இவனுக்கு அநுகூலமாய்-செல். ௧௧ வீடே! உன்னைக் கட்டியவனும் வனஸ்பதிகளை ஒன்று சேர்த்தவனும், வசதியே! பரமேஷ்டியான பிரஜாபதியான அவன் பிரசைக்காக உன்னைச் செய்துள்ளான். ௧௨ அவனுக்கு நமஸ்காரம், அளிப்பவனுக்கு நமஸ்காரம், சாலைபதிக்கு நமஸ்காரம்: அக்கினிக்கு நமஸ்காரம்: உனது புருஷனுக்கு நமஸ்காரம். ௧௩ பசுக்களுக்கும் குதிரைகளுக்கும், வீட்டில் சனனமாகும் எதற்கும் நமஸ்காரம்: சனனம் மிகுபவள் நீ: பிரஜை

மிகுபவள் நீ, நாங்கள் உனது பந்தங்களை பிரிக்கிறோம். ௧௪ நீ பசுக்களோடான புருஷர்களுக்கு நெருப்புக்கு நிழலளிக்கிறாய்; சனனம் மிகுபவள் நீ; பிரஜை மிகுபவள் நீ; நாங்கள் உனது பந்தங்களைப் பிரிக்கிறோம். ௧௫ ஜோதிக்கும் புவிக்கும் நடுவே எத்தனை வெளியுண்டோ அதனுடன் உனக்கு இந்த வீட்டை கிரகிக்கிறேன்; வெளி வியாபகமான வானத்தை நான் வஸ்துக்களின் வயிறாகச் செய்கிறேன்; அதனுடன் நான் இப்புருஷனுக்கு இந்த வீட்டை கிரகிக்கிறேன். ௧௬ விசுவான்னந் தரிப்பவளே! புவியில் தாபனமாகி பொருத்தப்பட்ட நீ, உணவு மிகும் வெகு உறுதி வசதியே! உன்னைக் கிரகிப்பவர்களைச் சிறுமை செய்யாதே. ௧௭ புல்லால் வேய்ந்த பலதமணியும்[1] நீ, வசதியாயும் இரவைப் போல் சீவர்களின் வாசஸ்தானமுமான நீ, வையத்தில் பொருத்தப்பட்ட நீ பெண் யானைபோல் பாத முள்ளவளாய் நிகிழ்கிறாய். ௧௮ பாயால் வேய்ந்துள்ள வேய்வை நான் விலக்கி நீக்குகிறேன். வருணனால் இறுக அழுத்தப்பட்டுள்ளதை, காலையில் மித்திரன் திறப்பானாக. ௧௯ பிரமத்தால் பொருத்தப்பட்ட சாலையை, கவிகளால் நிலையாகி நிறுவப்படும் சாலையை அமிருதர்களது வசதியை இந்திராக்கினி சுகஞ்செய்யும் நிலயமாகச்செய்வார்களாக. ௨0 இது கூடில் கூண்டாகும், கோசத்தில் கோசம் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது: விசுவம் சனனமாகும் மானிடன் அங்கு ஜனன மாகிறான். ௨௧ இரு பக்கங்களுடன், நாலு பக்கங்களோடு, ஆறு பக்கங்களுடன் எண் பக்கங்களோடு, பத்து பக்கங்களுடன், மனையின் மனைவியில் அனல் இளங்கருவைப் போல சாய்ந்துள்ளான். ௨௨ வீடே! இடாற்று என்னை நோக்கும் உன்னை நோக்கி

---

1 வைக்கோலணியும்.

நான் வருகிறேன். அவ் வீட்டில் அக்கினியும் சலங்களும் ருதத்தின் முதல் கதவாகும். ௨௩ யக்ஷ்மம் நீங்கி, யக்ஷ்மம் அழிப்பவையான இந்த சலங்களை நான் கொண்டு வருகிறேன். நான் அமிருதமான அக்கினியுடன் சேர்ந்து கிருகங்களைப் பற்றுகிறேன். ௨௪ வீடே! பாசத்தை எங்களில் கட்டாதே: கனச் சுமையான நீ இலேசாகவும்: நாங்கள் உன்னை மணப் பெண் போல எங்கு விருப்பமோ அங்கு எடுத்துச் செல்லுகிறோம். ௨௫ கீழ்த்திசையி னின்று, வீட்டின் மகிமைக்கு வணக்கம்: நல்வரவுக்காகும் தேவர்களுக்கு சுவாஹா! ௨௬ தென் திசையினின்று ......சுவாஹா! ௨௭ மேற் திசையினின்று............ சுவாஹா! ௨௮ வட திசையினின்று..........சுவாஹா! ௨௯ நிலைத் திசையினின்று......சுவாஹா! ௩௦ உச்சி திசையினின்று.......சுவாஹா! ௩௧ ஒவ்வொரு திசையி னின்று.......சுவாஹா. [௯. ௩. ௧—௩௧]

௪௪௭ விருஷபம் [பிரம்மா—விருஷபம்]

௧ ஆயிரத்தின் பிரகாசமுள்ள விருஷபன் பால் மிகுந்து தன் காயங்களில் விசுவ ரூபங்களை தரிக்கும் அவன், அளிக்கும் யஜமானனுக்கு, மங்களத்தைச் செய்ய விரும் பும் அவன் பிரகஸ்பதியின் சிகப்பன் இழையை விசாலஞ் செய்துள்ளான். ௨ ஆதியில் சலங்களின் பிரதிமை யாயும் தேவியானத் தரணியைப்போல் சர்வத்தின் பிரபு வாயும் பாலர்களின் பிதாவாயும், பசுக்களின் பகுதியு மான அவன் எங்களை ஆயிரம் வகைப் புஷ்டியில் ஸ்தாபிப் பானாக. ௩ அவன் கருத்தரிக்கும் ஆண், அசைவற்றவன் பால் மிகுபவன்; வசுக்களின் காயந்தரிக்கும் விருஷபன்: அக்கினி ஜாதவேதஸன் அந்த அவியான அவியை அமரர்

---

௪௪௬ கருத்து—மனையே மகிழ்வளிக்கும் நிலயமாகும்.

செல்லும் வழிகளால், இந்திரனுக்கு வகித்துச் செல்வா னாக. ௪ கன்றுகளின் தந்தை பசுக்களின் பதி. பெரிய நீர்ச்சுழல்களின் பிதா : கன்று நஞ்சுக்கொடி புதுப்பால் சீம்பால்கள் தயிர் நெய்—அது அவனது இரேதஸாகும். ௫ அவன் தேவரது பாகச்சுவை, சல நெய், ஔஷத இரஸம். சக்திமிகுந்த அவன் ஸோமனது புசிப்பைப் பற்றியுள்ளான். பெருங்கல் அவனது காயமாயிற்று. ௬ ஸோமனால் பூரணமாகுங் கலசத்தை நீ தரிக்கிறாய் : நீ உருவங்களின் துவஷ்டா. ஜனனன் ; இங்குள்ள பிரஜன சக்திகள் உனக்கு மங்களகரமாகுக : கோடரியே ! அங்குள்ளவையை எங்களுக்குத் திரமாக்கு. ௭ அவன் வெண்ணையைச் சுமக்கிறான். அவனது இரேதசு நெய்யாகும். ஆயிரம் வகையான போஷணையை அவர்கள் யக்ஞமெனச் சொல்லுகிறார்கள். தேவர்களே ! தத்தனை விருஷபன் இந்திரனது ரூபத்தைத் அணிந்து மங்களமளிப்பவனாய் எங்களில் நிகழ்வானாக. ௮ அவன் இந்திரனுடைய ஓஜஸு, வருணனது கைகள் : அசுவினிகளது தோள்கள் : இந்தத் திமில் மருத்துகளதாகும் ; கவிகள் தீரர்களான மானிடர்கள் அவனை இப்படிக் குவிந்துள்ள பிரகஸ்பதி எனச் சொல்லுகிறார்கள். ௯. பால் மிகுந்த நீ தேவசனத்துக்குப் பரவுகிறாய் ; அவர்கள் உன்னை இந்திரன் என அழைக்கிறார்கள் ; உன்னை சரஸ்வந்தம் எனச் சொல்லுகிறார்கள் : பிராமணனுக்கு விருஷபத்தை ஆஹுதியாக யளிக்கும் ஒரு முகமுள்ளவனுக்கு அவன் ஆயிரம்—பசுக்களை—யளிக்கிறான். ௧௦ பிரகஸ்பதியும் ஸவிதாவும் உன்னில் வலிமையை யளித்துள்ளார்கள் : வாயு, துவஷ்டாவினிடமிருந்து உனது ஆத்மா கொண்டு வரப்பட்டுள்ளது ; நான் உன்னை வானத்தில் மனத்தால், ஆஹுதி செய்கிறேன். ஜோதியும் புவியும்

உனது கருப்பையாகுக. ௧௧ பிராமணன், தேவர்களில் இந்திரன் சலனமாவதுபோல், பசுக்களில் முழக்கமாகும் விருஷபத்தின் அங்கங்களைத் பிராமணன் மங்களத்துடன் துதிப்பானாக. ௧௨ அவனது பக்கங்கள் அனுமதியினதாகும். அவன் விலாக்கள் பகனதாகும், அவனது முழங்கால்களைக் குறித்து மித்திரன் சொல்வதாவது—அவை முற்றும் எனதாகும். ௧௩ அவனது பின்பாகங்கள் ஆதித்தியர்களுடையது: அவனது இடைப்பாகங்கள் பிரகஸ்பதியினதாகும். அவனது வால் தேவக்காற்றினதாகும்; அவன் அதனால் ஔஷதங்களை அலைக்கிறான். ௧௪ அவனது குதபாகம் ஸினீவாலியினதாகும். அவர்கள் அவனது சர்மத்தைச் சூரியனது எனச் சொல்லுகிறார்கள். அவர்கள் விருஷபத்தை சித்தமாக்குங்கால், ௧௫ அவனது மார்பு ஜாமிசஸயனதாகும்: எல்லா தேவர்களும் ஒன்று சேர்ந்து விருஷபத்தைச் சித்தமாக்குங்கால் அவனது கலசம் ஸோமனதாக தரிக்கப்பட்டது. ௧௬ அவனது குஷ்டிகங்கள் ஸரமாக்காகும்: அவர்கள் குளம்புகளை ஆமைகளுக்களித்தார்கள்: அவனது உதரத்தின் பொருள்களை சுவவர்த்தங்களான கீடங்களுக்குத் தாங்கினார்கள். ௧௭ அவன் தனது கொம்புகளால் அரக்கர்களைத் தள்ளுகிறான்: தனது கண்ணால் குறையைக் கழிக்கிறான்: கடுமைக்காகாத பசுக்களின் தலைவன் நலத்தைக் காதுகளால் கேட்கிறான். ௧௮ அவன் நூறு யக்ஞங்களால் யஜிக்கிறான்: அவனை அக்கினி எரிப்பதில்லை: பிராமணனுக்கு விருஷபத்தை யளிப்பவனுக்கு எல்லா தேவர்களும் துரிதஞ் செய்வார்கள். ௧௯ பிராமணனுக்கு விருஷபத்தை யளித்து—ஒருவன்—தனது மனத்தை விசாலஞ்செய்து கொள்ளுகிறான்: அவன் தனது கோஷ்டத்தில் கடுமைக்காகாத—பசுக்களின்—புஷ்டியைக் காண்கி

றுன். ௨௦ பசுக்கள் பெருகுக: பிரஜை எல்லாம் இன்னும் தேகபலம் ஓங்க, இந்த சர்வத்தையும் தேவர்கள் விருஷப மளிப்பவனுக்கு அநுமதிப்பார்களாக. ௨௧ இந்தப் புஷ்டியான இந்திரன் இவனே பிரசித்தமான பொருளை யளிப்பானாக: இவன் நித்தியப் பசுவுடன் நன்கு கறக்கும் பசுவைத் தருவானாக; இவன் புலன் ஜயிக்கும் அறிஞனை ஜோதிக்கப்பால் கறப்பானாக ௨௨ பிசங்க ரூபனாய், புயலனாய், பல மளிக்கும் இந்திரனின் திடத்துடன் விசுவ ரூபனான இவன், எங்களில் ஆயுளையும், பிரஜையையும், அளிப்பவனாய், எங்களுக்கு வந்துள்ளான். இவன் செல்வச் செழுமைகளுடன் எங்களுக்குச் சேர்வானாக. ௨௩ நெருங்கியவனே! இங்கு இக்கொட்டத்தில் நீ எங்களருகிலாகவும். எங்களுக்கு விருஷபத்தின் இரேதஸையும், இந்திரனே! உனது வீரத்தையும் எங்களுக்களி. ௨௪ இந்த இளங்—காளையை இங்கு உங்கள் பக்கம் ஸ்தாபிக்கிறோம். உங்களது விருப்பங்களநுசரித்து விளையாடுபவர்களாய் அவனுடன் செல்லுங்கள். ஸுபாகர்களே! சீவனில் எங்களை விட்டுவிட வேண்டாம். செல்வச் செழுமைகளுடன் எங்களில் நீங்கள் சேருங்கள். [௯. ௪. ௧—௨௪]

௪௪அ அஜன் [பிருகு—பஞ்சோதன தேவதை]

௧ அவனை இங்கு கொண்டுவா: அவனைப் பிடி: நன்கறிபவனாய் நலஞ் செய்யும் உலகத்துக்கு அவன் செல்வானாக. வெகு பலவிதமாய் அதிதமங்களைக் கடந்து அஜன் மூன்றுவ துலகத்துக்கு போவானாக. ௨ நான் உன்னை இந்திரனுக்குப் பாகமாயும், இந்த யக்ஞத்தில் யஜமானனுக்கு அறிஞனையும் அழைத்துச் செல்லுகிறேன். எங்களை

௪௪௭ கருத்து—காளையால் கீர்த்தியுண்டாகும்.

வெறுப்பவர்களை நீ யநுசரித்துப் பற்று: யஜமான னுடைய வீரர்கள் குற்றமற்றவர்கள். ௩ அவன் பாதத்தி னின்று அவன் சலனமாகியுள்ள எல்லா சிதைவையும் நீ சுத்தமாக்கு. அதிகம் அறியும் அவன் சுத்தக் குளம்புக ளுடன் முன் செல்வானாக. இருளைக் கடந்து அஜன் மூன்றாவது நிலயத்துக்குப் போவானாக. ௪ விசஸ் தனே[1] புகழ் வாய்ந்தவனே—இந்தச் சருமத்தை கருமை யால், சக்தியால், கணுக் கணுவாய் வெட்டு. அவனைத் துன்பஞ் செய்யாதே, அவனுக்குத் தீமை புரியாதே! அவனை அங்க மங்கமாய் பக்குவமாக்கு. அவனை மூன் றாவது நிலயத்தில் ஸ்தாபனஞ் செய். ௫ நான் றிக்கினால் அக்கினியில் குடத்தை வைக்கிறேன், நீ சலத் தைப் பொழி, அவனை ஸ்தாபி, சாந்தஞ் செய்பவர் களே! அவனை அக்கினியால் சூழுங்கள். அவன் பக்குவ மானதும் நற்செயலு லகத்துக்குச் செல்வானாக. ௬ நீ பூரண தாபமுடனால் தாபபாண்டத்தினின்று மூன்றா வது நிலயத்துக்கு இங்கிருந்து ஆக்கிரமி. அக்கினியான நீ அக்கினியினின்றும் வந்துள்ளாய். ஜோதி யுலகத்துக்கு உன் வழியை—வெல். ௭ அஜன் அக்கினியாவான் அவர் கள் அஜத்தை ஜோதி எனச் சொல்லுகிறார்கள். அஜத்தை சீவனுடனிருப்பவன், பிராமணனுக்கு அளிக்க வேண்டு மெனக் கூறுகிறார்கள்: இந்த உலகத்தில் சிரத்தையுடன் ஆடு அளிக்கப்பட்டால் அவன் அந்தகாரங்களை தூர மழித்து ஓட்டுவான். ௮ பஞ்சௌதன ஆடு, மூச்சோதி களுக்கு செல்லப்போகும் அவன் ஜீவிதமாய் போவானாக; யஜனங்க ளளித்துள்ள நற்செயல்—செய்பவர்களின்— நடுவே நீ போ. நீ மூன்றாவது நிலயத்தில் விரிந்து செல். ௯ அஜமே! நற்செயலுலகத்துக்கு ஏறு. விட்ட சரபம்

1 சாந்தமளிப்பவனே.

போல் நீ வழு வழிகளைக் கடந்து செல். பிராமணனுக்களிக்கப்பட்ட பஞ்சௌதனமானது, யளிப்பவனை இன்பத்தால் இன்பமாக்கும். ௧௦ தன்னை யளிப்பவனை அஜன் பரம நிலத்தின் முவ்வரம்பின் வரம்பான முச்சோதியான மூந்நிலயத்தில் ஸ்தாபிப்பான். பிராமணனுக்கு அளிக்கப்பட்ட பஞ்சௌதனமான நீ விருப்பங் கறக்கும் விசுவரூபமான ஏக பசு. ௧௧ பிதுருக்களே உங்களது இந்த ஜோதி மூன்றுவதாகும்: பஞ்சௌதனங்களுடன் அஜனை ஒருவன் பிராமணனுக் களிக்கிறான். இந்த உலகத்தில் சிரத்தையுள்ளவன் அளிக்கும் அஜன் தமங்களை வெகு தூரத்திலழிப்பான். ௧௨ யஜனங்கள் செய்துள்ள நற்செயல் உலகத்தை அடைய விரும்பி பஞ்சௌதன அஜனை ஒருவன் பிராமணனுக்களிக்கிறான். அந்த உலகத்தில் நீ பூரண வியாபகத்தை வெல்லு; கிரகிக்கப்பட்ட அவன் எங்களுக்கு சிவகரமாவானாக. ௧௩ ஞானம் மிகும் அறிஞனை அஜன் சக்தி மிகும் அக்கினியின் சோதியினின்று தோன்றியுள்ளான். யக்ஞம் பூரணம் அதி பூரண வஷட்டுடன் சேரும் இவனை தேவர்கள் பருவகாலங்களில் பக்குவம் செய்வார்களாக. ௧௪ அவன் மனையில் நெய்த உடையையும், தட்சிணையாக பொன்னையும் அளிக்கலாம்; இப்படியளிப்பவன் புவிச்சேர்க்கையால் பிரகாசம் பொருந்தும் உலகங்களைப் பூரணமாயடைகிறான். ௧௫ அஜனே! உனக்கு இந்த சௌம்யமாயும் திவ்யமாயும் நெய் முதுகுடன் தேன் சொட்டும் இந்த தாரைகள் வருக; பரமநிலயத்தின் ஏழு இரசிமிகளான வரம்பில் புவியையும் ஜோதியையும் ஸ்தாபனஞ் செய். ௧௬ நீ அஜன்; அஜனே! நீ சுவர்க்கஞ் செல்பவன்; அங்கிரஸன் உன்னால் அந்த உலகத்தை நன்கறிகிறான்; அப்புண்ணிய உலகத்தை நானுமறிய விரும்புகிறேன். ௧௭ அக்கினியே! நீ எதனால் ஆயிரத்

தைச் சுமக்கிறாயோ, எதனால் அகண்ட அறிவை—தரிக்கிறாயோ—அதனால் எங்களுக்கு இந்த யக்ஞத்தை தேவர்களில் சுவர்க்கமனாகச் செலுத்து. ௧௮ பஞ்சௌதனமுள்ள[1] பக்குவமான அஜன், நிர்ருதியை வதைத்து ஒருவனை சுவர்க்க உலகத்தில் ஸ்தாபிப்பான்; நாங்கள் அவனால் சூரியனை அடைந்துள்ள உலகங்களை ஜயிப்போம்.
௧௯ சனத்திலே, பிராமணத்திலே வைக்கப்பட்டுள்ள அஜனை, அஜத்தின் ஓதனத்துளிகளை, வழிகளின் நடுவே சுகிருத உலகத்திலே அக்கினியே! எமது என நீ அறி.
௨௦ இங்கு முதன்மையாய் அஜன் ஆக்கிரமித்தான். இப்புவி-அவனது ஸ்தனமாயிற்று: சோதி அவனது முதுகு, வானம் அவனது நடுவு, திசைகள் அவனது பக்கங்கள், கடல் அவனது குடலாயிற்று. ௨௧ சத்தியமும் ருதமும் அவனது கண்கள்; விசுவ சத்தியமும் சிரத்தையும் அவனது பிராணன். விராஜன் அவனது சிரமாகும். பஞ்சௌதனங்களோடான இந்த அஜன் அபரிமிதமான யக்ஞமாவான். ௨௨ தட்சணை சோதியான பஞ்சௌதன அஜனைத் யளிப்பவன், அபரிமிதமான யக்ஞத்தை யடைகிறான்: அபரிமிதமான உலகத்தைப் பற்றுகிறான். ௨௩ அவன் அவனது என்புகளைப் பிளக்கவேண்டாம்; அவன் அவனது மச்சைகளைப் பருக வேண்டாம். அவன் அவனைப் பூரணமாகப் பற்றி, அவனை இங்கு இங்கே நுழையச் செய்வானாக. ௨௪ இது அவனது ரூபமாகும். இதனால் ஒருவன் அவனை ஒருவன் ஒன்று சேரச் செய்கிறான். தட்சிணையின் சோதியுடன் பஞ்சௌதன அஜனை யளிப்பவனுக்கு அவன் உணவு, உறுதி உயர்வைக் கறக்கிறான்.
௨௫ தட்சிணையின் சோதியுடன் பஞ்சௌதன அஜனை யளிப்பவனுக்குப் பஞ்ச பூஷணங்கள் பஞ்ச புதிய உடை

1 பஞ்சப்பிராணனுள்ள

கள், பஞ்ச பசுக்கள் விருப்பமும் பூர்த்தியுமாகும். ௨௬ அவனுக்குப் பஞ்ச பூஷணங்கள் சோதியாகும்: அவனது உடைகள் அவனது காயக் காப்பு: தட்சிணையின் சோதியுடன் பஞ்சௌதன அஜனை யளிப்பவன் சுவர்க்க உலகத்தை யடைகிறான். ௨௭ பூர்வபதியை யடைந்து அப்பால் வேறு பதியை யடைபவள் பஞ்சௌதன அஜனை யளித்தால் அவர்கள் பரஸ்பரம் பிரியாமலாவார்கள் ௨௮ தட்சிண சோதியான பஞ்சௌதன அஜனை அளிக்கும் மறுபதி, மறுமண மனைவியுடன் சமான உலகத்தில் சேர்கிறான். ௨௯ கன்றுக்குப்பின் கன்றை யளிக்கும் பசுவை சுமைக் காளையை, தலையணையை உடையை தங்கத்தை, யளிப்பவர்கள் உத்தம சோதிக்குச் செல்வார்கள். ௩0 ஆன்மாவை, அச்சனை, மகனை, பேரனை, பாட்டனை, மனைவியை, சனனஞ் செய்யும் அன்னையை, அன்போடுள்ளவர்களை, நானழைக்கிறேன். ௩௧ "நைதாகம்"[1] ஸதா எரியும் மண்டலம்—என்னும் ருதுவை அறிபவன்—சொல்வதாவது பஞ்சௌதன முடனான அஜனே "நைதாகம்" என்னும் ருது: அவனே அமித்திரனான பகைவனது பாக்கியத்தை எரிக்கிறான்; தட்சிண ஜோதியுடன் பஞ்சௌதன அஜத்தை யளிப்பவன் தானே வளர்கிறான். ௩௨ செய்கை என்னும் ருதுவை யறிபவன், அமித்திரப் பகைவனது செய்கைச் செல்வம் ஒவ்வொன்றையும் தனக்குப் பற்றிக் கொள்ளுகிறான்; பஞ்சௌதனங்களோடான அஜனே ருதுவான 'செய்கை'—வருஷ காலம். அவனே அமித்திரனை பகைவனது பாக்கியததை எரிக்கிறான்: தட்சிண ஜோதியுடன் பஞ்சௌதன அஜத்தை யளிப்பவன் தானே வளர்கிறான். ௩௩ 'சங்கம' என்னும் ருதுவை யறி

1 கிரீஷ்மருது; சதா தாபமுடனாகும் நிலை.

பவன், அமித்திரனது ஒவ்வொரு செல்வச் சங்கத்தை யும், தனக்கேப் பற்றிக்கொள்ளுகிறுன்: பஞ்சௌதனங் களுடனுன அஜனே 'சங்கம்'[1] என்னும் பெயருள்ள ருது. அவனே அமித்திரனுை அரிச் செல்வத்தை எரிக்கிறுன். தட்சிணை சோதியுடன் பஞ்சௌதன அஜத்தை யளிப் பவன் தானே வளருகிறுன். ௩௪ புஷ்டி[2] என்னும் ருதுவை யறிபவன் அமித்திரப் பகைவனது ஒவ்வொரு செல்வப் புஷ்டியையும் தனக்கே பற்றுகிறுன்; பஞ்சௌ தனங்களுடனுன அஜனே புஷ்டி என்னும் பெயருள்ள ருது; அவனே அமித்திரனுை அரிச் செல்வத்தை எரிக் கிறுன். தட்சிணை சோதியுடன் பஞ்சௌதன அஜத்தை யளிப்பவன் தானே வளர்கிறுன். ௩௫ உதயன்[3] என் னும் ருதுவை யறிபவன் அமித்திரனது ஒவ்வொரு உத யச் செல்வத்தையும் தனக்குப் பற்றிக் கொள்ளுகிறுன்: பஞ்சௌதனங்களுடனுன அஜனே உதயன் என்னும் ருது; அவனே அமித்திரனுை பகைவனது செல்வத்தைப் எரிக்கிறுன்; தட்சிணை சோதியுடன் பஞ்சௌதன அஜனை யளிப்பவன் தானே வளர்கிறுன். ௩௬ ஜயன்[4] என் னும் ருதுவை யறிபவன் அமித்திரனது ஒவ்வொரு ஜயச் செல்வத்தையும் தனக்குப் பற்றிக் கொள்ளுகிறுன்: பஞ் சௌதனங்களுடனுகும் அஜனே ஜயன் என்னும் ருது; அவனே அமித்திரனுை அரிச் செல்வத்தை எரிக்கிறுன்: தட்சிணைச் சோதியுடன் பஞ்சௌதன அஜனை யளிப்பவன் தானே வளர்கிறுன். ௩௭ நீங்கள் அஜனையும், பஞ்ச பஞ்சௌதனங்களையும் பக்குவமாக்குங்கள்: எல்லாத் திசைகளும் ஒரே மனத்துடனுகி இடைத் திசைகளுடன் ஒன்று சேர்ந்து அவனை உன்னிடமிருந்து கிரகித்திடுக. ௩௮ அவர்கள் உனக்கு உனது அஜனை காப்பார்களாக;

1 சரத்ருது. 2 ஏமந்தம். 3 சிசிர ருது. 4 வசந்தம்

நான் அவர்களுக்கு இந்த அவியை, நெய்யை யளிக்கிறேன். [௯. ௫. ௧—௩௮]

௪௪௯ அதிதி [பிரமன்—ஸத்பரியாய ஆதித்திய உத வித்தியா தேவதை]

௧-௨ எவனது சேர்க்கைகள் சாதனங்களோ, முதுகுத்தண்டு ருக்குக்களோ, எவனது உரோமங்கள் சாமன்களோ, எவனது இருதயம் யஜுர் என மொழியபடுகின்றதோ, எவனது சயனம் அவியோ, அந்தப் பிரத்தியட்சப் பிரம்மத்தை யறிபவனே—அறிஞன். ௩ அதிதிபதி அதிதிகளை எதிர்காணுங்கால் தேவயஜனத்தைக் கருதுகிறான். ௪ அவன் அவர்களுக்கு வந்தனஞ் செய்யுங்கால், தீட்சையை யடைகிறான்; சலமளிக்குங்கால்—யக்ஞ சலங்களைக் கொண்டுவருபவனாவான். ௫ யக்ஞத்தில் அளிக்கப்படும் எச்சலங்களுண்டோ அந்த சலங்களே இவை. ௬ அவர்கள் தருப்பணத்தைத் தருங்கால், அது அக்கினி சோமனுக்குக் கட்டப்பட்டுள்ள பசுப்போலாகும். ௭ அவர்களுக்குத் தங்கும் நிலயங்களைச் செய்யுங்கால், அவர்கள் யக்ஞ—ஸ்தானம், அவி தரிப்புக்களைச் செய்பவர்களாவார்கள். ௮ அவர்கள் அங்கு சயனம் விரிப்பது, தருப்பையாகும். ௯ அவர்கள் அங்கு கொண்டுவரும் சயன—சால்வையால் சுவர்க்க உலகத்தை ஒருவன் அடைகிறான். ௧௦ அவர்கள் அங்கு கொண்டு வரும் பாயும் தலையணையும்—யக்ஞ—சுற்றுக்களாகும். ௧௧ அவர்கள் அங்கு கொண்டுவரும் மையும், தேய்ப்பும் நெய்போலாகும். ௧௨ புசிப்புக்கு முன் அவர்கள் அங்கு கொண்டுவரும் சிறு உணவே இரு புரோடாசங்கள்.

---

௪௪௮ கருத்து. அஜன் என்னும் ஆத்மாவை அறிந்தால் காலனின் வெகு ரூபங்களை யறியலாம்.

௧௩ அங்கு உணவு செய்பவனை, அழைப்பது அவிகள் செய்பவனை அழைப்பதாகும். ௧௪ அங்கு சிதறியுள்ள அரிசி யவதானியங்களே சோமகண்டங்கள். ௧௫ உரலும் உலக்கைகளும் சோம பிழி—சிலைகளாகும். ௧௬ சல்லடை சோம பவித்திரமாகும் உமி சக்கையாகும்: சலங்களே பொழியும் தாரைகள். ௧௭ கரண்டி யக்ஞ அகப்பை கிளர் காம்பு சலாகை, கும்பங்கள் துரோண கலசங்களாகும்; பருகும் பாண்டங்கள் வாயுவினதாகும்: இந்தப் புவியே கரும்மானின் சருமமாகும். ௧௮ அதிதி பதி அவசியப் பொருள்களைப் புலனுக்கி அதிதிக்கு—இது அதிகமா அல்லது இதுவோ! எனச் சொல்லுங்கால் அவன் தனக்கே யஜமானனது பிராமணனைச் செய்து கொள்பவனுகிறுன். ௧௯ 'அதிகமாயுள்ளதை எடுத்துக் கொள்' என அவன் சொல்லுங்கால் அவன் தனது சுவாசத்தை நீளஞ்செய்து கொள்ளுகிறுன். ௨௦ அவன்—அதை—அளிக்கிறுன்: அவன் அவிகளை அருகில்கொண்டு வருகிறுன். ௨௧ அருகில் கொண்டு வந்தவற்றை அதிதி ஆத்மாவில் ஆஹுதி செய்துகொள்ளுகிறுன். ௨௨ தனது கை என்னும் கரண்டியால் சுவாசம் என்னும் யூபத்துடன் புசிக்கும் துவனியான வஷட்காரத்துடனுன, ௨௩ இந்த அதிதிகளே பிரியமும் பிரியமற்றவர்களும் ரித்விக்குக்களுமாக ஒருவனை சுவர்க்க உலகத்துக்குச் செல்லச் செய்கிறுர்கள். ௨௪ இங்ஙன மறிபவன், வெறுத்துப் புசிக்காமல், வெறுப்பவனது உணவையும் புசிக்காமலாவாளுக; சந்தேகமுள்ள—உணவையும்—சந்தேகியின்—உணவையும்—புசிக்கவேண்டாம். ௨௫ எவனது உணவை அவர்கள் புசிக்கிறுர்களோ, அவனுடைய பாவங்களெல்லாம் பாழாகும். ௨௬ எவனது உணவை அவர்கள் புசிப்பதில்லையோ அவனுடைய பாவங்களெல்லாம் மழி

யாது. ௨௭ உணவை—யளிப்பவன் எப்பொழுதும்—ஸோமபிழி—சாதனங்களை செம்மையாகவும், பவித்திரத்தை ஈரமாயும், விசால யக்ஞத்தை பூரணமாக்குஞ் சக்தி செய்பவனாயுமுள்ளான். ௨௮ அளிப்பவனது—செயலே பிரஜாபதிக்கான விசால யக்ஞம். ௨௯ அளிப்பவன் பிரஜாபதியின் சலனங்களை யநுசரிக்கிறான். ௩௦ அதிதியின் அனலே ஆஹவனீயமாகும், மனைத்தீ காருகபத்தியம். சமைக்கும் நெருப்பே தட்சிணாக்கினி. ௩௧ அதிதிக்கு முன்னர் புசிப்பவன் வீடுகளின் பூர்த்தியையும் யக்ஞத்தையும் புசிப்பவனாவான். ௩௨ அதிதிக்கு முன்னர் புசிப்பவன் மனைகளின் இரஸத்தையும் பாலையும் பருகுபவனாவான். ௩௩ அதிதிக்கு முன்னர் புசிப்பவன் வீடுகளின் புஷ்டியையும் பலத்தையும் புசிப்பவனாவான். ௩௪ அதிதிக்கு முன்னர் புசிப்பவன் வீடுகளின் பிரஜையை பசுக்களைப் புசிப்பவனாவான். ௩௫ அதிதிக்கு முன்னர் புசிப்பவன் வீடுகளின் புகழையும் பெருமையையும் புசிப்பவனாவான். ௩௬ அதிதிக்கு முன்னர் புசிப்பவன் வீடுகளின் ஸ்ரீயத்தையும் சிறப்பையும் புசிப்பவனாவான். ௩௭ வேதமறிந்தவன் அதிதி. அவனுக்கு முன்னர் ஒருவன் புசித்தல் கூடாது. ௩௮ யக்ஞாத்ம சம்பூரணத்துக்கு யக்ஞ நேர்மைக்கு அதிதி புசித்தபிறகே அவன் புசிக்கவேண்டும். அதுவே விரதம். ௩௯ பசுவினிடமிருந்து வரும் பால் அல்லது மாமிசம் தனிச் சுவையுள்ளதாகும்: அதிதிக்கு முன்னால்—அதைப் புசித்தலாகாது. ௪௦ இப்படி அறிந்து பால் பொழிந்து யளிப்பவன் பூரண வெற்றியுடனான அக்கினிஷ்டோம யக்ஞத்தினாலாகும் எத்தனை பயனுண்டோ அத்தனை—பயனை—இதனால் அவன் அடைகிறான். ௪௧ இப்படி அறிந்து வெண்ணெய் பொழிந்து யளிப்பவன்

பூரண வெற்றியுடனான அதி இராத்திர யக்ஞத்தினாலா கும்........அடைகிறான். ௪௨ இப்படி அறிந்து தேன் பொழிந்து யளிப்பவன் பூரண வெற்றியுடனான 'சத்திர சத்திய' யக்ஞத்தினாலாகும்........அடைகிறான். ௪௩ இப்படி யறிந்து மாமிசம் பொழிந்து அளிப்பவன் பூரண வெற்றியுடனான பன்னிரண்டு தின யக்ஞத்தினாலாகும்.... அடைகிறான். ௪௪ இப்படியறிந்து சலம் பொழிந்து அளிப்பவன் பிரசைகளின் பிரசனனத்துக்காக திரமான நிலையை யடைகிறான். அவன் பிரசைகளுக்குப் பிரியனா கிறான். இப்படியறிந்து சலம் பொழிபவன்—அதை— யளிக்கிறான். ௪௫ அவனுக்கு உஷை ஹிங்காரஞ் செய் கிறாள்: அவனுக்கு சவிதா முன் துதிசெய்கிறாள்: பிரகஸ் பதி பலத்துடன் உச்சகானஞ் செய்கிறான்; துவஷ்டா புஷ்டியுடன் மறுமொழி கூறுகிறான்: விசுவே தேவர்கள் நிதனமாவார்கள்: இதனை யறிபவன் செல்வம் பிரஜை, பசுக்களின் நிலயமாகிறான். ௪௬ அவனுக்கு உதயசூரியன் ஹிங்காரஞ் செய்கிறான்; உதயகாலை முன் துதிசெய்யும்: பகல் உத்கீதகானஞ் செய்யும்: பிற்பகல் மறுமொழியளிக் கும்; சாயுஞ் சூரியன் நிதனமாவான்: இதனை....நிலயமாகி றான். ௪௭ அவனுக்கு மழை மேகம் ஹிங்காரஞ் செய் யும்: இடி முழங்குங்கால்—அது—முன் துதி செய்யும்: மின்னுங்கால் அது மறுமொழியளிக்கும்: மழைபொழி யுங்கால் அது உத்கீதகானஞ் செய்யும்: நிற்குங்கால் அது நிதனமாகும்; இதனை....நிலயமாகிறான். ௪௮ அவன் அதிதிகளைப் பார்க்கும்—கால்—அவன் ஹிங்கா ரஞ் செய்கிறான்; அவன் வரவு கூறுங்கால் முன் துதி செய்கிறான்; அவன் சலத்தையளிக்குங்கால் உத்கீதகா னஞ் செய்கிறான்; அவன்—உணவை—யளிக்கிறான். மறு மொழியளிக்கிறான். உச்சிஷ்டம் நிதனமாகும். இதனை....

நிலயமாகிறான். ௪௯ காப்போனை அவன் கூப்பிடுங்கால் அவன் கற்பிப்பவனாவான். ௫௦ அவன் சம்மதிக்குங்கால் அழைப்பை சுவீகரிப்பவனாவான். ௫௧ கைகளில் பருகும் பாண்டங்களுடன் முன் சென்று உபசாரஞ்செய்யும் இருவர்கள்—ஸோம—பாண்டந்தரிக்கும் அத்வர்யுக்களாவார்கள். ௫௨ அவர்களில் எவனும் யக்ஞத்துக்கு அனுருகனில்லை. ௫௩ அதிதி பதி அதிதிக்களித்து மனைக்குச் செல்லுங்கால் அவன் அவபிருதஸ்னானத்துக்குச் செல்லுபவனாவான். ௫௪ அவன் அவற்றைப் பங்கு செய்யுங்கால் அவன் தட்சிணைகளைப் பங்கு செய்பவனாவான்; அவன் அநுசரிக்குங்கால் யக்ஞஸ்தானத்தை அகற்றுபவனாவான். ௫௫ அழைக்கப்பட்டுள்ள அவன் புவியின்—இன்பங்களைப்—புசிக்கிறான். புவியில் விசுவரூபமாயுள்ள அதில், புவியில் அழைக்கப்பட்டுள்ள அவன் புசிக்கிறான். ௫௬ அழைக்கப்பட்டுள்ள அவன் வானத்தின் — இன்பங்களை..........................புசிக்கிறான். ௫௭ அழைக்கப்பட்டுள்ள அவன் ஜோதியின்................ .......புசிக்கிறான். ௫௮ தேவர்களில் அழைக்கப்பட்டுள்ள அவன் தேவர்களில் விசுவரூபங்களை தரிக்கும் அதில் அழைக்கப்பட்டுள்ள அவன் புசிக்கிறான். ௫௯ அழைக்கப்பட்டுள்ள அவன் உலகங்களில் புசிக்கிறான். உலகங்களில் விசுவரூபமான அதில் அழைக்கப்பட்டுள்ள அவன் புசிக்கிறான். ௬௦ அழைக்கப்பட்டுள்ள அவன் அழைக்கப்பட்டுள்ளான். ௬௧ அவன் இந்த உலகத்தை அடைகிறான்; அந்த உலகத்தை யடைகிறான். ௬௨ இப்படி யறிபவன் சோதிமிகுந்த உலகங்களை ஜயிக்கிறான். [௯. ௬. ௧—௬௨]

---

௪௪௧ கருத்து. அதிதி என்னும் விருந்தினை ஆத்மாவின் சேவையே யக்ஞம்.

நீக்குகிறோம். ௩ செவிகளின் வாயின் யக்ஷ்மம் எக்காரணத்தால் நீங்குமோ, அதனால் ஒவ்வொரு தலைநோயையும் நாங்கள் மந்திரத்தால் நீக்குகிறோம். ௪ புருஷனை ஊமையாகச் செய்வதையும், குருடனாகச் செய்வதையும், ஒவ்வொரு தலைநோயையும், நாங்கள் மந்திரத்தால்—மருந்து முறையால்—புறத்திலாக்குகிறோம். ௫ அங்கம் பிளந்து அங்கம் காய்ந்து சர்வாங்கத்திலான விஸல்பகத்தையும் உனது ஒவ்வொரு தலைநோயையும், மந்திரத்தால் நாங்கள் புறத்திலாக்குகிறோம். ௬ புருடனை பயமுடனாக்கும் பயங்கரப் பார்வையுடனாகும் ஒவ்வொரு விசுவசாரத்தான தக்மத்தை,[1] நாங்கள் மந்திரத்தால் புறத்திலாக்குகிறோம். ௭ ஊருக்களில் ஊறும் யட்சமத்தை அப்பால் இடைகளில் செல்வதை அங்கங்களின் அகத்திலுள்ளதை நாங்கள் மந்திரத்தால் புறத்திலாக்குகிறோம். ௮ காமத்தில், அகாமத்தில் இருதயத்தில் சனனமாகும், உனது இருதயம் அங்கங்களின் அந்த பலாச நோயை நாங்கள் மந்திரத்தால்[2] புறத்திலாக்குகிறோம். ௯ உனது அங்கங்களின் மஞ்சக் காமாலையை, அகத்திலுள்ள உனது உதரத்தின் அப்வானை,[3] உனது ஆத்மாவின் அகத்திலுள்ள யக்ஷ்மகாரணத்தை நாங்கள் மந்திரத்தால் புறத்தி லாக்குகிறோம். ௧௦ பலாசம் பஸ்மமாகுக; அது நோயுள்ள புற, நீராகுக. எல்லா யக்ஷ்மங்களின் விஷத்தை நான் உன்னிடமிருந்து விலக்குகிறேன். உனது வயிற்றின் காஹாபாஹம்[4] வெடிப்பின் வெளியாகி புறத்தில் பாய்க. எல்லா யக்ஷ்மங்களின் விஷத்தை நான் உன்னிடமிருந்து விலக்குகிறேன். ௧௨ நான் உனது வயிற்றின், நுரையீரலின் கொப்பூழின்

---

1 சுரத்தை. 2 தீர்க்காலோசனை செய்து அதனாலுண்டாகும் அறிவால். 3 வயிற்றுவலியை. 4 வாயுவினாலாகும் ஓசை முதலியன.

எல்லா யக்ஷ்மங்களின் விஷத்தை உன்னிடமிருந்து விலக்குகிறேன். ௧௩ உச்சி பிளந்து சிரம் துளைக்கும் அவை நோய் நீங்கி துன்பஞ் செய்யாமல் வெடிப்பில் வெளியாகி புறத்திலோடுக. ௧௪ இருதயத்துக்கு இன்னலளித்து முள்ளெலும்பில் விரியும் அவை, நோய் நீங்கி துன்பஞ் செய்யாமல், வெடிப்பில் வெளியாகி புறத்திலோடுக. ௧௫ இருபக்கங்களுக்கு வேதனையளித்து தசைகளில் தாக்கும் அவை, நோய் நீங்கி துன்பஞ் செய்யாமல், வெடிப்பில் வெளியாகி புறத்திலோடுக. ௧௬ குறுக்கில் வேதனையளிப்பவை உனது குட்சியில் குத்துபவை, நோய் நீங்கி, துன்பஞ்செய்யாமல் வெடிப்பில் வெளியாகி புறத்திலோடுக. ௧௭ குதங்களில் அசைபவை, அந்திரங்களில் கலக்குபவை, நோய் நீங்கி, துன்பஞ் செய்யாமல் வெடிப்பில் வெளியாகி புறத்திலோடுக. ௧௮ மஜ்ஜையைப் பருகும் அவை, சந்திகளைத் தனித்தனி சேதிக்கும் அவை, நோய் நீங்கி துன்பஞ்செய்யாமல் வெடிப்பில் வெளியாகி புறத்திலோடுக. ௧௯ அங்கங்களைம்யக்குமவை, உன்னைத் துளைக்கும் யக்ஷ்மங்கள்—விலகுக—எல்லா யக்ஷ்மங்களின் விஷத்தை, நான் உன்னிடமிருந்து நீக்கியுள்ளேன். ௨௦ விஸல்பகத்தினது,[1] விதரத்தினது[2] வாதீகாரத்தினது[3] அலஜத்தினது[4] எல்லா நோய்களின் விஷத்தை நான் உன்னிடமிருந்து நீக்கியுள்ளேன். ௨௧ உனது கால்களின் ஜானுக்களின் இடைகளின், நடுவின் முதுகுத்தண்டின் சிரத்தின், கண்டத்தின் நோயை நான் நீக்கியுள்ளேன். ௨௨ உனது கபாலத்தின் என்புகளும், இருதயத் துடிப்புக்களும் தீரமாயுள்ளன; சூரியனே! நீ உனது கிரணங்களின் உதயத்தில் தலைவலிகளை நீக்கியுள்

1 தேகவேதனையின். 2 பிளவையின். 3 வாதநோயின். 4 கண்வலியின்.

ளாய்; அங்க சேதிப்பை அமைதி செய்துள்ளாய்.
[௬. அ. க—உ௩]

௪௰உ அக்கினி—சூரியன் [பிரமன்—ஆதித்தியன்]

க நடுவிலுள்ள இலேயே இந்தப் பழைய வனப்புள்ள ஹோதாவினுடைய சகோதரன்[1] அவனுடைய மூன்றுவது[2] சகோதரன் நெய் வூரம்புள்ளவன்: நான் அங்கு ஏழு மக்கட்களுள்ள சனபதியை பார்த்தேன். உ ஏக சக்கர இரதத்தை எழுவர் இணைக்கிறார்கள். ஏழு[3] பெயர்களுள்ள குதிரை அதனை[4] இழுக்கிறது. இப்புவனங்களெல்லாம் அழியாமலும் அடிபடாமலுள்ள நிலைக்கும் வட்டத்துக்கு மூன்று பற்கள்[5] உண்டு. ௩ எழுவர் நிற்கும் இந்த இரதத்தை ஏழு குதிரைகள் இழுக்கின்றன, ஏழு வட்டமுள்ளது; பசுக்களின் ஏழு நாமங்கள் வைக்கப்பட்டுள்ள ஏழு சகோதரிகள்[6] அதற்கு ஒருமையுடன் கானஞ் செய்கிறார்கள். ௪ முதன்மையான அவனது ஜனன நிகழ்ச்சியை பார்த்தவன் யார்? எலும்புள்ளவர்களை தரிக்கும் எலும்புள்ளவன் யார்? புவியின் சுவாசம் ஆத்மா உதிரம் எங்கே! அறிபவனை வினவச் செல்பவன் யார்? ௫ இவ்வினிய பறவையின், வைக்கப்பட்டுள்ள, பதத்தை அறிபவன் புகலட்டும்? இவனது சிரத்தின் பாலை பசுக்கள் கறக்கும்; இவனது உடையை அணிந்து கொண்டு காலால் அவர்கள்[7] சலத்தை பருகியுள்ளார்கள். ௬ அபக்குவனான நான், மனத்தாலறி

---

1 இளைய சகோதரன் மின்னல் 2 உயரிய 3 ஏழு இரசிமிகள் 4 ஏழுபிரிவுகளுடன் பொருந்தும் சூரிய சோதியை 5 காலை பகல் மாலை 6 ஏழு பந்தங்கள் 7 இரசிமிகள்

௪௬க. கருத்து. மருந்துகளுக்கு எல்லையில்லை. நீயே யோசனை செய்து மருந்துகளைக் கண்டுபிடி.

யாத—மறைத்து—வைத்துள்ள இத்தேவ வழிகளை நான் வினவுகிறேன்; நன்கறிபவர்கள் நெய்வதற்கு ஏழு இழைகளை—எந்த—ஒருவயதுக் கன்றில் இசைத்துள்ளார்கள்? ௭ அறியாமலுள்ள நான் இங்கு அறியுங் கவிகளைக் கேட்கிறேன். தெரியமாலுள்ள நான் தெரியுமவர்களை வினவுகிறேன்; அஜத்தினுடைய ரூபம் போல் இந்த ஆறு உலகங்களையும் நிலை செய்தவன் ஒருவனோ? ௮ தாயானவள்[1] ருதத்தில் தந்தையை[2] யனுசரித்தாள்; ஆதியில் அவள் மனம் உள்ளத்துடன் அவனைச் சேர்ந்தாள்; நாணமுடனுன அவள் கலந்து கருப்ப இரசமுடனுள். அவர்கள் வணக்க மளித்து துதி செய்யச் சென்றார்கள். ௯ தட்சிணையின் கம்பத்தில் தாயானவள் இணைக்கப்பட்டாள். சக்தியாகும்—அணுக்களின் நடுவே கருப்பம் நின்றது. மூன்று யோசனைகளில் பசுவை யநுசரித்து கன்று கலித்தது. ௧௦ ஒருவன் மூன்று தாய்மார்களையும்[3] மூன்று தந்தைகளையுஞ் சுமந்து உயரமாய் நின்றான்; அவர்கள் அவனை ஆயாசமாக்குவதில்லை; அங்குள்ள சோதியின் வரம்பிலே, எல்லா மறியும் அவர்கள், ஒருவரும் அறியாத சொல்லைச் சிந்தனை செய்கிறார்கள். ௧௧ எல்லா புவனங்களும் நிற்கும் பஞ்ச பற்களுடனுள்ள வட்டமிடும் வட்டத்தில்—அதன் அச்சு அதிச் சுமையுடனுனுஞ் சூடாவதில்லை. ஆதிகாலத்தின் அது நடுவிலே தளர்ந்து விடுவதில்லை. ௧௨ தூரமான ஜோதியின் பாதியிலுள்ள 'புரீஷிணத்தில்' அவனை பஞ்சபாதம் ௧௨ ரூபங்களான தந்தை—யெனச்—சொல்லுகிறார்கள்; அப்பால் இன்னும் வேறு சிலர், அவனை—ஏழு வட்டம், ஆறு பற்களுள்ள விசேஷப் பார்வையில் ஸ்தாபிதன் என அவர்கள் சொல்லுகிறார்

1 புவி 2 சோதியை 3 முப்புவி

கள். கரு நஷ்டமாகாத கஉ பற்களுள்ள ருதத்தினுடைய வட்டம் ஜோதி சுற்றி வட்டமிடுகின்றது; அக்கினியே! அங்கு ஏழும் நூறுமான மக்கட்கள் இணைந்து நின்றார்கள். கச நல்ல சுற்றுடனுன அழியாத வட்டன் வட்டமிடுகின்றன்; பெருகியுள்ளதில் இணைந்துள்ள பதின்மர்[1] — அவனை—ச் சுமக்கிறார்கள்; எல்லா புவனங்களில் நிற்கும் இரஜஸோடு சூழ்ந்து சூரியனுடைய கண் செல்லும். கரு அவர்கள், ஸ்திரீகளை[2] எனக்கு புருஷர்கள் எனச் சொன்னார்கள். கண்களுள்ளவர்கள்—அவற்றைக்—காணலாம்; ஆனல் குருடன் காண்பதில்லை. அவற்றைக் கவியாயுள்ள மகன் கண்டுள்ளான். இவற்றை யெல்லாம் நன்கறிபவன் தந்தையின் தந்தையாவான். கசு உடன் பிறந்தவர்களில் எ—வதாயுள்ளவனை, அவர்கள் ஏகஜனன்[3] எனச் சொல்லுகிறார்கள். ஆறை[4] இரட்டையான தேவசனனம் என அவர்கள் சொல்லுகிறார்கள். நிலைகளுக்கேற்றவாறு அளிக்கப்பட்டுள்ள அவர்களுடைய யக்ஞங்கள் ரூபரூபங்களாய் விகாரங்களாகி திரமாவதற்கு விளங்கும், கஎ பரத்திர்க்குக் கீழாக இந்த கீழுக்கு மேலாக அவளது கன்றைக் காலில் தரித்து; பசு எழுந்துள்ளாள். எங்கு எத்திசைக்கு அவள் சென்றுள்ளாள்? அவள் எங்கு சனனஞ்செய்கிறாள்? அது இக்கூட்டத்திலில்லையே. கஅ பரத்துக்குக் கீழாக உயரத்துக்குத் தாழ்வாக கீழுக்குப் பரமாக, தன் தந்தையை யறிபவன் கவியாக தன்னை பிரகாசஞ் செய்து—கொள்ளும்—எவன் அவனை அறிவிப்பான்? எங்கிருந்து தேவமனம் தோன்றிற்று. கக இங்கு வருபவர்களை அவர்கள் செல்லுபவர்கள் எனவும், செல்லுபவர்களை வருபவர்கள் என

1 பத்து திசைகள். 2 ஸ்திரீபோலுள்ள சக்திகளை. 3 அதிக மாஸம். 4 ஆறு ருதுக்களை.

வும் அவர்கள் அழைக்கிறார்கள். இந்திரனே ! ஸோமனே ! நீங்கள் எவற்றைச் செய்தீர்களோ, இரஜ்ஜுவின் கம்பத்தில் இணைத்துள்ளதுபோல், அவற்றை அவர்கள் தரித்துச்செல்லுகிறார்கள். ௨௦ நன்கு சேரும் நண்பர்களான இரு சுபர்ணங்கள் சமான மரத்தைத் தழுவுகின்றன. அவற்றில் ஒன்று இனிய பிப்பலப்—பழத்தைப்—புசிக்கும். மற்றொன்று தின்னாமல் பார்க்கும். ௨௧ எந்த மரத்தில் தேன் புசிக்கும் சுபர்ணங்கள் எல்லாஞ் சாய்ந்து சனனஞ் செய்கின்றனவோ, அதனுச்சியில் எதனை இனிய பழம் என அவர்கள் சொல்லுகிறார்களோ, அதனை தந்தையை யறியாதவன் பற்றுவதில்லை. ௨௨ எங்கு சுபர்ணங்கள் சதாகாலம் அமிருத பானத்துக்கு, அறிவுடன் கானஞ் செய்கின்றனவோ ; அங்குள்ள விசுவ புவன தீரனை கோபன் அபக்குவனை என்னில் பிரவேசித்துள்ளான். [௧, ௧, ௧—௨௨.]

சருக ஆத்மஞானம் [பிரமன்—கௌ விராட் ஆத்மா தேவதைகள்]

௧ காயத்தரம் எப்படி காயத்தரத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்பதை திரைஷ்டுபுத்தில் திரைஷ்டுபை எப்படி யவர்கள் செய்தார்கள் என்பதை, ஜகதீயில் ஜகத்தை எப்படித் செய்தார்கள் என்பதை, யறிபவர்கள் அமிருதத்தை யடைந்துள்ளார்கள் ௨ காயத்தரத்தால் கானத்தை கானத்தை ஸாமனால், திரைஷ்டுபத்தால் வாக்கை, அவன் அளக்கிறான். அவர்கள் அட்சரத்தால் ஏழு வாணிகளை அளக்கிறார்கள். ௩ ஜகதியால் ஜோதியில் அவன் நதியை ஸ்தாபித்தான். அவன் இரதந்தரத்தில் சூரியனைப் பார்த்தான். காயத்தரத்துக்கு மூன்று ஸமித்துக்கள் என அவர்கள் கூறுகிறார்கள். மகிமையினு

---

சருஉ கருத்து—உலகம் மர்மமாகும்.

னும் மேன்மையினாலும் அது அவற்றிற்கு அதிகமாகும்.
௪ நான் நன்கு கறக்கும் அப்பசுவை யழைக்கிறேன்.
கறக்கும் நற்கையுள்ளவன் அவளைக் கறப்பான். சவிதா
எங்களுக்கு உயரிய எழுச்சியைத் தூண்டட்டும். சூடான
பானம்—தபனஞ் செய்யப்பட்டுள்ளது. அவன் அதனை
அறிவிப்பானாக. ரு சத்தஞ் செய்பவளாய், வசுபத்தினி
யாய் தன் மனத்தால் கன்றைத் தேடுபவளான அவள்
அதற்கு வந்துள்ளாள். இந்த இன்னலாகாத பசு அசு
வினிகளுக்குப் பாலை யளிப்பாளாக. அவள் அதி
சௌபாக்கியத்துக் கோங்குவாளாக. சு பசு துடிக்
குங்கன்றின்பக்கம் கனைக்கிறாள். கனைப்பதற்காக அவ
ளது சிரத்தில் அவள் ஹிங்கார சத்தஞ் செய்
கிறாள். கன்று உறுமி சூடான பானத்துக்குக் கனைத்துக்
கத்தும். அவள் பாலுடன் பெருகியுள்ளாள். எ இங்
குள்ள—முகில்—முழங்கும். அவனால் இப்பசு சூழப்பட்
டுள்ளாள். மின்பொறியில் அவள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள
படியால், அவள் ஒலி ஒலிக்கிறாள். அவள் தன் நினைவுக
ளால் மானிடர்களைச் சாய்க்கிறாள். அவள் மின்னலாகி
உடையை எறிந்தாள். அ மனைகளது நடுவே நிலையாகி
சலனஞ் செய்யும் சீவனான அதிதுரிதமுள்ள சுவாசம்,
சாய்ந்துள்ளது. சீவர்கள் இறந்தவர்களுடைய சுவதாக்
களில்—சங்கற்பங்களில்—சலனமாகிறார்கள். அமுதன்
முதனோடு ஒரு மூலமுள்ளவன். கூ சமுத்திரத்தினது
வரம்பில் செல்லும் சந்திரன் இளமையாயுள்ளதால் பழை
யவன்—அவளை—விழுங்கினான். நீ மகிமையினால் தேவ
னது காவ்யத்தைக் காணவும். இன்று அவன் இறந்தான்.
நேற்று அவன் சுவாசங் கிரகித்தான்.[1] க0 அவனைச்

1 நேற்று இறந்தவன் இன்று பிழைத்துள்ளான் எனச் சிலர் சொல்வதுண்டு.

செய்தவன் அவனது—நிகழ்ச்சியை—அறிவதில்லை. காண்பவனிற் காணுதவன். தனது அதிப்பிரஜையுடன் தன் தாயினது சினையில் சூழுமவன் நிர்ருதியில் நுழைந்தான். ௧௧ ஆயாசமாகாமல் தன் வழிகளில் இங்குமங்குஞ் சலனமாயுள்ள கோபனை நான் கண்டேன்; குவிந்தும் கலைந்துமான—கொழுந்தில்—அவன் அணிந்து, புவனங்களின் நடுவே—அவன் எங்கும்—நிகழ்கிறுன். ௧௨ எங்களது தந்தை ஜோதியாவான்; எங்களை சனனஞ் செய்பவனுவான்; இங்கு—அவன்—நாபியாவான்; எங்களது உறவான புவி தாயாவாள்; விரிந்துள்ள—வானம் புவியின்—நடுவே மூலமாகும்: இங்கு பிதாவானவன் பெண்ணினது கருவை ஸ்தாபித்துள்ளான். ௧௩ தரணியின் தூரமான எல்லையைச் சொல்லவேண்டுமென நான் உன்னை வினவுகிறேன். ஆண்குதிரையினுடைய இரேதஸையும் உன்னைக் கேட்கிறேன். விசுவபுவனத்தினுடைய நாபியையும் நான் கேட்கிறேன்; மொழியினுடைய பரம நிலயத்தையுஞ்—சொல்லவேண்டுமென—நான் கேட்கிறேன். ௧௪ புவியின் பரம வரம்பு இந்த வேதியாகும்; இச் சோமன் ஆண்குதிரையின் இரேதசாவான்; இந்த யக்ஞம் புவியின் நாபியாகும்; இந்த பிரமன் மொழியின் பரமநிலயமாவான். ௧௫ நானுன இப்—பொருளை—நான் எது—என அறியவில்லை. நான் மனத்தில் ஒன்று கட்டப்பட்டு மர்மமாய் சலனமாகிறேன்; முதல் சனனன் எனக்கு வருங்கால் இம் மொழியினுடைய பாகத்தை நான் அடைகிறேன். ௧௬ அமுதன் முதனேடு ஒரே மூலமாகி, சுவதாவால் பற்றப்பட்டு முன், பின், செல்லுகிறுன்; சதாகாலம் அவ்விருவர்கள் தன்னந்தனிமையாய் செல்லுகிறுர்கள்; அவர்கள் ஒன்றை கவனிப்பார்கள், வேறொன்றை கவனிப்பதில்லை. ௧௭ எழு அரைக்கருக்களும் புவன இரேத

சும் விஷ்ணுவின் தர்மத்தில் நிற்கும்: அவர்கள் அறிவுகளா லும், மனத்தாலும் ஞானமுடனுகுமவர்கள் சூழுபவர் களை எங்குஞ் சூழ்ந்துள்ளார்கள். ௧அ எல்லா தேவர் களும் சாய்ந்துள்ள பரமநிலயத்திலுள்ள ரிக்கின் எழுத்தை யறியாதவன் ரிக்கினல் யாது பயனை அடைவான்? அதனை அறிபவர்கள் அங்கு ஒன்று அமர்ந்துள்ளார்கள். ௧௯ ரிக்பதத்தை மாத்திரையால் கற்பித்து, அரை ரிக் கால் அசையும் அனைத்தையும் கற்பித்தார்கள்; மூப்பாத பிரமன் பல ரூபமுள்ளவன் விரிந்து—நிற்கிறான். நான்கு திசைகள் அவனால் சீவிக்கும். ௨0 நீ மேலான புற்றரை களில் புசித்து நீ நற்செல்வங்களுள்ளவனுகவும்; நாங் களும் அதிசெல்வங்களுடனுகவேண்டும்; இன்னலாகாத பசுவே, நீ சதாகாலம் புல்லைப் புசி. இங்கு வந்து நீ சுத்த சலத்தைப் பருகு. ௨௧ அவள் கடல்களை உருவமாக்கி சத் தஞ் செய்தாள்; அவள் ஒரு பாதம் இரு பாதம் நாலு— பாதங்களுள்ளவள்; அவள் எண் பாதம், நவபாதம் ஆயி ரம் எழுத்துக்கள் புவனபங்கதியாயுள்ளாள். அவளிட மிருந்து கடல்கள் பாய்கின்றன. ௨௨ இறக்கம் கருமை யாகும்; மஞ்சள் நிற சுபர்ணங்கள் சல உடை யணிந்து ஜோதிக்குப் பறக்கும். அவர்கள் ருதஸ்தானத்திலிருந்து இங்கு வந்துள்ளார்கள்; அப்பால் நிலத்தை நெய்யால் பிர ளயஞ் செய்தார்கள். ௨௩ காலற்றவள் காலில்லாதவர்க ளின் முன் போகிறாள்; மித்திரனே! வருணனே! இந்த உங்களது—செய்கையை—யறிபவன்யார்? கருப்பம் அவ னுடையசுமையைத் தாங்கும்; அவள் சத்தியத்தை நிரப்பு கிறாள்; அசத்தியத்தை நாசமாக்குகிறாள். ௨௪ விராஜன் வாக்கு. விராஜன் வையகம் விராஜன் வானம். விராஜன் பிர ஜாபதி விராஜன் மரணம்; அவன் சாத்தியர்களுடைய அதி இராஜனுனன்; அவன் எனது கைவசத்தில் இறந்த

தையும் இருக்கப்போவதையுஞ் செய்வானாக. ௨௫ கீழுக் கப்பால் இப்படிச் சரிபாதியுடனாகும் சகமயப் புகையை நான் வெகு தூரத்திலிருந்தே கண்டேன். வீரர் கள் சுந்தரமான துரியத்தைப் பக்குவஞ் செய்கிறார்கள். அவை தான் ஆதி தருமங்களாகும். ௨௬ கேசமுள்ள மூவர் ருது யனுசரித்துக் காண்கிறார்கள். அவர்களில் ஒருவன் தானே கொய்து கொள்கிறான். வேறொருவன் சக்திகளோடு, சர்வத்தில் காண்கிறான். ஒருவனது உரு வங் காணும். மற்றவனது வேகங்காணும். ௨௭ வாக் கின் நாலு—பாதங்கள் அணிவகுக்கப்பட்டுள்ளன. அறிஞரான பிராமணர்கள் அவற்றை யறிவார்கள். மறைவில் வைக்கப்பட்டுள்ள மூன்றும், சலனமாகாதவை. மானிடர்கள் மொழியின் நான்காவதையே மொழிகிறார் கள். ௨௮ அவர்கள் அவனை இந்திரன் மித்திரன் வரு ணன் அக்கினி எனச் சொல்லுகிறார்கள். அப்படியே அவன் திவ்ய சுபர்ணனான கருடனாவான். இருப்பது ஒன்று அறிஞர்கள் பலவிதமாய்க் கூறுகிறார்கள். அவர் கள் அவனை எமன், அக்கினி மாதரிசுவன் என அழைக் கிறார்கள். [௯. ௧௦. ௧—௨௮.]

ஒன்பதாவது காண்டம் முற்றிற்று.

---

## ௯௫௪—௯௬௩

௯௫௪ புன்செயல் [கிரத்யங்கிரஸன்—கிருத்யா தூஷணம்]

௧ பயின்றோர்கள் கையால் செய்யப்பட்டு விசுவ ரூப மாகி, பக்குவமாகி, மணத்தில் மணமகளைப் போலுள்ள வள் தூரஞ் சென்றுவிடுக, நாங்கள் அவளைத் தூரங்

---

௯௫௩ கருத்து—மர்மமான ஈசன் ஒன்றே.

தள்ளுகிறோம். ௨ நாங்கள் சிரம் நாசி செவியுள்ளவளாய் உசிதச்செயலால் ஒருமையாகி விசுவரூபமாயுள்ள அவளைத் தூரமாக்குகிறோம். அவள் தூரஞ்சென்று விடட்டும். ௩ சூத்திரனால் செய்யப்பட்ட அரசனால் செய்யப்பட்ட ஸ்திரீயால் செய்யப்பட்ட பிராமணர்களால் செய்யப்பட்ட அவள்[1] புருஷனால் விலக்கப்படும் மனைவியைப் போல் தன்னைச் செய்தவனில் உறவு—போல்—அவள் சென்றுவிடட்டும். ௪ அவர்கள் உன் புருஷர்களில் பசுக்களில் புவியில் செய்துள்ள சர்வமான எல்லாச்—சீ—ச் செயல்களையும் நான் இந்த ஔஷதத்தால் நஷ்டஞ்செய்துள்ளேன். ௫ புன்மை புன்மை செய்பவனுக்காகுக. பழிச்சொல் பழிச்சொல் சொல்லுபவனுக்காகுக. அவள் தீச்செயல் செய்பவனை யழிக்க, அவனை நாங்கள் திருப்பித் திரும்பச் செலுத்துகிறோம். ௬ எங்களது கண் காணும் புரோகிதனான அங்கிரஸன்—அதற்குப்—பகைவன். நீ—தூர்ச்—செயல்களை எதிர்த்திசையில் திருப்பி அங்கு—தூர்ச்—செயல் செய்பவர்களை நாசமாக்கு. ௭ செயலே! எதிர்த்துப் பிரதிகூலம் 'செல்' எனச் சொன்னவனையே எதிர்த்து நோக்கு. குற்றமற்ற எங்களை நாடாதே. ௮ சிற்பி இரதத்தினுடைய—உறுப்புக்களை சூட்சம—அறிவால்—ஒன்று சேர்ப்பது—போல, உனது அங்கங்களை ஒன்று சேர்ப்பவனுக்கே நீ செல்லு. உனது போக்கு அங்குதான். இம்மனிதன் உன்னை அறியாதவன். ௯ உன்னைச் செய்த தந்திரமான அபிசாரிணிகள் உன்னைப் பற்றியுள்ளார்கள். இது—நோய்—நீக்குவதாகும், புன் செயலழிப்பதாகும், இது பிரதி கூலஞ் செய்து பின்போகச் செய்வதாகும். அதனால் நாங்கள் உன்னை நீராட்டுகிறோம். ௧௦ புன் பாகமுள்ளவளாய், மரித்த

1 வன் செயல்.

பாலனுடனுகி நனைந்துள்ளவளை நாங்கள் அணுகுங்கால், எனது எல்லாப் பாவமும் தூரமாகட்டும். எனக்குப் பொருள் வருக. கக பிதுருக்களுக்கு அளிக்குங் காலத்திலோ யக்ஞத்திலோ அவர்கள் உனது நாமத்தைக் கிரகித்தால் இந்த ஔஷதங்கள் தந்திரத்தாலான அந்த சர்வமான பாவத்தினின்றும் உன்னை நீக்கட்டும். கஉ ஔஷதங்கள் உன்னை தேவபாவத்தினின்றும் பிதுரு குற்றத்தினின்றும்—நாம கிரகத்தினின்றும் ஆணையினின்றும் தந்திரச் செயலினின்றும், வீரியத்தினுல் பிரமத்தால் ரிக்குக்களால் ரிஷிக்களது பாலால், உன்னை நீக்கட்டும். கங புவியினின்று புழுதியை, வானத்தினின்று மேகத்தைக் காற்று கிளப்புவதுபோல், என்னிடமிருந்து எல்லா புன் நிகழ்ச்சியும் பிரமத்தால் தள்ளப்பட்டு நீங்கட்டும். கச அவிழ்க்கப்பட்டுள்ள கழுதையைப்போல் அதிஓலமுடன் நீ சென்றுவிடு. வீரியம் மிகும் பிரமத்தால், இங்கிருந்து நீக்கப்பட்டு உன்னைச் செய்தவர்களையே யணுகு. கரு புன்—செயலே 'இதுதான் வழி' எனச் சொல்லி, நாங்கள் உன்னைச் செலுத்துகிறோம். எங்களுக்கு மாறாய் அனுப்பப்பட்ட உன்னை நாங்கள் மறுபடியும் திருப்பிவிடுகிறோம். வண்டியுடன் குதிரைபோல் விசுவரூபமாகி கடுமை தரிக்கும் நீ கிழித்துக்கொண்டு செல்லு. கசு உனக்கு அவ்வழி சோதியாகும். இங்கு உனக்கு வழியில்லை. எங்களை நீக்கி வேறு எங்கோ உனது கமனங்களைச் செய்து கொள்ளு. கடப்பதற்குக் கடினமான தொண்ணூறு நதிகளுக்கப்பால் தூர—வழியால்—நீ காயமாகாமல் நீ சென்றுவிடு. கள காற்று மரங்களைப்போல் நீ அவர்களைக் கொன்றுவிடு. அவர்களை வீழ்த்து. அவர்களுடைய பசுவை புருஷனை புரவியை விட்டுவிடாதே: புன் செயலே! நீ திரும்பு, உன்னைச் செய்தவர்களுக்கு இங்கிருந்து சென்று பிரஜை

யின்மைக்கு அவர்களை எழுச்சியாக்கு. ௧௮ தந்திர முள்ள அவர்கள், குற்றமற்றும் குணமுமுள்ள உனக்கு, தருப்பையில் மயானத்தில் புதைத்துள்ள—புன் செயலை நிலத்தில்—மறைத்துள்ளவனது செயலை குப்தப் பழிக் கூற்றை காருஹ பத்தியாக்கினியில் உனக்கு, ௧௯ மாமுக பயன் செய்துள்ளதை: புதைக்கப்பட்டு பிரயோகஞ்செய் துள்ள நாமறியும் குடிலமான வைரச் செயலை, நாங்கள் கண்டுள்ளோம்: அது எங்கிருந்து வந்ததோ அங்கு செல்க; அது அங்கு பரியைப் போல் புரளுக—புன்—செயல் செய்பவனது பிரசையை அது பாழாக்குக. ௨௦ எங்கள் வீட்டில் நல்ல உலோகக் கத்திகளுண்டு; நாங்கள் உனது சேர்க்கைகளை யறிவோம்: புன் செயலே அவர்கள் எத்தனை பேர்கள்? நீ எழுந்திரு! இங்கிருந்து சென்று விடு: அறியாதவனே! நீ இங்கு எதனைத் தேடு கிறாய். ௨௧ தீ—வினையே! உனது கழுத்தெலும்புகளை யும், உனது இரு கால்களையும் நான் வெட்டுவேன்: நீ ஓடி விடு. பிரசைகளுக்குத் தலைவர்களான இந்திரனும் அக் கினியும் எங்களைக் காத்திடுக. ௨௨ சோம இராஜன் அதிபதியான எங்களுக்கு நன்மை செய்பவனாவான்; பொருள் பதிகள் சுகத்தை எங்களுக்குச் செய்க. ௨௩ பவனும் சர்வனும், பாவஞ்செய்து புன் செய்யும் புல்லனில் தேவாயுதமான மின்னலை எறிவார்களாக. ௨௪ தீ—வினை செய்வதனால் ஒன்று குவிந்து நீ இரு பாதம் நாலுபாதம் உள்ளவனாய் வந்து விசுவரூபமான நீ எண் பாதமுள்ளவனாகி, தீமையே நீ இங்கிருந்து மறு படியுஞ் சென்று விடு. ௨௫ அபிஷேகம் அப்யஞ்சனம் அலங்காரமான நீ எல்லா அவதிகளையுஞ் சுமந்து அகன்று விடு. தீவினையே! பெண் தனது தந்தையைப்போல் உன் னைச் செய்பவனை நீ அறி. ௨௬ தீவினையே! நீ சென்று

விடு; நீ நிற்காதே; துன்பமானவனது வழிபோல நீ தொடர்; அது மானாகும், நீ மான் பிடிப்பவன், அது உன்னைச் சாய்க்க இயலாது. ௨௭ அபரன் பூர்வத்தில் எதிர்ப்பவனை எதிர்த்துச் சரத்தால் நாசஞ்செய்கிறான்; முதன்மையாயுள்ளவன் அழிக்குங்கால், அப்பாலுள்ளவனும் நாசஞ்செய்கிறான். ௨௮ எனது இம்மொழிகளைச் செவிகொடு; நீ எங்கிருந்து வந்தாயோ அங்கேயே உன்னைச் செய்தவனைக் காணச் செல்லு. ௨௯ தீவினையே! குற்றமற்றவனைக் கொல்வது கலக்கமளிப்பதாகும்; எங்களது பசுவை புருஷனை புரவியைக் கொல்லாதே. உன்னை எங்கு வைத்திருந்தாலும் அங்கு நாங்கள் உன்னை நிற்கச் செய்கிறோம்; நீ இலையை விட இலேசாகவும். ௩௦ வலையினால் சூழப்பட்டவர்கள் போல இருளால் நீங்கள் மூடப்பட்டிருந்தால் நாங்கள் எல்லாத் தீவினைகளையும் பிளந்து இங்கிருந்து மறுபடியும் செய்தவனுக்கேத் திருப்புகிறோம். ௩௧ தீவினையே! தீவினை செய்பவனது குப்தக்—கேடு—செய்பவனது, தந்திரஞ் செய்பவனது பிரஜையை நீ யொழி. அவர்களை விட்டுவிடாதே. அத்தீவினை செய்பவர்களை யொழி. ௩௨ சூரியன் தமத்திலிருந்து விடுதலையாகி, இருள் உஷைச் சின்னங்களை நீங்குவதுபோல் யானை மயக்கத்தைப் பிரிவதுபோல் நானெல்லாத் தீவினைத் தீச்செயலை விட்டு விடுகிறேன். [௧0. ௧. ௧—௩௨.]

௯௫௫ தேக அமைப்பு [நாராயணன்—புருஷன்]

௧ புருஷனது இரு குதிகாற்கள் எவனால் சேர்க்கப்பட்டன? எவனால் அவனது இறைச்சி ஒன்று வைக்கப்பட்டது? எவனால் அவனது இருக்கணுக்காற்கள்? அவனது அழகான விரல்கள் எவனால்? அவனது—நவத்—துவா

---

௯௫௪. கருத்து—புன் செயல் செய்தவன் வன்பயன் அடைவான்.

ரங்கள் எவனால்? அவனது இரு கபாலங்கள் எவனால்?
நடுவில் அவனது நிலையை—ஒன்று செய்தவன்—எவன்?
௨ எங்கிருந்து அவர்கள் புருஷனது கீழேயுள்ள கணுக்
கால்களையும் மேலுள்ள முழந்து முட்டுக்களையும் செய்
தார்கள்? அவனது இரு துடைகளை ஏன் தனித்தனியாய்
பிரித்து வைத்துள்ளார்கள்? அவனது இரு முழந்து
முட்டுக்களை எங்கு—சேர்த்துள்ளார்கள்? ௩ இரு
முழந்துகளுக்கு மேல் இசையும் கபந்தமும் மூடப்பட்ட
முனைகளுடன் சதுஷ்டயமான[1] —அங்கமும்—சேர்க்கப்
டுள்ளன. எந்தத் துடை இடைகளால் தேகம் திட
மாகின்றனவோ அதைத் தோற்றுவித்தவன் யார்?
௪ புருஷனது கண்டென்புகளையும் மார்பையும் பூட்டிய
வர்கள் யாவர்? எத்தனை தேவர்கள்? அவனது ஸ்தனங்
களைச் செய்தவர்கள் எத்தனை? இரு கறையென்புகளைச்
செய்தவர் எவர்? தோள் எலும்புகளைத் தோய்த்தவர்கள்
எத்தனை? விலா எலும்புகளை எத்தனை—தேவர்கள் செய்
தார்கள்? ௫ அவன் வீரச் செயலை செய்ய வேண்டு
மெனச் சொல்லி அவனது இரு கைகளையுங் குவித்தவன்
எவன்? தண்டிலே இவனது இரு தோள்களை ஸ்தாபித்த
தேவன் எத்தகையன்? ௬ சிரத்தில் இந்தச் செவிகள்
நாசிகள், கண்கள் வாயான ஏழுத் துவாரங்களைத் துளைத்த
வன் எவன்? எவனுடைய விஜயமகிமையில் இரு கால்
நாலுகாற் பிராணிகள் பல இடங்களில் தங்கள் வழி
போகின்றன. ௭ அவன் தாடைகளுக்குள் வியாபக
மான நாவை வைத்துள்ளான். அப்பால் அதற்கு மேன்
மையான மொழியையுஞ் சேர்த்துள்ளான்: அவன்
சலங்களிலணிந்தவனாய் புவனங்களின் நடுவே அதிகம்
பொலிந்துள்ளான். அவனை யறிபவன் எவன்? ௮ அவ

1 நான்கு பிரிவான

னது மூளை அவனது நெற்றி அவனது பிடரி என்பவை அவனது கபாலத்தைச் செய்த தேவன் எவன்? புருஷ னுடைய தாரைகளில் குவியலைக் குவித்து சுவர்க்கம் ஏறிய முதற்தேவன் எவன்? ௯ அன்பு அன்பற்ற பல தூயில் துன்பம் தளர்ச்சிகளை இன்பம் இனிமைகளை எங்கி ருந்து உக்கிர புருஷன் கொண்டு வருகிறான்? ௧0 புருஷ னில் துன்பம் தெய்வு அழிவு துக்கம் எங்கிருந்து? சித்தி ஜயம் தோல்வி நினைவு ஏர்புகள் எங்கிருந்து? ௧௧ இப் புருஷனில் துரிதமாயும் சிகப்பாயும் சிவந்தும், கறுத்துங் கலங்கியும் மேலுங் கீழுங் குறுக்குமாகி அதிகம் பாய்ந்து நதியோட்டத்துக்கு தனித்தனி யோடும் நீர்களை எவன் செய்தான்? ௧௨ உருவத்தை அவனில் ஸ்தாபித்தவன் எவன்? மகிமையையும் நாமத்தையும்—அவனில் யளித் தவன் எவன்? அவனில் சலனத்தை யளித்தவன் எவன்? புருஷனில் சேதனத்தையும் சரித்திரத்தையும்—அளித்த வன் எவன்? ௧௩ அவனில் பிராணனை இழைத்தவன் எவன்? எவன் அபானனையும் வியானனையும்—இழைத் தான்? இங்கு புருஷனில் சமான—சுவாசத்தை— எத்தேவன் சேர்த்தான்? ௧௪ எந்த ஒரே தேவன் இங்கு புருஷனில் யக்ஞத்தை ஸ்தாபித்தான்? எவன் அவனில் சத்தியத்தையும் அசத்தியத்தையும் ஸ்தாபித் தான்? மிருத்யு எங்கிருந்து? எங்கிருந்து அமிருதம்? ௧௫ அவனைச் சுற்றி உடையணிவித்தது எவன்? அவனது ஆயுளைச் சித்தமாக்குவது எவன்? அவனுக்குச் சக்தியை யளித்தவன் எவன்? அவனது துரிதத்தை எவன் துரித மாக்கினான்? ௧௬ எவனால் அவன் சலங்களை விசால மாக்கினான்? அவன் எவனால் தினத்தை ஒளி வீசச் செய் தான்? அவன் உஷையை எவனால் உதயமாக்கினான்? எதனால் அவன் மாலையின் வரவைச் செய்தான்? ௧௭ அவ

னது இழை நீங்க எனச் சொல்லி அவனில் இரேதஸை எவன் ஸ்தாபித்தான்? அவனுக்கு மேதையை யளித்தவன் எவன்? அவனுக்கு வாணியை யளித்தவன் எவன்? நடனஞ் செய்பவன் எவன்?
௧௮ இந்தப் புவியை அவன் எவனால் அணிந்தான்? எவனால் அவன் சோதியைச் சூழ்ந்தான்? எவனால் புருஷன் மகிமையில் மலைகளுக்கு மிகரானான்? எவனால் அவன் செயல்களைச்—செய்கிறான்?
௧௯ பர்ஜனியனை யநுசரித்து அவன் எவனால் செல்லுகிறான்? அதிகாட்சியான சோமனை எவனால்—அடைகிறான் எவனால் யக்ஞத்தையும் சிரத்தையையு மடைகிறான்? மனம் அவனில் எவனால் ஸ்தாபிக்கப்பட்டது?
௨௦ சிரோத்திரியத்தை அவன் எவனால் அடைகிறான்? இந்த பரமேஷ்டினத்தை அவன் எவனால் அடைகிறான். இந்த அக்கினியை எதனால் யடைகிறான்? எதனால் அவன் வருஷத்தை யளக்கிறான்?
௨௧ பிரமன் சிரோத்திரியத்தை யடைகிறான்; இந்த பரமேஷ்டினத்தை பிரமன் யடைகிறான். புருஷன் பிரமனாய் இந்த அக்கினியை யடைகிறான்; பிரமன் வருஷத்தை யளந்தான்.
௨௨ எவனால் அவன் தேவர்களுடன் வசிக்கிறான்? தேவசனப் பிரஜையில் எவனால் அவன் நிகழ்கிறான்? எவனால் இந்த வேறு நட்சத்திரம்? எவனால் க்ஷத்திரம் சத்தியமெனச் சொல்லப்படுகிறது?
௨௩ பிரமன் தேவர்களில் வசிக்கிறான்? பிரமன் தேவ சனப் பிரஜையில்—நிகழ்கிறான். பிரமன் இந்த வேறான நட்சத்திரமாவான். பிரமமே சத்தியமான க்ஷத்திரமெனப்படும்.
௨௪ எவனால் இப்புவி திரமாகும்? எவனால் சோதி உயரம் நிலைக்கப்பட்டுள்ளது? எவனால் இந்த வானம் விசாலம், மேலுங் குறுக்கும் வியாபகஞ் செய்யப்பட்டுள்ளன?
௨௫ பிரமனால் இப்புவி திரமாக்கப்பட்டுள்ளது; உயர் நிலைக்கப்பட்டுள்ள சோதி

பிரமனுவான்; மேலும் குறுக்கும் வைக்கப்பட்டுள்ள இந்த வானம் பிரமமாகும். ௨௬ அதர்வன் இவனுடைய சிரத்தையும் இருதயத்தையும் ஒன்று தைத்தான்; பவமானன் மூளையினின்றும் மேலாய் சிரத்திலிருந்து அவற்றைப்பிரேரித்தான். ௨௭ அதர்வணனது அச்சிரமானது ஒன்று சேர்க்கப்பட்ட தேவகோசமாகும்; பிராணனும் உணவும மனமும் அச்சிரத்தை இரட்சிக்கின்றன. ௨௮ அவன் இப்பொழுது மேலாகச் சிருட்டிக்கப்பட்டானு அல்லது இப்போது குறுக்காகச் சிருட்டிக்கப்பட்டானு? எல்லா திசைகளி—லும் புருஷன் வளர்ந்தானு? எங்கிருந்து எதனுல்—புருஷன் என—அழைக்கப்படுகிறுனே—அந்த—பிரம புரத்தை யறிபவன்—அவற்றின் விடைகளை யறிவான். ௨௯ அமுதத்தால் வியாபகமான பிரமபுரத்தை யறிபவனுக்கு பிரமனும் பிராமர்களும் பிரஜையை, பார்வையை, பிராணனை யளித்துள்ளார்கள். ௩௦ எங்கிருந்து —எவனுல்—ஒருவன்—புருஷன் என அழைக்கப்படுகிறுனே அந்த பிரமபுரத்தை யறிபவனுக்கு மூப்புக்கு முன்னர் பார்வை பிரியாது பிராணன் நீங்காது. ௩௧ அந்நியரால் ஜயிக்க இயலாத மானிடன் என அழைக்கப்படும் தேவபுரம் எண் சக்கரமுள்ளது, நவத்துவாரங்களுள்ளது. அங்கு சோதியால் வியாபகமாகி சுவர்க்கஞ் செல்லும் சொர்ண கோசமுண்டு. ௩௨ அந்தப் பொன் கோசத்தில் மூன்று பற்கள் மூவ்வாதாரங்களுள்ள அதில் ஆன்மா பற்றும் எந்த யக்ஷனுண்டோ அவனை பிரமத்தை யறிபவர்களே யறிவார்கள். ௩௩ ஒளியாயும் மஞ்சளாயும் பொன்னுயும் புகழால் வியாபகமாயும், அன்னியரால்—ஜயிக்கமுடியாததாயுமுள்ள புரத்தில் பிரமன் நுழைந்தான். [௧௦. ௨. ௧—௩௩]

---

௬௫௫ கருத்து—பிரமனும் தேகமும்.

௪௫௩ வரணமணி [அதர்வன்—வர்ணன் வனஸ்பதி சந்திரம தேவதைகள்]

௧ இந்த எனது வரணமணி[1] பகையழிப்பதும் வர்ஷிப்பதுமாகும். இதனால் உனது எதிரிகளைப் பிடி, துன்பஞ் செய்பவர்களைத் துலே. ௨ பகைவர்களை யழுத்து பாழாக்கு. இவர்களைப் பற்று. முன் செல்லும் உனது—மணி முன்னராகுக. வரணத்தால் தேவர்கள் தினந்தோறும் அசுரர்களது ஆக்கிரமிப்புக்களை யகற்றினார்கள். ௩ விசுவபேஷஜமாய் ஆயிரங் கண்களுடன் மஞ்சளாயும் பொன்னுயுமுள்ள இந்த வரணமணியானது உனது பகைவர்களைக் கீழே விழுத்தும். நீ உன்னை வெறுக்கும் பூர்வத்திலுள்ளவனை மாய்க்கவும். ௪ இந்த வரணம் உனக்கு வரிந்த தீவினையை நீக்கும், இது உன்னை புருஷனின்று, புலனுகும் பயத்தினின்றும் எல்லா பாவத்தினின்றும், பாது காக்கும். ௫ இந்த தேவ வனஸ்பதியான வரணமானது—எல்லாவேதனைகளேயும்—விலக்கும். இந்தப் புருஷனில் பிரவேசித்துள்ள யக்ஷ்மத்தை தேவர்கள் நீக்கியுள்ளார்கள். ௬ நீ தூக்கத்தில் தீக்கனவைக் கண்டாலும், வனமிருகம் பிரியமில்லாத வழியில் சென்றும் அதிதும்மலினின்றும் பறவையின் தீத்துவனியினின்றும், இந்த வரணமணி உன்னைக் காக்கும். ௭ அராய்யனின்றும், நிருதியினின்றும் ஆக்கிரமிப்பு அச்சத்தினின்றும், உக்கிர மிருத்யுவினுடைய வேதனையினின்றும் வரணம் உன்னைக் காக்கும். ௮ எனது அன்னை செய்தபாவம், எனது அச்சன் எனதுச் சொந்த சகோதரர்கள், நாங்களே செய்த பாவத்தினின்று இந்த வனஸ்பதி தேவன் எங்களைக் காப்பான். ௯ வரணத்தால் துரத்தப்பட்டு சகோதரர்களான எனது சத்துருக்கள் சோதிசூனிய

1 அனைவராலும் வரிக்கத்தகுந்த பொருள்.

மான வானத்தில் சென்றுள்ளார்கள். அவர்கள் ஆழ்ந்த இருளுக்குச் செல்வார்களாக. க0 துன்பமாகாத பசுக்களுடன் நான் துன்பமாகாமலுள்ளேன்: எனது எல்லா புருஷர்களுடன் நான் தீர்க்காயுசுடனுக—வேண்டும்: இத்தகைய வரணமணி என்னை எல்லா திசைகளிலுங் காத்திடுக. கக தேவ இராஜனும், வனஸ்பதியான இந்த வரணம் எனது மார்பிலே—யுள்ளது: இந்திரன் தஸ்யுக்களான அசுரர்களைப்போல் எனது எதிரிகளை, அது வீழ்த்துக. கஉ நூறு சரத்துக்கள் தீர்க்காயுசுடனுக நான் இந்த வரணத்தைத் தரிக்கிறேன், அது எனக்கு க்ஷாத்திரத்தையும் இராஷ்டிரத்தையும், பலத்தையும் பசுக்களையு மளிப்பதாகுக. கங காற்று பலத்தால் மரங்களை, வனஸ்பதிகளை பிளப்பதுபோல், முன் பின் தோன்றும் எனது பகைவர்களை நீ பிளந்துவிடு: வரணம் உன்னைக் காத்திடுக. கச காற்றும் கனலும் மரங்களை வனஸ்பதிகளைத் தின்பனபோல முன்பின் தோன்றும் எனது பகைவர்களை நீ புசி: வரணம் உன்னைக் காத்திடுக. கரு காற்றால் வீழ்த்தப்பட்டு மரங்கள் கீழே சாய்ந்துள்ளனபோல முன் பின் தோன்றும் எனது சத்துருக்களை நீ கீழேசாய்த்துவிடு: வரணம் உன்னைக் காத்திடுக. கசு வரணமே! இவனது பசுக்களைத் துன்பஞ்செய்ய முயலுபவர்களது இவனது இராஷ்டிரத்தைத் துன்பஞ் செய்ய விரும்புபவர்களது, நிர்ணயமான அவர்களின்—ஆயுளுக்கு முன்னரே—அவர்களை வீழ்த்திவிடு. கஎ சூரியன் அதிபிரகாசமாவதுபோல அதில் தேஜசு ஸ்தாபிதமானதுபோல வரணமணி என்னில் புகழையும் பொருளையும் திரஞ்செய்க. என்னில் அது தேஜஸை தெளித்திடுக. என்னைப் புகழால் நனைத்திடுக. கஅ சந்திரனில், மனிதர் காணும் ஆதித்தியனில், புகழைப்

ளவை போல அப்படி வரணமணி..............நனைத்திடுக.
௧௯ புவியில் புகழைப்போல், இந்த ஜாதவேதசனில் போல், வரணமணி........நனைத்திடுக. ௨௦ பெண்ணில் புகழைப் போல், நன்கு கட்டப்பட்ட இரதத்தில் புகழைப் போல்........நனைத்திடுக. ௨௧ சோமபானத்தில் புகழைப்போல் தேன்குவியலில் புகழைப்போல் வரண மணி —நனைத்திடுக. ௨௨ அக்கினி ஹோத்திரத்தில் புகழைப் போல் வஷட் முழக்கத்தில் புகழைப் போல வரண மணி....நனைத்திடுக. ௨௩ யஜமானனில் புகழைப்— போல், இந்த யக்ஞத்தில் புகழைப்போல் வரணமணி.... நனைத்திடுக. ௨௪ பிரஜாபதியில் புகழைப்போல் இந்த பரமேஷ்டியில் புகழைப்போல வரணமணி........ நனைத்திடுக. ௨௫ தேவர்களில் அமுதம் போல் அவர்களில் சத்தியம் வைக்கப்பட்டுள்ளது போல வரண மணி............நனைத்திடுக. [௧௦. ௩. ௧—௨௫.]

௪௫௭. பாம்பு [அதர்வன்—கருத்மான்த்தக்ஷன்.]

௧ முதல் இரதம்[1] இந்திரனதாகும், இரண்டாவது இரதம் தேவர்களதாகும், வருணனது மூன்றுவதாகும்; தூரமாயுள்ள பாம்புகளின் இரதம் துன்பஞ் செல்க. ௨ தருப்பை ஜோதியாகும். இளங்கதிர் குதிரைவாலுக் கொப்பாகும். பருஷகக்[2] கொண்டை இரதத்துக்கு[3] மூலஸ்தானமாகும். ௩ வெண்மையே[4]! முன் பின்காலால் அதனை—மிதி; சலஞ்சேருங் கட்டை இரஸ சூனியமாவது போல், உக்கிர நீரான பாம்புகளின் விஷம் இரஸ சூனியமாகுக. ௪ அரங்குஷம்! மூழ்கி பிறகு எழுந்து முழங்கு

1 இரசம் 2 நாணல் 3 பாம்பின் வாசத்துக்கு 4 ஔஷதமே.

௪௫௬. கருத்து—நீங்கள் வரித்து விரும்பும் பொருளே உங்களை சதா காலங்காக்கும்.

வதாவது—சலம் ஊறிய கட்டைபோல் உக்கிர நீருள்ள பாம்புகளின் நஞ்சு இரஸ சூனியமாகும். ௫ பைத்வம்[1] கஸர்ணீலத்தை [2]கொல்லுகிறது; பைத்வம் கறுப்பையும் வெறுப்பையுங்—கொல்லும் : பைத்வம் பிருதாகுவினது இராதர்வியினது சிரத்தை நன்கு சேதித்துள்ளது. ௬ பைத்வமே! நீ முதற்செல் நாங்கள் உன்னைத் தொடரு கிறோம், நாங்கள் வரும் வழிகளினின்று பாம்புகளை, நீ, நீக்கு. ௭. இங்கு பைத்வன் பிறந்தான்; இது அவனது போகும் வழியாகும்; இவை பாம்பு கொல்லும் பலம் மிகும் புரவி வழிகளாகும். ௮ மூடப்பட்டதை அது மூடாமலாகுக. ஆண் பெண்ணென இரு பாம்புகள் இந் நிலத்திலுண்டு; அவை இரண்டும் இரஸமற்றவை. ௯ அருகிலுள்ள, தூரத்திலுள்ள சருப்பங்கள் இங்கு இரஸ மற்றவை. நான் தடியால் தேளை யடிக்கிறேன். நான் வந் துள்ள பாம்பைக் கம்பாலடிக்கிறேன். ௧௦ அகாசுவத்தி னது[3] சுவஜத்தினது[4] மருந்தே இதுவாகும்; இந்திரன், துன்பமளிக்கும் பாம்பை பைத்வனை விஷப் பாம்பை என் வசத்தில் செய்துள்ளார்கள். ௧௧ நாங்கள் திரமான திர நிலயமான பைத்வ—மருந்தைப் போற்றுகிறோம்; இங்கு பின்புறத்தில் பிருதாகு[4] சதி செய்து சாய்துள்ளது ௧௨ வச்சிராயத இந்திரனால் வீழ்த்தப்பட்ட வியாளங் கள் சீவன் நீங்கி நஞ்சு விலகியுள்ளன: இந்திரன் அழித் துள்ளான்; நாங்கள் ஒழித்துள்ளோம். ௧௩ குறுக்கு வரி பாம்புகள் கொல்லப் பட்டுள்ளன; பிருதாகுகள் அரைக்கப்பட்டுள்ளன. பெரும் பட மெடுக்கும் வெண் பாம்பைக் கொல்லு. தருப்பைகளில் கரும்பாம்பை—

---

1 ஒரு மூலிகை 2 பல வகைப் பாம்பை 3 ஒருவகை விஷப் பாம்பு
4 விஷப் பாம்பு.

அடித்துவிடு. ௧௪ கிராதனுடைய குமாரி[1] அச்சிறுமி,
மலைகளின் வரம்புகளில் பொன் கெல்லிகளால் மருந்தைக்
கெல்லுகிறாள். ௧௫ இளம் வைத்தியன் இங்கு வந்துள்
ளான்; அந்நியரால் வெல்ல முடியாத அவன் புள்ளிப்
பாம்புகளை யழிப்பவன். அவன் சேனையும் மலைவீரியனை
யும் மாய்ப்பவனாவான். ௧௬ இந்திரனும் மித்திரவருண
னும் வாதன் பர்ஜனியனும் பாம்பை என் வசத்தி
லாக்கியுள்ளார்கள். ௧௭ இந்திரன் எனது வசத்தில்
பிருதாகுவை, பெண்பிருதாகுவை, மலைப்பாம்பை,
குறுக்குவீரியனை கஸர்ணீலத்தை, தசோநசி நாகத்தை
வைத்துள்ளான். ௧௮ பாம்பே! உனது முதல் மூதா
தையை இந்திரன் மாய்த்துள்ளான்; இறந்தவற்றில் எந்த
இரஸமுண்டு? ௧௯ செம்படவன் கர்வரத்தைப்போல்
அவற்றின் தலைகளை நான் ஒன்றுசேர்த்து நதிநடுவே
சென்று பாம்பின் நஞ்சை அலசியுள்ளேன். ௨௦ எல்
லாப் நாகங்களின் நஞ்சை நதிகள் எடுத்துச் செல்க
குறுக்கு வீரியன் கட்செவிகள் கொல்லப்பட்டுள்ளன.
பிருதாகுக்கள் அரைக்கப்பட்டுள்ளன. ௨௧ நான் ஔஷ
தங்களின் தானியங்களைப்போல் வெற்றிகரமாய் வரிக்கி
றேன். நான் அர்வதிகளை[2] போல் அழைத்துச் செல்கி
றேன்; பாம்பே! உனது விஷம் புறத்திலாகுக.
௨௨ அக்கினியிலுள்ள சிங்கி சூரியனிலுள்ள நஞ்சு
புவியிலுள்ள காளம், ஔஷதிகளிலுள்ள ஆலம் காந்தாகடு
கனகநகக்கடு — உனது காலளம் புறத்திலாகுக.
௨௩ அனல் பிறக்கும் அரவுகளுக்கு ஔஷதி—சனிக்கும்
கட்செவிகளுக்கு—சலந்தோன்றும் மின்னல்களாய் இங்கு
வந்துள்ள—பலவித பெரிய சாதிகளான பாம்புகளை
நாங்கள் வணக்கமுடன் போற்றுகிறோம். ௨௪ நீ தௌதீ

1 மலையில் தோன்றும் ஔஷதம். 2 பெட்டைக் குதிரைகளை.

என்னும் பெயருள்ள மங்கை. கிருதாசி 1 என்னும் நாமமுள்ளவள். என் கால் கீழே—நீ யுள்ளாய்—நான்—விஷம்—விலக்கும் ஔஷதமான—உன்னைப்—பற்றுகிறேன். ௨௫ நீ அதனை ஒவ்வொரு அங்கத்தினின்றும் நீக்கு. அதனை இருதயம் நீங்கச் செய். உனக்காக விடத்தின் உக்கிரம் கீழே இறங்குக. ௨௬ அது தூரஞ் சென்றுள்ளது; அவன் நஞ்சைத் தடை செய்துள்ளான். அவன் விடத்தில் விடத்தைச் சேர்த்துள்ளான். அக்கினி அஹியின் ஆலத்தை யகற்றியுள்ளான். ஸோமன் அதனைப் புறத்தில் நீக்கியுள்ளான். காளம் கடித்தவனையே யனுசரித்துள்ளது. கட்செவி இறந்துள்ளது. [க௦. ௪. க—௨௬.]

௪௫அ விஜயம் [க—௨௪ ஸிந்துவீபன். ௨௫—௩௬ கௌசிகன். ௩௭—௪௦ பிரமன். ௪௦—௫௦ விஹவ்ய பிரஜாபதி' க—க௪. ௨௨—௨௪ ஆபஸ் சந்திர மானச தேவதைகள், க௫—௨க மந்திரோக்த தேவதைகள். ௨௬—௩௬ விஷ்ணுக் கிரமேபிரதி மந்திரோக்தாவா தேவதைகள். ௩௭—௫௦ பிரதிமந்திரோக்த தேவதைகள்]

க நீங்கள் இந்திரனது ஓஜஸு. நீங்கள் இந்திரனது வலிமை. நீங்கள் இந்திரனது பலம், நீங்கள் இந்திரனது வீரம், நீங்கள் இந்திரனது ஆண்மை. நான் உங்களை ஜயிக்கும் யோகத்துக்கு பிரம யோகங்களால் பொருந்தச் செய்கிறேன். ௨ நீங்கள் இந்திரனது ஓஜஸு............ ........க்ஷத்திர யோகங்களால் சேர்க்கிறேன். ௩ நீங்கள் இந்திரனது ஓஜஸு.................................................. இந்திரயோகங்களால் இணைக்கிறேன். ௪ நீங்கள் இந்திர

---

1 நெய் போலுள்ளவள்.

௪௫எ கருத்து—பாம்பின் விஷம் நீக்கு.

னது ஓஜஸ்............................சோம யோகங்களால் சேர்க்கிறேன். ௫ நீங்கள் இந்திரனது ஓஜஸ்............ ......................................சகல யோகங்களால் சேர்க்கிறேன். ௬ நீங்கள் இந்திரனது ஓஜஸ். நீங்கள் இந்திரனது வலிமை, நீங்கள் இந்திரனது பலம். நீங்கள் இந்திரனது வீரம், நீங்கள் இந்திரனது ஆண்மை. ஜயிக்கும் யோகத்துக்கு எல்லாப் பொருள்களும் என்னருகிலாகுக. சலங்களே நீங்கள் என்னில் சேர்ந்துள்ளீர்கள். ௭ நீங்கள் அக்கினியினுடைய பாகம்: தேவி சலங்களே! சல சுக்கிரத்தையும் சக்தியையும் எங்களில் அளியுங்கள். பிரஜாபதி தரிப்பால் நான் உங்களை இவ்வுலகத்துக்கு ஸ்தாபனஞ் செய்கிறேன். ௮ நீங்கள் இந்திரனுடைய பாகம்........ ..........................................................செய்கிறேன். ௯ நீங்கள் சோமனுடைய பாகம்........................................................ செய்கிறேன். ௧0 நீங்கள் வருணனுடைய பாகம்........... செய்கிறேன். ௧௧ நீங்கள் மித்திர வருண பாகம்,............. செய்கிறேன். ௧௨ நீங்கள் யமனுடைய பாகம்......... செய்கிறேன். ௧௩ நீங்கள் பிதருக்களுடைய பாகம்.... ...........செய்கிறேன். ௧௪ நீங்கள் சவிதாவின் பாகம் ...........செய்கிறேன். ௧௫ சலங்களே! சலங்களினுள் உங்களது சல பாகம் எது உண்டோ யஜுக் கருகதை யாய் தேவ யஜனத்துக்கான உங்களில் எது உண்டோ, அதனை நான் இங்கு விடுகிறேன்; அதனை எனக்கு மாறாக நானே செலுத்தாமலாவேனாக. நாங்கள் வெறுத்து எங்களை வெறுப்பவனுக்கு அதனை நாங்கள் செலுத்துவோமாக. இந்த பிரமத்தால் இந்தச் செயலால், இந்த ஆயுதத்தால், அவனை நான் வீழ்த்துவேனாக. அவனை சாய்ப்பேனாக. ௧௬ சலங்களினுள் உங்களது சல அலை எது உண்டோ.................சாய்ப்பேனாக. ௧௭ சலங்களினுள்

உங்களது சலக் கன்று எது உண்டோ........................ சாய்ப்பேனாக. ௧அ சலங்களில் உங்களது சல விருஷபம் எது உண்டோ..........சாய்ப்பேனாக. ௧௯ சலங்களில் உங்களது சல சொர்ண கருப்பம் எது உண்டோ ..............சாய்ப்பேனாக ௨0 சலங்களில் உங்களது திவ்ய சுந்தராயுதம் எது உண்டோ..........சாய்ப்பேனாக. ௨௧ சலங்களில் உங்களது அனல்கள் எவையுண்டோ யஜூக் கருகதையாய் தேவ யஜனத்துக்கான உங்களில் எவையுண்டோ சலங்களே! அவற்றை நான் இங்கு விடுகிறேன். எனக்கு எதிராக நான் அவற்றைச் செலுத்தாமலாவேனாக. இந்த பிரமத்தால் இந்தச் செயலால் இந்த ஆயுதத்தால், அவற்றை நாங்கள் வீழ்த்துவோமாக; சாய்ப்போமாக. ௨௨ நாங்கள் மூன்று வருஷ காலத்தில் எந்தபொய்யைப் புகன்றிருந்தாலும் அந்த எல்லாத் துன்பத்தினின்றும் சலங்கள் என்னைக்காத்திடுக.

௨௩ நான் உங்களைக் கடலுக்குப் பிரேரிக்கிறேன். உங்களது சொந்த மூலநிலயத்துக்கே நீங்கள் செல்லுங்கள். பூரண ஆயுளோடு துன்பமற்றுருங்கள். எங்களை எதுவும் துன்பஞ் செய்யாமலாருக. ௨௪ மாசு நீங்கிய சலங்கள் எங்களிடத்திருந்து மலினத்தை நீக்குக. நற்காட்சியுள்ள அவை* குறைவையும் கஷ்டத்தையுங்—கழிக்குக. களங்கத்தையும் கடுங்கனவையும் அவை கடித்துச் செல்க. ௨௫ நீ எதிரிகொல்லும் விஷ்ணு பாதம், புவியில் கூர்மையாகி அனலால் தேஜசுள்ளவன்; நான் புவியை அநுசரித்து ஆக்கிரமிக்கிறேன்; நாங்கள் வெறுப்பவனையும் எங்களை வெறுப்பவனையும் நாங்கள் புவியிலிருந்து பிரிக்கிறோம்; அவன் சீவிக்காமலாவானாக; அவன் சுவாசம் நீங்குவானாக. ௨௬ நீ எதிரி கொல்லும் விஷ்ணுபாதம். வானத்தில் கூர்மையாகி வாயுவால் தேஜசுள்ளவன்;

நான் வானமநுசரித்து ஆக்கிரமிக்கிறேன். நாங்கள் வெறுப்பவனையும் எங்களை வெறுப்பவனையும் நாங்கள் வானத்திலிருந்து விலக்குகிறோம்; அவன் சீவிக்காமலாவானாக; அவன் சுவாசம் நீங்குவானாக. ௨௯ நீ எதிரி கொல்லும் விஷ்ணுபாதம்; சோதியில் கூர்மையாகி சூரியனால் தேஜசுள்ளவன். நான் சோதியனுசரித்து ஆக்கிரமிக்கிறேன்; நாங்கள் வெறுப்பவனையும் எங்களை வெறுப்பவனையும் நாங்கள் சோதியிலிருந்து நீக்குகிறோம்; அவன் சீவிக்காமலாவானாக; அவன் சுவாசம் நீங்குவானாக. ௨௮ நீ எதிரி கொல்லும் விஷ்ணுபாதம். திசையில் கூர்மையாகி மனத்தால் தேஜசுள்ளவன். நான் திசைகளை யனுசரித்து ஆக்கிரமிக்கிறேன்; நாங்கள்........................நீங்குவானாக. ௨௯ நீ எதிரி கொல்லும் விஷ்ணுபாதம். ஆசையில் கூர்மையாகி வாதத்தால் தேஜசுள்ளவன்; நான் ஆசைகளை யனுசரித்து ஆக்கிரமிக்கிறேன்' நாங்கள்.... நீங்குவானாக. ௩௦ நீ எதிரி கொல்லும் விஷ்ணுபாதம். ருக்கால் கூர்மையாகி சாமனால் தேஜசுள்ளவன். ருக்குக்களை யனுசரித்து நான் ஆக்கிரமிக்கிறேன்;.................. நீங்குவானாக. ௩௧ நீ எதிரி கொல்லும் விஷ்ணுபாதம். நீ யக்ஞத்தால் கூர்மையாகி பிரமத்தால் தேஜசுள்ளவன்; யக்ஞமனுசரித்து நான் ஆக்கிரமிக்கிறேன்; ....நீங்குவானாக. ௩௨ நீ எதிரி கொல்லும் விஷ்ணுபாதம்; ஒஷதியில் கூர்மையாகி சோமனால் தேஜசுள்ளவன்; ஔஷதங்களை யநுசரித்து நான் ஆக்கிரமிக்கிறேன்;..........நீங்குவானாக ௩௩ நீ எதிரி கொல்லும் விஷ்ணுபாதம். சலத்தால் கூர்மையாகி வருணனால் தேஜசுள்ளவன்; சலங்களை யநுசரித்து...............நீங்குவானாக. ௩௪ நீ எதிரி கொல்லும் விஷ்ணுபாதம்; நீ உழவில் கூர்மையாகி உணவால் தேஜசுள்ளவன். நான் உழவு அசரித்து ஆக்கிரமிக்கிறேன்....

......................நீங்குவாஞக. ௫ நீ எதிரி கொல்லும் விஷ்ணுபாதம். நீ பிராணனில் கூர்மையாகி புருஷஞல் தேஜசுள்ளவன்; பிராணனநுசரித்து நான் ஆக்கிரமிக்கிறேன்....................நீங்குவாஞக. ௬ ஜயித்தது நமதாகும், உற்பத்தியானது நமதாகும்: கருமிகளையுங் கலகஞ் செய்பவர்களை யெல்லாம் நான் எதிர்த்துள்ளேன்: நான் இன்னுனது கோத்திரத்தின் இன்ன மகனுக்கு, வர்சஸையும் தேஜஸையும் பிராணனையும் ஆயுஸையுஞ் சூட்டுகிறேன். நான் இவனைக் கீழே விழச்செய்கிறேன். ௭ நான் சூரியனது சுற்றையனுசரிக்கிறேன்: அவனது தென் சுற்றையு மநுசரிக்கிறேன்: அது எனக்குத திரவியத்தைத் தருக: அது எனக்கு பிராமண வர்சஸையுமளித்திடுக. ௮ சோதியிருந்த திசைபக்கம் நான் திரும்புகிறேன். அவை எனக்குத் திரவியத்தை........அளித்திடுக. ௯ நான் ஏழுரிஷிகளின் பக்கம் திரும்புகிறேன் அவர்கள்........அளித்திடுக. ௧0 நான் பிரமனதுபக்கந் திரும்புகிறேன்....அளித்திடுக. ௧௧ நான் பிராமணர்களை—நோக்கித்—திரும்புகிறேன்; அவர்கள் எனக்குத் திரவியத்தைத்தருக; அவர்கள் எனக்கு பிராமணவர்சஸை அளித்திடுக. ௧௨ நாங்கள் வேட்டையாடுபவனை வேதனைகளால் வீழ்த்துகிறோம்; நாங்கள் பிரமத்தால் அவனை பரமேஷ்டியின் திறந்த வாயில் விழச் செய்கிறோம். ௧௩ ஆயுதம் வைசுவாநர இருதந்தங்களால் அவனை அணைத்துள்ளது. இந்த ஆஹுதி, திடதிவ்ய விறகு அவனைத் தின்றுவிடுக. ௧௪ நீ வருண இராஜனது பந்தம். இங்ஙனமுள்ளவனை இக்கோத்திரமுள்ளவனைத் தாயின் மகனை உணவில் சுவாசத்தில் பந்தமாக்கு. ௧௫ புவிபதியே! புவியில் நிகழும் உனது உணவை, புவிபதியே பிரஜாபதியே நீ எங்களுக்களி.

சகூ நான் திவ்யமான சலங்களை ஒன்று சேர்த்துள்ளேன்: நாங்கள் இரசத்துடன் சேர்ந்துள்ளோம். அக்கினியே! நான் பால் மிகுந்து வந்துள்ளேன். என்னை வர்சசுடன் சேர். சஎ அக்கினியே! வர்சஸோடு, பிரஜையோடு, பூரண ஆயுஸோடு என்னைச் சேர்: தேவர்கள் என்னை இப்படி யறிவார்களாக. இந்திரன் ரிஷிகளோடு - என்னை - யறிவார்களாக. சஅ அக்கினியே! எந்த வன்சொற்களைத் தம்பதிகள் சொல்லுகிறார்களோ, காயகர் கோஷிக்கும் எச் சொற்கொடுமை யுண்டோ, மனக்கோபத்தால் குணமாகும் எக்கணையுண்டோ அவற்றை இந்த சர்வத்தால் யாது தானர்களின் இருதயத்தைத் துளை. சகூ யாது தானர்களைச் சூட்டால் சுட்டு விடு; அக்கினியே! அவர்களைச் சுவாலையால் சாம்பலாக்கு. கொழுந்தால் மதி கெட்டவர்களை யொழி. சீவர்களைத் தின்னும் பெருந் தகனர்களை எரி. ருo அறியும் நான் இவனது சிரத்தைப் பிளக்க நான்கு முனைகளுள்ள சலத்தின் வச்சிராயுதத்தை இப் புருஷனில் வீசுகிறேன். அது இவனது எல்லா அங்கங்களையும் அழித்திடுக. எனது இக்காரியத்தை விசுவே தேவர்கள் ஆமோதிப்பார்களாக. [கo. ரு. க—ருo]

சருக. மணி பந்தனம். [பிருஹஸ்பதி—பாலமணிருத வனஸ்பதி தேவதை.]

க கடும் இருதயமுடன் வெறுக்கும் கருமியின் சிரத்தைச் சத்தியால் சீவுகிறேன். உ கொழுவினின்றும் தோன்றும் இந்த மணி1 எனக்குக் காப்புச் செய்க. அது மந்தனத்துடன் இரஸமோடு சேர்ந்து உரமுடன் பூரணமாய் எனக்கு வந்துள்ளது. ந எப்படி நன்கறியுங் கருமான்

1 மணிபோலுள்ள மேலான பொருளோ மனிதனோ.

சருஅ கருத்து—புவியுடன் பொருந்தி வாழ்.

கைக் கத்தியுடன் உன்னைக் கனித்துள்ளாரோ அப்படியே ஜோதியுடனாகி சிவனாயுள்ள சுத்த சலங்கள் உன்னைச் சுத்தமாக்குவார்களாக. ௪ இந்தப் பொன் மாலை மணியானது யக்ஞத்தை சிரத்தையை சிறப்பை யளித்து எங்கள் மனையில் அதிதியாக வசிக்கட்டும். ௫ நாங்கள் இதற்கு நெய்யை, சுரையை, தேனை உணவை யளிக்கிறோம். தேவர்களினின்றும் வரும்—இம்—மணி மக்கட்களுக்குத் தந்தையைப் போல, தினந்தோறும் மேன் மேலும் சிலத்தையுஞ் சிறப்பையு மளித்திடுக. ௬ கொழுவாகி நெய் ஒழுகும் உக்கிரமான எக்கதிரமணியை உரத்துக்காக பிரகஸ்பதி பந்தஞ் செய்தானோ, அதனை அக்கினி தரிக்கிறான்; அது அவனுக்கு மேன் மேலும் தினந்தோறும் நெய்யைக் கறக்கும். அதனால் நீ வெறுப்பவர்களை வீழ்த்து. ௭ கொழுவாகி நெய் ஒழுகும் உக்கிரமான எந்தக் கதிரமணியை உரத்துக்காக பிரஹஸ்பதி பந்தனஞ் செய்தானோ அதனை வலிமை வீறுக்கு இந்திரன் தரிக்கிறான். அது அவனுக்கு மெம்மேல் தினந்தோறும் திடத்தைக் கறக்கும். அதனால் நீ வெறுப்பவர்களை வீழ்த்து. ௮ கொழுவாகி நெய் ஒழுகும் உக்கிரமான எக்க கதிரமணியை வன்மைக்கு பிரஹஸ்பதி பந்தனஞ் செய்தானோ அதனை பெரிய கேள்விக்குங் காட்சிக்கும் சோமன் தரிக்கிறான். அது அவனுக்கு மேன் மேலும் அநுதினமும் வாய்மையை யளிக்கும். அதனால் நீ வெறுப்பவர்களை வீழ்த்து. ௯ கொழுவாகி நெய் ஒழுகும் உக்கிரமான எக்கதிரமணியை திடத்துக்கு பிரகஸ்பதி பந்தனஞ் செய்தானோ அதனை சூரியன் தரிக்கிறான். அவன் அதனால் இத்திசைகளை யெல்லாஞ் ஜயித்தான்: அவனுக்கு அது மேலும் மேலும் அநுதினமும் செல்வத்தைக் கறக்கும். அதனால் நீ

வெறுப்பவர்களை வீழ்த்து. ௧0 கொழுவாகி நெய் ஒழுகும் உக்கிரமான எக்கதிரமணியை பலத்துக்கு பிரகஸ்பதி பந்தனஞ் செய்தானோ அதனை சந்திரன் தரித்து அசுரர் புரங்களையும் தானவர்களது பொன்—நிலயங்களையுஞ் — ஜயித்தான். அது அவனுக்கு மேன்மேலும் அனுதினமும் திரவியத்தைக் கறக்கும். அதனால் நீ வெறுப்பவர்களை வீழ்த்து. ௧௧ துரிதமான காற்றுக்கு எந்த மணியை பிரகஸ்பதி இணைத்தானோ அது மேம்மேலும் அனுதினமும் ஆண்மையை அவனுக்குக் கறக்கும். அதனால் நீ வெறுப்பவர்களை வீழ்த்து. ௧௨ வேகவாதத்துக்கு பிரகஸ்பதியால் கட்டப்பட்ட மணியால் அசுவினிகள் இந்த உழவைப்பாலனஞ் செய்கிறார்கள். அது இரண்டு வைத்தியர்களுக்கும் மேன்மையை மேன்மேலும் அனுதினமும் கறக்கும். அதனால் நீ வெறுப்பவர்களைவீழ்த்து. ௧௩ வேக வாடைக்கு பிரகஸ்பதியால் கட்டப்பட்ட மணியால் ஸவிதா, அம்மணியை தரித்து, அதனால் இந்த சுவர்க்கத்தை ஜயித்தாள். அது அவனுக்கு மேலும் மேலும் அநுதினமும் சத்தியத்தைக் கறக்கும், அதனால் நீ உன்னை வெறுப்பவர்களை வீழ்த்து. ௧௪ துரித மானுக்கு, பிரகஸ்பதி எம்மணியை தரித்தானோ, சலங்கள் அம்மணியை தரித்து எப்போதும் அழியாமல் ஓடுகின்றன. அது அவர்களுக்கு மேன்மேலும் அநுதினமும் அமிருதத்தைக் கறக்கும். நீ வெறுப்பவர்களை அதனால் வீழ்த்து. ௧௫ துரித பவனனுக்கு பிரகஸ்பதி எம்மணியை தரித்தானோ அச்சுகமளிக்கும் மணியை இராஜாவான வருணன் தரித்தான்— அது அவனுக்கு............சத்தியத்தைக் கறக்கும்.......... வீழ்த்து. ௧௬ சடிதி சலனனுக்கு பிரகஸ்பதி எம்மணியை தரித்தானோ அம்மணியை தேவர்கள் தரித்து

எல்லா உலகங்களையுஞ் ஜயித்தார்கள்; அது அவர்களுக்கு ஜயத்தை மேன்மேலும் அநுதினமும் ஜயத்தை கறக்கும். நீ அதனுல் வெறுப்பவர்களை வீழ்த்து. கஎ துரித வாதனுக்கு பிரகஸ்பதி எம்மணியை தரித்தானே, அச்சுகமளிக்கும் மணியை இங்கு தேவர்கள் யணிந்துள்ளார்கள். அது அவர்களுக்கு அனைத்தையும் மேன்மேலும் அநுதினமும் கறக்கும்; நீ அதனுல் வெறுப்பவர்களை வீழ்த்து. கஅ ருதுக்கள் அதனைப் பந்தஞ்செய்தார்கஅ; ருதுக்கூட்டங்கள அதனைக் கட்டினுர்கள்; வருஷம் அதனைச் சேர்த்து எல்லாப் பொருளையும் நன்குகாக்கும். கக நடுத்திசைகள் அதனைக் கட்டும்: திசைகள் அதனைச் சேர்க்கும். பிரஜாபதியால் சித்தமாக்கப்பட்ட மணியானது எனது துவேஷிகளை அதரஞ் செய்துள்ளது. உ0 அதர்வாணர் அதனை தரித்தார். அவர்வணமக்கட்கள் அதனைத் தரித்தார்கள்: அவர்களுடன் சேர்ந்து அங்கிரஸர்கள் தஸ்யுக்களின் கோட்டைகளைப் பிளந்தார்கள்; நீ அதனுல் துவேஷிப்பவர்களைத் தொலை. உக தாத்ரு அதனைத் தரித்தார்: அவன் எல்லாப்பொருளையும் சித்தமாக்கினுன்: அதனுல் நீ துவேஷிகளைத் தொலை. உஉ அசுரரழிக்கும் எம்மணியை பிரகஸ்பதி தேவர்களுக்குத் தரித்தானே அம்மணி எனக்கு இங்கு இரஸம் உரமுடன் வந்துள்ளது. உங அசுரரழிக்கும் எம்மணியை பிரகஸ்பதி தேவர்களுக்கு, தரித்தானே அம்மணி எனக்கு இங்கு பசுக்களுடன் ஆடு அஜங்களோடு பிரஜையுடன் இங்குவந்துள்ளது. உச அசுரரழிக்கும் எம்மணியை பிரகஸ்பதி தேவர்களுக்கு தரித்தானே அம்மணி எனக்கு நெல்யவங்களுடன் பெருஞ்செல்வத்தோடு இங்கு வந்துள்ளது. உரு அசுரரழிக்கும் எம்மணியை பிரகஸ்பதி தேவர்களுக்குத் தரித்தானே அம்மணி எனக்கு தேன் நெய்

தாரையோடு இரஸாமுதத்துடன் எனக்கு வந்துள்ளது. உசு அசுரரழிக்கும் எம்மணியை பிரகஸ்பதி தேவர் களுக்குத் தரித்தாரோ அம்மணி எனக்கு பாலோடு பலத் துடன் சிறப்போடு செல்வத்துடன் வந்துள்ளது. உஎ அசுரரழிக்கும் எம்மணியை பிரகஸ்பதி தேவர் களுக்குத் தரித்தாரோ, அம்மணி எனக்கு ஒளியுடன் சோதியோடு பெருமையுடன் புகழோடு வந்துள்ளது. உஅ அசுரரழிக்கும் எம்மணியை பிரகஸ்பதி தேவர் களுக்குத் தரித்தாரோ அம்மணி எனக்கு இங்கு எல்லாச் செல்வங்களுடனும் வந்துள்ளது. உகூ ஜயிக்கும் சக்தி வளர்க்கும் சத்துரு ஸ்தம்பிக்கும் இந்த மணியை செழு மைக்குத் தேவர்கள் எனக்கு அளிப்பார்களாக. ௩0 பிரமத்தோடுதேஜஸுடன் மங்களகரமான மணியை நான் என்னில் தரிக்கிறேன்: எதிரி சூனியமாய் எதிரி யழித்து அது எனது எதிரிகளை எனக்குக் கீழாகச் செய் துள்ளது. ௩க எதன் கறந்த பால்களை இம்மூன்று உலகங்களும் உபாசிக்கின்றனவோ அந்த தேவஜனமான இம்மணியானது என்னை எதிரிக்கு மேலாகச் செய்க. அம்மணியானது எனது சிரத்தில் சிறப்புக்கு ஏறுக. ௩உ தேவர்களும் பிதுருக்களும் மனிதர்களும் எம்மணி யில் எப்போதும் ஆசிரயித்துள்ளார்களோ, அது எனது— சிரத்தில் சிரேஷ்டத்துக்கு ஏறுக. ௩௩ கலப்பையால் உழப்பட்ட உழுத நிலத்தில் வித்து வளர்வதுபோலே என்னில் பிரஜை, பசு, உணவு அன்னமும் வளர்க. ௩ச யக்ஞம் வளர்க்கும் மணியே! எவனில் மங்களகர மான உன்னை நான் தரித்தேனோ நூறு தட்சிணையின் மணியே அவனை மேன்மைக்குத் தூண்டு. ௩ரு அக் கினியே! இங்கு ஒன்று சாய்க்கப்பட்டுள்ளச் சமித்தைக் கிரகித்து ஓமங்களுடன்—அதனை—பற்று. நாங்கள் அவ

னில் சுமதியை சுவஸ்தியை பிரசையை பார்வையை பிரமத்துடனேங்கும் ஜாதவேதசனில் காணவேண்டும். [கO. சு. க—ரூடு.]

சகூO ஸ்கம்பன்1 [அதர்வ க்ஷுத்திரன்—மந்திரோக்த ஸ்கம்ப அத்யாத்மம்]

க அவனது எந்த அங்கத்தில் தவம் நிற்கிறது? அவனது எந்த அங்கத்தில் ருதம் உறைகின்றது? அவனது எப்பாகத்தில்—விரதம் பதிகின்றது? அவனுக்கு சிரத்தை எங்கு? அவனது எந்த அங்கத்தில் சத்தியம் நிலைக்கின்றது? உ அவனது எந்த அங்கத்தினின்று அக்கினி ஓங்குகின்றது? எந்த அங்கத்தினின்று மாதரிசுவான் வீசுகிறுன்? சந்திரன் பெரிய ஸ்கம்பத்தினது அங்கத்தைக் கடந்து எந்த அங்கத்திலிருந்து அளக்கின்றுன்? ௩ அவனது எந்த அங்கத்தில் புவி நிற்கின்றது? எந்த அங்கத்தில் வானம் நிற்கின்றது? எந்த அங்கத்தில் சோதி நிலைக்கின்றது? சோதிக்கப்பாலுள்ளது எந்த அங்கத்தில் நிலைக்கின்றது. ச எங்கு செல்லலாமென விரும்பி அனல் ஓம்பி ஓங்குகின்றது? எங்கு போகலாமென எண்ணி மாதரி சுவான் வீசுகின்றுன்? எங்கு அடையலாமெனக் கருதி வழிகள் நடக்கின்றன? நீ அந்த ஸ்கம்பனைப் பற்றி விரி. அவன் எவன்? ரு அரைமாதங்கள் எங்கு செல்லுகின்றன? மாதங்கள் வருஷத்துடன் இணைந்து எங்கு போகின்றன? ருதுக்களும் ருதுக் கூட்டங்களும் எவனை நாடி விரைகின்றன? அந்த ஸ்கம்பனை விளம்பு? அவன் எவன்? சு பகல் இராவென்னும் வெவ்வேறு ரூபமுள்ள

---

1 ஆதார புருஷன்.

சருகூ. கருத்து—மணி யென்னும் மேலான பொருளினுலோ மாண்பு மிகும் பெரியவனுலோ, மேன்மைகளை எல்லாம் பற்று.

இரு யுவதிகள் சேர்ந்து எங்கு செல்ல விரும்பி ஓடுகிறார்கள்? எங்குபோக விரும்பி சலங்கள் பாய்கின்றன: அந்த ஸ்கம்பனைத் தெரிவி? அவன் எவன்? எ பிரஜாபதி எதில் அனைத்தையும் ஸ்தாபித்து, எல்லா உலகங்களையுந் தரிக்கிறார்? அந்த ஸ்கம்பனை ஓது? அவன் எவன்? அ பிரஜாபதி சிருட்டித்த மேல் நடுவு கீழான விசுவரூபத்தில் ஸ்கம்பன் எத்தனை யளவு நுழைகிறான்? அவன் நுழையாதது எது? அது எத்தனை? கூ ஸ்கம்பன் பூதத்தில் எவ்வளவு நுழைந்தான்? பவிஷ்யத்தில் இவனது எத்தனை யளவு நிகழும்? எந்த ஒரு அங்கத்தை அவன் ஆயிரம் வகையாய்ச் செய்தான்? அங்கு ஸ்கம்பன் எத்தனை தூரம் நுழைந்தான்? கo எங்கு உலகங்களையுங் கோசங்களையும் சலங்களையும் பிரமத்தையு மறிகிறார்களோ எதனுள் சத்தும் அசத்தும் உண்டோ அந்த ஸ்கம்பனைக் கூறு? அவன் எவன்? கக எங்கு தவம் திறம் உயரிய விரதம் தரிக்கப்படுகின்றனவோ, எங்கு ருதமும் சிரத்தையும் புனல்களும் பிரம்மமும் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளனவோ அந்த ஸ்கம்பனை மொழி: அவன் எவன்? கஉ எவனில் புவியும் வானமும் எவனில் சோதி வைக்கப்பட்டுள்ளனவோ எங்கு அனல் சந்திரன் சூரியன் சலனன் ஆசிரயமாகித் திரமா யுள்ளார்களோ அந்த ஸ்கம்பனை எனக்குச் சொல்? அவன் எவன்? கங எவனது அங்கத்தில் எல்லா முப்பத்து மூன்று தேவர்களுஞ் சேர்க்கப்பட்டுள்ளார்களோ அந்த ஸ்கம்பனை எனக்கு உரை? அவன் எவன்? கச எங்கு எவனில் முதல் தோன்றும் ரிஷிகள், ரிக்குக்கள், ஸாமன்கள், யஜுஸ்கள், மேன்மைகள், ஏக ரிஷி நிலைத்துள்ளார்களோ அந்த ஸ்கம்பனை எனக்குச் செப்பு? அவன் எவன்? கரு எப் புருஷனில் முதமும் அமுதமும் ஆசிரயமா யுள்ளனவோ, எவனது—

அங்கத்தில்—புருஷனில் நாடியைப்போல் கடல் திரமா யுள்ளதோ அந்த ஸ்கம்பனைச் சாற்று? அவன் எவன்? கரு எவனது அங்கத்தில் பிரதிசைகள் முதல் நாடிகளைப்போல் நிற்கின்றனவோ, எங்கு யக்ஞம் ஆக்கிரமித்துள்ளதோ அந்த ஸ்கம்பனை இசை? அவன் எவன்? கள புருஷனில் பிரமத்தை யறிபவர்கள் எல்லாம் பரமேஷ்டினத்தை யறிகிறார்கள்: பரமேஷ்டினத்தை யறிபவன், பிரஜாபதியை யறிபவன், சிறந்த பிராம்மணத்தை யறிபவர்கள் தக்கவாறு அறிகிறார்கள். கஅ எவனது சிரம் வைசுவாநரமாயும் கண் அங்கிரஸனாயும், எவனது அங்கங்கள் யாதுக்களாயும் உள்ளனவோ அந்த ஸ்கம்பனைக் கூறு? அவன் எவன்? கசு எவனது முகத்தை அவர்கள் பிரம்மம் என அழைக்கிறார்களோ நாவை தேன் கசையெனவும், எவனது ஸ்தனத்தை விராஜன் எனச் சொல்லுகிறார்களோ அந்த ஸ்கம்பனை விளம்பு? அவன் எவன்? உ0 எவனிடமிருந்து ரிக்குக்களைச் சித்தமாக்கி எவனிடமிருந்து யஜுஸ்ஸைப் பிரித்தார்களோ, எவனது ரோமங்கள் ஸாமன்களோ, எவனது முகம் அதர்வாங்கிரஸமோ அந்த ஸ்கம்பனை நுவல்? அவன் எவன்? உக சனங்கள் ஸ்தாபனமாயுள்ள அசத்தினது சாகையை பரமம் என எண்ணுகிறார்கள்: உனது சாகையை உபாசிக்கும் நீசர்கள், அதனை—சத்து—என நினைக்கிறார்கள். உஉ எங்கு ஆதித்தியர்களும் ருத்திரர்களும் வசுக்களும் நிலைத்துள்ளார்களோ; எங்கு இருப்பதும் இருக்கப்போவதும் எல்லா புவனங்களும் ஸ்தாபனமாயுள்ளனவோ அந்த ஸ்கம்பனை எனக்கு மொழி? அவன் எவன்? உங எவனது நிதியை முப்பத்து மூன்று தேவர்கள் சர்வதாத் துணைபுரிகிறார்களோ தேவர்களே! நீங்கள் அந்த நிதிகளை உதவி செய்மின்: அந்த நிதியை இப்போது

எவன் அறிகிறான்? உச பிரம்மறியுந் தேவர்கள் எங்கு சிரேஷ்டமான பிரம்மனை உபாசிக்கிறார்களோ, பிரத்தியட்சமாய் அவர்களைப் பார்ப்பவன் அவன் அறிபவனாகலாம், பிரம்மனாகலாம். உரு அசத்தினின்று தோன்றிய தேவர்கள் எல்லோரும் பெரியவர்கள் என அழைக்கப்படுகிறார்கள் ; ஸ்கம்பத்தினுடைய அந்த ஒரு அங்கத்தை—சனங்கள்—பழமை என அறிகிறார்கள். உசு எங்கு ஸ்கம்பன் தோற்றுவிக்குங்கால் புராதனத்தைச் செய்தானோ ; அந்த ஸ்கம்பனுடைய ஒரு அங்கத்தை—சனங்கள்—பூருவம் என அறிகிறார்கள். உஎ எவனது அங்கத்தில் முப்பத்து மூன்று தேவர்கள் அங்க—மங்கமாய் பிரிந்துள்ளார்களோ அந்த மூன்று முப்பது தேவர்களை பிரம்மறிபவர்களே யறிகிறார்கள். உஅ சனங்கள் புகல்வதர்க்காகமனுள்ள இரண்ணிய கருப்பத்தை பரமன் என எண்ணுகிறார்கள் : ஆதியில் ஸ்கம்பன் உலகத்தின் நடுவே அந்தப் பொன்னைப் பொழிந்தான். உகூ ஸ்கம்பனில் உலகங்கள் ஸ்கம்பனில் தவம் ; ஸ்கம்பனில் ருதம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஸ்கம்பனே! இந்திரனில் உனது சர்வமும் ஸ்தாபிக்கப்பட்டதென நான் பிரத்யக்ஷமாயறிகிறேன். ௩௦ இந்திரனில் உலகங்கள், இந்திரனில் தவம்: இந்திரனில் ருதம் ஸ்தாபிக்கப் பட்டுள்ளது. இந்திரனே! நான் உனது சர்வமும் ஸ்கம்பனில் ஸ்தாபிக்கப்பட்டது என பிரத்யக்ஷமாய் அறிகிறேன். ௩க சூரியனின்முன்னர், உஷையின் முன்னர் நாம நாமத்துடன் அவன் அறை கூவுகிறான் : முதன்மையாய் அஜன் தோன்றுங் கால், எந்த சுவராஜ்யத்துக்கப்பால் வேறு எந்தப் பொருளு மில்லையோ அங்கு அவன் சென்றான். ௩உ புவி எவனது உருவமோ, வானம் உதரமோ எவன் சோதியைத் தனது சிரமாகச் செய்தானோ அச்சேட்ட

ஞன பிரம்மத்துக்கு வணக்கமாகுக. ௩௩ சூரியனும், நவமாய் மறுபடியுந் தோன்றும் சந்திரனும் எவனது கண்ணே, எவன் அனலை தனது வாயாகச் செய்தானோ, அந்த சேட்டனைப் பிரம்மனுக்கு வணக்க மாகுக. ௩௪ வாதன் எவனது பிராணன் அபானனோ, அங்கிரஸன் எவனது நேத்திரமோ எவன் பக்கங்களை முன் புலன் களாய்ச் செய்துள்ளானோ அந்த சேட்டனைப் பிரம்ம னுக்கு வணக்க மாகுக. ௩௫ ஸ்கம்பன் இப்புவி சோதி யைத் தாங்குகிறான். விரியும் வானத்தை ஸ்கம்பன் ஆதரிக்கிறான். ஸ்கம்பன் பரந்த ஆறுப் பிரதிசைகளைத் தரிக்கிறான். ஸ்கம்பன் இந்த விசுவமான புவனத்தில் நுழைந்துள்ளான். ௩௬ எவன் சிரமம் தவத்தினின்று தோன்றி எல்லா உலகங்களையும் பூரணமாயடைந்தானோ; எவன் சோமனைத் தனக்கே செய்து கொண்டானோ, அந்தசேட்டனை பிரம்மத்துக்கு வணக்கம். ௩௭ வாதன் ஏன் நிற்பதில்லை? மனது ஏன் நிலைப்பதில்லை? சத்தி யத்தை யடைய விரும்பி சலங்கள் ஏன் எப்போதும் சோர்வதில்லை? ௩௮ பெரிய யக்ஷன் புவனத்தின் நடுவே கடல் வரம்பில் தவத்தில் ஆக்கிரமித்தான். தண்டைச் சுற் றும் மரக்கிளைகளைப் போலே, நிகழும் எல்லா தேவர்களும் அவனில் ஆசிரயத்துள்ளார்கள். ௩௯ இரு கைகளாலும் இரு காற்களோடும், கண்ணோடும் காதோடும் வாக்குட னும் எவனுக்கு தேவர்கள் சதாகாலம் காணிக்கையை யளிக்கிறார்களோ, அந்தத்தில் அனந்தமாய் எது உள் ளதோ, அந்த ஸ்கம்பனை எனக்குச் சொல்? அவன் எவன்? ௪0 அவனுக்குத் தமம் தீர்ந்து விட்டது. அவன் தீமையினின்றும், பிரிந்துள்ளான். பிரஜாபதி யிலேயுள்ள எல்லா மூன்று சோதிகளும் அவனிலுண்டு.

சக சலத்தில் நிற்கும் சொர்ணத் தருப்பையை[1] யறிபவன் அவனே இரகசியப் பிரஜாபதியாவான். சஉ தன்னந்தனியாயுள்ள இரு யுவதிகள்[2] விரூப மாகுபவர்கள் வரிசையாய் வந்து சென்று ஆறு கிரணச் சாலத்தை[3] நெசவு செய்கிறார்கள். ஒருவன் இழைகளை இழுக்கிறான். மற்றவன் விழைக்கிறான். அவர்கள் அறுப்பதில்லை. அவர்கள் அந்தஞ் செய்வதில்லை. சங ஆடும் அந்த இரு வனிதைகளில் முதல்—விளங்கியவள்—யார் என நான் அறியவில்லை. ஒரு புருஷன் இதனை நெசவு செய்கிறான். அவனே இதனை நீக்குகிறான். புருஷனே இதை பரமத்தில் போகச் செய்துள்ளான். சச இக்கதிர்கள் சோதியைத் தாங்கியுள்ளன: சாமன்களை அவர்கள் நெசவு செய்ய எறி நாழிகளாகச் செய்துள்ளார்கள். [க0. எ. க—சச]

சகூக பிரம்மம் [குத்ஸன்—ஆத்மா]

க எவன் நிகழ்—காலத்துக்கு எதிர்காலத்துக்குத் தலைவனாயுள்ளானோ, எவனது—சக்தி—யொன்றே சுவர்க்கமாகுமோ அந்த சேட்ட பிரம்மத்துக்கு வணக்கமாகுக. உ ஸ்கம்பனால் இரண்டான இந்த புவியும் சோதியும் நிலைத்து நிற்கும். ஸ்கம்பனில் இந்த ஆத்மாவுள்ள அனைத்தும் நிகழும். இமைப்பதும் சுவாசிப்பதும்—திகழும். ங மூன்று பிரசைகள்[4] அதிசலனத்தை அடைந்துள்ளன, அன்னியர்கள் அர்க்கனைச் சூழ்ந்து நுழைந்தார்கள். பெரிய வெளியின் விமானமானது நின்றுள்ளது,

---

1 தேஜோமய மூலத்தை. 2 இரவும் பகலும். 3 அறு உப திசைகளை. 4 முக்குணர்கள்.

சகூ0 கருத்து—இந்திரன் என்னும் பலத்திலே ஸ்கம்பன் சாய்ந்துள்ளான். ஸ்கம்பனிலே இந்திரன் இன்னும் எல்லா தேவர்களும் சேர்ந்துள்ளார்கள்.

பொன்னிறன் பொன்னிறர்களில் பிரவேசித்தான்.
௪ ஒரு சக்கரம், மூன்று பற்கள்[2] பன்னிரண்டுச்சுற்றுக்
கள்—[3] அவனை யறிபவன் எவன்? அங்கு முந்நூறும்
அறுபதுமான ஊசிகள் அசையாத முளைகள் அழுத்தப்
பட்டுள்ளன. ௫ ஸவிதாவே! நீ இவனை யறிகிறாய்; இரட்
டைகள்[4] ஆறு. ஏகத் தோற்றன் ஒருவனே! இவர்களது
ஏக ஏகமாய்த் தோன்றுபவனில் அவர்கள் சேர்க்கை
யைத் தேடுகிறார்கள், ௬ அவன் புலனாலும் மர்மத்தில்
பதுங்கியுள்ளான்! பெரிய பதன் மூப்பன் என்னும் பெய
ரால் அழைக்கப்படுகிறான்; இந்த சர்வமும் அவனில்
சாயும்; சலனமாவதும் சுவாசிப்பதும் அவனில் ஸ்தாபித
மாகும். ௭ ஒரு சக்கரமுள்ள அவன் சுழல்வான். ஒரு
விளிம்புள்ளவன் ஆயிர மட்சரமுள்ளவன்[5] முன் செல்ப
வன். பின், கீழே சலன மாகுபவன்: அவன் அரை—பாகத்
தால் விசுவமான புவனத்தை யுண்டுபண்ணியுள்ளான்:
அவனது அன்னிய அரை பாகம் எது? அஃது எப்படி
யாயிற்று? ௮ ஐந்து[6] சுமக்கும் ஒருவன் இவர்களது
முதன்மையைச் சுமக்கிறான். பக்க—குதிரைகள்—பிணைத்
துத் தொடர்ந்து வகித்துச் செல்லும் அவனது செல்லாத
பாகந் தெரிந்தது. சென்ற பாகந் தெரியவில்லை. உயரிய
பாகம் அருகிலாகும், தாழ்ந்தது அதி தூரமாகும்.
௯ கீழ்ப்பக்கம் மேலாகவும் துவாரம் பக்கங்களிலுமுள்ள
பாண்ட மொன்றுண்டு. விசுவ ரூபமான புகழில்
அதில் வைக்கப்பட்டுள்ளது. அங்கு ஏழு ரிஷிகள்[7] ஒன்று
உட்கார்ந்துள்ளார்கள். அவர்கள் அந்தப் பெரிய—
பாண்டத்தை—பாதுகாப்பவர்களாகிறார்கள். ௧௦ முன்

---

1 சூரியன், 2 மூன்று ருதுக்கள் 3 பன்னிரண்டு மாதங்கள் 4 இரு இரு மாதங்களான ஆறு பருவங்கள். 5 அழியாச் சக்தி யுள்ளவன். 6 ருதுக்கள். 7 பிராணன்கள்.

இணையும் ரிக் எது? பின் பாயும் ரிக் எது? விசுவத்தில் விசைவது எது? சர்வத்தில் சேர்வது எது? எதனால் யக்ஞம் விசாலமாவது? நான் உன்னை அதனை—யறியக் கேட்கிறேன்? ரிக்குக்களில் அது எது? கக எது அசைவது? எது பறப்பது? எது நிற்பது? எது சுவாசிப்பது? எது சுவாசிப்பதில்லை? எது இமைப்பது? விசுவரூபமான அந்த எது புவியைத் தாங்கும்? எது சேர்ந்தும் ஏகமேயாகும். கஉ எது அனந்தம்? எது எல்லாப் பக்கங்களிலும் விசாலமாயுள்ளது? ஒன்று முடியும் அனந்தம் அனந்த மில்லாததையும் உயரிய உலகத்தின் பாலகனை அவன், அதன் பூதம் பவ்யத்தை யறிந்து அவற்றைத் தனிமையாக்கிச் சலனமாகிறான். கங பிரஜாபதி கருவின் உள்ளே சலனமாகிறான். காணுமலானாலும் பலவிதமாய் சனன மாகிறான்: பாதியினால் விசுவமான புவனத்தை அவன் சனனஞ் செய்துள்ளான். அவனது அன்னிய அரை பாகம் எது? அவனது கொடி எது? கச சலத்தை உச்சம் சுமக்கும் அவனை, சலத்தினால் கலசம் தரிப்பவனைப்போல், அனைவருங் கண்ணால் காண்கிறார்கள். ஆனால், அவனை அனைவருங் கருத்தா லறிவதில்லை. கரு அவன் தூரத்தில் பூரணத்துடன் வசிக்கிறான். ஊனத்தால் அவன் தூரத்திலேயே விட்டுவிடப்படுகிறான். புவனத்தின் நடுவே அவன் பெரிய யட்சனாவான். அவனுக்கு இராஷ்டிரத்தை வகிப்பவர்கள் பலியை யளிக்கிறார்கள். கசு எங்கு சூரியன் உதய மாகிறானோ, எங்கு அவன் சாய்கிறானோ, அதனையே நான் சேட்டனாக எண்ணுகிறேன். எதுவும் அதற்கு மிகுதி யில்லை. கஎ சற்று முன்னரோ நடுவிலோ பூருவத்திலோ வேதமறிபவனைப்—பற்றி பேசுங்கால், அவர்கள் எங்கும் ஆதித்தியனைப் பற்றியே பேசுகிறார்கள். இரண்டாவதாக, மூவ

வகை ஹம்ஸனென அக்கினியைக் குறித்தே வழங்குகிறார்கள். கஅ சுவர்க்கம் பறக்கும் பொன் ஹம்சத்தின் சிறகுகள் ஆயிரம் தினங்களின் பிரயாணம் பரந்துள்ளன; அவன் எல்லாத் தேவர்களையுந் தனது மார்பில் சாய்த்து விசுவமான புவனங்களை யெல்லாம் ஒன்று பார்த்துச் சலனமாகிறான். ககூ சத்தியத்தால் அவன் உயரமாய் எரிகிறான்; பிரமத்தால் அவன் இங்கு பரந்து பார்க்கின்றான். மூச்சால் அவன் மட்ட மூச்சுவிடுகிறான்; அவனில் சேட்டன் சாய்ந்துள்ளான். உ0 செல்வங் கடையப்படும் அந்த இருகடையுங் கழிகளை யறிபவன் சேட்டனை யறிபவனாக தன்னை எண்ணிக் கொள்ளலாம்; அவன் பெரிய பிராமணத்தை யறியலாம். உக அவன் ஆதியில் புலனுகுங்கால் பாதமற்று வந்தான்; அவன் ஆதியில் சுவர்க்கத்தைக் கொண்டு வந்தான், அவன் நாலு பாதங்களானவுடன் [1] போக்கியனாகி எல்லா போஜனத்தையும் பற்றினான். உஉ சிறப்பளிப்பவனையும் சனாதனமாயுமுள்ள தேவனை யுபாசிப்பவன் போகியாவான்; அப்படியே அதியுணவு புசிப்பவனுமாவான். உங அவர்கள் அவனை சனாதனன் என அழைக்கிறார்கள். ஆனால் இன்று மறுபடியும் அவன் புதியவனாகலாம்: ஒவ்வொன்றும் பரஸ்பர ரூபங்களில் இரவும் பகலும் புலனாகின்றன. உச நூறு, ஆயிரம், பதினாயிரம் இலட்சம் இலட்சோபி லட்சமான சுவர்க்கம் அவனில் நுழைந்துள்ளன, அவனது பார்வையிலேயே அதனைப் பாழ் செய்கிறார்கள், ஆகலால் இத்தேவன் பிரகாசமாய் இங்ஙனம் விளங்குகிறான். உரு ஒருவன் சிசுவைவிட அதி சூட்சமமாயுள்ளான்; மற்றொருவன் புலனாவதே இல்லை. திடமாய்ப் பற்றுந் தேவதையான அவள்[2] எனக்குப் பிரியமுள்ளவளா யுள்ளாள். உசு இக்

1 கண், காது, சொல் சுவாசம். 2 சந்திரன்.

கலியாணி மூப்பாகாதவள்; மிருதத்தின் மனையில் அமுதளாகும்: எவனுக்காக அவள் செய்யப்பட்டாளோ அவன் கீழே சாய்ந்துள்ளான். அவளைச் செய்தவன் முதுமையிலானன். உஎ நீ ஸ்திரீ, நீ புருஷன், நீ குமாரன், நீ குமாரி, நீ கிழவனுனல் கைக்கம்பிலே நடுநடுங்குகிருய். நீ பிறந்ததும் எல்லா வழிகளிலும்—முகமுள்ளவனுகிருய், உஅ அவனே [1] அவர்களுடைய தந்தை அல்லது அவர்களுடைய மகனுமாவான்; அவனே அவர்களுடைய சேட்டனுவான் அல்லது கனிட்டனுமாவான்; மனத்தில் நுழைந்த ஒரு தேவன் முதன்மையாய் மலர்ந்த அவன் கருப்பாசயத்தின் உள்ளே சலனமாகிருன். உகூ அவன் பூரணத்தினின்று பூரணத்தை உதய்மாக்குகிருன். அவன் பூரணத்துடன் பூரணத்தைப் பொழிகிருன்; அது எங்கிருந்து பொழியப்படுகின்றதெனை இன்று நாங்கள் அறியலாமோ? ௩௦ சதாகாலம் நிகழும் அவள் ஆதியில் சனனமானவள்; முதுமையான அவள் அனைத்தையுஞ் சூழ்ந்துள்ளாள்; உஷையின் உயரிய தேவியான அவள் ஒளி வீசி இமைக்கும் ஒவ்வொன்றுடன் பார்க்கின்ருள். ௩க அவி என்னும் நாமமுடனுள்ள தேவதை ருதுத்துடன் சூழ்ந்து அமர்ந்துள்ளாள்; அவளுடைய ரூபத்தால் இம்மரங்கள் பசுமையாயுள்ளன. பச்சைமாலைகளுடனுள்ளன. ௩உ அவன் அருகிலுள்ளவனின்று நீங்குவதில்லை. அவன் நெருங்கி யுள்ளவனை நோக்குவது மில்லை. தேவனுடைய காவ்யத்தைப் பார்? அவன் மரிப்பதில்லை. அவன் மூப்பாவது மில்லை. ௩௩ அபூர்வத்தில் பிரேரிதமான மொழிகள் உள்ளதை உள்ளவாறே மொழிகின்றன, அவர்கள் எங்கு பேசி போகின்ருர்களோ அதனையே சனங்கள் பிரமம் எனச் சொல்லுகிருர்கள். ௩௪ தொப்பைக் கட்டை

1 பிரமன்.

யில் தந்தங்களைப்போல மனிதர்களும் தேவர்களும் எங்கு மாயையால் நிலைக்கப் பட்டுள்ளார்களோ அங்குள்ளவனை அறிய சலத்தையும் மலரையும் நான் வினவுகிறேன். ௩௫ எவர்களால் பிரேரிதமாகி வாயு வீசுகிறான்? ஒருமையுடன் ஐந்து திசைகளை யளிப்பவர் எவர்? ஆஹுதியைவிட அதிகம் என எண்ணிய தேவர்கள் எவர்கள்? சலங்களைப் பிரேரிப்பவர்கள் எவர்கள்? ௩௬ இவர்களில் ஒருவன் இப்புவியில் வியாபகனாவான். ஒருவன்[2] வானத்தைச் சூழ்கிறான். விசேஷமாய் தரிக்கும் ஒருவன்[3] சோதியை யளிக்கிறான். சிலர்[4] எல்லாத் திசைகளையும் முறையே துணைபுரிகிறார்கள். ௩௭ இந்தப் பிரசைகள் நெய்யப்பட்டுள்ள விசால இழையை யறிபவன் இழையின் இழையை பார்ப்பவன் பெரிய பிரமத்தை யறிவான். ௩௮ இந்தப் பிரசைகள் நெய்யப்பட்டுள்ள விரிந்துள்ள இழையை நான் அறிகிறேன். இழையின் இழையையும் நான் அறிகிறேன். அப்படியே பெரிய பிராமணத்தையு மறிகிறேன். ௩௯ வானம் புவியின் நடுவே எரிந்து அனைத்தையுந் தகித்த அனல் சென்றவுடன் எங்கு ஏக புருஷனின் பத்தினிகள் தூரத்தில் நின்றார்கள்? அப்பொழுது மாதரிசுவான் எங்கிருந்தான்? ௪௰ மாதரிசுவான் சலங்களில் நுழைந்திருந்தான். தேவர்கள் சலங்களில் நுழைந்திருந்தார்கள், புறத்தை யளப்பவன் பெரியவனாய் நின்றுள்ளான். பவமானன் பசுமைகளில் பிரவேசித்தான். ௪௧ காயத்திரீக திகமாயும் அமிருதத்துக்கு மேலும் அவன் அதிகமா யாக்கிரமித்தான். சாமனை சாமனோடு பார்ப்பவர்களே பூரணமாய்—அவனைக் காண்கிறார்கள்—அஜத்தை அவர்கள் எங்கு தரிசிக்கிறார்கள்? ௪௨ அமைதி யளிப்பவன், ஆக்கங்

1 அக்கினி. 2 இந்திரன். 3 சூரியன். 4 திசை பாலர்கள்.

குவிக்கும் அவன் சத்திய தர்மங்களின் தேவ சவிதாவைப்போல், சமரில் செல்வங்களுக்கு இந்திரனைப்போல் நின்றான். சங மூன்று குணங்களுடன் கவர்ந்து நவத்துவாரங்களோடாகி தாமரை மலரின் உள்ளே, ஆத்மா நிறையும் யக்ஷனை பிரம்ம மறிபவர்கள் அறிகிறார்கள். சச அவன் வீரன், விருப்பமற்றவன், அமிருதன், சுவயம்பூ, இரஸத்தால் திருப்தியாகி எதனாலும் ஊனமாகாத, யழியாத யறிஞனும் யுவகனுன ஆத்மாவையறிபவன் மிருத்யுவுக் கஞ்சுவதில்லை. [கO. அ. க—சச]

சகூஉ சதௌதனம் [அதர்வன். மந்திரோக்த சதௌதனதேவதை]

க துன்பஞ் செய்பவர்களுடைய வாய்களை யடை; எங்கள் எதிரிகளில் வச்சிராயுதத்தை வீசு; நூறு சதௌதனங்களுடன்* முதன்மையாய் இந்திரனாலளிக்கப்பட்ட சத்துருவழிக்கும்—இது [1] —யஜமானனுடைய நெறியாகும். உ உனது சருமம் வேதியாகுக. உனது உரோமங்கள் தருப்பைகளாகுக. இந்தக் கயிறு உன்னைப் பற்றியுள்ளது; இப்பொழுதும் சாதனம் உன்னில் நடனஞ் செய்க. ந உனது வால் கொண்டை தெளிப்பவை யாகுக; பசுவே! உனது நா புனிதஞ் செய்வதாகுக; சதௌதனனே! நீ சுத்தமாகி, யக்ஞாருகளாகி சோதிக்குச்செல். ச சதௌதனனைப் பக்குவஞ் செய்பவன் விருப்பங்களின் பூர்த்திக்குத் தகுதியாவான்; அவனுடைய ரித்விக்குக்கள் திருப்தியாகி எங்கு எங்கு போகவேண்டுமோ, அங்கங்கு செல்லுகிறார்கள். ரு அபூமத்தை [3] நடுவிலாக்கி சதௌதனத்தை யளிப்பவன், சோதியின் முச்சோதி திகழும்

* நூறு உணவுகளுடன் 1 நூறு உணவுகளால் ஓங்கும் சக்தி.
2 நூறு சக்திகள் ஆரோபமாகும் பசு. 3 உறுதியை.

சகூக கருத்து—சூரியன் சந்திரன் ஆத்மா.

சுவர்க்கத்தில் ஏறுகிறான். ௯ பொன்மய ஒளியோ டாடு சதௌதனப்—பசுவை—யளிப்பவன் சோதியான உலகங்களையும், புவியான புவனங்களையும் அடைகிறான். எ தேவியே! உனக்குச் சாந்தி செய்பவர், உனக்குப் பக்குவஞ் செய்பவர்கள் எல்லாம் உன்னைக் காப்பார்கள். சதௌதனளே! அவர்களுக் கஞ்சாதே. அ வசுக்கள் உனக்கு வலது பக்கந் துணைபுரிவார்கள்; இடது பக்கத் தில் மருத்துக்களும் பின்புறம் ஆதித்தியர்களும் உன்னை இரட்சிப்பார்கள்; நீ அக்கினிஷ்டோமத்துக் கப்பால் துரிதமாகு. ௯ தேவர்களும் பிதுருக்களும் மனிதர்களும் கந்தருவர்களும் அப்ஸரஸர்களுமான அனைவரும்உன்னைக் காப்பார்கள். நீ அதி இராத்திரத்துக்கப்பால் துரிதமாகவும். ௧௦ சதௌதனப் புவியை—யளிப்பவன், வானத்தையும், சோதியையும், புவியையும் ஆதித்தியர்களையும், மருத்துக் களையுந் திசைகளையும், சர்வமான உலகங்களையும் அடை கிறான். ௧௧ நெய்யைத் தெளிப்பவராய் ஸுபகையாகி, தேவி தேவர்களை யடைவார்; பசுவே! உன்னைப்பக்குவஞ் செய்பவனை நீ இம்ஸிக்காதே! சதௌதனளே! நீ சோ திக்குச் செல்லு. ௧௨ சோதியில் நிலைத்துள்ள தேவர் களுக்கு வானத்தில் வாழுந் தேவர்களுக்கு, புவியில் வாழும் இவர்களுக்கு நீ எப்போதும் பாலையும் வெண்ணெ யையும் தேனையுங் கற. ௧௩ உனது சிரம், உனது வாய் உனது செவிகள், உனது தாடைகள், யளிப்பவனுக்கு தயிரையும் பாலையும் வெண்ணெயையுந் தேனையுமளித் திடுக. ௧௪ உனது இதழ்கள், உனது நாசிகள், உனது கொம்புகள், உனது கண்கள், அளிப்பவனுக்கு——அளித் திடுக. ௧௫ உனது நுரையீரல்கள், உனது இருதயம், உனது கண்டத்துடன் புரீத்தம்————அளித்திடுக. ௧௬ உனது கல்லீரல், உனது இருமதஸ்னை, உனது

அந்திரம் உனது குடற்கள்—அளித்திடுக. கஎ உனது பிலாசி, உனது மலக்குடல், உனது சருமம், உனது குடற்கள்—அளித்திடுக. கஅ உனது மச்சை, உனது என்பு, உனது மாமிஸம் உனது உதிரம்—அளித்திடுக, ககூ உனது தோள்கள் உனது தோஷங்கள் உனது முசுப்பு—அளித்திடுக. உ0 உனது கண்டெலும்புகள் உனது தோள் என்புகள் உனது பக்க என்புகள் உனது விலா எலும்புகள்—அளித்திடுக. உக உனது தொடைகள் உனது தொடை முட்டுக்கள் உனது இடைகள், உனது கடிபாகங்கள்—அளித்திடுக. உஉ உனது வால் உனது வாற்கொண்டை, உனது ஸ்தனம் உனது ஸ்தானங்கள்—அளித்திடுக. உங உனது பின் தொடைகள் உனது கால் நகங்கள், உனது ருசரங்கள் உனது குளம்புகள்———அளித்திடுக. உச சதௌதனளே! உனது எல்லா சர்மமும் எல்லா ரோமமும் பசுவே———அளித்திடுக. உரு நெய்யிஞல் தேய்க்கப்பட்டு இரு புரோடாசங்கள் உனது கிரீடைக்காகுக, தேவியே அவற்றைச் சிறகுகளாகச் செய்து, சோதிக்கு உன்னைப் பக்குவஞ் செய்பவனுக்கு வகித்துச் செல். உசு உரலிலோ உலக்கையிலோ, சருமத்திலோ, சல்லடையிலோ எல்லா அரிசியையும் தினையையும் மாதரிசுவன் அசைத்துச் சுத்தமாக்குவாஞக. ஹோதாவான அக்கினி சுஹுதமாய் சுவீகரிப்பாஞக. உஎ நான் பிராமணர்களின் கைகளில் தனித்தனியாக தேன் மிகுந்து நெய் சொட்டும் திவ்ய சலங்களை ஸ்தாபிக்கிறேன். எந்த விருப்பத்துடன் நான் உங்களை யபிஷேகஞ் செய்கிறேஞே அவை அனைத்தும் எனக்காகுக: நாங்கள் செல்வபதிகளாகவேண்டும். [கO. கூ. க—உஎ]

---

சகூஉ கருத்து—நூறு உணவுகளின் சக்தியுடனுள்ள பசு என்னும் செல்வத்தைப் பற்றுங்கள்.

சகூரு வசை [கசியபன்—மந்திரோக்த வசை தேவதை]

க பசுவே![1] சனனமாகுங்கால் உனக்கு வணக்கம்; சனனமான உனக்கு வணக்கம். உனது வால்கொண்டை குளம்புகள் ரூபத்துக்கு வணக்கமாகுக. உ ஏழு பிரவதங்களை[2] யறிபவன், ஏழு தூரங்களை[3] யறிபவன் யக்ஞத்தின் சிரத்தை யறிபவன், பசுவைக் கிரகிக்கலாம். ந நான் ஏழு பிரவதங்களை யறிகிறேன் நான் யக்ஞத்தின் சிரத்தையும் அவனில் விசேஷமாய்க் காணும் சோமனையு மறிகிறேன். ச எவளால் சோதி எவளால் புவி, எவளால் இந்த சலங்கள் காக்கப்படுகின்றனவோ, அந்த ஆயிரந் தாரைகளோடான பசுவை நாங்கள் பிரமத்தால் போற்றுகிறோம். ரு நூறு பாண்டங்கள், நூறு கறப்பவர்கள், நூறு காப்பர்கள் அவள் முதுகிலுள்ளார்கள். அவளில் சுவாசிக்குந் தேவர்கள், அப்பசுவை தன்னந் தனிமையா யறிகிறார்கள். சு யக்ஞப் பாதங்களுடன் இனிய பாலோடு, சுவதா சுவாசத்துடன், பர்ஜனிய மனைவியான மஹீயுலுகப் பசு[4] பிரமத்துடன் தேவர்களுக்குச் செல்லுகின்றது. எ பசுவே! உன்னில் அக்கினி பிரவேசித்துள்ளான். உன்னில் சோமன்—நுழைந்துள்ளான்; மங்களமே! உனது ஸ்தனம் பர்ஜனியன்; பசுவே உனது தனக் கண்கள் மின்னல்கள். அ பசுவே[5] நீ கறக்குஞ் சலங்கள், அப்பால் உழுத நிலங்களாகும்; பிறகு தேனுவே! நீ இராஷ்டிரத்தையும் உணவையும் பாலையு மளிக்கிறாய். கூ ருதம் வகிப்பவளே! பசுவே! ஆதித்தியர்களா லழைக்கப்பட்டு நீ, அருகிலாகுங்கால், உன்னை இந்திரன் ஆயிரங் கலசச் சோமனைப் பருகச் செய்

---

1 பலத்தையும், புவியையும், செல்வப் பொருளையுங் குறிக்கும்
2 வெள்ளப் பெருக்குங்களை. 3 விரிவுகளை. 4 புவியை சுமக்கும் பொருளின் ஆரோபம். 5 மேகமே.

தான். ௧௦ நீ இந்திரனை யநுசரித்துச் செல்லுங்கால், விருஷபம் உன்னை அழைத்தது. அப்பால் பசுவே! விருத்திரசம்காரன் கோபமாகி, உனது பயத்தை உனது பாலைப் பற்றினன். ௧௧ தேனுவே! தனபதி கோபமாகி உனது பாலைப்பற்றியவுடன் இந்த உயரிய சூரியன்—நாகம்—முப்பாண்டங்களிலே[1] —— இப்பாலை — பாலிக்கின்றான். ௧௨ எங்கு தீட்சிதமான அதர்வன் தங்கத் தருப்பையிலமர்ந்தானோ அங்கு தேவியான தேனு முப்பாண்டங்களில் அச்சோமனைப் பற்றினள். ௧௩ பாதங்களோடாகும் சர்வத்துடன் சோமனுடனும் பசு சேர்ந்துள்ளாள்; அவள் கலி கந்தர்வர்களோடு கடலின் மேல் நின்றுள்ளாள். ௧௪ அவள் எல்லாப் பறவைகளுடன் வாதத்தோடு சேர்ந்ததால், ரிக்குக்களையும் சாமங்களையுந் தரித்து சமுத்திரத்திலே நடனமாடினள். ௧௫ அவள் எல்லாக் கண்ணோடும் கதிரவனுடன் கலப்பதால் புகழான சோதிகளைத் தரித்து கடலை உற்று நோக்கி யுள்ளாள். ௧௬ ரிதம் மிகுபவளே! நீ பொன்னால் அலங்காரமாகி நிற்குங்கால் பசுவே! கடல் குதிரையாகி உன்னில் ஏறினன். ௧௭ எங்கு தீட்சிதமான அதர்வன் தங்கத் தருப்பையிலே உட்கார்ந்துள்ளானோ அங்கு அப்போது—மங்களங்களும் பசுவும் சுவதாவும் தேஷ்டிரிரிம்[1] ஒன்று சேர்வார்கள். ௧௮ தேனு இராஜாவின் அன்னை. சுவதையே! உன்னுடைய தாயும் பசு. ஆவினிடத்திருந்து ஆயுதந் தோன்றிற்று: வசையினிடமிருந்து சித்தந் தோன்றிற்று. ௧௯ பிரம்மத்தின் உச்சியினின்று பிந்து ஒன்று சென்றது, அது உயர மேறிற்று: பசுவே அங்கிருந்து நீ புலனானாய்: அங்

1 முவ்வுலகங்களிலே. 2 வழி காட்டுபவள்.

கிருந்து ஹோதாவுந் தோன்றினன். உ0 பசுவே[1] ! உனது வாயினின்று காதைகள் வந்தன. உனது கண்ட என்புகளினின்று வலிமை விளங்கின. உனது உதிரத்தினின்று யக்ஞமும் ஸ்தனங்களிலிருந்து இரசிமிகளுந் தோன்றின. உக பசுவே! உனது இரு முன் பாதங்களிலிருந்து, தொடைகளிலிருந்து சலனம் தோன்றிற்று. உனது அந்திரங்களிலிருந்து உணவு தோன்றிற்று. உனது வயிற்றிலிருந்து செடி கொடிகள் தோன்றிற்று. உஉ வசையே! நீ வருணனுடைய வயிற்றில் நுழைந்தவுடன் பிரமன் உன்னை உயரழைத்தான். ஏனெனில் அவன் உனது—நல்—வழியை யறிந்தான். உ௩ சனனஞ் செய்யாதவளது கருப்பத்தில் சனனமாகும்கால் அனைவரும் நடுங்கினார்கள். அவளைப்பற்றி அவர்கள் சொல்வதாவது 'பசு சனனஞ் செய்துள்ளாள்' பிரம்மங்களால் அவள் சித்தமானாள். அவன் அவளுடைய பந்து. உச அவளை சுவாதீனஞ் செய்பவனை சமர் புரிபவர்களைச் சேர்க்கிறான். யக்ஞங்களே—இருள்—தாண்டுபவை யாயிற்று. பசுவே தாண்டுபவற்றின் கண்ணாயிற்று. உரு பசு யக்ஞத்தைச் சுவீகரித்தது. தேனு சூரியனைத் தாங்கிற்று. ஆவினுள்ளே ஓதனம் பிரம்மத்துடன் நுழைந்தது. உசு பசுவை அவர்கள் அமிருதம் என அழைக்கிறார்கள். வசையை அவர்கள் மிருத்யு வென உபாசிக்கிறார்கள். சுரபி இந்த சர்வமான தேவர்களும் மனிதர்களும், அசுரர்களும், பிதுருக்களும், ரிஷிகளுமானாள். உஎ இப்படி யறிபவன் கோவைக் கிரகிக்கலாம். சர்வபாதமான யக்ஞும் தடையில்லாமல் அளிப்பவனுக்கு, விருப்பமுடன் பாலைக் கறக்கும். உஅ வருணனுடைய வாயினுள்ளே மூன்று நாக்கள்[2] ஒளி வீசுகின்

---

[1] பிரபஞ்ச ஆரோபமான பசு. [2] சுவாலைகள் முக்காலாக்கினிகள்.

றன. பற்றுவதற்குக் கடினமான அவற்றின், நடுவே ஒளி வீசுவது பசு. உ௯ தேனுவினுடைய இரேதஸா னது நான்கு பாகமுள்ளது. சலம் காற்பாகம், அமுதம் காற்பாகம், யக்ஞம் காற்பாகம், பசு காற்பாகம். ௩0 பசு சோதி, பசு புவி, பசு விஷ்ணு, பிரஜாபதி. சாத்தியர் களும் வசுக்களும் ஆவின் கறப்பைப் பருகினார்கள். ௩௧ வசுக்களும் சாத்தியர்களும் பசுவின் பொழிவைப் பருகி சூரியனுடைய உச்சியிலே அவளது பாலை போற்று கிறார்கள். ௩உ சிலர் சோமனுக்காக அவளைக் கறக் கிறார்கள். சிலர் நெய்யை நாடுகிறார்கள்: இதனை யறி பவனுககுப் பசுவை யளித்தவர்கள் சோதியின் முச்சோ திக்குச் சென்றுள்ளார்கள். ௩௩ பிராமணர்களுக்குப் பசுவை யளிப்பவன் எல்லா உலகங்களையு மடைகிறான், ஏனென்றால் பசுவில் ருதம், ஸ்தாபனமாயுள்ளது; பிரம மமும் அப்படியே தவமும் ஸ்தாபனமாயுள்ளன. ௩௪ தேவர்கள் தேனுவில் சீவிக்கிறார்கள்; பசுவில் மனிதர் களும் வாழ்கிறார்கள்; இந்த சர்வமும் பசுவானாள்; சூரி யன் காணும் அத்தனையுங் கோவாகும். [க0. க0. க—௩௪]

க0-வது காண்டம் முற்றிற்று.

---

௪௬௪—௪எ௩

௪௬௪ பிரம்மௌதனம் [பிரம்மா—பிரம்மௌதனம்]

க அக்கினியே நீ புலனாகவும். இங்கு அதிதி யாசிப்பவ ளாயும் மக்கட்பேறு விரும்புபவளாயும் பிரம்மௌதனத் தைப் பக்குவஞ் செய்கிறாள்: பொருள் செய்யும் ஏழு ரிஷிகள் பிரஜையுடன் சேர்ந்து உன்னை இங்கு கடைவார்

---

௪௬௩ கருத்து—பசு ஜோதி, பசு புவி, பசு விஷ்ணு பிரஜாபதி யாவாள்.

களாக. ௨ விருஷபர்களே! நண்பர்களே வஞ்சக சூனியர்களாய் வாக்கை மரியாதை செய்யும் நீங்கள் புகையைச் செய்யுங்கள். சுவீரனை இந்த அக்கினி சமர் சாய்ப்பவன். தேவர்கள் அவனால் சத்துருவை ஜயித்தார்கள். ௩ அக்கினியே! அதி வீரச் செயலுக்கும்—பிரம்மௌதனத்தைப் பக்குவமாக்குவதற்கும், நீ புலனாக்கப் பட்டுள்ளாய், ஜாதவேதசனே! பொருள் செய்யும், ஏழு ரிஷிகள் உன்னைச் சனனஞ் செய்துள்ளார்கள்; நீ இவனுக்கு வீரர் மிகுஞ் செல்வத்தை யளி. ௪ அக்கினியே! மூட்டப்பட்ட நீ, சமித்தால் சுவாலையுடனாகவும்; யக்ஞாருக தேவர்களை யறியும் நீ அவர்களை—இங்கு அழைத்து வா, ஜாதவேதசனே! அவர்களுக்கு ஹவியை—நான்—பக்குவஞ் செய்கிறேன்; நீ இவனை உயரிய உலகத்தில் ஏறச் செய். ௫ பழமையிலேயே உங்களுக்கு மூன்று பாகங்கள் வைக்கப்பட்டுள்ளன—அவை தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் பிதுருக்களுக்குமாகும். நீங்கள் உங்களுடைய பாகங்களை யறிந்து கொள்மின்; நான் உங்களுக்கு அவற்றைப் பாகஞ் செய்கிறேன். தேவர்களுடைய பாகமான இது இவனைப் பாலனஞ் செய்யும். ௬ அக்கினியே! நீ சக்தியுள்ளவன், நீ ஜயிப்பவன், நீ ஜயிக்கிறாய்; வஞ்சகஞ் செய்யு மெதிரிகளைக் கீழே வீழ்த்து. அளந்து அளக்கப்பட்ட இந்த அளவு உனது சஜாதர்களை உனக்குப் பலிகொண்டு வருபவர்களாய்ச் செய்க. ௭ நீ சஜாதர்களுடன் சேர்ந்து பாலுடன் கல. இவனைப் பெரிய வீரியத்துக்கு எழுச்சியாக்கு, அவர்கள் சுவர்க்க உலகம் எனச் சொல்லும் நாகத்தின்மேலுக் குயர மேறு. ௮ இந்தப் பெரிய புவியான தேவி சுமன முள்ளவளாகி சர்மத்தைக் கிரகிப்பாளாக, அப்பால் சுகிருத உலகத்துக்கு நாங்கள் செல்லலாமோ? ௯ நீ சேரும் இவ்

விரண்டு சிலைகளைச் சருமத்திலே சேர்; நீ யஜமானனுக்கு அரும்புகளைத் தனித்தனியாக்கு; இவளுடன் சமர் செய்பவர்களைச் சாய்த்து கீழே வீழ்த்து. உனது பிரஜையை உயரமாய்ச் சுமந்து நீ மேலுயர்த்து. க0 வீரனே! சேர்ந்து செய்யும் இரு சிலைகளை உன் கையில் பற்று, யக்ஞாருகர்களான தேவர்கள் உனது யக்ஞத்துக்கு வந்துள்ளார்கள்; நீ வரிக்கும் மூன்று வரங்களை—அந்தச் செல்வங்களை இங்கு நான் உனக்குச் சீர்மையாக்குகிறேன். கக இது உனது நினைவு, இது உனது சனனஸ்தானம், வீரமக்கட்களின் அதிதி உன்னைப் பற்றுவாளாக, இவளுடன் சமர் செய்பவர்களை நீ தூரமாக்கு; எல்லாத் தீரங்களுடன் திரவியத்தை இவளுக்களி. கஉ சலன உபசுவாசத்தில் நீங்கள் உட்காருங்கள், யக்ஞாருகர்களே! நீங்கள் தூசிகளிலிருந்து தனிமையாகுங்கள், எங்களுடைய எல்லாச் சமானர்களுக்கதிகமாய் நாங்கள் செல்வத்தி—லோங்கவேண்டும், எங்களுக்கு வஞ்சகஞ் செய்பவர்களை எனது கால்களின் கீழே நான் வீழ்த்துகிறேன். கங ஸ்திரீயே! நீ சென்றுவிடு, நீ துரிதமாய்த் திரும்பு; சலகோஷ்டம் தரிப்புக்காக உன்னில் ஏறியுள்ளது. அவற்றில் யக்ஞாருகமானதை நீ பற்று! அவற்றில் யக்ஞாருகமானதை அறிவுடன் தனித்தனி செய்து அப்பால் அந்நியவற்றை யகற்றிவிடு. கச இந்த யுவதிகள் தங்களை யலங்காரஞ் செய்துகொண்டு வந்துள்ளார்கள்; நாரியே! எழுந்திரு. அவர்களில்—புருஷர்களில் திடமுள்ளவனைப் பற்று: நீ பதியுடன் நல்ல பத்தினியாகி பிரஜையுடன் பிரஜை பற்றுவளாகும் உனக்கு யக்ஞம் வந்துள்ளது: நீ கும்பத்தைக் கிரகி. கரு பழமையாய் உங்களுக்கு—உரியதான வன்மையின்[1] பாகம் வைக்கப்பட்டுள்ளது, ரிஷியால் கற்பிக்கப்பட்டு

1 உணவின்

இந்தச் சலங்களைக் கொண்டு வாருங்கள்; இந்த உக்கிர யக்ஞம் உங்களுக்கு நெறி ஜயிப்பதும் பொருள் ஜயிப்பதும் பிரஜை ஜயிப்பதும் வீரஞ் ஜயிப்பதுமாகுக. கசு அக்கினியே! யக்ஞாருகமான பாண்டம் உன்னில் ஏறியுள்ளது: தூய்மையும் அதிதாபமுடனுன நீ தவத்தால்[1] இதனைத் தவமாக்கு, ரிஷிச் சேர்க்கையானவர்களும் தேவ சம்பந்தமானவர்களும் தாபங்களாகி ருதுக்களோடு இந்த பாகத்தை ஒன்றுசேர்த்து இதனைத் தவமுடன் செய்வார்களாக. கஎ சுத்த சௌச யக்ஞாருக யுவதிகளான இச்சுந்தர சலங்கள் கலசத்தில் செல்வார்களாக; அவர்கள் வெகு பலப்பிரஜையையும் பசுக்களையும் தந்துள்ளார்கள்: ஓதனப் பக்குவஞ்செய்பவன் சுகிருத உலகத்துக்குச் செல்வானுக. கஅ பிரம்மத்தால் புனிதமான நெய்யால் பவித்திரமான சோமாம்சங்களே இந்த யக்ஞாருகையான அரிசிகள். நீங்கள் சலங்களில் நுழையுங்கள். பாண்டம் உங்களை கிரகித்திடுக. இதனைப் பக்குவஞ் செய்து சுகிருத உலகத்துக்கு நீங்கள் செல்லுங்கள். கசு சுகிருத உலகத்தில் ஆயிரம் வரம்புள்ளவன்—எப்படி யுள்ளானே அப்படியே நீ மேலான மேன்மையால் விரிந்து விசாலமாயுள்ளாய். பிதா மஹர்கள், பிதுருக்கள், பிரஜை சந்தானங்—களுடனுன நான் உனது பஞ்சதசப்[2] பக்குவன். உ0 தேவர் சென்று, சுவர்க்கம் போகும் பிரம்மௌதனமே, ஆயிரம் எல்லை நூறு தாரைகளுடன் அக்ஷயமாயுள்ளது. அங்குள்ள அவர்களை நான் உனக்களிக்கிறேன்: அவர்களைப் பிரஜையில் குறையச் செய்து பலி அளிக்கச் செய். எனக்குச் சுகமளி. உக வேதிக்கு உச்சஞ் செல். இவளைப் பிரஜையுடன் வளர்: அரக்கனை நீக்கு: இன்னும் முன்னணியில் இவளைச் செய். செல்வத்தால் நாங்கள் எல்லா சமா

---

1 சூட்டால் 2 பஞ்சதசஸ்தோம்.

னர்களுக்கு மதிகமாக வேண்டும்: வஞ்சகஞ் செய்பவர்களை நான் காலின் கீழாக்குகிறேன். உஉ நீ இவளைப் பசுக்களுடன் சேர்: தேவதைகளோடு நீ இவளுக்குப் பிரத்தியட்சமாகவும். சாபமும் அபிசாரமும் உன்னையணுகவேண்டாம், நோய் நீங்கி உனது நிலத்திலே நீ அரசுபுரி. உந ஆதியில் ருதத்தால் சித்தமாகி மனத்தால் ஸ்தாபனமான பிரம்மௌதன வேதி நிலையாக்கப்பட்டது. ஸ்திரீயே! பாண்டத்தை ஸ்தாபனஞ்செய். தேவ ஓதனத்தை அதில் ஸ்தாபி. உச பொருள் செய்பவர்களான ஏழு ரிஷிகள், செய்த இந்த இரண்டாவது சாதனமான அதிதி கையாடு மகப்பை ஓதனங்களையறிந்து வேதியில் இதனை ஒன்று சேர்த்திடுக. உரு தேவர்கள், உனது பக்குவமான அவியை அணுகுவார்களாக; அனலினின்று நீக்கி அவற்றை மறுபடியும் தேவர்களிடம் முன்னுக்கு. பிராம்மணர்களது உதரத்திலமர். உன்னைப் புசிப்பவர்களும் ரிஷிப் புத்திரர்களும் துன்பத்திர்க்காக வேண்டாம். உசு அரசனான சோமனே! உன்னருகிலுட்காரும் எல்லா நல்ல பிராமணர்களுக்கும் அதி யறிவையளி; தவந் தோன்றிய ரிஷிகளை, ரிஷிபுத்திரர்களை, பிரம்மௌதனத்தில் நான் அழைக் கூவுகிறேன். உஎ நான் புனிதமும் பவித்திரமுமான இந்த யக்ஞாருக யுவதிகளை[1] தனித் தனியாய் பிராமணரது கைகளில் ஸ்தாபனஞ் செய்கிறேன்; நான் எந்த விருப்பத்துடன் இதனை உங்களுக்குப் பொழிகிறேனோ இங்கு மருத்துக்களுடனிந்திரன் அதனை எங்களுக் களிப்பானாக. உஅ உது எனது சோதி, சொர்ணம், அமிருதம், நிலத்திலிருந்து பக்குவமானது. இது எனக்கு விருப்பங் கறக்கும்; நான் பிராம்மணர்களில் இந்தப் பொருள்களை

2 ஞானச்சுடர்களை.

வைக்கிறேன்; நான் பிதுருக்களில்[1] சுவர்க்க வழிகளைச் செய்கிறேன். உகூ அக்கினி ஜாதவேதஸனில் தூசிகளை வீசு; மாசுக்களை வெகுதூரமாக்கு, நாங்கள் இதனை கிருக இராஜனது பங்கு எனக் கேட்டுள்ளோம்; நாங்கள் நிர்ருதியின் பங்கையு மறிகிறோம். ங௦ பக்குவஞ் செய்து உழைத்து சோமன் பொழிபவனை நீ யறி; அப்பாலுள்ள பரம நிலயத்தை பெரிய நாகத்தில் எதனால் ஏறி யணுக முடியுமோ அந்த சுவர்க்கஞ் செல்லும் வழியேற இவனைச் செய். ஙக அத்வர்யுவே! தரிப்பவனது இந்த முகத்தை நீ சுத்தமாக்கு; அறிந்து ஆஜ்யத்துக்காக நீ உலகத்தைச் செய்; நெய்யால் எல்லா அங்கங்களையுஞ் சுத்தஞ் செய்; பிதுருக்களில் நான் சுவர்க்க வழிகளைச் செய்கிறேன். ஙஉ தரிப்பவனே அரக்கனைப்போல உன்னருகிலுட்கா நம் அபிராமணர்களுக்கு ஒற்றுமையின்மையை யளி புரீஷர்களும்[2] முன் பரந்து வருபவர்களும் ரிஷி புத்திரர்களும் புசிப்பவர்களும் துன்பமற்றவார்களாக. ஙஙு ஓதனமே! ரிஷி மக்கட்களில் உன்னை நான் ஸ்தாபிக்கிறேன். ரிஷிச் சேர்க்கை யில்லாதவர்களுக்கு இங்கு பாகமில்லை. எனது கோபனை அக்கினி, எல்லா மருத்துக்களும் எல்லாதேவர்களும் பக்குவத்தைக் காப்பார்களாக. ஙச யக்ஞம், கறப்பு, சதா பூரணம் புருஷப்பசு, பொருள் நிலயம் பிரஜையாலமிருதம், தீர்க்காயுசா—ன—உன்னுடன் செல்வச் செழிப்போடு நாங்கள் உட்காரலாமோ. ஙரு நீ சுவர்க்கஞ் செல்லும் விருஷபன். ரிஷி மக்கட்களிடஞ் செல், சுகிருத உலகத்தில் உட்கார். அங்கு மக்கு ஸம்ஸ்கிருதமுண்டு. ஙசு ஒன்று சேர்: ஒருமையுடன் ஆக்கிரமி. அக்கினியே! நீ தேவ வழிகளைப் பக்குவமாக்கு. இந்த சுகிருதங்களால், ஏழு இரசிமிக

1 அறிஞர்களில். 2 அதிக புவியிலுள்ளவர்களும்.

ளுள்ள நாகத்தில் நிற்கும் யக்ஞத்தை நாங்கள் யணுக லாமோ! ஙஎ பிரம்மௌதனத்தைப் பக்குவஞ் செய்து, சோதிக்கு, சுகிருத உலகத்துக்கு எவ்வொளி யால் சென்றூர்களோ, அதனுல் சுவர்க்கமேறி உயரிய நாகத்துக்கு சுகிருத உலகத்துக்கு நாங்கள் செல்ல லாமோ. [கக. க. க—ஙஎ]

சகூரு ருத்திரன் [அதர்வன்—ருத்திரன்]

க பவனே! சர்வனே! சுகமளியுங்கள், எங்களுக் மாறு செய்யாதேயுங்கள். பூதபதியே! பசுபதியே உங்களுக்கு வணக்கம். குறி வைத்து இழுத்த அம்பை பறக்க விடாதேயுங்கள். எங்கள் இரு கால் நாற் கா பிராணிகளை இம்சை செய்யாதேயுங்கள். உ எங் ளுடைய—காயங்களை நாய்க்கு, நரிக்கு, பருந்துகளுக் கழுகுகளுக்கு அதிகருமையா யுள்ளவற்றிற்கு, அதிக தின்பவற்றிற்குச் செய்யாதேயுங்கள். பசுபதியே உனது ஈக்கள், உனது பறவைகள், உணவுக்கு—அவற்றை அடையாமலாகுக. ங பவனே! உனது கர்ச்சனைக்கு, உனது சுவாசத்துக்கு, உனது கடு வேதனைகளுக்கு, ஆயி ரங்களுள்ள, அழியாமலுள்ள உனக்கு ருத்திரனே! நாங் கள் வணக்க மளிக்கிறோம். ச நாங்கள் உனக்கு மு னிருந்தும், மேலிருந்தும், கீழிருந்தும், சோதியின் எல் எல்லை யிலிருந்தும் வணக்க மளிக்கிறோம். உனது வானத் துக்கு வணக்கமாகுக. ரு பசுபதியே! உன் முகத்துக்கு, பவனே! உன் கண்களுக்கு உன் சருமத்திற்கு, உ ரூபத்திற்கு உன் நற்தோற்றத்துக்கு, எதிர்நிற்கும் உனச் வணக்கமாகுக. சு. உன் அங்கங்களுக்கு உதரத்து

சகூச கருத்து—பிரம்மன் என்னும் உணவை அறிந்தால் சுவ கஞ் செல்லலாம்.

ாவுக்கு உனது வாய்க்கு உன் பற்களுக்கு, கந்தத்துக்கு
வணக்கம். எ நீல சிகை—சடை—யுள்ள வில்லாளனுடன்
அர்த்தகனழித்து ஆயிரக் கண்களுடன் வலிமையாயுள்ள
ருத்திரனோடு நாங்கள் சமர் புரியாமலாகவேண்டும். அ இந்த
பவன் எங்களிடமிருந்து எங்கும் நீங்குவானாக; அனல்கள்
னல்களைப்போல, பவன் எங்களிடமிருந்து விலகுவா
னாக ; அவன் எங்களை துன்பஞ் செய்யாமலாவானாக. அவ
க்கு வணக்கம். கூ பவனே! பசுபதியே! நான்கு
றை நமஸ்காரம், பன்முறை உனக்கு வணக்கமாகுக;
பகஞ் செய்யப்பட்ட இந்த ஐந்துப் பிராணிகள் பசுக்
ர், புரவிகள் புருஷர்கள் ஆடும் அஜங்கள் உனது. க0
ற்திசைகள் உன்னுடையது, சோதி உனது, புவி உன்னு
யது, உக்கிரனே! இந்த விரிந்தவானம் உனதாகும். ஆத்
வுள்ள இந்த அனைத்தும் புவியில் சுவாசிப்பதும் உனதா
. கக நற்பொருள்களைத் தரித்து இந்தபுவனங்களை எல்
ாம் உள்ளடைந்துள்ள இவ்விரியுங்கோசம் உன்னுடைய
ாகும் ; பசுபதியே! நீ எங்களுக்குப் பிரியமளிப்பவனாக
வும், உனக்கு வணக்கம்; நரிகளும் நாய்களும் பீழைகளும்
நீங்குக, கலைந்த கேசங்களுடனே கயத்துக்குக் கதறும்
ஸ்திரீகளும்—விலகுவார்களாக. கஉ நீ பொன்மையும்
ந்சளுமான வில்லைத் தரிக்கிறாய், நீ ஆயிரமழிப்பவன்,
நூறு கொல்பவன், சிகண்டந் தரிப்பவனே! தேவாயுத
ான ருத்திரனுடைய யம்பு பாய்கின்றது; இங்கிருந்து
த்திசையிலானாலும் அதற்கு வணக்கம். கங ருத்
னே! அடிபட்ட மிருகத்தின் யடிதொடரும்—வேடன்
ரலே—மறைந்து உன்னை வீழ்த்த எதிர்ப்பவனை நீ பின்
ம் துரத்திச் செல்கிறாய். கச பவனும் ருத்திரனும்
னாந்து ஒன்று சேர்ந்து உக்கிரர்களாய் இவர்கள்
த்துக்குச் செல்லுகிறார்கள்; இங்கிருந்து எத்திசையி

லானாலும் அவர்களுக்கு வணக்கமாகுக. கரு வரும் உனக்கு வணக்கம், போகும் உனக்கு வணக்கம், ருத்திரனே! நிற்கும் உனக்கு வணக்கம். உட்காரும் உனக்கு வணக்கம். கசு காலையில் வணக்கம். மாலையில் வணக்கம். இரவிலே வணக்கம். பகலிலே வணக்கம். இருவர்களான பவனுக்கும் சர்வனுக்கும் நான் வணக்கமளித்துள்ளேன். கரு முன்புறம் ஆயிரங்கண்களோடு கண்டு பல இடங்களில் எறியும் ருத்திரனோடு, அவன் தன் நாவோடு செல்லுங்கால், நாங்கள் அவனில் மொதாமலாக வேண்டும் கஅ கருங்குதிரைகளுடனாகி கருப்பாகி கலக்க மளிப்பனவாயும் கொல்லும் துரகங்களுமுள்ள கேசமுள்ளவனுடைய இரத்தத்தை விழச் செய்யும் அசுவத் தலைவனுமான அவனுக்கு வணக்கம். கக தேவாயுதமான தண்டத்தை எங்களில் செலுத்தாதே. பசுபதியே! எங்களில் கோபமாகாதே. உனக்கு வணக்கம். திவ்ய சாகையை எங்களைத் தவிர வேறு எங்காவது குலுக்கு. உ௦ எங்களுக்குத் துன்பஞ் செய்யாதே; எங்களுக்குத்—திவ்யஞ்—சொல்; கோபமாகாதே. நாங்கள் உன்னுடன், எதிர்ப்பாக வேண்டாம். உக எங்கள் பசுக்களில் புருஷர்களில் உனக்கு அவா வேண்டாம். எங்கள் ஆடு அஜங்களில் ஆசை வைக்காதே. உக்கிரனே! வேறு எங்காவது, நீ அம்பைச் செலுத்து. பரிகாசஞ் செய்பவர்களைப் பாழாக்கு. உஉ வலிமையான குதிரையின் கனைப்புப்போலே, சுரமும் இருமலும் எவனது ஒரே ஆயுதமாய் செல்லுகின்றதோ, எவன் தொடர்ச்சியாய் அவ்வாயுதத்தை இழுக்கின்றானோ அவனுக்கு வணக்கமாகுக. உங எவன் வானத்தில் திரமாகி நின்று யக்ஞஞ் செய்யாதவர்களையும் தேவ நிந்தகர்களையும் கொல்லுகிறானோ பத்து சக்வரிக

ளுடன் அவனுக்கு வணக்கமாகுக. ௨௪ உனக்குக் காட்டுப் பிராணிகள் கானக மிருகங்கள், ஹம்ஸங்கள், சுபர்ணங்கள் கருடன்கள் பறவைகள் வைக்கப்பட்டுள்ளன; பசுபதியே! சலத்திலே யுள்ளவன் உனது யட்சன். திவ்ய சலங்கள் உனது செழுமைக்குப் பாய்கின்றன. ௨௫ சிசுமாரங்களும்[1] சருப்பங்களும் பூரிகயங்களும் ஜஷைகளும் மீன்களும் இரஜஸைகளுமான—ஜந்துக்களில்—நீ ஆயுதத்தை வீசுகிறாய்; பவனே! உனக்குத் தூரமுமில்லை தடையுமில்லை; ஒரு இமையிலே நீ உலகமெல்லாம் பார்க்கிறாய். பூர்வத்திலிருந்து வட சமுத்திரம் வரை நீ வேதனை செய்கிறாய். ௨௬ ருத்திரனே! எங்களைச் சுரத்துடன் சேர்க்காதே. விஷத்தோடு விசைக்காதே, திவ்யாக்கினியுடன் எங்களைத் தோய்க்காதே. எங்களுக்கு அந்நியமாய் வேறு எங்காவது அந்த மின்னலை விழச்செய். ௨௭ பவன் சோதியின் தலைவன் புவியின்—ஈசன். அவன் விரியும் வானத்தில் வியாபகமாயுள்ளான். இங்கிருந்து எந்த திசையிலுமுள்ள அவனுக்கு வணக்கமாகுக. ௨௮ பவ இராஜனே! யஜமானனுக்குச் சுகமளிப்பவனாகவும், ஏனெனில் நீ பசுக்களின் பசுபதியா யுள்ளாய்; தேவர்கள் உண்டு எனச் சொல்லும் சிரத்தையுள்ளவனுடைய இரு கால் நான்கு கால் பிராணிகளுக்கு நீ சுகமளிப்பவனாகவும். ௨௯ நீ, எங்களுடையப் பெரியவனை, எங்களுடையச் சிறியவனை, எங்களுடைய பாலர்களை, எங்களுடைய பாரந் தாங்குபவர்களை, எங்களுடைய தாயை, எங்களுடைய தந்தையை துன்பஞ் செய்யாதே. ருத்திரனே! எங்களுடைய காயத்தைக் கட்டத்திலாக்காதே. ௩0 ருத்திரனுடைய, ஊளையிடும் ஊனங்கத்தும் உயரிய வாயுள்ள நாய்களுக்கும் நான் இந்த வணக்கஞ் செய்

[1] சலஜந்து.

துள்ளேன். ௩௧ உனது கோஷிப்பவர்களுக்கு நமஸ்காரம், உனது கேசிகளுக்கு நமஸ்காரம். வணக்க மளிக்கப்படுபவர்களுக்கு நமஸ்காரம், இணைந்து புசிப்பவர்களுக்கு நமஸ்காரம். தேவனே உனது சேனைகளுக்கு நமஸ்காரம். எங்களுக்குச் சுவஸ்தியாகுக. எங்களுக்கு அச்சம் சூனியமாகுக. [௧௧. ௨. ௧—௩௧]

௪௬௫ ஓதனம் [அதர்வணன்—பார்ஹஸ்பத்யோதனம்]

௧—௧௦ பிரகஸ்பதி இந்த ஓதனத்தின்[1] சிரம், பிரம்மா, முகம். புவி சோதிகள் செவிகள், சூரியர் சந்திரர் கண்கள், ஏழு ரிஷிகள் பிராணுபானங்கள். கண் உலக்கை காமம் உரல். திதி முற்றுக்கூடை, அதிதி அதனை தரிப்பவள், வாதன் சலிப்பவன். குதிரைகள், தானியங்கள், பசுக்கள், அரிசிகள், ஈக்கள் உமிகள். கப்ரு சல்லடை மேகம் சரம். கருப்பு உலோகம் அதன் மாமிசம், சிகப்பு அதன் உதிரம். தகரம் அதன் சாம்பல் பசுமைகள் அதன் நிறங்கள், புஷ்கரம் அதன் கந்தம். சலிக்கும் புவி பாத்திரம், இரு சிம்புகள் அதன் தோள்கள் இரு தண்டங்கள் அதன் முதுகெலும்புகள். குடர்கள் அதன் கண்டெலும்புகள், அந்திரங்கள் அதன் வார்கள். ௧௧—௨௦ இப்புவியே பக்குவமாகும் ஓதனத்தின் கலசம் சோதி மூடி. உழவுச் சால்கள் அதன் விலா எலும்புகள் மணல் குடர்ப் பொருள். ருதம் அதன் கைகழுவுஞ் சலம், நதிகள் அதன் பொழிவு. ருக்கினுல் கலசம் வைக்கப்படுகின்றது. யஜுஸினுல் பிரேரிதமாகும். பிரம்மத்தால் கிரகிக்கப்படும் சாமனுல் செலுத்தப்படும். பிருஹத்து கலக்கும் குச்சி. இரதந்தரம் அகப்பை. ருதுக்கள்

---

1 உணவு, பிரம்மமயமான உணவின்.

௪௬௫ கருத்து—அதர்வ ருத்திரம்.

பக்குவஞ் செய்பவர்கள், ருதுக் காலங்கள் அனல் எழும்புகின்றன. பஞ்ச முகமுள்ள பாத்திரத்தை உகையை உஷ்ணம் எரிக்கும். யக்ஞ—த்தால்—சொல்லப்—படும் எல்லா உலகங்களும் ஓதனத்தால் கிடைக்கும். அந்த ஓதனத்தில் வரிசையாய் கீழே கடல் சோதி புவி ஆசிரதமாயுள்ளன. உக—ரூக அதன் உச்சிஷ்டத்தில் ஆறு எண்பது தேவர்கள் சித்தமானுர்கள். ஓதனத்தின் மேலான மகிமை என்னவென நான் உன்னை—வினவுகிறேன். ஓதன மகிமையை யறிபவன் அது அற்பமில்லை, அது பொழிவு பூஜ்யமில்லை இதுவும் எதுவுமில்லை எனச் சொல்லுவான். அளிப்பவன்—அதனைப்பற்றி யத்தனை நினைக்கிருனே அதற் கதிகமாய் அதனை உரைக்கலாகாது. நீ பார்க்காத ஓதனத்தைப் புசித்தாயோ? அல்லது நீ பார்க்கும் ஓதனத்தைப் புசித்தாயோ? எனப் பிரம்ம வாதிகள் கேட்கிருர்கள். நீ ஓதனத்தைப் புசித்தாயா? அல்லது ஓதனம் உன்னைப் புசித்ததா? காணுத—கவிழ்ந்துள்ள—ஓதனத்தை நீ புசித்திருந்தால் பிராணன்கள் உன்னை நீங்கும் என ஒருவன் இவனுக்குக் கூறுகிருன். காணும்—நேராயுள்ள—ஓதனத்தை நீ புசித்திருந்தால் அபானங்கள் உன்னை நீங்குமென ஒருவன் இவனுக்குப் புகலுகிருன். இல்லை நான் ஓதனத்தை புசிக்கவில்லை ஓதனமும் என்னைப் புசிக்கவில்லை. ஓதனம் ஓதனத்தையே புசித்துள்ளது. ரூஉ பூர்வ ரிஷிகள் புசித்த—எந்த இத்தலையுண்டோ அந்தத் தலையாலில்லாமல் நீ வேறு சிரத்துடன் இதனைப் புசித்திருந்தால் புராதனத்தினின்று தோன்றிய உனது பிரஜை மரித்துவிடும். அதற்கு ஒருவன் சொல்லும் மொழியாவது—பதில்-நான் இங்கு வரும் இதனையோ வராததையோ நீங்குவதையோ புசித்தேனில்லை. நான் பிரகஸ்பதி

யான சிரத்தோடு இதைப் புசித்தேன். அவனால் நான் இதனைச் செலுத்தியுள்ளேன். இந்த ஓதனமானது சர்வாங்கமுள்ளது, சர்வ சந்தியுள்ளது, சர்வ தேகமுள்ளது; இப்படியறிபவன் சர்வாங்கன் சர்வசந்தியான சர்வதேகனுவான். ௩௩ பூர்வரிஷிகள் இதனைப் புசித்த எந்த செவிகள் உண்டோ அச்செவிகளாலில்லாமல் வேறு காதுகளால் நீ இதனைப் புசித்திருந்தால், நீ செவிடாவாய்—அதற்கு—இங்ஙனம் ஒருவன்—மறுமொழி அளிப்பதாவது—நான் இங்கு வரும் இதனையோ, வராததையோ நீங்குவதையோ புசித்தேனில்லை: சோதி புவி யென்னும் செவிகளால் இதனைப் புசித்துள்ளேன்: நான் அவற்றால் இதனைச் செலுத்தி யுள்ளேன்; இந்த ஓதமானது............சர்வதேகனுவான். ௩௪ பூர்வரிஷிகள்............கண்களால் நீ இதனைப் புசித்திருந்தால் நீ குருடனுவாய்....சூரியன் சந்திரன் என்னுங் கண்களுடன்............சர்வதேகனுவான். ௩௫ பூர்வரிஷிகள்....... ....முகத்தால் இதனைப் புசித்திருந்தால் உனது பிரஜை முகத்திலிருந்து மரிக்கும்,............ பிராமணன் என்னும் முகத்தோடு........சர்வதேகனுவான். ௩௬ பூர்வரிஷிகள்............நாவால் இதனைப் புசித்திருந்தால் உனது நா நாசமாகும்...............நான் அக்கினியின் நாவோடு......................சர்வதேகனுவான். ௩௭ பூர்வரிஷிகள்..............பற்களால் இதனைப் புசித்திருந்தால் உனது பற்கள் விழும்..............ருதுக்கள் என்னும் பற்களுடன் சர்வதேகனுவான். ௩௮ பூர்வ ரிஷிகள்.... ....... பிராண பானங்களால் இதைப் புசித்திருந்தால் அந்தப் பிராணபானங்கள் உன்னை நீங்கும்...................ஏழு ரிஷிகளான பிராணபானங்களால்...........சர்வதேகனுவான். ௩௯ பூர்வரிஷிகள்..............வியசசால் இதைப் புசித்

திருந்தால், அரசனுன யக்ஷ்மன் உன்னை யழிப்பான்,........
.......வானமென்னும் வியசஸோடு.......சர்வதேகனுவான்.
௪೦ பூர்வரிஷிகள்......................முதுகால் இதைப் புசித்
திருந்தால் மின்னல் உன்னைக் கொல்லும். சோதி என்னும்
முதுகால்...........சர்வதேகனுவான். ௪௧ பூர்வரிஷிகள்
................மார்பால் புசித்திருந்தால் உழவுத் தொழிலால்
நீ ஓங்கமாட்டாய்;..........................புவி என்னும் மார்பால்
...........சர்வதே கனுவான். ௪௨ பூர்வரிஷிகள்........உத
ரத்தால் புசித்திருந்தால் வயிற்று வலி உன்னைக் கொல்லும்
...............உண்மை என்னும் உதரத்தால்...............சர்வ
தேகனுவான். ௪௩ பூர்வரிஷிகள்..............வஸ்தியால்
புசித்திருந்தால், நீ சலங்களிலே மரிப்பாய்...........நான்
கடல் என்னும் வஸ்தியால்...............சர்வதேகனுவான்.
௪௪ பூர்வரிஷிகள்.................வேறு தொடைகளால் புசித்
திருந்தால் உனது ஊருக்கள் ஒழியும்...............மித்திர
வருணன் என்னும் தொடைகளால்....சர்வதேகனுவான்.
௪௫ பூர்வ ரிஷிகள்..................வேறு முழந்தாள்களால்
புசித்திருந்தால்...........நீ முடவனுவாய்.............துவஷ்டா
வின் கால்களால்...........சர்வ தேகனுவான். ௪௬ பூர்வ
ரிஷிகள்...............காற்களால் புசித்திருந்தால்................நீ
அதிகம் சுற்றுபவனுய்..............அசுவினிகளின் கால்
களால்...............சர்வ தேகனுவான். ௪௭ பூர்வ ரிஷி
கள்................முன் பாதங்களால் புசித்திருந்தால் பாம்பு
உன்னைக் கொல்லும்...........சவிதாவின் முன் பாதங்க
ளால்...........சர்வ தேகனுவான். ௪அ பூர்வரிஷிகள்....
..........கைகளால் புசித்திருந்தால் நீ பிராமணனைக் கொல்
வாய்................ருதம் என்னும் கைகளால் சர்வதேக
னுவான். ௪௯ பூர்வ ரிஷிகள்..............பிரதிஷ்டையால்
புசித்தால் பேராதரவு தரிப்பற்று நீ மறைவாய்...........

....சத்தியத்திலேயே திடமாகி...........சர்வ தேகனாவான். ௫௦ ஓதனமெனயழைக்கப்படும் அது சிகப்பனது உச்சியாகும். ௫௧ இங்ஙனமறிபவன் சூரியனுடைய உச்சியை யாசிரியமாகிறான். சூரிய உலகமாகிறான். ௫௨ பிரஜாபதி இந்த ஓதனத்தினின்று முப்பத்துமூன்று உலகங்களைச் சித்தஞ் செய்தார். ௫௩ அவர்களுடைய பிரக்ஞானத்துக்காக யக்ஞத்தை யுண்டுபண்ணினார். ௫௪ இங்ஙனமறிபவனை காண்பவன்—நிந்திப்பவன்—தனது பிராணனையேத் தடை செய்து கொள்பவனாகிறான். ௫௫ அவன் தனது பிராணனைத் தடுக்கவில்லையேல் அவன் பூரணமாய் எரிந்து சாம்பலாகிறான். ௫௬ அவன் எரிந்து பூரண சேதமாகவில்லையேல் அவனது சுவாசம் மூப்புமுன் நீங்கும். [௧௧. ௩. ௧—௫௬]

௪௯௭ பிராணன் [பார்கவ வைதர்ப்பி—பிராணன்]

௧ எவனுடைய சுவாதீனத்தில் இந்த சர்வமும் நிகழ்ந்து எவன் சகலத்தின் ஈசனாகி, எவனில் எல்லாம் திரமாய் நிற்கின்றதோ அப்பிராணனுக்கு நமஸ்காரம். ௨ பிராணனே! உனது பேரொலிக்கு நமஸ்காரம், உனது இடிமுழக்கத்துக்கு நமஸ்காரம்; பிராணனே உனது மின்னலுக்கு நமஸ்காரம். மழை பொழியும் உனக்கு நமஸ்காரம். ௩ பிராணன் இடி முழக்கமுடன் ஔஷதிகளில் கர்ச்சனை செய்யுங்கால் அவை[1] வளமுடனாகும்; அவைக் கருத்தரிக்கும்; அப்பால் வெகு பல சனனமாகும். ௪ ருது வந்தவுடன் ஔஷதிகளில் பிராணன் கர்ச்சிக்குங்கால் புவியிலுள்ள அனைத்தும் சர்வமும் சந்தோஷ

1 செடிகொடிகள்

௪௯௯ கருத்து—உணவுமயமான பிரமத்தை அறிபவன் உண்மையை யறிகிறான்

மாகும். ௬ மேலான புவியில் பிராணன் மழையோடு பொழியுங்கால் 'நமக்கு மேன்மையாகும்!' என பசுக்கள் எல்லாம் இன்பமுடனுறும். ௬ மழை பொழியப்பட்ட ஔஷதங்களானது பிராணனோடு நீ எங்கள் ஆயுட் காலத்தை தீர்க்கஞ் செய்தாய் எங்களை எல்லாம் சுகந் தஞ் செய்தாய் எனப் பேசும். எ வரும் உனக்கு வணக்கமாகுக; போகும் உனக்கு வணக்கமாகுக; பிராணனே! நிற்கும் உனக்கு வணக்கம். உட்காரும் உனக்கு வணக்கம். அ பிராணனே! சுவாசிக்கும் உனக்கு வணக்கம், அபானஞ் செய்யும் உனக்கு வணக்க மாகுக. திரும்பிச் செல்லும் உனக்கு வணக்கம். திரும்பி நோக்கும் உனக்கு வணக்கம். உனது அனைத்துக்கும் இவ் வணக்கமாகுக. ௯ பிராணனே! உனது பிரியமான தேகத்தையும் உனது அதி பிரியமான காயத்தையும் உனது மருந்தையும் நீ எங்கள் சீவனத்துக்காக அளி. ௧௦ பிரிய மகனைப் பிதாப்போல் பிராணன் பிரஜைகளை —உடைபோல்—யலங்கரிக்கும்; சுவாசிப்பது சுவாசிக் காதது சகலத்துக்கும் பிராணன் ஈசுவரன். ௧௧ பிரா ணன் மிருத்யு, பிராணன் தக்மன். தேவர்கள் பிராணனை உபாசிக்கிறார்கள்; பிராணன் சத்தியம் பேசுபவனை உத்தம உலகத்தில் நாட்டும். ௧௨ பிரா ணன் விராடன், பிராணன் நிர்வாகி, சகலரும் பிரா ணனை உபாசிக்கிறார்கள். பிராணன் சூரிய சந்திரன். அவர்கள் பிராணனைப் பிரஜாபதி என அழைக்கிறார்கள். ௧௩ பிராணனும் அபானனும் அரிசியும் யவமுமாகும்: பிராணன் பொதிமாடு என அழைக்கப்படும். பிராணன் யவத்தில் நிலைக்கும். அபானனை அரிசி என்பார்கள். ௧௪ கருப்பையினுள்ளே புருஷன் உட்சுவாசம் புறச் சுவாசஞ் செய்வான்; பிராணனே நீ துரிதஞ்செய்த

வுடன் அவன் மறுபடியும் சனனமாகிறான். கரு அவர்கள் பிராணனை மாதரிசுவான் எனச் சொல்லுகிறார்கள், பிராணன் வாதம் எனச் சொல்லப்படும். இருந்தது இருக்கப் போவது எல்லாம் பிராணனில் நிலை நிறுத்தப் பட்டுள்ளன. கசு ஆதர்வணியின் ஆங்கிரஸனின் தேவ, மானிடர்களின் ஔஷதிகளை, பிராணனே, நீ தூண்டுங்கால், அவை சனனமாகின்றன. கஎ பிராணன், மழையால் மேலான புவியில் பொழியுங்கால் ஔஷதங்கள் சனனமாகின்றன: அப்படியே எல்லாச் செடிகளும் தோன்றுகின்றன. கஅ பிராணனே! உனது இந்த உண்மையை யறிபவனுக்கும் எவனில் நீ நிலைத்துள்ளாய் என்பதை யறிபவனுக்கும், அனைவரும் அந்த உயரிய உலகத்தில் காணிக்கையைக் கொண்டு வருவார்கள். கக பிராணனே! எங்ஙனம் இந்தப் பிரஜைகள் எல்லாம் உனக்கு காணிக்கையைக்கொண்டு வருகின்றனவோ, அங்ஙனம், நற்கேள்வியோனே! உன்னைச் செவியுறுபவனுக்கு அவர்கள் காணிக்கையை எடுத்துச் செல்வார்கள். உ0 கருவாகும் அவன் தேவதைகளின் உள்ளே சலனமாகிறான்: அவன் பூதன் ஆபூதனாகி—சர்வவியாபகனாகி மறுபடியும் தோன்றுகிறான். பூதம் பவ்யம் பவிஷ்யத்தில் அவன் சக்திகளுடன், பிதா மகனைப் போல நுழைந்துள்ளான்.

உக ஹம்ஸன் எழுங்கால் தனது ஒரு பாதத்தை சலத்தினின்று நீக்குவதில்லை. அவன் அதை நீக்கினால் அப்பொழுது — இன்று — என்பதும் — நாளை — என்பதும் மறையும் அப்போது இரவும் பகலும் இல்லை; உஷா காலமுமிராது. உஉ ஒரு விளிம்பு — ஆயிரம் கண்களுடன் எண் சக்கரமுள்ள அது[1] மூன்றும்

1 சூரியன்.

பின்னுஞ் சுழலும் பாதியால், அது விசுவமான புவனத்தைச் சனனஞ் செய்தது, அதன் வேறு பாதி எது? அச்சின்ன மெது? ௨௫ விசுவ ஜன்மமான இதன் ஈசனும், சலனமாகும் சர்வத்தின்—தலைவனும்—அந்நியப் பிராணிகளில்—துரித வில்லாளனுமுள்ள பிராணனை உனக்கு வணக்கமாகுக, ௨௪ விசுவ ஜன்மனான இதன் ஈசனும், சலனமாகும் சர்வத்தின் தலைவனும், விழிப்புள்ளவனாகி, பிரம்மத்தால் தீரனுமுள்ள பிராணன் என்னை யநுசரிப்பானாக. ௨௫ உறங்குபவர்களில் உயரமாயுள்ள அவன் விழித்துள்ளான். அவன் ஒருபொழுதும் மட்டமாய் விழுவதில்லை. உறங்குபவனில் உறங்குபவனாக, அவனை ஒருவரும் செவியுற்றதில்லை. ௨௬ பிராணனே நீ என்னிடமிருந்து நீங்காதே: நீ எனக்கு அந்நியனாகமாட்டாய்; பிராணனே! சலங்களின் கருவைப் போல் சீவனுக்காக உன்னை என்னில் **கட்டுகிறேன்.** [௧௧. ௪. ௧—௨௬]

௪௬௮ பிரம்மச்சாரி [பிரம்மன்—பிரம்மசாரி]

௧ பிரம்மசாரி வானம் புவியை நடத்திச் செல்லுகிறான். தேவர்கள் அவனில் ஒரு மனத்துடனாகிறார்கள். அவன் பூமியையும் சோதியையுந் தரிக்கிறான்; அவன் குருநாதனைத் தவத்தால் நிரப்புகிறான். ௨ பிதுருக்களும் தேவ சனங்களும் தனித்தனியாய் எல்லா தேவர்களும் பிரம்மசாரியை யநுசரித்துக் குவிகிறார்கள்; கந்தர்வகளும் முப்பத்து மூன்று, முந்நூறு ஆறாயிரம் தேவர்களும் அவனை அனுசரித்துச் சென்றுள்ளார்கள். அவன் எல்லாத் தேவர்களையும் தவத்தால் பூரணஞ் செய்கிறான். ௩ குருநாதன் உபநயமான மாணவனை

---

௪௬௭ கருத்து—பிராணனால் எல்லாப்பெருமையும் புலனாகும்.

கருப்பையினுள்ளே தரிக்கிறான்; அவன் தனது உதரத்தில் மூன்று இரவுகள் அவனைக் காக்கிறான்; அவன் சனனத்தைக் காண தேவர்கள் அங்கு கூடுகிறார்கள். ச இப்புவி ஸமித்து, சோதி இரண்டாவது—விறகு; அவன் வானத்தைச் சமிதையால் நிறைக்கிறான். பிரம்மசாரி புவிகளை, கட்டையால், கச்சையால் கட்டத்தால் தவத்தால் பூரணஞ் செய்கிறான். ரு பிரமத்திலும் முன் ஜனனமான பிரம்மசாரி, தாப மணிந்து தவத்துடன் நின்றான். அவனிடமிருந்து, பிரம்மன் சேட்டப்பிரம்மன் அமுதமுடன் எல்லா தேவர்களும் சேர்ந்து பிறந்தார்கள். சூ பிரம்மசாரி சமிதையால் சுவாலையாகி, கிருஷ்ண சருமர் தரித்து நீண்டதாடியுடன் தீட்சையோடாகிச் செல்லுகிறான்; அவன் உலகங்களைப் பற்றி அடிக்கடித் தன் வசஞ் செய்பவனாய் கீழ்க் கடலிலிருந்து மேற்கடலுக்குத் துரிதஞ்செல்லுகிறான். எ பிரம்மசாரி பிரம்மத்தையும் சலங்களையும் உலகத்தையும் பிரஜாபதியையும் பரமேஷ்டியையும் விராஜனையும் ஜனனஞ் செய்து, அமுதமூலத்தில் கருவுமாகி இந்திரனுமாகி அசுரர்களைத் தகர்த்துள்ளான். அ குருநாதன் இந்த விசால கம்பீரமான வானங்களையும், சோதியையும் புவியையும் உருவஞ்செய்தான்; பிரம்மசாரி தவத்தால் அவற்றைப் பாலனஞ் செய்கிறான்; அவனில் தேவர்கள் ஒருமனத்துடனாகிறார்கள். கூ பிரம்மசாரி இவ் விரிந்த புவியை முதற்ப் பிச்சையாகக் கொண்டு வந்தான்; அவற்றை சமிதையாகச் செய்து அவன் உபாசிக்கிறான்; விசுவமான புவனங்கள் அவற்றில் சரணங்களாகும். கO ஒன்று இங்கு, வேறு பரத்துக்கப்பால் சோதி வரம்பின் இரகசியத்தில் பிராமணனுடைய

இரு செல்வங்கள் வைக்கப்பட்டுள்ளன! அவற்றை பிரம்மசாரி தவத்தால் பாலனஞ் செய்கிறான். அதை யறிந்து கேவலப், பிரம்மத்தைச் செய்கிறான். ௧௧ ஒன்று இப்பக்கம் புவிக்கப்பால் வேறு, இவ்விரண்டு வியாபகங்களின்[1] நடுவே இரு அனல்கள் ஒன்று குவியும். அவற்றில் திடமான இரசிமிகள் ஆசிரயமாகும். பிரம்ம சாரி தவத்தால் அவற்றை மிதிக்கிறான். ௧௨ சிகப்பாய் சியாமனுய்ச் செல்பவன் கர்ச்சித்து இடிஇடித்து புவியில் பெரிய வீரியத்தை வகிக்கிறான்: பிரம்மசாரி புவியின் மேல் இரேதஸைப் பொழிகிறான்: அதனால் நான்கு திசை கள் சீவிக்கின்றன. ௧௩ அனலில், சூரியனில் சந்திரனில் மாதரிசுவனில் சலங்களில் பிரம்மசாரி சமிதையை வைக் கிறான். அவற்றின் ஒளிகள் தனித்தனி மேகஞ் செல்லும். அவற்றின் ஆஜ்யம் புருஷனும் மழையும் சலங்களுமாவார் கள். ௧௪ குருநாதன், மிருத்யு, வருணன், சோமன், ஔஷ தங்கள் பாலானன். இடிமேகங்கள் வீரர்களானர்கள், அவர்களால் இந்த சுவர்க்கம் கொண்டு வரப்பட்டுள்ளது. ௧௫ வருணன் குருநாதனுகி, எல்லா நெய்யையுந் தனக்கே செய்து கொள்ளுகிறான். அவன் விரும்புவதை, மித்திர ஞன பிரம்மசாரி, தனது ஆன்மாவிலிருந்து, பிரஜா பதிக்கு அளிக்கிறான். ௧௬ குருநாதன் பிரம்மசாரி, பிர ஜாபதி பிரம்மசாரி. பிரஜாபதி யரசுபுரிகிறான்—அரசு புரியும்—விராடனே வசஞ் செய்யும் இந்திரனுனன். ௧௭ பிரம்மசரியத்தால், தவத்தால் அரசன் இராஷ்டிரத் தைப் பாலனஞ் செய்கிறான். குருநாதன் பிரம்மசரியத் தால் பிரம்மசாரியை விரும்புகின்றான். ௧௮ கன்னிகை பிரம்மசரியத்தால் யுவ பதியை அடைகிறாள். பிரம்ம சரியத்தால் குதிரையும் சுமைக்காளையும் உணவையடைய

---

1 அனல்களின்

முயற்சிக்கும். கக பிரம்மசரியத்தாலும் தவத்தாலும் மிருத்யுவை தேவர்கள் அழித்தார்கள். இந்திரன் பிரம்மசரியத்தால் தேவர்களுக்கு சுவர்க்கத்தைக் கொண்டுவந்தான். உ௦ ஔஷதங்கள், பூதம், பவிஷ்யம், பகல் இரவு வனஸ்பதி ருதுக்களுடன் வருடம்—இவை யெல்லாம் பிரம்மசாரியினிடமிருந்தே புலனாகின்றன. உக புவி சோதியின் பசுக்கள், கிராமம் வனத்தின்—மிருகங்கள் சிறகு சிறகற்றவை—இவை பிரம்மசாரியிடமிருந்தே தோன்றுகின்றன. உ௨ பிரஜாபதியின் - பிராணிகள் —எல்லாம் தனித்தனியாய் ஆன்மாக்களில் பிராணனைத் தரிக்கும். பிரம்மசாரியில் இரட்சிதமான பிரமன் அந்த அனைத்தையும் காக்கிறான். உ௩ தேவர்களுக்குத் துரிதமான- அவன் இன்னும் ஏறுமலுள்ள அவன் சோதியாகி சலனமாகிறான்; அவனிடமிருந்து அமுதத்தோடு சேர்ந்து எல்லா தேவர்களும் சேட்டப் பிரம்மனை பிராம்மணனும் தோன்றினான். உச பிரம்மசாரி சேட்டப் பிரம்மனை தரிக்கிறான். அவனில் எல்லா தேவர்களும் சேர்ந்து இழைக்கப்பட்டுள்ளார்கள்; அவன் பிராணாபானனையும், அப்பால் வியானனையும் வாக்கையும் மனத்தையும், இருதயத்தையும், பிரம்மத்தையும், மேதையையும் சனனஞ் செய்கிறான். உரு கண்ணை காதை கீர்த்தியை நீ எங்களில் வை. உணவை இரேதஸை உதிரத்தை—நீ எங்களில் வை. உசு பிரம்மசாரி இவற்றை யெல்லாஞ் சித்தஞ் செய்து சமுத்திரத்திலே சலத்—தின் வரம்பிலே தவத்தில் தவமாகி நின்றான், ஸ்நாதமாகி சிகப்பும் பழுப்புமான அவன், புவியில் அதிசோதி வீசுகிறான். [கக.ரு. க—உசு]

---

சசுஅ கருத்து—பிரம்மசரிய மகிமை.

சசுக துன்பம் நீங்கு [சந்தாதி—சந்திரமா உதமந்திரோக்த தேவதை]

க நாங்கள் அக்கினியையும் வனஸ்பதிகளையும் ஔஷதிகளையும் செடி கொடிகளையும் இந்திரனையும் பிரஹஸ்பதியையும் மொழிகிறோம்[1]. அவர்கள் எங்களைத் துன்பத்தினின்று நீக்குவார்களாக. உ நாங்கள் இராஜாவான வருணனையும் மித்திரனையும் விஷ்ணுவையும் அப்படியே பகனையுங் கூறுகிறோம். அம்ஸனையும் விவஸ்வந்தனையுஞ் சொல்லுகிறோம். அவர்கள் எங்களைத் துன்பத்தினின்று தனிமையாக்குவார்களாக. ங நாங்கள் தேவசவிதாவையும் தாத்ருவையும் பூஷணனையும் விளம்புகிறோம். நாங்கள் முதன்மையான துவஷ்டாவையும் ஓதுகிறோம்: அவர்கள் எங்களைத் துன்பத்தினின்று துணிப்பார்களாக. ச நாங்கள் கந்தருவர்களையும், அப்சரசர்களையும், இரு அசுவினிகளையும், பிரம்மணஸ்பதியையும் அரியமான் என்னும் நாமமுள்ள தேவனையும் நுவல்கிறோம். அவர்கள் எங்களைத் துன்பத்தினின்று துண்டிப்பார்களாக. ரு நாங்கள் தினத்தையும் இரவையும் சூரிய சந்திரனையும் செப்புகிறோம்: எல்லா ஆதித்தியர்களையும் கதைக்கிறோம். அவர்கள் எங்களைத் துன்பத்தினின்று தளர்த்துவார்களாக. சு நாங்கள் காற்றைக் கூற்றுகிறோம்; நாங்கள் பர்ஜனியன் வானம் அப்பால் திசைகளையும் பறைசாற்றுகிறோம்; அவர்கள் எங்களைத் துன்பத்தினின்றும் கழிப்பார்களாக. எ இரவும் பகலும் உஷையும் சபதத்தினின்று வருவதை என்னிடமிருந்து விலக்குவார்களாக. சந்திரன் என அவர்கள் அழைக்கும் சோமன் என்னை விடுதலையாக்குவான். அ நாங்கள் புவிச் சேர்க்கையான சோதி சம்பந்த பசுக்களையும், வன

1 அழைக்கிறோம்

மிருகங்களையும் கழுகுகளையும் பறவைகளையும் இசைக்
கிறோம்; அவர்கள் எங்களைத் துன்பத்தினின்று அகற்று
வார்களாக. ௯ நாங்கள் இப்பொழுது பவனையும் சர்வ
னையும் ருத்திரனையும் பசுபதியையும் புகலுகிறோம்: அவர்
கள் எங்களைத் துன்பத்தினின்று பிரிப்பார்களாக. நாங்
கள் நன்கறியும் அவர்களுடைய அம்புகள் எங்களுக்கு
எப்போதும் மங்களகரமாகுக. ௧௦ நாங்கள் சோதியை
யும் நட்சத்திரங்களையும், புவியையும் யக்ஷர்களையும், மலை
களையும், கடல்களையும், நதிகளையும் ஏரிகளையும், வழங்கு
கிறோம். அவர்கள் எங்களைத் துன்பத்தினின்று ஒதுக்
குவார்களாக. ௧ நாங்கள் இப்போது எழு ரிஷிகளையும்
திவ்ய சலங்களையும் பிரஜாபதியையும் இயம்புகிறோம்.
இயமனைத் தலைமையுடனுன பிதுருக்களையுஞ் சாற்று
கிறோம். அவர்கள் எங்களைத் துன்பத்தினின்று புற
மாக்குவார்களாக. ௧௨ சோதியிலுட்காருந் தேவர்களும்
வானத்திலமரும்—அமரர்களும் புவியில் அமர்ந்துள்ள
பலிஷ்டர்களும் எங்களைத் துன்பத்தினின்று விடுவிப்பார்
களாக. ௧௩ ஆதித்தியர்களும் ருத்திரர்களும் வசுக்
களும் சோதியிலுள்ள தேவர்களும், அதர்வாணர்களும்,
அங்கிரஸர்களும் மனனசீலர்களும் எங்களைத் துன்பத்தி
னின்று முக்தமாக்குவார்களாக. ௧௪ நாங்கள் யக்ஞத்
தை, யஜமானனை ருக்குகளை, ஸாமன்களை மருந்துகளை
உரைக்கிறோம்: நாங்கள் யஜுக்களை அழைப்புக்களை,
மிழற்றுகிறோம். அவர்கள் எங்களைத் துன்பத்திலிருந்து
சேதிப்பார்களாக. ௧௫ நாங்கள் சோமனைத் தலைவனு
யுள்ள செடி கொடிகளின் பஞ்ச இராஜ்யங்களைப் பேசு
கிறோம். நாங்கள் தருப்பையை பங்கையை யவத்தை
ஸஹத்தை இசைக்கிறோம். அவர்கள் எங்களைத் துன்
பத்தினின்று துமிப்பார்களாக. ௧௬ நாங்கள் அராயர்

களையும் அரக்கர்களையும், அரவுகளையும், அறசனங்களையும், பிதுருக்களையும் பனுவல் செய்கிறோம், நாங்கள் நூறு மிருத்யுக்களை வசனிக்கிறோம். அவர்கள் எங்களை துன்பத்தினின்று களைவார்களாக. கஎ நாங்கள் ருதுக்களையும் ருதுபதிகளையும், வருஷங்களையும் அயனங்களையும் ஆண்டுகளையும் வத்சரங்களையும், மாதங்களையும் விரிக்கிறோம். அவர்கள் எங்களைத் துன்பத்தினின்று விடுவிப்பார்களாக. கஅ தேவர்களே! தென் திசையினின்று வாருங்கள். மேற் திசையிலிருந்து கீழ்த் திசையணுகுங்கள்; கீழ்த்திசையிலிருந்து, வட திசையிலிருந்து சக்தி மிருந்து ஒன்றுசேரும் விசுவேதேவர்கள் எங்களைத் துன்பத்தினின்று கடத்துவார்களாக. கக நாங்கள் சத்தியம் வளர்த்து சத்திய மநுசரித்து, தங்கள் மனைவிகளுடனை விசுவே தேவர்களை தெரிவிக்கிறோம். அவர்கள் எங்களைத் துன்பத்தினின்று மீட்பார்களாக. உ0 சத்தியம் சாய்ந்து சத்தியம் செழிமை செய்யும், அவர்களது மனைவிகளோடான சர்வமான தேவர்களை நவிலுகிறோம்; அவர்கள் எங்களைத் துன்பத்தினின்று திருப்புவார்களாக. உக நாங்கள் பூதத்தையும்[1] பூத பதியையும் பூதங்களை வசியஞ் செய்பவனையும், ஒன்று சேரும் சர்வமான பூதங்களையும் பாசுரக்கிறோம். அவர்கள் எங்களைத் துன்பத்தினின்று ஓட்டுவார்களாக. உஉ பஞ்ச திசைகளான தேவிகளும் கஉ ருதுக்களான தேவர்களும் வருஷத்தின் பற்களும் எங்களுக்குச் சதாகாலம் மங்களஞ் செய்வார்களாக. உங மாதலி யறியும் இரதத்தால் வாங்கப்பட்டதும், சலங்களில் இந்திரனால் செலுத்தியதுமான மருந்தை சலங்களே! எங்களுக்கு அளியுங்கள். [கக' கூ. க—உங]

1 நிகழும் பொருளை,

சகூக கருத்து—துன்பந் தளர்ந்து இடமாகுங்கள்.

சஎ0 உச்சிஷ்டம் [அதர்வன்—அத்தியாத்ம உச்சிஷ்டன்]

க உச்சிஷ்டத்தில்[1] நாமமும் ரூபமுமுண்டு, உச்சிஷ்
டத்தில் உலகம் நிலைக்கும். உச்சிஷ்டத்தினுள்ளே இந்
திரனும் அக்கினியும் விசுவமும் நிரமாவார்கள். உ உச்
சிஷ்டத்தில் சோதியும் புவியும் விசுவமான புவியும் நிலை
யாகும். உச்சிஷ்டத்தில் சலங்கள், சமுத்திரம் சந்திரன்
காற்று நிலைபெறும். ங சத்தும் அசத்துமான இரண்
டும், மிருத்யுவும் வலிமையும் பிரஜாபதியும் உச்சிஷ்டத்
தில் நிகழ்வார்கள். வ்ர-ாவும், த்ர-ாவும், உலகத்திலுள்ள
வர்கள் உச்சிஷ்டத்தில் சாய்ந்துள்ளார்கள்: என்னில்
வாளாக. ச திடமாகும் நிரமாக்கும், நிரமும் ந்யமும்
பிரம்மமும் விசுவமுண்டாக்கும் தசங்களான தேவதை
களும் நாபியின் எல்லாப் பக்கங்களிலும் வளையத்தைப்
போல் உச்சிஷ்டத்தி லாதரவு ஆவார்கள். ரு ரிக்கும்,
ஸாமனும் யஜுஸும் உச்சிஷ்டத்திலாகும். உத்கீதமும்
பிரஸ்துதமும் ஸ்துதமும், ஹிங்காரமும், சுவரமும் ஸாம
னின் மேதியும் உச்சிஷ்டத்திலாகும்: அது என்னிலா
கும். சு தாயினுள்ளே கருவைப்போல உச்சிஷ்டத்தில்
ஐந்திராக்னமும் பாவமானமும், மகா நாம்னீயமும்
மகாவிரதமும், யக்ஞாங்கங்களுமாகும். எ இராஜசூயமும்
வாஜபேயமும் அக்கினிஷ்டோமமும் அப்பால் அத்வர
மும், அர்க்கமும் அசுவமேதமும், அதி ஆனந்தம் மிகும்,
ஜீவ தருப்பையும், உச்சிஷ்டத்திலுண்டு. அ அக்கினியாதே
யமும், தீட்சையும் சந்தமுடன் காமனளிப்பும் உற்சன்ன
யக்ஞங்களும் சத்திரங்களும் உச்சிஷ்டத்தில் ஒன்று
வைக்கப்பட்டுள்ளன. கூ அக்கினி ஹோத்திரமும் சிரத்
தையும், வஷட்காரமும் விரதமும் தவமும் தட்சிணையும்
இஷ்டமும் பூர்த்தமும், உச்சிஷ்டத்தில் ஒன்று திரமாக்

1 நேதியில்

கப்பட்டுள்ளன. ௧௦ ஒரு இராத்திரியும்[1] இரு இராத்திரிகளும் சத்யக்கிரீயும், பிரக்கிரீயும் உக்தியமும் உச்சிஷ்டத்தில் திரமாகி இழைக்கப்பட்டுள்ளன. அறிவால் யக்ஞத்தின் அணுக்களும்—உச்சிஷ்டத்திலுண்டு. ௧௧ சதுர் இராத்திரங்களும் பஞ்ச இராத்திரங்களும் ஆறு இராத்திரங்களும் அவை இருவகையாய் இணைந்தும், ஷோடசமும் ஏழு இராத்திரங்களும் அமுதத்தில் வைக்கப்பட்டுள்ள எல்லா யக்ஞங்களும உச்சிஷ்டத்திலிருந்து தோன்றிற்று. ௧௨ பிரதீஹாரமும் நிதனமும் விசிவஜித்தும் அபிஜித்தும் சான்ஹமும் அதி இராத்திரங்களும் பன்னிரெண்டுதின—யாகங்களும்—உச்சிஷ்டத்திலுண்டு. அது என்னிலாகும். ௧௩ இனிமையும் சம்மதமும், க்ஷேமமும் சுவதாவும் உணவும் அமிருதமும், உறுதியும்—உச்சிஷ்டத்திலுண்டு. நிகழும் எல்லா காமங்களும், உச்சிஷ்டத்தில்—காமத்தோடு எல்லாம் திருப்தியாகும். ௧௪ ஒன்பது புவிகள் கடல்கள் சோதி உச்சிஷ்டத்தில் ஆசிரதமாகும்: சூரியன் உச்சிஷ்டத்தில் ஒளி வீசுகிறான்: தினமும் இரவும் உச்சிஷ்டத்தில். அதுவும் என்னில். ௧௫ உபஹவ்யத்தையும் விஷூவானனது—யாகத்தையும் மர்மத்தில் வைக்கப்பட்டுள்ள யக்ஞங்களையும் சர்வஞ் சனனஞ் செய்யும், சனனஞ் செய்பவனது தந்தையான உச்சிஷ்டன் தரிக்கிறான். ௧௬ சனனஞ் செய்பவனுடைய தந்தையாயும், சுவாசத்தின் பௌத்திரனையும், பிதாமகனையும் உச்சிஷ்டன் புவியில் ஜயிக்குங் காளையாயும் சர்வத்தின் ஈசனையும் வசிக்கிறான். ௧௭ ருதமும் சத்தியமும், தவமும் இராஷ்டிரமும் சிரமமும் அறமும் செயலும் பூதமும் பவிஷ்யமும் உச்சிஷ்டத்திலுண்டு. வீரியமும் இலட்சுமியும் வன்மையும் உச்சிஷ்டமான வலிமையிலுண்டு ௧௮ செழுமையும்

1 பலவகை யக்ஞங்கள்

சக்தியும், சங்கற்பமும் க்ஷத்திரமும், இராஷ்டிரமும் ஆறு விரிந்த உலகங்களும், வருஷமும் இடைகளும் ஆக்ஞைகளும் வீடுகளும் அவியும் உச்சிஷ்டத்திலுண்டு. ககூ உச்சிஷ்டத்தில் நாலு ஹோதாக்களும் ஆப்பிரியர்களும் சதுர்மாச—செயல்களும் நீவிதங்களும் யக்ஞங்களும் அழைப்புக்களும் இஷ்டிகளும் உச்சிஷ்டத்திலுண்டு. உ0 பட்சங்களும் மாதங்களும் ருதுக்களுடனுகும் வருஷப் பிரிவுகளும், கோஷிக்குஞ் சலங்களும் இடிமுழக்கமும் மேலான சுருதியும் உச்சிஷ்டத்திலுண்டு. உக படிகங்களும், பால்களும் மணல்களும், ஔஷதங்களும் செடி கொடிகளும் புற்களும் மேகங்களும் மின்னல்களும் உச்சிஷ்டத்தில் வைக்கப்பட்டு நிலை நிறுவப்பட்டுள்ளன. உஉ ஜயமும் சித்தியும் சமாப்தியும் வியாப்தியும், மேன்மையும், செல்வமும், உச்சிஷ்டத்தில்: அதிசித்தியும் அதி செல்வமும், உச்சிஷ்டத்தில் வைக்கப்பட்டுள்ளன, மறைக்கப் பட்டுள்ளன, நிறுவப்பட்டுள்ளன. உங சுவாசத்தால் சுவாசிப்பதும் கண்ணுல் காண்பதும், சோதியின் எல்லா தேவர்களும் சோதியில் ஆசிரதமானவர்களும் உச்சிஷ்டத்திருந்து உதயமாஞர்கள். உச ருக்குக்களும் சாமன்களும் சந்தங்களும் யஜுஸோடு புராணமும், சோதியில்........ ........உதயமாஞர்கள். உரு பிராணுபானங்களும் கண்ணும் காதும் அழியாமையும் அழிவும் சோதியில்............ உதயமாஞர்கள். உசு ஆனந்தங்களும் இன்பங்களும் அனுபவங்களும் அனுபவங்கள் அனுபவிக்கின்றவர்களும் சோதியில்............உதயமாஞர்கள். உஎ தேவர்களும் பிதுருக்களும் மனிதர்களும் கந்தர்வர்களும் அப்சரஸர்களும் சோதியில்........உதயமாஞர்கள். [கக.எ.௬—உஎ]

---

சஎ0 கருத்து—எதற்கும் மிகுதியாவதால் ஈசனுக்கே உச்சிஷ்டன் எனப் பெயர்.

சஎக. அத்யாத்மம் [கௌருபதிரிஷி—அத்யாத்மம் மன்யு தேவதைத்.

க சங்கற்பத்தின் வீட்டிலிருந்து கோபம் தனது மனைவியைக்கொண்டு வருங்கால் மணவாளனுடைய நண்பர்கள் யாவர்? வரிப்பவர்கள் யாவர். வரிப்பவரில் தலைமை வகிப்பவர் எவர்? உ பெரிய கடலினகத்தில் தவமும் செயலுமிருந்தார்கள். அவர்கள் மணவாளனுடைய நண்பர்கள். அவர்கள் வரிப்பவர்கள். பிரம்மன் வரிப்பவனில் தலைவனுயிருந்தான். ந பூர்வ தேவர்களிடமிருந்து பத்து தேவர்கள் ஏகமாய் சனனமானார்கள். பிரத்யட்சமாய் அவர்களை அறியும் எவனும் இன்று பெரியதைக் குறித்துப்—பேசலாம். ச பிராணனும் அபானனும் கண்ணும் காதும், அழிவும் அழியாமையும், வியானனும், உதானனும் வாக்கும் மனதும்—அவையே விருப்பத்தைக் கொண்டுவந்தன. ரு அப்போது ருதுக்களும் தாத்ருவும் பிரஹஸ்பதியும் இந்திரனும் அக்கினியும் சனனமாகவில்லை. எவனை அவர்கள் தலைவனுக உபாசித்தார்கள்? சு பெரிய கடலினகத்தில் தவமும் செயலுமே இருந்தார்கள். செயலினின்றே தவம் தோன்றினன். அவனையே அவர்கள் தலைவனுக உபாசித்தார்கள். எ இதற்கு முன்னிருந்த புவியை அறிஞர்களே அறிந்தார்கள். நாமத்தால் அவனை அறிபவன் பழைய பொருள்கள் புலனுகுபவன் என தன்னையே நினைத்துக்கொள்ளலாம். அ எங்கிருந்து இந்திரன்? எங்கிருந்து சோமன் எங்கிருந்து அக்கினி சனனமானன்? துவஷ்டா எங்கிருந்து தோன்றினன்? தாத்ரு எங்கிருந்து பிறந்தான்? கூ இந்திரனிடமிருந்து இந்திரன் சோமனிடமிருந்து சோமன் அக்கினியிடமிருந்து அக்கினி உதயமானன். துவஷ்டாவினிடமிருந்து துவ

ஷ்டா தோன்றினன், தாத்ருவினிடமிருந்து தாத்ரு பிறந்தான். கo பழைய பத்து தேவர்கள் பத்து தேவர்களினின்றே தோன்றினார்கள். தங்கள் மக்கட்களுக்கு உலகத்தை யளித்துவிட்டு அவர்கள் எந்த உலகத்தி லுட்கார்ந்தார்கள்? கக ரோமம் என்பு மாமிசம் மச்சையை ஒன்று குவித்து கால்களுடன் காயத்தைச் செய்த பிறகு அவன் எந்த உலகத்தில் நுழைந்தான்? கஉ அவன் எங்கிருந்து ரோமத்தைக் கொண்டுவந்தான்? எங்கிருந்து தசையை எங்கிருந்து எலும்புகளைக் கொண்டுவந்தான்? அங்கங்களை சந்திகளை மச்சையை மாமிசத்தை அவன் எங்கிருந்து கொண்டு வந்தான். கங சம்பாரங்களை[1] ஒன்று சேர்க்கும் தேவர்கள் சம்சிசம்[2] என்றும் நாமமுள்ளவர்கள்; தேவர்கள் சர்வமான மானிடனை ஒன்று பொழிந்து புருஷனில் பிரவேசித்தார்கள். கச தொடைகளையும், பாதங்களையும் முட்டுக்களையும் சிரத்தையும் கைகளையும் முகத்தையும், விலா எலும்புகளையும் நுனிகளையும் பக்கங்களையும் ஒன்று சேர்த்த ரிஷி எவன்? கரு ஒன்று சேர்க்கும் பெரியவன் சிரத்தையும் கைகளையும் முகத்தையும் நாவையும் கழுத்தையும் முதுகெலும்பையும்— சர்வத்தையும் சருமத்தால் மூடி, ஒன்று சேர்த்தான். கசு இன்று ஒளிவீசும் நிறத்தை அங்கு சாய்த்துள்ள பெரிய காயத்துக்கு ஒன்று சேர்ப்பவனால் ஒன்று சேர்ந்துள்ள—தேகத்துக்கு—அளித்தவன் எவன்? கஎ எல்லாத் தேவர்களும் உதவி புரிந்தார்கள்: அதனை பெண் அறிந்தாள். அடக்கத்தின் மனைவியான தலைவி அதற்கு நிறத்தை யளித்தாள். கஅ துவஷ்டா துவஷ்டாவின் பெரிய பிதா(வை)த் துளைக்குங்கால், தேவர்கள் மானிடனை வீடாகச்செய்து புருஷனில் நுழைந்தார்

1 காயம் குவிக்கும் பொருள்களை 2 ஒன்று பொழிபவர்கள்.

கள். ௧௯ அப்பால், நித்திரையும், களைப்பும் நிர்ருதியும் தீமை என்னும் தேவதைகளும், மூப்பும் வழுக்கையும், வெறுப்பும், காயத்தில் நுழைந்தார்கள். ௨௦ பிறகு திருட்டும் துட்டச்செயலும் தீமையும், சத்தியமும் யக்ஞமும் பெருங் கீர்த்தியும் சக்தியும் க்ஷத்திரமும் தேகத்தில் நுழைந்தன. ௨௧ வளர்ச்சியும் வீழ்ச்சியும் பெருந்தன்மைகளும் பிசுனித்தனங்களும் பசிகளும் தாகங்களும் அப்பால் அங்கத்தில் நுழைந்தன. ௨௨ நிந்தைகளும் அநிந்தைகளும் இல்லை எனவும் வா எனச்—சொல்வதும்—சிரத்தையும் தட்சிணையும் அசிரத்தையும் அப்பால் உறுப்பில் நுழைந்தன. ௨௩ வித்தைகளும் அவித்தைகளும் உபதேசிப்பதர்க்கானவைகளும் பிரம்மமும் ருக்குக்களும் ஸாமனும் யஜுஸும் ஆக்கையில் நுழைந்தன. ௨௪ இன்பங்களும் மத்தங்களும் நயங்களும் இன்பமனுபவிப்பவைகளும், சிரிப்பும் களிப்பும் நடனங்களும் அப்பால் சடலத்தில் நுழைந்தன. ௨௫ ஆலாபங்களும் பிரலாபங்களும் பதில் பேசுபவைகளும் சேர்க்கைகளும் சிந்தனைகளும் சரீரத்தில் நுழைந்தன. ௨௬ பிராணுபானங்களும் கண்ணும் காதும், அழிவும் அழிவின்மையும் வியானனும் உதானனும் வாக்கும் மனதும் மெய்யுடன் சலனமாகின்றன. ௨௭ ஆசிகளும் ஆக்ஞைகளும் கேள்விகளும் விளக்கங்களும் சித்தங்களும் சர்வசங்கற்பங்களும் அப்பால் தேகத்தில் நுழைந்தன. ௨௮ உதிரத்தையும்சலப்பையிலுள்ளவற்றையும், தூரிதம் துச்சமானவற்றையும் இரகசியமாயும் சுக்கிரமாயும் சுத்தமாயுமிள்ள சலங்களை இப்பிரதிகூல பூதிகத்தில் அவை ஒன்று சேரச் செய்தன. ௨௯ அவை எலும்பை சமித்தாகச் செய்து அப்பால் எண்சலங்களை நிலைக்கச் செய்தன. அவை இரேதசை நெய்யாகச் செய்தன: அப்பால் தேவர்கள்

புருஷனில் நுழைந்தார்கள். ௩௦ எல்லா சலங்களும் எல்லா தேவதைகளும் பிரமத்துடன் விராடனும் பிரமனும் தேகத்தில் நுழைந்தார்கள். காயத்திலே பிரஜாபதியாவான். ௩௧ சூரியனும் காற்றும் புருஷனுடைய கண்ணையும் சுவாசத்தையும் பங்கு செய்து கொண்டார்கள். தேவர்கள் அவனுடைய மிகுதியான அங்கத்தை அக்கினிக்களித்தார்கள். ௩௨ இதனாலேயே 'இதுதான் பிரம்மன் என' புருஷனையறிபவன் நினைக்கிறான். கோசாலைகளில் கோக்களைப்போல எல்லா தேவதைகளும் அவனில் வீற்றியுள்ளார்கள். ௩௩ அவனுடைய முதல் மரிப்பில் அது மூன்றாகப் பிரிந்து தனித்தனி செல்லும்: ஒன்றோடு அது அங்கு செல்லும்[1] ஒன்றோடு அது அங்கு[2] செல்லும். ஒன்றுடன் அது இங்கு[3] வசிக்கும். ௩௪ அசதியான ஆதி சலங்களினுள்ளே யாக்கை வைக்கப்பட்டுள்ளது: வல்லமை அதனகத்திலே. அதனால் அது வலிமையென அழைக்கப்படும். [கக. அ. க—௩௪]

சஎ௨ சத்துரு சம்ஹாரம் [காங்காயனன்—மந்திரோக்த அற்புதி தேவதை]

க அற்புதியே![4] எக்கைகளும் எவ்வம்புகளும் விற்களின் வீரியங்களும் கத்திகளும் பரசுகளும் ஆயுதமும், இருதயத்தில் எந்த சித்தமும் சங்கற்பமும் உண்டோ அவற்றையெல்லாம் நீ எங்களுடைய எதிரிகள் காணும் வண்ணஞ்செய். மாயத்தோற்றங்களை நீ புலனாக்கவும். ௨ நண்பர்களே! தேவசனங்களே! நீங்கள் எழுமின்: ஆயத்தமாகுமின்: அற்புதியே! நமது நண்பர்கள் காட்சியான போதிலும்—பகைவர்கள் கண்களில்—மறைவுடனு

1 சூரியனில், 2 காற்றில். 3 புவியில். 4 சேனையின் தலைவனே.

சஎக கருத்து—காயத்தில் புலன்கள் வரும் விந்தை

வார்களாக. ௩ அற்புதியே! நீங்கள் இருவரும் எழு மின்! நீங்கள் ஆரம்பஞ்செய்மின்: நீங்கள் ஒன்று சேர்ந்து ஒன்று இணைந்து எதிரி சேனைகளை பந்தஞ் செய்மின். ௪ அற்புதி என்னும் நாமமுள்ள தேவனோடு நியற்புதி என்னும் ஈசனோடு, எவர்களால் வானமும் இப் பெரிய புவியும் பரவப்பட்டுள்ளனவோ, இந்திரனுடன் சேர்ந்த அவர்களோடு, சேனையுடன் நான் ஜயித்துவ் ளதை யநுசரிக்கிறேன். ௫ அமரஜனனமான அற்புதியே! நீ சேனையோடு எழுந்திரு: பரர்களுடையப் படையைப் பிளந்து உனது பரவுகளால் அதனைப்பரவு. ௬ நியற் புதியே! நீ ஏழுவிதமான மாயத் தோற்றங்களை புல னாக்கி, அவற்றுடன் நெய்யளிக்கப் படுங்கால் சேனை யோடு எழுந்து நில். ௭ அற்புதியே! தன்னைத்தானே அடித்துக்கொண்டு கண்ணுங்கண்ணீருமாய் குள்ளக்கா டடைகுமவள், உன்னால் கடிக்கப்பட்டு புருஷன் கொல் லப்பட்டவுடன் கலைந்த கூந்தலுடனுகு மவள்[1] கதறு வாளாக ௮ அற்புதியே! உன்னால் கடிக்கப்பட்ட வுடன் தனது கழுத்தையே தள்ளிக்கொண்டு மனத்தால் தனது மகனையோ, புருஷனையோ சகோதரனையோ, தனது சனத்தையோ — தேடிக் கதறுவாளாக. ௯ அற்புதியே! உன்னால் கடிக்கப்பட்டவுடன் பருந்து களும் புண்டரங்களும் பவணைகளும் சகுந்தங்களும்— பெருஞ்—சிறகுகளுள்ளவையும் காக்கைகளும் பறவை களும் பகைவர்களில் புலனாகி திருப்தியாகுக. ௧௦ அற் புதியே பிறகு உன்னால் பிளக்கப்பட்ட மானிடர்களுடைய சவத்தில், எல்லா வன மிருகங்களும ஈயும் புழுவும்திருப்தி யாகுக. ௧௧ நீ அற்புதியே! நீங்கள் அவர்களைப் பிடி யுங்கள்: அவர்களுடைய பிராணுபானங்களைப் பிரித்து

1 சத்துருவின் ஸ்திரீ.

விடுங்கள் : அற்புதியே! நீ துவம்சம் செய்யுங்கால்—உன் குரூரத்தைப் பகைவர்களில்—புலன் செய்யும்போது—கதறும் அவர்களுடைய புலம்பல்கள் குவிந்தோங்குக. கஉ நீ அவர்களை நடுங்கச்செய் : அவர்கள் ஒன்று அலறுவர்களாக. பயத்துடன் எங்கள் பகைவர்களைச் சேர் : நியற்புதியே! விரிந்து பற்றும் கைகொக்கிகளால் எங்கள் எதிரிகளை வதை. கந அவர்களுடைய கைகள் கலவரமாகட்டும் ; அவர்களுடைய இருதயத்திலுள்ள சித்தமும் சங்கற்பமும் குழப்பமாகட்டும் அற்பதியே! உன் வதைப்பால் அவர்களுடைய எப்—பாகமும்—விடாமலாகட்டும். கச தாங்களே வதைத்துக்கொண்டு மார்பில் தொடையில் யடித்துக்கொள்பவர்களாய் எண்ணெய்ப் பசையில்லாமல் அவிழ்ந்த கூந்தலோடு அலறி, அவர்கள் ஓடி விடுவார்களாக. கரு அற்பதியே! நாய் தொடரும் அப்சரசர்களையும், நரிகளையும் உட்பாண்டம் சுவைக்கும் ரிசையையும், தீஸ்தாபனத்தைத் தேடும் இவர்களை யெல்லாம் எங்களுடைய பகைவர்கள் பார்ப்பார்களாக : உனது மாயைகளைப் புலனுக்கு. கசு வானத்திலே தூரந்தாண்டுபவளாயும், முண்டமாகி முண்டத்தைத் தரிப்பவளாயும், மறைந்துள்ள மாயைகளையும் கந்தருவர்களையும், அப்சரசர்களையும், சருப்பங்களையும், வேறு சனத்தையும் அரக்கர்களையும், கள நாலு தந்தமுள்ளவர்களையும், கரும் பல்லுள்ளவர்களையும், கும்ப முஷ்க முள்ளவர்களையும், உதிர முகர்களையும், பயந்து தானே பயமாகுபவர்களையும் நீ நடுங்கச் செய். கஎ அற்புதியே! தூரமாயுள்ள எங்கள் எதிரி சேனைகளை நீ அலறச் செய். ஜயிப்பவனும் ஜயமாகுபவனும், இந்திரனோடு சேர்ந்து எங்களது சத்துருக்களை ஜயிப்பார்களாக. கஅ எங்களுடைய பகைவன் சிதைந்து சிதறி சேதமாவார்களாக. அனல்

நாக்கள் புகைச் சிகைகள் சேனையுடன் ஜயித்துச் செல்க. உ௦ அற்புதியே! சக்திபதியான இந்திரன் எம்மால் தள்ளப்பட்டுள்ள எங்களுடைய சத்துருக்களின் ஒவ்வொரு தலைவனையுங் கொல்வானாக; அவர்களில் ஒருவனும் மீள வேண்டாம். உக அவர்களுடைய இருதயங்கள் பிளந்து பிரிக; அவர்களுடைய மூச்சு உயரச் செல்க, எங்கள் சத்துருக்களை நாவரட்சி யனுசரித்திடுக, அது நண்பர்களைத் தொடராமலாகுக. உஉ அற்புதியே! தீரர்களையும் தீரர்களில்லாதவர்களைம், செல்பவர்களையும் செவிடர்களையும் கருமையாகி கொம்பு சூனியமாயுள்ளவர்களையும் அப்படியே ஆடுகந்த முள்ளவர்களையும்—இவ்வனைவரையும் சர்வமானவர்களையும் எங்கள் சத்துருக்கள் காண்பார்களாக: நீ மாயைகளைப் புலனாக்கு. உங இந்திரனே விருத்திர சங்காரனே சக்திபதியே அற்புதியும் திரிசந்தியும் எங்களுடைய சார்பிலார்களைச் சிதறடிப்பார்களாக. அதனால் நாங்கள் எங்கள் அரிக்களை ஆயிரக்கணக்கில் அழிப்போம். உச வனஸ்பதிகளையும், வானஸ்பதிகளைம், ஔஷதிகளையும் செடி கொடிகளையும் கந்தர்வர்களையும் அப்சரசர்களையும், சர்ப்பங்களையும், தேவர்களையும், புண்ணிய சனங்களையும், பிதுருக்களையும்—இவர்களையெல்லாம் எங்களுடைய பற்றார் பார்க்கச் செய்: நீ மாயைகளைப் புலனாக்கு. உரு அற்புதியே! மருத்துக்கள் உங்கள் தலைவர்கள். தேவ ஆதித்தியனான பிரம்மணஸ்பதியும் தலைவர்கள் இந்திரனும் அக்கினியும், தாத்ருவும் மித்திரனும் பிரஜாபதியும் உங்கள் தலைவர்கள்: ரிஷிகள் உங்கள் சேனாதிபதிகள். அற்பதியே! எதிரிகள் ஜயித்த பிறகும் இத்தேவர்களையே தலைவராய் வைத்துக்கொள். உசா அவ்வெல்லோரின் தலைவர்களான நீங்கள் எழுந்து நில்லுங்கள்: நீங்கள் ஆயத்தமாகுங்கள், நண்பர்களான

தேவசனங்களே! இந்தச் சமரை பூரணமாய் ஜயித்து உங்களுடைய பற்பல உலகங்களில் சென்று விடுங்கள் [கக. கூ. க—உசு]

சஎக. இரணகளம் [பிருக்வங்கிரஸன்—மந்திரோக்த் திரிஷந்தி தேவதை]

க நீங்கள் எழுந்திருங்கள், மாயைகளே! நீங்கள் கொடிகளுடன் ஆயத்தமாகுங்கள்: பாம்புகளே, இதர சனங்களே, அரக்கர்களே எங்கள் ஒட்டார்களைத் தொடர்ந்து ஓடுங்கள். உ திரிசந்தியே! நான் உங்கள் தலைமையை தேசத்தை சிகப்புத் துவஜங்களுடன் அறிகிறேன்: வானத்திலே சோதியிலே சகத்திலே சனங்களிலே திரிசந்தியின் சித்தத்தோடு தீ நாமங்களுள்ள அவை அமர்க. ங அயமுகமுள்ள ஊசிமுகமுள்ள முட்மரமுகமுள்ள அவர்கள் வாயுவைப்போல் துரிதமாய். மாமிசம் புசிப்பவர்களாம் பகைவர்கள் வச்சிராயுதமான திரிசந்தியுடன் பற்றுவார்களாக. ச ஜாதவேதசனே! ஆதித்தியனே: அதி மானிட சவத்தின் நடுவே நீ பிரசன்னமாகவும்! திரிசந்தியின் இந்த சேனையானது என் வசத்தில் நன்கு வைக்கப்படட்டும். ரு அற்புதியே! தேவசனமே! நீ சேனையுடன் எழுந்திரு: இந்த பலி உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது: திரிஷந்திக்கு ஆஹுதிப் பிரியமாகும். சு வெண்பாதமுள்ள இவன் நான்கு கால்களான சரனுகி—எதிரியைக்—கட்டுக. செயலே திரிசந்தியின் சேனையுடன் சேர்ந்து எங்கள் செற்றார்களுக்குச்—சம்ஹாரனுகவும். எ புகைக் கண்ணுள்ளவன் நன்றாய் வீழ்க: குள்ளக் காதுள்ளவன் கதறுக: திரிசந்தியின் சேனையால் அது ஜயிக்கப்படுங்கால் கொடிகள் சிகப்பாகுக. அ பிறகு

---

சஎஉ. கருத்து. சத்துருசம்ஹாரம்

களுள்ளவை சோதியிலே வானத்திலே சுற்றும் பறவைகள் கீழே இறங்குக; வன மிருகங்களும் ஈக்களும் ஒன்று பற்றுக; பச்சை மாமிசம் புசிக்கும் கழுகுகள் நரமாமிசத்தைக் கீறுக. ௯ பிரகஸ்பதியே! இந்திரனோடும் பிரம்மனோடும் நீ எந்த ஆணைக்குச் சம்மதமானாயோ, நான் அந்த இந்திர ஒப்பந்தத்தால் இங்கு எல்லாத் தேவர்களையும் அழைக்கிறேன். நீங்கள் இந்தப் பக்கம் வெல்க. அந்தப் பக்கம் வேண்டாம். ௧௦ ஆங்கிரஸனின் பிரகஸ்பதியும், பிரம்ம கூர்மையான ரிஷிகளும் அசுரனழிக்கும் ஆயுதமான திரிஷந்தியை சோதியிலே ஸ்தாபித்துள்ளார்கள். ௧௧ எவனால் அங்குள்ள சூரியனும் இந்திரனும் துணையடைந்து திரமாகிறார்களோ, தேவர்கள் அந்தத் திரிஷந்தியை வன்மை வலிமைக்கு அருந்துகிறார்கள். ௧௨ ஆங்கிரஸனின் பிரகஸ்பதி பொழியும் அசுரனழிக்கும் ஆயுதமான ஆஹுதியினாலே தேவர்கள் எல்லா உலகங்களையும் பூரணமாய் ஜயித்தார்கள். ௧௩ ஆங்கிரஸனின் பிரகஸ்பதி பொழிந்த அசுரனழிக்கும் ஆயுதமான வச்சிராயுதத்தால், பிரகஸ்பதியே! அங்குள்ள சேனையை நான் பூரணமாய் நிர்மூலஞ் செய்கிறேன். நான் பலத்தால் பரர்களை வீழ்த்துகிறேன். ௧௪ வஷட்டுடன் செய்யப்படும் ஆஹுதியை—யருந்தும் எல்லா தேவர்களும் இங்கு வருகிறார்கள். இந்த ஆஹுதியைப் பற்றுங்கள். இப்பக்கம் வெல்லுங்கள். அப்பக்கம் வேண்டாம். ௧௫ எல்லா தேவர்களும் இங்கு வருக. திரிசந்திக்கு ஆஹுதி பிரியமாகும். ஆதியில் எந்தப் பெரிய ஒப்பந்தத்தால் அசுரர்கள் ஜயிக்கப்பட்டார்களோ அதனை நீங்கள் இரட்சியுங்கள். ௧௬ சத்துருக்களின் சரத்தின் முனைகளை வாயு வளைப்பானாக. இந்திரன் அவர்களுடைய கைகளை முறிப்

பானாக. அவர்கள் சரத்தை நாட்ட இயலாமலாவார்களாக. ஆதித்தியன் அவர்களுடைய ஆயுதத்தை அழிப்பானாக. சந்திரன் வராதவனது வழியை நீக்குவானாக. கஎ தேவ புரங்களுக்கு அவர்கள் முன் சென்றிருந்தாலும் தங்களது துணைகளுக்குப் பிரம்மத்தைச் செய்திருந்தாலும், தாங்களே தைரியஞ் செய்துகொண்டு காயக் காப்பாகிப் பூரண உதவியுடனானாலும் நீ அவற்றை யெல்லாம் இரஸ சூனியமாக்கு. கஅ திரிஷந்தியே! மாமிசம் புசிப்பவனோடு மிருத்யுவுடன் புரோகிதனை யநுசரித்துச் சேனையுடன் நீ செல். எதிரிகளை வெல். முன் செல். ககூ திரிஷந்தியே! தமஸால் தரியலர்களைச் சூழ். சுந்திரசக்தியால் ஜயிக்கப்படுஞ் சத்துருக்களில் ஒருவனும் தப்பாமலாவானாக உ0 வெண்பாத முள்ளவன் அங்குள்ள பகைவர் சேனைகளில் பாய்வானாக: நியற்புதியே! எங்களின் சேரார்களுடைய அங்குள்ள சேனைகள் இன்று குழப்பமுடனாவார்களாக உக நியற்புதி எங்களது மருவலர்கள் மதியீனமாவார்களாக: அவர்களுடைய ஒவ்வொரு வீரனையுங் கொல். இந்தச் சேனையால் அவர்களை யழி உஉ கவசம்முள்ளவன் கவசமில்லாதவன் — சமர் — செல்லும் — பகைவர், வில்நாண் பாசங்களால், கவசக் கயிறுகளால், இரதக்கச்சையால், அடிபட்டுக் கீழே சாய்வார்களாக உங காப்புகளுள்ளவனும் காப்புக்களில்லாதவனும் காப்புக்களற்ற கேளார்களும் கொல்லப்பட்டவுடன், அற்புதியே! அவர்களை யெல்லாம் நிலத்திலே நாய்கள் புசிக்கட்டும். உச இரதங்களுள்ளவன், இரதங்களில்லாதவன், பீடமுள்ளவர்கள் பீடமில்லாதவர்கள், கொல்லப்பட்டவுடன், அவர்களையெல்லாம் பாறு, பறவை, புண்டரங்கள் புசிக்கட்டும். உரு ஆயுதச் சமரில் அழிக்கப்பட்டுத் துண்டங்களாக வெட்டப்பட்ட ஒட்டார்களு

டைய சேனை ஆயிரஞ் சவங்களோடு சாய்வார்களாக. உசு எதிர்க்கும் இந்த ஆஹுதிக்கு மாருக சமர் செய்ய விரும்பும் எங்களுடைய சத்துருவான சேனையுள்ள அவன் மர்மங்களில் குத்தப்பட்டு ஒங்கிக் கதறி நசுங்கிக் கீழ்ச்சாய்ந்துள்ள அவனை—எதிரியைக்—கழுகுகள் புசிக்கட்டும். உஎ தேவர்கள் அநுசரித்து தவருமலாகும்—திரிசந்தியான வச்சிராயுதத்தால் விருத்திரனழிக்கும் இந்திரன்—எதிரியை—யழிப்பாருக! [கக. கo. க—உஎ]

கக-வது காண்டம் முற்றிற்று.

## சஎச—சஎஅ

சஎச பூமி [அதர்வன்—பூமி]

க பெரிய சத்தியமும், உக்கிரமான ருதமும், தீட்சையும், தவமும், பிரம்மமும், யக்ஞமும் புவியைத் தாங்குகின்றன: நிகழ் எதிர்—காலப்பொருளின் செயலின்—மனைவியான மேதினி எங்களுக்கு விரிந்த உலகத்தைச் செய்வாளாக. உ மானவர்களின் நடுவே அதிகட்டமில்லாதவளாகி எவளுக்கு உச்சங்களும் வளர்ச்சிகளும் சரிசமங்களுமுண்டோ, எவள் நாளு வீரிய ஔஷதிகளைத் தரிக்கின்ருளோ அந்த வசுமதி எங்களுக்குச் செல்வமாகி விசாலமாவாளாக. ந எவளில் சலம் சிந்துக்கள் சமுத்திர—முண்டோ—, எவளில் உணவு உழவு உண்டாகின்றனவோ, சலனமாகி சுவாசிக்கும் இச்—சீவன்—எவளில் துரிதமாகின்றதோ, அத்தரணி எங்களை முதல் பானத்தில் ஸ்தாபனஞ் செய்வாளாக. ச எவளுக்கு நாலு திசைகளு—ண்டோ எவளில் உழவுகளும் உணவுமுண்

சஎஈ கருத்து—பகையழி.

டாகின்றனவோ சுவாசிப்பதையும் சலன மாவதையும் பலவிதமாய் தரிக்கும் அப்பூதலம் எங்களைப் புசிப்புக் களிலும் பசுக்களிலும் ஸ்தாபனஞ் செய்வாளாக. ரு பூர்வத்திலே பழைய சனங்கள் எவளில் போர்புரிந் தார்களோ, எவளில் தேவர்கள் அசுரர்களை ஜயித்தார் களோ பசுக்களுடைய புரவிகளுடைய பறவைகளுடைய வசதியான அப்பார்த்திவள் எங்களுக்கு பொருளையும் பிரகாசத்தையும் அளிப்பாளாக. சு விசுவந்தரித்துச் செல்வஞ் சுமந்து திடஸ்தானமாகி சொர்ண முதுகோடு, சலனப் பொருள்களின் சாயுமிடாகி வைசுவாநர அனலை அணிந்து, விருஷபையாய் இந்திரனை—யடைந்துள்ள வையகம் எங்களை விபவத்தில் ஸ்தாபனஞ் செய்வாளாக. எ எத்தரணியான தாரணியைத் தூக்கமற்று தேவர்கள் சதாகாலம் தப்பாமல் துணைபுரிகிறார்களோ அவள் எங் களுக்கு பிரியத்தையும் மதுவையுமளித்துச் சோதி யால் எங்களைச் செழுமை செய்வாளாக. அ எவள் ஆதியில் சலதியிலே சாகரமாகி எவளை அறிஞர்கள் மாயைகளால் சலனமானார்களோ, சத்தியத்தால் கவரப் பட்ட எந்நிலத்தின் அமுத இருதயம் பரம நிலயத்திலுள் ளதோ, அம்மாநிலம் எங்களுக்கு, மேலான இராஜமகிமை யில் எங்களுக்கு வயத்தையும் ஒளிவளத்தையும் மளிப்பா ளாக. கூ தவறாமல் இரவும் பகலும், சலிக்கும் சலங் கள் எவளில் சமானமாய் பாய்கின்றனவோ, பற்பல தாரைகளுள்ள அந்தஸ்தலம் எங்களுக்குப் பாலையளிப்பா ளாக. அப்பால் பிரகாசத்தை எங்களுக்குப் பொழிவா ளாக. க0 எவளை அசுவினிகள் அணிந்துள்ளார்களோ, எவளில் விஷ்ணு வரையறுத்தானோ, வசுபதியான இந் திரன் தனக்கே எவளில் எதிரிசூனியஞ் செய்து கொண் டானோ, அவ்வையம் தாய் மகனுக்குப் போல் எனக்குப்

பாலை யளிப்பாளாக. ௧௧ மகியே! உனது மலைகளும் பனிக்குன்றுகளும், வன நிலங்களும் சுகமளிப்பவை யாகுக: பழுப்பும், கருப்பும், சிகப்பும், துருவமும், விசுவ ரூபமுமான புவியிலே. இந்திரனால் துணையான—பூமி யிலே. நான் குலை காயம் கஷ்டம் கொலை முதலியன படாமலே குவலயத்திலே நின்றுள்ளேன். ௧௨ நேமியே! உன்நடுவிலே நாபியிலே உன் தனுவினின்று எந்த உணவு தோன்றிற்றோ அதிலே நீ எங்களை ஸ்தாபனஞ்செய். எங் களைப் புனிதஞ்செய். அவனி அன்னை, நான் அகிலமகன்: பர்ஜனியன் பிதா: அவன் எங்களைக் காப்பானாக. ௧௩ வேதியை எந்த வையகத்தில் அவர்கள் சூழ்ந்துள் ளார்களோ, விசுவ கருமங்கள் செய்யும்—மானிடர் கள், எந்த வையத்திலே விசாலஞ் செய்கிறார்களோ; ஆஹூ திக்கு முன்னர் உயரமும் ஒளியுமுள்ள யக்ஞக் கம்பங்கள் எந்த உலகில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளனவோ அந்த உலகம் வளர்ந்து எங்களை ஓங்கச் செய்வாளாக. ௧௪ பூமியே முதன்மையாய்—செய்யும்—புவியே எங்களை துவேஷிப்பவனையும், எங்களுடன் யுத்தஞ் செய்பவனையும் கோரமான ஆயுதத்தாலும் மனத்தாலும் எங்களுக்கு துன்பஞ் செய்பவனையும், எங்கள் வசமாக்கு. ௧௫ உன் னில் சனனமாகி உன்னிலேயே மானிடர்கள் சலனமாகி றார்கள்: நீ இருகால் நான்கு கால் ஜந்துக்களைத் தரிக்கிறாய், சகமே! உதய சூரியன் இரசிமிகளால் அமுதமான சோதியை எவர்களுக்கு விசாலஞ் செய்கிறானோ அந்த இப்பஞ்சமானவர்கள் உனதாகும். ௧௬ சர்வமான அப் பிரசைகள் ஒன்று சேர்ந்து எங்களுக்குப் பாலைத்தருவார் களாக. பூதலமே! எனக்கு நீ வாக்கின் தேனைத் தா. ௧௭ ஔஷதங்களின் விசுவஞ் சனனஞ் செய்யும் தாயாகி திடமாயுள்ளத் தரணியில் தருமத்தால் தரிக்கப்படும் பூத

லத்திலே சுகம் மங்களம் சதாகாலம் அளிப்பவளில் நாங்கள் சலனமாக வேண்டும். கஅ நீ பெரியவள்: பெரிய வசதியுள்ளவள்: உனது குலுக்கமும் கலக்கமும் நடுக்கமும் பெரியன. பெரிய இந்திரன் தவறாமல் உன்னைப் பாலனஞ் செய்கிறான். பூமியே! எங்களை பொன்னுக்குச் சமானமாய் நீ பிரகாசிக்கச் செய்: எவனும் எங்களை வெறுக்காமலிருப்பானாக, கக அக்கினி அவனியிலே ஔஷதிகளிலேயுள்ளான்; சலங்கள் அக்கினியை தரிக்கின்றன. அக்கினி கல்லிலேயுள்ளான். அக்கினி மானிடர்களின் உள்ளேயுள்ளான்: பசுக்களிலும் புரவிகளிலும் அக்கினியுண்டு. உ0 அக்கினி சோதியினின்று தாபஞ் செய்கிறான்: விசாலவானம் அக்கினி தேவனதாகும், மானிடர்கள் அக்கினியை அவிசுமப்பவனாகவும் நெய் விரும்புபவனாகவும் எழுப்புகிறார்கள். உக கனல் அணியும் கரும் அங்கமுள்ள சகம் என்னைக் கூர்மையாயும் பிரகாசமாயும் செய்வானாக. உஉ நலஞ்செய்யும் அவியையும் யக்ஞத்தையும் வையத்திலே அவர்கள் தேவர்களுக்கு அளிக்கிறார்கள்: நரர்களான மானிடர்கள் மாநிலத்திலே சுவதாவினாலும் உணவினாலுஞ் சீவிக்கிறார்கள்: அப்புவியானது எங்களுக்குப் பிராணனையும் ஆயுசையும் செய்க: பூதலம் எங்களுக்கு மூப்பான வயதையும் தருக. உங குவலயமே! உன்னிடத்தில் எக்கந்தங்கள் உண்டாகி எதனை ஔஷதங்கள், எதனை சலங்கள் தரிக்கின்றனவோ எதனைக் கந்தர்வர்கள் அப்சரசர்கள் பகிர்ந்து கொண்டார்களோ அதனால் நீ என்னைக் கந்தமுடன் செய்வாயாக. எங்களை எவனும் வெறுக்காமலிருப்பானாக. உச உனது எக்கந்தங் கமலத்தில் நுழைந்ததோ, சூரியையின் மணத்துக்கு எந்த கந்தத்தைக் கொண்டு வந்தார்களோ, அகிலமே! அமுதர்கள் எக்கந்தத்தை ஆதியிலே—

தரித்தார்களோ—அதனால் நீ என்னைக் கந்தஞ் செய்வாயாக. எங்களை எவனும் வெறுக்காமலிருப்பானாக. உரு வசதியே! புருஷர்களிலே ஸ்திரீகளிலே எந்த உனது வாசனையுண்டோ எவ்வொளியும் உயர்வும் மைந்தர்களிலுண்டோ குதிரைகளிலே, வீரர்களிலே, மிருகங்களிலே, யானைகளிலே—எம்மேன்மை யுண்டோ—சிறு பெண்களிலே எப்பிரகாசமுண்டோ அதனுடன் எங்களையுஞ் சேர்த்து விடு: எங்களை எவனும் வெறுக்காமலிருப்பானாக. உசு கல்லும் சிலையும் தூசியும் புவியாகும்: இப்பூமி தரிக்கப்பட்டுத் திரமாயுள்ளது. பொன் முதுகுள்ள இப்பூதவுலத்துக்கு நான் வணக்கஞ் செய்துள்ளேன். உஎ வனஸ்பதிகளும் வானஸ்பத்யங்களும் எவளில் சதா காலம் திரமாகி, நிற்கின்றனவோ, திரமாகி சர்வம் தரிக்கும் அத்தரணியை, நாங்கள் நலமுடன் ஓதுகிறோம். உஅ நாங்கள் எழுங்காலும் உட்காருங்காலும் நிற்குங்காலும், இடது வலது கால்களால் தாண்டுங்காலும் தலத்தில்—தட்டுத்—தடுமாறாமலாக வேண்டும். உகூ பொறுமையான புவியை, புனிதஞ் செய்யும் பூமியை பிரமத்தால் வளரும்—பாரியை—நான் போற்றுகிறேன்: பூதலமே! நெய், உணவு பாகம் பலம் புஷ்டி ஆகியவைகளை பற்றும் உன்னில் நாங்கள் உட்காரலாமோ? ௩௦ எங்கள் காயத்துக்குச் சுத்த சலங்கள் பாய்க விரும்பாதவன் மீது சிறுமையைச் செலுத்துகிறோம். சகமே! நான் சுத்த சாதனத்தால் என்னையே சுத்தஞ் செய்து கொள்ளுகிறேன். ௩௧ மாநிலமே! உனது முன் திசைகள் உனது மேற்றிசைகள், உனது கீழ்திசைகள் பின் திசைகள் எங்களுக்குச் சுக சலனஞ் செய்பவையாகுக. வையத்திலே நான் ஸ்தாபனமாகுங்கால் நான் விழாமலாவேனாக. ௩௨ புவியே! எங்களைப் பின், முன் மேல் கீழே தள்

ளாதே: நீ எங்களுக்குச் சுவஸ்தியாகவும். வழிப்பறிப்ப வர்கள் என்னைக் காணாமலாவார்களாக. கோரமான ஆயுதத்தை வெகு தூரப்படுத்து. ஙங சகமே! சூரியனை நண்பனாகக் கொண்டு உன்னை எத்தனை காலம் நான் காண்கிறேனோ அத்தனை காலம் என் காட்சி வருஷா வருஷம் தவறாமலாகுக. ஙச பாரியே! நான் படுக்குங் கால் வலது இடது பக்கமானாலும், எங்களைச் சந்திக்கும் உன்னிலே எங்கள் உறுப்புக்கள் சாயுங்காலும் ஒவ்வொன்றுக்கும் ஆதாரமான நீ எனக்கு இன்னல் செய்யாதே. ஙரு நான் உன்னில் கெல்லினாலும் அது துரிதமாய் வளர்ந்திடுக. தூய்மை செய்பவனே! உனது இருதயத்தையோ, மர்மங்களையோ, நான் தாக்காமலாக வேண்டும். ஙசா உலகே! உனது கிரீஷ்மம் மழை, சரத்து ஏமந்தம் சிசிரம், வசந்தம், விமரிசையாகும். உனது ருதுக்களும் வருடங்களும், இரவும் பகலும், சகமே! எங்களுக்குப் பாலைத் தந்திடுக. ஙஎ சருப்பத்தை நடுங்கச் செய்து சுத்தஞ் செய்யும் எவளில் சலங்களின் உள்ளேயுள்ள அனல்களுண்டோ அந்த வசுமதி தேவ நிந்தனை செய்யும் தஸ்யுக்களை நீக்கி, வலிமைக்கு வீரிய விருஷபனுக்கு விருத்திரனைச்—சேர்க்காமல்—இந்திரனையே வைத்துக்கொண்டாள். ஙஅ எவளில் பீடமும் அவிதரிப்புமுண்டோ, எவளில் யூபம் வைக்கப்பட்டுள்ளதோ, யஜ—க்களை யறிந்து, ஸாமனால் ரிக்குக்களோடு எவளில் பிராமணர்கள் போற்றுகிறார்களோ, இந்திரன் சோமனைப் பருக, எவளில் ருத்விக்குக்கள் சேர்ந்துள்ளார்களோ, ஙசா எவளில், பூர்வ பூதகிருத ஏழு அறிஞர்களான ரிஷிகள் யக்ஞம் தவமுடன் சேர்ந்து சபையோடு—ஸத்திரத்துடன்—கோக்களை—வேதங்களை—கானஞ் செய்கிறார்களோ. சா அப்புவியானவள்

நாங்கள் விரும்பும் செல்வத்தை யளிப்பாளாக; பிறகு பகன் சேர்க: இந்திரன் முன் செல்வானாக. ௪௧ மானிடர்கள் எந்த மேதினியிலே கானஞ்செய்து கோஷங்களுடன் நடனஞ் செய்கிறார்களோ, எங்கு சமர் புரிகிறார்களோ, எங்கும் மொழியும் துந்துபிகள் முழங்குகின்றனவோ அந்த மகீதலம் எங்கள் மற்றார்களை தூரமாக்குக: மாநிலம் என்னை மற்றார்களினின்று நீக்குக. ௪௨ எவளில் உணவும் அரிசியும் யவமுமுண்டோ, இந்த பஞ்ச மானவர்கள் எவளுடையையதோ, மழையால் புஷ்டியாகும் பர்ஜனிய மனைவியான அந்தப் புவிக்கு வணக்கம். ௪௩ எவளுடைய புரங்கள் தேவர்களால் செய்யப்பட்டனவோ, எவளுடைய நிலத்திலே—மானிடர்கள்—விழுகிறார்களோ, ஒவ்வொன்றின் கருப்பையான அந்த வையகத்தை பிரஜாபதி எங்களுக்கு எங்கும் பிரிய முடனாக்குவானாக. ௪௪ நிதியையும் பொருளையும் இரகசியமாய்ப் பல நிலயங்களில் தரித்து, தரணி எனக்கு மணியையும், தங்கத்தையும் தருக. பொருளளிக்கும் அவள் எங்களில் பொருள்களை யளித்து, தேவியானவள் சுமனமுள்ளவளாய்—அவற்றை எங்களுக்கு—அளிப்பாளாக. ௪௫ மனைகளுக்கேற்றவாறு பலவித தர்மங்களின் பற்பல மொழியின் சனத்தை பல நிலயங்களில் தரிக்கும் மேதினி, தவறாமல் தடை செய்யாமல் கறக்கும் பசுவைப்போலே, செல்வத்தின் ஆயிரம் தாரைகளை எனக்கு அளிப்பாளாக. ௪௬ உனது மறைவிலே சாய்ந்து குளிர்நடுங்கிக் கலக்கமாகி, கொட்டித் தூரிதம் தீண்டும் பாம்பு எது—உண்டோ—அதுவும்—சகமே! ஆரம்ப மழைக் காலத்திலே சலனமாகிச் சீவனுடனாகும் கிருமி எது உண்டோ அதுவும்—நகர்ந்தாலும் எங்களில் நகராமலாகுக: மங்களகரமான அதனோடு நீ எங்களுக்குச்

சுகமளிப்பாயாக. சஎ சனங்கள் செல்ல நீ எத்தனை வழிகளை யடைந்துள்ளாயோ அவற்றையும், இரதம் போகும் வதியையும், நல்லார் பொல்லார் மானிடர் செல்லும் வழிகளையும்—திருடர் தரியலிரின்று நீங்கி நாங்கள் ஜயிப்போமாக. மங்களகரமான வழியுடன் நீ எனக்குச் சுகமளிப்பாயாக. சஅ மதியீனனை தரித்து மன மாழ்ந்தவனை அணிந்து, கயவன் குரவனின் சவத்தை சகித்து வராகன் இணையும் வையகம் வனசூகரத் துக்கு தன்னைத் திறந்துகொள்ளும், சகூ வனங்களில் ஸ்தாபிதமான வன மிருகங்களையும், உனது அடவி விலங்கு களையும், மனிதரைப் புசிக்கச் செல்லும் புலிகளையுஞ் சிங்கங்களையும் நரியையும் ஓநாயையும், துட்டனையும் தீம் பனையும் தேரானையும், தரணியே! நீ இங்கு எங்களினின்று தூரம் விலக்கு. ருo புவியே கந்தர்வர்களையும், அப் ஸரஸர்களையும், அராயர்களையும் கிமீதினிகளையும், பிசா சர்களையும் எல்லாப் புல்லர்களையும், நீ இங்கு எங்களி னின்றும் தூரமாக்கு. ருக எவளிலே இருகால் சிறகு களுள்ள ஹம்சங்களும் சகுந்தங்களும், பருந்துகளும் பறவைகளும் ஒன்று பறக்கின்றனவோ, எவளிலே மாதரி சுவன் என்னும் பவனன் புழுதியின் மேகங்களைச் செய்து மரங்களைச் சலனமாக்கிச் செல்லுகின்றானோ, காற்றின் இங்குமங்குமான எதிர்ப்பிலே—எங்கு சுடர் வீசுகின் றதோ; ருஉ எப்புவியிலே கருப்பும் சிகப்புஞ் ஒன்று சேர்ந்து இரவும் பகலும் வைக்கப்பட்டுள்ளனவோ, மழையால் சூழ்ந்து சுற்றிலுமாகி விசாலமாயுள்ள அச்சகம், பிரியமான தன்னந்தனி நிலயத்திலே, அவள் எங்களுக்கு மங்களத்தை ஸ்தாபிப்பாளாக. ருரு சோதி யும் சகமும் வானமும் இந்த விரிவை எனக்களித் துள்ளன: அக்கினியும் சூரியனும் சலங்களும் எல்லாத்

தேவர்களும் ஒன்றுசேர்ந்து எனக்கு அறிவை யளித்துள்ளார்கள். ௫௪ நான் ஜயிப்பவன். புவியிலே நான் பெரியவன் என்னும் பெயருள்ளவன்: ஒவ்வொரு திசையினுமழிப்பவனாகி நான் சர்வஞ்ஜயித்து வசியஞ் செய்பவனாவேன் ௫௫ தேவியே! தேவர்களால் சொல்லப்பட்டு நீயே அங்கு முன் விரியுங்கால் மகிமைக்கு விசாலமானாய்; அப்பால் உன்னில் நற்பொருள் நுழைந்தது: பிறகு நீ நாலு திசைகளையுஞ் சித்தஞ்செய்தாய். ௫௬ பாரிலேயுள்ள கிராமங்களிலே கானகத்திலே சபைகளிலே, சங்கங்களிலே, கூட்டங்களிலே, உனக்கு இனிமையானதையே நாங்கள் பேசுவோம். ௫௭ துரகம் தூசியைப்போலே அவன் தான் தோன்றியதினின்று பூதலத்திலே வசித்தவர்களையெல்லாம் உதறித் தள்ளியுள்ளாள்: முன்செல்லுமவள் ரம்மியமுள்ளவள். அவள் புவனக்காப்பாகவும் வனஸ்பதிகளையும் ஒஷதிகளையும் தரிப்பவளுமாவாள். ௫௮ நான் பேசுவதை தேன்மிகுகப் பேசுகிறேன்: நான் காணுங்கால் அவர்கள் அன்புடனாகிறார்கள்: நான் துரிதம் மிகுந்து சோதியாயுள்ளேன். இம்சை செய்யும் இதரர்களை நான் இறுத்துகிறேன். ௫௯ அவளுடைய ஸ்தனம் அமைதியாயும் சுகந்த—மாயும் பால் மிகுந்து இனிய பானத்தோடுமுள்ளது. புவிபாலோடு சேர்ந்து பூமி என்னை ஆசீர்வதிக்கட்டும். ௬0 வானக் கடலின் அகத்திலே அவள் நுழையுங்கால், எவளை விசுவகருமன் அவியுடன் நாடினானோ, இரகசியத்திலே வைக்கப்பட்ட—அப்—போகபாண்டமான—புவி—தாய்களுள்ளவர்களின் இன்பத்துக்குப் பிரசன்னமானாள். ௬௧ நீ சனங்களைத் தெளிப்பவள்: நீ விரியும், விருப்பம் நிரப்பும் அதிதி. ருதத்தின் முதல் சனனான பிரஜாபதி உனக்கு உனது போதாமையை பூரணம் செய்வானாக. ௬௨ நிலமே உன்னில் நிற்பவர்கள் நோய் நீங்கி

யக்ஷ்மம் விலகித் தோன்றுவார்களாக, தீர்க்காயுசைச் சேர விழிப்புடனுகி உனக்கு நாங்கள் பலி சுமப்போம். சுஙு தாயான தரணியே! நீ பிரியமாகி என்னை நலமுடன் ஸ்தாபனஞ்செய்: கவியே! செல்வத்திலே சிறப்பிலே சோதி சேர்ந்து நீ என்னை ஸ்தாபனஞ் செய். [கஉ. க. க—சுஙு]

சஎரு அக்கினி [பிருகு ரிஷி—அக்கினி ருதமந்திரோக்த தேவதைகள் உக—ஙஙு மிருத்யு தேவதை]

க நடத்தில்[1] ஏறு; உனக்கு இங்கு இடமில்லை; இந்த ஈயம் உனது பாகமாகும்: வா! பசுக்களிலுள்ள யக்ஷ்மத்துடனும் புருஷர்களிலுள்ள யக்ஷ்மத்தோடும் ஒன்று சேர்ந்து, நீ கீழ்நோக்கிச் சென்றுவிடு. உ எல்லா யக்ஷ்மத்தையும் மிருத்யுவையும், கரணம் அநுகரணத்துடன் துன்பஞ்செய்பவனோடு தீமை புரிபவனுடன் நாங்கள் இங்கிருந்து துரத்துகிறோம். ங இங்கிருந்து நாங்கள் ஈனனையும் இறப்பையும் அழிப்பையும் துரத்துகிறோம்: பூஜ்ய மாமிசம் புசிக்கும் அக்கினியே! எங்களை வெறுப்பவனை நீ புசித்துவிடு. ச ஒருவரும் இல்லாமலிருக்குங்கால் இந்த கோசாலையில், புலிபோலுள்ள மாமிசம் புசிக்கும் அக்கினி நுழைந்தால்—அவனது—நெய்க்கு தானியங்களை யளித்து நான் அவனை தூரமாக்குகிறேன், அவன் சலங்களிலே நிலயமுள்ள அனல்களுக்கு சென்றுவிடுவானுக. ரு அக்கினியே குரோதர்கள் கோபத்தால் மனிதன் மரித்தான்—என—உன்னைக் கழித்தால், உன்னுல் உன்னையே சுகமளிப்பவனுகச் செய்து கொள்ளலாம். நாங்கள் உன்னை மறுபடியும் சுவாலையுடன்

---

1 நாணலில்.

சஎச கருத்து—புலியைப் போற்றுங்கள்.

செய்கிறோம். ௬ ஆதித்தியர்களும், ருத்திரர்களும், வசுக்களும் உன்னை மறுபடியும்—ஸ்தாபனஞ் செய்துளார்கள் : அக்கினியே ! வசுநேதாவான பிராமணன் மறுபடியும் உன்னை நிலை செய்துள்ளான். பிரமணஸ்பதி நூறு சரத்துக்களுக்கு நீண்ட ஆயுசு வாழ உன்னை மறுபடியும் ஸ்தாபித்துள்ளான். எ மாமிசம் புசிக்கும் அக்கினி எங்கள் மனையில் நுழைந்திருந்தால், இந்த வேறான ஜாதவேதசனைக் காணும் நான் இவனை பிதுரு யக்ஞத்துக்கு தூரம் எடுத்துச் செல்லுகிறேன். பெரிய நிலயத்திலே அவன் தாபத்தைத் தூண்டுவானாக. அ நான் மாமிசம் புசிக்கும் அக்கினியை தூரஞ் செலுத்துகிறேன் : துன்பஞ் சுமந்து யமப் பிரஜைகளுக்கு அவன் செல்வானாக. இங்கு இந்த வேறான ஜாதவேதசன் தேவர்களுக்கு தேவனாய் முன்னறியுமவன் அவியை எடுத்துப் போவானாக. ௯ சலனமான நான் வச்சிராயுதத்தால் சனங்களை ஸ்தம்பிக்கச் செய்யும் மாமிசம் புசிக்கும் அக்கினியை, மிருத்யுவை தூரஞ் செய்கிறேன். நான் அறிந்து காருஹபத்தியாக்கினியி னின்றும் அவனைத் தனிமையாக்குகிறேன். பிதுருக்களின் உலகத்திலும் அவன் அவர்களது பாகமாவானாக. ௧0 பிதுருக்கள் செல்லும் வழிகளால் துரிதமாயும் துதிப்பதற் கருகனுமான மாமிசம் புசிக்கும் அக்கினியை நான் செலுத்திவிடுகிறேன். தேவர்களால் செல்லும் வழிகளாலே நீ திரும்பிவராதே. நீ அங்கே இரு. நீ பிதுருக்களிலே விழிப்புடனிரு. ௧௧ தெளிந்து தூய்மையாகி சுத்தமாகுங்கால் சுவஸ்திக்கு புசிக்கும் அக்கினியை அவர்கள் எழுப்புகிறார்கள். அவன் புன்மை பிரிந்து பாவம் நீங்குகிறான். நல்ல சுத்தஞ் செய்பவனால் மூட்டப்பட்டு அக்கினி நிர்மூலஞ் செய்கிறான். ௧௨ புசிக்கும் தேவனான அக்கினி சோதி வரம்புகளில் ஏறி

யுள்ளான் : அவன் பாவத்தினின்றும் பிரிவதால் அவன் நம்மை பழிச் சொல்லினின்றும் பிரித்துள்ளான். கரு புசிக்கும் இவ்வக்கினியிலே நாங்கள் இவ் வழுக்கையெல்லாம் துடைத்துள்ளோம் : சுத்தமாகி நாங்கள் யக்ஞத்துக்கு அருகராயுள்ளோம்: அவன் எங்கள் வாழ்நாட்களைத் தீர்க்கம் செய்வானாக. கச பிளப்பவன், புசிப்பவன், பாழாக்குபவன், சப்தமற்றவன், சமான அறிவுள்ளவன், இவர்கள் உனது யக்ஷ்மத்தை தூரத்தினின்றே தூரத்திலே மறையச் செய்துள்ளார்கள். கரு புரவிகளிலே, வீரர்களிலே, பசுக்களிலே, ஆடுகளிலே, அஜங்களிலேயுள்ள சனத்தைத் ,தடைசெய்யு மக்கினியை நாங்கள் புறத்தில் தள்ளிவிடுகிறோம். கசு உன்னை இதரர்களினின்றும், புருஷர்களினின்றும், பசுக்களினின்றும், புரவிகளினின்றும் சிவனைத் தடைசெய்யும் அக்கினியான உன்னை, மாமிசம் புசிக்கும் உன்னை, நாங்கள் புறத்தில் தள்ளிவிடுகிறோம். கஎ எதில் தேவர்கள் சுத்தமாகிறார்களோ, எதில் மானிடர்கள்—நிர்மலமாகிறார்களோ—அங்கு நெய் துதி செய்து தூய்மையாகி அக்கினியே ! நீ சோதி ஏறு. கஅ அக்கினியே ! ஆஹூத மளிக்கப்படும் நீ, எழுப்பப்பட்ட நீ, எங்களுக்கு மாறாகச் செல்லாதே. நாங்கள் தீர்க்கமாய் சூரியனைப்பார்க்க நீ இங்கு பகற்காலத்தில் பிரகாசி. ககூ ஈயத்திலே—மாசைத்—துடைத்துவிடுமின். நாணல்களில் நீக்குங்கள். விழுங்கும் அக்கினியில் எந்த வழுவுண்டோ அதனை வீழ்த்துமின். அப்படியே கரும் செம்மறி யாட்டிலே அழுக்கை—தலைவலியை அகற்றுங்கள். தலையணையில் நீக்குங்கள். உ0 ஈயத்திலே மாசை வைத்து தலையணையிலே தலைவலியை கரும் செம்மறி யாட்டிலே அவற்றைத் துடைத்து யக்ஞாருகர்களாகி நீங்கள் சுத்தமாகுங்கள். உக மிருத்யுவே ! தேவர்கள் செல்லும்

வழிக்கு அன்னியமான உனது இங்குள்ள தூரவதி வழியாய், நீ சென்றுவிடு: கேள்வியும் காட்சியுமுள்ள உனக்கு நான் கூறுகிறேன்: இங்கு இந்த வெகு பல வீரர்கள் இருப்பார்களாக. உஉ சீவனுள்ள இவர்கள் மிருத்யுவினின்றும் திரும்பியுள்ளார்கள்: இன்று நம்முடைய யழைப்பானது மங்களகரமாயுள்ளது: நடனத்துக்கும் நகைப்பதற்கும் நாம் முன் சென்றுள்ளோம்: நாங்கள் வீரர் மிகுந்த சமருக்கு முழங்கவேண்டும். உந நான் இக்கோட்டையைச் சீவர்களுக்கு வைத்துள்ளேன்: இவர்களில் எவனும் அவ்வரம்புக்குச் செல்லாமலாவானாக: நூறு வெகுபல சரத்துக்கள் வசித்து அவர்கள் மலையினால் மிருத்யுவுக்குத் தடை செய்வார்களாக. உச ஒருவர் பின் ஒருவராய் சர்வமான நீங்களும் முயற்சி செய்பவர்களாகி தீர்க்காயுசுக்கு மூப்பை வரித்து ஏறுங்கள். உங்களுடன் சேர்ந்து நற்பொருள்களைச் செய்யும் துவஷ்டா உங்களது சர்வாயுசான வாழ்க்கைக்கு அழைத்துச் செல்வானாக. உரு ஒன்றன்பின் ஒன்றாய் நாள்கள் செல்வனபோல், ருதுக்களில் அனுசரமாகி ருதுக்கள் தொடர்வனபோல், முன் செல்வதைப் பின் வருவது பிரியாததுபோல் தாத்ருவே! அவர்களுடைய ஆயுட்களைச் சித்த மாக்குங்கள். உசு சிலைமயன் பாய்கிறான்—பரஸ்பரம் ஒன்று சேருங்கள்: வீரர்களாகுங்கள், நண்பர்களே!—நதியைக்—கடந்து செல்லுங்கள் தீயோர்களிடமிருந்து நீங்குங்கள். நாங்கள் நோய் பிரிந்துள்ள வாய்மைகளுக்கு—நொய்மை—கடந்து செல்லவேண்டும். உஎ நண்பர்களே! எழுமின்! கடந்து செல்மின்: இங்கு கல்மய நதி ஓடுகின்றது: இங்கு அமங்களமானவற்றை நீங்கள் நீங்குமின்: நாங்கள் மங்களகரமாய் இனிமையாயுள்ள மேன்மைகளுக்குச்

செல்லவேண்டும். உஅ தெளிந்து தூயர்களாய் தூய்மை செய்பவர்களாய் துலக்கத்துக்கு வைசுவதேவியின்—சாதனத்தைப்—பற்றுமின்: கஷ்டவழிகளையெல்லாங் கடந்து, எங்களது எல்லா வீரர்களோடும், நாங்கள் நூறு ஏமந்தங்கள் அனுபவிக்கவேண்டும். உகூ காற்று நிறையும் உச்ச நெறிகளாலே, தூரவழிகளாலே ஆழமானவற்றைக் கடந்து, சென்றுவிட்ட ரிஷிகள், மூவ்வேழு முறைகளால் மிருத்யுவைப் பின்தள்ளினார்கள். ௩௦ நீண்ட வாழ்க்கையை விருத்தி செய்பவர்களாயும் மிருத்யு பாதையைத் தடுப்பவர்களாயும் நீங்கள் வாருங்கள். உங்கள் நிலயத்திலே யுட்கார்ந்து மிருத்யுவை துரத்துங்கள்: பிறகு நாங்கள் சீவித்து சபையில் பேசுவோமாக. ௩க விதவைகளாகாத இவ்வனிதைகள், சுமஙேவிகளாகி நெய் எண்ணெய்களைப் பூசிக்கொள்வார்களாக: துக்கமற்று வியாதி விலகி நல்ல திரவியங்களோடு தோற்றுவிப்பவர்கள் மூலஸ்தானத்துக்கு முதன்மையாய் ஏறுவார்களாக. ௩உ நான் இவ்விருவர்களையும் அவியால் தனிமையாக்குகிறேன். நான் பிரம்மத்தால் அவர்களை அதிசித்தஞ்செய்கிறேன்: நான் அழியாத சுவதாவைப் பிதுருக்களுக்குச் செய்கிறேன்: நான் இவர்களைத் தீர்க்காயுசோடு சேர்க்கிறேன். ௩உ பிதுருக்களே! மரிப்பவர்களிலே அமுதனாய், எத்தேவனான அக்கினி எங்கள் இருதயத்திலே நுழைந்துள்ளானோ, அவனை என்னில் தரிக்கிறேன்: அவன் எங்களை வெறுக்காமலாவானாக. நாமும் அவனை வெறுக்காமலாவோமாக. ௩௪ காருஹபத்திய கனலிலிருந்து திரும்பிச் சென்று, மாமிசம் புசிக்குங்கனலோடு தென்திசைசெல்லுங்கள்: பிதுருக்களுக்குப் பிரியமானதையும் ஆத்மாவுக்கும், பிராமணர்களுக்குப் பிரியமானதையும் செய்யுங்கள். ௩௫ தனிமை செய்யாத மாமிசம் புசிக்கும் அக்கினி

மூத்த மகனது இருபாகச் செல்வங்களை, தனக்கே கிர
கித்து அவனை இழிவால் அழிக்கிறான். ௩௬ மாமிசம்
புசிக்கும் அக்கினி நீக்கப்படவில்லையேல் ஒருவன் உழுவ
தும் ஒருவன் ஜயிப்பதும் ஒருவன் உழைப்பால் பற்றுவ
தும், இவ்வனைத்தும் மனிதனுக்காவதில்லை. ௩௭ அவன்
யக்ஞத்துக்கு அருகற்றவனாகி தேஜசு தேய்பவனாகிறான்;
அவனது அவி புசிக்கப்படமாட்டாது. அவனைத் தொட
ரும் அக்கினி மாமிசம் புசிக்கும் உழவு பசுக்கள் பொருள்
களை அவனிடமிருந்து நீக்கும். ௩௮ மடிசெல்லும் மானி
டன் பேராசை யுள்ளவர்களோடு அடிக்கடி பேசுகிறான்:
மாமிசம் புசிக்கும் அக்கினி, அவனை அறிந்து நெருங்கித்
தொடருகிறான். ௩௯ ஸ்திரீயின் புருஷன் மரித்தால்
மனைகள் கிராஹியால் பற்றப்படும்; மாமிசம் புசிக்கும்
அக்கினியை நீக்கும் அறிஞனான பிராமணனைத் தேட
வேண்டும். ௪௦ நாங்கள் செய்த கேடு கயம் கொடுமையி
னின்றும் சலங்கள் என்னை அழிக்கும் அக்கினியினின்றும்
என்னைப் புனிதமாக்குவனாக. ௪௧ தேவர்களால் செல்
லப்பட்ட வழிகளால், முன்னறியும் இந்த சலங்கள் கீழ்—
தளத்தினின்று மேற்புறம் ஏறியுள்ளன: விருஷப மலை
யின் வரம்பிலே பழைய நதிகள் நவமாய் செல்லும்.
௪௨ மாமிசம் புசிக்காத அக்கினியே! மாமிசம் புசிக்குமக்
கினியைத் தள்ளிவிடு, தேவயஜனனைச் சும. ௪௩ மாமி
சம் புசிப்பவன் இம்மனிதனிலே நுழைந்தான்: அவன்
மாமிசம் புசிப்பவனை யநுசரித்துச் சென்றுள்ளான்:
இரு புலிகளையுந் தனித்தனி செய்து, நான் அமங்களனை
எடுத்துச் செல்கிறேன். ௪௪ காருஹபத்திய கன
லானது தேவர் மனிதர்களான இருவர்களின் நடுவே
இரகசியமாயும் இரட்சிப்பாயும் வைக்கப்பட்டுள்ளான்.
௪௫ அக்கினியே: நீ சீவர்களின் ஆயுசை நீளமாக்கு;

மரிப்போர்கள் பிதுருலோகஞ் செல்க; நலமான காருஹ பத்திய அக்கினியான நீ அளிக்காதவனை எரித்து இவனுக்கு ஒவ்வொரு உஷையிலும் உயர்வை யளி. சகு அக்கினியே! எல்லாப் பகைவர்களையு மழித்து அவர்களுடைய பொருளையும் பலத்தையும் எங்களுக்களி. சஎ காத்துச் சுமக்கும் இந்த இந்திரனை நீங்கள் பற்றுங்கள்; நிந்தை நடலையினின்றும் அவன் உங்களை வகித்துச் செல்வான். அவனால் பறக்கும் சரத்தைச் சிதைத்துவிடு. அவனால் ருத்திரனால் எறியப்படும் அம்பை நீக்கு. சஅ நீங்கள் பொதிகாளையைத் தெப்பமாகப் பற்றுங்கள்; அவன் உங்களை நடலை நிந்தையினின்றும் வகித்துச் செல்வான்; சவிதாவின் இக்கப்பலில் யேறுங்கள்; விரியும் ஆறு திசைகளால் நாங்கள் துக்கத்தைத் தாண்ட வேண்டும். சகூ [1]சயனமே! இரவும் பகலும் நீ சுமந்து க்ஷேமமாய் நின்று, ஆயுளை நீளஞ்செய்து சுவீரர்களுடன் நீ அநுசரிக்கிறாய்: சுமனமுள்ளவர்களையும் சுகமானவர்களையும் நீ தரித்து புருஷ வாசனை யுள்ளவனாக எங்களுக்கு நீ தீர்க்காலமோங்கு ருo குதிரை புற்களைச் உதறுவது போலே எவர்களை நெருங்கி மாமிசம் புசிக்கும் அக்கினி தொடர்கின்றனோ அவர்கள் தேவகோபத்திலே வீழ்கிறார்கள். சதாகாலம் சிதைவிலே சீவிக்கிறார்கள். ருக சிரத்தையில்லாமல் செல்வம் விரும்பி மாமிசம் புசிப்பவனோடு ஒன்று சேர்பவர்கள், சதாகாலம் இதரர்களுடைய அனலை ஊட்டுபவர்களாவார்கள். ருஉ அவன் அடிக்கடி மறுபடியும் திரும்புகிறான்: எவர்களை யறிந்து நெருங்கி மாமிசம்புசிக்கு மக்கினி யநுசரிக்கின்றானோ—அவர்களில் அவன் மனத்தினாலே பறப்பதற்குப் போல் விரும்புகிறான். ருங மாமிசம் புசிப்

1 மனைவியே!

பவனே ! பசுக்களிலே கரும் செம்மறியாடு உனது பாகம். ஈயத்தை உனது செல்வமெனச் சொல்லுகிறார்கள். அரைத்த உளுந்து உனது அவி. அதுவே உனது பாகம்; அதி அடவியின் வனத்தைத் தேடு. ௬௪ காய்ந்த கரும்பை யளித்து வெண்மையான எள்ளை, நாணலை மூங்கிலைத்—தந்து—இதனை சமித்தாகச் செய்து இந்திரன் யமனுடைய அக்கினியை நீக்கினேன். ௫௫ நான் அவர்களை சாயும் மேல்திசை சூரியனுக்கு எதிரில் வைத்து ஒவ்வொரு பிரியும் வழியை முன் அறிந்து நுழைந்துள்ளேன்; நான் அவர்களுடைய சீவ சுவாசங்களை நிர்வகித்துள்ளேன், நான் இவர்களை இங்கு தீர்க்காயுசோடு யுக்தமாக்குகிறேன். [கஉ. உ. க—௫௫]

சஎ௬ தகனுக்கினி [யமன்—மந்திரோக்த சுவர்கோதனே அக்கினி]

க புருஷனே ! புருஷர்களில் நில். சர்மத்துக்குச் செல். உனக்குப் பிரியமானவளை இங்கு அழை: ஆதியிலே எச்சக்தியுடன் நீங்கள் முதன்மையாய் ஒன்று சேர்ந்தீர்களோ அச்சக்தி உங்களுக்குச் சமானமாய் யமராஜயத்திலாகுக. உ உங்களது கண் விரிக, உங்களது வீரியம் வளர்க. உங்களது தேஜசு விருத்தியாகுக, வலிமைகள் வளர்ந்து வளர்க, தம்பதிகளே அக்கினி காயத்திலே சமித்தாகச் சேருங்கால் பக்குவ மானதினின்று நீங்கள் வருவீர்கள். ௩ இவ்வுலகத்திலே ஒன்று சேர்ந்து, தேவர் செல்லும் வழியிலே ஒன்று சேர்ந்து நீங்கள் யம இராஜ்யங்களிலே ஒன்றுகுங்கள்: பவித்திரங்களால் புனிதமாகி உங்களிடமிருந்து உண்டாகும் இரேதசை நீங்களே பற்றுங்கள். ச மக்கட்களே ! சீவ தன்யர்களே !

---

சஎ௫ கருத்து மாமிசம் புசிக்கும் அனலை நீக்கு,

சலங்களிலே ஒன்று நுழையுங்கள். ஒன்று வந்து இச் சீவனை யடையுங்கள்; உங்களது தாயானவள் பக்குவஞ் செய்து அவர்கள் அமுதம் என அழைக்கப்படும் ஓதனத்தை நீங்கள் பகிர்ந்துகொள்ளுங்கள். ரு சொற்குற்றம் கேட்டினின்று உங்களது தாய்தந்தை பக்குவஞ்செய்வதான, நூறு தாரைகளுடனுகும் சுவர்க்கஞ் செல்லும் ஓதனம் அதனது மகிமையினுல் இரு உலகங்களையும் வியாபகஞ் செய்துள்ளது. சு யக்ஞஞ் செல்பவர்களால் ஜயிக்கப்படும் இரு உலகங்களில் இரு புவனங்களில் சுவர்க்கஞ் செல்பவற்றில் எது சோதி மிகுந்து தேன் நிறைந்து முதன்மையாயுள்ளதோ அங்கு மூப்பிலே உங்களது மக்கட்களோடு சேர்ந்து—வாழுங்கள். எ ஒவ்வொரு முன் திசையையும் நீங்கள் பற்றுங்கள்: சிரத்தையுள்ளவர்கள் இச்சகத்தைப் பற்றுகிறுர்கள்: புருஷனும் மனைவியுமான நீங்கள் சேர்ந்து எது பக்குவமாகி அக்கினியிலே யளிக்கப்பட்டதோ அதை இரட்சியுங்கள். அ நீங்கள் இருவர்களும் தென் திசையடைந்து இப்பாத்திரத்தைச் சுற்றத் திரும்புங்கள்: பிதுருக்களுடன் சேர்ந்து அதில் யமன் உங்களுடைய பக்குவமான ஓதனனுக்குப் பாதுகாப்பளிப்பான். கூ திசைகளின் இம்மேற் திசை, சுகமளிப்பவனுயும் அதி இராஜனுயுமுள்ள சோமனது, உயர்ந்த திசையாகும். நீங்கள் அதனை யனுசரியுங்கள்: நற்செயல் செய்பவர்களைப் பற்றுங்கள். பிறகு தேகசம்பந்தத்தால் பக்குவத்தினின்று தோன்றுவீர்கள். க0 உயரிய இராஜ்யமாயும் பிரஜையால் உயர்ந்ததுமான திசைகளின் வட திசை எங்களை முன்னணியிலாக்குக: புருஷன் பஞ்ச இசைகளுள்ள சந்தனுன்: விசுவம் விசுவாங்கங்களோடு நாங்கள் ஒன்று சேரலாமோ? கக இந்தநிலையான திசை விராட்

டன் : இதற்கு வணக்கமாகுக. இது எனக்கும் எனது மக்கட்களுக்கும் மங்களமாகுக. தேவியான அதிதியே ! எல்லா நற்பொருள்களுமுள்ள நீ துரிதகோபனைப்போல் எங்களது பக்குவப் பொருள்களைக் காப்பாயாக. ௧௨ தந்தை மகன்களைப்போல் நீ எங்களை யாலிங்கனஞ் செய். புவியிலே எங்களுக்கு மங்களகரமான காற்றுக்கள் வீசுக: இரு தேவதைகள் இங்கு பக்குவஞ் செய்யும் ஓதனம் எங்களது தவம் சத்தியத்தையுமறிக. ௧௩ கருமையான காகம் இங்கு வந்து நாறு உணவுகளை மூக்கில் கொத்திச் சென்றாலும் அல்லது ஈரக் கையுள்ள தாசி உரல் உலக்கையை ஈரஞ் செய்தாலும், சலங்களே ! நீங்கள் அவற்றை சுத்தஞ் செய்மின். ௧௪ விரியு மடிப்பாக முடனை, இவ்வுரலும்—உலக்கையும் வலிமை யளிக்கும். இது புனிதர்களால் சுத்தமாகி யரக்கனைப் பாழாக்குக : நீ சருமத்தில் ஏறு ? சிலக் காப்பை யளி : தம்பதிகள் மக்கட்களின் சேர்க்கையான மாசை யணுகாமலாவார்களாக. ௧௫ வனஸ்பதி தேவர்களுடன் சேர்ந்து அரக்கர்களையும் பிசாசர்களையும் வீழ்த்துவதாய் எங்களுக்கு வந்துள்ளது· அவன் எழுந்திருப்பான்: அவனது மொழியை அவன் மொழிவான் : அவனுடன் சேர்ந்து நாங்கள் எல்லா உலகங்களையுஞ் ஜயிக்கலாமோ ? ௧௬ பசுக்கள் ஏழு மேதைகளைச் சூழ்ந்துள்ளன : அவற்றில் சோதி மிகுந்துள்ளது—ஒன்று. களைப்படைந்துள்ளது வேறு. அவற்றை ௩௩ தேவர்கள் சேர்கிறார்கள். நீ எங்களைச் சுவர்க்க உலகத்துக்கு அழைத்துச் செல். ௧௭ நீ எங்களை சுவர்க்க உலகத்துக்கு அழைத்துச் செல்வாய்: அங்கு நாங்கள் மனைவியுடனும் மக்கட்களுடனுஞ் சேரவேண்டும்: நான் அவளைப் பற்றுகிறேன்: அவள் இங்கு என்னை யனுசரிப்பவளாக. கருமியும் நிர்ருதியும்

எங்களைக் கடக்காம லாவார்களாக. கஅ நாங்கள் கேடு கிராஹிக்கப்பால் செல்லவேண்டும்: நீ இருளைச் சின்ன பின்னமாக்கு: நீ இணக்கமானதைக் கூறு: வனஸ்பதியா லாக்கப்பட்ட நீ எழுந்து இன்னல் செய்யாதே. தேவர் விரும்பும் அரிசித் துணுக்கை நீ துண்டம் துண்டமாக் காதே. கக நெய் வரம்புடனாகி எங்கும் விசாலமாவதற் கான நீ ஒரே மூல நிலயத்தினுடைய இவ்வுலகத்துக்கு வா, வர்ஷ விருத்தியாகும் சல்லடையை நீ யளி: அது கழிவு, கூளத்தைத் தூற்றுக. உ௦ மூன்று உலகங்கள் பிராமண னோடு சமமாயுள்ளன, அதுதான் சுவர்க்கம், சகம், வானம்: ஸோமத்—தண்டுகளைப்பற்றி அவற்றை கிரகியுங் கள், அவை பெருகுக: அவை அரித்தட்டுக்கு மறுபடியும் வருக. உக பசுக்களது ரூபங்கள் வெகுவிதமாய் தனித் தனியாகும்; நீ சம்பத்துடன் ஒரு சொரூபமாகிறாய்; இரத்த நிறமான இச்சருமத்தை நீ தள்ளு: சுத்தஞ் செய்பவன் ஆடைகளைப்போல், சிலை சுத்தஞ் செய்யும். உஉ புவியாயுள்ள உன்னை நான் புவியிலே நுழையச் செய் கிறேன்: உனது தனித் தேகம் சமானமாகும்: உனது எப்பாகமாவது செல்வதால் தேய்ந்திருந்தாலும் எரிந் திருந்தாலும் நீ அதனால் ஒழுகாதே: நான் அதனை பிர மத்தால் மூடுகிறேன். உ௩ மகனைத் தாய்போல் நீ வர வேற்கவும்: புவியாயுள்ள உன்னை நான் புவியுடன் சேர்க் கிறேன். நெய்யால் யக்ஞாயுதங்களால் ஒன்று சேர்ந்து உகையும் கும்பமும் வேதியிலே தடுமாறுமலாகுக உச அக்கினி பக்குவஞ் செய்பவனாய் உன்னை கீழ்த் திசையில் காப்பானாக. இந்திரன் மருத்துக்களோடு தென் திசையில் துணை புரிவானாக. வருணன் மேற்திசையின் தாரணத்திலே உன்னைத் திரமாக்கத் துணைபுரிவானாக, வடதிசையிலே ஸோமன் உனக்கு நன்கு அளிப்பானாக.

௨ரு பவித்திரங்களால் புனிதமாகி மேகத்தினின்று அவர்கள் பொழிகிறார்கள்: அவர்களது உலகங்களாக அவர்கள் சுவர்க்கத்துக்கு சகத்துக்குச் செல்லுகிறார்கள். சீவர்களாயும் சீவன் மிகுந்தவர்களாயும் திரம் நிலைத்தவர்களாய் பாத்திரத்திலே பொழியப்படும் அவர்களை அக்கினி மூட்டுவானாக. ௨௬ அவர்கள் சோதியினின்று வருகிறார்கள், புவியிலே ஒன்று சேர்கிறார்கள்; பூமியினின்று வானத்திலே ஒன்று செல்லுகிறார்கள்; சுத்தமாகி அவர்கள் சுத்தமாகிறார்கள், அவர்கள் சுவர்க்க உலகத்துக்கு எங்களைச் சேர்ப்பார்களாக. ௨எ பிரபுக்களாயும் பொருத்தங்களாயும் சுத்தர்களாயும், புனிதர்களாயும் அமுதர்களாயுமுள்ள சலங்களே! அதிசிஷ்டமாகித் துணைபுரியும் நல்ல நாதர்களான நீங்கள் தம்பதிகளுக்கு ஓதனத்தைப் பக்குவமாக்குங்கள் ௨அ எண்ணப்பட்டுள்ளத் துளிகள் ஔஷதிகளோடு பிராணபானங்களுள்ள பொருத்தமான புவியிலே சேர்கின்றன. இங்குமங்குமாகி நல்ல நிறங்களுடன் எண்ண முடியாமலுள்ள தூயமானவை எல்லாத் தூய்மைகளையுமடைந்துள்ளன. ௨௯ தாபமுடனாகி அவர்கள் போர் புரிகிறார்கள், நடனமாடுகிறார்கள். அவர்கள் வெகுபல பிந்துக்களையும் நுரையையும் வீசுகிறார்கள்: சலங்களே! பக்குவகாலத்திலே புருஷனைக் காணும் பெண்ணைப்போல இந்த அரிசிகளுடன் ஒன்று சேருங்கள். ௩0 அடிப்பாகத்திலே அவர்கள் உட்காருங்கால் நீ அவர்களை எழுந்திருக்கச் செய். அவர்கள் சலங்களால் தங்களையே பரிசஞ்செய்துகொள்வார்களாக: இங்குள்ள சலத்தை நான் பாத்திரத்தால் அளந்துள்ளேன்; இத்திசைகளிலுள்ள தண்டுலங்களும் அறியப்பட்டுள்ளன. ௩க நீ கோடரியைத் துரிதமாய் நாடு, வேகமுடன் பற்று. அது இன்னல் செய்

யாமல் சந்தியிலே ஒஷதிகளை வெட்டுக. எவர்களிலே ஸோமன் அரசுபுரிகிறுனே அச்செடிகொடிகள் எங்களில் நிருமலாகுக. ௩௨ ஓதனத்துக்கு புது தருப்பைகளை விரித்திடுக: அவை இருதயத்துக்குப் பிரியமாகுக, கண்ணுக்கு இனிமையாகுக: தேவர்களும் தேவிகளும் அவற்றில் ஒன்று சேர்ந்தமர்ந்திடுக: அமர்ந்து ருதுக்களோடு இதனை அவர்கள் அனுபவித்திடுக. ௩௩ வனஸ்பதியே விரிந்த தருப்பையிலே தேவதைகளுடன் அக்கினித் துதிகளோடு பொருந்தி உட்கார். துவஷ்டாவின் ஆயுதத்தால் நன்கு செய்யப்பட்ட வடிவம்போலே பாத்திரத்திலே விருப்பமுள்ளவர்கள் பார்க்கப்படட்டும். ௩௪ அவன் அறுபது சரத்துக்களிலே நிதிபாலனஞ்செய்பவர்களை நாடுவானுக: பக்குவத்தால் அவன் சுவர்க்கத்தைச் சேர்வானுக, பிதுருக்களும் மக்கட்களும் அவனிலே வாழ்வானுக: இவனை சுவர்க்கஞ் செல்லும் தீயின் முன்னர் போகச் செய். ௩௫ தாங்கும் நீ புவிதரிப்பிலே திரமடை: அசையாமலிரு, உன்னைத் தேவர்கள் அசைப்பார்களாக, வாழ்ந்து வாழும் மக்கட்களுள்ள தம்பதிகள் சூழும் அனலின் ஸ்தானத்தினின்று உன்னை உயரஞ் செய்வார்களாக. ௩௬ ஜயித்து எல்லா உலகங்களுக்கும் நீ ஒன்று சேர்ந்து வந்துள்ளாய். விருப்பங்கள் எத்தனையானாலும் நீ அவற்றைப் பூரணமாய்த் திருப்தி செய்துள்ளாய். கிளருங் கம்பையும் அகப்பையையும் நீங்கள் உள்ளே அமிழ்த்துங்கள். அவனை ஒரு பாத்திரத்திலே ஸ்தாபனஞ் செய். ௩௭ நீ விரி, பூர்வத்திலே விசாலஞ் செய். இப் பாத்திரத்தை நெய்யால் பூசு. பால் விரும்பும் இளங்கன்றை நோக்கிக்—கதறும் பசுவைப் போலே தேவர்களே! இவனது பக்கம் ஹிங்கார சத்தஞ் செய்யுங்கள். ௩௮ நீ விசாலஞ் செய்தள்ளாய். நீ அவ்வுலகத்தைச் செய்

துள்ளாய். விரிந்து நிகரில்லாமலுள்ள சுவர்க்கமானது விசாலமாகுக. பெரிய கருடன் அதற்குச் செல்லும். தேவர்கள் தேவதைகளுக்கு அவனைச் செலுத்துவார்கள். ௩.௬ உனக்குப் புறமாய் இரகசியத்திலே உனது மனைவி எதனையேனும் பக்குவஞ் செய்தாலும், மனைவியே! உனது புருஷன் செய்தாலும், அதனை நீங்கள் ஒன்று சேருங்கள். ஒரே உலகத்திலே ஒருமையாகுங்கள். அது அனைத்தும் உங்களதாகுக. ச௦ இப்போது இப்புவியிலே வசிக்கும் இவ்வனைத்தையும், நம்மிடமிருந்து உண்டான மக்கட்களையு மெல்லாம், நீங்கள் பாத்திரத்திலே அழையுங்கள். நாபியை யறிந்து சிசுக்கள் ஒன்று சேர்வார்கள். சக தேனுல், வளர்ந்து நெய்யுடன் கலந்து அமுதநாபிகளான செல்வதாரைகளை யெல்லாம் சுவர்க்கஞ் செல்லுகிறவன் பற்றுகிறான். அவன் அறுபது சரத்துக்களிலே நிதிபாலர்களை நாடலாம். ச௨ நிதிபாலர்கள் நிதியைப் போலே அவன் அதனை நாடுவான்; அந்நியர்கள் அனீசுவரர் ஆவார்களாக. நம்மால் ஸ்தாபனமாகி முப்பிரிவுகளுடன் சுவர்க்கஞ்செல்லும் அது முந்நாகங்களுக்கு ஏறியுள்ளன. ச௩ தேவசூனியமான அரக்கனை அக்கினி எரிக்காமலாவானுக: மாமிசம் புசிக்கும் பிசாசன் இங்கு பானமற்றுகட்டும்—நாங்கள் அவனைத் தள்ளுகிறோம்; நாங்கள் அவனை எங்களினின்று தடுக்கிறோம்; ஆதித்தியர்கள், அங்கிரஸர்கள் அவனைத் தொடர்வார்களாக. சச நான் நெய்யுடன் கலந்துள்ள இத்தேனை ஆதித்தியர்களுக்கும் அங்கிரசர்களுக்கும், அறிவிக்கிறேன்: நன்கு செய்பவர்களே! பிராமணனது எதற்கும் சுத்த கைகளால் தீங்கு புரியாமலுள்ள நீங்கள் இச்சுவர்க்கத்துக்குச் செல்லுங்கள். ச௫ பூரணமாய் எந்த உலகத்தினின்று எதனை பரமேஷ்டி பற்றினுனே, அங்கிருந்து அதன் இப்

பெரும் பிரிவை நான் பற்றியுள்ளேன்; நீ நெய்யிலே பொழி; நெய்யால் நனை; இங்கு இது அங்கிரஸர்களது பாகமாகும். சசு நாங்கள் இந்த நிதியை இந்தச் செல்வத்தை, சத்தியத்துக்கு, தவத்துக்கு, தேவதைகளுக்கு அளிக்கிறோம். சபையிலோ விளையாட்டிலோ அது நாசமற்றாகட்டும், என்னைத் தவிர மற்றவனுக்கு நீங்கள் அளிக்கவேண்டாம். சஎ நான் பக்குவஞ்செய்கிறேன், நான் அளிக்கிறேன், எனது செயலிலும் காரியத்திலும் மனைவியுண்டு, மகனைப்போலவே கௌமாரமான உலகமும் தோன்றிற்று. உயரிய உறுதி—யளிக்கும் வாழ்க்கையைப்—பற்றுங்கள். சஅ இங்கு ஒரு அழுக்கில்லை. ஆதாரமில்லை, நண்பர்களோடு சேர்ந்து செல்லும் துரோகமுமில்லை. ஸ்தாபிக்கப்பட்டுள்ள நமது இப்பாத்திரம் பூரணமாயுள்ளது, பக்குவஞ் செய்தவனுக்கே பக்குவமான இது மறுபடியும் நுழையும். சகூ பிரியமான அவர்களுக்கு பிரியமானதையே நாங்கள் செய்கிறோம். எங்களை வெறுப்பவர்களெல்லாம் அந்தகாரஞ் செல்வார்களாக; பசுவும் காளையும் தொடரும் வலிமையும் மனிதர்களினின்று வரும் மிருத்யுவை நீக்குவார்களாக.
ரு0 ஓஷதிகளையும் நதிகளையும் சேகரிப்பவனுக்கு அனல்கள் ஒன்றோடு ஒன்று இணையும். சோதியிலே தாபஞ்செய்யும் எல்லா தேவர்களும் ஒன்று சேர்வார்கள். பக்குவஞ் செய்பவனுக்கு சொர்ணமே சோதியாயுள்ளது. ருக சருமங்களினிது மானிடனிலே சலனமாகியுள்ளது; அந்நிய பசுக்களிலே எதுவும் நிர்வாணமாயில்லை, நீங்கள் க்ஷத்திரத்தாலே உங்களை யணிந்துகொள்ளுங்கள்; ஓதன—முகம் மனை நெய்த உடையாகும். ருஉ சூதாட்டத்திலோ சபையிலோ நீ எப்பொய்யைப் பேசுகிறாயோ, இலாபம் விரும்பி எப் பொய்யை நீ பேசி

னும் அச்சமான இழையினுலேயே நீங்கள் கவர்ந்து கொண்டு இழுக்குகளை யெல்லாம் அதில் நாசஞ் செய்யுங்கள். ருரு நீ மழையை வெல்: தேவர்களுக்குச் செல். நீ சர்மத்தினின்று உயரமாய் புகையை எழச்செய். விசுவ விசாலத்துக்காகும் நெய்வரம்புள்ள நீ சமானமூலமுள்ள அவ்வுலகத்துக்குச் செல். ருச அவன் தன்னிலேயே அந்நிய நிறத்தைப் பார்ப்பதுபோல், சுவர்க்கஞ் செல்பவன் பலவிதமாய் தனது தேகத்தை மாற்றியுள்ளான். சோதியாயுள்ளதைச் சுத்தஞ் செய்து அவன் கருமையானதை கழித்துள்ளான்: நான் சிகப்பானதை அக்கினியிலே உனக்கு அளிக்கிறேன். ருரு நாங்கள் உனக்குஅக்கினி அதிபதியாயுள்ள கீழ்த்திசைக்கு, காக்கும் கருமைக்கு, சரங்களுள்ள ஆதித்தியனுக்கு இதனை யளிக்கிறோம். நாங்கள் வரும் வரை எங்களுக்கு அவனைப் பாலனஞ் செய்யுங்கள். எங்களைப்பூரணமான மூப்புக்கு அவன் அழைத்துச்செல்ல வேண்டும். மூப்பு எங்களை மிருத்யுவுக்கு அளிக்கட்டும். அப்பால் நாங்கள் பக்குவத்துடன் சேரவேண்டும். ருசு நாங்கள் உனக்கு இந்திரனை அதிபதியாயுள்ள தென் திசைக்கு காக்கும் குறும் வீரியனுக்கு சரங்களுள்ள யமனுக்கு இதனை யளிக்கிறோம்.................சேரவேண்டும். ருஎ நாங்கள் உனக்கு வருணன் அதிபதியாயுள்ள மேற்றிசைக்கு காக்கும் பிருதாவுக்கு, சரங்களுள்ள உணவுக்கு இதனை யளிக்கிறோம்...........சேரவேண்டும். ருஅ நாங்கள் உனக்கு ஸோமன்* அதிபதியாயுள்ள வடதிசைக்கு, காக்கும் சுவஜத்துக்கு, சரங்களுள்ள இடி முழக்கத்துக்கு இதை யளிக்கிறோம்.......சேரவேண்டும். ருகூ நாங்கள் உனக்கு விஷ்ணு அதிபதியாயுள்ள நிலையான திசைக்கு, காக்கும் நானுநிறக் கழுத்துள்ளதர்க்கு சரங்களுள்ள ஓஷதிகளுக்கு..................சேரவேண்டும். சுഠ நாங்கள்

உனக்கு பிரஹஸ்பதி தலைவனுயுள்ள உச்சதிசைக்கு காக்கும் வெண் பாம்புக்கு சரங்களுள்ள மழைக்கு இதை யளிக்கிறோம்........சேரவேண்டும். [கஉ. ரு. க—கூ0]

சளஎ பசு 1 [கசியபன் - மந்திரோக்த வசை]

க நான் அவளை யளிக்கிறேன்—என இங்ஙனம் ஒருவன் அவளைப் பார்க்குங்கால் கூறவேண்டும்: பிரஜைகளையும் சந்ததிகளையுங் கொண்டுவரும் அவளைப் பிராமணர்களுக்கு அளிக்கிறேன். உ அவளை யாஜிக்கும் ரிஷிகளுக்கு மக்கட் களுக்கு தேவர்களது பசுவை யளிக்க விரும்பாதவன் தனது பிரஜையை விற்று பசுச் சூனியமாகிறான்; ந கொம்பு சூனிய பசுவால் அவன் சிதைந்துவிடுகிறான். மூடப்—பசுவால்—அவன் பள்ளத்திலே வீழ்கிறான்: அங்கஹீனத்தால் அவனது மனைகளெல்லாம் எரிந்துவிடு கின்றன. ஒற்றைக்கண் பசுவால் தனது பொருள்களெல் லாம் பறிக்கப்படுகின்றன. சு சாணத்தின் நிலையினின்று கோபதிக்கு உதிர சூனியம் தோன்றும்; உன்னை வசியஞ் செய்ய இயலாததால் அவர்கள் உன்னை வசை என அழைத்துள்ளார்கள். ரு அவர்கள் நிற்கும் நிலையினின்று விக்லிந்தம் தோன்றும்; அவள் முகத்தால உறுமப்படு பவர்கள் திடீரென ஒழிந்துவிடுகிறார்கள். சு அவளது இரு செவிகளைத் திருகுபவன் தேவர்களுடைய கோபத் துக்குள்ளாகிறான்: நான் இலட்சியத்தைச் செய்கிறேன், என அவன் நினைத்தால் அவன் தனது செல்வங்களைக் குறைப்பவனுகிறான். எ எவன் தனது இலாபத்துக்கு அவளது வால்கொண்டையை வெட்டுகிறானே அவனது குட்டிகள் சாகின்றன: அவனது கன்றுகளை ஓநாய்கள்

---

1 ஞானம்

சளசு கருத்து—பின் வாழ்க்கையின் இரகசியம்.

சொல்லுகின்றன. அ அவள் கோபதியுடனிருக்குங்கால் அவளது ரோமத்தைக் காகம் துன்பஞ்செய்தால் அவனது குமாரர்கள் மரிக்கிறார்கள், எதிர்பாராமல் யட்சமமும் அவனை நாடுகின்றது. கூ அவளது எருவையும் நீரையும் தாசிப்பெண் எறிந்து விடுவாளானால், அக்குற்றத்தினின்று தப்பமுடியாத விகார சனனங்கள் தோன்றும். க0 பசு புலனாகுங் காலத்திலேயே பிராமணர்களுடன் சேரும் தேவர்களுக்குச் சனனமாகின்றது : அதனாலேயே அவள் பிராமணர்களுக்கு அளிக்கப்படவேண்டும் : ஒருவனது செல்வக்காப்பு என சனங்கள் இதைச் சொல்லுகிறார்கள். கக தேவர் செய்த பசு அவளைப் பற்ற வருபவர்களுக்கேயாகும், அவளைத் தனக்கே வைத்துக்கொள்வது பிராமண பங்கமாகும். கஉ அவளை யாசிக்கும் ரிஷிமக்கட்களுக்கு தேவர்களுடைய பசுவையளிக்க விரும்பாதவன் தேவர்களது கோபத்துக்கும் பிராமணர்களது குரோதத்துக்கும் ஆளாவான், கங இப்பசுவிலே அவனுக்கு என்ன பயனிருந்தபோதிலும் அவன் வேறு பசுவை நாடவேண்டும் : யாசிக்கப்படுங்கால் அதை யளிக்க விரும்பாதவனுடைய பசு புருஷனைத் துன்பஞ் செய்கின்றது. கச குவித்த செல்வம்போல், பிராமணர்களுடைய பசுவாகும். இதனால் எவனிடத்தில் அவள் தோன்றினாலும் அவளை யணுகி அவர்கள் வருகிறார்கள். கரு பிராமணர் பசுவுக்குச் செல்வது தங்களது பொருளுக்கே வருவது போலாகும். அவனுக் கொடுக்காமல் தடுப்பது அவற்றை வேறு வழியிலே துன்பஞ் செய்வதாகும். கசு அவள் அறிய இயலாமலுள்ளதால் மூன்று வருடகாலம் வரை அவள் சலனமாகலம் : நாரதனே ! அப்பால் அவன் பசுவை யறிந்தால் பிராமணர்களை நாடுவானாக. கஎ தேவர்கள் குவித்த குவியலான கோவை பசு

இல்லை யென எவன் கூறுகிறானோ, அவனிலே பவனும் சர்வனும் பாய்ந்து சரத்தை எரிகிறார்கள். கஅ அவனுக்குப் பசுவளிக்குந் திறனுண்டானால் அவளது ஸ்தனங்களை யறியாதவனுக்கும் தனங்களைத் தெளியாதவனுக்கும் அவள் பாலை யளிக்கிறாள். கக யாசிக்கப்படுங்கால் அவள் அளிக்கப்பட வில்லையானால், அவள் அவனது கொட்டத்திலே கலகஞ் செய்பவளாய் சாய்ந்துள்ளாள்: அவளை கொடுக்காமல் ஒருவன் தான் சாதிக்க விரும்பும் விருப்பங்களிலே ஜயமாவதில்லை. உ0 தேவர்கள் பிராமணனைத் தங்கள் முகமாகச் செய்து பசுவைக் கேட்டார்கள். அவளை யளிக்காத மானிடன், அவர்களுடைய கோபத்திற்குள்ளாகிறான். உக தேவர்கள் சேகரித்த பாகத்தை, மானிடன் தனக்கே வைத்துக் கொள்வானானாலும் பிராமணர்களுக்குப் பசுவை யளிக்கவில்லை யானாலும், அவன் பசுவின் சினத்துக்காவான். உஉ கோபதியின் பசுவை வேறு நூறு பிராமணர்கள் கேட்குங்கால் அவளைக் குறித்து தேவர்கள் சத்தியம் இங்ஙன மறிபவனுக்கே பசு உரியது என சொல்லுகிறார்கள். உங இங்ஙன மறிபவனுக்குப் பசுவை யளிக்காமல், அந்நியர்களுக்கு அவளைக் கொடுப்பவனுக்கு அவனது நிலையிலே தேவதையுடன் தரணி துன்பத்தைத் தருவாள். உச பசு எவனிடம் முதன்மையாய் புலனாயிற்றோ அவனது பசுவை தேவர்கள் யாசித்தார்கள்; நாரதன் அவளையே அறியலாம்: தேவர்களுடன் சேர்ந்து அவன் அவளை ஒட்டிச் சென்றான். உரு பிராமணர்களால் யாசிக்கப்பட்டு பசுவைத் தனக்கே வைத்துக்கொள்ளும் புருஷனை அவள் சந்ததியில்லாமலும், அற்பப் பசுயுள்ளவனாகவுஞ் செய்து விடுவாள். உசு பிராமணர்கள் அவளை அக்கினிக்கும் ஸோமனுக்கும், காமனுக்கும், மித்திரனுக்

கும் வருணனுக்கும், யாசிக்கிறார்கள்: அவளை யளிக்காதவன் அவர்களுடைய வெகுளியிலே வீழ்வான். உஎ அவளது பதி தானே ரிக்குக்களை கேட்காதவரை, அவனது கோக்களுடன் அவள் சலனமாகலாம்; அவன் செவியுற்றவுடன், அவனது மனையிலே அவள் இருக்கலாகாது. உஅ அவளது ரிக்குக்களைக் கேட்டவுடன், அவனது கோக்களின் நடுவே அவளை சலனஞ் செய்பவனது ஆயுசையும் செல்வத்தையும் கோபம் மிகும் தேவர்கள் துணித்து விடுவார்கள். உகூ நானுவிதமாய்ச் செல்லும் பசு, தேவர்கள் குவித்த குவியலான கோ, உரிய நிலைக்குச் செல்ல விரும்புங்கால், அவள் தனது வடிவங்களை விளக்குகிறாள். ௩௦ அவள் தனது ஸ்தானத்துக்குச் செல்ல விரும்புங்கால் தன்னையே அவள் புலனுக்குகிறாள்; அப்பால் பிராமணர்களுடைய யாசகத்துக்கு பசு தனது மனத்தைச் செய்து கொள்ளுகிறாள். ௩க அவள் தனது மனத்தால் சங்கற்பஞ் செய்துகொள்கிறாள்; அவள் தேவர்களுக்குச் செல்லுகிறாள். பிறகு பிராமணர்கள் பசுயாசனைக்குப் போகிறார்கள். ௩உ பிதுருக்களுக்குச் சுவதாவளிப்பினுலும், தேவதைகளுக்கு யக்ஞத்தினுலும், பசுவைக் கொடுப்பதாலும், இராஜன்யன் அன்னையின் சீற்றத்தையடைவதில்லை. ௩௩ பசு இராஜன்யனது தாயாவாள். புராதனத்திலே அவள் அங்ஙனமே தோன்றினாள்; பிராமணர்களுக்கு அளிக்கப்படும் அவள்—திருப்பி—வாங்குவதற்கருகளள்ளள். ௩ச தரிக்கப்பட்டுள்ள அகப்பையினின்று நெய் அனலுக்கு வீழ்ந்து விடுவதுபோலே பசுவை யளிக்காதவன் அக்கினியின் கோபத்திலே நழுவிவிடுகிறான். ௩ரு புரோடாசம் என்னும் கன்றுடன் நன்கு கறக்கும் அவள் உலகத்திலே இவனுக்கு அணுகுகிறாள்; பசுவை

யளிப்பவனுக்கு அவள் எல்லா விருப்பங்களையுங் கறக்கிறாள். தன்னை யளித்தவனுக்கு பசு, அவனது எல்லா விருப்பங்களை இயமனது இராஜ்யத்திலே அளிக்கிறாள்; அவள் யாசிக்கப்படுங்கால் அவளைத் தனக்கே வைத்துக் கொள்பவனது உலகத்தை நரகம் என அவர்கள் சொல்லுகிறார்கள். ௩௭ சினைப்பிக்கப்பட்டுள்ள பசு கோபதியிலே சினமாகி சலனமாகின்றாள்; என்னை மலடு—என நினைப்பவன் மிருத்யுவின் பாசங்களால் பந்தப்படுவானாக. ௩௮ அவளை மலடு என மதித்து மனையிலே பசுவைப் பக்குவஞ் செய்பவனது புத்திரர்களையும் பேரர்களையும், பிரஹஸ்பதி யாசிக்கச் செய்கிறான். ௩௯ பசுக்களிலே பசுவாக அவள் சலனமானாலும், அவள் பெருந் தாபத்தை விழச்செய்கிறாள்; மேலும் அவளை யளித்திடாத கோபதிக்கு வசை விஷத்தைக் கறக்கிறாள். ௪௰ பிராமணர்களுக்கு யளிக்கப்படுபவள் பசுக்களுக்குப் பிரியமாவாள்; மேலும் தேவர்களுக்கு யக்ஞஞ் செய்யப்பட்ட பசு பிரியப்—பிராணியாவாள். ௪௧ யக்ஞத்தினின்று எழுங்கால் தேவர்கள் எப்பசுக்களை உருவமாக்கினார்களோ, அவற்றிலே பயங்கரமான விலிப்தியை நாரதர் தனக்கு வரித்துக்கொண்டார். ௪௨ அவளைக் குறித்து தேவர்கள் சொல்லிக்கொள்வதாவது—இவள் தான் பசுவோ? அல்லது பசு வில்லையோ? இவளைப் பற்றி நாரதர் நுகல்வதாவது—இவள் வசையிலே வசையாத்மா. ௪௩ நாரதரே! அறியும் உன்னை நான் வினவுவதாவது—மானிடர்களின் நடுவே சனனமான பசுக்களிலே எவற்றை அபிராமணன் யனுபவிக்கலாகாது? ௪௪ பிரஹஸ்பதியே! விலிப்தியையும் அத்தகையப் பசுவை சனனஞ் செய்த வசையையும் செல்வம் விரும்பும் அபிராமணன் புசித்தலாகாது. ௪௫ நாரதனே உனக்கு வணக்கமா

கட்டும். அவளையுடனே யறிபவனுக்கும வசை விளங்குவாளாக. அதிபயங்கரமான அப்பசு யளிக்கப்படவில்லையேல் ஒருவன் யழிந்து விடுவான. சசு பிரஹஸ்பதியே! செல்வத்திற்காசை யாகும் அப்பிராமணன் புசிப்பதர்க்காகாத அவள் விலிப்தி எனப்படுவாள்: அத்தகைய பசுவை சனனஞ் செய்த வசையை விருத்தி செய். சஎ பசுக்களிலே மூன்று பிரிவுகள்: விலிப்தி, அவளை சனனஞ் செய்தவள், வசை: இவற்றையே ஒருவன் பிராமணர்களுக்களிக்கவேண்டும். அவன் பிரஜாபதியின் சீற்றத்திலே வீழ்வதில்லை. சஅ பிராமணர்களே! அளிக்கப்படாதவனுடைய மனையிலே யச்சமளிப்பதாயுள்ள பசுவை, கேட்குங்கால் இதுதான் யக்ஞம் என—அளிப்பவன் தன்—மனத்திலே. நினைக்கவேண்டும். சகூ தேவர்கள் பசுவைக் குறித்து கோபத்தில் பரஸ்பரம் புகன்றதாவது—அவன் அவளை எங்களுக்களிக்கவில்லை: இந்தரிக்குக்களால் 'பேதனை'ப்பற்றித்தான் அவர்கள் இங்ஙனஞ் சொல்லிக்கொண்டார்கள்: அதனாலேயே அவன் இறந்தான். ருo இந்திரனால் யாஜிக்கப்பட்ட பசுவை பேதன் அளிக்கவில்லை. அக்குற்றத்துக்காக மேன்மைக்காகும் சமரிலே அவனைத் துணித்து விட்டார்கள். ருக இச்சகம் பேசி வசையை யளிக்க வேண்டாமெனச் சொல்லும் தூச்சர்கள் அறியாமையால் இந்திரனுடைய சீற்றத்திலே சாய்வார்கள். ருஉ கோபதியை வழி திருப்பி அறியாமையால் அளிக்காதே எனச் சொல்பவர்கள் ருத்திரன் எறியும் சரத்திலே சேர்வார்கள். ருங இரகசியமாய் யக்ஞஞ் செய்தோ யக்ஞஞ் செய்யாமலோ ஒருவன் பசுவை பக்குவஞ் செய்தால் பிராமணர்களுடன் சேரும் தேவர்களோடு எதிர்ப்படைந்து உலகத்தினின்று ஒழுக்கம் ஒழிந்து நீங்குகிறான். கஉ. ச. க—ருங.

சஎஎ. கருத்து. தேவபசு

சஎஅ. பிராமணப்பசு—[அதர்வாச்சாரியன்—ஸப்த பரியாய சூக்கங்கள்- பிரமகவி தேவதை]

க அவள்1 சிரமத்தால்—தவத்தால்— சிருட்டிக்கப்பட்டாள்: பிரமத்தால் அடையப்பட்டு ருதத்திலே ஆசிரியமானாள். உ அவள் சத்தியத்தில் கவர்ந்து கீர்த்தியோடு சூழ்ந்து புகழால் பரந்துள்ளவள். ந சுவதாவால் திரமாகி சிரத்தையோடு வளைந்து, தீட்சையுடன் துணையாகி, யக்ஞத்தில் நிலையாகி, உலகத்திலே சாய்ந்துள்ளாள். ச பிரம்மமே அவளது வழி, பிரம்மமே அவளது அதிபதி. ரு பிராமணனை நிந்தித்து பிராமணப் பசுவை தனக்கே அபகரிக்கும் க்ஷத்திரியனது, சு சீலம் வீரம் புண்ணிய இலட்சுமி நீங்கிவிடும். எ ஓஜசும் தேஜசும், திடமும் திறமும்; மொழியும் இந்திரியமும், தனமும் தருமமும், அ பிரமமும் க்ஷத்திரமும் இராஷ்டிரமும் சனங்களும், புகழும் பிரகாசமும், வீரியமும், செல்வமும், கூ ஆயுசும் வடிவமும், நாமமும் கீர்த்தியும், பிராணனும் அபானனும், கண்ணும் காதும், கO பாலும் இரஸமும் உணவும் உணவு புசிப்பும் ருதமும் சத்தியமும், யக்ஞமும் அளிப்பும் பிரசைகளும் பசுக்களும் இவையனைத்தும், கக பிராமணனை நிந்தித்து, பிராமண பசுவை யபகரிக்கும் க்ஷத்திரியனிடமிருந்து நீங்குகின்றன. கஉ இப்பிராமணப் பசு பயங்கரமானது: அதிவிஷமடைந்து பிரத்தியக்ஷச் செயலுடனாகி குல்பஜங் கவர்ந்தது. கச அவளில் எல்லா கோரங்களும் எல்லா மிருத்யுக்களுமுண்டு. கச சர்வமான குரூரங்களும் சகல புருஷ வதைகளும் அவளிலே விளங்கும். கரு ஒருவன் தனக்கே பிராமணனது பசுவை யபகரித்தானானால் இவள் தேவ நிந்தனை செய்யும் பிராமண தூஷணனை மரண வலை

1 ஞானம் என்னும் பசு

யிலேபந்தஞ்செய்து விடுகிறாள். ௧௬ அவள் சதவதை ஆயுதம். அவள் பிராமணனழிப்பவனை ஒழிப்பவள். ௧௭ இதனாலேயே அறிஞர்களால் பிராமணர்களுடைய பசு இன்னல் செய்யத் தகாதது என கருதப்படுகின்றது. ௧௮ ஓடுங்கால் அவள் வச்சிராயுதம். ஓட்டமான பிறகு வைசுவாநரன். ௧௯ குளம்புகளை இழுக்குங்கால் அவள் சரமாம், எங்கும் பார்க்குங்கால் அவள் மகாதேவன். ௨௦ காணுங்கால் க்ஷுரபவி (கூரியமுனை) சத்தமிடும் இடிமுழக்கம். ௨௧ ஹிங்காரஞ் செய்யுங்கால் அவள் மிருத்யு; வாலை யசைக்குங்கால் அவள் உக்கிர தேவி. ௨௨ அவள் தனது செவிகளைத் திருகுங்கால் அவள் சகல நாசகாரி; நீர் விடுங்கால் இராஜ்யலக்ஷ்மி. ௨௩ கறக்கப்படுங்கால் அவளாயுதம். கறந்தவுடன் தலைவலி: ௨௪ அருகிலாகுங்கால் அவள் பலம் அகற்றுபவள். பற்றியவுடன் பரஸ்பரம்போர்புரிபவள். ௨௫ அவளது வாயைக் கட்டினால் அவள் அம்பு. அவள் அடிக்கப்பட்டால் அதோகதி: ௨௬ கீழே விழுங்கால் கோரவிஷம்: விழுந்தவுடன் அவள் கருமை. ௨௭. பிராமண னழிப்பவனை அவள் தொடர்ந்து அவனது பிராணன்களை அவள் பாழாக்குவாள். ௨௮ வெட்டப்படுங்கால் அவள் எதிர்ப்பாவாள்: அவளைப் பங்கு செய்து கொள்ளுங்கால் ஒருவன்—தனது மக்கட்களை புசிப்பவனாவான். ௨௯ அபகரிக்கப்படுங்கால் அவள் அமராது ஆயுதமாவாள், அபகரித்தவுடன் அவள் உனது—தோல்வியாவாள். ௩௦ அவள் பிடிக்கப்படுங்கால் உனது கேடு போலாவாள். பிடிக்கப்பட்டவுடன் கொடுமையாவாள். ௩௧ சூடாக்குங்கால் அவள் உனக்கு விஷமாவாள்: சூடானவுடன் சுரமாவாள். ௩௨ பக்குவமாகுங்கால் பீடையாவாள்: பக்குவமானவுடன் பாழுங்

கனவாவாள். ௩௩ தூரத்தப்படுங்கால் வேரோடு பிடுங்குபவளாவாள்: தூரத்தியவுடன் மிருத்யுயாவாள். ௩௪ கந்தத்தால் கலகஞ் செய்பவளாவாள்; பிடிக்கப்படுங்கால் துன்பமாவாள்; பிடிபட்டவுடன் விஷப் பாம்பாவாள். ௩௫ பரிமாறுங்கால் பொருளின்மையாவாள்; பரிமாறியவுடன் உனது பாழாவாள். ௩௬ துண்டமாக்கப்படுங்கால் கோபமான சர்வமாவாள். துண்டமானவுடன் சிமிதையாவாள். ௩௭ புசிக்கப்பட்டவுடன் கேடாவாள். புசித்தவுடன் அவள்—உனது—நிர்ருதியாவாள். ௩௮ இவ்வுலகத்தினின்றும் அவ்வுலகத்தினின்றும் அவளைப் புசிக்கும்பிராமணனழிப்பவளை பிராமணனது பசு பிரித்துவிடும். ௩௯ அவளைக் கொல்வது கடுஞ்செயல், அவளை வெட்டுவது வச்சிராயுதம் போலாகும். அவள் குடலிலுள்ளவை, இரகசியப் பிரயோகமாகும். ௪௦ மறைக்கப்படுங்கால் அவள் மனையற்றவள். ௪௧ பிராமண பசு மாமிசம் புசிக்கும் அக்கினியாகி பிராமணனது காதகனிலே நுழைந்து அவனைப் புசிப்பாள். ௪௨ அவள் அவனது அங்கங்களையும் சந்திகளையும் மூலங்களையும் வெட்டிவிடுவாள். ௪௩ அவள் அவனது பிதுருக்களைத் துண்டித்துவிடுவாள்: அவனது அன்னையின் வழியையும் அறுத்துவிடுவாள். ௪௪ க்ஷத்திரியனால் திருப்பியளிக்கப்படாவிட்டால் பிராமணனது பசு, பிரம்மத்துவேஷியின் பந்துக்களையும் அவர்களது எல்லா மனைகளையும், எரித்துவிடுவாள். ௪௫ அவள் அவனை மனையற்று வீடற்று சந்ததியற்றுச்செய்து விடுவாள்: அவன் மக்கட்பேறு இல்லாதவனாவான்; அவன் அழிந்து விடுவான். ௪௬ இங்ஙனமறியும் பிராமணனுடையப் பசுவை தனக்கே பற்றிக்கொள்ளும் க்ஷத்திரியனும் இக்கதியையே—யடைவான். ௪௭ அவன் கொல்லப்பட்டவுடன் வேகமாய்க் கழுகுகள் ஓலமிடும்;

சஅ துரிதமாய் அவன் எரியும் நிலத்திலே கடுஞ்சத்தஞ் செய்து, கையால் மார்புதட்டி அவிழ்ந்த கேசமுடன் ஸ்திரீகள் ஆடுவார்கள். சகூ அவனது மனைகளிலே துரிதமாய் ஓநாய்கள் ஓங்கும்; ருo சடிதியிலே அவனைப்பற்றி அவர்கள் சொல்வதாவது—இதென்ன? இங்கு என்ன நடந்தது. ருக அவனைத் தறி, அவனைத் துணி, அவனைத்துமி, அவனை எரி, அவனை சாம்பலாக்கு. ருஉ அங்கிரஸனது பெண்ணே! பசுவைத் தனக்கே வைத்துக்கொள்ளும் பிராமண காதகனை யழித்துவிடு. ருங ஏனெனில் நீ வைசுவ தேவி. கடுஞ் செயல் மறைந்துள்ள குல்பஜமாவாய். ருச எரிந்து விழுங்கும் பிராமணனது வச்சிராயுதமாவாய். ருரு கூரிய கூரான காலனாகி நீ தொடர்ந்து ஓடு. ருசு நீ உனக்கே பிராமண காதகர்களின் புகழையும் அவர்களது யக்ஞத்தையும் அளிப்பையும் அவர்களது ஆசைகளையும் பறித்துக்கொள்கிறாய். ருஎ இம்சை செய்பவனது இம்சையைப்பற்றி அவனுக்கு அவ்வுலகத்திலே அதனையே யளிக்கின்றாய். ருஅ இம்சையாகாதவளே! பிராமணனுக்கு பழிச்சொல்லினின்று—நீங்க—நீ வழி செய். ருகூ நீ ஆயுதமாகவும், நீ சரமாகவும், கேட்டினின்று கடும் விஷமாகவும். கூo கருமியாயும் தேவதூஷகனாயும் துன்பஞ் செய்பவனுமான பிராமணனழிப்பவனது சிரத்தை—இம்சையாகாதவளே! துணித்துவிடு. கூக உன்னால் அடிக்கப்பட்ட அழிக்கப்பட்ட அதமனை அக்கினி எரித்துவிடுவானாக. கூஉ நீ அரி, நீ அரித்திடு நீ பகுத்திடு, நீ எரி, நீ எரித்துவிடு, நீ சாம்பலாக்கு. கூங இன்னலாகாத தேவியே! பிராமண காதகனை நீ மூலத்தினின்று எங்கும் மெரித்துவிடு. கூச அவன் யம நிலயத்தினின்று கொடும் உலகங்களுக்கு தூரஞ்செல்ல—நீ அவனைத் தகித்துவிடு.

கூ௫ இன்னலாகாத தேவியே கருமியாயும் தேவதூஷணனுயும் துன்பஞ் செய்பனுமான பிரம காதகனையும் அங்ஙனமே செய்து விடு. கூகூ கூரியதாயும் கடுங் கூருடன் நூறு சந்திகளுள்ள வச்சிராயுதத்தாலே கூஎ அவனது சிரத்தையும் தோள் எலும்பையும் துணித்துவிடு. கூஅ அவனது ரோமங்களை அரி, அவனது சர்மத்தை உறித்துவிடு. கூகூ அவனது மாமிசத்தைத் துண்டந் துண்டங்களாக்கு, அவனது தசைகளைத் தறித்துவிடு. எ0 அவனது என்புகளை நொறுக்கு அவனது மச்சையையழி. எக அவனது அங்கங்களையும் சந்திகளையும் சேதி. எஉ மாமிசம் புசிக்கும் அக்கினி அவனைப் புவியினின்று நீக்குவானுக, அவனை எரித்துவிடுவானுக, விரிந்த விசாலமான வானத்தினின்று வாயு அவனை எரிப்பானுக. எங சோதியினின்று சூரியன் அவனைத் தள்ளி அவனைச் சுட்டுவிடுவானுக. [கஉ. ௫. க—எங.]

கஉ-வது காண்டம் முற்றிற்று.

## சஎகூ—சஅஉ

சஎகூ. உரோஹிதன்—[பிரமன்—உரோஹிதன் ஆதித்தியன்]

க. வலிமையுள்ளவனே! எழுந்திரு. சலங்களினகத்திலேயுள்ள நீ இனிமை விளங்கும் இந்த இராஷ்டிரத்திலே நுழை. இந்த விசுவத்தை சனனஞ்செய்த ரோஹிதன், இராஷ்டிரத்துக்கு நன்கு போஷிக்கப்படும் உன்னைச் சுமப்பானுக. உ சலங்களின் அகத்திலேயுள்ள சக்தி

சஎஅ கருத்து—பசுவென்னும் ஞானத்தை அறிவென்னும் பிராமணனின்று பிரிக்கலாகாது.

எழுந்துள்ளான். உனது மூலத்தினின்று தோன்றும் சனங்களின் நிமித்தம் நீ ஏறு; சோமனையும் சலங்களையும், ஓஷதிகளைம் பசுக்களையுந் தரித்து, இருகால் நான்கு கால்—பிராணிகளை—இங்கு நுழையச்செய். ௩ சுந்தரத் தாயின் மக்களான மருத்துக்களே! உக்கிரமான நீங்கள் இந்திரன் என்னும் நண்பனோடு எதிரிகளை யழியுங்கள்; நல்ல தானர்களே! இனிமைகளை இசைந்து சுவைக்கும் மூவ்வேழான மருத்துக்களே! உரோஹிதன் உங்களைச் செவியுறுவான். ச ரோஹிதன் ஏறியுள்ளான். ஏற்றங்களில் ஏறியுள்ளான்: அவன் மனைவிகளின் கருவாவான், சனனங்களின் மூலத்தில் ஏறியுள்ளான். அவற்றால் விசாலங்களைக் கண்டுள்ளான்: அவன் வழியை முன்னதாகவே பார்த்து இங்கு இராஷ்டிரத்தைக் கொண்டுவந்துள்ளான்: ரு உரோகிதன் உனது இராஷ்டிரத்தை இங்கு கொண்டு வந்துள்ளான்: சத்துருக்களைச் சிதறடித்துள்ளான். உனக்கு அச்சமின்மை—வந்து—விட்டது. உனக்கு சோதியும் புவியும் ரேவதிகளோடு, சக்வரிகளுடன் உனது விருப்பத்தை இங்கு கறந்திடுக. ௬ ரோஹிதன் சோதியையும் சகத்தையுஞ் சனனஞ் செய்தான். அங்கு பரமேஷ்டி இழையை இழுத்தான். அங்கு ஒரு காலுள்ள அஜன் சாய்ந்துள்ளான்: அவன் பலத்தால் சோதியையும் புவியையும் திறஞ்செய்தான். எ உரோஹிதன் சோதியையும் புவியையும் திடஞ்செய்தான். சுவர்க்கம் அவனால் நிலையாயிற்று, அவனால் சுவர்க்கமு வானமும் வெளிகளும் அளிக்கப்பட்டன. அவனால் அமரர்கள் அமுதத்தைக் கண்டு பிடித்தார்கள். அ உரோஹிதன் தனக்கே முன் உச்சிகளையும் ஏற்றங்களையும் குவித்துக்கொண்டுவிசுவரூபத்தை ஆராய்ந்தான். அதி மேன்மையோடு அவன் சோதியேறி, தேனாலும் நெய்யாலும்,

உனது இராஷ்டிரத்தை நனைப்பானாக. கூ நீ எந்த ஏற்றங்களாலே மூன் ஏற்றங்களாலே ஏந்தல்களாலே சோதியையும் வானத்தையும் நிரப்புகிறாயோ, அவற்றின் பாலோடு பிரமத்துடன் பெருகி சிகப்பனது இராஷ்டிரத்திலே சனங்களிலே நீ விழித்தவனாயிரு. க0 தவத்தினாலே உனது எந்த சனங்கள் இங்கு வந்துள்ளார்களோ, அவர்கள் இங்கு குழந்தையையும் காயத்திரியையும் யனுசரித்துள்ளார்கள். அவர்கள் மங்களகரமான மனத்தோடு நுழைவார்களாக. செங்காளை அவனது அன்னையுடன் இங்கு வருவானாக. கக இளைஞனும் கவியுமான ரோஹிதன் விசுவரூபங்களைச் சனனஞ் செய்பவனாய், அதிநாகத்திலே திரமாயுள்ளான்; தபனன் அதிசோதியோடு பிரகாசிக்கிறான்; அவன் மூன்றாவது லகத்திலே பிரியமானவற்றைச் செய்துள்ளான். கஉ ஆயிரங் கொம்புக் காளையான ஜாதவேதசன் நெய்யாஹுதமாகி ஸோமபுறமுள்ளவன்: சுவீரர்களுடனாகுமவன் என்னை விட்டுவிடாமாலாவானாக; இரங்கும் நானும் உன்னை விட்டு நீங்காமலாவேனாக: பசுச்செல்வத்தையும் வீரர்களின் வளத்தையும் எனக்கு நீ யளி. கந உரோஹிதன் யக்ஞத்தை சனனஞ்செய்வான்: அதன் முகமாவான்; நான், சிகப்பனுக்குச் சொல்லால், செவியால் மனத்தால் ஆஹுதி செய்கிறேன்; தேவர்கள் ரோஹிதனுக்கு, சுமனத்துடன் செல்லுகிறார்கள்; அவன் என்னை சேரு மிசைகளுடன் உச்சம் செய்வானாக. கச உரோஹிதன் யக்ஞத்தை விசுவகருமனுக்காக வரிசை செய்தான்: அவனிடமிருந்தே இந்த எல்லாத் தேசசுகள் எனக்கு வந்துள்ளன. புவனத்தின் பலத்திலே நான் உனது நாபியைச் சொல்லுகிறேன். கரு ஜாதவேதசனே! உனக்கு பிருஹதீயும் பங்க்தியும் ககுப்பும் உரத்தோடு ஏறியுள்ளன; உனக்கு உஷ்ணீயமும் வஷட்கார

மும் ஓங்கியுள்ளன. உன்னில் உரோஹிதன் இரேதசுடன் ஏறியுள்ளான். கக இவன் புவியின் கருவைக் கவருகிருன்; இவன் சோதியையும் வானத்தையு மணிகிருன்; செக்கனது உச்சியின் சுவர்க்கத்தில் சகங்களில் இவன் உட்புகுந்துள்ளான். கஎ வாசஸ்பதியே! எங்களுக்கு வையம் இனிமையுடனுகுக; மூலமும் சயனமும் சுகமளிப்பவையாகுக; இப்போது இங்கு பிராணன் எங்களது நட்பாகுக. பரமேஷ்டியே! உன்னை இங்கு அக்கினி வயத்துடன் ஆயுசோடு சூழ்க. கஅ வாசஸ்பதியே! விசுவகர்மனது செயலாகத்—தோன்றிய ஐந்து ருதுக்கள் எங்களதாக வேண்டும்; இப்போது இங்கு பிராணன் எங்களது நட்பாகுக; பரமேஷ்டியே; உன்னை இங்கு அக்கினி பலத்துடன் ஆயுசோடு சூழ்க. ககூ பிரஹஸ்பதியே! நல்வினைவையும் மனத்தையு—முண்டாக்கு; எங்களுடைய கோஷ்டத்திலே பசுக்களை சனனஞ்செய். எங்களது மூலங்களிலே பிரசைகளைப்—புலனக்கு: எங்கள் நட்பிலே இங்கு இப்போது பிராணனுகுக: பரமேஷ்டியே! இங்கு உன்னை, வயத்தோடு ஆயுஸோடு நான் சூழ்கிறேன். உO ஸவிதாவும் அக்கினி தேவனும் உன்னை திடத்துடன் சூழ்வார்களாக. திறத்தோடு மித்திரனும் வருணனும் உன்னை அலங்கரிப்பார்களாக. எல்லாக் கருமிகளை மிதித்துக்கொண்டு நீ இங்கு வா; நீ இந்த இராஷ்டிரத்தை இனிமை மிக்கச் செய்துள்ளாய். உக உரோஹிதனே! சுந்தரமான குதிரைகளால் இரதத்திலே இழுக்கப்படும் நீ சுபத்துடன் சலங்களை பெருகச் செய்து செல்லுகிருய். உஉ உரோஹிணி உரோஹிதனின் விரதமநுசரிப்பவள். அவள் பண்டிதை; நல்ல நிறமுள்ளவள், அதி வலிமையுள்ளவள்; நாங்கள் அவளால் விசுவரூபமான வயங்களை ஜயிப்போம்; அவளால் சமர்

புரியும் அனைவரையுஞ் ஜயிப்போம். உங உரோஹிதனது உரோஹிணியின் ஸ்தானமே இது; சுந்தரி செல்லும் வழி அதுதான்: கந்தர்வர்களும் கசியபர்களும் அவனை ஏற்றிச்செல்லுகிறார்கள்; கவிகள் அவனை ஆலஸ்யமில்லாமல் ஆதரிக்கிறார்கள். உச பானுவின் பிரகாசமான பொன்மயமான அமுத புரவிகள் சதா சுகஞ் செல்லும் இரதத்தை இழுக்கின்றன: நெய் பருகும் செங்கதிரோன், சோதி வீசும் தேவன், சுந்தரமான சோதியிலே நுழைந்தான். உரு உரோஹிதனும், கூறிய கொம்புள்ளவனும் விருஷபனும் சோதியையும் புவியையும் தனிமையாய் நிறுத்தி அக்கினியைச் சூழும் சூரியனும், அவனிடமிருந்தே, தேவர்கள் சிருட்டிகளைச் செய்கிறார்கள். உசு மேலான சமுத்திரத்தினின்றும் உரோஹிதன் சோதியில் ஏறினான்; செக்கன் எல்லா உச்சிகளிலும் ஏறியுள்ளான். உஎ பால் அளிப்பவளும் நெய் சிந்துபவளுமான பசுவை நீ அள: இவள் தேவர்களின் தடுமாற்றமில்லாத தேனு: இந்திரன் சோமனைப் பருகுவானாக: அங்கு க்ஷேமமாகுக: அக்கினி துதிக்க ஆரம்பிப்பானாக: நீ எதிரிகளைத் தூரமாக்கு. உஅ எழுச்சியான அக்கினி எழுச்சியாகும் அவன் நெய்யால் வளர்ந்து, கிருதத்தால் ஆஹூதமாகி, வென்று, எல்லாம் வெல்லும் அனலாம் அவன் எனது ஒற்றார்களை எரிப்பானாக. உகூ எங்களைச் சமர் செய்யுஞ் சத்துருவை அவன் எரிப்பானாக அரிப்பானாக: எங்களது எதிரிகளை மாமிசம் புசிக்கும் அக்கினியால் நாங்கள் சுட்டு விடுகிறோம். ௩o இந்திரனே! கைகளுள்ள நீ வச்சிராயுதத்தால் அவர்களைக் கீழே சாய். அக்கினியின் தேஜசால் நான் பகைவர்களை எனக்கே பற்றி யுள்ளேன். ௩க அக்கினியே! எங்களுடைய பற்றார்களை எங்கள் கீழே விழச்செய்: பிரஹஸ்

பதியே! கலகஞ் செய்பவனை கலக்கிவிடு: இந்திராக்கினியே மித்திரவருணனே; அவர்கள் கோபத்திலே பயனற்று கீழே சாய்வார்களாக, கஉ தேவனான சூரியனே! உதயமாகுங்கால் எனது ஒல்லார்களை ஒழித்துவிடு: ஆயுதத்தால் அவர்களைக் கீழே சாய், ஆழ்ந்த அந்தகாரத்திலே அவர்கள் செல்வார்களாக. கங விராஜனது கன்று, துதிகளது விருஷபன், வானன் வெண்முதுகன் ஏறியுள்ளான்: நெய்யால் கன்றுக்கு அவர்கள் கானத்தை கானஞ்செய்கிறார்கள் அவன் பிரமனாகையால் அவர்கள் பிராமணத்தால் வளர்க்கிறார்கள். கச நீ சுவர்க்கத்துக்கு ஏறு! புவிக்கும் ஏறு! இராஷ்டிரத்துக்கும் செல்வத்துக்கும் ஏறு! பிரசைகளுக்கும் ஏறு! அமுதத்துக்கும் ஏறு: நீ உரோகிதனுடன் உனது——காயத்தைச்——ஏற்றிவிடு. கரு சூரியனைச் சூழச் செல்லும் இராஷ்டிரம் வகிக்குந் தேவர்களுடன் இசைந்து, சிகப்பன், நல் மனமுள்ளவனாகி உனக்கு இராஷ்டிரத்தை யளிப்பானாக. கசு பிரம்மத்தால் புனிதமாகி யக்ஞங்கள் உன்னைச் சுமக்கின்றன: வழி கடக்கும் பொன் மயமான குதிரைகள்——உன்னை இழுக்கின்றன; சலதி, சலநிதிக்கப்பாலும் நீ ஒளி வீசுகிறாய். கஎ எவனது சனனங்கள் ஆயிரமும் ஏழுமாகி, எவன் செல்வஞ் ஜயிப்பவனும், பசு ஜயிப்பவனும் பொருள் சயிப்பவனுமாயுள்ளானோ அந்த சிகப்பனிலே சுவர்க்கமும் சகமும் ஸ்தாபனமாயுள்ளன. புவனத்தின் மேன்மையிலே உனது நாபியை நான் சொல்லலாமோ. கஅ திசைகள் பிரதிசைகளுக்கு நீ புகழுடன் செல்லுகிறாய்: சனங்கள் பசுக்களின் நடுவே, நீ புகழுள்ளவன். அதிதியின் அகிலத்தின் மூலத்திலே புகழுள்ளவனாகி, சவிதாவைப்போல் நான் சுந்தரனாக வேண்டும். கக நீ தூரத்திலின்றே நீ இங்கு இதனை யறிகிறாய்:

நீ இப்பக்கத்திலிருந்து கொண்டு நீ அங்குள்ள வையைப் பார்க்கிறாய்; அவர்கள் சோதியிலே அதியறிஞ னை சூரியனை ஒளி வீசும் வெளியை இப்பக்கத்தினின் றும் பார்க்கிறார்கள். ௯0 தேவனான நீ தேவர்களைத் துன்பஞ் செய்கிறாய்: சமுத்திரத்தின் நடுவே நீ சலன மாகிறாய்; அவர்கள் சமான அக்கினியை மூட்டுகிறார்கள். பெரிய கவிகள் அவனை யறிகிறார்கள். ௯க பரத்துக்குக் கீழே இந்த கீழுக்கு மேலாக அவளது காலால் கன்றைச் சுமந்து பசு நின்றுள்ளாள்; எங்கு எத்திசைக்கு அவள் சென்றுள்ளாள்? அவள் எங்கு சனனஞ் செய்கிறாள்? ஏனெனில் அவள்—இங்கு இக்கூட்டத்திலே—சனனஞ் செய்யவில்லை. ௯உ அவள் ஒரு பாதம் இரு பாதம் நான்கு பாதங்களுள்ளவள்: அவள் எண் பாதம் நவ பாதம் ஆயிர மட்சரம் புவனத்தின் பங்க்தியாயுள்ளாள். அவளிடமிருந்தே சலநிதிகளெல்லாம் பாய்கின்றன. ௯௩ சோதியில் ஏறும் அமிருதமான நீ, என் மொழி களைப் பாலனஞ்செய்: பிரமத்தால் புனிதமாகி யக்ஞங் கள் உன்னை உயரச் சுமக்கின்றன. பொன் மயமான புரவிகள் உன்னை இழுக்கின்றன. ௯௪ மரணரஹிதனே! நான் உனது இதனையும், உனது சோதியின் சலனத்தை யும் பரமநிலயத்திலே உனது வாசஸ்தானத்தையும் அறி கிறேன். ௯௫ சூரியன் சோதியையும் சூரியன் புவியை யும் சூரியன் சலங்களையும் ஊடுருவிப் பார்க்கிறான், எல்லா பொருள்களின் ஒரே கண்ணான கதிரவன், மேலான சோதியில் ஏறியுள்ளான். ௯௬ விசால வெளிகள் அவ னது ஆவரணங்களாகும். யக்ஞ வேதியாக புவி உருவமா யிற்று: அங்கு ரோஹிதன் சூடும் சீதமுமான இவ்விரண்டு அனல்களை ஸ்தாபனஞ் செய்தான். ௯௭ சீதத்தையும் சூட்டையும் ஸ்தாபனஞ் செய்து, மலைகளை யக்ஞத்தின்

ரூபங்களாக்கி, சோதி காணும் சிகப்பனது இரண்டு அனல் கள் மழையென்னும் நெய்யுடன் யக்ஞத்தைசெய்தார்கள். சஅ சோதிகாணும் ரோஹி தாக்கினி பிரம்மத்தால் மூட் டப்படுகிறான் : அவனிடமிருந்து சூடு, அவனிடமிருந்து சீதம், அவனிடமிருந்து யக்ஞம் தோன்றிற்று. சகூ இரண்டு அனல்களும் பிரம்மத்தால் வளர்ந்து பிரம்மத்தால் ஓங்குகின்றன. பிரம்மத்தால் ஆகுத மாகும் : பிரம்மத்தால் எழுச்சியாகி சோதிகாணும் சிகப்பனது இரு அனல்கள் யக்ஞத்தைச் செய்தன. ருo ஒன்று சத்தியத்திலே நன்கு வைக்கப்பட்டுள்ளது. வேறு சலங்களின் நடுவே மூட்டப்பட்டுள்ளது : பிரம்மத்தால் உதயமாகி சோதி காணும் சிகப்பனுடைய இரு அனல் கள் யக்ஞத்தைச் செய்தன. ருக காற்றால் அலங்கார மாகும் — ஒரு—அனலும், — இந்திர—பிரமண ஸ்பதி யாகும்—ஒன்றும் பிரமத்தால்................செய்தன. ருஉ ரோஹிதன் புவியை வேதியாகச் செய்து, சோதியைத் தட்சிணையாகவும் அப்பால் சூட்டை அனலாகவும் செய்து, மழை என்னும் நெய்யோடு ஆத்மாவோடான, சகத்தை எல்லாஞ் செய்தான். ருங மழை நெய்யாகவும் சூடு அனலாகவும் புவி வேதியாகவும் சித்தமாயிற்று ; அங்கு அக்கினி, மலைகளை யெல்லாம் உச்சியிலே கானங் களால் உருவஞ் செய்தான். ருச கானங்களால் அவற்றை சித்தஞ்செய்து இருப்பதும் இருக்கப்போவதுமான இந்த அனைத்தும் உன்னில் சனனமாகுக என ரோஹிதன் புவிக்குச் சொன்னான். ருரு அப்போது இம்மை மறுமை கள் எனப்படும் முதல் யக்ஞம் தோன்றிற்று : அதனிட மிருந்து இவ்வனைத்தும் இங்கு ஒளி வீசும் சர்வமும், ரோஹிதன் என்னும் ரிஷியால் கொண்டு வரப்பட்டுக் குணமாயிற்று. ருசூ பசுவை காலால் உதைத்து, சூரி

யனின் எதிரில் நீர் விடும் உன்னை நான் மூலத்தோடு அறுத்துவிடுகிறேன்; இனி புவியிலே உனது நிழல் விழாது. ருஎ நீ என் பக்கஞ் சென்று என்மேல் உனது நிழல் விழுந்தாலும் எனக்கும் அனுக்கும் நடுவிலானு லும் நான் உனது மூலத்தை நீக்குகிறேன்: இனி புவி யிலே உனது நிழல் விழாது. ருஅ தேவ சூரியனே! இன்று உனது எனது நடுவே எவன் செல்லுகிறனோ அவ னில் நாங்கள், குற்றத்தை, கஷ்டத்தை கெட்ட கனவை துடைத்து விடுகிறோம். ருகூ இந்திரனே! நாங்கள் உனது வழியினின்றும், ஸோமனோடு யக்ஞத்தினின்றும் செல்லாமலாகவேண்டும்: கருமிகள் நமதுநடுவே நிற்காம லாவார்களாக. சுO தேவர்களுக்குச்—செல்ல—எந்த இழை—தெளிவாய் விசாலஞ் செய்யப்பட்டுள்ளதோ அந்த யக்ஞம் பூர்த்தி செய்யும் இழையை நாங்கள் அடைவோமாக. [கங., க. க—சுO.]

சஅO சூரியன் [பிரம்மன்—அத்யாத்மன், ரோஹிதாத்தியன்]

க ஆதித்தியனது, நரர் காண்பவனது மேலான விரத னது பிரகாசமான ஒளி வீசும் காந்திகள் சோதியிலே உதயமாகின்றன. உ அறியும் திசைகளோடு சோதியுடன் ஒளி வீசுபவனே, சுபக்கனுகிச் சமுத்திரத்தில் துரி தமாய்ப் பறப்பவனே, எல்லாத் திசைகளிலும் தனது கிரணங்களால் விளங்கும் புவன கோபனை சூரியனை, நாங்கள் துதிசெய்கிறோம். ங நானாரூபமான இரு தினங்களை[1] மாயையால் செய்பவனாய் உனது சக்தி யாலே பூருவமும் பச்சிமமும் துரிதமாய்ப் போகிறாய்: ஆதித்தியனே! அதுதான்மேலானது: அதுதான் உனது

1 இரவு—பகலை.

சஎக கருத்து—சீவர்களுக்கு உயிர் அளிப்பவன் ரோஹிதன்.

பெரிய புகழ்ச்சி : நீ ஒருவனே புவியெங்கும் புலனுகிறாய். ச அறிஞனும், தாண்டுபவனும் சோதி வீசுபவனும் பலமுள்ள ஏழு பொன் குதிரைகளால் இழுக்கப்படுவனு மாயும் சலத்தினின்றும் அத்திரியால் சோதிக்குச் செலுத் தப்படுவனுமான உன்னை இங்கு—மானிடர்கள்—பந்த யத்தில் சலனமாவதைப் பார்க்கிறார்கள். ரு உனது நோக்கத்திலே நீ சுற்றிச் செல்லுங்கால், அவர்கள் உன் னைத் துன்பஞ் செய்யாமலாவார்களாக: சூரியனே! இரவையும் பகலையும் அளந்து கொண்டு நீ சோதிக்கும் தேவியான புவிக்குஞ் செல்லுங்கால், இன்பமாய் துன்பங் களையெல்லாம் துரிதமாய்க் கடந்து செல். சு சூரியனே! மேலான வலிமையுடன் உனது மஞ்சள் அசுவங்களான நூறு புரவிகள் அல்லது ஏழு, வெகுபல பரிகள் இழுக்கும் உனது இரதத்துக்கு எதன் சலனத்தினுலே நீ துரிதமாய் இரு எல்லைகளுக்கும் செல்லுகிறாயோ அந்த இரதத்துக் குச் சுவஸ்தியாகுக. எ சூரியனே! மேலான வலிமை யுடன் உனது மஞ்சள் மய அசுவங்களான நூறு புரவிகள் அல்லது ஏழு வெகுபல பரிகள் இழுக்கும் இரதத்திலே, சுகஞ் சென்று, ஒளி மிகுந்து இனிமையாய் இணையில்லாத் துரகங்களோடு திடமாயுள்ள உனது இரதத்திலே ஏறு. அ ஆதித்தன் அவனுடைய இரதத்திலே, அவன் செல்வ தற்காக, அவனது மஞ்சள் சரும பொன்மயமான புரவி களை இணைத்துள்ளான் : துலங்குமவன் தூரத்திலே இருள் தளர்ந்துள்ளான் : களத்தை நீக்கி தேவன் காந்தியிலே ஏறி யுள்ளான். கூ தேவன் பெரிய துவசத்துடன் உயரத்தில் ஏறியுள்ளான். அவன் இருளையெல்லாம் கழித்துள்ளான், அவன் சோதியை ஏற்றியுள்ளான், அதிதி மகனும் திவ்ய சுபர்ணனை அவன் விசுவமான புவனங்களிலே விரிந்து பார்த்துள்ளான். கO நீ உதயமாகி உனது வாள்களை

விரிந்து வீசுகிறாய்: நீ விசுவ ரூபங்களோடு உன்னை வனைப்புச் செய்து கொள்கிறாய். நீ எல்லா உலகங்களையுஞ் சூழ்ந்து ஒளி வீசி, இரு கடல்களையும் உனது பலத்தால் பிரகாசஞ் செய்கிறாய். கக மாயையால் அவர்கள் ஒருவர் பின் ஒருவர் போகிறார்கள். விளையாடும் இரு பாலர்கள் கடலைச் சுற்றுகிறார்கள்: எல்லாப் பொருள்களினும் ஒருவன் பரந்து பார்க்கிறான். மற்றவனை,பொன் சக்கரங்களோடு பொன் குதிரைகள் இழுக்கின்றன. கஉ சூரியனே அத்திரி மாதத்தைச் செய்ய உன்னை சோதியிலே தரித்தான்· நீ சூடு செய்பவனாயும், நிகழும் எல்லாப் பொருள்களையும் பார்ப்பவனாயும் திட திரனாகியும் செல்லுகிறாய். கங இணையும் இரு தாய்களுக்குக் கன்றைப்போல், நீ இரு வரம்புகளுக்கும் பாய்ந்தோடுகிறாய்: நிச்சயமாகவே அங்குள்ள தேவர்கள் அந்த பிரம்மத்தை ஆதியிலேயே அறிந்துள்ளார்கள். கச சூரியன் சமுத்திரத்திலே சாய்ந்துள்ளதையெல்லாம் பற்ற விரும்புகிறான்: கீழ்த்திசையும் மேற்றிசையுமான அவனது பாதை பெரிதும் பரந்துள்ளது. கரு அவன் அவனது துரிதத்தால் ஒன்றைப் பூரணமாய் பற்றுகிறான். அதனை விட்டுவிட அவன் விரும்புவதில்லை. அதனால் தேவர்களுடைய பானத்தை அவன் தடுப்பதில்லை. கசு இந்த திவ்யமான ஜாதவேதசனை, ஒவ்வொருவனும், சூரியனை—அவனைக் காண, துவசங்கள் உயரச் சுமந்து செல்லுகின்றன. கஎ இந்த நட்சத்திரங்கள் எல்லாம் தங்கள் நிலவுகளோடு திருடர்களைப் போல, விசுவங்காணும் சூரியனுக்குச் செல்லுகின்றன. கஅ இலங்கும் சுடர்களைப்போல் சனங்களிலே அவனது வாள்களும் வெயில்களும் விரிந்து விளங்குகின்றன. கசு சூரியனே! நீ துரிதன், அனைவர்க்குந் துலங்குபவன்; நீ சோதி செய்பவன்; சுடர் சொரூபனே!

நீ ஒவ்வொன்றின் மீதும் ஒளி வீசுகிறாய். ௨0 தேவ
சனங்களின் பூர்வத்திலே நீ உதயமாகிறாய்: மனி
தர்களின் பூர்வத்தில் நீ உச்சமாகிறாய்: சோதியைக்
காண ஒவ்வொருவர் முன்புறமும் நீ ஏற்றமாகிறாய்.
௨௧ புனிதஞ் செய்யும் வருணனே! மனிதர்களில் துரித
மாகும் அவனை—திவ்யனை—(எக்கண்ணால்) காண்கிறா
யோ—அக்கண்ணால் என்னை காண். ௨௨ சூரியனே!
நீ சீவர்களையெல்லாம் காண்பவனாய், உனது வெயில்
களாலே தினத்தை உருவஞ்செய்பவனாய் விரிந்த வானத்
தையும் சோதியையும்—கடந்து செல்லுகிறாய். ௨௩ தேவ
னான சூரியனே! சுடர்கேசனாய் சூட்சமக் கண்ணுள்ள
உன்னை இரதத்தில் ஏழு மஞ்சள்மயக் குதிரைகள் இழுக்
கின்றன. ௨௪ சூரியன் இரதத்தின் பெண்களான
ஏழு சுந்தரிகளை இணைத்துள்ளான்: தாங்களே சேர்ந்து
கொள்ளும் அவர்களுடன் அவன் சலனமாகிறான்.
௨௫ தபஸ்வியான ரோஹிதன் தவத்தாலே சோதி ஏறி
யுள்ளான்: அவனே சனன மூலத்துக்கு வருகிறான்;
அவனே மறுபடியும் சனனமாகிறான், அவனே தேவர்
களுக்கு அதிபதியாகியுள்ளான். ௨௬ எல்லா சனங்
களுக்கு மாகுமவன், எல்லாப் பக்கங்களிலும் முகமுள்ள
அவன், எல்லாப் பக்கங்களிலும் கைகளும் புஜங்களு
முள்ள அவன் ஏகதேவனான அவன் சோதியையும் புவி
யையுஞ் சனனஞ் செய்பவனாய் தனது பக்கங்களுடன்
பொருந்தி இருகரங்களால்—அனைத்தையுங் கொண்டு வரு
கிறான். ௨௭ ஒரு பாதமுள்ளவன் இரு பாதமுள்ளவனை
விட அதிகமாய்ச் சலனமாகிறான்: மூன்று பாதமுள்ளவனை
இருபாதமுள்ளவன் பின்புறத்தினின்றும் ஆக்கிரமித்து
விடுகிறான்: ஆறு பாதமுள்ளவனைவிட இரு பாதமுள்ள
வன் அதிகங் கடந்தான்: அவர்கள் ஒரு பாதமுள்ள

வனைச் சுற்றி ஒன்று சேர்ந்து உட்காருகிறார்கள். ௨௮
களைப்புற்றாறுங்கால் அவன் விருப்பம்போல் தனது மஞ்சள்
வாசிகளை அணுகியுள்ளான்: ஒளி வீசும் அவன் தனக்கே
இரு உருவங்களைச் செய்து கொள்ளுகிறான்; ஆதித்
தியனே! ஒளிமிகுந்து உதயமாகி, இருள் வெளிகளையெல்
லாஞ் ஜயித்து எல்லா விரிவுகளையும் நீ விளங்கச் செய்
கிறாய். ௨௯ சூரியனே! நீ நிச்சயமாகப் பெரியவன்:
ஆதித்தியனே நிச்சயமாக நீ பெரியவன்: பெரியவனான
உனது பெருமை பெரிது; ஆதித்தியனே! நீ பெரியவன்.
௩௦ நீ சோதியிலே இலங்குகிறாய்; நீ வானத்திலே விளங்
குகிறாய்; பறப்பவனே! நீ புவியிலே வயங்குகிறாய்! நீ
சலங்களின் உள்ளே ஒளி வீசுகிறாய், இரு கடற்களிலும்
உனது காந்தியால் நீ ஊடுருவிப் பாய்ந்துள்ளாய்; தேவ
னான தேவனே! நீ சுவர்க்கஞ் ஜயிக்கும் மகிஷன்.
௩௧ தூரத்தினின்று இங்கு வரும் அவன், நடுவழியில்
விரிந்து விசையுள்ள அவன் பேரறிஞனாய் பறக்கும் அதி
வேகனாயுள்ள அவன், விஷ்ணு—வாக—விளங்கும் அவன்
வலிமையிலோங்கும் அவன், சலனமாவதை யெல்லாம்
சோதியால் ஜயிக்கிறான். ௩௨ அவன் அதிசயன், அறி
ஞன், மகிஷன், சுபர்ணன் வானத்தையும் இருவொளிகளை
யும் ஒளி வீசச்செய்கிறான்: இரவும் பகலும் சூரியனால்
தங்களை அணிந்துகொண்டு அவனுடைய வீறுகளையெல்
லாம் விசாலஞ் செய்கிறார்கள். ௩௩ கூர் உள்ளவன்
கிரணம் வீசி காயங்கூர்மையாகி காப்பளிப்பவனாய் முன்
செல்லுகிறான்: பிரகாசம்பொங்கும் பக்கமுள்ள பலமளிக்
கும் மகிஷன் ஒழுங்குசெய்பவனாய் எல்லாத் திசைகளையும்
அணுகியுள்ளான். ௩௪ அதிசய பூருவன் தேவர்களு
டைய பிரகாசன்; சோதிமிகும் சூரியன் தினஞ்செய்யுங்
காந்தன், எல்லாத் திசைகளிலும் ஓங்கிச்சென்று எல்லா

களங்களையும் கட்டங்களையும், நகைகளால் ஜயித்துள்ளான். ௩௫ அக்கினியினது, வருணனது மித்திரனது கண்ணான தேவர்களுடைய அதிசய பூருவன் உதயமாகியுள்ளான். அவன் சோதியையும் வானத்தையும் வையத்தையும் நிரப்பியுள்ளான்: அசையும் அசையாத சிருட்டியின் ஆத்மா சூரியனாவான். ௩௬ உச்சத்தில் பறப்பவனாய் சோதி நடுவே துரிதமாகி ஒளிவீசும் சிவந்த சுபர்ணனை அத்திரி கண்ட அழியாத காந்தியாம் சவிதா என மானிடர்கள் அழைக்கும் உன்னை, நாங்கள் காணவேண்டும். ௩௭ சோதி வரம்பிலே விசையுடனான கருடனுக்கு அதிதியின் மகனுக்கு, அச்சமுள்ள நான் அரண் விரும்பி அணுகுகிறேன்: சூரியனே! எங்களுக்குத் தீர்க்காயுளை நேர்மையாக்கவும், நாங்கள் இம்சை பற்றாமலிருக்கவேண்டும்; நாங்கள் உனது சுமதியிலாகவேண்டும். ௩௮ சுவர்க்கம் பறக்கும் பொன் ஹம்சத்தின் சிறகுகள் ஆயிரம் தினங்களின் பிரயாணம் பரந்துள்ளன; அவன் எல்லா தேவர்களையும் தனது மார்பில் சாய்த்து விசுவமான புவனங்களை யெல்லாம் ஒன்று பார்த்துச் சலனமாகிறான். ௩௯ ரோஹிதன் காலனானான்; ஆதியிலே ரோஹிதன் பிரஜாபதி—யானான். ரோஹிதன் யக்ஞங்களின் முகமானான்; ரோஹிதன் சுவர்க்கத்தைக் கொண்டுவந்தான். ௪௰ ரோஹிதன் உலகமானான்; ரோஹிதன் சோதிக்கு அதி சூடு அளித்தான்: ரோஹிதன் கடலிலும் புவியிலும் சலனமாகிறான். ௪௧ சோதியின் அதிபதியான ரோஹிதன் எல்லா திசைகளிலும் போகிறான்; அவன் சோதியையும், சல நிதியையும், புவியையும் இருக்கும் அனைத்தையும் பாலனஞ் செய்கிறான். ௪௨ அவன் பெரிய வெளிகளில் ஏறுபவனாய் இலங்குபவனாய் ஆயாசமில்லாமல் ஒளிவீசி இரு உருவங்களைச்

செய்கிறான் : நிகழும் வெகுபல உலகங்களிலே அவன் பிரகாசமாகுங்கால் அவன் அதிசயன் அசைபவன் அறி ஞன். சங அவன் ஒன்றின்மேல் விழுகிறான்[1] மற்றொன் றிலே[2] எறிகிறான் : மகிஷன் இரவையும் பகலையும் சித்தஞ் செய்கிறான் ; நாங்கள் வானத்திலே வசிக்கும் வழிகாணும் சூரியனைப் போற்றி அழைக்கிறோம். சச புவிநிரப்பும் மகிஷன், இரங்குபவனது வழியாவான். அவன் இன்ன லாகாத காட்சியினவன் விசுவத்தை யெல்லாம் சூழ்ந் துள்ளான்; விசுவத்தைப் பார்ப்பவனும் ஈகையுள்ள யக் ஞாருகனுன அவன் நான் சொல்லும் இதைச் சேவியுறு வானுக. சரு அவனது மகிமை புவியிலும் கடலிலும் அதிகமாகும் ; ஒளியோடு விரிந்து விளங்கி அவன் சோதி யையும் வானத்தையும் அதிக்கிரமிக்கிறான் : விசுவத்தைப் பார்ப்பவனும், ஈகையுள்ள யக்ஞாருகமான அவன் நான் சொல்லும் இதைச் செவியுறுவானுக. சசு பசுவைப் போல் வரும் உஷையைக் காண சனங்களின் சமித்தால் அனல் எழுச்சியாக்கப்பட்டுள்ளான்; சிறு பறவைகள் கிளை களுக்கு எழுச்சியாவது போல ஒளிகள் உயரிய நிலத்துக் குச் செல்லுகின்றன. [கங. உ, க—சசு]

சஅக உரோஹிதனும் ஆத்மாவும் [பிரமன்—அத்யாத்மம், ரோ ஹித ஆதித்ய தேவதை]

க அவன் இந்த சோதியையும் சகத்தையும் சனனஞ் செய்தான் : அவன் புவனங்களை ஆடையாகச் செய்து அவற்றில் வசிக்கிறான். விரியும் ஆறு திசைகள் அவனில் சாயும். பரந்துசெல்லும் அவனை பரந்த விசுவம் பார்க்கும்.

---

1 சூரியன் தன் கிரணங்களை பகல் என்பவனில் வீசுகிறான்.
2 இரவு என்பவனில் நிழலை எறிகிறான்.

சஅ0 கருத்து—சூரியனுடைய சிறப்பு.

இங்ஙனம் சூரியனை அறியும் பிராமணனைச் சிறுமை செய்பவன் இத்தேவ கோபத்துக் காளாவான். உரோஹிதனே! அவனைக் கலக்கு. அவனைச் கொல்லு; பிரம்மகாதகனின்—அங்கங்களிலே பாசங்களைக் கட்டு. உருதுவிலே வாதங்கள் எவனிடமிருந்து வீசி புனிதஞ் செய்து விசைகின்றனவோ எவனிடமிருந்து கடல்கள கனிகின்றனவோ அவனை அறியும்....................................கட்டு. ௩ எவன் மரிக்கவும் சுவாசிக்கவுஞ் செய்கிறானோ, எவனில் எல்லாப்புவனங்களும் சுவாசிக்கின்றனவோ அவனை அறியும் பிராமணனைச் சிறுமை செய்பவர்...........கட்டு. ௪ எவன் பிராணனால் சோதியையும் புவியையும் திருப்தி செய்கிறானோ எவன் அதிபதியின் வயிற்றை நிரப்புகிறானோ அவனை...............கட்டு. ரு எவனில் விராஜனும் பிரஜாபதியும் பரமேஷ்டியும் பாக்களோடு அக்கினி வைசுவாநரனும் ஸ்தாபனமாயுள்ளார்களோ, எவன் தனக்கே பரமனுடைய தேஜஸையும் பற்றியுள்ளானோ அவனை அறியும் பிராமணனைச் சிறுமை செய்பவனை...........கட்டு. சு எவனில் ஆறு விரியும் வெளிகள் ஐந்து திசைகள் நான்கு சலங்கள் யக்ஞத்தின் மூன்று அட்சரங்கள் நிலைத்துள்ளனவோ, எவன் கோபத்திலே தனது கண்ணால் இரு உலகங்களையுங் காண்கிறானோ அவனை அறியும் பிராமணனை சிறுமை செய்பவன்..........................கட்டு. எ எவன் உணவு புசித்து உணவு பதியாகி பிராமணஸ்பதியாகி, புவனத்தின் பதியாய் பதியுமானானோ அவனை அறியும் பிராமணச் சிறுமை செய்பவன்...........கட்டு. அ எவன் பதின்மூன்றாவது மாதத்தை அளக்கிறானோ முப்பது அங்கங்களுள்ள இரவு பகற்களைச் செய்தானோ அவனை அறியும் பிராமணனைச் சிறுமை செய்பவன்...........கட்டு. கூ இறக்கம் கருமையாகும்: பொன்மயக் கருடர்கள் சலங்

களால் தங்களையே அணிந்து கொண்டு சோதிக்குப் பறந்து செல்லுகிறார்கள்: அவர்கள் ருதஸ்தானத்தி னின்று இங்கு வந்துள்ளார்கள்.—கிரணங்களோடான— அவனை அறியும் பிராமணனைச் சிறுமை செய்பவன்... ..............கட்டு. க0 கசியபனே! சந்திரமாயும் சோதி மிகுந்தும் உன்னில் எது உண்டோ அதனுடன் அதிசய ஒளியோடு உயரிய காந்தியுள்ள எதில் ஒருமையுள்ள ஏழு சூரியர் ஸ்தாபனமாயுள்ளார்களோ அந்த கிரணங்களோ டான—உன்னை அறியும்....................கட்டு. கக இவ னது பூர்வ ஆடை பிரஹத் ஸாமன், பின்புறம் இரதந்த ரம் அவனை கிரகிக்கின்றது: தயங்காமல் சதாகாலம் சோதியிலே தங்களை யணிந்துகொள்ளும்—கிரணங்களை யடைந்துள்ள அவனை அறியும்...............கட்டு. கஉ அவ னது ஒரு பக்கச் சிறகு பிரஹத்து, வேறுபக்கத்திலே இரதந்திரம், தேவர்கள் ரோஹிதனை சனனஞ் செய்த போது அவை சமான பலம் சமான துரிதமுடனு யிருந் தன. இந்த ரோஹிதனை அறியும்..............கட்டு. கங மாலையிலே இந்த அக்கினி வருணனுகிறான்; காலையிலே உதயமாகுங்கால் அவன் மித்திரனுகிறான்; அவன் சவிதா வாகி வானத்தின் வழி செல்லுகிறான்: அவன் இந்திர னுகி நடுவினின்று சோதியை தாபமுடனுக்குகிறான். இவனை அறியும்...............கட்டு. கச சுவர்க்கம் பறக்கும் பொன் ஹம்சத்தின் சிறகுகள் ஆயிரம் தினங்களின் பிர யாணம் பரந்துள்ளன. அவன் எல்லா தேவர்களையும் மார்பில் சாய்த்து விசுவமான புவனங்களை யெல்லாம் ஒன்று பார்த்துச் சலனமாகிறான்: இவனை அறியும்............ கட்டு. கரு ஆயிரம் மூலங்களும் அநேக வலிமைகளு முள்ள அத்திரி யெனப்படும் சலங்களின் அகத்திலே யுள்ள தேவன் இவனே;—இவனை அறியும்...........கட்டு.

௧௬ எவன் தனது உயரிய தேகங்களால் சோதியைச் சூடாக்குகின்றானோ சோதியிலே சிறப்புடன் எத்தேவன் ஒளி வீசுகிறானோ, அந்தச் சுடரை சடிதி விசைக்கும் சொர்ண அசுவங்கள் இழுக்கின்றன. நல் நிலவு சோதிகளுடன் அவன் இங்கு ஒளி வீசுகிறான். அவனை அறியும் ............கட்டு. ௧௭ எவனால் பொன்மயப் புரவிகள் ஆதித்தியர்களை இணைத்து இழுக்கின்றனவோ, பலர் முன்னதாகவே அறிந்து எந்த யக்ஞனால் சலனமாகிறார்களோ, எவன் ஒரே சோதியாயிருந்து பலவகையாய்ப் பிரகாசிக்கிறானோ அவனை அறியும்...............கட்டு. ௧௮ ஒரு சக்கரமுள்ள இரதத்தை எழுவர் இழுக்கிறார்கள். ஏழு நாமங்களுள்ள ஒரு குதிரை அதனை இழுக்கும். அழியாமலும் எதிர்ப்பு இல்லாமலுமுள்ள அந்த சக்கரத்துக்கு மூன்று பற்கள். அங்கு எல்லா புவனங்களும் நிற்கும்—அவனை அறியும்..................கட்டு. ௧௯ தேவபிதாவும் மானிடர்களது சனன கருத்தாவும் உக்கிரனுமான துரகனை அஷ்டா—சுவங்கள் இழுக்கின்றன: அவன் அனைத்தையும் இழுக்கின்றான். ருதத்தின் இழையை மனத்தினால் அளந்து மாதரிசுவன் எல்லாத் திசைகளையும் தூய்மை செய்கிறான்: அவனை அறியும்..................கட்டு. ௨௦ அமுதத்தின் கருப்பமான காயத்திரீயிலே எல்லாத் திசைகளின் வழியாக இணையும் இழை செல்லுகின்றது—அவனை அறியும்...........கட்டு. ௨௧ அஸ்தங்கள் மூன்று உஷைகளும் மூன்று, உலகங்கள் மூன்று. சோதிகளும் மூன்றுதான்: அக்கினியே! உனது முவ்வகை மூலஸ்தானத்தையும் நாங்கள் அறிகிறோம். நாங்கள் தேவர்களின் முவ்வகையான சனனங்களையும் அறிகிறோம்—அவனை அறியும்...........கட்டு. ௨௨ எவன் சனனத்திலே புவியின் வாயைத் திறந்தானோ, எவன் வானத்திலே வாரி

தையை வைத்தானே அவனை அறியும்...................கட்டு. உரு அக்கினியே! நீ சங்கற்பங்களால் சோதிகளால் எழுப்பப்பட்டு சோதியிலே உதய சூரியனாய் ஒளி வீசினாய்: தேவர்கள் ரோஹிதனை சனனஞ் செய்யுங்கால், பிருசினி மக்கட்களான மருத்துக்கள் அவனுக்குக் கானஞ் செய்கிறார்கள். உச எவன் ஆத்மாவை அளிப்பவனோ பலத்தை அளிப்பவனோ எவனது ஆக்ஞையை விசுவமான தேவர்கள்—போற்றி—அநுசரிக்கிறார்களோ, இரு கால் நாலு கால் பிராணிகளின் தலைவனாய் எவன் உள்ளானோ அவனை அறியும்...............கட்டு. உரு ஒரு பாதமுள்ளவன் இரு பாதமுள்ளவனைவிட அதிகம் ஆக்கிரமித்தான். பின்புறத்தினின்றும் இரு காலுள்ளவன் மூன்று காலுள்ளவனைக் கடந்தான்: அருகிலாகி பங்கிதிகளைப் பார்ப்பவனாய் நான்கு காலுள்ளவன் இரு காலுள்ளவனது ஆக்ஞை போல் செய்தான். அவனை அறியும்...................கட்டு. உசு கருப்பனின் வெளுப்பு மகன் இரவின் பாலன் பிறந்தான். அவன் சோதியிலே ஏறினான். ரோஹிதன் ஏற்றங்களிலே ஏறினான். [கரு. ரு. க—உசு]

சஅஉ உரோஹிதன். [பிரமன்—அத்யாத்மம்—ரோஹிதாத்யோ தேவதை.]

க சோதியின் வரம்பிலே பார்ப்பவனாய் சுவர்க்கத்துக்கு சவிதா, செல்லுகிறான். உ கிரணங்களால் பூரணமான மேகக் குவியலுக்கு மகேந்திரன் வியாபகமாகிறான். ரு. அவன் தாதா அவன் விதாதா அவன் வாயு அவன் உயரிய மேகக் குவியல். ச அவன் அரியமான், அவன் வருணன் அவன் ருத்திரன் அவன் மகாதேவன். ரு அவன் அக்கினி அவனே சூரியன், அவன்தான் மகாயமன். சு ஒரே தலையுடன் பதின்மர்களான பாலர்கள் பொருந்தி

சஅக கருத்து—சூரியனது இரகசியங்கள்.

அவனை அணுகியுள்ளார்கள். எ பின் புறத்தினின்று அவர்கள் முன்புறம் பரவுகிறார்கள், அவன் உதயமாகுங் கால் ஒளி வீசுகிறான். அ மருத்துக்களின் இக்கணம் அவனதாகும், சிக்கயஞ் செய்தவனாய் அவன் செல்லுகிறான். கூ கிரணங்களால் பூரணமான மேகக் குவியலுக்கு மகேந்திரன் பூரணமாய்ச் சலனமாகிறான். கO இந்தநவகோசங்கள் அவனுடையனவாகும். ஒன்பது வகையாய் ஆதாரங்கள் வைக்கப்பட்டுள்ளன. கக சுவாசிப்பனவும் சுவாசிக்காதனவுமான பிராணிகளையெல்லாம் அவன் உற்று நோக்குகிறான். கஉ அவனிலே இந்த வலிமை நுழைந்துள்ளது. அவன் ஒருவன் அவன் ஏகன் அவன் தன்னந்தனியான ஒருவனேயாவான். கங அவனில் இந்த தேவர்கள் ஏகமானார்கள். கச கீர்த்தியும் புகழும் சலமும் மேகக் குவியலும் பிரம்மவர்சஸும் உணவும் உணவு உண்பதும், கரு இந்த ஒரே தேவனை அறிபவனுக்குத் தோன்றும். கசு அவன் இரண்டாவது இல்லை, மூன்றாவதுமில்லை நான்காவது என அழைக்கப்படுவதுமில்லை. கஎ அவன் ஐந்தாவது இல்லை ஆறாவது இல்லை அவன் ஏழாவது என சொல்லப்படுவதுமில்லை. கஅ அவன் எட்டாவதில்லை, ஒன்பதாவதுமில்லை பத்தாவது என அவன் அழைக்கப்படுவதுமில்லை. ககூ சுவாசிக்கும் சுவாசிக்காத அனைத்தையும் அவன் உற்று நோக்குகிறான். உO அவனில் இந்த வலிமை நுழைந்தது. அவன் ஒருவன்; தன்னந்தனியன் ஏகன். உக அவனில் எல்லாத் தேவர்களும் ஏகமானார்கள். உஉ இந்த ஒரு தேவனை அறிபவனுக்குப் உங பிரம்மமும் தவமும் புகழும் பெருமையும் சலமும் முகில் கூட்டமும், பிராமணவர்சஸும் உணவும் உணவு உண்பதும் இருப்பதும் இருக்கப் போவதும் சோதியும்

சுவர்க்கமும் சுவதாவுமுண்டு. ௨௫ அவனே மிருத்யு அவன் அமிருதன். அவன் அரக்கன். அவன் அரி. ௨௬ அவன் ருத்திரன், செல்வஞ் ஜயிப்பவன், செல்வமளிப்பதில், நுவல்வதில் அவன் வஷட்காரனும் அநுஸம்ஹிதனுமாவான். ௨௭ இந்த யாதுக்களெல்லாம் அவனது ஆக்ஞைக்குக் காத்துள்ளார்கள். ௨௮ சந்திரனுடன் அங்குள்ள நட்சத்திரங்கள் எல்லாம் அவனது ஆக்ஞையிலாகின்றன. ௨௯ அவன் தினத்தினின்றும் உதயமானான்; தினம் அவனிடமிருந்து பிறந்தது. ௩௦ அவன் இரவினின்றும் தோன்றினான், இரவு அவனிடமிருந்து இலங்கிற்று, ௩௧ அவன் வானத்தினின்றும் சனித்தான்: வானம் அவனிடமிருந்து சனித்தது. ௩௨ அவன் வாயுவினின்று விளங்கினான், வாயு அவனிடமிருந்து விளங்கிற்று. ௩௩ அவன் சோதியினின்றும் சனித்தான். ஜோதி அவனிடமிருந்து சனித்தது. ௩௪ அவன் திசைகளினின்றும் தோன்றினான்: திசை அவனிடமிருந்து தோன்றிற்று. ௩௫ அவன் புவியினின்று புலனானான், புவி அவனிடமிருந்து புலனாயிற்று. ௩௬ அவன் அக்கினியினின்று தோன்றினான்; அக்கினி அவனிடமிருந்து தோன்றிற்று. ௩௭ அவன் சலங்களினின்றும் சனித்தான், சலங்கள் அவனிடமிருந்து சனித்தன. ௩௮ அவன் இருக்குக்களினின்று பிறந்தான்: இருக்குக்கள் அவனிடமிருந்து பிறந்தன. ௩௯ அவன் யக்ஞத்தினின்றும் இலங்கினான்; யக்ஞம் அவனிடமிருந்தே இலங்கிற்று. ௪௦ அவன் யக்ஞம். யக்ஞம் அவனுடையதாகும். அவன் யக்ஞத்தின் தலைவனாய் செய்யப்பட்டுள்ளான். ௪௧ அவன் இடிக்கிறான், அவன் மின்னுகிறான், அவனே கல்லை எறிகிறான். ௪௨ பாவிக்கோ, புண்ணியனுக்கோ, புருஷனுக்கோ அசுரனுக்கோ. ௪௩ நீ ஓஷதிகளைச் செய்யுங்கால்

உயர்வாய் பொழியுங்கால்சனக் கூட்டத்தைச் செழுமை யாக்குங்கால். சஉ மகவானே நீ செய்யுஞ் செயல்களெல் லாம் உனது மஹிமையாலாகும். உனது உடல் வடிவங்கள் நூறு. சரு உனது உருவங்கள் இருகோடிகள், பல ஆயிரங் கோடிகள். இல்லையேல் நீ இலட்சங்கோடிகளாய்த் தோன் றுவாய். சகூ இந்திரன் பாழிலும் பெரியவன்; இந்தி ரனே! மிருத்யுக்களை விட நீ பெரியவன். சஎ பலத்தின் பதியே! நீ கருமியைவிட பெரியவன். உன்னை விபூதி என வும் பிரபு எனவும் அழைத்து நாங்கள் போற்றுகிறோம். சஅ புலனுகுபவனே! உனக்கு வணக்கமாகுக, புலனுகு பவனே! நீ என்னைப்பார். சகூ உணவு புசிப்பவனும் புகழோடு தேஜசுடனும், பிராமண வர்சஸூடனும் நீ என்னைப்பார். ரு௦ நாங்கள் உன்னை சலம் சோதி சத்தி சிறப்புக்களெனச் சாற்றுகிறோம். ருக நாங்கள் உன்னைச் சலம் சிகப்பு என்றும் வெண்மையென்றும், வெளிவலிமை யென்றும் போற்றுகிறோம். ருஉ நாங்கள் உன்னை விரிந்த விசால நயமான வையமென நுவல்கிறோம். ருங நாங்கள் உன்னை வெளி, விரிவு, விசாலம் வையகம் என வாழ்த்துகிறோம். ருரு நாங்கள் உன்னை ஓங்கும் செல்வன், வளரும் நலன், நலம் குவிந்து குணமோங்கும் நலன் என கதைக்கிறோம். ருசு தரிசியே! உனக்கு வணக்கமாகுக · தரிசியே! உணவு புசிப்புடன் புகழோடு பிரகாசத்துடன் பிரம வர்சஸோடு என்னைப் பார். [கங. ச. க—ருசு]

கங-வது காண்டம் முற்றிற்று.

## ச அங—ச அச

ச அங மணக்கோலம் [ஸாவித்திரி சூரியை - ஆத்மதேவதை]

க சத்தியத்தால் புவி ஸ்தாபிதமாயுள்ளது: சூரியனுல்

ச அஉ கருத்து—எங்கும் சூரிய மயம்.

சோதி ஸ்தாபிதமாயுள்ளது · ருதத்தால் ஆதித்தியர்கள் நிற்கிறார்கள், சோமன் சோதியிலே ஆசிரதமாயுள்ளான். உ ஆதித்தியர்கள் சோமனால் சக்தியுடனிருக்கிறார்கள்; சோமனால் புவி சிறந்தது, இந்த நட்சத்திரங்களின் மூல ஸ்தானத்திலே சோமன் வைக்கப்பட்டுள்ளான். ௩ ஔஷதியை அழுத்துங்கால் சோமனைப் பருகியதாக ஒருவன் நினைத்துக் கொள்ளுகிறான்; பிராமணர்கள் அறியும் சோமனை புவியிலே ஒருவனும் அருந்துவதில்லை. ௪ சோமனே! உன்னை அவர்கள் பருகுங்கால் நீ மறுபடியும் பெருகுகிறாய்; வாயு சோமனது இரட்சகன்: மாதம் வருஷங்களின் வடிவமாகும். ரு சோமனே! ஆடை அணிக—ளால் துணையாகி, காவற்காரர்களால் காப்புடனை நீ கற்களைக் கேட்பவனாய் நிற்கிறாய்; புவியிலுள்ள ஒருவனும் உன்னைப் பருகுவதில்லை. ௬ சூரியை அவளது புருஷனிடஞ் செல்லுங்கால் அவளது கருத்தே தலையணை, கண் அஞ்சனம். சோதியும் பூமியும் அவளது கோசமாகும். எ ரேபி, அவளை விட்டுவிடும் கானம்; நாராசம்ஸி சுவாகதமாயிருந்தது; சூரியையின் ஆடை சுந்தரமாயிருந்தது; அவள் அலங்கரித்துக்கொண்டு கானமுடன் செல்லுகிறாள். அ ஸ்தோமங்கள் உணவாயிற்று, சந்தம், சயனமும் இன்பமுமாயிற்று; அசுவினிகள் சூரியையை—மணக்க நாடினார்கள்; அக்கினி முதன்மையாயிருந்தான். ௯ மணமகளைத் தேடினவன் சோமன்; இரு அசுவினிகளும் அவளை மணக்க விரும்பி வேண்டினார்கள்— சவிதா, தனது மனத்தால் பதியைத் துதிக்கும் சூரியையை அவளது புருஷனுக்கு அளித்தான். ௧0 மனம் அவளுடைய இரதமாயிருந்தது: அதற்கு சோதி பந்தல்; சூரியை தனது புருஷனிடஞ் சென்றபோது இரு சுக்கிரங்களான காளைகளே—அதனை—இழுத்தன. ௧௧ ருக்கு

ஸாமனால் கட்டப்பட்டு சமான சித்தங்களோடு இரு காளைகளுஞ் சென்றன! உனது இரு சக்கரங்கள் செவிகள்; வழி சோதியிலிருந்தது. கஉ நீ சென்றபொழுது இரு சக்கரங்கள் சுத்தமாயிருந்தன; வியானனே அதற்கு வைத்திருந்த அச்சாணி. சூரியை தனது புருஷனிடம் போனபோது மனோமயமான இரதத்திலே ஏறினாள். கங சவிதா சூரியையுடைய மணத்துக்கனுப்பித்த—பொருள்களெல்லாம்—சென்றுள்ளன, மகங்களிலே பசுக்கள் மாய்க்கப்பட்டுள்ளன: பல்குனிகளிலே மணமாகும். கச அசுவினிகளே! உங்களுடைய மூன்று சக்கர இரதத்திலே மணத்துக்கு சூரியையை நீங்கள் கேட்கச் சென்றிருந்தபோது உங்களுடைய ஒரு சக்கரம் எங்கிருந்தது, ஆக்ஞைக்கு நீங்கள் எங்கு நின்றீர்கள்? கரு சுந்தரபதிகளே! நீங்கள் சூர்யையின் மணத்தை நாடிச் சென்றிருந்தபோது எல்லாத் தேவர்களும் உங்களது செயலுக்குச் சம்மதித்தார்கள். மகனான பூஷணன்—உன்னைத்—தந்தையாக வரித்தான். கசு சூரியையே! ருதுக்களோடு இணைந்து உனது இரு சக்கரங்களை பிராமணர்கள் அறிகிறார்கள்: மர்மத்திலேயுள்ள வேறு சக்கரத்தை அறிஞர்கள உணருகிறார்கள். கஎ நாங்கள் பதிகாணும் சுபந்துவான அரியமனை யஜிக்கிறோம்; வெள்ளரியை அதன் பந்தத்தினின்றும் போல் நான் உன்னை விடுதலை செய்கிறேன்[1] அங்கிருந்து[2] விடுதலை செய்யவில்லை. கஅ பிரியமுள்ள இந்திரனே! அவள் மக்கட்கள் பெருகி சுபாகங்களுடனுவதற்கு நான் இங்கிருந்து அவளை விடுதலை செய்கிறேன், அங்கிருந்து விடுதலை செய்யவில்லை. ககூ

---

1 மணமகளை தந்தை தனது வீட்டினின்றும் விடுதலை செய்கிறான்

2 அவளது புருஷன் வீட்டினின்றும் தனிமையாக்க விரும்புவதில்லை.

மங்களகரமான சவிதா உன்னை பந்தஞ் செய்த வருண பாசத்தினின்றும் விடுதலை செய்வாளாக; ருதத்தின் மூலத்திலே சுகிருத உலகத்திலே மணம் கேட்பவனோடு உனக்கு இன்பமாகுக. உ௦ உனது கையைப் பற்றி இங்கிருந்து அழைத்துச் செல்வானாக; இரதத்தால் அசுவினிகள் உன்னை வகித்துச் செல்வார்களாக. மனையின் மனைவியாக நீ மனைகளுக்குப் போ. நீ அங்கு கூடும் சனங்களுடன் வசியஞ் செய்பவளாய்ப்பேசு. உக உனது பிரஜைக்காக இங்கு பிரியமாயுள்ள எதுவும் பொங்குக; இல்லறத்வம் ஓங்க நீ இந்த மனையிலே விழித்திரு. உனது தேகத்தை இப்புருஷனோடு சேர். பிறகு நீ மூப்பாகும் வரை வாழ்ந்து அங்குள்ளவர்களோடு பேசுவாயாக. உஉ நீங்கள் இருவர்களும் இங்கு கூடி இருங்கள், பிரியாதேயுங்கள். மைந்தருடனும் பேரருடனும் இன்ப முற்று நல்ல மனையோடாக நீங்கள் பூரணாயுளை யடையுங்கள். உ௩ இந்த இருவர்களும் மாயையால் ஒருவர்பின் ஒருவரை அநுசரிக்கிறார்கள், கிரீடை செய்யும் இரு சிசுக்கள் சல நிதியைச் சுற்றிச் செல்லுகிறார்கள். எல்லாப் பொருளையும் ஒருவன் உற்று நோக்குகிறான். மற்றவளான நீ ருதுக்களை ஒழுங்கு செய்பவளாயும் புதியவளாயும் சனனமாகிறாய். உச தோன்றும் நீ சதா புதியவனாயுள்ளாய். தினங்களின் துவஜமாய் நீ உஷைகளின் உச்சிக்குச் செல்லுகிறாய். நீ வருங்கால் தேவர்களுக்கு அவளது பங்கை யளிக்கிறாய்; சந்திரனே! நீ தீர்க்காயுளை அளிக்கிறாய். உரு நீ சாமுல்யத்தை அளித்துவிடு. பொருள்களைப் பிராமணர்களுக்குப் பகிர்ந்திடு. இந்த மனைவி, சலனஞ் செய்பவளாய் புருஷனில் பிரவேசிக்கிறாள். உசு அவன்—மனம்—நீல லோஹிதமானால் அவளை அணுகும்—புன்—செயல் நீக்கப்படும். அதனால்

அவளது பந்துக்கள் பெருகுகிறார்கள். அவளது புருஷன் பந்தங்களிலே பந்தமாகிறான். உள மணமகளது உடையினால் தனது அங்கத்தை மூடிக்கொள்ளும் புருஷனுடைய தேகம் அப்புன்செயலால்பாழாகி சூனியமாகும் உஅ சூரியையுடைய சொரூபங்களை தடிதலை, துமித்தலை, தறித்தலைப் பார்: அவற்றை பிராமணர்கள் சுத்தஞ் செய்கிறார்கள். உகூ இது காரமாகும் கார்ப்பாகும் நஞ்சுமாகும்: இது போகத்துக்கு ஆகாது; எந்த பிராமணன் சூரியையை யறிகிறானே அவனே மணப்பெண்ணுடைய—உடைக்கு—அருகனாகிறான். ௩௦ எவனால் மனைவி இம்சையாவதில்லையோ, எவன் பரிஹாரத்தை அறிகிறானே அந்த பிராமணன் சுமங்களமான இந்த உடையை சுககரமாய் பற்றுகிறான். ௩௧ நீங்கள் இருவரும் ருத மொழிகளிலே ருதம் பேசுபவர்களாய் செழுமையான செல்வத்தை ஒன்று சேருங்கள்; பிரம்மண ஸ்பதியே நீ அவளுடைய புருஷனைப் பிரகாசிக்கச்செய்; மணங் கேட்பவன் இந்த மொழியை மனமிசைந்து மொழிவானாக. ௩௨ நீங்கள் இங்கேயே இருங்கள். நீங்கள் சென்று விட வேண்டாம்; பசுக்களே! பிரஜையால் இந்தப் புருஷனைப் பெருக்குங்கள்; சிகப்பாயும் சோமவர்சஸுடனும் சுந்தரத்தில் செல்லும் எல்லா தேவர்களும் உங்களது மனங்களை இங்கு திருப்புவார்களாக. ௩௩ பசுக்களே! இந்தப் புருஷனில் பிரஜையோடு பிரவேசியுங்கள்: இந்தப் புருஷன் தேவர்களுடைய பங்கை பிழையாக்குவதில்லை இந்த புருஷனுக்குப் பூஷணனும், எல்லா மருத்துக்களும் தாத்ருவும் சவிதாவும் திடமளிப்பார்களாக. ௩௪ நமக்காக மணம் வரிக்கச் செல்லும் நண்பர்களுடைய பாதைகள் முட்களினின்றும் நீங்கி நேர்மையாகுக; பகனுடன் சேர்ந்து, அர்யமானோடு சேர்ந்து தாத்ரு திடத்தோடு

எங்களைத் தோய்ப்பானாக. ௩௫ கண்ணிலே எக்கதிர் உண்டோ பானத்திலே எப்பலமுண்டோ பசுக்களிலே எப்பெருமையுண்டோ அசுவினிகளே! அப்பலத்தோடு இந்த ஸ்திரீயை அலங்கரியுங்கள். ௩௬ மஹா நக்னியின் ஜகனங்கள் எதனால் சுந்தரமாகின்றனவோ, அசுவினிகளே, எதனால் சுராபானம்—சத்தியாகி, எதனால் அட்சங்கள் அபிஷேகமாகின்றனவோ அந்த ஒளியுடன் இந்த ஸ்திரீயை யலங்கரியுங்கள். ௩௭ எவன் சமித்தற்று சலங்களிலே ஒளி வீசுகிறானோ எவனை அறிஞர்கள் யக்ஞஞ் செய்கிறார்களோ அந்தச் சல சிசு எந்த தேன் பொழியும் சலங்களால் வீரம் மிகுந்து இந்திரன் வளர்ந்தானோ அந்த சலங்களை அளிப்பானாக. ௩௮ காயங் கெடுத்து பிரகாசிக்குங் கட்டை நான் இங்கிருந்து நீக்குகிறேன்; மேலான சோதி எது உண்டோ அதனை நான் உச்சமாய் இழுக்கிறேன். ௩௯ அவள் ஸ்நானஞ் செய்யப் பிராமணர்கள் சலத்தை எடுத்துச் செல்வார்களாக, வீரனை அழிக்காத சலங்களை அவர்கள் உயரமாய் எழுப்புவார்களாக, அவள் அரியமானுடைய அனலைச் சுற்றிச் செல்வாளாக, பூஷணனே! மாமனாரும் மச்சினனும் பார்க்கிறார்கள். ௪௦ உனக்குப் பொன் மங்களகரமாகுக, சலங்களும் மங்களமாகுக, கம்பம் மங்களமாகுக, நுகத்தடியின் துவாரமும் மங்களமாகுக: மங்களத்துக்காக நீ உன் புருஷனுடன் சேர். ௪௧ இரதத்தின் துவாரத்திலே, வண்டியின் துளையிலே, நுகத்தடியின் வாயிலிலே, நூறு உறுதிகளுள்ளவனே! அபாலையை மும்முறை சுத்தஞ்செய்து இந்திரனே! நீ அவள் சர்மத்தை சூரிய சர்மமாக்கினாய். ௪௨ நல்மனத்தையும், பிரஜையையும், சௌபாக்கியத்தையும் செல்வத்தையும் விரும்புபவளாய், புருஷனுடன் பொருந்தி அமு

தத்துக்கு நீ சித்தமாகவும். ௪௩ புருஷனுடைய மனைக்குச் சென்றதும், சலநிதி சலங்களின் சாம்ராஜ்யத்தை ஜயித்ததுபோல் நீ மகாராணியாகவும். ௪௪ மாமனார்களுக்கு நீ மேன்மையாகவும், மைத்துனர்களுக்கு உயரியளாகவும் மைத்துனிகளிலே மகாராணியாகவும், மாமியார்களுக்கு மகிஷியாகவும். ௪௫ நூற்று நெய்து விசாலஞ் செய்தவர்கள், இருமுனைகளை யளித்த தேவிகள் மூப்புக்காக உன்னை போர்த்துவார்களாக ; தீர்க்காயுசுக்கோங்கும் நீ இந்த ஆடையை அணிந்துகொள். ௪௬ சீவனுக்கு [1] அவர்கள் அழுகிறார்கள் ; யக்ஞத்தை எடுத்துவிடுகிறார்கள் : ஏனெனில் அவர்கள் தூரமான நிலயத்தில் சிந்தனைகளைச் செலுத்தியுள்ளார்கள் : இங்கு சேரும் பெற்றோர்களுக்கு எது சுந்தரமாயுள்ளதோ அது—மனைவியை ஆலிங்கனஞ் செய்யும் புருஷர்களுக்கு இன்பமாயுள்ளது. ௪௭ நான் தேவியான புவியின் மூல நிலயத்திலே திவ்யமாயும் திடமாயுமுள்ள சிலையை உன் நிமித்தமென்னில் பிரசைக்காக தாரணஞ் செய்கிறேன் ; நீ அங்கு நில், நீ பிரசன்னமாகி பெரும் தேஜசுடனாகவும். சவிதா உனது ஆயுசை தீர்க்கஞ் செய்வாளாக. ௪௮ அக்கினி புவியின் வலது கையை எதனால் பற்றினானே, அதனால் நான் உனது கையைப் பற்றுகிறேன், பிரஜையுடன் பொருள்களோடு என்னுடன் சேர்ந்து, நீ பயப்படாதே. ௪௯ சவிதா உனது கையைப் பற்றுவாளாக: இராஜாவான சோமன் உன்னை நற்பிரசையோடு செய்வானாக. அக்கினி ஜாதவேசன், அவளது புருஷனுக்கு அவளை சுபகையாயும் தீர்க்காயுசுள்ள மனைவியாகவும் செய்வானாக. ௫௦ புருஷனான என்னுடன் நீ

1 ஒருவனது பெண் புருஷனிடஞ் சென்றால் தாய் தந்தை உடன் பிறந்தவர்கள் துக்கமுறுகிறார்கள்.

தீர்க்காயுசுடனிருக்கவும், நல்ல சௌபாக்கியஞ் சேரவும்
நான் உனது கையைப் பற்றுகிறேன். தேவர்களான பகன்
அரியமான், சவிதா புரந்தீ உன்னை எனது இல்லற மனைவி
யாக எனக்கு அளித்துள்ளார்கள். ருக. பகன் உனது
கையைப் பற்றியுள்ளான். சவிதா உனது கையைப் பிடித்
துள்ளான்: நீ தர்மத்தால் எனது மனைவி நான் உனது
கிரகபதி, ருஉ இந்த ஸ்திரீ செல்வங்கொண்டு வருவா
ளாக: பிரகஸ்பதி உன்னை எனக்கு அளித்துள்ளான்,
புருஷனான என்னுடன் சேர்ந்து, பிரஜை பெருகி, நூறு
சரத்காலங்கள் நீ வாழ். ருங கவிஞருடைய பிரகஸ்பதி
யின் ஆக்ஞையால், துவஷ்டா வனப்புக்காக ஆடையை
யளித்தான். அதனால் சவிதாவும் பகனும் இந்த ஸ்திரீயை
பிரஜையால் சூரியனைப்போல் போர்த்துவார்களாக.
ருச இந்திரனும் அக்கினியும், சோதியும் புவியும், மாதரிசு
வனும், மித்திரனும் வருணனும், இரு அசுவினிகளும்
பிரகஸ்பதியும், மருத்துக்களும், பிராமணனும் சோமனும்
இந்தப் பெண்மணியைப் பிரசையுடன் ஓங்கச் செய்வார்க
ளாக. ருரு. பிரகஸ்பதி முதன்மையாக சூரியையுடைய
சிரக் கூந்தல்களை செம்மை செய்தான்: அசுவினிகளே!
இதனால் இந்த ஸ்திரீயை அவளது புருஷனுக்காக நாங்கள்
நன்கு செழுமை செய்யலாமோ. ருசு. யுவதி தன்னையே
அழகு செய்துகொண்ட இந்த உருவமே அவளது சுந்தர
வடிவம்: நான் என் மனத்தால்; சலனமாகும் மனைவி
யைக் காண விரும்புகிறேன். புதிய நண்பர்களோடு நான்
அவளை அநுசரித்துச் செல்லுவேன். அவளைப் பிடித்
திருந்த பந்தங்களினின்று பிரித்த பேரறிஞன் யார்?
ருஎ நான் என்னிலே அவளது ரூபத்தை விடுதலை செய்
கிறேன். என்—மனத்தின் வாசத்தைப் பார்ப்பவனே—
என் விருப்பத்தை அறிவான். நான் மறைவில் புசிக்க

வில்லை: நானே வருணனது பாசங்களை நீக்குபவனாகி மனத்தால் விடுதலையாகியுள்ளேன். ௫௮ மங்களகரமான சவிதா உன்னை பந்தஞ் செய்த வருணனுடைய பாசத்தினின்று நான் உன்னை விடுதலை செய்கிறேன்: வதுவே! உனது புருஷனோடு உனக்கு விரியும் உலகத்தையும் இங்கு சுலபமான வழியையுஞ் செய்கிறேன். ௫௯ உங்களது ஆயுதங்களை உயர்த்துங்கள், அரக்கர்களை அகற்றுங்கள். நற்செயலிலே இந்த நாரியை ஸ்தாபியுங்கள்; தெரியும் தாத்ரு அவளுக்குப் புருஷனைக் கண்டான்; அறியும் அரசனான பகன் முன் செல்வானாக. ௬௦ பகன் நான்கு பாதங்களைச் செய்தான்; பகன் நாலு சட்டத் துண்டுகளை உருவஞ் செய்தான்: துவஷ்டா நடுவில் செல்லும் வார்களை வனப்புடன் செய்தான்: அவள் எங்களுக்கு சுமங்கலியாவாளாக. ௬௧ சூரியையே! நீ அமுத உலகத்துக்கு நல்ல மலருடன், பொன் நிறத்தோடு நன்கு செல்லும் நல்ல சக்கரமுடன் விசுவரூபமான மண இரதத்திலே ஏறு, புருஷர்களுக்கு மண இரதத்தைப் பிரியமுடனாக்கவும். ௬௨ வருணனே! சகோதரன்—சிதைக்காத அவளை பிரகஸ்பதியே! பசு அழிக்காத அவளை, இந்திரனே புருஷனைக் கொல்லாத அவளை, சவிதாவே! மக்கட்களுள்ள அவளை எங்களுக்குக் கொண்டுவா. ௬௩ இரு தூண்கள் போலான நீங்கள் தேவர் காட்டும் வழியைப் பற்றி யொழுகும் குமாரியை நீங்கள் இம்சியாதேயுங்கள். திவ்யமான மனையின் கதவை மணப்பெண்ணுக்குச் சுக வழியாக நாங்கள் செய்கிறோம். ௬௪ பின்புறம் பிரம்மம் பொருத்தமாகுக: பிரம்மம் முன்புறம். பிரம்மம் முனையிலே நடுவிலே பிரம்மம் எங்குமாகுக; தேவர்களது தகர்க்க முடியாத கோட்டைக்கு முன் சென்று, புருஷனது உலகத்திலே மங்களகரமாயும் இனிமையாயும் அரசு புரி. [௧௪. ௧. ௧—௬௪]

---

௪௮௩. கருத்து. ஆதர்சமணம்.

௪௮௯ புருஷனும் மனைவியும். [சாவித்திரீ சூரியை—சூரியஸ்வய மாத்மதயா தேவதை.]

௧ உனக்கு ஆதியில் அவர்கள் மணக்கோல இரதத்
துடன் சூரியையை வகித்துச் சென்றார்கள்: அக்கினியே!
நீ புருஷர்களுக்கு, பிரசையுடன் பொருந்தி பத்தினிகளை
அளி. ௨ அக்கினி, ஆயுசோடு வர்சஸுடன் மறுபடியும்
மணப்பெண்ணை அளித்துள்ளான். அவளுடைய புருஷன்
நூறு சரத் காலங்கள் நீண்ட ஆயுசோடு வாழ்க. ௩ அவள்,
முதல் சோமனுடைய மனைவியாயிருந்தாள், அப்பால்
கந்தருவன் உனது கணவன்: அக்கினி உனது மூன்றாவது
அன்பன்: மானிடன் உனது நான்காவது மணவாளன்
௪ சோமன் கந்தருவனுக் களித்தான், கந்தருவன் அக்
கினிக்குக் கொடுத்தான். பொருளையும் பெண் பிள்ளை
களையும் அங்ஙனமே இப்பாரியையும் அக்கினி எனக்குத்
தந்தான். ௫ பொருள் பெருகுபவர்களே! நல் நினைவு
எங்களுக்கு வந்துள்ளது. அசுவினிகளே! உங்கள் இரு
தயங்களிலே விருப்பங்கள் சாய்ந்துள்ளன: சுந்தரபதி
களே! நீங்கள் தேக சம்பந்த காவலர்கள். பிரியர்களான
நாங்கள் நண்பர்களுடைய மனையை அணுகலாமோ. ௬
தாரமே! மங்களகரமான மனத்துடன் மகிழ்ந்து போற்று
வதற்குரிய எல்லா வீரர்களுடன் பொருளை யளி: சுந்தர
பதிகளே! நற்பானம் பொருந்தியுள்ள சுலப தீர்த்தத்தை
தாருங்கள். வழியிலே துன்மதி எனத் திகழும் தூணை நீங்
கள் தகர்த்து எறியுங்கள். ௭ மணப்பெண்ணே! எல்லா
ஔஷதங்களும் நதிகளும் நிலங்களும் வனங்களும், புருஷ
னுக்குப் பிரசையைச் சுமக்கும் உன்னை அசுரனிடமிருந்து
காத்திடுக. ௮ நாங்கள், சுலபமாயும் சுவஸ்தி யளிப்ப
தாயும் இம்சைக் கிலக்காகாமல் அந்நியர் செல்வம் காண்
பதுமான இந்த வழியிலே ஏறியுள்ளோம். ௯ மானிடர்

களே! எந்த ஆசியால் தம்பதிகள் பொருத்தமானதைப் பற்றுகிறார்களோ அதனைச் செவியுறுங்கள்; இந்தக் கானக மரங்களிலே எந்த கந்தருவர்களும் தேவிகளான அப்சரசுகளும் நிற்கின்றார்களோ அவர்கள் இம்மணப் பெண்ணுக்கு மங்களம் அளிப்பார்களாக; விவாக இரதம் செல்லுங்கால் அவர்கள் இன்னல் செய்யாமலாவார்களாக. க0 சனங்களின் நடுவே மணமகளது மங்களமான இரதத்தை எந்த யட்சமங்கள் சேர்கின்றனவோ, எங்கிருந்து வந்தனவோ அங்கு அவற்றை யக்ஞாருகர்களான தேவர்கள் செலுத்துவார்களாக. கக அவர்களைத் தேடும் திருடர்கள் அவர்களைக் காணுமலாவார்களாக. இன்பவழியால் துன்பமானதை அவர்கள் கடப்பார்களாக. கருமிகள் பறந்துவிடுவார்களாக. கஉ பிரமக்—கண்ணோடு, நட்பின் — பார்வையுடன் — கோர சூனிய நயனத்தால், மனைகளிலுள்ள—சலங்கள் நாட்டமாக மணப்பெண்ணின் இரதத்தை நான் செல்லச் செய்கிறேன். கங இந்த சுந்தரி மனைக்கு மங்களகரமாய் வந்துள்ளாள். தாத்ரு அவளுக்கு இந்த உலகத்தை நிலைப்பித்தான்; அரியமானும், பகனும் அசுவினிகளும், பிரசாபதியும் பிரசையோடு அவளை பெருக்குவார்களாக. கச உழும் நிலம்போல் இந்த வனிதை ஆத்மாவுடன் வந்துள்ளாள்; மானிடர்களே! அவளிலே பீஜத்தைத் தெளியுங்கள்; அவள் விருஷபத்தின் பாலான இரேதசை தரித்து அவளது உதரத்தினின்றும் உங்களுக்குப் பிரசையைத் தோற்றுவிப்பாள். கரு நீ திடமாய் நில்: நீ விராஜை; சரஸ்வதியே! நீ இங்கு விஷ்ணுவைப்போலாவாய்; சினீவாலியே! அவள் பிரஜையுடனுவாளாக, அவள் பகனது சுமதியிலாவாளாக. கசா உங்களது அலை ஆப்புக்களை யகற்றுக; சலங்களே இணைப்புப் பாசங்

களை நீக்குங்கள்; இன்னலுக் கருகதை யாகாத, குற்ற மும் கேடுமற்ற நீங்கள் மங்கள சூனியத்தில் விழாமலா வீர்களாக. ௩௯ கோர—சூனியக் கண்ணுடன் கணவனைக் கொல்லாதவளாயும், சுகமாயும் துணைபுரிபவளாயும், மங் களகரமாய் மனைகளுக்கு சுலபவசியையாயும் வீரர்களைத் தரித்து சுமனத்தோடு மைத்துனர்களை விரும்புபவளாயு முள்ள உன்னுடன் நாங்கள் ஓங்கவேண்டும். ௪௬ மைத் துனனை மாய்க்காதவளாயும் கணவனை யழிக்காதவளா யும் வசியத்துக்குச் சுலபளாயும், பசுக்களுக்கு மங்களகர மாயும், மேன்மையாயும் பிரசை மிகுந்து, வீரர் தரித்து கணவனுடைய உடன் பிறந்தார்களை விரும்புபவளாயும் நீ இங்கு ஓங்கு. நீ இனிமையாய் இந்த இல்லறத்தனலைப் போற்று. ௧௧ நீ நில்லு: இங்கிருந்து—சென்றுவிடு: நீ எதனை விரும்பி இங்கு வந்துள்ளாய்? இடையே நான் உன்னை ஜயிப்பவன். எனது மனையினின்று நீங்கு: நிர்ரு தியே! சூனியந்தேட இங்கு வந்துள்ள நீ, நில்லு, கரு மியே! நீ பறந்துவிடு, இங்கு நிற்காதே. ௨௦ இந்த மணப் பெண் பூர்வானலையும் இல்லறத் தனலையும் போற்றியவு டன் மடந்தையே! நீ சரஸ்வதிக்கும் பிதுருக்களுக்கும் வணக்கமளி. ௨௧ இப்பாரியைப் போர்த்த இக்காப் பையும் பாதுகாப்பையும் பற்று: சினீவாலியே! அவள் பிரசையுடனுவாளாக: அவள் பகனது சுமதியிலா வாளாக, ௨௨ நீ விரிக்கும் புற்களிலே, நீ கீழ் சாய்க் கும் சருமத்திலே கணவனைக் காணுங் கன்னிகை ஏறுவா ளாக. ௨௩ சிகப்புச் சருமத்திலே புற்களை விரி. நல்லப் பிரசையுடனுன அவள் அதில் அமர்ந்து அனலைப்போற்று வாளாக. ௨௪ சருமத்திலேறு. அனல் பக்கம் உட்கார: இந்த தேவன் எல்லா அரக்கர்களையு மழிக்கிறான். இங்கு இக்கணவனுக்கு நீ பிரஜையைப் புலனுக்கு. இந்த உனது

மகன் உயரிய குணமுள்ளவனாவானாக. ௨௫ இந்த அன்னையின் அங்கத்தினின்று நானா ரூபமான பசுக்கள் தோன்றுக. சுமங்கலியான நீ இந்த அனல் பக்கம் உட்கார். நீ உனது புருஷனுடன் தேவர்களுக்குப் பணிவிடை செய். ௨௬ சுமங்கலியாயும், வீடுகளை விசாலஞ் செய்பவளாயும், கணவனுக்கு மங்களமளிப்பவளாயும், மாமனார்க்கு மேன்மை செய்பவளாயும் மாமியார்க்கு இனிமை வழங்குபவளாயும், இந்த மனைகளில் நீ பிரவேசி. ௨௭ மாமனார்க்குச் சுகஞ் செய், புருஷனுக்கு சுகஞ் செய், மனைகளுக்கு இன்பஞ் செய். இக்குடும்பத்துக்கு சுகஞ் செய், இவர்களது புஷ்டிக்கு சுகஞ் செய். ௨௮ இந்தப் பெண் சுமங்களமுள்ளவள். ஒற்றுமையுடன் வாருங்கள். அவளைப் பாருங்கள். அவளுக்கு சௌபாக்கியத்தை யளித்து துர்ப்பாக்கியத்துடன் நீங்கள் சென்று விடுங்கள். ௨௯ அவ இருதய யுவதிகளும் விருத்தர்களுமான நீங்கள் எல்லீரும் அவர்களுக்கு வர்சஸையளியுங்கள். அப்பால் துர்ப்பாக்கியத்துடன் நீங்கள் சென்று விடுங்கள். ௩௦ சவிதாவின் பெண்ணான சூரியை மேலான சௌபாக்கியத்துக்கு விசுவ வடிவங்களைத் தரித்தசொர்ண சயன இரதத்திலேறினாள். ௩௧ சுமனத்துடன் மஞ்சத்திலேறு: இங்கு இப்புருஷனுக்குப் பிரஜையைப் புலனாக்கு. இந்திராணியைப் போல் நல்ல உதயமாகி (முன் சோதியோடான) உஷைகளைக் காண நீ விழித்துக் கொள். ௩௨ ஆதியிலே தேவர்கள் தங்கள் மனைவிகளில் தோய்ந்தார்கள். காயங்களைக் காயங்கள் கலந்தன : சுந்தரியே ! சூரியையைப் போலே விசுவ ரூபமாகி மகிமையோடு பிரஜை பொருந்தி இங்கு புருஷனுடன் சேர். ௩௩ விசுவாவசுவே ! நில், இங்கிருந்து சென்று விடு. உன்னை நாங்கள் வணக்கமுடன் வாழ்த்துகிறோம். பிதுருக்

களிலே பொருந்திப் பொலிவாகும் சகோதரியைத் தேடு. அவன் உனக்கு சனன உரிமை, அவனை நீ அறி. ௧௪ சூரியனுக்கும் அவிதரிப்பவனுக்கும் நடுவே இசையும் இன்பத்திலே அப்சரசர்கள் இன்பமாகிறார்கள்; அவர்கள் பந்துக்கள்; அவர்களிடஞ் சென்று விடு; கந்தருவ ருதுவுடன் நான் உனக்கு வணக்கமளிக்கிறேன். ௧௫ கந்தர்வனுடைய வீரியத்துக்கு நமஸ்காரம். அவனது கோபக் கண்ணுக்கு நாங்கள் வணக்கத்தை யளிக்கிறோம்; விசுவாவசுவே! பிரம்மத்தோடு உனக்கு வணக்கமாகுக; அப்சரஸர்களான உனது மனைவிகளிடம் நீ சென்று விடு. ௧௬ நாங்கள் செல்வமுடன் நல்ல சித்தமுள்ளவர்களாக வேண்டும் நாங்கள் கந்தருவனை உயர்த்தியுள்ளோம்; அந்த தேவன் பெரிய நிலயத்துக்குச் சென்றுள்ளான். ஆயுளை நீளச் செய்யும் நிலயத்துக்கு நாங்கள் சென்றுள்ளோம். ௧௭ பெற்றோர்களே ருதுக்காலத்திலே நீங்கள் ஒன்று பொருந்துங்கள்; நீங்கள் இரேதசின் தாயும் தந்தையுமாவீர்கள்: ஆடவன் அரிவையைப் போல் நீ அவளைச் சேர்; நீங்கள் பிரஜையைச் செய்யுங்கள்; இங்கு பொருளைப் பெருக்குங்கள், ௧௮ பூஷணனே! மானிடர்கள் பீஜத்தைத் தெளிக்கும் அதிமங்களகரமான மங்கையைச் செலுத்து. அவள் பிரியையாகிய எங்கள் ஊருக்களைப் பிரிப்பாள்: நாங்களும் பிரிய அங்கத்தை வைப்போம். ௧௯ நீ வாமத்தில் ஏறு: புஜத்தைப் பயன் செய்: சுமனத்தோடு உனது மனைவியை அணைந்து கொள். அனுபவிப்பவர்களாய் இங்கு பிரசைகளைப் புலனுக்குங்கள். சவிதா உங்களுக்குத் தீர்க்காயுளை அளிப்பாளாக. ௨௦ உங்களுக்குப் பிரஜாபதி பிரஜையைப் புலனுக்குவானாக, இரவு பகல்களோடு அரியமான் உங்களைச் சேர்ப்பானாக: நீ அமங்களச் சூனியளாய் பதி

யின் உலகத்தில் நுழை: எங்கள் இருகால் நான்கு கால் பிராணிகளுக்கு மங்களமாகுக. ௪௧ இந்த மணக்கோல உடையையும், மணமகளது ஆடையையும் மநுவோடு தேவர்களால் அளிக்கப்பட்ட இவற்றையும் அறியும் பிராமணனுக்குத் தருபவன் சயன அரக்கர்களை அழிப்பவனாவான். ௪௨ பிரகஸ்பதியே, இந்திரனே! மணம் நாடும் எனக்கு அவர்கள் பிரம்ம பாகமாக அளிக்கும் மணப்பெண் ஆடையையும் மணக்கோல உடையையும் நீங்கள் அநுகூலமாகி பிராமணனுக்களியுங்கள். ௪௩ இனிமையான சயனத்தினின்றும் எழுந்து அதி ஆனந்தமாய் நீங்கள் இன்பமாகி குதூகலத்தோடு நற்பசுக்கள் நல்ல மக்கட்கள் நலமான மனைகளுடனாகி வாழ்ந்து அதிபிரகாசமான—வெகு பல—உஷைகளைக் கடந்து செல்லுங்கள். ௪௪ நான் புதிய உடை அணிந்து சுகந்தமாகி நல்லாடை சூழ்ந்து அதி ஒளியுள்ள உஷைகளுக்கு உயிருள்ளவனாய் எழுந்துள்ளேன்; பறவை அண்டத்தினின்றும் போல் எல்லா சண்டத்தினின்றும் நான் நீங்கியுள்ளேன். ௪௫ சோதியும் புவியும் சுந்தரமானவைகள்; அருகிலுள்ள இனிமைகள், மகாவிரதங்களின்—சொரூபங்கள்; ஏழு திவ்யமான சலங்கள் பாய்ந்துள்ளார்கள். அவர்கள் எங்களைத் துன்பத்தினின்றும் நீக்குவார்களாக. ௪௬ நாங்கள் இந்த வணக்கத்தைச் சூரியனுக்கும், தேவர்களுக்கும், மித்திர வருணனுக்கும், நிகழ்ச்சிகளை யெல்லாம் அறிபவர்களுக்கும் வழங்கியுள்ளோம். ௪௭ பசையற்ற அவன் கண்டத்தின் என்புகள் துண்டமாவதற்குள்ளே சேர்ப்பை சேர்த்து விடுகிறான்: மகவானும் அதி செல்வமுமுள்ள அவன் விகிருதத்தை மறுபடியும் விலக்கி விடுகிறான். ௪௮ இருளும் அதிநீலமும் பழுப்பும் சிகப்பும் எங்களிடமிருந்து நீங்குக.

நான் இந்தத் தூணிலே, மாசுடனுகி மாய்க்கும் அவளை பந்தஞ்செய்கிறேன். ருகூ நான் இந்த ஸ்தம்பத்திலே வெளி ஆடையிலுள்ள எல்லா புன்செயல்களையும், வருண இராஜனது எல்லாப் பாசங்களையும் பந்தஞ் செய்கிறேன். ரு௦ நான் அதிப்ரியமாய்க் கருதும் என் காயம் இந்த ஆடையிலே கலங்கி நடுங்குகின்றது; வனஸ்பதியே ! அதனை நீ முதன்மையாக ஒரு உள் உடை செய்துகொள்: நாங்கள் துன்பமற்றுவோமாக. ருக எல்லா விளிம்பு களும் ஓரங்களும், எல்லா இழைகளும் நூல்களும், மனைவி யால் நெய்யப்பட்ட வஸ்திரமும் எங்களை இனிமையாய்ப் பற்றுக. ருஉ பிதுரு உலகத்தினின்று புருஷனுக்குச் செல்லும் இந்த இள மங்கைகள் தீட்சையை விட்டுவிட் டுள்ளார்கள்: சுவாஹா ! ருங பிரகஸ்பதியால் விட்டு விடப்பட்டுள்ள அவளை எல்லா தேவர்களும் தரித்தார் கள்: பசுக்களிலே எந்த பலம் நுழைந்துள்ளதோ அத னுடன் நாங்கள் இந்த அணங்கைச் சேர்க்கிறோம். ருச பிரகஸ்பதியால்...........பிரகாசம்.... ....சேர்க்கிறோம். ருரு பிரகஸ்பதியால்...........செல்வம்........சேர்க்கிறோம். ருசு பிரகஸ்பதியால்....புகழ்....சேர்க்கிறோம். ருஎ பிர கஸ்பதியால்........பால்........சேர்க்கிறோம். ருஅ பிரகஸ்பதி யால்........இரஸம்........சேர்க்கிறோம். ருகூ உனது மனை யிலே இந்த கேசமுள்ளவர்கள் ஒன்றுசேர்ந்து நடித்து துக்கமுடன் துன்பஞ் செய்திருந்தால், அப்பாவத்தி னின்றும் அக்கினியும் சவிதாவும் உன்னை விடுதலை செய் வார்களாக. சு௦ உனது மனையிலே அவிழ்ந்த கேச முடன் உனது இந்தப் பெண் அழுது துக்கமுடன்........ செய்வார்களாக. சுக உனது மனையிலே, சகோதரிகளும் இளம் மங்கைகளும்........செய்வார்களாக. சுஉ உனது பிரஜையிலோ, உனது மனைகளிலோ கேடு செய்பவர்

களால் ஏதேனும் கேடு கனிந்திருந்தால்......செய்வார்களாக. ௬௩. பொரிகளைத் தெளிக்க இந்தப் பாரி போற்றுகிறாள்: என் புருஷன் தீர்க்காயுசுடனுவானாக, அவன் நூறு வருஷங்கள் வாழ்க. ௬௪ இந்திரனே! சக்கரவாகங்களைப்போல் இத்தம்பதிகளை ஒன்றுசேர்: அவர்கள் பிரஜையுடன் நல்ல மனையுள்ளவர்களாய் ஆயுட்காலமுழுவதும் வாழ்வார்களாக. ௬௫ மஞ்சத்திலோ, சயனத்திலோ, போர்வையிலோ, மணத்திலோ, அவர்கள் செய்த புன்செயல்களை எல்லாம் நான் ஸ்ஞானத்திலே பிரித்துவிடுகிறேன். ௬௬ விவாஹத்திலே மண இரதத்திலே—தோன்றிய—துற்செயலை, தூய்மையின்மையை மணந்தடுப்பவனது கம்பளத்திலே அத்துன்பத்தை—துடைத்துவிடுகிறோம். ௬௭ மணந்தடுப்பவனிலே தூய்மையின்மையையும், ஆடையிலே துன்பத்தையும் ஸ்தாபனஞ்செய்து, நாங்கள் சுத்தர்களாயும் யக்ஞார்களாயுமுள்ளோம்: அவன் எங்கள் வாழ்நாட்களை விசாலமாக்குவானுக. ௬௮ இங்கு நூறு பற்களுள்ள செயற்கைச் சீப்பு அவளது சிரம் கேசத்தின் கயத்தை நீக்கும். ௬௯ அவளது ஒவ்வொரு அங்கத்தினின்றும் நாங்கள் யக்ஷ்மத்தை நீக்குகிறோம்: அது தரணியையும் தேவர்களையும் அணுகாமலாகுக, அது விரியும் வானத்தையும் சுவர்க்கத்தையும் சேராமலாகுக: அக்கினியே! அக்கேடு சலங்களைச் சேராமலாகுக: பிதுருக்களையும் யமனையும் அது அணுகாமலாகுக. ௭௰ நான் புவியின் பாலால் உன்னைக்கட்டுகிறேன்: நான் ஓஷதிகளின் பாலால் உன்னைக் கட்டுகிறேன்: பிரஜையால், பொருள்களால் கட்டுகிறேன்: கச்சையுடனுன நீ இந்த சக்தியை வெல்லு. ௭௧ நான் தான் அவன், நீ அவள்: நான் ஸாமன், நீ ரிக்கு: நான் சுவர்க்கம், நீ புவி: இங்கு நாம் இருவரும் ஒன்று

சேர்வோமாக: நாம் பிரசையை சனனஞ் செய்வோமாக. எஉ நம்மில் விவாஹமாகாதவன் மனைவியைத் தேடுகிறான், சுதானன் மகனை நாடுகிறான்: நாங்கள் இன்னற்படாமல், சக்தியிலே சிறப்புக்காக ஒன்று சேர்ந்திருப்போம். எங இந்த மணக்கோலத்துக்கு, மணமகளைப் பார்க்க வந்துள்ளப் பிதுருக்கள் இந்தப் பெண்ணிலே புருஷனிலே பிரஜையோடு சேரும் பாதுகாப்பை யளிப்பார்களாக. எச கச்சைகட்டி இங்கு முன்னராக வந்துள்ளவள் இந்தப் பெண்ணுக்கு பிரசையையும் பொருளையு மளித்து அவளை அவர்கள் எதிர்கால வழியிலே செலுத்துவார்களாக, நல்ல பிரஜையுள்ள விராஜையான இவள் ஜயித்துள்ளாள், எரு நீலவிழிப்புடன் நூறு சரத்களின் தீர்க்காயுசுக்கு விழிப்புடனாகி எழுச்சியிலோங்கு: மனையின் மனைவியாக நீ மனைகளுக்குச் செல்: சவிதா உனக்குத் தீர்க்காயுசைச் செய்வாளாக. [கச. உ. க—எரு]

கச-வது காண்டம் முற்றிற்று.

## சஅரு—ருOஉ

சஅரு விராத்தியன் [அத்யாத்மகம்—விராத்தியன்]

க சுற்றும் விராத்தியன் ஒருவனிருந்தான்; அவன் பிரஜாபதியைப் பிரேரித்தான். உ பிரஜாபதி தன்னில் பொன்னைக் கண்டான்: அதனை சனனஞ் செய்தான். ந அது ஏகமாயிற்று; அது சுந்தரமாயிற்று, அது பெரியதாயிற்று, அது தலைமையாயிற்று, அது பிரம்மமாயிற்று. அது தவமாயிற்று, அது சக்தியுமாயிற்று. அதனால் அவன் சந்தானமடைந்தான். ச அவன் வளர்ந்தான், அவன் மேலானான், அவன் மகாதேவனா

சஅச கருத்து—இல்வாழ்க்கை.

ஞன். ரு அவன் தேவர்களது ஈசத்வத்தை அடைந்தான்: அவன் ஈசஞஞன். சு அவன் ஒரே விராத்தியஞஞன்[1]; அவன் ஒரு வில்லைப் பற்றினன்: அது இந்திரனது வில்லாயிற்று. எ அதன்—வில்லினுடைய—நிறம் நீலம், அதன் முதுகு சிகப்பு. அ நீலத்தால் பிரியமில்லாத பகைவனைச் சூழ்கிறுன். சிகப்பால் வெறுப்பவனைக் குத்துகிறுன்—இங்ஙனம் பிரம்ம வாதிகள் விளம்புகிறுர்கள். [கரு. க. க—அ]

சஅகூ சொரூபம்

க அவன் எழுந்தான், அவன் கீழ்த்திசையை யநுசரித்தான், பிரஹத்தும் இரதந்தரமும், ஆதித்தியர்களும் விசுவே தேவர்களும் அவனைப் பின் தொடர்ந்தார்கள்; இங்ஙனம் அறியும் விராத்தியனை நிந்திப்பவன் பிரஹத்துக்கும் இரதந்தரத்துக்கும், ஆதித்தியர்களுக்கும் விசுவே தேவர்களுக்கும், குற்றஞ் செய்பவஞவான், இங்ஙனமறிபவன், பிரஹத்துடைய, இரதந்தரத்துடைய ஆதித்தியர்களுடைய தேவர்களுடைய பிரிய நிலயமாகிறுன்: அவனுக்குக் கீழ்த் திசையிலே சிரத்தை, அவனது சுரிகுழலாள், மித்திரன் அவனது காயகன், விஞ்ஞானம் அவனது வஸ்திரம். பகல்—அவனது தலைப்பாகை, இரவு—அவனது கேசம், பொன்மை அவனது இரு புரவிகள், விண்மீன்—அவனது மணி, இருப்பதும் இருக்கப்போவதும்—அவனது இரு காலாட்கள், மனம்—அவனது வாஹனம். மாதரிசுவனனும் பவமானனும் அவனது போர் இரதத்தை இழுக்கும் இருவர்கள், வாதன் அவனது சாரதீ, சுழல் காற்று அவனது தூண்டுகோல், புகழும் பெருமையும் அவனுக்கு முன் செல்பவர்கள்: இங்ஙன

---

1 விரதம் விலகியவன், எதற்கும் எவனுக்குந் தனிமையானவன் நாடோடி, பறையன்.

மறிபவனுக்குப் புகழ் வருகின்றது, பெருமையும் வருகின்றது. உ அவன் எழுந்தான், தென் திசை சென்றான்: அவனை யக்ஞா யக்ஞியமும், வாமதேவ்யமும், பசுக்களும் யக்ஞமும் யஜமானனும் பின் தொடர்ந்தார்கள், இங்ஙனம் அறியும் விராத்தியனை நிந்தனை செய்பவன் யக்ஞாயக்ஞியத்துக்கும், பசுக்களுக்கும், யக்ஞத்துக்கும், யஜமானனுக்கும் குற்றஞ் செய்பவனாவான், இங்ஙனம் அறிபவன் யக்ஞா யக்ஞியத்துடைய, பசுக்களுடைய, யக்ஞத்துடைய, யஜமானனுடைய பிரிய நிலயமாகிறான். அவனுக்குத் தென்திசையிலே உஷை காந்தை, மந்திரம் கானஞ் செய்பவன், விக்ஞானம் வஸ்திரம், பகல் தலைப்பாகை. இரவு கேசம், பொன்மை இரு புரவிகள், விண்மீன்—நகை, பூர்ணிமையும் அமாவாசையும் இரு காலாட்கள், மனம்...........வருகின்றது. ந அவன் எழுந்தான் அவன் மேற்றிசையை யனுசரித்தான்: வைரூபனும் வைராஜனும் சலங்களும், இராஜாவான வருணனும் அவனைப் பின் தொடர்ந்தார்கள். இங்ஙன மறியும் விராத்தியனை நிந்தனை செய்பவன் வைரூபனுக்கு வைராஜனுக்கு சலங்களுக்கு இராஜாவான வருணனுக்கு, குற்றஞ் செய்பவனாவான். இங்ஙனம் அறிபவன், வைரூபனுடைய, வைராஜனுடைய, சலங்களுடைய இராஜாவான வருணனுடைய பிரிய நிலயமாகிறான், அவனுக்கு மேற்றிசையிலே இன்பம் அவனது வனிதை. சிரிப்பு, அவனுக்கு கானஞ் செய்பவன், பகல் தலைப்பாகை, இரவு—கேசம், பொன்மை—இரு புரவிகள், விண்—மீன் நகை, இரவும் பகலும் அவனுக்கு இரு காலாட்கள், மனம்.........வருகின்றது. ச அவன் எழுந்தான், அவன் வடதிசையை யநுசரித்தான்: அவனை சியைதமும் நௌசதமும்,[1] ஏழு ரிஷி

1 இருவகை சாமன்கள்.

களும், சோம இராஜனும் பின் தொடர்ந்தார்கள்; இங்ஙன மறியும் விராத்தியனை நிந்தனை செய்பவன், சிலைதத்துக்கு நௌதசத்துக்கு, எழு ரிஷிகளுக்கு, சோம இராஜனுக்கு, குற்றஞ் செய்பவனாவான். இங்ஙனம் அறிபவன் சிலைதத்துடைய, நௌதசத்துடைய, எழு ரிஷிகளுடைய சோம இராஜனுடைய பிரிய நிலயமாகிறான். அவனுக்கு வட திசையிலே மின்னல் அவனது விலைமகள், இடி—கானஞ் செய்பவன், விக்ஞானம் வஸ்திரம், பகல் தலைப்பாகை, இரவு—கேசம் பொன்மை அவனது இரு புரவிகள். கேட்பதும் கேட்கப்போவதும் இரு காலாட்கள், மனம் ....வருகின்றது. [கரு. உ. க—சு]

சுஅன மஞ்சம்.

க அவன் ஒரு வருஷம் நிமிர்ந்து நின்றான். 'இப்போது நீ ஏன் நிற்கிறாய்' எனத் தேவர்கள் அவனைக் கேட்டார்கள். உ 'எனக்கு அவர்கள் மஞ்சத்தை கொண்டு வருவார்களாக' என அவன் பதில் அளித்தான். ந அவர்கள், அந்த விராத்தியனுக்கு மஞ்சத்தைக் கொண்டு வந்தார்கள். ச கிரீஷ்மமும் வசந்தமும் அதன் இரு கால்கள், சரமும் வர்ஷங்களும், அதன் வேறு இரு பாதங்கள். ரு பிரஹத்தும் இரதந்தரமும் அதன் நீளத் துண்டுகள், யஜ்ஞயஜ்யமும் வாமதேவ்யமும் அதன் குறுக்குத் துண்டுகள். சு ரிக்குக்கள் அதன் பரப்பு இழைகள், யஜுஸுக்கள் அதன் குறுக்கு இழைகள். எ வேதம் போர்வை, பிரமம் தலையணை: அ சாமன் ஆசனம் உத்கீதம் ஆதாரம். கூ விராத்தியன் அம்மஞ்சத்திலேறினான். க0 அவனுக்கு தேவசனங்கள் காலாட்கள், சங்கற்பங்கள் தூதர்கள்: கக அங்ஙனம் அறிபவனுக்கு அனைவரும் பணிவிடை செய்பவர்களாகிறார்கள். [கரு. ந. க—கக]

சஅஅ காவலரும் கையாட்களும்,

க அவர்கள் கீழ்த் திசையினின்றும் அவனுக்கு இரு வசந்த மாதங்களைக் காவலர்களாகவும், பிரஹத்தையும் இரதந்தரத்தையும் கையாட்களாகவும் செய்தார்கள்: இங்ஙன மறிபவனை இரு வசந்த மாதங்கள் கீழ்த் திசையினின்று காவல் செய்கிறார்கள். பிரஹத்தும் இரதந்தரமும் அவனுக்கு ஆஜராகிறார்கள். உ அவர்கள் தென் திசையினின்று அவனுக்கு இருகிரீஷ்ம மாதங்களை காவலர்களாகவும் யக்ஞாயக்ஞியத்தையும் வாமதேவ்யத்தையும் கையாட்களாகவும் செய்தார்கள். இங்ஙன மறிபவனை இரு கிரீஷ்ம மாதங்கள் காவல் செய்கிறார்கள், யக்ஞாயக்ஞியமும் வாமதேவ்யமும் அவ்னுக்கு ஆஜராகிறார்கள். ந அவனுக்கு அவர்கள் மேற்றிசையினின்று மழை மாதங்களில் இரண்டைக் காவலர்களாகவும், வைரூபனையும் வைராஜனையும் கையாட்களாகவுஞ் செய்தார்கள். இங்ஙன மறிபவனுக்கு மழை மாதங்கள் இரண்டும் மேற் திசையினின்று காவல் செய்கின்றன. அவனுக்கு வைரூபனும் வைராஜனும் ஆஜராகிறார்கள். ச வடதிசையினின்று இருசரத் மாதங்களைக் காவலர்களாகவும் சியதத்தையும், நௌதஸையும் கையாட்களாகவும் அவர்கள் அவனுக்குச் செய்தார்கள். இங்ஙன மறிபவனுக்கு இரு சரத் மாதங்கள் வடதிசையினின்று காவல் செய்கின்றன. அவனுக்கு சியைதையும் நௌதசமும் ஆஜராகிறார்கள். ரு அவனுக்குத் துருவ திசையினின்று அவர்கள் இரு ஏமந்த மாதங்களை காவலர்களாகவும் புவியையும் அனலையும் கையாட்களாகவுஞ் செய்தார்கள். இங்ஙன மறிபனுக்குத் துருவ திசையினின்று இரு ஏமந்த மாதங்கள் காவல் செய்கின்றன. அவனுக்குப் புவியும் அனலும் ஆஜராகிறார்கள். சு அவனுக்கு அவர்கள் உச்சி திசையி

னின்று இரு சிசிர மாதங்களை காவலர்களாகவும் சோதியையும் ஆதித்தியனையும் கையாட்களாகவுஞ் செய்தார்கள். உச்சி திசையினின்று இரு சிசிர மாதங்கள் இங்ஙனமறிபவனுக்குக் காவல் புரிகின்றன. சோதியும் ஆதித்தியனும் அவனுக்கு ஆஜ்ஞராகிறார்கள். [கரு. ச. க—சு]

சஅகூ தோண்டன். [ருத்திர கண சூக்தம்—மந்திரோக்தோ ருத்திர தேவதை.]

க அவர்கள், அவனுக்குக் கீழ்த் திசையின் இடைத் திசையினின்று, வில் ஆள்பவனைத் தொண்டனாக்கினார்கள். கீழ்த்திசையின் இடைத் திசையினின்று பவனை வில்லாளி அவனைத் தொண்டனாக அநுசரிக்கிறான். இங்ஙனம் அறிபவனையும் அவனது பசுக்களையும் அவனது பந்துக்களையும் சர்வனும் பவனும் ஈசனும் துன்பஞ் செய்வதில்லை, பவனும் இல்லை. உ அவர்கள் அவனுக்குத் தென் திசையின் இடைத் திசையினின்று வில்லியான சர்வனைத் தொண்டனாகச் செய்தார்கள். தென் திசையின் இடைத் திசையினின்று வில்லாளனை சர்வன் அவனைத் தொண்டனாக அநுசரிக்கிறான். இங்ஙனம்....செய்வதில்லை. ங அவர்கள் அவனுக்கு மேற்திசையின் இடைத் திசையினின்று வில்லியான பசுபதியைத் தொண்டனாக்கினார்கள். வில்லியான பசுபதி மேற்திசையின் இடைத் திசையினின்று அவனைத் தொண்டனாக அநுசரிக்கிறான். இங்ஙனம்.............செய்வதில்லை. ச அவர்கள் அவனுக்கு வடதிசையின் இடைத் திசையினின்று வில்லியான உக்கிரதேவனைத் தொண்டனாகச் செய்தார்கள்; வில்லியான உக்கிரதேவன் வடதிசையின் இடைத் திசையினின்று அவனைத் தொண்டனாக அநுசரிக்கிறான்; இங்ஙனம் .........செய்வதில்லை. ரு அவர்கள் அவனுக்குத் துருவ திசையின் இடைத் திசையினின்று வில்லியானத்

தொண்டனை ருத்திரனாகச் செய்தார்கள் ; வில்லியான
ருத்திரன், துருவ திசையின் இடைத் திசையினின்று
அவனைத் தொண்டனாக அநுசரிக்கிறான் : இங்ஙனம்......
......செய்வதில்லை. ௬ அவர்கள் உச்சி திசையின்
இடைத் திசையினின்று அவனுக்கு வில்லியான மகா
தேவனைத் தொண்டனாகச் செய்தார்கள் : வில்லியான
மகாதேவன் உச்சி திசையின் இடைத் திசையினின்றும்
அவனைத் தொண்டனாக அநுசரிக்கிறான் ; இங்ஙன மறிப
வனை........செய்வதில்லை. ௭ அவர்கள், அவனுக்கு
எல்லா இடைத் திசைகளினின்றும் வில்லியான ஈசான
னைத் தொண்டனாக்கிறார்கள். எல்லா இடைத் திசைகளி
னின்று வில்லியான ஈசானன் அவனைத் தொண்டனாக
அநுசரிக்கிறான். இங்ஙனம்........செய்வதில்லை. [௧௫
—௫. ௧—௭.]

**௪௯0 சலனம்**

௧ அவன் துருவ திசைக்குச் சென்றான் ; அவனைப் புவி
யும் அக்கினியும் ஔஷதங்களும் வனஸ்பதிகளும் வானஸ்
பத்தியங்களும் செடி கொடிகளும் தொடர்ந்தார்கள் :
இங்ஙனம் அறிபவன் புவி—அக்கினி—ஔஷதங்கள்—
வனஸ்பதிகள்—வானஸ்பதிகள்—செடி கொடிகளின்,
பிரிய நிலயமாகிறான். ௨ அவன் உச்சி திசைக்
குச் சென்றான் ; அவனை, ருதமும் சத்தியமும், சூரியனும்
சந்திரனும் தாரகங்களும் தொடர்ந்தார்கள் : இங்ஙனம்
அறிபவன் ருதம்—சத்தியம்—சூரியன்—சந்திரன்—நட்
சத்திரங்களின் பிரிய நிலயமாகிறான். ௩ அவன் உயரிய
திசைக்குச் சென்றான் : அவனை ருக்குக்களும், ஸாமன்
களும் யஜுஸ்க்களும், பிரம்மமும் தொடர்ந்தார்கள் : இங்
ஙனமறிபவன் ருக்ஸாம—யஜுஸ்க்களின் பிரம்மனின் பிரிய
நிலயமாகிறான். ௪ அவன் பெரிய திசைக்குச் சென்றான்.

அவனை, இதிஹாசமும், புராணமும், காதைகளும் நாரா சம்ஸிகளும் தொடர்ந்தார்கள்: இங்ஙனமறிபவன், இதிஹாசத்தின், புராணத்தின், காதையின் நாராசம்ஸித்தின், பிரிய நிலயமாகிறான் ௫ அவன் பரம திசைக்குச் சென்றான்; அவனை ஆஹவனீயமும், காருஹபத்தியமும், தட்சிணாக்கினியும், யக்ஞமும், யஜமானனும், பசுக்களுந் தொடர்ந்தார்கள்; இங்ஙனம் அறிபவன் ஆஹவனீயத்தின் காருகபத்தியத்தின் தட்சிணாக்கினியின் யக்ஞத்தின் யஜமானனின், பசுக்களின், பிரிய நிலயமாகிறான். ௬ அவன் காணாத திசைக்குச் சென்றான்: அவனை ருதுக்களும், ருது சேர்க்கைகளும், உலகங்களும் உலகச் சேர்ப்புக்களும் மாதங்களும் பட்சங்களும் இரவும் பகலும் தொடர்ந்தார்கள். இங்ஙனமறிபவன், ருதுக்களின், ருதுச் சேர்க்கைகளின், உலகங்களின் உலகச் சேர்ப்புக்களின் மாதங்களின், பட்சங்களின் இரவு—பகற்களின் பிரிய நிலயமாவான் ௭ அவன் திரும்பி வராத திசைக்குச் சென்றான்: அங்கிருந்து நான் திரும்பப்போவதில்லை என அவன் நினைத்தான்; அவனை திதியும் அதிதியும் இடையும் இந்திராணியும் தொடர்ந்தார்கள்; இங்ஙனம் அறிபவன் திதியின், அதிதியின் இடையின், இந்திராணியின் பிரிய நிலயமாகிறான். ௮ அவன் திசைகளுக்குச் சென்றான்: அவனை விராஜனும் எல்லாத் தேவர்களும், எல்லாத் தேவதைகளும் தொடர்ந்தார்கள்: இங்ஙனம் அறிபவன் விராஜனின், எல்லா தேவர்களின், எல்லா தேவதைகளின் பிரிய நிலயமாகிறான். ௯ அவன் எல்லா இடைத் திசைகளுக்குஞ் சென்றான்; அவனைப் பிரஜாபதியும், பரமேஷ்டியும் பிதாவும் பிதாமகனும் தொடர்ந்தார்கள்; இங்ஙனமறிபவன், பிரஜாபதியின், பரமேஷ்டியின், பிதாவின், பிதாமகனின், பிரிய நிலயமாவான். [கரு. ௬. க—௯]

சகக சலநிதி.

க அவன் திரவமாகிப் புவியின் எல்லேக்குச் சென்றான். அவன் சலநிதி யானான். உ பிரஜாபதியும், பரமெஷ்டியும் பிதாவும், பிதா மஹனும், சலங்களும் சிரத்தையும் மழையாகி அவனை அநுசரித்தார்கள். ந இங்ஙன மறிபவனுக்குச் சலங்கள் வருகின்றன, சிரத்தை வருகின்றது, மழை வருகின்றது. ச அவனுக்குச் சிரத்தையும், யக்ஞமும் உலகமும் உணவும் (உணவு புசிப்பும்) புலனாகும். ரு இங்ஙனம் அறிபவனுக்குச் சிரத்தை வருகின்றது. அவனுக்கு யக்ஞம் வருகின்றது. அவனுக்கு உலகம் வருகின்றது. அவனுக்கு உணவு புசிப்பு வருகின்றது. [கரு. எ. க—ரு.]

சகஉ ஆர்வன்.

க அவன் ஆர்வமுடனானன், உடனே அரசன் தோன்றினான். உ அவன் சனங்களுக்கும் சகோதரர்களுக்கும், உணவுக்கும் உணவுண்ணலுக்கும் உச்சமானான். ந இங்ஙன மறிபவன் சனங்களின்—சகோதரர்களின்—உணவின்—உணவு உண்ணலின் பிரிய நிலயமாவான். [கரு. அ]

சகந சபை.

க அவன் சனங்களுக்குச் சென்றான். உ அவனைச் சபையும், சமிதையும் சேனையும் சுராபானமும் அநுசரித்தன: ந இங்ஙன மறிபவன் சபையின்—சமிதையின்—சேனையின்,—சுராபானத்தின் பிரிய நிலயமாவான். [கரு. கூ]

சகச பிரம்மனும் க்ஷத்திரனும்:

க இங்ஙனம் அறியும் விராத்தியன் எந்த அரசனது மனைக்கு அதிதியாக வந்தாலும், உ அவனைத் தன்னிலும் உயர்ந்தவன் என அவனை—அரசன்—கருதவேண்டும். அவனே இராஷ்டிரத்துக்குக் குற்றஞ் செய்யாதவனாவான்: அவனே க்ஷத்திரத்துக்குக் குற்றஞ் செய்யாத

வனுவான். ௩ அவனிடமிருந்து பிரம்மனும் க்ஷத்திரனும் தோன்றினார்கள்: நாம் எங்கு நுழைவோம் என அவர்கள் சொன்னார்கள். ௪ 'பிரம்மன் பிரஹஸ்பதியிலே நுழைவானாக க்ஷத்திரன் இந்திரனிலே சேர்வானாக' என இயம்பப்பட்டது. ரு அப்பால் பிரம்மன் பிரகஸ்பதியிலே நுழைந்தான், க்ஷத்திரன் இந்திரனோடு சேர்ந்தான். ௬ இப்புவியே பிரஜாபதி, சோதியே இந்திரன். எ இந்த அக்கினியே பிரம்மனுவான். அங்குள்ள ஆதித்தியன் க்ஷத்திரியன். அ௯ புவியை பிரகஸ்பதியாகவும் அக்கினியை பிரம்மனாகவும் அறிபவனிடம் பிரம்மன் வருவான், அவன் பிரம்மவர்சஸைப் பற்றுபவனுவான். ௧0-௧௧ ஆதித்தியனை க்ஷத்திரமாயும் சோதியை இந்திரனுயுமறிபவனுக்கு இந்திரியம் தோன்றும்; இந்திரனது செல்வம் பற்றுபவனுவான். [௧ரு. ௧0, ௧—௧௧]

௪௩ரு அதிதி.

௧ எவனது மனைகளுக்கு இங்ஙனம் அறியும் விராத்தியன் அதிதியாக வருகிறானோ, உ அவனை அணுகி அம் மனையின் பதி சொல்ல வேண்டுவதாவது—உனது வாசம் எங்கே? விராத்தியனே! இதோ சலம் உன்னை அது திருப்தி செய்க; விராத்தியனே! உன் பிரியம் போலாகுக: விராத்தியனே! உனது விருப்பம் போலாகுக, உனது இஷ்டம் போலாகுக ௩ விராத்தியனே! உனது வாசம் எங்கே? என ஒருவன் கேட்கும்போது அதனால் தேவர்கள் செல்லும் வழிகளையெல்லாம் அவன் பற்றுபவனுகிறான். ௪ விராத்தியனே! இதோ சலம் என அவனுக்கு வழங்கும்போது, அதனால் சலங்களை பற்றுபவனுகிறான். ரு விராத்தியனே! அவர்கள் உனக்குத் திருப்திசெய்க என அவன் அவனுக்குக் கூறும்போது அதனால் அவன் தனது பிராணனைத் தீர்க்கஞ் செய்து கொள்ளுகிறான் ௬ விராத்

தியனே, உன் பிரியம் போலாகுக எனப் புக லும் போது அதனால் பிரியமானதைப் பற்றுகிறான். எ இங்ஙனம் அறிபவனுக்குப் பிரியமானது சேரும், அவனது பிரியனுக்குப் பிரியனாகிறான். அ விராத்தியனே! உன் விருப்பம் போலாகுக என விளம்பும்போது, அதனால் விருப்பமெல்லாம் அவனில் சேரும். கூ இங்ஙனம் அறிபவனுக்கு விருப்பம் வரும், விருப்பம் பற்றுபவர்களது விருப்பத்தை பற்றுபவனாவான். க0 விராத்தியனே! அது உன் இஷ்டம் போலாகுக என வசனிக்கும் போது அதனால் இஷ்டப்பொருள்களை யெல்லாம் பற்றுகிறான். கக இங்ஙனமறிபவனுக்கு இஷ்டங்கள் குவியும். அவன் இஷ்டத்தில் இணைகிறான். [கரு. கக. க—கக]

**சகக யக்ஞம்.**

க அனல்களைச் சேர்த்து அக்கினி ஹோத்திரம் ஸ்தாபிதமாங்கால் ஒருவனது மனைகளுக்கு இங்ஙனம் அறியும் விராத்தியன் வந்தால், உ அவனை அணுகி அவன் சொல்ல வேண்டுவதாவது—விராத்தியனே! எனக்கு ஆக்ஞை அளி; நான் யக்ஞஞ் செய்யப் போகிறேன்.! ந அவன் ஆக்ஞையை யளித்தால் மனைபதி யக்ஞஞ் செய்யலாம்; அவன் மறுத்தால் யக்ஞஞ் செய்யலாகாது. ச இங்ஙன மறியும் விராத்தியனால் அனுமதிக்கப்பட்டு யக்ஞஞ் செய்பவன், ரு பிதுருக்கள் போகும் வழியையும், தேவர்கள் செல்லும் வழியையும் நன்கு அறிகிறான். சு அவன் தேவர்களுக்குக் குற்றஞ் செய்பவனாவதில்லை. அவனது யக்ஞம்—பக்குவமாகும். எ இங்ஙனம் அறியும் விராத்தியனால் அநுமதிபெற்று யக்ஞஞ் செய்பவனுக்கு இந்த உலகத்திலே ஆதரவு உண்டு அ—கூ இங்ஙன மறியும் விராத்தியனால் அநுமதிக்கப்படாமல் யக்ஞத்தைச் செய்பவன், பிதுருக்கள் செல்லும்

வழியை அறிவதில்லை: தேவர்கள் போகும் வழியையும் அறியான். ௧௦ அவன் தேவர்களுக்குக் குற்றஞ்செய்கிறான். அவனது யக்ஞம்—பக்குவ—மாகாது. ௧௧ இங்ஙனம் அறியும் விராத்தியனால் அநுமதிக்கப்படாமல் யக்ஞஞ் செய்பவனுக்கு, இவ்வுலகத்திலே எந்த ஆதாரவும் தோன்றாது. [௧ரு. ௧உ. ௧—௧௧]

சகஎ யக்ஞ பலம்.

௧ எந்த கிரகபதியின் மனையிலே அதிதியாக இங்ஙனம் அறியும் விராத்தியன் ஒரு இரவு தங்குகிறானே அவன் மாநிலத்துள்ள புண்ணிய உலகங்களை யெல்லாம் பற்றுகிறான். உ எவனது மனையிலே....இரண்டாவது இரவு....வானத்திலுள்ள..........பற்றுகிறான். ௩ எவனது........மூன்றாவது இரவு.......சோதியிலுள்ள.......பற்றுகிறான். ச எவனது..........நான்காவது இரவு..........புண்ணியரின்.......பற்றுகிறான். ரு எவனது..........எண்ணிக்கையற்ற இரவு......எல்லையற்ற...... பற்றுகிறான். சா எவனது மனைகளுக்கு விராத்தியன் என நாமந்தரித்து அவிராத்தியன் அதிதியாக வருகிறானே. எ அவனை ஆதரிக்கலாம், ஆதரிக்காமலாகலாம். அ இந்த தேவதைக்குச் சலமளிக்கிறேன். இந்த தேவதையை வசிக்கச் செய்கிறேன், இந்த தேவதையை உபசரிக்கிறேன்—இந்த எண்ணத்தோடு அவனை ஆதரிக்க வேண்டும். ௯ இங்ஙனம் அறிபவனது யக்ஞமானது தான் நினைத்த—தேவதைக்கு அங்கீகாரமாகும். [௧ரு. ௧௩. ௧—௯]

சகஅ விராத்திய உணவு.

௧ அவன் கீழ்த்திசையில் சென்றவுடன், மருத்து கணமாகிய மனத்தை, உணவு அருந்துபவராகச் செய்து சலனமானான். இங்ஙனம் அறிபவன் மனமெனப்படும் உணவு உண்பவனால் உணவைப் புசிக்கிறான். உ அவன்

தென் திசையில் சென்றவுடன் இந்திரனாக இலங்கி பலத்தை உணவு புசிப்பவனாகச் செய்து சலனமானான்: இங்ஙனம்........பலமெனப்படும்....புசிக்கிறான். ங அவன் மேற்திசையில் சென்றவுடன் அரசனான வருணனாக விளங்கி, சலங்களை உணவு புசிப்பவர்களாக.......சலங்கள் எனப்படும்.......புசிக்கிறான். ச அவன் வடதிசையில்.... அரசனான சோமனாகத் தோன்றி, எழு ரிஷிகளின் அவியை உணவு உண்பவனாகச் செய்து சலனமானான்; இங்ஙனம்...............அவி எனப்படும்...............புசிக்கிறான். ரு அவன் துருவதிசையில் சென்றவுடன் விஷ்ணுவாக விளங்கி விராஜனை உணவு உண்பவனாகச் செய்து சலனமானான்: இங்ஙனம் அறிபவன் விராஜன் எனப்படும் உணவு உண்பவனால் உணவை அருந்துகிறான். சா அவன் பசுக்களுக்குச் சென்றவுடன் ருத்திரனாகத் தோன்றி ஓஷதிகளை உணவு புசிப்பவர்களாகச் செய்து சலனமானான். இங்ஙனம் அறிபவன் ஓஷதிகள் எனப்படும் உண்பவர்களால் உணவை அமுது செய்கிறான். எ அவன் பிதுருக்களுக்குச் சென்றவுடன், யம இராஜ—னாகத் தோன்றி சுவதா அழைப்பை உணவு உண்பவனாகச் செய்து........ இங்ஙனமறிபவன் சுவதா அழைப்பு எனப்படும் உண்பவர்களால் உணவை அருந்துகிறான். அ அவன் மானிடர்களுக்குச் சென்றவுடன் அக்கினியாகத் தோன்றி சுவாஹா அழைப்பை உணவு புசிப்பவனாகச் செய்து சலனமானான், இங்ஙனம் அறிபவன் சுவாஹா அழைப்பு எனப்படும்.......அருந்துகிறான். கூ அவன் உச்சி திசைக்குச்

---

க இம்மந்திரத்தை அடியிற்கண்டவாறு வேறுவிதமாகவும் படிக்கலாம். அவன் கீழ்த் திசையில் செல்லுங்கால் மருத்துகணம் மலர்ந்து மனத்தை உணவு அருந்துபவனாகச் செய்து அவனை அநுசரித்தான்.

சென்றவுடன் பிரகஸ்பதியாகத்தோன்றி வஷட் கோஷத்தை உணவு உண்பவனுகச் செய்து சலனமானுன்; இங்ஙனம் அறிபவன் வஷட் கோஷம் எனப்படும் உணவு உண்பவனுல் உணவைப் புசிக்கிறுன். க0 அவன் தேவர்களுக்குச் சென்றவுடன் ஈசனுகத் தோன்றி கோபத்தை .............கோபம் எனப்படும் உணவு உண்பவனுல்........ புசிக்கிறுன். கக அவன் பிரஜைக்குச் சென்றவுடன் பிரஜாபதியாகத் தோன்றி பிராணனை...........பிராணன் எனப்படும் உணவு புசிப்பவனுல்........புசிக்கிறுன். கஉ அவன் எல்லா இடைத் திசைகளுக்குஞ் சென்றவுடன், பரமேஷ்டியாகி பிரமனை...........பிரமன் எனப்படும் உணவால்...........புசிக்கிறுன். [கரு. கச. க—கஉ]

ருகக பிராணங்கள்

க—உ அந்த விராத்தியனுக்கு ஏழு பிராணங்கள், ஏழு அபானங்கள், ஏழு வியானங்கள் உண்டு. ங உச்சம் என்னும் பெயருள்ள அவனது முதன்மையான பிராணனே இந்த அக்கினி. உ பக்குவம் என்னும் பெயருள்ள அவனது இரண்டாவது பிராணனே அங்குள்ள ஆதித்தியன். ங அப்யூடம் என்னும் பெயருள்ள அவனது மூன்றுவது பிராணனே அங்குள்ள சந்திரன். ரு விபூ—வலியன்—என்னும் பெயருள்ள அவனது நான்காவது பிராணனே பாவமானன். எ மூலம் என்னும் பெயருள்ள அவனது ஐந்தாவது பிராணனே இந்த சலங்கள். அ பிரியம் என்னும் பெயருள்ள அவனது ஆறுவது பிராணனே இந்த பசுக்கள். சு அபரிமிதம் என்னும் பெயருள்ள அவனது ஏழாவது பிராணனே இந்தப் பிரஜைகள். [கரு. கரு. க—கு]

ரு00 அபானங்கள்

க அந்த விராத்தியனது முதன்மையான அபானன்

பௌர்ணமாஸை. ௨ அவனது இரண்டாவது அபானன் அஷ்டமி. ௩ அந்த விராத்தியனது மூன்ருவது அபானன் அமாவாசை. ௪ அந்த விராத்தியனது நான்காவது அபானன் சிரத்தை. ௫—௬ அந்த விராத்தியனது ஐந்தாவது அபானன் தீட்சை. அவனது ஆருவது அபானன் யக்ஞம். ௭ அவனது ஏழாவது அபானன் இந்த யக்ஞ தட்சிணை. [௧௫. ௧௬. ௧—௭]

௫௦௧ வியானங்கள்

௧ அந்த விராத்தியனது வியானனே இந்த வையகம், ௨ அவனது இரண்டாவது வியானனே அந்த வானம், ௩ அவனது மூன்ருவது வியானனே அந்த சோதி, ௪ அவனது நான்காவது வியானனே அந்த விண்மீன்கள், ௫ அவனது ஆருவது வியானனே அந்த ருதுக்கள், ௬ அவனது ஏழாவது வியானனே அந்த ருதுச்சேர்க்கைகள், ௭ அவனது எட்டாவது வியானனே அந்த ருதுச் சேர்க்கைகள், ௮ சமான சித்தமுடன் தேவர்கள் அவனைச் சுற்றுகிருர்கள்; இப்படியே ருதுக்கள் வருஷத்தையும் விராத்தியனையுஞ் சுற்றுகின்றன, ௯ அவர்கள் ஆதித்தியனிலே ஒன்று நுழைபவர்கள்போல பூரணிமாசையிலும் அமாவாசையிலும் ஒன்று சேர்கிருர்கள். [௧௫. ௧௭. ௧—௧௦]

௫௦௨ விராத்தியனதங்கம்

௧—௨ அந்த விராத்தியனது வலது கண் அந்த ஆதித்தியனே; அவனது இடது கண்ணே அங்குள்ள சந்திரன், ௩ அவனது வலது செவியே இந்த அக்கினி, இடது காதே புனிதஞ் செய்யும் இக்காற்று, ௪ இரவும் பகலும் அவனது இரு நாசித் துவாரங்கள்; திதியும் அதிதியும் அவனது சிரத்தின் இரு கபாலங்களே, வருஷமே அவனது தலை. ௫ பகலிலே விராத்தியன் மேற்றிசையி

லிருப்பான்; இரவிலே கீழ்த்திசையிலிருப்பான்: விராத்தியனுக்கு வணக்கம். [௧௫. ௧௮. ௧—௫]

௧௫-வது காண்டம் முற்றிற்று.

## ௫௦௩—௫௧௧.

௫௦௩. சலம். [பிரஜாபதி]

௧ சல விருஷபன் விடப்பட்டுள்ளான், திவ்யர்களும் நன்கு விடப்பட்டுள்ளார்கள். ௨ பிளப்பவனை, பரிப்பவனை படைப்பவனை, பாழாக்குபவனை, ௩ நவிப்பவனை, மனம் மாய்ப்பவனை துமிப்பவனை, தகிப்பவனை, ஆத்மா அழிப்பவனை, காயங் ௪ கீறுபவனை, நான் இங்ஙனம் விட்டுவிடுகிறேன்[1] நீ என்னை அக்குறையினின்று நீக்குகிறாய். ௫ எங்களை வெறுப்பவனிலும் எங்களால் துவேஷிக்கப்படுபவனிலும் நாங்கள், அக்கேடுகளை செல்லச் செய்கிறோம். ௬ நீ சலமுனை நான் உங்களை சலநிதியில் செல்லச் செய்கிறேன். ௭ சலங்களிலேயுள்ள அனலை நவிப்பவனை, துமிப்பவனை, காயங்கீறுபவனை நான் பாயச் செய்கிறேன். ௮ சலங்களே! உங்களில் நுழைந்துள்ள இவனே அந்த அக்கினி: உங்களில் உக்கிரமானவன் எவனோ அவனே இவன். ௯ இந்திரனின் இந்திரியத்துடன் அவன் உங்களில் பொழிவானாக. ௧௦ சலங்கள் சிசுவினின்றும் நீங்கியவர்கள். எங்களிடமிருந்து அவர்கள் கயத்தை நீக்குவார்களாக. ௧௧ எங்களிடமிருந்து அவர்கள் பாவத்தைப் பிரிப்பார்களாக. புன் கனவையும் அவர்கள் சுமப்பார்களாக. ௧௨ சலங்களே! சிவமான

---

1 தூரஞ் செய்கிறேன்.

௪ அ௫-௫௦௨ கருத்து—தாழ்ந்தோனை உயர்த்துவது விராத்தியனை அறிவதாகும்.

கண்ணால் என்னைக் காண்மின். சிவமான காயத்தால் என் காயத்தைப் பரிசியுங்கள். கூ சலங்களிலே சாய்ந்துள்ள சிவமான அக்கினிகளையெல்லாம் நாங்கள் அழைக்கிறோம். தேவிகளே! என்னில் க்ஷத்திரத்தையும் சக்தியையும் அளியுங்கள். [கக. க]

ருoச துதி. [வாக்கு தேவதை]

க இன்னலுணவு நீங்குக. தேன் மிகுந்த மொழி உணவினின்று தோன்றும். உ நீங்கள் தேன் மிகுந்தவர்கள். நான் தேன் மிகும் மொழியைப் பேசவேண்டும். ங நான் கோபனை அழைத்துள்ளேன். நான் அவனது காப்பையும் அழைத்துள்ளேன். ச இரு செவிகளும் நல்ல சுருதிகளுள்ளவை. இரு காதுகளும் மங்களக் கேள்விகளுள்ளவை. நான்மேலான சுலோகத்தைக் கேட்க வேண்டும். ரு திவ்யச் சுருதியும், துரிதச் சுருதியும் என்னை விட்டு நீங்காமலாகுக. நான் கருடக் கண்ணோடு கழியாத சோதியோடாக வேண்டும். கூ நீ ரிஷிகளின் விரிப்பு: திவ்ய விரிப்புக்கு வணக்கமாகுக. [கக. உ]

ருoரு நான் பிரமன் [ஆதித்தியன்.]

க நான் செல்வங்களின் சிரமாயும், சமானர்களின் தலைவனுமாக வேண்டும். உ சோதியும் பிரகாசமும் என்னை நீங்காமலாகுக. தலையும் தாரகனும் என்னை விட்டுவிடாமலிருக்கட்டும். ங பண்டமும் பாத்திரமும் என்னை விட்டுப் பிரியாமலாகுக. தரிப்பவனும் தாங்குபவனும் என்னைக் கைவிடாமலிருப்பார்களாக. ச விடுவிப்பவனும் ஈரவினிம்புள்ளவனும், ஈரத்துளிகளுள்ளவனும், மாதரிசுவனும் என்னிடமிருந்து விலகாமலிருப்பார்களாக. ரு இருதயத்தி—லிருப்பவனாய்—மானிட மன்னன் என நாமமுள்ள என் ஆத்மாவே பிரகஸ்பதி. கூ என் இருதயம் துக்கம் தளர்ந்து விரியும் புற்றரை; நானே விரிவால் வாரிதி. [கக—ங]

ருOசு பிரார்த்தனை [பிரமன்—ஆதித்தியன்]

க நான் நிதிகளின் நடுவாகவும், சமானர்களின் நாபியாக வும் வேண்டும். உ நீ நல்ல பீடமுள்ளவன், நல்ல உதைகளுள்ளவன், மிருதர்களில் அமிருதன். ந பிராணன் என்னைப் பிரியாமலாகுக: அபானனும் என்னைப் பிரிந்து செல்லாமலாகுக. ச சூரியன் என்னைச் சோதியினின்றும், அக்கினி புவியினின்றும், வாயு வானத்தினின்றும் எமன் மானிடர்களினின்றும் சரஸ்வதி புவியின் பொருள்களினின்றும் என்னைப் பாலனஞ் செய்வார்களாக ரு பிராணனே அபானனே! என்னை நீங்காதேயுங்கள். சனத்திலே நான் மரிக்காமலாவேனாக. சு சலங்களே! இன்று சுவஸ்தி: நான் சர்வனாகி சர்வகணத்துடன் வெகு பல—இரவு பகற்களை யடையவேண்டும். எ நீங்கள் அதிபலமுள்ளவர்கள். பசுக்கள் எனக்கு வருக: மித்திரனும் வருணனும் எனக்குப் பிராணனைத் தருக: அக்கினி எனக்கு திடத்தைத அளித்திடுக. [கசு. ச.]

ருOஎ கனவு [யமன்—துச்சுவப்பன நாசன தேவதை]

க கனவே! நாங்கள் உன் சனன நிலயத்தை அறிகிறோம். நீ கிராஹியின்[1] மகன், நீ யமனது சாதனம், நீ அந்தகன் நீ மிருத்யு, கனவே![2] நாங்கள் உன்னை இங்கு இங்ஙனமறிகிறோம்; கனவே! நீ என்னை கெட்ட கனவினின்றும் காப்புச்செய். உ கனவே! நாங்கள் உன் சனன நிலயத்தை அறிகிறோம்: நீ நிர்ருதியின் மகன்......காப்புச் செய். ந கனவே! நாங்கள் உன் சனன நிலயத்தை அறிகிறோம்: நீ அபூதியின் மகன்[3] .........காப்புச்செய். ச கனவே! நாங்கள் உன் சனன நிலயத்தை அறிகிறோம் நீ நிர்பூதியின்[4] மகன்..........காப்புச்செய். ரு கனவே!

1 பிடிப்பவனின். 2 உறக்கமெனவு முரைக்கலாம், 3 செல்வகுனியனின். 4 நீர்மூலத்தின்.

நாங்கள் உன் சனன நிலயத்தை அறிகிறோம்: நீ பிரபூதியின்[1] மகன்............காப்புச்செய். சு கனவே! நாங்கள் உன் சனன நிலயத்தையறிகிறோம்; நீ தேவமனைவிகளின் மகன், யமனதுசாதனன்......................காப்புச்செய். [கசு. ரு.]

ரு0அ விஜயம் [யமன்—துச்சுவப்பன நாசன உஷை]

க நாங்கள் இன்று ஜயித்துள்ளோம்: நாங்கள் இன்று அடைந்துள்ளோம்: நாங்கள் குற்றமற்றாகியுள்ளோம். உ உஷையால் எந்த கெட்ட கனவால் நாங்கள் கலங்கியுள்ளோமோ அது தூரமாகுக. ந வெறுப்பவனிலே அதனை வகித்துச்செல்: வசைச் சொல்லுபவனில் அதனை வகித்துச் செல். ச நாங்கள் வெறுப்பவனில் எங்களை வெறுப்பவனில் நாங்கள் அதனைப் பேரகச் செய்கிறோம். ரு-கூ உஷைதேவி மொழியோடு இணைந்து, மொழிதேவி உஷையோடு சேர்ந்து அங்குள்ளவனுக்குக் கருமிகளையும், கயப்பெயருள்ளவர்களையும், சதான்வர்களையும் கும்பீகர்களையும், தூஷிகர்களையும் துன்பஞ் செய்பவர்களையும், விழியிழி கனவையும் துயிலிழி கனவையும் வகித்துச் செல்க. க0—கக அக்கினியே! அங்குள்ளவன் ஆண்மையற்றாக, குணம் நீங்கி குற்றமுள்ளவனாக, தேவர்கள் அவனுக்கு வராத வரன்களையும், சிலமாகாத சங்கற்பங்களையும், விடுதலை செய்யாத வெறுப்புப் பாசங்களையும், வகித்துச் செல்வார்களாக. [கசு. கூ.]

ரு0கூ சம்ஹாரம் [யமன்—துசுவப்நைநாசன்]

க நான் அதனால் அவனைக் குத்துகிறேன்; நான் செல்வச் சூனியத்தால் அவனைச் சேதிக்கிறேன்: அவனை நிர்மூலத்தால் மாய்க்கிறேன்; அவனைத் தூக்கத்தால் படுத்துகிறேன், கிராகியால் கொய்கிறேன், அவனை நான் இரு

---

1 நாசத்தின்.

ளால் குத்துகிறேன். ௨ நான் அவனை உக்கிரங்களோடு தேவர்களின் கோர ஆக்ஞைகளுடன் அறை கூவுகிறேன். ௩ நான் அவனை வைசுவாநரனது இரு பற்களின் நடுவே வைக்கிறேன். ௪ இங்ஙனமோ, அங்ஙனமோ அவள் அவனை விழுங்குவாளாக. ரு எங்களை வெறுப்பவனை அவனது ஆத்மா வெறுப்பானாக. எங்களை வெறுப்பவன் அவனது ஆத்மாவையே வெறுப்பானாக. ௬ சோதியினின்றும், புவியினின்றும், வானத்தினின்றும் எங்களை வெறுப்பவனை விலக்குவோமாக. ௭—௮ நல்ல வழியும் நல்ல கண்ணுமுள்ளவனே! இன்னாரது சந்ததியாயும் இன்னாரது தாய் மகனுயுமுள்ள அவனில்—அவனிடமிருந்து நான் இக் கெட்ட கனவை துடைத்துவிடுகிறேன். ௯—௧௧ நான் இன்ன சமயத்தில் சென்றவுடன் மாலையிலோ முன் இரவிலோ, விழிப்பிலோ, தூக்கத்திலோ, பகலிலோ, இரவிலோ, அல்லது தினந்தோறும் நான் செல்லுங்கால்—அவன் செய்யும் குற்றங்களுக்கெல்லாம்—அவனை நீக்குகிறேன். ௧௨ அவனைக் கொல்லு, அவனில் இன்பமாகுக. அவனது விலா எலும்புகளை நொறுக்கு. ௧௩ அவன் சீவனற்றுகுக: அவன் சுவாசம் நீங்குக. [௧௬. ௭.]

ருக௦ ஜயகோஷம்

௧ ஜயித்த பொருள் நம்முடையது. தோன்றுவது நம்முடையது, ருதம் நம்முடையது, தேஜசு நம்முடையது, பிரம்மம் நம்முடையது, சுவர்க்கம் நம்முடையது, யக்ஞம் நம்முடையது, பசுக்கள் நம்முடையது, பிரஜை நம்முடையது, நம்முடைய வீரர்கள்; இன்னானை இன்ன சந்ததியுள்ளவனை இன்ன அன்னையின் மகனை அங்குள்ள அவனை அதனிடமிருந்து—அந்த போகத்திலிருந்து—நாங்கள் தனிமை செய்கிறோம். கிராஹியின் பாசத்தினின்றும்

அவன் பிரியாமலாவானாக: நான் அவனது வர்சசை, வீரத்தை சுவாசத்தை ஆயுசை பந்தனஞ் செய்கிறேன். இனி அவனை கீழே விழச் செய்கிறேன். ௨ ஜயித்த பொருள் ....நிர்ருதியின் பாகத்தினின்று அவன் நீங்காமலாவானாக ......செய்கிறேன். ௩ ஜயித்த பொருள்.......செல்வ சூனிய பாசத்தினின்றும்......செய்கிறேன். ௪ ஜயித்த பொருள்.......நீர்மூலத்தினின்றும்.......செய்கிறேன். ௫ ஜயித்த பொருள்.......தூக்கத்தினின்றும்....செய்கிறேன். ௬ ஜயித்த பொருள்.......தேவ மனைவிகளின்.......செய்கிறேன். ௭ ஜயித்த பொருள்.......பிரகஸ்பதியின்....... செய்கிறேன். ௮ ஜயித்த பொருள்.......பிரஜாபதியின் .......செய்கிறேன். ௯ ஜயித்த பொருள்.......ரிஷிகளின் .......செய்கிறேன். ௧0 ஜயித்த பொருள்.......அறிஞர்களின்.......செய்கிறேன். ௧௧ ஜயித்த பொருள்....... அங்கிரசர்களின்.......செய்கிறேன். ௧௨ ஆங்கிரஸர்களின்.......செய்கிறேன். ௧௩ ஜயித்த பொருள்....... அதர்வணர்களின்..........செய்கிறேன். ௧௪ ஜயித்தப் பொருள்.......ஆதர்வணர்களின்.... ...செய்கிறேன். ௧௫ ஜயித்த பொருள்.......வனஸ்பதிகளின் செய்கிறேன். ௧௬ ஜயித்த பொருள்.......வானஸ்பதிகளின்.......செய்கிறேன். ௧௭ ஜயித்த பொருள்.......ருதுக்களின்....... செய்கிறேன். ௧௮ ஜயித்த பொருள்.......ருதுச் சேர்க்கைகளின்.......செய்கிறேன். ௧௯ ஜயித்த பொருள்.... மாதங்களின்.......செய்கிறேன். ௨0 ஜயித்த பொருள் பட்சங்களினின்..........செய்கிறேன். ௨௧ ஜயித்தபொருள்.......இரவு பகலின்.......செய்கிறேன். ௨௨ ஜயித்த பொருள்....இரு தொடர் தினங்களின்.......செய்கிறேன். ௨௩ ஜயித்த பொருள்...................சுவர்க்கம் புவியின் ..........செய்கிறேன். ௨௪ ஜயித்தபொருள்.......இந்தி

ராக்கினியின்..........செய்கிறேன். உரு ஜயித்த பொருள் ..............மித்திரவருணனின்..............செய்கிறேன். உகூ ஜயித்த பொருள்..........வருண இராஜனது.......செய்கிறேன். உஎ ஜயித்தபொருள்.........அவன் பாசத்தினின்றும் மிருத்யுவின் பந்தத்தினின்றும்..........செய்கிறேன். [கசு—அ]

ருகக செல்வம் [சத்வாரி வை வசனுனி, பிரஜாபதி—மந்திரோக்த் தேவதை]

க ஜயித்த—பொருள்—நம்முடையது தோன்றுவதும் நம்முடையது: நான் எல்லாக் கருமிகளையும் கலகஞ் செய்பவர்களையும் எதிர்த்துள்ளேன். உ அக்கினி இதைச் சொல்லுகிறுன்; இதையே சோமனும் சொல்லுகிறுன்: சுகிருத உலகத்திலே பூஷணன் என்னை நாட்டுக. ௩ நாங்கள் சுவர்க்கஞ் சென்றுள்ளோம். சுவர்க்கத்துக்கு நாங்கள் சென்றுள்ளோம்: சூரியனுடைய சோதியோடு நாங்கள் சேர்ந்துள்ளோம். ச நலமுடன் ஓங்க யக்ஞம் செல்வம் மிகுந்துள்ளது. நான் செல்வத்தை ஜயிக்கவேண்டும். நான் செல்வம் மிகுந்தவனுக வேண்டும்: நீ என்னில் செல்வத்தை யளி. [கசு—கூ]

கசு-வது காண்டம் முற்றிற்று.

---

ருகஉ பிரார்த்தனை [பிரமன்—ஆதித்தியன்]

க அதி சக்தி யுள்ளவனுயும், ஜயிப்பவனுயும், சிதைப்பவனுயும் அதிஜய சீலனுயும், ஜயிப்பவனுயும் ஜயஞ் ஜயிப்பவனுயும், பசு ஜயிப்பவனுயும், பொருள் ஜயிப்பவனுயும் சொல்லுக்கு அருகனுமான இந்திரன் என்னும் நாமமுள்ளவனை, நான அழைக்கிறேன்: நான் தீர்க்காயுசுடனுக

ருoரு—ருகக. கருத்து, தீமை நீங்கி தனத்தை பற்று.

வேண்டும். ௨ அதி சக்தியுள்ளவனையும்..........அழைக்கிறேன். நான் தேவர்களுக்கு பிரியனாக வேண்டும். ௩ அதி சக்தியுள்ளவனையும்..........அழைக்கிறேன்: நான் பிரஜைகளுக்குப் பிரியனாகவேண்டும். ௪ அதி சக்தியுள்ளவனையும்........அழைக்கிறேன்: நான் பசுக்களுக்குப் பிரியனாக வேண்டும். ௫ அதிசக்தியுள்ளவனையும்..........நான் அழைக்கிறேன்: நான் சமானர்களுக்குப் பிரியனாக வேண்டும். ௬ சூரியனே! உச்சியிலேறு, உச்சியிலேறு: வர்சஸோடு என்னிலேறு: என்னை வெறுப்பவன் என் கீழாவானாக நான் வெறுப்பவது வசமற்று வேனாக. விஷ்ணுவே! உனது வீரியங்கள் வெகுபல: எங்களை விசுவரூபங்களான பசுக்களால் பூரணஞ்செய்: உயரிய நிலயத்திலே இன்பத்திலே என்னை ஸ்தாபனம் செய். ௭ சூரியனே! உச்சியிலேறு; உச்சியிலேறு: வர்சஸோடு என்னிலேறு: நான் பார்ப்பவர்களிலே, நான் பார்க்காதவர்களிலே என்னை நீ சுமதியுள்ளவனாகச் செய். விஷ்ணுவே....செய். ௮ சமுத்திரத்திலே சலங்களின் நடுவே உன்னை பாசங்களுடன் அருகில் அணுகுபவர்கள் துன்பஞ் செய்யாமலாவார்களாக. பழிச் சொல் நீங்கி நீ சோதியில் ஏறியுள்ளாய். நீ எங்களுக்கு சுகமளிப்பவனாகவும். நாங்கள் உனது சுமதியிலாக வேண்டும். விஷ்ணுவே....செய். ௯ இந்திரனே! மேலான சௌபாக்கியத்துக்கு, இன்னல் செய்யாதகிரணங்களோடு எங்களைப் பாலனஞ் செய். விஷ்ணுவே....செய். ௧௦ இந்திரனே! சோமபானம் பருக பாக்களால் போற்றப்பட்டு சோதியின் முச்சோதிக்கேறும் நீ சுவஸ்திக்குப் பிரிய நிலயமுள்ள நீ சிவகரமானத் துணைகளோடு எங்களுக்கு அதிசிவகரமாவாயோ! விஷ்ணுவே........செய். ௧௧ இந்திரனே! நீ எல்லாஞ் ஜயிப்பவன். எல்லாம் பற்றுபவன். பலர்களால் அழைக்கப்படுபவன்.

இந்திரனே! நன்கு அழைக்கப்படும் இத்துதியைச் செலுத்து. எங்களுக்குச் சுகமளிப்பவனாவாயோ! நாங்கள் உன் சுமதியிலாகவேண்டும். விஷ்ணுவே......செய். கஉ சோதியிலே இன்னாலுருதவன் புவியிலுமாவான். வானத்திலே உனது வலிமையை எவருமடையவில்லை. இன்னாலுருத பிரமத்தோடோங்கும் நீ சோதியிலே இருப்பதால் எங்களுக்கு இரட்சையையளிப்பாயோ? விஷ்ணுவே....... செய். கங இந்திரனே! சலங்களிலே உள்ள உனது தேகத்தால் புவியிலும், அனலிலும் உள்ள உனது அங்கத்தால்—பவமானனிலுள்ள சுவர்க்கஞ் செல்லும்—உன் காயத்தால்—இந்திரனே! நீ வானத்தில் வியாபகமாயுள்ளாய். இந்திரனே! அவ்வுடலால் எங்களுக்கு உதவியையளி: விஷ்ணுவே—செய். கச இந்திரனே! பிரம்மத்தால் உன்னைப் பெருக்கிப் போற்றும் ரிஷிகள் சபையிலுட்கார்ந்துள்ளார்கள்: விஷ்ணுவே!—செய். கரு திருதனைச் சுற்றி, ஆயிரந்தாரைகளின் ஊற்றைச் சுற்றி சுவர்க்கஞ் ஜயிக்கும் சபையைச் சுற்றி நீ செல்லுகிறாய்; விஷ்ணுவே—செய் கசு நீ நான்கு திசைகளையும் பாலனஞ்செய்கிறாய். ஒளியால் வானஞ் சோதியிலே, விரியும் ஒளியை வீசுகிறாய்; விஷ்ணுவே!—செய். கஎ நீ ஐந்தால்[1] உஷ்ணத்தை ஏற்றுகிறாய். ஒன்றால் இங்கு—சூடு செய்கிறாய். சுதினத்திலே நீ பழிச் சொல்லை நீக்கிச் செல்லுகிறாய்: விஷ்ணுவே—செய். கஅ நீ இந்திரன், நீ மகேந்திரன், நீ உலகம், நீ பிரஜாபதி உனக்கு யக்ஞம் விரிந்துள்ளது; யக்ஞஞ் செய்பவர்கள் உனக்கு ஆஹுதிசெய்துள்ளார்கள் விஷ்ணுவே!—செய். ககூ அசத்திலே சத்து திரமாக்கப்பட்டுள்ளது; சத்திலே இருக்கும்—பொருள்—திரமாகும்; இருப்பது வரும்—

1 ஐந்து கிரணங்களால் ஐந்து நிறங்களால்.

பொருளில் திரமாகும்; வரும்—பொருள்—நிகழ்—பொருளில்—திரமாகும்: விஷ்ணுவே!.......செய். உo நீ சுக்கிரன், நீ சோதியுள்ளவன்; சோதியுள்ளவனின்று சோதி வீசுவதுபோல், சோதியான நீ என்னையும் சோதி நிகழச் செய்வாயோ? உக நீ பிரகாசமுள்ளவன்; நீ பிரகாசன், நீ பிரகாசத்துடன் விளங்குவது போல், நானும் அங்ஙனமே பசுக்களோடும் பிரமவர்சசுடனும் பிரகாசிப்பேனு? உஉ உதயனுக்கு நமஸ்காரம், உதயமாகுபவனுக்கு நமஸ்காரம், உதித்தவனுக்கு நமஸ்காரம் விராஜனுக்கு நமஸ்காரம், சுவராஜனுக்கு நமஸ்காரம், சம்ராஜனுக்கு நமஸ்காரம். உங அஸ்தனுக்கு நமஸ்காரம், அஸ்தமாகுபவனுக்கு நமஸ்காரம். அஸ்தமானவனுக்கு நமஸ்காரம்; விராஜனுக்கு நமஸ்காரம், சுவராஜனுக்கு நமஸ்காரம், சம்ராஜனுக்கு நமஸ்காரம். உச அரிகளை என் கீழ் அழுத்தி, விசுவ தவத்தோடு சேர்ந்து ஆதித்தியன் உதயமாயுள்ளான்; நான் எனது பகைவனது வசப்படாமலாகவேண்டும்; விஷ்ணுவே.......செய். உரு ஆதித்தியனே! நீ சுவஸ்திக்காக நூறு துடுப்புகளுடன் கப்பலில் ஏறியுள்ளாய். நீ என்னைப் பகல் கடக்கச் செய்துள்ளாய்: என்னை அங்ஙனமே இரவையும் கடக்கச் செய். உசு ஆதித்தியனே—எழுந்துள்ளாய்; நீ என்னை இரவு கடக்கச் செய்தாய்: நீ அப்படியே பகலையும் கடக்கச் செய். உஎ பிரஜாபதியின் பிரம கவசத்தால் சூழப்பெற்றுக் கசியபனது சோதியோடும் சக்தியுடனும், நீண்ட வாழ்க்கையுடனும், நான் வீரனுயும், வலிமையும் ஆயிரம் ஆயுசும் பெற்ற சுகிருதனுயும் நிகழவேண்டும். உஅ நான்—சக்தியுடன் நிகழவேண்டும்: மாய்ப்பதற்கு விடப்பட்ட மனிதச் சரங்களினின்றும் தேவ சரங்கள் என்னைக் காப்பாற்ற வேண்டும்.

உ௬ நான் ருதத்தால் காப்பாகி, எல்லா ருதுக்களாலும் உதவி பெற்று இருக்கப்போவதால் இரட்சையாகி யுள்ளேன். கேடு என்னை நீங்குக. நான் வாக்கான வாரி தையால் அவற்றை ஜயித்தேன். ந௦ அக்கினி என் இரட்சகனாகி எங்கும் காப்பானாக. உதயசூரியன் மிருத்யு வின் பாசங்களினின்று என்னை நீக்குவானாக. ஒளி மிக்க உஷைகளும் திட மலைகளும் ஆயிரம் பிராணன்களும் என்னில் நிலையாகுக. [௧எ, ௧—ந௦]

௧எ-வது காண்டம் முற்றிற்று.

## ரு௧ந—ரு௬௬

ரு௬௬ எமனும் எமியும்

[அதர்வன் - யமோ மந்திரோக்த தேவதைகள். ௪௧—௪௩ சரஸ்வதீ. ௪௦ ருத்திரன், ௪௦—௪௬. ரு௧—ரு௨. பிதுருக்கள்]

௧ நான் [1] நட்போடு நண்பனிடம் [2] திரும்புகிறேன்; மேலான சமுத்திரத்தைக் கடந்து சென்று, அறிஞன், புவியிலே இனி வரும்—வமிச—வளர்ச்சியை நினைத்து பிதாவின் பேரனைப்பற்றுவானாக. உ சுந்தரச் [3] சின்னங் களோடு வெகு பல ரூபங்களுடனுள்ள உனது நட்பை விரும்பாத நண்பன்—எவன்? ஏனெனில் மேலான வீர அசுரனது [4] வானந் சோதி தாங்குபவர்களான வீர மக் கட்கள் எங்கும் காண்கிறார்கள். ௩ ஒவ்வொரு மிருத னின் சந்ததியை அந்த அமுதர்கள் விரும்புகிறார்கள்; எங்கள் மனத்திலே உனது மனம் நிலைத்திடுக; மனைவியி னங்கத்துள் நீ கணவனாகப் பிரவேசிப்பாயோ? ௪ நாம் முன்னர் செய்யாததை இப்போது—ஏன் செய்யவேண்

1 எமி. 2 எமனிடம். 3 எமனது பேச்சு, 4 பலிஷ்டனது.

ரு௬உ கருத்து—அனைவர்க்கும பிரார்த்தனை செய்.

டும்; ருதத்தைப் பேசும் நாம் பொய்யைப் பிதற்றலாமோ? சலங்களிலுள்ள கந்தருவனும் [1] சலமயமான வனிதையும் [2]—இதுதான் நமது நாபி, [3] இதுவே நமது மேலான உறவு. ரு தேவ துவஷ்டாவான விசுவரூபமான சவிதாவும் சனனஞ் செய்யும் அவளும் கருப்பையில் மனைவியும் புருஷனுமாக நம்மைச் செய்தார்கள்: அவனது விரதங்களை விலக்குபவன் எவனுமில்லை, நம்மை இங்ஙனம் புவி அறிகிறாள்; சுவர்க்கமும் அறிகிறான். சு இன்று ருதத்தின் கம்பத்திலே மந்தகோபமாயும் பிரகாசமாயும் முயற்சியுடனே ருதப் பசுக்களுக்கு இன்பமளித்து இருதயத்திலோங்கி வாயில் சரங்களுள்ள [4] கோக்களை [5] எவன் இணைக்கிறான்? அவற்றை போஷிப்பவன் நீண்டகாலம் வாழ்வான். எ அந்த [6] முதல் தினத்தையறிபவன் யார்? அதைக் கண்டவன் எவன்? அதை இங்கு அறிவிப்பவன் யார்? மித்திர வருணனது ஆகனை பெரியது; பிரியையே! நீ புருஷர்களிடம் இம்மனத்தோடு பேசலாமோ? அ ஒரே சயனத்தில் சாய எமியான என்னிலே எமனது காமம் வந்துள்ளது; கணவனுக்கு மனைவியைப்போல் நான் என் அங்கத்தை அளிப்பேன்; இரு இரதச் சக்கரங்களைப்போல் நாம் துரிதமாவோம். கூ இங்கு சுற்றும் தேவதூதர்கள் நிற்பதில்லை, அவர்கள் இமைப்பதில்லை பிரியையே! என்னைவிட்டு விட்டு வேறு எவனிடமாவது துரிதஞ் செல். இரு இரதச் சக்கரங்களைப் போல் அவனிடம் விசைந்து—சென்றுவிடு. க0 ஒருவன்

---

1 சூரியன், 2 சூரியோதயத்திலுள்ள சலமய மேகம். ௨ புருஷனும் மனைவியும் சலசுபாவத்தை யடையவேண்டும். 3 நாம் தோன்றுமிடம். ௬ எமனது பேச்சு. 4 மொழிகளுள்ள. 5 அறிஞர்களை. 6 சிருட்டியின். 7 எமி.

ரு, ரு யமி பேசுகிறாள். ௨ யமன் பதிலளிக்கிறான்.

அவனுக்கு இரவும் பகலும் வணக்க மளிக்கலாம். சூரியனது கண் ஒரு இமைப்போது திறக்கலாம். சேர்ந்துள்ள சோதி புவியோடு சபந்துவாயுள்ள யமியான நானே யமனது சகோதர சூனிய—செயலாலாகுங் குற்றத்தை—வகித்தல் வேண்டும். கக சகோதரசகோதரிகள் நேர்மையற்றதைச் செய்யும் வருங்கால யுகங்கள் தோன்றும். உனது புஜத்தை விருஷபனுக் கீழே சாய். சுபகையே! நீ என்னைத் தவிர வேறு எவனையாவது புருஷனைக நாடு. கஉ நாதனில்லாதகாலத்தில் சகோதரன் எங்ஙனம் இருத்தல் வேண்டும்? நிர்ருதி வருங்கால் சகோதரி—எங்ஙனம்? நான் காமத்தால் எழுந்து இங்ஙனம் நாநாவிதமாய்ப் பிதற்றுகிறேன். என் காயத்தோடு உன் காயத்தைச் சேர் கங எமியே! நான் உனது நாதனில்லை. உனது அங்கத்தோடு எனது அங்கத்தைச் சேர்க்கலாகாது: நீ வேறுமனிதனோடு உனது இன்பங்களைச் சித்தஞ் செய்: சுபகையே! உனது சகோதரன் இதை விரும்பவில்லை. கச உன் காயத்தோடு என் காயத்தைச் சேர்க்கலாகாது: சகோதரியோடு சேர்பவனை சிதைந்தவன் என அவர்கள் சொல்லுகிறார்கள்: சகோதரனை நான் சகோதரியின் சயனத்திலே சாய்வதென்பது என் இருதயத்திற்கும் மனத்திறகும் இசையாததாகும். கரு எமனே! நீ நிர்பலன். நாங்கள் உன்னில் மனத்தையும் இருதயத்தையுங் காணவில்லை. மரத்தில் தாவும் படர்க்கொடி—கச்சை குதிரைபோல் வேறு காரிகை உன்னைத் தழுவுவாள். கசா எமியே! மரத்தில் ஏறிப் பரவும் கொடிபோல் வேறு மனிதன் உன்னைத் தழுவு

---

கூ எமன் பேசுகிறான். க0 எமி.
கக. எமனது பேச்சு கஉ. எமியின்மொழி.
கங. எமனது பேச்சு

வான்: நீ அவனது மனத்தைத் தேடு அல்லது அவன் உனது மனத்தை—நாடுவானாக. நீ மேலான சஹச் சேர்க்கையை செய்து கொள். கஎ மூன்று சந்தங்களை, விசுவக்கண்ணுடனாகி வெகு பல ரூபமுள்ள சுந்தரனைக் கவிகள் விரித்தார்கள்: சலங்களும் காற்றுக்களும் ஒஷதங்களும் ஒரேபுவனத்திலே ஸ்தாபிக்கப் பட்டுள்ளன கஅ விருஷணன் விருஷணனுக்கு சோதியின் பாலால் கறக்கிறான். இன்னலாகாத அவன் அதிதியின் மகன்; அறிவால் வருணனைப்போல் ஒவ்வொருவனும் அவனை அறியும் அவன் யக்ஞியன், யக்ஞத்தைச் செய்பவன், ருதுக்களை யஜிக்கிறான். ககூ கந்தர்வியும் சலமயஸ்திரீயும் பேசுகிறார்கள். நாதஞ் செய்பவனது நாதத்திலே அவள் எங்கள் மனத்தைக் காப்பாளாக: அதிதி விருப்பத்தின் நடுவே எங்களை நாட்டுவாளாக. மூத்த சகோதரன் முதற் பேசுவான். உ0 உணவு மிகுந்து புகழ் பொங்கும் மங்களமான உஷை சோதி நிறைந்து மானிடனுக்குப் பிரகாசமாயுள்ளாள். அப்போது அவாவுள்ளவர்களின் சங்கற்பத்தை அநுசரித்து, சபைக்கு ஆர்வமான அக்கினியை அவர்கள் சனனஞ் செய்துள்ளார்கள். உக அப்பால் அதிபலக் கருடப் பட்சி விபுவாயும் விளக்கமாயுமுள்ள துளியை, யக்ஞத்திற்குக் கொண்டு வந்தது: ஆரியர்கள் தர்சனீயமான அக்கினியை ஹோதாவாக வரிக்குங்கால் அறிவு உதயமாயிற்று. உஉ யவத்தால்—பசுபுஷ்டியாவது போல், அக்கினியே! நல்ல அத்வரனாகி மானிடனது துதிகளால் சதாகாலம் நீ ஆனந்தமடைகின்றாய்: துரிதனையும் துதிப்பதர்க்கருகனுமான விப்பிரனது வலிமையைப் பற்றி வெகு பல விருப்பப் பூர்த்திகளோடு நீ வருகிறாய் உ௩ நீ பெற்றோர்களைப் பிரியனைப்போல போகத்துக்குப் பிரேரணை செய்: சுந்தரன் யக்ஞஞ்செய்ய விரும்புகிறான்;

அவன் இருதயத்தினின்றும் தூண்டுகிறான்; வஹிப்பவன் வழங்குகிறான்; இன்பமானவன் நலச்செயலை செய்கிறான். அசுர பலத்தைப் புலனாக்குகிறான்; அவன் மனத்தால் —நடுக்கஞ் செய்கிறான். உச அக்கினியே! சக்தியின் மகனே! உனது சுமதியைக் கண்டுள்ள எம்மனிதனும் அதிபுகழுள்ளவனாயுள்ளான்; அவன் உணவை ஜயித்து அயங்களால் வகிக்கப்பட்டுத் திடமும் தேஜசுமுள்ளவனாகி—வெகு பல—தினங்களைக் கடந்து செல்லுகிறான். உரு அக்கினியே! உனது ஆசனத்திலே உனது நிலயத்திலே எங்களுக்குச் செவி கொடு; அமுதனது துரிதமான இரதத்தைப் பூட்டு: தேவப்பெற்றோர்களான வானத்தையும் புவியையும் எங்களுக்குக் கொண்டுவா; எப்போதும்—தூரமாகாத—நீ தேவராகவும், நீ இங்கு இருப்பாயோ? உசு அக்கினியே! யக்ஞத்துக் கருகனே! தேவர்களிலே யக்ஞாருகமான இச்சை என்னும் தேவி தோன்றுங்கால், சக்திவாய்ந்த நீ செல்வங்களை விபாகஞ் செய்யும் போது பொருள்களின் எமது பாகத்தை எமக்களி. உஎ அக்கினி உஷைகளின் உச்சியை அநுசரித்து நோக்கியுள்ளான்: ஜாதவேதசன் முதன்மையான தினங்களை யநுசரித்துப் பார்த்துள்ளான். அவன் சூரியனையும், உஷைகளையும் அநுசரித்து இரசிமிகளைத் தொடர்ந்து சோதிப் புவியை யநுசரித்து நுழைந்துள்ளான். உஅ அக்கினி உஷைகளின் உச்சியைக் காண நோக்கியுள்ளான்! முதன்மையான ஜாதவேதசன் தினங்களைக் காண நோக்கியுள்ளான்; அவன் பல இடங்களிலே சூரியனின் இரகசியங்களைக் காண—நோக்கியுள்ளான்: அவன் ஜோதிப் புவியைக் காண விசாலமாயுள்ளான்; உகூ மானிடர்களை உபாசிக்கச் செய்யும் தேவன் தனது திடத்தையெல்லாந் தரித்து ஹோதாவா யமருங்கால்

ருதத்தால் முதல்வர்களாகி சத்தியம் சொல்லும் புவியும் சுவர்க்கமும் நம்மைச் செவியுற அருகிலேயுள்ளார்கள். ௩௦ தேவர்களை ருதத்தால் சூழும் தேவனுன நீ சர்வக் ஞனுகி எங்கள் யக்ஞத்தை முதன்மையாய் வகித்துச் செல். நீ சமித்தால் தூமகேது. ஒளி சோதியை வீசு பவன், இனியன் ஹோதா, நித்தியன், யஜிப்பதற்கருகன். ௩௧ நெய் விளக்கமுள்ளவர்களே! நெய் போன்றவர் களே? நான் உங்களை வளர்ச்சிக்கு வழுத்துகிறேன். சுவர்க்கமே! புவியே! இரு வானங்களே! தேவர்களே! தினங்கள் வேறு சீவனுக்குச் சென்றவுடன், பிதுருக்கள் எங்களைத் தேஜோடு ஓங்கச் செய்வார்களாக. ௩௨ தேவ னை பசுவின், மனம்—கவரும் அமுதத்தை பருகுங் கால் விரியும் புவியிலே நலங்களை சீவர்கள் தரிக்கிறார் கள். சோதி நெய்யையும் சலத்தையும் கறக்குங்கால் விசு வேதேவர்கள் உனது யக்ஞத்தைத் தொடர்ந்து செல்லு கிறார்கள். ௩௩ அரசன் நம்மை ஏன் பிடித்துள்ளான்? அவனது விரதத்தைவ்விலகி நாம் செய்தது என்ன —அதை—எவன் அறிகிறான்? தேவர்களிலே மித்திரனும் கோபமாகியுள்ளான். சுலோகத்தைப்போல செல்பவர்க ளது சக்தி தோன்றும். ௩௪ சமானச் சின்னமானனும் வெகுபலச் சொரூபங்களை அடையும் அமுதனது நாம த்தை அறிவது அரிது. அக்கினியே! மேலானவனே அறிவதற்குச் சுலபமான எமன்—போற்றுபவனை நீ சதா காலம் பாலனஞ் செய். ௩௫ தேவர்கள் சபையிலே சந்தோஷமாவதால் விவஸ்வனது நிலயத்தில் தங்களை திரஞ் செய்து கொள்பவர்களாகிறார்கள். அவர்கள் சூரியனிலே சோதியையும், சந்திரனில் கிரணத்தையும், ஸ்தாபித்தார்கள். தளராத இருவர்களும் சோதியிலே ஆசிரியமாகிறார்கள். ௩௬ தேவர்கள் மனனருகமான

எம்மருமத்திலே செல்லுகிறார்களோ, அதனை நாம் அறிவதில்லை; மித்திரனும் அதிதியும் தேவ சவிதாவும், வருணனுக்கு எங்களை குற்றமற்றவனென்று அறிவிப்பார்களாக. ௩௭ நண்பர்களே! வச்சிராயுதந் தரிக்கும் இந்திரனுக்கு நாங்கள் பிரம்மத்தைப் பிரார்த்தனை செய்கிறோம்: அதிஆண்மையாயும்வீரனாயுமுள்ளவனைத் துதிசெய்கிறோம். ௩௮ விருத்திரனைக் கொல்லும் வலிமையால் விருத்திரனை வீழ்த்தும் நீ புகழ் வாய்ந்தவன்: சூரனே! உனது அளிப்புக்களால் அதிக மளிப்பவனுக்கு அதிகன் நீ. ௩௯ நிலத்திலே, புவியிலே, நீ ஸ்தேகத்தைப்போல் சலனமாகிறாய்: எங்களுக்கு இவ்விரியும் புவியிலே வாதங்கள் வீசுக. வனத்திலே அனலைப்போலே மித்திரனை வருணன் அங்கு சேர்ந்ததும் சோகத்தை விடுதலை செய்துள்ளான். ௪௦ உக்கிர இராஜனும் கோர எதிர்ப்பனும் சனங்களின் இருதயத்திலே வீற்றிருப்பவனுமான சிரேயசுள்ளவனைத் துதி செய்: ருத்திரனே! துதிசேரும் நீ துதிப்பவனுக்குச் சுகமளி, உனது சேனை எங்களைத் தவிர அந்நியனைக் கீழே சாய்த்திடுக. ௪௦ திவ்யர்கள் சரஸ்வதியை யழைக்கிறார்கள்: யக்ஞம் விரியுங்கால் சரஸ்வதியைச் சாற்றுகிறார்கள்; சரஸ்வதியை சுகிருதர்கள் இசைக்கிறார்கள். சரஸ்வதி அளிப்பவனுக்கு, விரும்புவதை அளிப்பாளாக. ௪௨ தென் திசையின் யக்ஞத்திலே வந்து பிதுருக்கள் சாஸ்வதியை அழைக்கிறார்கள், தருப்பையில் அமர்ந்து நீங்கள் இன்பமாகுங்கள். எங்களுக்கு நோய் நீங்கும் உணவை அளி. ௪௩ சுவதாக்களுடன், உத்தங்களோடு ஒன்று சென்ற சரஸ்வதியே! தேவியே! பிதுருக்களோடு இன்பமாகி செல்வச் செழுமையையும், ஆயிரம் மதிப்புள்ள உணவின் பாகத்தையும் இங்கு யஜமானனுக்கு அளி. ௪௪ அடி,

துனி நடுவிலுள் சோமபானஞ் செய்யும் பிதுருக்கள் மேலே செல்வார்களாக; துன்பமாகாமல் சீவனுக்குச் சென்ற ருதமறிந்த அப்பிதுருக்கள் எங்களை எங்கள் அழைப்புக்களிலே காப்பார்களாக. ௫௬ நன்கறியும் பிதுருக்களை நான் இங்கு அடைந்துள்ளேன். நான் பேரனையும், விஷ்ணுவின் விரிந்த ஆக்கிரமிப்பையும் பற்றியுள்ளேன்: தருப்பையிலுட்கார்ந்து சுவதாவுடன் சோமபானத்தைப் பருகும் அவர்கள் இங்கு விசேஷமாய் வருகிறார்கள். ௫௭ முதன்மையாய்ச் சென்ற பிதுருக்களுக்கு, புவிக்கு அப்பால் சென்று—வெளியிலே உட்கார்ந்து, நல்லநிலயங்களுள்ள திசைகளிலே இப்பொழுது திகழும்—பிதுருக்களுக்கு இன்று இவ்வணக்கமாகுக. ௫௮ மாதலி கவ்யங்களுடனும் எமன் அங்கிரஸர்களோடும் பிரகஸ்பதி ருக்வங்களுடனும் ஓங்குகிறார்கள். தேவர்களால் பெருகிய பிதுருக்களும் தேவர்களை விருத்தி செய்த—பிதுருக்களும் எங்கள் அழைப்புக்களிலே எங்களுக்குத் துணை புரிவார்களாக. ௫௯ இச் சோமன் இனிமையுள்ளது. இது தேன் நிறைந்தது. இது தீவிரமாயுள்ளது. இது இரசம் மிகுந்தது. இதனை இப்போது பருகிய இந்திரனை எவனும் சமர்களிலே ஜயிப்பதற்கியலாது. ௫௯ பெரியது எனப்படும் பிரவாஹங்களுக்குச் சென்று, வெகுபலர்க்கு வழியைத் தேடுபவனான, சனங்களைக் குவிக்கும் விவஸ்வந்தின் மகனும் மன்னனுமான எமனை அவியால் போற்றுங்கள். ௬௦ எமன் நமக்கு முதன்மையாய் வழியைக் கண்டான். இப்புற்றரையை எவனும் நம்மிடமிருந்து பிரிக்க இயலாது. பூருவ பிதுருக்களின் சந்ததிகள் அவர்களது வழி பற்றி அவர்கள் வதிந்துள்ள நிலயத்துக்குச் செல்லுகிறார்கள். ௬௧ தருப்பையிலமரும் பிதுருக்களே! உதவியுடன் இங்கு

வாருங்கள்: நாங்கள்இந்த அவிகளை உங்களுக்கு செய்துள்ளோம்; அவற்றை அநுபவியுங்கள்; அதிமங்களகரமான உதவியுடன் நீங்கள் வாருங்கள்; கேடு கழிந்த கலப்பற்ற சுகத்தையும், லாபத்தையும் எங்களுக்களியுங்கள், ருஉ முழந்தாளிட்டு தென்பக்கம் உட்கார்ந்து சமத்தர்களும் இந்த எங்களது அவியை அங்கீகரிப்பார்களாக. பிதுருக்களே! மானிட ஆக்கிரோசத்தால் நாங்கள் செய்த எக்குற்றத்திற்கும் எங்களைத் துன்பஞ் செய்யாதேயுங்கள், ருங துவஷ்டா மணஇரதத்தைத் தனது பெண்ணுக்காகச் செய்கிறான்; இதனால்தான் இந்த விசுவ சிருட்டி ஒன்று சேரும்; விவஸ்வந்தின் மனைவியான எமனுடைய அன்னை, தரிக்கப்படுங்கால் மறைந்துவிடுவாள். ருச உனது[1] பழைய பிதுருக்கள் சென்றதுபோல் புரத்துக்குச் செல்லும் வழிகளாலே நீ செல் சென்றுவிடு. சுவதாவோடு இன்பமாகும், அரசர்களான எமனையும் தேவனான வருணனையும் நீ காண்பாய். ருரு நீங்கள்[2] செல்லுங்கள். தனித்தனியாக—உங்கள் நிலயங்களுக்குச்—சென்று விடுங்கள்; பிதுருக்கள் இந்த உலகத்தை இவனுக்காகச் செய்துள்ளார்கள்; தினங்களோடும் சலங்களோடும். இரசிமிகளோடும் வாசத்தை, அவனுக்கு எமன் அளித்துள்ளான். ருகூ நாங்கள் ஆர்வமுடன்[3] உன்னைக் கொளுத்திவிடுவோம்; ஆர்வமுடன் மூட்டுவோம்; ஆர்வமுள்ள நீ ஆர்வமுள்ள பிதுருக்களை அவியை அருந்த அழைத்துவா. ருஎ ஒளியுள்ள நாங்கள் உன்னை ஒளியுடனுக்குவோம், ஒளிசேர்ந்து உங்களை நாங்கள் மூட்டுவோம். ஒளியுள்ள நீ ஒளியான பிதுருக்களை அவிபுசிக்க அழைத்துவா ருஅ அங்கிரசர்களும், அதர்வணர்களும், பிருகுக்களும், சோமபானஞ் செய்பவர்களும் நமது நவக்வப் பிதுருக்க

1 மரித்தவனே 2 சீவர்களே 3 தகனம்,

ளாவார்கள் : இந்த யக்ஞார்களது சுமதியிலே இன்னும் இவர்களது மங்களமான சௌமனத்திலே நாங்கள் திகழ வேண்டும். ருகூ எமனே! யக்ஞாருகர்களான அங்கிரசர்களோடு நீ வைரூபர்களோடு இங்கே வா இங்கு இன்பமாயிரு. கூO எமனே! அங்கிரஸ பிதுருக்களுடன் பொருந்தி நீ இந்த பீடத்திலேறு. கவிகளால் செய்யப்பட்ட மந்திரங்கள் உன்னை இங்கு கொண்டுவருக: அரசனே! நீ அவியிலே இன்பமாயிரு. கூக இங்கிருந்து இவர்கள் ஏறியுள்ளார்கள். சோதியின் வரம்பிலே அவர்கள் ஏறியுள்ளார்கள். பூர்ஜிகன் நெறியால் போலே, அங்கிரசர்கள் சோதிக்குச் சென்றுள்ளார்கள். [கஅ. க.]

ருகச எமன்—[அதர்வன்—எமன், வெகு பல தேவர்கள்.]

க எமனுக்கு[1] சோமன் பாய்கிறான். எமனுக்கு அவி செய்யப்பட்டுள்ளது. எமனுக்கு யக்ஞன், பக்குவனாகி அக்கினி என்னும் தூதனோடு செல்லுகின்றான். உ தேன் திகழ்வதை எமனுக்களியுங்கள்; நில்லுங்கள்; ரிஷிகளுக்கும்—பூருவம் ஜனனமானவர்களுக்கும் — பூருவர்களுக்கும்—பாதை செய்பவர்களுக்கும் இவ்வணக்கம். ௩ எமனுக்கு நெய் மிகுந்த பாலையும் அவியையும் அளியுங்கள்; அவன் சீவர்களிலே சீவிக்க எங்களுக்குப் பூரண ஆயுளை யளிக்கிறான். ச அக்கினியே![2] இவனை எரித்துவிடாதே; இவனில் வெப்பமாகாதே: இவனது சருமத்தை இவனது காயத்தைத் திருகாதே. ஜாதவேதனே![3] நீ இவனைப் பக்குவஞ்செய்த பிறகு இவனை பிதுருக்களிடம்[4] செலுத்து. ரு ஜாதவேதசனே! நீ இவனைப் பக்குவஞ் செய்த பிறகு பிதுருக்களுடைய ஆதீனத்திலாக்கு. இவன் வேறு சீவனுக்குச் செல்வானாகில இவன் தேவர்களையும்

1 விரதத்துக்கு, நீதிக்கு. 2 குருநாதனே 3 அறிஞனே 4 தாய் தந்தைகளிடம்

வசியஞ்செய்பவனுவான். ஆ பெரியவனுகி ஏகமாகும் இவன் திரிகத்ருகங்களால்[1] ஆறு பிரிவுளில் வியாபகமாகியுள்ளான், திருஷ்டுபுவும், காயத்திரீயும், சந்தங்களும் சமத்தமும் எமனிலே ஸ்தாபனமாயுள்ளன. எ உன் கண்ணுடன் சூரியனுக்கு, ஆத்மாவோடு அனிலத்துக்கு நீபோ. தர்மங்களுடன் சுவர்க்கத்துக்கும் புவிக்கும் போ; அங்கு உனக்கு இதமானல் சலங்களுக்குச் செல். உன் காயங்களோடு ஔஷதங்களிலே நீ திரமாய் நில். அ அஜன்[2] தவத்தின் பங்கு; அவனைத்[3] தவமாக்கு. உனது சுவாலையும் சுடரும் அவனைத் தவஞ்செய்க! ஜாதவேதசனே! எனது மங்களகரமான காயங்களோடு, சுகிருத உலகத்துக்கு அவனை வகித்துச் செல். கூ ஜாதவேதசனே! எந்தச் சுடர்களும் சடிதிகளும் உனதோ, எவற்றில் நீ சோதியையும் வானத்தையும் நிரப்புகிருயோ அவை, அஜன் செல்லுங்கால் அவனை அநுசரித்துக் குவிந்திடுக. க0 அக்கினியே! சுவதாவோடு உனக்களிக்கப்பட்டுச் சலனமாகுபவனை மறுபடியும், பிதுருக்களுக்கு விடுதலை செய். அவன் ஆயுசு—என்னும் ஆடை அணிந்து—சந்திக்குச் செல்வானுக. சுவர்சஸ—டனுள்ள சரீரத்தோடு அவனை ஒன்று சேர். கக இனிய வழியால், சராமையின் நாநாநிறங்களுள்ள நாலு கண்களுடனுன இரு நாய்களை [4]க் கடந்து நீ துரிதமாய்ச் செல்; அப்பால் எமனேடு சமான இன்பத்தில் இன்பமடைந்த அறிஞர்களானப் பிதுருக்களுக்குச் செல். கஉ எமனே! வழியிலுட்கார்ந்து மனிதர் கண்டு, நான்கு கண்களுடனுகி, காப்புச் செய்யும் உனது இரு நாய்களோடு அரசனே! அவனைச் சூழ்; அவனை நோயினின்று பிரித்து, அவனுக்கு

1 முக்குணங்களால். 2 சீவாத்மா 3 ஆத்மாவை. 4 பிராணன் அபானன்.

க்ஷேமத்தை அளி. ௧௩ விரிந்த மூக்குடனுகி, சீவர்களை புசித்து, தாமிர நிறமுள்ள எமனது இரு தூதர்கள் சனங்களை யநுசரித்துச் செல்லுகிறுர்கள்; அவர்கள் எங்களுக்கு இன்று, சூரியனைக் காண மங்களகரமான சீவனை யளிப்பார்களாக. ௧௪ சோமன் சிலர்களுக்குப் பாய்கிருன்; சிலர் நெய்யை யநுசரிக்கிறுர்கள். எவர்களுக்கு தேன் பாய்கின்றதோ அவர்களுக்கு நீ செல். ௧௫ எமனே! ருதம் தோய்பவர்களிடம் ருதத்தில் தோன்றியவர்களிடம் ருதம் பெருக்குபவர்களிடம் தவம் மிகும் பூருவ ரிஷிகளிடம் தவ மக்களிடம் நீ செல். ௧௬ தவத்தாலே தகர்க்க முடியாமல் எவர்கள் உள்ளார்களோ, தவத்தால் எவர்கள் சுவர்க்கஞ் சென்றுள்ளார்களோ, எவர்கள் மேலான தவத்தைச் செய்தார்களோ நீ அவர்களிடஞ் செல். ௧௭ சமர்களிலே சண்டை செய்பவர்களிடமும், தம்மையே தியாகஞ்செய்யும் வீரர்களிடமும் ஆயிரம் வகை தக்ஷிணை யளிப்பவர்களிடமும் நீ செல். ௧௮ எமனே சூரியனைக் காக்கும் ஆயிரங் கண்களின் கவிகளுக்கு தவந்தோன்றி தவம் மிகும் ரிஷிகளுக்கு நீ செல். ௧௯ புவியே! நீ சுகமளிப்பாயாக, முட்களற்ற வாசஸ்தலமாவாயாக, அவனுக்குப் பெருஞ்சுகத்தை யளி ௨௦ புவியின் பந்தமற்ற பரவிய பரப்பிலே நீ வசி: நீ சீவிக்குங்கால் எந்த சுவதாக்களைச் செய்தாயோ அவை உனக்குத் தேன் பொழிவதாகுக. ௨௧ நான் உன் மனத்தை மனத்தால் அழைக்கிறேன்: இன்பமாகி இந்த மனைகளுக்கு நீ வா: எமனேடு பிதுருக்களோடு நீ சேர், துணையளிக்கும் இனிய காற்றுகள் உன்மீது வீசுக. ௨௨ சலந்தாங்கும் சலம் மிதக்கும் மருத்துக்கள் உன்னை மேலாக வகித்திடுக: அஜனல் உன்னைத் தண்மை செய்து, முழங்கும் மழையால் உன்னை அவை தெளித்திடுக. ௨௩ ஆயுசுக்கும்,

சங்கற்பத்துக்கும், சக்திக்கும், சீவனுக்கும், நான் ஆயுளை அழைத்துள்ளேன், உன் மனது அதன் உரிய நிலயத்துக்குச் செல்க: அப்பால் நீ பிதுருக்களுக்குச் செல். ௨௪ உன் மனத்தின் எதுவும், உன் சீவனின் எதுவும் உன் அங்கங்களின் எதுவும் உன் இரசத்தின் எதுவும் உன் காயத்தின் எதுவும் இங்கு விடாமலாகுக. ௨௫ மரம் உன்னை வேதனை செய்யாமலாகுக: மகா தேவியான புவியும்—உன்னைத் துன்பஞ் செய்யாமலாவாளாக. பிதுருக்களின் நடுவே உலகத்தைக்கண்டு, எமனை இராஜாவாக அடைந்துள்ள—சனத்தின் நடுவே நீ ஓங்குவாயாக. ௨௬ தூரத்திலே சென்றுள்ள உனதங்கத்தையும் வாதத்திலே சென்றுள்ள பிராணனையும் அபானனையும், சங்கதமாகும் பிதுருக்கள் ஒன்றுசேர்ந்து துண்டம் துண்டமாய் அதை மறுபடியும் உன்னில் நுழையச் செய்வார்களாக. ௨௭ சீவனுள்ளவர்கள் இவனைத் தங்கள் மனைகளினின்றும் விலக்கியுள்ளார்கள்: இக்கிராமத்தினின்றும் அவனை நீக்கி வகித்துச் செல்லுங்கள், மிருத்யு எமனுடைய அறிஞனை தூதன்: அவன் அவனுடைய பிராணன்களை பிதுருக்களுக்குப் போகச் செய்துள்ளான். ௨௮ எந்த தஸ்யுக்கள் ஞாதி முகங்களுடனாகி பிதுருக்களிலே நுழைந்து, யக்ஞஞ் செய்யாததைப் புசித்து தூல சூட்சும காயங்களைத் தரித்துச் சலனமாகிறார்களோ அவர்களை அக்கினி, இந்த யக்ஞத்தினின்றும் விலக்குவானாக. ௨௯ இனிமை செய்து, எங்களது ஆயுளை வளர்த்து, எங்கள் சொந்த பிதுருக்கள் இங்கு ஒன்றுசேர்ந்து நுழைவார்களாக: வெகு பல சரத் காலங்கள் நீண்டு வாழ்ந்து, அவியுடன் நாங்கள் அவர்களை அணுகுவதற்கான வலிமையுடனாக வேண்டும். ௩௦ நான் உனக்கு அளிக்கும் பசுவால், பாலால் ஓதனத்தால், அங்குள்ள சீவனற்றுள்ளவ

னுக்கு நீ ஆதரவுடனாவாயோ. ௩௧ மங்களகரமான குதி
ரை மிருந்த—நதியை நீ கடந்து செல், புதியதாய் வகித்
துச்செல்லும் ரிக்ஷாகளையும்—கடந்து செல். ௩௨ எமன்
மேலே, விவஸ்வான் கீழே: அவனுக்கப்பால் நான் எதை
யும் பார்ப்பதில்லை, என் யக்ஞம் எமனிலே நுழைந்
துள்ளது; விவஸ்வான் உலகங்களை யநுசரித்து வியாபக
மாயுள்ளான். ௩௩ அவர்கள் மிருத்யுவுக்கான மானி
டர்களினின்றும் அமுதனை மறைத்தார்கள்; அவர்கள்
அமுதமான அவனை விவஸ்வந்துக் களித்துள்ளார்கள்;
எது இருந்ததோ [1] அது இரு அசுவினிகளையும் வகித்
துச் சென்றது; சரண்யு இருவர்களையும் விட்டுவிட்டது.
௩௪ புதைக்கப்பட்ட பிதுருக்களை, பரப்பியுள்ளவர்களை,
பஸ்மஞ் செய்யப்பட்டவர்களை உயரிய பதத்தில் வைக்
கப்பட்டவர்களை இந்தப்—பெரியார்களை யெல்லாம் அவி
புசிக்க நீ அழைத்து வா. ௩௫ அக்கினியால் எரிந்து,
அனலால் எரியாமல், சோதியின் நடுவே சுவதாவில்
இன்பமாகுபவர்களை, ஜாதவேதசனே! உன்னைச் சேர்ந்
தவர்களானால், நீ அறிகிறாய்: அவர்கள் சுவதாவால சுவதி
தியான யக்ஞத்தை அநுபவிப்பார்களாக. ௩௬ மங்கள
கரமாய் எரி: அதிகம் எரிக்காதே: அக்கினியே! காயத்
தைக் கனலாக்காதே. உன்சக்தி கானகங்களிலாகுக.
உன் கோபம் புவியாலுகுக, ௩௭ இங்ஙனம் வந்து, இங்கு
எனதானவனுக்கு, இந்த விடுவிப்பை யளிக்கிறேன்:
இங்கு இவன் என்னுடைய செல்வத்தைச் சேர்க்க, என
எமனறிபவன் சொல்லுகிறான். ௩௮ இனி ஒருவன் அளக்
காமலாக நாங்கள் நூறு வருஷங்களிலே இந்த அளவை
அளக்கிறோம்: அதற்குமுன்னர்—அளக்கப்போவதில்லை.
௩௯ இனி............அதிகமளக்கிறோம்..............அளக்கப்

1 அமுதம்.

போவதில்லை. ௪௦ இனி.......பிரத்தியேகமாய் அளக்கிறோம்.........அளக்கப்போவதில்லை. ௪௧ இனி......பூரணமாயளக்கிறோம்.......அளக்கப்போவதில்லை. ௪௨ இனி—நன்கு அளக்கிறோம்..........அளக்கப்போவதில்லை. ௪௩ இனி..........உச்சமாயளக்கிறோம்.........அளக்கப்போவதில்லை ௪௪ இனி.........ஒருமையுடன் அளக்கிறோம்..............அளக்கப்போவதில்லை. ௪௫ நான் அளவை அளந்துள்ளேன்; நான் சுவர்க்கஞ் சென்றுள்ளேன்; நான் தீர்க்காயுசுடனாகவேண்டும்; சத வருடங்களிலே அதற்கு முன்னரும் இனி ஒருவன் அளக்காமலாவானாக. ௪௬ பிராணனும் அபானனும் வியானனும் ஆயுசும் சூரியனைக்காண கண்ணும்—இவை குவியும்நீ—இராஜாவான எமன் அரசுபுரியும் பிதுருக்களிடம் பகைவர்களற்ற வழியால் செல். ௪௭ வெறுப்பு நீங்கி சந்தானமற்று, முயற்சி செய்தவர்களும், விவாகமாகாமல் சென்றவர்களும், வானத்தின் வரம்பிலே பிரகாசமாகி, சுவர்க்கஞ் சென்று உலகத்தைக் கண்டுள்ளார்கள். ௪௮ சலமயமானது தாழ்ந்த சுவர்க்கம்; தாரகமயம் நடுவு; பிதுருக்கள் வசிக்கும் மூன்றாவதும் மேலானதுமே உயர்ந்த சுவர்க்க மெனப்படும். ௪௯ எங்கள் பிதாவின் பிதாக்களையும் அவனது பிதாமகர்களையும் விரிந்த வானத்தில் நுழைந்தவர்களையும், வையத்திலும் சோதியிலும் வசிக்கும் பிதுருக்களையும் நாங்கள் வணக்கமுடன் வழுத்துகிறோம். ௫௦ சுவர்க்கத்திலே சூரியனை இப்போது, நீ பார்க்கிறாய்: இனி இல்லை, புவியே! தாய் ஆடையால் தனது மகனைப்போலே நீ அவனை மூடு. ௫௧ இப்போது, இனி இல்லை, மூப்புக்கப்பால் இனி இதனைவிடவேறு இல்லை. புவியே! மனைவி தனது புருஷனை ஆடையால் போல் நீ அவனை மூடு. ௫௨ நான்

தாய் என்னும் தரணியினுடையால், உன்னை திவ்ய
மாய் மூடுகிறேன்; சீவனிலே எச்சிறப்புண்டோ
அது என்னுடனாகுக; பிதுருக்களின் நடுவே யுள்ள
சுவதா உன்னுடனாகுக. ௫௩ அக்கினியே சோமனே!
நற்பாதை செய்பவர்களே! தேவர்களுக்கு இனிய இரத்
தினத்தையும் உலகத்தையும் தரம் பிரித்துள்ளீர்கள்;
அஜன் செல்லும் வழிகளால் அங்கு செல்லுபவனை வகித்
துச் செல்ல நீங்கள் எங்களுக்குப் பூஷணனை யனுப்புங்
கள். ௫௪ பசுவை இழக்காமல் புவனத்தின் இடைய
யனுயுள்ள அறிஞனும் பூஷணன் உன்னை இங்கிருந்து
தூண்டுவானாக: அந்தப் பிதுருக்களிலே அக்கினி அறி
ஞர்களான தேவர்களிலே உன்னைச் சேர்ப்பானாக.
௫௫ விசுவாயுசான ஆயுசு உன்னைக் காத்திடுக; பூஷ
ணன் பூருவ வழியிலே பூர்வத்திலே உன்னை வகித்து செல்
வானாக. உனக்கு முன் சென்ற சுகிருதர்கள் வசிக்கும்
நிலயத்திலே தேவசவிதா உன்னைச் செலுத்துவாளாக.
௫௬ வேறு சீவனுக்கு உன்னை வகித்துச் செல்ல, வகிக்
கும் இந்த இருவர்களை உனக்கு இணைக்கிறேன்; அவர்க
களோடு யமநிலயத்துச்கு, சபைகளுக்கு, நீ செல்;
௫௭ இந்த ஆடை உனக்குப் புதியதாய் வந்துள்ளது;
இங்கு முன் அணிந்த ஆடையைக் கழற்றிவிடு. விபத்துக்
களின்—நடுவே—விவிதமாய் அளிக்கப்பட்ட நிலயத்திலே
அறிபவனாய் சுகிருதச் செயலை யநுசரித்து நீ செல்.
௫௮ அக்கினியினின்று காப்பாக பசுக்களால் உன்
னைப் போர்த்து கொள்; மேதையாலும் மச்சையாலும்
உன்னை மூடிக்கொள்; இல்லையேல் உக்கிரத்தால் ஓங்கி
உன்னை எரிக்க விரும்பும் வீரன் உரமுடன் உறுக்கி விடு
வான். ௫௯ மரித்தவனது கையினின்று தண்டத்தை
செவியோடு சக்தியோடு, சிறப்போடு சுவீகரித்து நீ

இங்கு[1] தானிரு; நாங்கள் சுவீரர்களோடு எதிரிகளையும் பகைவர்களையும் ஜயிப்போம் எனத் திரும்பு. ௯ மரித்தவனது கையினின்று வில்லை, க்ஷத்திரத்தோடும், சிறப்போடும், சக்தியோடும் சுவீகரித்து அதி செல்வத்தை நீ பற்று; சிவலோகத்துக்கு நீ இங்குவா[2] ௧௮. ௨. ௧—௯.

௫௧௫ புது வாழ்க்கை, [அதர்வன்—எமன் மந்திரோக்த பல தேவர்கள்.]

௧ மானிடனே! இந்த பெண் பதிலோகத்தை விரும்பி உனது பிரேதத்தினருகே பழைய தர்மத்தை பாலனஞ் செய்பவளாய் சாய்ந்துள்ளாள். அவளுக்குப் பிரசையையும் பொருளையுமளி. ௨ ஸ்திரீயே! நீ மரித்த இவனிடம் ஏன் சாய்ந்துள்ளாய்; நீ எழுந்து சிவலோகத்துக்குச் செல். எவன் பக்கம் நீ சாய்ந்துள்ளாயோ அவன் மரித்தவன். உனது கையைப் பற்றும் இரண்டாவது புருஷனிடஞ் செல். கணவனுக்கு மனைவி என்னும் உறவினால் நீ இப்போது சேர்ந்துள்ளாய். ௩ மரித்தவனுக்கு அழைத்துச் செல்லப்படும் சீவனுள்ள யுவதியை நான் கண்டேன். இருண்ட இருளால் காரிருளால் சூழ்ந்துள்ள அவளை முன்புறமாக மனைப்பக்கம்—நான் செலுத்தினேன். ௪ துன்பத்துக்கு அருகதையற்றவளே! சீவ உலகத்தை அறிந்து தேவ வழியிலே அவனுடன் சலனஞ்செய்; இவன் தான் உனது கோபதி; அவனை அநுபவி; அவனை சுவர்க்க உலகத்திலே ஏறச் செய். ௫ அக்கினியே! நீ சலத்தின் பித்தம்; நீ சோதிக்கு நாணலுக்கு அவாவுடனுரும் நதிகளின் அதி துணைவன். ௬ அக்கினியே! நீ எவனை எரித்தாயோ அவனை மறுபடியும் அணைத்துவிடு; இங்கு க்யாம்புவும், சந்திரத்ருவமும் வியல்கசமும்[3] இங்கு

1 இவ்வுலகத்திலே 2 இறந்தவனைப் பற்றி அதிகம் பேசாதே.
3 சலத்தில் வளரும் செடி கொடிகள்.

வளர்ந்திடுக. எ உனக்கு இங்கு ஒன்று; அப்பால்
ஒன்று: மூன்றாவதான சோதியோடு சேர நீ செல்; பரம
நிலயத்திலே தேவர்களுக்குப் பிரியமாகி அங்கத்தோடு
அமைந்து, காப்பிலே நீ சுந்தரமாகவும். அ நீ எழுந்
திரு, நீ செல், நீ ஓடு. சலத்திலே நிலயமாக, உனக்கு மனை
யைச் செய்துகொள்: அங்கு பிதுருக்களோடு பொருந்திச்
சோமனோடும் சுவதாக்களோடும் இன்பமநுபவி. கூ நீ
முன் பக்கம் செல்; உன் காயத்தை ஒன்று குவி. உனது
காத்திரங்களும் உனது காயமும் நீங்கப்படாமலாகுக.
நுழைந்துள்ள மனத்தை அநுசரித்துச் சேர். நீ விரும்பும்
உலகத்துக்குப் போ. கo தேவர்கள் நெய்யோடும்
தேனோடும், சோமபானஞ் செய்யும் பிதுருக்கள் வர்ச
ஸோடும் என்னை அபிஷேகஞ்செய்வார்களாக. காட்சிக்கு
என்னை வெகு தூரம் கடக்கச் செய்து மூப்புக்கு,
மூப்பை யணுக என்னை அவர்கள் வளர்ப்பார்களாக.
கக அக்கினி வர்சஸோடு என்னைப் பூரணமாய் அபிஷே
கஞ்செய்வானாக; என் வாயிலே அறிவை விஷ்ணு செய்
வானாக, என்னிலே எல்லாத் தேவர்களும் திரவியத்தைத்
திரஞ்செய்வார்களாக, பவித்திரங்களைக் கொண்டு இனிய
சலங்களால் என்னைப் புனிதஞ்செய்வார்களாக. கஉ மித்
திரனும் வருணனும் என்னைச் சூழ்ந்துள்ளார்கள், அதிதி
யின் யக்ஞத் தூண்கள் என்னை வளர்த்திடுக: என் கை
களிலே இந்திரன் வர்சஸை செய்வானாக. கந மானிடர்
களில் முதல் மரித்தவனையும், அவ்வுலகத்தில் முதல்
சென்றவனையும் விவஸ்வந்தின் மகனையும் சனங்களைச் சேர்ப்
பவனுமான யம இராஜனை அவியால் போற்றுங்கள்.
கச பிதுருக்களே! சென்று விடுங்கள்; வாழுங்கள்:
உங்களுக்கு இந்த யக்ஞம் தேனால் பூசப்பட்டுள்ளது;
மேலான பொருளை எமக்கு இங்கு அளியுங்கள்; சுவீரர்

களோடான செல்வத்தையும் எமக்களியுங்கள். கரு கண் வனும், கட்சீவந்தனும், புருமீடனும், அகஸ்தியனும், சியா வாசுவனும், சோபரியனும், அர்சனனர்களும், விசுவா மித்திரனும், இங்கு ஜமதக்கினியும் அத்திரியும் கசியபனும் வாமதேவனும் எங்களைக் காப்பார்களாக. கரு விசுவா மித்திரனே! ஜமதக்கினியே, வசிஷ்டனே, பரத்வாஜனே, கோதமனே, வாமதேவனே, சக்தியளிக்கும் அத்திரி நமது நமஸ்காரங்களால் நம்மைக் கிரகித்துள்ளார்கள்; போற் றுவதற்கருகர்ளான பிதுருக்களே! எங்களுக்குச் சுக மளியுங்கள். கள பெரிய புது வாழ்க்கையை மறுபடியும் தரித்து, பிரஜைகளும் பொருட்களும் பெருகப் பெற்று, அவர்கள் சுடலையிலே மாசைத் துடைத்து விடுகிறார்கள்; அப்பால் மனைகளிலே நாங்கள் சுகந்தமுடனாக வேண்டும். கஅ அவர்கள் அஞ்சனம்[1] செய்கிறார்கள், அதி அஞ்ச னம் செய்கிறார்கள், முற்றும் அஞ்சனஞ் செய்கிறார்கள், அவர்கள் பலத்தைப் பற்றுகிறார்கள், அவர்கள் தேனால் தேய்க்கிறார்கள், நதியின் சுவாச நிலயத்திலே அவர்கள் சலனமாகும் விருஷபத்தைப் பற்றுகிறார்கள்; பொன்னால் புனிதஞ்செய்து அவர்கள் பசுவைப் பற்றுகிறார்கள், கசு பிதுருக்களே, உங்களில் நீங்கள் இன்பமாகுங்கள்: உங்களிலேயுள்ள இன்பத்தைத் தொடர்ந்து ஸோமனை யனுசரியுங்கள்; துரிதஞ் செல்லும் கவிகளே, செவி கொ டுங்கள். சபையிலே அழைக்கப்படும் நீங்கள் சுதான சீலர்கள். உ0 அத்திரிகளே, அங்கிரசர்களே நவக்வர் களே! யக்ஞஞ் செய்பவர்களே, தானம் அளிப்பவர் களே! தக்ஷிணை மிகுந்தவர்களே, சுகிருதர்களே! இத் தர்ப்பையிலுட்கார்ந்து இன்புறுங்கள். உக புராதனத் தில் நமது பழைய பிதுருக்களைப்போல், அக்கினியே!

1 அபிஷேகம்.

யக்ஞத்தை, அவர்கள் ஓங்கச்செய்து சோதி சென்று ஒளி வீசி, துதிகளுடனுகி, இருளைப் பிளந்து செக்கர்களைத் திறந்தார்கள். உஉ நற்செயற்களுடனுகி நன்கு சோதி வீசி திவ்யம் நாடும் தேவர்கள், மானிடர்களை கருமான் ஊலோகத்தைப்போல் உருவஞ்செய்து அக்கினியை விளக்கி இந்திரனை வளர்த்து பசுக்கள் பொங்கும் பெரிய பரிஷதை நமக்குச் செய்துள்ளார்கள். உங புற்றரையில் பசுக்களைப்போல் பயங்கரன், அருகிலுள்ள தேவர்களின் சனனங்களைப் பார்த்துள்ளான், மானிடன் இன்பத்தை அநுபவித்துள்ளான்; அவன் அகத்திலுள்ளவனையும் ஓங்கச்செய்யும் உறுதி வாய்ந்தவன். உச நாங்கள் உனக்குச் செய்துள்ளோம்; நாங்கள் அதிமுயற்சியுடன் உள்ளோம், எங்கள் ருதத்தில் ஒளிவீசும் உஷைகள் சோதி வீசியுள்ளார்கள், தேவர்கள் துணைபுரியும் விசுவம் மங்களகரமானது. சுவீரர்களுள்ள சபையில் நாங்கள் மேன்மையைப் பேசுவோம். உரு அவளது கைகளில் நமக்கு உயரமான சோதி—யுலகை—வையம் தாங்குவதுபோல், மருத்துக்களின் தலைவனுன இந்திரன் பூர்வத்தினின்று என்னைப் பாலனஞ் செய்வானுக, தேவர்களின் பாகத்தில் பங்கு செய்து கொள்ளும் உங்களுக்கும், உலகஞ் செய்பவர்களுக்கும், வழி செய்பவர்களுக்கும் நாங்கள் யக்ஞஞ் செய்கிறேம். உகா அவள்..............................தாங்குவதுபோல் தென் திசையினின்று தாத்ருவும் நிர்ருதியும்...........யக்ஞஞ் செய்கிறேம். உஎ அவள்............தாங்குவதுபோல் மேற்றிசையினின்று அதிதியும் ஆதித்தியர்களும்............யக்ஞஞ் செய்கிறேம். உஅ அவள்...........தாங்குவது போல வடதிசையினின்றும் சோமன் எல்லா தேவர்களுடனும்................யக்ஞஞ் செய்கிறேம். உகூ தரிக்கும்

தாத்ரு, சோதியின் உயரத்தில் சவிதா ஒளியைப்போல, உன்னை உச்சத்தில் வகிப்பான். தேவர்களின் பாகத்தில்............யக்ஞஞ் செய்கிறோம். ௩0 பாலனமாகும் நான் கீழ்த்திசையில் சுவதாவில் உன்னை ஸ்தாபிக்கிறேன் அவனது கைகளில்..................யக்ஞஞ் செய்கிறோம். ௩க—௩ரு பாலனமாகும் நான் தென்திசையில்.........
....மேற் திசையில்...............வடதிசையில்...............துருவ திசையில்...........உயரிய திசையில்.......யக்ஞஞ் செய்கிறோம். ௩சு நீ தாங்குபவன், நீ தரிப்பவன், நீ விருஷபன். ௩எ நீ சலத்தைச் சுத்தஞ் செய்பவன்; நீ தேனைத் தூய்மை செய்பவன்; நீ காற்றைச் சுத்தி செய்பவன். ௩அ இங்கிருந்தும் அங்கிருந்தும் அவர்கள் எனக்குத் துணைசெய்வார்களாக. நீங்கள் துரிதமாகி இணை பிரியாத இரு சகோதரிகளைப்போல் வந்தீர்கள்: திவ்யம் நாடுபவர்களும் மானிடர்களும் உங்களைப் பூருவம் கொண்டுவந்தார்கள். உங்களது நிலயத்தை அறிந்து உட்காருங்கள். ௩கூ எங்களுடைய சோமனுக்குச் சுகமுடனுட்காருங்கள்; நான் வணக்கங்களோடு பழைய பிரமத்தை உங்களுக்குப் பிணைக்கிறேன். தன் வழிபோகும் தலைவனைப்போல் சுலோகம் செல்லுகின்றது; எல்லா அமிருதர்களும் அதற்குச் செவி கொடுப்பார்களாக. ச0 உருவன் மூன்று பாதங்களில் ஏறினான். அவனது விரதத்தோடு நான்கு பாதமுள்ளதை அவன் அநுசரித்தான். அவன் அக்ஷரத்தோடு பாசுரத்தைப் பொருந்தச் செய்தான். ருதத்தின் நாபியில் அவன் சுத்தி செய்கிறான். சக அவன் தேவர்களுக்கு மிருத்யுவை வரித்தான். அவனது பிரசைக்கு அவன் அமுதத்தை வரிக்கவில்லையா? ரிஷியான பிரஹஸ்பதி யக்ஞத்தை விரித்தான். யமன் தனது பிரிய தேகத்தை விட்டுவிட்டான். சஉ அக்கினி

ஜாதவேதசனே! துதிக்கப்படும் நீ அவிகளைச் சுகந்தஞ் செய்து வகித்துச் சென்றுள்ளாய்; அவற்றை நீ பிதுருக்களுக் களித்தாய்; சுவதாவோடு அவர்கள் அவற்றைப் புசித்தார்கள்; தேவனே! அளிக்கப்படும் அவிகளை நீ புசி. சங அருணிகளின் அங்கத்திலே அமர்ந்து உங்களைப் போற்றும் மானிடர்களுக்கு நீங்கள் செல்வத்தை அளியுங்கள். அப்பொருளின் பாகத்தை உங்கள் மக்கட்களுக்கு வழங்குங்கள். நீங்கள் இங்கு பலத்தைக் கொடுங்கள். சச அனல் அறியும் பிதுருக்களே! இங்கு வாருங்கள். நன்கு செல்லும் நீங்கள் உங்களாசனத்தில் அமருங்கள்; அளிக்கும் அவிகளை தருப்பையிலே புசியுங்கள்; சுவீரர் மிகுந்த செல்வத்தை எமக்களியுங்கள். சரு சோமனுக் கருகரான பிதுருக்கள், தருப்பையிலே வைக்கப்பட்டுள்ள பிரிய பொருள்களுக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் வருக. அவர்கள் இங்கு செவி மடுத்திடுக; அவர்கள் எங்களை ஆசீர்வதித்திடுக; எங்களுக்குத் துணைபுரிந்திடுக. சசா பிதாவின் பிதாக்களோடு பிதா மஹர்களோடு வசிஷ்டர்களோடு சோம பானத்தைத் தொடரும்—பிதுருக்களோடு யமன், ஆர்வமுள்ளவர்களோடு அவாவுள்ளவனாய் அவிகளில் பாகமடைந்து இஷ்டம்போல் அருந்துவானாக. சஎ அவியை அறிபவர்களாயும் துதி வடிவர்களாயும் கானங்களோடு தேவர்களின் நடுவே அதி அவாவுமுள்ள பிதுருக்களோடு அக்கினியே! தேவர் போற்றும் ஆயிரம் சத்திய கவிகளோடு, யக்ஞத்தில் அமரும் ரிஷிகளோடு நீ வா. சஅ சத்தியர்களாயும், அவி புசிப்பவர்களாயும் தேவர்களோடு சேர்ந்து செல்லுபவர்களாயும் அறிஞர்களாயும் பெரியவர்களாயும், யக்ஞத்திலுட்காரும் பூர்வ ரிஷிகளாயும், திட இந்திரனுடனான பிதுருக்களோடு, அக்கினியே, நீவா. சகூ நீ

இந்த விரிந்த விசால வையத்தை அதி மங்களத்தாயான இப்புவியை யணுகு. தக்ஷிணையுள்ளவனுக்கு இப்புவி கம்பளம் போல் மிருதுவாகும்: முன்வழி பூருவத்திலே அவள் உன்னைக் காப்பாளாக. ருO புவியே! நீ பெருகிப் பொங்கு; நீ கீழே அழுத்தாதே: அவன் சுலபமாய் அணுகவும் சுலபமாய் உன்னை நுழைய—அவனுக்குச் சக்தியைச்—செய்வாயோ! அளிப்பாயோ? தனது ஆடையால் மகனைத் தாய் மூடுதல் போல் அவனை நீ மூடு. ருக பிரியமான புவி பெருகி நின்றிடுக. ஆயிரம் தூண்கள் அதைத் தாங்குக; இந்த நெய் பொழியும் இனிமையான மனைகள் சதா காலமும் அவனுக்கு அங்கே அரண்களாகுக. ருஉ நான் உன் நிமித்தம் இப்புவியை உயர்த்துகிறேன். இம்மண் கட்டியை ஸ்தாபனஞ்செய்து நான் கேடு கழிய வேண்டும்; பிதுருக்கள் இந்தத் தூணையை உனக்கு வகிப்பார்களாக. அங்கு யமன் உனக்கு ஆசனங்களைச் செய்வானாக. ருங அக்கினியே! இப்பாண்டத்தைப் பதறச் செய்யாதே. இது தேவர்களுக்கு சோமபானம் விரும்புவர்களுக்குப் பிரியமாகும். அமுதமான தேவர்கள் இக்கலசத்தில் பானம் பருகி இன்பமுறுவார்களாக. ருச வலிமையான இந்திரனுக்கு பூரணத்துடன் அதர்வன் வகித்த இக்கலசத்தில் அவன் சுகிருத போகத்தைச் செய்கிறான். அதில் சோமன் சதாகாலம் பாய்கிறான். ருரு கரும் பறவையோ, எறும்போ பாம்போ புலியோ எத்துன்பத்தைச் செய்திருந்தாலும் அதை, எதையுந் தின்னும் அக்கினியும் பிராமணனுள் நுழைந்த சோமனும் நோயினின்று நீக்குவார்களாக. ருசு ஔஷதங்கள் பால்மிகுந்தவை, என் பால் பால் மிகுந்தது; சலங்களின் பாலின்பாலால் அவன் என்னைப் பொலிவு செய்வானாக.

ருஎ அவிதவைகளான இப்பெண்கள், நல்ல மனைவி
களான இவர்கள் நெய்யோடும் அஞ்சனத்தோடும் தங்களை
பரிசஞ்செய்து கொள்க; நோய் நீங்கித் துக்கமற்று சுரத்
தினங்களோடு இம்மனைவிகள் முதன்மையான மூலஸ்தா
னத்திலேறுவார்களாக. ருஅ பரம நிலயத்திலே, பிது
ருக்களோடும் யமனோடும் இஷ்டப் பூர்த்தியோடும் நீ
ஒன்று சேர்; இழிவை நீக்கி நீ மறுபடியும் இம்மனைக்கு
வா. அவன் சுவர்சசுள்ள தேகத்தோடு சேர்வானாக.
ருகூ பிதாக்களின் பிதாக்களுக்கும் அவர்களது பிதா
மகர்களுக்கும், அசுநீதி[1] என்னும் சுவராஜன் இன்று
அவனிஷ்டம் போல் காயங்களைச் சித்தஞ்செய்வானாக.
சுO மப்பு உனக்கு மங்களமாகுக, சலபிந்து உனக்கு
மங்களமாய் வீழ்க: சீதனே! சீதப் பொருள்களுள்ள
வனே! இன்பமளிப்பவனே, இன்பங்களுள்ளவனே மண்
டூகையான நீ சலங்களில் எங்களை மங்களமுடன் செய்.
இவ்வனலை நீ தண்மை செய். சுக நன்கு காத்துத்துரித
மளித்துத் திவ்யந்தரும் விவஸ்வந்தன் எங்களுக்குப் பய
மின்மையைச் செய்வானாக. இங்கு இவ்வீரர்கள் விவித
மாய் ஓங்குவார்களாக. என்னில் பசுமிகும், புரவி பெரு
கும் புஷ்டியாகுக. சுஉ விவஸ்வந்தன் எங்களை அமு
தத்தில் ஸ்தாபிப்பானாக. மிருத்யு சென்று விடுவானாக;
அமுதமாயுள்ளது எங்களுக்கு வருக: மூப்புவரை அவன்
இச்சனங்களைக் காப்பானாக; அவர்களது பிராணன்கள்
யமனிடஞ் செல்லாமலாகுக. சுங விசுவாமித்திரர்
களே! எவன் வானத்திலே—பறவைகளைப் போல்—வலி
மையால் தன்னைத் தரித்துள்ளானோ அந்தப் பிதுருக்
களின் கவியை, புலன்களின்—நடுவே—பெரும் புலனு
யுள்ள அவனை அவிகளோடு, நீங்கள் போற்றுங்கள்.

---
1 இரண்டாவது சீவன்.

அந்த எமன் நீண்ட ஆயுளை அளிப்பானாக. ௬௪ ரிஷி
களே! உயரிய சோதி மீது ஏறுங்கள். அஞ்ச வேண்டாம்.
சோமபானஞ் செய்பவர்களே! சோமன் பொழிபவர்
களே; இந்த அவி உங்களுக்குச் செய்யப்பட்டுள்ளது
நாம், உயரிய சோதிக்குச் சென்றுள்ளோம். ௬௫ அக்
கினி பெரிய துவசத்துடன் பிரகாசஞ் செய்கிறான். வானம்
புவிக்கு, விருஷபன் முழக்க கர்ச்சனை செய்கிறான். சோதி
யின் வரம்பினின்றும் அவன் என்னை அடைந்துள்ளான்;
மஹிஷன் சலங்களின் மூலஸ்தானத்திலே செழுமையா
னான். ௬௬ இருதயத்தில் விருப்பமுள்ள அவர்கள் உன்
னைப் பரம நிலயத்தில். பறக்கும் சுபர்ணனைப்—போலும்
பொன் சிறகுள்ள வருணனது—தூதனைப்—போலும்
எமனது நிலயத்திலே துரிதப் பறவையைப்—போலும்
பார்த்தார்கள். ௬௭ இந்திரா! தந்தை பிள்ளைகளுக்குப்
போலே எங்களுக்கு அறிவைக்கொண்டு வா; அதிகமழைக்
கப்படுபவனே! இந்நெறியிலே நீ எங்களுக்கு வழியைப்
புலனாக்கு: சீவிக்கும் நாங்கள் சோதியை யடையலாமோ.
௬௮ தேவர்கள் உனக்கு கோதுமைகளால் நிரப்பப்பட்ட
எக் கும்பங்களுண்டோ அவை உனக்கு சுவதாமிருந்து
தேன் பொழிந்து நெய் பெருகுபவையாகுக. ௬௯ நான்
எள் சேர்த்து சுவதாமிருந்து தெளிக்குந் தானியங்கள்,
உனக்குப் பெருகி நிகழ்க; எம இராஜன் அவற்றை உங்
களுக்கு அநுமதிப்பானாக. ௭௰ எமனது நிலயத்தில் வசிக்
கவும், அங்கு சபைகளில் பேசவும், உன்னில் வைக்கப்
பட்டுள்ள இப்—புருஷனை வனஸ்பதியே!—மறுபடியுமளி.
௭௧ ஜாதவேதசனே! அவனைப் பற்று: உன் பற்று
பெருஞ்—சுடருடனாக; அவனது காயத்தை எரித்து
விடு: அப்பால் அவனை சுகிருத உலகத்தில் ஸ்தாபனஞ்
செய். ௭௨ முன் சென்ற உனது பிதுருக்களுக்கும், பின்

சென்றவர்களுக்கும் நூறு தாரையோடாகும் நெய் நதி
பெருகிப் பாய்க. ௭௩ உயரஞ் செல்பவனாய் இந்த
ஆயுசில் ஏறு: உனது சனங்கள் இங்கு அதி சோதி வீசு
கிறார்கள்; நீ அவர்களிடஞ் செல்; நடுவிலே நின்று
விடாதே; அங்கு முதன்மையாயுள்ள பித்ரு உலகத்
துக்குச் செல். [௧௮. ௩. ௧—௭௩]

௫௧௬ தேவயானமும் பிதுருயானமும் [அதர்வன் - யமன் - மந்திரோக்த வெகு பல தேவதைகள்]

௧ ஜாதவேதசர்களே! உங்கள் அன்னையினிமித்தம் எழு
மின்; பிதுருக்கள் செல்லும் வழிகளால் நான் உங்களை
ஒன்று செல்லச் செய்கிறேன்; அவிவகிப்பவனே பிரேரித
மானவன் அவிகளை வகித்துள்ளான்; நீங்கள் இணைந்து
சுகிருத உலகத்தில் யக்ஞஞ் செய்பவனை ஸ்தாபனஞ் செய்
யுங்கள். ௨ ருதுக்களையும் அவியையும் புரோடாசத்தை
யும் சாதனத்தையும் யக்ஞாயுதங்களையும் தேவர்
கள் சித்தஞ் செய்கிறார்கள்: இவற்றுடன் யக்ஞஞ் செய்
பவர்கள் சுவர்க்க உலகத்துக்குச் செல்லும் தேவர் சலன
மான வழிகளால் நீ செல். ௩ சுகிருதர்களும் அங்கிரசர்க
ளும் செல்லும் ருத தாரையிலே நீ இன்பமாய் நோக்கு, அவ்
வயனங்களால், ஆதித்தியர்கள் மதுவருந்தும் சுவர்க்கத்
துக்குச் செல்; மூன்றாவது நாகத்திலே நீ திரமாகவும்.
௪ மூன்று சுபர்ணங்கள் [1] மேகம் முழங்கும் நாகத்தின் [2]
வரம்பிலேயும் உச்ச நிலயத்திலேயும் [3] ஆசிரிதமாயுள்ளன
அமுதம் மிகுந்த சுவர்க்க உலகங்கள் யஜமானனுக்கு
உணவையும் உறுதியையும் அளித்திடுக. ௫ ஜுஹூ [4]
சோதியைத் தாங்குகின்றது, உபப்ருதம் [5] வானத்தை
ஆதரிக்கின்றது, துருவம் [6] திட தரணியைச் சுமக்

1 அக்கினி சூரியன் சோமன். 2 துன்பம் நீங்கும் நிலயம். 3 வானத்திலே. 4 யக்ஞ சாதனம். 5 யக்ஞ கரணம். 6 யக்ஞ ஸ்தானம்.

கின்றது, உலகங்கள் எனக்கு நெய் வரம்புள்ள சுவர்க்கங்கள் யஜமானனுக்கு விருப்பங்களைக் கறந்திடுக. ௯ துருவமே! விசுவபுஷ்டியளிக்கும் புவியிலேறு · உபப்பிருதமே! நீ வானத்தில் ஆக்ரமி, ஜூஹூவே! யஜமானனோடு சேர்ந்து நீ சோதிக்குச் செல்; சுருவம் என்றும் கன்றினால் ஓங்கும் உரைப்பற்றத் திசைகளைக் கற. எ யக்ஞஞ் செய்பவர்களும் சுகிருதர்களும் செல்லும் வழியால், மேலான நதிகளை தீர்த்தங்களால் அவர்கள் கடந்து செல்லுகிறார்கள்; திசைகளையும் பிராணிகளையும் அவர்கள் வரிசையாக்குங்கால், யஜமானனுக்கு அவர்கள் அங்கு உலகத்தை ஸ்தாபிப்பார்கள். அ அங்கிரசர்களின் அயனம் கிழக்கிலுள்ள அக்கினி: ஆதித்தியர்களின் வழி காருஹபத்தியம்; தட்சிணைகளின் தாரை தட்சிணாக்கினி; சர்வனையும் சக்தியுள்ளவனையும், உனது அங்கங்களோடு, பிரமனால் ஸ்தாபிதமான அக்கினிக்குச் செல். ௬ பூருவாக்கினி பூர்வத்தில் உன்னை இன்பமாய்த் தாபமுடனுக்குவானாக. காருக பத்தியம் உன்னை பின்புறம் இன்பமாய்த் தாபமுடனுக்குவானாக. தென் அக்கினி உனக்கு இன்பமாய் கவசமாய் காப்பாய் தாபமுடனுக்குவானாக. அக்கினி வட திசையினின்றும், நடுவினின்றும் வானத்தினின்றும், ஒவ்வொரு திசையினின்றும் எல்லா உக்கிரத்தினின்றும் அவனைக் காப்பானாக, ௧௦ அக்கினியே! அதிசிவகரமான காயங்களோடு மூன்று குதிரைகளுள்ள இரதமுடனுகி—தேவர்களுடன் சமான இன்பத்தில் சகலரும் இன்பமாகும் சுவர்க்க உலகத்தில் யக்ஞஞ் செய்தவனை வகித்துச் செல். ௧௧ அக்கினியே! சுகமாய்ப் பின்புறம் இவனைத் தகி. உச்சத்தில் இவனை இன்பமாய்த் தகி. இன்பமாய்க் கீழ்புறம் தகி. ஜாதவேதசனே மூன்றாகும் ஏகனான நீ சுகிருதர்களின் உலகத்தில் ஒருமை

யுடன் இவனை ஸ்தாபனஞ் செய். ௧௨ மூட்டப்பட்ட அனல்கள் இன்பமாய்ப் பற்றிடுக. பிராஜாபத்தியமாயும் யக்ஞச் சேர்க்கையுமான ஜாதவேதர்கள் இங்கு இவனைப் பக்குவமாக்குங்கால், பூரண தகிப்பை—விட்டுவிடாமலா வார்களாக. ௧௩ யக்ஞம் விரிந்து வலிமையாகி யக்ஞஞ் செய்பவனைச் சுவர்க்க உலகத்துக்குக் கவர்ந்து, சலனமா கின்றது. அனல்கள் சர்வஹுதமானதைப் புசித்திடுக. பிராஜாபத்தியமாயும் யக்ஞச் சேர்க்கையுமான ஜாதவேதர்கள் இங்கு இவனைப் பக்குவ மாக்குங்கால் பூர்ண தகிப்பை விடாமலாவார்களாக. ௧௪ நரகத் தின் வரம்பினின்றும் சுவர்க்கத்துக்குத் துரிதமாக விரும்பும் யக்ஞ புருஷன் சுடலில் சுடரில் ஏறியுள் ளான். தேவர்களால் சென்ற சோதிமிகுந்த சுவர்க்க வழியை, இவனுக்கு சுகிருதன் பனிமய-உலகத்தினின் றும் பிரகாசஞ் செய்கிறான். ௧௫ அக்கினி உனக்கு ஹோதா. பிரகஸ்பதி உனக்கு அத்வர்யு; வலது பக்கத் திலே உனக்கு இந்திரன் பிரமனுவாகுக. பூர்வ யக்ஞங் களின் பாதை எங்கு சென்றுள்ளதோ அங்கு இந்த பூரணமான யக்ஞம் செல்லுகின்றது. ௧௬ கோதுமை மிகுந்து, பால் நிறைந்து இந்த சுந்தர—ஓதனம் இங்கு ஸ்தாபனமாகுக. உலகஞ் செய்பவர்களுக்கும், மார்க்கஞ் செய்பவர்களுக்கும் தேவ அளிப்புக்களிலே பாக மடை பவர்களுக்கும் நாங்கள் யக்ஞஞ்செய்கிறோம். ௧௭—௨௪ கோதுமைமிகுந்து தயிர் நிறைந்து............செய்கிறோம். கோதுமை மிகுந்து திவலைகள் நிறைந்து............செய்கி றோம். கோதுமை மிகுந்து நெய் நிறைந்து............செய்கி றோம். கோதுமை மிகுந்து மாமிசம் நிறைந்து............ செய்கிறோம். கோதுமை மிகுந்து உணவு நிறைந்து........ செய்கிறோம். கோதுமை மிகுந்து தேன் நிறைந்து........

செய்கிறோம். கோதுமை மிகுந்து சலம் நிறைந்து..........
செய்கிறோம் ௨௫ தேவர்கள் உனக்கு கோதுமை மிகுந்து
எக்கும்பங்களை தரித்தார்களோ, அவை சுவதா மிகுந்து
தேன் நிறைந்து நெய் பெருகுபவையாகுக ௨௬ எள்
கலந்து சுவதா மிகுந்து உனக்கு எந்த தானியங்களைத்
தெளிக்கிறேனோ அவை உனக்குத் தோன்றித் திடமுடை
னாகுக; யமராஜன் உனக்கு அவற்றை அனுமதிப்பானாக.
௨௭ வெகு பல அழிவின்மையாகுக. ௨௮ புவியை
யனுசரித்துத் திவலை[1] குதித்தது; இந்த மூல நிலயத்தை
யும், பழைய மூல ஸ்தானத்தையும் அது நோக்கிச் சென்
றது: சமான மூல நிலயத்துக்குச் செல்லும் திவலையை
யும்[2] ஏழு ஹோத்துருக்களையு[3] மனுசரித்து நான் யஜனம்
செய்கிறேன். ௨௯ நரர் காண்பவர்கள், நூறு தாரை
களோடாகும் வாயுவை சுவர்க்கங்காணும் சூரியனை செல்
வத்துக்காக நோக்குகிறார்கள். அளித்துத் திருப்திசெய்ப
வர்களும், ஏழு தாய்மார்களுள்ள தட்சிணையைக் கறக்கி
றார்கள். ௩0 அவர்கள் சுவஸ்திக்காக இனிமை மிகும்
பசுவின் நான்கு சேதங்களுள்ள கும்பத்தையும் கோசத்
தையும் கறக்கிறார்கள். அக்கினியே! பெரிய நிலயத்தில்
சனங்களில் இன்பமாகும் அதிதியான[4] உறுதியை இன்
னல் செய்யாதே. ௩௧ நீ அணிந்து கொள்ள இந்த
ஆடையை தேவசவிதா உனக்களிக்கிறான்: தார்பியமான
நீ அதை அணிந்து யமனது இராஜ்யத்தில் செல்லு
வாயோ. ௩௨ தானியங்கள் பசுவாயிற்று; எள் அவளது
கன்றாயிற்று. அவளில் ஒருவன் யமராஜ்யத்தில் அக்ஷய
மாய் வாழ்கிறான். ௩௩ இன்னானே! விருப்பத்தை
யளிக்கும் பசுக்களாக, இவை, யாகுக: சிகப்பு வெளுப்பு
சரூப விரூபங்களாகும்—தானியங்கள்—கன்று எனப்

1 சோமன் 2 சூரியனை 3 திசைகளை. 4 கண்டனமாகாத.

படும் எள்ளோடு அவை இன்று உன்னை அநுசரித்து நின்றிடுக. ௩௪ நாநாநிறத் தானியங்களும் மஞ்சளும் வெளுப்புமானவையும் கறுப்பும் சிகப்புமானவையும் உனக்கு இங்கு பசுக்களாகுக. அவனுக்குத் திடங்கறக்கும் கன்றான எள்—தானியத்துடன்—அவை அச்சமற்றாகுக. ௩௫ நான், ஆயிரம் வகையாய் நூறு தாரை ஊற்றுக்களுள்ள இந்த அவியை வைசுவாநரனிலே அளிக்கிறேன். அவன் நமது பிதாவையும் பிதா மகர்களையும் தாங்குகிறான்: அவன் பெருகி பிரபிதா மஹர்களையுந் தாங்குகிறான். ௩௬ சலத்தின் உச்சியிலே விரியும் நூறு தாரை ஊற்றோடு ஆயிரம் ஓட்டமுள்ள நீரின் ஓரத்திலே—தடையற்றுத் திடமளிக்குந் தண்ணீரின் அருகே, சுவதாக்களோடு பிதுருக்கள் அமர்ந்துள்ளார்கள். ௩௭ இச்சுடு நிலம் குவியலோடு குவிக்கப்பட்டுள்ளது: சகோதரர்களே! அதைக் கீழ் நோக்கிப் பாருங்கள்: இம்மர்த்தியன் அமுதத்துக்குப் போகிறான். சமான பந்துக்களான நீங்கள் இவனுக்கு மனைகளைச் செய்யுங்கள். ௩௮ நீ இங்கு இரு, இங்கு தனஞ் ஜயித்து, இங்கு நினைவு—டனிரு, அறிவுட—னிரு; இங்கு அதி வீரமாயும் வயமளிப்பவனாயும் சத்துருவால் வீழ்த்தப்படாதவனாயுமிரு. ௩௯ இந்தச் சலங்கள்—தேவிகளான சலங்கள், தேன் பெருகி மகனையும் பேரனையும் திருப்திசெய்து, அமிருதத்தையும் சுவதாவையும் பிதுருக்களுக்குக் கறப்பவர்களாய் இருவர்களையும் மனப்பூர்த்தி செய்க. ௪0 சலங்களே! அக்கினியைப் பிதுருக்களுக்குப் பிரேரணை செய்மின்: பிதுருக்கள் இந்த யக்ஞத்தை சுவீகரிப்பார்களாக. நிகழும் வன்மையை நாடும் அவர்கள், எங்களுக்கு சுவீரர் மிகும் செல்வத்தை அளிப்பார்களாக. ௪௧ அவர்கள் அமர்த்தியனையும் அவிசுமப்பவனையும் நெய் பிரியனையு

முள்ளவனை எழச் செய்கிறார்கள். அவன் தூரங்களுக்குச் சென்ற பிதுருக்களையும் ஸ்தாபிதமான செல்வத்தையும் அறிகிறான். சஉ நான் உனக்களிக்கும் தயிர் ஓதனம், மாமிசம் சுவதா மிகுந்து தேன் பொழிந்து நெய் பெருகு பவையாகுக. சங நான் உனக்கு எள்ளுடன் சேர்த்து, சுவதாமிகும் எத்தானியங்களைத் தெளிக்கிறேனே அவை தோன்றித் திடமுடனாகுக. யமராஜன் அவற்றை உனக்கு அநுமதிப்பானாக: சச பழைய பிதுருக்கள் சென்ற புராதன வண்டி இது. அப்பால் செல்லுபவர் வழியுமிது. முன் சென்றவர்களும் அவற்றை அநுசரிப்பவர்களும் சுகிருத உலகத்துக்கு உன்னைச் சுமந்து செல்லுகிறார்கள். சரு திவ்யர்கள் ஸரஸ்வதியை யழைக்கிறார்கள்: யக்ஞம் விரியுங்கால் சரஸ்வதியைச் சாற்றுகிறார்கள்; சரஸ்வதியைச் சுகிருதர்கள் இசைக்கிறார்கள்; ஸரஸ்வதி அளிப்பவனுக்கு விரும்புவதை அளிப்பாளாக. சசு தென் திசை யக்ஞத்திலேவந்து பிதுருக்கள் சரஸ்வதியை அழைக்கிறார்கள்: தருப்பையில் அமர்ந்து நீங்கள் இன்பமாகுங்கள்; எங்களுக்கு நோய் நீங்கும் உணவை அளியுங்கள். சஎ சுவதாக்களுடன் உக்தங்களோடு ஒன்று சென்ற சரஸ்வதியே! தேவியே! பிதுருக்களோடு இன்பமாகி, செல்வச் செழுமையையும் ஆயிரம் மதிப்புள்ள உணவின் பாகத்தையும் இங்கு யஜமானனுக்கு அளி. சஅ மண்மயமான உன்னை மண்ணிலே நுழையச் செய்கிறேன், தேவதாத்ரு நமது ஆயுளை தீர்க்கஞ் செய்க, வெகுதூரஞ் செல்லுபவன் உனக்கு நலத்தைக் காண்பவனாவானாக; மரித்தவர்கள் பிதுருக்களிலே ஒன்று சேர்பவர்களாவார்களாக. சகூ நீங்கள் இருவரும் சென்றுவிடுங்கள்; நிந்திப்பவர்கள் உங்களுக்கு மொழிந்த மொழிகளைத் துடைத்துவிடுங்கள்; அதிலிருந்து நலத்துக்கு வந்து பிதுருக்களிலே அளிக்கும் எனக்

குப் பாலனஞ் செய்பவர்களாகுங்கள். ௫௰ அவனால் அளிக்கப்பட்டு நன்கு கறந்து வலிமை யளிப்பதான இந்த தட்சிணை மங்களமாக வந்துள்ளது; யௌவனம்—போல்—மூப்பு வந்து பிதுருக்களுக்கு இவர்களைச் சேர்த்து விடும். ௫௧ நான் இந்த தருப்பைகளைப் பிதுருக்களுக்கு முன்கொண்டு வருகிறேன்; சீவித்துச் செம்மையாயிருக்கும் நான் தேவர்களுக்குத் தருப்பைகளை—விரிக்கிறேன்: புருஷனே! நீ யக்ஞனாகி அதில் ஏறு, சென்றுள்ள பிதுருக்கள் உன்னை அறிவார்களாக. ௫௨ நீ இத்தருப்பையிலே உட்கார்ந்துள்ளாய்; நீ யக்ஞாருகனையுள்ளாய்: சென்றுள்ள பிதுருக்கள் உன்னை அறிவார்களாக, அங்கமங்கமாய் உன் காயத்தை ஒன்று குவி, நான் பிரமத்தோடு உனது உறுப்புக்களை ஒழுங்கு செய்கிறேன். ௫௩ பர்ணராஜன் பாண்டங்களின் மூடியாவான்; உணவின் உறுதியும், உரமும் ஓஜசும், சீவர்களான எங்களுக்கு நூறு வருடங்களான தீர்க்காயுளை அளிக்க வந்துள்ளன, ௫௪ இவனைச் சனனஞ்செய்த உணவின் பாகமாய் சிலையாகும்—யமனான இவன்—அன்னங்களின் ஆதிபத்தியத்தை அடைந்தான், விசுவாமித்திரர்களே! அவிகளோடு அவனைப் போற்றுங்கள்; யமன் நம்மைத் தீர்க்காயுசுடன் வாழச் செய்வானாக. ௫௫ பஞ்சமானவர்கள் யமனுக்கு நிலயத்தைச் செய்ததுபோல் எனக்கு வெகுபலர்களாக நான் மனையை நிர்மாணஞ் செய்கிறேன். ௫௬ உனது தந்தை முன்னர் அணிந்த இப்பொன்னை நீ தரி; சுத்தஞ்செய்யும் உனது பிதாவின் வலது கையை சுத்தஞ் செய். ௫௭ சீவிப்பவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் சனனமானவர்களுக்கும் யக்ஞாருகர்களுக்கும் நெய்த் தாரையும் தேன் நதியும் பொங்கிப் பாய்க. ௫௮ துதிப்பவர்களுக்கு வர்ஷிப்பவனும், தினங்களின்

சூரியனும் நன்கு பார்ப்பவனும், சோதியின் உஷாகாலங் களைச் செழுமை செய்பவனுமான—சோமன் பாய்கிறான்; நதிகளின் பிராணனான அவன் கலசங்களை முழங்கச் செய் துள்ளான்; அவன் தனது அறிவால் இந்திரனது இருத யத்தில் நுழைந்தான். ருகூ சோதியிலே உனது ஒளி வீசும் புகை விசாலமாகி உன்னைச் சூழ்க; ஏனெனில் புனிதஞ் செய்பவனே! ஒளியோடும் எழிலோடும் சூரிய னைப்போல் நீ சோதி வீசுகிறாய். கூ0 சோமன், இந்திர னுடைய நிலயத்துக்குச் செல்லுகிறான்; நண்பன் நண் பர்களின் ஒப்பந்தங்களை பங்கஞ் செய்வதில்லை; சோமன் கலசத்தின் நூறு தாரைகளின் வழியால், ஆண்பெண்களைத் தொடர்வதுபோல் ஓடுகிறான். கூக அவர்கள் புசித்துள் ளார்கள்; அவர்கள் இன்பமாயுள்ளார்கள்; பிரியமா யுள்ளவர்களை அவர்கள் தளர்த்தியுள்ளார்கள்; தாமே ஒளிவீசும் அறிஞர்கள்—அவர்களைப்—போற்றியுள்ளார் கள்; இளைஞர்களாயுள்ள நாங்கள் உங்களைப் போற்றுகி றோம். கூஉ பிதுருக்களே! சோமாருகர்களான நீங்கள் பிதுருக்கள் செல்லுங் கம்பீர வழிகளால் எங்களுக்குப் பிரசையையும் ஆயுசையும் அளிப்பவர்களாய் வாருங்கள்; செல்வச் செழுமைகளோடு எங்களில் சேருங்கள், கூங சோமார்களான நீங்கள் பிதுருக்கள்செல்லும் கம்பீர வழி களால் சென்றுவிடுங்கள்; அப்பால் நல்ல பிரசையுடன் நல்ல வீரர்களோடு, அவியைப் புசிக்க மறுபடியும் எங்கள் மனைகளுக்கு வாருங்கள். கூச அக்கினி ஜாதவேதசன் உங் களைப் பிதுரு உலகத்துக்குச் செலுத்துங்கால் ஏதேனும் உங்களது ஒரு அங்கத்தை விட்டுவிட்டிருந்தால், அதனை நான் மறுபடியும் உங்களுக்குப் பூரணஞ் செய்கிறேன்; பிதுருக்களே! உங்கள் எல்லா அங்கங்களோடும் சுவர்க் கத்தில் நீங்கள் குதூகலமாகுங்கள். கூரு ஜாதவேதசன்

தூதனாக அனுப்பப்பட்டுள்ளான்; அவன் மானிடர்க ளால் மாலையிலும் தினத்தின் அந்தத்திலும் போற்றுவ தர்க்—கருகன்; நீ பிதுருக்களுக்கு சுவதாவுடன் அளித்துள்ளாய்; தேவனே; அளிக்கப்பட்ட அவிகளைப் புசி. சுகூ அங்குள்ளவனே! ஓ, இதோ உனது மனம்; புவியே! சகோதரிகள் தங்களது பிரிய வஸ்துக்களைப் போல் நீ அவனைப் போர்த்து. சுஎ பிதுருக்கள் உட்கா ரும் உலகம் பொலிவு பொங்குக: நான் உன்னை பிதுருக் கள் உட்காரும் உலகத்திலே உட்காரச் செய்கிறேன். சுஅ நீ எங்கள் பிதுருக்களின் தர்ப்பை. சுகூ வருணனே! அதி உயரமாயுள்ள பாசத்தை எங்களிடமிருந்து நீக்கு: கீழான பாசத்தையும், நடுபந்தத்தையும் நீக்கு; ஆதித்தி யனே! பிறகு உனது விரதத்திலே அதிதிக்கு நாங்கள் குற்றமற்றவர்களாக வேண்டும். எ0 வருணனே! குறுக் காகவும் நெடுமையாகவும் ஒருவன் கட்டப்படும் எல்லாப் பாசங்களினின்றும் எங்களை விடுதலை செய், அரசனே உன்னால் காப்பாகி துணையாகி நாங்கள் நூறு வருஷ காலங்கள் வாழலாமோ. எக கவ்யம் வசிக்கும் அக்கி னிக்குச் சுவதாவும் வணக்கமுமாக. எஉ பிதுருக்களோ டான சோமனுக்குச் சுவதாவும் வணக்கமுமாகுக. எங சோமனோடான பிதுருக்களுக்கு சுவதாவும் நமஸ்காரமு மாகுக. எச பிதுருக்களோடான யமனுக்குச் சுவதா வும், நமஸ்காரமு—மாகுக. எரு பெரும் பிதா மஹனே! உனக்கும் உன்னை அநுசரிப்பவர்களுக்கும் இங்கு— இதோ—சுவதா. எசு பிதாமஹனே! உனக்கு, உன்னை அனுசரிப்பவர்களுக்கு இங்கு இதோ சுவதா. எஎ பிதாவே! உனக்கு இங்கு சுவதா. எஅ புவியிலுட்கா ரும் பிதுருக்களுக்கு சுவதா. எகூ வானத்திலுட்காரும் பிதுருக்களுக்கு சுவதா. அ0 சோதியிலுட்காரும் பிது

ருக்களுக்கு சுவதா. அக பிதுருக்களே! உங்கள் பலத்துக்கு நமஸ்காரம்; பிதுருக்களே உங்கள் இரசத்துக்கு அஉ பிதுருக்களே! உங்கள் பயங்கரத்துக்கு நமஸ்காரம். பிதுருக்களே! உங்கள் கோபத்துக்கு நமஸ்காரம், அ௩ பிதுருக்களே! உங்கள் கோரத்துக்கு நமஸ்காரம். பிதுருக்களே! உங்கள் குரூரத்துக்கு நமஸ்காரம், அச பிதுருக்களே! உங்கள் மங்கள சுபாவத்துக்கு நமஸ்காரம், பிதுருக்களே உங்கள் சிவகர—ஸ்வபாவத்துக்கு நமஸ்காரம். அரு பிதுருக்களே! உங்களுக்கு நமஸ்காரம். பிதுருக்களே! உங்களுக்கு சுவதா. அசு பிதுருக்களே! அங்குள்ளவர்கள் இங்குள்ள பிதுருக்களான நீங்கள் தான்; அவர்கள் உங்களை அனுசரிப்பார்களாக, அவர்களில் நீங்கள் சிறந்தவர்களாக வேண்டும். அஎ பிதுருக்களே! இங்குள்ள அவர்கள்—நாங்கள் தான்—இங்கு சீவனுடனிருக்கிறோம், அவர்கள் எங்களை அனுசரிப்பார்களாக, அவர்களில் நாங்கள் சிறந்தவர்களாக வேண்டும். அஅ அக்கினியே! தேவனே! நாங்கள் சோதி மிகுந்த உன்னை அறியாத உன்னை எழுச்சி செய்கிறோம். ஏனெனில் உனது அந்த அதிசயச் சமித்து சோதியிலும் ஒளி வீசச் செய்யும். துதிப்பவர்களுக்கு உணவைக் கொண்டு வா. அகூ சலங்களின் நடுவே சந்திரன் செல்லுகிறான்; சுபர்ணன் சோதிக்குத்—துரிதமாகிறான்;—பொன் சக்கர மின்னல்களே; அவர்கள் உங்கள் வழியை அறிவதில்லை; வானமும் புவியே! என்னை அறிந்துகொள்ளுங்கள். [கஅ. ச. க—அகூ]

கஅ.வது காண்டம் முற்றிற்று.

---

கருத்து—ருகக—ருககூ மர்மமான பிதுருக்கள்.

ருகள யக்ஞம் [பிரமன்—யக்ஞம் சந்திரன்] க நதிகள் நன்கு பாய்க, வாதங்கள் நன்கு வீசுக. பதகங்கள் வருக; பாக்களே! இந்த யக்ஞத்தை வளர்த்துங்கள்; நான் நன்கு பொழியும் அவியால் ஆஹுதி செய்கிறேன். உ ஹோமங்களே! நீங்கள் இந்த யக்ஞத்தைப் பாலனஞ்செய்யுங்கள், நன்கு பெருகும் நீங்கள் இதற்குத் துணைபுரியுங்கள்; கானங்களே! இந்த யக்ஞத்தை விருத்தி செய்யுங்கள்; நான் நன்கு பொழியும் அவியால் ஆஹுதி செய்கிறேன். ௩ ஒவ்வொரு ரூபத்தையும் ஒவ்வொரு பலத்தையுங் கிரகித்து நான் இவனைத் தழுவுகிறேன்; நாலு திசைகளும் யக்ஞத்தை வளர்த்திடுக: நான் நன்கு பொழியும் அவியால் ஆஹுதி செய்கிறேன்.

[கக. க] ருகஅ சலம் [ஸிந்துத்வீபன்—ஆபன்]

௧ பனி மலையினின்று வரும் சலங்கள் உனக்கு மங்களமாகுக, ஊற்றுக்களினின்று வரும் சலங்கள் உனக்கு மங்களமாகுக. ஓடும் சலங்களும் மழை சலங்களும் உனக்கு மங்களமாகுக. உ பாழ்நில சலங்களும் சதுப்பு நிலச் சலங்களும் உனக்கு மங்களமாகுக, வாய்க்கால் சலங்களும் கும்பங்களோடான சலங்களும் உனக்கு மங்களமாகுக. ௩ மண் வெட்டியில்லாமல் வெட்டுபவர்களாயும், அறிஞர்களாயும் ஆழத்தில் செல்பவர்களாயும் வைத்தியர்களைவிட சிகிச்சை செய்பவர்களாயுமுள்ள சலங்களை நாங்கள் சாற்றுகிறோம். ச அசுவங்களே![1] திவ்ய சலங்களிலே—ஸ்னானமாகி—பெருகும் சலங்களிலே சுத்தி செய்யும் சலங்களிலே—ஸ்னானமாகி—நீங்கள் சக்தி பெருகுபவர்களாகுங்கள். ரு சலங்கள் உனக்கு

---

1 மானிடர்களே.

மங்களமாகுக, சலங்கள் சிவகரமாகவும் சலங்கள் யக்ஷ்மம் நீக்குபவையு—மாகுக; தாகமுள்ளவனுக்கு இன்பம் செய்வதுபோல், அவை உனது சேதிப்பை சிகிச்சை செய்திடுக. [கக, உ] ௫கக அக்கினி [அதர்வாங்கிரசன்—அக்கினி] க ஜாதவேதசனே சோதியினின்றும், புவியினின்றும் வானத்தினின்றும், வனஸ்பதிகளினின்றும் ஓஷதிகளினின்றும்—தோன்றி—எங்கு எங்கு பூரணமாய் விளங்குகிறுயோ, அங்கிருந்தெல்லாம் பிரியமுடனுகி எங்களுக்கு வா. உ அக்கினியே! சலங்களிலே உனது மகிமை எது உண்டோ வனங்களிலே, பசுக்களிலே, புனல்களிலே உனது—மேன்மை எது உண்டோ—அந்த — மேலான—உனது காயங்களையெல்லாம் ஒன்று குவி; அவற்றுடன் தேயாத திரவியத்தை யளிப்பவனுய் குறையாத எங்களிடம் வா. ௩ அக்கினியே! தேவர்களிலே உனது சுவர்க்கச் சிறப்பு எதுவோ, பிதுருக்களிலே நுழைந்த எத்தேக முண்டோ, மனிதர்களின் நடுவே உனது எப்புஷ்டி பெருகியுள்ளதோ அவற்றல் எங்களுக்குச் செல்வத்தை அளி. ச நான் கவியாயும் அறிவதற்கருகனுயும் செவியுறும் செவியுமுள்ளவனிடம் செல்வத்துக்காக யஜிக்கிறேன். எங்கு பயமுண்டோ அங்கு எமக்குப் பயமின்மையாகுக: அக்கினியே! தேவர்களின் கோபத்தைத் தணி. [கக, ௩.] ௫உ0 விருப்பம் [அதர்வாங்கிரசன் — அக்கினிருத மந்திரோக்த தேவதை] க அதர்வன் முதன்மையாய் செய்த ஆஹுதியாலும் ஜாதவேதசன் செய்த ஆஹுதியாலும் நான் முதன்மையாய் உனக்கு முழங்குகிறேன். அவற்ருேடு திருப்தியாகி அக்கினி அவியை வகித்துச் செல்வானுக; அக்கினிக்குச் சுவாஹா. உ தேவி சுபகையான விருப்பத்தை நான் முன் பக்கம் ஸ்தாபனஞ்செய்கிறேன்.

சிந்தனையின் அன்னை எங்களுக்கு சுக அழைப்புடனவா ளாக. என் ஆசை எனக்கே பூரணமாகுக: அது என் மனத்தில் நுழைவதை நான் காணவேண்டும். ௩ பிரகஸ்பதியே! எங்களுக்கு விருப்பத்துடன் வா. அப்பால் எங்களுக்குச் செல்வத்தை அளி: பிறகு எங்களுக்குச் சுக அழைப்புடனுகவும். ௪ பிரகஸ்பதி என் விருப்பத்தை அறிவானுக; அங்கிரஸனது மகன் என் மொழியை அறிவானுக; எந்த காமனில் தேவர்களும் தேவதையும் நன்கு செலுத்தப்பட்டு ஒன்று சேர்கிறார்களோ அந்தக் காமன் எங்களை அநுசரிப்பானுக. [௧௯. ௪.] ௫௨௧ இந்திரன் [அதர்வாங்கிரசன்—இந்திரன்.] ௧ புவியிலுள்ள எல்லா ரூபத்தின், மானிடர்களின் ஜகத்தின் இராஜா இந்திரன்; அவன் தாசர்களுக்குச் செல்வங்களை அளிக்கிறான்; எங்களால் போற்றப்படுங்கால் எங்களுக்கு அவன் செல்வங்களைப் பிரேரணை செய்வானுக. [௧௯. ௪.] ௫௨௨. புருஷன் [புருஷ சூக்தம் நாராயணன்—புருஷன்.] ௧ புருஷன் ஆயிரங்கைகளுள்ளவன்; ஆயிரங் கண்கள், ஆயிரங் கால்களுள்ளவன்; அவன் புவியைப் பூரணமாய்ச் சூழ்ந்து பத்து அங்குலங்களை ஆக்கிரமித்துள்ளான். ௨ அவன் மூன்று பாதங்களால் சோதியிலேறினன்; மறுபடியும் அவனது ஒரு பாதம் இங்கிருந்தது. அப்பால் அவன் புசிக்கும் புசிக்காத எல்லாப் பொருள்களிலும் வியாபகமானன். ௩ அவனது மகிமைகள் வெகு பல; புருஷன் அதைவிட மேன்மை வாய்ந்தவன்; எல்லா சீவர்களும் அவனது ஒரு பாகம்; சோதியிலே அமுதமாயுள்ளன அவனது மூன்று கால்கள். ௪ புருஷனே இந்த சர்வமும், இருப்பதும் இருக்கப் போவதும். வேறொன்றோடுபோல் சேர்ந்த அவன் அமுதத்தின் ஈசுவரன். ௫ அவர்கள் புருஷனைப் பிரித்தபோது எத்தனைப் பிரிவுகளாகப் பகிர்ந்தார்கள்.

அவன் முகம் எது? கைகள் எவை? அவனது தொடை பாதங்களின் நாமங்களெவை? கூ பிராமணன் அவனது முகம் க்ஷத்திரியன் அவனது இரு கைகள். வைசியன் அவனது நடுவு. அவனது இரு பாதங்களினின்றும் சூத்திரன் தோன்றினான். எ அவனது மனத்தினின்று சந்திரன் மலர்ந்தான். அவனது கண்ணினின்று சூரியன் சனனமானான். இந்திரனும் அக்கினியும் அவனது வாயினின்றும் விளங்கினார்கள்; வாயு அவனது பிராணனின்று புலனானான். அ அவனது நாபியினின்று வானமாயிற்று; அவனது சிரத்தினின்றும் சோதி செம்மையாக்கப்பட்டான். அவனது இரு பாதங்களினின்று புவியாயிற்று; அவனது செவிகளினின்று திசைகள் வந்தன; அவர்கள் இங்ஙனம் உலகங்களைச் செய்தார்கள் கூ ஆதியிலே விராடன் தோன்றினான். புருஷன் விராஜனிடமிருந்து—பிறந்தான்—சனனமானவுடன் புவியை முன்னும் பின்னும் அவன் ஆக்கிரமித்தான். க0 தேவர்கள் புருஷன் என்னும் ஆஹுதியால் யக்ஞத்தை விசாலமாக்குங்கால் வசந்தம் அதன் நெய்யாயிருந்தது; கிரீஷ்மம் சமித்து, சரத் அதன் அவி. கக அந்த யக்ஞத்தை, முதல் தோன்றும் புருஷனை, முதல் மறையால், அவர்கள், தெளித்தார்கள்; தேவர்களும் சாத்தியர்களும் வசுக்களும் அவனால் யக்ஞஞ் செய்தார்கள். கஉ அந்த—யக்ஞமான—புருஷனிடமிருந்து —குதிரைகள் தோன்றிற்று, வாய்களில் இருவரிசை பற்களுள்ள பிராணிகளும் புலனாயிற்று. அதனிடமிருந்து பசுக்கள் பிறந்தன; ஆடுகளும் அஜங்களும் அந்த யக்ஞத்தினின்றும் அமைந்தன. கங அந்த சர்வஹுதமான யக்ஞத்தினின்று ருக்குக்களும் ஸாமன்களும் சனித்தன; அதனிடமிருந்து சந்தம் தோன்றிற்று. அந்த—யக்ஞத்தினின்றே யஜுர் அமைந்

தது. ௧௪ அந்த சர்வஹுதமான யக்ஞத்தினின்று ததி—நெய் ஒன்று குவிந்தன; அது வாயுச் சேர்க்கை யான பிராணிகளேயும் வன கிராம விலங்குகளேயுஞ் செய்தது. ௧௫ தேவர்கள் புருஷனே பந்தஞ் செய்து யக்ஞத்தை விசாலமாக்குங்கால் அதனேச் சுற்றும் சமிதைகள் ஏழு: இருபத்து ஒன்று அதன் சமித்துக்கள். ௧௬ புருஷனிடமிருந்து பிறந்த பெரிய தேவனுயுள்ள அரசனுன சோமனது சிரத்தினின்றும் ஏழு—எழுபது கிரணங்கள் எழுந்தன. [௧௧. ௬]

௫௨௩ நட்சத்திரங்கள் [கார்கியம் — நட்சத்திரங்கள்]

௧ அதிசயர்களாய், சோதியிலே ஒன்று ஒளி வீசுபவர்களாய், சதா சலனர்களாகி புவனத்தில் துரிதர்களான—இன்ன லழிக்கும்—இருபத்து எட்டு—நட்சத்திரங்களே சுமதிக்கு நாடி, நாள்களேயும் நாகத்தையும் அநுசரிக்கிறேம். ௨ அக்கினியே! கார்த்திகையும்[1] உரோஹிணியும்[2] எனக்கு உயரிய யக்ஞாருகர்களாகுக; மிருகசீரிடம்[3] மங்களமாகுக: திருவாதிரை[4] சுகமளிப்பதாகுக: புனர்பூசமும்[5] பிரியளாகுக: பூசம்[6] சுந்தரமாகுக. ஆயிலியம்—சூரிய—னுகுக: மகம்[7] எனது—அயனம்[8]. ௩ பூர்வ பல்குனியும்[9] ஹஸ்தமும்[10] இங்கு புண்ணியமாகுக, சித்திரம்[11] சிவமாகுக, சுவாதி[12] எனக்கு சுகமுடனுகுக; இராதையும் விசாகமும்,[13] யக்ஞாருகமான அநுராதையும்[14] நல்ல நட்சத்திரமான கேட்டையும்,[15] இன்னலாகாத மூலமும்[16]—நலம் அளிப்பவையாகுக. ௪ பூர்வ அஷாடம்[17] எனக்கு உணவை அளித்திடுக: உத்திராஷாடங்

1 இதன் தேவதை அக்கினி. 2 பிரஜாபதி தேவதை. 3 சோம தேவதை. 4 ருத்திரன். 5 அதிதி. 6 சர்ப்பன். 7 பிதுரு; 8 வழி. 9 அரியமான், உத்தர பல்குனி—பகன். 10 சாவித்திரி. 11 ஐந்திரி. 12 வாயு. 13 ஐந்திராக்கினி. 14 மைத்திரம். 15 ஐந்தரி. 16 பிதுரு. 17 அப்த தேவதை.

கள்[1] உறுதியை அளித்திடுக; அபிஜித்து [2] மங்களமானதை அளித்திடுக; சிராவணமும் [3] சிராவிஷ்டமும்[4] சுபுஷ்டியைச் செய்க. ரு மேலான விரிவை சதபிஷக்கம்[5] தருக; இரு பிரோஷ்ட பதங்கள் நற்காப்பை எனக்குத் தந்திடுக இரேவதியும் இரு அசுவயுஜங்களும் எனக்குச் செல்வத்தைக் கொண்டுவருக. பரணிகள் எனக்குப் பொருளை வகித்திடுக. [கக. எ.]

ருஉச விண்மீன் பற்று [கார்கியன்—மந்திரோக்தானி நட்சத்திரங்கள். சு பிரமணஸ்பதி] க சோதியில், வானத்தில், சனங்களில், புவியில், மலைகளில், திசைகளிலுள்ள நட்சத்திரங்களில் எவற்றைச் சந்திரன் பக்குவஞ் செய்து அடைகிறானோ அவ்விண்மீன்கள் எனக்கு மங்களமளிப்பவையாகுக. உ இருபத்து எட்டு சிவமான நட்சத்திரங்கள் ஒன்றுசேர்ந்து துணை புரிபவர்களாய் எனக்கு யோகத்தைப் பகிர்ந்திடுக நான் யோகத்துக்கும் க்ஷேமத்துக்கும் முன் செல்லுகிறேன்; நான் யோகத்துக்கும் க்ஷேமத்துக்கும் முன் செல்லுகிறேன்; இரவுக்கும் பகலுக்கும் வணக்கமாகுக. ந சூரியாஸ்தம் எனக்கு நலமுடனாகுக, காலையில் நலம், மாலையில் நலம் பகலில் நலம். பசுக்களோடு எனக்கு நலமாகுக: பறவைகளோடு நலம்: அக்கினியே! சுஹவத்தோடு நலமுடன் அமர்த்தியனுக்குச் சென்று இன்பமளிப்பவனாய்த் திரும்பி வா. ச சவிதாவே! எல்லா சூனிய கலசங்களோடு, பழி மொழியையும், இழிச் சொல்லையும், பாழுரையையும் புன் தடிப்பையும் என்னிடமிருந்து பிரித்துவிடு. ரு துன்பமளி உணவை துரத்து. தூய உணவு வேண்டும்: துன்பமே திவ்யன் தூய்மையோடு உனக்கு நாற்றஞ் செய்க. சு பிரமணஸ்பதியே!

1 விசுவே தேவர்கள். 2 பிரமன். 3 விஷ்ணு 4 வசு. 5 ஐந்திரம்.

காற்றில் எங்கும் வீசும் இச்—சுகந்தங்களை—ஒன்று வரச் சேர். இந்திரனே! நீ அவற்றை எனக்கு மங்களகரமாகச் செய். எ சுவஸ்வதி எமக்காகுக: எமக்கு அபயமாகுக: இரவு பகலுக்கு வணக்கமாகுக. [கக. அ]

ருஉரு சாந்தம் [பிரமரிஷி—சாந்தி சூக்தம். சாந்தி தேவதை] க எங்களுக்குச் சோதி சாந்தமாகுக, புவி சாந்தம் விரியும் இவ்வானம் சாந்தம், நீர் மிகும் சலங்கள் சாந்தம், எங்களுக்கு ஔஷதங்கள் சாந்தமாகுக. உ பூருவ ரூபங்கள் சாந்தங்களாகுக: செய்ததும் செய்யாததும் சாந்தம். இருப்பதும் இருக்கப்போவதும் சாந்தம், ஒவ்வொன்றும் எங்களுக்கு சாந்தமாகுக. ௩ பிரமத்தால் கூர்மையாயும், புனிதமாயும் பரமேஷ்டியாயுமுள்ள இம் மொழியால் பயங்கரத்தைப் புலனுக்கும் இச் சொல்லால் எங்களுக்குச் சாந்தமாகுக. ௪ பிரமத்தால் கூர்மையாயும் பரமேஷ்டியாயு முள்ள இம்மனத்தால், பயங்கரத்தை உண்டுபண்ணும் இம்மனத்தால் எங்களுக்குச் சாந்தமாகுக. ரு பிரமத்தால் கூர்மையாயும் எனது இருதயத்திலுள்ள, மனத்தை ஆறாகவுள்ள, இந்தப் பஞ்சேந்திரியங்களால் பயங்கரத்தை உண்டுபண்ணும் இவற்றால், எங்களுக்குச் சாந்தமாகுக. ௬ எங்களுக்கு மித்திரன் சாந்தமாவானாக; வருணன் சாந்தம், விஷ்ணு சாந்தம், பிரஜாபதி சாந்தம், இந்திரன் சாந்தம், பிரகஸ்பதி சாந்தம், அரியமான் சாந்தமாவானாக. எ எங்களுக்கு மித்திரன் சாந்தம், வருணன் சாந்தம், விவஸ்வான் சாந்தம், அந்தகன் சாந்தம், வானத்தினின்றும் வையத்தினின்றும் விளங்கும்—வன் செயல்கள்—சாந்தம், சோதியிலே சலனமாகும் கிரகங்கள் சாந்தமாகுக. அ நடுங்கும் புவி எங்களுக்குச் சாந்தமாகுக, வீழும் சுவாலை சாந்தம், சிகப்புப் பாலுள்ள பசுக்கள் சாந்தம், பிளக்கும் புவியும் சாந்த

மாகுக. கூ சோதி கிலை பற்றிய நட்சத்திரம் எங்களுக்குச் சாந்தமாகுக. அபிசாரங்களும் அவச் செயல்களும் எங்களுக்குச் சாந்தமாகுக, புதைத்த செயல்கள் சாந்தம், விழும் சோதியின் கிலைகள் சாந்தம், தேசத் தீமைகளும் சாந்தமாகுக. க0 சந்திரனைச் சேரும் கிரகங்கள் எங்களுக்குச் சாந்தமாகுக: இராகுவோடு ஆதித்தியனும் சாந்தமாகுக: தூமகேதுவான மிருத்யுவும் எங்களுக்குச் சாந்தமாகுக: கூறிய தேஜசுள்ள ருத்திரர்களும் எங்களுக்குச் சாந்தமாகுக. கக ருத்திரர்கள் சாந்தம், வசுக்கள் சாந்தம், ஆதித்தியர்கள் சாந்தம், அக்கினிகள் சாந்தம், எங்களுக்கு மகரிஷிகள் சாந்தம், தேவர்கள் சாந்தம், பிரகஸ்பதி சாந்தமாவானுக. கஉ பிரமன், பிரஜாபதி, உலகங்கள், வேதங்கள், ஏழு ரிஷிகள், அக்கினிகள்—இவர்களால் எனக்கு நல்வழி உண்டு: இந்திரன் எனக்குச் சுகத்தை அளிப்பானுக: எல்லா தேவர்களும் எனக்குச் சுகத்தை யளிப்பார்களாக. கங ஏழு ரிஷிகள் எந்த சாந்தப் பொருள்களை யெல்லா மறிந்தார்களோ, அவை அனைத்தும் எனக்குச் சாந்தமாகுக: எனக்கு சாந்தமாகுக; அச்சமின்மை எனக்கு ஆகுக. கச புவி சாந்தி, வானம் சாந்தி, சோதி சாந்தி, சலங்கள் சாந்தி, ஓஷதிகள் சாந்தி, வனஸ்பதிகள் சாந்தி: விசுவே தேவர்கள் எனக்குச் சாந்தி—சொரூபமாவார்களாக: எனக்கு எல்லா தேவர்களும் சாந்தி; சாந்திகளோடு சாந்தி: சர்வ சாந்திகளாகும் இந்த எல்லாச் சாந்திகளோடும், இங்கு கோரமாயுள்ளதை இங்கு கொடுமையா யுள்ளதை இங்கு கயமா யுள்ளதை, நான் சாந்திச் செய்கிறேன். அது சாந்தி, அது சிவம்: எங்களுக்குச் சர்வமும் சாந்த—மளிப்பதாகுக [ககூ. கூ]

ரு௨கூ நன்று [சாந்திகாமோ பிரமன்—சோமன்] க துணைகளோடு இந்திரனும் அக்கினியும் எங்களுக்கு

நன்று. அவிகளைப் பெறும் இந்திரனும் வருணனும் எங்களுக்கு இனியர்கள்: இந்திரனும் சோமனும் இன்னல் நீங்குவதற்கு இனியர்கள்: சக்தி ஜயிப்பதில் இந்திரனும் பூஷணனும் எங்களுக்கு நன்று. உ எங்களுக்கு பகன் இனியன். எங்களுக்கு சம்சன் இனியனுவாருக, எங்களுக்குப் புரந்தி இனியன். எங்களுக்குச் செல்வங்கள் இனியவையாகுக—நல்வழியின் சத்தியச் சாற்று எங்களுக்கு இனிது: அதி சனனமான அரியமான் எங்களுக்கு இனியனுவாருக. ௩ எங்களுக்கு தாத்ரு இனியவனுவாருக. எங்களுக்குத் தர்த்தா நன்று விரிந்தவள். அவளது வலிமைகளுடன் எங்களுக்கு இனியவளாவாளாக: எங்களுக்கு வானமும் புவியும் நன்று: மலை இனிது: தேவர்களின் சுக அழைப்புக்கள் இனியவையாகுக. ௪ சோதிமுகமுள்ள அக்கினி எங்களுக்கு இனியனுவாருக: மித்திரனும் வருணனும் எங்களுக்கு இனியர்கள், இரு அசுவினிகள் இனியர்கள். சுகிருதர்களின் சுக செயல்கள் எங்களுக்கு நன்று: சலனமாகுங் காற்று எங்களில் இனியதை வீசுக. ரு எங்களது பூர்வ அழைப்பிலே சோதியும் புவியும் எங்களுக்கு இனியவையாகுக: நாங்கள் காண வானம் இனிதாகுக: எங்களுக்கு ஓஷதிகளும் செடி கொடிகளும் இனியவையாகுக: ஜயிக்கும் வெளிபதி எங்களுக்கு இனியன். சு தேவ இந்திரன் வசுக்களுடன் எங்களுக்கு நன்று, ஆதித்தியர்களோடு நற் துதியுள்ள வருணன் இனியன்; ருத்திரர்களோடு சிகிச்சை செய்யும் ருத்திரன் எங்களுக்கு நன்று, துவஷ்டா இங்கு அவனது மனைவிகளோடு எங்களது இனிமைக்குச் செவியுறுவாருக. எ எங்களுக்குச் சோமன் நன்று, எங்களுக்கு பிரமன் நன்று: எங்களுக்கு யக்ஞ சாதனங்கள் நன்று: எங்களுக்கு யக்ஞங்கள் நன்று: எங்களுக்கு யக்ஞ

ஸ்தம்ப ஸ்தாபனங்கள் நன்று: எங்களுக்கு விளையும் செடிகொடிகள் நன்று: எங்களுக்கு வேதி நன்று. அ சூரியன் விரியுங் கண்ணோடு எங்களுக்கு நலத்துடன் எழுவானாக; நான்கு திசைகளும் எங்களுக்கு இனியர்; திடமான மலைகள் எங்களுக்கு நன்று: பூஷணன் எங்களிக்கு இனியவன்; நதிகள் எங்களுக்கு இனியர்; சலங்கள் நன்று. கூ அதிதி விரதங்களோடு எங்களுக்கு நன்று: இசைக்கும் மருத்துக்களும் இனியர்கள்; எங்களுக்கு விஷ்ணு இனியன்; பூஷணன் எங்களுக்கு நன்று; வசிக்கும் நிலயம் எங்களுக்கு இனிது; வாயு எங்களுக்கு இனியன். க0 கறக்கும் தேவ சவிதா எங்களுக்கு நன்று; ஒளி வீசும் உஷைகள் இனியர்: எங்கள் பிரசைக்கு பர்ஜன்யன் நன்று. நலமளிக்கும் க்ஷேத்திரபதி எங்களுக்கு இனியன்.[1] [கக. க0]

ருஉஎ இனிது [சாந்திகர்ம பிரமன்—சோமன்] க சத்தியபதிகள் எங்களுக்கு இனியர்களாவார்களாக, எங்களுக்கு குதிரைகள் இனியர்; பசுக்கள் நன்று: சுகிருதஞ் செய்யும் நற்கைகளுள்ள ரிபுக்கள் எங்களுக்கு இனியர்கள்: எங்கள் அழைப்புக்களில் பிதுருக்கள் எங்களுக்கு இனியராவார்களாக. உ தேவர்களும் விசுவே தேவர்களும் எங்களுக்குச் சுகமளிப்பார்களாக. அறிவுகளோடு சரஸ்வதீ இனிமையாவாளாக. தொடர்பவர்கள் நன்று, செல்வமநுசரிப்பது இனிது. புவியிலுள்ளவையும் சோதியிலுள்ளவையும் எங்களுக்கு நன்று. சலங்களிலுள்ளவையும் எங்களுக்கு இனியவை. ந தேவனை ஒருகாலுள்ள அஜன் எங்களுக்கு நலமாவானாக. அடிப்பாம்பு இனிது, கடல் நன்று, சலங்களின்

1 இனிமை யளிப்பானாக என்று கருதுங்கள். அப்படியே மற்றவையையும் தெரிந்துகொள்க.

பேரான பேரு இனிது; தேவர்களால் காக்கப்படும் சுந்தரன் எங்களுக்கு இனியனுவானுக. ௪ நாங்கள் செய்யும் இந்த புதிய பிரமத்தை, ஆதித்தியர்களும், ருத்திரர்களும் வசுக்களும் கிரகிப்பார்களாக. சோதியி லுள்ளவர்களும் புவியி லுள்ளவர்களும், பசுஜனன மான வர்களும் யக்ஞாருகர்களும் எங்களைக் கேட்பார்களாக. ௫ தேவர்களின் யக்ஞாருகர்களான ரித்விக்குக்கள், மானி டர்களால் போற்றுவதர்க்கான ருதம்றியும் அறிஞர் கள் எங்களில் இன்னும் விரியும் வழியை யளிப்பார்களாக. நீங்கள் எங்களைச் சதாகாலம் சுவஸ்திகளால் பாலனஞ் செய்யுங்கள். ௬ மித்திரவருணனே! அது அப்படி யாருக அப்படியே அது அக்கினியே! இத்துதி இனிதாயும் இலாபமுமாகுக. நாங்கள் திரவியத்தையும் திடநிலை யையும் சேரவேண்டும்: பீடமான பெரியசோதிக்கு வணக்கம். [கக. கக.] ௫உ௮ உஷை [சாந்தி காமன் பிரமன்—சோமன்] க உஷை சகோதரி யின் இருளை நீங்கச் செய்கிருள்: அவளது மேன்மை யால் அவளை அவளது வழியிலே அவள் செலுத்துகிருள்: அவளுடன், தேவர்களால் வைக்கப்பட்டுள்ள செல் வத்தை நாங்கள் அடையலாமோ: சுவீரர் மிகுந்து, நூறுவருஷகாலம் வசித்து நாங்கள் இன்பமாகாலாமோ? [கக. கஉ.] ௫உ௯ ஒரே வீரன் [அப்பிரதி இரதன்— இந்திரன்] க இந்திரனுடைய இருகைகள் திடமாயும் திண்மையாயு முள்ளன: இவை இரண்டும் அதிசயமா னவை. ஜயிப்பவை விருஷபங்கள்: சமர் வருங்கால் நான் முதன்மையாய், அசுராது சுவர்க்கத்தை ஜயித்த அந்தக் கைகளை இணைக்கிறேன். உ துரிதன், தீட்சணன், விருஷபத்தைப்போல் திகில் செய்பவன் துரிதமாய்த் தொலைத்து சனங்களை நடுக்கஞ்செய்யும் ஒரே வீரனை

இந்திரன் அதிகர்ச்சனை செய்து இமைகொட்டாமலுள்ள அவன் நூறு சேனைகளை ஒருமிக்க ஜயித்தான். ௩ அதிகர்ச்சனை செய்து இமை கொட்டாமலுள்ள இந்திரனால், ஜயிப்பவனாய் ஜயிக்கப்படாமலும் அசைக்கப்படாமலுள்ள ஒரே வீரனான அவனால், கைகளில் சரங்களுள்ள சக்திமிகும் அவனால், சமர்செய்பவர்களை நாசஞ் செய்யுங்கள். ௪ சரக்கைகளுள்ளவர்களோடு சரக்கூடுள்ளவர்களுடன் இந்திரன் — எதிரிகளை — அடக்குபவன், அவன் தன் கணத்தோடு சமர்செய்பவர்களை ஒன்று சேர்க்கிறான், சோமபானஞ் செய்யும் அவன் உறுதியான கைகளுடன், பயங்கரவில்லுள்ள அவன் அமையும் சரங்களை எய்து ஒன்று சேரும் சத்துரு சேனைகளை— ஜயிக்கிறான். ௫ இந்திரனே! திடமறியும் திடனான நீ சக்திமிகுந்த அதிசூரனான — நீ — ஜயித்து பயங்கரமான நீ வீரர்களையும் சூரர்களையும் ஆக்கிரமித்து, சக்தியுடன் ஜயித்து, ஜயசீலமான பசு ஜயிக்கும் இரதத்திலேறு. ௬. நீங்கள் உக்கிரமான இந்த வீரனை அநுசரித்து இன்பமாகுங்கள். நண்பர்களே! இந்திரனைத் தொடர்ந்து தரியுங்கள். அவன் கிராமஞ் ஜயிப்பவன், கோஜயிப்பவன், வச்சிரக்கையுள்ளவன், சத்துருபலஞ் ஜயிப்பவன், சக்தியாலழிப்பவன். ௭ இந்திரன் கோசாலைகளை வலிமையுடன் ஆக்கிரமிப்பவன். இரக்கமற்ற அவன் உக்கிரன். சத கோபமுள்ள அவன் அசைவற்றவன், சமர் செய்பவர்களை ஜயித்து எதிர்ப்பற்றுள்ள அவன், சமர்களிலே எங்கள் சேனைகளைக் காப்பானாக. ௮ பிரகஸ்பதியே! பகைவர்களைத் துரத்துபவனாய், அரக்கரழிக்கும் நீ உன் இரதத்தோடு பற. எதிரிகளைப் பிளந்து அரிகளை அதஞ்செய்து, நீ எங்களுக்குத் துணை புரிபவனாகவும். ௯ இந்திரன் இவர்களது தலைவனாவானாக. பிரகஸ்பதி, தட்

சேனை, யக்ஞம் முன்புறம் செல்க: சிதைத்து ஜயிக்கும் சேனைகளின் நடுவே மருத்துக்கள் செல்க. க0 விருஷபனை இந்திரனுடைய வருண இராஜனுடைய ஆதித்தியர்களுடைய மருத்துக்களுடைய உறுதி உக்கிரம் வாய்ந்தது. மேலான மனமுள்ள தேவர்களது முழக்கமும், புவனங் கலக்கும் எதிரி—புடைக்கும் தேவர்களும் எழுந்துள்ளார்கள். கக கொடிகள் குவியுங்கால் எங்களுக்கே இந்திரன்; எங்கள் சரங்கள் ஜயித்திடுக. எங்கள் வீரர்கள் ஓங்குக. தேவர்களே! சமர்களில் எங்களுக்குத் துணை புரியுங்கள். [கக. கநு.] ருநுo சோதியும் புவியும் [அதர்வன்—தியாவாப் பிருதிவீ.] க நான் இந்த சிரேயசான நிலயத்துக்கு வந்துள்ளேன்: சோதியும் புவியும் எனக்கு மங்களகரமாயுள்ளார்கள்; திசைகள் எனக்கு எதிர்ப்பு சூனியமாகுக: நாங்கள் உன்னை வெறுக்கவில்லை; எங்களுக்கு பயமின்மையாகுக. [கக. கச.] ருநுக அபயம் [அதர்வன்—பல தேவர்கள்.] க இந்திரனே! நாங்கள் எதனால் பயமாகிறோமோ அதில் எங்களுக்கு பயமின்மையைச் செய்: மகவானே! உனது இரட்சைகளால் எங்களுக்கு உதவி செய்: துவேஷிக்கும் சத்துருக்களைத் துவம்சஞ்செய். உ நாங்கள் ஜயமளிக்கும் இந்திரனை அழைக்கிறோம்: இரு கால் நான்கு கால் விலங்குகளில் நாங்கள் பெருகவேண்டும். குரூரப் பகைவர்களின் சேனைகள் எங்களை அணுகாமலாகுக: துவேஷிப்பவர்களைச் சிதறடித்துத் துவம்சஞ் செய். ந இந்திரன் நம்மைக் காப்பவன், விருத்திரனழிப்பவன். அவன் நாம் விரும்பும் விரிந்த விசால இரட்சகன். முன், பின் நடுவு, ஓரங்களிலே அவன் எங்கள் இரட்சகனுவானுகை. ச இந்திரனே சுவஸ்தியும் அச்சமின்மையும், சுவர்க்கச் சோதியுமுள்ள விரிந்த சகத்துக்கு, அறியும் நீ, எங்களை அழைத்துச் செல்

வாயோ! இரு காப்புக்களான, திடனான உனது, உக்கிரக் கைகளின் கீழே, நாங்கள் வசிக்கலாமோ. ௫ வானம் எனக்கு அச்சமின்மையைச் செய்க; சோதியும் புவியும் இங்கு அச்சமின்மையைச்—செய்க. பின்புறத்தினின்று அச்சமின்மையும் முன்புறத்தினின்று அச்சமின்மையும் கீழினின்றும் மேலினின்றும், அச்சமின்மை எங்களுக் காகுக. ௬ நண்பனின் அச்சமின்மை நள்ளாரின் அச்ச மின்மை அறிபவனின் அச்சமின்மை அகன்றவனின் அச்சமின்மை எங்களுக்கு இரவிலே அச்சமின்மை, தினத்திலே அச்சமின்மை, எல்லா திசைகளும் எனக்கு நண்பர்களாகுக. [கக.—க௫.] ௫௩௨ பய மின்மை [அதர்வன் — மந்திரோக்த தேவதைகள்.] க முன்புறம் எதிரி சூனியமும் பின்புறம் பயமின்மையும் பொருந்தியுள்ளன; சவிதா என்னைத் தென் திசையிலே, சசீபதி புவியிலே—பாலனஞ்செய்கிறார்கள். உ ஆதித் தியர்கள் சோதியினின்று என்னைக் காப்பார்களாக; தென் திசையினின்று அனல் என்னைக் காப்பானாகை. முன் புறத்தினின்று என்னை இந்திராக்கினி காப்பார்களாக. சுற்றுப்புறம் அசுவினிகள் எங்களுக்குத் துணை செய்வார் களாக. குறுக்கிலே இம்சையாகாத ஜாதவேதசன் துணை செய்வானாகை. பூதகிருதர்கள் எங்கும் என்னை இரட்சிப்பார் களாக. [கக. கசு.] ௫௩௩ துணை [அதர்வன் மந்திரோக்த தேவர்கள்] க அக்கினி வசுக்களோடு என்னைக் கீழ்த் திசையிலே காப்பானாகை. நான் அவனுக்குச்சலனமாகி றேன். அவனில் ஆசிரயமாகிறேன்; நான் அந்தப்புரத் துக்கு முன்செல்லுகிறேன்; அவன் என்னைக் காப்பானாகை, அவன் எனக்குத் துணை செய்வானாகை, நான் என் ஆத் மாவை அவனுக்களிக்கிறேன்; சுவாஹா! உ வாயுவானத் தோடு இத்திசையினின்றும் என்னைக் காப்பானாகை............

சுவாஹா! ௩ சோமன் ருத்திரர்களோடு என்னைத் தென் திசையினின்றும் காப்பானாக..........சுவாஹா! ௪ வருணன் ஆதித்தியர்களோடு இத்திசையினின்றும் என்னைக் காப்பானாக............சுவாஹா! ௫ சூரியன் சோதி புவியோடு மேற்திசையினின்றும் என்னைக் காப்பானாக..........சுவாஹா! ௬ சலங்கள் ஓஷதிகளுடன் சேர்ந்து இத்திசையினின்றும் என்னைக் காத்திடுக........ அவற்றிற்கு ........அவற்றில்..........அவை.......அவை.... ....அவற்றிற்கு.......சுவாஹா! ௭ விசுவகர்மன் ஏழு ரிஷிகளோடு என்னை வடதிசையினின்றும் காப்பானாக...... சுவாஹா! ௮ இந்திரன் மருத்துக்களோடு என்னை இத்திசையினின்றும்.......சுவாஹா! ௯ பிரதிஷ்டையுடன் பொருந்தி சனன சக்தியுடனான பிரஜாபதி என்னைத் துருவ திசையினின்றும் காப்பானாக..........சுவாஹா! ௰ தேவர்களோடு பிரகஸ்பதி உச்சி திசையினின்றும் என்னைக் காப்பானாக..................சுவாஹா! [௧௯. ௧௭]

௫௩௪ வீழ்க [அதர்வன்—மந்திரோக்த தேவதைகள்]

௧ கீழ்த்திசையினின்று என்னை எதிர்க்க வரும் கீழோர்கள் வசுக்களோடான அக்கினியிலே வீழ்க. ௨ இத்திசையினின்று வானத்தோடு வாயுவிலே வீழ்க. ௩ தென் திசையினின்றும்.......ருத்திரர்களோடு சோமனில்சாய்க. ௪ இத்திசையினின்று...............ஆதித்தியர்களோடான வருணனில் வீழ்க. ௫ மேற்திசையினின்று.......சோதி புவியுடனுள்ள சூரியனில் வீழ்க. ௬ இத்திசையினின்று ..........ஓஷதிகளோடான சலங்களில் வீழ்க. ௭ மேற்திசையினின்று ஏழு ரிஷிகளோடான விசுவ கர்மனில் வீழ்க. ௮ இத்திசையினின்று..............மருத்துக்களோடான இந்திரனில் வீழ்க. ௯ துருவ திசையினின்று. ..................சனன சக்தியுள்ள பிரஜாபதியில் வீழ்க.

௧௦ உச்சி திசையினின்று......................தேவர்களோ டான பிரகஸ்பதியில் வீழ்க. [௧௧. ௧௮] ௫௩௫ பிர வேசம் [அதர்வன்—சந்திரமன் மந்திரோக்த தேவ தை] ௧ மித்திரன் புவியோடு ஏறினன். நான் உங் களை அப்புரத்துக்கு முன் அழைத்துச் செல்லுகி றேன். அங்கு நுழையுங்கள்; அங்கு பிரவேசியுங்கள். ௨—௧௧ வாயு வானத்தோடு ஏறினன்...............சூரியன் சோதியோடேறினன்..........சந்திரன் நட்சத்திரங்களோ டேறினன்..............சோமன் ஓஷதங்களோடேறினன்.... ..........தட்சிணைகளோடு யக்ஞமேறினன்...............நதிக ளோடு கடல் ஏறினன்...............பிரம்மசாரிகளோடு பிர மன்..................வீரரோடு இந்திரன் ஏறினன்............ அமுதத்தோடு தேவர்கள் ஏறினர்கள்...............பிரஜை களோடு பிரஜாபதி ஏறினன் [௧௧. ௧௧.] ௫௩௬ காப்பு [அதர்வன்—நாநாதேவர்கள்] ௧ சோமனும் வருண னும், இந்திரனும் அக்கினியும், தாத்ருவும் சவித்ருவும், பிரகஸ்பதியும் அசுவினிகளும் யமனும், எங்களை, மனி தர் மாய்க்கும் ஆயுதத்தினின்றும், நீக்குவார்களாக. மிருத்யுவினின்றும் எங்களைப் பூஷணன் எங்கும் பாது காப்பானுக. ௨ புவனபதியான பிரஜாபதியும், மாதரிசுவ னும், பிரஜைகளுக்கு எந்தப் பாதுகாப்பைச் செய்தார் களோ, திசைகளும் பிரதிசைகளும் எந்தப் பாதுகாப்பில் வசிக்கின்றனவோ, அக்காப்புகள் எனக்கு ஓங்குக. ௩ அதி இராஜனவதர்க்கு சமர்செய்யுங்கால், தேவர்கள் எந்தக் கவசத்தை அணிந்தார்களோ, இந்திரன் தனக்கு எக்காப்பை செய்து கொண்டானே—அது எங்களை எங் கும் காத்திடுக. ௪ எனக்கு சோதியும் புவியும் கவ சத்தை, பகல், கவசத்தை, சூரியன் கவசத்தை, எல்லா தேவர்களும் கவசத்தைச் செய்வார்களாக. துன்பம்

என்னில் விழாமலாகுக. [கக. உ0.] ருகூஎ சந்தங்கள் [பிரமன்—சந்தன்] க காயத்திரீ. உஷ்ணிக். அநுஷ்டுபு. பிருஹதீ. பங்க்தி. திரிஷ்டுபு. ஜகதி. [கக. உக] ருகூஅ அதர்வவேதம். [அங்கிரன்—மந்திரோக்த தேவதைகள்] க உ0 அங்கிரசர்களின் முதல் ஐந்து அநுவாகங்களோடு சுவாஹா! ஆறுவதுக்கு சுவாஹா! எழுக்கும் எட்டுக்கும் சுவாஹா! 'நீலநற'—சூக்தங்களுக்கு சுவாஹா! பொன்நிற—படலங்களுக்கு சுவாஹா! சூட்சம சூக்தங்களுக்கு சுவாஹா, பரியாய சூக்தங்களுக்கு சுவாஹா! முதற் சங்குகளுக்கு சுவாஹா! இரண்டாவதான சங்குகளுக்கு சுவாஹா, மூன்றுவதான சங்குகளுக்கு சுவாஹா! கடைச் சங்குகளின் முன்னுள்ளவற்றிற்கும் சுவாஹா! கடைச் சங்குகளுக்கு சுவாஹா! அப்பாலுள்ளவற்றிற்கு சுவாஹா! ரிஷிகளுக்கு சுவாஹா! உச்சிகளுக்கு சுவாஹா! கணங்களுக்கு சுவாஹா! மகா கணங்களுக்கு சுவாஹா! கணங்களறியும் அங்கிரசர்களுக்கு சுவாஹா! தனி சூக்தத்துக்கும் ஆயிரம் சூக்தங்களுக்கும் சுவாஹா! பிரமத்துக்கு சுவாஹா! உக பிரமனைத் தலைவனுகக் கொண்டு வீறுகள் குவிந்தன; ஆதியில் பிரமன் தலைவனுப், சோதியை விசாலஞ் செய்தான்; பொருள்களின் முதல்வனுகப் பிரமன் பிறந்தான்; ஆதலால் பிரமத்தோடு நிகராய் நிற்க எவனுல் இயலும்? [கக. உஉ.] ருகூகூ அதர்வப் பிரிவுகள் [அதர்வன்—மந்திரோக்த உதசந்திரமா தேவதை] க—கஎ ஆதர்வர்களது நான்கு மந்திர—சூக்தங்களுக்கு சுவாஹா! ஐந்து மந்திர சூக்தங்களுக்கு சுவாஹா! ஆறு மந்திர சூக்தங்களுக்கு சுவாஹா! எழு மந்திர சூக்தங்களுக்கு சுவாஹா! எட்டு மந்திர சூக்தங்களுக்கு சுவாஹா! பத்து மந்திர சூக்தங்களுக்குச் சுவாஹா! பன்னிரண்டு மந்திர சூக்தங்களுக்கு

சுவாஹா! பதின்மூன்று மந்திர சூக்தங்களுக்கு சுவாஹா! பதினான்கு மந்திர சூக்தங்களுக்கு சுவாஹா! பதினைந்து மந்திர சூக்தங்களுக்கு சுவாஹா! பதினாறு மந்திர சூக்தங்களுக்கு சுவாஹா! பதினேழு மந்திர சூக்தங்களுக்கு சுவாஹா! பதினெண் மந்திர சூக்தங்களுக்கு சுவாஹா! பத்தொன்பது சுவாஹா! இருபது சுவாஹா. கஅ—உக மேலான காண்டத்துக்கு சுவாஹா! மூன்று மந்திர சூக்தங்களுக்கு சுவாஹா! ஒரு மந்திர சூக்தங்களுக்கு சுவாஹா! சூட்சம மந்திர சூக்தங்களுக்கு சுவாஹா! அபூர்ண மந்திர சூக்தங்களுக்கு சுவாஹா! ரோஹிதர்களுக்கு சுவாஹா! இரு சூரியர்களுக்கு சுவாஹா! இரு விராத்தியர்களுக்கு சுவாஹா! பிரஜாபதியின் இரு சூக்தங்களுக்கு சுவாஹா! விஷாசஹிக்கு சுவாஹா! மங்கள சூக்தங்களுக்கு சுவாஹா! பிரமத்துக்கு சுவாஹா!

௩௦ பிரமனைத் தலைவனாக்கொண்டு வீறுகள் குவிந்தன. ஆதியில் பிரமன், தலைவனாய் சோதியை விசாலஞ் செய்தான்: பொருள்களின் தலைவனாக பிரமன் பிறந்தான்: ஆதலால் பிரமத்தோடு எதிர் நிற்க எவனால் இயலும்? [கக. உரு]

ருசO போர்த்து. க பிரம்மணஸ்பதியே! எந்த ஆடையால் தேவ சவிதாவை தேவர்கள் அணிந்தார்களோ, அதனால், நீங்கள் இவனை இராஷ்டிரத்துக்கு, போர்த்துங்கள். உ இந்த இந்திரனை, க்ஷத்திரத்துக்கு, மேலான ஆயுசுக்கு அது அவனை மூப்புவரைச் செலுத்த, இவனைப் போர்த்துங்கள்: அவன் வெகுகாலம் க்ஷத்திரத்தில் விழிப்புடனாகவேண்டும் ௩ இந்த இந்திரனை, ஆயுசுக்கு மேலான செவிச்—செல்வத்துக்கு, அது அவனை மூப்புவரைச் செலுத்த போர்த்துங்கள்: அவன் செவிச் செல்வத்தில் விழிப்புடனிருக்கவேண்டும். ச அவனை ஸ்தாபியுங்கள்; வர்சஸோடு அவனை எங்க

னுக்காகச் சூழுங்கள்; அவனை மூப்புக் காலத்திலேயே மரிக்கச் செய்யுங்கள். பிரகஸ்பதி இந்த ஆடையை, இராஜனான சோமனை அணிந்துகொள்ள அணிந்தான். ௫ நீ சுகமாய் மூப்புக்குச் செல்; ஆடையை அணிந்து கொள்; பழிச் சொல் எதிர்த்து நீ சனங்களின் பாது காப்பனாகவும். நீ வெகுபல நூறு சரத் காலங்கள் வாழ். செல்வச் செழுமையை அணிந்துகொள். ௬ நீ சுவஸ்திக் காக இந்த ஆடையை அணிந்துள்ளாய்: பழிச்சொல்லை எதிர்த்து நீ நண்பர்களின் பாதுகாப்பனாயுள்ளாய். நீ வெகு நூறு சரத் காலங்கள் வாழ்; நீ இனிமையாய் வாழ்ந்து நற்பொருள்களை அளிப்பாய். ௭ நண்பர்களான நாங்கள் ஒவ்வொரு சமரிலும் ஒவ்வொரு போரிலும் அதி பலமுள்ள இந்திரனை, பாதுகாப்புக் கழைக்கிறோம். ௮ பொன் நிறனாய், மூப்பாகாமல் சுவீரர்களோடு, விருத்த மரிப்பை அடைபவனாய், பிரஜையோடு பொருந்திப் பிரவேசி; இதைத்தான் அக்கினி மொழிகிறான், இதைத் தான் சோமன் கூறுகிறான், இதைத்தான் பிரஹஸ்பதி யும், சவிதாவும், இந்திரனும் புகலுகிறார்கள். [௧௯. ௨௪]

௫௪௧ குதிரை [கோபதன்—வாஜீ தேவதை] ௧ களைப் பற்றும் முதன்மையுமான மனத்தோடு உன்னைச் சேர்க்கிறேன், எதிர்த்து உயரஞ் செல்பவன் நீ, வகித்துச் செல்லும் நீ துரிதம் திரும்பு, [௧௯. ௨௫] ௫௪௨ தங்கம் [அதர்வன்—அக்கினி ஹிரண்யம்] ௧ அக்கினியில் தோன்றி அமுதமாயுள்ள தங்கம் [1] மானிடர்களில் தரிக்கப்பட்டுள்ளது; அதை அறிபவன் அதற் கருகனாவான், அதைத் தரிப்பவன் முற்றும் வாழ்ந்து மரிப்பான். ௨ சூரியனால் சுவர்ணமாகும், பிரஜைக ளோடு பழைய மானிடர்கள் நாடிய இரணியமான சந்

1 திவ்யம், நலம்.

திரன், உன்னை சோதியோடு சேர்த்துள்ளான். அதைத் தரிப்பவன் பூரணாயுசுடனாகிறான். ௩ நீ சனங்களிலே, சந்திர சோதியுடனாக, உன்னை ஆயுசுக்கு, உன்னை வர்சஸுக்கு, உன்னை ஓஜசுக்கு, உன்னை உறுதிக்கு—திரவியஞ் சேர்த்திடுக. ௪ இராஜாவான வருணன் அறியும்—தனம் —தேவ பிரகஸ்பதி அறியும்நிதி—விருத்திர சம்ஹாரனான இந்திரன் அறியும்—பொருள்—உனக்கு ஆயுளைத் தருக. உனக்கு வர்சஸை அளிப்பானாக. [௧௧ ௨௬]

௫௪௩ காப்பு [பிருக் வங்கிரன்—திரிவிருத் உத சந்திரன்]

௧ விருஷபன் பசுக்களோடு உன்னைக் காத்திடுக; வலியர்களோடு வலியன் உன்னை இரட்சித்திடுக; பிரமத்தோடு வாயு உனக்குப் பாலனஞ்செய்க; இந்திரியங்களோடு இந்திரியன் உன்னைக் காப்புச் செய்க. ௨ சோமன் ஓஷதிகளோடு உனக்கு உதவி செய்க, நட்சத்திரங்களுடன் சூரியன் உனக்கு சகாயம் செய்க, விருத்திரனழிக்கும் சந்திரன் மாதங்களினின்றும் உன்னை இரட்சித்திடுக, காற்று சுவாசத்தோடு உன்னைக் காத்திடுக. ௩ சோதிகள் மூன்று, புவிகள்—மூன்று, வானங்கள் மூன்று, கடல்கள் மூன்று. ஸ்தோமங்கள் மூன்று—என அவர்கள் கூறுகிறார்கள்; இம்மூன்றுகள் மூன்றுகளால் உன்னைக் காத்திடுக. ௪ நான் உனக்குத்துணைவர்களாக, மூன்று நாகங்களையும், மூன்று கடல்களையும், மூன்று ஆதாரங்களையும் மூன்று நிலைகளையும், இணைக்கிறேன். ௫ அக்கினியே! உன்னை நெய்யால் வளர்த்து, ஆஜ்யத்தால் உன்னைத் தெளிக்கிறேன்: அக்கினி—சந்திரன்—சூரியனுடைய—துணையால்—மாயாவிகள் உனக்கு இன்னல் செய்யாமலாவர்களாக. ௬ மாயாவிகள், உங்களது பிராணனை, அபானனை சுவாலையை துன்பஞ்செய்யற்க: தேவர்களே! அனைத்தும் அறியும் நீங்கள், ஒளி வீசும் நீங்கள் தேவ

சாதனங்களோடு துரிதமாகுங்கள். எ ஒருவன் பிராண ஞேடு அக்கினியைப் பிணைக்கிறுன். பிராணன் காற்ருேடு பொருந்தியுள்ளான். தேவர்கள் எங்கும் முகமுள்ள சூரி யனைப் பிராணனுல் சனனஞ் செய்தார்கள். அ ஆயுசு செய்பவர்களது ஆயுசோடு நீ வாழ். நீண்ட ஆயுசுள்ள வனுய் சீவி. ஆன்மா உள்ளவனது சுவாசத்தால் வாழ். மிருத்யுவின் ஆதீனத்தில் ஆகாதே. கூ தேவர்கள் சென்ற வழிகளிலே, இந்திரன் கண்ட தேவநிதியின் திரவி யத்தை தங்கத்தை முவ்வகையுள்ளவையால்—சலங்கள் பாலனஞ்செய்தன. அம்முவ்வகைப் — பொருள் கள்—முப்பிரிவு உள்ளவையால் உன்னைக் காத்திடுக. க0 அதைப் பிரியமாய் தரித்து முப்பத்து மூன்று தேவதைகளும், மூன்று வீரியங்களும், சலங்களின் அகத் திலே அதைப் பாலனஞ் செய்தன ; சந்திரனில் எந்த சுவர்ணமுண்டோ, அதனுல் இந்த மனிதன் வீரங்களைச் செய்வான். கக—கந சோதியில் ஏகாதசமாயுள்ள தேவர்களே ! திவ்யர்களே ! நீங்கள் இந்த அவியை அங்கீ கரியுங்கள், வானத்தில் ஏகாதசமாயுள்ள தேவர்களே.... ........அங்கீகரியுங்கள். புவியில் ஏகாதசமாயுள்ள தேவர் களே ..........அனுபவியுங்கள். கச—கரு முன்புறமும் எதிரி சூனியமும பின்புறம் பயமின்மையும் பொருந்தி யுள்ளன ; சவிதா என்னைத் தென்திசையில் சசீபதி புவி யிலே பாலனஞ் செய்கிறுர்கள்: ஆதித்தியர்கள் சோதியி னின்றும் என்னைக் காப்பார்களாக. தென் திசையினின் றும் அனல் என்னைக் காப்பானுக : முன்புறத்தினின்றும் என்னை இந்திராக்கினிக் காப்பார்களாக. சுற்றுப்புறம்அசு வினிகள் எங்களுக்குத் துணை செய்வார்களாக.குறுக்கிலே இம்சையாகாத ஜாதவேதஸன் துணை செய்வானுக : பூத கிருதர்கள் என்னை எங்கும் இரட்சிப்பார்களாக [கசு.உஎ]

௫௪௪ தருப்பைமணி [சபத்னக்ஷயன் காமன் பிரமன்—தர்ப்பமணி] ௧ நீ தேஜசுடனுக, நீ தீர்க்காயுசுடனுக, துவேஷியின் இருதயத்தைத் தாபஞ்செய்து எதிரிகளைத் தாக்கும் இத்தருப்பை மணியை பந்தஞ் செய்கிறேன்[1]. ௨ தருப்பையே! துவேஷியின் இருதயத்தை எரிக்கும் நீ பகைவரின் மனத்தை தகிக்கச் செய்து துட்ட இருதயமுள்ளவர்களை யெல்லாம் தணல்போல் அதி பஸ்மஞ் செய்துவிடு. ௩ தருப்பையே [2] தணல்போல் எரிந்து, துவேஷிகளைத் தகனஞ்செய்து, இந்திரன் பலனைபிளப்பது போல், மணியே! எதிரிகளின் இருதயத்தை முறித்துவிடு. ௪ தருப்பையே! எதிரிகளது, பகைவர்களது இருதயத்தைப் பிள. மணியே! உதய சூரியன், புவியின் சருவத்தை—சிறிய புற்களைப்—போல் அவர்களது சிரத்தைச் சாய்த்து விழச் செய். ௫ தருப்பையே! எனது சத்துருக்களைப் பிள: என்னை எதிர்த்துச் சமர்புரிபவர்களை சேதி: எனது எதிரிகளை இறுத்து; மணியே! எனது துவேஷிகளைத் துமித்து விடு. ௬ தருப்பையே! எதிரிகளை அறுத்துவிடு. என்னை......துமித்துவிடு. ௭—௧௦ தருப்பையே! எதிரிகளைக் கொய்துவிடு..........துமித்துவிடு. தருப்பையே! எதிரிகளை பகுந்திடு..........துமித்துவிடு. தருப்பையே! எதிரிகளைச் செதுக்கு..........துமித்துவிடு. தருப்பையே! எதிரிகளைப் புடைத்துவிடு........துமித்துவிடு [௧௧. ௨௮.] ௫௪௫ தருப்பை. ௧. தருப்பையே! எதிரிகளைக் குத்து. என்னிடம் சமர்செய்பவர்களை குத்து. என் சத்துருக்களை யெல்லாங் குத்து. மணியே! எனது துவேஷிகளைக் குத்து. தருப்பையே எனது எதிரிகளைத் தாக்கு.......தருப்பையே தடைசெய்......தருப்பையே!

1 அரி அழிக்கும் வீரனை இணைக்கிறேன். 2 துட்டரையழிப்பவனே.

என் எதிரிகளைக் கொல்லு........தருப்பையே! அறைத்து விடு........தர்ப்பையே! என் எதிரிகளை நொறுக்கு. தருப்பையே! என் எதிரிகளைப் பொசுக்கு. தருப்பையே! என் எதிரிகளைத் தகனஞ் செய்...................தர்ப்பையே! என் எதிர்களை முதிர்த்து விடு. [கக. உகூ.]

ருசகூ தருப்பை [சபத்னச் க்ஷயகாமன் தருப்பை] க தருப்பையே நூறு கவசமுடனாகி நற்காப்போடான விருத்த மூப்பைக்கொண்டு வரும் நீ, அதனால் இவனைக் கவசஞ்செய்து, உன் வீரங்களால் என் பகைவர்களை வீழ்த்து. உ தருப்பையே! உனது கவசங்கள் நூறு. உனது வலிமைகள் நூறு. மூப்பை அடைய, விசுவே தேவர்கள் இவனுக்கு இதைத் தரிக்கச் செய்துள்ளார்கள். ந தருப்பையே! உன்னை அவர்கள் தேவகவசமென அழைக்கிறார்கள், பிரம்மணஸ்பதி எனப்—புகலுகிறார்கள். அவர்கள் உன்னை இந்திரகவசம் எனக் கூறுகிறார்கள். நீ இராஷ்டிரத்தைப் பாலனஞ்செய்கிறாய். ச தருப்பையே. நீ எங்களது எதிரிகளை அழிப்பவன், எங்களது துவேஷியின் இருதயத்தைத் தகிப்பவன்-நான் உனது காயங்காத்து, இராஷ்டிரம் பெருக்கும் மணியைச் செய்கிறேன். ரு எங்கு சமுத்திரனை பர்ஜனியன் மின்னலோடு கர்ச்சனைசெய்தானோ, அங்கிருந்து பொன்மயமான பிந்து தோன்றிற்று. அங்கிருந்து தருப்பைதோன்றிற்று. ககூ [ந O]

ருசஎ ஔதும்பரமணி [புஷ்டி காம சவிதா—மந்திரோக்த ஔதும்பர மணி தேவதை] க புஷ்டி விரும்பும் அறிஞனால் பயன் செய்யப்படும் ஔதும்பர மணியோடு, எனது கோசாலையில் எல்லாப்பசுக்களின் செல்வத்தையும் சவிதா செய்வாளாக. உ பசுக்களின் அதிபதியாக எங்களது காருகாப்பத்தி யாக்கினி எது உண்டோ, அதனுடன், உறுதியான ஔதும்பர மணி, புஷ்டியோடு

பொருந்தச் செய்க. ங தாத்ரு ஔதும்பரத்தின் தேஜ சால், எங்களது மனையில் வெகுமிகும் சணத்தையும், பெருகும் பழத்தையும், உணவையும் பானத்தையும்—இவற்றின் புஷ்டியையும் என்னில் பொருத்தஞ் செய்வானாக. ச நான் ஔதும்பர மணியைத் தரித்து, இரு கால் நான்கு கால் பிராணிகளின், எல்லா உணவுகளின் பானங்களின், புஷ்டியைப் பற்றுகிறேன். ரு நான் பசுப் புஷ்டியையும், இரு கால், நான்கு கால்களின் பெருக்கத்தையும், தானிய விருத்தியையும் பற்றியுள்ளேன்: பிரகஸ்பதியும் சவிதாவும், பசுக்களின் பாலையும் ஓஷதிகளின் இரசத்தையும், எனக்கு அளிப்பார்களாக. சு நான் பசுக்களின் அதிபாலகனாகவேண்டும்; புஷ்டிபதி புஷ்டத்தை எனக்குப் பொருத்தஞ் செய்வானாக. ஔதும்பர மணி எனக்குத் திரவியங்களைத் தருக. எ பிரஜையோடும் பொருளோடும் ஔதும்பர மணி எனக்கு, வர்சஸோடு சேர்ந்து இந்திரனால் தரிதமாகி, என்னிடம் வந்துள்ளான். அ சத்துரு வழித்து செல்வம் வெல்லும் இத்தேவமணி திரவியஞ் ஜயிப்பதற்காகும்—அது பசுப் பெருக்கத்தையும், ஓங்கும் அன்னத்தையும் சுரபிக் கூட்டத்தையும் செய்க. கூ வனஸ்பதியே நீ முதன்மையாய் புஷ்டியுடன் பெருகுவதுபோல் சரஸ்வதி எனக்கு பொருள் புஷ்டியை அளிப்பாளாக. க0 சரஸ்வதியும், ஸினீவாலியும் ஔதும்பிரமணியும் எனக்கு தனத்தையும், தானியத்தையும் பால் பெருக்கத்தையும் கொண்டு வருவார்களாக. கக நீ மணிகளின் அதிபன், விருஷன், செழுமை பதி, உன்னில் செழுமையை சனனஞ்செய்தான்; இச்சக்திகளெல்லாம் உன்னில், இச்செல்வங்களெல்லாம் உன்னில், ஔதும்பரமணியே! இங்குப் பசியையும் பிசுஞறியையும், துன்பத்தையும் புத்தி

யின்மையையும் எங்களிடமிருந்து தூரந் தூரத்து. கஉ நீ[1] கணங்களின் தலைவன், கணத் தலைவனாய் எழு. நீ அபிஷேகமாகி என்னை வர்சஸால் அபிஷேகஞ்செய்; நீ தேஜசு, என்னில் தேஜஸைத் தாரணஞ்செய். நீ திரவியன் திரவியத்தை அளி. கங நீ புஷ்டி, புஷ்டியால் என்னை முற்றும் பூசு. கிருகபதியான நீ என்னைக் கிருகபதியாகச் செய். ஔதும்பரமணியே! சுவீரர்களோடான எல்லாச் செல்வத்தையும் எங்களுக்களித்து ஸ்தாபனஞ்செய். செல்வச் செழுமைக்காக நான் உன்னைத் தரிக்கிறேன். கச இந்த ஔதும்பரமணியான வீரன் வீரனுக்கு இணைகிறான். அவன், நாங்கள் திரவியத்தைப் பற்றத் தேனைச் செய்வானாக சுவீரர்கள் மிகுந்த செல்வத்தை அவன் எங்களுக் களிப்பானாக. [கக௬. ௩க.]

ருசஅ தருப்பை[2] [சர்வகாம ஆயுஷ்காமோ பிருகு ரிஷி—மந்திரோக்தோ தருப்பை] க நான் உனக்குப் பூரணாயுசாக, சதகாண்டங்களோடாகி, அந்நியரால்—அசைப்பதர்க்கு முடியாமலாகி, ஓங்கும் ஆயிரம் இலைக—ளோடான உக்கிரனான தருப்பையை உன்னில் சேர்க்கிறேன். உ இன்னலாகாத இலைகளுள்ள தருப்பையால் துணையாகும் ஒருவனது கேசத்தை அவர்கள் அசைக்க இயலாது, அவனை மார்பில் அவர்கள் தாடனஞ்செய்யவும்—சக்தியற்றவர்கள். ௩ ஓஷதியே! உனது உச்சி சோதியிலே; உனது நிலை புவியிலே; ஆயிரங் காண்டங்களுள்ள உன்னால் நாங்கள் எங்கள் ஆயுசை வளர்க்கிறோம். ச நீ முச் சோதிகளையும், மூன்று புவிகளையுந் துளைத்தாய், நான் உன்னால் சத்துருவின் நாவையும் சொற்களையும் சேதிக்கிறேன். ரு நீ ஜயிப்பவன், நான் சக்தி மிகுபவன், நாம் இருவரும் சக்தி மிகுபவர்களாகி, நம்

1 மணிபோலுள்ள மானிடனே! 2 சேனாதிபதி, வீரன்.

முடைய சத்துருக்களை ஜயிப்போமாக. ௬ நீ எங்களது சத்துருக்களை ஜயஞ்செய், எங்களுடன் சமர் புரிபவர்களை நீ அடக்கு. பகைவர்களைப் பாழாக்கு. எனக்கு வெகு நண்பர்களைச் செய். ௭ சதா சோதி பார்க்கும் தேவ ஜாதமான தருப்பையால், சதா மானிடர்களை ஜயித்துள்ளேன். ஜயிப்பேன். ௮ தருப்பையே! பிராமணனுக்கும் க்ஷத்திரியனுக்கும் சூத்திரனுக்கும் ஆரியனுக்கும் நாங்கள் விரும்பும் எவனுக்கும், விரிந்து பார்க்கும் ஒவ்வொருவனுக்கும் என்னைப் பிரியனாகச் செய். ௯ எவன் பிறந்து புவியை நிலைசெய்தானோ, எவன் வானத்தையும் சோதியையும் தாங்கினானோ, எதை தரிப்பதால் ஒருவன் தீமையைக் காண்பதில்லையோ, அத் தருப்பை வருணனும் சோதியுமாவான். ௧௦ சத்துரு ஜயிப்பவனாய் சதகாண்ட முள்ளவனாய், சக்தி வாய்ந்தவனாய் எவன் ஔஷதிகளிலே, முதல்வனாய் தோன்றினானோ, அத்தருப்பை என்னை எங்கும் காப்பானாக. அவனால் என் சத்துருக்களையும் என்னிடம் சமர்செய்பவர்களையும்..........................ஜயிப்பேன். [௧௯. ௩௨]

௫௪௯ தருப்பை ௧ ஆயிரம் மதிப்புள்ள சத காண்ட முள்ள பால் மிகுந்துள்ள சலங்களின் அக்கினியான செடிகொடிகளின் இராஜசூயமான இத்தருப்பை [1] எங்கும் எங்களைக் காப்பானாக, தேவமணி எங்களைத் தீர்க்காயுசோடு சேர்ப்பானாக. ௨ நெய்யினின்றும் எடுக்கப்பட்டவனாய் தேன் மிகுந்து பால் பொங்கி புவி ஸ்தாபிக்கும் நீ, அசையாமல் அந்நியர்களை அசைப்பவன்: சத்துருக்களைத் தள்ளித் தாக்கும் நீ, மேலான இந்திரியங்களோடு ஏறு. ௩ நீ ஓஜஸோடு புவியைக் கடந்து செல்லுகிறாய்; யக்ஞத்திலே வேதியிலே நீ சுந்தரமாய் அமருகிறாய்:

1 நமது மேலான தலைவன்.

உன்னைப் பவித்திரனாக [1] ரிஷிகள் தரித்தார்கள்; நீ எங்களைத் துன்பங்களினின்றும் தூய்மை செய்வாயோ. ௪ அவன் கூரிய இராஜன். அதி சக்தி வாய்ந்தவன், அரக்கரழிப்பவன், மானிடர்களுக்குரியவன், அவன் தேவ ஓஜசு: உக்கிர பலிஷ்டன்: சுவஸ்திக்கும், தீர்க்காயுசுக்கும் உன்னில் அவனை நான் சேர்க்கிறேன். ௫ நீ வீரச்செயல்களைத் தருப்பையால் செய்; தர்ப்பை யணிந்த நீ திகைக்காதே: வர்சஸால் அந்நியர்களுக் கதிகமாகி, சூரியனைப்போல் நான்கு திசைகளிலும் ஒளிவீசு. [௧௧. ௩௩]

௫௩௦ ஜங்கிடம் ௧ நீ ஜங்கிடம் [2]ஜங்கிடன்; ஜங்கிடமே நீ துணை செய்பவன்; ஜங்கிடன் எங்களது இரு கால் நான்கு கால் பிராணிகளை யெல்லாம் காப்பானாக. ௨ ஐம்பதும் மூன்றுமான சிறு செயற்களை, புன் செயல் செய்யும் சத புல்லர்களை, ஜங்கிடம், தேஜசு சூனியமாகவும் அரஸ மாகவும் செய்திடுக. ௩ கடுஞ் செயலின் கோஷம்—இரச சூனியமாகுக: விழும் எழுவர்களும் இரசமற்றுருக: ஜங்கிடமே! வில்லாளன் சரத்தைப் போலே, மதியற்றவனை இங்கிருந்து தூரமாக்கு ௪ இது துற்செயலைத் தூஷிக்கும், கருமித்தனத்தையு மொழிக்கும்: அப்பால் சக்தி மிகும் ஜங்கிடம் எங்களது ஆயுசுகளை ஓங்கச் செய்திடுக. ௫ வலிமையால் வலிமையை வீழ்த்தும் வன்மையால் விஷ்கந்தத்தை விலக்கிய, ஜங்கிடச் சிறப்பு எங்களை எங்கும் காத்திடுக. ௬ புவியிலே ஸ்தாபிக்கப்பட்ட உன்னை தேவர்கள், மும்முறை சனனஞ் செய்தார்கள்; பழைய பிராமணர்கள் உன்னை அங்கிரஸ நாமமுள்ளவன் என அறிந்தார்கள். ௭ உனக்கதிகமான பூர்வ ஔஷதங்க

[1]சுத்தஞ் செய்பவனாக. [2]ஒரு ஓஷதியின் பெயர்: ஓஷதியைப்போல் துன்பத்தை நீக்கும் புருஷனுக்கும் பெயர்,

னில்லை. உனக்கதிகமான புதிய மருந்துகளுமில்லை; சுமங்களனும், சர்வ இரட்சகனுமான ஜங்கிடம் உக்கிரமாயொழிப்பவனுவான். அ ஜங்கிடமே, பகவானே, அருகிலுள்ளவனை பாதுகாப்பவனே! எல்லையில்லா வீரமுள்ளவனே! பழைய இந்திரன் உனக்கு ஆதியிலே வீரத்தை அளித்தான். சூ வனஸ்பதியே, அதிவலிமையுள்ள இந்திரன் உனக்கு உக்கிரத்தை அளித்தான்; ஓஷதியே! நீ எல்லா நோய்களையும் நீக்கி அரக்கர்களையு மழி. கO ஜங்கிடம், இம்சையை, இருமலை, க்ஷயத்தை பாரிசநோயை சரத்கால ஒவ்வொரு சுரத்தையும், இரசசூனியஞ்செய்வானுக. ௫ச. ௫௫க ஜங்கிடம்[1] [அங்கிரன்—ஜங்கிடன்] க இந்திரனுடைய நாமத்தைச் சொல்லுங்கால், தேவர்கள் ஆதியில் மருந்தாகச்செய்த விஷ்கந்த சம்ஹாரனை ஜங்கிடத்தைச் செய்தார்கள். உ தனபாலன் தனங்களைப் போல், தேவர்களும் பிராமணர்களும் எங்கும் காப்பாகச் செய்த, எதிரியழிக்கும் ஜங்கிடம் எங்களை எங்கும் காத்திடுக. ௩ ஆயிரங் கண்ணுள்ளவனே! உனது விழிப்பால், உக்கிரக்கண்ணுள்ள ஒட்டானை, கேடுசெய்ய வருபவனை நாசஞ்செய்: எங்கும் காக்கும் ஜங்கிடம் நீ. ச சோதியினின்றும், என்னை, புவியினின்றும் என்னை, வானத்தினின்றும் என்னை, செடிகொடிகளினின்றும் என்னை, இருப்பது, இருக்கப்போவதனின்றும் என்னை—ஒவ்வொரு திசையினின்றும் ஜங்கிடம் எங்களைக் காத்திடுக. ௫ விசுவசிகிச்சையான ஜங்கிடம், தேவர்களால், மானிடர்களால் செய்த சிதைவுகளையெல்லாம் இரஸசூனியஞ் செய்க. [கக. ௫௫. க—எ.] ௫௫உ சதவாரம் [பிரமன்—சதவாரம்] க துர்நாம மழிக்கும் சதவாரம் என்னும் மணி, வர்சஸுடன் எழுந்து தேஜஸால்,

1 வீரத்தலைவனையுங் குறிக்கும்.

அரக்கர்களையும், யட்சமங்களையும் அழித்துள்ளது. ௨ அது தன் மூலத்தால் யாது தானர்களையும், தன் இரு கொம்புகளால் அரக்கர்களையும் அகற்றியுள்ளது; அது நடுப்பாகத்தால் யக்ஷ்மத்தை தூரத்துகின்றது. எக்கேடும் அதைக் கடப்பதில்லை. ௩ சின்னஞ் சிறு யக்ஷ்மங்களையும், கோஷிக்கும் பெரிய யட்சமங்களையும் துர்நாமமழிக்கும் சதவாரமணியானது, நாசஞ் செய்துள்ளது. ௪ அது நூறு வீரர்களை சனனஞ் செய்துள்ளது. அது நூறு யட்சமங்களை சிதறடித்துள்ளது. துர்நாமமுள்ளவற்றை எல்லா மொழித்து அது அரக்கர்களை அலறச் செய்கின்றது. ௫ இந்த சதவாரமணி[1] பொன் குளம்புள்ள விருஷபமாகும்; துர்நாம முள்ளவற்றையெல்லாம் அது தாக்கி அரக்கர்களை ஆக்கிரமித்துள்ளது. ௬ நான் சத வாரத்தால் சத துர்நாம முள்ளவர்களை, நூறு கந்தருவ அப்சரசர்களை, நூறு நாய் போலுள்ளவர்களை, விலக்குகிறேன். [கக. ௩௬.]

௫௫௩ அக்கினி [அதர்வன்] அக்கினியினால் அளிக்கப்பட்ட இந்த வர்சஸும் பிரகாசமும், புகழும் பலமும், வயமும் வலிமையும் வன்மையும் வந்துள்ளன. முப்பத்து மூன்றான வீறுக்களை அக்கினி எனக்கு அளிப்பானாக. ௨ என் காயத்தில் வர்சஸையும் வலிமையையும், வன்மையையும், வயத்தையும் பலத்தையும் ஸ்தாபனஞ் செய். நான் உன்னை இந்திரிய செயலுக்கு வீரியத்துக்கு நூறு ஆண்டு வாழ்க்கைக்குப் பற்றுகிறேன். ௩ விறலுக்கு உன்னை, திறலுக்கு உன்னை, வயதுக்கு உன்னை, வாய்மைக்கு உன்னை, மேன்மைக்கு உன்னை, நூறு ஆண்டுகள் இராஷ்டிரம் வசிக்க உன்னை வஹித்துச் சலனமாகிறேன். ௪ ருதுக்களுக்கு உன்னை, ருதுச் சேர்க்கைகளுக்கும்

1 ஔஷதத்தின் பெயர், தலைவனது நாமம்.

உன்னை, மாதங்களுக்கும் ஆண்டுகளுக்கும் தாத்ருவுக்கும் விதாத்ருவுக்கும் உன்னை சித்தஞ் செய்பவனுக்கும் உன்னை யஜிக்கிறேன். [கக. ௩எ] ௫௬௪ யக்ஷ்மம் [அதர்வன்—குல்குலு] க சுகந்த சிகிச்சை செய்யும் குல்குலுவின் சுகந்த வாசனையால் வியாபகமாகுபவனை யட்சமம் தடுப்பதில்லை, சாபமும் அவனைச் சேர்வதில்லை. உ வனமிருகத்தினிடம் மான்களைப்போலே அவனிடமிருந்து யக்ஷ்மங்கங்கள் பறந்துவிடும்; குல்குலுவே, இவன் துன்பமாகாமலிருக்க, நதியிலுள்ள உன்னையும், சலதியிலுள்ள உன்னையும் பற்றியுள்ளேன். [கக. ௩அ] ௫௬௫. குஷ்டம் [பிருகு வங்கிரன்—மந்திரோக்த குஷ்ட தேவதை] க காக்கும் தேவனான குஷ்டன் [1] பனிமலையினின்றும் இங்கு வருக. எல்லா யாதுதானிகளையும் எல்லா சுரத்தையும் நீ நாசஞ் செய்வாயோ. உ குஷ்டமே [2] உனக்கு மூன்று நாமங்களுண்டு, நகமாரன் [3], நகஅரிஷன் [4], காலையிலும், மாலையிலும், பகலிலும், நான் எவனுக்கு உன்னைப்பற்றிச் சொல்லுகிறேனோ அம்மனிதன் இம்மையின்மையோடாவானாக. ௩ உனது அன்னையின் பெயர் ஜீவலை [5] உனது அச்சனின் பெயர் ஜீவன்ந்தன் [6] காலையிலும்..........இம்மையின்மையோடாவானாக. ச சலனப்பிராணிகளிலே காளையைப் போலே வனமிருகங்களிலே புலியைப்போலே, நீ ஓஷதிகளிலே உத்தமன்; காலையிலும்..........இம்மையின்மையோடாவானாக. ௫ மும்முறை சாம்புக்களினின்றும் அங்கிரசர்களினின்றும் மும்முறை, ஆதித்தியர்களினின்றும், மும்முறை விசுவேதேவர்களினின்றும் நீ தோன்றினாய்; விசுவசிகிச்சை செய்யும் இந்த குஷ்டன் சோம

1 ஔஷதத்தின் பெயர், 2 குஷ்டத்தின் முதற் பெயர், 3 நரனழிக்காதவன், 4 நோய் செய்யாதவன், 5 சீவனளிப்பவள், 6 சீவனுள்ளவன்.

னேடு சேர்ந்து நிற்கின்றான்; எல்லா யாதுதானி களையும், எல்லா சுரத்தையும், நீ நாசஞ்செய். ௬ இங் கிருந்து மூன்றாவதாயுள்ள சோதியிலே தேவஸ்தான மான அசுவத்தமுண்டு; அங்கே அமுதக் காட்சி. அங்கு தான் குஷ்டன் தோன்றினான். ௭ பொன் கப்பல், பொன் துடுப்புடனான கப்பல்சோதியிலே சலனமாயிற்று. அங்கு—தோன்றினான். ௮ எங்கு கீழ்சரிவு இல்லையோ, பனிஉச்சி எங்கு உண்டோ, அங்கு அமுதக்காட்சி, அங்கு குஷ்டன் பிறந்தான்; விசுவசிகிச்சை செய்யும்......நாசஞ் செய். ௯ உன்னை [1] பழைய இக்ஷ்வாகனறிந்தான், குஷ்ட காமியன் [1] கண்டான், வாயசனும் [1] மாத்ஸ்யனும் [1] உன்னை—உணர்ந்தார்கள். அதனால் நீ விசுவ சிகிச்சை யானாய். ௧0 எங்கும் வீரியமுள்ளவனே! தலைவலியையும் மூன்றாம் நாள்—சுரத்தையும்—சதாகாலமாகும் மாரிகால தக்மத்தையும் நீ கீழே சாய்த்துவிடு. [௧௧. ௫. ௬.]

௫௫௬ மேதை [பிரமன்—பிரகஸ்பதி விசுவே தேவர் கள்] ௧ சரஸ்வதி கோபமான என் மனக் குறைவை, மொழிக் குறைவை, பிரகஸ்பதியும் எல்லா தேவர்களோடு சேர்ந்து சாந்தஞ்செய்வாராக. ௨ சலங்களே! எங்கள் மேதையைக் கலக்காதேயுங்கள், எங்கள் பிரமத்தையு மழிக்க வேண்டாம், அழைக்கப்பட்டு நீங்கள் சுப்பிரவா ஹத்துடன் பொழிந்து வாருங்கள். நான் சுமேதனாகவும் வர்சஸ்டனுமாக வேண்டும். ௩ எங்களது மேதை யைத் துன்பஞ்செய்யாதேயுங்கள்; எங்கள் தீட்சையை யும் எங்களது தவத்தையும் இம்ஸிக்காதேயுங்கள். நாங் கள் ஆயுஸோடோங்க அவர்கள் மங்கள மளிப்பார்க ளாக. அவர்கள் மங்களமளிக்கும் தாய்மார்களாவார்க ளாக. ௪ அசுவினிகளே! எந்த சோதிமிகுந்த உணவு

1 பல பறவைகளின் பெயர்.

எங்களை இரவு கடக்கச் செய்யுமோ அதை எங்களுக்கு நீங்கள் அளிப்பீர்களோ. [கக. சO.] ருருஎ தவம் தீட்சை [பிரமன்—ஆபன்] க மங்களத்தை விரும்புபவர் களாய், சுவர்க்கங்காணும் ரிஷிகள் ஆதியிலே, தீட்சை யையும் தவத்தையு மநுசரித்தார்கள்: அங்கு இராஷ்டி ரம், பலம் வலிமை பிறந்தன. தேவர்கள் இவனுக்கு அவற்றை அதீனஞ் செய்வார்களாக. [கக. சக.] ருருஅ பிரம்மம் [பிரமன்—பிரமன்.] க பிரம்மன் ஹோதா, பிரம்மன் யக்ஞம் பிரம்மத்தால் யக்ஞக்கம்பங் கள் வைக்கப்பட்டுள்ளன. பிரம்மத்தினின்றும் அத்வர்யு பிறந்தான்; பிரம்மத்தினுள்ளே ஆஹுதி வைக்கப்பட் டுள்ளது. உ பிரம்மன் நெய் மிகும் சாதனம்; பிரம்ம னால் வேதியாகும். பிரம்மன் யக்ஞதத்துவம், அவி செய் யும் ரித்விக்கு சாந்தமளிப்பவனுக்கு சுவாஹா! ங இந்திரனுடைய சுமதியை நாடி துன்பந்தளர்த்தி நல முடன் பாதுகாப்பவனுக்கு என் துதியைக் கொண்டுவரு கிறேன்; இந்திரா! இந்த அவியை அங்கீகரீ; யஜமான னுடைய விருப்பங்கள் சத்தியமாகுக. ச அசுவினிகளே துன்பம் நீக்குபவனையும் யக்ஞார்களில் விருஷபனையும், பிரகாசிப்பவனையும் யக்ஞங்களிலே முதல்வனையும், சலங் களைப் பாதுகாப்பவனையுமுள்ள இந்திரனை, நான் அறி வோடு அழைக்கிறேன். இந்திரனோடு இந்திரிய ஓஜஸை எங்களுக்களியுங்கள். [கக. சஉ.] ருருகூ அங்கு. க தீட்சை யோடும் தவமோடுஞ் சேர்ந்து பிரமமறிபர்கள் எங்கு செல்லுகிறார்களோ, அங்கு அக்கினி என்னை அழைத்துச் செல்வானாக. அக்கினி எனக்கு மேதையை அளிப்பானாக, அக்கினிக்கு சுவாஹா. உ தீட்சையோடும்........அங்கு வாயு என்னை அழைத்துச் செல்வானாக: வாயு எனக்குப் பிராணன்களைத் தருவானாக. வாயுவுக்கு சுவாஹா.

ங தீட்சையோடும்.......அங்கு சூரியன் என்னை அழைத்துச் செல்வானாக. சூரியன் எனக்குக் காட்சியை யளிப்பானாக; சூரியனுக்கு சுவாஹா. ச தீட்சையோடும்........ அங்கு சந்திரன் அழைத்துச் செல்வானாக. அவன் எனக்கு மனத்தைத அளிப்பானாக. சந்திரனுக்கு சுவாஹா! ரு தீட்சையோடும்..........அங்கு சோமன் என்னைச் செலுத்துவானாக; சோமன் எனக்குப் பாலை அளிப்பானாக. சோமனுக்கு சுவாஹா. சு தீட்சையோடும்........ அங்கு இந்திரன் என்னை அழைத்துச் செல்வானாக. இந்திரன் எனக்கு பலத்தை அளிப்பானாக. இந்திரனுக்கு சுவாஹா! எ தீட்சையோடும்...........அங்கு சலங்கள் என்னை அழைத்துச் செல்வார்களாக. அமிருதம் என்னை அடைவானாக; சலங்களுக்கு சுவாஹா! அ தீட்சையோடும்...........அங்கு பிரம்மன் என்னை அழைத்துச் செல்வானாக. பிரம்மன் எனக்குப் பிரம்மத்தை அளிப்பானாக. பிரமனுக்கு சுவாஹா! [கக. சங.]

ருகூ0 [பிருகு—மந்திரோக்தான்ஞ்சன தேவதை]

க ஆஞ்சனமே[1] நீ ஆயுசை விரிப்பவன், உன் பெயர் விசுவ சிகிச்சை; நீ நன்மையைச் செய்வாயோ, சலங்களே! நீங்கள் நயத்தையும் பயமின்மையையுஞ் செய்யுங்கள். உ அஞ்சனம், காமாலையையும், ஜாயான்யத்தையும்[2], அங்க வேதனையையும், விஸல்கபத்தையும்[3] எல்லா யக்ஷ்மத்தையும், உனது அங்கங்களினின்றும் விலக்குக. ங புவியில் பிறந்த மேலான அஞ்சனமானது புருஷனுக்கு உயிரளிக்கும் அது, என்னைக் குற்றங் கழித்து நோய் நீக்கி இரத அரிதனுய்ச் செய்க. ச பிராணனே! நீ பிராணனைப் பாலனஞ் செய்; சுவாசமே! நீ சுவாசத்

---

1 மையே, தைலமே அல்லது மைபோல் பிரகாசஞ் செய்யும் ஈசனே. 2 அதிதாபத்தையும். 3 வாத வேதனையையும்.

துக்குச் சுகமளி: நிர்ருதியே! நீ எங்களை நிர்ருதியின் பாசங்களினின்றும் நீக்கு. ௫ நீ நதியின் கரு, மின்னலின் மலர், காற்று உனது பிராணன், சூரியன் உனது கண், சோதி உனது பால். ௬ தேவாஞ்சனமே! மூன்று உச்சிகளினின்றும் வருபவனே! எங்கும் என்னை நீ பாலனஞ் செய். வெளிகளினின்று வரும், மலைகளினின்று வரும் ஓஷதிகளிலே உனக்கு மேலானது எதுவு மில்லை. ௭ எல்லா நோய்களையும் நீக்கி, இங்கிருந்து எல்லாச் சிறுமைகளையும் நாசஞ்செய்து, அரக்கனழித்து வியாதி விலக்கும்—அஞ்சனன்—இங்கு நடுவிலே வந்துள்ளான். ௮ இராஜனான வருணனே! புருஷன் இங்கு அசத்தியத்தை மொழிகிறான்: ஆயிரம் வீரிய முள்ளவனே! நீ எங்களை அக் குற்றத்தினின்றும் நீக்கு. ௯ சலங்களே, இன்னலற்றவனே வருணனே, உங்களது நாமங்களைச் சொல்லி அசத்தியம் மொழிந்திருந்தால் ஆயிரம் வீரிய முள்ள நீ எங்களை அக்குற்றத்தினின்றும் நீக்கு. ௧௦ அஞ்சனமே! உன்னை அநுசரித்து மித்திரனும் வருணனும் சென்றார்கள். உன்னை வெகுதூரம் அநுசரித்துச் சென்று உன்னை போகத்துக்குக் கொண்டு வந்தார்கள். [௧௯. ௪௪. ௧—௯]

௫௬௧ ஆஞ்சனம் [பிருகு—ஆஞ்சனம்]

௧ கடனுக்குக் கடனைப்போலளித்து கடுஞ் செயல் செய்தவனது மனைக்கு கடுஞ் செயலை எடுத்துச் செல்பவனாய், ஆஞ்சனமே[1] கண் மந்திரமுள்ள, கடும் இருதயத்தோடான, பகைவனது தசைகளைப் புடைத்து விடு. ௨ எங்களிலுள்ள துச்சுவப்னத்தையும், எங்களது பசுக்களில் எங்களது மனையிலுள்ள—துற்செயலையும்—நாம ரஹிதனான துட்ட இருதயமுள்ள அப்பிரியன் கிரகிப்பானாக. ௩ அக்கினி ஜாதவேதசினில் பிறந்து, சல இரசத்தின்

1. அறிஞனே.

சக்தியிலே வளரும், மலைச் சேர்க்கையான நான்கு வீறுள்ள அஞ்சனன் திசைகளையும் பிரதிசைகளையும் மங்களஞ் செய்வானாக. ௪ நான்கு வீறுள்ள அஞ்சனம் உனக்குச் சேர்க்கப்பட்டுள்ளான்: உனக்கு எல்லா திசைகளும் அச்சமற்றனவாகுக: போற்றப்படும் சவிதாவைப்போல் நீ நிலையாய் நில். இந்த சனங்கள் எல்லாம் உனக்கு பலியை யளிப்பார்களாக. ௫ ஒன்றை நீ மைபோல் பயன் செய். வேறொன்றை மணியாகச் செய். மற்றொன்றால் ஸ்நானஞ் செய். மிகுதியானதைப் பானஞ் செய். கிராஹியின் அழிக்கும் நான்கு பந்தங்களினின்றும் நான்கு வீறுள்ளவன் நம்மைக் காப்பானாக. ௬ அக்கினி அக்கினியால் என்னைப் பிராணனுக்கு, அபானனுக்கு, ஆயுசுக்கு வர்சஸுக்கு, ஒஜஸுக்கு, தேஜசுக்கு, சுவஸ்திக்கு சிறப்புக்குக் காப்பானாக. சுவாஹா. ௭ இந்திரன் இந்திரியத்தால்....................காப்பானாக. ௮ ஸோமன் சௌம்யத்தால் என்னைக்........காப்பானாக. ௯ பகன் பாக்கியத்தால் என்னை........காப்பானாக. ௧௦ மருத்துக்கள் கணங்களால்..............காப்பார்களாக. [௧௧. ௨௫]

௫௩௨ அசாத்தியன் [பிரஜாபதி—அஸ்தாருதமணி]

௧ பிரஜாபதி வீரத்துக்காக முதன்மையாய் வெல்ல முடியாத[1] உன்னை இணைக்கிறான். நான் அதை[2] உன்னில் ஆயுசுக்கு, வர்சஸுக்கு, ஓஜசுக்கு, உறுதிக்கு பந்தஞ் செய்கிறேன்; வெல்ல முடியாதவன் உன்னை இரட்சிப்பானாக. ௨ அசாத்தியனே! உயர்ந்து நின்று இடைவிடாமல் இவனைப் பாலனஞ் செய். பணிகளும், யாதுதானிகளும் உன்னைத் தாக்காமலாவார்களாக. இந்திரன் தஸ்யுக்களைப்போல் எங்களுடன் சமர் புரிபவர்களைச் சிதறடி. எல்லாப் பகைவர்களையுஞ் ஜயித்து

---

1 அந்நியரால் வெல்ல முடியாதவனே. 2 வெல்ல முடியாத சக்தியை

பங்கப்படுத்து. அசாத்தியன் உங்களை இரட்சிப்பானாக. ௩ தாக்கித் தள்ளும் சத புருஷர்களாலும் தோல்வியாகாதவனுக்கு இந்திரன் பலத்தையும், பிராணனையும் கண்ணையுமளித்தான்: அசாத்தியன் உன்னைக் காப்பானாக. ௪ தேவர்களின் அதி இராஜனான இந்திரனுடைய கவசத்தால் நாங்கள் உன்னைச் சூழ்கிறோம்; அசாத்தியன் உன்னைக் காப்பானாக: தேவர்கள் மறுபடியும் உன்னை முன் செலுத்துவார்களாக. அசாத்தியன் உன்னைக் காப்பானாக. ௫ இந்த மணியிலே ௧0௧ வீரங்களுண்டு. இந்த அசாத்தியனில் ௧000 பிராணன்களுண்டு. நீ புலியாகி எல்லாப் பகைவர்களையும் எதிர்த்து நில். உன்னிடம் சமர் புரிபவன் நீசனுவானாக, அசாத்தியன் உன்னைக் காப்பானாக. ௬ நெய் நனைந்து, தேன் மிகுந்து பால் நிறைந்து ஆயிரம் பிராணன்கள், நூறு யோனிகள் உள்ளவனாய், உறுதியளித்து சுகம் இன்பமளிப்பவனாய் இரஸம் பெருகி திறமோங்கும் அசாத்தியன் உன்னைக் காப்பானாக. ௭ நீ உயர்ந்து ஒல்லார் நீங்கி, ஒட்டாரழித்து சஜாதர்களை அடக்கும் சக்தி வாய்ப்பவனாக உன்னைச் சவிதா செய்வானாக, அசாத்தியன் உன்னைக் காப்பானாக. [௧௯. ௪௬. ௧—௭]

௫௬௩ இரவு [கோபதன்—மந்திரோக்த இராத்திரி தேவதை] ௧ இரவே! பிதாவின் தேஜசுகளால் புவியின் வெளி பூரணி. நீ பெரியவள், நீ சோதியின் நிலைகளுக்கு விசாலமாகிறாய், ஓங்கும் இருள் விரிகின்றது. ௨ அவளது எல்லை தெரிவதில்லை. அவள் தனிமையாயும் தோன்றுவதில்லை, இங்கு சலனமாகும் ஒவ்வொன்றும் அவளில் சாயச் செல்லும்; இருள்விரியும் இரவே! நாங்கள் இன்னலாகாமல் உனது வரம்—பை அடையலாமோ! மங்களமுள்ளவளே! நாங்கள் உனது வரம்பை யணுகலாமோ. ௩ இரவே! உனது மனிதர் காணும் தரிசி

கள் ௬௬, அவர்கள் ௮௮, அவர்கள் ௭௭-ாயுமுள்ளார்கள்.
௪ செல்வனே! அவர்கள் ஆறும் அறுபதுமாவார்கள்.
வாய்மையுள்ளவளே! அவர்கள் ௬௦, இனியவளே! அவர்
கள் ௪௪, ௩௩-ம் ஆவார்கள். ௫ இரவே! உன்னில் ௨௨.
௧௧; மிகச் சொற்பமானவர்களுமுண்டு சோதியின் மகளே!
இந்த இரட்சகர்களோடு நீ எங்களைப் பாலனஞ் செய்
வாயோ. ௬ அரக்கனும் அகாதஞ் செய்பவனும் எங்
களை ஆதீனஞ் செய்யாமலாவார்களாக. தீமை புரிபவ
னும் தலைவனாகவேண்டாம். எந்தத் திருடனும் எங்க
ளது பசுக்களையும், ஓநாய் எங்களது அஜத்தையும் பற்
றாமலாவார்களாக. ௭ மங்களனே! திருடர் குதிரை
களை பற்றற்க, யாது தானிகளும் வசஞ் செய்யற்க. கள்வ
னும் கள்ளனும் வெகுதூர வழிகளால் சென்றுவிடுவார்க
ளாக. பற்கயிறும் புன்செயலோனும் தூரவழியால் தூரி
தஞ் செல்வார்களாக. ௮ இரவே! விஷப்புகையுள்ள
பாம்பை சூனியக் கண் சூனியச் சிரமுடன் செய்: துஷ்ட
ஜந்துவின் இருவாய்களை அரைத்துவிடு: வலையிலே திரு
டனை வீழ்த்து. ௯ இரவே! உன்னுடன் நாங்கள் வசிப்
போம், நாங்கள் உறங்குவோம், நீ விழித்திரு, எங்களது
பசுக்களுக்கும் புரவிகளுக்கும் புருஷர்களுக்கு சுகமளி.
[௧௯. ௪௭] ௫௬௪ இரவு [கோபதன்—இராத்திரி]
௧ இப்போது நாங்கள் சேர்க்கும் குவியலையும் பேழை
யில் உள்ளவற்றையும் உன்னிடம் ஒப்படைக்கிறோம். ௨
இரவே! அன்னையே! எங்களுக்கு உஷையை அளி: ஒளி
வீசுபவளே! எங்களுக்கு உஷை பகலையும், பகல் உன்னை
யும் அளிப்பார்களாக. ௩ இராத்திரியே! இங்கு பறப்
பவையின், இங்கு நகரும் விலங்கின் மலையிலுள்ள
பிராணியின்—துன்பங்களினின்று எங்களைப் பாலனஞ்
செய்வாயோ! ௪ பின்புறம் துணைசெய், முன்புறம்

செய், உச்சியினின்றும் நீசத்தினின்றும் துணை செய். ஒளிவீசுபவளே! நீ எங்களைப் பாலனஞ்செய், இதோ உங்களைப் போற்றும் நாங்கள்—இங்கு பொருந்தியுள்ளோம். ௫ பொருள்களில் விழித்துள்ளவர்களும்; பசுக்களைக் காத்து இரவை அநுசரிப்பவர்களும், எங்களது காயங்களைக் காவல் செய்கிறார்கள்: எங்களது பிராணிகளையும் பாலனஞ் செய்கிறார்கள். ௬ இரவே! உனது நாமத்தை நான் அறிகிறேன், நீ நெய் பொழிபவள் என்னும் நாமமுள்ளவள்; இங்ஙனமே பரத்வாஜர், உன்னை அறிகிறார், எங்களது பொருளை நீ பாலனஞ்செய்வாயோ! [௧௧.௪௮]

௫௬௫ இரவு [கோபதன்—இராத்திரி தேவதை] ௧ சலனவனிதையாயும் மனைப் பெண்மணியாயும் தேவசவிதாவின் பகனின் சுஹவத்தின், சௌபாக்கியத்தின், அதிவிசாலமாயுமுள்ள இராத்திரி, அவளது மகிமையால் சோதியையும், புவியையும் நிறைத்துள்ளாள். ௨ அதி ஆழமான அவள் எல்லாப் பொருள்களையும் அதிக்கிரமித்துள்ளாள், அதி வலிமையுள்ளவள், அதிஉயர சோதிக்கு ஏறியுள்ளாள்; மேலான சுவதாக்களோடான மித்திரனைப்போல், ஆர்வளான இரவு எனக்கு விசாலமாகிறாள். ௩ வரிப்பதர்க்கருகளே! நமஸ்காரம், சுபகையே, சுஜனனியே! இரவே! நீ வந்துள்ளாய், நீ எங்களுக்கு நன்மனமுள்ளவளாவாயோ? நீ எனக்கு மனிதருக்குண்டான பொருளை பசுக்களுக்கானவற்றை புஷ்டியால் பெருக்குவாயோ. ௪ ஆர்வமுள்ள இரவு சிங்கத்தின் ஹரிணத்தின், புலியின் சிறுத்தையின் சக்தியையும் அசுவஜலத்தையும் புருஷ முழக்கத்தையும் பற்றியுள்ளாள்; ஒளிவீசும் நீ வெகுபல உருவங்களைச் செய்து கொள்கிறாய். ௫ இரவும் இரவியின் அநுசரிப்பும் எனக்கு சிவகரமாவார்களாக; இமையின் அன்னை எனக்கு சுஹவ

மாவாளாக! சுபகையே! எல்லாத் திசைகளிலும் நான் உன்னைத்—துதிக்கும் இந்த ஸ்தோமத்தை அறிந்து கொள். ௬ இலங்கும் இரவே! எங்களது ஸ்தோமத்தை அரசனைப்போல் நீ அநுபவிக்கிறாய்; ஓங்கும் அதி ஒளி உஷைகளால், நாங்கள் எல்லா சுவீரர்களோடும் எல்லாப் பொருள்களுடனுமாக வேண்டும். ௭ நீ இரம்மிய நாமங்களைத் தரிக்கிறாய், இரவே! எங்களது செல்வங்களைப் பறிக்க விரும்பும் கள்வன் காணாமலாகவும், மறுபடியும் அவன் காட்சியின்மையாகவும் நீ சதாகாலம் தாபமுடனுவையோ. ௮ இரவே! நீ மங்கள கலசம் போலாவாய்; நீ யுவதியைப்போல் பசுக்களின் பூரண வடிவத்தைத் தரிக்கிறாய், கண்—மிகும் நீ ஆர்வமுள்ள நீ, அதிசய காயங்களை புலன் செய்கிறாய், நீ சோதியின் நட்சத்திரங்களைத் தரித்துள்ளாய். ௯ இரவே! தினத்தில் வரும் திருடனையும், படுபகையுள்ள மானிடப் பகைவனையும், நீ அணுகிச் சென்று அவனது கண்டத்தையும் சிரத்தையும் நீக்குவாயோ! ௧௦ அவன் போகாமலாக அவனது கால்கள் சென்றுவிடுக; இம்சை செய்யாமலாக அவனது கைகளும் சென்றுவிடுக, வரும் கள்வன் பொடிப்பொடியாய் போக, அவன் ஓடிச்செல்க, அவன் காய்ந்த நிலயம் போவானுக.

[௧௯. ௪௯] ௫௰ இரவு [மகாபதன்—இராத்திரி] ௧ இரவே! விஷப்புகையுள்ள பாம்பை சூனியக்கண், சூனியச் சிரமுடன் செய்; துஷ்ட விலங்கின் இரு கண்களை அரைத்துவிடு, வலையிலே திருடனை வீழ்த்து. ௨ இரவே! உனது துரிதமான கூரிய கொம்புகளுள்ள பொதிமாடுகளால் எங்களது புன்மைகளையெல்லாம் இன்று கடக்கச் செய்வாயோ. ௩ ஒவ்வொரு இரவையும், எங்கள் உடற்களிலே இடர்ப்படாமல் நாங்கள் கழிப்போமாக; புருஷர் ஆழமான சலத்தை கப்பல்களில்லாமல் கடக்க இயலா

ததுபோல் கருமிகளுமாவார்களாக. ச புடைக்கப்படும் தானிய சாமை பறந்து, பார்க்கப்படாததுபோல், இரவே எங்களுக்குப் படுபகைச் செய்பவனைப் பறக்கச் செய். ரு நீ பசு திருடும் கள்வனையும் குதிரையின் சிரத்தை மூடி அதை அழைத்துச் செல்ல முயல்பவனையும் வெகு தூரத்தில் தடுத்துள்ளாய். சு சுபகையே! நலத்தை அளித்து நீ இன்று வருங்கால், நாங்கள் அதை அநுபவிக்கச் செய், அது போகாமலாகுக. எ இரவே! குற்றமற்ற எங்களையெல்லாம் உஷைக்கு நீ அளித்துவிடு. ஒளி வீசுபவளே! உஷை எங்களைப் பகலுக்கு, பகல் உன்னிடம் அளிப்பாளாக. [கக. ருO.] ருசுஎ. ஆன்மா [பிரமன்— ஆத்மா.] க நான் பிரியமாவுள்ளேன் [1]. என் ஆத்மா பிரியாதவன். என் கண் பிரியாதது, என் செவி பிரியாதது, என் பிராணன் பிரியாதது, என் அபானன் பிரியாதது, என் சர்வமும் பிரியாதது.[2] உ தேவ சவிதாவின் தூண்டுதலில், அசுவினிகளின் கைகளோடு பூஷணனது புஜங்களால், பிரேரிதமாகி நான் உன்னைப் பற்றுகிறேன். [கக. ருக.] ருசுஅ. காமன் [பிரமன்—மந்திரோக்த காமோ தேவதை.] க ஆதியிலே இங்கு அந்தக்காமனே இருந்தான். அவனே மனத்தின் முதல் இரேதஸானன்; காமனே! பெரிய காமனோடு ஒரே மூலமுள்ளவன் நீ. யஜமானனுக்குச் செல்வச் செழுமையை யளி. உ காமா நீ வலிமை வன்மையோடு விபவத்தோடு நிலையாயுள்ளாய். நட்பு நாடுபவனுக்கு நீ நண்பன். சமரிலே ஜயிக்கும் உக்கிரனை நீ, விறலையும் திறலையுமளிப்பாயாக. ங தூரத்தினின்று விரும்பும் அவனுக்கு அக்ஷயத்தில் பாலனஞ் செய்யும் அவனுக்கு திசைகளெல்லாம் செவி கொடுக்கும் அவர்கள் காமத்தால் சுவர்க்கத்தைச் செய்தார்கள்.

---

1 நீங்காமலுள்ளேன் 2 நான் அனைத்தோடும் பொருந்தியுள்ளேன்.

௪ இருதயத்தினின்று இருதயத்துக்கு காமத்தால் காமம் எனக்கு வந்துள்ளது: அங்குள்ள அவர்களுடைய மனம் எனக்கு இங்கு வருக. ரு காமா! எதை விரும்பி நாங்கள் உனக்கு இந்த அவியைச் செய்கிறோமோ அந்த அனைத்தும் எனக்குப் பூரணமாகுக. அப்பால் இந்த அவியை நீ புசி; சுவாஹா! [கக. ருஉ.] ருசுக **காலன்** [பிருகு சர்வாத்மக காலன்] க அறியாதவர்களாய், ஆயிரங் கண்ணுள்ள, இரேதசு மிகுந்து, ஏழு கிரணங்களோடான குதிரையை காலன் வஹித்துச் செல்லுகிறான். அறிஞர்களான கவிகள் அவனில் ஏறுகிறார்கள். எல்லா புவனங்களும் அவனது சக்கரங்கள். உ இந்தக் காலன் ஏழு சக்கரங்களைச் செலுத்துகிறான். அவனது நாபிகள் ஏழு: அமிருதமே அவனது அச்சு: காலனை அவன் இந்த புவனங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து முதற் தேவனுக்குச் செல்லுகிறான். ௩ பூரண கும்பம் காலனிலே வைக்கப்பட்டுள்ளது. அவன் வெகு பலவிதமாயிருப்பதால் நாம் அவனைப் பார்க்கிறோம். அவன் இந்த எல்லாப் புவனங்களின் முன்னர் இருக்கிறான். பரமநிலயத்திலே அவர்கள் அவனைக் காலன் எனக் கூறுகிறார்கள். ௪ அவனே எல்லாப் பொருள்களையும் ஒன்று சேர்த்தான். அவனே பொருள்களில் வியாபகமாகிறான். தந்தையாயுள்ள அவன் அவர்களுடைய மகனுமானான். அவனுக்கதிகமான அந்நிய தேஜசு இல்லை. ரு அங்குள்ள சோதியைக் காலனே சனனஞ்செய்தான்: இப்புவிகளை யெல்லாம் காலனே செய்தான். இருப்பதும் இருக்கப் போவதும் காலனில் பிரேரிதமாகி நிற்கும். சு காலன் புவியைச் செய்தான், காலனில் கதிரவன் எரிகிறான்; காலனில் விசுவப்பொருள்கள். காலனில் கண் விரிந்து காண்கின்றது. எ காலனில் மனம், காலனில் பிராணன், காலனில் நாமங்

குவியும்; காலன் வந்தால் எல்லாப் பிரஜைகளும் சந்தோஷமாகின்றன. ௮. காலனில் தவம், காலனில் தலைவன், காலனில் பிரமன் காலனில் நாமங், குவியும், பிரஜாபதியின் பிதாவான காலன் சர்வேசுவரன். ௯ அவன் பிரேரிதஞ் செய்தான், அவன் சனனஞ் செய்தான், அவனில் இது நிலையாய் ஸ்தாபனமாகும்; காலன் பிரமனாகி பரமேஷ்டியைத் தரிக்கிறான். ௧௦ காலன் பிரஜைகளைச் சனனஞ் செய்தான்; அவன் ஆதியில் பிரசாபதியை சனனஞ் செய்தான்; சுயம்பூவான கசியபன் காலனிடமிருந்து தவம் காலனிடமிருந்து தோன்றினான். [௧௧. ௫௩.] ௫௭௦ காலன் [பிருகுரிஷி—காலன்] ௧ காலனிடமிருந்தே சலங்கள் தோன்றிற்று; காலனிடமிருந்தே பிரமனும் தவமும் திசைகளும் தோன்றினார்கள்; காலனால் சூரியன் உதயமாகிறான்; மறுபடியும் அவன் காலனிலேஒய்வுக்குச்செல்லுகிறான். ௨ காலனால் காற்று புனிதமாய் வீசுகிறான்; காலனால் புவி பெரிது; பெரிய சோதி காலனிலே ஸ்தாபிதமாயுள்ளது. ௩ மகனான காலன் இருப்பதையும், இருக்கப்போவதையும் பூருவத்திலே சனனஞ் செய்தான். காலனிடமிருந்து ரிக்குக்கள் தோன்றிற்று; காலனிடமிருந்து யஜுஸு தோன்றிற்று. ௪. காலன் தேவர்களின் அழியாத பாகமான யக்ஞத்தைப் பிரேரிதஞ் செய்தான்; காலனில் கந்தர்வர்களும் அப்சரஸர்களும் ஸ்தாபிதமாயுள்ளார்கள்; காலனில் உலகங்கள் ஸ்தாபிதமாயிற்று ௫ தேவர்களான அங்கிரசர்களும் அதர்வனும் காலனில் ஸ்தாபிதமாயுள்ளார்கள்; இவ்வுலகமும் பெரிய உலகமும் புண்ணிய உலகங்களும், புண்ணியப் பிரிவுகளும்—காலனிலே; பிரமத்தால் எல்லா உலகங்களையுஞ் ஜயித்து இந்தக் காலன் பெரிய தேவனைகச் சலனமாகிறான். [௧௧. ௫௪.] ௫௭௧ அக்கினி [பிருகு—அங்கிரன்] ௧ அக்கினியே! நிற்குந்

குதிரைக்கு கலப்பில்லாதப் புல்லைப்போல், இரவுதோறும் நாங்கள் அவனுக்கு எங்கள் அளிப்பைக் கொண்டுவருகிறோம்; உணவோடு செல்வச்செழுமையில் இனிமையாகும் உங்கள் அருகிலுள்ள நாங்கள் இன்னலற்றுக வேண்டும். ௨ செல்வத்தை அடைய எந்த விருப்பமுண்டோ அந்த உனது விருப்பத்தால் எங்களுக்குச் சுகமளி. அக்கினியே! உணவால் செல்வச் செழுமையில் இன்பமாகும் உனது அருகிலுள்ள நாங்கள் இன்னலற்றுவோமாக. ௩ ஒவ்வொரு மாலையிலும் அக்கினி எங்களது கிருகபதி: ஒவ்வொரு காலையிலும் அவன் நல்மன மளிப்பவன். அதி செல்வத்தையும் பொருளையும் நீ அளிப்பவனுகவும். உன்னை எழுச்சியாக்கி நாங்கள் ஓங்குவோமாக. ௪ ஒவ்வொரு காலையிலும் அக்கினி எங்களது கிருகபதி. ஒவ்வொரு மாலையிலும் அவன் நல்மன மளிப்பவன். அதி செல்வத்தையும் பொருளையும் நீ எங்களுக்களிப்பவனுகவும். உன்னை எழுச்சி செய்து நாங்கள் நூறு ஆண்டுகள் வாழலாமோ. ௫ நான் அன்னக் குறைவுடனுகவேண்டாம். அன்னத்தைப் புசிக்கும் அன்னபதிக்கு அக்கினிக்கு ருத்திரனுக்கு வணக்கம். ௬ சபை சேர்ந்தவனே! எனது சபையைப் பாலனஞ்செய். சபையில் உட்காருபவர்களையும் சபை சேர்பவர்களையும்—காப்புச் செய். இந்திரனே! உன்னை அதிக மழைத்து அவர்கள் பூரணுயுசை அடைவார்களாக. ௭ அக்கினியே! நிற்கும் குதிரைக்குக் கலப்பில்லாதப் புல்லைப்போல் ஒவ்வொரு காலையும் நாங்கள் அவனுக்கு எங்கள் அளிப்பைக் கொண்டு வருகிறோம்; உணவோடு செல்வச் செழுமையில் இனிமையாகும் உங்கள் அருகிலுள்ள நாங்கள் இன்னலற்றுகவேண்டும். [௧௧. ௫௫] ௫௭௨ சூக்கம் [யமன்—துக்க நாசனன்] ௧ நீ யமனது உலகத்தி

னின்று இங்கு வந்துள்ளாய்; தீரனை நீ இன்பத்தோடு மானிடனை—மேற்—சேர்க்கிறாய். அசுரனுடைய மூலஸ்தானத்திலே உறக்கத்தை உருச்செய்து நீ ஒற்றனோடு பொருந்திச் செல்லுகிறாய். ௨ இரவுக்கு முன்னரான முதற்பகலிலே விசுவ பலமுள்ள பந்தன் ஆதியிலே உன்னைக் கண்டான். தூக்கமே! வைத்தியர்களினின்றும் உனது ரூபத்தை மறைத்து அங்கிருந்து நீ இங்கு வந்துள்ளாய். ௩ பெரிய பசுவான அவன் மகிமை நாடி, அசுரர்களினின்றும் நீங்கி தேவர்களை அணுகியுள்ளான். சோதியை அடைந்த முப்பத்து மூவர்கள், அந்த கனவுக்கு ஆதிபத்தியத்தை அளித்தார்கள். ௪ இங்கு உள்ளே முணுமுணுத்துச் செல்லும் அவனை, பிதுருக்கள் அறிவதில்லை, தேவர்களும் அறிவதில்லை. வருணனால் சிட்சிதமாகி ஆதித்தியர்களான மானிடர்கள் திருத ஆப்தியனிலே கனவை ஸ்தாபித்தார்கள். ௫ குரூரத்தைக் கடுஞ்செயலோர்களுக்களித்த நீ, கனவு இன்மையால் புண்ணிய ஆயுசை சுகிருதர்களுக்கு அளித்த நீ, பெரிய பந்துவோடு நீ சோதியிலே இன்பமாகிறாய். தபஞ் செய்பவனது மனத்தினின்றும் நீ தோன்றினாய். ௬ முன்பக்கமுள்ள உனது பரிசனங்களையெல்லாம் நாங்கள் அறிகிறோம். கனவே! உனது அதிபதி யார் என்பதையும் நாங்கள் இங்கு அறிகிறோம். புகழுள்ளவனது புகழோடு நீ எங்களை இங்கு பாலனஞ் செய். நீ விஷங்களோடு வெகுதூரஞ் சென்றுவிடு. [௧௧. ௫௬]

௫௭௩ தீக்கனவு [யமன்—துச்சுவப்ன நாசனன்]

௧ பூரணக் கடனை எட்டில் ஒன்றை, பதினாறில் ஒன்றை அவர்கள் கொண்டு வருவதுபோல், பிரியமில்லாதவனில் எல்லா—த்தீக்கனவையும் ஒன்று குவிக்கிறேன். ௨ அரசர்கள் சேர்ந்துள்ளார்கள், கடன்கள் திரண்டுள்ளன,

குஷ்டங்கள் குவிந்துள்ளன, கலைகள் சந்தித்துள்ளன. நாம் நம்மிலுள்ள எல்லாத் தீக்கனவையும் நம்மை வெறுப்பவனில் சாய்த்துவிடுவோம். ௩ தேவ பத்தினிகளின் கருவான நீ யமனது கரம்—நீ நற்கனவு; எங்களை வெறுப்பவனில் எனது தீக்கனவை நாங்கள் செலுத்துகிறோம். ௪ கடுமை என்னும் நாமமுள்ள நீ கரும்பறவையின் வாயாவாய்; கனவே! நாங்கள் உன்னை இங்ஙனம் பூரணமாயறிகிறோம்; கனவே! குதிரைத் தடையைப்போல் புரவி கச்சையைப்போல் இகழ்பவனை தேவநிந்தனை செய்பவனை எங்களைச் சேராதவனைச் சிதறடித்துவிடு. ௫ எங்களிலுள்ளத் தீக்கனவையும் எங்களது பசுக்களிலுள்ள எங்களது மனையிலுள்ள-கடுங்கனவையும்-இகழ்பவனும், தேவநிந்தனை செய்பவனும், எங்களைச் சேராதவன் மாலையைப்போல் அணிவார்களாக. ௬ எங்களினின்று ஒன்பது முழங்கள் அளந்து, எங்களை வெறுப்பவனிலே எல்லாத் தீக்கனவையும் தள்ளிவிடுகிறோம். [௧௯.௫௭] ௫௭௪ பிரார்த்தனை [பிரமன்—மந்திரோக்த வெகு பல தேவர்கள்] ௧ ஆண்டுகளை அவியால் வளரச்செய்து சதேவனாய் சமானனாய்நெய்யினோட்டமாவானாக, காது, கண், பிராணன் பிரிபாமலாவானாக, நாங்கள் வாழ்க்கையினின்றும் வன்மையினின்றும் விலகாமலாகவேண்டும். ௨ பிராணன் எங்களை அழைப்பானாக. நாங்கள் பிராணனை அழைக்கிறோம்; வானமும் வையமும் வலிமையைப் பற்றியுள்ளன; சோமனும் பிரகஸ்பதியும் தாத்ருவும் வலிமையைச் சேர்த்துள்ளார்கள். ௩ சோதியும் புவியும் வலிமையைப்பற்றும் இருவர்களாயுள்ளார்கள், நாங்கள் வலிமையைப்பற்றி வையத்தில் சலனமாவோமாக; புகழோடு பசுக்கள் வந்து கோபதியை அநுசரித்திடுக; புகழைக் கிரகித்து நாங்கள் புவியில் சலனமாவோமாக. ௪ நீங்கள் கோசாலையைச் செய்யுங்

கள்; அது மானிட இரட்சிப்பாகும்: விரியும் வெகு பல கவசத்தைச் சேருங்கள்; எதிர்க்க முடியாத உலோகக் கோட்டைகளைச்செய்யுங்கள்; உங்களது கலசம் ஒழுகாமலாகுக; அதை பலமுடனாக்குங்கள். ரு யக்ஞக்கண்ணுடைய முதல்வனுக்கு முதன்மையானவனுக்கு, நான் செவி சொல் மனத்தால் ஆஹூதி செய்கிறேன்; தேவர்கள் நல்ல மனமுள்ளவர்களாய் விசுவகருமனால் விரிக்கப்பட்டுள்ள இந்த யக்ஞத்தை அடைவார்களாக. ௬ தேவரித்விக்குக்களும் அவிபாகம் அளிக்கப்படும் யக்ஞாருகர்களும் அவர்களது மனைவிகளோடு சேர்ந்து இந்த யக்ஞத்துக்கு வருவார்களாக; எத்தனை தேவர்களுண்டோ அத்தனை தேவர்களும் அவியிலே இன்பமாவார்களாக. [௧௬. ருஅ]

ருஎரு [பிரமன்—அக்கினி] ௧ அக்கினியே! தேவர்களில் மானிடர்களில் நீ விரதங் காப்பவன், நீ யக்ஞங்களில் போற்றப்படுபவன். ௨ அறிவு ஓங்கும் தேவர்களே! அறியாமையால் உங்களது விரதங்களை நாங்கள் பங்கஞ் செய்தால், பிராமணர்களை நுழைந்த ஸோமனும், எல்லாம் புசிக்கும் அறிஞனான அக்கினியும் அதைப் பூரணஞ் செய்வார்களாக. ௩ நாங்கள் செய்ய இயலும் வேலையைச் செய்துமுடிக்க தேவவழியிலே வந்துள்ளோம். அக்கினி அறிபவன், அவன் யஜிப்பவன், அவனே ஹோதா, அவன் ருதுக்களையும், யக்ஞங்களையும் சித்தஞ் செய்வான் [௧௯. ௧—௩]

ருஎ௬ பிரமன் [மந்திரோக்தவாக் தேவதை] ௧ வாயிலே வாக்கு, மூக்கிலே பிராணன், கண்களிலே காட்சி, செவிகளிலே சிரோத்தரம், வெண்மையாகாத கேசம், உடையாத பற்கள், கைகளில் பலம்—எங்களுக்கு வேண்டும். ௨ தொடைகளில் திடம், கால்களில் துரிதம் பாதங்களில் நிலை—எங்களுக்கு வேண்டும், நான் இன்னலற்று எனது சர்வாத்மா இடா—ற்றுக—

வேண்டும். [௧௯. ௬௦] ௫௭௭ [பிரமன்—பிரமணஸ்பதி]
௧ என் உடலோடு உடல் பொருந்துக! நான்
சர்வாயுளை அடையலாமோ? இனிமையிலே உட்
கார். சுவர்க்கத்தில் சுத்தஞ்செய்து கொள்பவனாய்
பூரணமாய் நிறைந்துகொள். [௧௯—௬௧] ௫௭௮ [பிர
மன்—பிரமணஸ்பதி] ௧ தேவர்களில் என்னைப் பிரிய
முள்ளவனாகச் செய், அரசர்களில் பிரியமுள்ளவனாகச்
செய்; சூத்திரனுக்கும் ஆரியனுக்கும் பார்க்கும் ஒவ்
வொன்றுக்கும் என்னைப் பிரியமுள்ளவனாகச் செய்.
[௧௯. ௬௨] ௫௭௯ [பிரமன்—பிரமணஸ்பதி] ௧ பிரம
ணஸ்பதியே! எழுந்திரு யக்ஞத்தோடு தேவர்களை எழுச்
சியாக்கு; யஜமானனை, அவனது ஆயுளை, பிராணனை
பிரசையை, பசுக்களை, புகழை ஓங்கச் செய். [௧௯—௬௩]
௫௮௦ [பிரமன்—அக்கினி] ௧ அக்கினியே நான் பெரிய
ஜாதவேதஸனுக்கு நான் சமித்தை பற்றியுள்ளேன்.
அந்த ஜாதவேதஸன் எனக்குச் சிரத்தையையும் மேதை
யையும் அளிப்பானாக. ௨ ஜாதவேதஸனே! நாங்கள்
உன்னை சுவாலையாலும் சமித்தாலும் உன்னைவளர்க்கி
றோம். பிரசையோடும் பொருளோடும் எங்களை வள
ருங்கள். ௩ அக்கினியே! நாங்கள் உனக்கு எந்த
சமித்தை அளித்தாலும் அது எங்களுக்கு மங்களகரமா
குக. இளைஞனே! நீ அதை அங்கீகரி. ௪ அக்கினியே!
இம்மரத்துண்டுகளெல்லாம் உனக்கு: எரிபவனே! அவற்
றோடு நீ சேர்; எங்களில் ஆயுளை அளியுங்கள்; ஆச்
சாரியனில் அமுதத்தை அளியுங்கள். [௧௯. ௬௪.] ௫௮௧
[பிரமன் ஜாதவெதஸன் சூரியன்] ௧ பொன் சுபர்ண
னா நீ பிரகாசத்தோடு சோதிக்கு ஏறியுள்ளாய். நீ சுவர்
க்கம் பறப்பதை எவர் இன்னல் செய்தாலும் அவர்களை
சுவாலையால் எரித்துவிடு. அச்சமற்ற ஜாதவேதசனே!

உக்கிர சூரியனே! ஒளியுடன் சுவர்க்கத்துக்கு ஏறு. [கக. சுரு.] ௫அ௨ [பிரமன் ஜாதவேதஸன் சூரியன்] க ஜாதவேதஸனே! இரும்பு வலைகளோடு, அயப்பாச கொக்கிகளோடு, சலனமாகும் அசுர மாயாவிகளை, சுவாலையோடு உனக்குச் சாய்த்துவிடுகிறோம். எதிரிகளை அழித்து ஆயிரம் முட்களுள்ள வச்சிராயுதனாய் வா. [கக. சுசு] ௫அ௩ [பிரமன்—சூரியன்] நூறு சரத்காலங்கள் நாங்கள் பார்க்கவேண்டும். நூறு சரத்காலகள் சீவிக்கவேண்டும். நூறு சரத்காலங்கள் விழிக்கவேண்டும். நூறு சரத்காலங்கள் ஏறவேண்டும், நூறு சரத்காலங்கள் ஓங்கவேண்டும், நூறு சரத்காலங்கள் வாழவேண்டும். நூறு சரத்காலங்கள் சுந்தரமாகவேண்டும். நூறு சரத்காலங்கள்—இன்னும் அதிகம் ஓங்கவேண்டும். [கக. சுஎ] ௫அச [பிரமன்கர்மன்] க நான் விரிந்தவிரியாத வாயையை மாயையால் திறக்கிறேன். வேதம்பற்றிய அவர்களோடு நாங்கள் செயல்களைச் செய்கிறோம். [கக. சுஅ] ௫அ௫ [பிரமன்—ஆபன்.] க—ச. நீங்கள் சீவனுள்ளவர்கள்; நான் சீவிக்கலாமோ. நான் எனது பூரண ஆயுசுவரை சிவிக்கலாமோ. நீங்கள் அதிசீவனுள்ளவர்கள், நான் சீவிக்கலாமோ; நான் எனதுப் பூரணாயுசுவரை சீவிக்கலாமோ. நீங்கள் சசீவர்கள்; நானும் சேர்ந்து சீவிக்கலாமோ. நான் எனது சர்வாயுசை சீவிக்கலாமோ நீங்கள் சீவிப்பவர்கள்; நான் சீவிக்கலாமோ; நான் எனதுப் பூரணாயுசை சீவிக்கலாமோ. [கக. சுக.] ௫அசு [பிரமன்—இந்திராதயர்கள்] இந்திரா சீவி: சூரியா சீவி: தேவர்களே! சீவியுங்கள்; நான் சீவிக்கலாமோ; நான் சர்வாயுசுவரை சீவிக்கலாமோ. [கக. எ0.] ௫அஎ. [பிரமன்—காயத்திரி] வரமளிக்கும் வேதமாதா என்னால் போற்றப்பட்டுள்ளாள்; துவிஜர்களின் பாவமானத்தை

அவள் தூண்டுவாளாக; ஆயுசையும் பிராணனையும், பிரஜையையும், பசுவையும் புகழையும், பொருளையும், பிரமவர்சஸையும் எனக்கு அளித்து நீங்கள் பிரம உலகத்துக்குச் செல்லுங்கள். [௧௯. ௭௧.] ௫௮ [பிருகு வங்கிரப் பிரமன் பரமாத்மா.] ௧ எந்தக் கோசத்தினின்று நாங்கள் வேதத்தை எடுத்தோமோ நாங்கள் அக்கோசத்திலேயே—வைத்து விடுகிறோம். இந்த யக்ஞம் பிரம வீரியத்தால் செய்யப்பட்டுள்ளது; தேவர்களால் அத்தவத்தோடு என்னைப் பாலனஞ்செய்யுங்கள். ௧௯. ௭௨.

பத்தொன்பதாவது காண்டம் முற்றிற்று.

## ௫௮௯—௭௩௧

௫௮௯ [விசுவாமித்திரன் கௌதம விரூபர்கள்—இந்திரன், மருத்து அக்கினி] ௧ நாங்கள் விருஷபனை இந்திரனும்—சோமனைப் பொழியுங்கால்—உன்னை அழைக்கிறோம்: இனிய இரஸப்—பொருளைப்—பாலனஞ்செய். ௨ சோதியின் அதிசக்திமிகுந்த மருத்துக்களான நீங்கள், பானஞ் செய்யும் மனையிலுள்ள மானிடர்களாவீர்கள்; மேலானக் காப்புக்கனிந்தவர்களுமாவீர்கள். ௩ உறுதியளி உணவையும், வசமளி அன்னத்தையும் சோமனை வரம்பில் தரித்துள்ள—அறிஞனை அக்கினியையும் ஸ்தோமங்களால் நாங்கள் சாற்றுகிறோம். [௨௦. ௧.] ௫௯௦ [கிருத்ஸ்மதன் மேதாதிதி—மருத் இந்திராக்கினி திரவிணோதன்] ௧ மருத்துக்கள் போத்திரத்தினின்றும், துதிக்கருகதையான சுமந்திரத்தினின்றும் ருதுவினால் சோமனைப் பருகுவார்களாக. ௨ அக்கினி அனல்தரிப்பவனின்றும், துதிப்பதர்க்கருகதையான, சுமந்திரத்தினின்றும் சோமனைப் பருகுவா

ளுக. ங இந்திரப்பிரமன் பிராமணத்தினின்றும், துதிக் கருகதையான சுமந்திரத்தினின்றும் ருதுவினுல், சோம னைப் பருகுவாளுக. ச திரவியமளிக்கும் தேவன் போத் திரத்தினின்றும் துதிக்கருகதையான சுமந்திரந்தினின் றும் ருதுவால் சோமனைப் பருகுவாளுக. [உ0. உ] ருகூக [இரும்பிடி—இந்திரன்] க இந்திரா! வா. உனக் குச் சோமனைப் பொழிந்துள்ளோம். இங்கு இந்த சோம னைப் பருகு. எனது இத்தருப்பையிலுட்கார். உ பிர மத்தால் பொருந்தி கேசத்தோடான உனது இரு புரவிகள் உன்னைக்கொண்டு வருக: நீ—எங்கள் சொற்க ளுக்குச்—செவிகொடு. ங இந்திரா சோமனைப் பொழிந் துள்ள நாங்கள், சோமந்தரிக்கும் பிராமணர்களான நாங்கள், சோமபானம் பருகி யுக்தமோடான உன்னை அழைக்கிறோம். [உ0. ங.] ருகூஉ [இரிம்பிடி—இந்தி ரன்] க சோமனைப் பொழியும் எங்களிடம் வா, எங்கள் நற்துதிகளுக்கு வா. இனிய தோற்றமுள்ளவனே! சோம னைப் பருகு. உ நான் அதை உன் வயிற்றில் ஊற்று கிறேன்; அது உன் உறுப்புக்களிலெல்லாம் பாய்க. இனியதை நாவினுல் பற்று. ங அது உன் காயத்துக்கு இனிது, இனிய இரசம் இனிது. உனது இருதயத்துக்கு சோமன் இனிது. [உ0. ச.] ருகூங [இரும்பிஷ்டி— இந்திரன்] க அதிகங்காண்பவனே! இந்திரனே! ஸ்திரீகளோடு சூழ்ந்தவன் போல் இந்த சோமன் உன்னை அணுகுவாளுக. உ சோமனுடைய மதத்தில் துரித கண்டன் ஒங்குங் காத்திரனுன இந்திரன் உபரிய கையுள் ளவனுகி விருத்திரனைக் கொன்முன். ங உனது சக்தி யால் விசுவத்தின் ஈசனுன இந்திரனுன நீ முன் செல்; விருத்திரனழிக்கும் நீ விருத்திரனை வீழ்த்து. ச பொழி யும் யஜமானனுக்கு எந்த அங்குசத்தால் செல்வத்தை

அளிக்கின்றாயோ அது தீர்க்கமாகுக. ௫ இந்திரா இம் மேலான தருப்பையிலே இங்குசோமன் சுத்தமாயுள் ளான். இங்கு அரிதமாகி இதனைப் பருகு. ௬ சோதி யில் புகழுள்ள நீ சக்தி வாய்ந்தவர்களால் போற்றப் படு பவன். உனது இன்பத்துக்கு இது பொழியப்பட்டுள் ளது. ஆகண்டவனே[1]! நீ அழைக்கப் பட்டுள்ளாய். ௭ குண்ட பாய்யனது[2] குலத்திலுதித்தவனுக்கு, சிருங்க விருஷ[3] குடும்பத்தில் தோன்றியவனுக்கு நான் என் மனத்தைச் செலுத்தியுள்ளேன். [௨0. ௫.] ௫௬௪[விசுவா மித்திரன்—இந்திரன்.] ௧ நாங்கள் விருஷபனுன இந்திர னும் உன்னை, சோமனைப் பொழியுங்கால் அழைக்கிறோம். இனிய இரஸப்—பொருளைப்—பாலனஞ்செய். ௨ பலர் போற்றும் இந்திரா! அறிவளிக்கும் சோம இரஸத்தைப் பற்று. திருப்தி யளிக்கும் சோமபானத்தைப் பருகு, பொழி. ௩ துதிக்கப்படும் சனபதீ! இந்திரா! விசுவ மான தேவர்களோடு செல்வமோங்கச் செய்யும் யக்ஞத் தைச் செழுமையாக்கு. ௪ இந்திரா! வீரர்பதீ, உனது நிலயத்துக்கு இவ்வொளி துளிகள், உனக்கு சோம இர ஸங்கள் பாய்கின்றன. ௫ இந்திரா, இம்மேலான சோம இரஸத்தை உன் உதரத்திலே பற்று. இச்சோதிமய துளி கள் உன்னுடையது. ௬ மொழிபதீ எங்கள்இரஸத்தைப் பருகு. நீ இனிய தாரைகளால் தோய்ந்துள்ளாய். இந் திரா! இப்புகழ் உன்னில் அளிக்கப்பட்டதே. ௭ வரிப் பவனது அழியாத செல்வங்கள் இந்திரனுக்குச் செல்லு கின்றன. அவன் சோமனைப் பருகிவளர்ந்துள்ளான். ௮ விருத்திரனழிப்பவனே! தூரத்தினின்றும் அருகினின்றும் நீ எங்களிடம் வா எங்கள் மொழிகளையங்கீகரி [௨0. ௬.].

1 சத்துரு சம்ஹாரனே 2 அனல் சேர்க்கையான 3 உச்ச கிரணமுள்ள.

ருகூடு [சுககூஷன், விசுவாமித்திரன் இந்திரன்] க நரர்களுக்கு ஹிதஞ்செய்து—எதிரிகளை வீழ்த்துபவனுயுள்ள செல்வப் புகழுள்ள விருஷபனைக் காண, சூரியனே! நீ உதயமாகிறாய். உ இந்த இந்திரன் தன் புஜ பராக்கிரமத்தால் கூகூ கோட்டைகளை இடித்தான். விருத்திரனைக் கொன்றான், அஹியை அழித்தான். ந இந்த இந்திரன் எங்களுக்கு மங்களகரமான நண்பன். கோமிகும், குதிரை ஓங்கும்: யவம் நிறையும் அவன், வெகு தாரைகள் பொழியும் பசுவைப்போல் எங்களுக்கு அனைத்தையும் கறக்கிறான். ச பலர் போற்றும் இந்திரா! அறிவளிக்கும் சோம இரஸத்தைப் பற்று, திருப்தியளிக்கும் சோம பானத்தைப் பருகு. [உ0—எ] ருகூசு [பரத்வாஜன், குத்ஸன், விசுவாமித்திரன்—இந்திரன்] க பூர்வம்—போல்—நீ சோமனைப் பருகு; அது உனக்கு இனிமை செய்க, எனது பிரமத்தைக் கேள், எங்கள் மொழிகளால் ஓங்கு. சூரியனைப் புலனுக்கு, உணவை ஓங்கச் செய். இந்திரா! எதிரிகளைக் கொன்று பசுக்களைப் பாழாக்கு உ இந்திரா! எங்களிடம் வா! 'நீ சோமனை விரும்புபவன்' என அவர்கள் மொழிந்துள்ளார்கள். இதோ பிழிந்த சோமன். மதத்துக்கு இதனைப் பருகு. விரிந்து விசாலமாயுள்ள உனது வயிற்றில் அச்சோமனைப் பொழிந்துகொள். அழைக்கப்பட்டுள்ள நீ பிதாவைப்போல் எங்களுக்குச் செவிகொடு. ந அவனது கலசம் பூரணமாயுள்ளது, சுவாஹா: அவனது பானத்துக்காக, பொழிபவனைப் போல் நான் பாண்டத்தை நிறைத்துள்ளேன். பிரியர்களான சோமாருகர்கள், இந்திரனைச் சூழ்ந்து முற்றுஞ் சுற்றியுள்ளார்கள்.] உ0—அ] ருகூஎ [நேதர்கள், மேதாதிதி—இந்திரன்] க பசுக்கள் கோசாலைகளிலே கன்றுகளுக்குக் கோஷிப்பனபோல் நாங்கள் பாக்களால், தரிசி

யாயும், எதிர்ப்பு அழிப்பவனுயும் சோம இரசத்திலே இன்பமாகும், இந்த இந்திரனைப் போற்றுகிறோம். ௨ திவ்யனுயும், நல்ல தான சீலனுயும், திறஞ் சூழ்பவனுயும், வெகுபல போக்கியங்களிலே மலைபோலும் உள்ளவனை, நூறு, ஆயிரம் வகை பசுமிகுந்த உணவுக்கு யாசிக்கிறோம். ௩ நீ எதனுல் பிருகுவுக்கும், யதிகளுக்கும், பிரஸ்கண்வர்களுக்கும் பொருளில ஸ்தாபிதமாகுங்கால், துணைபுரிந்தாயோ, பூருவ ஞானத்துக்காக, அந்த சுவீரமான பிரமத்தை நான் போற்றுகிறேன். ௪ இந்திரா! எதனுல் நீ மேன்மை மிகும் சலங்களை சலதிக்குச் செலுத்துகிருயோ, அஃதே உனது ஆண்மை மிகும்—திண்மை. எவனுக்கு உலகங்கள் முழக்கங்கள் செய்கின்றனவோ, அவனது மகிமையை எவனுலும் கடக்க இயலாது. [௨௦—௯] ருக்௯௮ [மேத்யாதிதி—இந்திரன்] ௧ அழியாத் துணைபுரிந்து, திரவியமளித்து திறம் தெளிவுசெய்து சதாஜபிக்கும் இரதங்களைப்போல், தேன்மிகும் எங்களது இம்மொழிகள் இந்த ஸ்தோமங்கள் உனக்கு ஏறுகின்றன. ௨ பிருகுக்கள் கண்வர்களைப்போல் கதிரவர்களைப் போல் நினைத்ததை யெல்லாம் பற்றியுள்ளார்கள். மேலான பிரியமேதர்களான ரிஷிகள் ஸ்தோமங்களால் இந்திரனை முழக்கஞ் செய்கிருர்கள். [௨௦—௧௦] ருக்௯௯ [விசுவாமித்திரன் இந்திரன்] ௧ இந்திரன் புரம் பிளப்பவன், பொருள் பதியான அவன் பகைவர்களைத் துரத்தி, கிரணங்களால் தாஸனை ஆக்கிரமித்துள்ளான். பிரமனுல் பெருகி காயத்தில் வளர்ந்து அதிதானமளிக்கும் அவன் சோதியையும் புவியையும் சூழ்ந்துள்ளான். ௨ நான் உன் ஆண்மையையும், திண்மையையும் வாய்மையையும், அமுதத்துக்கு மொழியையும் யலங்காரஞ் செய்து தூண்டுகிறேன். இந்திரா! நீ மானிட சமூகங்களின் தேவசனங்களின் முதற் தலைவன்.

௩ இந்திரன் பலம்பெருகி விருத்திரனைச் சூழ்ந்தான், உருவம் ஓங்கும் அவன் மாயாவிகளை மாய்த்தான்; காடுகளில் உக்கிரமாய் கனல்விட்டெரியும் அவன் வியம்ஸனைவீழ்த்தி இருள் சேர்க்கையானபசுக்களைப் புலனாக்கினான். ௪ ஒளி ஜயிக்கும் இந்திரன், பகல் புலனாக்குமவன், பிரேரிதமாகி —சமர் விரும்பும் சத்துருக்களை ஜயித்தான்: அவன் மானிடனுக்கு தினத்தின் துவஜத்தைப் பிரகாசஞ் செய்தான். அவனது மேலான இன்பத்துக்கு சோதியைத் தோற்றுவித்தான். ௫ இந்திரன் வீரர்களைப்போல வெகுபல வீரச் செயல்களை செய்பவனாய் துரிதமாய்ச் சென்று திண்மையிலே நுழைந்தான்; அவன் இந்த அறிவுகளையெல்லாம், தோத்திரஞ் செய்பவனுக்கு உணர்த்தினான். இந்த..................உஷைகளின்...............சோதி வனப்பை அவன் விரித்தான். ௬ இந்திரனால் செய்யப்பட்ட வெகு பல சுகிருதச் செயல்களை, மகானின் மேலான ஆற்றல்களை அவர்கள் சாற்றுகிறார்கள். அவன் ஓங்கும் வன்மையால் வட்கார்களை வீழ்த்தினான்: எதிர்க்கும் ஆண்மையால் மாயாவிகளான தஸ்யுக்களை, மாய்த்தான். ௭ வீரர் பதியான இந்திரன் மானிடரது விருப்பம் பூர்த்தி செய்யுமவன்; போரினாலும் பெருமையாலும் தேவர்களுக்குச் செல்வங்களை அளித்தான். விவஸ்வந்தின் நிலயத்திலே, அவனது செயல்களை, கல்வி ஓங்கும் கவிகள் கானங்களால் கோஷஞ்செய்கிறார்கள். ௮ இந்திரன் சிறந்தவன், ஜயிப்பவன் ஜயமளிப்பவன், சோதியையும் திவ்ய சலங்களையும் தரிப்பவன். இந்த விரிந்த புவியையும் சுவர்க்கத்தையும் ஜயித்துள்ள அவனில் அறிவோடாகுபவர்கள் ஆனந்தமாகிறார்கள். ௯ அவன் குதிரையும் கதிரவனையு மளித்தான். வெகு பல உணவுள்ள பசுவையு மளித்தான்: பொன் மய போகத்தையு மளித்தான்:

அவன் தஸ்யுக்களைக் கொன்று ஆரிய வர்ணத்துக்கு உதவி செய்தான். ௧0 இந்திரன் ஒஷதிகளை அளித்தான்: தினங்களைத் தந்தான், வனஸ்பதிகளை யளித்தான், வானத்தையுங் கொடுத்தான். அவன் பலனைப் பிளந்தான், மாறு மொழிபவர்களைத் தூரத்தினான். அப்பால் எதிர்ப்பவர்களுக்குச் சாந்தமளித்தான். ௧௧ நாங்கள் சக்தி சேரும் இச் சமரில், சுக—மளிக்கும்—மகவானை இந்திரனை, வீரம் மிகுபவனை, செவி கொடுக்கும் உக்கிரனை, போரில் உதவிபுரியும் அவனை, விருத்திரர்களைக் கொன்று அவர்களது செல்வங்களை குவிக்கும் இந்திரனை அழைக்கிறோம். [௨0. ௧௧] கூ00 [வசிஷ்டன் அத்திரி—எ இந்திரன்] ௧ சுருதி விரும்பி பிரமங்களை ஓங்கிப் பிரேரியுங்கள்; வசிஷ்டனே! போரிலே இந்திரனைப் போற்று, பலத்தால் எல்லாப் பொருள்களிலும் பரவும், அவனை அநுசரிக்கும், நான் சொல்லும் மொழிகளை அவன் கேட்கிறான். ௨ இந்திரா! சமரிலே எங்களுக்கு சக்தியை யளிக்க கோஷம் செய்யப்பட்டது, முழக்கமான அக்கோஷம் தேவர்களில் சென்றது: மானிடர்களில் எவனும் அவனது ஆயுளை அறிவதில்லை. எங்களை அத் துன்பங்களினின்றும் கடத்திச் செல். ௩ பசுவளிக்கும் இரதத்தை குதிரைகளால் நான் சேர்க்கிறேன்: அங்கீகாரமாகும் பிரமங்கள் அவனைச் சேர்ந்துள்ளன: இந்திரன் நிகரற்ற விருத்திரர்களை வீழ்த்தியபோது, வானம் புவியைப் பிரித்துப் பிளந்தான். ௪ மலட்டுப் பசுக்கள் சலங்களை — அடைந்து — பெருகுவனபோல், இந்திரா, துதி செய்பவர்கள் உனது இதத்தை நாடினார்கள். வாயு தனது கூட்டத்தோடு வருவதுபோல் நீ எங்களிடம் வா: நீ செயல்களால் செல்வங்களை அளிக்கிறாய். ௫ திடனையும், துதிப்பவர்களுக்கு துரிதஞ்

செல்வ மளிப்பவனுமான இந்திரா உன்னை, இன்பமளிக்கும் சோமபானங்கள் இன்பஞ் செய்க: தேவர்களில் நீ ஒருவனே மானிடர்களுக்குத் தயைபுரிகிறாய்: இந்த யாகத்திலே, சூரனே எங்களை இன்பஞ் செய். சு வர்ஷிப்பவனும் வச்சிரஹஸ்தனுயுமுள்ள இந்திரனை, வசிஷ்டர்கள் துதிகளால் வாழ்த்துகிறார்கள்: பொற்றப்பட்டு அவன் எங்கள் பசு வீரர் செல்வங்களைப் பாலனஞ் செய்வானாக: தேவர்களே! சுவஸ்திகளோடு எங்களுக்கு சதா காலம் துணை செய்யுங்கள். எ இந்திரன், தூரிதன், வச்சிராயுதன், விருஷபன், வீழ்த்துபவன், வலியன் இராஜன் விருத்திரனழிப்பவன். சோம பானஞ் செய்பவன்: யுக்தமான அவனது குதிரைகளோடு அவன் இங்கு வருவானாக. இந்திரன் நடுப்பகல் யக்ஞத்தில் அவனை இன்பஞ் செய்வானாக. [உ0. கஉ] சுOக [வாமதேவர், கோதமன், குத்ஸ விசுவாமித்திரன்—இந்திரன் பிருஹஸ்பதி மருத்து அக்கினி] க பிரஹஸ்பதியே இந்திரனே, செல்வம் ஓங்கச் செய்பவர்களே இந்த யக்ஞத்திலே இன்பமாகி சோமனைப் பருகுங்கள். நன்கு பரவும் சோமன்கள் எங்களில் பிரவேசித்திடுக: எங்களுக்கு சர்வவீரத்தையும் செல்வத்தையும் அளியுங்கள் உ மருத்துக்களே! தூரிதமாய்ப் பாயும் புரவிகள் பறக்கும் பாதங்களோடு உங்களைச் சுமப்பார்களாக: உங்கள் கைகளோடு இங்கு வாருங்கள்: தருப்பையிலே யுட்காருங்கள்: விரியும் ஸ்தானம் உங்களுக்குச் செய்யப்பட்டுள்ளன: இனிய உணவிலே இன்பமாகுங்கள். ந துதிக்கருகனை ஜாதவேதசனுக்கு, எங்கள் மனத்தால் இரதத்தைப் போல் இந்த ஸ்தோமத்தைச் சாற்றுகிறோம்: இச்சபையில் எங்களுக்கு மங்களமும் மேலான அறிவுமாகுக: அக்கினியே! உங்கள் நட்பில் நாங்கள் துன்பமாகாம

ராவோமாக. ௪ அக்கினீ, இவர்களோடு ஒரு இரதத்தில் அல்லது பல இரதங்களிலே தேவர்களோடு எங்களை அணுகு: உனது வீரஸ்பவாம்போல் மூன்று முப்பது தேவர்களை அவர்களது மனைவிகளோடு கொண்டு வா! இன்பமாகுக. [௨0. ௧௩.] ௬0௨ [சௌம்னீ—இந்திரன்] ௧ புதியவனே! நாங்கள் உன்னை அழைக்கிறோம்: துணை நாடி திரமின்மை யடைந்துள்ள நாங்கள், யுத்தத்தில் அதிசயனான உன்னை வழுத்துகிறோம். ௨ சமரிலே இரட்சைக்கு உன்னை—நாடுகிறோம். இந்த எங்களது, இளைஞனான வீரன், உக்கிரன் வந்துள்ளான். இந்திரா உனது நண்பர்களான நாங்கள் நன்களிக்கும் உன்னை இரட்சகனைக வரித்துள்ளோம். ௩ நண்பர்களே! இச்செல்வத்தையும், அச்செல்வத்தையுமளிக்கும் பழைய இந்திரனை நான் உங்களுக்குத் துதி செய்கிறேன். ௪ அசுவங்களால் வகிக்கப்பட்டு வீரர்பதியான அவன் சனங்களை அரசுபுரிபவனுவான்: இம்மகவான் துதிசெய்பவர்களில் சதபசு புரவிகளை யளிக்கிறான். [௨0. ௧௪.] ௬0௩ [கோதமன்—இந்திரன்] ௧ மேலானவனுக்கு; மேன்மையானவனுக்கு, அதிசெல்வனுக்கு, சக்திமானுக்கு சத்தியபலனுக்கு வலியனுக்கு மனனத்தை சம்பாதிக்கிறேன்: சார்பிலாகும் சலத்தைப்போல் தடையில்லாத அவனது செல்வம் விசுவாயுசுக்கும் வலிமைக்கும் விரிந்துள்ளது. ௨ யக்ஞஞ் செய்பவர்களது அவியானது, கீழ்—நிலயங்களுக்கு—சலங்களைப்போல் உனது யாகத்துக்கு உன்னை யனுசரிக்கின்றது, சனங்களும் உன்னைத் தொடர்கிறார்கள்: காந்தி மயமாய் சத்துரு—கொல்லும் காஞ்சனமான இந்திரனது வச்சிராயுதம் மலையில் சாயுங்கால்—அதனை அனைத்தும் பற்றும். ௩ துதிக்கருகதையாய் திகைக்கச் செய்யும் உஷைபோலுள்ளவனை இந்த சுப

மான யக்ஞத்திலே சாதனத்துடன் பற்று: அவனது இந்திரியமும் சோதியும், நாமமும் சிறப்புக்கு துரிதமாய்ச் செல்ல குதிரைகளைப் போல் செய்யப்பட்டுள்ளன. ச இந்திரா வெகு பலர்களால் துதிக்கப்படும் உன்னை, திரவியஞ்சேரும் உன்னை ஆசிரயித்து அணுகுகிறோம்: மொழிக்கருகனான இந்திரா உன்னைத் தவிர வேறு எவனும் எங்களது மொழியை அணுகுவதில்லை; புவி பூமியிலுள்ளவற்றை விரும்புவதுபோல் நீ எங்களது இந்தவார்த்தையை விரும்பு. ரு இந்திரா! உனது வீரியம், ஓங்குகின்றது, நாங்கள் உன்னுடையவர்கள், மகவானே! துதி செய்பவனது இந்த விருப்பத்தைப் பூரணமாக்கு; பெரிய சோதி உன்னை அநுசரித்து அதன் வீரியத்தை அளந்துள்ளது; உனது வலிமைக்கு இவ்வையம் வணங்கியுள்ளது. கூ வச்சிரனான நீ இவ்வச்ராயுதத்தால் இப்பெரிய பரந்த மேகத்தைப் பிளந்துள்ளாய், தடைபட்ட சலங்களை பாய்ந்தோட நீ பொழிந்துள்ளாய்; நிசந்தான் நீயே விசுவமான பதத்தைத் தரிக்கிறாய். [உ0. கரு]

கூ0ச [அயாஸ்யன், பிருகஸ்பதி] க மேகஞ் சென்று தன்னையே பாலனஞ் செய்துகொள்ளும் பறவைகளைப் போல், முழக்கஞ்செய்யும் முகிலின் கோஷங்களைப்போல் மலையினின்று பாயும் இன்ப நதிகளைப்போல பிரகஸ்பதிக்கு எங்கள் துதிகள் தொனித்துள்ளன. உ ஆங்கிரஸன் பகனைப்போல் பரந்து எங்களுக்கு அரிய மணத்தைக் கொண்டு வந்தான். மானிடர்களின் நண்பனைப் போல் அவன் தம்பதிகளை அலங்காரஞ் செய்கிறான்; பிரகஸ்பதியே! சமர்களில் குதிரைகளைப்போல் அவர்களைச் சக்தியுடனாக்கு. ந பிரகஸ்பதி மலைகளினின்று பசுக்களைப் புறத்திலாக்கி திரப்பொருள்களைப்பற்ற யவத்தைப்போல ஸ்தாபித்தான்: அப்பசுக்கள் சிறந்தும் சக்

தியுமுள்ளவை, அதிதிகளைப்போல் துணை சேர்ப்பவை, சகல சனங்களும் விரும்பப்படும் சுவர்ணங்கள், அதிந்தித ரூபங்கள். ௪ ருதமூலத்தை சூரியன் தேனால் நனைத்து, சோதியினின்று சுவாலையை வீழ்த்துவதுபோல பிரகஸ்பதி மலையினின்று பசுக்களை இறக்கினான், அவன் புவியின் சர்மத்தை சலத்தினால் போல் பிளந்தான். ௫ காற்று சலமலரைத் தகர்ப்பதுபோல் சோதியால் வானத்தினின்று தமஸை நீக்கினான். மேகத்தை வாதன் போல், பிரகஸ்பதி பலனை சின்னாபின்னஞ் செய்து பசுக்களைப் புலனாக்கினான். ௬ பற்கள் அரைத்த—புசிப்புக்களை—நாங்கள் விழுங்குவதுபோல், இம்சிக்கும் பலனுடைய ஆயுதத்தை அனல் சுவாலை சுடர்களால் சேதித்து, அவனை பிரகஸ்பதி புசித்து விட்டான்; அவன் அருணப் பசுக்களின் பந்தங்களை விடுவித்தான். ௭ பிரஹஸ்பதி நிலயத்தில் கோஷிக்கும் கோக்களின் நாமத்தை அறிந்தான். அவன் மலையினின்று ஒளிவீசும் பசுவை, முட்டை வெடித்தவுடன் பறவை தன் குஞ்சை—எழுப்புவதுபோல்—பற்றினான். ௮ அற்ப சலத்திலே மீனை ஒருவன் காண்பதுபோல் மலைகவர்ந்துள்ள இனிமையை அவன் சுற்றும் நோக்கினான், பிரகஸ்பதி விவித முழக்கங்களைப் பிளந்து, கட்டையினின்று கலசத்தைப் போல் அதனைக் கொண்டுவந்தான். ௯ அவன் உஷையைக் கண்டான், அவன் சோதியை, அக்கினியை—க் கண்டான், அவன் அரக்கனால் இருள்களை அகற்றினான். பிரகஸ்பதி கோரூபமான பலனுடைய மச்சையை—இரசத்தைந்—என்பினின்று ஒருவன் கிரகிப்பதுபோல் கிரகித்தான். ௧௦ பனியால் நஷ்டமான சுந்தர—செடி கொடிகளின்—இலைபோல், பிரகஸ்பதியால் பசுக்கள் பற்றப்பட்டு, பலன் இழந்தான், நிகரில்லாத இதுவரைச்

செய்யாத வேலையை அவன் செய்தான். அதனால் சூரியனுஞ் சந்திரனுஞ் சேர்ந்து பரஸ்பரம்—உயரம் ஏறுகிறார்கள். கக பொன்னால் அலங்காரமான கரும் புரவிபோல் பிதுருக்கள் சோதியை நட்சத்திரங்களால் பாங்கு செய்தார்கள்; அவர்கள் இரவிலே இருளையும் தினத்திலே சோதியையும் செய்தார்கள். பிரகஸ்பதி மலையைப் பிளந்தான், பசுக்களைக் கண்டான். கஉ தொடர்ந்து வெகு முழக்கஞ் செய்யும் மேகாருகமான பிரகஸ்பதிக்கு நாங்கள் இந்த வணக்க மளித்துள்ளோம், அவன் எங்களுக்கு பசுக்களுடன் குதிரைகளோடு வீரர்களுடன் வலிமையை யளிப்பானாக. [உ0—கசு] சு0ரு [கிருஷ்ணன் வசிஷ்டன்] க சுவர்க்கச் சோதி காணும் எனது ஆர்வமான எல்லா மந்திரங்களும் நன்கு சேர்ந்து இந்திரனைத் துதிக்கின்றன; சுந்தர மானிடனை பதியை மனைவி தழுவிக்கொள்வதுபோல், மகவானது காப்புக்கு அவனை சூழ்கிறார்கள். உ அதிக மழைக்கப்படுபவனே உன்னை அநுசரித்து என் மனம் தயங்குவதில்லை; ஏனெனில் எனது விருப்பங்களை யெல்லாம் உன்னில் சாய்த்துள்ளேன். அதிசயனே! நீ தருப்பையில் அரசனைப்போல் உட்கார், சோமனருகே உனது பான நிலயமாகுக. ந இந்திரன் பசியினின்றும் ஏழ்மையினின்றும் நீக்குகிறான்; மகவான் செல்வத்தை அரசுபுரிகிறான், கீழே பிரவாஹமாகும் இந்த ஏழு நதிகள் வலிமைமிகும் விருஷபனுடைய வலிமையை வளர்க்கின்றன. ச சுந்தர இலைகளுள்ள மரங்களில் பறவைகள் சாய்வனபோல பாண்டங்களிலுள்ள இன்பமளிக்கும் சோமபானம் இந்திரனுக்குப் பாய்கின்றன: திடத்தால் ஒளி வீசும் இவர்களது முகம் மானிடனுக்கு சிறந்த சோதியைக் கண்டன. ரு ஆட்டத்தில் சூதாடுபவன் ஜயங்களை ஜயிப்பதுபோல் மக

வான் எல்லா இருளையும் தகர்த்து—சூரியனை வென்றான், மகவானே! உனது வீரத்தை இப்போதோ புராதனத்திலோ ஒருவனும் சித்தஞ்செய்யவில்லை. ௬ மகவான் ஒவ்வொரு மானிடனுக்கும் வந்தான். விருஷன் சனங்களின் துதிகளைச் செவியுற்றான்: எவனது இன்பங்களில் சக்திமிகுந்த சோமங்களால் சக்கரன் இன்பமாகிறானே அவனது பகைவர்களை யெல்லாம் அவன் அழிக்கிறான். ௭ சலங்களின் நதிக்குப்போல், நதிகள் ஏரிக்குப்போல் சோமன்கள் இந்திரனுக்குப் பாய்கின்றன. திவ்ய துளியான மழையால் தானியம் விருத்தியாவதுபோல், யக்ஞஸ்தானத்தில், அறிஞர்கள் அவனது மேன்மையை வளர்க்கிறார்கள். ௮ அருக பதிகளுக்கு இந்த சலங்களை மனைவிகளாகச் செய்தவன் கோப காளையைப்போல் உலகத்தில் குதித்தோடுகிறான். இந்த மகவான், சோமன் பொழிந்து துரிதமளித்து அவியுள்ளவ மானிடனுக்கு சோதியையளித்தான். ௯ சோதியுடன் இந்திரனது வச்சிராயுதம் உச்சமாகுக. புராதனத்தைப்போல் ருதத்தின் நற்கறப்பும் கலந்து ஓங்குக. அருணனும் தூய்மையாகி சோதியால் ஒளி வீசுவானாக: வீரர்பதியும் மின்னலின் நிர்மல சோதிபோல் வயங்குவானாக. ௧௦ அதிகமழைக்கப்படுபவனே! நாங்கள் பசியை சிறுமையைப் அறிவின்மையைப் பசுக்களால் தானியத்தால் தாண்டுவோமாக; நாங்கள் முதல்வர்களாய், மன்னர்களோடு எங்கள் முயற்சியால் செல்வங்களை ஜயிப்போமாக. ௧௧ பிரகஸ்பதி எங்களை பின்புறம், மேற்புறம் கீழ்புரத்தினின்றும், பிழையினின்றும் காப்பானாக: முன்புறத்தினின்றும், நடுவினின்றும் நண்பர்களுக்கு நண்பன்போல் இந்திரன் எங்களுக்கு செல்வங்களை அளிப்பானாக. ௧௨ இந்திரா! பிரகஸ்பதீ! புவியிலே சோதியிலே நீங்கள் இருவர்களும்

செல்வபதிகள்; துதி செய்பவனுக்கு அறிஞனுக்கு செல்வத்தை அளியுங்கள். தேவர்களே! சுவஸ்திகளோடு எங்களை எப்போதும் காப்பீர்களாக. [உ0—கஎ] சுOசு [காண்வன், மேதாதிதி, ஆங்கிரஸன், பிரியமேதன் க—ங. வசிஷ்டன்] ச—சு. க இந்திரா! இந்தப் பயன்களை விரும்பி உனது நண்பர்களாயுள்ளோம்: கண்வர்கள் துதிகளோடு உன்னைத் துதிக்கிறார்கள். உ வச்சிராயுதனே! செயலினாரம்பத்தில் நான் வேறு எவனையும் துதி செய்தேனில்லை: உனது ஸ்தோமத்தையே நான் அறிந்தேன். ங தேவர்கள் சோமனைப் பொழிபவனையே விரும்புகிறார்கள். அவர்கள் உறக்கத்துக்கு விருப்பம் வைப்பதில்லை. ஆலஸ்யமற்றவர்கள் ஆனந்தத்தை அடைகிறார்கள். ச வீரனான இந்திரா! விரும்புபவர்களாய் உன்னை சதாகாலம் துதிசெய்கிறோம். வசுவே! நீ எங்களது ஸ்துதியை அறி. ரு எங்களை நீசர்களது வசஞ்செய்யாதே. கருமியினாதீனத்தி லாக்காதே; உன்னிலேயே எனது சங்கற்பம். சு விருத்திர சம்ஹாரனே! நீ முன் செல்லும் வீரன், நீ எனது அதிவிசாலமான கவசன்: நண்பனான உன்னோடு நான் எதிரியை எதிர்க்கிறேன். [உ0—கஅ] சுOஎ [விசுவாமித்திரன்—இந்திரன்] க இந்திரா, பகையழி பலத்துக்கும், போரில் ஜயிக்கும் சக்திக்கும், நாங்கள் உன்னை நாடுகிறோம். உ இந்திரா சதபல முள்ளவனே! இங்கு உன்னைப் போற்றுபவர்கள், உன் மனத்தையும் கண்ணையும் திருப்புவார்களாக. ங இந்திரனே, சதக்கிருதுவே! சத்துருக்களை ஜயிப்பதற்காக உன் நாமங்களை எல்லா மொழிகளோடும் அழைக்கிறோம். ச நாங்கள் வெகுபலர்களால் அழைக்கப்படும் இந்திரனுடைய நூறு வலிமைகளால் நரர் தரிப்பவனைத் துதிக்கிறோம். அ விருத்திரனை வீழ்த்துவதற்கும் களங்களிலே

செல்வம் பற்றுவதற்கும் வெகுபலர் அழைக்கும் இந்திரனை நான் போற்றுகிறேன். ௬ இந்திரா பகைவர்கள் பாழாக சதபலமுள்ள உன்னை நாங்கள் நாடுகிறோம். நீ சமர்களில் ஜயமுடனுவாயாக. எ பகைவர்களின் பெரிய போர்களிலே சமர்ஜயிக்கும் சிறப்புக்களிலே நீ சத்ருக்களை..............................ஜயிப்பவனுவாயாக! [உ0—௧௬]

௬0அ [விசுவாமித்திரன்—௧—௪. கிருத்ஸமதன். ௫—எ. இந்திரன்] ௧ இந்திரனே! நூறு பலமுள்ளவனே! எங்களுக்குத் துணைபுரிய நீ பலம் மிகும் விழிப்போங்கும் சோமனைப் பாலனஞ்செய். உ சதபலமுள்ளவனே! இந்திரனே! பஞ்ச இந்திரியங்களின் நடுவே நீ புலனுக்கும் ஆண்மைகளை யெல்லாம் நான் கிரகிக்கிறேன். ௩ இந்திரா நீ பெரிய புகழை அடைந்துள்ளாய்: ஒருவரும் தடுக்க முடியாத திவ்யத்தை நீ பற்று. நாங்கள் உனது திண்மையைத் திரஞ்செய்கிறோம். ௪ சக்கரனே! நீ தூரத்தினின்றோ—அருகிலின்றோ எங்கள் பக்கம் வா: வச்சிராயுதந் தரிப்பவனே! இந்திரனே! நீ எங்கிருந்தாலும் எந்த உலகத்திலிருந்தாலும் அங்கிருந்து வா. ௫ இந்திரன் அனைத்தையுஞ் ஜயித்து மேலான பயத்தை தூரத்துகிறான்: அவன் தீரன், துரிதஞ்செய்பவன். ௬ இந்திரா எங்களுக்கு நீ சுகஞ்செய். இனி குற்றம் எங்களை அணுகாமலாகுக: எங்கள் முன் எப்போதும் மங்களமாகுக. எ நன்கு கண்டு சத்ரு ஜயிக்கும் இந்திரன் எல்லாத்திசையினின்றும் அபயம் செய்வானுக. [உ0. உ0.]

௬0௧ [சக்ய ஆங்கிரஸன்—இந்திரன்] ௧ நாங்கள் சுந்தர மொழியை மேலானவனுக் களிப்போம்: விவஸ்வந்தின் நிலயத்திலே இந்திரனுக்கு எங்கள் மொழியை—உரைப்போம்: தூங்குபவர்களில் அவன் தனத்தை அளிப்பதில்லை: தனமளிப்பவர்கள் துஸ்துதிக்கு—அருகரில்லை.

உ இந்திரா நீ குதிரை யளிப்பவன், பசுவளிப்பவன், யவ மளிப்பவன்: நீ தனமளிப்பவன் தனங்காப்பவன்: பழைய காலத்தினின்று நீ மனிதர் காப்பவன், காமம் வளர்ப்பவன், நண்பர்களின் நண்பன்: இத்தகைய உனக்கு நாங்கள் இந்த மொழிகளை துதிக்கிறோம். ௩ இந்திரா, சக்தி மிகுபவன் நீ; வெகு பல செய்யும் அதி பொருளுமுள்ளவன்; உன்னைச் சுற்றியுள்ள ஐசுவரியம் உனது என அனைவரும் அறிந்தது: ஜயிப்பவனே! செல்வத்தைக் குவித்து எங்களுக்குக் கொண்டு வா: உன்னை விரும்பி கானஞ் செய்பவனது ஆசையை அபூரணஞ் செய்யாதே. ச இந்த சுவாலைகளோடு இந்த சோமதுளிகளோடு, சுமனஸுள்ளவனாகி, பசு—புரவியிலே வறுமையை நீக்கு: இந்த சோமத் திவலைகளோடு தஸ்யுவைச் சிதறடிக்கும் இந்திரனால் நாங்கள் வெறுப்பு விலகி ஒங்கும் உணவை அடையலாமோ. ரு இந்திரா! அதிசெல்வத்தையும் உணவையும், வெகு பலர்களை இன்பஞ் செய்யும் அதி ஒளி வீசும் ஆண்மைகளோடு நாங்கள் பற்றுவோமாக: நாங்கள் மதிரூபமான தேவியை, வீரர்களின் வலிமையை, பசுமூலத்தை பெருகும் புரவிகளை, பற்றலாமோ! சு வீரர்பதியே, இந்த மதரசங்கள், பலமளிக்கும் சோம பானங்கள் விருத்திரனோடு சமர்புரியுங்கால் உன்னை இன்பஞ்செய்தன: தருப்பையோடு துதிசெய்வோனுக்கு, தடைபடா பலமுள்ள நீ பதினாயிர விருத்திரர்களை வீழ்த்துங்கால்—இந்த சோமபானங்கள் பாய்ந்தன. எ நீ வீரத்தோடு உனது ஆயுதத்தால்—எதிரியானை—யுதத்தைப் பற்றுகிறாய்; பலத்தால் இங்கு அவர்களது ஒவ்வொரு கோட்டையையும் தகர்க்கிறாய்: பகைவனது வில்லை வீழ்த்தும் உனது நண்பனோடு இந்திரா, வெகு தூரத்திலேயே மாயாவியான நமூசியை மாய்க்கிறாய்.

அ அதிக்வனது வழியிலான காஞ்சனையும், பர்ணயனையும் நீ பலத்தால் பாழ்செய்துள்ளாய்; ரிஜூஸ்வனால் சூழ்ந்துள்ள சத்துருக்களைச்—சிதைத்து வங்கிருதனது நூறு புரங்களை நீ அழித்துள்ளாய். கூ இந்திரா, சுற்றமற்ற சுசிரவஸர்களோடு சமர்புரியும், கூ௦,௦கூகூ ஆட்களோடுள்ள உ௦ சனமன்னர்களை சகிக்கமுடியாத இரதச் சக்கரத்தால், அதிபுகழுள்ள நீ முறியடித்துள்ளாய். க௦ நீ சுச்சிரவஸனுக்கு துணைகளோடு உதவி செய்தாய்; இந்திரா தூர்வயாணனை உதவியுடன் காப்புச் செய்தாய்; நீ குத்ஸனை, அதிதிக்வனை, ஆயுவை, இந்த இளைஞனை வதிய இராஜனது ஆக்ஞையில் செய்தாய். கக இந்திரா! நாங்கள் தேவர்களால் பாலனமாகி உனது, மங்களம் மிகும் நண்பர்களாக வேண்டும்; உன்னால் சுவீரர்களாய், நீண்டுபெருகும் ஆயுளை தரிப்பவர்களாகி, உன்னை நாங்கள் துதிசெய்கிறோம் [உ௦. உக.]

கூக௦ [திரிசோக கண்வன் க—ங பிரியமேத கண்வன்—ச—கூ] க விருஷபா, பிழியுங்கால் சோமனை, நீ பருக. நான் மொழிகிறேன்: இனியதில் இன்பமாகி அநுபவி. உ பரிகாசஞ் செய்பவர்களும், புத்தி சூனியர்களும், பாலனம் விரும்புங்கால் உன்னை ஏமாற்றுமலிருப்பார்களாக: பிரமத்து வேஷிகளை விரும்பாதே. ங அவர்கள் பால்மிகும் பொருளால், மேலான செல்வத்துக்கு உன்னை இன்பஞ் செய்வார்களாக. வனமிருகம் ஏரியின் சலத்தைப் பருகுவதுபோல் பருகு. ச அவன் அறியும் வண்ணம் கோபதியான இந்திரனைப் போற்று. அவன் சத்தியமகன் வீரர் தலைவன். ரு நாங்கள் ஒன்று சேர்ந்து துதி செய்யும் ஸ்தானத்திலே அவனது குதிரைகள் ஒன்று சேர்ந்துள்ளன—பொன் புரவிகள் தருப்பையில் உள்ளன. கூ அருகிலுள்ள சோமனை இந்திரன் கண்

டான். வச்சிராயுதனை அவனுக்கு பசுக்கள் பாலையும் தேனையுங் கறந்தன. [௨0. ௨௨.] ௬௧௧ [விசுவாமித்திரன்—இந்திரன்] ௧ சோமபானத்துக்கு அழைக்கப்படும் வச்சிராயுதனை நீ உன் குதிரைகளோடு இந்திரா! என்னை நோக்கி வா. ௨ எங்கள் ரித்விக்கு ஹோதாவைப் போல் உட்கார்ந்துள்ளான். தருப்பை நன்கு சேர்ந்து விரிக்கப்பட்டுள்ளது. காலையில் சோமன்பொழி சாதனங்கள் ஒன்று சேர்ந்துள்ளன. ௩ பிரமத்தை வகிப்பவனே! இந்த பிரமங்கள் செய்யப்பட்டுள்ளன. நீ தருப்பையிலுட்கார். சூரனே! புறத்திலாகும் செல்வத்தை அநுபவி. ௪ விருத்திரனழிப்பவனே, மொழி விரும்பும் இந்திரனே, எங்கள் கானங்களோடு, இந்த யக்ஞங்களிலே, இந்த ஸ்தோமங்களிலே நீ இன்பமாகவும். ௫ எங்கள் நினைவுகள், சோமன் பருகும் பரந்தவனை, பலமுள்ள பதியான இந்திரனை பாலனை அன்னைபோல் சுவைக்கின்றன. ௬ மேலான செல்வத்துக்கு நாங்கள் பொழியும் சோமனிலே உன்காயத்தால் நீ களிப்புடனேங்கு. துதி செய்பவனை நிந்தனையில் சாய்க்காதே. ௭ இந்திரா உன்னை விரும்பும் நாங்கள் அவி வகித்து உனக்குத் தோத்திரஞ்செய்கிறோம், வசுவே! நீ எங்களைப் பிரியமுடன் நேசிக்கிறாய். ௮ பிரிய குதிரைகளுள்ளவனே, எங்களினின்றும் உங்கள் குதிரைகளை தூரமாக்காதே. சுவதாவான இந்திரா நீ இங்கு இன்பமாகவும். ௯ இந்திரா உன்னைத் தருப்பையிலே வீற்ற, சுகமான இரதத்தில் நெய் பொழியும் கேசமுள்ள துரகங்கள் உன்னை இங்கு வகிக்காதோ. [௨0. ௨௩.] ௬௧௨ [விசுவாமித்திரன்—இந்திரன்] ௧ இந்திரா பொழிந்த இரசத்துக்கு வா, பாலுடன் சேரும் சோமனுக்கு வா, உன் குதிரைகளோடு எங்களை நோக்கி வா. ௨ இந்திரா சாதனங்

களால் பொழியப்பட்டு தருப்பையிலே வைக்கப்பட்டுள்ள மதமளிக்கும் இப்பானத்துக்கு வா. பூரணமாய் அதனை நீ பருகு, ௩ இந்திரன் சோமபானத்துக்குத் திரும்ப இங்கு பிரேரிதமாகி அவனுக்கு என் சொற்கள் சென்றுள்ளன. ௪ இந்திரன் சோமனைப் பருக, நாங்கள் அவனை ஸ்தோமங்களால் அழைக்கிறோம். எங்கள் துதிகளுக்கு அவன் அடிக்கடி வருவானாகை. ௫ இந்திரா இந்த சோமன்கள் பொழியப்பட்டுள்ளன. சத பலமுள்ளவனே, சக்தி பெருகுபவனே அவற்றை உன் குடலிற் தரி. ௬ கவியே, சமர்சகித்து செல்வஞ் ஜயிக்கும் உன்னை நாங்கள் அறிகிறோம். ஆகையான் உன் சுமனத்தை நாங்கள் நாடுகிறோம். ௭ நாங்கள் பொழிந்து யவம் பால் சேரும் இந்த சோமனை, விருஷபங்களோடு வந்து நீ பருகு. ௮ இந்திரா உனது நிலயத்திலேயே நீ பருக நான் சோமனைப் பிரேரிதஞ்செய்கிறேன். உனது இருதயத்தில் அது இன்பமளித்திடுக. ௯ குசிகர்களான நாங்கள் உன் உதவிநாடும் நாங்கள் பழைய இந்திரனும் உன்னை சோமபானம் பருக அழைக்கிறோம். [உ௦. உ௪.]

சுக௩ [கோதமன் இராஹூகணன் க—சு அஷ்டகன் வைசுவாமித்திரன்] க இந்திரா! மானிடன் உன் காப்புக்களால் நன்கு காக்கப்பட்டு பசு புரவிச் செல்வங்களில் பொங்கிப் பெருகுகிறான்: விசேஷ பொலிவுள்ள சலங்கள் சிந்துவைப் பூரணஞ் செய்வனபோல், நீ அவனை அதி செல்வத்திலே நிரப்புகிறாய். உ திவ்ய சலங்கள் யக்ஞாருகமான உன்னைச் சேர்கின்றன. சோதியைப்போல் உனது விரியும் சக்தியை—சனங்கள்—காண்கிறார்கள். திவ்யன் தேவர் விரும்பும் உன்னை உச்ச நிலையில் சேர்க்கிறான். மணப் பெண் பிள்ளைகளில் போல் அவர்கள் அவனில் இன்பமாகிறார்கள். ௩ யக்ஞ சாதனங்களோடு

உன்னைப் போற்றும் தம்பதிகளுக்கு போற்றுவதற்குரிய ஆசியை நீ செய்துள்ளாய். அவன் தடையற்று வாழ்ந்து உனது விரதத்தில் புஷ்டியாகிறான். உனது வலிமை யஜமானனுக்கு மங்களத்தைப் பொழிகின்றது. ச சமியால் சுவாலையாகும் அக்கினியும் நற்செயலுமுள்ள அங்கிரசர்களும் ஆண்மையை முதல் தரித்தார்கள். நரர்கள், பணியின் சர்வமான போஜனத்தையும், பசு புரவிச் செல்வத்தையும் பற்றினார்கள். ரு அதர்வன் யக்ஞங்களால் வழிகளை முதல் விரித்தான். அப்பால் சூரியன் விரத பாலகனான வேனனை விளங்கச்செய்தான். பிறகு உசனகாவ்யன் பசுக்களை இங்கு அவனுடன் துரத்தினான். நாங்கள் யமனது சனன அமுதத்தை சாற்றுவோமாக. சு தருப்பை திடத்துக்குத் திகழுங்கால், அறிஞன் சோதிக்குச் சொல்லை இசைக்குங்கால், செயல் செய்யும் அறிஞரான சாதகன் சொல்லுங்கால்—இவை அனைத்தும் செல்லுங்கால் இந்திரன் இன்பமாகிறான். எ ஹரி அசுவமுள்ளவனே, விருஷணனே, நீ துரிதம் வா, சத்தியமாயும் சக்தியமாயுமுள்ள சோமனைத் தூண்டுகிறேன். இந்திரனே சர்வமான நினைவுகளாலும் செயலாலும் துதிக்கப்படுங்கால் எங்கள் கோஷங்களில் களிப்புடனாகவும்.

[உ0. உரு] சுகச [சுனச்சேபன் க—ரு. மதுச்சந்தன் ச—சு—இந்திரன்] க ஒவ்வொரு சமரிலும், ஒவ்வொரு செயலிலும் நண்பர்களான நாங்கள் காப்புடனாக அதிசய சக்தியுள்ள இந்திரனை அழைக்கிறோம். உ எங்கள் அழைப்பை அவன் செவி கொடுப்பானானால் ஆயிரம் திடம், துணைகளோடு வருவானாக. ரு ஆதியில் எனது பிதா உன்னை அழைத்ததுபோல், பழைய நிலய வீரனையும் அதி சமர்த்தனையுமுள்ள உன்னை அழைக்கிறேன். ச அறிஞர், பந்தஞ் செய்பவனையும் பிரகாசனையும், நிலைப்பொருள்

களில் சலனம் செய்பவனுயு முள்ளவனை இணைக்கிறார்கள். ஒளிக்கதிர்கள் சோதியிலே ஒளி வீசுகின்றன. ரு வீரர் களாயும் சிகப்பர்களாயும் தலைவனை சுமப்பவர்களுமான, அவனுக்குப் பிரியமான இரு குதிரைகளை இரதத்தின் இரு பக்கங்களிலே சேர்க்கிறார்கள். ௬ மானிடர்களே, அறிவின்மையில் அறிவைச் செய்பவர்களாய், உருவ மின்மைக்கு உருவமளிப்பவனாய், உஷைகளுடன் ஒன்று உதயமாகிறீர்கள். [௨0. ௨௬] ௬௧ரு [கோஷ—க்க அசுவ சூக்தினௌ] ௧ இந்திரா நான் உன்னைப் போல் எல்லா செல்வத்துக்கும் ஒரு தலைவனாயிருந் தால், என்னைப் போற்றுபவன் பசுச்செல்வ முள்ளவ னுவான். ௨ சக்திபதியே! நான் கோபதியா யிருந்தால், இம் மானிடனுக்குச் செல்வமளிப்பேன், செல்வமளிப் பவனாகச் செய்வேன். ௩ இந்திரா, பொழியும் யஜமான னுக்கு நன்மை யோங்கும் உனது பசு, பசுச் செல்வத்தை புரவிப் பொருளைக் கறக்கின்றது. ௪ இந்திரா. துதி யாகி, நீ அளிக்கும் மேலான திரவியத்தைத் தடுக்க மனிதராலும் தேவராலும் இயலாது. ரு அவன் புவியை சுவாதீனஞ் செய்து சோதியிலே மூல நிலய னுகுங்கால், யக்ஞம் இந்திரனை வளர்த்தது. ௬ இந் திரா! சமஸ்த செல்வங்களை ஜயித்துச் செழுமையான உனது உதவியை நாங்கள் நாடுகிறோம். [௨0. ௨௭] ௬௧௬ [கோஷ—க்த அசுவ சூக்தினௌ—இந்திரன்] ௧ இந்திரன் சோமனது மதத்திலே வலனைப் பிளந்து வுடன் ஒளிமய வானத்தை விசாலஞ் செய்தான். ௨ அவன் மறைப் பொருளை புலன் செய்து அங்கிரசர் களுக்குப் பசுவைக் கொண்டு வந்தான்: வலனைத் தலைகீழ் தள்ளினுன். ௩ இந்திரனுல் சோதி மண்டலங்கள் திர மாய் திடஞ்செய்யப்பட்டுள்ளன. அசைக்க முடியாமல்

அவை திரஞ்செய்யப்பட்டுள்ளன. ச இந்திரா, ஸ்தோமம் சலநிதியின் இனிய அலைபோல் எழுகின்றன: உனது இனிய பானங்கள் விளங்குகின்றன. [உ0. உஅ.] சுகஎ [கோஷுக்த அசுவ சூக்திநௌ—இந்திரன்] க இந்திரா நீ ஸ்தோமங்களாலும் துதிகளாலும் வளர்பவன்: துதி செய்பவர்களுக்கு மங்களத்தைச் செய்கிறாய். உ கேசங்களுள்ள குதிரைகள் நற்செல்வமுள்ள இந்திரனை சோமபானம் பருக யக்ஞத்துக்கு வகித்து வருகின்றன. ந எதிர்க்கும் எல்லா சேனைகளையுஞ் ஜயித்து இந்திரா நீ சலங்களின் நுரையால் நமூசியின் சிரத்தைக் கொய்தாய். ச மாயைகளால் சோதிக்கு ஏற விரும்பும் தஸ்யுக்களை இந்திரா நீ தலை கீழ்த் தள்ளுகிறாய். ரு எல்லாம் ஜயிக்கும் சோமபானஞ் செய்பவனாய், உனக்கு சோமன் பொழியாதவர் கூட்டத்தை நீ எங்குஞ் சின்னபின்னஞ்செய்கிறாய். [உ0. உக.] சுகஅ [வரு ஸர்வ ஹரிர்வா—இந்திரன்] க. பெரிய சமரில் நான் உனது இரு குதிரைகளைப்போற்றுவேன்: எதிரி நாசஞ்செய்யும் உனது சுந்தரமான இன்பத்தை நான் இசைக்கிறேன்: இந்திரன் நெய்யைப்போல், தாரகங்களால் சுந்தரமான—திரவியத்தை—வர்ஷிக்கிறான். பொன் வடிவமுள்ள உன்னில் என் மொழிகள் நுழைந்திடுக. உ திவ்ய நிலயத்துக்குச் செல்லும் பொன் பரிகள் போல் பூர்வ ரிஷிபொன்மய மூலனுக்கு கானஞ்செய்வது போல், பசுக்களால் புரவிகளால் எந்த இந்திரனுக்குப் பூரணஞ்செய்கிறார்களோ அந்த இந்திரனுக்கு தாரகந்தோயும் திடத்தை விருத்தி செய். ந அவனது வச்சிராயுதம் இரும்பினால்—செய்யப்பட்டது. பொன் மயம்பொன் நிறம். அவன் சுந்தரன் அவன் ஹரி. பொன் கையுள்ளவன். சுந்தரமுகன், சோதி வீசுபவன். செங்கோபத்தால் சம்ஹாரஞ்செய்பவன்

பொன் வடிவங்களான அனைத்தும் அவனில் ஸ்தாபனமாயுள்ளன. ௪ சோதியிலே வைக்கப்பட்டுள்ள சுந்தர துஜம் போல், பொன்மய வச்சிராயுதம் அதிதுரிதமாய் விரிந்துள்ளது; பொன் வாயுள்ள அந்த இரும்பாயுதம் அஹியை சாய்த்துள்ளது. பொன் குதிரை புஷ்டி செய்பவன் ஆயிரஞ் சுவாலைகளுள்ளவன். ௫ பொன் கேசமுள்ள இந்திரனே: பூர்வ யக்ஞஞ் செய்பவர்களால் நீ துதிக்கப்படுங்கால் அவர்கள் கானங்களில் நீ இன்பமானாய்: பொன் பிறந்தவனே! அருகதையான துதிமொழியை நீ விரும்புகிறாய். இனிய பூரணமான செல்வம் உன்னுடையது. [௨௦. ௩௦] ௬௩௧ [வருசர்வ ஹரிர்வா இந்திரன்—ஹரிஸ்துதி] ௧ இந்த—இரண்டு சுந்தர குதிரைகள், வச்சிரஹஸ்தனையும், இன்பமுள்ளவனையும் துதிக்கருகனுமான இந்திரனை இரதத்திலே ஆனந்தத்துக்கு இங்கு தரித்து வருகின்றன: இந்த இனியனையுள்ள இந்திரனுக்கு வெகு பல தாரைகள் பாய்கின்றன: அவனுக்கு சொர்ண சோம இரசங்கள் பொழிகின்றன. ௨ பொன்மய இரசங்கள் அவனது விருப்பம் பூரணமாகப் பாய்ந்துள்ளன; இரணிய துளிகள் திரனுக்குத் துரித அசுவங்களை பிரேரணை செய்துள்ளன; எவன் குதிரைகளோடும் வீரர்களுடனும் யக்ஞத்தை அணுகுகிறானோ அவனே இந்திரன்: அவன் திடஞ்சேரும் விருப்பத்தைப் புசிக்கிறான். ௩ துரித சோமயாகத்தில் தங்கக்கேசம் தங்கத்தாடியுள்ள அயமயன் வளர்ந்தான்; வலிய செல்வமுள்ள அவன் வேகவாசிகளால் வன்மையால் எல்லாத் துன்பங்களையுங் கடந்து செல்வான். ௪ அவனது சுந்தரமான குதிரைகள் சமருக்கு யக்ஞ சாதனங்களைப்போல் பறந்தோடுகின்றன. அவன் துரித குதிரைகளை முன் செல்லச் செய்கிறான்: சாதனப் பாண்

டத்திலே இனிய சுந்தரமான இரஸத்தைப் பருகியதும் அவன் துரகங்களைத் தூய்மை செய்கிறான். ௫ சமருக்கு அசுவத்தைப் போல, குதிரையுள்ளவன் இந்திரனது வானம் புவியின் நிலயத்துக்குச்சென்றுள்ளான்; மேலான எண்ணம் மேன்மையானவனை வலிமையால்வகித்துள்ளது: அவன் மேலானவன்மையை அளித்துள்ளான். [௨௦—௩௧]

௬௨௦ [வருசர்வ ஹரிர்வா—ஹரி] ௧ இந்திரனே! வானத்தையும் வையத்தையும் உனது வன்மையில் நிரப்பி நவநவமாயும் பிரியமாயுமுள்ள மனனத்தை மலரச் செய்கிறாய். அசுரனே! சொர்ணமான சூரியனுக்கு பசுவின் சுந்தரமான நிலயத்தைப் புலனாக்கு. ௨ இந்திரா! சனங்களின் நடுவேயுள்ள ஒன்றுசேரும்—பெரியார்கள்-பொற்புடன் பொன்மயமாகும் உன்னை உனது இரதத்திலே வகிப்பார்களாக. பத்து விரல்கள் முயற்சிக்கும் யக்ஞத்தில் இன்பமாகி வைபவத்திலே நாங்கள் அளிக்கும் சோமனைப் பருகு. ௩ துரகம் தோய்பவனே பூருவம் பொழியும் சோமனை நீ பருகுகிறாய்; இந்த யக்ஞம் உனது. உன்னுடையதுதான்; இனிமை மிகும் சோமனோடு உன்னை இன்பஞ் செய்கிறோம். விருஷனனே! உன்னகத்திலே அதனைப் பொழிந்துகொள். [௨௦—௩௨]

௬௨௧ [அஷ்டகோ—வைசுவாமித்திரன்] ௧ அசுவமுள்ளவனே! சலங்களிலே மானிடர் கலந்துள்ள சொமனைப் பருகி இங்கு உனது வயிற்றைப் பூரணஞ் செய்துகொள். தோத்திரம் செவியுறுபவனே; இந்திரனே உனக்கு சாதனங்கள் சேர்ந்துள்ள சோமன்களால் இன்பமாகி வளர்ந்தோங்கு. ௨ துரித குதிரையுள்ளவனே! விருஷனனை உனக்கு நீ சலனமாக உக்கிரமாயும் உண்மையாயுமுள்ள சோமனை பிரேரிக்கிறேன். இந்திரா சத்தியோடு சொற்களோடு சர்வங்களோடு சாற்றப்படும் நீ இங்கு மொழிகளோடு

மகிழ்ந்துகொள். ௩ சக்திமிகுபவனே, உனது துணையுடன், உனது வீரியத்தோடு பிரசை பொங்கி பலம்பற்றி உன்னை விரும்பும் ருதமறிபவர்கள், மானிடனது நிலயத்திலே ஒன்று சேர்ந்து இன்பர்களாகி உன்னைப் போற்றி இலங்குகிறார்கள். [௨௦—௩௩] ௬௨௨ [கிருத்ஸமதன்—இந்திரன்] ௧ முதல்வனுயுள்ள மனஞ்சேரும் தேவனை இந்திரன் சனனத்திலேயே சக்தியால் தேவர்களைப் பாலனஞ் செய்தான்: மானிடர்களே! எவனது சக்தியால் எவனதுமேலான ஆண்மையால் வானமும் வையமும் அலறுகின்றனவோ அவனே இந்திரன். ௨ சலனமான புவியை எவன் சாசுவதஞ் செய்தானே, பதறின மலைகளை எவன் நிலை செய்தானே விரிந்த வானத்தை எவன் அளந்தானே எவன் சோதிக்கு ஆதரவளித்தானே—மானிடர்களே! அவனே இந்திரன். ௩ மானிடர்களே! எவன் அஹியை அழித்து எழு நதிகளை விடுவித்தானே, வலனுடைய குஹையினின்றும் எவன் பசுக்களை விடுதலை செய்தானே எவன் இரு மேகங்களின் நடுவே அனலைச் செய்தானே, சத்துருக்களை சமர்களிலே எவன் நாசஞ் செய்தானே அவனே இந்திரன். ௪ எவன் இந்த சலனமாகுபவற்றை யெல்லாஞ்செய்தானே எவன் தாஸசுபாவத்தை தாரத்தி குகையில் ஸ்தாபித்தானே, சூதாடுபவன் செல்வங்களை ஜயிப்பதுபோல எவன் பகைவர்களது பொருள்களை பறிக்கிறானே அவனே இந்திரன். ௫ அவன் எங்கே என அந்த உக்கிரனை உத்தேசித்துச் சிலர் கேட்கிறார்கள்; அவன் இல்லை என வேறு பலர் சொல்லுகிறார்கள். வேடன் வேட்டைகளைப்போல் அவன் வட்கார்களின் செல்வங்களைப் பற்றுகிறான். மானிடர்களே! அவனே இந்திரன். ௬ பொருளுள்ளவனை, பொருளில்லாதவனை எவன் தூண்டுகிறானே, பிராமணனையும் போற்றுபவனை

யும், புகழ் செய்பவனையும் எவன்—நடத்துகிறானோ—எவன் சுந்தரமுகனாய் சாதனஞ் சேர்ந்து சோமன் பிழிபவனுக்குத் துணை செய்கிறானோ, மானிடர்களே அவனே இந்திரன். எ மானிடர்களே! எவனுடைய அதி ஆக்ஞையிலே குதிரைகளும், எல்லா இரதங்களும் கிராமங்களும் கோக்களும் உள்ளனவோ, எவன் சூரியனையும் உஷையையும் சனனஞ் செய்தானோ, எவன் சலங்களின் தலைவனோ அவனே இந்திரன். அ மானிடர்களே! ஒன்றுசேர்ந்து எவனுக்கு வானமும் வையமும் கர்ச்சனை செய்கின்றனவோ, எவனை மெலிந்தவனும் வலியவனும் இரு சாரிலார்களும்-சாற்றுகிறார்களோ ஒருஇரதத்திலேறி நானாவிதமாய் எவனைப் போற்றுகிறார்களோ அவனே இந்திரன். கூ மானிடர்களே! எவனது உதவியற்று சமர்களிலே சனங்களுக்கு ஜயிக்கமுடியாதோ, போரிலே எவனது ஆதரவை சனங்கள் நாடுகிறார்களோ, ஆசையால் அசைக்கச் செய்யும், எவன் விசுவத்தின் வடிவமோ அவனே இந்திரன். க0 மானிடர்களே! எவன் தனது வீழ்த்து மாயுதத்தால் பாதகஞ் செய்யும் இலட்சியஞ் செய்யாதவர்களை பாழ் செய்தானோ, இழிந்தவனுக்கு வெல்லும் வலிமையை எவன் அளிப்பதில்லையோ எவன் தஸ்யுவை துவம்சஞ் செய்கிறானோ அவனே இந்திரன். கக மானிடர்களே! எவன் சம்பரனை ச0-வது சரத்திலே மலைகளில் வசிப்பவனைக் கண்டானோ, எவன் ஓஜசால் சயனஞ்செய்யு மரக்கனையும், அஹியையும் கொன்றானோ அவனே இந்திரன். கஉ மானிடர்களே எவன் தனது தேஜசுகளால், எவன் வனப்பு சூனிய முகத்தால் பொழியப்படும் சோமனை பருகினானோ, எவன் மலை நடுவே யஜமானனை வெகு சனத்தைச் செழுமை செய்தானோ அவனே இந்திரன். கங மானிடர்களே! எந்த திடனும் அதி துரிதனும்

ஏழு ரசிமிகளால் பிரவாஹத்தின் ஏழு நதிகளை விடுவித் தானோ, சோதி ஏறின ரௌஹிணனை எந்த வச்சிராயுதன் வெட்டினானோ அவனே இந்திரன். கச மானிடர்களே! எவனை சோதியும் புவியும் வணக்கஞ் செய்கிறார்களோ, எவனது சக்தியைக் கண்டு மலைகள் நடுங்குகின்றனவோ வச்சிராயுதந் தரித்து வச்சிராயுதம் வீசும் சோமபானம் செய்யும் எவன் திடமான அங்கமுடன் உள்ளானோ அவனே இந்திரன். கடு மானிடர்களே எவன் துதி செய்பவனை யக்ஞஞ் செய்பவனை, பக்குவம் புரிபவனை, சோமன் பிழிபவனை பாலனஞ் செய்கிறானோ, எவனுக்கு பிரமம் வளர்கின்றதோ, எவனுக்கு சோமன் செழுமை யாகின்கிறதோ, எவனுக்கு இச்செல்வம் ஓங்குகின்றதோ, அவனே இந்திரன். கசு மானிடர்களே! எவன் தாய் தந்தைகளின் மூலத்தில் தோன்றியவுடன் பிரகாசித் தானோ, எவன், புவன சனனன் வேறு என அறிவ தில்லையோ துதிக்கப்படும் எவன், தேவவிரதங்களைத் தெளிவு செய்தானோ அவனே இந்திரன். கஎ மானிடர்களே! எவன் துரித குதிரையுள்ளவனாகி, பாயும் சோமனை விரும்புகிறானோ, எவன் அறிஞனோ எவன் விசுவ புவனங்களை நடுங்கச் செய்கிறானோ, எவன் சுஷ்ணனையும், சம்பரனையும் கொன்றானோ, அந்த ஏக வீரனே இந்திரன். கஅ மானிடர்களே, பக்குவஞ்செய்து பொழிபவனுக்கு செல்வத்தை யளிக்கும் இந்திரனே உக்கிரனும் உண்மையு மான தேவன்: இந்திரா உனது நண்பர்களான நாங்கள் சுவீரர்களோடு சூழ்ந்து சதாகாலம் துதிசெய்யலாமோ.

[உO. நச] சுஉங [நோதா கௌதமன் இந்திரன்] க நான், துரிதனான, திடனான, மேலான மொழி சமானனான, வியா பகனான, இந்திரனுக்கு பக்குவ உணவைப்போலே துதிஸ் தோமனைச் செலுத்துகிறேன். அளிப்பதற்க்கருகையான

பிரமங்களால் போற்றுகிறேன். உ இந்த இந்திரனுக்கு உணவைப்போல் துதியை யளிக்கிறேன்; துன்பம் நீங்க, துஸ் தீர்க்கும் அவனுக்குத் துதிசெய்கிறேன்; பழைய பதிக்கு அறிஞர்கள் இருதயத்தால் மனனத்தால் மதியால் தூய்மை செய்வார்கள். ௩ இந்த இந்திரனுக்கு சுகமளிக்கும் மேலான துதியை நாவால் நுவல்கிறேன்; மனனஞ் செய்பவர்களில் மேலாயுள்ள மதிபுருஷனை துஸ் தீர்க்கும் மொழிகளால் சொற்களால் அவனைச் செழுமை செய்ய அவனுக்கு உரைக்கிறோம். ௪ தச்சன் இரதத்தைத்—திடஞ்செய்வது—போல், துதியருகனுன அறிஞன இந்த ஆனந்தமய இந்திரனுக்கே துக்கம் தளர்த்தி சர்வம் தூரிதஞ்செய்யும் துதியை ஸ்தோமத்தை ஒன்று சேர்க்கிறேன். ௫ இந்த இந்திரனுக்கே புகழ்விரும்புபவனுய், புரவிபோலே என் மொழியை நாவினுல் நான் ஒன்று பொருந்தச் செய்கிறேன்; தீரனுயும், தானமளிப்பவனுயும் வியாபக புகழுள்ளவனுயும் புரங்களை யழிப்பவனுமான இவனைப்போற்ற—பனுவல்களையும்—பூட்டுகிறேன். ௬ சுபச்செயலுள்ளதாயும் சுகமளிப்பதுமான வச்சிராயுதத்தை இந்திரனுக்கேத் துவஷ்டா செய்தான்; அதனுல் அதிபலமுள்ளவன் அதினஞ் செய்யுமவன் விருத்திரனது மர்மாங்கத்தை வேதனைசெய்து அவனை வீழ்த்தினுன். ௭ இந்த சர்வத்தின் தாய்—போலான—மகான், யாகங்களில் சோமனை, சுந்தர—இரசங்களை—பட்சித்தான்: பகை வெல்லும் விஷ்ணு, பரிபக்குவத்தை அபகரித்தான். அவனருகில் வந்த வராஹத்தை வீழ்த்தினுன். ௮ தேவமனைவிகளான கமனங்களான, ஸ்திரீகள், அவன் அஹியைக் கொல்லுங்கால் இந்திரனுக்கே துதியை இழைத்தார்கள். அவன் விரிந்த சோதியையும் புவியையும் சூழ்ந்தான்.

சோதியும் புவியும் சேர்ந்து அவனது மகிமையை அதிக்கிரமிக்காது. கூ இவனது மகிமை புவிக்கதிகம், சோதிக்குமிகுதி, வானத்துக்குயரம். இந்திரன் சத்துரு சனத்திலே சுவராட்டன். சர்வம் போற்றப்படுபவன். எவராலும் ஜயிக்க இயலாத சத்துரு, சமருக்கு வளர்ந்தான். க0 இந்திரன் தனது வலிமையால் வாடும் விருத்திரனை வச்சிராயுதத்தால் அறுத்தான். அவன் புகழுக்காக தானை சிந்தனையோடு அடைபட்ட பசுப்போலுள்ள சலங்களை விடுவித்தான். கக அவன் தனது வச்சிராயுதத்தால் நதிகளை எங்கும் தடுத்தபோது, அவனது வன்மையால் எல்லா சிந்துக்களும் நின்றன. அங்கியர்களை அடக்கும் திடபலத்தால், தாசனுக்கு நல்ல மனமுள்ளவனுகி ஜயமோங்கும் அவன் தூர்வதிக்கு நிலை செய்தான். கஉ விரியும் உனது துரிதபலத்தோடு அதிபலம் மிகும் தலைவனை நீ விருத்திரனுக்கு உனது வச்சிராயுதத்தை வீசு. சலப்பிரவாஹம் பொழிய, சாய்த்து வீசிய உனது வச்சிராயுதத்தால், துண்டம் துண்டமான பசுவின் அங்கங்களைப் போல் அவனது பர்வங்களை பேதனஞ்செய். கங பூர்வத்தில் இந்திரன் செய்த வீரச் செயல்களை, துரிதமாய் செல்லும் அவனை, அமர்க்களத்தில் தனது ஆயுதங்களை எறிந்து உக்கிர கோபத்தால் அரிகளைக் கீழே சாய்த்த அவனை, புதிய—கானங்களால்—போற்றுங்கள். கச இந்திரன் சனனமாகுங்கால் நிலைநிறுவப்பட்டுள்ள மலைகளும் எல்லாச் சோதியும் புவியும் பயத்திலே பதறுகின்றன. நோதன் இப்பிரிய அறிஞனது பாதுகாப்பைப் போற்றி துரிதமாய் திடவீரியத்துக்குச் செல்வானுக. கரு வெகு பல—புவனங்களில்—ஏகனுய் யரசு புரிந்து அனைத்தையும் வரிக்கும் இந்திரனுக்கே இந்த எல்லாப் பொருள்களும் யளிக்கப்பட்டுள்ளன : குதிரை மிகுந்த சூரியனில் முயற்சியான

சோமனைப் பொழியும் ஏதசனுக்கு இந்திரன் துணை புரிந்தான். ௧௯ புரவிகளைப்பூட்டும் இந்திரா! இங்ஙனம் உனக்கு கோதமர்கள் பிரமங்களைப் போற்றினார்கள். அழகுடன் எழிலாகும் அறிவை அவர்களுக்களி; காலையில் அவன் பிரமப்பொருளுள்ளவனாகி துரிதம் வருவானாக. [௨.௦-௩௫.] சுஉச [பரத்வாஜன்—இந்திரன்] ௧ எவன் தலைவனையும், விருஷபனையும் வர்ஷிக்கும் வலியனையும் சத்தியனையும் சூரனையும், வெகுபல ஆண்மைகளோடு ஜயசீலனையு மிருக்கிறானோ, மானிடர்களிலே அழைக்கப் படுவதர்க்கு ஏகனையுமுள்ள அந்த இந்திரனையே, இம்மொழிகளால் நான் துதிசெய்கிறேன். ௨ ஏழு ரிஷிகளான பழைய பிதுருக்களாம் நவக்வர்கள், உச்சிகளில் வசித்து, துரிதமாய் எதிரிகளை யழிக்கும் தூய மொழியோடு திட நினைவுகளுள்ள இந்திரனை, அவனது திண்மைகளை செய்யத் தூண்டுங்கால், அவனைத் துதி செய்தார்கள். ௩ அதியுணவையும், ஆண்மைகளையும் அதி ஆற்றல்களையு மளிக்கும், இந்திரனுடைய செல்வங்களைப்பற்ற நாங்கள் அவனை நாடுகிறோம். புரவித்தலைவனே! அழியாத, அதிகமான, திவ்யப் பொருளை நாங்கள் இன்பமாக நீ கொண்டு வா. ௪ பூருவத்திலே உன்னைப் போற்றியவர்கள் உன்னிடத்தினின்றும் உன் நற்மனத்தை எங்ஙனம் பற்றினார்கள் என்பதை எங்களுக்கு அறிவி. பலர்களால் அழைக்கப்படும் பொருள் மிகுந்து அசுரனழித்து அதி துரிதமாய் அரி அடக்கும் நீ எந்த பாகத்தை அடைந்துள்ளாய்? செயலும் சிறப்புஞ் சேரும் சொல், வச்சிராயுதனையும் இரதஞ் செல்பவனையுமுள்ள இந்திரனை நாடுகின்றது: அறிஞன் வெகு பலர்களைப் பற்றுபவனையும் வெகு பல செயல்களை செய்பவனையும் சக்தி யளிப்பவனுமான இந்திரனைத் துதிசெய்ய விரும்புகிறான்:

அவன் அதிபலமுள்ளவனருகிலுஞ் செல்லுகிறான். ௬ சுவ யம்பல முள்ளவனே நீ மனோவேகமான மலையால், இம் மாயையால் வளரும் சத்துருவை வீழ்த்தியுள்ளாய்: அதி ஆண்மை யுள்ளவனே அசையாமலும் உறுதியாயும், உரமாமுயுள்ள — சேனைகளை — ஊக்கத்தால் ஒடித்துள் ளாய். ௭ நாங்கள் புதிய அறிவால் பழையவனாய் அதிபல முள்ளவனே புராதனத்தில்—செய்தது போல் உங்களுக் குப் பொற்புடன் செய்கிறோம்: அந்த அளவில்லாத சுப் பிரமன் எங்களை எல்லாத் துன்ப ஸ்தானங்களினின்றும் கடத்திச் செல்வானாக. ௮ நீ துன்பமளிக்கும் சனங் களுக்கு வானம் சோதியிலுள்ள ஸ்தானங்களை சுடர் போல் சுவாலை செய்துள்ளாய்: விருஷபனே! அவர்களை எங்கும் சூட்டால் எரித்துவிடு: பிரமத்வேஷிக்கு சலத்தை யும் சகத்தையும் சூடாக்கு. ௯ ஒளித்தோற்ற முள்ள வனே நீ திவ்ய சனத்தின் தரணிப் பிராணிகளின் இராஜா: இந்திரா உனது வலது கையில் வச்சிராயுதத் தைப் பற்று: எப்போது மிருப்பவனே நீ மாயைகளை யெல்லாம் மாய்க்கிறாய். ௰ இந்திரா சத்துருக்களைச் சிதைப்பதர்க்கு விரியும், விழாமலாகுஞ் செல்வத்தை ஒன்று சேரும் சுவஸ்தியையும் எங்களுக்களி: வச்சிரா யுதனே நீ அதனால் விருத்திரனுக்கும் வீழ்ந்தவனுக்கும் ஆரியனாகிறாய்: நாஹுஷர்களும் பெருகி ஓங்குவார்க ளாக. ௧௧ வெகுபலர்களால் அழைக்கப் படுபவனே விதாத்துருவே, அதி யுத்தமனே எல்லாப் பொருள்களைக் கொண்டுவரும் சேனைகளோடு இங்கு வா: எதிரிகளற்ற இக் குதிரைகளோடு நீ துரிதமாய் இங்கு வா: ஒரு தேவனும் உன்னைத் தடுக்காம லாவானாக. [உ௦. ௩௬]

௬௨௫ [வசிஷ்டன் — இந்திரன்] ௧ அவன் கூரிய கொம்புகளுள்ள காளையைப்போல், பயங்கரனும் அவன்

ஒருவனா யிருந்தாலும் எல்லா சனங்களையும் திகைக்கச் செய்கிறான்: பொழியாதவனது பொருளை பொழிபவனுக்கு நீ அளிக்கிறாய். ௨ இந்திரா சமரிலே சேவை புரிபவனாய் நீ குத்ஸனுக்கு உதவி அளித்தாய்: நீ ஆர்ஜுனேயனுக்கு உதவி செய்யுங்கால், குயவனையும் தாஸ சுஷ்ணனையும் அவனுக்காக அடக்கினாய். ௩ வீரனே உனது எல்லா உதவிகளோடும் வீரியத்தோடு, சுதாஸனது அவிகளைக் கிரகித்து அவனுக்குத் துணை செய்தீர்: க்ஷிதியை ஜயித்து பகையழிக்க, புருகுத்ஸனது திரஸதஸ்யனுக்கும், புருவுக்கும்—ஆதரவு செய்தீர்? ௪ நீரனே! நீ தேவர்களது யுத்தத்திலே, புரவிகளோடான நீ வீரர்களோடு, வெகுபல விருத்திரர்களைக் கொன்றாய். நீ தபீதனுக்கு சுலப மழிப்பதர்க்காகும் தஸ்யுவையும், சுமூரியையும் துனியையும் நாசஞ்செய்தாய். ௫ வச்சிரஹஸ்தனே ௯௯ கோட்டைகளைத் துரிதமாய்த்தகர்த்த உனது திண்மைகளான இவை—கீர்த்தி வாய்ந்தவை. உனது எதிர்ப்பிலே நீ நூறு மக்கட்களைப் பிடித்தாய், நீ நமூசியைக் கொன்றாய், நீ விருத்திரனை அழித்தாய். ௬ செல்வங் கொண்டுவரும் தாஸனான சுதாஸனுக்கு நீ அளித்த போகங்கள் புராதனமானவை. வலியனான உனக்கு வலிய குதிரைகளை இணைக்கிறேன். அதிபலமுள்ளவனே பிரமங்கள் பலிஷ்டனான உன்னைச் சேர்க. ௭ ஜயசாலியே அசுவங்களுள்ளவனே, எங்களது இக் கஷ்டகாலத்தில் கயவர்களிடம் எங்களைச் சேர்க்காதே. நலத்துணைகளோடு எங்களை இசைத்துவிடு. அறிஞர்களிடம் நடுவே உனக்கு நாங்கள் பிரியர்களாகலாமோ. ௮ மகவானே! நீ விரும்பும் நண்பர்களான நாங்கள் உனது ஆதரவில் ஆனந்தமாகலாமோ. அதிக்வனது விருப்பத்தைப் பூர்த்தி செய்ய துர்வசனைக் கூர்மையாக்கு, யதுவின் மகனையும்

நண்ணியமாக்கு. ௬ மகவானே உக்தங்களை அறியும் உன்னில், சத்தியத்தில் நாட்டமுள்ள நரர்கள் துதிகளால் உன்னைப் போற்றுகிறார்கள். சமர்களிலே அசுரர்களை அழித்த மானிடர்களின் நட்புக்கு என்னைச் சுவீகரி. ௧௦ வீரர் தலைவனே இந்த ஸ்தோமங்கள் உனக்கு. இவை எங்களுக்குத் திருப்பிச் செல்வத்தை அளிக்கும். இந்திரா! விருத்திரனை வீழ்த்துங்கால் அவர்களுக்குச் சிவமளிப்பவனும் சூரனும், நண்பனும், மானிடர்களின் இரட்சகனாகவும் — இலங்கு. ௧௧ இந்திரா, சூரா, இரட்சைக்குத் துதியான நீ பிரமத்தாலோங்கி காயத்தில் பெருகு. எங்களுக்குப் புத்திரர்களையும் புஷ்டிகளையு மளி. தேவர்களே எங்களைச் சதாகாலம் சுவஸ்திகளோடுத் துணை செய்யுங்கள். [௨௦. ௩௭]

௬௨௬ [மதுச்சந்தன்—இரும்பிடிக் கண்வன்] ௧ இந்திரா வா, உனக்கு ஸோமனைப் பொழிந்துள்ளோம்; இங்கு சோமனைப் பருகு: இந்த எனது தருப்பையில் உட்கார். ௨ இந்திரா! பிரமத்தோடு இணைக்கப்பட்டு கேசங்களோடாகும் புரவிகள் உன்னை இங்கு கொண்டு வருக: எங்களது பிரமங்களுக்குச் செவிகொடு. ௩ இந்திரா சோமனைப் பற்றும் நாங்கள், சோம ரசத்தைத் தரிக்கும் நாங்கள், உன்னை உனது நண்பனோடு அழைக்கிறோம். ௪ ஒங்குங் காதைகளால் இந்திரனை கதைப்பவர்களால் கதைகளால் இந்திரனை, வாக்குக்கள் இந்திரனை அலங்காரஞ்செய்தன. ௫ இந்திரன் மொழியோடுஇணைக்கப்பட்டவன்; இரு அசுவங்களினருகிலுள்ளவன்; இந்திரன் வச்சிராயுதன். பொன் மயன். ௬ இந்திரன் தூரம் காண்பதற்க்காக சோதியிலே சூரியனை உச்சஞ்செய்தான். அவன் பசுக்களுக்கு பர்வதங்களைப் பிளந்தான். [௨௦ ௩௮]

௬௨௭ [மதுச் சந்தர்கள் இரும் பிடி] ௧ வேறு

மானிடர்களினின்றும், ஒவ்வொரு பக்கங்களினின்றும், நாங்கள் இந்திரனை உங்களுக்கழைக்கிறோம். ௨ இந்திரன் சோமனுடைய மதத்திலே வலனைப் பிளந்தபோது ஒளி வீசும் மண்டலங்களைப் பரப்பினான். ௩ அவன் மறைந்த பசுக்களைப் புலன் செய்து அவற்றை அங்கிரசர்களுக்கு ஓட்டினான்; அவன் வலனைத் தலைகீழாய்த் தள்ளினான். ௪ இந்திரனால் சோதிமண்டலங்கள் நிலையாயும் திடமாயும் செய்யப்பட்டன. அவை அவற்றின்—நிலயங்களிலே—உறுதியாயிற்று, ௫ இந்திரா! சலங்களின் இன்பமளிக்கும் அலைபோல் உனது ஸ்தோமங்கள் துரிதமாகின்றன. உனக்கு இன்பமளிக்கும் இரசதுளிகள் துலங்குகின்றன. [௨0. ௩௧.] ௬௨௮ [மதுச்சந்தன்—மருத்து] ௧ அச்சமற்ற இந்திரனோடு நீ புலனாகிறாய்: நீங்கள் இருவர்களும் சமான சோதியோடு சந்தோஷமுடன் இருக்கிறீர்கள். ௨ அதிவலிமையுள்ள யக்ஞம் இந்திரனது விருப்பங்களோடு காந்தம் மிகும் குற்றம் நீங்கும் கணங்களோடு—இந்திரனை—அணுகிற்று. ௩ அவர்கள் அப்பால் யக்ஞிய நாமத்தைத் தரித்து சுவகாய மது சரித்து மறுபடியும் கருப்பத்துவத்தை அடைந்தார்கள். [௨0—௪0] ௬௨௧ [கோதமன்—இந்திரன்] ௧ அந்நியரால் எதிர்க்க முடியாத இந்திரன் ததீசியின் என்புகள் என்னும் கைகளோடு ௯௯ விருத்திரர்களைக் கொன்றான். ௨ மலைகளிலே நீக்கப்பட்டுள்ள அசுவத்தின் தலையைத் தேடும் அவன் அதனை சரணாவதியிலே கண்டான். ௩ இங்கு சந்திரனது நிலயத்திலே அவர்கள் துவஷ்டாவின் பசுவினுடைய சார சொரூபத்தை அறிந்தார்கள் [௨0. ௪௧.] ௬௩0 [குருசுதி, காண்வன்—இந்திரன்] ௧ நான் இந்திரனிடமிருந்து ருதம்பரிசித்து, விரியும் எண்பாதம் நவபாத வாணியை அளந்துள்ளேன். ௨ இந்

திரா! நீ தஸ்யுவைக் கொல்லுங்கால் இரு உலகங்களும் உன் கர்ச்சனைக்குக்—கலங்கி—உன்னிடம் சரணமானார்கள். ங இந்திரா! கலசங்களிலே பொழியப்பட்டுள்ள சோமனைப் பருகி, ஓஜசோடு எழுந்து உனது மோவாய்களை ஆட்டுகிறாய். [உ0. சஉ.] சாஙக [திரிசோகன் இந்திரன்] க இந்திரா! எங்களது எதிரிகளைத் துரத்து: எங்களைச் சூழ்ந்துள்ள சத்துருக்களை நாசஞ்செய்: நாங்கள் விரும்பும் செல்வத்தைக் கொண்டு வா. உ திடத்திலே திரத்திலே உச்சியிலே, மறைந்துள்ள நாங்கள் விரும்புஞ் செல்வத்தை எங்களுக்கு இங்கு கொண்டுவா. ங உன்னால் பிரேரிதமானப் பொருள்களை பெரிது என விசுவ மானிடர்கள் கூறுவார்கள்: நாங்கள் விரும்பும் அப்பொருளை எங்களுக்குக் கொண்டு வா. [உ0 சங] சாஙஉ [இரிம்பிடி காண்வன்—இந்திரன்] க நரர்களின் தலைவனையும் துதிக்கருகனான வீரனையும் மனிதர்களை ஜயிப்பவனையும், சிறந்தவனையுமுள்ள இந்திரனை துதிசெய்மின். உ சமுத்திரத்திலே சலம் பாய்வதுபோல், இந்திரனில் சிறப்பு வாய்ந்த சமஸ்த சொற்களும் சந்தோஷமாகின்றன. ங செல்வத்தை அடைய இராஜர் தலைவனையும் சத்துரு அழிப்பவனையும் அதிசக்தி யுள்ளவனுமான இந்திரனை நான் நற்துதியாலழைக்கிறேன். [உ0. சச.] சாஙங [தேவராதன், சுனச்சேபன்—இந்திரன்] க இது உன்னுடையது. கபோதம் பெண் புறாவை அணுகுவது போல் நீ அருகில் வருகிறாய். அங்ஙனமே எங்களது இச்சொல்லுக்கும் சமீபமாகிறாய், உ வீரனே! செல்வபதியே! துதிக்கருகனான உன்னைப் போற்றுபவன் சத்தியத்தையும் செல்வத்தையுமடைவானாக. ங சதக்கிரதுவே! இந்த சங்கிராமத்தில் எங்களைக் காக்க நீ உயர்ந்து நில். நாங்கள் அந்நியர்களில் இணைவோமாக.

[உ0—சஇ] சூங்ச. க செல்வம் செழிக்கச் செய்வதில் தலைவனுயும், சமர்களில் சோதியைச் செய்பவனுயும் போரினுல் பகைவர்களைப் பாழாக்குபவனுமான இந்திரனை நாங்கள் அடைவோமாக. உ பலர் அழைக்கப்படும் பாதுகாப்பளிக்கும் இந்திரன் எங்களை எல்லாத் துவேஷிகளினின்றும கப்பலைப்போல், பத்திரமாய் கடத்திச் செல்வாஞுக. ங இத்தகைய இந்திரா வலிமைகளால் எங்களுக்கு உதவி செய். எங்களை மேன்மைக்கு வகித்துச் செல். [உ0—சசூ.] சூங௫ [சுக்ஷசன்—க—ங. மதுச்சந்தர்கள் க0—கஉ இரிம்பிடி. எ—கூ பிரஸ்காண்வன் கங—உக—இந்திரன்] க வலிய விருத்திரனைக் கொல்ல இந்திரனை வலிமை விளக்கச் செய்கிறேம், அவன் விருஷனுன விருஷபன். உ இந்திரன் அளிப்பதற்குச் செய்யப்பட்டுள்ளான், அவன் மதத்திலே ஹிதன், பராக்கிரமன்: சோதிமிகும் அவன் சோமாருகன், சிறப்பு வாய்ந்தவன், ங ஒருவராலும் தடுக்கமுடியாத வச்சிராயுதத்தை முழக்கஞ் செய்வதுபோல் விமரிசனஞ் செய்தான்: அவன் அதிபலமோங்கி உச்சமாய் வளர்ந்தான். ச—சூ இம்மந்திரங்களின் மொழி பெயர்ப்பு சூஉசூ-வது சூக்தத்தின் ச—சூ-வது மந்திரங்களைப்போலாகும். எ—கூ. சஉசூ-வது சூக்தத்தின் க—ங-வது மந்திரங்களைப் பாருங்கள். க0—கஉ சூகசூ-வது சூக்தம், ச—௫-வது மந்திரங்களைப் பாருங்கள். கங—க௫. சஅ0-வது சூக்தம் கசூ—கஅ-வது மந்திரங்களைப் பாருங்கள். கசூ சூரியனே! நீ சர்வத்தையுங் கடந்து செல்வாய், விசுவத்தைக் காண்பாய், நீ சோதி செய்வாய், எல்லா ஒளி மண்டலத்தைப் பிரகாசஞ் செய்வாய். கஎ நீ தேவர்களது கூட்டத்துக்குச் செல்கிறுய், நீ மானிடர்களுக்கு வருகிறுய் — இங்கு

நாங்கள் எல்லா சோதியையும் பார்க்க. ௧௮ பாவக ஞன வருணனே மானிடரில் பாவகனை நீ எக்கண் ணுல் நீ காண்கிருயோ—அக்கண்ணுல் என்னைக் காண். ௧௯ நீ சோதியிலும் வானத்திலும் வியாபகமாகிருய், உனது ஒளிக்கதிர்களால் தினங்களை அளக்கிருய். சனன முள்ள எல்லாப் பொருள்களையும் சூரியன் பார்க்கிருன். ௨௦ வெகு தூரங் காண்பவனே உனது இரதத்திலே இணைக்கப்பட்டுள்ள ஏழு குதிரைகள், பொன் கேசமுள்ள சூரியனுன உன்னை வகித்துச் செல்லுகின்றன, ௨௧ இர தத்தின் பெண்களான பிரகாசமாகும் ஏழு புரவிகளை பானு பூட்டியுள்ளான்; பிரியமான இப்பாரிகளோடு அவன் சலனமாகிருன். [௨௦. ௭௭] ௬௩௯ [இந்திரன்— ௧—௩. சார்ப்பராக்ஞ சூரியன்—௪—௬] ௧ பசுக்கள் கன்றை அநுசரிப்பதுபோல், துரிதஞ்செல்லும் துதி மொழிகள் வாய்மைகளோடு பொழிபவர்களாகி உன்னைச் சேர்கின்றன. ௨ வனிதை அவளது இருதயத்தால் பாலனை—நாடுவதுபோல்—சுப மொழிகள் பிரியமும் சுந் தரமும் பாய்ந்து உனக்குச் செல்லுகின்றன. ௩ சுந்தர மொழிகள் சக்தி மிகுபவனுக்குச் சிறப்பையும் இந்திர வன்மையையுமளித்து எனக்குத் தீர்க்காயுசையும் பாலை யுங்கொண்டு வருக. ௪—௬. ௨௦௪-வது சூக்தத்தின் ௧—௩-வது மந்திரங்களைப் பாருங்கள். [௨௦. ௪௮] ௬௩௭ ௧ வானத்தை—நிரப்ப விரும்பும் வாக்குக்கள் வலியவ னில் ஏற்று; விருஷனுன தேவன் அதி ஆனந்தமானுன். ௨ சொல்லாலே சக்தி வாய்பவனைச் சாற்று: உக்கிரனை உரையால் போற்று: சோதியிலே அவன் இன்பமாகியுள் ளான். ௩ பலம் மிகுபவனை மொழியால் போற்று: அவன் ஒவ்வொரு நிலயத்திலும் அரசு புரிகிருன், அவன் தருப்பையிலே ஆனந்தமுடன் உட்கார்ந்துள்ளான்.

௪—௭. ௫௬௭-வது சூக்தத்தின் ௧—௪-வது மந்திரங்களைப் போலாகும். [௨௦—௪௬] ௬௩அ. ௧ புதிய மானிடன் துரிதமாயும் திடமாயு—முள்ளவனை—எங்ஙனம் போற்ற முடியும்? அவனது மகிமையையும் இந்திரியத்தையும் இசைத்தவன் சோதியை யடையவில்லையா? ௨ ருதந் தரிப்பவர்கள் உன்னை எப்போது துதிப்பார்கள்? தேவர்களின் நடுவே எவன் ரிஷியாயும் அறிஞனாயுங் கருதப்படுகிறான்? மகவானே இந்திரனே துதி செய்பவனுக்கோ பொழிபவனுக்கோ நீ எப்போது வருவாய்? [௨௦. ௪௬] ௬௩௬ [பிரகாதன், பிரஸ்கண்வன், இந்திரன்] ௧ அதி செல்வமளித்து நாங்கள் அறியும், உங்களுக்கு இந்திரனைத் துதிப்போம்? மகவானான அவன், அதி செல்வமுள்ள அவன், துதிப்பவர்களுக்கு ஆயிரம் வகைச் செல்வங்களை யளிக்கிறான். ௨ நூறு சேனைகளை அடைந்துள்ளவன் போல் அவன் வீரத்தால் ஜயிக்கிறான்; தாஸனுக்குஅவன் சத்துருக்களைச் சம்ஹாரஞ் செய்கிறான்: வெகு பலர்களுக்கு போகமளிக்கும் அவனது செல்வங்கள் மலைகளினின்று நதிகளைப்போல் பாய்கின்றன. ௩ பொழிந்து போற்றுபவனுக்கு ஆயிரம் மேலான பொருள்களை யளிக்கும் சக்கரனை சுருதத்தோடு செல்வமுள்ளவனை விருப்பத்துக்குப் போற்றுகிறேன். ௪ சமர்க்களத்தில் அந்நியரால் வெல்ல முடியாத நூறுமுனைகளுள்ள சரங்கள் இந்த இந்திரனுடைய மேலான ஆயுதங்கள்: பொழிந்த இரசங்கள் அவனை இன்பஞ்செய்தால் மலையினின்று சலங்களைப் போல் செல்வமுள்ளவர்களுக்குப்பொழிகிறான்.[௨௦. ௫௧] ௬௪௦ [மேத்யாதிதி—இந்திரன்] ௧ விருத்திரனை யழிப்பவனே. சோமன் பொழிந்து விரியும் தருப்பையோடான நாங்கள் உன்னை சலங்களைப்போல் சூழ்கிறோம்: பவித்திரம் பொழியும் ஸ்தானமான இங்கு போற்றுபவர்கள் உன்

னைச் சூழ்கிறார்கள். உ வசுவே மானிடர்கள் சோமனால் உன்னை மேலான நிலயத்துக் கழைக்கிறார்கள்; இந்திரா, முழங்கும் காளையைப்போல் சோம ஸ்தானத்துக்குத் தாகமுள்ளவனாய் எப்போது வருவாய்? ந மகவானே, நன்கு காண்பவனே, நீ கண்வர்களால் ஆயிரம் வகையுள்ள வலிமையை யழிக்கிறாய்: நாங்களும் சதா காலம், பொன் ரூபமாயுள்ள பசுமிகும் அவனைப் போற்றுகிறோம். [உO—ருஉ] கூசக [மேதாதிதிகாண்வன்—இந்திரன்] க பொழிந்த இரசத்தில் பொருந்துமிந்த விசுவத்தை யெல்லாம் எவன் பருகுவான்? அவன் தரிக்கும் பலத்தை எவன் அறிவான்? பலத்தால் புரங்களை பிளந்து, சோமனில் இன்பமாகும் சுந்தரமுகமுள்ள தேவன் இவன்தான். உ மதம்பிடித்த காட்டானையைப் போல் இங்குமங்குபாயு முன்னை ஒருவராலுந் தடுக்கமுடியாது: நீ இங்கு வா! நீ ஒஜஸால் மகானாய் சலனமாகிறாய். திடமாயும் திரமாயுமுள்ள—தலைவன்—அந்நியரால் வெல்லமுடியாதவன் எப்படிச் சமருக்குத் தயாராகிறானோ அப்படியே மகவானை இந்திரன் துதி செய்பவனைச் செவியுற்றால், அவன் ஒதுங்காமல் வந்துவிடுவான். [உO—ருங] கூசஉ [ரேபன் இந்திரன்] க விசுவமான சத்துருக்களை ஜயிப்பவனாயும் வலிமையில் சிரேஷ்டனாயும் எதிரி யழிப்பவனாயும் உக்கிரனாயும் உறுதியோங்கும் உயர்ந்தவனாயும் அதிதாரிதனாயுமுள்ள தீரனை இந்திரனை அரசுபுரிய அவர்கள் ஒன்றுசேர்ந்து செய்கிறார்கள். உ ஒஜஸினாலும் உதவிகளாலும் ஒருமையானத் துதி கருத்தாக்கள் ஓங்கி வளர திடவிரதனாயுள்ள சுவர்க்கபதியான இந்திரனை அவன் சோமபானம்பருக ஒன்றுசேர்ந்து கோஷஞ் செய்கிறார்கள். உ மேஷனுக்குக் கானஞ் செய்பவர்களாய் உற்றுநோக்கி, அறிஞர்கள் அவனை

வணங்குகிறார்கள். செயலில் துரோகம் கழிந்து ஒளியோங்கி உங்களைத் துரிதஞ் செய்பவர்கள் மொழிகளால் நன்கு வணங்குகிறார்கள். [உ௦—ருச] சுசங [ரேபன்—இந்திரன்] க மகவானும் வன்மை தரிப்பவனும், எதிர்ப்பற்றுமுள்ள இந்திரனை நான் அடிக்கடி அழைக்கிறேன்: யக்ஞாருகனும் அதி மேன்மையாயுமுள்ள அவன் எங்களைச் செல்வங்களுக்கு அழைத்துச் செல்வானாக: வச்சிராயுதமுள்ள அவன் எங்களுக்கு நல்வழியைச் செய்வானாக. உ இந்திரா! சோதியை சேரும் நீ அசுரர்களிடமிருந்து எந்த போகங்களைக் கொண்டு வந்தாயோ, மகவானே! அவற்றால் உனக்குத் தருப்பை விரிந்தவர்களுக்கும் உன் அச்செயலைப் போற்றுபவர்களுக்கும் புஷ்டியை யளி. ங இந்திரா! சோமனைப் பொழியும் உனது தாஸனுக்கு, நீ பற்றியுள்ள அழியாத குதிரை பாகத்தையும் பசு பாகத்தையும் அளி: கருமிக்களியாதே. [உ௦—ருரு] சுசச [கோதமன்—இந்திரன்] க விருத்திரனைக் கொல்லும் இந்திரன் மானிடர்களாலே உறுதிக்கும் உற்சாகத்துக்கும் வளர்க்கப்பட்டுள்ளான். சிறிய சமர்களிலும் பெரிய சமர்களிலும் அவனையே நாங்கள் அழைக்கிறோம்: சமர்களில் செல்வம்பற்ற அவன் எங்களுக்கு உதவி செய்வானாக. உ வீரனே நீ சேனையாவாய்: நீ வெகுபல சத்துரு புசிப்பை அளிப்பவன்: நீ மெலிந்தவனை வலியவனாக்கி நீ யஜமானனுக்கு உதவி செய்கிறாய்: நீ அவனுக்கு அதி செல்வங்களை அளிக்கிறாய். ங போர் புலனால் வீரனது முன்னிலையில் பொருள் வைக்கப்படும். உனது மதமோங்கும் குதிரைகளைப் பூட்டு. நீ எவனை வதைசெய்வாய்? எவனுக்குச் செல்வமளிப்பாய்? இந்திரா! எங்களுக்குச் செல்வமோங்கச் செய்வாயோ? ச சத்திய சங்கற்பமுள்ள அவன் ஒவ்வொரு

இன்பத்திலும் எங்களுக்குப் பசுக் கூட்டங்களை அளிக்கிறான்; நூறு வகையான செல்வங்களை எங்களுக்களிக்க நீ என் இரு கைகளிலும் அவற்றைக் குவித்துக்கொள்; எங்களைக் கூர்மைசெய்து, எங்களுக்குச் செல்வத்தைக் கொண்டு வா! ரு சூரனே! சக்திக்கும் செல்வத்துக்கும் பொழிந்துள்ள இரசத்தால் நீ இன்பமோங்கு: உன்னை வெகுபல பொருள் உள்ளவனாக அறிகிறோம்: எங்கள் மன விருப்பங்களையெல்லாம் உனக்குச் சொல்லியுள்ளோம்; நீ எங்களுக்கு இரட்சகனாகவும். சு நீ விரும்பும் சிறந்த பொருளை யெல்லாம், இந்த சனங்கள் உனக்கு வைத்துள்ளார்கள்; அளிக்காதவர்களது செல்வத்தை தலைவனான நீ கண்டுபிடி; அவர்களது இச்செல்வத்தை எங்களுக்குக் கொண்டு வா. [உ0—ருசு] சுசரு [மதுச்சந்தன்—இந்திரன்] க நாங்கள் தினந்தோறும் துணை அடைய நற்பசுவைக் கறப்பவனுக்கு பாலை கறப்பதுபோலுள்ள சிறந்த செயல்களைசெய்யும் இந்திரனை அழைக்கிறோம். நீ எங்களுடைய யக்ஞங்களுக்கு வா, சோமனைப் பருகு, நீ சோமபானஞ் செய்பவன்; செல்வம் மிகும் அவனது இன்பம் பசுக்களையளிக்கின்றது. ங உனது அகத்திலுள்ள சுமதிகளை நாங்கள் அறியலாமோ. எங்களைப் புறக்கணிக்காதே; இங்கு வா. ச—க0 இம்மந்திரங்களின் தமிழ் வசனங்களுக்கு சு0அ-வது சூக்தம் க—எ-ஐப் பாருங்கள். கக—கங சுசக-வது சூக்தத்தின் க—ங-வது வரைப் பாருங்கள். கச—கரு. சுச0-வது சூக்தத்தின் முதல் மூன்று மந்திரங்களைப்............பாருங்கள். [உ0—ருஎ] சுசசு [கிருமேதன்—க. உ. பரத்வாஜன் ங. ச.—இந்திரன்] க சூரியனில் அனைவரும் ஆசிரயமாவதுபோல் இந்திரனிடமிருந்து எல்லா நற்பொருள்களையும் அநுபவியுங்கள்: நாங்கள் ஓஜஸால் எங்களது பாகமாக எண்

ணும் செல்வங்களுக்கு பிறந்து பிறக்கப்போகும் இந்திரனை நோக்குகிறோம். ௨ ஒருவனுக்குத் தீமை செய்யாமலாகி தானங்களோடுள்ள நமக்குத் தனங்களை அளிக்கும் இந்திரனைத் துதி செய்யுங்கள். இந்திரனது செல்வங்கள் மங்களமானவை: அவனது விருப்பத்தை திருப்தி செய்பவனுக்கு அவன் கோபமாவதில்லை: அவன் தானத்துக்கு மனத்தைத் தூண்டுகிறான். ௩ சூரியா, நீ மகான் ஆதித்தியா நீ மகான்; நீ மகானாகையால் அவர்கள் உன் மகிமையைப் போற்றுகிறார்கள். தேவா நீ மகான், ௪ சூரியா நீ சிறப்பிலோங்குபவன்: தேவா நீ எப்போதும் மகானே: நீ பங்கமாகாத சோதி, விபு, புரோகிதன் உனது மகிமையால் தேவர் தலைவன். [௨௦. ருஅ.] ௬௪௭ [வசிஷ்டன்—இந்திரன்] ௧—௨ ருக்அ-வது சூக்தத்தின் முதல் இரு மந்திரங்களைப் பாருங்கள். ௩ ஜயித்தவனது செல்வம்போலே அவனது பொருள் ஓங்கிப் பெருகுகின்றது: குதிரைகளுள்ள இந்திரனை எந்த எதிரிகளும் ஜயிப்பதில்லை: அவன் சோமனைப் பொழிபவர்களுக்குச் சக்தியை யளிக்கிறான். ௪ யக்ஞாருகர்களுக்கு கர்வரஹிதமாயும், சுந்தரச் சேர்க்கையோடான சுந்தர சொரூபமாகும் மந்திரத்தைச் சொல்லுங்கள்: செயலால் இந்திரனோடு சேர்பவர்களை பாசங்கள் பந்தஞ் செய்யாது. [௨௦. ருக.] ௬௪அ [சுதகட்சன், சுகட்சன். ௧—௩. மதுச்சந்தர்கள். ௪—௬.] ௧ நீ வீரனின் நண்பன், நீ தீரன், நீ திடன்; நாங்கள் உங்கள் மனத்தை அடையலாமோ. ௨ செல்வபதியே பாலனஞ் செய்யும் எல்லா மக்கட்களாலும் செல்வம் அளிக்கப்பட்டுள்ளது; இந்திரா! நீ என்னோடு வசி. ௩ நீ ஆலஸ்யமுள்ள பிரமனைப்போலிருக்காதே. செல்வங்களின் பதியே பாலோடு பொருந்தும் சோமனிலே நீ இன்பமாகவும். ௪ தாஸ

னுக்குப் பக்குவமான சாகையைப்போலே, அவனது சத்தியம், செழுமை, சிறப்பு பசுச்செல்வம்—அவனை நாடுபவனுக்காகுக. ௫ என்னைப்போல் உபாசிப்பவனுக்கு, உனது மேலான உதவிகள் இரட்சைகளாகும். ௬ அவனது ஆசிகள் மனோகரமானவை ; இந்திரன் சோமனைப் பருக துதியும் ஸ்தோமமும் அவனுக்குச் சொல்லப்படட்டும். [௨௦. ௬௦.] ௬௪௧ [கோசூக்தயஸ்சவசூக்திநௌ — இந்திரன்] ௧ வர்ஷிப்பதாயும், சங்கிராமங்களில் ஜயிப்பதாயும், துரித நிலயமாயும், உலகஞ் செய்வதாயும், வச்சிராயுதந் தரிப்பதாயும் பொன் நிலயமாயுள்ள உனது மதத்தைத் துதி செய்கிறேம். ௨ மானிடனுக்கு மனனமுள்ளவனுக்கு நீ எதனுல் சோதியை யளிக்கிறுயோ அதனுல் நீ இன்பமாகி இத்தர்ப்பையிலே சோதி வீசுகிறுய். ௩ துதி செய்பவர்கள் இன்றும் பூர்வத்தில் போல், அவனைத் துதி செய்கிறுர்கள். விருஷப்பத்தினி சலங்களை தரிப்பதுபோல் நீ தினந்தோறும் சலங்களை வெல். ௪ பலர் துதிக்கும் அவனை நீ போற்று ; உங்கள் பாக்களால் பலமுள்ள இந்திரனை துதிசெய்யுங்கள். ௫ இரு அதி பலமுள்ள அவன், சோதியையும் புவியையுந் துரிதமலைகளையும் சலங்களையும் சோதியையும் தனது வர்ஷிக்கும் வலிமையால் தாங்குகிறுன். ௬ வெகு பலர்களால் போற்றப்படும் நீயே அரசன் ; விஜய சீலங்களான செல்வங்களையும் சிறப்பையுமளிக்க நீயே விருத்திரர்களை வீழ்த்துகிறுய். [௨௦. ௬௧.] ௬௫௦ [நிருமேதன் —இந்திரன்] ௧—௪ ௬௦௨-வது சூக்தத்தின் முதல் நான்கு மந்திரங்களின் தமிழ் வசனங்களைப் பாருங்கள். ௨ தருமஞ்செய்யும் இந்திரனுக்கு துதிக்கு அதி அறிஞுயுள்ள அவனுக்கு சாமனை கானஞ் செய்யுங்கள் ; அதி ஞானமுள்ளவனுக்கு பெரிய கானத்தை இசையுங்கள்.

௬ நீ அதிமேன்மை வாய்ந்தவன்; நீ சூரியனுக்கு சோதியை யளித்தாய்; நீ விசுவகர்மன், விசுவேதேவன், நீ மகான். எ நீ ஒளி வீசுஞ் சோதியோடு சோதிக்கு, ஒளி வீசும் மண்டலங்களுக்குச் சென்றாய்; இந்திரா! தேவர்கள் உனது நட்பை நாடுகிறார்கள். அ—க0. ௬சக-வது சூக்தத்தின் [ச—௬] மந்திரங்களைப்பாருங்கள். [உ0 ௬உ] ௬ருக [பலதேவர்கள்—இந்திரன்] நாங்கள் இந்திரன் விசுவே தேவர்களது—உதவியோடு இந்த உலகங்களை யெல்லாம் எங்கள் வசஞ்செய்து கொள்வோம்: இந்திரன் ஆதித்தியர்களோடு, எங்கள் யக்ஞத்தையும், காயங்களையும், எங்கள் பிரஜையையும் சமர்த்தஞ் செய்வானாக. உ தேவர்கள் அசுரர்களைக் கொன்று தேவத்வத்தைப் பாலனஞ் செய்பவர்களாய் அவர்கள் இங்கு வருங்கால் இந்திரன் ஆதித்தியர்களுடன் மருத்து கணங்களோடு எங்கள் காயங்களுக்குக் காப்பளிப்பானாக. ந தேவர்கள் தங்கள் திண்மைகளால் ஆதித்தியனை இங்கு கொண்டு வந்தார்கள். பிறகு பிரேரிதமான பலத்தைக் கண்டார்கள்: இதனால் தேவனால் நிறுவப்படும் பலத்தை யடைந்து, நூறு வருஷங்கள் வீரமக்கட்களுடன் இன்பமாவோமாக. ச இந்திரனே மானிடனுக்கு செல்வத்தையும் சக்தியையு மளிப்பவன்: அவனே எதிர்ப்பற்ற தலைவன். ரு அவன் அளிக்காதவனைப் புல்லைப் போல் எப்போது மிதித்து விடுவான்? அறிஞனே அவன் எங்கள் துதியை எப்போது கேட்பான்? ௬ எவன் சோமன் பொழிபவனாகி வெகு சனங்களுக்கு இதஞ் செய்ய உன்னையே சேவை புரிகிறானோ அவன் இந்திரனாகி உக்கிரப்பலத்தை அடைகிறான். எ இந்திரனே, பலம் ஓங்குபவனே நீ எந்த—பலத்தால் அத்திரிகளைக் கொல்லுகிறாயோ அந்த மதமளிக்கும், சோமோற்பத்தியினின்று

செம்மையாகி, சேதனமளிக்கும் — உன்னை — நாங்கள் துதிக்கிறோம். அ எதனால் இந்திரன் சமுத்திரத்தை இரட்சிக்கிறானோ, எதனால் அதிருகுவையும் தசக்வனையும் கலங்கச் செய்து சிறந்த புருடனை இரட்சிக்கிறானோ அதை அடைய அவனை நாடுகிறோம். கூ ருதத்தால் நிலையாகும் வழிக்கு நதியையும் எல்லாப் பிரவாஹங்களையும் இரதங்களைப்போல் எதனால் அவன் செலுத்துகிறானோ அதை நாங்கள் யாசிக்கிறோம். [உ0. கூங.] கூருஉ [நிருமேதர்கள் க—ங கோசுக்தயசுவசுக்தி நௌ—இந்திரன்] க இந்திரா, நீ பிரியனாய் சதாஜயிப்பவனாய், தரிசியாய் எங்கும் விரியும் மலையைப்போல் விசாலனாய், சோதிபதியான நீ வா. உ நீ புவிக்கும் சோதிக்கும் அதிக பலமுள்ளவன்: சக்தியனே சோமனைப் பருகும் நீ புவியைவிட சோதியைவிட அதிகவலிமை வாய்ந்தவன். சோதிபதியே சோமன்பொழிபவனை நீ சக்தியுடனாக்குகிறாய். ங இந்திரா சோதிபதியே, நீ சத்துருக்களின் எல்லாக்கோட்டைகளைத் தகர்ப்பவன். தஸ்யுக்களை யழிப்பவன். மானிடனைத் தாங்குபவன். ச அத்வர்யுவே அதி இன்பமளிக்கும் இனிய இரஸத்தைப்பொழி. செல்வமளிக்கும் வீரனும் இங்ஙனம் துதிக்கப்படுகிறான். ரு குதிரைகளின் நடுவே குதிரைத் தலைவனாயுள்ள இந்திரா உனது பூரண புகழை பலத்தாலும் புனிதத்தாலும் ஒருவனுமே அடைந்ததில்லை. கூ யக்ஞங்களால் சதா புகழப்படுவதற்கான இந்திரனை, பலத்தின் அதிபதியான இவனை புகழ்தேடுபவர்களாய் அழைத்துள்ளோம். [உ0. கூச.] கூருங [விசுவம்பரவையசுவன்—இந்திரன்] க நண்பர்களே! வாருங்கள். நாம் இந்திரனைத் துதிப்போம்: அவன் போற்றப்படுவதற்கு அருகனான வீரன். எவர்களுடைய உதவியுமன்றி அவன் எல்லா சத்துருக்களையுஞ் ஜயிக்கிறான்.

உ பசுக்களை இரட்சிப்பவனுக்கு, பசுக்களைத் தடுக்காதவனுக்கு திவ்யதேவனுக்கு தேனிலும் வெண்ணெயிலும் அதிகத் தித்திப்புள்ள அதிசயமொழியை மொழியுங்கள். ந எவனது வீறுகளுக்கு அளவில்லையோ எவனது செல்வத்துக்கு எல்லையில்லையோ சோதியைப்போல் தானசீலனுயுள்ள அவன் விசுவத்துக்கதிகன். [உ0. கூரு.]

கூருச க வியசுவன் துதித்ததுபோல் தாசனுக்கு எதிரி செல்வத்தை யளிக்கும் இந்திரனை, பயரஹிதனும் வழிபுலனுக்குபவனுமான இந்திரனைப் போற்று. உ வையசுவனே பத்தாவதிலும் புதியவனுயுள்ளவனைப் போற்று: உணர்வுள்ள மானிடர்களால் போற்றுவதர்க்கான அவன் அதி அறிஞன். ந வச்சிராயுதனே, இந்திரா பிரதி தினமும் ஒருவன் விபத்துக்களின்றும காத்துக் கொள்வதுபோல், நிர்ருதிகளினின்றும் நீங்கும்—வழியை—நீ அறிகிருய், [உ0. கூகூ.] கூருரு [பருச்சேமன் க — ந கிருத்ஸமதன் — ச — எ இந்திரன்]

க பொழிபவன் வசிக்கும் மனையை யடைகிருன்: அவன் பொழிந்து துவேஷிகளை தேவத்துவேஷிகளை துவம்சஞ் செய்கிருன். பொழியும் அவன் பல முள்ளவனுகி இடையூறற்று ஆயிரம் ஐசுவரியங்களை அடைகிருன். இந்திரன் அழியாத செல்வத்தைப் பொழிபவனுக்களிக்கிருன். ஆமாம் அழியாத செல்வத்தை அளிக்கிருன். உ மருத்துக்களே உங்களுடைய வீரச்செயல்கள் விழாமலாகுக: உங்களது சோதிமிகும் புகழ்கள் நாங்கள் மறையும் வரை அழியாமலாகுக: உங்களது அதிசயமான, புதியவையான பாழாகாத கோஷிப்பவையான அடைவதர்க்கரிதாகும் உங்களது செயல்களை ஒவ்வொரு யுகத்திலும் எங்களுக்களியுங்கள். ந நான் அக்கினியை ஹோதாவாயும், தானமளிப்பவனுயும் செல்வவானுயும்,

சக்தியின் மகனும் ஜாதவேதசனும் எல்லா மறியும் அறிஞனும் நல்ல யக்ஞனும், தேவர் தோயும் திடனும் அறிகிறேன். ஆஹுதமானவுடன் நெய்யினின்று சுவாலையோடு தோன்றுமவன் அதனை ஒளியோடு விரும்புகிறான். ௪ சோதியின் மானிடர்களே பாரத மக்கட்களே, யக்ஞத்தோடு தோய்ந்து சுந்தரமோங்கும் சக்திகளோடு, ஆபரணங்களோடு உங்கள் வழியைப் பிரகாசஞ் செய்பவர்களாய், தருப்பையிலே நண்பர்களாய் திகழும் நீங்கள் பௌத்திரத்தினின்றும் சோமனைப் பருகுங்கள். ௫ அறிஞனே தேவர்களை இங்கு கொண்டு வா, யக்ஞஞ் செய், ஹோதாவே நீ மூன்று ஸ்தானங்களில் உட்கார். உனது இன்பத்துக்கு அளிக்கப்படும் இனிய சோமனைப் பருகு. அக்கினியை எழுச்சி செய்பவனது பாகத்தினின்று சோமனைப் பருகு. உனது பாகத்திலே நீ திருப்தியாகவும். ௬ இது உனது ஆண்மையோங்கும் திண்மையை உறுதியாக்கும். ஜயமானது சதாகாலம் உனது கைகளில் வைக்கப்பட்டுள்ளது. மகவானே! உனக்கு இது பொழியப்பட்டு அளிக்கப்பட்டுள்ளது. நீ இந்த பிராமணத்தினின்று பருகு, நீ பூரணமாய்ப் பருகு. ௭ பூருவத்தில் அழைத்தவனை நான் இப்போது அழைக்கிறேன். அவனே அழைக்கப் படுவதர்க்காவான். அவனுக்கு 'அளிப்பவன்' என்னும் பெயருண்டு. அத்வர்யுக்கள் சோமனை இங்கு கொண்டுவந்தார்கள். செல்வமளிப்பவனே ஹோதாவின் கலசத்தினின்றும் ருதுக்களோடு சோமனைப் பருகு. [உO. சாஎ]

சா௫சா [மதுச்சந்தர்கள்—இந்திரன்] க—ங சா௪௫-வது சூக்தத்தின் முதல் மூன்று மந்திரங்களின் தமிழ் வசனங்களைப்போலாகும். ௪ அறிஞனாய் எவராலுஞ் ஜயிக்கப் படாமலுள்ள இந்திரனிடஞ் செல்: நண்பர்களுக்கதிக

மாகி கல்வியிலோங்கும் அவனை வினவு. ௫ இந்திரனைத் தவிர வேறு எவனையும் நாடாத உங்களை அணுகி வேறு எவனையாவது நாடு என—சில—மானிடர்கள் பரிகாசஞ் செய்யலாம். ௬ அதிசயங்களுள்ள தேவனே சத்திய மிகும் எங்களது சனங்கள் எங்களைத் தன்யர்கள் எனச் சொல்லலாம். ஆனால் நாங்கள் இந்திரனது காப்பிலேயே ஓங்கவேண்டும். ௭ யக்ஞச் சிறப்பாயும் மதமளிப்பதாயு முள்ள துரிதனைத் துரிதனுக்குக் கொண்டு வா: அது நண்பனுக்கு சிறகையும் சந்தோஷத்தையு மளிக்கும். ௮ சதக்கிரதுவே நீ இதைப் பருகினாய்; நீ விருத்திரனை வீழ்த்தினாய்; சமரிலே நீ வீரனுக்குத் துணை புரிகிறாய். ௯ சதக்கிரதுவே சமரிலே சக்திமிகும் உன்னை நாங்கள் சக்தியுடனாக்குகிறோம், இந்திரா நாங்கள் செல்வத்தை ஜயிக்கவேண்டும். ௧௦ சோமன் பிழிபவனுக்கு அவன் துரித நண்பனாவான். அதிசெல்வச் செழுமையை யளிப்பான்; இந்த இந்திரனுக்கு கானத்தைக் கோஷியுங்கள். ௧௧ நீங்கள் இங்கு வாருங்கள், உட்காருங்கள்: நண்பர்களே ஸ்தோமங்களை வகித்து இந்திரனுக்கு கானஞ் செய்யுங்கள். ௧௨ பொழிந்த சோமனில் செல்வர்களில் செல்வனையும் சிறந்த செல்வபதியுமான இந்திரனுக்கு ஒன்று சேர்ந்து—துதியுங்கள். [௨௦. ௬௮]

௬௫ள ௧ அவன் எங்களது யோகத்தில் உதவி செய்வானாக; எங்களுக்கு செல்வமோங்கச் செய்வானாக; அவன் எங்களுக்குச் செல்வங்களோடு வருவானாக. ௨ சமர்களில் சத்துருக்களால் தடுக்கமுடியாத குதிரைகளுள்ள இந்திரனுக்கு கானஞ் செய்யுங்கள். ௩ தயிரோடு கலந்த சோமன்கள், இந்த சுத்தபானங்கள் சோமனைப் பருகுபவனது இன்பத்துக்காகப் பாய்கின்றன. ௪ அதிதிடமோங்கும், இந்திரா தலைமை பதவிக்கு சதா

விருத்தியாகும் நீ சோமபானம் பருகத் தோன்றியுள்ளாய். ரு மொழி விரும்பும் இந்திரா இத்தூரித சோமன்கள் உன்னில் நுழைக. அறிஞனை உனக்கு அவர்கள் இன்பமளிப்பார்களாக. ௬ நூறு சக்திகளுள்ளவனே எங்கள் துதிகளும் தோத்திரங்களும் உன்னைத் திண்மை செய்துள்ளன. எங்கள் மொழியும் உன்னை விருத்தி செய்க. எ சதாகாலமும் சகாயம் செய்யும் இந்திரா எல்லா ஆண்மைகளும் நிறைந்துள்ள இச்செல்வங்களை அளி. அ துதிக்கருகனை இந்திரா மானிடர்கள் எங்கள் காயங்களுக்கு இன்னல் செய்யாமலாவார்களாக. ௯ சஞனை நீ இடர்களை விலக்கு. ௧—௧௧. ௬௧௨-வது சூக்தத்தின் [௪—௬] மந்திரங்களைப்போலாகும். ௧௨. ௬௨௮-வது சூக்தத்தின் மூன்றாவது மந்திரத்தைப் போலாகும். [௨௦ ௬௬.] ௬௫அ ௧ திடமுடைக்கும் உக்கிர தேவர்களுடன் சேர்ந்து குகையிலுள்ள பசுக்களை நீ கண்டாய். ௨ திவ்யம் நாடும் அறிஞர் எங்ஙனம் மனனஞ் செய்வதற் கருகராகச் செல்வனைச் சிறப்புவாயும் சிரேஷ்டனை நன்கு அறிகிறரோ அங்ஙனம்அவர்கள் துதிக்கிறர்கள். ௩ ௩ அவர்கள் அச்சம் நீங்கி இந்திரனோடு இணைந்து நன்கு இலங்குகிறர்கள். ஏனெனில் அவர்கள் பரஸ்பரம் அன்போங்கும் சமான தேஜசுள்ளவர்கள். ௪ அறிஞன் சக்திமிகும் இந்திரனது பிரியமான குற்றமற்ற சேனைகளோடு முழக்கஞ்செய்கிறன். ரு எங்கும் சுற்றித்திரியும் இந்திரா இங்கு வா: ஒளி வீசும் சோதியினின்று இங்கு வா: எல்லாத் துதிகளும் இவனை நாடுகின்றன. ௬ இங்கிருந்தோ, சோதியினின்றோ புவியின் உயரத்தினின்றோ, விரிந்த வானத்தினின்றோ செல்வமடைய இந்திரனை நாங்கள் சாற்றுகிறோம். எ—௯ ௬௨௬ வது சூக்தத்தின் [௪-௬-வது] மந்திரங்களைப் போலாகும். ௧௦

இந்திரா, உக்கிரா, உக்கிரமான உதவிகளோடு ஆயிரஞ் செல்வங்களை அடையும் சமர்களிலே எங்களுக்கு உதவி செய். கக. வச்சிராயுதத்தால் சத்துருக்களை வீழ்த்தும் நண்பனான இந்திரனை நாங்கள் பெரிய போரிலே சிறிய போரிலே அழைக்கிறோம். கஉ சதாகால தானசீலனே சுந்தரனே சக்திவாய்ந்தவனே எதிர்ப்பற்ற நீ எங்களுக்கு மேகத்தைத் திற. கங ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இன்னும் மேன்மேலும் வச்சிராயுத இந்திரனின் ஸ்தோமங்கள் எழுகின்றன. அவருக்—கருகதையான—நற்ஸ்துதியை நான் அறிவதில்லை. கச விருஷபம் கூட்டச்களைச் செலுத்துவதுபோல் எதிர்ப்பற்றத் தலைவனான இந்திரன் சனங்களை தன் சக்தியால் சலனஞ் செய்கிறான். கரு இந்திரனே மானிடர்களையும் பஞ்சமானவர்களையும் செல்வங்களையும் புவியில் வசிப்பவர்களையும் அரசுபுரிகிறான் கசு சுஉஎ-வது சூக்தத்தின் முதல் மந்திரத்தைப்போலாகும். கஎ இந்திரா சதா ஜயிப்பதாதாயும் சதா சக்திவாய்வதாயும் இன்ப மளிப்பதாயும் அதி சிறப்புற்றோங்குவதுமான செல்வத்தை யளி, எங்களுக்குச் சகாயஞ் செய். கஅ இரதத்தோடு உன்னால் உதவியாகி சமரில் முட்டிப்போர் செய்து சத்துருக்களை ஜயிப்போமாக. ககூ வச்சிராயுதனான இந்திரா உன்னால் உதவியாகி வச்சிராயுதத்தை உயர்த்திச் சமரிலே சத்துருக்களை நாங்கள் ஜயிக்கலாமோ. உ0 இந்திரா நண்பனான உனது சகாயத்தோடு, எய்யும் சரங்களுள்ள சூரர்களோடு, சமரிலே நாங்கள் எதிரிகளை வெல்லலாமோ. [உ0. எ0.] சுருகூ க இந்திரன் மகான், மேன்மை வாய்ந்தவன்; வச்சிராயுதனுக்கே மகிமையாகுக; விரியும் சோதியைப்போல் அவனது வலிமை விசாலமாகும். உ அவனது வலிமை அறிவு

மிகும் அறிஞர்களையும் அமரில் சூரர்களாய் வரும் மக்கட்களையும் காப்புச் செய்கின்றது. ௩ அவனது குடல் சோமபானத்தைப் பருகி, உச்சியினின்று வரும் பிரவாஹத்தால் ஓங்கும் கடலைப்போல், பெருகும். ௪—௬ ௬௪ அ-வது சூக்தத்தின் ௪. ௫, ௬-வது மந்திரங்களைப்போலாகும். ௭ இந்திரா நீ எல்லா சோம இரசங்களாலும் இன்பமாகிறாய், பலமோங்கும் நீ பாலனஞ் செய்பவன். ௮ இன்பமளிக்கும் தூரிதமான இரஸத்தை சீவனுக்கு இன்பமளிக்கும் சாரை நீங்கள் இந்திரனுக்குப் பொழியுங்கள். ௯ விசுவங்காண்பவனே சுந்தரமுகனே இன்பமளிக்கும் ஸ்தோமங்களால் இந்த சோமனளிக்கும் யக்ஞங்களிலே நீ இன்பமாகவும். ௧௦ இந்திரா விருஷபனையும் பதியாயுமுள்ள உனக்கு கானங்கள் பொழிந்துள்ளன; பன்முறை கோஷித்து எழுந்துள்ளன. ௧௧ இந்திரா அதி சிறப்புடனோங்கும் நீ எங்களுக்கு அதிசயச் செல்வத்தை அளி; பிரபுத்வதும் விபுத்வவம் உன்னுடையது. ௧௨ செல்வம் மிகுந்தவனே, இந்திரனே புகழும் முயற்சியுமுள்ள நீ, எங்களுக்குச் செல்வத்தைப் பிரேரணை செய். ௧௩ இந்திரா எங்களில் பசுச்செல்வத்தையும், பலத்தின் புஷ்டியையும் பெரும் புகழையும், விசுவாயுவையும் அக்ஷயமான—உணவையும்—மளி. ௧௪ இந்திரா எங்களுக்கு அதி புகழையும் ஆயிரமளிக்கும் செல்வங்களையும் இரதங்களோடான சேனைகளையு மளி. ௧௫ எங்கள் துணைக்கு வரும் துதிக்கருகனையும் செல்வபதியாயும் செல்வனையுமுள்ள இந்திரனை, நாங்கள் சொற்களால் சாற்றி அழைக்கிறோம். ௧௬ ஒவ்வொரு யாகத்தில் வசிக்கும் அதி பெரியவனையுள்ள இந்திரனுக்கு அறிஞன் பலத்தை முழங்குகிறான். [௨௦. ௭௧]

௬௬௦ [பருச்சேபன்—அத்யஷ்டயன்] ௧ இந்திரா எல்லா

யக்ஞங்களிலும் மானிடர்கள் சமான ஐக்கிய—பாவத்தோடு — வர்ஷிக்கும் — சிந்தனையுடன் தனித்தனியாய் சோதியை விரும்புபவர்களாய் உன்னை ஒவ்வொருவரும் துதி செய்கிறார்கள். நாங்கள் சக்தியின் ஸ்தம்பமான இரதத்திலே கப்பலைப்போல் நடத்திச் செல்லும் உன்னை ஸ்தாபிக்கிறோம். யக்ஞங்களால் இந்திரனுக்குச் சமானமான அறிஞர்களாகி, மானிடர்கள் இந்திரனைத் துதிகளால் சேர்கிறார்கள். ௨ இந்திரா! தம்பதிகள் உன் உதவியை நாடுபவர்களாய், கோசாலையைப் பற்ற திரவியங்களைப் பொழிபவர்களாய், உன்னை நாடி பொருள்களை அளிப்பவர்களாய் உன்னில் வாசஞ் செய்கிறார்கள். இந்திரா! செல்வந்தேடும் இருவர்கள் சமரில் பரஸ்பரம் சேருங்கால், உன்னைச் சதாகாலங் காக்கும் விருஷபனையும், வச்சிராயுதனையுமுள்ள உனது நட்பை, நீ புலனாக்குகிறாய். ௩ இந்த உஷை எங்களுக்கு நன்மை அளிப்பாளாக. நாங்கள் சுவர்க்கத்தை அடைய எங்கள் அழைப்பையும் எங்கள் துதியையும் தியாகங்களையும் அவள் கவனிப்பாளாக. வச்சிராயுதமுள்ள இந்திரா, வலியவனாய் நீ சத்துருவை வீழ்த்துங்கால் நவமாய்த் தோன்றிய அறிஞனான எனது சொல்லைக்—கேள். புதிய அறிஞனது துதிக்குச் செவிகொடு [௨0. எ௨] ௬௬௧ ௧ சூரனே உனக்கே இந்த எல்லா யக்ஞங்களும். உன்னை வளர்க்கும் இந்த பிரமங்களை உனக்கு அளிக்கிறேன். நீ ஒவ்வொரு நிலயத்திலும் மானிடர்களால் போற்றுவதற்கருகன். ௨ அதிசயனே, போற்றுவதர்க்கருகனான உக்கிரன். உனது மகிமையை எவனும் அணுக முடியாது. இந்திரா உனது வீரத்தையும் செல்வத்தையும் எவனும் அடைய இயலாது. ௩ அறிஞனும் மேன்மை மிகுந்து மேன்மை யோங்குபவனுக்கு உங்கள் காணிக்கைகளை

யும் நற்கருத்துக்களையும் அளியுங்கள். மானிடனை நிரப்பும் அவன் ஒவ்வொரு மனைக்கும் செல்லுகிறான். ௪ பழைய புகழுள்ள மகவான் புத்திமான்களோடு புரவி இழுக்கும் இரதத்தையும் பொன்மய வச்சிராயுதத்தையும் தரிக்குங்கால் இந்திரன் எப்போது மோங்கும் புகழுடன் வலிமை பதியாய் அரசுபுரிகிறான். ௫ கூட்டம் கூட்டமாய் வரும் இம்மழை அவனுடையதே. இந்திரன் அவனது பொன்மய தாடியிலே சலதுளிகளை வீசுகிறான். இனிய இரசம் பொழியுங்கால் அவன் இனிய நிலயத்தைத் தேடுகிறான். காற்று வனத்தைக் கலக்குவது போல் அவன் சத்துருவைக் குலுக்குகிறான். ௬ எவன் வாணியாலும் ஒங்கும் வசனத்தாலும் வீழ்த்தும் வாக்காலும் ஆயிரந்துட்டர்களைக் கொன்றானோ தந்தைபோலாகி எவன் திடத்தால் நம்மைத் திண்மையுடன் செய்தானோ அந்த இந்திரனது வெகுபல வீரச்செயல்களை நாங்கள் போற்றுகிறோம். [உ௦. எ௩] ௬௬௨ [சுனச்சேபன்—இந்திரன்] ௧ சத்தியனே சோமபானம் பருகுபவனே, இந்திரனே, அதிசெல்வனே நாங்கள் ஆசையற்றவர்களாலும் எங்களுக்கு சுந்தரமான ஆயிரம் கோகுதிரைச் செல்வங்களின் ஆசிகளை அளியுங்கள். ௨ சுமுகமுள்ளவனே, சக்திமிகுந்தவனே சக்திபதியே எல்லா தீரச்செயல்களும் உனதே. இந்திரா எங்களுக்கு.......... அளியுங்கள். ௩—காம— எண்ணங்களுடன் பரஸ்பரம் நோக்கும் இருவரை இனிவிழிக்காமலாகத் தூங்கச்செய். இந்திரா எங்களுக்கு..............அளியுங்கள். ௪ சத்துருக்கள் தூங்குவார்களாக. சூரத்வ மோங்கும் தானசீலர்கள் விழித்திருப்பார்களாக. இந்திரா.................. .......அளியுங்கள். ௫ இந்திரா வெகுபல கயமோங்கும் களைப்புள்ள இந்தக் கழுதையைக் கொல். இந்திரா.......

................அளியுங்கள். ௬ பீழை என்னும் புசல் சுழன்று வனத்தின் வெகுதூரத்தில் வீழ்க. இந்திரா..........அளியுங்கள். ௭ இந்திரா இகழும் ஒவ்வொருவனையு மழி. இரகசியத்திலே எங்களைத் துன்பஞ்செய்பவனையு மழி இந்திரா...............................அளியுங்கள். [உO. ௭௪] ௮௬௫. ௧. ௮௬O வது சூக்தத்தின் இரண்டாவது மந்திரத்தைப்போலாகும். ௨ இந்திரா நீ எதனால் சரத்காலக் கோட்டைகளை இடிக்கிறாயோ எந்த ஜயசீலமாகுஞ் சக்தியால் அவற்றை இறுத்துகிறாயோ அந்த வீரத்தை அனைவரும் பூரணமாயறிகிறார்கள்; இந்திரா! வயபதியே உன்னோடு இணையாதவனை நீ இடித்தாய்; இப்பெரிய புவியையும் இச்சலப் பிரவாஹகங்களையும் இன்பமான இருதயத்தோடு நீ உனக்கே இணைத்துக்கொண்டாய். ௩ வயந்தோய்ந்தவனே: உன்னை நண்பனாக விரும்பி, உன்னிடம் மன்றாடுபவர்களுக்கெல்லாம் உனது இன்பத்திலே துணைபுரியுங்கால் அவர்கள் வீரனான உனக்கு முழக்கச் செய்கிறார்கள், உக்கிர சமர்களில் அவர்களுடைய யுத்தகோஷத்தை நீ ஜயமுழக்கஞ் செய்தாய்; உன்னிடமிருந்து ஒவ்வொரு நதியையும் அவர்கள் அடைந்தார்கள்; புகழ் விரும்பி அவர்கள் அவற்றைப் பற்றினார்கள். [உO. ௭௫] ௮௬௪ [வசுக இந்திரன்—இந்திரன்] ௧ போஷிக்கும் இருவர்களே! வனப்பில் நிலையாகும் ஸ்தோமம் தூய்மையாய் இன்பஞ்செய்வதாய் உங்களையே சேர்கின்றது; எவனது ஹோதாவாய் வெகு பல தினங்கள் இந்திரன் இலங்குகின்றானோ அவன் வீரர்தலைவன், மானிடரது நண்பன் புவியின் இரட்சகன். ௨ அதிவீரனான சூரனே! உனது இந்த உஷையும் அடுத்துவரும் நடனமும்—தோன்றுங்கால் நாங்கள் உனது உயரிய நரர்களாவோமாக: முச்சோதியோடாகும் உனது ஜயசீலமான இரதம் குத்ஸ

ளோடு நூறு தலைவர்களை இங்கு கொண்டு வருக. ௩ இந்திரா! உனக்குத் திருப்தியளித்த—இன்பமளிக்கும்—பானம் எது? உக்கிரனே. நீ எங்கள் கானங்களுக்கும் கவாடங்களுக்கும் துரிதமாகவும். நீ என்னிடம் ஏன் வருகிறாய்? எந்த மனனம் உன்னை இழுக்கின்றது? உன்னருகிலாகி செல்வம் பற்ற உணவைக் கொண்டு வருவோமாக. ச வீரர்களின் நடுவே உன்னைப்போல் புகழுள்ளவன் எவன்? நீ எத்திட்டத்தால் செய்வாய்? நீ ஏன் எங்களை நாடியுள்ளாய்? நீ மித்திரன், நீ சத்தியன், நீ விரிந்த கீர்த்தியுள்ளவன்; உனது அறிவுகள் அனைத்துக்கும் ஆதாரமாகுங்கால் நீ போஷணை மளிப்பவனாவாய். ரு புருஷர் மனைவிகளின் விருப்பத்தைச் செய்வதுபோல், சூரியன் கமனத்தை முடிப்பதுபோல் அவனது விருப்பத்தைப் பூர்த்திசெய்பவர்கள் அதி துரிதமாய் ஆனந்தமாவார்கள். பல கார்யங்களில் புலனாகும் இந்திரா உணவுகளால் உயரிய அறிவு ஓங்கும் மொழியை அளிப்பவர்களுக்கு நீ உன்னத நிலையை யளி. சு இந்திரா உனது மகிமை பூரண சோதிபோல் விரிந்தது, உனது அறிவு புவியைப்போல் பரவியது. அவை இந்த உனது மகிமையை யளந்துள்ளன. நெய்யோடு சோமன் சேர்க்கப்பட்டு உனக்கு இங்கு வரிப்பதற்கு அருகதையாயுள்ளது; இனிய பானம் நீ பருகுவதற்கு இனிமையாகுக. எ அவர்கள் இந்திரனுக்கு இனிய இரஸம் மிகும் கலசத்தைப் பொழிந்துள்ளார்கள். ஏனெனில் அவனே உண்மையான செல்வான். மானிடரது நண்பனான அவன், வீரச்செயற்களால் சங்கற்பத்தால் விரியும் புவியில் வளர்ந்துள்ளான். அ ஓங்கும் ஓஜசுடனான இந்திரன் சமர்களில் பலரை ஜயித்துள்ளான். அவனது நட்பையடைய சனங்கள் கூட்டமாய் முயற்சிக்கிறார்கள். யுத்தத்துக்கு செல்வதுபோல் உனது

இரதத்திலேறு; மங்களமளிக்கும் சுமதியுடன் எங்களுக்கு வா. [௨.0. ௭௬] ௬௫ [வாமதேவன்—இந்திரன்]
௧ அதிவிசையுள்ள சத்தியனான மகவான் இங்கு வருவானாக: எங்களை அணுக அவனது அசுவங்கள் துரிதமாகுக. அதிசக்தி மிகும் இரஸத்தை நாங்கள் அவனுக்குப் பொழிந்துள்ளோம்: மொழியால் போற்றப்படும் அவன் இங்கு—எங்களைப் போஷிப்பானாக. ௨ சூரனே பயணத்தின் முடிவில் பிணையைப் பிரிப்பதுபோல் உன்னை இன்பமாக்கச்செய்யும் இந்த யக்ஞத்திலே இன்று எங்களை—முக்தஞ்செய்ய—வா: அறிஞன், உசனனைப்போல் அறியும் ஞானிக்குத் துதியைச் செய்வான். ௩ பருகிய விருஷபன் எங்கள் யக்ஞத்தைத் துதிசெய்யுங்கால் அறிஞன் இரகசியத்திலே புனிதச் செயல்களைச் செய்வதுபோல், இங்கு அவன் சோதியினின்று ஏழு இரசிமிகளை சனனஞ்செய்தான்: புகழப்படும் அவை, புலப்படும் பொருள்களைப் புலனாக்கியுள்ளன. ௪ கிரணங்களால் சோதியின் மகா சோதியை அவன் செம்மையாக்குங்கால், அவை சூரியோதயத்திலே பெருஞ் சோதியை பிரகாசிக்கச் செய்தன: வீரர் தலைவனான அவன் தன் வலிமையால் இருண்ட இருளை வீழ்த்தியபோது மானிடர்கள் முற்றும் பார்க்கிறார்கள். ௫ அதிவேகனான இந்திரன் ஓங்கி வளர்ந்துள்ளான்: அவன் தனது மகிமையால் சோதியையும் புவியையும் நிறைத்துள்ளான்: அவனுடைய மகிமை இதனின்றும் அதிகம்; மகிமையால் எல்லா உலகங்களையும் அவன் அதிக்கிரமித்துள்ளான். ௬ எல்லா மானிடச் செயல்களையும் நன்கறியும் சக்கரன், ஆர்வமுள்ள நண்பர்களோடு சலங்களை விடுதலை செய்தான்: அவர்கள் மொழிகளால் மலைகளைப்பிளந்து திறந்தார்கள்; அவர்கள் விருப்பத்துடன் கோசாலையை விளக்கஞ் செய்தார்கள்.

எ அவன் பிரவாஹந் தடுக்கும் விருத்திரனை வீழ்த்தினான்: உனது இடிமுழக்கத்தைத் தூரிதஞ்செய்ய உணர்வுடனான மேதினி உதவி செய்தாள்; வீரசூரனே! வலிமையால் தலைவனை நீ சலநிதியின் சலங்களை வரச் செய்தாய். அ அதிகமழைக்கப்படுபவனே! நீ சலங்களின் சிலையைப் பிளந்தபோது சரமைத் தன்னைப் புலனாக்குபவளாய் உன் முன் சென்றாள்; அங்கிரசர்களால் போற்றப்பட்டு கோசாலையைப் பிளப்பவனாய் நீ தலைவனாய் எங்களுக்கு அதிபலத்தை அளித்தாய். [உ0. எஎ. க—அ] சுசுசு [சம்யு ரிஷி—இந்திரன்] க யாகத்திலே, வலிய விருஷபன்போலுள்ள அதிக மழைக்கப்படுபவனுக்கு இந்த—கானத்தை கோஷியுங்கள். உ அதிமேன்மையான அவன் நமது சொற்களைச் செவியுற்றால் பசுச் செல்வத்தையும் வாய்மைப் பொருளையும் அளிக்கத் தவறுவதில்லை. ங தஸ்யுவை அழிப்பவன் பசுச்சாலையை எங்களுக்குப் புலனாக்குவானாக. [உ0. எஅ] சுசுஎ [வசிஷ்டன் சக்திர்வா ரிஷி—இந்திரன்] க. ருகரு-வது சூக்தத்தின் சுஎ-வது மந்திரத்தைப் போலாகும். உ உனது துணையால் நாங்கள் அறியாத வலிய சத்துருக்களால் திட்டன் தூயமற்றவரால் ஆக்கிரமிக்காமலாக வேண்டும்: சூரனே பாயும் பிரவாகங்களையெல்லாம் நாங்கள் உன்னால் கடப்போமாக. [உ0. எகூ] சுசுஅ [சம்யு—இந்திரன்] க அதிசய தேவனே, சுந்தரமுகமுள்ளவனே, வச்சிராயுதனே இந்திரா வானத்திலும் சோதியிலும் நீ வியாபகஞ் செய்துள்ள உக்கிரம் மிகுந்து உயர்ந்து ஓங்கும்பொருளையும் புகழையும் எங்களுக்களி. உ அரசனே, தேவர்களில் அதிபலம் தோய்ந்தவனே மானிடர்களை ஆட்சிபுரியும் உன்னை உதவிக்கழைக்கிறோம்; மேலான தேவனே எங்கள் புன்மைகளையெல்லாம் நீக்கு, எங்கள் சத்துருக்களை சுலபமாய்

ஜயிக்க எங்களுக்குச் சக்தியை யளி. [உ0. அ0] சுசுசு [புருஹன்மா—இந்திரன்] க இந்திரா நூறு சோதிகளும் நூறு புவிகளும் உனதாகும்: வச்சிராயுதனே உனது சனனத்திலே இரு உலகங்களும் நூறு சூரியர்களும் உனக்குச் சமானமாகாது. உ வீரனே, வலியனே, எல்லா வன்மைகளோடு வலிமையுடன் நீ உனது வீரச் செயல்களைச் செய்துள்ளாய்: மகவானே, வச்சிராயுதனே அதிசய ஆதரவுகளுடன் பசு நிறையுஞ் சாலையை எங்களுக்களி. [உ0 அக.] சுஎ0 [வசிஷ்டன்—இந்திரன்] க இந்திரா, செல்வமளிக்குந்தேவனே! உன்னைப்போல் நான் செல்வங்களின் அதிபதியாயிருந்தால் நான் துதிப்பவனைப் பாலனஞ் செய்வேன்: அவனைத் துக்கத்தில் விட்டுவிடேன். உ எங்கிலேயிலிருந்தாலும் என்னைத் துதி செய்பவனை ஒவ்வொருநாளும் நான் செல்வனாய்ச் செய்வேன்: மகவானே உனக்கு நிகரான அரசனில்லை, உனக்கதிகமான தந்தையுமில்லை. [உ0. அஉ] சுஎக. [சம்யு—இந்திரன்] க இந்திரா முக்காப்பு முப்பலமோடு, சுவஸ்திமிகும் சரணத்தை அளி: வசிக்கும் நிலயத்தை என்னிலும் செல்வவான்களிலும் அளி. உனது சரத்தை இவர்களிடமிருந்து நீக்கு. உ இந்திரா! மொழி விரும்பும் மகவானே பசுவை அபகரிக்குஞ் சித்தத்தோடு சத்துருவைச் சினப்பவர்களினின்றும், சக்தியால் செறிப்பவர்களினின்றும் எங்களை நெருங்கிப் பாலனஞ் செய். [உ0. அங.] சுஎஉ [மதுச்சந்தன்—இந்திரன்] க இந்திரா அதிசய ஒளியுள்ளவனே, சூட்சம செயல்களால் சுத்தமாகி, இந்த யக்ஞங்கள் உன்னை விரும்புகின்றன. உ இந்திரா அறிவால் பிரேரிதமாகி மேதையால் தூரிதமாகும் பொழியும் பிராமணனது மொழிகளுக்கு வா. ங இந்திரா குதிரைகளுள்ள நீ|அதிதுரிதனாய் துதிகளுக்கு

வா. நாங்கள் பொழியும் இரசத்தில் இன்பமாகவும் [உ0. அச.] சுஎங [மேதாதிதி மேத்யாதிதி—இந்திரன்] க நண்பர்களே வேறு எவனுக்கும் புகழளிக்காதேயுங்கள்: உங்களை ஒரு துன்பமுமணுகாது: இரசம் பொழியப்படுங்கால் சக்தி மிகும் இந்திரனையே போற்றுங்கள்: அடிக்கடி அவனுக்கு உங்கள் துதியைச் சொல்லுங்கள். உ எவனையும் ஆக்கிரமிக்கும் விருஷபனையும் அழியாதவனையும் மானிடனை ஜயிப்பவனையும் பசுவைப் போல்—தான சீலனையுமுள்ளவனை—பகைக்கும் நட்புக்குங்காரணனையும் இருவர்களுக்கும் உதார சீலனையுமுள்ளவனைப் போற்றுங்கள். ங இந்திரா! இம்மானிடர்கள் உனது உதவியை அடைய நானாவித வழிகளாலழைத்தாலும் தினந்தோறும் உன்னைப்போற்றும் எங்களது புனிதமொழி இதுதான். ச மகவானே அறிந்து கானஞ் செய்பவர்களில் அரிக்களுடைய கானங்களை உன் பலத்தாலொழித்து விடு: நாங்கள் இரட்சிப்புடனுகை வெகுபலரூபங்களுள்ள பலங்களை எங்களுக்குக் கொண்டு வா. இங்கு வா. [உ0. அடு.] சுஎச [விசுவாமித்திரன்—இந்திரன்] க பரஸ்பரம் இன்பமான நண்பர்களான இரு குதிரைகளை பிரமத்தோடு பிரமத்தால் பிணைக்கப்படும் புரவிகளை நான் பூட்டுகிறேன்: இந்திரா! சுகமாயும் திரமுமான உனது இரதத்திலேறி அறிவும் ஆற்றலுமுள்ள நீ சோமனுக்கு வா. [உ0. அசு.] சுஎடு [வசிஷ்டன்—இந்திரன்] க அத்வர்யுக்களே, சனங்களின் விருஷபனுக்கு சுத்தமாயும் செழிப்பாயுமுள்ள சோமனது அம்சத்தை யளியுங்கள்: சோமன் பொழிபவனை அநுசரிக்கும் இந்திரனைப்போல் சோம பான நிலயத்தை ஆற்றலும் ஆர்வமுள்ள எவனும் அறிவதில்லை. உ இந்திரா உயரிய சோதியிலாசிரயமாகும் எந்த சுந்தரமான அன்னத்தை

நீ தரிக்கிருயோ அதன் இரசத்தைப் பருக நீ விரும்பு கிருய் : இருதயத்திலும் மனத்திலும் இன்பமாகி உன் முன் வைக்கப்பட்டுள்ள சோமனைப் பருகு. ௩ நீ சனன சமயத்திலேயே சத்திக்காக சோமனைப் பருகினுய் : உனது எதிர்கால மகிமையை உனது தாய் மொழிந் தாள் : இந்திரா நீ நடுவானத்தைப் பூரணஞ் செய்தாய் : போரினுல் நீ தேவர்களுக்கு எல்லாப் பொருள்களையு மளித்தாய். ச புஜபலத்தில் கர்வ மடைந்துள்ள துடுக் கர்களை நீ தூண்டுங்கால் நாங்கள் துவம்சஞ் செய் வோம்: இந்திரா ! நீ வீரர்களோடு சூழ்ந்து சமர் புரியுங் கால், உன்னுல், புகழோங்கும் சமரிலே நாங்கள் ஜயிப் போம். ரு நவமாய் மகவான் செய்த செயல்களையும் இந் திரனது பூர்வச் செயல்களையும் நான் புகல்வேன். அதேவி களான மாயைகளை யெல்லாம் அவன் ஜயித்தவுடன் சோமன் அவனுக்கேயானுன். சு உன்னைச் சூழ்ந் துள்ள பசுக்களின் இவ்வுலகம் உன்னுடையது : அதை நீ சூரியனுடைய கண்ணுல் காண்கிருய் : இந்திரா : நீயே பசுக்களின் தலைவன் : நீ அளிக்கும் செல்வங்களை நாங் கள் அனுபவிக்கலாமோ. எ சு0ரு-வது சூக்தத்தின் கஉ-வது மந்திரத்தைப் போலாகும். [உ0 அஎ.]

சுஎசு [வாமதேவன்—பிரகஸ்பதி] க எந்தப் பிரகஸ் பதி தனது பலத்தாலும் முழக்கத்தாலும் புவியின் எல்லை களைத் தாங்கியுள்ளானே எவன் மூன்று நிலைகளிலே அமர்ந்துள்ளானே எவன் இனிய நாவுடனுள்ளானே அவனை பழைய அறிஞர்களான ரிஷிகள் தியானஞ் செய் பவர்களாய் தங்கள் முன் ஸ்தாபனஞ்செய்துள்ளார்கள். உ பிரகஸ்பதியே கலக்கமளித்து களிப்போங்கும் எங் களைச் சூழ்ந்துள்ள மருத்துக்கள்—அதி அறிவு ஓங்குப வர்கள் : பிரகஸ்பதியே, பொழிவதாயும் சதாசலனமாவ

தாயும், மூலஸ்தானமாயுமுள்ள கோசாலையை இம்சை செய்யாமல் பாலனஞ் செய். ஙு பிரகஸ்பதியே ருதத்தை பற்றுபவர்கள் வெகு தூரத்தினின்றே உட்கார்ந்துள்ளார்கள்: உனக்கு மலையினின்று, முழக்கஞ்செய்து இனிய தாரைகளைப் பொழியும் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. ச பிரகஸ்பதி பரம நிலயத்திலே மகா சோதியினின்று முதன்மையாய்த்தோன்றியபோது, அதிபலமுள்ள அவன் தனது ஏழுவாய்களாலும், இடி முழக்கத்தோடு ஏழு இரசிமிகளால் அந்தகாரங்களைப் பிளந்தான் ரு பிரகஸ்பதி தன்னைத் துதிக்கும் முழக்குங்கணத்தோடு கோஷத்துடன் கொடுமையான வலனைக் கொன்றான்; பிரகஸ்பதி அவிகளைப் பக்குவஞ் செய்பவர்களாயும் நாதஞ் செய்பவர்களுமான கன்றுகளை, பசுக்களை ஆரவாரத்தால் சலனஞ் செய்தான். சா. நாங்கள் யக்ஞங்களாலும் வணக்கங்களாலும் அவிகளாலும் விசுவே தேவர்களின் தலைவனான தந்தையைப் போற்றுகிறோம்: பிரகஸ்பதியே நாங்கள் நல்ல பிரஜையோடும் வீரமக்கட்களோடும் செல்வபதிகளாக வேண்டும். [உ0. அஅ.] சுஎஎ [கிருஷ்ணன்—இந்திரன்] க வில்லாளன் சரத்தை வெகுதூரம் எய்வதுபோல் அழுகுக்கு அலங்காரத்தைப்போலே அவனுக்குத் துதியை யளி. அறிஞர்களே உங்களது ஓசையால் துட்டர்களின் ஒலியை அடக்குங்கள், மேதாவியே இந்திரனை சோமனருகில் செய். உ துதிப்பவனே கறப்புக்குப் பசுவைப்போலே உனது நண்பனை இழு. இந்திரனை காதலன்போல் எழுப்பு. செல்வத்தால் நிறைந்த கோசத்தை—ஆர்வமுடன் காப்பதுபோல்—ஆசையுடன்—நமக்குச்செல்வங்களை யளிக்க வீரனைத் துரிதஞ்செய். ஙு மகவானே உன்னை தாராளமாயளிப்பவன் என ஏன் அவர்கள் சொல்லுகிறார்கள்?

என்னைத் துரிதஞ்செய்: நீ திடஞ்செய்பவன் என நான் உன்னை அறிகிறேன்: சக்கரனே எனது அறிவு கூர்மையாகுக: இந்திரனே செல்வங்காணும் சிறப்பை எங்களுக்குக் கொண்டு வா. ச இந்திரா எனக்குச் சத்தியம் என சமரிலே நிற்கும் சனங்கள் உன்னை அமர்க்களத்திலே அழைக்கிறார்கள்: அவி அளிப்பவனை வீரன் தனது நண்பனாகச் செய்துகொள்கிறான்: சோமன் பொழியாதவனுடைய நட்பை அவன் நாடுவதில்லை. ரு வெகு பல செல்வங்களைப்போல் சத்திமிகும் சோமங்களை பொருள்களின் தலைவனான எவன் அளிக்கிறானோ அவனது, துரிதமும் திடாயுதமுமுள்ள சத்துருக்களை காலையிலே இந்திரன்—சிதறடிக்கிறான், அவனது விருத்திரனை வீழ்த்துகிறான். சு எந்த இந்திரனிலே நாங்கள் துதியைத் தரிக்கிறோமோ, எந்த மகவான் எங்கள் விருப்பத்துக்கு ஆசிரயமளிக்கிறானோ அவனைக் காணும் சத்துரு தூரத்திலேயே நடுநடுங்கவேண்டும்; சனங்களின் எல்லாப் புகழ்களும் அவனைப் போற்றவேண்டும். எ பல சனங்களாலழைக்கப்படுந் தேவனே உனது உக்கிராயுதத்தால் தூரத்திலேயே சத்துருவைத் துரத்து. இந்திரா பசுச் செல்வத்தையும் தானிய செல்வத்தையும் எங்களுக்களி. உன்னைத் துதிப்பவனுக்கு பலமும் பொருளும் மிகுந்த புத்தியைக் கொடு. அ அதி வன்மையுடன் வலிமை மிகுந்து வீரியம் நிறைந்த சோம இரஸங்களைப் பருகும் இந்திரனை மகவான் தனது அளிப்பைத் தடைசெய்வதில்லை, சோமன் பொழிபவனுக்கு அவன் அதி செல்வத்தைத் தருகிறான். கூ சூதாடுபவன் காலம் பார்த்து தனது காய்களைக் குவித்து ஜயிப்பதுபோல் தனது மேலான செய்கையால் ஆதாரத்தைப் பற்றுகிறான்: தேவகாமனை அவன் செல்வத்தைத்தடை செய்யாதவனுக்கு சுவதாக்களோடு

பொருள்களை அளிக்கிறான். ௧0. சு0ரு-வது சூக்தத்தின் ௧0-வது மந்திரத்தைப் போலாகும். ௧௧. சு0ரு-வது சூக்தத்தின் ௧௧-வது மந்திரம். [உ0. அசு.] சுஎஅ [பரத்வாஜன்—பிரகஸ்பதி] ௧ முதற் தோன்றி மலை பிளப்பவனுயுள்ள பிரகஸ்பதி, அங்கிரசனின் மகனுன அவியோடாகும் எங்கள் பிதாவான ருத மெனப்படு பவன், சோதியிலே வசித்து இரு திடவழிகளால், புவிக்கு சோதிக்கு விருஷபத்தைப்போல் கர்ச்சனை செய்கிறான். ௨ தேவர்கள் அழைக்கப்படுங்கால் நல்ல சனங்களுக்கு விரிந்த உலகத்தைச்செய்த பிரகஸ்பதி எதிரிகளை யழித்து அவர்களது கோட்டைகளைப் பிளக்கிறான்: துவேஷிக்கும் சத்துருக்களைத் துவம்சஞ் செய்கிறான். ௩ பிரகஸ்பதி சமரிலே செல்வங்களை ஜயித்துள்ளான், இந்த தேவனையும் பசு மிகுந்த பெரிய சாலைகளையும் வென்றுள்ளான்: பிரகஸ்பதி சலங்களையும் சோதியையும் வெல்ல முயன்று, எதிர்ப்பற்றுகி ஞான கிரணங்களால் பகைவனை அழிக்கிறான். [உ0. சு0] சுஎ௧ [அயாஸ்ய ஆங்கிரஸன்—பிரகஸ்பதி] ௧ எங்கள் பிதா, ருதந் தோன்றியதாயும் ஏழு சிரமுள்ளதாயும் பெரியதாயுமுள்ள இந்த அறிவைக் கண்டார். விசுவசனங்களுக்கு நண்பனுன அயாஸ்யர் இந்திரனுக்குத் துதியைச் செய்யுங்கால் தூரீயத்தைத் தோற்றுவித்தார். ௨ அசுரனது ஒளி மக்கட்களான வீரர்கள் ருதம் துதிப்பவர்களாகி ருதம் நினைக்கும் அவர்கள், அறிஞர் பதவியை வகித்த அங்கிரசர்களான அவர்கள், யக்ஞத்தின் நிலயத்தை முதன்மையாய் போற்றினுர்கள். ௩ ஹம்ஸத்வனி முழங்கும் நண்பர்களால் சூழ்ந்த பிரகஸ்பதி பந்தஞ் செய்த கல்மயமான தடைகளைப் பிளந்து பசுக்களுக்கு முழங்கினுன்: அவன் அவர்களைக் கண்டவுடன் துதி செய்தான். ௪ அவன் பொய் பந்தங்

களால் நின்ற பசுக்களை ஏகத்தினின்று தனிமையாய் வானம் புவிக்கு உயரமாய், செலுத்தினான். பிரகஸ்பதி இருளில் சோதியைத் தேடி ஒளிமயப் பசுக்களை புலனாக்கினான்: அவன், மூன்றைப் புலனாக்கினான். ரு பிரகஸ்பதி அதோமுகமான புரத்தையும் சயனங்களையும் பிளக்குங்கால் சலந்தரித்தவனிடமிருந்து மூன்றைத் தனிமையாய்ப் பிரித்தான்: பிரகஸ்பதி சோதியைப்போல் கர்ச்சனை செய்யுங்கால் சூரியனையும் உஷையையும் பசுவையும் சோதியையுங் கண்டான். சு இந்திரன் தனது முழக்கம் என்னும் கரணத்தால் பசுக்களைத் தடைசெய்த வலனைப் பிளந்தான்: அவன் முயற்சி மலரும் நண்பர்களோடு பாலை நாடுபவனாய் பனிக்களின் பசுக்களைத் திருடினான். அவனை அழச்செய்தான். எ அவன் செல்வஞ் ஜயிக்கும் சத்தியமான நண்பர்களோடு பசுக்களின் பாலை—தரித்து—த் தடை செய்பவனை—ப் பிளந்தான்: பிரகஸ்பதி விருஷப வராஹங்களோடு உழைப்பாலான வியர்வையால் திரவியத்தைப் பற்றினான். அ அவர்கள் பசுக்களை நாடுபவர்களாய், நினைவுகளால் நிசமனத்தால் கோபதியைச் சலனஞ்செய்தார்கள்: பிரகஸ்பதி, பரஸ்பரம் வெட்கம் பிரிந்து முயற்சிகளொடான நண்பர்களோடு ஒளி மயப் பசுக்களை விடுதலை செய்தான். கூ நமது சபையிலே மங்களகர மனனங்களோடு சிங்கம்போல் கர்ச்சிக்கும் அவனைத் துதி செய்து, சூரர்கள் ஜயிக்கும் ஒவ்வொரு சமரிலே, ஜயசீலனாயுள்ள சக்தி மிகும் பிரகஸ்பதியிலே நாங்கள் இன்பமுடனாகவேண்டும். க0 விசுவ ரூபமான பலத்தை அடைந்து ஒளிமய உயரிய நிலையை அணுகியவுடன், மானிடர்கள் எல்லா நிலயங்களினின்றும் தங்கள் மொழிகளிலே சோதியைக் கொண்டுவந்து பலம் மிகுந்த பிரகஸ்பதியைப் போற்றினார்கள். கக தீர்க்காயுசைப்

ப்றும் ஆசிகளை அளியுங்கள்: உங்கள் சுபாவ குணத்தால் உங்களது பக்தனுக்குத் துணை செய்யுங்கள். எங்கள் சத்துருக்கள் எல்லாம் திரும்பி தூரஞ் செல்வார்களாக. விசுவம் புலனுக்கும் புவியே சோதியே இதனைச் செவியுறுங்கள். கஉ இந்திரன் தனது உயரிய பலத்தால் சல அரக்கனான அர்ப்புதனது சிரத்தைப் பிளந்தான். அஹியைக் கொன்றான்: ஏழு நதிகளை விடுதலை செய்தான்: சோதியே, சகமே எல்லா தேவர்களோடும் எங்களைப் பாலனஞ் செய்யுங்கள். [உ0. ககக] சு அ0 [பிரியமேதன் க—கஉ புருஹன்மன். கசு—உசு இந்திரன்] க—ரு சுக0-வது சூக்தத்தின் ச. ரு, சு-வது மந்திரங்களைப்போலாகும். ச நானும் இந்திரனும் இந்திரனுடைய உயரிய ஒளிவீசுங் கிரகத்துக்குச்செல்லுங்கால் தேன் பருகியுள்ள நாங்கள் மூவேழு நண்பர்களின் நிலயத்துக்கு போவோம். ரு பிரிய மேதர்களே, போற்றுங்கள். புகழுங்கள், பாடுங்கள்; பாலர்கள் துதிப்பார்களாக: அவனைப்பெரிய கோட்டைபோல் தோத்திரஞ் செய்யுங்கள். சு கர்க்கரம் முழங்குக, கோஷம் இசைத்திடுக இனியமொழி மலர்க. இந்திரனுக்கு உயரிய பிரமம் மொழியப்பட்டுள்ளது. எ நல்ல கறப்புள்ளவையாயும் சுந்தரமாயும் நிஸ்சலமாயுமுள்ள பசுக்களான தாரைகள் இங்கு வருங்கால் அந்நதிகளான நிலையாம் சோமபானத்தை இந்திரனுக்காகப் பற்று. அ இந்திரன் பானஞ் செய்துள்ளான், அக்கினி பானஞ் செய்துள்ளான்: விசுவேதேவர்கள் பூரணமாய்ப் பானஞ் செய்துள்ளார்கள்: இங்கு வருணன் தன் நிலயத்தைச் செய்து கொள்வான்: பசுக்கள் கன்றுகளுக்குப்போலே சலங்கள் அவனுக்கு கோஷஞ்செய்துள்ளது. கூ ஏழு நதிகளுள்ள வருணனே நீ சுதேவன்: பெரிய வாயுள்ள குழலைப்போல் உனது கண்டத்துக்கு சலங்கள் பாய்கின்

றன. க0 எவன் தாசனுக்கு அலங்காரமான துரகங்களைப் பக்குவஞ் செய்துள்ளானே, அருகிலுள்ள அசுவங்களை அவிழ்த்த அவனே தலைவன், மெல்லிய தேகமுள்ளவன். கக அதிபலமுள்ள இந்திரன் சத்துருக்களைத் துச்சமாய் எண்ணுகிறான்: தூரமாயுள்ள அவன் பாலனை அவன் தன் மொழியால் பக்குவமான ஓதனத்தைப் பிளந்தான். கஉ சிறுவனை அவன் அதிபாலனை அவன் புதிய இரதத்திலேறினான்: அவன் தனது பெற்றோர்களுக்கு மேலான சங்கற்பமுடன் மிருகம் போலான மகிஷனைப் பக்குவஞ் செய்தான். கங இல்லறபதியே, சுந்தர முகமுள்ளவனே பொன் இரதத்திலேறு. நாங்கள் ஆயிரம் பாதமுள்ளவனையும் அருணனையும் சுவஸ்தியளிப்பவனையும் குறை குனியனுமான ஒளிமலையையடைவோம். கச இவன் ஜயமாகி செழுமையாகி செல்வங்களை அடைவதற்கு அவனை அருகில் அழைக்க தலைவனுக்கு சனங்கள் செல்வதுபோல் வணக்கமுடன் அவனுக்குச் செல்லுகிறார்கள். கரு பிரியமேதர்கள் தருப்பை விரித்து யக்ஞத்தைப் பக்குவஞ் செய்யுங்கால், புராதன வழக்கத்தின் பழைய யக்ஞனையே உபாசிப்பவர்களாவார்கள். கசு மானிடர்களின் மன்னனான இந்திரன், தடையற்று இரதங்களில் செல்லும் அவன் சமர்புரியும் சேனைகளைச் சிதறடிக்கும் சிறப்புவாய்ந்த விருத்திர சம்ஹாரன் சாற்றப்பட்டுள்ளான். கஎ புருஹன்மனனே சோதியிலே பெரிய சூரியன் வைக்கப்பட்டுள்ளது போல் எவனது போஷிக்குங் கையிலே சுந்தரவச்சிராயுதம் தரிக்கப்பட்டுள்ளதோ அவனது இரட்சிப்பை யடைய இந்திரனை அவனைப் போற்று. கஅ சக்தி சதாகாலம் வளர்க்கும் செயல் செய்யும் இந்திரனை எவனும் ஆக்கிரமிக்க இயலாது: திடத்திலே தீரனையும் சூரனையும் தடை

யற்றும், அனைவராலும் போற்றப்படுபவனுமான இந்திரனை யக்ஞத்தாலும் அதிக்கிரமிக்க இயலாது' கக அதிவலிமையுள்ள ஜயசீலன் இந்திரன், சமரிலே அதிசக்தி வாய்ந்தவன்: அவன் சனனமாகுங்கால் எங்கும் பரவியுள்ள மேலான பசுக்கள் முழக்கஞ் செய்தன, சோதிகளும் சகங்களும் கோஷித்தன. உO—உக. சுசுக—வது சூக்தத்தின் முதல் இருமந்திரங்களைப் போலாகும். [உO. கூஉ.] சுஅக. [பிரகாதன். க—ரு. தேவஜாமயன் இந்தரமாதரன்—இந்திரன்] க எங்கள் ஸ்தோமங்கள் உன்னை இன்ப முடனுக்கவேண்டும், முழக்கஞ்செய்பவனே! உனது செல்வத்தை அளி. பிரம்மத்துவேஷிகளைக் கொல்லு. உ தானமளிக்காத கருமிகளை உன் காலால் மிதித்துவிடு. நீ மகான். உனக்குச் சமானன் எவனுமில்லை. ந நீ பொழிந்த சோமனின் தலைவன், பொழியப்படாத சோமனும் உன்னுடையது: நீயே சனங்களின் தலைவன். ச பரஸ்பரம் சேவை புரிபவர்களாய் முயற்சியில் ஈடுபட்டவர்கள் இந்திரனின் சனனத்திலேயே அவனிடம் சென்றார்கள். அவனது சுவீரியத்தைப் பகிர்ந்து கொண்டார்கள். ரு இந்திரா உனது சனனம் வலிமையில் வன்மையில் வீரத்திலாயிற்று: வலியனை நீ வாய்மையுள்ளவன். சு இந்திரா நீ விருத்திரனழிப்பவன், நீ வானத்தை விரித்துள்ளாய். நீ வன்மையால் சோதிகளைத் தாங்கியுள்ளாய். எ இந்திரா உன்னோடு இணையும் சோதியை உன் கைகளிலே நீ தரிக்கிறாய்: உனது ஓஜசால் வச்சிராயுதத்தைத் தீட்டுகிறாய். அ உனது பலத்தால் விசுவப்பிராணிகளை அதிக்கிரமிக்கிறாய். நீ எங்கும் வியாபகமாயுள்ளாய். [உO. கூந. க-அ.] சுஅஉ. [ஆங்கிரஸ—கிருஷ்ணன்] க தருமத்திலே துரிதமாயும் திடமாயும் சுபபதியாயுமுள்ள இந்திரன் இன்பத்

தக்கு வருவாளுக: அவன் தனது வரம்பில்லாத மேன்மையோங்கும் வன்மையோடு எல்லாஞ் சயிக்கும் சத்துருக்களை ஜயிப்பவன். உ எனது இரதம் நிலையாயுள்ளது, அசுவங்கள் சுவாதீனத்திலுள்ளன: அரசனே வச்சிராயுதத்தை உன் கை திடமாய் தரிக்கின்றது: மானிடர்பதியே உனது நல்வழியில் துரிதமாய் வா. நீ பருகுங்கால் உன் பலத்தை நாங்கள் வளர்க்கிறோம். ௩ நரர்பதியாயும் வச்சிராயுதம் தரிப்பவனாயுமுள்ள இந்த வல்லாளனை இந்திரனை வகிக்கும், உக்கிரமும் உறுதியும் வாய்ந்த அசுவங்கள், எங்களுடன் கலந்து புசிக்கும் சத்திய சக்தியுள்ளவனாய் ஜயிக்கும் விருஷபனாயுள்ள இவனை எங்களிடம் கொண்டு வருக. ச வீட்டில் வியாபகனாயும் சேதனமுள்ளவனாயும், சக்தி தாங்குபவனாயுமுள்ள பதியை திர நிலத்திலே விருஷபத்தைப் போல் நீ அணுகுகிறாய்; நீ உனது ஓஜசுகளை ஒன்று குவி. அவற்றை உன்னில் சேர்: நீ அறிஞர் ஓங்குவதற்குத் தலைவனாகவும். ரு செல்வங்கள் எங்களுக்கு வேண்டும் என நான் துதிப்பேன். சோம புருஷனது யக்ஞத்துக்கு நீ வா. நீ தலைவன். நீ இந்தத் தருப்பையிலே உட்கார். உனது தர்மத்தோடான பாத்திரங்கள் சத்துருக்களால் ஜயிக்க படாதவை. சு தேவர்களின் முதன்மையான அழைப்புக்கள் வெகு தூரஞ்சென்றன. அவை அதிவழியை அடைந்தன. அவை எங்களுக்கு அபாரமான புகழ்களை அளித்தன. யக்ஞக்கப் பலில் ஏற முடியாதவர்கள் பயத்தால் பதறி பாழிலே வீழ்கிறார்கள். எ இணைக்கப்பட்டிருந்தாலும் சவாரி செய்வதற்குக் கடின குதிரைகளையுள்ள சத்துருக்களான துட்டசித்தமுள்ள அந்நியர்கள் தூரமாவார்களாக. எங்கு மானிடர்கள் முதன்மையாய் அவனை உபாசிக்க நிற்கிறார்களோ அங்கு அவர்கள் வெகு பல புலன்களை அனுபவிக்

கிறார்கள். ௮ அசையும் மலைகளையும் நிலங்களையும் திடமாய் அவன் திரஞ்செய்தான். சோதியானவன் முழக்கஞ்செய்து வானத்தை அலறச் செய்தான்; வானத்தையும் புவியையும் அவன் நிலை செய்கிறான். அவன் பானஞ்செய்தவுடன் சக்தி மிகுந்த சோமனது இன்பத்திலே அவன் முழக்கஞ்செய்கிறான். ௯ மகவானே சுகிருதமான உனது அங்குசத்தை நான் தரிக்கிறேன், நீ அதனால் கோராயுதமுள்ள சத்துருக்களை ஜயிப்பாய். இந்த யக்ஞத்திலே நீ திருப்தியுடனாகவும், சோமனைப் பருகு. மகவானே போகத்தைப் புசி. ௧௦—௧௧. ௯௦௫ வது சூக்தத்தின் ௧௦—௧௧ வது மந்திரங்களைப் போலாகும். [௨௦—௯௪] ௯௮௩ [கிருத்ஸமதன். ௧ சுதாபைஜவனன் இந்திரன்] ௧. ஆண்மை மிகுந்த மகிஷன் திரிகத்துருகங்களிலே யவச்சேர்க்கையின சோமனைப் பருகியுள்ளான்; விஷ்ணுவோடு பொழியும் சோமனை அவன் வசமாகும் வரை அருந்தினான். அது மகானையும் விசாலமாயுமுள்ள அவனை மேலான செயலைச் செய்ய வளர்த்தது, தேவன் தேவனைச் சேர்க. சத்திய இந்து சத்திய இந்திரனைச் சேர்க. ௨ முதன்மையான இடத்தில் தனது இரதத்தை ஸ்தாபிக்கும் இந்திரனுக்கு வாய்மையை முழங்குங்கள். அருகிலாகுஞ் சமரிலே உலகமளிப்பவனையும் போரிலே விருத்திரனழிப்பவனுமான நீ எனக்கு நன்மை செய்பவனாகவும். ஆண்மையற்ற சத்துருக்களின் விற்களில் வலிமையிழந்த வின் நாண்கள் பிளக்கட்டும். ௩ நீ அஹியை அழித்தாய், நீ நதிகளை நிலத்தில் பிரேரணை செய்தாய். இந்திரா, நீ எதிரியற்றுப் பிறந்தாய். எல்லா மேலான பொருளையும் நீ தாங்குகிறாய். இதனால் நாங்கள் உன்னை அணுகுகிறோம்; ஆண்மையற்ற............ பிளக்கட்டும். ௪ எல்லாப் புன்மைகளும் பகைவர்களின் எல்லாத் தந்திரங்களும் ஒழிக. இந்திரா எங்களை வீழ்த்

தும் சத்துருவிலே நீ வச்சிராயுதத்தை வீசுகிருய். உனது உதாரம் எங்களுக்குச் செல்வத்தை அளிக்கின்றது. [உ0. கூடு. க—ச.] சுஅச [பல ரிஷிகள்—பல தேவர்கள்]
க உனக்கு அதி வலிமையளிக்கும் இவ்வலிய பானத்தை பருகு, உனது எல்லா இரதத்திலே குதிரைகளைப் பிரித்துவிடு. இந்திரா யக்ஞஞ் செய்யும் அந்நியர்கள் உன்னைத் தடுக்காமலிருப்பார்களாக. பொழிந்த இந்த இரஸங்கள் உனக்கே, உ பொழிந்த இரஸம் உனக்கே, பிழியப் போவதும் உனக்கே, எங்களது முழங்குங் கானங்கள் உன்னை அழைக்கின்றன; இந்திரா. இந்த யக்ஞத்திலே இன்று இன்பமாகி அனைத்தையு மறியும் நீ இங்கு வந்து சோமனைப் பருகு. ங தேவகாமனுகி மனத்தோடும் சர்வ இருதயத்தோடும் சோமனை எவன் இந்திரனுக்குப் பொழிகிருனே அவனுடைய பசுக்களை இந்திரன் நஷ்டஞ் செய்வதில்லை. இவனுக்குச் சுந்தரப்—பொருளைச்—சிறப்புடன் செய்கிருன். ச எச்செல்வன் இந்திரனுக்கு சோமனைப் பொழிகிருனே அவனை அவன் அன்புடன் பார்க்கிருன்; மகவான் அவனைத் தன் கையால் தாங்குகிருன். நாம் கேட்காமலேயே அவன் பிரமத்துவேஷிகளை யழிக்கிருன். ரு பசு புரவி பொருள் விரும்புபவர்களாய் நாங்கள் உன்னை அழைக்கிறோம். உனது புதிய சுமதிக்கு உன்னைத் துதிக்கிறோம்; இந்திரா உன்னை எங்களது சுகசொரூபனுய் அழைப்போமாக. சா—கூ அஉ-வது சூக்தத்தின் முதல் நான்கு மந்திரங்களைப் போலாகும். க0. சஙச-வது சூக்தத்தின் உ0-வது மந்திரத்தைப்போலாகும். கக அரக்கனழிக்கும் அக்கினி பிரம்மத்தோடு பொருந்தி உனது கருப்பாசயமான மூலஸ்தானத்திலே துர்நாமமுள்ள எந்த ரோகஞ் சாய்ந்திருந்தாலும் அதை நீக்குவாளுக. கஉ பிரம்மத்தோடு

பொருந்துமக்கினி உனது பாலனையும் கருவையும் எதிர்த்துள்ள துர்நாம ரோகத்தையும் உனது மாமிசத்தைப் புசிப்பவனையும் பாழ் செய்வானாக. கஉ விழும் வீரியத்தையும் ஆசிரியமானதையும் சலனக் கருவையுமழிக்கும்—கிருமியையும்—சனனகாலத்திலே சிசுவைக் கொல்லுபவனையும் நாங்கள் அழிப்போமாக. கச உனது கால்களைப் பிரிப்பதாயும் தம்பதிகளோடு சயனிப்பதாயும் மூலஸ்தானஞ்சென்று சுவைப்பதுமான இத்தீமையை நாங்கள் நீக்குவோம். கரு சகோதரன்போலும் காதலன்போலும் புருஷன்போலும் உன்பக்கஞ் சாய்ந்து உன் சந்தானத்தையழிக்கும் இத்தீமையை நாங்களழிப்போம். கசு தூக்கத்திலோ இருளிலோ உன்னை ஏமாற்றி உனதருகில் சயனிப்பதையும் உனது சந்தானத்தை நாசஞ் செய்வதுமான இத்தீமையையும் நாங்களழிப்போம். கஎ—உஉ. ருஅ-வது சூக்தத்தின் க-எ-வது மந்திரங்களைப் போலாகும். உச மனத்தையழிப்பவனே நீ விலகிச் செல். தூரம், நீங்கு. நீங்கிப் போ. எங்களினின்று தூரத்திலேயே நிர்ருதியைக் காண். சீவ புருஷனது மனம் பலவிதப்—பொருத்தமுள்ளது. [உ0. கூசு] சுஅரு. [கலி—இந்திரன்] க நேற்று இங்கு நாம் வச்சிராயுதம் வீசும் இந்திரனைப் பருகச் செய்தோம். அப்படியே இன்னும் அவனுக்குச் சோமனை அளியுங்கள். சுருதியால் அவனை அலங்கரியுங்கள். உ ஆட்டைப் பிளக்கும் வன மிருகமான ஓநாயும் அவனுடைய ஆக்ஞையை பருசரிக்கின்றது; இந்திரா எங்களது ஸ்தோமத்தைப் பிரியமுடன் ஏற்றுக்கொண்டு அதிசய நினைவோடு எங்களிடம் வா. ௩ இந்திரன் செய்யாத மிகுதியான ஆண்மைச் செயல் எது? சன்மத்தினின்றே விருத்திரனை வீழ்த்தும் இந்திரனது ஸ்ரீயையும் சிறப்பையும் எவன் கேட்டதில்லை? [உ0.

கூஎ.] கூஅகூ [சம்யு-இந்திரன்] க அறிஞர்களான நாங்கள் செல்வத்தையும் சக்தியையுமுடைய இந்திரனை உன்னை அழைக்கிறோம். வீரரது பதியான உன்னை மானிடன் சமரிலே அழைக்கிறான். குதிரைப் பந்தய நிலயங்களிலும் உன்னை அழைக்கிறான். உ அற்புதனே, வச்சிர ஹஸ்தனே, வல்லான் என போற்றப்படுபவனே, வச்சிராயுதம் வீசுபவனே, ஜயிப்பவனில் பசுக்களையும் குதிரையையும் இரதத்தையும், செல்வத்தையும் வீரமாய்ப் பொழி. [உ௦. கூஅ.] கூஅஎ. [மேத்யாதிதி—இந்திரன்] க இந்திரா! மானிடர்கள் ஸ்தோமங்களோடு—நீ—சோமபானம் பருக உன்னைப் பிரேரிக்கிறார்கள்: ரிபுக்கள் ஒன்று சேர்ந்து முதன்மையாய் உனக்கு கானஞ் செய்துள்ளார்கள். உ இந்திரன் யக்ஞத்தில் இந்த வியாபக இன்பத்திலே தனது வீர பலத்தை வளர்த்தான்: பழைய காலத்தைப்போல் இப்போதுள்ள மானிடர்களும் அவனது மேன்மையையே போற்றுகிறார்கள். [உ௦. கூகூ] கூஅஅ [நிருமேதன்—இந்திரன்] க இந்திரா துதி நண்பா நாங்கள் சலங்களைத் தொடரும் சலங்களைப் போல் உனக்கு எங்கள் விருப்பங்களைப் பிரேரித்துள்ளோம். உ சூரனே வச்சிராயுதனே நதிகள் சலநதியை பெருக்குவதுபோல் பிரம்மங்கள், தினந்தோறும் நீயே வளரும் உனது வலிமையை வளர்க்கின்றன. ங மொழி சேர்ந்து இந்திரனை வகிக்கும் அரித தேவரின் குதிரைகளை விரிந்த விசால நுகத்துடியுள்ள இரதத்திலே கானங்களால் இணைக்கிறார்கள். [உ௦. க௦௦] கூஅகூ [மேதாதிதி—அக்கினி] க நாங்கள் விசுவவேதனும் ஹோதாவும் யக்ஞத்தின் சுசங்கற்பனும் தூதனுமான அக்கினியை வரிக்கிறோம். உ அவர்கள் அவிவகிப்பவனையும் அநேகர் விரும்புபவனையும் கிரகபதியுமான அனலக்கினியை அவி

களால் சதாகாலம் அழைக்கிறார்கள். ௩ தேவர்களை இங்கு அழைத்து வா: தருப்பை விரித்தவனுக்கு அக்கினி தோன்றினான்: நீ ஹோதா. நீ துதிக்கருகன். [உ0. க0க.]

சுகூ0 [விசுவாமித்திரன்—அக்கினி] க சுந்தரமான அக்கினி இருளைத் தூரமாக்கும் அவன் துதிக்கருகன்: வணக்கத்துக் கருகனான விருஷபன் எழுப்பப்பட்டுள்ளான். உ அக்கினி விருஷபத்தைப்போல் தேவர்களை வகிக்கும் அசுவத்தைப்போல் எழுப்பப்பட்டுள்ளான்: மானிடர்கள் அவிகளோடு அவனைப் போற்றுகிறார்கள். ௩ விருஷனே அக்கினியே விருஷணர்களான நாங்கள் விருஷணத்தைப் போலுள்ள உன்னை அதி ஒளி வீசும் உன்னை மூட்டுகிறோம். [உ0. க0உ]

சுகூக [சுதீதி—புருமீளன் க. பர்க்கன். அக்கினி] க புருமீல்ஹனே மானிடர்களே! பாதுகாப்பாக பாக்களால் பிரகாச சுவாலையோடான அக்கினியைப் போற்றுங்கள். செல்வத்துக்கு சிறப்புடனான அக்கினியை சரணமளிக்கு மக்கினியை சோதிக்குச்—சாற்றுங்கள். உ அக்கினியே! நீ அனல்களோடு இங்கு வா: நாங்கள் உன்னை ஹோதாவாக வரிக்கிறோம். யக்ஞசீலமான உன்னைத் தருப்பையிலே அமர்த்த, அவி தோய்ந்த நியமம் உன்னை நனைத்திடுக. ௩ அங்கிரஸனே பலத்தின் மகனே யக்ஞத்தில் சாதனங்கள் உனக்கு வருகின்றன: நெய்கேசமுள்ள சக்தி மகனான அக்கினியை யக்ஞங்களிலே முதன்மையாய் போற்றுகிறோம். [உ0. க0௩]

சுகூஉ [மேத்யாதிதி. க—உ நிருமேதன்] க புருவசுவே எனது இம்மொழிகள் உன்னை வளர்க்கட்டும். அனல் நிறங்களோடு சுத்தர்களாயும் அறிஞர்களுமான புருஷர்கள் ஸ்தோமங்களால் உன்னைத் துதிக்கிறார்கள். உ அவன் ஆயிரம் ரிஷிகளால் பலத்தில் பெருகி கடலைப்போல் விரிந்துள்ளான்: அவனது அம்

மகிமையும் மேன்மையும் யக்ஞங்களிலும் விப்பிர இராஜ்யத்திலும் சத்தியமாயுள்ளன. அவனே போற்றப்படுகிறான். ௩ ஒவ்வொரு சமரிலும் அழைக்கப் படுவதற்கான இந்திரன் எங்களருகிலாவானாக: விருத்திரனைக் கொல்லும் அதி வலிமை வாய்ந்தவன் துதிக்கும் யக்ஞங்களுக்கும் வருவானாக. ச செல்வமளிப்பதில் நீ சிறந்தவன், நீ சத்தியன். நீ செல்வஞ் செய்பவன். நாங்கள் அதி பலமுள்ள பலத்தின் மகனுடன் அதி மேன்மையானவனுடன் நட்பை நாடுகிறோம். [உO. கOச].

௬௬௩. க இந்திரா நீ சமர்களிலே எல்லா சத்துரு சேனைகளையு மடக்குபவன்: நீ பழிச்சொல்லழிக்கும் பிதாவாவாய்: எல்லாப் — பகைவர்களையு — மழிப்பாய். சத்துருக்களை ஜயிப்பவன். உ தாய் தந்தைகள் தங்கள் சிசுவைத் தரிப்பதுபோல் வானமும் சோதியும் உனது ஜயசீல சக்தியிலே சாய்ந்துள்ளன: இந்திரா நீ சத்துருக்களை எதிர்க்குங்கால் உனது கோபத்தில் பகைவர்கள் பாழாகின்றார்கள். ௩ மூப்பற்று எதிர்ப்பவனாய் எதிர்ப்பற்றவனாய், வேகனாய் சத்துருக்களை எதிர்ப்பவனாய் இரதர்களின் சிரேஷ்டனாய் இம்சையற்றவனாய் துக்கியனைச் சிறப்பிக்கும் இந்திரனை உதவிக்கழையுங்கள் யுக்தமாக்குங்கள். ச—டு சஅO—வது சூக்தம் ௧௬ — கஎ-வது மந்திரங்கள் போலாகும். [உO. கOடு]

௬௬ச [கோஷ-ெக்த அசுவசூக்தினெள].

க உனது பெரிய இந்திரியத்தையும் பெரும் பலத்தையும் பெரும் சங்கற்பத்தையும் மேலான வச்சிராயுதத்தையும் எங்களது விருப்பம் கூர்மையாக்குகின்றன. உ இந்திரா வானமும் சோதியும் உனது பௌரஷத்தைப் பெருக்குகின்றன. மலைகளும் சலங்களும் உன்னை எழுச்சியாக்குகின்றன. ௩ உன்னைப் பெரிய விஷ்ணுவும் வையமும்

மித்திரனும் வருணனும் போற்றுகிறார்கள். மருத்துக்களின் பலமும் உன்னை அநுசரிக்கின்றது. [உO. கOசு]

சுகரு. க. நதிகள் சமுத்திரத்திற்குப்போலே அனைவரும் அவன் கோபத்தின்முன் வணங்குகிறார்கள். உ இந்திரன் வானத்தையும் சோதியையும் சர்மத்தைப்போல் விசாலமாக்குங்கால் அவனது இந்த ஓஜசு பிரகாசமாகின்றது. ங. நூறு கண்டங்களுள்ள அவனது—வலிய வச்சிராயுதத்தால் கோரமாய்ச் செல்லும் விருத்திரனது சிரத்தை அவன் துண்டித்தான். ச—கஉ. கசச வது சூக்கத்தின் க—கூ வது மந்திரங்களைப் பார்க்கவும். கங—கச. சஅO வது சூக்தத்தின ஙச, ஙரு வது மந்திரங்களைப் பார்க்கவும். கரு. மானிடன் யுவதியை அநுசரிப்பதுபோல் ஒளி வீசும் தேவியான உஷையை சூரியன் தொடருகிறான்: மேலான மங்களத்துக்காக நரன் திவ்யந் தரிப்பவனாய் அங்கு சந்தானங்களை விசாலஞ் செய்கிறான் [உO. கOஎ]

சுகசு [நிருமேதன் — இந்திரன்] க இந்திரா நீ எங்களுக்கு ஓஜசை அளி. ஆண்மையைத் தா, சதக்கிரதுவே நன்கு காண்பவனே பகை ஜயிக்கும் வீரனை அளி. உ வசுவே சதக் கிரதுவே நீயே எங்களுக்குத் தாயும் தந்தையுமாயுள்ளாய். நாங்கள் உன்னிடம் சுகத்தை யாசிக்கிறோம். ங சதக்கிரதுவே புருஹூதனையும் பலவானையும் பலமளிப்பவனுமான உன்னைத் துதிக்கிறோம். நீ எங்களுக்கு வீரியத்தை அளி. [உO. கOஅ.] சுகஎ [கோதமன்—இந்திரன்] க இப்படி வியாப்தமான சோம இரசத்தை சுவையுள்ள பானத்தை பசுக்கள் பருகுகின்றன. இம் மதுக்கள் பால் முதன்மையான சுயராஜ்ய நிலயத்திலே பலமுடனான இந்திர ஒளியோடு சலனமாகி சந்தோஷமாகின்றன. உ பரிசத்தை விரும்பும் சுந்தரமான பசுக்கள் பாலோடு சோமனைச் சேர்கின்றன; இந்திரனுக்குப் பிரிய

மான பசுக்கள் பலமோங்கும் தங்கள் சுய இராஜ்யத்தை அநுசரித்து துவம்சஞ்செய்யும்வச்சிராயுதத்தைப் பிரேரிக்கின்றன. ௩ அறிவுள்ள அவை ஆண்மையோடு ஜயிக்கும் பலத்தை மதித்து அவனது வெகு பல விரதங்களை சுய இராஜ்யத்தை அநுசரிப்பவையாய் பெரும் நிலைக்கு அவனைப் பின்பற்றுகின்றன. [உ0. க0௯] ௬௯அ [சுதகட்சன்—இந்திரன்.] க இன்பம் விரும்பும் இந்திரனுக்கு சோமனைப்பற்றி எமது பாக்கள் முழக்கமாகுக, அறிஞர்கள் துதியைச் செய்வார்களாக. உ ஏழு சனங்கள் இன்பமாகி எவனில் எல்லாப் புகழும் சாய்ந்துள்ளனவோ அந்த இந்திரனை நாங்கள் சோமனுக்கு அழைக்கிறோம். ௩ தேவர்கள் மனந் தூண்டும் யக்ஞத்தை திரிகதுர்க்கங்களிலே விசாலஞ்செய்கிறார்கள். அவனை நமது மொழிகள் வளர்த்திடுக. [உ0. கக0.] ௬௯௯. [பர்வதன்—சோமன்] க இந்திரா விஷ்ணுவிலோ திரிதத்திலோ ஆப்தியத்திலோ மருத்துக்களிலோ சோமனைப் பருகினால்—அச்சமயத்திலும் இரசத்திலே இன்பமாகிறாய். உ சக்கரனே நீ தூரத்திலும் சமுத்திரத்திலும் இன்பமானாலும் நாங்கள் பொழியும் இச்சோம இரசத்திலே இன்பமாகவும். ௩ சத்பதியே சோமன் பொழிபவனுக்கு உதவி செய்யுங்காலும் உன்னைத் துதிப்பவனுக்குத் துணைபுரியுங்காலும் அவனது சோமனில் இன்பமாகுங்காலும் நீ இரசத்தில் இன்பமாகிறாய். [உ0. ககக] எ00 [சுகக்ஷன்—இந்திரன்] க விருத்திரனை வீழ்த்துபவனே சூரியனே இந்திரனே இன்று உதயமான அனைத்திலும் உனது ஆண்மையுண்டு. உ சத்பதியே சக்திவாய்ந்த நீ நினைத்தால் நான் சாகாமலாவேன். உனது அந்நினைவு சத்தியமேயாகும். ௩ இந்திரா அருகிலும் தூரத்திலும் உனக்குப் பொழியப்படும் சோமயாகங்களிலெல்லாம் செல்லுகிறாய்.

[உ0. ககஉ] எ0க [பர்கன்—இந்திரன்] க இந்திரன் எங்கள் மனேவாக்கான இரு மொழிகளேயும் இங்கு கேட்பாளுக. அதி பலமுள்ள மகவான் அறிவுடன் இணைந்து எங்களிடம் சோமனைப் பருக வருவாளுக. உ அந்த சுவராஜ்யுனை விருஷபனை வானமும் வையமும் வன்மையால் தரித்துள்ளன. தேவர்களின் நடுவே நீ முதன்மையாயுட்கார்ந்துள்ளாய். ஏனெனில் உன் மனம் சோமனை விரும்புகின்றது. [உ0. ககங.] எ0உ [சௌபன்—இந்திரன்] க இந்திரா பூர்வத்தினின்று உனக்கு நிகர் எவனுமில்லை. உனக்கு நண்பனுமில்லை; நீ யுத்தத்திலேயே நட்பை நாடுகிருய். உ நீ செல்வ புருஷனை நண்பனுக மதிப்பதில்லை, சுரா பானஞ் செய்யுமவர்கள் உன்னை நிந்தனை செய்கிருர்கள். நீ இடி முழக்கஞ் செய்யும்பொழுதும் ஒன்று சேர்க்குஞ் சமயத்திலும் பிதாவைப்போல் அழைக்கப்படுகிருய். [உ0. ககச.] எ0ங [வத்ஸன்—இந்திரன்] க நான் ருதத்தின் பிதாவினுடைய மேதையை அடைந்துள்ளேன். நான் சூரியனைப்போல் பிறந்தேன். உ கண்வரைப் போல் நானும் பழைய வழிபோல் துதிகளை அலங்காரஞ்செய்கிறேன். அதனுல் இந்திரன் பலத்தை அடைகிருன். ங ரிஷிகளால் துதி செய்யப்பட்டு செய்யப்படாமலுள்ள நீ என் மொழியால் வளர்ந்தோங்கவும். [உ0. ககரு.] எ0ச [மேத்யாதிதி—இந்திரன்] க இந்திரா நாங்கள் உன்னிடமிருந்து பிரியாமாலாவோமாக, உன் துணை சூனியமில்லாமலாவோமாக: வச்சிராயுதந்தரிப்பவனே; நாங்கள் எரிப்பதர்காகாத தள்ளப்பட்ட மரம் போல் எண்ணப்—படாமலாகவேண்டும்.' உ விருத்திரனழிப்பவனே சங்கிராமத்துக்கு மந்தர்கள் எனக் கருதப்பட்டோம். ஆனுல் சூரனே உன்னைத் துதித்த பிறகு உனது செல்வச் செழிப்பிலே நாங்கள் இன்பமுடனுவோமாக.

[உ0. ககரு.] எ0ரு [வசிஷ்டன்—இந்திரன்] க குதிரைத் தலைவா, இந்திரா சோமனைப் பருகு. அது உன்னை இன்பம் செய்க. நன்கு செலுத்தப்பட்ட குதிரையைப் போல் சோமனைப் பொழிபவர்களால் உனது வச்சிராயுதம் அழுத்தப்பட்டுள்ளது. உ இந்திரா செல்வபதியே நீ எந்தப் பிரிய நண்பனால் விருத்திரனைக் கொல்லுகிறாயோ அந்த இனிய இரசன் உன்னை இன்பஞ் செய்வானாக. உ மகவானே வசிஷ்டரால் சொல்லப்பட்ட நான் சொல்லும் இந்த மொழியை நன்கு கவனி. யக்ஞத்தில் நான் அளிக்கப்படும் பிரம்மத்தை அங்கீகரி. [உ0. ககஎ.] எ0ரு. [பர்கன். க. உ. மேதாதிதி ங. ச.] க பலபதியே இந்திரா உனது எல்லா இரட்சிப்புக்களோடும் எனக்கு உதவிசெய், சூரர்களான நாங்கள் செல்வங்காணும் உன்னைசிறப்பும் செல்வனுமான உன்னை அநுசரிக்கிறோம், தேவா நீ எங்கள் குதிரைகளையும் பசுக்களையும் பெருக்குபவன். உ நீ பொன் ஊற்று. உன்னிலுள்ள தானத்தை எவனும்இம்சிப்பதில்லை. நான் கேட்பதை அளி. ங தேவ உபாசனையிலும் யக்ஞத்திலும் சமர்களிலே சூரர்களைப்போல் நாங்கள் செல்வங்களை ஜயிக்க இந்திரனை அழைக்கிறோம். ச இந்திரன் பலத்தால் வானஞ்சோதியை விரித்துள்ளான்; சக்தியால் அவன் சூரியனை ஒளி வீசச்செய்துள்ளான். இந்திரனிலே எல்லா புவனங்களும் வைக்கப்பட்டுள்ளன. கசியும் சோம துளிகள் இந்திரனிலே சேர்கின்றன. [உ0. ககஅ.] எ0எ. [ஆயுசு சுருஷ்டி—இந்திரன்] க பழைய பா பாடப்பட்டுள்ளது. நீங்கள் இந்திரனுக்கு பிரம்மத்தைச் சொல்லுங்கள். அவர்கள் ருதத்தின பூரணமான பிருஹதீயை கானஞ் செய்துள்ளார்கள். உ கானஞ் செய்பவர்கள் அதிதுரிதமாய் தேன் மிகுந்து நெய் ஒழுகும் கானத்தை கானஞ்செய்துள்ளார்கள். எங்களுக்குச் செல்வங்களும்

சக்தியும் விசாலமாகியுள்ளன. எங்களில் சோமத்திவலைகள் பாய்கின்றன. [உ0. ககக.] எ0அ. [தேவாதிதி—இந்திரன்] க பெரியவனே அதிபலமுள்ளவனே மானிடர்களால் நீ கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் அழைக்கப்பட்ட போதிலும் நரர்களால் தூண்டப்படும் நீ முதன்மையாய் துருவசனோடும் ஆனவனோடும் உள்ளாய். உ ருமனில், ருசமனில் கிருபனில் சமானமாய் இன்பமளிக்கிறாய். துதிவகிக்கும் கண்வர்கள் பிரம்மங்களால் உன்னை அநுசரிக்கிறார்கள். [உ0. கஉ0.] எ0க. [வசிஷ்டன்—இந்திரன்] க சூரனே கறக்காத பசுக்களைப்போல் உன்னை நாங்கள் துதி செய்கிறோம். இந்திரா நீ இந்த அசையும் அசையாத சகத்தின் தலைவன்; இந்திரா நீ சோதி காண்பவன். உ உனக்கு நிகராய் புவியிலும் சோதியிலும் எவனும் பிறக்கப்போவதில்லை. இந்திரா மகவா பலமுள்ள நாங்கள் பசுக்களையும் புரவிகளையும் விரும்பி நாங்கள் உன்னை அழைக்கிறோம். [உ0.கஉக.] எக0. [சுனச்சேபன்—இந்திரன்] க எவற்றால் உணவில் ஐசுவரியமுடனாகி உற்சாகமாவோமோ அவற்றால் இந்திரனோடு எங்களுக்கு இன்பங்களாக வேண்டும். உ வீரனே இரதத்தின அச்சாணியைப்போல் தோத்திரஞ்செய்பவர்களது நண்பனாகி உன்னைப் போலுள்ள நீ சலனமாகிறாய். ந தோத்திரஞ்செய்பவர்களது விருப்பத்தைப் பூர்த்தி செய்வதர்க்குப் போல் நீ இரதத்தின் அட்சத்தைச் சலனஞ் செய்கிறாய். [உ0. கஉஉ.] எகக. [குத்ஸன்—சூரியன்] க இவனே சூரியனின் தேவத்வம். இவனே சூரியனது மகிமை. செயலின் நடுவே விரிந்த விக்கனத்தையும் அவன் விலக்கியுள்ளான்; அவன் அவர்களது நிலத்தினின்று குதிரைகளை விடுதலை செய்யுங்கால் இரவையும் பகலையும் அனைவர்க்கும் விசாலஞ்செய்கிறான்.

உ சூரியன் சோதியின் மூல நிலயத்திலே மித்திரனும் வருணனுங்காண இந்த உருவத்தைத் தரிக்கிறான். ஒரு காலத்தில் கருப்பாயும் வேறு சமயத்தில் வெளுப்பாயு மான அவனது இரு குதிரைகள் அவனது ஒளியை அனந்த காலந் தரிக்கின்றன. [உO. கஉரு.] எகஉ. [வாம தேவன்—இந்திரன்.] க அற்புதமாய் சதா வளர்பவ னான நண்பன் எந்த இரட்சையோடு எங்களிடம் வரு வான்? எந்த அதி சக்தியுள்ள சங்கத்தோடு எங்களருகில் அணுகுவான்? உ அதி இன்பமளிக்கும் நடுவே பூஜ்ய மான எந்த சோம இரசம் திடமாய் காக்கப்பட்டுள்ள தனத்தைத் திறக்க உற்சாகமளிக்கும், ரு உன்னைப் புகழும் நண்பர்களைக் காக்கும் நீ சத இரட்சைகளுடன் எங்களை அணுகுவாயோ. ச—சு. சுருக வது சூக்தத்தின் க—ரு-வது மந்திரங்களைப் பார்க்கவும். [உO. கஉச.] எகரு [கீர்த்தி—இந்திரன், அசுவினி] க இந்திரா மகவா அதி வலிமையுள்ளவனே, கீழ்த் திசை மேற்சிசை சத் துருக்களைத் தூரமாக்கவும்; உனது விரிந்த காப்பில் இன்பமுடனுக, வீரனே வட திசை தென் சத்துருக்களைத் துரத்து. உ அங்கனே, யவதானியமுள்ளவர்கள் எப் படிக் கிரமமாய் யவதானியங்களை அதிகஞ் அறுப்புச் செய்கிறார்களோ அப்படி தருப்பையின் நமோ விருத் தியை பக்குவஞ் செய்யாதவர்களது புசிப்புக்களை இங்கு கொண்டு வா: ரு ஒரு குதிரையிலே மானிடர்கள் ருதுக் காலங்களில் வருவதில்லை. அவர்கள் சமர்களிலே ஜயத் தையு மடைவதில்லை. பசுக்களையும் புரவிகளையும் விரும்பி அறிஞர்கள் வல்லவனை இந்திரனை அவனது நட்புக்காக வளர்க்கிறார்கள். ச அசுவினிகளே சுபபதிகளான நீங் கள் இரம்மியமான சோமபானத்தைப் பூரணமாய்ப் பருகி அசுரச் சேர்க்கையுள்ள நமூசியோடு இந்திரனுக்கு

அவனது செயலிலே துணை புரிந்தீர்கள். ரு இந்திரா பெற்றோர்கள் மகனுக்கு உதவி புரிவதுபோல் இரு அசுவினிகளும் உனக்குத் துணை செய்தார்கள்; மகவானே நீ ஆண்மைகளோடு இன்பஞ் செய்யும் பானத்தைப் பருகியவுடன் சரஸ்வதி உன்னை இரட்சித்தாள். சு-எ. ச0சு, ச0எ-வது சூக்த மந்திரங்களைப் போலாகும். [உ0. கஉரு] எகச [விருஷா கபிரிந்திர இந்திராணி—இந்திரன்]
க மானிடர்கள் சோமனைப் பொழியுஞ் செயலினின்று நின்றுவிட்டார்கள். அவர்கள் இந்திரனை தேவன் என அறியவில்லை. புஷ்டியுள்ள சனங்களிலே எனது நண்பனை விருஷாகபி பூரணமாய் பருகும் நிலயத்திலே இந்திரன் அனைவருக்குந் தலைவனாயுள்ளான். உ இந்திராணி கூறுகிறாள்—இந்திரா விருஷாகபி செய்த துர்ச்செயலை நீ கடந்து செல்லுகிறாய், சோம பானத்தைப் பருக நீ வேறு எந்த இடத்தையும் காண்பதில்லை; இந்திரன் அனைவர்க்குந் தலைவனாயுள்ளான். ந இந்திரனது பேச்சு. இந்தப் பொன்நிற மிருகமான விருஷாகபி உனக்கு எத்துன்பத்தைச் செய்துள்ளான்: இப்போது எவனிடம் இக்கோபமுடனுள்ளாய், சிறந்தவனது புஷ்டிக்குவியல் எது: இந்திரன் அனைவர்க்குந் தலைவனாயுள்ளான். ச இந்திராணி பேசுகிறாள்—இந்திரா பன்றி வேட்டையாடும் நாயை நீ நண்பனைப்போல் பாலனஞ்செய்யும் விருஷாகபியைப் பிடித்து அவனது செவியைப் பற்றுவாயாக, இந்திரன் அனைவருக்குந் தலைவனாயுள்ளான். ரு நன்கு செய்யப்பட்டுள்ள எனக்குப் பிரியமான சுந்தரப் பொருள்களையெல்லாம் கபி சீர்குலைத்துள்ளான்; அவனது சிரத்தை நான் துண்டம் துண்டமாய்ப் பிளப்பேன், தீமை செய்பவருக்கு சுகந்தோன்றுவதில்லை, இந்திரன் அனைவர்க்குந் தலைவன். சு எந்தப் பெண்களும் என்னைக் காட்டிலும்

அதிக வசீகரமுள்ளவர்களாயும் அதிக இனிய லீலைகள் ஒங்குபவர்களாயுமில்லை, பதியின் ஆலிங்கனத்துக்கு தமது அழகையெல்லாம் அதிக ஆர்வமுடன் என்னைப்போ லளிப்பவர்களுமில்லை: இந்திரன் அனைவர்க்குந் தலைவனு யுள்ளான். எ விருஷாகபியின் பேச்சு, அன்னையே, சுக மளிப்பவளே, அங்கையே என்ன ஆகுமென்பதை நான் சொல்லுவேன். தாயே எனது சிரமும் எனது இடை களும் நடுங்குகின்றன. இந்திரன் அனைவருக்குந் தலைவனு யுள்ளான். அ இந்திரனது பேச்சு. விசால கேசங் களோடும் விரிந்த இடைகளோடும் சுந்தரக் கை களுடன் புஜங்களோடு அப்பெண்ணுள்ளாள்; சூரப் பத்தினியே நமது விருஷாகபியுடன் நீ ஏன் கோப மாகிருய்; இ ந் தி ர ன் அனைவர்க்குந் தலைவனுயுள் ளான், கூ இந்திராணியின் பேச்சு. துன்பஞ்செய்யும் இப்பிராணி வீர பதியற்றவள்போல் என்னை எண்ணு கிருள், நான் மருத்துக்களின் நண்பன் இந்திரனது இராணி நான் வீர மக்கட்களை அடைந்துள்ளவள்; இந் திரன் அனைவருக்குந் தலைவனுயுள்ளான். க௦ பழைய காலத்தினின்று நாரியானவள் சங்கிராமத்துக்கும் யக்ஞத் துக்குஞ் செல்லுகிருள்: இந்திரனது இராணியாயும் சூரர் களின் தாயுமாயும் நியமனஞ்செய்பவளுமான ஸ்திரீயான வள் போற்றப்படுகிருள்; இந்திரன் அனைவர்க்குந் தலைவ னுயுள்ளான். கக இந்திரனது பேச்சு. நான் ஸ்திரீகளிலே இந்திராணியை சௌபாக்கியமுள்ளவள் எனச் செவியுற் றுள்ளேன்; ஏனெனில் எக்காலத்திலும் அவளது புருஷன் மூப்பினுல் மரிப்பதில்லை. இந்திரன் அனைவர்க்குந் தலைவனு யுள்ளான். கஉ இந்திராணீ! சலத்தால் புனிதமாகும் எவனது பிரிய அவி தேவர்களுக்குச் செல்லுகின்றதோ அந்த எனது நண்பனை விருஷாகபி யில்லாமல் நான்

எதையும் அநுபவித்தது இல்லை, இந்திரன் அனைவருக்குந் தலைவனுயுள்ளான். ௧௩ விருஷாகபி பேசுகிறுள். விருஷாகபாயீ செல்வீ நற்புத்திரருள்ளவளே நல்ல மருமகள் உள்ளவளே, இந்திரன் அதிசுகமளிக்கும் உனது பிரிய அவியை உனது காளைகளை இந்திரன் புசிப்பான், இந்திரன் அனைவருக்குந் தலைவனுயுள்ளான். ௧௪ இந்திரன் பேசுகிறுன். அவர்கள் எனக்கு பதினைந்து இருபது உக்ஷங்களைப் பக்குவஞ் செய்கிறுர்கள்; அவற்றின் சத்தை நான் புசிக்கிறேன்; அவர்கள் எனது குடலை உணவால் பூரணஞ் செய்கிறுர்கள்; இந்திரன் அனைவருக்குந் தலைவனுயுள்ளான். ௧௫ இந்திராணி மொழிகிறுள். கூரிய கொம்புகளுள்ள காளையைப்போல் கூட்டங்களின் நடுவே முழக்கஞ் செய்பவனுயுள்ள இந்திரா உன்னை நாடி உனக்குப் பொழியும் அவளது இரஸம் உன் மனத்துக்கு இன்பமாகுக, இந்திரன் அனைவருக்குந் தலைவனுயுள்ளான். ௧௬ எவனது மனம் இன்பத்தின் நடுவிலாகின்றதோ அவன் தலைவனுவதில்லை. எவன் வியாபகமாகி எவனது கிரணமோங்கும் ஆக்ஞை விரிந்துள்ளதோ அவனே தலைவனுவான். ௧௭. இந்திரன் பேசுகிறுன், எவன் அமர்ந்து எவனது இருள் விரிகின்றதோ அவன் தலைவனுவதில்லை; எவனது மனம் இன்பத்தின் நடுவிலாகின்றதோ அவனே தலைவனுவான். ௧௮ இந்திராணி பேசுகிறுள். இந்திரா! இந்த விருஷாகபி அழிந்த மிருகத்தையும், பக்குவஞ்செய்பவனையும் நவமான பாண்டத்தையும் கத்தியையும் கட்டை மிகுந்த வண்டியையுங் கண்டாள், இந்திரன் அனைவருக்குந் தலைவனுயுள்ளான். ௧௯ இந்திரன் பேசுகிறுன். அனைவரையுங் கண்டு தாசனையும் ஆரியனையும் தெளிந்து பார்ப்பவனுய் நான் செல்லுகிறேன்; நான் தீரனைப்பார்க்கிறேன்; சிரத்தையோடளிப்பவனது சோம இரஸத்தைப்

பானஞ்செய்கிறேன், இந்திரன் அனைவருக்குந் தலைவனு யுள்ளான். உ௦ பாலைவனங்களும் பாதாள சரிவுகளும் எத்தனை யோசனைகள் விரிந்துள்ளன? அருகிலுள்ள மனைகளுக்குச் செல்; விருஷாகபியே உனது இல்லத்துக் குச்செல், இந்திரன் அனைவர்க்குந் தலைவனுயுள்ளான். உக விருஷாகபியே நீ மறுபடியும் வா; நாங்கள் இருவ ரும் உனக்கு இன்பத்தைக் கொண்டு வருவோம். உறக்கம் செலுத்தும் இவ்வழியால் நீ வீடு செல்லுகிறாய், இந் திரன் அனைவருக்குந் தலைவன். உஉ இந்திராணியின் பேச்சு. இந்திரா விருஷாகபி நீங்கள் உங்களது மனைக்கு உச்சமாய் செல்லுங்கால் முழக்கஞ் செய்த அம்மிருக மெங்கே? மானிடர்களுக்குத் துன்பமளிக்கும் அம்மிரு கம் எங்கு சென்றது? இந்திரன் அனைவருக்குந் தலைவனு யுள்ளான். உ௩ மனுவின் பெண்ணான பர்சு ஒரே சன னத்தில் இருபது மக்கட்களைப் பெற்றாள்: அவளது உத ரம் துக்கத்தைச் செய்தாலும் அவளது பாகம் மங்கள மளிப்பதாகும். [உ௦. கஉ௬.]

## குந்தாப சூக்தங்கள்

எக௫. மானிடர்களே இதைக் கேளுங்கள். நரர்துதி நுவ லப்படும் கௌரமனே! அறுபதுனுயிரம் தொண்ணூறு—வீரர்களை—சத்துருக்களிலே நாங்கள் சேர்த்துள்ளோம். உ பெண்களைத் தங்கள் பக்கத்தில் அடைந்துள்ள இரதமிழுக்கும் இருபது ஒட்டகங்களை அவன் அளித் தான்; அவனுடைய இரதத்தின் உச்சி சலனமா குங்கால்—வானம்பற்றும்—சோதியையுந் திரஸ்கரிக்கும். ௩ அவன் பத்து மாலைகளையும் நூறு பொன் சங்கிலிகளை

௫ அக௧—எ௩க. கருத்து. இந்திரனது மகிமை.

யும் ரிஷிக்களித்தான்; அவன் ௲00 புரவிகளையும் ௧0,000 பசுக்களையும் விரும்புவனுக்களித்தான். ௪ துதி செய்பவனே கானஞ் செய்; பக்குவ பழமுள்ள பட்சியைப்போல் கானஞ் செய். கத்திரியின் இரு அலகுகளைப்போல் நாவும் உதடுகளும் அசைகின்றன. ரு பாக்களும் மானிடர்களும் பசுக்களையும் மாடுகளையும் போலே முன் வருகிறார்கள்; அவர்களுடைய பெண்கள் மனையிலுள்ளார்கள்; அவர்கள் வீட்டில் பசுவினருகிலுள்ளார்கள். ௬ துதி செய்பவனே பசுவையும் பொருளையுங் காணுங் கானத்தைக் கொண்டு வா. வில்லாளன் சரத்தைக் குறி வைப்பதுபோல் இத்துதியை தேவர்களுக்குச் செய். எ விசுவ சனத்துக்கு—ஹிதனையும்—அனைவரையும் அரசுபுரியும் அரசனையும் மானிடர்களிலே தேவனையோங்கும் பரிக்ஷித்தின் துதியைக் கேளுங்கள். அ கௌரவ்ய பதியான பரிக்ஷிதபதி ஸ்திரீயோடு குலத்தைச் செய்பவனாய் ஆசனமடைந்து தவத்தைச செய்பவனாய் எங்களுக்கு க்ஷேமத்தை அளித்தான். ௯ பரிக்ஷித இராஜாவின் இராஜ்யத்திலே ஸ்திரீ பதியினிடம் வினவுவதாவது 'நான் உன் முன் தயிரையா யவரசத்தையா பால்சத்தையா வைப்பேன். ௧0 சுவர்க்கத்துக்குப் போலே வெடிப்பிலே பக்குவ தானியங் கிளம்புகின்றது. பரிக்ஷிதன் அரசுபுரியும் நாட்டிலே சனங்கள் சந்தோஷமாய் வாழ்கிறார்கள். ௧௧ இந்திரன் கவியை எழுப்பிச் சொன்னதாவது—எழுந்திரு நீ பிரசாரஞ் செய்பவனாய் இங்கு மங்கும் சுற்று; உக்கிரனான என்னைத் துதிசெய்; சர்வ சத்துருக்களும் உனக்குச் செல்வத்தை அளிப்பார்கள். ௧௨ பசுக்களே இங்கு பெருகுங்கள்; புரவிகளே இங்கு ஓங்குங்கள்; மானிடர்களே இங்கு மேன்மையாகுங்கள்; ஆயிரந் தட்சிணை யளிக்கும் பூஷணன் இங்கு பொருந்துகிறான். ௧௩

இந்திரா இங்கு பசுக்கள் காப்புடனாகுக. துன்பத்தினின்றும் கோபதி நீங்குவானாக. திருடனும் அவர்களை சுவாதீனஞ் செய்யாமலாவானாக. ௧௪ நாங்கள் அடிக்கடி சூக்தச் சொல்லோடு மங்கள மொழியோடு வீரனைப் புகழ்கிறோம். நாங்கள் கானஞ் செய்யும் பாக்களிலே இன்பமாகவும், புன்மை எங்களில் விழாமலாகுக. [௨௦. ௧௨௭.]

௭௧௯ ௧ சபைக்கும் சங்கிராமத்துக்கும் சோமனைப் பொழியும் யக்ஞசீல புருஷனையும், அங்கு சத்துரு வழிக்கும் சூரியனையும் தேவர்கள் பூர்வத்திலே சித்தஞ் செய்தார்கள். ௨ சகோதரியைச் சேர்பவனும், நண்பனைத் துன்பஞ் செய்ய விரும்புவனும், மூத்தவனை அவமதிப்பவனும் அதோகதியிலாவார்கள் என அவர்கள் சொல்லுகிறார்கள். ௩ மங்களம் பெருகுபவனது மகன் வீரனாகுங்கால், அறிஞனை கந்தருவன், அவனை உயரச் செலுத்த பிரியமான மொழியை உபதேசித்தான். ௪ அநுபவிக்காத வணிகனும் தானமளிக்காத தனவந்தனும் அறிஞர்களால் தள்ளப்படுகிறார்கள் என நாம் செவியுற்றுள்ளோம். ௫ தேவனை யஜித்தவர்களும், செல்வங்களை அளித்தவர்களும் சுவர்க்கத்தில் எழுந்த சூரியனைப்போல் செல்வத்திலே மகவானைப்போல் செழிக்கிறார்கள். ௬ பிரம்ம மகனாகி அறிவிலியானால் அவன் அஞ்சனக் கண் அன்றி சுந்தர சர்ம சூனியனாகி, மணி நீங்கியவனாகிறான்; அவன் பொன் இல்லாமலுமாகிறான்; இவை கல்பங்களிலே சேர்க்கப்பட்டுள்ளன. ௭ பிரம்ம மகன் சுப்பிரம்மனானால் அவன் அஞ்சனக்கண் காயங்களுடனாகிறான்; அவன் மணியும் பொன்னும் அணிபவனுமாகிறான்; இவை கற்பங்களிலே சேர்க்கப்பட்டுள்ளன. ௮ பருக, நிலையில்லாத சலாசயங்கள், அளிக்காத செல்வன், நீங்கள் பற்றப்படாத சுந்தரப்பெண்—இவர்கள் அறிவிலிக்

கென—கற்பங்களிலே சேர்க்கப்பட்டுள்ளன. ௬ பருக நிலையுள்ள சலாசயங்கள் தாராளமாயளிக்கும் செல்வன் பரிசிப்பதர்க்கான சுந்திரப்பெண்—இவை கல்பங் களிலே சேர்க்கப்பட்டுள்ளன. க௦ புருஷனால் விடப் பட்ட மனைவியும், சுகம் விரும்பி சமர் நீங்க விரும்புவ னும் ஏற்றமாகாத குதிரையும் கற்பங்களிலே சேர்க்கப் பட்டுள்ளன. கக அதி பிரியமான மனைவியும் சுகமாய் சமருக்குச் செல்பவனும் தடைவாருக்குத் தாழும் குதிரை யும் கற்பங்களிலே சேர்க்கப் பட்டுள்ளன. க௨ இந்திரா பத்து அரசர்களின் சண்டையில் அமானுஷ்யமாய் நீ சமர் செய்தது ஒவ்வொரு மானிடனுக்குங் காவல் புரிவதுபோ லாயிற்று. அவன் யக்ஞத்துக் கருகனுகிறான். க௩ சுலப மாய் ஜயிக்கும் சூரனை மகவானை நீ இராஜியைத் தாழ்மை செய்கிறாய்; நீ இரௌஹிணனைப் பிளந்து விருத் திரனது தலையை துண்டம் துண்டஞ் செய்கிறாய். க௪ நீ மேகங்களை தனிமை செய்தாய், சலக் கூட்டத் தில் வியாபகமானாய்; இந்திரா விருத்திரனை வீழ்த் திய அதிமகானை உனக்குப் புகழாகுக. க௫ வேக மாய்ப் பாயும் உச்ச செவிகளுள்ள குதிரைக்கு அவர்கள் குதிரையே சுந்தரமாலையுடன் இந்திரனை வகித்து ஜயத்துக்கு சுவஸ்தியுடன் செல் என சொன்னார் கள். க௬ அவர்கள் வெள்ளைக் குதிரைகளை இணைக்கிறார் கள்: குதிரையின் வலது புறம் உச்சச்சிரவத்தைச் சேர்க் கிறார்கள்: தேவர்களின் முதன்மையான இந்திரனை சுமந்து செல்லுங்கால் அவன் இன்பமாகிறான்.

[௨௦. க௨அ.] எகஎ [ஐதசப்பிரலாபம்]. க-௪. இக் குதிரைகள் பிரதீப பிராதி சுத்வனுக்கு ஓடுகின்றன. அவற்றில் ஒன்று ஹரிக்கினிகை: ஹரிக்கினிகையே! நீ எதனை விரும்புகிறாய்? ரு—அ. உயரிய பொன்மய மகனை

விரும்புகிறேன்: அவனை இப்போது எங்கு விட்டு விடுவாய்? அங்கு தூரத்திலே எங்கு மரங்களுண்டோ எங்கு மூன்று சிசுக்கள் நிற்கின்றார்களோ—அங்கு விட்டுவிடுவேன். ௯—௧௦ அங்கு மூன்று பிருதாகவங்கள்—உண்டு: அவர்கள் உச்சியை ஊதுபவர்களாயுள்ளார்கள். ௧௧-௧௨ இங்கு குதிரை வந்துள்ளான், அவன் வலிமையால் அறியப்படுகிறான். ௧௩ கோமயத்தால் பசுவழி புலனாவதுபோல்—மொழியால் அறிஞன் அறியப்படுகிறான். ௧௪ புருஷரது குலத்திலே நீ எதை விரும்புகிறாய்? ௧௫ நான் யவத்தையும் பக்குவ தானியத்தையும் நாடுகிறேன். ௧௬ நீ யவத்தையும் அரிசையையும் புசிக்கிறாயோ? ௧௭. மலைப்பாம்பு ஆட்டைப் புசிப்பதுபோல்—நீ தானியத்தைப் புசிக்கிறாய். ௧௮. நீ மாட்டின் குளம்பையும் குதிரையின் வாலையுமடைந்துள்ளாய். ௧௯-௨௦. கழுகின் சிறகைப்போல்—அவள் பாலனஞ் செய்வாளாக: அவள் ரோகரஹிதமான நாவை—சுவாதீனஞ் செய்பவள். [௨௦. ௧௨௯.] எ௧௮. ௧-௨ இந்தப் பால்களை எவன் எடுத்துச் சென்றான்? கரும்பசுவின் பாலை எவன் எடுத்துச் சென்றான்? ௩-௪ வெண் பசுவின் பாலை எவன் எடுத்துச் சென்றான்? கரும் பசுவின் பாலை எவன் எடுத்துச் சென்றான்? ௫-௬. இவனைக் கேட்கவும்? நான் எங்கு கேட்கிறேன்? நான் எங்கு எவனைக் கேட்கிறேன்? ௭-௮. யவச்சாமைகள் குடலில் நிற்பதில்லை: கோபமில்லாதவர்களும் இப்போது கோபமாகிறார்கள். ௯-௧௦ மணியில்லாதவர்களும் மணியுடனாகிறார்கள்: தேவனான நீ சூரியனுக்குச் சமானமாவாய். ௧௧-௧௨ வெண்மையாயும் ஹரிக்கிணிகையுமான குதிரை செல்வத்தைப் பற்ற ஓடுகின்றது. ௧௩-௧௪ கொம்பு ஊதப்பட்டால் நமது நண்பன் உன்னைக் காணுமலாவானாக. ௧௫-௧௬ இங்கு அவர்கள் பசுவின் மகனுக்கு வருகிறார்கள்; யக்ஞம்

எலும்பு பீஜத்தைப்போல்.[உ0. கநூச] எஉநூ. க போகுதன் இங்கே வந்துள்ளான்—நாய்போல். உ சே. அதுபோய் விட்டது—விழும் இலைகளைப்போல் துவம்சமாக்கு, அது மிதிக்கப்பட்டது—மாட்டுக் குளம்பைப் போல். தேவனே துதி செய்பவனே நாங்கள் மொழிகிறோம். இரு துந்துபிகளை ஒருவன் தட்டுவதுபோல்—புருஷன் இருகிரணங்களை அசைக்கிறான். ஒரு கோசத்தின் இரு கத்திகளைப்போல்—உனது தாயின் இரு கிரணங்களைப்போல் கயிற்றை இறுக்குவதுபோல் உன் வசத்திலாக்கு. பாதரட்சையில் பாதம் வைப்பதுபோல் சேர். மை தீட்டைப் போல்—சேர். மை தீட்டுவது போல்—பொருந்தவும். நூ சல பாண்டம்போல் சீவி, சலத்தில் நெய் பிந்துவைப்போல் வாழ்—அசுவத்த இலைபோல் சல துளிபோல் சலபாண்டம்போல். ச இந்த தேவர்கள் சென்று விட்டார்கள்: அத்வர்யுவே நீ என் வேலையைத் துரிதமாய் செய். அங்கு பசுக்களுக்கும் தங்கும் நல்ல நிலயமுண்டு. நீ இன்பமாகவும். ரு பத்தினி பொருந்துங்கால் பத்தினியாகவே புலனாகிறாள், இவளில் பிரவேசித்து ஒருவன் ஹோதாவாகிறான். துதிசீலனை தேவனே நாங்கள் இப்படிச் சொல்லுகிறோம். சூ கானஞ் செய்பவனே, ஆதித்தியர்கள் அங்கிரசர்களுக்குத் தட்சிணையைக் கொண்டு வந்தார்கள். அறிஞனே அவர்கள் அதனருகில் செல்லவில்லை: அறிஞனே அவர்கள் தட்சிணையைப் பற்றவில்லை. எ அறிஞனே அவர்கள் அதன் பக்கஞ் செல்லவில்லை. ஆனால் நாள்கள் மறையாமலிருக்கவும் யக்ஞங்களுக்கு தலைவர் சூனியர்களாகாமலிருப்பதற்கும் அவர்கள் இதனை அங்கீகரித்தார்கள். அ துரிதமாய் அவன் சென்றுவிட்டான். வெண்புரவி பாதத்தில் துரிதமாகிறான். அவன் வேகமாய் அளவைப் பூரணஞ் செய்கிறான்.

௯ அங்கிரசனே ஆதித்தியர்களும், ருத்திரர்களும், வசுக்களும் உன்னை உபாசிக்கிறார்கள், இச்செல்வத்தை சுவீகரி. இந்த விரிந்த மேலான செல்வத்தை, பெரிய பெருகும் பொருளை அங்கீகரிக்கவும். ௧௦. தேவர்கள் வரத்தை அளிப்பார்கள். அது உங்கள் இருதயத்துக்கு இன்பமாகுக: உங்களிடம் அது ஒவ்வொரு தினமும் நிகழ்ந்திடுக, எங்கள் அளிப்பை சுவீகரியுங்கள். ௧௧ வெகு தூரத்தினின்று அழைக்கப்படும் இந்திரனே எங்களுக்குச் சுகத்தை அளி: உன்னைத் துதிக்கும் அதிபுகழுள்ள அறிஞனுக்குச் செல்வத்தை அளி. ௧௨. இந்திரா சிறகு சிதைந்தால் நடுநடுங்கும் புருவுக்கு பக்குவ தானியத்தையும் பிலுவையும் நீ அளித்தாய், தாகமாகுங்கால் சலத்தை அளித்தாய். ௧௩ அரங்கரன் கயிற்றால் முக்கட்டுடனுலும் முழங்குகிறான், அவன் இரசத்தைப் போற்றுகிறான். துக்கத்தை நீக்குகிறான். [௨௦. ௧௩௫] எ௨௪. ௧ குற்றங் கழிப்பவனது அற்பாங்கத்தில் தூலம் பிரவேசிக்குங்கால் அவள் தங்கத்தில் முஷ்கங்கள் குளம்பில் மீன்களைப்போல் சலனமாகின்றன. ௨ தூல பஸத்தால் சிறிய அங்கத்தில் பிரவேசிக்குங்கால் அங்கு முஷ்கங்கள் மணல்களில் கழுதைகளைப்போல் உருளுகின்றன. ௩ சின்னஞ்சிறு அங்கத்திலே இலந்தையைப்போல் விழுங்கால் வாசந்திக உணர்வு உரப்புடனாகி விளங்குகின்றது. ௪ திவ்யம் நாடுபவன் சுந்தரமொழியுள்ள இன்னலாகாத ஸ்தானத்தில் பிரவேசிப்பது கண்ணால் காண்பது சாத்தியமாவதுபோல் காரிகை சேர்க்கையிலே பயனுடனாகிறான். ௫ மஹாநக்கினி கர்வஞ் செய்கிறாள், விமுக்தன் குதிரைபோல் கர்ச்சித்து வியாபகமாகிறான், கனீனை நடுவில் உயரிய பலத்தை சக்தியால் அடைகின்றாள். ௬ ஊனுலுக்கலத்துக்குச் சமானமான மஹாநக்கினி மொழிவதாவது—வனஸ்பதியே எப்

படி உன்னால் இடிக்கிறார்களோ அப்படியே நீயுமாவாயாக. ௭ மகாநக்கினி மொழிவதாவது—வனஸ்பதியே நீ பிரஷ்டனாலும் தானியங்களை உன்னால் எப்படி அரைக்கிறார்களோ அப்படியே இன்பதுத்துக்கு துவம்சமாகின்றது. ௮ மகாநக்கினி மொழிவதாவது. நீ பிரஷ்டனாகுங்கால் அனல் ஓங்கி எழுவதுபோல் எனது அங்கங்கள் எரிகின்றன. ௯ மஹாநக்கினியின் மொழி. பசம் ஸ்வஸ்தியுடன் நுழைக, செடியின் தானியம் சல்லடையைப்போல் அங்கத்தை அநுசரிப்போம். ௧0 மகாநக்கினி ஓங்கும் மொழியுள்ளவனை சாந்தச் சொல்லால் அநுசரித்துச் சொல்வதாவது—சிரத்திலே போஷண சக்தியை தரித்துள்ள அவன் எத்தகைய மிருகம் என நாங்கள் அறிவதில்லை. ௧௧ மகாநக்கினி குதித்து வரும் மகாநக்கனனை அநுசரித்துச் சொல்வதாவது நீ மொழியைப் பாலனஞ்செய், என்னைச் சேர், ஓதனத்தை அநுபவி. ௧௨ மகாநக்கினியே. சுதேவன் உன்னை வெகு விதமாய்க் கடைகிறான், புஷ்டியுள்ளவன் மெலியவனை அழிக்கிறான், என்னைச் சேர்ந்து ஓதனத்தை அநுபவி. ௧௩ பசுப்போலான பெண் வனனீயகரத்தை முன் வைக்கிறாள்: அவளால் விரும்பப்படுபவன் வில்வன் மங்களன் மகான். என்னைச் சேர் ஓதனத்தை அநுபவி. ௧௪ மகாதேவன் மேலான செல்வத்தைக் கடைகிறான், பெண் சுந்தரி செயல் செய்து முன் தாவுகிறாள். ௧௫. வில்வள் மேலான மங்களன், உதும்பரன், மங்களன். மேலானவன் மேலான உயரிய செல்வத்தை எங்கும் அடைய விரும்புகிறான். ௧௬ சுந்தரமாயும் செழுமையாயுமுள்ளவள் மெலிந்தவனை அடையுங்கால் என்னெய் குடத்தினின்று விரலைப்போல் மெலிந்தவனை விலக்குகிறாள். [௨௦. ௧௩௬]

குந்தாப சூக்தங்கள் முற்றிற்று.

எஉரு [இரிம்பிடி யயாதி—பல தேவர்கள்] க நீங்கள் அயமய மருந்தோடு முன் சென்றீர்கள்; நுரையைப் போல் இந்திரனுடைய சத்துருக்கள் எல்லாம் அழிக்கப் பட்டுள்ளார்கள். உ மானிடர்களே; நமக்கு இன்ப மளிப்பவனே இந்திரன்; இன்பமாகுங்கள்; செல்வத் தைப் பற்றித் தூண்டுங்கள்; அறிஞர்களே நிஷ்டி கிரி யின் மகனை இந்திரனை சோமபானம் பருக நமக்குத்துணை புரியத் துரிதமாய் அழைத்து வாருங்கள். ௩ சக்தியும் ஜயசீல குதிரையுமான ததிக்கிராவணத்தை நான் துதி செய்துள்ளேன். அவன் எங்கள் முகங்களை இன்பஞ் செய்வானாக; எங்கள் வாழ்நாட்களை வளர்ப்பானாக. ச பொழியப்பட்டுள்ள இனிய சோமன்கள் இந்திரனுக்கு இனிமை அளிப்பவை. புனிதனுக் கருகதையான அவை பாய்கின்றன; உங்களது இனிய இரசங்கள் தேவர்களைச் சேர்க. ரு இந்து இந்திரனுக்குப் பாய்கிறான் என இங்ஙனம் தேவர்கள் சொல்லியுள்ளார்கள். வாசஸ்பதி பூஜைக் கருகன். ஓஜசால் விசுவத்துக்கு ஈசன். சு ஆயிரந் தாரைகளுடன் சமுத்திரனைப் போலுள்ளவன் மொழி முழங்குபவன், செல்வபதியாய் இந்திரனின் நண்பனாயுள்ள சோமன் தினந்தோறும் பெருகுகிறான். எ பதினாயிரஞ் சூழ்ந்துள்ள கருந்துளி அம்சுமதியின் நடுவிலே மூழ்கிற்று. அது திணறுங்கால், இந்திரன் தன் பலத்தால் அதனை விரும்பினான். வீர இருதயமுள்ளவன் தனது ஆயுதங்களை தனிமையாய் வைத்தான். அ அம்சுமதி நதியின் கரையோரத்திலே வெகு தூரத்திலே சலனமாகும் துளியை நான் கண்டேன்; அது கரும் மேகத்தைப்போல் சலத்தில் மூழ்கிற்று; வீரர்களே நான் உங்களைத் தூண்டுகிறேன்; நீங்கள் சென்று சமரிலே சண்டை செய்யுங்கள். கூ அந்துளி அம்சு

மதியின் மூலத்திலே சோதியோடு சுந்தரமாகி அதன் வடிவத்தைத் தரித்தது ; இந்திரன் பிரகஸ்பதியை துணையாகக் கொண்டு அவனுக்கு மாறுன அதேவ சனங்களை ஜயித்தான். ௧௦ இந்திரா உனது சனனத்திலே எதிர்ப்பில்லாத ஏழு சத்துருக்களின் சத்துருவாயிருந்தாய். இரகசியமான வானஞ் சோதியை நீ கண்டாய். மேலான உலகங்களுக்கு நீ இன்பத்தை அளித்தாய். ௧௧ வச்சிராயுதனே நிகரில்லாத உன்பலத்தை உனது வச்சிராயுதத்தால் வீரத்துடன் விளக்கஞ் செய்கிறுய் : உன் ஆயுதங்களால் சுஷ்ணனின் சக்தியை வீழ்த்திறுய் ; இந்திரா ; உன் பலத்தால் பசுவைக் காண்கிறுய். ௧௨—௧௪. மேலான விருத்திரனை கொல்ல இந்த இந்திரனை நாங்கள் பல—முடனுக்குகிறோம். அவன் வலிய விருஷபனுயிருப்பான். ஐசுவரியமளிக்கச் செய்யப்பட்ட இந்த இந்திரன் இன்பஞ்செய்ய சக்தி வாய்ந்தவன். இவன் சுலோகன், சௌம்யன், மொழியால் மேன்மையான வச்சிராயுதத்தைப் போல் அதி வன்மையாகி சத்துருவால் இம்சையாகாதவன். வலிமையுடன் அவிநாசனுயுள்ள அவன் வளர்கிறுன். [உ௦. ௧௩எ.] எ௨௬ [வத்ஸன்—இந்திரன்] ௧ மழை மிகுந்த பர்ஜனியனைப்போல் இந்திரன் ஓஜஸில் ஓங்கியவன். வத்சனின் சோமனுல் வளர்கிறுன். ௨ வஹிப்பவர்கள் ருதத்தின் பிரஜையை போஷிக்குங்கால் விப்பிரர்கள் சத்தியத்தில் சேர்கிறுர்கள். ௩ கண்வர்கள் இந்திரனை ஸ்தோமங்களால் யக்ஞசாதனஞ் செய்யுங்கால் ஆயுதத்தை வீண் எனச் சொல்லுகிறுர்கள். [உ௦. ௧௩அ.] எ௨எ. [சசகர்ணன்—அசுவினி] ௧ அசுவினிகளே ! வத்ஸனைக் காக்க நீங்கள் இங்கு வாருங்கள். துணையையும் விரிந்த நிலயத்தையும் அவனுக்களியுங்கள். துன்பங்களை தூரம் செய்யுங்கள்.

௨ அசுவினிகளே! பஞ்சமானவர்களிலே சுவர்க்கத்திலே வானத்திலேயுள்ள ஆண்மைகளை எல்லாம் எங்களுக்களி யுங்கள். ௩ அசுவினிகளே துதிப்பவர்களின் நடுவே முதன்மையாய் உங்களது அதிசயச் செயல்களை நினைத்த கண்வனைக் கருத்திலாக்குங்கள். ௪ அசுவினிகளே உங்களுக்கு இத்தாபாஹுதிகள் ஸ்தோமத்தோடு செய்யப் பட்டுள்ளன; செல்வபதிகளே; சத்துருவிலே சிந்தனை சேர்க்கும் இவ்வினிய சோமபானம் உங்களுடையது. ௫ அசுவினிகளே அதிசயச்செயல் செய்பவர்களே, சலங்களிலும், வளரும் செடிகளிலும் மரத்திலும் நீங்கள் எதனைச் செய்திருந்தாலும் அதனால் என்னைப் பாலனஞ் செய்யுங்கள். [௨௦. ௧௩௯] எ௨அ [அசுவினி—சசகர்ணன்] ௧ அசத்தியமில்லாதவர்களே தேவர்களே உங்கள் போஷணத்தையும் சிகிச்சையையும் உங்கள் வத்ஸன் மனனங்களாலேயே அடைவதில்லை. நீங்கள் அவி அளிப் பவனிடஞ் செல்லுகிறீர்கள், ௨ ரிஷி அசுவினிகளின் ஸ்தோமத்தை சுந்தரமாய் நினைத்தான்; அதர்வணன் தாபாஹுதியையும் இனிய சோமனையும் பொழிவானாக. ௩ அசுவினிகளே! சுலபமாய்ச்செல்லும் உங்கள் இரதத்திலேறுங்கள்; சூரியனைப்போல் எனது இத்துதிகள் உன்னை இங்கு துரிதமாய்க் கொண்டு வருக. ௪ அசத்தியமில்லாதவர்களே, அசுவினிகளே எங்கள் ஸ்தோமங்களால் மொழிகளால் நாங்கள் உங்களைத் துரிதஞ்செய்யுங்கால் நீங்கள் கண்வனை கவனியுங்கள். ௫ கட்சீவானும் ரிஷிவியவசுவனும் தீர்க்கதமனும் யக்ஞ நிலயங்களில் வைன்ய பிரதீயும் உங்களை அழைத்து நீங்கள் அவர்களை கவனித்ததுபோல் அசுவினிகளே இங்கு எங்களை ஞாபகஞ் செய்து கொள்ளுங்கள். [௨௦. ௧௪௦] எ௨௯. [சசிகர்ணன்—அசுவினி] ௧ அசுவினிகளே சத்துருவினிட

மிருந்து எங்களைக் காத்து எங்கள் காயங்களையும் சிவர்களையும் இரட்சிப்பவர்களாயும் எங்கள் மனைகளை காப்பவர்களாயும் வாருங்கள். பிரஜையையும் இரே தஸையுமளிக்க எங்கள் மனைகளுக்கு வாருங்கள். உ நீங்கள் இந்திரனோடிருந்தாலும், ஒரே நிலயத்தில் வாயுவோடு வசித்தாலும் ரிபுக்களோடு ஆதித்தியர்களோடு இணைந்திருந்தாலும் விஷ்ணு ஆக்கிரமிக்கும் நிலயங்களில் நின்றாலும்—இங்கு வாருங்கள். ந அசுவினிகளே நான் இன்று சக்தி பெறுவதற்கோ சமரில் ஜயமுடையவனுவதற்கோ அசுவினிகளே நான் உங்களை அழைத்தால் நான் அவற்றை அடைய உங்களின் துணை வேண்டும். ச அசுவினிகளே இங்கு வாருங்கள், இங்கு அவிகள் உங்களுக்கு வைக்கப் பட்டுள்ளன. யதுக்கும் துர்வசனுக்குந் துணை புரிய இதோ இச்சோமபானங்கள் கண்வ மக்கட்களின் நடுவே இவை உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. [உO. கசக] எநO

[சசகர்ணன்—அசுவினிகள்] க நான் தேவியோடும் அசுவினிகளின் மொழியோடும் நான் எழுந்துள்ளேன். தேவியே நீ மானிடர்களுக்கு மதியையும் செல்வத்தையு மளித்துள்ளாய். உ உஷையே சூநிருதையே தேவியே மேன்மையானவளே அசுவினிகளை எழுப்பு. யக்ஞஹோதாவே! எழுந்திரு! இன்பமளிக்கும் பானத்துக்கு புகழாகுக. ந உஷையே நீ சோதியோடு வருபவளாய் சூரியனோடு ஒளி வீசுகிறாய், மனிதர் காக்கும் இந்நிலயத்துக்கு அசுவினிகளின் இரதம் வருகின்றது. ச பசுக்கள் ஸ்தனங்களினின்று பாலைப் பொழிவதுபோல் பொன்தண்டு இரஸத்தைப் பொழியுங்கால் ஸ்தோமத்தை மொழி முழக்கஞ் செய்யுங்கால் அசுவினிகள் ஞானத்தைப் புலனுக்குவார்களாக. ரு புகழுக்கும் பலத்துக்கும் முன் செல்ல மனிதர்களை ஜயிக்கும் பாதுகாப்பை அடைய,

வலிமையடைய அறிஞர்களான அசுவினிகள் எங்களைத் தூண்டுவார்களாக. சு. நீங்கள் பிதுரு நிலயத்திலே அமருங்கால் அறிவோடிருப்பதால் போற்றுவதர்க் கருகருகர்கள். [உ௦—கசஉ] எ௩க. [புருமீடர் ஜமீடர்கள் க—எ. வாமதேவன் மேத்யாதிதிகள் அசுவினிகள்] க அசுவினிகளே! கோகுவிப்பதாயும் விரிந்து விசாலமுமான உங்கள் இரதத்தை நாங்கள் இன்று அழைக்கிறோம்; அந்த இரதம் மொழிதரிக்கும், வசுமிகுந்தது. விரிந்துள்ளது. ஆதாரம்அமைந்தது, சூரியனைச் சுமக்கும். உ அசுவினிகளே திவ்ய மக்கட்களே உங்கள் தேவத்வத்தால், திடங்களால் கீர்த்தியை அடைந்தீர்கள். உங்கள் இரதத்திலே உயரிய குதிரைகள் உங்களை இழுக்குங்கால் உங்கள் சரீரத்தை உணவு அநுசரிக்கின்றது. ௩ மொழிகளோடு சோமபானஞ் செய்ய அளிக்கும் அவியோடு உதவிக்கு உங்களை இன்று எவன் அழைக்கிறான்? அசுவினிகளே! வணக்கமளித்து யக்ஞத்தின் பழைய நண்பனுக்கு உங்களை இன்று அழைப்பவன் யார். ச அதிசக்தியுள்ளவர்களே அசத்தியமில்லாதவர்களே பொன் இரதத்திலே எங்களது இந்த யக்ஞத்துக்கு வாருங்கள். இனிய சோமபானத்தைப் பருகுங்கள்; உங்களை நாடும் சனத்துக்குச் செல்வத்தை அளியுங்கள். ரு புவியினின்றும் சுலபமாய் செல்லும் உங்களது சொர்ண இரதத்திலே இங்கு வாருங்கள். மற்றவர்களால் நீங்கள் தடுக்கப்படாதேயுங்கள். நீங்கள் இங்கு பழைய நட்புப் பாசத்தால் பந்தமாயிருக்கிறீர்கள். சு அசுவினிகளே. அதிசயச் செயல் செய்பவர்களே. வெகு வீரர்களோடு ஒங்கும் அதி செல்வத்தை எங்களுக்களியுங்கள். ஏனெனில் மானிடர்கள் உங்களுக்கு ஸ்தோமத்தைக் செய்துள்ளார்கள். ஆஜமிலர்கள் ஒரேதுதிக்கு வந்துள்ளார்கள். எ அதி

ஆண்மையுள்ளவர்களே சமான சித்தமுள்ளவர்களே! உங்கள் இருவரையும் நான் திருப்தி செய்யுங்கால் எங்களுக்கு உங்களது சுமதியாயிற்று. உங்களைந் துதிக்கும் எங்களைப் பாலனஞ்செய்யுங்கள். அசத்திய மில்லாதவர்களே! உங்களை என் விருப்பம் அநுசரித்துள்ளது. அ எங்களுக்கு ஔஷதங்களும் சோதிகளும் சலங்களும் இனியவையாகுக. வானமும் இனிமையாகுக. க்ஷேத்திர பதியும் எங்களுக்கு இனியவனுவாறுக, இன்னலாகாமல் நாங்கள் அவனை அநுசரிப்போமாக' ௯ அசுவினிகளே உங்கள் செயல் துதிக்கருகதை. சோதியின் விருஷபத்தையும் வானத்தின் காளையையும் புவியின் மாட்டையும் பசுச் செயலில் ஆயிரம் துதியுள்ளவர்களையெல்லாம் சோமபானஞ் செய்விக்க நீங்களும் பருக வாருங்கள். [௨௦. ௧௪௩.]

**20 - வது காண்டம் முற்றிற்று.**

## அதர்வ - வேத சம்ஹிதையின் பரிபூரணத் தமிழ் மொழி பெயர்ப்பு முற்றிற்று.

அதர்வ-வேத சம்ஹிதையின் பரிபூரணத் தமிழ் மொழி பெயர்ப்பான அதர்வவேதமென்னும் இத்தமிழ் நூல் கலியுகம் ௫௦௪௧-ம் வருஷம் விக்கிரமாதித்தியனின் ௧௯௯௭-வது ஆண்டு பிரமாதி வருஷம் தைமீ முதல் தேதியான 1940-ம் வருஷம், ஜனவரி மாதம் 14-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மணக்கால் இராமசுவாமி அவதானிகள் - ஸ்ரீமதி இலட்சுமி தேவியின் மகனும் கிருஷ்ண யஜுர் வேத சம்ஹிதை, சுக்கில யஜுர்வேத சம்ஹிதையின் தமிழ் மொழி பெயர்ப்பாசிரியரும், தமிழ் சாம வேதம், வேத சந்திரிகை முதலிய பல நூல்களின் ஆசிரியருமான தமிழ் வேதோபநிஷக்கர்த்தா ஸ்ரீ எம். ஜம்புநாதரால் எழுதப்பட்டு காசி மடத்துத் தலைவர்களான ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் அவர்கள் பொருள் உதவியைக்கொண்டு பிரசுரஞ்செய்தது.

# பிழையுந் திருத்தமும்

| பக்கம் | மந்திரம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ௩௧ | ௩ | யாகுதி | ஆகுதி |
| ,, | ௩ | செலவத்தை | செல்வத்தை |
| ௮௧ | ௧௨ | அவனுடன் | அவளுடன் |
| ௮௩ | ௬ | ஸ்தம்பத்தை | ஸ்தம்பத்தில் |
| ௮௪ | ௪ | உதைத்து | உதைந்து |
| ௯௦ | ௧ | அழிவுற்றுது | அழிவற்றது |
| ௯௪ | ௫ | மகளை | மகனை |
| ௯௯ | ௫ | புருஷர்கனை | புருஷர்களை |
| ௧௦௧ | ௧ | மனதகை | மனத்தை |
| ௧௧௮ | ௭ | பாசகங்களால் | பாசங்களால் |
| ௧௧௯ | ௧ | வீரியமுள்ளவனுக | வீரியமுள்ளவளாக |
| ௧௨௬ | ௭ | நீங்குவானுக | நீக்குவானுக |
| ௧௩௦ | ௨ | சர்வனவதாகும் | சர்வனதாகும் |
| ௧௩௯ | ௩ | அப்சரசக்களே | அபசரஸர்களே |
| ௧௪௬ | ௫ | துருப்புக்களும் | துடுப்புக்களும் |
| ௧௫௯ | ௩ | தூதனுக் | தூதனுக்கு |
| ௧௬௦ | ௯ | கூறிய | கூரிய |
| ,, | ௧௪ | பந்துவான் | பந்து ஆவான் |
| ௨௧௩ | ௩ | எதிரி சூயத்தை | எதிரி சூனியத்தை |
| ௨௧௭ | ௧ | உச்சமயரும் | உச்சமுயரம் |
| ௨௧௯ | ௧ | உன | உன் |
| ௨௨௭ | ௧ | விருத்தியாக்கு | விருத்தியாக்குக |
| ௨௩௫ | ௧ | யக்ஞாகர்கான | யக்ஞாருகரான |
| ௨௪௧ | ௩ | ரோமத்ஸத | ரோமத்தை |
| ௨௫௪ | ௩ | மான் | மகன் |
| ௨௬௬ | ௩ | நினைவிலாவோமா | நினைவிலாவோமாக |
| ௨௮௦ | ௨ | ஜயிப்பனே | ஜயிப்பவனே |

| ஸூக்தம் | மந்திரம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ௨௮௬ | ௨ | புகைகளையும் பிரகாசங்களையும் | புகைகளிலும் பிரகாசங்களிலும் |
| ௩௧௧ | ௩ | அண்ணமாக்கி | அண்ணகனுக்கி |
| ௩௩௦ | ௧ | அவனது | அவளது |
| ௩௬௫ | ௩ | நற்ப்பொருள்களை | நற்பொருள்களை |
| ௩௬௮ | ௫ | இவனைப் | இவனில் |
| ௩௮௧ | ௧ | செவியுறுகின்றதோ | செவியுறுகின்றனவோ |
| ௩௯௧ | ௪ | புருஷனைப் | புருஷனில் |
| ௩௯௮ | ௩ | எங்கிளமிருந்து | எங்களிடமிருந்து |
| ௪௧௧ | ௧ | பறந்துள்ளன | பறந்துள்ளது |
| ௪௨௭ | ௧ | குள்ளம் | குற்றம் |
| ௪௩௫ | ௧௦ | கவசமாச | கவசமாக |
| ,, | ௨௧ | யுகங்கள் | யுகங்களை |
| ௪௩௬ | ௧௫ | சுடரலால் | சுடரால் |
| ௪௪௦ | ௨௨ | கிரீ | கிரி |
| ௪௪௩ | ௩ | அவனது | அவளை அறிபவனது |
| ,, | ௩௩ | அறிபனுடைய | அறிபவனுடைய |
| ௪௪௪ | ௨ | வருகின்றளோ | வருகின்ருளோ |
| ,, | ௬ | அவனில் | அங்கு |
| ௪௪௫ | ௯ | அவர்கள் வசதிகளை | அவர்களது வசதிகளை |
| ௪௫௧ | ௩௨ | தீரமாயுள்ளன | திரமாயுள்ளன |
| ௪௫௫ | ௩ | திடமாகின்றனவோ | திடமாகின்றதோ |
| ௪௬௦ | ௪௨ | இழுக்கிருர்கள் | இழைக்கிருர்கள் |
| ௪௯௧ | ௩௦ | நாமுடனுள்ள | நாமமுடனுள்ள |
| ௪௭௬ | ௩௯ | அது | அந்த |
| ௪௭௭ | ௧ | அவளைப் | அவளை யாசிக்கும் |
| ,, | ௨௩ | புலனுயிற்ருே | புலனுளோ |
| ௪௮௦ | ௪௬ | நிலத்துக்கு | நிலயத்துக்கு |
| ௪௮௨ | ௧௦ | அவனுடையனவாகும். | அவனுடையது. |

# ஸாமவேதம்

இந்நூலைக் கண்டதும் 'ஆற்றலழியுமென் றந்தணர்கள் நான் முறையைப் போற்றி வுரைத்தேட்டின் புறத்தெழுதார்' என்னும் தமிழறிஞர் வாயுரை மனத்திடை வந்தது. பார்ப்பனர்கள் இந் நாளில் வேதபாராயணத்தையும் விட்டார்கள். அந்நாளில் வேத பாராயணமாத்திரத்திலிருந்தார்கள். அவர்களுள் சிலரே பொரு ளுடன் வேதத்தை அறிந்தோர். தமிழ்ப் பெரும் புலவறிற் பல் லோர் வேதத்தைப் புகழ்ந்துரைக்கிறார்களெனினும் அவர்களும் வேதத்தை யறிந்தவர்களல்லர். வேதப் பொருளையுமறிந்தவர்க ளல்லரென்பதே துணிபு. அவர்களிடத்தில் அருள் விளக்கமே யுண்டு. இதனை வாசிப்போர் பாப்பனீய ஹிந்து சமயத்திற்கும் புராதன ஹிந்து சமயத்தி லுள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்வர் என்பது உண்மை. அன்றியும் தமிழ் மக்கள் தமிழான்றோரால் அருளிச் செய்யப்பட்ட தேவார திருவாசகங்களினுடையவும் ஆழ்வார்களருளிச் செயல்களினுடையவும் பெருமைகளை நன் கறிந்துகொள்வதற்கும் ஏதுவாயிருக்கும். இந்நூல் அழகிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதாலும் விலை சரஸமாக விருப்பதாலும் தமிழ் மக்கள் இந்நூலை வாங்கி வாசித்துத் தீர புருஷரான ஸ்ரீ ஜம்புநாதரவர்களின் ஆவலைத்தீர்ப்பார்களென்று, நம்புகிறேன்'

—ஜோதி

ஆரியத்தோடு உறவுபெற்று, அன்னாரோடு ஒன்றி அவர்களது கொள்கைகளையும் வாழ்க்கை முறைகளையும், சமய ஏற்பாடுகளை யும் பின்பற்றி நெடுங்காலமாயினும் அவர்கள் தலைமையாக வைத்து ஏற்றிவைத்த வேதங்களை தமிழில் இதுகாறும் செவ்விய முறையில் எழுதப்படவில்லை. இக்குறைத் தீர்க்க திரு எம். ஆர். ஜம்புநாதன் எளிய தமிழில் பொருள் சிதைவுறாது மொழி பெயர்த் திருத்தல் போற்றத்தக்கது

—தனவணிகன்

This is a useful book to the study of Vedic literature. It is very clear and informing. The price is very low for the quality and the quantity and the get up of the book. —The *Hindu.*

7318a

வேதோபநிஷத ஆசிரியர்

# ஜம்புநாதரின் நூல்கள்

| | | ரூ. அ. |
|---|---|---|
| 1. | அதர்வ வேதம் .... .... | 5—0 |
| 2. | யஜுர்வேதம் .... .... | 3—0 |
| 3. | ஸாமவேதம் .... .... | 1—8 |
| 4. | வேத சந்திரிகை .... .... | 0—8 |
| 5. | யஜுர்வேதக் கதைகள்.... .... | 0—8 |
| 6. | உபநிஷதக் கதைகள் .... .... | 0—8 |
| 7. | கடோப நிஷதம் .... .... | 0—4 |
| 8. | யோகாசனம் .... .... | 0—8 |
| 9. | சீன வேதம் .... .... | 0—8 |
| 10. | திரிமூர்த்தி உண்மை .... .... | 0—8 |
| 11. | ரோஜாத் தோட்டம் .... .... | 0—4 |
| 12. | மாஜினியும் மனிதர் கடமைகளும் .... | 1—0 |
| 13. | சிரத்தானந்தர் சரித்திரம் .... | 0—8 |
| 14. | கதா இரதம் .... .... | 0—8 |

ஆசிரியர் ஜம்புநாதரின் தமிழ் நூல்கள் சென்னை மௌண்ட்ரோட், சுதேசமித்திரன் புஸ்தகசாலை, சென்னைப் பவழக்காரத் தெரு சைவ நூல் புத்தகசாலை, மதுரை மெஸ்ஸர்ஸ் கோபாலகிருஷ்ண கோன் புத்தகசாலையிலும் கிடைக்கும்.